THE

NEW TESTAMENT

OF OUR

LORD AND SAVIOUR JESUS CHRIST,

IN TAMIL:

WITH REFERENCES, CONTENTS OF THE CHAPTERS AND CHRONOLOGY,
FROM THE ENGLISH

* * *

உலக இரட்சகராகிய
இயேசுக்கிறிஸ்துநாதர் அருளிச்செய்த

புதிய ஏற்பாடு.

இஃது
மூலவாக்கியம் இரேனியுசையரால்
கிரேக்க பாஷையிலிருந்து
தமிழிலே திருப்பப்பட்டும்,
சென்னப்பட்டணத்திலுள்ள
சத்தியவேத சங்கத்தாரால் பரிசோதித்து
இங்கிலிஷ் ஒத்துவாக்கிய பைபிலின்படி
ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
கி. பி. ௲௮௱௫௯-௵லே
சென்னப்பட்டணத்தில் அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

MADRAS
THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY
PRINTED AT THE AMERICAN MISSION PRESS
1859

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

GrE
Ø6.21
J9

4902 (7895)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

MATTHEW

மத்தேயு என்பவர்

எழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

௧. ஆபிரகாம் முதல் யோசேப்புவரைக்குமுள்ள கிறிஸ்துவினுடைய வம்சவரிசையின் அட்டவணை ௰௮ கன்னிமரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டபோது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் உற்பவித்து, அவளிடத்தில் பிறந்தது. ௰௯. தேவதூதன் யோசேப்பினுடைய தகாத யோசனைகளை நீக்கிக் கிறிஸ்துவின் திருநாமங்களுக்கு அர்த்தம் உரைத்தது

[1]ஆபிரகாமின் சந்ததியாகிய [2]தாவீதின் சந்ததியாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய [3]வம்சவரிசையின் அட்டவணையாவது:

௨ [4]ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; [5]ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; [6]யாக்கோபு யூதாவையும், அவன் சகோதரரையும் பெற்றான்.

௩ [7]யூதா தாமார் என்பவளைச் சேர்ந்து, பாரேசையும் சாராவையும் பெற்றான்; [8]பாரேசு எசுரோமைப் பெற்றான்

௪ எசுரோம் ஆராமைப் பெற்றான்; ஆராம் அமின்தாபைப் பெற்றான்; அமின்தாபு நகசோனைப் பெற்றான்.

௫ நகசோன் சலுமோனைப் பெற்றான்; சலுமோன் ராகாப் என்பவளைச் சேர்ந்து, போவோசைப் பெற்றான்; போவோசு ரூத் தென்பவளைச் சேர்ந்து, ஓபேதைப் பெற்றான்; ஓபேத்து ஏசேயைப் பெற்றான்.

இ. மு. ச.

1 லூக் ௩. ௨௩
2 சங் ௧௩௨. ௰௨. ஏசா ௰௧ ௧ எரே ௨௩ ௫ மத் ௨௨. ௪௨. யோவா ௭ ௪௨. அப ௨ ௩௰ ௰௩ ௨௩ ௨ரோ ௧ ௩
3 ௧ மோ ௰௨. ௩ ௨௨. ௰௮ கலா ௩ ௰௬
4 ௧ மோ ௨௧ ௨, ௩
5 ௧ மோ ௨௫ ௨௬
6 ௧ மோ ௨௯ ௩௫
7 ௧ மோ ௩௮ ௨௭-௩௰
8 ரூத் ௪ ௰௮ ழ ௧ நாளா ௨ ௫, ௬ ழ
9 ௧ சாமு ௰௬ ௧ ௰௭ ௰௨
10 ௨ சாமு ௰௨ ௨௪
11 ௧ நாளா ௩ ௰ ழ
12 ௨ இரா ௨௰ ௨௧ ௧ நாளா ௩ ௰௩
13 ௨ இரா ௨௪ ௰௪-௰௬ ௨௫. ௰௧ ௨ நாளா ௩௬ ௰, ௨௰ எரே ௨௭ ௨௨ ௩௯ ௯ ௫௨ ௰௧, ௰௫, ௨௮, ௨௯, ௩௰ தானி ௧ ௨

௬ [9]ஏசே இராசனாகிய தாவீதைப் பெற்றான்; [10]இராசனாகிய தாவீது ஊரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்து, சொலொமோனைப் பெற்றான்.

௭ [11]சொலொமோன் ரெகொபோவாமைப் பெற்றான்; ரெகொபோவாம் அபியாவைப் பெற்றான்; அபியா அசாவைப் பெற்றான்.

௮ அசா யோசபாத்தைப் பெற்றான்; யோசபாத்து யோராமைப் பெற்றான்; யோராம் ஓசியாவைப் பெற்றான்.

௯ ஓசியா யோத்தாமைப் பெற்றான்; யோத்தாம் ஆகாசைப் பெற்றான்; ஆகாசு எசேக்கியாவைப் பெற்றான்.

௰ [12]எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே அமோனைப் பெற்றான்; அமோன் யோசியாவைப் பெற்றான்.

௰௧ (யூதர்கள்)[13]பாபிலோன்தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகுங் காலத்திலே, [14]*யோசியா எகோனியா முதலான குமாரர்களைப் பெற்றான்.

௰௨ அவர்கள் பாபிலோன்தேசத்துக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டபின்பு, [15]எகோனியா சாலாத்தியேலைப் பெற்றான;

---

14 ௧ நாளா ௩ ௰௫, ௰௬ * யோசியா யோயாக்கீமைப் பெற்றான யோயாக்கீம் எகோனியாவைப்பெற்றானென்று சில பிரதிகளிலுண்டு 15 ௧ நாளா ௩ ௰௭

[1]சாலாத்தியேல் சொரோபாபேலைப் பெற்றான்.

௰௩ சொரோபாபேல் அபியூதைப் பெற்றான்; அபியூது எலியாக்கீமைப் பெற்றான்; எலியாக்கீம் அசோரைப் பெற்றான்.

௰௪ அசோர் சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூதைப் பெற்றான்.

௰௫ எலியூது எலெயாசாரைப் பெற்றான்; எலெயாசார் மத்தானைப் பெற்றான்; மத்தான் யாக்கோபைப் பெற்றான்.

௰௬ யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அந்த மரியாளிடத்திலே கிறிஸ்து என்னப்பட்டிருக்கிற இயேசு பிறந்தார்.

௰௭ இவ்வண்ணமாய் உண்டான தலைமுறைகள் எல்லாம் ஆபிரகாம் முதல் தாவீதுவரைக்கும் பதினாலு தலைமுறைகளும், தாவீது முதல் *பாபிலோன் தேசத்துக்கு (யூதர்கள்) சிறைப்பட்டுப்போன காலம்வரைக்கும் பதினாலு தலைமுறைகளும், பாபிலோன் தேசத்துக்குக் கொண்டுபோன காலமுதல் கிறிஸ்துவரைக்கும் பதினாலு தலைமுறைகளுமேயாம்.

௰௮ ¶ [2]இந்த இயேசுக்கிறிஸ்துவினுடைய உற்பத்தியின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு (மனைவியாக) நியமிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கூடி வாழ்கிறதற்கு முன்னமே அவள் [3]பரிசுத்த ஆவியினாலே கருப்பவதியானாள்.

௰௯ அவளுடைய புருஷனாகிய யோசேப்பு நீதிமானாகையால், [4]அவளை அவதூறுபண்ண மனதில்லாமல் இரகசியமாய் அவளை ஒழித்துவிடும்படியாய்ச் சிந்தித்தான்.

௨௰ அவன் அப்படி நினைத்திருக்கையில், பராபரனுடைய தூதன் சொப்பனத்திலே அவனுக்குக் காணப்பட்டு, தாவீதின் சந்ததியாகிய யோசேப்பே, நீ உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படவேண்டாம்; என்னத்தினாலென்றால், அவளிடத்தில் *உண்டாயிருக்கிறது [5]பரிசுத்த ஆவியினால் உண்டானது.

௨௧ அவள் [6]ஒரு குமாரனைப் பெறுவாள்; அவர் தம்முடைய சனங்களின் [7]பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்; ஆகையால் அவருக்கு †இயேசு என்று பேரிடுவாயாக என்றான்.

௨௨ [illegible]தரிசியைக்கொண்டு கர்த்தர் சொன்னது நிறைவேறும்படிக்கு அவையெல்லாம் நடந்தன.

௨௩ அவர் சொல்லுவித்ததென்னவென்றால், [8]இதோ ஒரு கன்னி கருப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள்; ‡அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்பதே; இம்மானுவேல் என்பதற்குப் பராபரன் நம்முடனே இருக்கிறார் என்று அர்த்தமாம்.

௨௪ யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்தபொழுது, தனக்குக் கர்த்தருடைய தூதன் கட்டளையிட்டபடி தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு,

௨௫ [9]அவள் முதற்பேறான குமாரனைப் பெறும்வரைக்கும் அவளை அறியாதிருந்து, (அந்தக் குமாரன் பிறந்தபின்பு) அவருக்கு [10]இயேசு என்று பேரிட்டான்.

௨. அதிகாரம்.

௧. கிழக்கிலிருந்து சாஸ்[illegible]கள் நட்சத்திரத்தினால் கிறிஸ்துவினிடத்திற்கு வழி நடத்தப்பட்டது. ௰௧ அவரைப் பணிந்து காணிக்கைகளைச் செலுத்தினது. ௰௩ இயேசுவையும், அவருடைய தாயையும் கூட்டிக்கொண்டு யோசேப்பு எகிப்துக்கு ஓடிப்போனது. ௰௬ ஏரோதே குழந்தைகளைக் கொலைசெய்தது, ௰௯ பின்பு தன் மரணம் அடைந்தது. ௨௩ கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்குக் கிறிஸ்து மறுபடியும் கொண்டுவரப்பட்டது.

ஏரோது என்னும் இராசனுடைய காலத்திலே யூதேயா தேசத்திலுள்ள பெத்லேகேம் ஊரில் [11]இயேசுவானவர் பிறந்தபின்பு, [12]கி

கி. மு. ௪.

[1] எஸ்ரு ௩ ௨. ௫. ௨ நெகே ௰௨ ௧ ஆகா ௧ ௧

[2] லூக் ௧ ௨௭

[3] லூக் ௧ ௩௫.

[4] ௫ மோ ௨௪ ௧

* செனிப்பிக்கப்பட்டது, கிரேக்கு

[5] லூக் ௧ ௩௫

[6] லூக் ௧ ௩௧

[7] அப் ௪ ௰௨. ௫ ௩௧. ௰௩ ௨௩, ௩௮

† இரட்சகர் என்ற எபிரேய மொழி.

[8] ஏசா ௭ ௰௪

‡ அல்லது அவருடைய நாமம் இம்மானுவேலென்று சொல்லப்படும்

[9] ௨ மோ ௰௩ ௨ லூக் ௨ ௭, ௨௧

[10] லூக் ௨ ௨௧

[11] லூக் ௨ ௪-௭

[12] ௧ மோ ௰௩ம் ௨௫ ௧ ௧ இரா ௪ ௩ம்

ழக்குத்திசையிலிருந்து சாஸ்திரிகள் எருசலேம் நகரத்துக்கு வந்து,

௨ (இக்காலத்திலே) [1]பிறந்திருக்கிற யூதருடைய இராசாவைக் குறித்துத் தோன்றிய [2]நட்சத்திரத்தைக் கிழக்கிலே நாங்கள் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்; அவர் எங்கே என்றார்கள்.

௩ ஏரோது இராசா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனுடனேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.

௪ அல்லாமலும், அவன் சனங்களில் [3]பிரதானமான ஆசாரியர் [4]வேதபாரகர் எல்லாரும் கூடிவரச் செய்து, கிறிஸ்து [5]எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

௫ அவர்கள் அவனை நோக்கி, [6]யூதாவின் ஊராகிய பெத்லேகேமிலே அவர் பிறப்பார்; என்னத்தினாலென்றால், யூதேயா தேசத்திலுள்ள பெத்லேகேம் ஊரே, என்னுடைய சனங்களாகிய [7]இஸ்ரவேலரை *ஆளும் பிரபு உன்னிடத்திலே தோன்றுவாராகையால் யூதாவிலுள்ள பிரபுக்களில் நீ சிறியதல்ல என்று,

௬ தீர்க்கதரிசியினாலே எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

௭ அப்பொழுது ஏரோது அந்தச் சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, அந்த நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்திலே திட்டமாய் விசாரித்துக்கொண்டு,

௮ நீங்கள் போய் அந்தப் பிள்ளையைக்குறித்து நன்றாய் ஆராய்ந்து பாருங்கள்; மேலும் நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும்போய் அதைப் பணிந்துகொள்ளும்படிக்கு எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லேகேம் ஊருக்கு அனுப்பிவிட்டான்.

௯ இராசா சொன்னதை அவர்கள் கேட்டுப்போனார்கள்; போகையில், கிழக்கிலே அவர்கள் கண்ட நட்சத்திரம் அந்தப் பிள்ளை இருக்கிற ஸ்தலத்துக்கு மேலே வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன்பாக நடந்தது.

௰ அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டு, மிகுந்த ஆனந்த சந்தோஷத்தை அடைந்து,

௰௧ பின்பு அந்த வீட்டில் பிரவேசித்து, பிள்ளையையும் அதினுடைய தாயாகிய மரியாளையும் கண்டு, வணக்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷப்பெட்டிகளைத் திறந்து, [8]பொன்னையும் தூபவருக்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக †வைத்தார்கள்

௰௨ பின்பு ஏரோதினிடத்துக்குத் திரும்பிப்போகாதிருக்கவென்று அவர்கள் [9]சொப்பனத்திலே தேவ உத்தரவு பெற்று, வேறுவழியாய்த் தங்கள் தேசத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள்.

௰௩ அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு, ஏரோது இந்தப் பிள்ளையைக் கொலைசெய்யத்தேடுவான்; ஆகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துதேசத்திற்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அவ்விடத்தில் இரு என்றான்.

௰௪ உடனே அவன் எழுந்து இராத்திரியிலே பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய்,

௰௫ ஏரோது மரணம் அடைந்த காலம்வரைக்கும் அவ்விடத்தில் இருந்தான்; [10]எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் திருவுளம்பற்றி

இ. மு. ச.

[1] லூக் ௨. ௰௧

[2] ௪ மோ ௨௪, ௰௭ ஏசா ௬௰. ௩.

[3] ௨ நாளா. ௩௬ ௰௪

[4] ௨ நாளா ௩௪ ௰௩

[5] மல்கி. ௨. ௭

[6] மீகா ௫ ௨ யோவா ௭ ௪௨

[7] வெளி ௨. ௨௭.

* அல்லது மேய்க்கப்போகிற

[8] சங் ௭௨ ௰ ஏசா ௬௰ ௬

† அல்லது செலுத்தினார்கள்

[9] மத் ௧ ௨௰

[10] ஓசே ௰௧ ௧

னது நிறைவேறும்படிக்கு அது நடந்தது.

௰௬ ¶ அப்பொழுது எரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபம் அடைந்து, அந்தச் சாஸ்திரிகளிடததிலே தான் கேட்டாராய்ந்த காலத்தின்படி பெத்லேகேம் ஊரிலும் அதினுடைய எல்லைகள் யாவிலும் இரண்டு வயதுமுதற்கொண்டு அதற்குத் தாழ்ந்திருநத வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் கொலைசெய்ய ஆள்களை அனுப்பினான்

௰௭ அப்பொழுது எரேமியா [1]தீர்க்கதரிசியினால் சொல்லபபட்டது நிறைவேறிற்று; அவன் சொன்னதென்னவென்றால்,

௰௮ ராமா ஊரிலே புலமபலும் அழுகையும் மிகுநத துக்கிபபுமுள்ள கூக்குரல் கேட்கபபட்டது; ராகேல் தன் பிள்ளைகளைக்குறித்து அழுதுகொண்டு, அந்தப பிள்ளைகள் இல்லாதபடியால் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்பதே.

௰௯ ¶ எரோது இறந்தபின்பு, சொபபனத்திலே கர்த்தருடைய தூதன் எகிபதிலே யோசேபபுக்குக் காணப்பட்டு,

௨௰ பிள்ளையினுடைய பிராணனை வாங்கத் தேடினவாகள் இறந்துபோனார்கள், ஆகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிககொணடு, இஸ்ரவேல் தேசத்துக்குப போ என்றான்.

௨௧ அந்தபபடியே அவன் எழுந்திருந்து, பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிககொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்குப் புறபபட்டபொழுது,

௨௨ அருகேலாவு என்பவன் தன் தகப்பனாகிய எரோதினுடைய பட்டத்துக்கு வநது, யூதேயாவை ஆளுகிறானென்று கேள்விபபட்டு, அங்கே போகப் பயந்தான்; அப்பொழுது சொப்பனத்திலே அவன் தேவ உத்தரவு பெற்று, [2]கலிலேயா நாட்டினுடைய திசைகளை நோக்கிப் புறபபட்டுபோய்,

௨௩ [3]நாசரேயன் என்று அழைக்கப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு [4]நாசரேத்தூரில் வந்து வாசம்பண்ணினான்.

௩. அதிகாரம்.

௧ யோவான பிரசஙகித்தது, அவனுடைய ஊழியம, நடக்கை, ஞானஸநானம் ௭ அவன பரிசேயர்களைக் கடிந்துகொண்டது ௰௩. கிறிஸதுவுக்கு யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்தது.

அக்காலத்திலே [5]யோவான்ஸ்நானன வந்து,

௨ [6]பரலோக இராசரீகம் சமீபமாயிருக்கின்றது; ஆகையால் மனந்திருபபுஙகள் என்று யூதேயாவின் [7]வனாந்தரத்திலே பிரசங்கம் பண்ணினான்.

௩ அவன் யாவனெனில், [8]கர்த்தருக்காக மார்ககத்தை நன்றாகச செய்யுங்களென்றும், அவருடைய பாதைகளைச் செவ்வைபண்ணுஙகளென்றும், வனாந்தரத்திலே ஒருவன் [9]சததமிடுவானென்று எசாயா என்னும தீர்க்கதரிசியினால் சொல்லபபட்டவனே

௪ அல்லாமலும் [10]அந்த யோவான் [11]ஒட்டக மயிா உடையைத் தரித்து, தன்னுடைய அரையில் வார்க்கசசையைக் கட்டிககொண்டிருநதான், [12]வெட்டுக்கிளிகளும் [13]காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருநதன.

௫ [14]அக்காலத்திலே எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தான் நதிக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப புறபபட்டுப போய்,

௬ [15]தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனாலே ஞானஸ்நானம்பெற்றார்கள்.

கி. மு. ௪.

[1] எரே ௩௧ ௰௫
[2] மத் ௩ ௰௩ லூக். ௨ ௩௯
[3] யோவா ௧ ௪௫
[4] நியா ௰௩ ௫ ௧ சாமு. ௧ ௰௧
[5] மாற் ௧ ௪, ௰௪. லூக ௩ ௨, ௩ யோவா ௧ ௨௮
[6] தானி ௨ ௪௪ மத் ௪ ௰௭ ௰ ௭
[7] யோசு ௰௪ ௰
[8] எசா ௪௰ ௩ மாற் ௧.௩ லூக். ௩ ௪ யோவா ௧ ௨௩
[9] லூக் ௧. ௭௬
[10] மாற் ௧ ௬
[11] ௨ இரா ௧ ௮ சகரி ௰௩ ௪
[12] ௩ மோ ௰௧ ௨௨
[13] ௧ சாமு ௰௪ ௨௫, ௨௬
[14] மாற் ௧ ௫ லூக் ௩ ௭
[15] அப ௰௯. ௪ ௰௮

4902(7465)

௭ ¶ அப்படியிருக்கையில், பரிசேயர் சதுசேயர் என்பவர்களிலும் அநேகர் தன்னாலே ஞானஸ்நானம் பெறும்படிக்கு வருகிறதை அவன் கண்டு, அவர்களை நோக்கி, [1]விரியன் பாம்புகளின் குட்டிகளே, [2]இனிவரும் கோபத்துக்கு நீங்கள் *தப்பித்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன் எவன்?

௮ மனந்திரும்புதலுக்குத்தக்க கனிகளைக் கொடுங்கள்.

௯ [3]ஆபிரகாம் எங்களுடைய பிதா என்று சொல்ல, உங்களுடைய உள்ளத்திலே நினைத்துக்கொள்ளாதிருங்கள்; ஆபிரகாமுக்குப் பராபரன் இந்தக் கல்லுகளில் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰ இப்பொழுதே கோடரி மரங்களுடைய வேரருகே வைத்திருக்கின்றது; ஆகையால் [4]நல்ல கனிகளைக் கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, அக்கினியிலே போடப்படும்.

௰௧ நீங்கள் மனந்திரும்பும்படிக்கு, [5]நான் சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன், எனக்குப் பின்வருகிறவர் என்னிலும் அதிக வல்லமையுடையவர்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரவான் அல்ல; [6]அவரே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம்கொடுப்பார்.

௰௨ [7]அவருடைய கையில் தூற்றுக்கூடை இருக்கின்றது; அவர் தமது களம் முழுவதையும் விளக்கி, தம்முடைய கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்: [8]பதரை அவியாத அக்கினியினால் சுட்டுப்போடுவார் என்றான்.

௰௩ ¶ அப்பொழுது [9]இயேசுவானவர் யோவானாலே ஞானஸ்நானம்பெ[illegible]தற்கு, கலிலேயா நாட்டை விட்டு யோர்தான் அருகே அவனிடத்திற்குப் போனார்.

௰௪ யோவான் அவருக்குத் தடைபண்ணி, உம்மாலே நான் ஞானஸ்நானம் பெறவேண்டுவதாயிருக்க, நீர் என்னிடத்திற்கு வரலாமா என்றான்.

௰௫ அதற்கு இயேசுவானவர் அவனை நோக்கி, இவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாயிருக்கின்றது; ஆகையால் இப்பொழுது சம்மதிப்பாயாக என்றார்; அப்பொழுது அவன் சம்மதித்தான்.

௰௬ [10]இயேசுவானவர் ஞானஸ்நானம்பெற்று, சலத்தைவிட்டு ஏறிவந்தவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; அல்லாமலும் பராபரனுடைய [11]ஆவி புறாவைப்போல் இறங்கி, அவர்மேல் வருகிறதைக் கண்டான்.

௰௭ [12]மேலும், இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று [13]வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

௪. அதிகாரம்.

௧ கிறிஸ்து உபவாசித்துச் சோதிக்கப்பட்டது ௰௧ தேவ தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தது ௰௩ அவர் கப்பர்நகூமிலே வாசம் பண்ணி, ௰௭ பிரசங்கிக்கத் துவக்கி, ௰௮ பேதுருவையும், அந்திரேயாவையும், ௨௧ யாக்கோபையும், யோவானையும் அழைத்து, ௨௩ எல்லா வியாதிஸ்தர்களையும் குணமாக்கினது

அப்பொழுது [14]இயேசுவானவர் பிசாசானவனாலே சோதிக்கப்படுவதற்கு, [15]ஆவியினாலே வனாந்தரத்தில் கொண்டுபோகப்பட்டார்.

௨ (அங்கே) அவர் நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசம் பண்ணின பின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று.

௩ அப்பொழுது அந்தச் சோதிக்கிறவன் அவரிடத்திற்கு வந்து, நீ பராபரனுடைய குமாரனானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி கட்டளையிடு என்றான்

இ. பி. ௨௭.

[1] மத் ௰௨. ௩௪ ௨௩. ௩௩. லூக் ௩. ௭, அ, ௯

[2] உரோ ௫ ௯ ௧ தெச ௧. ௰

* அல்லது நடக்கையைச் சீர்படுத்துவதற்குத் தகுந்த

[3] யோவா ௮. அ ௩௩, ௩௯ அப ௰௩ உ௬ உரோ ௪ ௧ ௰௬ ௰௬

[4] மத் ௭ ௰௯ லூக் ௰௩ ௭, ௯ யோவா ௰௫ ௬ மாற் ௧ அ லூக் ௩ ௰௬

[5] யோவா ௧ ௨௬, ௩௩ அப ௧ ௫ ௰௧ ௰௬ ௰௯ ௪

[6] ஏசா ௪ ௪ ௪௪ ௩ மல்கி ௩ ௨ அப ௨ ௩, ௪ ௧ கொரி ௰௨ ௰௩

[7] மல்கி ௩ ௩

[8] மல்கி ௪. ௧ மத் ௰௩ ௩௰

[9] மாற் ௧ ௯ லூக் ௩ ௨௧ மத் ௨ ௨௨

[10] மாற் ௧ ௰

[11] ஏசா ௰௧ ௨ ௪௨ ௧ லூக் ௩ ௨௨ யோவா ௧ ௩௨, ௩௩

[12] சங். ௨. ௭ ஏசா ௪௨. ௧ மத் ௰௨. ௰௮ ௰௭ ௫ மாற் ௧ ௰௧ லூக். ௯. ௩௫ எபே ௧ ௬ கொலோ ௧ ௰௩ உபேது ௧ ௰௭

[13] யோவா ௰௨ ௨௮

[14] மாற் ௧ ௰௨ ௰௩ லூக் ௪ ௧ ௰௩

[15] ௧இரா ௰௮ ௰௨ எசே ௩ ௰௪ ௮ ௩ ௰௧ ௧, ௨௪ ௪௰ ௨ ௪௩ ௫ அப ௮ ௩௯

௪ அதற்கு அவர் மாறுத்தரம் சொன்னது: [1]மனிதனானவன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய வாய்மலர்ந்தருளிச் செய்கிற எந்த வாக்கினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கின்றதென்றார்.

௫ அப்பொழுது பிசாசானவன் அவரைப் [2]பரிசுத்த நகரத்துக்குக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்து மேல் உப்பரிகையில் நிறுத்தி,

௬ உன்னைக்குறித்துத் தம்முடைய [3]தூதர்களுக்குக் கட்டளையிடுவார் என்றும், உன்னுடைய பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திகொண்டு போவார்கள் என்றும், எழுதியிருக்கின்றது; ஆகையால் நீ பராபரனுடைய குமாரனாகில் தாழக் குதி என்றான்.

௭ அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதுவுமல்லாமல், உன்னுடைய தேவனாகிய பராபரனைப் [4]பரிட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கின்றதென்றார்.

௮ மறுபடியும் பிசாசானவன் அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்திலுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து,

௯ நீ விழுந்து என்னைத் தொழுதுகொண்டால், இவைகள் எல்லாவற்றையும் உனக்குத் தருவேன் என்று சொன்னான்.

௰ அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, உன்னுடைய தேவனாகிய [5]பராபரனைத் தொழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கின்றது; ஆகையால் சாத்தானே, அப்புறம் போ என்றார்.

௰௧ அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டுப்போனான்; [6]உடனே தேவதூதர்கள் சேர்ந்து வந்து, அவருக்கு ஊழியம் செய்தார்கள்.

௰௨ ¶ பின்பு யோவான் காவலில் *வைக்கப்பட்டான் என்று இயேசுவானவர் கேள்விப்பட்டு, [7]கலிலேயா நாட்டுக்குப் புறப்பட்டுப்போய்,

௰௩ நாசரேத்தூரைவிட்டு, செபுலோன் நவ்தலி என்னும் நாடுகளின் எல்லைகளில், கடற்கரையருகே இருக்கின்ற கப்பர்நாகூம் பட்டணத்தில் வந்து வாசம்பண்ணினார்.

௰௪ அதினாலே [8]கடற்கரையருகிலும், யோர்தான் நதி ஓரத்திலுமுள்ள அஞ்ஞானிகள் அடங்கியிருக்கிற கலிலேயா தேசமாகிய செபுலோன் தேசத்தாரும், நவ்தலி தேசத்தாருமாகிய இருளில் இருக்கின்ற சனங்கள் மிகுந்த ஒளியைக் கண்டார்கள்.

௰௫ [9]மரண நிழலுள்ள திசையில் இருக்கிறவர்களுக்கு ஒளி தோன்றிற்று என்று,

௰௬ ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று

௰௭ ¶ [10]அக்காலத்திலே இயேசுவானவர், பரலோக இராச்சியம் சமீபித்ததாகையால் [11]மனந்திரும்புங்கள் என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

௰௮ ¶ ஒரு காலத்திலே [12]இயேசுவானவர் கலிலேயா நாட்டின் கடலருகே நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாகிய [13]பேதுரு என்னப்பட்ட சீமோனும் அவனுடைய சகோதரன் அந்திரேயாவுமாகிய இருவரும் கடலிலே வலை போட்டுக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக் கண்டு,

௰௯ என் பின்னே வாருங்கள், [14]உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன் என்று அவர்களுடனே சொன்னார்.

கி. பி. ௨௭.

1 ௫ மோ ௮ ௩
2 நெகே ௰௧ ௧, ௰௮ ஏசா. ௪௮ ௨ ௫௨. ௧ மத் ௨௭ ௫௩. வெளி ௰௧. ௨
3 சங் ௯௧ ௰௧
4 ௫ மோ ௬ ௰௬
5 ௫ மோ ௬ ௰௩ ௰ ௨௰ யோசு ௨௪ ௰௪ ௧ சாமு ௭ ௩
6 எபி ௧ ௰௪
* அல்லது ஒப்புக் கொடுக்கப்பட்டான்
7 மாற் ௧ ௰௪ லூக் ௩ ௨௰ ௪ ௰௪, ௩௧ யோவா ௪ ௪௩
8 ஏசா ௯ ௧
9 ஏசா ௪௨ ௭ லூக் ௨ ௩௨
10 மாற் ௧ ௰௫
11 மத் ௩ ௨ ௰ ௭ மாற் ௧ ௰௫
12 மாற் ௧ ௰௬ லூக் ௫ ௨
13 மாற் ௩ ௰௬ யோவா ௧ ௪௨
14 மாற் ௧ ௰௭ லூக் ௫ ௰

௨௰ [1]உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவரைப் பின்பற்றினார்கள்.

௨௰௧ [2]அவர் அவ்விடம் விட்டு அப்புறம் போகையில், செபேதேயுவினுடைய மகன் யாக்கோபும் அவனுடைய சகோதரன் யோவானுமாகிய இருவரும், தங்கள் தகப்பன் செபேதேயுவுடனே படவிலிருந்து தங்கள் வலைகளைத் தைத்துக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார்.

௨௰௨ உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவரைப் பின்பற்றினார்கள்.

௨௰௩ ¶ பின்பு இயேசுவானவர் [3]கலிலேயா நாடெங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய செப ஆலயங்களில் சனங்களுக்கு உபதேசம் செய்து, பரலோக [4]இராச்சியத்தைக்குறித்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சனங்களுக்குண்டாயிருந்த சகலவிதமான [5]வியாதிகளையும் சகலவிதமான நோய்களையும் (நீக்கி, அவர்களைக்) குணமாக்கினார்.

௨௰௪ அவருடைய கீர்த்தி சீரியா தேசத்தில் எங்கும் பிரபலமாயிற்று, பின்பு பலபல வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்த பிணியாளிகள் யாவரையும் பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள், அவர்களைக் குணமாக்கினார்.

௨௰௫ [6]கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தான் நதிக்கு அப்புறத்திலுமிருந்து மிகுந்த சனங்கள் வந்து அவரைப் பின்சென்றார்கள்.

௫. அதிகாரம்.

௧ கிறிஸ்து பருவதத்தின்மேல் தம்முடைய பிரசங்கத்தைத் தொடங்கினது ௩ பாக்கியவான்கள் இன்னாரென்பது, ௰௩ பூமியின் உப்பு ௰௪ லோகத்தின் வெளிச்சம், மலையின்மேல் பட்டணம் ௰௫ விளக்கு என்பவைகளைக் குறித்தது ௰௭ தாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தாரென்றும், ௨௧ கொலை, ௨௭ விபசாரம், ௩௩ பொய்யாணை இன்னவையென்றும் அறிவித்தது, ௩௯ அநியாயத்தைச் சகிக்கவும், ௪௪ சத்துருக்களையும் சிநேகிக்கவும், ௪௮ பூரண சற்குணராயிருக்கப் பிரயாசப்படவும் உபதேசித்தது.

அவர் அந்தச் சனங்களைக்கண்டு, [7]மலையின் மேல் ஏறி உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

௨ அப்பொழுது அவர் தமது திருவாயைத் திறந்து, அவர்களுக்கு உபதேசித்துச்சொன்னதாவது:

௩ [8]ஆவியில் எளிமையுள்ளவர்கள் பரலோக இராச்சியத்தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௪ [9]துயரப்படுகிறவர்கள் ஆறுதல் அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௫ [10]சாந்தகுணமுள்ளவர்கள் [11]பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௬ நீதியின்மேல் [12]பசிதாகமுள்ளவர்கள் திருத்தி அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௭ இரக்கமுள்ளவர்கள் [13]இரக்கத்தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௮ [14]சுத்தமான இருதயமுள்ளவர்கள் [15]பராபரனைத் தரிசிப்பார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௯ சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் பராபரனுடைய புத்திரர் என்னப்படுவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௰ [16]நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பரலோக இராச்சியத்தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௰௧ என் நிமித்தம் உங்களை [17]நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித [18]தீமையான மொழிகளை உங

கி. பி. ௩௧

1 மாற் ௰ ௨௮ லூக் ௫ ௰௧ ௰௮ ௨௮
2 மாற் ௧ ௰௯, ௨௰ லூக் ௫ ௰
3 மத் ௯ ௩௫ மாற் ௧ ௨௧, ௩௯ லூக் ௪ ௰௫, ௪௪
4 மத் ௨௪ ௰௪ மாற் ௧ ௰௪.
5 மாற் ௧ ௩௪
6 மாற் ௩ ௭
7 மாற் ௩ ௰௩, ௨௰
8 லூக் ௬ ௨௰ சங் ௫௧ ௰௭ ௩௪ ௰௮ ஏசா ௫௭ ௰௫ ௬௬ ௨
9 ஏசா ௬௧ ௨, ௩ லூக் ௬ ௨௧ யோவா ௰௬ ௨௰ ௨ கொரி ௧ ௭ வெளி ௨௧ ௪
10 சங் ௩௭ ௰௧
11 உரோ ௪ ௰௩
12 ஏசா ௫௫ ௧ ௬௫ ௰௩
13 சங் ௪௧ ௧ மத் ௬ ௰௪ மாற் ௰௧ ௨௫ ௨ தீமோ ௧ ௰௬ எபி ௬ ௰ யாக் ௨ ௰௩
14 சங் ௰௫ ௨ ௨௪ ௪ எபி ௰௨ ௰௪
15 ௧ கொரி ௰௩ ௰௨ ௧ யோவா ௩ ௨
16 ௨ கொரி ௪ ௰௭ ௨ தீமோ ௨ ௰௨ ௧ பே ௩ ௰௪
17 லூக் ௬ ௨௨
18 ௧ பே ௪ ௰௪

கள்மேல் பொய்யாய்ச் சொன்னார்களானால், நீங்கள் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்.

௰௨ [1]பரலோகத்திலே உங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு மிகவும் களிகூருங்கள், [2]உங்களுக்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள்.

௰௩ நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்; [3]உப்பானது சாரமற்றதேயானால், எதினாலே சாரமாக்கப்படும்? அது வெளியே கொட்டப்படுவதற்கும் மனிதராலே மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்கும் ஆகாது.

௰௪ [4]நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள், மலையின்மேல் இருக்கிற பட்டண[illegible] மறைந்திருக்கமாட்டாது.

௰௫ மேலும் [5]விளக்கைக் கொளுத்தி * மரக்காலால் மூடிவையாமல், ஒரு தண்டின்மேலே வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டில் இருக்கிற யாவருக்கும் பிரகாசம் கொடுக்கும்.

௰௬ அப்படியே மனிதரானவர்கள் [6]உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, [7]பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கப்பண்ணத்தக்கதாக உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

௰௭ [8]தேவப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் தள்ளிவிடுகிறதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள்; அவைகளைத் தள்ளிவிடுகிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கு வந்தேன்.

௰௮ [9]வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், வேதமுழுவதும் நிறைவேறுவதன்றி, அதில் ஒரு சிறிய எழுத்தாகிலும் ஓர் எழுத்தினுடைய உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௯ [10]ஆகையால் இந்தக் கற்பனைகளில் மிகவும் சிறிய கற்பனையையாகிலும் தள்ளி, அவ்வண்ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவன் எவனோ, அவன் பரலோக இராச்சியத்திலே மிகவும் சிறியவனென்று எண்ணப்படுவான்; அவைகளின்படி செய்து உபதேசிக்கிறவனே, பரலோக இராச்சியத்திலே பெரியவனென்று எண்ணப்படுவான்.

௨௰ ஆதலால் வேதபாரகர்களும் [11]பரிசேயர்களுமானவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட்டிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௧ [12]கொலைசெய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் † பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௨ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [13]சகோதரனை வீணாய்க் கோபித்துக்கொள்பவன் எவனோ, அவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; சகோதரனை வீணன் என்கிறவன் எவனோ, அவன் பெரியசங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், [14]அவனை ‡ மதிகேடன் என்கிறவன் எவனோ, அவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்.

௨௩ ஆகையால் நீ [15]பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்மேல் சகோதரனுக்கு விசனம் உண்டென்று அங்கே நினைவு கொள்வாயாகில்,

௨௪ [16]அந்தப் பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு சகோதரனுடனே ஒப்புரவாகிப் பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக.

கி. பி. ௩௧.

1 லூக். ௬. ௨௩. அப். ௫. ௪௧. உரோ. ௫. ௩. யாக். ௧. ௨. ௧பே. ௪. ௰௩.
2 நெகே. ௯. ௨௬. ௨ நாளா. ௩௬. ௰௬. மத். ௨௩. ௩௪, ௩௭. அப். ௭. ௫௨. ௧தெச. ௨. ௰௫.
3 மாற். ௯. ௫௰. லூக். ௰௪. ௩௪, ௩௫.
4 யோவா. ௮. ௰௨. பிலி. ௨. ௰௫.
5 மாற். ௪. ௨௧. லூக். ௮. ௰௬. ௰௧. ௩௩.
* மூலத்திலுள்ள வார்த்தை ஏறக்குறைய ஒரு உமக்குக் குறைய பெக் (Peck) என்கிற ஒரு இங்கிலீஷ் அளவைக்குறிக்கும்.
6 ௧பே. ௨. ௰௨.
7 யோவா. ௰௫. ௮. ௧கொரி. ௰௪. ௨௫.
8 உரோ. ௩. ௩௧; ௰. ௪. கலா. ௩. ௨௪.
9 லூக். ௰௬. ௰௭.
10 யாக். ௨. ௰.
11 உரோ. ௯. ௩௧; ௰. ௩.
12 ௨மோ. ௨௰. ௰௩. ௫மோ. ௫. ௰௭.
† அல்லது பூர்வத்தாரால்.
13 ௧யோவா. ௩. ௰௫.
14 யாக். ௨. ௨௰.
‡ ராகாசா என்கிற எபிரெய மொழி.
15 மத். ௮. ௪. ௨௩. ௰௯.
16 யோபு. ௪௨. ௮. மத். ௰௮. ௰௫. ௧தீமோ. ௨. ௮. ௧பே. ௩. ௭.

௨௫ [1]உனக்கு எதிராளியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புவியாமலும், அந்த நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புவியாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படிக்கு, [2]சீக்கிரமாய் உன் எதிராளியுடனே வழியில் இருக்கும்பொழுதே அவனுடனே நல்மனம் பொருந்துவாயாக.

௨௬ (பொருந்தாவிட்டால்) நீ ஒரு காசும் குறைவின்றி முழுமையும் செலுத்துகிறவரைக்கும், அவ்விடத்தைவிட்டுத் திரும்பிவாமாட்டாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன்.

௨௭ ¶ [3]விபசாரம்பண்ணாதிருப்பாயாக என்பது, பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௮ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது. [4]ஒரு ஸ்திரியை இச்சிப்போடே பார்க்கிறவன் எவனோ, அவன் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று.

௨௯ [5]ஆகையால் உன் வலது கண் உன்னைக் *கெடுக்கிறதற்கு ஏதுவானால் [6]அதைப் பிடுங்கி எறிந்துபோடு, உன் சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

௩௰ அன்றியும் உன் வலதுகை உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுமையும் நரகத்திலேதள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

௩௧ [7]அல்லாமலும் யாவனாலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டால், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவனென்று சொல்லப்பட்டது.

௩௨ அப்படியிருந்தும் [8]எவனானாலும் தன் மனைவி வேசித்தனம் இல்லாமலிருக்கையில் அவளைத் தள்ளிவிட்டால், அவன் அவளை விபசாரம் செய்யப்பண்ணுகிறவனாய் இருப்பான் என்றும், எவனானாலும் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினால், விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் என்றும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௩ ¶ [9]அன்றியும் பொய்யாணை இடாதிருப்பாயாக என்பதும், [10]உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்பதும் [11]பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௩௪ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது. [12]எவ்விதத்திலும் சத்தியம்பண்ணக்கூடாது, வானம் [13]தேவாசனமாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது; பூமி பராபரனுடைய பாதபடியாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

௩௫ எருசலேம் [14]பெரிய இராசனுடைய நகரமாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம் பண்ணலாகாது.

௩௬ உன் சிரசின் ஒரே மயிரையும் நீ வெண்மையும் கறுப்பும் ஆக்கத்தக்க திராணியில்லாதபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

௩௭ [15]உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்; இவைகளுக்கு மேற்பட்டது தீமையினால் உண்டாயிருக்கின்றது.

௩௮ ¶ [16]கண்ணுக்குப் பதிலாகக் கண்ணையும், பல்லுக்குப் பதிலாகப் பல்லையும் (வாங்கவேண்டுமென்று) சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௩௯ நான் உங்களுக்குச் சொல்

கி. பி. ௩௧.

1 [illegible]

2 [illegible]

3 ௫ மோ. ௫. ௰௮ ௨ மோ. ௨௰. ௰௪

4 யோபு ௩௧. ௧ [illegible]

5 [illegible]

* அல்லது இடறல் செய்தால்

6 [illegible]

7 [illegible]

8 [illegible]

9 [illegible]

10 [illegible]

11 [illegible]

12 [illegible]

13 [illegible]

14 [illegible]

15 [illegible]

16 [illegible]

லுகிறதாவது: [1]பொல்லாதவனோடே எதிர்த்துநிற்கக்கூடாது; [2]ஒருவன் உன்னுடைய வலது கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக் காட்டு.

௪௰ உன்னுடனே வழக்காடி, உன்னுடைய மேலங்கியை எடுத்துக்கொள்ளவேணுமென்று இருக்கிறவனுக்கு, உன் வஸ்திரத்தையும் விட்டுவிடு.

௪௧ [3]ஒருவன் உன்னை ஒருகாதவழி வரும்படியாகப் பலவந்தம்பண்ணினால், அவனோடே இருகாதவழிமட்டும் நடந்துபோ.

௪௨ உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக் கொடு; [4]உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதிருப்பாயாக.

௪௩ ¶ [5]நீ பிறனில் அன்புவைத்து, [6]உன் சத்துருவைப் பகைக்கக்கடவாய் என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௪௪ நான் உங்களுக்குச் சொல்லுகிறது: பரமண்டலங்களில் இருக்கிற [7]உங்கள் பிதா பொல்லாதவர்கள்மேலும் நல்லவர்கள்மேலும் தமது சூரியனை உதிக்கவும், நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப்பெய்யவும் பண்ணுகிறார்.

௪௫ அப்படியே நீங்கள் அவருக்குப் புத்திரராயிருக்கும்படிக்கு [8]உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, [9]உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்து, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம்பண்ணுங்கள்.

௪௬ அல்லாமலும், [10]உங்களில் அன்புகூருகிறவர்கள்மேலேமாத்திரம் அன்பாயிருப்பீர்களானால், உங்களுக்கு என்னபலன் வரும்?

கி. பி. ௩௧.

1 லூக் ௨௰ ௨௨ ௨௪ ௨௯ லூக் ௬ ௨௯ உரோ ௰௨ ௰௭, ௰௯ ௧ கொரி ௬ ௭ ௧ தெச ௫ ௰௫ ௧ பே ௩ ௯
2 ஏசா ௫௰ ௬ புலம் ௩ ௩௰
3 மத ௨௭ ௩௨ மாற் ௰௫ ௨௧
4 உபா ௰௫ ௮, லூக் ௬ ௩௰, ௩௫
5 லேவி ௰௯ ௰௮
6 உபா ௨௩ ௬ சங் ௪௧ ௰
7 லூக் ௬ ௨௭, ௩௫ உரோ ௰௨ ௰௪, ௨௰
8 லூக் ௨௩ ௩௪ அப் ௭ ௬௰ ௧ கொரி ௪ ௰௨, ௰௩ ௧ பே ௨ ௨௩ ௩ ௯
9 யோபு ௨௫ ௩ ௨
10 லூக் ௬ ௩௨
11 எபே ௫ ௧
12 கலா ௫ ௰௪ லேவி ௰௧ ௪௪ ௰௯ ௨ லூக் ௬ ௩௬ கொலோ ௧ ௨௮ ௪ ௰௨ யாக் ௧ ௪ ௧ பே ௧ ௰௫, ௰௬
* அல்லது நீதியை ௬ ரோ ௨௪ ௰௩ யௌ ௨௫ நாட்கள் ௨ கொரி ௯ ௯
† அல்லது பிதாவால்
13 உரோ ௰௨ ௮
‡ அல்லது நாரை ஊதாதே
14 லூக் ௰௪ ௰௪

ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவோ?

௪௭ உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்திக்கொள்வீர்களானால், அது பெரியசெய்கை ஆகுமா? அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவோ?

௪௮ ஆகையால் [11]பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, [12]நீங்களும் பூரணசற்குணராய் இருக்கக்கடவீர்கள்.

௬. அதிகாரம்.

௧ அப்பாலும் கிறிஸ்து பருவதத்தில் பிரசங்கம்பண்ணி, தருமத்தையும், ௫ செபத்தையும், ௰௪ நம்முடைய சகோதரர்களை மன்னிப்பதையும், ௰௬ உபவாசத்தையும், ௰௯ நம்முடைய பொக்கிஷத்தைக் கூட்டிவைக்கவேண்டிய இடத்தையும், ௨௪ பராபரனுக்கும், லோகப்பொருளுக்கும் ஊழியம் செய்வதையும் குறித்துச் சொல்லி, ௨௫ உலககாரியங்களுக்காகக் கவலையுள்ளவர்களாயிராமல், ௩௩ பராபரனுடைய இராச்சியத்தைத் தேடும்படிக்கு உபதேசித்தது.

நீங்கள் மனிதர்களாலே காணப்படும்பொருட்டாய் *உங்கள் தருமத்தை அவர்களுக்கு முன்பாகச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்; செய்தால் பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் †பிதாவினிடத்திலே பலன் பெறுதிருப்பீர்கள்.

௨ ஆகையால் நீ [13]தருமம் செய்கிறபொழுது, மனிதர்களால் புகழப்படுவதற்குச் செப ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்கிற வஞ்சகரைப்போல, நீ உனக்குமுன்பாகத் ‡தாரை யூதப்பண்ணக்கூடாது; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩ நீ தருமம் செய்கிறபொழுது, உன் தருமம் அந்தரங்கமாய் இருக்கும்படிக்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

௪ அப்பொழுது [14]அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன்

பிதா தாமே வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௫ ¶ அன்றியும் நீ செபம்பண்ணுகிறபொழுது, வஞ்சகரைப்போல் இருக்கக்கூடாது; அவர்கள் மனிதர்களால் காணப்படும்படிக்கு, செப ஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலேயும் நின்றுகொண்டு செபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬ [1]நீ செபம்பண்ணுகிறபொழுது, உன் வீட்டின் அறைக்குட் பிரவேசித்து, அதின் கதவைப் பூட்டினபின்பு, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கிச் செபம்பண்ணு, அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௭ [2]அல்லாமலும் செபம்பண்ணுகிறபொழுது, நீங்கள் அஞ்ஞானிகளைப்போல வீணாய் வசனிக்கக்கூடாது; [3]அவர்கள் தாங்கள் அதிகமாய் வசனிக்கிறதால் கேட்கப்படுவோம் என்று நினைக்கிறார்கள்.

௮ அவர்களுக்கு ஒப்பாய்ச் செய்யாதிருங்கள், நீங்கள் உங்கள் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுமுன்னமே, அவர் உங்களுக்கு வேண்டுவது இன்னதென்று அறிந்திருக்கிறாரே.

௯ ஆகையால் நீங்கள் செபம்பண்ணவேண்டுவது எப்படியெனில்: [4]பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக.

௰ உம்முடைய இராச்சியம் வருவதாக; [5]உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, [6]பூமியிலேயும் செய்யப்படுவதாக.

௰௧ [7]இன்றைக்கு எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்.

௰௨ [8]எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல, தேவரீர் எங்கள் கடன்களை மன்னித்தருளும்.

௰௩ [9]எங்களைச் சோதனையில் பிரவேசியாதபடி செய்து, [10]தீமையில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். [11]இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்கின்றன, ஆமென், என்பதேயாம்.

௰௪ [12]மனிதர்கள் (உங்களுக்குச்) செய்த தப்பிதங்களை மன்னிப்பீர்களானால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

௰௫ [13]மனிதர்கள் (உங்களுக்குச்) செய்த தப்பிதங்களை மன்னியாதிருப்பீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

௰௬ ¶ [14]மேலும் நீங்கள் உபவாசம் பண்ணும்பொழுது, வஞ்சகரைப்போல முகவாடலாய் இருக்கக்கூடாது; அவர்கள் உபவாசம் பண்ணுகிறது மனிதர்களால் காணப்படும்பொருட்டாய், தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௭ நீ [15]உபவாசிக்கும்பொழுது, அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படிக்கு, உன் சிரசைத் தயிலத்தால் பூசி உன் முகத்தைக் கழுவக்கடவாய்.

௰௮ அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௰௯ ¶ [16]பூமியிலே நீங்கள் உங்களுக்காகப் பொக்கிஷங்களைக்

கி. பி. ௩௧.

1 உ. இரா ௪. ௩௩
2 பிர ௫. ௨
3 ௧ இரா ௧௮. ௨௬, ௨௯
4 லூக் ௰௧. ௨
5 சங் ௱௩. ௨௰, ௨௧
6 மத் ௨௬. ௩௯, ௪௨ அப் ௨௧. ௰௪
7 யோபு ௨௩. ௰௨ [illegible]
8 [illegible]
9 மத் ௨௬. ௪௧ லூக் ௨௨. ௪௰, ௪௬ ௧ கொரி ௰. ௰௩ ௨ பேது ௨. ௯ வெளி ௩. ௰
10 யோவா ௰௭. ௰௫
11 ௧ நாளா ௨௯. ௰௧
12 மாற் ௰௧. ௨௫, ௨௬ எபே ௪. ௩௨ கொலோ ௩. ௰௩
13 மத் ௰௮. ௩௫ யாக் ௨. ௰௩
14 ஏசா ௫௮. ௫
15 [illegible]
16 [illegible]

கி. பி. ௩௧.

கூட்டிவையாதிருங்கள்; அவ்விடத்திலே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

௨௰ [1]பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள்; அவ்விடத்திலே பூச்சியாவது துருவாவது அவைகளைக் கெடுக்கிறதுமில்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை

௨௧ உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்குமே.

௨௨ [2]கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கின்றது; ஆகையால் உன் கண் சொஸ்தமாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும்.

௨௩ உன் கண் வியாதியாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளடைந்திருக்கும், அப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், இருளே மிகவும் மிகுதியாய் இருக்குமல்லவோ?

௨௪ ¶ [3]ஒருவன் இரண்டு எசமான்களுக்கு ஊழியம் செய்யமாட்டான், என்னத்தினாலெனில், ஒருவனை அவன் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான், நீங்கள் [4]பராபரனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்யமாட்டீர்கள்.

௨௫ [5]ஆகையால் உங்கள் சீவனுக்காக என்னத்தைப் போசனம் செய்வோம், என்னத்தைப் பானம் பண்ணுவோம் என்றும் உங்கள் சரீரத்துக்காக என்னத்தை உடுப்போம் என்றும் கவலைப்படாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்திற்குச் சீவனும், உடைக்குச் சரீரமும் அதிகமாய் இருக்கிறதல்லவோ?

௨௬ [6]ஆகாயத்துப் பறவைகளை நோக்கிப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதும் இல்லை, அவைகளுக்கும் உங்கள் பரமபிதா உணவைக் கொடுக்கிறார்; அவைகளிலும் நீங்கள் மேன்மையுள்ளவர்கள் அல்லவா?

௨௭ அல்லாமலும் உங்களில் ஒருவன் கவலைப்படுகிறதினாலே தன் சரீர அளவுக்கு ஒரே முழத்தையும் கூட்டுவானோ? (மாட்டானே.)

௨௮ பின்னும் உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? வெளியிலே லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையை உற்றுப்பாருங்கள், அவைகள் வருந்துகிறதுமில்லை, நூற்கிறதுமில்லை

௨௯ அப்படியிருந்தும், மிகுந்த மகிமையுடைய சாலோமோனும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் (அழகாய்) உடுக்கவில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௰ அப்படியிருக்க அற்ப விசுவாசிகளே, ஒரு நாள் வளருகிறதுமாய் மறுநாள் அடுப்பில் போடப்படுகிறதுமாயிருக்கிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாய் உடுத்துவிக்கிறதால், மிகவும் அதிகமாய் உங்களுக்கு உடுத்துவிப்பார் அல்லவோ?

௩௧ ஆகையால் என்னத்தைப் போசனம் செய்வோம் என்றும், என்னத்தைப் பானம் பண்ணுவோம் என்றும், என்னத்தை உடுப்போம் என்றும், நீங்கள் கவலைப்படாதிருங்கள்; அப்படிப்பட்டவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் தேடுவார்கள்

௩௨ உங்கள் பரமபிதா இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவையுள என்று அறிந்திருக்கிறாரே.

௩௩ [7]முதலாவது பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப

---

[1] மத். ௰௯. ௨௧. லூக். ௰௨. ௩௩. ௩௪. ௰௮. ௨௨. ௧ தீமோ. ௬. ௰௯. ௧ பேது. ௧. ௪.

[2] லூக். ௰௧. ௩௪. ௩௬.

[3] லூக். ௰௬. ௰௩.

[4] கலா. ௧. ௰. ௧ தீமோ. ௬. ௰௭. யாக். ௪. ௪.

[5] சங். ௫௫. ௨௨. லூக். ௰௨. ௨௨. பிலி. ௪. ௬. ௧ பேது. ௫. ௭.

[6] யோபு ௩௮. ௪௧. சங். ௧௪௭. ௯. லூக். ௰௨. ௨௪.

[7] ௧ இரா. ௩. ௰௩. சங். ௩௭. ௨௫. மாற். ௰. ௩௰. லூக். ௰௨. ௩௧. ௧ தீமோ. ௪. ௮.

பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

௩௪ ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளைக்காக நாளைக்குத்தானே கவலைகள் உண்டாகும்; ஒவ்வொரு நாளைக்கு அதினதினுடைய வருத்தம் போதுமே.

௭. அதிகாரம்.

௧ கிறிஸ்து, மற்றவர்களைக் குற்றமாகத் தீர்க்கிறவர்களைக் கண்டித்து, ௬ பரிசுத்தமானவைகளை நாய்களுக்குப் போடக்கூடாதென்று சொல்லி, ௭. ஜெபம்பண்ணவும், ௰௩ இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்கவும், ௰௫ கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், ௨௧ வார்த்தையைக் கேட்கிறவர்களாகமாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயிருக்கவும், ௨௪ (அப்படிச்செய்வது) கன்மலையின்மேல் வீடு கட்டுவதுபோல என்றும், ௨௬ (அப்படிச்செய்யாமலிருப்பது) மணலின்மேல் வீடு கட்டுவதுபோல என்றும் உபதேசித்து, பருவதத்தின்மேலே பண்ணின பிரசங்கத்தை முடிக்கிறது

[1]நீங்கள் (மற்றவர்களை) எண்ணுவது எப்படியோ, அப்படி நீங்களும் எண்ணப்படுவீர்கள்.

௨ [2]அல்லாமலும் நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளப்பார்கள்.

௩ ஆகையால் நீங்கள் (நியாயமின்றி ஒருவனையும்) குற்றவாளிகள் என்று எண்ணாதிருங்கள், எண்ணினால் உங்களையும் அப்படியே எண்ணுவார்கள்; [3]மேலும் நீ உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தைப் பாராமல், சகோதரனுடைய கண்ணில் இருக்கிற சிராயைப் பார்க்கிறதென்ன?

௪ உத்திரமே உன் கண்ணில் இருக்கையில், நீ சகோதரனை நோக்கி, உன் கண்ணில் இருக்கிற சிராயை நான் எடுத்துப்போடுகிறேன் இடங்கொடு என்று நீ சொல்வதென்ன?

௫ வஞ்சகனே, முதலாவது உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு சகோதரனுடைய கண்ணில் இருக்கிற சிராயை எடுத்துப்போட நன்றாய்ப் பார்ப்பாய்.

௬ ¶ [4]பரிசுத்தமானதை நீங்கள் நாய்களுக்குக் கொடுக்கக்கூடாது, அல்லாமலும் உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்குப் போடக்கூடாது, அப்படிச் செய்தால், அவைகள் அந்த முத்துக்களைத் தங்கள் கால்களால் மிதித்து, பின்பு திரும்பிக்கொண்டு உங்களைப் பீறும்.

௭ ¶ [5]வேண்டிக்கொள்ளுகிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான்; [6]தேடுகிறவன் கண்டடைகிறான்;

௮ தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும், ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

௯ [7]உங்களில் எந்த மனிதனாலும் தன்னிடத்தில் அப்பம் கேட்டுக்கொள்ளுகிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

௰ மீனை அவன் கேட்டுக்கொண்டால், அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

௰௧ [8]ஆதலால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச் செய்யும்படி அறிந்திருக்க, பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும் அதிகமாய் நன்மைகளைக் கொடாமல் இருப்பாரா?

௰௨ [9]அன்றியும் மனிதர்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகள் எவைகளோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், [10]இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

௰௩ ¶ கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவாயும் வழி விசாலமாயும் இருக்கின்றது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

கி. பி. ௩௧

[1] லூக். ௬. ௩௭. உரோ. ௨. ௧. ௰௪. ௩, ௪, ௰, ௰௩. ௧ கொரி. ௪. ௩, ௫. யாக். ௪. ௰௧, ௰௨.
[2] மாற். ௪. ௨௪. லூக். ௬. ௩௮.
[3] லூக். ௬. ௪௧, ௪௨.
[4] வாச. ௯. ௭, ௮. ௨௩. ௯. அப். ௰௩. ௪௫, ௪௬.
[5] மத். ௨௧. ௨௨. மாற். ௰௧. ௨௪. லூக். ௰௧. ௯, ௰. ௰௮. ௧. யோவா. ௰௪. ௰௩. ௰௫. ௭. ௰௬. ௨௩, ௨௪. யாக். ௧. ௫, ௬. ௧ யோவா. ௩. ௨௨. ௫. ௰௪, ௰௫.
[6] வாக். ௮. ௰௭. எரே. ௨௯. ௰௨, ௰௩.
[7] லூக். ௰௧. ௰௧, ௰௨, ௰௩.
[8] ௧ மோ. ௬. ௫. ௮. ௨௧.
[9] லூக். ௬. ௩௧.
[10] ௩ மோ. ௰௯. ௰௮. மத். ௨௨. ௪௰. உரோ. ௰௩. ௮, ௯, ௰. கலா. ௫. ௰௪. ௧ தீமோ. ௧. ௫.

௰௪ ஜீவனுக்குக் கொண்டுபோகிற வாசல் *மிகவும் இடுக்கமாயும் வழி நெருக்கமாயும் இருக்கின்றது, சிலமாத்திரம் அதைக் கண்டடைகிறார்கள்; [1]ஆதலால் நீங்கள் இடுக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசியுங்கள்

௰௫ ¶ [2]மேலும் ஆட்டைப்போல உருவும், பீறுகிற [3]ஓநாய்களைப்போல மனதும் உடையவர்களாய் உங்களிடத்திற்கு வருகிற [4]கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு நீங்கள் இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருங்கள்.

௰௬ அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள், [5]முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், [6]முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

௰௭ அப்படியே [7]நல்லமரங்கள் எல்லாம் நல்லகனிகளைக் கொடுக்கும், கெட்டமரம் பொல்லாத கனிகளைக் கொடுக்கும்.

௰௮ நல்லமரம் பொல்லாதகனிகளையும், கெட்டமரம் நல்லகனிகளையும் கொடுக்கமாட்டாது

௰௯ [8]நல்ல கனிகளைக் கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

௨௰ ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்

௨௧ ¶ [9]என்னைக் கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிற எவனும் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை; பரமண்டலங்களிலே இருக்கிற என் பிதாவினுடைய சித்தத்தின்படி செய்கிறவனே அதில் பிரவேசிப்பான்.

௨௨ அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி, ஆ கர்த்தாவே கர்த்தாவே, உமது நாமத்தினாலே [10]நாங்கள் தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவோ? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவோ? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவோ என்பார்கள்.

௨௩ [11]அப்பொழுது நான் அவர்களை நோக்கி, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, [12]அக்கிரமக்காரரே, நீங்கள் என்னை விட்டுப் போங்கள் என்று அவர்களுக்கு அறிவிப்பேன்.

௨௪ ¶ [13]ஆகையால் நான் சொல்லிய வசனங்களைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைத் தன் வீட்டைக் கல்மலையின்மேல் கட்டின புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்.

௨௫ அந்த வீடு கல்மலையின்மேல் அஸ்திபாரம் போட்டிருந்தபடியால், பெருமழைசொரிந்தும், பெருவெள்ளம் வந்தும், காற்றுகள் அடித்து அந்த வீட்டின்மேலே மோதியும், அது விழவில்லை

௨௬ நான் சொல்லிய வசனங்களைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியீனனுக்கு ஒப்பாயிருப்பான்.

௨௭ பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்றுகளும் அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியபொழுது, அது விழுந்து முழுவதும் இடிந்துபோயிற்று என்றார்.

௨௮ பின்பு நடந்ததென்னவெனில், இயேசுவானவர் இந்த வசனங்களைச் சொல்லி முடித்தபொழுது, அவர் வேதபாரகரைப்போல அல்ல,

௨௯ [14]அதிகாரமுடையவரைப்போலப் போதித்தபடியினாலே, சனங்கள் அவருடைய [15]உபதேசத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.

௮. அதிகாரம்.

௨. கிறிஸ்து குஷ்டரோகியைச் சுத்தமாக்கி, ௫ சேனைக்காரனுடைய வேலைக்காரனையும், ௰௪ பேதுருவினுடைய மாமியையும், ௰௬ மற்ற அநேகர

கி. பி. ௩௧.

* அல்லது எவ்வளவாய்

1 லூக் ௰௩. ௨௪

2 மீகா ௩. ௫; ௨ தீமோ ௩. ௫

3 அப் ௨௰. ௨௯, ௩௰

4 ரோமர் ௰௬. ௧௭; எபே ௫. ௬; [illegible]

5 [illegible]

6 லூக் ௬. ௪௩, ௪௪

7 எரே ௰௧. ௰௯ [illegible]

8 [illegible]

9 [illegible]

10 [illegible]

11 [illegible]

12 [illegible]

13 லூக் ௬. ௪௭

14 யோவா ௭. ௪௬

15 [illegible]

பிணியாளிகளையும் குணமாக்கி, ௰௯ தம்மைப் பின்செல்லவேண்டிய விதத்தைக் காண்பித்து, ௨௩ கடலிலே கொந்தளிப்பை அமர்த்தி, ௨௮ பிசாசுபிடித்த இரண்டுபேர்களை விட்டுப் பிசாசுகளைத் துரத்தி, ௩௨ அவைகளைப் பன்றிகளுக்குட்போக உத்தரம் கொடுத்தது.

கி. பி. ௩௧.

அவர் மலையிலிருந்து இறங்கி வந்தபொழுது, திரளான சனங்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

௨ [1]அப்பொழுது ஒரு குஷ்டரோகி வந்து அவருக்கு முன்பாக விழுந்து வணங்கி, ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.

௩ இயேசுவானவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, எனக்குச் சித்தம் உண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் நீங்க, அவன் சுத்தமானான்.

௪ அல்லாமலும் இயேசுவானவர் அவனை நோக்கி, [2]நீ இதை ஒருவனுக்கும் சொல்லாமலிருக்க நினை; அவர்களுக்குச் சாட்சியாகும்படிக்கு, நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே [3]கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

௫ ¶ [4]இயேசுவானவர் கப்பர்நாகூம் பட்டணத்தில் பிரவேசித்தபின்பு, நூறுபேருக்குச் சேர்வைக்காரன் ஒருவன் அவரிடத்தில் வந்து அவரை நோக்கி,

௬ ஆண்டவரே, என் வேலைக்காரன் திமிர்வாதமுள்ளவனாய் வீட்டிலே கிடந்து, மிகவும் உபாதிப்படுகிறான் என்று வேண்டிக்கொண்டான்.

௭ அவனுடனே இயேசுவானவர், நான் வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார்.

௮ அதற்கு அந்தச் சேர்வைக்காரன் சொன்னது: ஆண்டவரே, [5]நீர் என் வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கு நான் பாத்திரன் அல்ல

௯ அல்லாமலும் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குட்பட்டிருக்கிற சேவகரில் ஒருவனை, போவென்னப் போகிறான்; மற்றொருவனை, வாவென்ன வருகிறான்; எனக்கு அடிமையானவனை, இதைச்செய்யென்னச் செய்கிறான்; ஆகையால் [6]நீர் ஒருவார்த்தைமாத்திரம் சொன்னால், என் வேலைக்காரன் சொஸ்தமடைவான் என்றான்.

௰ இயேசுவானவர் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௧ பின்னும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [7]அநேகம்பேர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராச்சியத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடனே கூடப் பந்தியில் இருப்பார்கள்.

௰௨ [8]இராச்சியத்தின் பிள்ளைகள் காரிருளிலே புறம்பாகத் தள்ளப்படுவார்கள்; [9]அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்று சொன்ன பின்பு,

௰௩ அவர் அந்தத் தலைவனை நோக்கி, நீ போகலாம், உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவதென்றார்; அந்நாழிகையிலே அவனுடைய வேலைக்காரன் சொஸ்தமடைந்தான்.

௰௪ ¶ [10]இயேசுவானவர் பேதுருவின் வீட்டிலே வந்து, அவனுடைய மாமி சுரமாய்க் கிடக்கிறதைக்கண்டு,

௰௫ [11]அவள் கையைத் தொட்டார்; உடனே சுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்கு ஊழியம் செய்தாள்.

௰௬ ¶ [12]அஸ்தமனமானபொழுது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்திற்குக் கொண்டு வந்தார்கள்; [13]அவர் நமது பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தா

[1] மாற். ௧. ௪௰. லூக். ௫. ௰௨.
[2] மத். ௯. ௩௰. மாற். ௫. ௪௩.
[3] ௩ மோ. ௰௪. ௩, ௪, ௰. லூக். ௫. ௰௪.
[4] லூக். ௭. ௧.
[5] லூக். ௰௫. ௰௯, ௨௧.
[6] சங். ௱௭. ௨௰.
[7] ௧ மோ. ௰௨. ௩. ஏசா. ௨. ௨, ௩. ௰௧. ௰. மல். ௧. ௰௧. லூக். ௰௩. ௨௯. அப். ௰. ௪௫. ரோ. ௰௫. ௯. கலா. ௩. ௨௮. எபே. ௩. ௬.
[8] மத். ௨௧. ௪௩.
[9] ௰௩. ௪௨, ௫௰. ௨௨. ௰௩. ௨௪. ௫௧. ௨௫. ௩௰. லூக். ௰௩. ௨௮. ௨ பே. ௨. ௰௭. யூதா ௰௩.
[10] மாற். ௧. ௨௯, ௩௰, ௩௧. லூக். ௪. ௩௮, ௩௯.
[11] மாற். ௧. ௩௨. லூக். ௪. ௪௰, ௪௧. ௧ கொரி. ௯. ௫.
[12] மாற். ௧. ௩௨. லூக். ௪. ௪௰, ௪௧.
[13] ஏசா. ௫௩. ௪. ௧ பே. ௨. ௨௪.

என்று தீர்க்கதரிசியாகிய எசாயா சொன்னது நிறைவேறும்படிக்கு,

௰௭ அவர் அந்த ஆவிகளை ஒரு வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகள் எல்லாரையும் குணமாக்கினார்

௰௮ ¶ பின்பு இயேசுவானவர் அநேக சனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கக் கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.

௰௯ [1]அப்பொழுது வேதபாரகன் ஒருவன் வந்து அவரை நோக்கி: போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றுவேன் என்றான்

௨௰ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனிதனுடைய குமாரனோ, தலை சாய்க்கிறதற்கு இடம் இல்லாதவனாய் இருக்கிற[illegible] என்றார்

௨௧ [2]பின்னும் அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு உத்தரவு தாரும் என்றான்.

௨௨ [3]அவனுடனே இயேசுவானவர் சொன்னது: மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்

௨௩ ¶ பின்பு அவர் படவில் ஏறுகிறபொழுது, சீஷர்கள் அவர் பின் சென்று ஏறினார்கள்

௨௪ அப்பொழுது படவு [4]அலைகளினாலே மூடப்பட்டதக்கதாய்க் கடலிலே பெருங்காற்று உண்டாயிற்று; அவரோ நித்திரைபண்ணினார்.

௨௫ அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து அவரை எழுப்பி, ஆண்டவரே, எங்களை இரட்சிக்க வேண்டும், கெட்டுப்போகிறோமே என்றார்கள்.

௨௬ அவர்களை அவர் நோக்கி, ஆ அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி, [5]எழுந்து காற்றுகளையும் கடலையும் அதட்டினார்; உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

௨௭ அவர்கள் மிகவு[illegible] ஆச்சரியப்பட்டு, காற்றுக்களும் கடலும் இவருக்குக் கீழ்ப்படியத்தக்கதாக இவர் எப்படிப்பட்டவரோ என்று சொன்னார்கள்.

௨௮ [6]பின்பு அவர் அக்கரையிலே கெர்கேசேனர் தேசத்திலே சேர்ந்தார், அவ்வழியாய் மற்றொருவரும் நடவாமல் இருக்கத்தக்கதாக மிகுந்த துஷ்டராய், பிசாசு பிடித்த மனிதர்கள் இரண்டு பேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவருக்கு எதிராக வந்து,

௨௯ ஆ இயேசுவே, பராபரனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னமே எங்களை வேதனைப்படுத்தும்படிக்கு இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.

௩௰ அல்லாமலும் அவர்களுக்குச் சற்றே தூரமாய் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருந்தன

௩௧ அப்பொழுது பிசாசுகள், நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் பிரவேசிக்கும்படிக்கு உத்தரவுகொடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்

௩௨ போங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார்; உடனே அவர்கள் புறப்பட்டுப் பன்றிக் கூட்டத்தில் பிரவேசித்தார்கள்; அப்பொழுது பன்றிகள் எல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து, சலத்திலே மாண்டு போயின.

௩௩ அவைகளை மேய்த்தவர்கள் ஓடிப் பட்டணத்தில் சென்று, எல்லாவற்றைம், யுபிசாசு பிடி

[1] லூக் ௯ ௫௭, ௫௮
[2] லூக் ௯ ௫௯
[3] லூக் ௯ ௬௰ [illegible]
[4] மாற் ௪ ௩௭ லூக் ௮ ௨௩
[5] சங் ௬௫ ௭ [illegible]
[6] மாற் ௫ ௧ லூக் ௮ ௨௬

த்திருந்தவர்களுடைய சங்கதியையும் அறிவித்தார்கள்.

௩௪ அப்பொழுது பட்டணத்தார் எல்லாரும் இயேசுவுக்கு எதிராகப் புறப்பட்டு அவரைக் கண்டு, [1] தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௯. அதிகாரம்.

௨. திமிர்வாதக்காரனை ஒருவனைச் சொஸ்தமாக்கி, ௯ ஆயத்துறையில் இருந்த மத்தேயுவை அழைத்து, ௰ ஆயக்காரரோடும் பாவிகளோடும் புசித்து, ௰௪ தம்முடைய சீஷர்கள் உபவாசம் பண்ணாததைக்குறித்து நியாயம் சொல்லி, ௨௰ பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயை ஆரோக்கியமாக்கி, ௨௩ யவீருவினுடைய மகளை மரணத்தினின்று எழுப்பி, ௨௭ இரண்டு குருடருக்குப் பார்வை கொடுத்து, ௩௨ பிசாசுபிடித்த ஒரு ஊமையைச் சுகமாக்கி, ௩௬ கும்புகள்மேல் மனதிரங்குகிறது.

[2]அப்பொழுது அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு, தமது பட்டணத்தில் வந்தார்.

௨ [3]அங்கே படுக்கையின்மேல் கிடந்த திமிர்வாதக்காரனை அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; [4]இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, மகனே திடமாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார்.

௩ அங்கே இருந்த வேதபாரகரில் சிலர், இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று எண்ணிக்கொண்டார்கள்.

௪ [5]இயேசுவானவர் அவர்களுடைய நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாங்கானவைகளை நினைக்கிறதென்ன?

௫ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்லுகிறதோ, எழுந்திருந்து நடவென்று சொல்லுகிறதோ, எது எளிது?

௬ மனிதனுடைய குமாரன் பூமியில் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடையவன் என்பதை நீங்கள் அறியும்படிக்கு, அவர் திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்றார்.

௭ உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான்.

௮ அதைக் கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௯ ¶ [6]இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதனைக் கண்டார்; அவனுக்கு மத்தேயு என்று பேர், அவனை அவர் நோக்கி, என்னைப் பின்பற்றிவா என்றார்; அவன் எழுந்திருந்து அவர் பின் சென்றான்.

௰ ¶ [7]பின்பு அவர் வீட்டிலே போசனபந்தி இருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவுடனேயும் அவருடைய சீஷர்களுடனேயும் கூடப் பந்தியிருந்தார்கள்.

௰௧ பரிசேயர் அதைக் கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி, என்னத்தினாலே உங்கள் போதகர் [8]ஆயக்காரரோடும் [9]பாவிகளோடும் போசனம்பண்ணுகிறார் என்றார்கள்.

௰௨ இயேசுவானவர் அதைக் கேட்டு அவர்களை நோக்கி, சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்.

௰௩ [10]மேலும், பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் போய்ப் படித்துக்கொள்ளுங்கள்; [11]அந்தப்படி நான் நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புதற்கு அழைக்கவந்தேன் என்றார்.

௰௪ ¶ [12]அந்நேரத்திலே யோவானுடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசம்பண்ணி வருகிறோம்; உம்முடைய சீஷர்

கி. பி ௩௧.

[1] ௧ இரா. ௰௭. ௰௮. லூக். ௫. ௮. அப். ௰௬. ௩௯.
[2] மத். ௪. ௰௩.
[3] மாற். ௨. ௩. லூக். ௫. ௰௮.
[4] மத். ௮. ௰.
[5] சங்கீ. ௨. மத். ௰௨. ௨௫. மாற். ௰௨. ௰௫. லூக். ௫. ௨௨. ௬. ௮. ௯. ௪௭. யோ. ௨. ௨௫.
[6] மாற். ௨. ௰௪. லூக். ௫. ௨௭.
[7] மாற். ௨. ௰௫. லூக். ௫. ௨௯.
[8] மத். ௰௧. ௰௯. லூக். ௰௫. ௨.
[9] லூக். ௰௯. ௭. கலா. ௨. ௰௫.
[10] ஓசி. ௬. ௬. மீகா ௬. ௬, ௭, ௮. மத். ௰௨. ௭.
[11] ௧ தீமோ. ௧. ௰௫.
[12] மாற். ௨. ௰௮. லூக். ௫. ௩௩. ௰௮. ௰௨.

களோ உபவாசம்பண்ணாமல் இருக்கிறார்கள், அதேன் என்றார்கள்.

௰௫ இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: [1]கலியாணத்துக்கு வந்த மனிதர்கள் மணவாளன் தங்களோடு இருக்கையில் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்படுங் காலம் வரும், [2]அப்பொழுது அவர்கள் உபவாசம் பண்ணுவார்கள்.

௰௬ ஒருவனும் கோடித் துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் அதில் இணைத்த துண்டு அவ்வஸ்திரத்தில் எடுபட்டுப்போக அதிக பொத்தல் உண்டாகும்.

௰௭ மேலும் திராட்சப்பழங்களின் புதிய இரசத்தைப் பழைய துருத்திகளில் வார்க்கமாட்டார்கள், வார்த்தால் துருத்திகள் கிழிந்துபோகும், இரசமும் சிந்திப்போகும், துருத்திகளும் கெட்டுப்போகும்; புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்.

௰௮ ¶ [3]அவர் இவைகளை அவர்களோடே பேசுகையில், தலைவன் ஒருவன் வந்து வணக்கமாய் விழுந்து அவரை நோக்கி, இந்நேரத்திலே என் மகள் இறந்துபோனாள், அவள் உயிரடையும்படிக்கு நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்.

௰௯ இயேசுவானவர் எழுந்திருந்து, தமமுடைய சீஷர்களோடுகூட அவன் பின்னே போனார்

௨௰ ¶ [4]அவர் போகையில், பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி வந்து,

௨௧ இவருடைய வஸ்திரத்தைத் தொட்டமாத்திரமே சொஸ்தம் அடையலாம் என்று தன் உள்ளத்திலே எண்ணி, அவருக்குப் பின்னாலே போய், அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

௨௨ அப்பொழுது இயேசுவானவர் திரும்பி அவளை நோக்கி, மகளே திடமாயிரு, [5]உன் விசுவாசத்தினாலே உனக்குச் சுகம் உண்டாயிற்று என்றார்; அந்நேரமே அந்த ஸ்திரி சொஸ்தம் அடைந்தாள்.

௨௩ பின்பு [6]இயேசுவானவர் அத்தலைவனுடைய வீட்டில் சேர்ந்து, [7]தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற சனங்களையும் கண்டு,

௨௪ அவர்களை நோக்கி, வெளியே போங்கள், [8]இந்தப் பெண் இறந்துபோகவில்லை, நித்திரை பண்ணுகிறாள் என்றார்; அவர்கள் அவரைநோக்கி நகைத்தார்கள்.

௨௫ சனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தார், உடனே அவள் எழுந்திருந்தாள்.

௨௬ அந்தச் செய்கையினாலே * அவருடைய கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலமாயிற்று

௨௭ ¶ இயேசுவானவர் அவ்விடம் விட்டுப் போகையில், [9]குருடர் இருவர் அவர் பின்னே சென்று, ஆ தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

௨௮ அவர் வீட்டிலே வந்த பின்பு அந்தக் குருடர் அவரிடத்திற்கு வந்தார்கள்; இயேசுவானவர் அவர்களை நோக்கி, இப்படிச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களோ என்றார்; ஆண்டவரே, விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

௨௯ அப்பொழுது அவர் அவர்களுடைய கண்களைத் தொட்டு, உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

௩௰ உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன; [10]பின்பு

கி. பி. ௩௧.

1 யோவா ௩ ௨௯

2 அப ௰௩ ௨, ௰௪ ௨௩ ௧ கொரி ௭ ௫

3 மாற் ௫ ௨௨ லூக் ௮ ௪௧

4 மாற் ௫ ௨௫ லூக் ௮ ௪௩

5 லூக் ௭ ௫௰ ௮ ௪௮ ௰௭ ௰௯ ௰௮ ௪௨

6 மாற் ௫ ௩௮ லூக் ௮ ௫௧

7 ௨ நாளா ௩௫ ௨௫

8 அப ௨௰ ௰

* அல்லது இதைக் குறித்தகீர்த்தி

9 மத ௰௫ ௨௨ ௨௰ ௩௰, ௩௧ மாற ௰ ௪௭, ௪௮ லூக ௰௮ ௩௮, ௩௯

10 மத் ௮ ௪ ௰௨ ௰௬ ௰௭ ௯ லூக் ௫ ௰௪.

இயேசுவானவா அவாகளைநோககி, நீஙகள் இதை ஒருவனுக்கும அறிவிகக வேண்டாம என்று கட்டளையிட்டாா.

௩௧ அவர்களோ புறப்பட்டு, அத்தேசத்தில எஙகும [1]அவருடைய கீர்த்தியைப பிரசிததமபண்ணினாகள்.

௩௨ ¶ [2]அவர்கள் புறபபட்டுப போகையில, பிசாசு பிடித்திருநத ஊமையனை அவரிடததிற்குக கொண்டுவந்தார்கள்.

௩௩ பிசாசு துரத்தபபட்ட பினபு ஊமையன் பேசினான்; சனஙகள ஆசசரியபபட்டு, இபபடியாக இஸரவேலருககுளளே ஒருக்காலும காணபபடடதில்லை என்றாகள.

௩௪ [3]பரிசேயா இவன் பிசாசுகளுடைய தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான என்றார்கள்.

௩௫ ¶ [4]பினபு இயேசுவானவா சகல பட்டணஙகளையும கிராமஙகளையும சுறறி நடநது, [5]செப ஆலயஙகளிலே போதகம்பணணி, இராசசியததைககுறிததுச் சுவிசேஷததைப பிரசஙகிதது, சனஙகளுககு உணடான எநத வியாதியையும் எநத நோயையும நீககி, அவாகளைக குணமாககினாா.

௩௬ [6]அபபொழுது அவா மிகுநத சனஙகளைப பாாதது, மேயபபனிலலாத ஆடுகளைபபோல அவாகள் * சோாநதுபோயச் சிதறபபட்டவர்களாய இருநதபடியால், [7]அவாகளைககுறிதது மிகவும மனதுருகித தம்முடைய சீஷர்களைநோககி, [8]அறுபபு மிகுதியாகவே இருககின்றது, வேலையாளகள் சிலாமாததிரம இருககிறார்கள்.

௩௭ [9]ஆதலால் அறுபபுக்கு எசமான தமது அறுபபுக்கு வேலையாள்களை அனுபபவேண்டும் என்று அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்

கி. பி. ௬௧.

1 மாற ௭ ௩௬

2 மத் ௰௨ ௨௨ லூக் ௰௧ ௰௪

3 மத ௰௨ ௨௪ மாற ௩ ௨௨ லூக் ௰௧ ௰௫

4 மாற ௬ ௬ லூக் ௰௩ ௨௨

5 மத ௪ ௨௩

6 ௧ இரா ௨௨ ௰௭ ௨ நாளா ௰௮ ௰௬ சகரி ௰ ௨

* அல்லது தொயநதுகிடநதவாகளாக

7 மாற ௬ ௩௪

8 லூக ௰ ௨ யோவா ௪ ௩௫

9 ௨ தெச ௩ ௧

10 மாற ௩ ௰௩ [illegible] லூக ௬ ௰௩ — ௰௬

† பேயாகவும

11 யோவா ௧ ௪௨

12 லூக ௬ ௰௫ அப்ப ௧ ௰௩

13 யோவா ௰௩ ௨௬

14 மத ௪ ௰௫

15 ௨ இரா ௰௭ ௨௪ யோவா ௪ ௯ ௨௦

16 எசா ௫௩ ௬ எரே ௫௦ ௬, ௧௭ எசே ௩௪ ௫, ௬ ௧ பே ௨ ௨௫

17 மத ௰௫ ௨௪ அப ௰௩ ௪௬

18 லூக் ௯ ௨

19 மத ௩ ௨ லூக் ௰ ௯

௰. அதிகாரம்.

௧ கிறிஸது தமமுடைய பனனிரணடு அபபோஸதலாகளுக்கும அற்புதஙகளைச்செயயத்தக்க வலலமையை அளித்து, ௫ அவாகளுக்கு அதிகாரம கொடுத்து அவாகளைப படிபபித்து, ௰௬ அவாகளுக்கு வரபபோகிற துனபஙகளுக்கேறற ஆறுதலைச்சொல்லி, ௪௰ அவாகளை ஏறறுக்கொள்ளுகிறவாகளுக்கு ஆசீர்வாதத்தை வாக்குத்தததமபண்ணி அவாகளை அனுபபினது

அபபொழுது [10]அவர் தமமுடைய பனனிரணடு சீஷாகளையும தமமிடததில அழைதது, அசுததமான ஆவிகளைத †துரததவும், சகல விதமான வியாதிகளையும் நோயகளையும நீககவும அவாகளுககு அதிகாரம கொடுததாா.

௨ அநதப பனனிரணடு அபபோஸதலாகளின நாமஙகள் என்னவெனில, [11]முநதினவனாகிய பேதுரு எனனபபட்ட சீமோன, அவனுடைய சகோதரனாகிய அநதிரேயா, செபேதேயுவின குமாரன் யாககோபு, அவனுடைய சகோதரன் யோவான,

௩ பிலிபபு, பருததோலோமேயு, தோமா, ஆயககாரனான மததேயு, அலபேயுவின் குமாரன யாக்கோபு, ததேயு எனனும மறுநாமமுளள லெபபேயு,

௪ [12]கானானனாகிய சீமோன், இயேசுவைக காட்டிககொடுததவனான [13]யூதாஸகாரியோத எனனபபட்டவாகளே.

௫ ¶ இயேசுவானவா அநதப பனனிருவரையும அனுபபி அவாகளுககுக்கட்டளையிட்டுச சொனனதாவது: [14]நீஙகள புறததேசததாரிடததிறகுப போகாமலும,

௬ [15]சாமாரியருடைய பட்டணங்களில் பிரவேசியாமலும காணாமல்போன [16]ஆடுகளாயிருக்கிற [17]இஸரவேல் குடும்பத்தாரிடததிற்குப [18]புறபபட்டுப்போய்,

௭ [19]பரலோக இராசசியம சமீபமாய வநததென்று கூறி,

௮ வியாதிபபட்டவர்களைக குணமாககி, குஷ்டரோகிகளைச சுத்தம்பண்ணி, மரிததோரை எழு

ப்பி, பிசாசுகளைத் துரத்துங்கள், [1]நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்.

௯ [2]நீங்கள் கச்சைகளில் பொன்னையாவது, வெள்ளியையாவது, செம்பையாவது, வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது [3]உங்களுக்காகத் * தேடிவைக்கவேண்டாம்.

௰ [4]வேலைசெய்கிறவன் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெறும்படிக்குப் பாத்திரவானாய் இருக்கிறானே.

௰௧ [5]அல்லாமலும் எந்தப் பட்டணத்திலும் கிராமத்திலும் நீங்கள் பிரவேசிக்கும்பொழுது, அதிலே இருக்கிற பாத்திரவான் இன்னான் என்று விசாரித்துக்கொண்டு, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் இருங்கள்.

௰௨ அந்த வீட்டுக்குள் பிரவேசிக்கிறபொழுது, நீங்கள் அதிலே இருக்கிறவர்களை வாழ்த்திக்கொள்ளுங்கள்.

௰௩ [6]அந்தக் குடும்பத்தார் [7]பாத்திரவான்களாய் இருந்தால், நீங்கள் அவர்களுக்குச் சொன்ன சமாதானம் அவர்களைச் சேரக்கடவது, பாத்திரவான்கள் அல்லாதிருந்தால், அந்த வாழ்த்துதல் உங்களிடமாய்த் திரும்பக்கடவது.

௰௪ [8]எங்கேயாகிலும் அவர்கள் உங்களை அங்கீகரித்துக்கொள்ளாமலும் உங்கள் வசனங்களுக்குச் செவிகொடாமலும் இருந்தால், நீங்கள் அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படுகையில், உங்கள் [9]கால்களிலுள்ள தூளை உதறிப்போடுங்கள்.

௰௫ நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம்கொமோரா தேசத்தைப்பார்க்கிலும் [10]அந்தப் பட்டணத்திற்கு அதிக தண்டனை கிடைக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௬ [11]பாருங்கள், ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே (அனுப்புகிறது போல) உங்களை அனுப்புகிறேன்; [12]ஆகையால் நீங்கள் பாம்புகளைப்போல் விவேகமுள்ளவர்களாயும், [13]புறாக்களைப்போல் †கபடமில்லாதவர்களாயும் இருக்கவேண்டும்.

௰௭ அப்படியே நீங்கள் மனிதர்களிடத்தில் சாவதானமாயிருங்கள், [14]என்னத்தினாலெனில், உங்களைப் பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் [15]ஆலயங்களிலே உங்களை வாரினால் அடிப்பார்கள்.

௰௮ [16]என் நிமித்தம் நீங்கள் துரைகளிடத்திற்கும் இராசாக்களிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டு, அவர்களுக்கும் புறதேசத்தாருக்கும் முன்பாகச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.

௰௯ [17]அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்பொழுது, நீங்கள் பேசவேண்டியது அந்நேரத்திலே உங்களுக்கு அருளிச்செய்யப்படும், [18]ஆகையால் எப்படி எதைப் பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள்.

௨௰ [19]பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவர் உங்களில் இருந்து பேசுகிறவர்.

௨௧ [20]அல்லாமலும் சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பார்கள்; தாய் தகப்பன்மாரைப் பிள்ளைகள் விரோதித்து, அவர்கள் மரணம் அடையும்படிக்குச் செய்விப்பார்கள்.

௨௨ [21]என்னுடைய நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; [22]ஆகிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்படுவான்.

௨௩ [23]அல்லாமலும் மனிதனு

கி. பி ௩௧.

1 அப் ௮. ௰௮, ௨௰.
2 ௧ சாமு ௯. ௭. மாற் ௬. ௮. லூக் ௯. ௩. ௰. ௪. ௨௨. ௩௫.
3 மாற் ௬. ௯.
* எடுத்துக்கொள்ள வேண்டாம்.
4 லூக் ௰. ௭. ௧ கொரி ௯. ௭. ௧ தீமோ ௫. ௰௮.
5 லூக் ௰. ௮.
6 லூக் ௰. ௫.
7 சங் ௩௫. ௰௩.
8 மாற் ௬. ௰௧. லூக் ௯. ௫. ௰. ௰.
9 [illegible]
10 மத் ௰௧. ௨௨, ௨௪.
11 லூக் ௰. ௩.
12 உரோ ௰௬. ௰௯. எபே ௫. ௰௫.
13 ௧ கொரி ௰௪. ௨௰. பிலி ௨. ௰௫.
† அல்லது [illegible]
14 மத் ௨௪. ௯. மாற் ௰௩. ௯. லூக் ௰௨. ௰௧. ௨௧. ௰௨.
15 அப் ௫. ௪௰.
16 [illegible]
17 [illegible]
18 [illegible]
19 [illegible]
20 [illegible]
21 லூக் ௨௧. ௰௭.
22 [illegible]
23 மத் ௰௬. ௨௮.

டைய குமாரன் வருமவரைக்கும், நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களை எல்லாம்* கடந்துபோய் வரமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், [1]ஆதலால் ஒரு பட்டணத்திலே உங்களைத் துன்பப்படுத்தினால், மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்.

௨௪ [2]சீஷனானவன் போதகனிலும், அடிமைப்பட்டவன் தன் எசமானிலும் மேற்பட்டவர்கள் அல்ல.

௨௫ சீஷன் தன் போதகனைப்போலவும், அடிமைப்பட்டவன் தன் எசமானைப்போலவும் இருக்கிறது அவர்களுக்குப் போ[illegible]மே, [3]வீட்டெசமானைப் பெயெல்செபூல் என்று அவர்கள் சொல்லுவார்களானால், அவருடைய வீட்டாரை அதிகமாய் அப்படிச் சொல்வார்கள் அல்லவா? ஆதலால் அவர்களுக்குப் பயப்படாதிருப்பீர்களாக.

௨௬ [4]வெளியாக்கப்படாத மறைபொருள் இல்லை, அறியப்படாத இரகசியமும் இல்லை.

௨௭ நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்தில் சொல்லுங்கள்; நீங்கள் இரகசியமாய்க் கேட்கிறதை மேடைகளிலிருந்து பிரசித்தம்செய்யுங்கள்.

௨௮ [5]அல்லாமலும் ஆத்துமாவைக் கொலைசெய்யத் திராணியில்லாமல், சரீரத்தைமாத்திரம் கொலைசெய்கிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே கெடுக்க வல்லவருக்குப் பயப்படுங்கள்.

௨௯ †ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவோ? ஆகிலும் உங்கள் பிதாவின் உத்தரவில்லாமல் அவைகளில் ஒன்றும் தரையிலே விழாது.

௩௰ [6]அல்லாமலும் உங்கள் தலையின் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன.

௩௧ ஆதலால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் மேன்மையாயிருக்கிறீர்கள்.

௩௨ [7]அப்படியிருக்க, மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை [8]நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கைபண்ணுவேன்.

௩௩ [9]மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பேன்.

௩௪ [10]பூமியின்மேல் சமாதானத்தை வரப்பண்ண வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள், சமாதானத்தை அல்ல, சண்டையை வரப்பண்ண வந்தேன்.

௩௫ எப்படியெனில், குமாரன் தன் தகப்பனையும், மகள் தன் தாயையும், மருமகள் [11]தன் மாமியையும் விட்டுப் பிரிந்துபோகப்பண்ண வந்தேன்.

௩௬ [12]அப்படி ஒரு மனிதனுடைய குடும்பத்தாரே அவனுக்குச் சத்துருக்களாயிருப்பார்கள்.

௩௭ [13]என்னிலும் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; என்னிலும் மகனையாவது மகளையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

௩௮ [14]அல்லாமலும் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என் பின்னே செல்லாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

௩௯ [15]தன் சீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்நிமித்தம் தன் சீவனை இழக்கிறவன் அதைக் காப்பான்.

---

* [illegible] போய

[1] மத ௨. ௰௩ ௪ ௰௨. ௰௨ ௰௯ அப. ௮. ௧ ௯ ௨௰ ௰௪ ௯

[2] லூக் ௬. ௪௰ யோவா ௰௩ ௰௬ ௰௫ ௨௰

[3] மத ௰௨. ௨௪ மாற் ௩. ௨௨ லூக் ௰௧ ௰௫ யோவா ௮ ௪௮ ௰௨

[4] மாற் ௪. ௨௨ லூக் ௮ ௰௭ ௰௨ ௨

[5] ஏசா ௮. ௰௨, ௰௩ லூக் ௰௨ ௪ ௫ ௰௪

† மூலபாஷையிலே இது உரோமருடைய பணத்தில் [illegible] காசமாம், மத [illegible]

[6] [illegible] ௰௪ ௪ ௫ [illegible] ௰௪ ௰௯ லூக் ௨௧ ௰௮ அப ௨௭ ௩௪

[7] லூக் ௰௨ ௮ உரோ ௰௩, ௯

[8] லூக் ௰௨ ௮ வெளி ௩ ௫

[9] மாற் ௮ ௩௮ லூக் ௯ ௨௬. ௨ தீமோ ௨ ௰௨

[10] லூக் ௰௨ ௪௯ ௫௩

[11] மீகா ௭ ௬

[12] சங் ௪௧ ௯ ௫௫ ௰௨, ௰௩ மீகா ௭ ௬ யோவா ௰௩ ௰௮

[13] லூக் ௰௪ ௨௬

[14] மத ௰௬ ௨௪ மாற் ௮ ௩௪ லூக் ௯ ௨௩ ௰௪ ௨௭

[15] மத ௰௬ ௨௫ லூக் ௰௭ ௩௩ யோவா ௰௨ ௨௫

௪௰ ¶ [1] உங்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான்; என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

௪௧ [2] தீர்க்கதரிசி என்கிற நாமத்தினிமித்தம் ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கு உரிய பலனை அடைவான்; நீதிமான் என்கிற நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கு உரிய பலனை அடைவான்

௪௨ [3] இந்தச் சிறியவர்களில் ஒருவன் சீஷனாயிருக்கிறதினிமித்தம் அவனுக்கு ஒரு கலயம் தண்ணீர்மாத்திரம் தாகத்துக்குக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

௰௧. அதிகாரம்.

௨ யோவான் தன்னுடைய சீஷர்களைக் கிறிஸ்துவண்டைக்கு அனுப்பினது. ௭ யோவானைக் குறித்துக் கிறிஸ்து பகர்ந்த சாட்சி. ௰அ யோவானையும் கிறிஸ்துவையும் குறித்துச் சனங்களுடைய தாறுமாறு. ௨௰ கோராசின் பெத்சாயிதா கப்பர்நகூம் என்ற பட்டணங்களுடைய மனந்திரும்பாமையையும் குணப்படாமையையும் குறித்துக் கிறிஸ்து கண்டித்தது. ௨௫ சுவிசேஷத்தைப் பேதைமையுள்ளவர்களுக்கு அறிவிக்கிறதினாலே தோன்றுகிற தம்முடைய பிதாவின் ஞானத்தைப் புகழ்ந்தது. ௨அ பாவச்சுமையை உணர்ந்தவர்கள் யாவரையும் தம்மிடத்தில் வரும்படி அழைத்தது

இயேசுவானவர் தம்முடைய பன்னிரண்டு சீஷருக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசம்பண்ணிப் பிரசங்கிக்கும்படிக்கு அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்

௨ ¶ [4] அத்தருணத்திலே காவலில் இருந்த யோவான் கிறிஸ்துவின் [5] கிரியைகளைக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து,

௩ [6] நீங்கள் போய் அவரை நோக்கி, வருகிறவர் நீர்தாமோ, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேளுங்களென்று சொன்னான்.

௪ அவர்கள் அப்படியே வந்து கேட்டபொழுது இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொன்னதாவது: நீங்கள் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளை யோவானுக்குப் போய் அறிவியுங்கள்.

௫ என்னவெனில், [7] குருடர் பார்வை அடைகிறார்கள்; சப்பாணிகள் நடக்கிறார்கள்; குஷ்டரோகிகள் சுத்தம் அடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள்; மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்; [8] எளியவர்களுக்குச் சுவிசேஷம் பிர[illegible]கிக்கப்படுகின்றது.

௬ அல்லாமலும் என்னைக்குறித்து [9] இலச்சை அடையாதிருக்கிறவன் பாக்கியவான் என்று சொல்லி அவர்களை அனுப்பினார்

௭ ¶ அவர்கள் போனபின்பு இயேசுவானவர் சனங்களை நோக்கி, [10] யோவானைக்குறித்துச் சொன்னதாவது: நீங்கள் வனாந்தரத்திலே எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்; [11] காற்றினால் அடித்து அசைக்கப்படுகிற நாணலையோ?

௮ அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்? மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையோ? மெல்லிய வஸ்திரங்களை உடுத்திருக்கிறவர்கள் அரசர்மாளிகைகளில் இருக்கிறார்கள்.

௯ அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்? [12] தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் அதிக மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰ [13] அதெப்படியெனில், இதோ நான் என்னுடைய தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே உம்முடைய மார்க்கத்தைச் செம்மைபண்ணுவான் என்று ஒருவனைக்குறித்து எழுதியிருக்கின்றதே, அவன் இவன்தான்.

கி. பி. ௩௧.

1 மத ௰அ ௫ லூக் ௯ ௪அ ௰ ௰௬ யோவா ௰௨ ௪௪ ௰௩ ௨௰ கலா ௪ ௰௪
2 ௧ இரா ௰எ ௰ ௰அ ௨ இரா ௪ அ
3 மத ௰அ ௫ மத் ௨௫ ௪௰ மாற ௯ ௪௧ எபி ௬ ௰
4 மத ௰௪ ௩
5 லூக் எ ௰அ
6 ௧ மோ ௪௯ ௰ ௪ மோ ௨௪ ௰எ தானி ௯ ௨௪ யோவா ௬ ௧௪
7 ஏசா ௨௯ ௰அ ௩௫ ௪ ௫ யோவா ௨ [illegible]
8 ஏசா ௬௧ ௧ லூக் ௪ ௰அ யாக ௨ ௫
9 ஏசா ௮ ௰௪ [illegible]
10 லூக் எ ௨௪
11 எபே ௪ ௰௪
12 மத ௰௪ ௫ லூக் ௧ ௭௬ லூக் எ ௨௬
13 மல்கி ௩ ௧ மாற் ௧ ௨ லூக் ௧ ௭௬ எ ௨எ.

௰௧ அல்லாமலும் ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரியவன் ஒருவனும் எழும்பவில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகிலும் பரலோக இராசசியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

௰௨ [1]அல்லாமலும் யோவான்ஸ்நானன் தோன்றின காலம் முதற்கொண்டு இதுவரைக்கும் பரலோக இராசசியம் *பலவந்தப்படுகின்றது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩ [2]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் அதை யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்கள்.

௰௪ [3]நீங்கள் ஒத்துக்கொள்ள மனதிருந்தால், வருபவனாகிய எலியா இவன்தான்.

௰௫ [4]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

௰௬ ¶ [5]இந்தச் சந்ததியை ஆருக்கு நிகர் சொல்லுவேன்? சந்தைகளில் உட்கார்ந்து தங்கள் தோழரை நோக்கி,

௰௭ உங்களுக்காக ஊதினோம், நீங்கள் கூத்தாடவே இல்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவே இல்லை என்று சொல்லிக் கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

௰௮ எப்படியென்றால், யோவான் வந்து போசனபானம்பண்ணாமல் இருந்தான், பிசாசைக்கொண்டிருக்கிறான் என்றார்கள்.

௰௯ [6]மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம்பண்ணுகிறான்; இதோ பெருந்தீனிக்காரன் என்றும், குடிக்கிறவன் என்றும், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்றும் சொல்லுகிறார்கள், [7]ஆனாலும் ஞானமானது தன் பிள்ளைகளாலே நீதியாய் எண்ணப்படும் என்றார்.

௨௰ ¶ [8]அப்பொழுது அவர் தமது பலத்த செய்கைகளில் அநேகங்களைக் கண்ட பட்டணத்தார் மனந்திரும்பாமல் இருந்தபடியினாலே அவர்களைக் கடிந்துகொள்ளத் தொடங்கிச் சொன்னதாவது.

௨௧ ஐயோ! கோராசின் பட்டணத்தாரே, உங்களுக்கு வேதனை வரும், ஐயோ! பெத்சாயிதா பட்டணத்தாரே, உங்களுக்கும் வேதனை வரும், உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீரு சீதோன் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்கள் சீக்கிரமாய் [9]இரட்டை உடுத்துச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

௨௨ [10]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களைப்பார்க்கிலும் நீங்களே அதிக தண்டிப்பை அடைவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௩ [11]வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நாகூம் பட்டணத்தாரே, ஐயோ! பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவீர்கள்; உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் சோதோம் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்களுடைய பட்டணம் இந்நாள்வரைக்கும் இருக்குமே.

௨௪ [12]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களுக்கு வரும் தண்டிப்பு எளிதாயிருக்கும், நீங்களே அதிக தண்டிப்பை அடைவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௫ ¶ அக்காலத்திலே [13]இயேசுவானவர் சொன்னதாவது. பிதாவே, வானத்தையும் பூமியையும் ஆளுகிறவரே, [14]நீர் இவைகளை (லோக) ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துக் [15]குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினபடியினாலே உம்மைத் துதிக்கிறேன்.

௨௬ ஆம் பிதாவே, இப்படியே

கி. பி. ௯௧.

[1] லூக். ௰௬. ௰௬.

* அல்லது, பலவந்தத்திலே பெறுக்கொள்ளப்படுகிறது

[2] மல்கி. ௪. ௬.

[3] மல்கி. ௪. ௫. லூக். ௧. ௰௭. மத். ௰௭. ௰௨.

[4] மத். ௰௩. ௯. லூக். ௮. ௮. வெளி. ௨. ௭, ௰௧, ௰௭, ௨௯, ௩. ௬, ௰௩, ௨௨.

[5] லூக். ௭. ௩௧.

[6] மத். ௯. ௰.

[7] லூக். ௭. ௩௫.

[8] லூக். ௰. ௰௩.

[9] யோனா ௩. ௫, ௬.

[10] மத். ௰. ௰௫. ௨௪ வரை.

[11] ஏசா. ௰௪. ௰௩, ௰௫. புலம். ௨. ௧.

[12] மத். ௰. ௰௫.

[13] லூக். ௰. ௨௧.

[14] சங். ௮. ௨. ௧ கொரி. ௧. ௰௯. ௨ கொரி. ௩. ௰௪.

[15] மத். ௰௮. ௩.

உமக்குப் பிரியமாயிருந்தது என்றார்.

௨௭ [1]அல்லாமலும் சகலமும் என் பிதாவினாலே எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன; பிதா தவிர மற்றொருவனும் குமாரனை அறியான், [2]குமாரன் தவிர மற்றொருவனும் பிதாவை அறியான்; மேலும் எவனுக்குக் குமாரன் அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் பிதாவை அறிவான்.

௨௮ வருத்தப்பட்டுப் பாரம் சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேன்.

௨௯ [3]நான் சாந்தமாயும் மனத்தாழ்மையாயும் இருக்கிறபடியினாலும், [4]நான் வைக்கிற நுகத்தடி மெதுவாயும், நான் ஏற்றுகிற சுமை இலேசாயும் இருக்கிறபடியினாலும்,

௩௰ நீங்கள் [5]என்னுடைய நுகத்தடியை ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் [6]ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும் என்றார்.

௰௨. அதிகாரம்.

ஓய்வுநாளின் மீறுதலைக் குறித்துப் பரிசேயருடைய குற்றச்சாட்டுதலை, ௩ வேதத்தினாலும், ௯ நியாயத்தினாலும், ௰௩ ஒரு அற்புதத்தினாலும் கிறிஸ்து கடிந்துகொண்டது. ௨௨ அவர் பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒரு மனுஷனைக் குணமாக்கினது. ௩௧ பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட தூஷணம் மன்னிக்கப்படுவதில்லை என்பது. ௩௬ வீண் வார்த்தைகளுக்கும் நியாயத்தீர்ப்பு கேட்கப்படும் என்பது. ௩௮ அடையாளத்தைக் கேட்ட அவிசுவாசிகளை அவர் கடிந்துகொண்டது. ௪௬ அவர் தம்முடைய சகோதரனும் சகோதரியும் தாயும் இன்னாரென்று காண்பித்தது.

[7]அக்காலத்தில் ஓய்வுநாளிலே இயேசுவானவர் பயிர்வழியே போனார்; அப்பொழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தபடியினாலே கதிர்களைக் கொய்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

௨ அதைக் கண்ட பரிசேயர் அவரை நோக்கி, இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்கள் என்றார்கள்.

௩ அவர்களுக்கு அவர் சொன்னதாவது. [8]தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது,

௪ அவன் தேவாலயத்தில் பிரவேசித்து, [9]ஆசாரியரேயன்றித் தானும் தன்னோடிருந்தவர்களும் சாப்பிடத்தகாத [10]தேவ சமுகத்தப்பங்களைச் சாப்பிட்டான் என்று நீங்கள் வாசிக்கவில்லையா?

௫ [11]அல்லது ஆசாரியரானவர்கள் தேவாலயத்திலே ஓய்வுநாட்களில் ஓய்ந்திராமல் வேலைசெய்தும் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்திலே வாசிக்கவில்லையா?

௬ [12]தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௭ [13]மேலும் பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் அறிந்தீர்களானால் குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்.

௮ அல்லாமலும் மனிதனுடைய குமாரன் ஓய்வுநாளைக்குறித்தும் கர்த்தராயிருக்கிறார் என்றார்.

௯ ¶ [14]பின்பு அவர் அவ்விடம் விட்டுப் போய், அவர்களுடைய செபஆலயத்தில் பிரவேசித்தார்.

௰ [15]அங்கே சூம்பின கையையுடைய மனிதன் ஒருவன் இருந்தான், அப்பொழுது அவர்கள் அவர்மேல் குற்றஞ்சாற்றும்படிக்கு அவரை நோக்கி, ஓய்வுநாளில் சுகமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்.

௰௧ [16]அவர் சொன்னது: உங்களில் எவனானாலும் தன் ஆடு ஓய்வுநாளில் ஒரு குழியிலே விழுந்தால்

கி. பி. ௩௧

[1] ௨௮ ௰௮ லூக் ௰ ௨௨ யோவா ௩ ௩௫ ௰௩ ௩ ௰௭ ௨ ௧ கொரி ௰௫ ௨௭

[2] யோவா ௧ ௰௮ ௬ ௪௬ ௰ ௰௫

[3] சகரி ௯ ௯ பிலி ௨ ௭ ௮

[4] ௧ யோ ௫ ௩

[5] யோவா ௰௩ ௰௫ பிலி ௨ ௫ ௧ பே ௨ ௨௧ ௧ யோ ௨ ௬

[6] எரே ௬ ௰௬

[7] [illegible]

[8] [illegible]

[9] [illegible]

[10] [illegible]

[11] [illegible]

[12] [illegible]

[13] [illegible]

[14] [illegible]

[15] [illegible]

[16] [illegible]

அதைப் பிடித்துத் தூக்கிவிடுவான் அல்லவா?

௰௨ ஆட்டிலும் மனிதனானவன் மிகவும் மேன்மையாயிருக்கிறான்; ஆதலால் ஓய்வுநாளிலே நன்மை செய்கிறது நியாயந்தான் என்று சொல்லிப் பின்பு அந்த மனிதனை நோக்கி,

௰௩ உன் கையை நீட்டு என்றார், அவன் நீட்டினான்; உடனே அது மறுகையைப்போலவே சுகமாயிற்று.

௰௪ [1]அப்பொழுது பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைச் சங்கரிக்கும்படிக்கு யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௰௫ ¶ [2]அதை இயேசுவானவர் அறிந்து, அவ்விடம்விட்டுப்போனார், [3]அப்பொழுது அநேக சனங்கள் அவர் பின்னே சென்றார்கள்.

௰௬ எல்லாரையும் அவர் குணமாக்கிப் [4]பின்பு தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௰௭ அதினாலே இதோ, [5]நான் தெரிந்துகொண்ட ஊழியக்காரன், எனக்கு அன்பானவர், [6]என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர், இவரிடத்திலே என்னுடைய ஆவி இருக்கச் செய்வேன், இவர் நியாயமானதை உலகத்தாருக்கு அறிவிப்பார்;

௰௮ சண்டைபண்ணாமலும் கூக்குரல்பண்ணாமலும் இருப்பார், இவருடைய சத்தம் வீதிகளில் ஒருவராலும் கேட்கப்படுவதில்லை;

௰௯ நியாயமானது செயமாய் இருக்கும்படி செய்கிறவரைக்கும் இவர் நெரிந்திருக்கிற நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும் இருப்பார்.

௨௰ இவருடைய நாமத்தின்மேலே புறதேசத்தார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்று,

௨௧ ஏசாயா தீர்க்கதரிசி உரைத்த வசனம் நிறைவேறிற்று.

௨௨ ¶ [7]அப்போது பிசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான், குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுந்தக்கதாக அவனைக் குணமாக்கினார்.

௨௩ சனங்கள் எல்லாரும் பிரமித்து, இவர் தாவீதின் குமாரன் அல்லவா என்றார்கள்.

௨௪ [8]பரிசேயர் அதைக் கேட்டு, இவன் பிசாசுகளுடைய தலைவனாகிய *பெயேல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானே அன்றி, மற்றப்படியல்ல என்றார்கள்.

௨௫ [9]இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி, ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளேதானே பிரிவினைபண்ணினால் அழிந்துபோவார்கள்; அல்லாமலும் ஒரு பட்டணத்தாரானாலும் குடும்பத்தாரானாலும் தங்களுக்குள்ளே பிரிவினைபண்ணினால், நிலைநிற்கமாட்டார்கள்.

௨௬ அப்படிப்போலச் சாத்தான் மற்றொரு சாத்தானைத் துரத்தினால் அவர்களுக்குள்ளேதானே பிரிவினை உண்டாகுமே; அப்படியானால் அவனுடைய இராச்சியம் எப்படி நிலைநிற்கும்?

௨௭ அல்லாமலும் நான் பெயேல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறவன் என்றால், உங்கள் பிள்ளைகள் அவைகளை ஆராலே துரத்துகிறார்கள்; ஆகையால் அவர்களே உங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பார்கள்.

௨௮ [10]நான் பராபரனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், பராபரனுடைய ஆளுகையே உங்களிடத்தில் வந்திருக்கின்றது.

௨௯ [11]அல்லது முன்பு பலவானைக் கட்டாவிட்டால் அவனுடைய வாசஸ்தலத்திலே ஒருவன் எப்படிப் பிரவேசித்து, அவனுடைய உடைமைகளைக் கொள்ளை

கி. பி. ௩௧

[1] [illegible]

[2] [illegible]

[3] [illegible]

[4] [illegible]

[5] [illegible]

[6] [illegible]

[7] [illegible]

[8] [illegible]

* அல்லது பெயேல்செபுப [illegible]

[9] [illegible]

[10] [illegible]

[11] [illegible]

யிடுவான்; (பலவானைக் கட்டின பின்பல்லவா) அவனுடைய வாசஸ்தலத்தைக் கொள்ளையிடுவான்.

௩௰ என் பங்கில் இராதவன் எனக்கு விரோதமாய் இருக்கிறான், என்னுடனே கூடச் சேர்த்துக்கொள்ளாதவன் சிதற அடிக்கிறான்.

௩௧ ¶ ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [1]எந்தப் பாவமும் தூஷணமும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும், [2]தேவ ஆவியை (நிந்திக்கும்) தூஷணம் மாத்திரம் மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை.

௩௨ [3]எவனானாலும் மனிதனுடைய குமாரனுக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; [4]எவனாகிலும் பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை.

௩௩ [5]மேலும் ஒரு மரத்தின் தன்மையை அதின் கனிகளாலே அறியலாம், ஆகையால் நீங்கள் ஒரு மரத்தை நல்லமரமென்று எண்ணினால், அதின் கனியையும் நல்லதென்று எண்ணுங்கள்; அல்லது நீங்கள் ஒரு மரத்தைக் கெட்டமரமென்று எண்ணினால், அதின் கனியையும் கெட்டதென்று எண்ணுங்கள்.

௩௪ [6]இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும், [7]ஆதலால் விரியன் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நன்மையானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?

௩௫ நல்ல மனிதனானவன் தன் இருதயத்திலுள்ள நல்ல பொக்கிஷத்தில் நல்லவைகளை எடுத்துக் காண்பிக்கிறான், பொல்லாத மனிதன் தன் பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாதவைகளை எடுத்துக் காண்பிக்கிறான்.

௩௬ மனிதர்கள் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே உத்தரவு கொடுப்பார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௭ எப்படியும் உன் வார்த்தைகளினாலே நீதிமானென்றும், உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய்.

௩௮ ¶ [8]அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி, போதகரே, உம்மாலே ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்.

௩௯ அதற்கு அவர் சொன்னது: [9]சோரமார்க்கமாய்ப் போகிற பொல்லாத சந்ததியாகிய இவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறு அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

௪௰ என்னவென்றால், [10]யோனா என்பவன் இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனினுடைய வயிற்றில் இருந்ததுபோல, மனிதனுடைய குமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்திலே இருப்பார் என்பதே.

௪௧ [11]யோனா என்பவன் பிரசங்கம் பண்ணினபொழுது நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; [12]யோனாவிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார், [13]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் எழும்பி, இவர்களைக் குற்றவாளிகளென்று தீர்ப்பார்கள்.

௪௨ [14]அல்லாமலும் தெற்கு இராசஸ்திரி மிகுந்த தூரமான தேசத்திலிருந்து சாலோமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள்; சாலோமோனிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார், ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த இராசஸ்திரி எழும்பி,

கி. பி. ௩௩

1 மாற் ௩. ௨௮; லூக் ௰௨. ௰; எபி ௬. ௪, ௰. ௨௬, ௨௯; ௧ யோ ௫. ௰௬.
2 மாற் ௩. ௨௯; லூக் ௰௨. ௰; எபி ௬. ௬; ௰. ௨௯; ௧ யோ [illegible] ௰௬.
3 மத் ௰௧. ௰௯; ௰௩. ௫௫; யோவா ௭. ௰௨, ௫௨; ௧ தீமோ ௧. ௰௩.
4 ௧ யோ ௫. ௰௬.
5 மத் ௭. ௰௭; லூக் ௬. ௪௩, ௪௪.
6 லூக் ௬. ௪௫.
7 மத் ௩. ௭; ௨௩. ௩௩.
8 மத் ௰௬. ௧; மாற் ௮. ௰௧; லூக் ௰௧. ௰௬, ௨௯; யோவா ௨. ௰௮; ௧ கொரி ௧. ௨௨.
9 ஏசா ௫௭. ௩; மத் ௰௬. ௪; மாற் ௮. ௩௮; யோவா ௪. ௪௮.
10 யோனா ௧. ௰௭.
11 யோனா ௩. ௫.
12 எரே ௩. ௰௧; எசே ௰௬. ௫௧; ரோமா ௨. ௨௭.
13 லூக் ௰௧. ௩௨.
14 ௧ இரா ௰. ௧; ௨ நாளா ௯. ௧; லூக் ௰௧. ௩௧.

இவர்களைக் குற்றவாளிகளென்று [1]தீர்ப்பாள்.

௪௩ ¶ அல்லாமலும், அசுத்தமான ஆவி ஒரு மனிதனைவிட்டுப் புறப்பட்ட பின்பு [2]தண்ணீர் இல்லாத இடங்களில் அலைந்து, இளைப்பாறுதற்கான இடத்தைத் தேடியும் அடையாமல் இருக்கும்பொழுது,

௪௪ அது நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்றுசொல்லி,(அங்கே)சென்று, அவ்விடத்தை வெறுமையாயும், பெருக்கிச் சோடிக்கப்பட்டதாயும் இருக்கக்கண்டு, திரும்பிப் போய்,

௪௫ தன்னிலும் அதிக பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னுடனே கூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து, அங்கே வாசம்பண்ணும்; [3]இவ்விதமாய் அந்த மனிதனுடைய முன் நிலைமையிலும் பின் நிலைமை அதிக கேடுள்ளதாய் இருக்கின்றது; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததிக்கும் சம்பவிக்கும் என்றார்.

௪௬ ¶ [4]அவர் இப்படிச் சனங்களுடனே பேசுகையில், [5]அவருடைய தாயும் சகோதரரும் வந்து, வெளியே நின்று, அவரோடே பேசத் தேடினார்கள்.

௪௭ அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி, இதோ, உம்முடைய தாயாரும் சகோதரரும் வெளியே நின்று, உம்மோடே பேசத் தேடுகிறார்கள் என்றான்.

௪௮ அப்படித் தமக்குச் சொன்னவனுக்கு அவர் மாறுத்தரமாக, என்னுடைய தாய் யாவள்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,

௪௯ தம்முடைய கையைத் தம்முடைய சீஷர்மேலே நீட்டி, இதோ, இவர்கள் என் தாயும் என் சகோதரருமாய் இருக்கிறார்கள்.

௫௰ [6]எவனானாலும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்தால், அவனே என் சகோதரனுமாய்ச் சகோதரியுமாய்த் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

௰௩. அதிகாரம்.

௧ விதைக்கிறவனையும் விதையையும் உவமையாகக் காட்டியது ௰௮ அதின் வியாக்கியானம் ௨௪ களைகளையும், ௩௧ கடுகுவிதையையும், ௩௩ புளித்தமாவையும், ௪௪ வயலில் ஒளிக்கப்பட்ட பொக்கிஷத்தையும், ௪௫ முத்தையும் ௪௭ கடலில் போடப்பட்ட வலையையும் உவமையாகக் காட்டியது ௫௪ கிறிஸ்து தம்முடைய சொந்த ஊராரால் அசட்டைபண்ணப்பட்டது

[7]அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கடலின் அருகே உட்கார்ந்தார்.

௨ [8]அப்பொழுது அநேக சனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், [9]அவர் படவில் ஏறி உட்கார்ந்து, சனங்கள் எல்லாரும் கரையிலே நிற்க,

௩ அநேக விசேஷங்களை உவமைகளால் அவர்களுக்குச் சொன்னதாவது:

௪ ¶ [10]விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில (விதை) வழி அருகே விழுந்தன; அவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தன.

௫ வேறுசில (விதை) மிகுந்த மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்து, ஆழமான மண்ணில்லாததினால் உடனே முளைத்தன.

௬ வெயில் தோன்றினபொழுது அவை தீய்ந்துபோய், வேரில்லாததினாலே உலர்ந்துபோயின.

௭ வேறு சில (விதை) முள்ளுகளுள்ள இடத்திலே விழுந்தன, முள்ளுகள் வளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன.

௮ [11]வேறு சில (விதை) நல்ல நிலத்தில் விழுந்து, சில நூறாகவும் சில அறுபதாகவும், சில முப்பதாகவும் பலனைக்கொடுத்தன.

௯ [12]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

௰ ¶ அப்பொழுது சீஷர்கள் அவ

கி. பி. ௬௧.

[1] லூக் ௰௧ ௨௪
[2] யோபு ௧ ௭ ; ௧ பே ௫ ௮.
[3] எபி ௬ ௪ ௰ ௨௬ ௨ பே ௨ ௨௰, ௨௧ ௨௨
[4] மாற் ௩ ௩௧ லூக் ௮ ௰௯, ௨௰, ௨௧
[5] மத் ௰௩ ௫௫ மாற் ௬ ௩ யோவா ௨ ௰௨. ௭ ௩, ௫ அப ௧ ௰௪ ௧ கொரி ௯ ௫ கலா ௧ ௰௯
[6] யோவா ௰௫ ௰௪ கலா ௫ ௬ ௬ ௰௫ கொலோ ௩ ௰௧ எபி ௨ ௰௧
[7] மாற ௪ ௧
[8] லூக் ௮ ௪
[9] லூக ௫ ௩
[10] லூக ௮ ௫
[11] ௪ மோ ௨௬ ௰௦
[12] மத ௰௧ ௰௫ மாற் ௪ ௯

ரிடத்தில் வந்து, என்னத்தினாலே உவமைகளால் அவர்களோடே பேசுகிறீர் என்றார்கள்.

௰௧ [1]அதற்கு அவர் சொன்னது: பரலோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது; அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவில்லை.

௰௨ [2]எப்படியெனில், எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; எவன் உள்ளவன் அல்லாதவனாய் இருக்கிறானோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

௰௩ [3]அவர்கள் கண்டும் காணாமலும், கேட்டும் கேளாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருக்கிறபடியினாலே, நான் உவமைகளால் அவர்களுடனே பேசுகிறேன்.

௰௪ [4]இந்தச் சனங்கள் கண்களினாலே காணாமலும், காதுகளினாலே கேளாமலும், இருதயத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலும், திரும்பாமலும், என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு அவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயம் உடையவர்களுமாய், வருத்தத்தோடே கேட்கிற காதுள்ளவர்களுமாய், மூடிக்கொண்டிருக்கிற கண்களை உடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே,

௰௫ நீங்கள் உற்றுக் கேட்டாலும் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள்; உற்றுப்பார்த்தாலும் அறியாமல் இருப்பீர்களென்று, ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறி வருகின்றது.

௰௬ [5]உங்கள் கண்கள் காணுகிறபடியினாலும், உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும் பாக்கியமுள்ளவைகள்.

௰௭ [6]அநேகம் தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும், நீங்கள் காணுகிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாக்வே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௮ ¶ [7]ஆகையால் விதைக்கிறவனுடைய உவமையைக் கேளுங்கள்.

௰௯ [8]ஒருவன் பரலோக இராச்சியத்தைக்குறித்து வசனத்தைக் கேட்டும் அதைச் சிந்தித்துக் கொள்ளாமல் இருக்கிறபொழுது பொல்லாங்கன் வந்து, அவனுடைய இருதயத்தின்மேல் விதைக்கப்பட்டதை எடுக்கிறான்; அவனே விதை விழுந்த வழிக்கு ஒப்பானவன்.

௨௰ [9]விதை விழுந்த கற்பாறைக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு,

௨௧ பின்பு அது தனக்குள்ளே வேர்பற்றி இராமல் கொஞ்சக்காலம் மாத்திரம் அதைப் பற்றிக்கொள்ளுவான்; [10]அந்த வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பப்படுதலும் உண்டாகிறபொழுது உடனே அவன் தவறுவான் என்பதே.

௨௨ [11]விதை விழுந்த முள்ளுள்ள இடத்துக்கு ஒப்பானவன் [12]அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது லவுகீக கவலைகளும், ஐசுவரியத்தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெருக்கிப்போடுவதால், கனியற்றவனாவான் என்பதே.

௨௩ விதை விழுந்த நல்ல நிலத்துக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டும், சிந்தித்தும், அதின்படி செய்தும், நூறும் அறுபதும் முப்பதுமாகப் பலனைக் கொடுத்தும் வருவானென்பதே என்றார்.

௨௪ ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்; அதாவது, பர

கி. பி. ௩௧.

1 மத ௰௧ ௨௫ ௰௬ ௰௭ மாற ௪ ௰௧ ௧ கொரி ௨ ௰ ௧ யோ ௨ ௨௭.

2 மத ௨௫ ௨௯ மாற ௪ ௨௫ லூக ௮ ௰௮ ௰௯ ௨௬

3 ஏசா ௬ ௯ எசே ௰௨ ௨ மாற் ௪ ௰௨ லூக ௮ ௰ யோவா ௰௨ ௪௰ அப ௨௮ ௨௬, ௨௭ ரோம ௰௧ ௮ ௨ கொரி ௩ ௰௪, ௰௫

4 எபி ௫ ௰௧

5 மத ௰௬ ௰௭ லூக ௰ ௨௩, ௨௪ யோவா ௨௰ ௨௯

6 எபி ௰௧ ௰௩ ௧ பேது ௧ ௰, ௰௧

7 மாற ௪ ௰௪ லூக ௮ ௰௧

8 மத ௪ ௨௩

9 ஏசா ௫௮ ௨ எசே ௩௩ ௩௧, ௩௨ யோவா ௫ ௩௫

10 மத ௰௧ ௬ ௨ தீமோ ௪ ௰௬

11 எரே ௪ ௩

12 மத ௰௯ ௨௩ மாற ௰ ௨௩ லூக ௰௮ ௨௪ ௧ தீமோ ௬ ௯ ௨ தீமோ ௪ ௰

கி. பி. ௩௧.

லோக இராச்சியம் ஒரு வயல் நிலத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அந்த நிலத்திலே எசமானானவன் நல்ல விதையை விதைத்தான்.

௨௫ பின்பு மனிதர் நித்திரை பண்ணுகையில், அவனுடைய பகைஞன் வந்து, கோதுமைக்குள்ளே களைகளை விதைத்துப் போனான்.

௨௬ பயிரானது வளர்ந்து கதிர்விட்டபொழுது, அந்தக் களைகளும் காணப்பட்டன.

௨௭ வேலைக்காரர் எசமானிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது வயல்நிலத்திலே நல்ல விதையை விதைக்கவில்லையா? களைகள் அதிலே எப்படி உண்டாயின என்றார்கள்.

௨௮ அதற்கு அவன், பகைஞன் அப்படிச் செய்தான் என்றான்; அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோ என்று கேட்டார்கள்.

௨௯ அதற்கு அவன் சொன்னது: வேண்டாம், களைகளைப் பிடுங்குகிறபொழுது நீங்கள் கோதுமையையும் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு,

௩௰ [1]அவ்விரண்டையும் அறுப்புக்காலம் வரைக்கும் வளரவிடுங்கள்; அறுப்புக்காலத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டவும், கோதுமையை என் களஞ்சியத்தில் சேர்க்கவும் கட்டளையிடுவேன் என்று சொன்னான் என்றார்.

௩௧ ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினார், அதாவது, [2]பரலோக இராச்சியம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனிதன் எடுத்துத் தன் நிலத்திலே விதைத்தான்.

௩௨ அது எல்லா விதைகளிலும் சிறியதாயிருந்தும் வளரும்பொழுது கீரைகளிலும் பெரிதாகி, ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்தடையத்தக்கதான செடியாம் என்றார்.

௩௩ ¶ [3]பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; அதாவது, மூன்று *மரக்கால் மாமுழுவதும் புளிப்பாகும் வரைக்கும் ஒரு ஸ்திரீ புளிப்புமாவை எடுத்து அதிலே அடக்கி வைத்தாள்; பரலோக இராச்சியம் இந்தப் புளிப்புமாவுக்கு ஒப்பாய் இருக்கின்றது என்றார்.

௩௪ ¶ [4]என் வாயைத் திறந்து உவமைகளாலே பேசுவேன்; [5]உலகத்தோற்றம் முதற்கொண்டு மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக,

௩௫ [6]இயேசுவானவர் இவைகளையெல்லாம் உவமைகளாகச் சனங்களுடனே பேசினார், உவமைகளினாலேயன்றி வேறுவிதமாக அவர் அவர்களுடனே பேசவில்லை.

௩௬ ¶ அப்பொழுது இயேசுவானவர் சனங்களை அனுப்பிப் பின்பு வீட்டுக்குப்போனார், அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, நீர் வயல்நிலத்தின் களைகளைக் குறித்துக் காட்டின உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டார்கள்.

௩௭ அவர் அவர்களுடனே அவர் மறுமொழியாகச் சொன்னதாவது: நல்ல விதையை விதைக்கிறவன் மனிதனுடைய குமாரனே; வயல்நிலம் உலகமே.

௩௮ [7]நல்ல விதை இராச்சியத்தின் புத்திரரே, [8]களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரே.

௩௯ அவைகளை விதைக்கிற பகைஞன் பிசாசே; [9]அறுப்பு உலகத்தின் முடிவே; அறுக்கிறவர்கள் தேவதூதர்களே.

௪௰ ஆதலால் களைகள் சேர்க்கப

---

[1] மத். ௩. ௰௨.

[2] ஏசா. ௨. ௨, ௩; மீகா ௪. ௧; மாற். ௪. ௩௧; லூக். ௰௩. ௰௯.

[3] லூக். ௰௩. ௨௧.

* ஒரேக்குப் பாஷையிலுள்ள வார்த்தை அரைப்படி குறைய ஒன்றரை மரக்கால் அளவைக் குறிக்கும்.

[4] சங். ௭௮. ௨.

[5] உரோ. ௰௬. ௨௫; ௧ கொரி. ௨. ௭; எபே. ௩. ௯; கொலோ. ௧. ௨௬.

[6] மாற். ௪. ௩௩, ௩௪.

[7] மத். ௨௪. ௰௪; மாற். ௰௬. ௰௫, ௨௰; லூக். ௨௪. ௪௭; உரோ. ௰. ௰௮; கொலோ. ௧. ௬.

[8] ஆதி. ௩. ௰௫; யோவா. ௮. ௪௪; அப். ௰௩. ௰; ௧ யோவா. ௩. ௮.

[9] யோவே. ௩. ௰௩; வெளி. ௰௪. ௰௫.

பட்டு, அக்கினியினால் சுட்டெரிக்கப்படுகிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

௪௧ மனிதனுடைய குமாரன் தன்னுடைய தூதரை அனுப்புவான்; [1]அவர்கள் அவனுடைய இராச்சியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து,

௪௨ [2]அழுதலும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற [3]அக்கினிச்சூளையிலே போடுவார்கள்.

௪௩ [4]அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்; கேட்கிறதற்குக் காதுள்ளவன் [5]கேட்கக்கடவன்

௪௪ ¶ [6]அல்லாமலும் பரலோக இராச்சியம் வயல்நிலத்தில் ஒளிக்கப்பட்டிருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அதை ஒரு மனிதன் கண்டு, அதை மறைத்து, அதைக்குறித்து அடைந்த சந்தோஷத்தினாலே போய்த் தனக்குள்ள யாவையும் விற்று, அந்த [7]வயல்நிலத்தையே கொள்ளுகிறான்

௪௫ ¶ அல்லாமலும் பரலோக இராச்சியம் நல்ல முத்துகளைத் தேடி,

௪௬ [8]ஒரு ஆணிமுத்தைக் கண்டு, போய், தனக்குள்ள யாவையும் விற்று, அதைக் கொள்ளுகிற வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கின்றது.

௪௭ ¶ [9]அல்லாமலும் பரலோக இராச்சியம் ஒரு வலைக்கு ஒப்பாயிருக்கின்றது; வலையானது கடலிலே போடப்பட்டு, எல்லாச் சாதியான மீன்களையும் வாரி நிறைந்தபொழுது,

௪௮ சனங்கள் அதைக் கரையில் இழுத்து, உளுக்கார்ந்து, நல்லவைகளைப் பாத்திரங்களில் சேர்த்துக்கொண்டு, தகாதவைகளைத் தள்ளிப்போடுகிறார்கள்

௪௯ இவ்விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கும்; [10]தேவதூதர் புறப்பட்டு, நீதிமான்களிலிருந்து துன்மார்க்கரைப் பிரித்து,

௫௰ [11]அழுதலும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்கள் என்று சொல்லி,

௫௧ பின்பு நீங்கள் இவைகளை எல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று இயேசுவானவர் சீஷர்களிடத்தில் கேட்டதற்கு, ஆண்டவரே, அறிந்துகொண்டோம் என்றார்கள்.

௫௨ [12]அவர் பின்னும் அவர்களைநோக்கி அப்படியிருக்கையால், பரலோக இராச்சியத்தைக்குறித்துப் போதனையடைந்த வேதபாரகன் எவனோ, அவன் தன் பொக்கிஷத்தில் புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்காண்பிக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

௫௩ ¶ இப்படி இயேசுவானவர் இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு,

௫௪ [13]அவர் அவ்விடம்விட்டுத் தாம் வளர்ந்த ஊரிலே வந்து, செப ஆலயத்திலே சனங்களுக்கு உபதேசம்பண்ணினார்; அவர்கள் அதைக் கேட்டுப் பிரமித்து, இப்படிப்பட்ட ஞானமும் வல்லமைகளும் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன?

௫௫ [14]இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? [15]இவனுடைய தாய் மரியாள் என்னப்பட்டிருக்கிறாள் அல்லவா? [16]யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுடைய சகோதரர் அல்லவா?

௫௬ இவனுடைய சகோதரிகள் எல்லாரும் நமக்குள்ளே இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இவையெல்லாம் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன என்று சொல்லி,

கி. பி. ௩௧.

1 மத். ௰௮. ௭. ௨ பே. ௨. ௧
2 மத். ௮. ௰௨. ௫௰ வ௪
3 மத். ௩. ௰௨. வெளி. ௰௯. ௨௰. ௨௰. ௰
4 தானி. ௰௨. ௩. ௧ கொரி. ௰௫. ௪௨, ௪௩, ௫௮
5 ௯ வ௪
6 பிலி. ௩. ௭, ௮
7 ஏசா. ௫௫. ௧. வெளி. ௩. ௰௮
8 வாக். ௨. ௪. ௩. ௰௪, ௰௫. அ ௰. ௰௯
9 மத். ௨௨. ௰
10 ௨௫. ௩௨
11 ௪௨ வ௪
12 உன்னத. ௭. ௰௩
13 மத். ௨. ௨௩. மாற். ௬. ௧. லூக். ௪. ௰௬, ௨௩
14 ஏசா. ௪௯. ௭. மாற். ௬. ௩. லூக். ௩. ௨௩. யோவா. ௬. ௪௨
15 மத். ௰௨. ௪௬. மாற். ௰௫. ௪௰
16 மாற். ௬. ௩

௫௭ [1]அவரைக்குறித்து இடறல்பட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, [2]தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலேயும் தன் குடும்பத்திலேயுமே அன்றி மற்ற இடங்களிலே கனஈனப்படான் என்றார்.

௫௮ [3]மேலும் அந்தச் சனங்களுடைய அவிசுவாசத்தினாலே அவர் அவ்விடத்திலே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை

௰௪. அதிகாரம்

௧ கிறிஸ்துவைக்குறித்து ஏரோது நினைத்த நினைவு. ௩ யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்ட காரணம். ௰௩ இயேசுவானவர் ஒரு வனாந்தரமான இடத்திற்குப்போய், ௰௫ அவ்விடத்திலே ஐந்து அப்பங்களினாலும், இரண்டு மீன்களினாலும் ஐயாயிரம்பேருக்குப் போசனம் கொடுத்து, ௨௨ கடலிலே நடந்து சீஷரிடத்தில் வந்து, ௩௪ கெனேசரேத்தினிடத்தில் இறங்கித் தம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பிணியாளிகளைக் குணமாக்கினது

அக்காலத்திலே [4]சாற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே இராசா இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு,

௨ தன் ஊழியக்காரரை நோக்கி, அவன் யோவான்ஸ்நானன், அவன் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தவன், அதினாலே அவன் அற்புதங்களைச் *செய்து வருகிறான் என்றான்.

௩ ¶ அது எப்படியென்றால், ஏரோதே இராசா தன் தம்பியாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளைக்குறித்து, நீர் [5]அவளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று,

௪ யோவான் அவனுடனே சொன்னபடியினாலே, [6]ஏரோதே இராசா அவனைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்தான்.

௫ அவனைக் கொலைசெய்யவும் மனதாயிருந்தான்; [7]அப்படியிருந்தும் சனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியென்று [illegible]ண்ணினபடியினாலே அவன் அவர்களுக்குப் பயந்து (அப்படிச்செய்யவில்லை)

௬ பின்பு ஏரோதேயினுடைய செனமநாள் கொண்டாடப்படுகிற காலத்திலே, ஏரோதியாளின் குமாரத்தி ஏரோதே இராசாவுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகத்தக்கதாக நடனம் பண்ணினபொழுது,

௭ அவன் அவளை நோக்கி, நீ எதைக் கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வார்த்தைகொடுத்தான்.

௮ உடனே அவள், தன் தாய் தனக்குப் போதித்திருந்தபடியே, நீர் யோவான்ஸ்நானனுடைய சிரசை ஒரு தாலத்திலே இங்கே எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள்.

௯ இராசா துக்கம் அடைந்தான், அப்படியிருந்தும் தான் கொடுத்த ஆணையினிமித்தமும், பந்தியிலே கூட இருந்தவர்களினிமித்தமும் அவன் அதைக் கொடுக்கக் கட்டளையிட்டான்.

௰ அந்தப்படி இராசாவினாலே அனுப்பப்பட்டவர்கள் காவற்கூடத்துக்குப்போய் யோவானைச் சிரச்சேதம்பண்ணி,

௰௧ வந்து அவனுடைய சிரசை ஒரு தாலத்திலே வைத்து, அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாயக்குக் கொண்டுபோய்க் கொடுத்தாள்

௰௨ பின்பு அவனுடைய சீஷர்கள் வந்து அவனுடைய உடலை எடுத்து அடக்கம் பண்ணி, வந்து, இயேசுவுக்கு அந்தச் சங்கதியை அறிவித்தார்கள்.

௰௩ ¶ [8]இயேசுவானவர் அதைக் கேட்டு, அவ்விடத்தைவிட்டு வனாந்தரமான இடத்திலே தனியே இருக்க ஒரு படவில் ஏறிப்போனார்; சனங்கள் அதைக் கேள்விப்பட்டுப் பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவர் பின்சென்றார்கள்

௰௪ ¶ [9]இயேசுவானவர் புறப்பட்டுத் திரளான சனங்களைக்

கி. பி. ௩௨.

[1] மத் ௰௧. ௬ மாற் ௬. ௩, ௪

[2] லூக் ௪. ௨௪ யோவா ௪. ௪௪.

[3] மாற் ௬. ௫, ௬

[4] மாற் ௬. ௰௪ லூக் ௯. ௭

* அல்லது அவனாலே செய்யப்படுகிறது

[5] மாற் ௬. ௰௮ லூக் ௩. ௰௯

[6] ௩ மோ ௰௮. ௰௬ ௨௰. ௨௧

[7] மத் ௨௧. ௨௬ லூக் ௨௰. ௬

[8] மத் ௰. ௨௩ ௰௨. ௰௫ மாற் ௬. ௩௨ லூக் ௯. ௰ யோவா ௬. ௧

[9] மத் ௯. ௩௬ மாற் ௬. ௩௪

கி. பி ௩௨.

கண்டு, அவர்களுக்கு இரக்கமாய் மனதுருகி, அவர்களில் வியாதிப்பட்டவர்களைக் குணமாக்கினார்.

௰௫ ¶ [1]சாயங்காலத்திலே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, இது வனாந்தரமான இடம், அல்லாமலும் பகல் போயிற்று, ஆதலால், இந்தச் சனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்காகப் போசனபதார்த்தங்களைக் கொள்ளும்படிக்கு இவர்களை அனுப்பிவிடும் என்றார்கள்.

௰௬ அதற்கு இயேசுவானவர், இவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே இவர்களுக்குச் சாப்பாடு கொடுங்கள் என்றார்.

௰௭ அவர்கள் சொன்னது: ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமே அல்லாமல் வேறொன்றும் எங்களிடத்தில் இல்லை என்றார்கள்.

௰௮ அவைகளை எனக்கு இங்கே கொண்டுவாருங்கள் என்றார்.

௰௯ பின்பு சனங்கள் புல்லின்மேல் பந்தியிருக்கும்படிக்கு அவர் கட்டளையிட்டு, அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, [2]வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்தார், சீஷர்கள் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தார்கள்.

௨௰ அவர்கள் எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தார்கள், அதுவுமல்லாமல் சேஷமானவைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்.

௨௧ அப்படிச் சாப்பிட்டவர்கள் பெண்களும் பிள்ளைகளும் தவிர ஏறக்குறைய ஐயாயிரம்பேர் இருந்தார்கள்.

௨௨ ¶ உடனே இயேசுவானவர் சனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறித் தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படிக்கு அவர்களைத் துரிதப்படுத்தினார்.

௨௩ [3]சனங்களை அனுப்பிவிட்டபின்பு அவர் தனியே செபத்தியானம்பண்ணும்படிக்கு ஒரு மலையின்மேல் ஏறினார், [4]சாயந்தரமானபொழுது அவர்மாத்திரம் அங்கே இருந்தார்.

௨௪ அவ்வேளையிலே படவு கடலின் நடுவே சேர்ந்து, எதிர் காற்றிருந்ததினாலே அலைகளால் அலைவுபட்டது.

௨௫ அப்படி இருக்கிறபொழுது, இரவின் நாலாம் சாமத்திலே இயேசுவானவர் கடலின்மேலே நடந்து அவர்களிடத்திற்குப் போனார்.

௨௬ [5]அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர் கண்டு, கத்தளித்து ஆவேஷம் உண்டாயிருக்கிறது என்று புலம்பிப் பயத்தினாலே கூப்பிட்டார்கள்.

௨௭ உடனே இயேசுவானவர், திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

௨௮ பேதுரு அவருக்கு, ஆண்டவரே, நீரேயானால் சலத்தின்மேல் உம்மிடத்தில் வரும்படி எனக்குக் கட்டளையிடும் என்றான்.

௨௯ அதற்கு அவர், வா என்றார்; அப்பொழுது பேதுரு படவைவிட்டு இறங்கி இயேசுவினிடத்திற்கு வரும்படிக்குச் சலத்தின்மேலே நடந்து,

௩௰ காற்றுப் *பலத்திருக்கிறதைக் கண்டு பயம் அடைந்து அமிழத் தொடங்கி, ஆண்டவரே, என்னை இரட்சிக்கவேண்டுமென்று கூப்பிட்டான்.

௩௧ உடனே இயேசுவானவர் கையை நீட்டி அவனைப் பிடித்துக்கொண்டு, அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.

௩௨ அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமைதலாயிற்று.

௩௩ [6]அப்பொ[illegible]து படவிலுள்ளவர்கள் வந்து, மெய்யாகவே நீர் பராபரனுடைய குமாரனாயிருக்கி

---

[1] மாற் ௬ ௩௫ லூக் ௯ ௰௨ யோவா ௬ ௫
[2] மத் ௰௫ ௩௬
[3] மாற் ௬ ௪௬
[4] யோவா ௬ ௰௬
[5] யோபு ௯ ௮
* மோதுகிறதை
[6] சங ௨ ௭ மாற ௧ ௧ மத ௰௬ ௰௬ உ௬ ௬௩ லூக் ௪ ௪௧ யோவா ௧ ௪௯ ௬ ௬௯ ௰௧ ௨௭ அப ௮ ௩௭ உரோ ௧ ௪

C7845 4402 · XII · D · 1(3).

ரீா என்று சொல்லி, அவரை வணங்கினாாகள.

௩௪ ¶ [1]பினபு அவர்கள் அக்கரைககு ஓடி, கெனேசரேதது நாட்டில் வநதாாகள.

௩௫ அவ்விடதது மனிதா அவரை அறிநது அநதத திசைகளில எஙகும ஆளகளை அனுபபிப பிணியாளிகள எலலாரையும அவரிடததில அழைததுககொணடுவநது,

௩௬ அவருடைய வஸதிரததின ஓரததைமாததிரம தொடுமபடிககு உததரவுகேட்க, அதைத [2]தொட்ட யாவரும சொஸதம அடைநதாாகள.

௰௫. அதிகாரம்.

௧ வேதபாரகரும பரிசேயரும தேவகற்பனைகளைத தஙகளுடைய பாரமபரைகளினலே மீறினதறகாகக கிறிஸது அவாகளைக் கடிநதுகொணடு, ௰௧ வாயக்குளளே போகிற பதாாததம மனுஷனைத தீட்டுப்படுததாதென்று போதிககிறது ௨௧ அவா கானானேயஸதிரீயுடைய மகளையும, ௩௰ மறு அநேகம குமபுகளையும சுகமாக்கி ௩௨ ஏழு அபபஙகளினலும, சில சிறுமீனகளினலும, ஸதிரீகளும பிளளைகளும தவிர நாலாயிரம புருஷாகளுககுப போசனம கொடுததது

அக்காலததிலே [3]எருசலேமிலிருநது வநத வேதபாரகரும பரிசேயரும இயேசுவினிடததில வநது,

௨ [4]உமமுடைய சீஷா தஙகள் கைகளைக கழுவாமல் போசனமபணணுகிறாாகள; [5]அபபடி அவாகள் பெரியோாகளுடைய பாரமபரை நியாயததை ஏன மீறி நடககிறாாகள என்றாாகள.

௩ அதற்கு அவா சொன்னது: உஙகள் பாரமபரை நியாயத்தினலே நீஙகளும பராபரனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீாகள?

௪ [6]எபபடியெனில், உன் தகபபனையும் தாயையும் கனமபணணவேணடுமென்றும், [7]தகபபனையாகிலும் தாயையாகிலும நிநதிபபவனை மரண ஆக்கினைக்குட்படுதத வேண்டுமென்[illegible] பராபரன் கட்டளையிட்டார்[illegible]

௫ [8]அப்படியிருந்தும் நீங்கள், எவனகிலும் தன் தகப்பனுடனே அல்லது தாயுடனே, உமககு என்னலே உதவுகிறது எதுணடோ அதைக காணிககையாகக கொடுககிறேன என்று சொன்னல,

௬ அவன் தன தகபபனை அல்லது தாயைக கனம்பண்ணவேண்டுவதிலலை என்று போதித்து, இவ்விதமாயப பராபரனுடைய கற்பனையை உஙகள் பாரமபரை நியாயத்தினலே அவமாக்கிவருகிறீாகள.

௭ [9]ஆ வஞ்சகரே, [10]இந்தச் சனங்கள தஙகள் வாயினலே என்னைச சோநது தங்கள் உதடுகளினலே என்னைக் கனம்பண்ணியும் தஙகள இருதயமோ எனக்குத தூரமாய விலகியிருக்கின்றது

௮ [11]அபபடி இவர்கள மனிதர்களுடைய கற்பனைகளாகிய போதகஙகளைப போதிககிறவர்களாயிருநது எனககு வீணுக ஆராதனை செய்கிறாாகள என்று,

௯ ஏசாயா என்பவன் உஙகளைககுறிததுச நன்றாயத தீாககதரிசனம உரைததானென்று சொன்னா.

௰ ¶ [12]பின்பு சனங்களைத தமமிடததில வரவழைதது, நீஙகள கேட்டுச சிநதிததுககொள்ளுஙகள.

௰௧ [13]வாய்க்குளளே போகிற பொருள ஒருவனையும அசுசிபபடுததமாட்டாது, வாயிலிருநது புறபபடுகிற பொருளே ஒருவனை அசுசிபபடுததுகினறதென்று அவர்களுடனே சொன்னர்.

௰௨ ¶ அபபொழுது அவருடைய சீஷா அவரிடததில் வநது; பரிசேயா இநத வசனததைக் கேட்டு விசனபபட்டாாகள் என்று அறிநதிருக்கிறீரா என்றாாகள்.

௰௩ அதற்கு அவா, [14]என் பரமபிதா நடாத நாற்றுகள் யாவும் பிடுங்கப்படும.

௰௪ அவாகளை விட்டுவிடுங்கள, [15]குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்

கி. பி. ௩௨.

1 மாற் ௬ ௫௩
2 மத. ௯ ௨௧ மாற ௩ ௰ லூக ௬ ௰௯ அப ௰௯ ௰௨
3 மாற ௭ ௧
4 மாற ௭ ௫
5 கொலோ ௨ ௮
6 உ மோ ௨௰ ௰௨ ௫ மோ ௫ ௰௬ ௭ மோ ௬ ௰௩ வாக் ௨௩ ௨௨ எபே ௬ ௨
7 ௨ மோ ௨௧ ௰௭ ௩ மோ ௨௰ ௯ ௫ மோ ௨௭ ௰௬ வாக் ௨௰ ௨௰ ௨௫ ௰௭
8 மாற ௭ ௰௧ ௰௨
9 மாற ௭ ௬
10 ஏசா ௨௯ ௰௩ ௭ ௬ ௨ ௫
11 ஏசா ௨௯ ௰௩ கொலோ ௨ ௰௮ ௨௨ தீத ௧ ௰௪
12 மாற ௭ ௰௪
13 அப ௰ ௰௫ ௰ தீமோ ௪ ௪ தீத ௧ ௰௫
14 யோவா ௰௫ ௨ ௧ கொரி ௩ ௰௨
15 ஏசா ௯ ௰௬ மல்கி ௨ ௮ மத ௨௩ ௰௬ லூக் ௬ ௩௯

டினால் இருவரும் குழியிலே விழுவார்கள் என்றார்.

௰௫ [1]அப்பொழுது பேதுரு அவரை நோக்கி, இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டான்.

௰௬ அதற்கு இயேசுவானவர், [2]நீங்களும் இன்னும் புத்தியில்லாதவர்களா?

௰௭ [3]வாய்க்குள்ளே போகிறவைகள் யாவும் வயிற்றில் பிரவேசித்துப் பின்பு ஆசனவழியாய்க் கழிந்துபோகின்றன என்பதை நீங்கள் இன்னும் சிந்தித்துக்கொள்ளவில்லையா?

௰௮ [4]வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன, அவைகளே மனிதனை அசுசிப்படுத்துகின்றன

௰௯ [5]எவையெனில், பொல்லாத சிந்தனைகள், கொலைகள், விபசாரங்கள், வேசித்தனங்கள், களவுகள், பொய்ச்சாட்சிகள், தூஷணங்களாகிய இவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன

௨௰ இவைகளே மனிதனை அசுசிப்படுத்துகிறவைகள், கைகழுவாமல் சாப்பிடுகிறது மனிதனை அசுசிப்படுத்தாது என்றார்.

௨௰௧ ¶ பின்பு இயேசுவானவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தீருசீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்

௨௰௨ [6]அப்பொழுது அவ்விடங்களின் எல்லைகளிலிருந்து வந்த கானானே தேசத்தாளாகிய ஒரு ஸ்திரீ அவரை நோக்கி, ஆண்டவரே தாவீதின் குமாரனே, என் மகள் பசாசினாலே கடினமாய் வாதிக்கப்படுகிறாள், எனக்கு இரங்கவேண்டுமென்று சொல்லிக் கூப்பிட்டாள்.

௨௰௩ அவரோ அவளுக்கு மாறுத்தரமாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை; அப்பொழுது அவருடைய சீஷர் வந்து அவரை நோக்கி, இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே; ஆதலால் இவளை அனுப்பிவிடும் என்று வேண்டிக்கொண்டார்கள்

௨௰௪ [7]அதற்கு அவர், காணாமல்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்துக்கே அன்றி, (மற்றவர்களிடத்தில்) நான் அனுப்பப்படவில்லையே என்றார்.

௨௰௫ அவளோ வந்து, ஆண்டவரே, எனக்குச் சகாயஞ்செய்யவேண்டுமென்று அவரை நமஸ்காரம்பண்ணினாள்.

௨௰௬ அவர் சொன்னது: [8]பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து, நாய்களுக்குப் போடுகிறது நல்லதல்லவே என்றார்.

௨௰௭ அதற்கு அவள், ஆண்டவரே, மெய்தான், ஆகிலும் நாய்கள் தங்கள் எசமான்கள் போசனம் செய்கிற பலகைகளிலிருந்து விழுகிற உச்சிட்டங்களைத் தின்னுமே என்றாள்

௨௰௮ அப்பொழுது இயேசுவானவர் அவளை நோக்கி, ஆ ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிதாயிருக்கின்றது; நீ விரும்பினபடி உனக்கு ஆகக்கடவது என்றார், அந்நேரமே அவளுடைய மகள் சுகம் அடைந்தாள்

௨௰௯ ¶ [9]பின்பு இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக் [10]கலிலேயாக்கடலின் அருகே வந்து, ஒரு மலையில் ஏறி, அங்கே உட்கார்ந்தார்

௩௰ [11]அப்பொழுது சப்பாணிகள், குருடர், ஊமையர், முடவர்கள் முதலான அநேகம்பேரைக் கூட்டிக்கொண்டு வந்த மிகுந்த சனங்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவருடைய பாதத்தினிடத்தில் வைத்தார்கள்; அவர்களை அவர் குணமாக்கினார்

௩௰௧ ஊமைய[illegible]பேசுகிறதையும், முடவர்கள் சொஸ்தம் அடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிற

கி. பி. ௩௨.

[1] மாற் ௭ ௰௭

[2] மத ௰௬ ௯ மாற் ௭ ௰௮

[3] ௧ கொரி ௬ ௰௩

[4] யாக் ௩ ௬

[5] ௧ மோ ௬ ௫ ௮ ௨௧ வாக் ௬ ௰௪ ௰௮ ௰௬ எரே ௰௭ ௯ மாற் ௭ ௨௧ ௨௨

[6] மாற் ௭ ௨௪

[7] மத ௰ ௫ ௬ அப் ௩ ௨௫ ௰௩ ௪௬ ரோ ௰௫ ௮

[8] மத ௭ ௬ பிலி ௩ ௨

[9] மாற் ௭ ௩௧

[10] மத ௪ ௰௮

[11] ஏசா ௩௫ ௫, ௬ மத ௰௧ ௫ லூக் ௭ ௨௨

கி. பி. ௩௨.

தையும், குருடர் காணுகிறதையும் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனைத் துதித்தார்கள்.

௩௨ ¶ [1]பின்பு இயேசுவானவர் [illegible]முடைய சீஷரைத் தம்மிடத்தில் அழைத்து, சனங்களைக்குறித்து மனதுருக்கமாய் இருக்கிறேன்; என்னத்தினாலென்றால், இவர்கள் மூன்றுநாள் என்னிடத்திலே தங்கி போசனம் இல்லாமல் இருக்கிறார்கள்; இவர்கள் வழியிலே சோர்ந்துபோகும்படிக்குப் பட்டினியாய் இவர்களை அனுப்பிவிட மாட்டேன் என்றார்.

1 மாற் ௮ ௧

௩௩ [2]அதற்கு அவருடைய சீஷர்கள், இவ்வளவு சனங்களுக்குத் திருத்தி உண்டாகும்படிக்கு வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்.

2 ௨ இரா ௪ ௪௩

௩௪ இயேசுவானவர், உங்களிடத்தில் எவ்வளவு அப்பங்கள் உண்டு என்றார், ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் உண்டு என்று சீஷர் சொல்ல,

௩௫ அவர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்கச்சொல்லி,

௩௬ பின்பு அந்த [3]ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, [4]ஸ்தோத்திரஞ்செய்து, அவைகளைப் பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார், சீஷர் அவைகளைச் சனங்களுக்குக் கொடுக்க,

3 மத் ௰௪ ௰௭
4 ௧ சாமு ௯ ௰௩
லூக் ௨ ௨௮
5 மாற் ௮ ௰
6 மத் ௰௨ ௩௮
மாற் ௮ ௰௧
லூக் ௰௧ ௰௬
௰௨ ௫௪–௫௬
௧ கொரி ௧ ௨௨

௩௭ எல்லாரும் சாப்பிட்டுத் திருத்தி அடைந்தார்கள்; பின்பு சேஷமானவைகள் ஏழு கூடைநிறையச் சேகரித்துக்கொள்ளப்பட்டன.

7 மத் ௰௨ ௩௯

௩௮ பெண்களும் பிள்ளைகளும் தவிர, போசனம்பண்ணின புருஷர் நாலாயிரம்பேர்.

8 மாற் ௮ ௰௪

௩௯ [5]அவர் [illegible]ங்களை அனுப்பிவிட்டுப் படவில் ஏறி மகதலாவூரின் திசைகளில் சேர்ந்தார்.

9 லூக் ௰௨ ௧

௰௬. அதிகாரம்.

௧ பரிசேயர் ஒரு அடையாளத்தைக் கேட்டது. ௬ இயேசு பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொல்லுகிறது. ௧௩ கிறிஸ்துவைக்குறித்துச் சனங்கள் எண்ணங்கொண்டது. ௧௬ பேதுரு அவரை அறிக்கைபண்ணினது. ௨௧ இயேசு தம்முடைய மரணத்தை முன்னறிவிக்கிறது. ௨௩ அப்படிச் சம்பவிக்காதபடிக்குப் பேதுரு விலக்கினதாக அவனைக் கடிந்துகொண்டது. ௨௪ தம்மைப் பின்பற்றுகிறவர்கள் சிலுவையைச் சுமக்கவேண்டுமென்று புத்தி சொன்னது.

[6]அப்பொழுது பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

௨ அவர்களுக்கு அவர் சொன்னது: அஸ்தமனமாகிறபொழுது செவ்வானம் தோன்றியபடியால் வெளியாகும் என்கிறீர்கள்.

௩ அல்லாமலும் உதயமாகிறபொழுது வானம் சிவப்பாயும் மந்தாரமாயும் இருக்கிறபடியால், இன்றைக்குப் பெருங்காற்றும் மழையும் உண்டாகும் என்கிறீர்கள், வஞ்சகரே, வானத்தின் தோற்றத்தை வகைபார்க்க அறிந்திருக்கிறீர்கள்; காலங்களின் அடையாளங்களைக்குறித்து வகைபார்க்கமாட்டீர்களா?

௪ [7]சோரமார்க்கமுள்ள பொல்லாத சந்ததியாரானவர்கள் அடையாளம் கேட்கிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி, வேறொரு அடையாளமும் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, அவர்களை விட்டுப்போனார்.

௫ ¶ [8]அவருடைய சீஷர்கள் அக்கரைக்குப் போனபொழுது அவர்கள் அப்பங்களைக் கூடக்கொண்டுபோக மறந்திருந்தார்கள்.

௬ [9]அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளிப்புள்ள மாவுக்கு

விலகி, மிகவும் எச்சரிக்கையாய் இருங்கள் என்றார்.

௭ அவர்கள், நாம் அப்பங்களைக் கூடக் கொண்டுவராததைக் குறித்து (இப்படிச் சொல்லுகிறார் என்று) தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௮ இயேசுவானவர் அதை அறிந்து அவர்களை நோக்கி, அற்பவிசுவாசிகளே, நீங்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுவராததைக் குறித்து (நான் இப்படிச் சொன்னதாக) உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிறது என்ன?

௯ [1]இன்னம் உங்களுக்குப் புத்தியில்லையோ? ஐயாயிரம் பேருக்குள்ளே (கொடுத்த) ஐந்து அப்பங்களையும், நீங்கள் அவ்வளவு கூடைநிறையச் சேகரித்த துண்டுகளையும்,

௰ [2]நாலாயிரம் பேருக்குள்ளே (கொடுத்த) ஏழு அப்பங்களையும், நீங்கள் அவ்வளவு கூடைநிறைய எடுத்த துண்டுகளையும் நினைத்துக்கொள்ளுகிறதில்லையா?

௰௧ பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளிப்புள்ள மாவுக்கு விலகி எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமென்று நான் அப்பத்தைக்குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமல் இருக்கிறது எப்படியென்றார்.

௰௨ அப்பொழுது அவர்கள் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய அப்பங்களின் புளிப்புள்ள மாவுக்கு அல்ல, அவர்களுடைய உபதேசத்துக்கே விலகி எச்சரிக்கையாய் இருக்கச்சொன்னாரென்று அறிந்தார்கள்.

௰௩ ¶ பின்பு இயேசுவானவர் பிலிப்பு கேசரியாவின் திசைகளில் வந்தபொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, [3]மனிதனுடைய குமாரனாகிய என்னைச் சனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

௰௪ [4]அதற்கு அவர்கள் சொன்னது: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

௰௫ அதற்கு அவர், நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டபொழுது,

௰௬ அதற்குச் சீமோன் பேதுரு சொன்னது: [5]நீர் சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

௰௭ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: யோனாவின் குமாரனாகிய சீமோனே, [6]மாம்சம் இரத்தம் அல்ல, பரமண்டலங்களில் இருக்கிற என் பிதா [7]இதை உனக்கு வெளிப்படுத்தினார்; ஆதலால் நீ பாக்கியமுள்ளவன்.

௰௮ மேலும் [8]நீ பேதுருவாய் இருக்கிறாய், [9]இந்தக் கல்மலையின்மேல் நான் என்னுடைய சபையைக் கட்டுவேன், [10]பாதாளத்தின் வாசல்களும் அதைச் செயிப்பதில்லை என்று உனக்குச் சொல்லுகிறேன்.

௰௯ அல்லாமலும் பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன், பூமியிலே நீ கட்டுவது எதோ, அது பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும், [11]பூமியிலே நீ கட்டவிழ்ப்பது எதோ, அது பரலோகத்திலே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொல்லி,

௨௰ [12]பின்பு தாம் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

௨௰௧ ¶ [13]அதுமுதல் இயேசுவானவர், தாம் எருசலேமுக்குப் போய், பெரியோர்களாலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் மிகுந்த [illegible]டுபடவும், கொலைசெய்யப்படவும், மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் வேண்டு

கி. பி. ௩௨.

---

[1] மத். ௰௪. ௧௭-. யோவா. ௬. ௯. [illegible]

[2] மத். ௰௫. ௩௪-. [illegible]

[3] மாற். ௮. ௨௭. லூக். ௯. ௰௮.

[4] மத். ௰௪. ௨. லூக். ௯. [illegible]

[5] மத். ௰௪. ௩௩. மாற். ௮. ௨௯. லூக். ௯. ௨௰. யோவா. ௬. ௬௯. [illegible] அப். ௮. ௩௭. [illegible] எபி. [illegible] ௧ யோவா. [illegible]

[6] எபே. ௨. ௮.

[7] ௧ கொரி. ௨. ௰. கலா. ௧. ௰௬.

[8] யோவா. ௧. ௪௨.

[9] எபே. ௨. ௨௰. [illegible]

[10] [illegible]

[11] மத். ௰௮. ௰௮. யோவா. ௨௰. ௨௩.

[12] மத். ௰௭. ௯. மாற். ௮. ௩௰. லூக். ௯. ௨௧.

[13] மத். ௨௰. ௰௭. [illegible]

மென்று தம்முடைய சீஷருக்குக் காண்பிக்கத் தொடங்கினார்

௨௨ அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்து, ஆண்டவரே, உம்மிடத்தில் இரக்கம் உண்டாவதாக, அப்படி உமக்கு வராதிருப்பதாக என்று அவருடனே கண்டிப்பாய்ச் சொன்னான்.

௨௩ இயேசுவானவர் திரும்பிப் பேதுருவினிடத்தில், [1]ஆ சாத்தானே, நீ என்முன் இராமல் போ, நீ பராபரனுக்குப் பிரியமானவைகளைச் சிந்தியாமல், மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே [2]எனக்குத் துன்பமாயிருக்கிறாய் என்று சொல்லி,

௨௪ ¶ [3]பின்பு தம்முடைய சீஷர்களை நோக்கி, என்னைப் பின்பற்றி நடக்க ஒருவன் விரும்பினால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்

௨௫ என்னத்தினாலென்றால் [4]தன் சீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் சீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்

௨௬ அல்லாமலும் மனிதனானவன் உலக முழுமையும் சம்பாதித்துக்கொண்டாலும், தன் சீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு என்ன லாபம் உண்டாயிருக்கும்? [5]அன்றியும், ஒரு மனிதன் தன் சீவனை மீட்கிறதற்கு என்னத்தைக் கொடுப்பான்?

௨௭ [6]அல்லாமலும், மனிதனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையைப் பொருந்தி, [7]தம்முடைய தூதரோடுங்கூட வருவார், அப்பொழுது [8]அவனவனுடைய செய்கையின்படியே அவனவனுக்குப் பலன் அளிப்பார்.

௨௮ [9]இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனிதனுடைய குமாரன் தம்முடைய இராச்சியத்தில் வருவதைக் காண்கிறதற்கு முன்னே மரணத்தை அடைவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰௭. அதிகாரம்.

௧ இயேசு மறுரூபப்பட்டது ௰௪ அவர் சந்திரரோகியைக் குணமாக்கி, ௨௨ தம்முடைய பாடுகளை முன்னறிவித்தது ௨௪ தீர்வையைச் செலுத்தினது

[10]ஆறுநாளுக்குப் பின்பு இயேசுவானவர் தனித்திருக்கும்படி, பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய தம்பியாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு, உயர்ந்த மலையின்மேல் போய்,

௨ அங்கே அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது, அவருடைய வஸ்திரங்கள் ஒளியைப்போல் வெண்மையாயின.

௩ அப்பொழுது மோசே எலியா என்பவர்கள் அவரோடே பேசிக்கொள்ளுகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

௪ அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கும், மோசேயுக்கும், எலியாவுக்கும் ஓரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டாக்குவோம் என்றான்

௫ [11]அப்படி அவன் பேசுகையில் நடந்தது என்னவென்னில் ஒளியுள்ள மேகம் அவர்கள்மேல் நிழலிட்டதுமல்லாமல், [12]இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், [13]இவரில் பிரியமாய் இருக்கிறேன், [14]இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்தில் இருந்து சத்தம் உண்டாயிற்று.

௬ [15]சீஷர் அதைக்கேட்டு, முகங்குப்புறவிழுந்து, மிகவும் பயந்தார்கள்

௭ [16]அப்பொழுது இயேசுவானவர் வந்து, அவர்களைத் தொட்டு, எழுந்திருங்கள், பயப்படாதிருங்கள் என்று சொன்னார்.

கி. பி. ௩௨.

1 ௨ சாமு ௰௯ ௨௨
2 உரோ ௮ ௭
3 மத் ௰ ௩௮ மாற் ௮ ௩௪ லூக் ௯ ௨௩ ௰௪ ௨௭ அப் ௰௪ ௨௨ ௧ தெச ௩ ௩ ௨ தீமோ ௩ ௰௨
4 லூக் ௰௭ ௩௩ யோவா ௰௨ ௨௫
5 சங் ௪௯ ௭, ௮
6 மத் ௨௬ ௬௪ மாற் ௮ ௩௮ லூக் ௯ ௨௬
7 தானி ௭ ௰ சகரி ௰௪ ௫ யூதா ௰௪
8 யோபு ௩௪ ௰௧ சங் ௬௨ ௰௨ எரே ௰௭ ௰ ௩௨ ௰௯ உரோ ௨ ௬ ௧ கொரி ௩ ௮ ௨ கொரி ௫ ௰ ௧ பேது ௧ ௰௭ வெளி ௨ ௨௩ ௨௨ ௰௨
9 மாற் ௯ ௧ லூக் ௯ ௨௭
10 மாற் ௯ ௨ லூக் ௯ ௨௮
11 ௨ பேது ௧ ௰௭
12 மத் ௩ ௰௭ மாற் ௧ ௰௧ லூக் ௩ ௨௨
13 ஏசா ௪௨ ௧
14 உபா ௰௮ ௰௫, ௰௯ அப் ௩ ௨௨, ௨௩
15 ௨ பேது ௧ ௰௮
16 தானி ௮ ௰௮ ௯ ௨௧ ௰ ௰௮

௮ அவர்கள் தங்கள் கண்களை உயர்த்துகிறபொழுது இயேசுவையே அன்றி மற்றொருவரையும் காணவில்லை.

௯ பின்பு அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபொழுது, [1]இயேசுவானவர் அவர்களைநோக்கி, [illegible]னிதனுடைய குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறவரைக்கும் நீங்கள் இந்தத் தரிசனையை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

௰ அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரைநோக்கி, [2]அப்படியானால் முதலாவது எலியா வரவேண்டும் என்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

௰௧ [3]அதற்கு இயேசுவானவர் சொன்னது: முன்பு எலியா வந்து, எல்லாவற்றையும் சீர்ப்படுத்தவேண்டும் என்பது மெய்தான்.

௰௨ [4]அல்லாமலும் எலியா வந்தாயிற்றென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; [5]அவனை அவர்கள் அங்கீகரித்துக்கொள்ளாமல், அவனுக்குத் தங்கள் இஷ்டப்படி செய்தார்கள், [6]அப்படி மனிதனுடைய குமாரனும் அவர்களால் பாடுபடுவான் என்றார்.

௰௩ [7]அப்பொழுது அவர் யோவான்ஸ்நானனைக்குறித்துத் தங்களுடனே பேசினாரென்று சீஷர் அறிந்தார்கள்.

௰௪ ¶ [8]பின்பு அவர்கள் சனக்கூட்டத்தினிடத்தில் சேர்ந்தபொழுது, ஒரு மனிதன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு,

௰௫ ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; எப்படியென்றால், அடிக்கடி தீயிலேயும் அடிக்கடி சலத்திலேயும் விழுகிறான்.

௰௬ அவனை உம்முடைய சீஷரிடத்தில் கொண்டுவந்தேன், அவர்களுக்கு அவனைக் குணமாக்கத் திராணியில்லை என்றான்.

௰௭ அதற்கு இயேசுவானவர் சொன்னது: ஆ விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியாரே, எதுவரைக்கும் உங்களோடு இருப்பேன்; எதுவரைக்கும் உங்களில் பொறுமையாய் இருப்பேன்; அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்.

௰௮ ¶ அவனைக் கொண்டுவந்தபொழுது இயேசுவானவர் அவனிலுள்ள பசாசை அதட்டினார்; உடனே அது அவனை விட்டுப் போயிற்று; அந்தப் பிள்ளை அந்நேரமே சுகம் அடைந்தான்.

௰௯ பின்பு சீஷர்கள்மாத்திரம் இயேசுவினிடத்தில் வந்து, நாங்கள் அதைத் துரத்தும்படிக்கு ஏன் எங்களுக்குத் திராணியில்லை என்றார்கள்.

௨௰ அதற்கு இயேசுவானவர், உங்கள் அவிசுவாசத்தினாலே (திராணியில்லை.) மேலும் [9]ஒரு கடுகுவிதை அவ்வளவு விசுவாசம் மாத்திரம் உங்களுக்கு உண்டானால் நீங்கள் இந்த மலையை நோக்கி, இவ்விடம்விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது போம், அல்லாமலும் உங்களால் கூடாத காரியம் ஒன்றும் இருப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௧ ஆகிலும் செபத்தினாலும் உபவாசத்தினாலுமே அன்றி, (வேறுவிதமாய்) இந்தச் சாதியைத் துரத்தப்படாது என்றார்.

௨௨ ¶ [10]அல்லாமலும் அவர்கள் கலிலேயா நாட்டிலே சஞ்சரித்திருந்த காலத்திலே இயேசுவானவர் அவர்களைநோக்கி, மனிதனுடைய குமாரன் மனிதர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான்

௨௩ அவர்கள் அவனைக் கொலைசெய்வார்கள்; பின்பு மூன்றாம்நாளிலே எழுந்திருப்பான் என்றார்;

கி. பி. ௩௨.

1 மத் ௰௬. ௨௰. மாற் ௮. ௯௰. ௯, ௧

2 மல்கி ௪. ௫. மத் ௰௧. ௰௪. மாற் ௯. ௰௧.

3 மல்கி ௪. ௬. லூக் ௧. ௰௬. ௰௭. அப் ௩. ௨௧.

4 மத் ௰௧. ௰௪. மாற் ௯. ௰௨, ௰௩.

5 மத் ௰௪. ௩, ௰.

6 மத் ௰௬. ௨௧.

7 மத் ௰௧. ௰௪.

8 மாற் ௯. ௰௪. லூக் ௯. ௩௭.

9 மத் ௨௧. ௨௧. மாற் ௰௧. ௨௩. லூக் ௰௭. ௬. ௧ கொரி ௰௨. ௯. ௰௩. ௨.

10 மத் ௰௬. ௨௧. ௨௰. ௰௭, ௰௮. மாற் ௮. ௩௧. ௯. ௩௧. ௰. ௩௩. லூக் ௯. ௨௨, ௪௪. ௰௮. ௩௧. ௨௪. ௬, ௭.

அவர்கள் மிகுந்த துக்கம் அடைந்தார்கள்.

௨௪ [1]அவர்கள் கப்பர்நாகூம் ஊரில் வந்தபொழுது, வரிப்பணத்தைச் சேர்க்கிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து, உங்கள் போதகர் * வரிப்பணத்தைக் கொடுக்கிறதில்லையா என்றார்கள்; கொடுக்கிறார் என்றான்.

௨௫ பின்பு அவன் வீட்டிலே வந்தபொழுது அவன் (பேசுகிறதற்கு) முன்னே இயேசுவானவர் அவனை நோக்கி, சீமோனே, பூமியின் இராசாக்கள் யார் கையிலே தீர்வை அல்லது வரி வாங்குகிறார்கள்? தங்கள் பிள்ளைகள் கையிலோ, அந்நியர் கையிலோ, இது உனக்கு எப்படித் தோன்றுகின்றது என்றார்.

௨௬ அந்நியர் கையில் வாங்குகிறார்கள் என்று பேதுரு சொன்னான்; அதற்கு இயேசுவானவர், அப்படியானால் பிள்ளைகள் செலுத்தவேண்டுவதில்லையே.

௨௭ ஆனாலும் நாம் அவர்களுக்கு விசனம் வரப்பண்ணாதபடிக்கு நீ கடலிடத்துக்குப் போய், தூண்டிலைப்போட்டு, முதலாவது எழும்புகிற மீனை எடுத்து, அதின் வாயைத் திறந்துபார்; அதிலே ஒரு † வெள்ளிக்காசைக் காண்பாய், அதை எடுத்து வந்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களுக்குக் கொடு என்றார்.

௰௮. அதிகாரம்.

௧. கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் தாழ்மையுள்ளவர்களாயும், கெடுதிசெய்யாதவர்களாயும் இருக்கவும், ௭ இடறல்களை விலக்கிச் சிறியவர்களை அசட்டைபண்ணாமல் இருக்கவும் எச்சரித்து, ௰௫. சகோதரர் நமக்குத் தப்பிதஞ்செய்தால் அவர்களுக்கு இன்னதைச் செய்யவேண்டுமென்றும், ௨௧ இத்தனைதரம் அவர்களை மன்னிக்கவேண்டுமென்றும் போதித்து, ௨௩ ஊழியக்காரரிடத்தில் கணக்குவாங்கி, ௩௨ தன் தோழன்மேல் இரக்கத்தைப் பாராட்டாதவனுக்குத் தண்டனைசெய்த இராசாவினுடைய உவமையினாலே அதை விஸ்தரித்தது.

[2]அக்காலத்திலே சீஷர்கள் இயேசுவினிடத்திற்கு வந்து, பரலோக இராச்சியத்திலே எவன் பெரியவனாய் இருப்பான் என்றார்கள்.

௨ அப்பொழுது இயேசுவானவர் ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்களுக்குள்ளே நிறுத்திச் சொன்னதாவது:

௩ நீங்கள் மனந்திரும்பிப் [3]பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪ [4]ஆகையால் இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவனே, பரலோக இராச்சியத்தில் பெரியவனாய் இருப்பான்.

௫ [5]அல்லாமலும் இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்.

௬ [6]என்மேல் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவன் குற்றம் செய்வதற்குக் காரணமானவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, அவனைச் சமுத்திரத்துக்குள்ளே அமிழ்த்தினால் அவனுக்கு நலமாய் இருக்கும்.

௭ ஐயோ! கெடுத்தலினிமித்தம் உலகத்திற்கு வேதனைவரும்; [7]கெடுத்தல் அவசியமாய்வரவேண்டும்; [8]ஆனாலும் ஐயோ! கெடுத்தலைச் செய்கிறவனுக்கு வேதனைவரும்.

௮ [9]ஆதலால் உன் கையாவது உன் காலாவது உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால், அவைகளைத் தறித்து, எறிந்துபோடு; நீ இரண்டு கையை அல்லது இரண்டு காலை உடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதிலும், சப்பாணியாய் அல்லது ஊனனாய் (நித்திய) சீவனுள்ள இடத்தில் பிரவேசிக்கிறதே உனக்கு நன்மையாய் இருக்கும்.

௯ மேலும் உன்னுடைய கண் உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; நீ இரண்டு கண்ணை உ

கி. பி. ௩௨.

[1] மாற். ௯. ௩௩.

* மூலத்திலே திராகுமா என்ற பேர்பெற்றுப் பத்து அணா விலையுள்ளதாயிருக்கும். ௨ மோ. ௩௰. ௰௩. ௩௮. ௨௬. காண்க.

† Stater, ஒன்றேகால் ரூபாய் பெறத்தக்க வெள்ளி.

[2] மாற். ௯. ௩௪. லூக். ௯. ௪௬. ௨௨. ௨௪.

[3] சங். ௱௩௧. ௨. மத். ௰௯. ௰௪. மாற். ௰. ௰௪. லூக். ௰௮. ௰௬. ௧ கொரி. ௰௪. ௨௰. ௧ பே. ௨. ௨.

[4] மத். ௨௰. ௨௭ ௨௩. ௰௧

[5] மத். ௰. ௪௨. லூக். ௯. ௪௮

[6] மாற். ௯. ௪௨. லூக். ௰௭. ௨

[7] லூக். ௰௭. ௧. ௧ கொரி. ௰௧. ௰௯.

[8] மத். ௨௬. ௨௪.

[9] மத். ௫. ௨௯. ௩௰. மாற் ௯. ௪௩. ௪௫.

டையவனாய் எரிநரகத்திலே தள்ளப்படுவதிலும், ஒற்றைக்கண்ணனாய் (நித்திய) ஜீவனுள்ள இடத்தில் பிரவேசிக்கிறதே உனக்கு நன்மையாயிருக்கும்.

௰ ¶ இந்தச் சிறியரில் ஒருவனையும் அசட்டைபண்ணாதபடிக்குப் பாருங்கள்; என்னத்தினால் என்றால், [1]அவர்களுக்கு ஏற்ற தேவதூதர்கள் பரமண்டலங்களிலே [2]என் பரமபிதாவினுடைய சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௧ [3]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தான்.

௰௨ [4]உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது? ஒரு மனிதனுக்கு உண்டாயிருக்கிற நூறு ஆடுகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய், சிதறிப்போனதைத் தேடுவானல்லவோ?

௰௩ இது உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பதிலும் அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௪ அந்தப்படி இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போகும்படிக்குப் பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவுக்குச் சித்தமில்லை.

௰௫ ¶ [5]உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றம் செய்தால், நீ போய் அவனோடே மாத்திரம் இருந்து, அவனைக் கடிந்துகொள்; [6]அவன் உனக்குச் செவிகொடுத்தால், ஆதாயமாக அவனைப் பெற்றுக்கொள்வாய்.

௰௬ [7]அவன் செவிகொடாமல் இருந்தால், சங்கதிகள் எல்லாம் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்படிக்கு நீ இரண்டொருவனைக் கூட்டிப்போ.

௰௭ அவன் அவர்களுக்கும் கீழ்ப்படியாதிருந்தால், நீ அதைச் சபைக்கு அறிவிக்கவேண்டும்; [8]அவன் சபையையும் அசட்டைபண்ணினால், நீ அவனை அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் எண்ணுவாயாக.

௰௮ [9]பூமியிலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும்; பூமியிலே எவைகளை அவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலே அவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௯ அல்லாமலும் பூமியிலே எந்தக் காரியத்தைக்குறித்தும் உங்களில் [10]இரண்டுபேர் வேண்டிக்கொள்ள ஒருமைப்பட்டால், அது பரமண்டலங்களில் இருக்கிற [11]என் பிதாவினால் அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௰ என்னத்தினால் என்றால், இரண்டுபேராவது மூன்றுபேராவது என்னுடைய நாமத்திலே எங்கே கூடிவந்திருக்கிறார்களோ, அங்கே அவர்களுக்குள்ளே இருக்கிறேன் என்றார்.

௨௧ ¶ அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதம் செய்தால், அவனுக்கு நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்; [12]ஏழுதரமட்டுமோ என்றான்.

௨௨ இயேசுவானவர் அவனுக்குச் சொன்னது: ஏழுதரமட்டும் அல்ல, [13]ஏழெழுபதுதரம் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

௨௩ எப்படியெனில், பரலோக இராச்சியம் தன் ஊழியக்காரருடனே கணக்குப்பார்க்கச் சித்தமான

கி. பி. ௩௨

[1] சங ௩௪. ௭. சகரி ௰௩. ௭ எபி ௧ ௰௪
[2] எஸ. ௧ ௰௪. லூக் ௧ ௰௯.
[3] லூக் ௯ ௫௬ ௰௯ ௯ யோவா ௩ ௰௭ ௰௨ ௪௭.
[4] லூக் ௰௫. ௪
[5] ௩ மோ ௰௯.௰௭. லூக் ௰௭ ௩
[6] யாக் ௫ ௨௰ ௧ பே ௩ ௧.
[7] ௫ மோ. ௰௭ ௬' ௰௯ ௰௫. யோவா ௮ ௰௭. ௨ கொரி. ௰௩ ௧ எபி ௰ ௨௮.
[8] ௨ ரோ ௰௬ ௰௭ ௧ கொரி. ௫ ௯. ௨ தெச ௩ ௰௪, ௰௫ ௨ யோ. ௰
[9] மத ௰௬. ௰௯. யோவா. ௨௰ ௨௩ ௧ கொரி ௫. ௪, ௫
[10] மத் ௫ ௨௪.
[11] ௧ யோ ௩ ௨௨ ௫ ௰௪
[12] லூக் ௰௭ ௪
[13] மத் ௬ ௰௪ மாற் ௰௧ ௨௫. கொலோ ௩ ௰௩

கி. பி. ௩௩

இராசனுக்கு ஒப்பாய் இருக்கின்றது.

௨௪ அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபொழுது, பதினாயிரம் *தாலந்து கடன் பட்டவனை அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள்.

௨௫ அவன் கடனைத் தீர்க்கத் திராணியில்லாதபடியால், ஆண்டவன் அவனையும் அவனுடைய மனைவியையும் பிள்ளைகளையும் அவனுக்கு உண்டான யாவையும் [1]விற்று, கடனைத் தீர்க்கக் கட்டளையிட்டான்.

௨௬ அப்பொழுது அந்த ஊழியக்காரன் விழுந்து வணங்கி, ஆண்டவனே, எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்; நீர எனக்கு இரங்கிப் பொறுக்க வேண்டும் என்று †வேண்டிக் கொண்டான்.

௨௭ அந்தப்படி ஆண்டவன் அந்த ஊழியக்காரனுக்கு இரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்தான்.

௨௮ பின்பு அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னோடேகூட வேலைசெய்து தனக்கு ‡நூறு தேனாரியபணம் கடன்பட்டிருந்த ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்துத் தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர் என்றான்.

௨௯ உடனே அந்த ஊழியக்காரன் அவனுடைய கால்களின் அருகே விழுந்து, எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்; எனக்கு இரங்கிப் பொறுக்கவேண்டும் என்றுவேண்டிக்கொண்டான்.

௩௰ ஆனாலும் அவன் மனதில்லாமல் போய், அவன் பட்ட கடனைத் தீர்க்குமளவும், அவனைக் காவலில் போடுவித்தான்.

௩௧ அந்த நடக்கைகளை மற்ற ஊழியக்காரர் கண்டு, மிகுந்த துக்கமடைந்து, ஆண்டவனிடத்துக்குப் போய், நடந்த எல்லாவற்றையும் அவனுக்கு அறிவித்தார்கள்.

௩௨ அப்பொழுது ஆண்டவன் அவனை அழைப்பித்து, அவனை நோக்கி, பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினாலே, நான் அந்தக் கடன் யாவையும் உனக்கு மன்னித்தேனே.

௩௩ நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன்னோடேகூட ஊழியம் செய்கிறவனுக்கு இரங்க வேண்டுமெல்லவோ என்று சொல்லி,

௩௪ கோபம் அடைந்து, அவன் பட்ட கடன் யாவையும் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும், அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான்.

௩௫ [2]அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை நீங்கள் மனப் பூருவமாய் மன்னியாமல் போனால், இப்படிப்போல உங்கள் பரமபிதா உங்களுக்கும் செய்வார் என்றார்.

௰௯. அதிகாரம்.

௧. இறிவது வியாதிஸ்தரைக் குணமாக்கி, ௩ பெண்சாதியைத் தள்ளிபோடுவதைக்குறித்துப பரிசேயருக்கு உத்தரவுசொல்லி, ௰. விவாகம வேண்டிய காலத்தைக் காண்பித்து, ௰௩. சிறுபிள்ளைகளை ஏற்றுக்கொண்டு, ௰௬ ஒரு வாலிபனுக்கு நித்திய சீவனை அடையும் வழியையும், ௨௧. உத்தம சற்குணனயிருக்கும வீதத்தையும் படிப்பித்து, ௨௩ ஐசுவரியவான்கள பராபரனுடைய இராச்சியத்துக்குள பிரவேசிக்கிறது அரிதென்று சீஷர்களுக்குச்சொல்லி, ௨௭ தம்மைப பின்பற்றும் படிக்கு எதையும் வெறுக்கிறவர்களுக்குப பலன் உண்டாகுமென்று வாக்குத்தத்தம் பண்ணினது.

மேற்சொல்லிய உபதேசங்களை [3]இயேசுவானவர் சொல்லி முடித்த பின்பு, அவர் கலிலேயா நாட்டை விட்டு யோர்தானுக்கு அருகே இருக்கிற யூதேயா நாட்டின் எல்லைகளுக்குப் போனார்.

௨ [4]அநேக சனங்கள் அவர் பின் சென்றார்கள்; அவ்விடத்திலே அவர்களிலுள்ள (பிணியாளிகளை) அவர் குணமாக்கினார்.

---

* ஒரு தாலந்து (௭௱௨௰) ஒளன்ஸ் வெள்ளி; ஒரு ஒளன்ஸ் இரண்டரை ரூபாய விழுக்காடு (௲௮௱) ரூபாயம்.

† அல்லது பணிந்து கொண்டான்.

‡ உரோமருடைய வெள்ளிக்காசு அரைக்கால் ஒளன்ஸாம்; ஒரு ஒளன்ஸ இரண்டரை ரூபாய விழுக்காடு, ஒரு வெள்ளிக்காசு ஐந்து அணு இரண்டு பைசா வாகும் மத ௨௰ ௨.

[1] ௨ இரா ௪, ௧. நெகே. ௫. ௮.

[2] லூக் ௨௧ ௰௪ மத் ௬ ௰௫, மாற். ௰௧ ௨௬, யாக் ௨ ௰௩

[3] மாற். ௰ ௧ யோவா ௰. ௪௰

[4] மத். ௰௨. ௰௫.

௩ ¶ அப்பொழுது சில பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன் மனைவியை எந்த நிமித்தமானாலும் தள்ளிவிடலாமா என்று கேட்டார்கள்.

௪ அதற்கு அவர் சொன்னது: [1] ஆதியிலே சிருஷ்டிகர் மனிதரை உண்டாக்கினபொழுது, ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் உண்டாக்கினார் என்கிறதையும்,

௫ [2]இதின் நிமித்தம் ஒருவன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியுடனே இசைந்திருப்பான், [3]அவ்விருவரும் ஒரே சரீரத்தைப்போல் இருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையோ?

௬ அப்படியிருக்கிறபடியினாலே அவர்கள் இருவராய் இராமல், ஒரே சரீரத்தைப்போல் இருக்கிறார்கள்; ஆதலால் பராபரன் இணைத்ததை மனிதர் பிரிக்கக்கூடாது என்றார்.

௭ ¶ அவர்கள் சொன்னது: அப்படியானால், [4]தள்ளுதலின் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடும்படிக்கு மோசே என்பவர் ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.

௮ அதற்கு அவர் சொன்னது: உங்கள் இருதயம் கடினமானபடியால், நீங்கள் உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடும்படிக்கு மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலோ அப்படியிருந்ததில்லை.

௯ [5]ஆகையால் எவனானாலும் வேசிமார்க்கமாய் நடவாமலிருக்கிற மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரம்பண்ணுகிறான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரம் பண்ணுகிறான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰ ¶ அவருடைய சீஷர்கள் அவருடனே சொன்னது: [6]விவாகம் பண்ணின புருஷனுடைய காரியம் இப்படியானால், விவாகம் பண்ணுகிறது நன்மையல்ல என்றார்கள்.

௰௧ அதற்கு அவர் சொன்னதாவது: [7]திராணி பெற்றவர்களே அன்றி, மற்ற எவர்களானாலும் (நீங்கள் சொன்ன) வசனத்தின்படி செய்யமாட்டார்கள்.

௰௨ அண்ணகர்கள் உண்டு; சிலர் அப்படிப்பட்டவர்களாய்ப் பிறந்தார்கள், சிலர் மற்ற மனிதர்களாலே அண்ணகர்களாக்கப்பட்டார்கள், [8]சிலர் பரலோக இராச்சியத்துக்காகத் தங்களை அண்ணகர்களாக்கினார்கள்; அப்படிப் பற்றிக்கொள்ளத் திராணியுள்ளவன் எவனோ, அவன் அப்படிப் பற்றிக்கொள்ளக் கடவன் என்றார்.

௰௩ ¶ [9]அப்பொழுது அவர் பிள்ளைகளின்மேல் கைகளை வைத்து, அவர்களுக்காகச் செபம்பண்ணும்படிக்கு அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவாகளைச் சீஷர் அதட்டினார்கள்.

௰௪ இயேசுவானவர் (அதைக் கண்டு) சொன்னதாவது: பிள்ளைகள் என்னிடத்திலே வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்; [10]பரலோக இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையதாய் இருக்கின்றதே என்று சொல்லி,

௰௫ அவைகள்மேல் கைகளை வைத்து, பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்.

௰௬ ¶ [11]அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி, நல்லபோதகரே, [12]நித்திய சீவனை அடையும்படிக்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்றான்.

௰௭ அவனுடனே அவர் சொன்னது: நீ என்னை நல்லவன் என்று என் சொல்லுகிறாய்? பராபரனாகிய ஒருவரேதவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ சீவனில்

கி. பி. ௩௰

[1] ௧ மோ ௧.௨௭: ௫. ௨. மல்கி. ௨.௰௫.
[2] ௧ மோ ௨.௨௪. மாற். ௰ ௭-௯. எபே. ௫. ௩௧. மாற் ௰.௭.
[3] ௧ கொரி. ௬. ௰௬. ௭ ௨.
[4] ௫ மோ ௨௪.௧ மத் ௫.௩௧
[5] மத். ௫. ௩௨. மாற். ௰ ௰௧ லூக் ௰௬. ௰௮. ௧ கொரி ௭. ௰, ௰௧.
[6] வாக் ௨௧.௰௯
[7] ௧ கொரி ௭.௨, ௭,௯.௰௭.
[8] ௧ கொரி. ௭ ௩௨,௩௪: ௯ ௫, ௰௫
[9] மாற். ௰. ௰௩. லூக் ௰௮. ௰௫.
[10] மத் ௰௮,௩.
[11] மாற். ௰. ௰௭. லூக். ௰௮.௰௮.
[12] லூக்.௰ ௨௫.

பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளைக் கைக்கொள் என்றார்.

௰௮ அவைகள் எவையென்று அவன் கேட்டான்; அதற்கு இயேசுவானவர் சொன்னது: [1]கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரம் பண்ணாதிருப்பாயாக; களவு செய்யாதிருப்பாயாக; பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக;

௰௯ [2]உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக; [3]உன்னைப்போலப் பிறனில் அன்புகூர்வாயாக என்பவைகளே என்றார்.

௨௰ அந்த வாலிபன் சொன்னது: இவைகளை எல்லாம் நான் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; நான் இன்னம் செய்யவேண்டுவது என்னவென்றான்.

௨௧ இயேசுவானவர் சொன்னது: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், நீ போய் [4]உனக்கு உண்டாயிருக்கிறவைகளை விற்றுப் பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்படிக்குத் தரித்திரருக்குக் கொடுத்து, பின்பு வந்து என்பின்னே செல்லு என்றார்.

௨௨ வாலிபன் இந்த வசனத்தைக் கேட்டு, மிகுந்த ஆஸ்திகளை உடையவனானபடியினாலே, துக்கத்தோடே போய்விட்டான்.

௨௩ ¶ அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய சீஷரை நோக்கி, [5]ஐசுவரியமுள்ளவன் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கிறது அரிதாயிருக்கின்றதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௪ அல்லாமலும் ஐசுவரியவான் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறதைப் பார்க்கிலும், ஓர் ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறதே எளிதாய் இருக்கின்றதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௫ அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு; மிகவும் பிரமித்து, அப்படியானால் இரட்சிக்கப்படுகிறவர்கள் ஆர் என்றார்கள்.

௨௬ இயேசுவானவர் அவர்களைப் பார்த்துச் சொன்னதாவது: மனிதரால் இது கூடாத காரியந்தான், [6]பராபரனோ எந்தக்காரியத்தையும் செய்ய வல்லவர் என்றார்.

௨௭ ¶ [7]அப்பொழுது பேதுரு அவருடனே சொன்னதாவது: [8]இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றிவந்தோம், அதற்காக எங்களுக்கு என்ன பலன் வரும் என்றான்.

௨௮ இயேசுவானவர் சொன்னது: (சகலமும்) புதிதாக்கப்படும் காலத்திலே, மனிதனுடைய குமாரன் தனது மகிமையுள்ள பத்திராசனத்தில் வீற்றிருக்கும்பொழுது, என்னைப் பின்பற்றி வந்த நீங்களும் [9]இஸ்ரவேலராகிய பன்னிரண்டு கோத்திரங்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கிற[illegible]களாகப் பன்னிரண்டு பத்திராசனங்களில் இருப்பீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௯ [10]அல்லாமலும் என் நாமத்தின் நிமித்தம் வீட்டையானாலும், சகோதரரையானாலும், சகோதரிகளையானாலும், தகப்பனையானாலும், தாயையானாலும், மனைவியையானாலும், பிள்ளைகளையானாலும், நிலங்களையானாலும் விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய்ப் பலன் அடைந்து, நித்திய சீவனையும் சுதந்தரித்துக்கொள்வான்.

௩௰ [11]ஆகிலும் முந்தினோராகிய அநேகர் பிந்தினோராய் இருப்பார்கள், பிந்தினோராகிய (அநேகர்) முந்தினோராய் இருப்பார்கள்.

இ. பி. ௩௩.

[1] ௨ மோ. ௨௰. ௰௩-௰௭ ௫ மோ ௫ ௰௭-௨௧.
[2] மத் ௰௫. ௪.
[3] ௩ மோ ௰௯. ௰௮. மத். ௨௨. ௩௯. உரோ ௰௩. ௯. கலா ௫. ௰௪. யாக். ௨. ௮
[4] மத். ௬ ௨௰. லூக் ௰௨. ௩௩. ௰௬. ௯. அப ௨. ௪௫: ௪. ௩௪, ௩௫ ௧ தீமோ. ௬. ௰௮, ௰௯
[5] மத். ௰௩ ௨௨. மாற். ௰. ௨௪. ௧ கொரி ௧. ௨௬. ௧ தீமோ. ௬ ௯, ௰
[6] ௧ மோ ௰௮ ௰௪. யோபு ௪௨. ௨ எரே. ௩௨. ௰௭ சகரி. ௮. ௬. லூக். ௧. ௩௭ ௰௮ ௨௭
[7] மாற். ௰. ௨௮. லூக். ௰௮. ௨௮
[8] ௫ மோ ௩௩. ௯. மத். ௪ ௨௰ லூக் ௫ ௰௧.
[9] மத் ௨௰. ௨௧ லூக். ௨௨ ௨௮-௩௰. ௧ கொரி. ௬. ௨, ௩. வெளி ௨. ௨௬.
[10] மாற். ௰ ௨௯, ௩௰. லூக். ௰௮ ௨௯, ௩௰.
[11] மத். ௨௰ ௰௬. ௨௧. ௩௧, ௩௨. மாற் ௰ ௩௧ லூக். ௰௩. ௩௰.

௨௰. அதிகாரம்.

௧. கிறிஸ்து திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்கிறவர்களின் உவமையினால் பராபரன் ஒருவனுக்கும் கடனாளியல்லவென்று காண்பித்து, ௰௭. தம்முடைய பாடுகளை முன்னறிவித்து, ௨௰. செபெதேயுவின் பிள்ளைகளின் தாயாருக்கு அருளிச்

செய்த உத்தரவினால் தம்முடைய சீஷர்களை மனத்தாழ்மையாய் இருக்கப் படிப்பித்து, ௩௰. இரண்டு குருடருக்குப் பார்வையைக் கொடுத்தது.

கி. பி. ௩௩.

அது எப்படியெனில், பரலோக இராச்சியத்தின் (ஆளுகை) ஒரு வீட்டெசமானுடைய (நடக்கைக்கு) ஒப்பாயிருக்கின்றது; அவன் தன் திராட்சத்தோட்டத்திலே வேலைசெய்யக் கூலிக்காரரை அழைத்துக்கொண்டு வரும்படிக்கு,

௨ அதிகாலையிலே புறப்பட்டு, சில கூலிக்காரரைக் கண்டு, நாளொன்றுக்கு ஒரு *பணம் கூலி தீர்மானம்பண்ணி, அவர்களைத் தன் திராட்சத் தோட்டத்திற்கு அனுப்பிவந்தான்.

௩ மூன்றும் மணிவேளையிலேயும் அவன் புறப்பட்டு, கடைத்தெருவிலே வீணராய் நிற்கிற வேறு சிலரைக் கண்டு,

௪ நீங்களும் திராட்சத் தோட்டத்தில் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி தருவேன் என்று அவர்களுக்குச் சொன்னான்; அவர்கள் போனார்கள்.

௫ ஆறும் ஒன்பதாம் மணிவேளைகளிலே அவன் திரும்பப் புறப்பட்டு அப்படிப்போலச் செய்தான்.

௬ பின்பு பதினோராம் மணிவேளையிலே அவன் புறப்பட்டு, வீணராய் நிற்கிற வேறே சிலரைக் கண்டு, பகல் முழுவதும் நீங்கள் இங்கே ஏன் வீணராய் நிற்கிறீர்கள் என்று கேட்டான்.

௭ அவர்கள் ஒருவரும் எங்களை வேலைகொள்ளவில்லை என்றார்கள்; அவன் சொன்னது: நீங்களும் திராட்சத்தோட்டத்திற்குப் போங்கள், நியாயமானபடி கூலியை வாங்கிக்கொள்வீர்கள் என்றான்.

௮ அஸ்தமனமானபொழுது, திராட்சத்தோட்டத்திற்கு எசமானானவன் தன் காரியக்காரனுடனே சொன்னது: நீ கூலிக்காரரை அழைத்து, பின்பு வந்தவர்களைத் தொடங்கி முன்பு வந்தவர்கள் வரைக்கும் கூலியைக்கொடு என்றான்.

௯ அந்தப்படி பதினோராம் மணிவேளையில் வேலைகொள்ளப்பட்டவர்கள் வந்து, ஆளுக்கு ஒவ்வொரு பணமாகப் பணத்தைவாங்கிக்கொண்டார்கள்.

௰ காலையில் வேலைக்கு வந்தவர்களும் சேர்ந்து, தங்களுக்கு அதிக கூலி வருமென்று எண்ணினார்கள்; அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணமாகப் பணத்தை வாங்கினார்கள்.

௰௧ அதை வாங்குகிறபொழுது, அவர்கள் வீட்டெசமானை நோக்கி,

௰௨ பின்னே வந்த இவர்கள் ஒரு மணிநேரமாத்திரம் வேலைசெய்தார்கள்; இவர்களைப் பகலின்பாரத்தையும் வெயிலையும் சுமந்த எங்களுக்குச் சமனாக்கினீர் என்று மொறுமொறுத்தார்கள்.

௰௩ அவர்களில் ஒருவனுக்கு மாறுத்தரமாக அவன் சொன்னதாவது: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயம் செய்யவில்லை; நீ ஒரு பணம் கூலிக்காக என்னோடே சம்மதிக்கவில்லையோ?

௰௪ உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, நான் உனக்குக் கொடுத்ததுபோல, பின்னே வந்த இவனுக்கும் கொடுக்க மனதாயிருக்கிறேன்.

௰௫ [1]என்னுடையதை நான் என் இஷ்டப்படியே செய்யக்கூடாதா? [2]நான் தயவாயிருக்கிறபடியினாலேயோ நீ வன்கண்ணனாய் இருக்கிறாய் என்றான்.

௰௬ [3]இவ்விதமாய், பிந்தினோர் முந்தினோராய் இருப்பார்கள்; [4]முந்தினோர் பிந்தினோராய் இருப்பார்கள்; மேலும் அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் மாத்திரம் இருக்கிறார்கள் என்றார்.

---

* உரோமருடைய பணம் அரைக்கால் ஒளன்ஸாம், ஒரு ஒளன்ஸ் இரண்டரை ரூபாய் விழுக்காடு ஒரு பணம் ஐந்து அணா இரண்டு பைசாவாம். ௰௮ ௨௮. காண்க

[1] உரோ. ௯ ௨௧

[2] உபா. ௰௫ ௯ வாக். ௨௩ ௬ மத். ௬ ௨௩

[3] மத். ௰௯. ௩௰.

[4] மத். ௨௨. ௰௪.

௰௭ ¶ [1]இயேசுவானவர் எருசலேம் பட்டணத்திற்குப் பிரயாணமாய்ப் போகிறபொழுது, வழியிலே அவர் பன்னிரண்டு சீஷரை மாத்திரம் அழைத்து அவர்களுடனே சொன்னது:

௰௮ இதோ எருசலேமுக்குப் போகிறோம், [2]அங்கே மனிதனுடைய குமாரன் பிரதான ஆசாரியருக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவர்கள் அவனை மரணத்திற்கு உள்ளாக்கும்படி தீர்ப்புக் கொடுத்து,

௰௯ [3]அவனைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவைமரத்தில் அறையவும், புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பின்பு மூன்றாம் நாளிலே அவன் உயிரோடே எழுந்திருப்பான் என்றார்.

௨௰ ¶ [4]அக்காலத்திலே செபேதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடுங்கூட அவரிடத்தில் வந்து, [5]சாஷ்டாங்கமாய் வணங்கி, ஒரு விண்ணப்பம் பண்ண விரும்பினாள்.

௨௧ அவர், உனக்கு என்ன வேண்டும் என்றார்; அவள் அவருடனே சொன்னதாவது: நீர் இராச்சிய பரிபாலனம் [6]செய்யும்பொழுது என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசமாகவும் ஒருவன் உம்முடைய இடதுபாரிசமாகவும் இருக்கும்படி செய்யவேண்டும் என்றாள்.

௨௨ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீங்கள் கேட்டது உங்களுக்குத்தானே தெரியவில்லை; [7]நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்களா? [8]நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தை நீங்கள் பெற்றுக்கொள்வீர்களா என்றார்; அவர்கள் அப்படியே செய்வோம் என்றார்கள்.

௨௩ அப்பொழுது அவர் சொன்னது: [9]என் பாத்திரத்தில் குடிப்பீர்கள், நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தையும் பெற்றுக்கொள்வீர்கள், அது மெய்தான்; [10]ஆனாலும் என் பிதாவினாலே எவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கேயன்றி (மற்றொருவருக்கும்) என் வலது பாரிசத்திலேயும் என் இடது பாரிசத்திலேயும் உளுக்காந்திருக்கிற (கனத்தை) நான் கொடுக்கக்கூடாது என்றார்.

௨௪ ¶ [11]மற்றப் பத்துப்பேரும் (அந்தச் சங்கதியைக்) கேட்டு, அந்தச் சகோதரர் இருவரைக்குறித்து விசனப்பட்டார்கள்.

௨௫ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை அழைத்துச் சொன்னதாவது: உலகத்தாருக்குள்ளே பிரபுக்கள் குடிகளை (இறுமாப்பாய்) ஆளுகிறார்கள்; அல்லாமலும் பெரியோர்கள் அவர்கள்மேல் (கண்டிப்பான) அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

௨௬ [12]உங்களுக்குள்ளே அப்படி இருக்கக்கூடாது; [13]உங்களில் எவனாகிலும் பெரியவனாய் இருக்கவேண்டுமென்று இருந்தால், அவன் உங்கள் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்.

௨௭ [14]உங்களில் எவனாகிலும் முதலாளியாய் இருக்கவேண்டுமென்று இருந்தால், அவன் உங்கள் பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன்.

௨௮ [15]மனிதனுடைய குமாரனும் ஊழியம் கொள்ளும்படிக்கு வராமல், [16]ஊழியம் செய்யும்படிக்கும், [17]அநேகரை மீட்கும்பொருளாகத் [18]தனது சீவனைத் தரும்படிக்கும் வந்தானே என்றார்.

௨௯ ¶ [19]அவர்கள் எரிகோ பட்டணத்திலிருந்து புறப்பட்டுப்போகையில், அநேக சனங்கள் அவர் பின் சென்றார்கள்.

௩௰ அப்பொழுது [20]குருடரான இரண்டுபேர் வழி அருகே உளுக்காந்திருந்து, இயேசுவானவர் வழி

இ. பி. நூ.

1 மாற். ௰ ௩௨. லூக். ௰௮ ௩௧. யோவா. ௰௨ ௰௨.
2 மத். ௰௬ ௨௧
3 மத். ௨௭ ௨. மாற் ௰௫ ௧,௰௯ ழி லூக் ௨௩ ௧ யோவா ௰௮ ௨௮ ழி. அப ௩ ௰௩.
4 மத் ௪ ௨௧
5 மாற்.௰,௩௫.
6 மத் ௰௯. ௨௮
7 மத் ௨௬ ௩௯, ௪௨ மாற். ௰௪. ௩௬ லூக் ௨௨. ௪௨. யோவா. ௰௮ ௰௧.
8 லூக ௰௨ ௫௰
9 அப. ௰௨ ௨. ரோ ௮ ௰௭ ௨ கொரி ௧.௭ வெளி ௧ ௯
10 மத் ௨௫ ௩௪
11 மாற். ௰ ௪௧ லூக் ௨௨ ௨௪, ௨௫
12 ௧ பே ௫,௩
13 மத ௨௩ ௰௧ மாற் ௯ ௩௫. ௰ ௪௩.
14 மத் ௰௮ ௪.
15 பிலி ௨ ௭
16 லூக் ௨௨ ௨௭ யோவா ௰௩ ௫,௰௪
17 மத் ௨௬ ௨௮ ரோ. ௫ ௰௫, ௰௯ ஏபி ௯ ௨௮
18 ஏசா ௫௩ ௰,௰௧. தானி. ௯. ௨௪, ௨௬. யோவா. ௰௧. ௫௧, ௫௨ ௧ தீமோ ௨ ௬. தீத் ௨ ௰௪. ௧ பே. ௧ ௰௯.
19 மாற். ௰. ௪௬ லூக் ௰௮. ௩௫
20 மத். ௯. ௨௭

யே வருகிறார் என்று கேள்விப்பட்டு: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

௩௧ சனங்கள் (அதைக்கேட்டு) அவர்கள் பேசாமல் இருக்கும்படிக்கு அவர்களை அதட்டினார்கள்; அவர்களோ, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

௩௨ அப்பொழுது இயேசுவானவர் நின்று அவர்களை அழைத்து, நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று இருக்கிறீர்கள் என்றார்.

௩௩ அவர்கள் சொன்னது: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும் என்று இருக்கிறோம் என்றார்கள்.

௩௪ இயேசுவானவர் உருக்கமாய் இரங்கி, அவர்களுடைய கண்களைத் தொட்டார், உடனே அவர்கள் பார்வை அடைந்து, அவர் பின்னே சென்றார்கள்.

௨௧. அதிகாரம்.

௧. இயேசுவானவர் ஒரு கழுதையின மேல் ஏறி எருசலேமில் பிரவேசித்தது. ௧௨. தேவாலயத்தில் இருந்த வியாபாரிகளைத் துரத்தினது. ௧௯. அத்திமரத்தைச் சபித்தது. ௨௩ தமது அதிகாரத்தைக் குறித்து ஆசாரியர் முதலானவர்களுக்கு உத்தரவு சொன்னது. ௨௮. இரண்டு குமாரரை உவமையாகக் காட்டியது. ௩௩. எசமானுடைய ஊழியக்காரரைக் கொலைசெய்த தோட்டக்காரரை உவமையாகக் காட்டியது.

[1]அவர்கள் எருச்லேம் பட்டணத்திற்குச் சமீபமாய் [2]ஒலீவமலையின் அருகே இருக்கிற பெத்துபாகே ஊருக்கு வந்தபொழுது, இயேசுவானவர் இரண்டு சீஷரை நோக்கி,

௨ உங்களுக்கு எதிராயிருக்கிற அந்தக் கிராமத்திலே போங்கள், அங்கே நீங்கள் (போன) உடனே கட்டப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும் அதனோடேகூட ஒரு குட்டியையும் காண்பீர்கள்.

௩ அவைகளின் கட்டவிழ்த்து, எனக்காகக் கொண்டுவாருங்கள்; ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், ஆண்டவருக்கு இவைகள் வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவன் அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி அனுப்பினார்.

௪ (சீயோன் குமாரத்தியென்னும் எருசலேம் பட்டணமே,) [3]இதோ உன் இராசா மனத்தாழ்மை உள்ளவருமாய், நுகத்தடிக்குக் கீழ்ப்பட்ட கழுதையின் குட்டியாகிய கழுதையின்மேலே ஏறியிருக்கிறவருமாய், உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்தியுடனே சொல்லுங்கள் என்று,

௫ தீர்க்கதரிசியினாலே சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு அவையெல்லாம் நடந்தன.

௬ [4]இயேசுவானவர் கட்டளையிட்டபடியே செய்யச் சீஷர்கள் போய்,

௭ [5]கழுதையையும் அதின் குட்டியையும் கொண்டுவந்து, பின்பு தங்கள் வஸ்திரங்களை அவைகளின்மேல் போட்டு, அவரை அவைகளின்மேல் ஏற்றிப் போனார்கள்.

௮ [6]திரளான சனங்களோ தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறுசிலர் மரங்களின் கிளைகளைத் தறித்து, வழியிலே தெளித்தார்கள்.

௯ மேலும் முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய சனங்கள், [7]தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, * [8]பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்படத் தக்கவர், உன்னதமான வானங்களில் ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்.

௰ ¶ [9]அப்படி அவர் எருசலேம் பட்டணத்தில் பிரவேசிக்கையில், பட்டணத்தார் எல்லாரும் கலக்கம் அடைந்து, இவர் ஆர் என்று விசாரித்தார்கள்.

இ. பி. ௩௩.

[1] மாற். ௰. ௪௬.
[2] சகரி. ௰௪. ௪. லூக். ௰௯. ௨௯
[3] ஏசா ௬௨. ௰௧. சகரி. ௯. ௯. யோவா. ௰௨. ௰௫
[4] மாற். ௰௧ ௪
[5] ௨ இரா. ௯ ௰௩
[6] ௩ மோ ௨௩ ௪௰ யோவா ௰௨ ௰௩
[7] சங ௱௰௮ ௨௫,
* ஓசன்னா என்பதற்கு இப்பொழுது இரட்சணியத்தைச்செய்வீராக என்பது அர்த்தமாம்.
[8] சங். ௱௰௮. ௨௬. மத் ௨௩ ௩௯,
[9] மாற் ௰௧. ௰௫ லூக். ௰௯. ௪௫. யோவா. ௨. ௰௩.

௰௧ சனங்கள் சொன்னது: இவர் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்த [1]தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்.

௰௨ ¶ [2]இயேசுவானவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, [3]காசுக்காரருடைய பலகைகளையும் புறாக்களை விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்துப்போட்டு,

௰௩ [4]என்னுடைய ஆலயம் செபத்துக்கான ஆலயம் என்னப்படும் என்று எழுதியிருக்கின்றது; [5]நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

௰௪ அல்லாமலும் குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்தில் அவரிடத்திற்கு வந்தபொழுது அவர்களைக் குணமாக்கினார்.

௰௫ அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று தேவாலயத்தில் கூப்பிடுகிற பிள்ளைகளையும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, மிகுந்த விசனம் அடைந்து,

௰௬ அவரை நோக்கி, இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள்; அதற்கு இயேசுவானவர் சொன்னது: கேட்கிறேன், [6]குழந்தைகள் பாலகருடைய வாயினால் துதியை உண்டுபண்ணினீர் என்கிறதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையோ என்று சொல்லி,

௰௭ அவர்களை விட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப் [7]பெத்தானி ஊருக்குப் போய், அங்கே இராத்தங்கினார்:

௰௮ ¶ காலையிலே அவர் மறுபடியும் பட்டணத்திற்குப் போகையில், [8]அவருக்குப் பசி உண்டானபொழுது,

௰௯ [9]வழி அருகே ஒரு அத்திமரத்தை அவர் கண்டு, அதினிடத்தில்போய், அதிலே இலைகளையே அன்றிக் கனிகளைக் காணாமல் இருக்கிறபொழுது, அவர் அதை நோக்கி, இனிமேல் ஒருக்காலும் உன்னில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்று சொன்னார்; [10]உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.

௨௰ சீஷர்கள் அதைக் கண்டு, ஐயோ! இந்த அத்திமரம் எப்படிச் சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்று என்று ஆச்சரியத்தோடே சொன்னார்கள்.

௨௧ இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: [11]நீங்கள் சந்தேகப்படாமல் [12]விசுவாசித்தால், இந்த அத்திமரத்தில் சம்பவித்ததை நீங்கள் செய்வதும் அல்லாமல், [13]நீங்கள் இந்த மலையை நோக்கி, எழும்பிச் சமுத்திரத்திலே தள்ளப்படுவாயாக என்று சொன்னால், உடனே அப்படி ஆகுமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௨ அல்லாமலும் [14]செபத்திலே நீங்கள் எதைக் கேட்டாலும் விசுவாசித்தீர்களானால் அதைப் பெறுவீர்கள் என்றார்.

௨௩ ¶ [15]அவர் தேவாலயத்தில் வந்து உபதேசம் பண்ணுகிறபொழுது, பிரதான ஆசாரியரும் சனங்களின் மூப்பரும் அவரிடத்தில் வந்து, [16]எந்த அதிகாரத்தினாலே நீர் இவைகளைச் செய்கிறீர்? இப்படிப்பட்ட அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் ஆர் என்றார்கள்.

௨௪ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்பேன்; அதை நீங்கள் எனக்குச் சொன்னீர்களானால், நான் இவைகளைச் செய்கிற அதிகாரம் இன்னதென்று நானும் உங்களுக்குச் சொல்லுவேன்.

௨௫ யோவான் கொடுத்த ஞானஸ்நானம் ஆரால் உண்டாயிருந்தது? பராபரனாலோ மனிதரா

கி. பி. ௩௩

[1] மத். ௨ ௨௩ லூக் ௭ ௰௬ யோவா. ௬ ௰௪ ௭. ௪௰. ௯ ௰௭
[2] மாற் ௰௧ ௰௧ லூக ௰௯ ௪௫ யோவா ௨ ௰௩
[3] ௫ மோ ௰௪ ௨௫
[4] ஏசா ௫௬ ௭
[5] எரே ௭ ௰௧ மாற் ௰௧ ௰௭ லூக் ௰௯ ௪௬
[6] சங் ௮ ௨
[7] மாற் ௰௧ ௰௧ யோவா ௰௧ ௰௮
[8] மாற். ௰௧ ௰௨
[9] மாற். ௰௧ ௰௩
[10] மாற ௰௧ ௨௰
[11] யாக் ௧ ௬
[12] மத் ௰௭ ௨௰.
[13] லூக் ௰௭ ௬
[14] மத் ௭ ௭ மாற ௰௧, ௨௪ லூக் ௰௧ ௯ யாக ௫ ௰௬. ௧ யோ ௩ ௨௨ ௫. ௰௪
[15] மாற் ௰௧ ௨௭ லூக் ௨௰ ௧
[16] ௨ மோ ௨ ௰௪ அப ௪ ௭ ௭ ௨௭

லோ, அதைச் சொல்லுங்கள் என்றார்; அவர்களோ, அது பராபரனால் உண்டாயிற்று என்றோமானால், இவர் ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்பார்.

௨௬ அது மனிதரால் உண்டாயிற்று என்றோமாகில், சனங்கள் எல்லாரும் [1]யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறபடியினாலே, அவர்களுக்குப் பயப்படுகிறோம் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணி,

௨௭ பின்பு இயேசுவானவரை நோக்கி, எங்களுக்குத் தெரியாது என்றார்கள்; அப்பொழுது அவரும் அவர்களுடனே சொன்னது: நான் இவைகளைச் செய்கிற அதிகாரம் இன்னதென்று நானும் உங்களுக்குச் சொல்லமாட்டேன்.

௨௮ ¶ ஆகிலும் உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது? ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் உண்டு; அவர்களில் மூத்தவனிடத்தில் அவன் வந்து, மகனே, நீ இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் போய் வேலைசெய் என்றான்.

௨௯ அதற்கு அவன், போகமாட்டேன் என்றான்; பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

௩௰ தகப்பன் இளையவனிடத்திலும் வந்து அப்படித்தானே சொன்னான்; அதற்கு அவன், ஐயா உடனே போகிறேன் என்று சொல்லியும் போகவில்லை.

௩௧ இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தான் என்று அவர் கேட்டபொழுது, மூத்தவனே செய்தான் என்றார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதாவது: [2]ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே பராபரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௨ எப்படியென்றால் [3]யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; [4]ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும் பின்பு அவனை விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப்படாமல் இருக்கிறீர்கள்.

௩௩ ¶ [5]வேறு உவமையைக் கேளுங்கள்; ஒரு வீட்டு எசமான் உண்டு; அவன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றி வேலி அடைத்து, அதில் ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, பின்பு அதைத் தோட்டக்காரர் வசமாய் விட்டு, [6]புறத்தேசத்திற்குப் போனான்.

௩௪ [7]கனிகாலம் சமீபமானபொழுது, கனிகளை வாங்கிக்கொண்டு வரும்படிக்குத் தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரர் இடத்தில் அனுப்பினான்.

௩௫ [8]தோட்டக்காரரோ, அவன் ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனை வெட்டி, மற்றொருவன்மேல் கல்லெறிந்து கொன்றார்கள்.

௩௬ மறுபடியும் எசமான் முந்தினவர்களிலும் அதிகமான வேறு ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள்.

௩௭ கடைசியிலே அவன், என்னுடைய குமாரனுக்கு அஞ்சுவார்களென்று எண்ணி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

௩௮ தோட்டக்காரரோ குமாரனைக் கண்டபொழுது, [9]இவன் சுதந்தரவாளி, [10]இவனைக் கொன்று இவனுடைய சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு,

௩௯ [11]அவனைப் பிடித்துத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.

கி. பி. ௩௩.

[1] மத ௰௪ ௫ மாற் ௬. ௨௰, லூக் ௨௰ ௬

[2] லூக் ௭ ௨௯, ௩௰

[3] மத ௩ ௨

[4] லூக் ௩ ௰௨

[5] சங ௮௰ ௮ உன்னத ௮ ௰௧ ஏசா ௫ ௧ எரே ௨ ௨௧ மாற் ௰௨ ௧ லூக் ௨௰ ௯.

[6] மத ௨௫ ௰௪, ௰௫

[7] உன்னத ௮ ௰௧, ௰௨

[8] ௨ நாளா ௨௪ ௨௧ ௩௬ ௰௬ நெகே ௯ ௨௬ மத ௫ ௰௨ ௨௩ ௩௪, ௩௭ அப ௭ ௫௨ ௧ தெச ௨ ௰௫ எபி ௰௧ ௩௬, ௩௭

[9] சங ௨ ௮ எபி ௧ ௨

[10] சங ௨ ௨, ௩ மத் ௨௬ ௪ ௨௭ ௧, ௨ யோவா ௰௧ ௫௩ அப ௪ ௨௭ ௨௮

[11] மத ௨௬ ௫௰ மாற் ௰௪ ௪௬ லூக் ௨௨ ௫௪ யோவா ௰௮ ௰௨ அப ௨ ௨௩

௪௰ ஆகையால் திராட்சத்தோட்டத்திற்கு எசமான் வரும்பொழுது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.

௪௧ அதற்கு அவர்கள் சொன்னது: [1]அவன் அந்தப் பொல்லாதவர்களைக் கடினமாய் அழித்து, [2]தகுதியான காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே தோட்டக்காரர் வசமாய்த் திராட்சத் தோட்டத்தை விடுவான் என்றார்கள்.

௪௨ இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதாவது: [3]வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று; அது பராபரனாலே ஆயிற்று; அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கின்றதென்று வேதத்திலே நீங்கள் ஒருக்காலும் வாசித்ததில்லையா?

௪௩ [4]அப்படியிருக்க, பராபரனுடைய இராசசியம் உங்களில் இருந்து நீக்கப்பட்டு, அதின் கனிகளைத் தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௪ அன்றியும் [5]இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கப்படுவான்; [6]இதுவோ எவன்மேல் விழுமோ அவனை நொறுங்கடிக்கும் என்றார்

௪௫ ¶ பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துப் பேசினார் என்று அறிந்து,

௪௬ அவரைப் பிடிக்க மனதாய் இருந்தார்கள்; ஆகிலும், சனங்கள் அவரைத் [7]தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினாலே அவர்கள் சனங்களுக்குப் பயந்து (அப்படிச்செய்யாமல் இருந்தார்கள்)

௨௨. அதிகாரம்.

௧. இராசகுமாரனுடைய கலியாண உவமை. ௯. புறச்சாதியாகள் அழைக்கபபட்டது ௰௨. கலியாண வஸ்திரம் இல்லாதிருந்தவனுக்கு உண்டான தண்டனை ௰௫. இராயனுக்கு வரிசெலுத்தவேண்டியதெனபது. ௨௩ கிறிஸ்து மரித்தோர் உயிர்த்தெழுதலைக்குறித்துச் சதுசேயருக்கு நியாயஞ்சொல்லி, ௩௪ பிரதான கற்பனை இன்னதென்று நியாயசாஸ்திரிக்கு உத்தரவுகொடுத்து, ௪௧ மேசியாவைக்குறித்துப பரிசேயரிடத்தில் விசாரித்தது.

கி. பி. ௩௩.

இயேசுவானவர் மறுபடியும் உவமைகளாய் அவர்களுடனே சொன்னதாவது:

௨ [8]பரலோக இராச்சியத்தின் (ஆளுகை) தன் குமாரனுக்குக் கலியாணம்செய்த இராசனுடைய (நடக்கைக்கு) ஒப்பாயிருக்கின்றது.

௩ அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படிக்கு அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ, வரமாட்டோம் என்றார்கள்.

௪ மறுபடியும் அவன் வேறே ஊழியக்காரரை நோக்கி, அழைக்கப்பட்டவர்களிடத்திற்கு நீங்கள் போய், என் விருந்தை எத்தனம் பண்ணினேன், [9]என் எருதுகளும் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டன, எல்லாம் எத்தனமாய் இருக்கின்றது, கலியாணத்திற்கு வாருங்கள் என்று சொல்லுங்கள் என்று அனுப்பினான்.

௫ அவர்களோ அதை எண்ணாமல், ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும் போய்விட்டார்கள்.

௬ மற்றவர்களோ அவனுடைய ஊழியக்காரரைப்பிடித்து நிந்தித்துக் கொலைசெய்தார்கள்.

௭ [10]இராசா அதைக் கேட்டுக் கோபம் அடைந்து, தன் சேனைகளை அனுப்பி, (அவர்களால்) அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்தான்.

௮ அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரைநோக்கி, கலியாணவிருந்து எத்தனமாய் இருக்கின்றது; [11]அழைக்கப்பட்டவர்களோ

[1] லூக் ௨௰ ௰௬

[2] லூக் ௨௧ ௨௪ எபி ௨ ௩. அப ௰௩ ௪௬ ௰௫ ௭ ௰அ ௭ ௨அ ௨அ ௨ரோ ௩ ௰௧.

[3] சங் ௱௰அ ௨௨ ஏசா ௨அ ௰௬ மாற ௰௨ ௰ லூக் ௨௰ ௰௭ அப ௪ ௰௧ எபே ௨ ௨௰ ௧பே ௨ ௬,௭

[4] மத ௮ ௰௨

[5] ஏசா ௮ ௰௪, ௰௫ சகரி ௰௨ ௩ லூக் ௨௰ ௰அ ௨ரோ ௯ ௩௩ ௧பே ௨ ௮

[6] ஏசா ௬௰ ௰௨

[7] தானி ௨ ௪௪ ௰௧ ௩௯ லூக் ௭ ௰௬ யோவா. ௭ ௪௰

[8] லூக் ௰௪ ௰௬ வெளி ௰௯ ௭,௯

[9] நீதி ௯ ௨

[10] தானி ௯ ௨௬ லூக் ௰௯, ௨௭

[11] மத் ௰ ௰௩ அப ௰௩ ௪௬

அதற்குப் பாத்திரர் அல்லாதிருந்தார்கள்.

௯ ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளில் போய், அகப்படுகிற யாவரையும் கலியாண விருந்துக்கு அழைத்து வாருங்கள் என்றான்.

௰ அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப்போய், அகப்பட்ட பொல்லாதவர்களையும் நல்லவர்களையும் கூட்டிவந்தார்கள்; விருந்துச் சாலை பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது.

௰௧ பின்பு பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கும்படிக்கு இராசா பிரவேசித்தபொழுது, [2]கலியாண வஸ்திரத்தைத் தரித்திராத ஒருவனை அங்கே கண்டு,

௰௨ சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரம் இல்லாதவனாய் இங்கே எப்படிப் பிரவேசித்தாய் என்று சொன்னபொழுது, அவன் பேசாமல் இருந்தான்.

௰௩ அப்பொழுது இராசா ஊழியக்காரரை நோக்கி, [3]இவனுடைய கால்களையும் கைகளையும் கட்டி, இவனை எடுத்துப்போய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற மிகுந்த இருளிலே போடுங்கள் என்று கட்டளையிட்டான்.

௰௪ அந்தப்படியே [4]அநேகர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள், சிலர்மாத்திரம் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றார்.

௰௫ ¶ அப்பொழுது [5]பரிசேயர் போய், வசனங்களில் அவரை அகப்படுத்தும்படிக்கு யோசனை பண்ணி,

௰௬ தங்கள் சீஷர்களையும் ஏரோதேயின் மனிதர்களையும் அவரிடத்திற்கு அனுப்பினார்கள்; (அவர்கள் வந்து) போதகரே, நீர் சத்தியமுள்ளவருமாய், பராபரனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவருமாய், மனிதருடைய முகத்தைப் பாராமல் இருக்கிறபடியால், ஒருவரையும் குறித்துக் கவையில்லாதவருமாய் இருக்கிறீர் என்று அறிந்திருக்கிறோம்.

௰௭ ஆதலால் உமக்கு எப்படித் தோன்றுகின்றது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமாய் இருக்கின்றதோ, இல்லையோ, அதை எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

௰௮ இயேசுவானவர் அவர்களுடைய துர்க்குணத்தை அறிந்து, வஞ்சகரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

௰௯ வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு *தெநாரியபணத்தை அவருக்குக் கொடுத்தார்கள்.

௨௰ அப்பொழுது அவர் சொன்னது: இந்தச் சொரூபமும் மேல்எழுத்தும் யாருடையது என்றார்; இது இராயனுடையது என்றார்கள்.

௨௧ அவர் சொன்னது: அப்படியானால் [6]இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

௨௨ அவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, அவரை விட்டுப் போனார்கள்.

௨௩ ¶ [7]உயிரோடெழுந்திருக்கும் மறுமை இல்லை என்று சொல்லுகிற சதுசேயர் [8]அந்நாளிலே அவரிடத்தில் வந்து,

௨௪ போதகரே, [9]புருஷன் ஒருவன் பிள்ளைகள் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவனுக்குச் சந்ததி உண்டாகும்படிக்கு, அவனுடைய மனைவியை விவாகம் பண்ணவேண்டுமென்று மோசே சொன்னாரே.

௨௫ அப்படியானால் எங்களிடத்தில் சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; அவர்களில் மூத்தவன் விவாகம்பண்ணி, சந்ததி இல்லாமல் மரித்து, தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டான்.

---

[1] மத் ௰௩ ௩௮, ௪௭

[2] ௨ கொரி ௫ ௩ எபே ௪ ௨௪ கொலோ ௩ ௯, ௰௨ வெளி ௩ ௪ ௰௬ ௰௫ ௰௯ ௮

[3] மத் ௮ ௰௨

[4] மத் ௨௰ ௰௬

[5] மாற் ௰௨ ௰௩ லூக் ௨௰ ௨௰

* மூன்றேமுக்கால் பணம் கிரயமுள்ளது ௨௰ ௨ காண்க

[6] மத் ௰௭ ௨௫ உரோ ௰௩ ௭

[7] அப் ௨௩ ௮

[8] மாற் ௰௨ ௰௮ லூக் ௨௰ ௨௭

[9] ௫ மோ ௨௫ ௫

௨௬ இப்படி இரண்டாம் சகோதரன் முதல் *ஏழாம் சகோதரன் வரைக்கும் (அவளையே விவாகம் பண்ணிய பிள்ளையில்லாமல் மரித்தார்கள்.)

௨௭ எல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.

௨௮ அப்படி அவ்வேழுபேரும் அவளை விவாகம்பண்ணினபடியால், உயிரோடெழுந்திருக்கும் காலத்திலே அவள் அவர்களில் எவனுக்கு மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள்.

௨௯ இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொன்னதாவது: [1]வேத எழுத்துக்களையும் பராபரனுடைய பலத்தையும் நீங்கள் அறியாதிருக்கிறபடியால் தப்பாய் நினைக்கிறீர்கள்.

௩௰ [2]மறுமையிலே பெண்கொள்வதும் கொடுப்பதும் இராது; அவர்கள் பரலோகத்திலே பராபரனுடைய தூதரைப்போல் இருக்கிறார்கள்.

௩௧ மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக் குறித்தோவெனில், [3]நான் ஆபிரகாமினுடைய தேவனுமாய், ஈசாக்கினுடைய தேவனுமாய், யாக்கோபினுடைய தேவனுமாய் இருக்கிறேன் என்று,

௩௨ பராபரனாலே உங்களுக்கு உரைக்கப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லையோ? அவர் மரித்தோருடைய தேவனாயிராமல், சீவனுள்ளோருடைய தேவனாகவே இருக்கிறார் என்றார்.

௩௩ சனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்டு, அதைக்குறித்துப் [4]பிரமித்துக்கொண்டார்கள்.

௩௪ ¶ [5]அவர் சதுசேயர் பேசாமல் இருக்கும்படி செய்ததைப் பரிசேயர் கேட்டு அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

௩௫ [6]அவர்களில் நியாய சாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படிக்கு,

௩௬ போதகரே, வேதத்திலே எது பிரதானமான கற்பனையாய் இருக்கின்றது என்று கேட்டான்.

௩௭ இயேசுவானவர் சொன்னது: [7]உன் தேவனாகிய பராபரனில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூர்வாயாக,

௩௮ என்பது முதலாவது பிரதானமான கற்பனையாய் இருக்கின்றது.

௩௯ அதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், [8]பிறனிடத்தில் உன்னைப்போல அன்புகூர்வாயாக என்பதே.

௪௰ [9]இவ்விரண்டு கற்பனைகளில் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன என்றார்.

௪௧ ¶ [10]மேலும் பரிசேயர் கூடியிருக்கையில், இயேசுவானவர் அவர்களை நோக்கி,

௪௨ கிறிஸ்துவைக்குறித்து உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது? அவர் யாருடைய குமாரனென்று கேட்டார்; அவர் தாவீதின் குமாரன் என்றார்கள்.

௪௩ இயேசுவானவர் சொன்னது: [11]அப்படியானால் நான் உம்முடைய சத்துருக்களை உமது பாதப்படியாக்கிப் போடுகிறவரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உளுக்காரும் என்று பராபரன் என் கர்த்தருடனே சொன்னார் என்று,

௪௪ தாவீது (பரிசுத்த) ஆவியினாலே சொல்லி, (இவ்விதமாய்) அவரைக் கர்த்தரென்று சொல்லியிருக்கிறது எப்படி?

௪௫ தாவீது அவரைக் கர்த்தரென்று சொல்லியிருக்க, அவர் எப்படி அவனுடைய குமாரனாய் இருப்பார் என்றார்.

௪௬ [12]அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் ஒரு வார்த்தையையும்

கி. பி. ௩௩.

* அல்லது ஏழு பேர்மட்டும்

[1] யோவா ௨௰ ௯

[2] ௧ யோ ௩ ௨

[3] ௨ மோ. ௩ ௬. மசு மாற் ௰௨ உசு லூக் ௨௰ ௩௭ அப. ௭ ௩௨ எபி ௰௧ ௰௬

[4] மத ௭ ௨௮

[5] மாற ௰௨ ௨௮

[6] லூக் ௰ ௨௫

[7] ௫ மோ ௬ ௫ ௰ ௰௨ ௩௰ ௬. லூக் ௰ ௨௭

[8] ௩ மோ ௰௯ ௰௮ மத ௰௯ ௰௯ மாற ௰௨ ௩௧ லூக் ௰ ௨௭ ரோ ௰௩ ௯ காலா ௫ ௰௪ யாக் ௨ ௮

[9] மத் ௭ ௰௨ ௧ தீமோ ௧ ௫

[10] மாற் ௰௨ ௩௫ லூக் ௨௰ ௪௧

[11] சங ௱௰ ௧ அப ௨ ௩௪ ௧ கொரி ௰௫ ௨௫ எபி ௧ ௰௩ ௰௩

[12] லூக் ௰௪ ௬

சொல்லத் திராணியிருந்ததில்லை; [1]அந்நாள் முதற்கொண்டு ஒருவரும் அவரிடத்தில் வினாக்களைக் கேட்கத் துணிந்ததுமில்லை.

௨௩. அதிகாரம்.

௧. கிறிஸ்து வேதபாரகர், பரிசேயருடைய கெட்ட நடக்கைகளைப் பின்பற்றாமல் அவர்களின் நல்ல உபதே[illegible]ளைக் கைக்கொள்ள வேண்டியதென்று ச[illegible]க்குப் போதித்தது, ௫ அவர்களுடைய பெருமையைக்குறித்துத் தம்முடைய சீஷர்கள் எச்சரிக்கையாயிருக்கக் கற்பித்தது. ௰௩. அவர்களுடைய மாயத்தையும், குருட்டாட்டத்தையும் குறித்து அவர்களுக்கு எட்டுவகை வேதனைகளைக் கூறி, ௩௪. எருசலேமின் அழிவை முன்னறிவித்தது

அப்பொழுது இயேசுவானவர் சனங்களுக்கும் தம்முடைய சீஷருக்கும் சொன்னதாவது:

௨ [2]வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் இருக்கிறவர்கள்.

௩ ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு நடக்கக்கடவீர்கள்; அவர்களுடைய கிரியைகளின்படியோ செய்யாமல் இருங்கள்; என்னத்தினாலெனில், [3]அவர்கள் சொல்லியும் செய்யாமல் இருக்கிறார்கள்.

௪ அல்லாமலும் [4]அவர்கள் பாரமாயும், சுமப்பதற்கு அரிதாயும் இருக்கிற சுமைகளைக்கட்டி, மனிதருடைய தோள்களின்மேல் வைக்கிறார்கள்; தாங்களோ அவைகளை ஒரு விரலினாலும் அசைக்க மனமில்லாமல் இருக்கிறார்கள்.

௫ [5]தங்கள் கிரியைகள் யாவையும் அவர்கள் மனிதரால் காணப்படும்படிக்குச் செய்கிறார்கள்; [6]கற்பனைகள் எழுதியிருக்கிற நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை விஸ்தாரம்பண்ணி,

௬ [7]விருந்துகளில் முதலிடத்தில் இருக்கவும், செபஆலயங்களில் முதல் ஆசனங்களில் இருக்கவும்,

௭ சந்தைகளில் (மற்றவர்களால்) வாழ்த்துதல் அடையவும், இரபீ இரபீ என்று அழைக்கப்படவும் விரும்புகிறார்கள்.

௮ [8]நீங்களோ இரபீ என்று அழைக்கப்படக் கூடாது; என்னத்தினாலெனில், கிறிஸ்து என்பவர் ஒருவரே உங்களுக்குக் குருவாய் இருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.

௯ மேலும் பரமண்டலத்தில் இருக்கிறவர் ஒருவரே உங்களுக்குப் பிதாவாய் இருக்கிறார்; [9]ஆகையால் நீங்கள் பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று அழைக்கக் கூடாது.

௰ அல்லாமலும் கிறிஸ்து என்பவர் ஒருவரே உங்கள் குருவாய் இருக்கிறார்; ஆகையால் நீங்கள் உங்களைக் குருக்களென்று அழைக்கப்படக் கூடாது.

௰௧ [10]தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

௰௨ [11]ஆதலால் உங்களில் பெரியவன் உங்கள் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்.

௰௩ ¶ [12]வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், மனிதர் முன்பாக நீங்கள் பரலோக இராச்சியத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்களோ அதில் பிரவேசிக்கிறதில்லை; பிரவேசிக்க மனதாய் இருக்கிறவர்கள் பிரவேசியாதபடிக்கும் செய்கிறீர்கள்.

௰௪ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலென்றால், [13]நீங்கள் விஸ்தாரமாய்ச் செபமந்திரங்களைச் சொல்லுகிறோம் என்று சொல்லி, கைம்பெண்களுடைய பொருள்களைப் பட்சிக்கிறீர்கள்; அதின் நிமித்தம்

கி. பி. ௩௩.

1 மாற் ௰௨. ௩௪ லூக் ௨௰. ௪௰
2 நெகே ௮. ௪, ௮ மல்கி ௨. ௭ மாற் ௰௨. ௩௮ லூக் ௨௰. ௪௬
3 உரோ ௨. ௰௯, ௨௰, ௨௧
4 லூக் ௰௧. ௪௬ அப ௰௫. ௰ காலா ௬. ௰௩
5 மத் ௬. ௧, ௨, ௫, ௰௬.
6 ௪ மோ ௰௫. ௩௮ ௫ மோ ௬. ௮ ௨௨. ௰௨ வாக் ௩. ௩
7 மாற் ௰௨. ௩௯ லூக் ௰௧. ௪௩ ௨௰. ௪௬ ௩ யோ ௯
8 யாக ௩. ௧ ௨ கொரி ௧. ௨௪ ௧ பே ௫. ௩
9 மல்கி ௧. ௬
10 யோபு ௨௨. ௨௯ வாக் ௰௫. ௩௩ ௨௯. ௨௩ லூக் ௰௪. ௰௧ ௰௮. ௰௪ யாக் ௪. ௬ ௧ பே ௫. ௫.
11 மத் ௨௰. ௨௬, ௨௭
12 லூக் ௰௧. ௫௨
13 மாற் ௰௨. ௪௰ லூக் ௨௰. ௪௭ ௨ தீமோ ௩. ௬ தீத்து ௧. ௰௧

அதிக ஆக்கினை உங்களுக்குக் கிடைக்கும்.

௰௫ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; என்னத்தினாலெனில், ஒருவனை (யூத) மார்க்கத்தான் ஆக்கும்படிக்கு நீங்கள் சமுத்திரத்தையும் பூமியையும் கடந்து திரிகிறீர்கள்; அவன் அப்படிப்பட்டவனானபொழுது, நீங்கள் உங்களைப்பார்க்கிலும் அவனை இரட்டிப்பாய் நரகத்துக்குரியவனாக்குகிறீர்கள்.

௰௬ ¶ [1]குருடராய் வழிகாட்டுகிறவர்களே, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; [2]ஒருவன் தேவாலயத்தின்மேல் சத்தியம் பண்ணினால் அது செல்லாது; ஒருவன் தேவாலயத்திலுள்ள பொன்மேல் சத்தியம் பண்ணினானாகில் அவன் அந்தப்படியே செய்யவேண்டும் என்கிறீர்கள்.

௰௭ மதிகேடரே, குருடரே, எது பெரிது? பொன்னோ பொன்னைப் பரிசுத்தமாக்குகிற [3]தேவாலயமோ?

௰௮ அன்றியும் ஒருவன் பீடத்தின்மேல் சத்தியம் பண்ணினால் அது செல்லாது; ஒருவன் அதிலுள்ள காணிக்கையின்மேல் சத்தியம் பண்ணினானாகில், அவன் அதின்படியே செய்யவேண்டும் என்கிறீர்கள்.

௰௯ மதிகேடரே, குருடரே, எது பெரிது? [4]காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பீடமோ?

௨௰ ஆகையால் பீடத்தின்மேல் சத்தியம் பண்ணுகிறவன் அதின்மேலும் அதில் இருக்கிற எல்லாப்பொருள்களின் மேலும் சத்தியம் பண்ணுகிறான்.

௨௧ தேவாலயத்தின்மேல் சத்தியம் பண்ணுகிறவன் அதின்மேலும் [5]அதில் வாசமாயிருக்கிறவர் மேலும் சத்தியம் பண்ணுகிறான்.

௨௨ அல்லாமலும் வானத்தின்மேல் சத்தியம் பண்ணுகிறவன் [6]பராபரனுடைய பத்திராசனத்தின்மேலும் அதில் வீற்றிருக்கிறவர்மேலும் சத்தியம் பண்ணுகிறான்.

௨௩ ¶ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; என்னத்தினாலெனில், [7]நீங்கள் [illegible]ளசியிலும வெந்தயத்திலும் சீரகத்திலும் பத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்து, [8]வேதத்தில் (சொல்லியிருக்கிற) அதிக கனமான காரியங்களாகிய நீதியையும இரக்கத்தையும் உண்மையையும் விட்டு விட்டீர்கள்; இவைகளையே நீங்கள் நடப்பித்து அவைகளையும விட்டு விடாமல் இருக்கவேண்டும்.

௨௪ ஆ குருடராய் வழிகாட்டுகிறவர்களே, கொசுகில்லாதபடிக்குத்(தண்ணீரை)வடிகட்டி ஒட்டகத்தையோ விழுங்குகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

௨௫ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; என்னத்தினாலெனில், [9]போசனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தை நீங்கள் சுத்தம் செய்கிறீர்கள்; அவைகளின் உள்ளோ கொள்ளையும் அநீதியும் நிறைந்திருக்கின்றன.

௨௬ குருடனான பரிசேயனே, முதலாவது போசனபான பாத்திரங்களின் உள்ளத்தைச் சுத்தம் பண்ணுவாயாக; அப்பொழுது அவைகளின் வெளிப்புறமும் சுத்தமாயிருக்கும்.

௨௭ ¶ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், [10]நீங்கள் சாந்து பூசப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்; அவைகள் புறம்பே அலங்காரமாய் இருக்கின்றன; உள்ளேயோ மரித்தோருடைய எலும்புகளும் சகலவிதமான அசுத்தமும் நிறைந்திருக்கின்றன.

கி பி. ௩௩.

[1] மத் ௰௫ ௰௪ ௨௩ ௨௪

[2] மத ௫ ௩௩, ௩௪

[3] ௨ மோ ௩௰ ௨௯

[4] ௨ மோ ௨௯ ௩௭

[5] ௧ இரா ௮ ௰௩ ௨ நாளா ௬ ௨ சங ௨௬ ௮ ௱௩௨ ௰௪

[6] மத ௫ ௩௪ சங. ௰௧ ௪ அப ௭ ௪௯

[7] லூக ௰௧ ௪௨

[8] ௧ சாமு ௰௫ ௨௨ ஓசே ௬ ௬ மீகா ௬ ௮ மத ௯ ௰௩ ௰௨ ௭

[9] மாற் ௭ ௪ லூக். ௰௧ ௩௯

[10] லூக் ௰௧ ௪௪ அப. ௨௩ ௩.

கி. பி. ௩௩.

௨௮ அப்படிப்போல நீங்களும் புறம்பே மனிதருக்கு நீதிமான்களென்று காணப்படுகிறீர்கள்; உங்கள் உள்ளத்திலோ வஞ்சகமும் அக்கிரமமும் நிறைந்திருக்கின்றன.

௨௯ [1]வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், நீங்கள் தீர்க்கதரிசிகளுடைய சமாதிகளைக் கட்டி, நீதிமான்களின் கல்லறைகளைச் சிங்காரித்து,

௩௰ எங்கள் பிதாக்களுடைய நாள்களில் இருந்தோமானால், அவர்களோடேகூட நாங்கள் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தைச் சிந்தமாட்டோம் என்கிறீர்கள்.

௩௧ ஆகையால் நீங்கள் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களின் [2]புத்திரரென்று உங்களைக் குறித்து நீங்கள் தாமே சாட்சிகொடுக்கிறீர்கள்.

௩௨ அப்படியிருக்க, [3]நீங்கள் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்.

௩௩ சர்ப்பங்களே, [4]விரியன் பாம்புகளின் (குட்டிகளே) நீங்கள் நரகஆக்கினைக்கு எப்படித் தப்பிப்போவீர்கள்?

௩௪ ¶ ஆதலால் கேளுங்கள், [5]நான் தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்திற்கு அனுப்புகிறேன், [6]அவர்களில் சிலரை நீங்கள் கொன்று சிலுவைகளிலும் அறைந்து, [7]சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊரூருக்கும் துன்பப்படுத்துவீர்கள்

௩௫ [8]நீதிமானாகிய ஆபேலின் இரத்தமுதல், [9]நீங்கள் தேவாலயத்துக்கும் பீடத்துக்கும் நடுவே கொலைசெய்த பரகியாவின் குமாரனான சகரியாவின் இரத்தம் வரைக்கும், [10]பூமியிலே சிந்தப்பட்ட நீதியான இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும்படிக்கு (அப்படிச் செய்வீர்கள்.)

௩௬ அவையெல்லாம் இந்தச் சந்ததியின்மேலே வருமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௭ ஆ [11]எருசலேம் பட்டணத்தாரே, எருசலேம் பட்டணத்தாரே, உங்களிடத்தில் அனுப்பப்பட்டவர்கள்மேல் [12]கல் எறிந்து தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறவர்களே, [13]கோழி தன் குஞ்சுகளைச் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் விதமாய் அநேகந்தரம் [14]உங்களைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளவிரும்பினேன்; நீங்களோ வரமாட்டோம் என்கிறீர்கள்.

௩௮ (ஆகையால்) உங்கள் வாசஸ்தலம் பாழாக்கப்படும்.

௩௯ [15]அல்லாமலும் பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்படக்கடவரென்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று திருவுளம்பற்றினார்.

௨௪. அதிகாரம்.

௧ கிறிஸ்து தேவாலயத்தின் அழிவையும், ௩ அந்த அழிவு சம்பவிக்கிறதற்கு முன் உண்டாகும் உபத்திரவங்களையும், ௨௯ தாம் நியாயந்தீர்க்கும்படி வரும்போது உண்டாகும் அடையாளங்களையும் முன்னறிவித்தது, ௩௬. அந்த நாளும், நாழிகையும் தெரியாததினாலே, ௪௨ எந்நேரமும் எசமானுடைய வருகையை எதிர்நோக்கிய நற்பணிவிடைக்காரர்களைப்போல எச்சரிக்கையாய்க் காத்திருக்கப் போதித்தது

[16]இயேசுவானவர் தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டு வருகிறபொழுது, அவருடைய சீஷர்கள் சேர்ந்து, தேவாலயம் கட்டியிருக்கிற வகைகளை அவருக்குக் காண்பித்தார்கள்.

௨ இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது: இவைகள் எல்லாவற்றையும் பார்க்கிறீர்களல்லவோ? [17](இவைகளில்) ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் இங்கே

---

1 லூக் ௰௧ ௪௭.
2 அப் ௭ ௫௧, ௫௨ ௧ தெச ௨ ௰௫
3 ௧ மோ ௰௫ ௰௬ ௧ தெச ௨ ௰௬
4 மத் ௩. ௭ ௰௨ ௩௪
5 மத் ௨௧ ௩௪, ௩௫ லூக் ௰௧ ௪௯
6 அப் ௫ ௪௰ ௭ ௫௮, ௫௯ ௨௨ ௰௯, ௨௰.
7 மத் ௰ ௰௭ ௨ கொரி ௰௧ ௨௪, ௨௫
8 ௧ மோ ௪ ௮ ௧ யோ ௩ ௰௨.
9 ௨ நாளா ௨௪ ௨௧
10 வெளி ௰௮ ௨௪
11 லூக் ௰௩ ௩௪
12 ௨ நாளா ௨௪ ௨௧
13 சங ௰௭ ௮ ௯௧ ௪
14 ௫ மோ ௩௨ ௰௧, ௰௨
15 சங ௱௰௮ ௨௬ மத் ௨௧ ௯
16 மாற். ௰௩ ௧ லூக் ௨௧ ௫
17 ௧ இரா. ௯ ௭ எரே ௨௬ ௰௮ மீகா ௩ ௰௨ லூக் ௰௯ ௪௪

வைக்கப்படுவதில்லை; எல்லாம் இடிக்கப்படுமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩ ¶ [1]பின்பு அவர் ஒலிவ்மலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்மாத்திரம் அவரிடத்தில் வந்து, [2]இவை எப்பொழுது சம்பவிக்கும்? மேலும் நீர் வருவதற்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் எது? இவைகளை நீர் எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

௪ அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னதாவது: [3]அநேகர் வந்து, என் நாமத்தை எடுத்து, தங்களைக் கிறிஸ்து என்று சொல்லி, [4]அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்

௫ [5]ஆதலால் ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்குப் பாருங்கள்.

௬ அல்லாமலும், யுத்தங்களையும் யுத்தங்களின் நடக்கைகளையும் கேள்விப்படுவீர்கள் அப்பொழுது நீங்கள் கலங்காதபடிக்குப் பாருங்கள்; அவையெல்லாம் சம்பவிக்கவேண்டும், ஆனாலும் முடிவு உடனே வராது.

௭ ஆகையால் [6]ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும், ஒரு இராச்சியம் மற்றொரு இராச்சியத்திற்கும் விரோதமாய் எழும்பும்; பஞ்சங்களும் பெருவாரிக்காய்ச்சல்களும், பூமி அதிர்தல்களும் அங்கங்கே உண்டாகும்.

௮ ஆனாலும் அவையெல்லாம் உபாதிகளுக்கு ஆரம்பமாய் இருக்கும்.

௯ [7]அப்பொழுது உபத்திரவப்படும்படிக்கு உங்களை ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என்னுடைய நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லா உலகத்தாராலும் பகைக்கப்படுவீர்கள்.

௰ அக்காலத்திலே [8]அநேகர் இலச்சை அடைந்து, ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரை ஒருவர் பகைப்பார்கள்.

௰௧ [9]அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி [10]அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்.

௰௨ மேலும் அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு மாறிப்போம்.

௰௩ [11]ஆனாலும் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

௰௪ அல்லாமலும் [12]உலகத்தார் எல்லாருக்கும் சாட்சியாக இராச்சியத்தின் சுவிசேஷம் [13]பூமியில் எங்கும் பிரசங்கிக்கப்படும்; அப்பொழுது முடிவு வரும்.

௰௫ ¶ அப்படியிருக்க [14]இதை வாசிக்கிறவன் சிந்தித்துக்கொள்ளக்கடவன்; [15]பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொன்னாரே, [16]அதை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்பொழுது,

௰௬ யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

௰௭ வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டிலுள்ளவைகளை எடுத்துக்கொண்டு போகும்படிக்கு இறங்காமல் (போகக்) கடவன்.

௰௮ அல்லாமலும் வயலில் இருப்பவன் தன் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு போகும்படிக்கு பின்னிட்டுத் திரும்பாமல் (போகக்) கடவன்.

௰௯ [17]ஐயோ! அந்த நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவம் இருக்கும்

௨௰ மேலும் உலகம் உண்டானது முதற்கொண்டு இதுவரைக்கும் சம்பவியாததுமாய், இனிமேலும் சம்பவியாததுமாய் இருக்கிற [18]மிகுந்த உபத்திரவம் அக்காலத்திலே உண்டாயிருக்கும்.

௨௰௧ ஆதலால் நீங்கள் ஓடிப்போ

கி பி. ௩௩.

1 மாற் ௰௩ ௩
2 ௧ தெச ௫ ௨
3 எரே ௰௪ ௰௪ ௨௩ ௨௧, ௨௫
4 ௰௧ வசனம
5 எபே ௫ ௬, கொலோ ௨ ௮, ௰௮ ௨ தெச ௨ ௩ ௧ யோ ௪ ௧
6 ௨ நாளா ௰௫ ௬ ஏசா ௰௯ ௨ ஆகா ௨ ௨௨ சகரி ௰௪ ௰௩
7 மத் ௰ ௰௭ மாற் ௰௩ ௯ லூக் ௨௧ ௰௨ யோவா ௰௫ ௨௰ ௰௬ ௨ அப ௪ ௨, ௩ ௭ ௫௯ ௰௨ ௧ ௧ பே ௪ ௰௬ வெளி ௨ ௰ ௰௩
8 மத ௰௧ ௬ ௰௩ ௫௭ ௨ தீமோ ௧ ௰௫ ௪ ௰, ௰௬
9 மத் ௭ ௰௫ அப ௨௰ ௨௯ ௨ பே ௨ ௧
10 ௧ தீமோ ௪ ௧ ௰௫ ௨௪ வச மத் ௨௪ ௨௪
11 மத ௰ ௨௨ மாற ௰௩ ௰௩ எபி ௩ ௬, ௰௪ வெளி ௨ ௰
12 மத் ௪ ௨௩ ௯ ௩௫
13 உரோ ௰ ௰௮ கொலோ ௧ ௬ ௨௩
14 தானி ௯ ௨௩, ௨௫
15 மாற ௰௧ ௰௪ லூக ௨௧ ௨௰
16 தானி ௯ ௨௭ ௰௨ ௰௧
17 லூக ௨௧ ௨௩
18 தானி ௯ ௨௬ ௰௨ ௧ யோவே ௨ ௨

வது மாரிகாலத்திலானாலும் ஓய்வுநாளிலானாலும் சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

௨௨ அந்த நாள்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனும் தப்பிப்போவதில்லை; [1]தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாள்கள் குறைக்கப்படும்.

௨௩ [2]அக்காலத்திலே கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, தெரிநதுகொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்க) கூடுமானால், [3]அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக மிகுந்த அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

௨௪ ஆதலால் அக்காலத்திலே ஒருவன் உங்களை நோக்கி, [4]இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கிறார் என்று சொன்னால், நீங்கள் அவனை நம்பாமல் இருப்பீர்களாக.

௨௫ அதை நான் உங்களுக்கு இப்பொழுது முன்னறிவித்தேன்.

௨௬ ஆகையால் அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொன்னால் வெளியே புறப்படாதிருங்கள்

௨௭ இதோ வீட்டின் அறைகளுக்குள் இருக்கிறாரென்றால், அதை நம்பாதிருங்கள். [5]மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் (சீக்கிரமாய்) பிரகாசிக்கிறவிதமாய் மனிதனுடைய குமாரன் வருவான்

௨௮ அல்லாமலும் [6]பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடிவரும்.

௨௯ ¶ அந்த நாள்களிலுள்ள [7]உபத்திரவத்திற்குப் பின்பு, உடனே [8]சூரியன் இருள் அடையும், சந்திரன் பிரகாசம் கொடாமல் இருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்திலுள்ள (மற்ற) வல்லமைகளும் அசைக்கப்படும்.

௩௰ அப்பொழுது [9]மனிதகுமாரனுடைய அடையாளம் வானத்திலே காணப்படும்; அல்லாமலும் மனிதனுடைய குமாரன் வானத்தின்மேகங்களின்மேலே [10]மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வருகிறதைப்பூமியிலுள்ள [11]கோத்திரத்தார் எல்லாரும் கண்டு புலம்புவார்கள்.

௩௧ அல்லாமலும் [12]அவர் தூதரை வலுவாய்த் தொனிக்கும் எக்காளத்துடனே அனுப்புவார்; அவர்கள் வானத்தின் எல்லைகளுக்குள்ளே நாலுதிசைகளிலுமிருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்வார்கள்.

௩௨ ¶ [13]அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதின் கிளை தளிராகி, இலைகளைக் கொடுக்கிறபொழுது, வசந்தகாலம் சமீபமாயிருக்கின்றதென்று அறிந்திருக்கிறீர்கள்.

௩௩ அப்படிப்போல நான் சொன்னவைகள் எல்லாம் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது, [14]சமீபமாகவே *இருக்கிறாரென்று அறியக்கடவீர்கள்.

௩௪ [15]இந்தச் சந்ததி ஒழிந்துபோகும்முன்னே அவையெல்லாம் சம்பவிக்கும் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௫ [16]வானமும் பூமியும் ஒழிந்துபோம்; என் வசனங்களோ ஒழியாமல் இருக்கும்.

௩௬ ¶ [17]அவை சம்பவிக்கும் நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவரேதவிர [18]மற்றொருவனும் அறியமாட்டான்; பரமண்டலங்களிலுள்ள தேவதூதர்களும் அதை அறியார்கள்.

௩௭ நோவாவின் காலத்திலே நடந்ததுபோல, மனிதனுடைய குமாரன் வரும் காலத்திலேயும் நடக்கும்

கி. பி. ௩௩.

[1] ஏசா ௬௫ ௮, ௯ சகரி ௰௪ ௨ ௩

[2] ௫ ௰௧ ௨௪ ௨ தெச ௨ ௯, ௰, ௰௧ வெளி ௰௩ ௰௩

[3] யோவா ௬ ௩௭ ௰ ௨௮ ௨௯ ரோ ௮ ௨௮, ௩௰ ௨ தீமோ ௨ ௰௯

[4] மாற ௰௩ ௨௧ லூக் ௰௭ ௨௩ ௨௪

[5] லூக் ௰௭. ௨௪

[6] யோபு ௩௯ ௩௰ லூக் ௰௭ ௩௭

[7] தானி ௭ ௰௧, ௰௨

[8] ஏசா ௰௩ ௰ ஏசே ௩௨ ௭ யோவே ௨ ௰ ஆமோ ௫ ௰௮ அ ௯ மாற் ௰௩ ௨௪ லூக் ௨௧ ௨௫ அப ௨ ௨௰ வெளி. ௬ ௰௨

[9] தானி ௭ ௰௩

[10] மத் ௰௬ ௨௭ மாற ௰௩ ௨௬ வெளி ௧ ௭

[11] சகரி ௰௨ ௰௨

[12] மத் ௰௩ ௪௧ ௧ கொரி ௰௫ ௫௨ ௧ தெச ௪ ௰௬

[13] லூக் ௨௧ ௨௯

[14] யாக் ௫ ௯

* அல்லது வா திருக்கிறரென்று

[15] மத் ௰௬ ௨௮. ௨௩ ௩௬ மாற் ௰௩ ௩௰ லூக் ௨௧ ௩௨

[16] சங் ௰௨ ௨௬ ஏசா ௫௧ ௬ மத் ௫ ௰௮ மாற ௰௩ ௩௧ லூக் ௨௧ ௩௩ எபி ௧ ௰௧

[17] மாற் ௰௩ ௩௨ சகரி ௰௪ ௭

[18] அப ௧ ௭ ௧ தெச ௫ ௨ ௨ பேது ௩ ௰

௩௮ [1]எப்படியென்றால், சலப்பிரளயத்திற்கு முன்னான நாட்களிலே நோவா பேழைக்குள் பிரவேசித்தநாள்வரைக்கும் சனங்கள் போசனபானம்பண்ணி,

௩௯ பெண் கொண்டு பெண் கொடுத்து (தங்களுக்கு மோசம் வருமென்று) நினையாமல் இருந்தார்கள்; அப்பொழுதே சலப்பிரளயம் வந்து, அனைவரையும் கொண்டு போயிற்று; அதுபோல மனிதனுடைய குமாரன் வரும்பொழுதும் நடக்கும்.

௪௰ அக்காலத்திலே [2]இரண்டு புருஷர் வயலில் இருப்பார்கள்; அவர்களில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான், ஒருவன் தப்பிப்போவான்.

௪௧ இரண்டு பெண்கள் திரிகை திரித்துக்கொண்டிருப்பார்கள்; அவர்களில் ஒருத்தி பிடித்துக்கொள்ளப்படுவாள், ஒருத்தி தப்பிப்போவாள்.

௪௨ ¶ அப்படியிருக்க, [3]உங்கள் எசமான் வரும் நாழிகையை நீங்கள் அறியாதபடியினாலே விழித்திருக்கக்கட[illegible]ள்.

௪௩ [4]திருடன் வரும் சாமத்தை வீட்டெசமான் அறிந்தானானால், அவன் விழித்துக்கொண்டு, தன் வீடு கன்னமிடப்படாதபடிக்குச் செய்திருப்பான் என்று அறிந்திருக்கிறீர்கள்.

௪௪ அப்படியிருக்க, [5]நீங்கள் நினையாத நாழிகையிலே மனிதனுடைய குமாரன் வருவதால், நீங்களும் எத்தனமாய் இருக்கக்கடவீர்கள்.

௪௫ [6]எசமான் தன் வேலைக்காரருக்குத் திட்டமாய்ப் போசனம் கொடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரனாக வைத்த உண்மையும் புத்தியுமுள்ள ஊழியக்காரன் யாவன்?

௪௬ [7]எசமான் வந்து, எந்த ஊழியக்காரனை அப்படிச் செய்யக் காண்பானோ, அவனே பாக்கியவானாய் இருப்பான்.

௪௭ தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை வைப்பானென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௮ அந்த ஊழியக்காரனோ, பொல்லாதவனாய், என் எசமான் திரும்பிவரத் தாமதமாய் இருப்பானென்று எண்ணி,

௪௯ தன்னோடேகூட ஊழியம் செய்கிறவர்களை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசித்துக் குடிக்கிறவனானால்,

௫௰ அந்த ஊழியக்காரன் நினையாதிருக்கிற நாளிலேயும் அவனுக்குத் தெரியாத நேரத்திலேயும் அவனுடைய எசமான் வந்து,

௫௧ அவனைக் கடினமாய் அடித்து, அழுகையும் பற்கடிப்புமுள்ள இடத்திலே வஞ்சகரோடே அவனுடைய பங்கை ஏற்படுத்துவான்.

௨௫. அதிகாரம்.

௧ பத்துக் கன்னிகாஸ்திரிகளையும், ௰௪ தாலந்துகளையுங்குறித்த உவமைகள். ௩௧ கடைசி நியாயத்தீர்ப்பின் விவரங்கள்

அப்பொழுது பரலோக இராச்சியத்தார், [8]தங்கள் தீவத்திகளைப் பிடித்து மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுகிற பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாய் இருப்பார்கள்.

௨ அவர்களில் [9]ஐந்துபேர் புத்தியுள்ளவர்களாயும், ஐந்துபேர் புத்தியீனராயும் இருந்தார்கள்.

௩ புத்தியீனமுள்ளவர்கள் தங்கள் தீவத்திகளை எடுத்தபொழுது, எண்ணெயைக் கூடக் கொண்டுபோகவில்லை.

௪ புத்தியுள்ளவர்களோ தீவத்திகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

௫ மணவாளன் தாமதித்தபொழுது, [10]எல்லாரும் நித்திரை மயக்கம் அடைந்து தூங்கினார்கள்.

இ. பி. ௩௩.

[1] ௧ மோ ௬. ௭. ௭. ௧ லூக் ௰௭ ௨௬ ௧ பே ௩ ௨௰

[2] லூக் ௰௭ ௩௪ ௫.

[3] மத். ௨௫ ௰௩ மாற் ௰௩ ௩௩ ௫ லூக் ௨௧ ௩௬

[4] லூக் ௰௨ ௩௯ ௧ தெச ௫ ௨ ௨ பே ௩ ௰ வெளி ௩ ௩ ௰௬. ௰௫

[5] மத் ௨௫ ௰௩ ௧ தெச ௫. ௬

[6] லூக் ௰௨. ௪௨ அப ௨௰ ௨௮ ௧ கொரி ௪. ௨ எபி ௩ ௫.

[7] வெளி ௰௬ ௰௫

[8] எபே ௫ ௨௯, ௩௰ வெளி ௰௯. ௭, ௨௧ ௯

[9] மத் ௰௩ ௪௭ ௨௨ ௰

[10] ௧ தெச ௫ ௬

௬ அப்படியிருக்கும் காலத்திலே, [1]பாதிஇராத்திரியிலே இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்களென்று கூக்குரல் உண்டாயிற்று.

௭ உடனே அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் [2]தீவர்த்திகளை விளக்கினார்கள்.

௮ (அப்பொழுது) புத்தியீனமுள்ளவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி எங்கள் தீவர்த்திகள் அணைந்துபோகின்றன; ஆகையால் உங்கள் எண்ணெயில்* கொஞ்சம் எங்களுக்குத் தாருங்கள் என்றார்கள்.

௯ அதற்குப் புத்தியுள்ளவர்கள் சொன்னது: நாங்கள் கொடுத்தால் எங்களுக்கும் உங்களுக்கும் குறைச்சல் உண்டாகும்; அப்படியாகாதபடிக்கு நீங்கள் கடைக்காரரிடத்தில் போய், உங்களுக்காக (எண்ணெயைக்) கொள்ளுங்கள் என்றார்கள்.

௰ அந்தப்படி அவர்கள் கொள்ளப்போகிறபொழுது மணவாளன் வந்தார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாணத்திற்குப்போய், (வீட்டில்) பிரவேசித்தார்கள்.

௰௧ [3]உடனே கதவு பூட்டப்பட்டது; பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து, [4]ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.

௰௨ அதற்கு அவர் சொன்னது: [5]உங்களை அறியமாட்டேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰௩ அப்படியிருக்க, [6]மனிதனுடைய குமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாமல் இருக்கிறபடியினாலே, விழித்துக்கொண்டிருக்கக்கடவீர்கள்.

௰௪ ¶ அன்றியும் (பரலோக இராச்சியம்) [7]புறத்தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போக மனதுள்ள மனிதன் தன் ஊழியக்காரரை அழைத்து, [8]தன் ஆஸ்திகளை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்ததுபோல இருக்கும்.

௰௫ [9]அவனுடைய திராணிக்குத் தக்கதாக ஒருவனுக்கு ஐந்து *தாலந்து, †நிறை பொன்னும், ஒருவனுக்கு இரண்டு தாலந்து நிறை பொன்னும், பின்னொருவனுக்கு ஒரு தாலந்து (நிறை பொன்னும்) கொடுத்து, பின்பு உடனே புறத்தேசத்திற்குப் போனான்.

௰௬ ஐந்து தாலந்தைப் பெற்றவன் போய், அவைகளால் வியாபாரம்பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான்.

௰௭ அப்படியேபோல இரண்டு தாலந்தைப் பெற்றவனும் வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.

௰௮ ஒரு தாலந்தைப் பெற்றவனோ போய், நிலத்திலே ஒரு குழியைத் தோண்டி, தன் எசமானுடைய திரவியத்தை அதிலே புதைத்து வைத்தான்.

௰௯ அநேக காலமான பின்பு, அந்த ஊழியக்[illegible]டைய எசமான் திரும்பி வந்து, அவர்களோடே கணக்குப் பார்த்தான்.

௨௰ அப்பொழுது ஐந்து தாலந்தைப் பெற்றவன் சேர்ந்து, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து, ஆண்டவனே, ஐந்து தாலந்தை எனக்கு ஒப்புவித்தீரே, இதோ, அவைகளால் வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

௨௰௧ அப்பொழுது எசமானானவன் அவனை நோக்கி, நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய், [10]அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எசமானுடைய [11]சந்தோஷத்திற்குட் பிரவேசித்து வா என்றான்.

௨௰௨ இரண்டு தாலந்தைப் பெற்

கி. பி. ௩௩.

[1] மத். ௨௪. ௩௧; ௧ தெச. ௪. ௰௬.

[2] லூக். ௰௨. ௩௫.

[3] லூக். ௰௩. ௨௫.

[4] மத். ௭. ௨௧, ௨௨.

[5] சங். ௫. ௫; ஆப. ௧. ௰௩; யோவா. ௯. ௩௧.

[6] மத். ௨௪. ௪௨, ௪௪; மாற். ௰௩. ௩௩, ௩௫; லூக். ௨௧. ௩௬; ௧ கொரி. ௰௬. ௰௩; ௧ தெச. ௫. ௬; ௧ பே. ௫. ௮; வெளி. ௰௬. ௰௫.

[7] லூக். ௰௯. ௰௨.

[8] மத். ௨௧. ௩௩.

[9] மத். ௰௮. ௨௪; ரோ. ௰௨. ௬; ௧ கொரி. ௰௨. ௭, ௰௧, ௨௯; எபே. ௪. ௰௪.

* ஒரு தாலந்து (௫,௭௱௫) ரூபாயாம். ௰௮. ௨௪.

† யூதர்களுக்குள்ளே வழங்கின தாலந்து நிறை பொன் ஒன்றிற்கு ஏறக்குறைய பதினேழாயிரத்தறுநூற்றெண்பது வராகன் ஒப்பாயிருக்கும்.

[10] மத். ௨௪. ௪௭; ௩௪. ௪௯; லூக். ௰௨. ௪௪; ௨௨. ௨௯, ௩௰.

[11] ௨ தீமோ. ௨. ௰௨; எபி. ௰௨. ௨; ௧ பேது. ௧. ௮.

றவனும் சேர்ந்து, ஆண்டவனே, நீர் இரண்டு தாலந்தை எனக்கு ஒப்புவித்தீரே, இதோ, அவைகளால் வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

உ௩ அவனுடனே எசமான் சொன்னது: நல்லது [1]உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எசமானுடைய சந்தோஷத்திற்குட் பிரவேசித்து வா என்றான்.

உ௪ பின்பு ஒரு தாலந்தைப் பெற்றவனும் வந்து, ஆண்டவனே, நீர் விதையாத இடத்திலே அறுக்கிறவருமாய், தெளியாத இடத்தில் சோக்கிறவருமாயிருக்கிற கடினமான மனிதனாய் இருக்கிறீர் என்று அறிந்தேன்

உ௫ ஆகையால் நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்துவைத்தேன்; இதோ, உம்முடையதைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் என்றான்.

உ௬ அவனுக்கு மாறுத்தரமாக எசமான் சொன்னதாவது: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதையாத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளியாத இடத்தில் சேர்க்கிறவனென்றும் நீ அறிந்தாயா?

உ௭ அப்படியானால் நீ என் திரவியத்தை வியாபாரிகளிடத்தில் வைக்கவேண்டியதாய் இருந்தது; அப்பொழுது நான் வந்து, என்னுடையதை வட்டியோடே கூட எடுத்துக்கொள்வேனே என்று சொல்லி,

உ௮ பின்பு [2]உள்ளவன் எவனோ, அவனுக்குக் கொடுக்கப்படும், சம்பூரணமும் அவனுக்கு உண்டாகும்; உள்ளவன் அல்லாதவனிடத்தில் இருக்கிறதும் எடுத்துக் கொள்ளப்படும்.

உ௯ ஆகையால் இவனுடைய கையிலிருக்கிற தாலந்தை நீங்கள் வாங்கி, பத்துத் தாலந்தை உடையவனுக்குக் கொடுங்கள்.

௩௰ அல்லாமலும் அப்பிரயோசனமான இந்த ஊழியக்காரனை [3]அழுகையும் பற்கடிப்புமுள்ள மிகவும் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் என்றான்.

௩௧ ¶ அன்றியும் [4]மனிதனுடைய குமாரன் தமது மகிமையோடே தம்முடைய சகல பரிசுத்த தூதருடனேயுங்கூட வரும்பொழுது, அவர் தமது மகிமையுள்ள பத்திராசனத்தின்மேல் வீற்றிருப்பார்.

௩௨ அப்பொழுது [5]உலகத்தார் எல்லாரும் அவருக்கு முன்பாகக் கூட்டப்படுவார்கள்; [6]மேய்ப்பனவன் ஆடுகளையும் கடாக்களையும் பிரிக்கிறதுபோல, அவர் அவர்களை வெவ்வேறாகப் பிரித்து,

௩௩ ஆடுகளுக்கு ஒப்பானவர்களைத் தமது வலதுபக்கத்திலேயும், கடாக்களுக்கு ஒப்பானவர்களைத் தமது இடது பக்கத்திலேயும் நிறுத்துவார்.

௩௪ ¶ அப்பொழுது இராசாவானவர் தம்முடைய வலது பக்கத்திலே நிற்பவர்களை நோக்கி, [7]நான் பசியாய் இருந்தபொழுது நீங்கள் எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள்; நான் தாகமாய் இருந்தபொழுது என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; [8]நான் அந்நியனாய் இருந்தபொழுது என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்

௩௫ [9]எனக்கு வஸ்திரம் இல்லாதபொழுது எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; நான் வியாதியாய் இருந்தபொழுது எனக்கு உதவி செய்ய வந்தீர்கள்; [10]நான் காவலில் இருந்தபொழுது, என்னைப் பார்க்க வந்தீர்கள்.

௩௬ ஆகையால் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, [11]உலகம் உண்டானது முதல் உங்களுக்காக எத்தனம்பண்ணப்பட்டி

கி. பி. ௩௩

[1] லூக். ௰௬. ௰.
[2] மத். ௰௩. ௰௨. மாற். ௪. ௨௫. லூக். ௮. ௰௮. ௰௯. ௨௬. யோவா. ௰௫. ௨.
[3] மத். ௮. ௰௨. ௨௨. ௰௩.
[4] சகரி. ௰௪. ௫. மத். ௰௬. ௨௭. ௰௯. ௨௮. மாற். ௮. ௩௮. அப். ௧. ௰௧. ௧ தெச. ௪. ௰௬. ௨ தெச. ௧. ௭. யூதா. ௰௪. வெளி. ௧. ௭.
[5] உரோ. ௰௪. ௰. ௨ கொரி. ௫. ௰. வெளி. ௨௰. ௰௨.
[6] எசே. ௨௰. ௩௮. ௩௪. ௰௭. மத். ௰௩. ௪௯.
[7] ஏசா. ௫௮. ௭. எசே. ௰௮. ௭. யாக். ௧. ௨௭.
[8] எபி. ௰௩. ௨. ௩ யோ. ௫.
[9] யாக். ௨. ௰௫. ௰௬.
[10] ௨ தீமோ. ௧. ௰௬. ௰௭.
[11] மத். ௨௰. ௨௩. மாற். ௰. ௪௰. ௧ கொரி. ௨. ௯. எபி. ௰௧. ௰௬.

ருக்கிற இராச்சியத்தைச் [1]சுதந்தரித்துக்கொள்ள வாருங்கள் என்பார்.

௩௭ அப்பொழுது நீதிமான்கள் அவருக்கு மாறுத்தரமாகச் சொல்வது: ஆண்டவரே, நாங்கள் உம்மைப் பசியும் தாகமும் உள்ளவரென்று எப்பொழுது கண்டு உமக்குப் போசனபானம் கொடுத்தோம்?

௩௮ நாங்கள் உம்மை அந்நியரென்றும் வஸ்திரம் இல்லாதவரென்றும் எப்பொழுது கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டு, உமக்கு வஸ்திரம் கொடுத்தோம்?

௩௯ நாங்கள் உம்மை வியாதியுள்ளவரென்றும் காவலில் இருக்கிறவரென்றும் எப்பொழுது கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

௪௰ அதற்கு இராசா சொல்வது: [2]மிகவும் சிறியரான என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

௪௧ ¶ பின்பு அவர் தமது இடதுபக்கத்தில் நிற்பவர்களை நோக்கி, நான் பசியாய் இருந்தபொழுது, நீங்கள் எனக்குச் சாப்பாடு கொடுக்கவில்லை; நான் தாகமாய் இருந்தபொழுது, நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை.

௪௨ நான் அந்நியனாய் இருந்தபொழுது, நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, எனக்கு வஸ்திரம் இல்லாதபொழுது, நீங்கள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை; நான் வியாதியுள்ளவனுமாய்க் காவலில்வைக்கப்பட்டவனுமாய் இருந்தபொழுது, நீங்கள் எனக்கு உதவிசெய்ய வரவில்லை.

௪௩ ஆகையால் [3]சபிக்கப்பட்டவர்களே, நீங்கள் என்னை விட்டு, [4]சாத்தானுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் எத்தனம்பண்ணப்பட்டிருக்கிற [5]நித்திய அக்கினிக்குப் போங்கள் என்பார்.

௪௪ அப்பொழுது அவர்களும் அவருக்கு மாறுத்தரமாகச் சொல்வது: ஆண்டவரே, உம்மைப் பசிதாகமுள்ளவர் என்றும், அந்நியர் என்றும், வஸ்திரமில்லாதவர் என்றும், வியாதியுள்ளவர் என்றும், காவலில் இருக்கிறவர் என்றும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு ஊழியம் செய்யாதிருந்தோம் என்பார்கள்.

௪௫ அதற்கு அவர் சொல்வது: [6]மிகவும் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கும் செய்யாதிருந்தீர்கள் என்பார்.

௪௬ அப்படியே [7]அவர்கள் நித்திய வேதனையை அடையவும், நீதிமான்களோ நித்திய சீவனை அடையவும் போவார்கள் என்றார்.

௨௬ அதிகாரம்.

௧ பிரதானிகள் கிறிஸ்துவைக் கொலைசெய்ய யோசனை பண்ணினது ௬ ஒரு ஸ்திரீ அவருடைய சிரசில் எண்ணெயைப் பூசினது ௰௪ யூதா அவரை விற்றது ௰௭ கிறிஸ்து பஸ்காவைச் சாப்பிட்டு, ௨௬ பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தி, ௩௬ தோட்டத்தில் செபம்பண்ணினபின்பு, ௪௭ யூதாவினாலே ஒரு முத்தத்தின் வழியாய்க் காட்டிக்கொடுக்கவும், ௫௭ காய்பாவினிடத்தில் கொண்டுபோகவும், ௬௯. பேதுருவினாலே மறுதலிக்கவும் உடன்பட்டது

இந்த வசனங்கள் யாவையும் இயேசுவானவர் சொல்லி முடித்தபின்பு, அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது:

௨ [8]இரண்டு நாளைக்குப்பின்பு, பஸ்காப்பண்டிகை வருமென்று அறிந்திருக்கிறீர்கள்; அப்பொழுது மனிதனுடைய குமாரன் சிலுவை மரத்திலே அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவான் என்றார்.

௩ ¶ [9]அக்காலத்திலே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், சனங்களிலுள்ள மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரண்மனையில் கூடிவந்து,

இ. பி. ௩௩.

[1] உரோ அ, ௰௭ க பே க இ,௬ ௩ ௬ வெளி உக,௭
[2] வாக் ௰ச ௩௧ ௰௬ ௰எ. மத் ௰ சஉ. மாற் கூ சக எபி ௬,௰
[3] சஉ. ௬ அ மத் எ. உ௩ லூக் ௰௩ உஎ
[4] உ பே உ, ௪ யூதா ௬.
[5] மத் ௰௩ ச௰, ரு௨
[6] வாக் ௰ச ௩௩ ௰௭ இ. ச௩௭ உ அ அப ௬ இ.
[7] தானி ௰உ உ யோவா இ. உ௬ உரோ உ எ,௬.
[8] மாற் ௰ச க லூக். உஉ க யோவா ௰௩ க
[9] சங், உ, உ, யோவா ௰௧. சஎ அப ச உ௫ ழ.

௪ தந்திரமாய் இயேசுவானவரைப் பிடித்துக் கொலைசெய்யும்படிக்கு யோசனை பண்ணியிருக்கிறபொழுது,

௫ பண்டிகை நாள்களில் அப்படிச் செய்யக்கூடாது, செய்தால் சனங்களுக்குள்ளே கலகம் உண்டாகுமென்று (நிறுத்தினார்கள்.)

௬ ¶ [1]அன்றியும் இயேசுவானவர் பெத்தானியா ஊரில் குஷ்டரோகியாய் இருந்த சீமோனுடைய வீட்டில் இருக்கையில்,

௭ [2]ஒரு ஸ்திரி விலையேறப்பெற்ற தயிலமுள்ள பரணியை எடுத்துக்கொண்டு வந்து, அவர் பந்தியிருக்கிறபொழுது, அதை அவருடைய சிரசின்மேல் ஊற்றினாள்.

௮ [3]அவருடைய சீஷர் அதைக் கண்டு, விசனம் அடைந்து, இந்தக் கேடு என்னத்திற்கு?

௯ இந்தத் தயிலத்தை உயர்ந்த கிரயத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுத்தால் (இலாபமிருக்குமே) என்றார்கள்.

௰ இயேசுவானவர் அதை அறிந்து இவர்களுக்குச் சொன்னது: நீங்கள் அந்த ஸ்திரியை என் வருத்தப்படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்தாளே.

௰௧ [4]தரித்திரர் எக்காலத்திலும் உங்களுடனே இருக்கிறார்கள்; [5]நானோ எக்காலத்திலேயும் உங்களோடே இருப்பதில்லை.

௰௨ இவள் இந்தத் தயிலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாய் இருக்கின்றது.

௰௩ உலகத்தில் எவ்விடத்திலே இந்தச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுமோ, அவ்விடத்திலே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படுமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰௪ ¶ அப்பொழுது [6]பன்னிரண்டு சீஷரில் ஒருவனாகிய [7]யூதாஸ்காரியோத்து என்னப்பட்டவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்,

௰௫ நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன், [8]நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான்; அவர்கள் அவனுக்கு *முப்பது வெள்ளிக்காசை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

௰௬ அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுக்கும்படிக்குத் தகுதியான காலத்தைத் தேடிக்கொண்டான்.

௰௭ ¶ [9]பின்பு அவர்கள் புளியாத அப்பம் சாப்பிடுகிற நாள்களில் முதல்நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்திற்கு வந்து, நீர் பஸ்காப்பண்டிகையின் இராபபோசனம் பண்ணும்படிக்கு, நாங்கள் எங்கே எத்தனம்பண்ணச் சித்தமாய் இருக்கிறீர் என்று கேட்டார்கள்.

௰௮ அதற்கு அவர் சொன்னது: நீங்கள் பட்டணத்திலே ஒருவனிடத்தில்போய், என் காலம் சமீபமாய் இருக்கின்றது, உன்னிடத்திலே என் சீ[illegible]ரோடுங்கூடப் பஸ்காப்பண்டிகை கொண்டாடுவேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுடனே சொல்லுங்கள் என்றார்

௰௯ இயேசுவானவர் கட்டளையிட்டபடியே சீஷர்கள் போய், பஸ்காப்போசனத்தை எத்தனம்பண்ணினார்கள்.

௨௰ ¶ [10]அஸ்தமனமானபொழுது, அவர் பன்னிருவரோடுங்கூடப் பந்தியிருந்தார்.

௨௧ அவர்கள் போசனம் பண்ணுகையில், அவர், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

௨௨ அப்பொழுது அவர்கள் மிகவும் துக்கப்பட்டு அவரை நோக்

கி. பி. ௩௩.

[1] மத். ௨௧. ௰௭.
[2] மாற். ௰௪. ௩. யோவா. ௰௧. ௧, ௨. ௰௨. ௩.
[3] யோவா. ௰௨. ௪.
[4] உபா. ௰௫. ௰௧. யோவா. ௰௨. ௮.
[5] மத். ௰௮. ௨௰. ௨௮. ௨௰. யோவா. ௰௩. ௩௩. ௰௪. ௰௯. ௰௬. ௰௬, ௨௮. ௰௭. ௰௧.
[6] மாற். ௰௪. ௰. லூக். ௨௨. ௩. யோவா. ௰௩. ௨, ௨௭.
[7] மத். ௰. ௪.
[8] சகரி. ௰௧. ௰௨. மத். ௨௭. ௩.
* யூதர்களுடைய வெள்ளிக்காசு ஒன்றிற்கு ஏறக்குறைய ஒரு ரூபாய் ஒப்பாயிருக்கும்.
[9] ௨ மோ. ௰௨. ௬, ௰௮. மாற். ௰௪. ௰௨. லூக். ௨௨. ௭.
[10] மாற். ௰௪. ௰௭. லூக். ௨௨. ௰௪. யோவா. ௰௩. ௨௧.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

கி, ஆண்டவரே, நானோ அப்படிச் செய்வேன் என்று ஒவ்வொருவர் சொல்லத்தொடங்கினார்கள்.

௨௩ அதற்கு அவர் சொன்னது: [1]என்னோடேகூடத் தாலத்திலே கை தோய்க்கிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்.

௨௪ [2]மனிதனுடைய குமாரன் தன்னைக்குறித்து எழுதியிருக்கிறவிதமாய்ப் போகிறான்; அப்படியிருந்தும், [3]ஐயோ! மனிதனுடைய குமாரன் எந்த மனிதனாலே காட்டிக்கொடுக்கப்படுவாரோ, அம்மனிதனுக்கு வேதனைவரும்; அம்மனிதன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.

௨௫ (பின்னாலே) அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அவரை நோக்கி, இரபீ, நானோ அப்படிச் செய்வேன் என்றான்; நீ சொன்னபடியே இருக்கும் என்றார்.

௨௬ ¶ [4]அன்றியும் அவர்கள் போசனம்பண்ணுகையில், [5]இயேசுவானவர் அப்பத்தை எடுத்துக்கொண்டு *ஆசீர்வதித்து, அதைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்து, [6]இது என்னுடைய சரீரமாய் இருக்கிறது, நீங்கள் எடுத்துப் புசியுங்கள் என்றார்.

௨௭ பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, [7]நீங்கள் எல்லாரும் இதில் பானம்பண்ணுங்கள்.

௨௮ [8]இது அநேகருக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு, [9]புதிய உடம்படிக்கைக்கு ஏற்றதாய்ச் சிந்தப்படுகிற [10]என் இரத்தமாய் இருக்கின்றது.

௨௯ [11]இதுமுதற்கொண்டு நான் உங்களோடேகூட என் பிதாவின் இராச்சியத்திலே நவமாய்ப் பானம்பண்ணும் நாள்வரைக்கும், [12]இந்தத் திராட்சரசத்தை நான் பானம்பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௰ ¶ [13]அவர்கள் தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

௩௧ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, [14]நான் மேய்ப்பனை உபத்திரவப்படுத்தும்பொழுது, ஆடுகள் சிதறிப்போம் என்று எழுதியிருக்கிறது; ஆகையால் [15]இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னைக்குறித்துக் [16]கலக்கம் அடைந்துபோவீர்கள்.

௩௨ [17]நானோ எழுந்திருந்தபின்பு உங்களுக்கு முன்னே கலிலேயா நாட்டுக்குப் போவேன் என்றார்.

௩௩ அதற்குப் பேதுரு சொன்னது: எல்லாரும் உம்மைக்குறித்துக் கலக்கம் அடைந்துபோனாலும் நான் ஒருக்காலும் கலக்கம் அடைந்து போகமாட்டேன் என்றான்.

௩௪ [18]அவனுடனே இயேசுவானவர் சொன்னது: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்குமுன்னமே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௫ அதற்குப் பேதுரு சொன்னது: நான் உம்மோடே மரணம் அடைய வேண்டியதாய் இருந்தாலும், உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான்; மற்றச் சீஷர் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

௩௬ ¶ [19]அப்பொழுது இயேசுவானவர் அவர்களோடேகூடக் கெதுசேமனே என்னும் இடத்திற்கு வந்து, சீஷரை நோக்கி, நான் அங்கே போய்ச் செபம்பண்ணுமளவும் நீங்கள் இவ்விடத்தில் உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி,

௩௭ பேதுருவையும் [20]செபேதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய் துக்கம் அடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கி,

௩௮ பின்பு அவர்களை நோக்கி, [21]என் ஆத்துமா மரணபரியந்தம்

கி. பி. ௩௩.

[1] சங் ௪௧ ௯ லூக் ௨௨ ௨௧ யோவா ௰௩ ௰௮

[2] சங் ௨௨ ஏசா ௫௩ தானி ௯ ௨௬ மாற் ௯ ௰௨ லூக் ௨௪ ௨௫ ௪௬ அப் ௰௭ ௨,௩ ௨௬ ௨௨, ௨௩ ௧ கொரி ௰௫ ௩

[3] யோவா ௰௭ ௰௨

[4] மாற் ௰௪ ௨௨ லூக் ௨௨ ௰௯

[5] ௧ கொரி ௰௧ ௨௩, ௨௪

* இரேக்குப் பாஷையில் தோத்திரம்பண்ணி, மாற் ௬ ௪௧

[6] ௧ கொரி ௰ ௰௬

[7] மாற் ௰௪ ௨௩

[8] மத் ௨௰ ௨௮ உரோ ௫ ௰௫ எபி ௯ ௨௨

[9] எரே ௩௧ ௩௧

[10] ௨ மோ ௨௪ ௮ ௩ மோ ௰௭ ௰௧

[11] அப் ௰ ௪௧

[12] மாற் ௰௪ ௨௫ லூக் ௨௨ ௰௮

[13] மாற் ௰௪ ௨௬

[14] மாற் ௰௪ ௨௭ யோவா ௰௬ ௩௨

[15] மத் ௰௧ ௬

[16] சகரி ௰௩ ௭

[17] மத் ௨௮ ௭,௰, ௰௬ மாற் ௰௪ ௨௮, ௰௬ ௭

[18] மாற் ௰௪ ௩௰ லூக் ௨௨ ௩௪ யோவா ௰௩ ௩௮

[19] மாற் ௰௪ ௩௨, ௩௫ லூக் ௨௨ ௩௯ யோவா ௰௮ ௧

[20] மத் ௪ ௨௧

[21] யோவா ௰௨ ௨௭

4902 (76-51)

கி. பி. ௩௩.

மிகுந்த துக்கப்பட்டிருக்கின்றது; நீங்கள் இங்கே தரித்திருந்து என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,

௩௯ சற்று அப்புறம் போய், [1]சாஷ்டாங்கமாய் விழுந்து, [2]என் பிதாவே, [3]இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் அப்படிச் செய்யும்; [4]இல்லாவிட்டால், என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று செபம்பண்ணினார்.

௪௰ பின்பு அவர் சீஷரிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணக்கண்டு, பேதுருவை நோக்கி, இப்படி நீங்கள் ஒரு மணிநேரமாகிலும் என்னோடேகூட விழித்திருக்கத் திராணி இல்லையோ?

௪௧ [5]நீங்கள் குற்றம் செய்வதற்கான காரணத்தில் பிரவேசியாதபடிக்கு, விழித்திருந்து செபம்பண்ணுங்கள், ஆவியானது மனதுள்ளதுதான், சரீரமோ பலவீனமுள்ளது என்று சொல்லி,

௪௨ இரண்டாந்தரம் போய், என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் உள்ளதை நான் பானம்பண்ணாவிட்டால், இது என்னைவிட்டு நீங்காதா? நீங்கக்கூடாதிருந்தால், உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று செபம்பண்ணினார்.

௪௩ சீஷர்களோ மிகுந்த நித்திரைமயக்கம் உள்ளவர்களானபடியால், அவர் திரும்பி வந்தபொழுது அவர்களை மறுபடியும் நித்திரைபண்ணக்கண்டார்.

௪௪ அவர் மறுபடியும் அவர்களை விட்டுப் போய், மூன்றாந்தரம் அந்த விண்ணப்ப வார்த்தைகளைத் தானே செபம்பண்ணி, பின்பு தம்முடைய சீஷரிடத்தில் வந்து,

௪௫ நீங்கள் பின்னும் நித்திரைபண்ணி இளைப்பாறுவீர்களா? இதோ, மனிதனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற நேரம் சமீபித்தது.

௪௬ அதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் சமீபமாய் வருகிறான், எழுந்திருங்கள் போவோம் என்றார்.

௪௭ ¶ [6]அவர் பேசுகையில் பன்னிருவரில் ஒருவனாகிய யூதா வந்தான்; அவனோடுங்கூடப் பிரதான ஆசாரியரும் சனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான சனங்களும் கத்திகளையும் தடிகளையும் பிடித்து வந்தார்கள்.

௪௮ அவர்களுக்கு அந்தத் துரோகியானவன், எவனை நான் முத்தம்செய்வேனோ அவன்தானே இயேசு, அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அடையாளமாகச் சொல்லியிருந்தான்.

௪௯ அந்தப்படி அவன் உடனே இயேசுவினிடத்தில் வந்து, இரபீ, நீர் வாழ்க என்று [7]அவரை முத்தம்செய்தான்.

௫௰ இயேசுவானவரோ அவனை நோக்கி, சிநேகிதனே, [8]என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார்; உடனே மற்றவர்கள் சேர்ந்து, இயேசுவானவர்மேல் கைகளை வைத்து அவரைப் பிடித்தார்கள்.

௫௧ அப்பொழுது [9]இயேசுவுடனே இருக்கிறவர்களில் ஒருவன் தன் கத்தியைப் பிடித்து உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.

௫௨ இயேசுவானவரோ அவனுடனே சொன்னது: [10]கத்தியை (இப்படி) எடுக்கிறவர்கள் எல்லாரும் கத்தியினாலே அழிந்துபோவார்கள்; ஆகையால் உன் கத்தியைத் திரும்ப அதினிடத்திலே போடு.

௫௩ (என்னைக் காப்பாற்றும்படிக்கு) என் பிதா [11]அரை இலட்சத்திற்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பவேண்டும் என்று நான் இப்பொழுதே அவ

[1] மாற் ௰௪. ௩௫. லூக் ௨௨. ௪௨. எபி ௫. ௭.
[2] யோவா ௰௨. ௨௭.
[3] மத் ௨௰. ௨௨.
[4] யோவா ௫. ௩௰. ௬. ௩௮. பிலி ௨. ௮.
[5] மாற் ௰௩. ௩௩. ௰௪. ௩௮. லூக் ௨௨. ௪௰. ௪௬. எபே ௬. ௰௮.
[6] மாற் ௰௪. ௪௩. லூக் ௨௨. ௪௭. யோவா ௰௮. ௩.
[7] ௨ சாமு ௨௰. ௯.
[8] சங் ௪௧. ௯. ௫௫. ௰௩.
[9] யோவா ௰௮. ௰.
[10] ஆதி ௯. ௬. வெளி ௰௩. ௰.
[11] ௨ இராஜா ௬. ௰௭. தானி ௭. ௰.

கி. பி. ௩௩.

ளை வேண்டிக்கொள்ளக் கூடாது என்று நினைக்கிறாயா?

௫௪ (நானே அப்படிச் செய்தால்) வேத எழுத்துக்கள் எப்படி நிறைவேறும்?

௫௫ [1]இப்படியே சம்பவிக்கவேண்டுமென்று சொல்லி, பின்பு சனக்கூட்டத்தை நோக்கி, நீங்கள் ஒரு கள்ளனைப் பிடிக்கும்படிக்குப் புறப்படுகிறதுபோல, கத்திகளோடும் தடிகளோடும் என்னைப் பிடிக்க வந்தீர்கள்; தினந்தோறும் நான் தேவாலயத்திலே உங்களுக்குள் இருந்து, உபதேசம்பண்ணினேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே.

௫௬ [2]தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் நிறைவேறும்படிக்கு இவையெல்லாம் நடந்து வருகின்றன என்றார்; [3]அப்பொழுது சீஷர் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.

௫௭ ¶ [4]இயேசுவைப் பிடித்தவர்கள், அவரைப் பிரதான ஆசாரியனாகிய காயிபாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்.

௫௮ அப்படியிருக்க, பேதுரு தூரத்திலே பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் அவர் பின்சென்று, பின்பு அதில் பிரவேசித்து, சங்கதியின் முடிவைப் பார்க்கிறதற்குச் சேவகரிடத்தில் உட்கார்ந்தான்.

௫௯ அந்தத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் மூப்பரும் மற்றப் பெரிய சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படிக்கு அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சியைத் தேடினார்கள், அகப்படவில்லை.

௬௰ [5]அநேகம்பேர் வந்து பொய்ச்சாட்சிகளைச் சொல்லியும் ஒவ்வவில்லை.

௬௧ [6]பின்பு இரண்டுபேர் வந்து, இவன் [7]தேவாலயத்தை இடித்துப்போடவும் மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் வல்லமை உள்ளவனாயிருக்கிறேன் என்று சொன்னான் என்று பொய்ச்சாட்சி சொன்னார்கள்.

௬௨ [8]அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்திருந்து அவரை நோக்கி, இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொன்னதை நீ கேட்டாயா? இதற்கு மாறுத்தரமாக எதையாகிலும் சொல்லுகிறதில்லையா என்றான்.

௬௩ [9]இயேசுவானவரோ பேசாமல் இருந்தார்; அப்பொழுது பிரதான ஆசாரியன் அவருடனே சொன்னது: பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து நீதானோ, அதை நீ எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று [10]சீவனுடைய தேவன்மேல் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்.

௬௪ இயேசுவானவர் சொன்னது: நீர் சொன்னபடியே இருக்கின்றது; அல்லாமலும் இதுமுதற்கொண்டு [11]நீங்கள் மனிதனுடைய குமாரனைச் [12]சர்வவல்லமையுள்ளவருடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கவும், வானத்தின் மேகங்கள்மேல் வரவும் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௬௫ பிரதான ஆசாரியன் அதைக் கேட்டவுடனே, [13]தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டுவதென்ன? இப்பொழுதே இவன் தூஷணத்தைக் கேட்டீர்களே.

௬௬ உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது என்றான், அதற்கு மற்றவர்கள் சொன்னது: [14]இவன் மரணத்திற்குப் பாத்திரனாய் இருக்கிறான் என்றார்கள்.

௬௭ [15]அப்பொழுது சிலர் அவருடைய முகத்திலே துப்பி, சிலர் அவரைக் கையினால் குட்டி, சிலர்

[1] ஏசா ௫௩. ௭–௰ வசனம். லூக் ௨௪. ௨௫, ௪௪, ௪௬.
[2] புலம் ௪. ௨௰ வச.
[3] யோவா ௰௮. ௰௫.
[4] மாற் ௰௪. ௫௩. லூக் ௨௨. ௫௪. யோவா ௰௮. ௰௨, ௰௩, ௨௪.
[5] சங் ௨௭. ௰௨. ௩௫. ௰௧. மாற் ௰௪. ௫௫. அப் ௬. ௰௩.
[6] உபா ௰௯. ௰௫.
[7] மத் ௨௭. ௪௰. யோவா ௨. ௰௯.
[8] மாற் ௰௪. ௬௰.
[9] ஏசா ௫௩. ௭. மத் ௨௭. ௰௨, ௰௪.
[10] லேவி ௫. ௧. ௧ சாமு ௰௪. ௨௪, ௨௬.
[11] தானி ௭. ௰௩. மத் ௰௬. ௨௭. ௨௪. ௩௰. ௨௫. ௩௧. லூக் ௨௧. ௨௭. யோவா ௧. ௫௧. உரோ ௰௪. ௰. ௧ தெச ௪. ௰௬. வெளி ௧. ௭.
[12] சங் ௱௰. ௧. அப் ௭. ௫௫.
[13] ௨ இரா ௰௮. ௩௭. ௰௯. ௧.
[14] லேவி ௨௪. ௰௬. யோவா ௰௯. ௭.
[15] ஏசா ௫௰. ௬. ௫௩. ௩, ௫.

[1]அவருடைய கன்னத்தில் அறைந்து,

சுஅ கிறிஸ்துவே [2]உம்மை அடித்தவன் யாவன்? அதை ஞானதிருஷ்டியாய் எங்களுக்குச் சொல்லும் என்று இழிவாய்ச் சொன்னார்கள்.

சுகூ ¶ [3]அத்தருணத்திலே பேதுரு அரண்மனையின் பிராகாரத்திலே உளுக்காந்திருந்தான்; அப்பொழுது வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து, நீயும் கலிலேயனாகிய இயேசுவுடனே இருந்தாய் என்றாள்.

எய அதற்கு அவன் சொன்னது: நீ பேசுகிறது எனக்குத் தெரியாதென்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்து, பின்பு மண்டபத்திற்குப் போனான்.

எக அங்கே வேறொரு பெண் அவனைக் கண்டு, இவனும் நாசரேத்தூரானாகிய இயேசுவுடனே இருந்தானென்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள்.

எஉ அவனோ சொன்னது: அம்மனிதனை அறியமாட்டேனென்று மறுபடியும் ஆணையோடே மறுதலித்தான்.

எங சற்றுநேரத்திற்குப் பின்பு, அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து, [4]மெய்யாய் நீயும் அவர்களில் ஒருவன், உன் பேச்சு அதை வெளிப்படுத்துகின்றது என்றார்கள்.

எச அப்பொழுது பேதுரு சொன்னது: [5]நான் அந்த மனிதனை அறியவேயில்லை என்று சபித்துக்கொண்டு சத்தியம்பண்ணினான்.

எரு உடனே சேவல் கூவிற்று, பேதுரு (அதைக்கேட்டு,) [6]சேவல் கூவுமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசுவானவர் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய் மிகவும் அழுதான்

கி. பி. ஙங

1 லூக். உஉ. சுச யோவா. மகூ. ங
2 மாற். மச. சுசு லூக். உஉ. ருரு
3 மாற். மச. சுகூ லூக். உஉ. ருஅ யோவா. மஅ. மஎ, உரு
4 லூக். உஉ. ருகூ
5 மாற். மச. எக
6 உசு. ஙச மாற். மச. ஙம லூக். உஉ. சுக, சுஉ யோவா. மங. ஙஅ
7 சங். உ. உ மாற். மரு. க லூக். உஉ. சுசு, உங. க யோவா. மஅ. உஅ
8 உம. மகூ அப். ங. மங
9 மத். உசு. மச, மரு
10 உ சாமு. மஎ. உங அப். க. மஅ
11 அப். க. மகூ

உஎ. அதிகாரம்.

க இயேசுவைக் கட்டிப் பிலாத்துவுக்கு ஒப்புக்கொடுத்தது. ரு யூதா நான்றுகொண்டு செத்தது. மகூ பிலாத்து தன் மனைவியினாலே எச்சரிக்கப்பட்டது. உச அவன் தன் கைகளைக் கழுவி, உசு பரபாசை விடுதலையாக்கினது. உகூ கிறிஸ்து தமக்கு முள்முடி தரித்தது. ஙரு சிலுவையில் அறையவும், சம நிந்திக்கவும், ரும மரித்து அடக்கம்பண்ணவும் உடன்பட்டது. சுசு அவருடைய கல்லறை முத்திரித்துக் காவல் பண்ணப்பட்டது.

விடியற்காலமானபொழுது, [7]சகல பிரதான ஆசாரியரும் சனங்களின் மூப்பரும் இயேசுவைக் கொலைசெய்யும்படிக்கான வகையைக்குறித்து யோசனைபண்ணி,

உ அவரைக் கட்டிக்கொண்டுபோய், பொந்தியு [8]பிலாத்தென்னும் துரைக்கு அவரை ஒப்புக்கொடுத்தார்கள்.

ங ¶ [9]அப்பொழுது அவரைக் காட்டிக்கொடுத்த யூதா என்பவன், அவர் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபம் அடைந்து, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து, குற்றமில்லாதவரை நான் காட்டிக்கொடுத்ததினால்,

ச எனக்குப் பாவம் வந்ததென்றான்; அதற்கு அவர்கள் சொன்னது: அது எங்களுக்கு என்ன, நீயே பார் என்றார்கள்.

ரு அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்தில் எறிந்து, [10]புறப்பட்டுப் போய், நான்றுகொண்டு செத்தான்.

சு பிரதான ஆசாரியர் அந்தப் பணத்தை எடுத்து, இது இரத்தக் கிரயமாகையால், இதைக் காணிக்கைப் பெட்டியிலே போடக்கூடாதென்று சொல்லி,

எ ஆலோசனைபண்ணின பின்பு, அதினாலே அந்நியரை அடக்கம்பண்ணும்படிக்கு ஒரு குயவனுடைய நிலத்தைக் கொண்டார்கள்.

அ ஆதலால் இந்நாள்வரைக்கும் அந்த நிலம், [11]இரத்தநிலம் என்னப்பட்டிருக்கின்றது.

௯ அப்பொழுது இஸ்ரவேல் சனங்களால் அவர் மதிக்கப்பட்ட* ¹கிரயமாகிய முப்பது வெள்ளிக் காசை அவர்கள் எடுத்து,

௰ பராபரன் எனக்குக் கட்டளையிட்டபடியே அதை ஒரு குயவனுடைய நிலத்திற்காகக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறிற்று.

௰௧ ¶ இயேசுவானவர் துரைக்கு முன்பாக நின்றபொழுது, ²அந்தத் துரை அவரை நோக்கி, நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான்; அதற்கு இயேசு சொன்னது: ³நீர் சொல்லுகிறபடியே இருக்கின்றது என்றார்.

௰௨ பின்பு பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாற்றி வருகிறபொழுது, ⁴அவர் மாறுத்தரம் ஒன்றும் சொன்னதில்லை.

௰௩ அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி, ⁵இவர்கள் உன்னைக்குறித்துச் சொல்லுகிற குற்றங்களை நீ கேட்கிறதில்லையோ என்றான்.

௰௪ அவரோ துரைக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகத்தக்கதாக, ஒன்றுக்கும் மாறுத்தரமாக ஒரு வார்த்தையையும் சொல்லாமல் இருந்தார்.

௰௫ ¶ ⁶காவல் பண்ணப்பட்டவர்களில் எவனைச் சனங்கள் கேட்கிறார்களோ, அவனைத் துரை விடுதலையாக்குகிறது பண்டிகைதோறும் வழக்கமாய் இருந்தது.

௰௬ அல்லாமலும் அக்காலத்திலே கீர்த்தி அடைந்த பாதகனாகிய பரபாசென்னப்பட்ட ஒருவன் காவலில் வைக்கப்பட்டிருந்தான்.

௰௭ ஆகையால் சனங்கள் கூடியிருக்கையில், பிலாத்து அவர்களை நோக்கி, பரபாசென்பவனும் கிறிஸ்து என்னப்பட்ட இயேசு என்பவனும் இருக்கிறார்களே, இவர்களில் எவனை நான் உங்களுக்காக விடுதலையாக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டான்.

௰௮ அவர்கள் அவரைப் பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்தபடியினாலே (அவன் அப்படியே கேட்டான்.)

௰௯ ¶ அல்லாமலும் அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவியினாலே அனுப்பப்பட்ட ஒருவன் வந்து, நான் இன்றைக்குச் சொப்பனத்திலே இந்த நீதிமானைக்குறித்து மிகவும் பாடுபட்டேன், ஆகையால் நீர் அவரைக்குறித்து ஒன்றும் செய்யாதிருப்பீராக என்று அம்மாள் அறிவிக்கச்சொன்னாள் என்றான்.

௨௰ ¶ ⁷அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் மூப்பரும் பரபாசைக் கேட்கும்படிக்கும் இயேசுவைக் கொலைசெய்யப்பண்ணும்படிக்கும் சனங்களை (வசனங்களினாலே) ஏவினார்கள்.

௨௰௧ ஆதலால் இவ்விரண்டுபேரில் எவனை நான் உங்களுக்கு விடுதலை பண்ணவேண்டும் என்று துரை சனங்களை நோக்கிக் கேட்டபொழுது, அவர்கள் பரபாசை விடுதலையாக்கவேண்டும் என்று கூப்பிட்டார்கள்.

௨௰௨ அதற்குப் பிலாத்து சொன்னது: அப்படியானால் கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவை நான் என்ன செய்யலாம் என்றான், அவனைச் சிலுவைமரத்தில் அறையப் பண்ணவேண்டும் என்று எல்லாரும் கூப்பிட்டார்கள்.

௨௰௩ அதற்குத் துரை சொன்னது. ஏன், எந்தப் பொல்லாங்கைச் செய்தான் என்றான்; அப்பொழுது அவர்கள் அவனைச் சிலுவைமரத்தில் அறையப்பண்ணவேண்டும் என்று அதிகம் அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

௨௰௪ ¶ பிலாத்து (தன்னுடைய) பிரயாசம் வீணாய் இருக்கிறதென்

கி. பி ௩௩.

* அல்லது கொள்ளப்பட்ட

1 சகரி ௰௧ ௰௨, ௰௩

2 மாற் ௰௫ ௨. லூக் ௨௩ ௩. யோவா ௰௮ ௩௩.

3 யோவா ௰௮ ௩௭. ௧ தீமோ ௬ ௰௩.

4 ஏசா ௫௩ ௭. யோவா ௰௯ ௯.

5 மத் ௨௬ ௬௨. யோவா ௰௯ ௰.

6 மாற் ௰௫ ௬. லூக் ௨௩ ௰௭. யோவா ௰௮ ௩௯.

7 மாற் ௰௫ ௰௧. லூக் ௨௩ ௰௮. யோவா ௰௮ ௪௦. அப் ௩ ௰௪.

றும், கலகம் அதிகமாகிறதென்றும் கண்டு, சனங்களுக்கு முன்பாகத் [1]தண்ணீர் அள்ளி, கைகளைக் கழுவி, இந்த நீதிமானின் இரத்தத்தைச் சிந்துகிறதற்கு நான் குற்றமில்லாதவன், நீங்களே பாருங்கள் என்றான்.

௨௫ அதற்குச் சனங்கள் எல்லாரும் சொன்னது: [2]இவனுடைய இரத்தம் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்றார்கள்.

௨௬ அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்காக விடுதலையாக்கி, இயேசுவையோ [3]வாரினால் அடிப்பித்து, பின்பு சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.

௨௭ ¶ பின்பு [illegible]னுடைய போர்ச்சேவகர் இயேசுவை அதிகாரச் சாலையிலே *கொண்டுபோய், போர்ச்சேவகராகிய கூட்டம் எல்லாம் அவர்மேல் கூடிவரப்பண்ணி,

௨௮ [4]அவருடைய வஸ்திரங்களைக் களைந்து, [5]சிவப்பான மேல் அங்கியை அவருக்கு உடுத்தி,

௨௯ [6]முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவருடைய சிரசின்மேல் வைத்து, அவருடைய வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, பின்பு அவர்முன்பாக முழங்காற்படியிட்டு, யூதரின் இராசாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி,

௩௰ [7]அவர்மேலே துப்பி, அந்தக் கோலை எடுத்து அவருடைய சிரசில் அடித்தார்கள்.

௩௧ அவரைப் பரியாசம்பண்ணின பின்பு, அவர்கள் அவருக்கு உடுத்தின மேல் அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, [8]அவரைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்குக் கொண்டுபோனார்கள்.

௩௨ ¶ [9]போகையில் [10]அவர்கள் சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைக் கண்டு, அவன் அவருடைய சிலுவைமரத்தைச் சுமக்கும்படிக்குப் பலவந்தம்பண்ணினார்கள்.

௩௩ பின்பு அவர்கள் [11]தலையோட்டிடமென்று அர்த்தங்கொள்ளும் கொல்கதா என்னும் இடத்திற்கு வந்தபொழுது,

௩௪ [12]கசப்பானதைக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள், அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.

௩௫ [13]அவரைச் சிலுவைமரத்தில் அறைந்தபின்பு, அவர்கள் அவருடைய வஸ்திரங்களைக் கூறிட்டுச் சீட்டுப்போட்டு, அவைகளைப் பங்கிட்டார்கள்; அதினாலே, [14]என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறிற்று.

௩௬ [15]பின்பு அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

௩௭ அல்லாமலும் அவருடைய மரண ஆக்கினையின் காரணத்தை அறிவிக்கும்படிக்கு, [16]இவன் யூதருடைய இராசாவாகிய இயேசு என்று எழுதி, அவருடைய சிரசுக்கு மேலிடத்தில் வைத்தார்கள்.

௩௮ [17]அன்றியும் அவருடைய வலதுபுறத்தில் ஒரு கள்ளனும் அவருடைய இடதுபுறத்தில் ஒரு கள்ளனுமாக இரண்டு கள்ளரும் அவருடனேகூடச் சிலுவைமரங்களில் அறையப்பட்டார்கள்.

௩௯ ¶ அப்படியிருக்க, [18]அவ்வழி நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளை அசைத்து,

௪௰ ஆ! [19]தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, நீதானே உன்னை இரட்சித்துக்கொள்; [20]நீ பராபரனுடைய குமாரனானால், சிலுவைமரத்திலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷணித்தார்கள்.

கி. பி. ௩௩.

1 ௫ மோ. ௨௧. ௬.
2 ௫ மோ. ௰௯. ௰; யோசு. ௨. ௰௯; ௧ இரா. ௨. ௩௨; ௨ சாமு. ௧. ௰௬; அப். ௫. ௨௮.
3 ஏசா. ௫௩. ௫; மாற். ௰௫. ௰௫; லூக். ௨௩. ௰௬, ௨௪, ௨௫; யோவா. ௰௯. ௧, ௰௬.
* அல்லது இராசாவின் வீட்டிலே.
4 மாற். ௰௫. ௰௭; யோவா. ௰௯. ௨.
5 லூக். ௨௩. ௰௧.
6 சங். ௬௯. ௰௯; ஏசா. ௫௩. ௩.
7 ஏசா. ௫௰. ௬; மத். ௨௬. ௬௭.
8 ஏசா. ௫௩. ௭.
9 ௪ மோ. ௰௫. ௩௫; ௧ இரா. ௨௧. ௰௩; அப். ௭. ௫௮; எபி. ௰௩. ௰௨.
10 மாற். ௰௫. ௨௧; லூக். ௨௩. ௨௬.
11 மாற். ௰௫. ௨௨; லூக். ௨௩. ௩௩; யோவா. ௰௯. ௰௭.
12 [illegible]
13 மாற். ௰௫. ௨௪; லூக். ௨௩. ௩௪; யோவா. ௰௯. ௨௪.
14 சங். ௨௨. ௰௮.
15 [illegible]
16 மாற். ௰௫. ௨௬; லூக். ௨௩. ௩௮; யோவா. ௰௯. ௰௯.
17 ஏசா. ௫௩. ௰௨; மாற். ௰௫. ௨௭, ௨௮; லூக். ௨௩. ௩௨, ௩௩; யோவா. ௰௯. ௰௮.
18 சங். ௨௨. ௭; ௰௯. ௨௫; மாற். ௰௫. ௨௯; லூக். ௨௩. ௩௫.
19 மத். ௨௬. ௬௧; யோவா. ௨. ௰௯.
20 மத். ௨௬. ௬௩.

௪௧ அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் சொன்னது:

௪௨ இவன் மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தானே இரட்சிக்கத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலரின் இராசாவானால், இப்பொழுதே சிலுவையில் இருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.

௪௩ [1]இவன் தன்னைப் பராபரனுடைய குமாரன் என்று சொல்லி, பராபரன்மேல் நம்பிக்கையாய் இருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாய் இருந்தால், இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்.

௪௪ [2]இவ்விதமாய் அவரோடே கூடச் சிலுவைமரங்களில் அறையப்பட்ட கள்ளரும் அவரை நிந்தித்தார்கள்.

௪௫ ¶ [3]அன்றியும் ஆறாம்மணி நேரந்தொடங்கி ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும், அத்தேசம் எங்கும் அந்தகாரம் உண்டாயிற்று

௪௬ பின்பு ஒன்பதாம்மணி நேரத்திலே [4]இயேசுவானவர், எலி எலி லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்; [5]அதற்கு என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அருத்தமாம்

௪௭ அவ்விடத்தில் நின்றவர்களில் சிலர் அதைக்கேட்டு, இவன் எலியாவை அழைக்கிறான் என்றார்கள்.

௪௮ [6]அவர்களில் ஒருவன் உடனே ஓடிக் கடற்காளானை எடுத்து, காடியால் நிரப்பி, அதை ஒரு கம்பின்மேல் பூட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்தான்.

௪௯ மற்றவர்களோ சொன்னது: பொறுத்துக்கொள், எலியா இவனை இரட்சிக்க வருவானோ, அதைப் பார்ப்போம் என்றார்கள்.

௫௰ ¶ [7]பின்பு இயேசுவானவர் மறுபடியும் மிகுந்த சத்தமிட்டு ஆவியை விட்டுவிட்டார்.

கி. பி. ௩௩

1 சங ௨௨. ௮
2 மாற் ௰௫ ௩௨. லூக் ௨௩ ௩௯
3 ஆமோ ௮ ௯. மாற் ௰௫ ௩௩. லூக் ௨௩ ௪௪
4 எபி ௫ ௭
5 சங. ௨௨ ௧
6 சங ௬௯ ௨௧. மாற் ௰௫ ௩௬. லூக் ௨௩ ௩௬. யோவா ௰௯ ௨௯
7 மாற் ௰௫ ௩௭. லூக் ௨௩ ௪௬
8 ௨ மோ ௨௬ ௩௧. ௨ நாளா ௩ ௰௪. மாற் ௰௫ ௩௮. லூக். ௨௩ ௪௫
9 ௩௬ வசனம். மாற் ௰௫ ௩௯. லூக் ௨௩. ௪௭
10 லூக் ௮ ௨,௩
11 மாற் ௰௫ ௪௰
12 மாற் ௰௫ ௪௨. லூக் ௨௩ ௫௰ யோவா ௰௯ ௩௮

௫௧ [8]அப்பொழுது சம்பவித்ததென்னவென்றால், தேவாலயத்திலுள்ள திரைச்சீலை மேலேதொடங்கிக் கீழேமட்டும் இரண்டாகக் கிழிந்தது; பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன; கல்லறைகளும் திறந்தன

௫௨ நித்திரை அடைந்திருந்த பரிசுத்தவான்களுடைய அநேக சரீரங்கள் அவர் எழுந்திருந்தபின்பு எழுப்பப்பட்டு,

௫௩ கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த பட்டணத்தில் பிரவேசித்து, அநேகருக்குத் தரிசனையானார்கள்.

௫௪ ¶ [9]போர்ச்சேவகரின் தலைவனும், அவனோடேகூட இயேசுவைக் காத்திருந்தவர்களும், பூமி அதிர்தலையும் மற்ற நடக்கைகளையும் கண்டபொழுது, மிகுந்த பயமடைந்து, மெய்யாய் இவர் தேவகுமாரனாய் இருந்தார் என்று சொல்லிக்கொண்டார்கள்

௫௫ ¶ அல்லாமலும் இயேசுவுக்கு ஊழியம் செய்து [10]கலிலேயாவிலிருந்து அவர் பின்சென்றுவந்த ஸ்திரிகளாகிய மகதலா ஊர் மரியாளும்,

௫௬ [11]யாக்கோபுக்கும் யோசேயுக்கும் தாயாகிய மரியாளும், செபேதேயுவின் குமாரருடைய தாயும், மற்ற அப்படிப்பட்ட அநேக ஸ்திரிகளும் அங்கே தூரத்திலே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

௫௭ ¶ [12]அஸ்தமனமானபொழுது, அரிமத்தியா ஊரானாகிய ஐசுவரியம் உள்ளவனுமாய் இயேசுவுக்குச் சீஷனுமாயிருந்த யோசேப்பென்பவன் பிலாத்துவினிடத்தில் போய் இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்

௫௮ அதை அவனுக்குக் கொடுக்கும்படிக்குப் பிலாத்து கட்டளையிட்டான்

௫௯ அந்தப்படி யோசேப்பு அ

வருடைய சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய புடவையிலே சுற்றி,

௬௰ [1]தான் கல்மலையில் வெட்டுவித்திருந்த தன்னுடைய புதிய கல்லறையில் அதை வைத்து, அந்தக் கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான்.

௬௧ அத்தருணத்திலே மகுதலா ஊராளாகிய மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.

௬௨ ¶ எத்தன நாளுக்குப்பின்னான மறுநாளிலோ, பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து சொன்னதாவது:

௬௩ துரையே, அந்த எத்தன் உயிரோடிருந்தபொழுது, [2]தான் மூன்று நாளைக்குள்ளே எழுந்திருப்பேன் என்று அவன் சொன்னதை நினைத்திருக்கிறோம்.

௬௪ ஆகையால் அவனுடைய சீஷர் இராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டுபோய், பின்பு மரித்தோரிலிருந்து எழுந்தானென்று சனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின வஞ்சனையைப் பார்க்கிலும் பிந்தின வஞ்சனை கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றும் நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரம்பண்ணக் கட்டளையிடவேண்டும் என்றார்கள்.

௬௫ அதற்குப் பிலாத்து சொன்னது காவல்பண்ணுகிற போர்ச்சேவகர் உங்களிடத்தில் உண்டே, அவர்களாலே நீங்கள் உங்கள் இஷ்டப்படி போய், கல்லறையைப் பத்திரம்பண்ணுங்கள் என்றான்.

௬௬ அந்தப்படி அவர்கள் போய், [3]கல்லில் முத்திரைபோட்டு, காவலுக்காகப் போர்ச்சேவகரை வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.

கி. பி. ௩௩.

௨௮. அதிகாரம்.

௧ கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஒரு தூதன் ஸ்திரீகளுக்கு அறிவித்தது ௯ அவர் அவர்களுக்குக் காணப்பட்டது ௰௧ அவருடைய சரீரம் கல்லறையிலிருந்து திருடப்பட்டதென்று சொல்ல, பிரதான ஆசாரியர் போர்ச்சேவகருக்குப் பணங்கொடுத்தது ௰௬ கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் காட்சியாகி, ௰௯ அவர்கள் சகல சாதிக்கும் ஞானஸ்நானங்கொடுத்துப் போதிக்கும்படி அவர்களை அனுப்பினது

[4]ஓய்வுநாள் முடிந்து, கிழமையின் முதலாம் நாள் பிறக்கையில், மகுதலா ஊர் மரியாளும் [5]மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

௨ அப்பொழுது பூமி மிகவும் அதிரத்தக்கதாக, [6]பராபரனுடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலில் இருந்த கல்லைப் புரட்டித்தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.

௩ [7]அவனுடைய முகம் மின்னலைப்போலவும், அவனுடைய உடை உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது.

௪ காவல்பண்ணுகிற போர்ச்சேவகர் அவனைக் கண்டு, பயத்தினால் அதிர்ந்து, செத்தவர்களைப்போல ஆனார்கள்.

௫ தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி, நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவைமரத்தில் அறையப்பட்ட இயேசுவைத் தேடிவந்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்.

௬ [8]அவர் சொன்னபடியே எழுந்திருக்கிறார், ஆகையால் அவர் இங்கே இல்லை; நீங்கள் வந்து, கர்த்தர் வைக்கப்பட்ட இடத்தைப் பார்த்து,

௭ பின்பு சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறார், [9]உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவார், அங்கே அவரைக் காண்பீர்கள் என்று அவருடைய சீஷருக்கு அறிவியுங்கள்; நான் உங்களுக்குச் சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள் என்றான்.

[1] ஏசா ௫௩ ௯
[2] மத் ௰௬ ௨௧ ௰௭ ௨௩ ௨௰ ௰௯ ௨௬ ௬௧ மாற் ௮ ௩௧ ௰ ௩௪ லூக் ௯ ௨௨ ௰௮ ௩௩ ௨௪ ௬, ௭ யோவா ௨ ௰௯
[3] தானி ௬ ௰௭
[4] மாற் ௰௬ ௧ லூக். ௨௪ ௧ யோவா ௨௰ ௧
[5] மத் ௨௭ ௫௬
[6] மாற் ௰௬ ௫ லூக் ௨௪ ௪ யோவா ௨௰ ௰௨
[7] தானி ௰ ௬
[8] மத் ௰௨ ௪௰ ௰௬ ௨௧ ௰௭ ௨௩ ௨௰ ௰௯
[9] மத் ௨௬ ௩௨ மாற் ௰௬ ௭

அ உடனே அவரகள் பயததோடும மிகுநத சநதோஷததோடும் கலலறையை விட்டு, அவருடைய சீஷருககு அறிவிககுமபடிககு ஓடிபபோனாரகள்.

கூ அபபடி அவரகள் அவருடைய சீஷருககு அறிவிக்கபபோகையில நடநதது எனனவெனறால; [1]இயேசுவானவர தாமே அவரகளுககு எதிரபபடடு, நீஙகள் வாழ்க எனறார; உடனே அவரகள சேரநது சாஷடாஙகமாய் அவரை வணஙகி, அவருடைய பாதஙகளைக கட்டிககொண்டாரகள்.

ய அபபொழுது இயேசுவானவர அவரகளுடனே சொனனதாவது: [2]பயபபடாதிருஙகள, என சகோதரர கலிலேயா நாடடிலே எனனைக காணபாரகள; ஆகையால அவரகள அவ்விடததிறகுப போகுமபடிககு நீஙகள போயச சொலலுஙகள எனறார

யக ¶ அவரகள போகையில், காவல்பணணின சேவகரில சிலர பட்டணததிலே வநது, எலலா நடககைகளையும் பிரதான ஆசாரியருககு அறிவிததாரகள

யஉ அபபொழுது அவரகளும் மூபபரகளும் கூடிவநது யோசனை பணணின பின்பு, அவர்கள அநதப போர்சசேவகருககு மிகுநத பணததைக் கொடுதது,

யங நீஙகள் எபபடிச சொல்ல வேணடும் எனறால, நாஙகள நிததிரைபணணுகையில் அவனுடைய சீஷரகள் அவனைக களவாயக கொணடுபோனார்கள் என்று சொல்லுஙகள்.

யச துரை இதைக கேள்விபபட்டால நாஙகள அவரைச சமாதானபபடுததி, உஙகளுககுக கஸதி வராதபடிககுச செயவோம எனறாரகள்.

யரு ¶ போரசசேவகர அநதப பணததை எடுததுககொணடு, தாஙகள் அடைநத போதிபபினபடியே செய்தாரகள், அபபடி இநதச சஙகதி யூதருககுளளே இநநாளவரைககும பிரசிததமாய இருககினறது.

யசா ¶ [3]பதினொரு சீஷரகள கலிலேயா நாடடில இயேசுவானவர தஙகளுககுக குறிததிருநத மலையினமேல போனாரகள.

யஎ அஙகே அவரகள அவரைக கணடு சாஷடாஙகமாய வணஙகினாரகள, சிலரோ சநதேகபபடடாரகள

யஅ அபபொழுது இயேசுவானவர சேரநது, அவரகளுடனே திருவுளமபறறினதாவது [4]பரமணடலததிறகும பூமணடலததிறகும் சகல அதிகாரமும் எனககுக கொடுககபபட்டிருககினறது.

யகூ ஆகையால் [5]நீஙகள புறபபட்டு, [6]உலகததார எல்லாரையும சீஷராககி, பிதா குமாரன பரிசுதத ஆவியின நாமததினாலே அவரகளுககு ஞானஸநானம கொடுதது,

உய [7]நான உஙகளுக்குக கட்டளையிட்ட யாவையும அவரகள கைககொள்ளும்படி அவரகளுககு உபதேசமபணணுஙகள, கேளுஙகள், இம்மையின முடிவுவரைககும் நான எபபொழுதும் உஙகளுடனேகூட இருககிறேன் என்றார. ஆமென்.

---

1 மாற யசா கூ. யோவா [illegible]
2 யோவா [illegible]
3 மத [illegible]
4 [illegible]
6 [illegible]
7 [illegible]

MARK

மாற்கு என்பவர்

எழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

௧ யோவானஸநானனுடைய உததியோகம ௯ இயேசு ஞானஸநானமபெற்று, ௰௨ சோதிக்கபபட்டு, ௰௪ பிரசஙகமபண்ணினது ௰௬ அவர் பேதுருவையும அநதிரேயாவையும யாககோபையும, யோவானையும அழைததது ௨௩ பசாசுபிடிததிருநத ஒருவனையும, ௨௯ பேதுருவினுடைய மாமியையும, ௩௨ மற்ற அநேகம பிணியாளிகளையும குணமாககி, ௪௰ ஒரு குஷடரோகியைச் சுததமாக்கினது

[1]பராபரனுடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸதுவைககுறிதத சுவிசேஷததின் ஆரம்பம்

௨ இதோ, [2]நான் என்னுடைய தூதனை உமககுமுன்பாக அனுபபுகிறேன்; அவன் உமக்குமுன்னே (போய்,) உமமுடைய மார்ககத்தை எததனம்பணணுவான என்றும், பராபரனுடைய மாரககததை ஆயததபபடுததி,

௩ [3]அவருடைய பாதைகளைச செவ்வைபண்ணுஙகள என்று வனாந்தரததிலே ஒருவன கூபபிடுவான என்றும், தீரககதரிசிகள் எழுதினபடியே,

௪ [4]யோவான் என்பவன வனாந்தரததிலே ஞானஸநானம் கொடுதது, பாவமன்னிபபை அடையும்படிககு மனநதிருமபுகிறதற்கு ஏற்ற ஞானஸநானததைப பிரசங்கம்பண்ணிக்கொண்டுவந்தான்.

௫ [5]அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் பட்டணத்தார் எல்லாரும் புறபபட்டு, அவனிடத்தில் போய், தங்கள் பாவஙகளை அறிக்கையிட்டு, அவனாலே யோர்தான் நதியிலே ஞானஸநானம பெற்றார்கள்.

௬ அந்த யோவான் [6]ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன்னுடைய அரையில் வார்க்கச்சைக் கட்டிக்கொண்டவனுமாய், [7]வெட்டுக்கிளிகளையும காட்டுத்தேனையும புசிககிறவனுமாய் இருந்தான்.

௭ அக்காலத்திலே அவன் பிரசஙகமபண்ணினதாவது: [8]என்னிலும் அதிக வல்லமையுடையவர் எனக்குப பின் வருகிறார்; அவருடைய பாதரட்சைகளின் வாரைக குனிந்து அவிழ்க்கிறதற்கு நான் பாததிரவானல்ல.

௮ நான் [9]சலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், அவர் [10]பரிசுத்த ஆவியினாலே உஙகளுககு ஞானஸ்நானம் கொடுபபார் என்பதே.

௯ ¶ [11]அந்த நாள்களில் இயேசுவானவர் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியிலே யோவானாலே ஞானஸ்நானம் பெற்று,

௰ [12]சலத்தினின்று எறினவுடனே வானம் பிரிந்ததையும் ஆவியானவர் புறாவைப்போலத் தம்மேல் இறங்கினதையும் கண்டார்.

௰௧ [13]அபபொழுது, நீர் எனக்கு அன்பாயிருக்கிற என் குமாரன், உம்மில் பிரியமாய் இருக்கிறேன்

கி பி ௨௯

1 மத் ௰௪ ௩௩ லூக் ௧ ௩௫
2 யோவா ௧ ௩௪ மலகி ௩ ௧ மத் ௰௧ ௰ லூக் ௭ ௨௭
3 ஏசா ௪௰ ௩ மத் ௩ ௩ லூக் ௩ ௪ யோவா ௧ ௰௫, ௨௩
4 மத் ௩ ௧, ௨ லூக் ௩ ௩ யோவா ௩ ௨௩
5 மத் ௩ ௫
6 மத் ௩ ௪
7 ௩ மோ ௰௧ ௨௨
8 மத் ௩ ௰௧ யோவா ௧ ௨௭ அப் ௰௩ ௨௫
9 அப் ௧ ௫ ௰௧ ௰௬ ௰௯ ௪
10 ஏசா ௪௪ ௩ யோவே ௨ ௨௮ அப் ௨ ௪ ௰ ௪௫ ௰௧ ௰௫, ௧ கொரி. ௰௨ ௰௩
11 மத் ௩ ௰௩ லூக் ௩ ௨௧
12 மத் ௩ ௰௬ யோவா ௧ ௩௨
13 சங் ௨ ௭ மத் ௩ ௰௭ மாற் ௯ ௭

என்று பரமண்டலங்களிலிருந்து சத்தம் உண்டாயிற்று

௰௨ ¶ [1]அதின் பின்பு ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகப்பண்ணினார்.

௰௩ அந்த வனாந்தரத்திலே அவர் நாற்பது நாள் இருந்து, சாத்தானாலே சோதிக்கப்பட்டு, காட்டு மிருகங்களுக்குள்ளே இருந்தார், [2]பின்பு தேவதூதர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள்.

௰௪ ¶ [3]யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசுவானவர் கலிலேயா நாட்டிலே வந்து,

௰௫ [4]காலம் நிறைவேறியிருக்கின்றது; [5]பராபரனுடைய இராசரீகம் சமீபமாய் வந்தது, நீங்கள் மனந்திரும்பிச் சுவிசேஷத்தை விசுவாசித்துக்கொள்ளுங்கள் என்று [6]பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்.

௰௬ ¶ [7]அல்லாமலும், இயேசுவானவர் கலிலேயா நாட்டின் கடல் அருகே நடக்கையில், மீன்பிடிக்கிறவர்களாகிய சீமோனும், அவனுடைய சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை வீசியிருக்கிறபொழுது,

௰௭ அவர்களைக் கண்டு, எனக்குப் பின்சென்று வாருங்கள், உங்களை நான் மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

௰௮ [8]உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவரைப் பின்பற்றினார்கள்.

௰௯ [9]அவர் அவ்விடம்விட்டுச் சற்றே தூரம் போன பின்பு, செபேதேயுவின் குமாரன் யாக்கோபும், அவனுடைய சகோதரன் யோவானும் படவிலே வலைகளை முடிந்துகொண்டு இருக்கையில், அவர்களைக்கண்டு, உடனே அவர்களையும் அழைத்தார்.

௨௰ அப்பொழுது கூலியாட்களுடனே கூடப் படவில் இருக்கிற தங்கள் தகப்பனாகிய செபேதேயுவைவிட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

௨௧ ¶ [10]பின்பு கப்பர்நாகூம் ஊரில் பிரவேசித்தார்கள்; ஓய்வுநாளிலே அவர் தாமதியாமல் செப ஆலயத்திற்குப் போய், போதகம்பண்ணினார்

௨௨ [11]அவர் வேதபாரகரைப்போல அல்ல, அதிகாரம் உடையவரைப்போலப் போதகம்பண்ணினபடியினாலே, சனங்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.

௨௩ [12]அவர்களுடைய செபஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் இருந்தான்.

௨௪ [13]அவன், நாசரேத்தூரானாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை அறிந்திருக்கிறேன், நீரே பராபரனுடைய பரிசுத்தரென்று கூப்பிட்டான்

௨௫ [14]இயேசுவானவர் சொன்னது நீ பேசாமல் இவனைவிட்டுப் புறப்பட்டுப் போ என்று அவனிலுள்ள (ஆவியை) அதட்டினார்

௨௬ [15]அப்பொழுது அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமாய்க் கூப்பிட்டுப் புறப்பட்டுப் போயிற்று.

௨௭ (அதைக்கண்ட) எல்லாரும் பிரமிப்படைந்து ஒருவரை ஒருவர் பார்த்து, இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், உடனே அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகின்றன, இதென்ன, இது எப்படிப்பட்ட புதிய உபதேசம் என்று சொல்லிக்கொண்டார்கள்.

௨௮ அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயாநாட்டின் திசைகளில் எங்கும் பிரசித்தமாயிற்று.

௨௯ [16]உடனே அவர்கள் செபஆலயத்தைவிட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடும் கூடச் சீமோன் அந்திரேயா என்

கி. பி ௩௧

1 மத ௪ ௧ லூக் ௪ ௧
2 மத ௪ ௰௧
3 மத ௪ ௰௨
4 தானி ௯ ௨௫ கலா ௪ ௪ எபே ௧ ௰
5 மத ௩ ௨ ௪ ௰௭
6 மத ௪ ௨௩
7 மத ௪ ௰௮ லூக ௫ ௪
8 மத ௪ ௨௰ லூக் ௫ ௰௧
9 மத் ௪ ௨௧
10 மத ௪ ௰௩ லூக ௪ ௩௧
11 மத ௭ ௨௯
12 லூக் ௪ ௩௩
13 மத ௮ ௨௯
14 ௩௪ வசனம
15 மாற ௯ ௨௰
16 மத ௮ ௰௪ லூக் ௪ ௩௮

பவர்களுடைய வீட்டில் வந்தார்கள்; அங்கே சீமோனுடைய மாமி சுரமாய்க் கிடந்தாள்.

௩௰ உடனே அவர்கள் அவளைக் குறித்து அவருக்குச் சொன்னார்கள்.

௩௧ அவர் போய், அவளுடைய கையைப்பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே சுரம் அவளை விட்டு நீங்கிற்று; அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள்.

௩௨ ¶ [1]சூரியன் அஸ்தமிக்கும் மாலைக்காலத்திலே சகலவிதமான பிணியாளிகளையும் பசாசுபிடித்தவர்களையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

௩௩ அல்லாமலும் பட்டணத்தார் எல்லாரும் (அவர் இருந்த) வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடி வந்தார்கள்.

௩௪ அப்பொழுது அவர் பலவியாதிகளால் உபத்திரவப்படுகிற அநேகரைக் குணமாக்கி, அநேகம் பசாசுகளையும் துரத்தினார்; [2]தம்மை அந்தப் பசாசுகள் அறிந்தபடியால், அவைகள் *பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

௩௫ ¶ [3]அதிகாலையிலே இருட்டோடே அவர் எழுந்திருந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓர் இடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்.

௩௬ சீமோனும் அவனோடிருந்தவர்களும் அவருக்குப் பின்னே போய் அவரைக் கண்டபொழுது,

௩௭ சனங்கள் எல்லாரும் உம்மைத் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள்.

௩௮ அவர்களுடனே அவர் சொன்னது: [4]பிரசங்கம் பண்ணும்படிக்குப் புறப்பட்டேனே, [5]ஆகையால் இங்கே சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் போவோம் வாருங்கள் என்று சொல்லி,

௩௯ (புறப்பட்டு,) [6]கலிலேயா நாட்டிலெங்கும் (போய்,) சனங்களுடைய ஜெபஆலயங்களில் பிரசங்கம்பண்ணிப் பசாசுகளைத் துரத்தினார்.

௪௰ ¶ அப்படியிருக்கையில், [7]ஒரு குஷ்டரோகி அவரிடத்தில் வந்து முழங்காற்படியிட்டு, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

௪௧ இயேசுவானவர் மனதுருகிக் கையை நீட்டி அவனைத் தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.

௪௨ இப்படி அவர் சொல்லுகையில், உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்க, அவன் சுத்தமானான்.

௪௩ பின்பு அவர் அவனை நோக்கி, நீ இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாம், அல்லாமலும் நீ போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, உனக்கு உண்டான சுத்தத்தைக்குறித்து அவர்களுக்குச் சாட்சியாகும்படிக்கு [8]மோசே கட்டளையிட்டவைகளைப் பலியிடு என்று கண்டிப்பாய்ச்சொல்லி,

௪௪ உடனே அவனை அனுப்பிவிட்டார்.

௪௫ [9]அப்படியிருந்தும், அவன் புறப்பட்டுப் போய், இச்சங்கதியை மிகவும் பிரசங்கிக்கவும் அறிவிக்கவும் தொடங்கினான்; [10]ஆதலால் அவர் வெளியரங்கமாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கமாட்டாமல், வெளியாகிய வனாந்தரமான இடங்களிலே தங்கி வந்தார்; அங்கேயும் எல்லாத் திசைகளிலிருந்தும் அவரிடத்திற்கு வந்தார்கள்.

௨. அதிகாரம்.

௧ கிறிஸ்து ஒரு திமிர்வாதக்காரனைக் குணமாக்கி, ௰௪ ஆயத்துறையில் இருந்த மத்தேயுவை அழைத்து, ௰௫ ஆயக்காரரோடும், பாவிகளோடும் சாப்பிட்டு, ௰௮ தம்முடைய சீஷர்கள் உபவாசம்பண்ணாதிருந்ததைக்குறித்தும், ௨௩ ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்ததைக்குறித்தும் உத்தரவு சொன்னது.

[11]சில நாளுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நாகூம் ஊருக்குப்

கி. பி. ௩௧

[1] மத். ௮. ௧௬. லூக். ௪. ௪௰.
[2] மாற். ௩. ௰௨. லூக். ௪. ௪௧. அப். ௰௬. ௰௭, ௰௮.
* அல்லது, தன்னை அறிந்திருந்தோமென்று சொல்லவொட்டாதிருந்தார்.
[3] லூக். ௪. ௪௨.
[4] ஏசா. ௬௧. ௧. யோவா. ௰௬. ௨௮. ௰௭. ௪.
[5] லூக். ௪. ௪௩.
[6] மத். ௪. ௨௩. லூக். ௪. ௪௪.
[7] மத். ௮. ௨. லூக். ௫. ௰௨.
[8] லேவி. ௰௪. ௩, ௪, ௰. லூக். ௫. ௰௪.
[9] லூக். ௫. ௰௫.
[10] மாற். ௨. ௰௩.
[11] மத். ௯. ௧. லூக். ௫. ௰௮.

போனார்; அவர் வீட்டிலே இருக்கிறார் என்று சனங்கள் கேள்விப்பட்டபொழுது,

௨ உடனே வாசற்படிக்கு வெளியிலேயும் இடமில்லாதிருக்கத்தக்கதாக அநேகர் கூடிவந்தார்கள்; அவர்களுக்கு (சுவிசேஷ) வசனத்தைப் போதித்தார்.

௩ அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு, அவரிடத்திற்கு வந்தார்கள்.

௪ சனங்கள் மிகுதியானபடியினாலே அவர்கள் அவருக்குச் சமீபமாய்ச் சேர இடம்பெறாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்து வழியுண்டாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

௫ இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார்.

௬ அங்கே உளுக்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர் (அதைக் கேட்டு,)

௭ இப்படித் தேவதூஷணங்களாக இவன் சொல்லுகிறதென்ன? [1]பராபரன் ஒருவருக்கேயன்றி மற்றொருவனுக்கும் பாவங்களை மன்னிக்க வல்லமை உண்டா என்று தங்கள் இருதயங்களிலே சிந்தித்துக்கொண்டார்கள்.

௮ [2]அவர்கள் அப்படித் தங்களுக்குள்ளே சிந்தித்திருக்கிறார்கள் என்று இயேசுவானவர் தம்முடைய ஆவியினாலே அறிந்து, உடனே அவர்களை நோக்கி, நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படி ஏன் சிந்திக்கிறீர்கள்?

௯ [3]இந்தத் திமிர்வாதக்காரனுடனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்லுகிறதோ, எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுகிறதோ, எது எளிது?

௰ மனிதனுடைய குமாரன் பூமியிலே பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரம் உடையவனாய் இருக்கிறதை,

௰௧ நீங்கள் அறியும்படிக்குப் (பாருங்களென்று) திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்திருந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டிற்குப் போவென்று உனக்குக் கட்டளையிடுகிறேன் என்றார்.

௰௨ உடனே அவன் எல்லாருக்கும் முன்பாக எழுந்திருந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனான்; அப்பொழுது யாவரும் பிரமித்து, நாம் ஒருக்காலும் இப்படிக் காணவில்லையே என்று சொல்லிப் பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௰௩ ¶ [4]பின்பு அவர் புறப்பட்டு மறுபடியும் கடலின் அருகே போனபொழுது, சனங்கள் எல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள், அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.

௰௪ [5]அவர் கடந்துபோகையில், ஆயத்துறையில் உளுக்கார்ந்திருக்கிற அல்பேயுவின் குமாரனாகிய லேவி என்பவனைக் கண்டு, நீ எனக்குப் பின்சென்று வா என்றார், அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.

௰௫ [6]அல்லாமலும் அவனுடைய வீட்டிலே அவர் போசனபந்தி இருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் அவருக்குப் பின்சென்று வந்தபடியால், அவர்களும் இயேசுவானவருடனேயும் அவருடைய சீஷருடனேயுங்கூடப் பந்தியில் இருந்தார்கள்.

௰௬ அப்படி அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசனம் பண்ணுகிறதைத் வேதபாரகரும் பரிசேயரும் கண்டு, அவருடைய சீஷரை நோக்கி, அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசனம் பண்ணலாமா என்றார்கள்.

கி. பி. ௩௧.

[1] யோபு ௰௪ ௪ ஏசா ௪௩. ௨௫

[2] மத ௯ ௪

[3] மத ௯ ௫

[4] மத ௯ ௯

[5] மத ௯ ௯ லூக ௫ ௨௭

[6] மத ௯ ௰

௰௭ இயேசுவானவர் அதைக் கேட்டு, அவர்களை நோக்கி, [1]சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்; நான் நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புதலுக்கு அழைக்க வந்தேன் என்றார்.

௰௮ ¶ [2]அன்றியும் யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம்பண்ணி வந்தார்கள்; அப்பொழுது சிலர் அவரிடத்தில் வந்து, யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம்பண்ணுகிறார்கள், உம்முடைய சீஷர்மாத்திரம் ஏன் உபவாசம்பண்ணவில்லை என்றார்கள்.

௰௯ அதற்கு இயேசுவானவர் சொன்னது: கலியாணத்திற்கு வந்த மனிதர், தங்களுடனே மணவாளன் இருக்கையில் உபவாசம் பண்ணுவார்களா? தங்களுடனே மணவாளன் இருக்கிற காலத்திலே உபவாசம்பண்ணமாட்டார்களே.

௨௰ மணவாளன் அவர்களை விட்டு நீக்கப்படும் காலம் வருகின்றது, அக்காலத்திலே அவர்கள் உபவாசம்பண்ணுவார்கள்.

௨௧ ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தில் இணைக்கமாட்டான்; இணைத்தால் அதில் இணைத்த புதிய துண்டு பழைய வஸ்திரத்தில் எடுபட்டுப் போக, அதிக பொத்தல் உண்டாகுமே.

௨௨ அல்லாமலும் ஒருவனும் திராட்சங்களின் புதிய இரசத்தைப் பழைய துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான்; வைத்தால், அந்தப் புதிய இரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போகும், துருத்திகளும் கெட்டுப்போகும்; புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டுமே என்றார்.

கி. பி. ௩௧.

1 மத் ௯ ௰௨, ௰௩ ௰௮ ௰௧ லூக் ௫ ௩௧, ௩௨ ௰௯ ௰௧ ௧தீமோ ௧ ௰௫

2 மத் ௯ ௰௪ லூக் ௫ ௩௩

3 மத் ௰௨ ௧ லூக் ௬ ௧

4 ௫ மோ ௨௩ ௨௫

5 ௧ சாமு ௨௧ ௬

6 ௨ மோ ௨௯ ௩௨, ௩௩ ௩ மோ ௨௪ ௯

7 மத் ௰௨ ௮

8 மத் ௰௨ ௯ லூக் ௬ ௬

௨௩ ¶ [3]பின்பு ஓய்வுநாளில் அவர் பயிர்வழியே போனபொழுது, அவருடைய சீஷர் நடக்கையில், [4]கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள்.

௨௪ ஆதலால் பரிசேயர் அவரை நோக்கி, இதோ, இவர்கள் ஓய்வுநாளில் செய்யத்தகாததை ஏன் செய்கிறார்கள் என்றார்கள்.

௨௫ அவர்களுக்கு அவர் சொன்னது: அபியத்தாரென்னும் பிரதான ஆசாரியனுடைய நாட்களிலே [5]தாவீது தாழ்வுபட்டு, தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாய் இருந்தபொழுது,

௨௬ தேவாலயத்திற்கு உட்பிரவேசித்து, [6]ஆசாரியரேயன்றி மற்றொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களைப் புசித்ததையும், தன்னோடிருந்தவர்களுக்குக் கொடுத்ததையும், நீங்கள் ஒருக்காலும் அறியவில்லையோ என்று சொல்லி,

௨௭ பின்பு மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது.

௨௮ ஆகையால் [7]மனிதனுடைய குமாரன் ஓய்வுநாளின் கர்த்தனாய் இருக்கிறான் என்றார்.

௩. அதிகாரம்.

கிறிஸ்துவானவர் சூம்பின கையுள்ளவனையும், ௰ மற்றப் பிணியாளிகளையும் குணமாக்கி, ௰௧ அசுத்த ஆவிகளை அதட்டி, ௰௩ பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தெரிந்துகொண்டு, ௨௨ பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறாரென்ற தூஷணத்தை எடுத்துக்காட்டி, ௩௧ தம்முடைய சகோதரரும், சகோதரிகளும், தாயாரும் இன்னாரென்று காட்டினது.

[8]மறுபடியும் அவர் ஜெபஆலயத்தில் பிரவேசித்தார்; அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனிதன் இருந்தான்.

௨ அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்மேல் குற்றம்சாற்றலாமென்று அவர்கள் எண்ணி, அவரை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கி. பி. ௩௧.

௩ ஆதலால் அவர் சூம்பினகையுள்ளவனை நோக்கி, நீ எழுந்து நடுவிலே வந்திரு* என்று சொல்லி,

௪ பின்பு அவர்களை நோக்கி, ஓய்வுநாள்களில் நன்மைசெயகிறதோ தீமைசெய்கிறதோ, சீவனை இரட்சிக்கிறதோ சீவனை வாஙகுகிறதோ, எது நியாயமாய் இருககின்றதென்று கேட்டார்; அவர்கள பேசாமல் இருநதாாகள்.

௫ அபபொழுது அவர் அவர்களுடைய இருதயத்தின் கடினததினாலே †விசனபபட்டுக்கோபததோடே அவாகளைச் சுற்றிபபார்தது, பினபு அநத மனிதனை நோககி, உன் கையை நீட்டு என்றாா, அவன் நீட்டினான்; உடனே அது மற்றக் கையைபபோல சொஸதமாயிற்று.

௬ [1]பின்பு பரிசேயர் புறபபட்டுபபோய், அவரை அழிககும்படிககு [2]எரோதேயின் மனிதரோடுஙகூட அவருக்கு விரோதமாய் உடனே ஆலோசனைபண்ணினாாகள்.

௭ ¶ இயேசுவானவர் தம்முடைய சீஷருடனே கூட அவ்விடம்விட்டுக கடலோரததிற்குப போனாா

௮ [3]கலிலேயா நாட்டிலும், யூதேயா நாட்டிலும்,எருசலேம் நகரததிலும்,இதுமேயா நாட்டிலும்,யோாதான நதியின் ஓரங்களிலுமிருநது மிகவும் திரளாக வநத சனஙகள அவருககுப பின்சென்றார்கள்; அல்லாமலும் தீருசீதோன எனனும் பட்டணஙகளின் திசைகளிலிருநது மிகவும் திரளாக வநத சனஙகள் அவா செய்த அற்புதங்களைக் கேள்விபபட்டு, அவரிடத்தில் வநதாாகள்.

௯ அப்பொழுது அநேகரை அவர் சொஸ்தமாக்கினபடியினாலே, உபத்திரவபபட்டவர்கள் எவர்களோ, அவாகள அவரைத் தொடும்படிக்கு அவாமேலே விழுந்தார்கள். ‡

௰ ஆதலால் தாம் சனங்களால் நெருககபபடாதபடிக்குஅவா தமமுடைய சீஷரை நோக்கி, தமக்காக ஒரு படவை எத்தனம்பண்ணச் சொன்னார்.

௰௧ [4]அசுத்தமான ஆவிகளும் அவரைக் கண்டஉடனே அவருக்கு முன்பாக விழுந்து, [5]நீர் பராபரனுடைய குமாரனென்று கூபபிட்டார்கள்

௰௨ [6]தம்மை அவர்கள் பிரசித்தம்பண்ணாதபடிக்கு, அவர்களுககுக கண்டிபபாய்க கட்டளையிட்டார்.

௰௩ ¶ பின்பு [7]அவர் ஒரு மலையின்மேல் ஏறித் தமக்குச் சித்தமானவர்களை வரவழைததார், அவர்கள் அவரிடததில வநதாாகள.

௰௪ அபபொழுது அவர் தம்முடனேகூட இருக்கவும், (சுவிசேஷத்தை)பிரசஙகம்பண்ணும்பொருட்டாய் அனுபபவும,

௰௫ வியாதிகளை நீககிப பசாசுகளைத துரததததக்கதாக அதிகாரமுள்ளவாகளாகவும, பன்னிரண்டுபேரை ஏற்படுததினார்

௰௬ அவர்கள யாரெனில், [8]சீமோன, செபேதேயுவின் குமாரனாகிய யாககோபு,

௰௭ யாக்கோபின சகோதரனாகிய யோவான், அநதிரேயா, பிலிபபு, பருதலொமேயு, மததேயு, தோமா, அல்பேயுவின குமாரனாகிய யாக்கோபு, ததேயு, கானானாகிய சீமோன்,

௰௮ அவரைக காட்டிக்கொடுத்த யூதாஸகாரியோத்து என்பவாகளே.

௰௯ இவர்களில் முந்தின சீமோனுக்குப பேதுரு என்றும், செபேதேயுவின் குமாரராகிய யாககோபுக்கும் யோவானுக்கும் போவனொகேஸ் என்றும் நாமங்களைக் கொடுததார்;போவனெர்கேஸ் என்பதற்கு இடிமுழககம் இ[illegible]கிறவாகளென்று அருத்தமாம்.

---

* அல்லது நடுவே நில

† அலலது அநத காரத்நக்காக

[1] மத ௰௨ ௰௪

[2] மத ௰௨ ௰௬

[3] லூக் ௬ ௰௧

‡ அலலது நெருஙகினாகள

[4] மாற ௧ ௨௩, ௨௪ லூக் ௪ ௪௧

[5] மத ௰௪ ௩௩ மாற ௧ ௧

[6] மாற் ௧ ௨௫, ௩௪ மத ௰௨ ௰௬

[7] மத ௰ ௧ லூக் ௬ ௰௨ ௯ ௧

[8] யோவா ௧ ௪௨

௨௰ ¶ பின்பு வீட்டிற்குப் போனார்கள்.

௨௧ [1]அங்கே அவர்கள் போசனம் பண்ணுகிறதற்குக் காலமில்லாதபடிக்கு அநேக சனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்; அவருடைய இனத்தார்* அதைக் கேட்டு, [2]அவருக்கு மயக்கமுண்டாயிற்று என்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படிக்கு வந்தார்கள்.

௨௨ எருசலேம் நகரத்திலிருந்து வந்த வேதபாரகர் [3]அவன் பெயெல்செபூலைக்கொண்டிருக்கிறான்; பசாசுகளுடைய தலைவனாலே பசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

௨௩ [4]அவர்களை அவர் அழைத்து, உவமைகளால் அவர்களுடனே சொன்னதாவது: சாத்தான் சாத்தானைத் துரத்துவதெப்படி?

௨௪ ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால் அந்த இராச்சியம் நிலைநிற்கமாட்டாதே.

௨௫ ஒரு குடும்பத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால் அந்தக் குடும்பம் நிலைநிற்கமாட்டாதே.

௨௬ (அப்படிப்போல) சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்தால் அவன் நிலைநிற்கமாட்டாமல் முடிவு அடைவான்.

௨௭ [5]ஒருவன் முன்பு பெலவானைக் கட்டாவிட்டால் அவனுடைய வீட்டிலே பிரவேசிக்கவும் அவனுடைய ஆஸ்திகளைக் கொள்ளையிடவும் மாட்டான்; (கட்டினால்) அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான்.

௨௮ [6]மனிதர் செய்கிற பாவங்கள் யாவும் அவர்கள் செய்கிற எந்தத் தூஷணங்களும் மன்னிக்கப்படும்.

௨௯ பரிசுத்த ஆவியைத் தூஷணிக்கிறவன்மாத்திரம் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல், நித்திய ஆக்கினைக்குப் பாத்திரனாய் இருக்கிறான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௰ அசுத்தமான ஆவியைக்கொண்டிருக்கிறான் என்று அவர்கள் சொன்னபடியினாலே (அவர் இப்படிச் சொன்னார்.)

௩௧ ¶ [7]அத்தருணத்திலே அவருடைய தாயாரும் சகோதரரும் வந்து வெளியே நின்று, அவரை அழைக்கும்படி ஆளனுப்பினார்கள்.

௩௨ அப்பொழுது அவரைச் சுற்றி உளுக்காந்த சனங்கள் அவரை நோக்கி, அதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள்.

௩௩ அதற்கு அவர், என்னுடைய தாயும் என்னுடைய சகோதரரும் யார் என்று சொல்லி,

௩௪ தம்மைச் சூழ உளுக்காந்தவர்களைச் சுற்றிப் பார்த்து, என்னுடைய தாயும் என் சகோதரரும் இவர்களே.

௩௫ எப்படியெனில், பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே என் சகோதரன், என் சகோதரி, என் தாயாயிருக்கிறான் என்றார்.

௪. அதிகாரம்

௧ விதைக்கிறவனைக்குறித்த உவமை. ௰௪ அதின் வியாக்கியானம். ௨௧ நமது மெய்ஞ்ஞானத்தைக் காட்டவேண்டியது. ௨௧ மறைவாய் வளர்ந்த விதையையும், ௩௰ கடுகு விதையையும், உவமையாகக்காட்டியது. ௩௫ கிறிஸ்து கடற்கொந்தளிப்பை அமர்த்தினது.

பின்பு அவர் மறுபடியும் [8]கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார்; மிகுந்த சனங்கள் கூடி அவரிடத்தில் வந்தபடியினாலே, அவர் படவில் ஏறிக் கடலில் உளுக்காந்தார்; சனங்களெல்லாரும் கடற்கரையில் இருந்தார்கள்.

௨ அப்பொழுது அவர் உவமைகளாய் அநேக காரியங்களை அவர்

கி. பி. ௩௧.

[1] மாற் ௬ ௩௧

* அல்லது சிநேகிதர்

[2] யோவா ௭ ௫ ௰ ௨௰

[3] மத ௯ ௩௪ ௰ ௨௫ லூக ௧௧ ௰௫ யோவா ௭ ௨௰ அ ௪௮, ௫௨ ௰ ௨௧

[4] மத ௰௨ ௨௫

[5] ஏசா ௪௯ ௨௪ மத ௰௨ ௨௯

[6] மத ௰௨ ௩௧ லூக் ௰௨ ௰ க யோ ௫ ௰௬

[7] மத ௰௨ ௪௬ லூக ௮ ௰௯

[8] மத ௰௩ க லூக்

களுக்குப் போதித்தார்; [1]போதிக்கிறபொழுது அவர்களுடனே சொன்னதாவது: கேளுங்கள்,

௩ விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான்.

௪ அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தன; அப்பொழுது ஆகாயத்தின் பறவைகள் வந்து, அதைப் பட்சித்தன.

௫ சில விதை மிகுந்த மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தன; அதற்கு மிகுந்த மண் இல்லாததினாலே உடனே முளைத்து,

௬ சூரியகாந்தி தோன்றினபொழுது தீய்ந்து, அவைகளுக்கு வேர் இல்லாமையினால் உலர்ந்துபோயின.

௭ சில விதை முள்ளுக்களுள்ள நிலத்திலே விழுந்தன; முள்ளுக்கள் எழும்பி அவை பலன் கொடாதபடிக்கு அவைகளை நெருக்கிப்போட்டன.

௮ சில விதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்கி வளர்ந்து, [2]ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுத்தன.

௯ கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று திருவுளம்பற்றினார்.

௰ ¶ பின்பு [3]அவர் தனித்திருக்கையில், பன்னிருவரோடுங்கூட அவரைச் சூழ இருந்தவர்கள் அந்த உவமையைக்குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள்.

௰௧ அவர்களுடனே அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது.

௰௨ [4]புறம்பே இருக்கிறவர்கள் மனந்திரும்பாமலும், தங்கள் பாவமன்னிப்பை அடையாமலும் இருக்கத்தக்கதாக, [5]உற்றுப்பார்த்தும் அறியாமலும், உற்றுக்கேட்டும் சிந்தியாமலும் இருக்கும்படிக்கு, அவையெல்லாம் உவமைகளாக அவர்களுக்குச் சொல்லப்பட்டு வருகின்றன என்று சொல்லி,

௰௩ பின்பு அவர்களை நோக்கி, நீங்கள் அந்த உவமையை அறியவில்லையா? அப்படியானால், மற்ற எல்லா உவமைகளையும் எப்படி அறிவீர்கள்?

௰௪ [6]விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறவனே.

௰௫ விதை விழுந்த வழிக்கு ஒப்பானவர்கள் விதைக்கப்படுகிற வசனத்தைக் கேட்டவுடனே, சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களின்மேல் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்.

௰௬ விதை விழுந்த கற்பாறை நிலத்திற்கு ஒப்பானவர்கள் அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டும்,

௰௭ தங்களிலே வேர் ஊன்றியிராமல், கொஞ்சக்காலம் மாத்திரம் அதைப்பற்றிக்கொள்ளுகிறார்கள்; அவ்வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பப்படுதலும் உண்டானவுடனே வழுவுகிறார்கள்.

௰௮ விதை விழுந்த முள்ளுக்களுள்ள நிலத்திற்கு ஒப்பானவர்கள் அவ்வசனத்தைக் கேட்டும்,

௰௯ அது பலனற்றதாய் இருக்கும்படிக்கு, இவ்வுலகக் கவலைகளும் [7]ஐசுவரியத்தின் வஞ்சனையும் மற்றக் காரியங்களின்மேல் உண்டாகிற இச்சைகளும் தோன்றி, அந்த வசனத்தை நெருக்கிப்போடுகிறதற்கு (இடங்கொடுக்கிறார்கள்.)

௨௰ விதை விழுந்த நல்ல நிலத்திற்கு ஒப்பானவர்கள் அவ்வசனத்தைக் கேட்டுப் பற்றிக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள் என்றார்.

௨௰௧ ¶ [8]அன்றியும் அவர்களுடனே அவர் சொன்னது: விளக்

இ. பி. ௩௧

[1] மத ௰௨ ௩-௮
[2] யோவா ௰௫ ௫ கொலோ ௧ ௬
[3] மத் ௰௩ ௰ லூக் ௮ ௯ மு
[4] ௧ கொரி ௫ ௰௨ கொலோ ௪ ௫ ௧ தெச ௪ ௰௨ ௧ தீமோ ௩ ௭
[5] ஏசா ௬ ௯ ௰ ௰௩ ௰௪ லூக் ௮ ௰ யோவா ௰௨ ௪௰ அப ௨௮ ௨௬ உரோ. ௰௧ ௮
[6] மத ௰௩ ௰௯
[7] ௧ தீமோ ௬ ௯ ௰௭
[8] மத ௫ ௰௫ லூக் ௮ ௰௬ ௰௧ ௩௩

கை ஒரு தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி, மரக்காலின்* கீழாகிலும் கட்டிலின் கீழாகிலும் வைககிறதற்குக் கொண்டுவருவார்களா?

௨௨ [1]ஆதலால் வெளியரங்கமாகாத அநதரங்கமான பொருளுமில்லை, வெளிக்குவாராத மறைபொருளுமில்லை.

௨௩ [2]கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருநதால் கேட்கக்கடவன் என்றார்.

௨௪ அன்றியும் அவர்களுடனே அவர் சொன்னது: நீங்கள் கேள்விபபடுகிறது இன்னதென்று சிந்தித்துக்கொள்ளுங்கள்; [3]எந்த அளவினால் நீங்கள அளபபீரகளோ, அதினாலே உங்களுக்கும் அளககபபடும்.

௨௫ அல்லாமலும் [4]எவன் உள்ளவனாயிருக்கிறானோ, அவனுக்குக கொடுக்கப்படும்: எவன் இல்லாதவனாயிருக்கிறானோ, அவனிடததிலே உள்ளதும் எடுத்துபபோடபபடும்; ஆகையால் கேள்விபபடுகிற உஙகளுக்கு அதிகமுமகொடுக்கபபடும் என்றார.

௨௬ ¶ [5]அன்றியும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய இராசசியம் ஒரு மனிதன் தன் நிலத்திலே விதை விதைக்கிறதற்கு ஒபபாயிருக்கின்றது.

௨௭ பின்பு இராததிரிதோறும் நிததிரைபண்ணி, பகல்தோறும் எழுந்திருபபான்.

௨௮ அவனுக்குத் தெரியாமல் பூமியானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், பின்பு கதிரிலே நிறைநத தானியத்தையும் பலனைகத் தானாய்க் கொடுக்கின்ற தன்மையுள்ளதாய் இருககிறபடியால், அந்த விதை முளைத்துப் பயிராம்.

௨௯ அப்படிப் பயிர் பருவமான பொழுது,† அறுபபுககாலமானபடியினாலே, அவன் அதை அறுக்கிறதற்கு [6]ஆள்களை அனுப்புவான் என்றார்.

௩௰ ¶ அன்றியும் அவர் சொன்னது: [7]நாம் பராபரனுடைய இராசசியத்தை எதற்கு ஒப்பாக்கலாம்; அதை எந்த உவமையினாலே காண்பிக்கலாம்.

௩௧ அது ஒரு கடுகு விதைக்கு ஒபபாயிருக்கின்றது; அது நிலத்தில் விதைக்கப்படுகிறபொழுது, பூமியிலுள்ள சகல விதைகளிலும் அது சிறிதாயிருநதும்,

௩௨ விதைககபபட்டபின்பு வளர்நது சகல கீரைகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின நிழலில் வந்தடையத்தக்கதாக விஸதாரமான கிளைகளை விடுகின்றது என்றார்.

௩௩ ¶ கேட்டறியும்படிக்கு, சனஙகளுக்குணடான திராணிக்குத்தககதாக, அவர் [8]இபபடிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுககு வசனததைச சொன்னார்.

௩௪ உவமைகளினாலேயன்றி அவர் அவாகளுககு ஒன்றும் சொல்லவில்லை; தம்முடைய சீஷருடனே அவர் தனித்திருக்கிறபொழுதுமாத்திரம் அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்.

௩௫ ¶ [9]அந்த நாளிலே, சாயங்காலமானபொழுது, அவர் அவாகளை நோக்கி, அக்கரைக்குப போவோம் வாருங்கள் என்றார்.

௩௬ ஆதலால் அவர்கள சனங்களை விட்டு அவர் படவில் இருந்தபடியே அவரைக் கொண்டுபோனாகள்; வேறுபடவுகளும் அவரோடேகூடப போயின

௩௭ அப்பொழுது அவர் பின்பககததிலே ஒரு தலையணையைவைத்து நிததிரை பண்ணிக்கொண்டிருக்கையில், பலதத சுழல்காற்று உண்டானதினாலே, படவை மூடிக்கொள்ளத்தக்கதாக அலைகள் அதினமேல் மோதின.

௩௮ உடனே அவர்கள் அவரை எழுபபி, போதகரே, நாங்கள்

கி. பி. ௩௧.

* இந்த மொழி மூல பாஷையில ஒரு சினன அளவைக்குறிக்கும மத் ௫ ௰௫

[1] மத ௰ ௨௬ லூக் ௰௨ ௨.

[2] மத ௰௧ ௰௫ ௯ வச.

[3] மத ௭ ௨ லூக் ௬ ௩௮

[4] மத ௰௩ ௰௨. ௨௫ ௨௯ லூக ௮ ௰௮ ௰௯ ௨௬.

[5] மத ௰௩ ௨௪

† அலலது விளைநதபொழுது

[6] வெளி ௰௪ ௰௫

[7] மத ௰௩ ௩௧. லூக் ௰௩ ௰௯ அப ௨ ௪௧ ௪ ௪ ௫ ௰௪ ௰௯ ௨௰

[8] மத ௰௩ ௩௪ யோவா ௰௬ ௰௨

[9] மத் ௮ ௰௮. லூக் ௮ ௨௨.

மடிந்துபோனால் உமக்குக் கவலையில்லையா என்றார்கள்.

௩௯ அவர் எழுந்து காற்றுக்குக் கட்டளையிட்டு, கடலையும் நோக்கி, கோஷமாயிராதே அமைதலாயிரு என்றார்; உடனே காற்று நின்றுபோக மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

௪௰ பின்பு அவர் அவர்களை நோக்கி, இப்படி என் பயப்பட்டீர்கள்? என்னத்தினாலே உங்களுக்கு விசுவாசம் இல்லை என்றார்.

௪௧ அவர்கள் மிகவும் பயந்து, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாரோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௫. அதிகாரம்.

௧ இலேகியோன் என்னும் பேய்களைப் பிடித்தவனைக் கிறிஸ்து விடுதலையாக்கினபோது, ௰௩ அவைகள் பன்றிகளுக்குள் பிரவேசித்தன. ௨௫ அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணமாக்கி ௩௫ யாவீரு என்பவனுடைய மகளை மரணத்திலிருந்து எழுப்பினது.

[1]பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையில் உள்ள கதரேனருடைய தேசத்திற்கு வந்தார்கள்.

௨ அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.

௩ அவனுடைய குடியிருப்பு பிரேதக்கல்லறைகளிலே இருந்தது; ஒருவனும் அவனைச் சங்கிலிகளினாலும் கட்டக்கூடாததாய் இருந்தது.

௪ அநேகந்தரம் அவன் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், அவன் அந்தச் சங்கிலிகளை முறித்து விலங்குகளைத் தறித்துப்போட்டான்; ஒருவனும் அவனைக் கீழ்ப்படுத்தக்கூடாததாய் இருந்தது.

௫ அல்லாமலும் அவன் எப்பொழுதும் இரவும்பகலும் மலைகளிலும் கல்லறைகளிலும் தங்கி, கூக்குரலிட்டு, தன்னைத்தானே கல்லுக்களால் கீறிக்கொண்டிருந்தான்.

கி. பி. ௩௧.

௬ அவன் தூரத்திலே இயேசுவானவரைக் கண்டு ஓடிவந்தபொழுது, அவனை நோக்கி,

௭ அசுத்த ஆவியே, நீ இந்த மனிதனைவிட்டுப் போ என்று அவர் கட்டளையிட்டபடியினாலே,

௮ அவன் அவருக்குத் தாழ்ந்து வணங்கி, இயேசுவே, உன்னதமான பராபரனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு, உமக்குப் பராபரன்மேல் ஆணையிடுகிறேன் என்று மிகுந்த சத்தமாய்க் கூப்பிட்டான்.

௯ அவர் அவனை நோக்கி, உன் பேரென்ன என்று கேட்டார், அதற்கு அவன் அநேகராய் இருக்கிறோம், ஆகையால் என் பேர் இலேகியோன் என்று சொல்லி,

௰ பின்பு அத்திசையிலிருந்து தங்களை ஓட்டிவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

௰௧ அவ்விடத்திலே மலையின் அருகே மிகுந்த கூட்டமான பன்றிகள் மேய்ந்துகொண்டிருந்தன.

௰௨ அப்பொழுது பசாசுகள் எல்லாம் அவருடனே சொன்னது: நாங்கள் பன்றிகளில் பிரவேசிக்கும்படிக்கு எங்களை அனுப்புமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௰௩ உடனே இயேசுவானவர் அவர்களுக்கு உத்தரவு கொடுத்தார், அப்பொழுது அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள்ளே பிரவேசித்தன; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளாகிய அந்தக் கூட்டம் உயர்ந்தமேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அதில் அமிழ்ந்து மாண்டது.

[1] மா. ௮. ௨௮. லூக். ௮. ௨௬.

கி. பி. ௩௧.

௰௪ அப்பொழுது பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, அதைப் பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள், பின்பு சம்பவித்ததைப் பார்க்கும்படிக்குச் சனங்கள் புறப்பட்டு,

௰௫ இயேசுவினிடத்தில் வந்து, இலேகியோனாகிய பசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரம் உடுத்திக்கொண்டு, உட்கார்ந்து புத்தி அடைந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்.

௰௬ பசாசுகள் பிடித்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்.

௰௭ [1]அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டு அப்புறம் போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௰௮ அந்தப்படி அவர் படவில் பிரவேசிக்கிறபொழுது [2]பசாசு பிடித்திருந்தவன் அவருடனேகூடப் போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான்.

௰௯ இயேசுவானவர் அவனுக்கு உத்தரவுகொடாமல், நீ உன் வீட்டிலே உன் இனத்தாரிடத்திற்குப் போய், கர்த்தா உனக்கு இரங்கி, உனக்குச் செய்த மிகுந்த விசேஷங்களை அவர்களுக்கு அறிவிப்பாயாக என்றார்.

௨௰ அந்தப்படி அவன் போய்த் தனக்கு இயேசுவானவர் செய்த விசேஷங்களைத் தெக்கப்போலி என்னும் தேசத்திலே பிரசித்தம் பண்ணினான், யாவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

௨௧ ¶ [3]பின்பு இயேசுவானவர் மறுபடியும் படவிலேறி இக்கரைக்கு வந்து கடலோரத்திலே இருந்தபொழுது, மிகுந்த சனங்கள் கூடி அவரிடத்தில் வந்தார்கள்.

௨௨ [4]அப்பொழுது செபஆலயத்தலைவரில் ஒருவனாகிய யாவீரு என்பவனும் வந்து, அவரைக் கண்டவுடனே அவருடைய பாதத்தின் அருகே விழுந்து,

௨௩ என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் கைகளை வைத்தருளும், அப்பொழுது பிழைப்பாளென்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

௨௪ அவர் அவனோடேகூடப் போனார்; அவரை நெருக்கத்தக்கதாக அநேக சனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

௨௫ ¶ [5]அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயானவள்,

௨௬ அநேக பரிகாரிகளால் மிகுந்த வருத்தப்பட்டு, தனக்குண்டான யாவையும் செலவழித்தும் சற்றாகிலும் சுகம் அடையாமல், அதிக வருத்தப்படுகிறபொழுது,

௨௭ இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு, அவருடைய வஸ்திரங்களை மாத்திரம் தொட்டால் சுகம் அடையலாமென்று எண்ணி,

௨௮ சனங்களுக்குள்ளே (சென்று,) அவருக்குப் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.

௨௯ உடனே அவளுடைய இரத்த ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கத் தான் ஆரோக்கியம் அடைந்ததை அவள் சரீரத்தில் உணர்ந்தாள்.

௩௰ உடனே இயேசுவானவர் தம்மிலிருந்து [6]வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து திரும்பி, சனங்களைப் பார்த்து, என் வஸ்திரங்களைத் தொட்டவர் யார் என்றார்.

௩௧ அதற்கு அவருடைய சீஷர்கள் சொன்னது: சனங்கள் உம்மை நெருக்குகிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டவர் யாரென்று எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.

[1] மத். ௮. ௩௪. அப். ௰௬. ௩௯.
[2] லூக். ௮. ௩௮.
[3] மத். ௯. ௧. லூக். ௮. ௪௰.
[4] மத். ௯. ௰௮. லூக். ௮. ௪௧.
[5] ௩ மோ. ௰௫. ௨௫. மத். ௯. ௨௰.
[6] லூக். ௬. ௰௯. ௮. ௪௬.

கி. பி. ௩௨.

௩௨ அவர் அப்படிச் செய்தவளைக் காணும்படிக்குச் சுற்றிலும் பார்த்தார்.

௩௩ அப்பொழுது தன்னிடத்திலே நடந்ததை அறிந்த ஸ்திரி பயந்து நடுங்கி வந்து, அவரைச் சாஷ்டாங்கமாய் வணங்கி, எல்லாவற்றையும் அவருக்கு உண்மையாய்ச் சொன்னாள்.

௩௪ அவளுடனே அவர் சொன்னது: மகளே, [1]உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று; நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை இன்றிச் சுகமாயிரு என்றார்.

௩௫ ¶ [2]அவர் பேசிக்கொண்டிருக்கையில் செபஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து, உம்முடைய குமாரத்தி இறந்துபோனாள், இனி என் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள்.

௩௬ அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசுவானவர் கேட்டு, உடனே ஆலயத்தலைவனை நோக்கி, நீ பயப்படவேண்டாம், விசுவாசமாகவே இரும் என்று சொல்லி,

௩௭ பின்பு பேதுருவும் யாக்கோபின் சகோதரனாகிய யோவானுந்தவிர, வேறொருவரும் தமக்குப் பின்செல்லுகிறதற்கு இடங்கொடாமல்,

௩௮ ஆலயத்தலைவனுடைய வீட்டிலே சேர்ந்து, சந்தடியையும் அழுதுகொண்டு மிகவும் புலம்புகிறவர்களையும் கண்டு,

௩௯ உட்பிரவேசித்து, நீங்கள் சந்தடிபண்ணி அழுதுகொள்ளுகிறதென்ன? பிள்ளை இறந்துபோகாமல் [3]நித்திரைபண்ணுகிறாள் என்றார்.

௪௰ அவர்கள் அவரை நோக்கி நகைத்தார்கள்; [4]பின்பு அவர் எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளை கிடக்கிற இடத்தில் பிரவேசித்து,

௪௧ அதின் கையைப் பிடித்து, தலீத்தாகூமி என்றார்; அதற்குச் சிறுபெண்ணே எழுந்திரு, உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அருத்தமாம்.

௪௨ உடனே பன்னிரண்டுவயதுள்ள அந்தப் பெண் எழுந்து நடந்தாள்; (அதைக் கண்டவர்கள்) மிகுந்த ஆச்சரியத்தோடே பிரமித்தார்கள்.

௪௩ [5]அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் அறிவியாதபடிக்கு உறுதியாகக் கட்டளையிட்டு, பின்பு அவளுக்குச் சாப்பாடு கொடுக்கும்படி சொன்னார்.

௬. அதிகாரம்.

௧ கிறிஸ்து தம்முடைய ஊராராலே அசட்டைபண்ணப்பட்டது. ௭ அவர் பன்னிரண்டு சீஷர்களுக்கும் அசுத்த ஆவிகளின்மேல் அதிகாரத்தைக் கொடுத்தது. ௰௪ கிறிஸ்துவைக்குறித்த பலவிதமான தாற்பரியங்கள். ௨௭ யோவான்ஸ்நானன் தலைவெட்டுண்டு, ௨௯ அடக்கம்பண்ணப்பட்டது. ௩௰ அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணித் திரும்பி வந்தது. ௩௪ ஐந்து அப்பங்களினாலும், இரண்டு மீன்களினாலும் செய்யப்பட்ட அற்புதம். ௪௮ கிறிஸ்து கடலின்மேல் நடந்தது. ௫௬ அவரைத் தொட்ட யாவரும் சுகம் அடைந்தது.

[6]அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அவருக்குப் பின்சென்றார்கள்.

௨ ஓய்வுநாள் வந்தபொழுது அவர் செபஆலயத்திலே உபதேசம்பண்ணத் தொடங்கினார்; அதைக்கேட்ட அநேகர் பிரமிப்படைந்து, [7]எங்கேயிருந்து இவைகள் இவனுக்குத் தெரியவந்தன? இவனுடைய கைகளினால் இப்படிப்பட்ட பலத்த அற்புதங்கள் நடக்கத்தக்கதாக, இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?

௩ இவன் மரியாளுக்குக் குமாரனும், [8]யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரனுமாகிய தச்சனல்லவா? இவனுடைய சகோதரிகளும் இங்

[1] மத். ௯. ௨௨. மாற். ௰. ௫௨. அப். ௰௪. ௯.

[2] லூக். ௮. ௪௯.

[3] யோவா. ௰௧. ௰௧.

[4] அப். ௯. ௪௰.

[5] மத். ௮. ௪. ௯. ௩௰. ௰௨. ௰௬. ௰௭. ௯. மாற். ௩. ௰௨. லூக். ௫. ௰௪.

[6] மத். ௰௩. ௫௪. லூக். ௪. ௰௬.

[7] யோவா. ௬. ௪௨.

[8] மத். ௰௨. ௪௬. கலா. ௧. ௰௯.

கே நம்மிடத்தில் இருக்கிறார்களல்லவா? என்று சொல்லி, [1]அவனைக் குறித்து வெறுபபடைந்தார்கள்.

௪ அவர்களுடனே இயேசுவானவா சொன்னது: [2]ஒரு தீர்க்கதரிசி தன் ஊரிலும் தன் இனத்தாரிடத்திலும் தன் குடும்பத்திலுமேயன்றி (மற்ற இடங்களிலே) கனஈனம் அடையான் எனறார்.

௫ [3]அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதே அன்றி வேறொரு அற்புதத்தைச் செய்யமாட்டாமல்,

௬ அவர்களுடைய [4]அவிசுவாசததைககுறித்து ஆச்சரியபபட்டாா

௭ ¶ [5]பின்பு அந்தத் திசையிலுள்ள கிராமங்களிலே திரிந்து உபதேசம்பண்ணினார்; [6]அல்லாமலும் அவா பன்னிருவரையும் அழைத்து, அசுத்தமான ஆவிகளின்மேல் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து,

௮ அவர்கள் பையையானாலும் ஆகாரத்தையானாலும் கச்சையில் *பணத்தையானாலும் வழிக்காகக் கூடக் கொண்டுபோகாமல், ஒரு தடியைமாததிரம் எடுததுபபோகவும்,

௯ [7]பாதரட்சைகளைப் போட்டுக்கொணடு போகவும், இரண்டு அங்கிகளைத தரியாதிருக்கவும், அவர்களுக்குக் கட்டளையிட்டு,

௰ [8]பின்பு அவர்களுக்குச சொன்னதாவது: எங்கேயாகிலும் நீங்கள் ஒரு வீட்டில் பிரவேசித்தது முதல், அவ்விடத்தைவிட்டுப் புறபபடுகிறவரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்.

௰௧ [9]எவர்கள உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் உங்களுக்குச் செவிகொடாமலும் இருககிறார்களோ, [10]அவர்களுடைய இடத்தை நீங்கள் விட்டுப் புறப்பட்டு, அவர்களுக்கு விரோதமான சாட்சியாக, உங்கள் உள்ளஙகால்களில் படிந்திருக்கிற தூசியை உதறிப்போடுங்கள்; நியாயத்தீர்பபு நாளிலே சோதோம் கொமோரா பட்டணததாரிலும் அந்தப் பட்டணததாா அதிக தண்டிப்பை அடைவார்கள் என்று மெய்யாகவே உஙகளுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, இரண்டிரண்டு பேராக அவர்களை அனுப்பினார்.

௰௨ அவர்கள் புறபபட்டு, மனந்திரும்புங்கள் என்று பிரசஙகித்து,

௰௩ அநேகம் பசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை [11]எண்ணெயால் பூசிக் குணமாக்கினார்கள்.

௰௪ ¶ [12]அவருடைய பேர் பிரசித்தமானபடியினாலே, இராசனாகிய ஏரோது (அவரைக்குறித்து) கேள்விப்பட்டு, யோவானஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறான்.

௰௫ [13]ஆதலால் பலத்த அற்புதங்கள் அவனாலே செய்யப்படுகின்றன என்றான்; சிலர் அவரை எலியாவென்றும், சிலர் அவரை ஒரு தீாக்கதரிசி, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போல இருக்கிறாரெனறும் சொன்னார்கள்.

௰௬ [14]ஏரோது அதைக் கேட்டபொழுது, அவன் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான், அவன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறான் என்றான்.

௰௭ அதெப்படியென்றால், ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளை விவாகம்பண்ணினபொழுது,

௰௮ யோவான் ஏரோதை நோக்கி, [15]நீர் உமது சகோதரனுடைய மனைவியைக கொள்ளுகிறது நியாயமல்ல என்று சொன்னபடியினாலே, ஏரோது (ஆள்களை அனுப்பி) அவனைப் பிடித்துக் காவலில் கட்டிவைத்தான்.

கி. பி. ௩௨

[1] மத் ௰௧ ௬.

[2] மத் ௰௩ ௫௭. யோவா ௪ ௪௪

[3] ௧ மோ. ௰௯ ௨௨ ௩௨ ௨௫ மத ௰௩ ௫௮ மாற் ௯ ௨௩

[4] எசா ௫௯ ௰௬

[5] மத் ௯ ௩௫ லூக் ௰௩ ௨௨

[6] மத ௰ ௧ மாற ௩ ௰௩, ௰௪ லூக் ௯ ௧

* இந்த மொழி ஒரு சின்னத்தட்டையாவது பொதுவாயப் பணத்தையாவது குறிக்கும் மத ௰ ௯ லூக ௯ ௩

[7] அப. ௰௨ ௮

[8] மத ௰ ௰௧ லூக் ௯ ௪ ௰ ௭ ௮

[9] மத் ௰ ௰௪ லூக் ௰ ௰

[10] அப ௰௩. ௫௧ ௰௮ ௬

[11] யாக். ௫ ௰௪

[12] மத் ௰௪ ௧ லூக் ௯, ௭

[13] மத ௰௬ ௰௪ மாற ௮ ௨௮

[14] மத ௰௪ ௨ லூக் ௩ ௰௯

[15] ௩ மோ ௰௮ ௰௬ ௨௰. ௨௧

௰௯ அல்லாமலும் ஏரோதியாள் அவனுக்குக்கெடுதிநினைத்து, அவனைககொலைசெய்ய விரும்பினாள்.

௨௰ [1]ஏரோது யோவானை நீதியும் பரிசுத்தமும் உள்ளவனென்று அறிந்து, அவனுககுப பயநது, அவனை நன்றாய்க காத்து, அவனுடைய ஆலோசனையின்படி அநேகம் காரியங்களைச் செய்து, விருபபததோடே அவனுடைய சொற்கேட்டு வந்தான; ஆகையால் அவள அப்படிச் செயயக் கூடாமல் இருநதது

௨௧ பின்பு அதற்கேற்ற நாள் வந்தது; எபபடியென்றால், [2]ஏரோது தன் சென்மநாளிலே [3]தன்னுடைய மநதிரிகளுககும் சேனாபதிகளுககும் கலிலேயாநாட்டின பிரபுக்களுககும் விருநதுபணணின காலததிலே,

௨௨ ஏரோதியாளுடைய குமாரததி உளளே சென்று, ஏரோதுககும், பநதியிருநத மற்றவாகளுககும் பிரியம் உண்டாகததககதாக நடனம்பண்ணினபொழுது, இராசா அநதச் சிறுபெண்ணை நோககி, உனககு வேண்டியதை என்னிடத்தில் கேள், நான் உனக்குக தருவேன் என்று சொனனதுமல்லாமல்,

௨௩ [4]நீ என் இராச்சியத்தில் பாதிவரைக்கும் எதைக் கேட்டாலும், அதை உனக்குத தருவேனென்று அவளுக்கு ஆணையும் இட்டான்.

௨௪ அபபொழுது அவள் வெளியே போய்த் தன் தாயை நோககி, நான் என்ன கேட்கவேண்டும் என்று சொன்னதற்கு, யோவான் ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்.

௨௫ உடனே அவள் சீக்கிரமாக இராசாவினிடத்திற்குத் திரும்பிப போய், நீர் இபபொழுதுதானே ஒரு தாலத்திலே யோவான்ஸநானனுடைய தலையை எனக்குத் தர வேண்டும் என்று கேட்டாள்.

௨௬ [5]அபபொழுது இராசா மிகுநத துக்கம் அடைந்தான்; அபபடியிருந்தும், ஆணைகளின் நிமித்தமும் பநதியிருநதவர்களின் நிமிததமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல்,

௨௭ உடனே அவனுடைய தலையைக் கொண்டுவரும்படிககு, போசசேவகனாகிய காவற்காரனுக்குக * கட்டளையிட்டு அனுபபினான்; அநதபபடியே அவன் போய்க காவற்கூடததிலே யோவானைச சிரச்சேதமபண்ணி,

௨௮ ஒரு தாலததிலே அவனுடைய தலையைக் கொண்டுவநது, அதைச சிறுபெண்ணுக்குக் கொடுததான்; சிறுபெண் அதைத தன் தாயககுக கொடுததாள்.

௨௯ அவனுடைய சீஷா அதைக கேட்டு வநது, அவன் உடலை எடுதது, ஒரு கல்லறையிலே வைத்தாாகள்.

௩௰ ¶ [6]அத்தருணத்திலே அபபோஸதலர்கள இயேசுவினிடத்தில கூடிவநது, தாஙகள் செயத யாவையும் போதகம்பண்ணின யாவையும் அவருககு அறிவிததாாகள்.

௩௧ பின்பு அவாகள் போசனமபண்ணுமபடிககும் சமயம் இலலாதிருககததககதாக [7]வருகிறவாகளும் போகிறவாகளும மிகுதியானபடியினாலே, [8]அவா அவாகளை நோககி, நீஙகள வனாநதரமான இடததிலே தனிததிருநது சற்றே இளைபபாற வாருங்கள என்று சொனனார்.

௩௨ [9]அந்தப்படி அவர்கள் தனித்திருககும்படிக்குப படவில் பிரவேசித்து வனாந்தரமான இடத்திற்குப போனாாகள்.

௩௩ ¶ அவர்கள் புறபபட்டுப போகிறதைச் 'சனஙகள கண்டு, (அவர்கள் போகிற) இடத்தை அறிந்து, சகல பட்டணங்களிலுமிருந்து கால் நடையாய் அவ்விடத்திறகு ஓடி, அவர்களுக்கு முன்

கி. பி. ௩௨.

[1] மத் ௰௪ ௫ ௨௧ ௨௬

[2] மத ௰௪ ௬

[3] ௧ மோ ௪௰ ௨௰

[4] எஸ ௫ ௩, ௬ ௭ ௨

[5] மத ௰௪ ௯

* அல்லது கொலைகாரனுககு

[6] லூக் ௯ ௰

[7] மாற ௩ ௨௰

[8] மத் ௰௪. ௰௩.

[9] மத் ௰௪ ௰௩.

னே அஙகே சேர்நது அவரிடத்தில் கூடிவநதார்கள்.

௩௪ [1]இயேசுவானவர் கரையில் வநது மிகுநத சனஙகளைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனிலலாத ஆடுகளைபபோல இருந்தபடியினாலே, அவாகள்மேல உருக்கமாய இரங்கி, [2]அநேக காரியஙகளை அவாகளுக்கு உபதேசித்தாா.

௩௫ [3]பின்பு பொழுது மிகவும் கழிநதுபோனபடியால், அவருடைய சீஷா அவரிடததில் வநது, இது வனாநதரமான இடம், அல்லாமலும் மிகவும பொழுதுபோயிற்று.

௩௬ போசனம்பண்ணுகிறதற்கு இவர்களிடததில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருககிற ஊர்களுககும கிராமங்களுக்கும் போய், தஙகளுககாக அபபஙகளை வாஙகிக்கொள்ளும்படிக்கு, இவாகளை அனுபபிவிடவேண்டும் என்றார்கள

௩௭ அதற்கு அவா, நீங்களே இவாகளுக்குப போசனம் கொடுஙகள என்றார்; அவாகள் சொன்னது: இவாகளுக்குப் போசனம் கொடுக்கும்படிககு, [4]நாஙகள் போய் *இருநூறு தேநாரிய பணததிற்கு அபபஙகளை வாஙகிக்கொண்டுவரலாமா என்றார்கள.

௩௮ அதற்கு அவர், எவ்வளவு அப்பங்கள் உஙகளிடத்தில் உண்டு, போய்ப பாருங்கள் என்றார்; [5]அவர்கள் விசாரித்து (வந்து,) ஐநது அபபமும் இரண்டு மீனும் இருக்கின்றனவென்று சொன்னார்கள்.

௩௯ அப்பொழுது அவர்கள் கூட்டங்கூட்டமாக எல்லாச் சனஙகளையும் பசுமையான புல்லின்மேல் உளுக்காரபபண்ணும்படிக்குக் கட்டளையிட்டார்.

௪௰ அப்படி நூறுபேர் ஒரு கூட்டமும், ஐம்பதுபேர் ஒரு கூட்டமுமாகச் சதுக்கம் சதுக்கமாய் உளுக்காந்தார்கள்.

௪௧ பின்பு அவர் அவ்வைந்து அபபஙகளையும் அவ்விரண்டு மீனையும் எடுத்து, [6]வானத்தை அண்ணாந்து பார்த்து அவைகளை ஆசீர்வதிதது, பின்பு அப்பங்களைப் பிட்டுச் சனங்களுக்குக் கொடுககும்படிக்கு அவைகளைச் சீஷர்களுக்குக் கொடுத்து, பின்பு அவ்விரண்டு மீனையும் அவர்கள் எல்லாருக்கும் பஙகிட்டார்.

௪௨ எல்லாரும் சாப்பிட்டுத் திருத்தியடைந்தார்கள்.

௪௩ அல்லாமலும் (அப்பங்களிலும்) மீன்களிலும் சேஷமானவைகளைப் பன்னிரண்டுகூடை நிறைய எடுத்தாாகள்.

௪௪ ஏறக்குறைய ஐயாயிரம்புருஷர் போசனம்பண்ணினார்கள்.

௪௫ ¶ [7]பினபு தாம் சனங்களை அனுபபுகையில, தமக்கு முன்னாகச் சீஷாகள் படவில் ஏறி அக்கரையில் பெதுசாயிதா என்னும் †ஊருககுப போகும்படிக்கு அவர்களைத் துரிதபபடுத்தினாா.

௪௬ பின்பு அவர் சனஙகளை அனுப்பி, செபததியானம்பண்ணும்படிககு மலையில் ஏறினார்.

௪௭ ¶ [8]சாயநதரமானபொழுது, படவு கடலின் நடுவிலே சேர்நதது; அவர்மாத்திரம் கரையிலே இருந்தார்.

௪௮ அபபொழுது காற்று அவர்களுக்கு எதிரானபடியினாலே, அவாகள் வருததததோடே (படவை) தளளினதை அவர் கண்டு, பின்பு இராத்திரியில் நாலாம சாமததிலே புறப்பட்டுக் கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்குச் சமீபித்து, [9]அவர்களைக் கடநது போக மனதாயிருந்தாா.

௪௯ கடலிலே நடந்துபோகிற அவரை அவர்கள் கண்டபொழுது, அது ஆவேசம் என்று எண்ணிச் சத்தமிட்டார்கள்.

௫௰ அல்லாமலும் எல்லாரும் அவரைக்கண்டு, கலக்கம் அடைநதார்கள்; உடனே அவர் அவர்களை

கி. பி ௩௨.

[1] மத ௯ ௩௬ ௰௪ ௰௪

[2] லூக ௯ ௰௧.

[3] மத ௰௪ ௰௫ லூக் ௯ ௰௨

[4] ௪ மோ. ௰௧ ௰௩, ௨௨ ௨ இரா ௪ ௪௩

* உரோமருடைய தேநாரிய பணமொன்று ஏழரைப பேஸிசுக்குச்சரி மத ௰௮ ௨௮

[5] மத் ௰௪. ௰௭ லூக் ௯ ௰௩. யோவா ௬ ௯. மத ௰௫ ௩௪ மாற ௮ ௫

[6] ௧ சாமு ௯ ௰௩ மத ௨௬ ௨௬

[7] மத் ௰௪ ௨௨ யோவா ௬ ௰௭

† ஊருக்கு நேராக

[8] மத ௰௪ ௨௩ யோவா ௬ ௰௬, ௰௮

[9] லூக் ௨௪ ௨௮

நோக்கி, திடமாயிருங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

௫௧ பின்பு அவர் அவரகள் இருக்கிற படவில் பிரவேசித்தவுடனே காற்று நின்றுபோயிற்று

௫௨ [1]அவர்கள் கடினமான இருதயம் உடையவர்களாகையால், அந்த அப்பங்களைக்குறித்துச் சிநதனைபண்ணாமல் இருநதபடியினாலே [2]மிகவும் மிகுதியாய்த் தங்களுக்குள்ளே பிரமித்து ஆச்சரியபபட்டார்கள்.

௫௩ ¶ [3]பின்பு அவர்கள் புறப்பட்டுக் கெநேசரேதது நாட்டிலே வந்து கரைபிடித்தார்கள்.

௫௪ அவர்கள் படவைவிட்டிறங்கினவுடனே சனங்கள் அவரை அறிந்து,

௫௫ அந்தத் திசையில் எங்கும் ஓடித்திரிந்து, படுக்கைகளில கிடக்கிற பிணியாளிகளை எடுத்து, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களில் கொண்டுவரத் தொடங்கினார்கள்.

௫௬ அல்லாமலும அவர் பிரவேவேசித்த கிராமம் பட்டணம் ஊர எவைகளோ, அவைகளின் சநதைகளில் பிணியாளிகளை வைத்து, அவர்கள் அவருடைய [4]வஸதிரத்தின் ஓரததைமாத்திரம் தொடும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்; எவர்கள் அதைத *தொட்டார்களோ அவர்கள் சொஸ்தம் அடைந்தார்கள்.

௭. அதிகாரம்.

௧ சீஷரகள் கைகழுவாமல போசனமபண்ணினதைக்குறித்துப பரிசேயர் குற்றமபிடிததது அ அநதப பரிசேயர் முதலியவரகள மனுஷரகளுடைய பாரமபரை நியாயஙகளினால் பராபரனுடைய கட்டளைகளை மீறினது ௰௪ போசனம மனுஷனை அசுசிபபடுத்தாதெனபது ௨௪ இரிஸது சீரோப பேனிககே சாதியான ஒரு ஸதிரீயின மகளிடத்திலிருந்த அசுதத ஆவியை நீக்கி, ௩௧ செவிடனும தெத்துவாயனுமான ஒருவனைச் சுகபபடுததினது

[5]பரிசேயரும் மற்ற யூதர்களெல்லாரும் பெரியோர்களுடைய பாரம்பரை நியாயங்களைக் கைக்கொள்ளும்படிக்கு மணிக்கட்டுவரைக்கும் கைகழுவாமல் †போசனம்பண்ணமாட்டார்கள்.

௨ அல்லாமலும் சந்தைகளிலிருந்து (வந்தால்) ஸ்நானம்பண்ணாமல் போசனம்பண்ணமாட்டார்கள்; மேலும் சலபாத்திரங்களையும், குடங்களையும், செபபுபபானைகளையும், ‡கட்டில்களையும் ஸ்நானம்பண்ணுவித்து, மற்றும் அப்படிப்பட்ட அநேகம் சடஙகுகளைப பற்றிக்கொள்ளுவார்கள்.

௩ ஆதலால் பரிசேயரும் வேதபாரகரில் சிலரும்கூடி, எருசலேம் பட்டணத்திலிருநது அவரிடததில் வந்து,

௪ அவருடைய சீஷரில் சிலர் கைகழுவாமல் அசுத்தமான கைகளோடே § போசனம்பண்ணுகிறதைக கண்டபொழுது, அவர்கள் அவரை நோக்கி,

௫ [6]உம்முடைய சீஷர் பெரியோருடைய பாரம்பரை நியாயத்தை மீறி நடந்து, கைகழுவாமல் போசனம்பண்ணுகிறதென்ன என்று கேட்டாரகள்.

௬ அதற்கு மாறுததரமாக அவர் சொன்னது: நீஙகள பராபரனுடைய கட்டளையைவிட்டு, குடங்களையும் சலபாத்திரஙகளையும் ஸ்நானம்பண்ணுவிதது, மற்றும் அபபடிப்பட்ட அநேக சடங்குகளைச செய்து, மனிதர்களுடைய பாரம்பரை நியாயஙகளைக் கைககொள்ளுகிறீர்கள்.

௭ ஆகையால் [7]இந்தச் சனங்கள் உதடுகளினாலே என்னைக கனம்பண்ணியும், இவரகளுடைய இருதயம் எனக்குத் தூரமாய் விலகி இருக்கிறதென்றும்,

௮ மனிதர்களுடைய கற்பனைகளாகிய உபதேசங்களை இவர்கள் கற்றுக்கொண்டு, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், ஏசாயா என்பவன் மாயக்காரராகிய உங்களைக்குறித்து நன்றாய்த்

கி பி. ௬௨.

[1] மாற ௮ ௰௭, ௰௮
[2] மாற ௬.௫ ௰௧. ௰௪.
[3] மத் ௰௪ ௩௪
[4] மத ௯ ௨௧ மாற் ௫ ௨௭, ௨௮ அப ௰௯ ௰௨
* அலலது அவரை
[5] மத ௰௫ ௧
† அலலது எளிய வாகளோடே
‡ அலலது பீடஙகளையும
§ அலலது அடிக்கடி
[6] மத ௰௫ ௨
[7] ஏசா ௨௯ ௰௩ மத ௰௫ ௮

தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான் என்று சொல்லி,

௯ பின்பு உங்கள் பாரம்பரை நியாயங்களைக் காத்துக்கொள்ளும்படிக்கு, நீங்கள் பராபரனுடைய கட்டளையைத் தள்ளிக்கொண்டு* வருகிறது நன்றாயிருக்கிறது.

௰ என்னவென்றால், [1]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக [2]என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவனுக்கு மரண ஆக்கினையைக் கொடுக்கவேண்டும் என்றும் மோசே சொன்னாரே.

௰௧ [3]நீங்கள், ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி, உங்களுக்கு என்னாலே உதவுகிறதேதோ, அது (தேவாலயத்திற்குக் காணிக்கையாகிய) கொர்பானாவதாக என்று சொன்னால்,

௰௨ பின்பு அவன் தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் உதவிசெய்ய வேண்டுவதில்லை என்று உத்தரவு கொடுத்து,

௰௩ இவ்விதமாய் உங்களால் உண்டாக்கப்பட்ட பாரம்பரை நியாயத்தினாலே பராபரனுடைய வசனத்தை அவமாக்குகிறீர்கள்; அதுபோல நீங்கள் மற்றும் அநேகம் காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொல்லி,

௰௪ [4]பின்பு எல்லாச் சனங்களையும் அழைத்து, அவர்களுடனே சொன்னது: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்துச் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

௰௫ ஒரு மனிதனுக்குப் புறம்பேயிருக்கிற எந்தப்பொருளும் அவனுக்கு உட்பிரவேசிக்கிறபொழுது அவனை அசுசிப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிற பொருள்களே அவனை அசுசிப்படுத்துகின்றன.

௰௬ [5]கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனானால் கேட்கக்கடவன் என்றார்.

௰௭ ¶ [6]பின்பு அவர் சனங்களைவிட்டு வீட்டில் பிரவேசித்தபொழுது, அவருடைய சீஷர்கள் அந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் வினாவினார்கள்.

௰௮ அவர்களுடனே அவர் சொன்னது: நீங்களும் புத்தியில்லாதவர்களா? புறம்பே இருக்கிற எந்தப்பொருளும் மனிதனுக்கு உட்பிரவேசிக்கிறபொழுது அவனை அசுசிப்படுத்தமாட்டாதென்று நீங்களும் அறிந்திருக்கவில்லையா?

௰௯ அது அவனுடைய இருதயத்திலே பிரவேசியாமல் வயிற்றில் பிரவேசிக்கிறதே; அதிலிருந்து எல்லாப் போசனங்களையும் கழிக்கிற ஆசனவழியாய்ப் புறப்படுகின்றன.

௨௰ மனிதனுடைய உள்ளத்திலிருந்து புறப்படுகிறதே அவனை அசுசிப்படுத்துகின்றது.

௨௧ அதெப்படியெனில், மனிதருடைய இருதயத்திலிருந்து,

௨௨ [7]விபசாரம், வேசித்தனம், கொலை, திருட்டு, †தகாதபொருளாசை, மூர்க்கம், கபடம், காமவிகாரம், பொறாமை, தூஷணம், அகந்தை, மதிகேடு என்பவைகளுக்கு ஏதுவான பொல்லாத யோசனைகள் புறப்படுகின்றன.

௨௩ தீமையான இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு, மனிதனை அசுசிப்படுத்துகின்றன என்று திருவுளம்பற்றினார்.

௨௪ ¶ [8]பின்பு அவர் எழுந்து அவ்விடம்விட்டுத் தீறு சீதோன் பட்டணங்களின் எல்லைகளுக்குப் போனார்; அங்கே அவர் ஒரு வீட்டிலே பிரவேசித்த பின்பு, தம்மை ஒருவரும் அறியாமல் இருக்கும்படிக்கு மனதாயிருந்தும், அவர் மறைந்திருக்கிறதற்கு ஏதுவில்லை.

௨௫ எப்படியென்றால், சூர்பேனீக்கியா தேசத்தில் பிறந்த அஞ்ஞானியாகிய ‡ஒரு ஸ்திரியானவளுக்கு அசுத்த ஆவியையுடைய மகள் இருந்தாள்.

---

* அல்லது புரட்டி.

[1] ௨ மோ ௨௰. ௰௨. ௫ மோ ௫ ௰௬. மத ௰௫. ௪.

[2] ௨ மோ ௨௧ ௰௭ ௩ மோ ௨௰. ௯ வாக். ௨௰ ௨௰

[3] மத ௰௫ ௫ ௨௩ ௰௮

[4] மத் ௰௫ ௰

[5] மத ௰௩ ௯

[6] மத ௰௫. ௰௫.

[7] ௨ மோ ௨௰ ௰ அ ௨௧ மத ௰௫ ௰௯

† அல்லது பொருளாசைகள், மூர்க்கங்கள்

[8] மத ௰௫ ௨௧

‡ அல்லது கிரேக்க.

௨௬ அந்த ஸ்திரீ அவரைக்குறித்துக் கேள்விப்பட்டபொழுது, அவள் வந்து வணக்கமாய் அவருடைய பாதங்களின் அருகே விழுந்து, தன்னுடைய மகளிலிருந்து பசாசைத் துரத்தவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள்.

௨௭ இயேசுவானவர் அவளைநோக்கி, பிள்ளைகளுடைய ஆகாரத்தை எடுத்து, நாய்களுக்குக் கொடுக்கிறது நியாயமல்ல; ஆகையால் முதலாவது பிள்ளைகளே திருத்தியடையட்டும் என்றார்.

௨௮ அதற்கு அவள் சொன்னது: ஆண்டவரே, அது சரிதான்; ஆனாலும் போசனப்பலகைகளின்கீழிருக்கிற நாய்கள் பிள்ளைகளுடைய உச்சிட்டங்களைத் தின்னுமே என்றாள்.

௨௯ அப்பொழுது அவர் சொன்னது: நீ இந்த வசனத்தைச் சொன்னபடியினாலே (சந்தோஷமாய்ப்) போ; பசாசு உன் மகளிலிருந்து புறப்பட்டுப்போயிற்று என்றார்.

௩௰ அவள் தன் வீட்டிலே போய்ச் சேர்ந்தபொழுது பசாசு புறப்பட்டுப்போனதையும், தன் மகள் கட்டிலின்மேல் படுத்திருக்கிறதையும் கண்டாள்.

௩௧ ¶ [1]பின்பு அவர் தீருசீதோன் பட்டணங்களின் திசைகளைவிட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலி என்னும் தேசத்தின் திசைகளின் வழியாய் மறுபடியும் கலிலேயா நாட்டின் கடலருகே வந்தார்

௩௨ [2]அங்கே கொன்னைவாயையுடைய செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௩ அப்பொழுது அவர் கூட்டத்திலிருந்து அவனை ஒரு பக்கத்திலே கொண்டுபோய், தமது விரல்களை அவனுடைய காதுகளில் வைத்து [3]உமிழ்ந்து, அவனுடைய நாவைத்தொட்டு,

கி. பி. ௩௨.

1 மத் ௰௫. ௨௧
2 மத் ௯. ௩௨ லூக் ௰௧. ௰௪
3 மாற் ௮ ௨௩ யோவா ௯. ௬
4 மாற் ௬ ௪௧ யோவா ௰௧ ௪௧ ௰௭ ௧
5 யோவா ௰௧ ௩௩,௩௮
6 ஏசா ௩௫ ௫,௬ மத் ௰௧ ௫.
7 மாற். ௫ ௪௩

௩௪ [4]பின்பு வானத்தை அண்ணாந்து பார்த்து [5]மூச்சைவிட்டு, எப்பத்தா என்றார்; எப்பத்தா என்பதற்குத் திறக்கப்படுவாயாக என்று அருத்தமாம்.

௩௫ [6]உடனே அவனுடைய காதுகள் திறக்கப்பட்டன; அவன் நன்றாய்ப் பேசத்தக்கதாக அவனுடைய நாவின் கட்டும் நீக்கப்பட்டது.

௩௬ [7]பின்பு அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்; அப்படியிருந்தும், தங்களுக்கு அவர் அப்படிக் கட்டளையிட்டது எவ்வளவோ, அவ்வளவாய் அதைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

௩௭ அல்லாமலும் அவர் சகலத்தையும் நன்றாய்ச் செய்தருளினார், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறார் என்று மிகவும் மிகுதியான ஆச்சரியத்தோடே சொல்லிக்கொண்டார்கள்.

௮. அதிகாரம்.

௧ கிறிஸ்து நாலாயிரம்பேருக்கு அற்புதமாய்ச் சாப்பாடு கொடுத்தது ௰ பரிசேயருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை என்பது ௰௪. பரிசேயருடைய புளித்தமாவுக்கும், ஏரோதேயினுடைய புளித்தமாவுக்கும் எச்சரிக்கையாயிருக்கப் போதித்தது ௨௨ ஒரு குருடனுக்குப் பார்வையளித்தது ௨௭ பாடுபட்டு உயிரோடெழுந்திருக்கப் போகிறவராகிய கிறிஸ்து தாமே என்று அறிவித்தது ௩௪ சுவிசேஷத்தின் நிமித்தமாய் வரும் துன்பங்களைப் பொறுமையோடே சகிக்கவேண்டுமென்று போதித்தது.

8 மத் ௰௫ ௩௨

[8]அந்த நாட்களிலே சனங்கள் மிகுந்த கூட்டமாய்ப் போசனம்பண்ணுகிறதற்கு ஒன்றும் இல்லாதிருந்தபொழுது, இயேசுவானவர் தம்முடைய சீஷர்களை அழைத்து,

௨ இந்தச் சனங்கள் என்னிடத்தில் வந்து மூன்றுநாளாயிற்று; இப்பொழுது போசனம்பண்ணுகிறதற்கு இவர்களுக்கு ஒன்றுமில்லையே; ஆகையால் இவர்கள்மேல் உருக்கமாய் இரங்குகிறேன்.

௩ அல்லாமலும் இவர்களில் சிலா தூரத்திலிருநது வந்தவர்களாகையால், நான அவர்களைப பட்டினியாய் வீட்டிற்கு அனுபபினால் வழியிலே சோர்ந்துபோவார்கள் என்று சொன்னபொழுது,

௪ சீஷர்கள் அவருக்கு மாறுத்தரமாக, இந்த வனாந்தரத்திலே ஒருவன் இவர்களுக்கு அபபஙகளினாலே திருத்தியாக்குவது எபபடி என்றார்கள்.

௫ அதற்கு அவர், [1]எத்தனை அபபஙகள் உங்களிடத்தில் உண்டென்று கேட்டார்; ஏழு அப்பஙகள் உண்டென்றார்கள்.

௬ அப்பொழுது சனங்கள் தரையிலே இருக்கும்படி கட்டளையிட்டு, பின்பு அந்த ஏழு அபபங்களையும் எடுத்துத் தோத்திரம்பண்ணி, அவைகளைப் பிட்டு, அவர்களுககுள்ளே பரிமாறுமபடிககு அவைகளைச் சீஷர்களிடத்தில் கொடுததா; அந்தபபடி அவர்கள் சனஙகளுக்குப பரிமாறினார்கள்.

௭ அல்லாமலும் சில சிறிய மீன்கள் அவர்களிடததில் இருநதன; [2]அவர் தோத்திரம் சொன்னபினபு அவைகளையும்பரிமாறும்படிக்குக் கட்டளையிட்டார்.

௮ அப்படிச் சனங்கள் சாப்பிட்டுத் திருத்தியடைந்தார்கள்; ஏழு கூடை நிறையச் சேஷமானவைகளையும் எடுத்துககொண்டார்கள்.

௯ சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம்பேர் உண்டு.

௰ ¶ [3]பின்பு அவர்களை அனுபபிவிட்டு, உடனே தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறித் தலுமனுத்தாவூரின் திசைகளில் வந்தார்.

௰௧ [4]அங்கேயிருந்து பரிசேயர் அவரைப் பரிட்சைபார்க்கும்படிக்குப் புறப்பட்டு வந்து, அவருடனே தருக்கம்பண்ண ஆரம்பித்து, அவர் வானத்திலிருந்து ஒரு அடையாளததைக் காட்டும்படி கேட்டார்கள்.

கி. பி. ௩௨.

1 மத ௰௫ ௩௪. மாற் ௬ ௩௮
2 மத் ௰௪ ௰௯ மாற ௬ ௪௧
3 மத ௰௫ ௩௯
4 மத் ௰௨ ௩௮ ௰௬ ௧ யோவா ௬ ௩௰
5 மத ௰௬
6 மத் ௰௬ ௬ லூக ௰௨ ௧
7 மத் ௰௬ ௭
8 மாற ௬ ௫௨
9 மத ௰௪ ௨௰ மாற் ௬ ௪௩ லூக் ௯ ௰௭ யோவா ௬ ௰௩

௰௨ அபபொழுது அவர் தமது உள்ளத்திலிருந்து பெருமூச்சைவிட்டு, இந்தத் தலைமுறையார் என்னததினாலே ஓர் அடையாளத்தைக கேட்கிறார்கள்; இந்தச் சந்ததியாருக்கு ஓர் அடையாளம் கொடுக்கபபடுவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச், சொல்லுகிறேன் என்று சொல்லி,

௰௩ அவர்களைவிட்டு மறுபடியும் படவில் ஏறி, அக்கரைக்குப போனார்.

௰௪ ¶ [5]சீஷர்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுபோக மறந்தார்கள்; படவில்(பிரவேசிக்கையில்) ஒரே அபபமமாத்திரம் அவர்களிடததில் இருந்தது.

௰௫ [6]அபபொழுது அவர் அவர்களை நோக்கி, நீஙகள் பரிசேயருடைய புளிபபுள்ள மாவுக்கும், ஏரோதினுடைய புளிபபுள்ள மாவுக்கும் விலகி, மிகவும் எச்சரிககையாயிருககக்கடவீர்கள் என்று அவர்களுக்குக்கட்டளையிட்டார்.

௰௬ அவர்கள் (அதைக் கேட்டு,) தஙகளுக்குள்ளே யோசனைபண்ணிககொண்டு, நம்மிடத்தில் [7]அபபங்கள் இல்லாதபடியால் இபபடிச் சொன்னார் என்றார்கள்.

௰௭ இயேசுவானவர் அதை அறிந்து, அவர்களை நோக்கி, உஙகளிடத்தில் அபபங்கள் இல்லாததைக்குறிதது ஏன் யோசனைபண்ணுகிறீர்கள்? [8]இதுவரைக்கும் நீங்கள் அறிந்துகொள்ளாமலும் சிந்திததுக்கொள்ளாமலுமா இருக்கிறீர்கள்; இதுவரைக்கும் உஙகள் இருதயம் கடினமாயிருக்கிறதா?

௰௮ கண்கள் இருநதும் நீங்கள் காணாமலா இருக்கிறீர்கள்? காதிருநதும் நீஙகள் கேளாமலா இருக்கிறீர்கள்? நீங்கள் நினைவுகூரவில்லையா?

௰௯ [9]அந்த ஐயாயிரம்பேருக்குள்ளே நான் அவ்வைந்து அப்பங்களையும் பிட்டுக் கொடுத்தபொழுது, எவ்வளவு கூடைநிறையச்

சேஷமானவைகளை எடுத்தீர்கள் என்று கேட்டதற்கு; [illegible]ன்னிரண்டு கூடை நிறைய எடுத்தோம் என்றார்கள்.

௨௰ [1]அல்லாமலும் அந்த நாலாயிரம்பேருக்குள்ளே (நான்) அந்த ஏழு அப்பங்களையும் (கொடுத்த) பொழுது, எவ்வளவு கூடைநிறையச் சேஷமானவைகளை எடுத்துக்கொண்டீர்கள் என்று கேட்டதற்கு, ஏழு கூடைநிறைய என்றார்கள்.

௨௧ அவர் சொன்னது: அப்படியிருக்க, [2]நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பதெப்படி என்று திருவுளம்பற்றினார்.

௨௨ ¶ பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அங்கே ஒரு குருடனை அவரிடத்திற்குக் கொண்டுவந்து, அவனைத் தொடும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௨௩ அப்பொழுது அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்திற்குப் புறம்பே கொண்டுபோய், [3]அவனுடைய கண்களில் உமிழ்நீரைத் தடவித் தமது கைகளை அவன்மேல் வைத்து, உனக்கு ஏதாகிலும் தோன்றுகிறதா என்று கேட்டார்.

௨௪ அவன் அண்ணாந்து, நடந்துபோகிற மனிதரை மரங்கள் போலக் காண்கிறேன் என்றான்.

௨௫ பின்பு அவர் மறுபடியும் தம்முடைய கைகளை அவனுடைய கண்களின்மேல் வைத்து அவன் திரும்ப அண்ணாந்து பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் நன்றாய்க் குணமாக்கப்பட்டுச் சகலத்தையும் தெளிவாய்ப் பார்த்தான்.

௨௬ பின்பு அவர் அவனை நோக்கி, [4]நீ கிராமத்தில் பிரவேசியாமலும், அதில் ஒருவனுக்கும் இதைச் சொல்லாமலும் இருவென்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

௨௭ ¶ [5]பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷர்களோடுங்கூட அவ்விடம்விட்டுப் பிலிப்பின் கேசரீயாபட்டணத்தருகே இருக்கிற கிராமங்களுக்குப் போனார்; வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, என்னைக்குறித்து மனிதர் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

௨௮ அவர்கள் சொன்னது: [6]சிலர் உம்மை ஸ்நானனாகிய யோவானென்றும், சிலர் எலியாவென்றும், சிலர் உம்மைத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

௨௯ அப்பொழுது அவர், நீங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார்; அதற்குப் பேதுரு, [7]நீர் கிறிஸ்துவே என்றான்.

௩௰ [8]அப்பொழுது தம்மைக்குறித்து அப்படி ஒருவருக்கும் சொல்லாதபடிக்குக் கெட்டியாய் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௩௰௧ ¶ [9]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும் பெரியோர்கள் பிரதான ஆசாரியர் வேதபாரகர் என்பவர்களாலே தள்ளப்படவும், மரணமடையவும், பின்பு மூன்றுநாளுக்குள்ளே உயிரோடெழுந்திருக்கவும் வேண்டுமென்று அவர்களுக்கு அறிவிக்கத் தொடங்கினார்.

௩௰௨ அப்படி அவர் வெளியரங்கமாய்ப் பேசிக்கொண்டபொழுது, பேதுரு அவரைப் பக்கத்திலே அழைத்து, அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

௩௰௩ உடனே அவர் திரும்பி, தம்முடைய சீஷர்களை நோக்கிப் பார்த்து, பின்பு பேதுருவை நோக்கி, நீ பராபரனுக்குப் பிரியமானவைகளைச் சிந்தியாமல் மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே, சாத்தானே நீ என் முன் இராமல் போவென்று அவனைக் கடிந்துகொண்டு,

கி. பி. ௩௨.

[1] மத் ௰௫ ௩௭ ௮ ௰௪

[2] மாற ௬ ௫௨ ௰௭ ௰௪

[3] மாற ௭ ௩௩

[4] மத ௮ ௪ மாற் ௫ ௪௩

[5] மத ௰௬ ௰௩ லூக் ௯ ௰௮

[6] மத ௰௪. ௨

[7] மத ௰௬. ௰௬ யோவா ௬ ௬௯ ௰௧ ௨௭

[8] மத் ௰௬ ௨௰

[9] மத ௰௬ ௨௧ ௰௭ ௨௨ லூக் ௯ ௨௨

௩௪ ¶ பின்பு தம்முடைய சீஷருடனே சனங்களை அழைத்து, எனக்குப் பின்செல்ல விரும்புகிறவன் எவனோ, [1]அவன் தன்னைத் தான் வெறுத்துத் தன் சிலுவையை ஏற்றிக்கொண்டு, எனக்குப் பின் செல்லக்கடவன்.

௩௫ என்னத்தினால் என்றால், எவனாலும் [2]தன் சீவனை இரட்சிக்க விரும்பினால் அதை இழந்துபோவான்; என் நிமித்தமும் சுவிசேஷத்தின் நிமித்தமும் தன் சீவனை இழந்துபோகிறவன் எவனோ, அவனே அதை இரட்சிப்பான்.

௩௬ அல்லாமலும் ஒருவன் உலகம் யாவையும் சம்பாதித்துக்கொண்டாலும், தன் சீவனை இழந்துபோனால் அவனுக்கு என்ன லாபம் உண்டாகும்?

௩௭ அல்லது ஒரு மனிதன் தன் சீவனை மீட்கும்படிக்கு என்னத்தைக் கொடுப்பான்?

௩௮ அன்றியும் [3]விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியாருக்குள்ளே எவன் என்னையும் என் வசனங்களையுங்குறித்து இலச்சை அடைவானோ, [4]அவனைக்குறித்தும் மனிதனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையோடு பரிசுத்த தூதர்களுடனேயுங்கூட வரும்பொழுது இலச்சை அடைவான்.

௯. அதிகாரம்.

௧. இயேசு மறுரூபம் அடைந்தது. ௰௧ அவர் எலியாவின் வரவைக்குறித்துத் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னது ௰௪ ஊமையும், செவிடுமான ஒரு ஆவியைத் துரத்தினது ௩௰, தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்தது ௩௩ சீஷர்களுக்குத் தாழ்மையைப் படிப்பித்தது. ௩௮ அவர்களை விரோதியாதவர்களைத் தடைபண்ணாமலும், விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்காமலும் இருக்கப் போதித்தது

அல்லாமலும் [5]இங்கே நிற்கிறவர்களில் சிலர் பராபரனுடைய ஆளுகை பலத்தோடே வருகிறதைக் காணுமளவும் [6]மரணம் அடைவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨ ¶ [7]ஆறுநாளுக்குப் பின்பு, இயேசுவா[illegible]ர் பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டித் தனித்திருக்கும்படிக்கு அவர்களை உயரமான மலையில் கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபப்பட்டார்.

௩ [8]அவருடைய வஸ்திரங்கள் பூமியிலே வண்ணான் செய்யக்கூடாத வண்ணமாயும் உறைந்த மழையைப்போலவும் மிகவும் வெண்மையாய்ப் பிரகாசித்தன.

௪ அல்லாமலும் மோசேயும் எலியாவும் அவர்களுக்குக் காணப்பட்டு, இயேசுவுடனே பேசிக்கொண்டார்கள்.

௫ அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, இரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; ஆகையால் உமக்காகவும் மோசேக்காகவும் எலியாவுக்காவும் ஒரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டுபண்ணுவோம் என்றான்.

௬ மிகுந்த பயம் அவர்களைப் பிடித்தபடியால், அவன் தான் பேசுகிற வசனங்களைத் தானே அறியாமல் அப்படிச் சொன்னான்.

௭ அப்பொழுது ஒரு மேகம் அவர்களை மூடிக்கொண்டது; அல்லாமலும் இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

௮ உடனே அவர்கள் சுற்றிப்பார்த்தபொழுது, தங்கள் சேகரத்தில் இயேசுவையேயன்றி மற்றொருவனையும் காணவில்லை.

௯ ¶ பின்பு [9]அவர்கள் மலையிலிருந்து இறங்கினபொழுது, அவர் அவர்களை நோக்கி, நீங்கள் (மலையிலே) கண்டவைகளை மனிதனுடைய குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருப்பதற்கு முன்னே ஒருவருக்கும் அறிவியாமல் இருங்கள் என்று கட்டளையிட்டார்.

கி. பி. ௩௩.

[1] மத் ௰ ௩௮ ௰௬ ௨௪ லூக் ௯. ௨௩ ௰௪ ௨௭.

[2] யோவா ௰௨ ௨௫

[3] மத ௰ ௩௩ லூக ௯ ௨௬ ௰௨ ௯

[4] உரோ ௧ ௰௬ ௨ தீமோ ௧ ௮ ௨ ௰௨

[5] மத ௰௬ ௨௮ லூக் ௯ ௨௭

[6] மத ௨௪ ௩௪ ௨௫ ௩௧ லூக ௨௨ ௰௮

[7] மத் ௰௭ ௧ லூக் ௯ ௨௮

[8] தானி ௭ ௯ மத ௨௮ ௩

[9] மத் ௰௭ ௯

௰ அவர்கள் அந்த வசனத்தை ஞாபகப்படுத்தி, மரித்தோரிலிருந்து எப்படி உயிரோடெழுந்திருக்கலாம் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு,

௰௧ ¶ பின்பு அவரை நோக்கி, [1]முன்பு எலியா வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே என்று வினாவினார்கள்

௰௨ அதற்கு அவர் சொன்னது: முன்பு எலியா வந்து சகலத்தையும் சீர்ப்படுத்தவேண்டுவதுதான்; [2]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும் அசட்டைபண்ணப்படவும் வேண்டுமென்று [3]எழுதியிருக்கிறதுபோல, அவனும் பாடுபடவேண்டும்.

௰௩ [4]எலியா வந்தாயிற்றென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனைக்குறித்து எழுதியிருக்கிறபடி அவனை அவர்கள் தங்கள் இஷ்டப்படிக்குச் செய்தார்கள் என்றார்.

௰௪ ¶ [5]பின்பு அவர் (மற்றச்) சீஷர்களிடத்தில் வந்தபொழுது, அவர்களைச் சூழ மிகுந்த சனங்களையும் அவர்களுடனே தருக்கம் பண்ணின வேதபாரகரையும் கண்டார்.

௰௫ சனங்கள் எல்லாரும் அவரைக் கண்டவுடனே, அவர்கள் மிகவும் பிரமித்து ஓடிவந்து, அவரை வந்தனம்செய்தார்கள்.

௰௬ அப்பொழுது அவர் வேதபாரகரை நோக்கி, நீங்கள் எதைக்குறித்து இவர்களுடனே * தருக்கம்பண்ணுகிறீர்கள் என்று கேட்டார்.

௰௭ [6]அதற்குச் சனங்களில் ஒருவன் சொன்னது: போதகரே, ஊமையுள்ள ஆவியை அடைந்திருக்கிற என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன்.

௰௮ அந்த ஆவி எவ்விடத்திலாகிலும் அவனைப் பிடித்துக்கொள்ளுகிறபொழுது அவனைத் (தரையிலே) †மோதுகின்றது; பின்பு அவன் (வாயினாலே) நுரைதள்ள, தன் பற்களைக் கடித்துக்கொண்டு, சோர்ந்துபோகிறான்; அதைத் துரத்தும்படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன்; அப்படிச் செய்யும்படிக்கு அவர்களால் கூடாமல் போயிற்று என்றான்.

௰௯ அப்பொழுது அவர் திருவுளம்பற்றினது: ஆ விசுவாசமில்லாத சந்ததியாரே, எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன்; எதுவரைக்கும் உங்களில் பொறுமையாயிருப்பேன்; அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்; அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

௨௰ [7]அவரைக் கண்டவுடனே அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; மேலும் அவன் தரையிலே விழுந்து, (வாயினால்) நுரைதள்ளப் புரண்டான்.

௨௧ அப்பொழுது இயேசுவானவர் அவனுடைய தகப்பனை நோக்கி, இப்படி இவனுக்குண்டாகி எத்தனை நாளாயிற்று என்று கேட்டதற்கு அவன் சொன்னது: சிறுவயதுமுதற்கொண்டு இருக்கிறது.

௨௨ அல்லாமலும் இவனை அழிக்கும்படிக்கு அது அநேகந்தரம் நெருப்பிலேயும் சலத்திலேயும் தள்ளிற்று; அப்படியிருந்தும், நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்களுக்கு உருக்கமாயிரங்கி உதவிசெய்தருளும் என்றான்.

௨௩ இயேசுவானவர் சொன்னது: [8]நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்; விசுவாசிக்கிறவனுக்கு எதுவும் நடக்கும் என்று சொன்னவுடனே,

௨௪ அந்தப் பிள்ளையின் தகப்பன் அழுதுகொண்டு, ஆண்டவரே, விசுவாசிக்கிறேன், என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கூப்பிட்டான்.

கி. பி. ௩௩.

[1] மல்கி ௪. ௫. மத் ௰௭ ௰

[2] லூக் ௨௩ ௰௧ பிலி ௨ ௭

[3] சங ௨௨. ௬ ஏசா ௫௩ ௩ தானி ௯ ௨௬

[4] மத் ௰௧ ௰௪ ௰௭ ௰௨ லூக ௧ ௰௭

[5] மத். ௰௭ ௰௪ லூக ௯ ௩௭

* அல்லது உங்களுக்குள்ளே.

[6] மத் ௰௭ ௰௪ லூக் ௯ ௩௮

† அல்லது கிழிக்கிறது

[7] மாற ௧ ௨௬ லூக் ௯ ௪௨

[8] மத். ௰௭ ௨௰. மாற் ௰௧ ௨௩ லூக் ௰௭ ௬ யோவா ௰௧. ௪௰

௨௫ அத்தருணத்திலே சனங்கள் ஓடிவந்து கூட்டமாகிறதை இயேசுவானவர் கண்டபொழுது, அவர் அந்த அசுத்த ஆவியுடனே சொன்னது: ஊமையும் செவிடுமான ஆவியே, நீ இவனைவிட்டுப் புறப்பட்டு, இனி இவனிடத்தில் பிரவேசியாமல் போ என்று உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று சொல்லி, அதை அதட்டினார்.

௨௬ அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப் போயிற்று; அவன் இறந்துபோனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவனைப்போலக் கிடந்தான்.

௨௭ இயேசுவானவர் அவனுடைய கையைப் பிடித்து, அவனை எடுத்தார், உடனே அவன் எழுந்திருந்தான்.

௨௮ ¶ [1]பின்பு அவர் வீட்டிற்கு வந்தபொழுது அவருடைய சீஷர் இரகசியமாய் அவரை நோக்கி, நாங்கள் அதைத் துரத்தும்படிக்கு எங்களுக்கு ஏன் திராணியில்லை என்று கேட்டார்கள்.

௨௯ அவர் சொன்னது: செபத்தினாலும் உபவாசத்தினாலுமே அன்றி, மற்றொருவிதமாய் அந்தச் சாதியைத் துரத்தக்கூடாது என்றார்.

௩௰ ¶ பின்பு அவர்கள் அவ்விடம்விட்டுப் பிரயாணப்பட்டுக் கலிலேயா நாட்டின் வழியாய்ப் போகிறபொழுது, அவர் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணவேண்டுமென்று இருந்தபடியினாலே, (தாம் போகிறதை) ஒருவரும் அறியாமல் இருக்கவேண்டும் என்று விரும்பினார்.

௩௧ பின்பு அவர் அவர்களை நோக்கி, [2]மனிதனுடைய குமாரன் மனிதர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவர்கள் அவனைக் கொலைசெய்வார்கள்; மரித்தபின்பு அவன் மூன்றாம் நாளிலே உயிரோடெழுந்திருப்பான் என்றார்.

௩௨ அவர்கள் அந்தச் சங்கதியை அறிந்துகொள்ளவில்லை; மேலும் அவரிடத்தில் விசாரிக்கிறதற்கும் பயந்தார்கள்.

௩௩ ¶ [3]பின்பு அவர் கப்பர்நாகூம் பட்டணத்தில் சேர்ந்து, ஒரு வீட்டிலே இருந்தபொழுது, அவர் அவர்களை நோக்கி, வழியிலே நீங்கள் எதைக்குறித்து உங்களுக்குள்ளே தருக்கம்பண்ணிக்கொண்டீர்கள் என்று கேட்டார்.

௩௪ [4]அவர்கள் தங்களில் எவன் பெரியவன் என்று ஒருவரோடொருவர் வழியிலே தருக்கம் பண்ணிக்கொண்டபடியினாலே பேசாமல் இருந்தார்கள்.

௩௫ அப்பொழுது அவர் உட்கார்ந்து பன்னிருவரையும் அழைத்துச் சொன்னது: ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் பிந்தினவனுமாய் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாய் இருக்கக்கடவன் என்று சொல்லி,

௩௬ [5]ஒரு பிள்ளையை எடுத்து அதை அவர்களுக்குள்ளே நிறுத்தி, பின்பு அதை அணைத்துக்கொண்டு,

௩௭ இப்படிப்பட்ட பிள்ளைகளில் ஒன்றை என்னுடைய நாமத்தினாலே சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ, அவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான்; [6]அல்லாமலும் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ, அவன் என்னை (மாத்திரம்) அல்ல, என்னை அனுப்பினவரையும் சேர்த்துக்கொள்ளுகிறான் என்றார்.

௩௮ ¶ [7]அப்பொழுது யோவான் அவரை நோக்கி, போதகரே, நமக்குப் பின்செல்லாமல் இருக்கிற ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பசாசுகளைத் துரத்தக்கண்டோம்; அவன் நமக்குப் பின்செல்லாதபடியால் அவன் அப்படிச்

கி. பி. ௩௩.

[1] மத் ௰௭ ௰௯
[2] மத். ௰௭ ௨௨ லூக். ௯ ௪௪
[3] மத் ௰௮ ௧ லூக். ௯ ௪௬ ௨௨ ௨௪
[4] மத் ௨௰ ௨௬, ௨௭ மாற் ௰ ௪௩
[5] மத் ௰௮ ௨ மாற் ௰ ௰௬
[6] மத் ௰ ௪௰ லூக் ௯ ௪௮
[7] ௪ மோ ௰௧ ௨௮ லூக் ௯ ௪௯.

செய்யாதபடிக்குச் சொன்னோம் என்றான்.

௩௯ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீங்கள் அவனுக்குத் தடைபண்ணவேண்டாம்; [1]என்னதினால் என்றால், என்னுடைய நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் என்னைக்குறித்துச் சீக்கிரமாய்த் தீமைசொல்லமாட்டான்.

௪௦ [2]அல்லாமலும் உங்களுக்கு விரோதியல்லாதவன் உங்கள் பங்கில் இருக்கிறான்.

௪௧ [3]அன்றியும் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறபடியினாலே, ஒருவன் என் நாமத்தினிமித்தம் ஒரு கலயம் தண்ணீர் உங்களுக்குக் கொடுத்தால், அவன் தன் பலனை இழந்துபோவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௨ ¶ [4]அன்றியும் என்னை விசுவாசிக்கிறவர்களாகிய இந்தச் சிறியவர்களில் ஒருவன் குற்றம் செய்வதற்குக் காரணமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் கழுத்திலே எந்திரக்கல் கட்டப்பட்டுச் சமுத்திரத்திலே தள்ளப்பட்டால் அவனுக்கு நன்மையாயிருக்கும்.

௪௩ [5]உன் கை உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால்* அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையை உடையவனாய்,

௪௪ நித்திய நரக அக்கினியிலே போவதிலும், ஊனனாய்ச் சீவனில் பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; [6]அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

௪௫ அல்லாமலும் உன் கால் உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலையுடையவனாய்,

௪௬ நித்திய நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும், சப்பாணியாய்ச் சீவனில் பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

௪௭ அல்லாமலும் உன் கண் உன்னைக் †கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப் பிடுங்கிப்போடு.

௪௮ நீ இரண்டு கண்ணை உடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும், ஒற்றைக் கண்ணனாய்ப் பராபரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

௪௯ [7]எல்லாப் பலிகளும் உப்பினாலே சாரமாக்கப்படுகிறதுபோல, யாவனும் அக்கினியினாலே சாரமாக்கப்படுவான்.

௫௰ [8]உப்பானது நல்லது; உப்பானது சாரமற்றதேயானால், எதினாலே அதற்குச் சாரம் உண்டாக்குவீர்கள்; [9]உங்களுக்குள்ளே உப்பு உண்டாயிருக்கும்படி செய்யுங்கள்; [10]அல்லாமலும் ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்கக்கடவீர்கள் என்றார்.

௰. அதிகாரம்.

௨ கிறிஸ்து விவாகப்பிரிவைக்குறித்துப் பரிசேயர்களுக்கு உத்தரவுசொல்லி, ௰௩ தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை ஆசீர்வதித்து, ௰௭ நித்திய சீவனடையும் வழியைக்குறித்து ஓர் ஐசுவரியவானுக்கு நியாயஞ்சொல்லி, ௨௩ ஐசுவரியத்தின் தீமைகளைக்குறித்துச் சீஷர்களுக்கு அறிவித்து, ௨௮ சுவிசேஷத்தின் நிமித்தம் யாதொன்றை வெறுத்துவிடுகிறவர்கள் தகுந்த பலனை அடைவார்களென்று கூறி, ௩௨ தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்து, ௩௫ பெருமையுள்ள இருவருடைய விண்ணப்பத்தை மறுத்து அவர்களுக்கு மனத்தாழ்மையைப் படிப்பித்து, ௪௬ குருடனாயிருந்த பார்த்திமேயுவுக்குப் பார்வை அளித்தது

[11]பின்பு அவர் எழுந்து, யோர்தான் அருகேயுள்ள யூதேயா நாட்டின் திசைகளுக்குப் போனார்; அங்கே மறுபடியும் சனங்கள் அவரிடத்தில் கூடிவந்தார்கள், அவரும் வழக்கத்தின்படி அவர்களுக்கு மறுபடியும் உபதேசம்பண்ணினார்.

கி. பி. ௩௩.

[1] ௧ கொரி ௰௨ ௩
[2] மத ௰௨ ௩௰
[3] மத ௰ ௪௨.
[4] மத ௰௮ ௬. லூக் ௰௭ ௨.
[5] உபா ௰௩ ௬. மத ௫ ௨௯. ௰௮ ௮.
* அல்லது கெடுத்தால்
[6] ஏசா ௬௬ ௨௪
† அல்லது கெடுத்தால்
[7] லேவி ௨ ௰௩. எசே ௪௩ ௨௪
[8] மத ௫ ௰௩. லூக் ௰௪ ௩௪
[9] எபே ௪ ௨௯. கொலோ ௪ ௬
[10] உரோ ௰௨ ௰௮. ௰௪ ௰௯. ௨ கொரி ௰௩ ௰௧. எபி ௰௨ ௰௪
[11] மத ௰௯ ௧. யோவா ௰ ௪௰.

௨ ¶ [1]அல்லாமலும் பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேட்டார்கள்.

௩ அவர்களை அவர் நோக்கி, மோசே என்பவர் உங்களுக்கு எப்படிக் கட்டளையிட்டார் என்றார்.

௪ அவர்கள் சொன்னது: தள்ளுதற்சீட்டை எழுதி அவளைத் தள்ளிவிடும்படிக்கு [2]மோசே உத்தரவு கொடுத்தார் என்றார்கள்.

௫ அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: உங்களுடைய இருதயம் கடினமானபடியினாலே, மோசே உங்களுக்கு இந்தக் கட்டளையை எழுதினார்.

௬ உலகம் உண்டானது முதற்கொண்டு பராபரன் அவர்களை [3]ஆணும் பெண்ணுமாகச் செய்தார்.

௭ [4]அதின் நிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும்விட்டுத் தன் மனைவியுடனே இசைந்திருப்பான் என்றும்,

௮ அவர்கள் இருவரும் ஒரே சரீரமாய் இருப்பார்களென்றும் சொல்லியிருக்கிறபடியினாலே, அவர்கள் இருவராயிராமல் ஒரே சரீரமாயிருக்கிறார்கள்.

௯ ஆகையால் பராபரன் இணைத்ததை மனிதன் பிரியாமலிருக்கக்கடவன் என்றார்.

௰ ¶ பின்பு வீட்டிலே அவருடைய சீஷர்கள் அதைக்குறித்து மறுபடியும் அவரிடத்தில் விசாரித்தபொழுது,

௰௧ அவர் சொன்னது: [5]தன் மனைவியைத் தள்ளி வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் எவனோ, அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரம்செய்கிறவன்.

௰௨ அல்லாமலும் மனைவியானவள் தன் புருஷனைத் தள்ளி வேறொருவனை விவாகம்பண்ணினால், அவள் விபசாரம்செய்கிறவள் என்றார்.

௰௩ ¶ [6]அப்பொழுது அவராலே தொடப்படும்படிக்குப் பிள்ளைகளை அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; சீஷர்கள் அவைகளைக் கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்.

௰௪ இயேசுவானவர் அதைக் கண்டு, விசனம் அடைந்து, பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல், இடங்கொடுங்கள்; [7]பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவைகளுக்கு உடைமையானதே.

௰௫ [8]எவனானாலும் ஒரு பிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

௰௬ பின்பு அவைகளை அணைத்துக்கொண்டு, தம்முடைய கைகளை அவைகள்மேல் வைத்து, அவைகளை ஆசீர்வதித்தார்.

௰௭ ¶ [9]பின்பு அவர் புறப்பட்டு வழியிலே நடக்கையில், ஒருவன் அவரிடத்திற்கு ஓடிவந்து, முழங்காற்படியிட்டு, நல்ல போதகரே, நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, நான் செய்யவேண்டியது என்னவென்று கேட்டான்.

௰௮ அவனுடனே அவர் சொன்னது: நீ என்னை நல்லவனென்று ஏன் சொல்லுகிறாய்? பராபரன் ஒருவரேயன்றி, மற்றொருவனும் நல்லவன் அல்லவே.

௰௯ [10]விபசாரம்பண்ணாமல் இருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக; களவுசெய்யாதிருப்பாயாக; பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக; வஞ்சனைசெய்யாதிருப்பாயாக; உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக

கி. பி ௩௩.

1 மத் ௰௯. ௩

2 ௫ மோ. ௨௪. ௧ மத். ௫. ௩௧ ௰௯. ௭

3 ௧ மோ. ௧. ௨௭ ௫. ௨

4 ௧ மோ. ௨. ௨௪ ௧ கொரி. ௬. ௰௬ எபே. ௫. ௩௧

5 மத். ௫. ௩௨ ௰௯. ௯ லூக். ௰௬. ௰௮ ரோ. ௭. ௩ ௧ கொரி. ௭. ௰, ௰௧

6 மத். ௰௯. ௰௩ லூக். ௰௮. ௰௫

7 ௧ கொரி. ௰௪. ௨௦ ௧ பே. ௨. ௨

8 மத். ௰௮. ௩

9 மத். ௰௯. ௰௬ லூக். ௰௮. ௰௮

10 ௨ மோ. ௨௦. ௰௩ ரோ. ௰௩. ௯

என்றிருக்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.

௨௰ அதற்கு அவன் சொன்னது: போதகரே, அவைகளையெல்லாம் நான் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டுவருகிறேன் என்றான்.

௨௧ அப்பொழுது இயேசுவானவர் அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து சொன்னது: உன்னிடத்தில் பின்னும் ஒன்று குறைவாய் இருக்கிறது, [1]நீ போய் உனக்கு உண்டானவைகளை விற்று, பரமண்டலத்திலே பொக்கிஷத்தை அடைந்துகொள்ளத்தக்கதாக, அவைகளை ஏழைகளுக்குக் கொடுத்து, பின்பு வந்து சிலுவையை எடுத்துக்கொண்டு, எனக்குப் பின்செல்லுவாயாக என்றார்.

௨௨ அவன் மிகுந்த ஆஸ்திகளை உடையவனானபடியினாலே, அந்த வசனத்தைக் கேட்டு, மனம் நொந்து, துக்கத்தோடே அவரை விட்டுப்போனான்.

௨௩ ¶ [2]அப்பொழுது இயேசுவானவர் சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷர்களுடனே சொன்னது: பொருள்களைப் பெற்றவர்கள் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது மிகவும் அரிது என்றார்.

௨௪ அல்லாமலும் சீஷர்கள் அந்த வசனங்களைக் குறித்துத் திகைத்தபொழுது, இயேசுவானவர் அவர்களுக்குப் பின்னும் சொன்னது: பிள்ளைகளே, [3]பொருள்களின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது மிகவும் அரிதாகவே இருக்கிறது.

௨௫ ஐசுவரியமுள்ளவன் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறதிலும், ஒட்டகமானது ஒரு ஊசியின் காதில் நுழைகிறது எளிதாய் இருக்கிறதென்றார்.

௨௬ அவர்கள் அதிகமாய்ப் பிரமித்து, அப்படியானால் இரட்சிக்கப்படுபவர்கள் யாரென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

௨௭ அப்பொழுது இயேசுவானவர் அவர்களைப் பார்த்து, மனிதர்களுக்கு அது கூடாத காரியந்தான், [4]பராபரனோ, எதையும் செய்யத் திராணியுள்ளவர், ஆகையால் பராபரனுக்கு அது கூடாத காரியமல்ல என்றார்.

௨௮ ¶ [5]பின்பு பேதுரு அவரை நோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும்விட்டு உமக்குப் பின்சென்றோமே என்றான்.

௨௯ அதற்கு இயேசுவானவர் சொன்னது: என் நிமித்தமும் சுவிசேஷத்தின் நிமித்தமும் வீட்டையாவது, சகோதரர்களையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டு,

௩௰ [6]பின்பு இம்மையிலே துன்பங்களுடனேகூட நூறுமடங்காய் வீடுகளையும், சகோதரர்களையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியசீவனையும், பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறவன் ஒருவனும் இல்லையென்றும்,

௩௧ [7]முந்தினோராகிய அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்பார்களென்றும், மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௨ ¶ [8]பின்னும் அவர்கள் எருசலேம் நகரத்திற்குப் பிரயாணமாய்ப் போனபொழுது, இயேசுவானவர் அவர்களுக்கு முன்னே நடந்தார், அவர்கள் பிரமித்துப் பயத்தோடே அவருக்குப் பின்சென்றார்கள்; [9]அப்பொழுது அவர் பன்னிருவரையும் மறுபடியும் அழைத்துத் தமக்குச் சம்பவிக்கும் காரியங்களை அவர்களுக்கு அறிவித்துச் சொன்னது:

கி. பி. ௩௩.

[1] மத். ௬. ௰௯, ௨௰. ௰௯. ௨௧. லூக். ௰௨. ௩௩. ௰௬. ௯.
[2] மத். ௰௯. ௨௩. லூக். ௰௮. ௨௪.
[3] யோபு ௩௧. ௨௪. சங். ௫௨. ௭. ௬௨. ௰. ௧ தீமோ. ௬. ௰௭.
[4] எரே. ௩௨. ௰௭. மத். ௰௯. ௨௬. லூக். ௧. ௩௭.
[5] மத். ௰௯. ௨௭. லூக். ௰௮. ௨௮.
[6] ௨ நாளா. ௨௫. ௯. லூக். ௰௮. ௩௰.
[7] மத். ௰௯. ௩௰. ௨௰. ௰௬. லூக். ௰௩. ௩௰.
[8] மத். ௨௰. ௰௭. லூக். ௰௮. ௩௧.
[9] மாற். ௮. ௩௧. ௯. ௩௧. லூக். ௯. ௨௨. ௰௮. ௩௧.

௩௩ இதோ, எருசலேமுக்குப் போகிறோம், அங்கே மனிதனுடைய குமாரன் பிரதான ஆசாரியருக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவான், அவர்கள் அவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்தும்படிக்குத் தீர்ப்புச்செய்து, அவனைப் புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்.

௩௪ அவர்கள் அவனை இழிவுசெய்து, அவனை வாரினால் அடித்து, அவன்மேலே துப்பி, அவனைக் கொலைசெய்வார்கள், ஆகிலும் மூன்றாம் நாளிலே அவன் உயிரோடெழுந்திருப்பான் என்றார்.

௩௫ ¶ [1]பின்பு செபெதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து, போதகரே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறபடி நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள்.

௩௬ அதற்கு அவர், நான் உங்களுக்குச் செய்ய நீங்கள் விரும்புகிறது என்னவென்றார்.

௩௭ அவர்கள் சொன்னது: நீர் மகிமையை அடைந்திருக்கும்பொழுது, எங்களில் ஒருவன் உம்முடைய வலதுபக்கத்திலேயும், ஒருவன் உம்முடைய இடதுபக்கத்திலேயும் இருக்க அனுக்கிரகம்பண்ணவேண்டும் என்று சொன்னார்கள்.

௩௮ இயேசுவானவர் சொன்னது: நீங்கள் கேட்டது உங்களுக்கே தெரியவில்லை, நான் பானம்பண்ணும் பாத்திரத்தில் பானம்பண்ணவும், நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளவும் உங்களால் கூடுமா என்று சொன்னதற்கு,

௩௯ அவர்கள் கூடும் என்றார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் பானம்பண்ணும் பாத்திரத்தில் நீங்களும் பானம்பண்ணுவீர்கள், அல்லாமலும் நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தை நீங்களும் பெற்றுக்கொள்வீர்கள், அது மெய்தான்.

௪௰ ஆனாலும் குறிக்கப்பட்டவர்களுக்கேயன்றி, (மற்றொருவருக்கும்) என் வலதுபக்கத்திலும் என் இடதுபக்கத்திலும் இருப்பதற்கான (கனத்தை) நான் கொடுக்கக்கூடாதென்றார்.

௪௧ ¶ [2]மற்றப் பத்துப்பேரும் அதைக் கேள்விப்பட்டு, யாக்கோபின்மேலும் யோவான்மேலும் கோபமாயிருக்கத் தொடங்கினார்கள்.

௪௨ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை அழைத்துச் சொன்னது: நீங்கள் அறிந்திருக்கிறபடி, உலகத்தாருக்குள்ளே பிரபுக்கள்* என்னப்பட்டிருக்கிறவர்கள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள்; [3]அல்லாமலும் அவர்களுடைய பெரியோர்கள் இஷ்டப்படிக்கு அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறார்கள்.

௪௩ [4]அப்படி உங்களுக்குள்ளே இருக்கக்கூடாது, உங்களுக்குள்ளே பெரியவனாய் இருக்கவிரும்புகிறவன், உங்கள் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்.

௪௪ உங்களில் முதலாளியாயிருக்க விரும்புகிறவன், எல்லாருக்கும் அடிமையாய் இருக்கக்கடவன்.

௪௫ [5]மனிதனுடைய குமாரனும், ஊழியம் அடையும்படிக்கு வராமல், ஊழியம் செய்யும்படிக்கும் [6]அநேகரை மீட்கும்பொருளாகத் தன்னுடைய சீவனைக் கொடுக்கும்படிக்கும் வந்தானே என்றார்.

௪௬ ¶ [7]பின்பு அவர்கள் எரிகோ பட்டணத்திற்கு வந்தார்கள், அவரும் அவருடைய சீஷர்களும் மிகுந்த சனங்களும் அதைவிட்டுப் போனபொழுது, தீமேயு என்பவனுடைய மகனாகிய குருடனான பருத்திமேயு என்பவன் வழியிலே பிச்சைகேட்டுக்கொண்டிருக்கையில்,

[1] மத் ௨௰ ௨௰

[2] மத் ௨௰ ௨௪

* அல்லது, தலைவர்கள்

[3] லூக் ௨௨ ௨௫

[4] மத் ௨௰ ௨௬, ௨௭ மாற் ௯ ௩௫ லூக் ௯ ௪௮

[5] யோவா ௰௩ ௰௪ பிலி ௨ ௭

[6] மத் ௨௰ ௨௮ ௧ தீமோ ௨ ௬ தீத் ௨ ௰௪

[7] மத் ௨௰ ௨௯ லூக் ௰௮ ௩௫

௪௭ நாசரேத்தூராராகிய இயேசுவானவர் வருகிறாரென்று கேள்விப்பட்டு, இயேசுவே, தாவீதின் குமாரனே, என்மேல் இரக்கமாயிரும் என்று கூப்பிடத்தொடங்கினான்

௪௮ அவன் பேசாமலிருக்கும்படிக்கு அநேகர் அவனைக் கடிந்துகொண்டார்கள்; அப்படியிருந்தும் அவன், தாவீதின் குமாரனே, என்மேல் இரக்கமாயிரும் என்று அதிகமாய்க் கூப்பிட்டான்

௪௯ அப்பொழுது இயேசுவானவர் நின்று, அவனை அழைத்துவரச் சொன்னார்; அந்தப்படி சிலர் அவனை அழைத்து, திடமாயிரு எழுந்திரு, அவர் உன்னை அழைக்கிறார் என்றார்கள்.

௫௰ உடனே அவன் தன் வஸ்திரத்தைத் தள்ளி எழுந்து, இயேசுவானவரிடத்தில் வந்தான்

௫௧ அவர் அவனை நோக்கி, நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறாய் என்றார், குருடனானவன் சொன்னது: இரபூனீ நீர் எனக்குப் பார்வை கொடுக்கவேண்டும் என்றான்.

௫௨ இயேசுவானவர் சொன்னது: [1]உன் விசுவாசம், உன்னைக் குணமாக்கிற்று,* நீ போகலாம் என்றார், உடனே அவன் பார்வை அடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்.

௰௧. அதிகாரம்.

௧ கிறிஸ்து சிறப்பாய் எருசலேமுக்குள் பிரவேசித்தது ௰௨ கனியற்ற அத்திமரத்தைச் சபித்தது ௰௫ தேவாலயத்தைச் சுத்திகரித்தது ௨௰ விசுவாசத்தில் உறுதிகொள்ளவும், பகைஞரை மன்னிக்கவும் சீஷர்களுக்குப் போதித்தது, ௨௭ பராபரனாலே அனுப்பப்பட்ட மனுஷனாகிய யோவானுடைய சாட்சியினாலே அவருடைய செய்கைகளுக்கு உதாரணம் கொடுத்தது

[2]பின்பு அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ப் போய், ஒலிவமலை அருகே இருக்கிற பெத்பாகே பெத்தானியா ஊர்களுக்குச் சேர்ந்தபொழுது, அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி,

௨ உங்களுக்கு முன்பாக இருக்கிற அந்தக் கிராமத்திற்குப் போங்கள்; நீங்கள் அதில் பிரவேசித்தவுடனே, ஒருவரும் ஏறாமல் கட்டப்பட்டிருக்கிற (கழுதையின்) குட்டியைக் காண்பீர்கள்; அதின் கட்டவிழ்த்து அதைக் கொண்டுவாருங்கள்.

௩ ஒருவன், ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று உங்களுடனே சொன்னால், ஆண்டவருக்கு இது வேண்டுமென்று சொல்லுங்கள், உடனே அவன் அதை இவ்விடத்திற்கு அனுப்பிவிடுவான் என்று அனுப்பினார்.

௪ அந்தப்படி அவர்கள் போய், வெளியே தெருவில் கதவின் அருகே கட்டப்பட்டிருக்கிற (கழுதையின்) குட்டியைக் கண்டு, அதின் கட்டவிழ்க்கிறபொழுது,

௫ அங்கே நின்ற சிலர் அவர்களை நோக்கி, நீங்கள் ஏன் இதின் கட்டவிழ்க்கிறீர்கள் என்றார்கள்.

௬ இயேசுவானவர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி சீஷர் அவர்களுக்கு உத்தரவு சொன்னார்கள்; அப்பொழுது அவர்களை விட்டுவிட்டார்கள்.

௭ ஆகையால் சீஷர் அந்தக் குட்டியை இயேசுவினிடத்திற்குக் கொண்டுவந்து, தங்கள் வஸ்திரங்களை அதின்மேல் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்

௮ [3]அப்பொழுது அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள், சிலர் மரங்களின் கிளைகளை முறித்து வழியிலே பரப்பினார்கள்

௯ அல்லாமலும் முன்நடப்பாரும் பின்நடப்பாரும், [4]ஓசன்னா, பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரம்செய்யப்படக்கடவர்.

௰ பராபரனுடைய நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ஆளுகை வாழ்த்திக

[1] மத ௯ ௨௨ மாற ௫ ௩௪

* அல்லது உன்னை இரட்சித்தது

[2] மத ௨௧ ௧ லூக ௰௯ ௨௯ யோவா ௰௨ ௰௪

[3] மத ௨௧ ௮

[4] சங ௱௰௮ ௨௬

4902 (1845)

கொள்ளப்படக்கடவது; [1]உன்னதமான இடங்களிலே ஓசன்னா என்று கூப்பிட்டார்கள்.

௰௧ ¶ [2]அப்பொழுது இயேசுவானவர் எருசலேமிலேயும் தேவாலயத்திலேயும் பிரவேசித்தார்; அங்கே அவர் எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்து, பின்பு சாயங்காலமானபொழுது பன்னிருவருடனே புறப்பட்டுப் பெத்தானியா ஊருக்குப் போனார்.

௰௨ ¶ [3]மறுநாளிலே அவர்கள் பெத்தானியா ஊரைவிட்டுப் புறப்பட்டபொழுது அவருக்குப் பசி உண்டாயிற்று.

௰௩ [4]உடனே அவர் தூரத்திலே இலைகளையுடைய அத்திமரத்தைக் கண்டு, அதிலே ஒரு கனியையாகிலும் கண்டு பறித்துக்கொள்ளலாம் என்று அவ்விடத்திற்குப் புறப்பட்டு, அதின் அருகே சேர்ந்தபொழுது, அத்திமரங்கள் கனிகொடுக்கிற காலம் அல்லாதபடியால் இலைகளேயல்லாமல் மற்றொன்றையும் அவர் காணவில்லை.

௰௪ அப்பொழுது இயேசுவானவர் அதை நோக்கி, இனி ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்திலே கனியைப் புசியாதிருப்பானாக என்று சொன்னார், அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்.

௰௫ ¶ [5]பின்பு அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள், அங்கே இயேசுவானவர் தேவாலயத்திலே பிரவேசித்து, அங்கிலே விற்பாரையும் கொள்வாரையும் துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறாக்களை விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து,

௰௬ ஒருவரும் ஒரு பாத்திரத்தைத் தேவாலயத்தின் வழியாய்க் கொண்டுபோகிறதற்கு இடங்கொடாமல் இருந்தார்.

௰௭ [6]அல்லாமலும், என்னுடைய ஆலயம் எல்லாத் தேசத்தாரும் செபம்பண்ணும்படிக்கான ஆலயம் என்னப்படும் என்று* எழுதியிருக்கிறதல்லவா? [7]நீங்களோ இதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குப் போதித்தார்.

௰௮ [8]வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் அதைக் கேட்டபொழுது, [9]சனங்கள் எல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே, அவருக்குப் பயந்து, அவரை மாய்க்கும்படிக்கு வகைதேடினார்கள்.

௰௯ சாயங்காலமானபொழுது அவர் நகரத்திற்குப் புறம்பே போனார்.

௨௰ ¶ [10]மறுநாளிலே அவர்கள் திரும்பிப் புறப்பட்டபொழுது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போனதைக் கண்டார்கள்.

௨௧ உடனே பேதுரு நினைவுகொண்டு அவரை நோக்கி, இரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.

௨௨ அதற்கு மாறுத்தரமாக அவர் அவர்களுடனே சொன்னது: பராபரனில் † விசுவாசமாயிருங்கள்.

௨௩ என்னென்றால், [11]எவனாகிலும் இந்த மலையை நோக்கி, நீ எழுந்து சமுத்திரத்திலே விழுவாயாக என்று சொல்லி, தன் இருதயத்திலே ஒன்றும் சந்தேகப்படாமல், தான் சொன்னபடியே நடக்கும் என்று விசுவாசித்தால், அந்தச் சொற்படியே அவனுக்கு நடக்கும் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௪ ஆதலால் நான் (பின்னும்) உங்களுக்குச் சொல்லுகிறதாவது: செபம்பண்ணும்பொழுது [12]நீங்கள் வேண்டிக்கொள்ளும் யாவையும் பெற்றுக்கொள்ளலாம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்.

௨௫ அல்லாமலும் பரமண்டலத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள்

கி. பி ௩௩.

1 சங் ௱௧௮ ௨௬
2 மத் ௨௧ ௰௨
3 மத் ௨௧ ௰௮
4 மத் ௨௧ ௰௯
5 மத் ௨௧ ௰௨, லூக் ௰௯ ௪௫, யோவா ௨ ௰௪
6 ஏசா ௫௬ ௭
* [illegible]
7 எரே ௭ ௰௧
8 மத் ௨௧ ௪௫, ௪௬, லூக் ௰௯ ௪௭
9 மத் ௭ ௨௮, மாற் ௧ ௨௨, லூக் ௪ ௩௨
10 மத் ௨௧ ௰௯
† அல்லது பராபரனுடைய
11 மத் ௰௭ ௨௰, லூக் ௰௭ ௬
12 மத் ௭ ௭, லூக் ௰௧ ௯, யோவா ௰௪ ௰௩, ௰௬ ௨௪, யாக் ௧ ௫, ௬

தப்பிதங்களை மன்னிக்கும்படிக்கு நீங்கள் செபம்பண்ண எழுந்து நிற்கும்பொழுது, ஒருவன்மேல் உங்களுக்கு விசனம் உண்டானால் [1]மன்னித்துக்கொள்ளுங்கள்.

௨௬ [2]நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.

௨௭ ¶ [3]அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்த பின்பு அவர் தேவாலயத்திலே உலாவுகையில், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்து,

௨௮ எந்த அதிகாரத்தினாலே நீர் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்கிறதற்கு உமக்கு அதிகாரத்தைக் கொடுத்தவர் யார் என்றார்கள்.

௨௯ அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது. நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக்* கேட்கிறேன்; அதற்கு நீங்கள் மாறுத்தரம் சொல்லுங்கள், அப்பொழுது நான் இவைகளைச் செய்கிற அதிகாரத்தையும் உங்களுக்கு அறிவிப்பேன்.

௩௰ யோவான் கொடுத்த ஸ்நானம் பராபரனாலே உண்டானதோ, மனிதர்களாலே உண்டானதோ, அதைச் சொல்லுங்கள் என்றார்.

௩௧ அப்பொழுது அவர்கள், அது பராபரனால் உண்டானதென்றால், இவர், ஏன் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை என்பார்.

௩௨ அது மனிதரால் உண்டானதென்றால், எல்லாரும் [4]யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறபடியால், அவர்களாலே நமக்கு மோசம் வரும் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு,

௩௩ பின்பு இயேசுவானவரை நோக்கி, எங்களுக்குத் தெரியாது என்றார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது. (அப்படியானால்) நானும் இவைகளைச் செய்கிற அதிகாரத்தின் தன்மை இன்னதென்று உங்களுக்குச் சொல்லமாட்டேன் என்றார்.

கி. பி ௩௩.

[1] மத் ௬ ௰௪ கொலோ ௩ ௰௩

[2] மத் ௰௮ ௩௫

[3] மத் ௨௧ ௨௩ லூக் ௨௰ ௧

* அல்லது சேதி

[4] மத். ௩ ௫ ௰௪ ௫ மாற் ௬ ௨௰

[5] மத் ௨௧ ௩௩ லூக் ௨௰ ௯.

௰௨. அதிகாரம்.

௧ பொல்லாத தோட்டக்காரர்களுக்கு விட்ட திராட்சத்தோட்டத்தின் உவமையினாலே, அப்போது யூதர்களுக்கும், அந்நியர்களுக்கும் அந்தந்த நியமனத்தை எடுத்துக் காண்பிக்கிறது. ௰௩ இராயருக்கு வரிகொடுப்பதைக்குறித்துப் பரிசேயருக்கும் ஏரோதேயின் மனுஷர்களுக்கும் உத்தரவுசொல்லுகிறார். ௰௮ உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயருடைய தப்பறையைக் காண்பித்து [illegible] உபதேசத்தை [illegible] ௨௮ பிரதான கற்பனை எதென்று கேட்ட வேதபாரகருக்கு உத்தரவு அருளிச்செய்கிறார். ௩௫ கிறிஸ்துவைக்குறித்து வேதபாரகர் கொண்டிருந்த தாற்பரியத்தைக் கண்டித்து, ௩௮ அவர்களுடைய பெருமையையும், மாய்மாலத்தையுங்குறித்துச் சனங்களை எச்சரிக்கிறார். ௪௧ இரண்டு காசைத் தருமப்பெட்டியில் போட்ட ஏழை விதவையைப் புகழ்ந்தது.

[5]அல்லாமலும் அவர் உவமைகளாய் அவர்களுடனே சொன்னது. ஒரு மனிதன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டுபண்ணி, அதைச் சுற்றி வேலி அடைத்து, அதில் ஆலையை நாட்டி, ஒரு கோபுரத்தையும் கட்டி, பின்பு அதைத் தோட்டக்காரர் வசமாய்விட்டுப் புறத்தேசத்திற்குப் போனான்.

௨ தகுதியான காலத்திலே அந்தத் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒரு பாகத்தைத் தோட்டக்காரரிடத்தில் வாங்கிக்கொள்ளும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்திற்கு அனுப்பினான்.

௩ அவர்கள் அவனைப் பிடித்து அடித்து, வெறுமையாய் அனுப்பினார்கள்.

௪ மறுபடியும் அவன் வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான், அவன்மேல் அவர்கள் கல்லெறிந்து, தலையில் காயப்படுத்திக் கனஈனத்தோடே அவனை அனுப்பினார்கள்.

௫ பின்பு அவன் வேறொருவனை அனுப்பினான், அவனை அவர்கள்

கொலைசெயதாரகள; (அபபடி அவனால அனுபபபபட்ட) அநேகரில சிலரை அடிததது, சிலரைக கொலைசெயதாரகள.

௬ அவனுக்குப பிரியமான ஒரே குமாரன இருநதான, ஆதலால அவன, தன குமாரனுக்கு அஞசுவாரகள என்று எண்ணி, கடைசியிலே அவனையும் அவரகளிடததில அனுபபினான்

௭ அநதத தோட்டககாரர (அவனைக கணடு,) இவன சுதநதரவாளி, இவனுடைய சுதநதரம நமது வசமாகுமபடிககு, நாம இவனைக கொலைசெயயக்கடவோம வாருஙகள என்று தஙகளுக்குள்ளே பேசிககொணடு,

௮ பின்பு அவனைப பிடிததுக் கொலைசெயது, திராட்சத் தோட்டத்திறகுப புறமபே தளளினாரகள.

௯ ஆனபடியினாலே அநதத தோட்டததின எசமான என்னசெயவான? அவன வநது அநதத தோட்டககாரரை அழிதது, தோட்டததை மறறவரகளுககு ஒபபுககொடுபபானலலவா?

௰ [1]வீடுகட்டுகிறவர்கள ஆகாதென்று தளளின கலலே மூலைககுத தலையான கலலாயிறறு

௰௧ அது பராபரனாலே ஆயிறறு, அது நமமுடைய கணகளுககு ஆசசரியமாய இருககின்றதென்கிற வேதவாககியததை நீஙகள வாசிககவிலலையா என்றார.

௰௨ ¶ அபபொழுது அவர்கள தஙகளைககுறிதது இநத உவமையைச சொனனார என்று அறிநதபடியால், [2]அவரைப பிடிகக மனதாயிருநதார்கள; ஆனாலும் சனஙகளுக்குப பயந்து, அவரைவிட்டுப போனார்கள.

௰௩ ¶ [3]பின்பு அவரகள் வசனஙகளினாலே அவரை அகபபடுத்தும்படிககு, சில பரிசேயரையும ஏரோதேயின் மனிதரையும அவரிடததில் அனுபபினார்கள்

௰௪ அவர்கள் வநது அவரை நோககி, போதகரே, நீர் மனிதருடைய முகததைப பாராமல், பராபரனுடைய மார்ககததைச் சததியமாய் உபதேசிககிறவராய் இருககிறீர், ஆகையால நீர சததியமுடையவருமாய, ஒருவரையுங குறிததுக் கவலையில்லாதவருமாய் இருக்கிறீர என்று அறிநதிருககிறோம; இராயனுககு வரிபபணததைககொடுககிறது நியாயமோ இலலையோ?

௰௫ நாம் கொடுக்கவேணடுமோ, கொடாமல இருககவேண்டுமோ என்றார்கள், அவர அவரகளுடைய மாயததை அறிநது, நீஙகள என்னை ஏன சோதிக்கிறீரகள்? நான் பாரககும்படிககு, *ஒரு தெனாரியு எனககுக கொணடுவாருஙகள என்றார.

௰௬ அவர்கள் கொணடுவநதார்கள; அபபொழுது அவர் சொனனது இநதச சொரூபமும மேலெழுததும யாருடையவைகள என்றார, அதற்கு அவரகள, இராயனுடையவைகள என்றாரகள.

௰௭ இயேசுவானவர சொன்னது இராயனுடையவைகளை இராயனுககும, பராபரனுடையவைகளைப் பராபரனுக்கும், செலுததுஙகள் என்று சொனனார; அபபொழுது அவரைககுறிதது ஆசசரியபபட்டாரகள்.

௰௮ ¶ [4]பின்பு உயிரோடெழுநதிருக்கும் மறுமை இலலையென்று சொலலுகிற [5]சதுசேயர் என்பவரகள அவரிடத்தில வநது,

௰௯ [6]போதகரே, ஒருவன பிள்ளைகள் இலலாமல் தன மனைவியை விட்டு இறந்தால், அவனுடைய சகோதரன அவன் மனைவியை விவாகமபணணி, அவனுக்குச சநததி உணடாககவேண்டுமெ என்று நமககு மோசே கட்டளையிட்டிருககிறாரே.

௨௰ ஓரிடததில் ஏழுபேர் சகோதரர் இருந்தார்கள்; அவர்களில் மூததவன ஒரு பெண்ணை விவா

கி பி ௩௩.

---

[1] சங ௱௰௮ ௨௨

[2] மத ௨௧ ௪௬, ௪௫ மாற ௰௧ ௰௮ யோவா ௭ ௨௫, ௩௰, ௪௪

[3] மத ௨௨ ௰௫ லூக ௨௰ ௨௰

* [illegible] ரோமுசகா லபணைதுகளவா ய மத ௰௮ ௨௮

[4] அப ௨௩ ௭

[5] மா ௩௩ ௨௩ லூக ௨௰ ௨௭

[6] ௫ மோ ௨௫ ௫

கம்பண்ணி, பின்பு சந்ததியில்லாமல் இறந்துபோனான்

௨௧ அப்பொழுது இரண்டாம் சகோதரன் அவளை விவாகம்பண்ணி, சந்ததியில்லாமல் இறந்துபோனான்; மூன்றாம் சகோதரனும் அப்படிப் போனான்.

௨௨ ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணிச் சந்ததியில்லாமல் போனார்கள்; எல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.

௨௩ ஆகையால் அவர்கள் உயிரோடெழுந்திருக்கும் காலத்திலே ஏழுபேருக்கும் மனைவியாயிருந்த அவள் அவர்களில் எவனுக்கு மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள்.

௨௪ அவர்களுடனே இயேசுவானவர் சொன்னதாவது: நீங்கள் வேதவாக்கியங்களையும் பராபரனுடைய வல்லமையையும் அறியாமல் இருக்கிறபடியால் அல்லவா வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்?

௨௫ மரித்தவர்கள் உயிரோடெழுந்திருக்கும்பொழுது, பெண்கொள்வதும் கொடுப்பதும் இராது; [1]அவர்கள் பரலோகத்திலுள்ள தூதரைப்போல இருப்பார்களே.

௨௬ மரித்தோர் எழுப்பப்படுவதைக்குறித்து [2]நான் ஆபிரகாமினுடைய தேவனுமாய், ஈசாக்கினுடைய தேவனுமாய், யாக்கோபினுடைய தேவனுமாயிருக்கிறவர் என்று செடியிலிருந்து பராபரன் மோசேயுடனே சொல்லிய வாக்கியம் மோசேயின் ஆகமத்திலே எழுதியிருக்கின்றதே; அதை நீங்கள் வாசிக்கவில்லையா?

௨௭ அவர் மரித்தவர்களுடைய தேவனாயிராமல் சீவனுள்ளோருடைய தேவனாயிருக்கிறார்; ஆகையால் நீங்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றார்.

௨௮ ¶ [3]அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டதை வேதபாரகரில் ஒருவன் கேட்டு, அவர் அவர்களுக்கு நன்றாய் மாறுத்தரம் சொன்னாரென்று அறிந்து, அவரை நோக்கி, கற்பனைகளில் எது பிரதானமானதென்று கேட்டான்.

௨௯ அதற்கு அவர் சொன்னது: கற்பனைகளில் பிரதானமான கற்பனை என்னவென்றால், [4]இஸ்ரவேலே கேள், உன் தேவனாகிய பராபரன் ஒருவரே பராபரன்

௩௰ உன் தேவனாகிய பராபரனிடத்தில், நீ உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் பெலன்கள் எல்லாவற்றோடும், அன்புகூர்வாயாக என்பதே பிரதானமான கற்பனை.

௩௧ இரண்டாம் கற்பனை அதற்கு ஒப்பாயிருக்கின்றது; என்னவெனில், [5]உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்பதே; இவைகளிலும் வேறொரு பெரிதான கற்பனையில்லை என்றார்

௩௨ வேதபாரகன் சொன்னது நல்லது போதகரே, நீர் சத்தியத்தின்படி சொன்னீர்; ஒரே தேவன் உண்டு, [6]அவரைத்தவிர வேறொரு தேவனில்லை.

௩௩ [7]அல்லாமலும் தகனபலி முதலான பலிகளிலும், முழு இருதயத்தோடும், முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூர்வதும், தன்மேல் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வதுமே மேன்மையாயிருக்கின்றன என்றான்.

௩௪ அவன் புத்தியோடே பேசினதை இயேசுவானவர் கண்டு, நீ பராபரனுடைய இராச்சியத்திற்குத் தூரமானவன் அல்ல என்று அவனுடனே சொன்னார்; [8]பின்பு ஒருவனும் அவரிடத்தில் வினாவத் துணியவில்லை.

௩௫ ¶ [9]இயேசுவானவர் தேவாலயத்திலே உபதேசம்பண்ணுகையில் அவர் அவர்களை நோக்கி, தா

கி. பி. ௩௩.

[1] ௧ கொரி ௰௫ ௪௨ ௪௩, ௫௨
[2] ௨ மோ ௩ ௬
[3] மத ௨௨. ௩௫ ௪
[4] ௫ மோ. ௬ ௪ லூக் ௰ ௨௭
[5] ௩ மோ ௰௯. ௰௮ மத ௨௨ ௩௯ ரோ ௰௩ ௯ கலா ௫ ௰௪ யாக் ௨ ௮
[6] ௫ மோ ௪ ௩௯ ஏசா ௪௫ ௬, ௰௪ ௪௬ ௯
[7] ௧ சாமு ௰௫ ௨௨ ஓசே ௬ ௬ மீகா ௬ ௬, ௭, ௮
[8] மத ௨௨ ௪௬
[9] மத ௨௨ ௪௧ லூக ௨௰ ௪௧

வீது தானே பரிசுத்த ஆவியினாலே சொன்னது: [1]பராபரன் என் கர்த்தாவை நோக்கி, உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதபடியாக்குமளவும், நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உளுக்காரும் என்றார் என்பதே.

௩௬ [2]ஆகையால் கிறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்?

௩௭ தாவீது தானே அவரைக் கர்த்தாவென்று சொல்லியிருக்க, அவர் எப்படி அவனுடைய குமாரனாயிருக்கிறார் என்று சொன்னார்; அநேக சனங்கள் அவருடைய உபதேசத்தை இன்பமாய்க் கேட்டார்கள்.

௩௮ ¶ [3]அன்றியும் அவர் உபதேசம்பண்ணுகையில் அவர்களுடனே சொன்னது: நீளமான அங்கிகளைத் தரித்திருந்து நடக்கவும், [4]சந்தைகளிலே வாழ்த்துதல் அடையவும்,

௩௯ செபஆலயங்களில் முதல் ஆசனங்களில் இருக்கவும், போசன பந்திகளில் முதலிடங்களில் இருக்கவும் விரும்பி, [5]விஸ்தாரமாய்ச் செபமந்திரங்களைச் சொல்லுகிறோம் என்று சொல்லி, [6]கைம்பெண்களுடைய ஆஸ்திகளைப் பட்சித்துவருகிற வேதபாரகருக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருங்கள்.

௪௰ அவர்கள் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்றார்.

௪௧ ¶ [7]அல்லாமலும் இயேசுவானவர் பொக்கிஷப்பெட்டிக்கு எதிரே உளுக்காந்தபொழுது, [8]அதிலே சனங்கள் *பணத்தைப் போடுகிறதைப் பார்த்தார், அநேக ஐசுவரியவான்கள் மிகவும் போட்டார்கள்.

௪௨ எளியவளான ஒரு கைம்பெண்ணும் வந்து, கோதிராந்தேசென்னும் இரண்டுகாசைப் †போட்டாள்.

௪௩ அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை அழைத்து, இந்தப் பொக்கிஷப் பெட்டியிலே [9]போட்டவர்கள் எல்லாரிலும் இவ்வேழைக் கைம்பெண் அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௪ என்னத்தினாலென்றால், அவர்கள் எல்லாரும் தங்களுக்குண்டான சம்பூரணத்தில் சில போட்டார்கள், [10]இவள் தன் எளிமையில் தன் சீவனத்திற்குண்டான யாவையும் போட்டாள் என்றார்.

௰௩. அதிகாரம்.

௧ கிறிஸ்து தேவாலயத்தின் அழிவையும், ௯ சுவிசேஷத்தின் நிமித்தமாய் உண்டாகும் துன்பத்தையும், ௰ சுவிசேஷம் சகலசாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படுவதையும், ௰௪ யூதர்களுக்கு உண்டாகும் உபத்திரவங்களையும், ௨௪ அவர் நியாயத்தீர்ப்புக்கு வரும் விதத்தையும், ௩௨ அந்த நேரம் ஒருவருக்கும் தெரியாதிருக்கிறபடியால் மரணத்தின் வழியாய் எவனிடத்திலும் அவர் வரும்பொழுது, அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு எவனும் விழித்துச் செபம்பண்ணவேண்டும் என்பதையும், முன்னறிவித்தது.

[11]பின்பு அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படுகிறபொழுது, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி, போதகரே, இதோ, இவைகள் எப்படிப்பட்ட கல்லுகள்? இது எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றது என்றான்.

௨ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: இந்தப் பெரியமாளிகையைப் பார்க்கிறாயா? [12]இதில் ஒரு கல்லின்மேலே மற்றொரு கல் வைக்கப்படுவதில்லை, எல்லாம் இடிக்கப்படும் என்றார்.

௩ ¶ பின்பு அவர் தேவாலயத்திற்கு எதிராக ஒலிவமலையின்மேல் உளுக்காந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் தனித்திருந்து அவரை நோக்கி,

௪ [13]இவைகள் எப்பொழுது நடக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறும் காலத்திலே என்ன அடையாளம் தோன்றும்? அதை

கி. பி. ௩௩

1 சங ௱௰ ௧
2 ௨ சாமு ௨௩ ௨
3 மாற் ௪ ௨
4 லூக் ௰௧ ௪௩
5 மத் ௨௩ ௧ லூக் ௨௰ ௪௬
6 மத் ௨௩ ௰௪
7 லூக் ௨௧ ௧
8 ௨ இரா ௰௨, ௯
* செம்புப் பணம் மத் ௰ ௯
† செம்புப் பணத்தில் எழில் ஒரு பங்குள்ள காசு
9 ௨ கொரி ௮ ௰௨
10 ௧ யோ ௩ ௰௭
11 மத் ௨௪ ௧ லூக் ௨௧ ௫
12 லூக் ௰௯ ௪௪
13 மத் ௨௪ ௩ லூக் ௨௧ ௭

எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டரர்கள்.

௫ அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: அநேகர் தோன்றி, என்னுடைய நாமத்தை எடுத்து, நானே அவரென்று சொல்லி, அநேகரை வஞ்சனை செய்வார்கள்.

௬ ஆகையால் [1]ஒருவனும் உங்களை வஞ்சனைசெய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

௭ அல்லாமலும் நீங்கள் யுத்தங்களையும் யுத்தங்களுக்கேற்ற பேச்சுகளையும் கேள்விப்படும்பொழுது கலக்கம் அடையாதிருங்கள்

௮ அப்படி நடக்கவேண்டுமே, அப்பொழுது முடிவு உடனே வாராது; ஆகையால் ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும், ஒரு இராச்சியத்தார் மற்றொரு இராச்சியத்தாருக்கும் விரோதமாய் எழும்புவார்கள்; பல இடங்களிலே பூமி அதிர்தல்களும் பஞ்சங்களும் கலகங்களும் சம்பவிக்கும்; [2]இவைகள் வேதனைகளின் *ஆரம்பமாய் இருக்கும்.

௯ ¶ [3]அப்பொழுது நீங்கள் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள்; என்னத்தினாலெனில் என் நிமித்தம் உங்களைப் பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; செபஆலயங்களிலே நீங்கள் அடிக்கப்பட்டுத் துரைகளுக்கும் இராசாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்குமுன்பாக நிறுத்தப்படுவீர்கள்.

௰ அல்லாமலும் முன்பு சுவிசேஷமானது [4]உலகத்தார் எல்லாருக்கும் பிரசங்கம் பண்ணப்படவேண்டும்.

௰௧ [5]அப்படி ஒப்புக்கொடுக்கும்படிக்கு உங்களைக் கொண்டுபோகும்பொழுது, நீங்கள் என்ன பேசுவோம் என்று முன் கவலைப்படாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருங்கள்; நீங்கள் அல்ல, [6]பரிசுத்த ஆவியே பேசுகிறவராகையால், அந்நேரத்திலே உங்களுக்கு அளிக்கப்படுவதையே பேசக்கடவீர்கள்.

௰௨ [7]அன்றியும் ஒருவன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்திற்கு, ஒப்புக்கொடுப்பார்கள்; பிள்ளைகளும் தங்களைப் பெற்றவர்களுக்கு விரோதமாய் எழும்பி அவர்கள் மரணம் அடையும்படி செய்விப்பார்கள்.

௰௩ [8]நீங்களும் என் நாமத்தின் நிமித்தம் யாவராலும் பகைக்கப்படுவீர்கள்; [9]எப்படியும் முடிவுவரைக்கும் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

௰௪ ¶ மேலும் பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் [10]தானியேல் தீர்க்கதரிசி சொன்னாரே, (அதை) வாசிக்கிறவன் சிந்தித்துக்கொள்ளக்கடவன்; [11]அது நிற்கப்படாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக்காணும்பொழுது [12]யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

௰௫ வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டிற்குள்ளே இறங்காமலும், அதிலிருந்து எதையாகிலும் எடுத்துக்கொண்டுபோகும்படி பிரவேசியாமலும் போகக்கடவன்.

௰௬ அல்லாமலும் வயலில் இருப்பவன் தன் வஸ்திரத்தை எடுத்துப் போகும்படிக்குப் பின்னிட்டுத் திரும்பாமல் போகக்கடவன்

௰௭ [13]ஐயோ! அந்நாள்களில் கருப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவம் இருக்கும்.

௰௮ மேலும் பராபரன் உலகத்தை உண்டாக்கினதுமுதற்கொண்டு, இதுவரைக்கும் சம்பவியாததுமாய், இனிமேலும் சம்பவியாததுமாய் இருக்கிற [14]உபத்திரவமே அந்நாள்களில் இருக்கும்.

௰௯ ஆதலால்நீங்கள் ஓடுகிறது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

கி. பி. ௩௩

[1] எரே ௨௯ ௮ எபே ௫ ௬ ௨ தெச ௨ ௩

[2] மத ௨௪ ௮

* இந்த மொழி மூலபாஷையில கொப்பவாதனையைக் குறிக்கும

[3] மத ௰ ௰௭.௰௮ ௨௪ ௯ வெளி ௨ ௰

[4] மத ௨௪ ௰௪

[5] மத ௰ ௰௯ லூக் ௰௨ ௰௧ ௨௧ ௰௪

[6] அப ௨ ௪ ௪ ௮, ௩௧

[7] மீகா ௭ ௬ மத ௰ ௨௧ ௨௪ ௰ லூக் ௨௧ ௰௬

[8] மத் ௨௪ ௯ லூக் ௨௧ ௰௭

[9] தானி ௰௨ ௰௨ மத ௰ ௨௨ ௨௪ ௰௩ வெளி ௨ ௰

[10] தானி ௯ ௨௭

[11] மத ௨௪ ௰௫

[12] லூக ௨௧ ௨௧

[13] லூக ௨௧ ௨௩ ௨௩ ௨௯

[14] தானி ௯ ௨௬ ௰௨ ௧ யோவே ௨ ௨ மத ௨௪ ௨௧

௨௰ அல்லாமலும் பராபரன் அந்நாள்களைக் குறையப்பண்ணாமல் இருந்தால் ஒருவரும் தப்பிப் போவதில்லை, அவர் தெரிந்துகொண்டவர்களின் நிமித்தமே அந்நாள்களைக் குறைத்தார்

௨௧ அன்றியும் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, தெரிந்துகொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்க) கூடுமானால் அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

௨௨ [1]ஆகையால் அக்காலத்திலே ஒருவன், இதோ இங்கே கிறிஸ்து என்றும், அதோ அங்கே கிறிஸ்து என்றும் உங்களுடனே சொன்னால், அவனை நீங்கள் நம்ப வேண்டாம்

௨௩ [2]எச்சரிக்கையாகவே இருங்கள்; இதோ, இவைகள் எல்லாவற்றையும் உங்களுக்கு முன்னறிவித்தேன்.

௨௪ ¶ [3]அன்றியும் அக்காலத்திலே அந்த உபத்திரவத்திற்குப்பின்பு சூரியன் இருள் அடையும், சந்திரன் பிரகாசம்கொடாமல் இருக்கும்.

௨௫ நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும்; அல்லாமலும் வானத்தில் பலமுள்ளவைகளெல்லாம் அசைக்கப்படும்

௨௬ [4]அப்பொழுது மனிதனுடைய குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருவார்; அவரை அவர்கள் காண்பார்கள்.

௨௭ அல்லாமலும் அவர் அப்பொழுது தம்முடைய தூதரை அனுப்பி வானத்தின் எல்லைகளாகிய நாலுதிசைகளிலுமிருந்து தாம் தெரிந்துகொண்டவர்களைச்சேர்த்துக்கொள்வார்.

௨௮ ¶ [5]அத்திமரத்தினாலே உவமையாக ஒரு விசேஷத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதின் கிளை தளிராகி இலைகளைக் கொடுக்கிறபொழுது, வசந்தகாலம் சமீபமாய் இருக்கிறதென்று அறிகிறீர்கள்.

௨௯ அப்படிப்போல, இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது மிகவும் சமீபமாய் இருக்கிறார் என்று அறியக்கடவீர்கள்.

௩௰ இவைகள் யாவும் சம்பவிக்குமளவும், இந்தச் சந்ததி ஒழிந்து போவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௧ [6]வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வசனங்களோ ஒழியாமல் இருக்கும்.

௩௨ (அவை சம்பவிக்கும்) நாளையும் நாழிகையையும் பிதாவானவரேயன்றி, மற்றொருவனும் அறியமாட்டான்; பரமண்டலங்களிலுள்ள தூதரும் குமாரனும் அதை அறியார்கள்.

௩௩ ¶ அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால், [7]எச்சரிக்கையாய் விழித்துக்கொண்டு செபம்பண்ணக்கடவீர்கள்.

௩௪ [8]ஒரு மனிதன் தன் வீட்டைவிட்டுப் புறத்தேசத்திற்குப் போகமனதாய், தன் ஊழியக்காரருக்கு அதிகாரம் கொடுத்து, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேலையை நியமித்து, காவற்காரன் விழித்துக்கொண்டிருக்கும்படிக்குக் கட்டளையிடுகிறதுபோலஇருக்கின்றது.

௩௫ [9]ஆகையால் வீட்டெசமான், சாயந்தரம், பாதிராத்திரி, சேவல் கூவும் நேரம், காலை, இவைகளில் இன்னவேளையில் வருவார் என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால்,

௩௬ அவர் சடுதியாய் வந்து, உங்களைத் தூங்குகிறவர்கள் என்று கண்டுபிடியாதபடிக்கு விழித்துக்கொண்டிருங்கள்.

௩௭ விழித்துக்கொண்டிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொன்னதுபோல, மற்ற யாவருக்கும் அப்படியே சொல்லுகிறேன் என்றார்.

கி. பி. ௩௩.

1 மத் ௨௪ ௨௩ லூக் ௰௭ ௨௩ ௨௧ அ
2 ௨ பே ௩ ௰௭
3 தானி ௭ ௰ செப ௧ ௰௫ மத ௨௪ ௨௯ லூக் ௨௧ ௨௫
4 தானி ௭ ௰௩, ௰௪ மத ௰௬ ௨௭ ௨௪ ௩௰ மாற் ௰௪ ௬௨ அப ௧ ௰௧ ௧ தெச ௪, ௰௬ ௨ தெச ௧ ௭,௰ வெளி ௧ ௭,
5 மத ௨௪ ௩௨ லூக் ௨௧ ௨௯
6 ஏசா ௪௰ அ
7 மத ௨௪ ௪௨ ௨௫ ௰௩ லூக் ௰௨ ௪௰ ௨௧ ௩௪ ௩௬ ௧ ரோ ௰௩ ௰௧ ௧ தெச ௫ ௬
8 மத ௨௪ ௪௫ ௨௫ ௰௪
9 மத ௨௪ ௪௨, ௪௪

௰௪. அதிகாரம்.

௧ கிறிஸதுவுக்கு விரோதமாகப் பண்ணப்பட்ட ஆலோசனை ௩ ஒரு ஸதிரீ தயிலத்தை அவர சிரசின மேல் வாரத்தது ௰ யூதா தன ஆண்டவரைப பணத்துக்கு விற்றது ௰௨ கிறிஸது தமமுடைய சீஷர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கபபடுவதை முனனறிவித்தது ௨௨, பஸ்கா ஆயத்தமபண்ணபபட்டுப புசிக்கபபட்டபினபு இராபபோசனததை ஏற்படுத்தி, ௨௬ சீஷாகள எல்லாரும தம்மைவிட்டு ஓடிபபோவதையும, பேதுரு தமமை மறுதலிபபதையுங்குறித்து முனனறிவித்தது ௪௩ யூதா அவரை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தது ௪௬ அவா தோட்டத்தில் பிடிககவும, ௫௫ அநியாயமாயக் குற்றஞ்சாற்றவும யூதாகளுடைய ஆலோசனை சங்கத்தாரால ஆக்கினைக்குள்ளாகத தீர்க்கவும, ௬௫ அவாகளால் நிந்திககவும ௬௬ பேதுருவினால மூன்றுவிசை மறுதலிககவும உடபட்டது

[1]இரண்டு நாளுக்குப் பின்பு, புளியாத அப்பம் சாபபிடுகிற பஸ்காப பண்டிகை வநதது; பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தநதிரமாய அவரைப் பிடிததுக கொலைசெயயுமபடிக்கு வகைதேடிக்கொண்டு இருககையில்,

௨ அவர்கள் சொன்னது: பண்டிகையிலே அபபடிச செயயக்கூடாது, செயதால சனஙகளுககுள்ளே கலகம் உணடாகும என்றார்கள.

௩ ¶ [2]அவர் பெத்தானியா ஊரிலே குஷ்டரோகியாயிருநத சீமோனுடைய வீட்டில் போசனபநதி இருககையில். ஒருஸ்திரியானவள மிகவும் விலையேறபபெறற களங்கமில்லாத சுகநத வருக்கததால் செய்த நருது* என்னும் பரிமள தயிலமுள்ள வெண்கல்பரணியை எடுததுவநது அதைத திறநது, அதிலுள்ள தயிலத்தை அவருடைய தலையின்மேல் வார்த்தாள்.

௪ அபபொழுது சிலர் தஙகளுககுள்ளே விசனம் அடைநது, இந்தப பரிமளதயிலத்தை என கெடுத்துபபோடுகிறீர்?

௫ இதை முநநூறு †தேநாரியு வெள்ளிக்குமேலான கிரயத்திற்கு விறறு, ஏழைகளுககுக் கொடுக்கலாமே என்றுசொல்லி அவளுக்கு விரோதமாய் முறுமுறுததார்கள்.

௬ அபபொழுது இயேசுவானவர் சொன்னது: இவளை விட்டுவிடுஙகள, என் இவளை வருத்தபபடுத்துகிறீர்கள்; இபபடி இவள் ஒரு நற்கிரியை என்னிடததில் செய்தாள.

௭ [3]ஏழைகள் எபபொழுதும் உங்களுடனே இருப்பார்கள; மனதிருநதால் நீஙகள் அவர்களுக்கு நன்மைசெயயலாம்; நான் எபபொழுதும உஙகளிடத்தில் இரேன்.

௮ இவள தன்னாலானமட்டும்செயதாள; என் சரீரததை அடககம் பணண எத்தனமாக்கும்படிக்கு இவள முநதி இதில் சுகநதவருக்கம் இட்டாள.

௯ உலகம் முழுவதிலும் இந்தச சுவிசேஷம் பிரசஙகிக்கபபடும இடம எஙகேயோ, அஙகே இவளை நினைத்துக்கொள்வதறகு, இவள் இபபொழுது செயததும சொல்லபபடும என்று மெயயாய உஙகளுக்குச சொல்லுகிறேன் என்றாா.

௰ ¶ [4]பின்பு பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸகாரியோததென்பவன், பிரதான ஆசாரியருக்கு அவரைக காட்டிக்கொடுககும்படிக்கு அவாகளிடததில போனான்

௰௧ அவனுடைய வாாததைகளை அவாகள் கேட்டுச சநதோஷபபட்டு, அவனுக்குப பணமகொடுககுமபடிக்கு வாககுத்ததம பணணினார்கள; பின்பு அவன அவரைக் காட்டிககொடுபபதற்குத் தகுதியான காலத்தைப பாாததுக்கொண்டிருந்தான்.

௰௨ ¶ [5]புளியாத அபபஙகளைச் சாப்பிடும நாள்களில், பஸ்காஆட்டுக்குட்டி பலியிடபபடும ‡முதல் நாளிலே அவருடைய சீஷர்கள் அவரை நோககி, நீா பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நாஙகள் எஙகே போய் எத்தனம்பண்ணச் சித்தமாய இருக்கிறீர் என்று கேட்டார்கள்.

கி. பி. ௩௩.

[1] மத். ௨௬. ௨ லூக ௨௨. ௧ யோவா ௰௧ ௫௫ ௰௩ ௧
[2] மத ௨௬. ௬ யோவா ௰௨. ௧, ௩ லூக ௭ ௩௭
* அல்லது சுத்த நருது
† மத ௰௮ ௨௮ காணக
[3] ௫ மோ ௰௫ ௰௧
[4] மத் ௨௬ ௰௪ லூக் ௨௨ ௩,௪
[5] மத் ௨௬ ௰௭ லூக ௨௨ ௭
‡ அல்லது கொல்லபபடும

௰௩ அபபொழுது அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை அழைத்து, நீஙகள் பட்டணத்திற்குப போஙகள்; அங்கே ஒரு மனிதன் தண்ணீர்க் குடத்தைச் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிராக வருவான்; அவனுக்குப் பின்செல்லுங்கள்.

௰௪ அல்லாமலும் அவன் பிரவேசிக்கும் வீட்டிலே நீஙகளும் (பிரவேசித்து,) அதின் எசமானை நோக்கி, நான என சீஷர்களுடனே பஸகாவைப போசனம்பண்ணததக்கதான இடம் எஙகே என்று போதகா கேட்கிறாரென்று சொல்லுங்கள.

௰௫ அபபொழுது அவன் கம்பளம முதலானவைகள் விரித்து எததனமாக்கபபட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டில் பெரிய அறையை உங்களுக்குக் காண்பிபபான்; அஙகே நமக்காக எத்தனம்பண்ணுஙகள் என்று சொல்லி அனுபபினார்.

௰௬ அநதப்படி அவருடைய சீஷர்கள் புறபபட்டுப பட்டணததில் வந்து, தஙகளுக்கு அவா சொனனபடியே கண்டு, பஸ்காப போசனததை எத்தனம்பண்ணினாகள்

௰௭ ¶ [1]சாயந்தரமானபொழுது, அவா பன்னிருவருடனே கூட அவ்விடததிற்குப போனார்.

௰௮ அவர்கள பந்தியிலிருந்து சாபபிடுகையில், இயேசுவானவர் அவர்களை நோக்கி, என்னோடே கூடச் சாபபிடுகிற. உங்களில் ஒருவனே என்னைக் காட்டிக்கொடுபபான் எனறு மெய்யாய் உங்களுக்குச சொல்லுகிறேன் என்றார்.

௰௯ அவாகள் அதைக் கேட்டு, மிகுந்த துக்கம் அடைந்து, நானோ, நானோ எனறு ஒவ்வொருவராய் அவரிடத்தில் கேட்கத் தொடங்கினார்கள்.

௨௰ அவர்களுக்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: பன்னிருவரில் ஒருவனே என்னோடேகூடத் தாலததிலே தோய்க்கிறவனே (அப்படிச்செய்வான்)

௨௧ [2]மனிதனுடைய குமாரன் தன்னைக்குறித்து எழுதியிருக்கிறபடி போகிறான்; ஆனாலும் ஐயோ! மனிதனுடையு குமாரனைக் காட்டிக்கொடுப்பவன், எவனோ, அவனுக்கு வேதனை வரும்; அம்மனிதன் பிறவாமல் இருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார.

௨௨ [3]அல்லாமலும் அவர்கள் சாபபிடுகிறபொழுது, இயேசுவானவர் அபபத்தை எடுத்து ஆசீர்வாதம்செயது, அதைப பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இதை எடுத்துப புசியுங்கள்; இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது என்று சொல்லி,

௨௩ பின்பு பாத்திரத்தையும் எடுத்துத் தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் எலலாரும் அதில் பானம்பண்ணின பினபு சொன்னதாவது:

௨௪ இது புதிய ஏற்பாட்டுக்கு ஏற்றதாய் அநேகருக்காகச் சிநதபபடும் என்னுடைய இரத்தமாய் இருககின்றது.

௨௫ பராபரனுடைய இராச்சியத்திலே நான் திராட்ச இரசத்தை நவமாய் உங்களுடனே பானம்பண்ணும் நாள்வரைக்கும், அதை நான் மறுபடியும் பானம்பண்ணுவதில்லை என்று மெய்யாய் உஙகளுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௬ ¶ [4]அவர்கள் தோத்திரம்*பாடின பின்பு, ஒலிவமலைக்குப்போனார்கள்.

௨௭ [5]அபபொழுது இயேசுவானவர் அவாகளை நோககி, [6]மேய்ப்பனானவனை அடிபபேன், அப்பொழுது ஆடுகள் சிதற அடிக்கப்படுமென்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் எல்லாரும் இநத இராத்திரியிலே என்னைக்குறித்து வழுவுவீர்கள்.

கி. பி. ௩௩

[1] மத் ௨௬ ௰௭

[2] மத் ௨௬ ௨௪ லூக் ௨௨ ௨௨

[3] மத் ௨௬ ௨௬ லூக் ௨௨ ௰௯ ௧ கொரி ௰௧ ௨௩

[4] மத் ௨௬. ௩௰

* அலலது சஙகீதம.

[5] மத் ௨௬ ௩௧

[6] சகரி ௰௩ ௭.

உஅ [1]ஆனாலும் நான் உயிரோடிருக்கும்படி எழுப்பப்பட்ட பின்பு, உங்களுக்குமுன்னே கலிலேயா நாட்டுக்குப் போவேன் என்றார்.

உகூ [2]அதற்குப் பேதுரு, எல்லாரும் உம்மைக்குறித்து வழுவினாலும், நான் அப்படிச் செய்யமாட்டேன் என்றான்.

கூய அவனுடனே இயேசுவானவர், இந்த இராத்திரியிலே சேவல் இரண்டாந்தரம் கூவுமுன்னமே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாயென்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கூக அதற்கு அவன், நான் உம்மோடே சாகவேண்டுவதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று அதிக உறுதியாய்ச் சொன்னான்; மற்றவர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

கூஉ ¶ [3]பின்பு அவர்கள் கெத்சேமனே என்னுமிடத்தில் சேர்ந்தார்கள்; அங்கே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, நான் போய்ச் செபம்பண்ணுகையில் நீங்கள் இங்கே இருங்கள் என்று சொல்லி,

கூகூ பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டிக்கொண்டு போய், மிகுந்த திகிலையும் வியாகுலத்தையும் அடையத் தொடங்கி,

கூச [4]என் ஆத்துமா மரணவேதனைப்படுகின்றது; நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள் என்று சொல்லி,

கூரு சற்றேதூரம் போய்த் தரையிலே விழுந்து, அந்த நேரம் தம்மைவிட்டு நீங்கக் கூடுமானால் அது நீங்கும்படிக்கு,

கூசு [5]அப்பா பிதாவே, [6]உம்மாலே எல்லாம் ஆகும்; இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; இல்லாவிட்டால் [7]என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவதென்று செபம்பண்ணினார்.

கூஎ பின்பு அவர் வந்து, அவர்கள் தூங்குகிறதைக் கண்டு, பேதுருவுடனே சொன்னது: சீமோனே, தூங்குகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்துக்கொள்ளக்கூடாதா?

கூஅ குற்றம்செய்வதற்கான காரணத்தில் நீங்கள் பிரவேசியாதபடிக்கு விழித்துக்கொண்டு செபம்பண்ணுங்கள்; [8]ஆவியானது மனதுள்ளதுதான், மாம்சதேகம் பெலவீனமுள்ளதென்று சொல்லி,

கூகூ மறுபடியும் அப்புறம் போய், மேற்சொல்லிய விதமாய்ச் செபம்பண்ணினார்.

சய பின்பு அவர் திரும்பி, அவர்களுடைய கண்கள் கனமான தூக்கத்தை அடைந்தபடியினாலே, மறுபடியும் அவர்கள் தூங்குகிறதைக் கண்டார்; அல்லாமலும், அவர்கள் அவருக்குச் சொன்ன மாறுத்தரத்தையும் அவர்கள் தாமே அறியவில்லை.

சக பின்பு அவர் மூன்றாந்தரம் அவர்களிடத்தில் வந்து, நீங்கள் பின்னும் தூங்கி இளைப்பாறுகிறீர்களா? இது போதும், [9]நேரம் வந்தது; இதோ, மனிதனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறான்

சஉ [10]அதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் சமீபிக்கிறான்; எழுந்திருங்கள் நாம் போவோம் வாருங்கள் என்றார்.

சகூ ¶ [11]உடனே அவர் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாவும், அவனோடேகூடப் பெரிய ஆசாரியராலும் வேதபாரகராலும் மூப்பராலும் அனுப்பப்பட்டுக் கத்திகளையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வருகிற மிகுந்த சனங்களும் தோன்றினார்கள்.

சச அவரைக் காட்டிக்கொடுக்க வந்தவன், எவனை முத்தம் செய்வேனோ, அவனே அவன், அவ

கி. பி. கூகூ.

1 மாற் யசு எ
2 மத் உசு கூகூ, கூச லூக் உஉ. கூகூ, கூச யோவா யகூ கூஎ, கூஅ
3 மத உசு கூசு லூக் உஉ கூகூ யோவா யஅ க
4 யோவா யஉ உஎ
5 உரோ அ யரு கலா ச சு
6 எபி ரு எ
7 யோவா ரு கூய சு கூஅ
8 உரோ எ உகூ கலா ரு யஎ
9 யோவா யகூ க
10 மத உசு சசு யோவா யஅ க, உ
11 மத உசு சஎ லூக உஉ சஎ யோவா யஅ கூ.

னை நீங்கள் பிடித்துப் பத்திரமாய்க்கொண்டுவரவேண்டும் என்று அடையாளமாக மற்றவர்களுக்குச் சொல்லியிருந்தான்.

௪௫ ஆகையால், அவன் வந்தவுடனே, அவரிடத்தில் சேர்ந்து, இரபீ, இரபீ, என்று சொல்லி, அவரை முத்தம்செய்தான்.

௪௬ அப்பொழுது அவர்கள் அவரைக் கைப்பிடியாகப் பிடித்தார்கள்.

௪௭ ¶ உடனே சமீபமாய் நின்றவர்களில் ஒருவன், கத்தியை எடுத்துப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதறவெட்டினான்.

௪௮ [1]அப்பொழுது இயேசுவானவர் அவர்களைநோக்கி, ஒரு கள்ளனைப் (பிடிக்கிறதற்குப் புறப்படுகிறது) போல நீங்கள் என்னைப் பிடிக்கும்படிக்குக் கத்திகளோடும் தடிகளோடும் புறப்பட்டு வந்தீர்கள்.

௪௯ நாள்தோறும் நான் உங்களுக்குள்ளே தேவாலயத்திலே உபதேசம்பண்ணினேன், அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை? [2]ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டுமென்று சொன்னார்.

௫௰ [3]உடனே (சீஷர்) எல்லாரும் அவரைவிட்டு, ஓடிப்போனார்கள்.

௫௧ ஒரு வாலிபன் ஒரு வஸ்திரத்தைமாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு, அவருக்குப் பின்சென்றான்; அவனைச் சேவகர் பிடித்தார்கள்.

௫௨ அப்பொழுது அவன் தன் வஸ்திரத்தைவிட்டு நிருவாணமாய் அவர்களைவிட்டு ஓடிப்போனான்.

௫௩ ¶ [4]இயேசுவானவரை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே ஆசாரியரெல்லாரும் மூப்பரும் வேதபாரகரும் கூடிவந்தார்கள்.

௫௪ பேதுரு தூரமாக அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய மாளிகையின் பிரகாரத்தில் வந்து, அங்கே ஊழியக்காரருடனே நெருப்பின் அருகே உளுக்காந்து, அனல் காய்ந்துகொண்டிருந்தான்.

௫௫ [5]அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் மற்றப் பெரிய சங்கத்தார் எல்லாரும் இயேசுவானவரைக் கொலைசெய்யும்பொருட்டாய் அவருக்கு விரோதமாய்ச் சாட்சிகளைத் தேடினார்கள்.

௫௬ அகப்படவில்லை; அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியும் அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை.

௫௭ [6]அப்பொழுது சிலர் எழுந்து இவன், கையினாலே செய்யப்பட்ட இந்தத் தேவாலயத்தை நான் இடித்து, பின்பு மூன்று நாளுக்குள்ளே கையிலல்லாமல் வேறொன்றைக் கட்டுவேன் என்று சொல்லக் கேட்டோமென்று,

௫௮ அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்.

௫௯ அப்படியும் அவர்களுடைய சாட்சி ஒவ்வாமலிருந்தது.

௬௰ [7]பின்பு பிரதான ஆசாரியன் நடுவிலே எழுந்து, இயேசுவானவரை நோக்கி, நீ மாறுத்தரம் சொல்லுகிறதில்லையா? இவர்கள் உனக்கு விரோதமாய் என்னசாட்சிசொல்லுகிறார்கள் என்று கேட்டான்.

௬௧ [8]அவர் மாறுத்தரமாக ஒன்றும் பேசாமல் இருந்தார்; [9]பிரதான ஆசாரியன் மறுபடியும் அவரை நோக்கி, தோத்திரம்செய்யப்படத்தக்கவருடைய குமாரனாகிய கிறிஸ்து நீதானோ என்று கேட்டான்

௬௨ இயேசுவானவர் சொன்னது: அவர் நான்தான், [10]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் சர்வவல்லமையுள்ளவருடைய வலது பாரிசத்திலே உளுக்காரவும், வானத்தின் மேகங்களின்மேல் வரவும், காண்பீர்கள் என்றார்.

கி. பி. ௩௩.

[1] மத ௨௬ ௫௫ லூக் ௨௨ ௫௨

[2] சங ௨௨ ௬ ஏசா ௫௩ ௭ லூக் ௨௨ ௩௭ ௨௪ ௪௪.

[3] சங ௮௮ ௮ ௨௭ ௰

[4] மத ௨௬ ௫௭ லூக் ௨௨ ௫௪ யோவா ௰௮ ௰௩

[5] மத ௨௬ ௫௯

[6] மாற ௰௫ ௨௯ யோவா ௨ ௰௯

[7] மத ௨௬ ௬௨

[8] ஏசா ௫௩. ௭

[9] மத ௨௬ ௬௩

[10] மத் ௨௪ ௩௰ ௨௬ ௬௪ லூக் ௨௨ ௬௯

௬௩ அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழித்து,

௬௪ வேறு சாட்சி நமக்கு வேண்டுமோ? இத்தூஷணத்தைக் கேட்டீர்களே; உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது என்றான். அவர்கள் எல்லாரும் அவன் மரணஆக்கினைக்குப் பாத்திரன் என்று தீர்மானம்பண்ணினார்கள்.

௬௫ அப்பொழுது சிலர் அவர்மேலே துப்பி, அவருடைய முகத்தை மூடிக் கையினாலே அடித்து, நீ தீர்க்கதரிசனம் சொல்லென்று அவருடனே சொல்லத் தொடங்கினார்கள். அல்லாமலும் ஊழியக்காரர் அவரைக் கன்னத்தில் அடித்தார்கள்.

௬௬ ¶ [1]அத்தருணத்திலே பேதுரு மாளிகையின் பிரகாரத்தில் கீழே இருக்கிறபொழுது, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,

௬௭ அனல் காய்ந்துகொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து, நீயும் நாசரேத்தூரானாகிய இயேசுவுடனே இருந்தாயே என்றாள்.

௬௮ அதற்கு அவன் சொன்னது: (அவனை) அறியமாட்டேன்; நீ சொல்லுகிறதையும் நான் அறியேன் என்று மறுதலித்து, பின்பு வெளியிலேயுள்ள மண்டபத்திற்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று.

௬௯ [2]பின்பு வேலைக்காரி அவனை மறுபடியும் பார்த்து, சமீபமாய் நின்றவர்களை நோக்கி, இவன் அவர்களில் ஒருவன் என்றாள்; அவன் மறுபடியும் மறுதலித்தான்.

௭௰ சற்று நேரத்திற்குப் பின்பு [3]அங்கே நின்றவர்கள் மறுபடியும் பேதுருவை நோக்கி, நீ மெய்யாய் அவர்களில் ஒருவனாயிருக்கிறாய்; [4]நீ கலிலேயா நாட்டான்தான்; உன் பேச்சு அதைக் காண்பிக்கின்றது என்றார்கள்.

௭௧ அதற்கு அவன், நீங்கள் சொல்லுகிற மனிதனை நான் அறியமாட்டேன் என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினான்.

௭௨ [5]உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று; அப்பொழுது சேவல் இரண்டாந்தரம் கூவுமுன்னமே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று தன்னுடனே இயேசுவானவர் சொன்ன வசனத்தைப் பேதுரு நினைத்து, விலகிப்போய், அழுதுகொண்டான்.*

௰௫. அதிகாரம்.

௧ இயேசு கட்டுண்டு பிலாத்துக்குமுன்பாகக் கொண்டுபோகப்பட்டுக் குற்றம் சாற்றப்பட்டது ௰௫ பிரஜைகளுடைய கூக்குரலின் நிமித்தமாய், கொலைபாதகனாகிய பரபாசு விடுதலைபெற இயேசு சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புவிக்கப்பட்டது. ௰௭ அவர் முள்முடி தரிப்பிக்கவும் ௰௯ துப்பவும் பரியாசம்பண்ணவும் உட்பட்டது ௨௧ சிலுவை சுமப்பதில் அவர் சோர்வடைந்தது ௨௭ இரண்டு கள்ளர்களின் நடுவிலே தொங்கப்பட்டது ௨௯ யூதர்களுடைய பெருமையுள்ள நிந்தைகளைச் சகித்தது ௩௯ அவர் தேவகுமாரனென்று சேவகக்காரனால் அறிக்கையிடப்பட்டு, ௪௩. மேன்மையாய் அடக்கம்பண்ணப்பட்டது

[6]அதிகாலையிலே பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும், மற்றப் பெரிய சங்கத்தார் யாவரும் ஆலோசனை பண்ணிக்கொண்ட பின்பு, அவர்கள் அவரைக் கட்டிக்கொண்டுபோய்ப் பிலாத்துதுரைக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

௨ [7]பிலாத்து அவரை நோக்கி, நீ யூதர்களுடைய இராசாவா என்று கேட்டான்; அதற்கு அவர், நீர் (சரியாய்ச்) சொன்னீர் என்றார்.

௩ அல்லாமலும் பிரதான ஆசாரியர் அவர்மேல் அநேகம் குற்றங்களைச் சாற்றிவருகிறபொழுது,

௪ [8]பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி, இதோ, இவர்கள் உனக்கு விரோதமாக மிகுந்த சாட்சிகளைச் சொல்லுகிறார்களே, அதற்கு நீ ஒன்றையும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.

கி. பி. ௩௩

[1] மத ௨௬ ௫௮, ௬௯ லூக் ௨௨ ௫௫. யோவா ௰௮ ௰௬

[2] மத. ௨௬ ௭௧ லூக் ௨௨ ௫௮ யோவா ௰௮ ௨௫

[3] மத் ௨௬. ௭௩ லூக் ௨௨ ௫௯. யோவா. ௰௮ ௨௬

[4] அப ௨ ௭

[5] மத ௨௬ ௭௫

* அல்லது மிகவும் அழுதான்

[6] சங ௨ ௨ மத ௨௭ ௧ லூக் ௨௨ ௬௬. ௨௩ ௧ யோவா ௰௮ ௨௮ அப ௩ ௰௩ ௪ ௨௬

[7] மத ௨௭ ௰௧.

[8] மத் ௨௭ ௰௩

௫ [1]இயேசுவானவர், பிலாத்து தானே ஆச்சரியப்படத்தக்கதாக, ஒன்றையும் சொல்லவில்லை.

௬ ¶ [2]பண்டிகைதோறும் அவர்கள் கேட்டுக்கொள்ளும் பாதகன் எவனோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குகிறது வழக்கமாயிருந்தது.

௭ கலகம்பண்ணிக் கலகத்திலே கொலைசெய்து, பின்பு கட்டப்பட்டவர்களில் ஒருவனாகிய பரபாசென்பவன் இருந்தான்.

௮ ஆதலால் வழக்கத்தின்படி தங்களுக்குப் பிலாத்துச் செய்யவேண்டுமென்று சனங்கள் கூப்பிட்டுக் கேட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள்.

௯ அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, நான் யூதர்களுடைய இராசனை உங்களுக்காக விடுதலையாக்க விருப்பமுண்டா என்றான்.

௰ பிரதான ஆசாரியர் பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்ததை அவன் அறிந்தபடியால் அப்படிக் கேட்டான்.

௰௧ [3]அப்பொழுது பிரதான ஆசாரியர் பரபாசைத் தங்களுக்காக விடுதலையாக்கும்படிக்குக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று சனங்களை ஏவினார்கள்.

௰௨ மறுபடியும் பிலாத்து அவர்களை நோக்கி, யூதர்களுடைய இராசாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்றான்.

௰௩ அவனைச் சிலுவைமரத்திலே அறையவேண்டும் என்று மறுபடியும் கூப்பிட்டார்கள்.

௰௪ அதற்குப் பிலாத்து சொன்னது: ஏன், இவன் என்ன தீமை செய்தான் என்றான்; அதற்கு அவர்கள், இவனைச் சிலுவைமரத்திலே அறையவேண்டும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

௰௫ [4]அப்பொழுது பிலாத்துச் சனங்களைச் சமாதானப்படுத்த மனதாய், பரபாசை விடுதலையாக்கி, இயேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவைமரத்திலே அறையும்படிக்கு அவரை ஒப்புக்கொடுத்தான்.

௰௬ ¶ [5]உடனே போர்ச்சேவகர் அவரை நியாயஸ்தலமாகிய மண்டபத்திற்குள்ளே கொண்டுபோய், போர்ச்சேவகராகிய கூட்டமெல்லாம் கூடிவர அழைத்து,

௰௭ பின்பு சிவப்பான அங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர்மேல் வைத்து,

௰௮ யூதருடைய இராசாவே, நீர் வாழ்க என்று அவரை வாழ்த்துதல் செய்து,

௰௯ பின்பு ஒரு கோலினாலே அவருடைய தலையில் அடித்து, அவர்மேலே துப்பி, முழங்காற்படியிட்டு அவரை வணங்கினார்கள்.

௨௰ அப்படி அவர்கள் அவரை இழிவுசெய்த பின்பு, அந்தச் சிவப்பான அங்கியை அவரிலிருந்து களைந்து, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்குக் கொண்டுபோனார்கள்.

௨௧ ¶ [6]வழியிலே அலெக்குசந்தர், உருப்பு என்பவர்களுடைய தகப்பனாகிய கிரேனே ஊரானான சீமோன் வயல்நிலத்திலிருந்து வருகிறபொழுது, அவனைப் பலவந்தத்தினாலே (இழுத்து,) அவருடைய சிலுவைமரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி செய்து,

௨௨ [7]பின்பு அவரைத் தலையோட்டிடமென்று அருத்தம்கொள்ளும் கொலுகத்தா என்னும் இடத்திற்குக் கொண்டுபோய்,

௨௩ [8]கசப்புக்கலந்த திராட்ச இரசத்தைக் குடிக்க அவருக்குக் கொடுத்தார்கள்; அவர் அதை அனுபவிக்கவில்லை.

௨௪ அல்லாமலும் அவரைச் சிலுவைமரத்திலே அறைந்தபின்பு, அவர்கள் அவருடைய [9]வஸ்திரங்

கி. பி. ௩௩.

[1] எசா. ௫௩ ௭ யோவா ௰௯ ௯

[2] மத் ௨௭ ௰௫ லூக் ௨௩ ௰௭ யோவா. ௰௮ ௩௯.

[3] மத ௨௭ ௨௰ அப ௩ ௰௪

[4] மத ௨௭ ௨௬ யோவா ௰௯ ௧, ௰௬

[5] மத் ௨௭ ௨௭.

[6] மத் ௨௭ ௩௨ லூக் ௨௩ ௨௬

[7] மத ௨௭ ௩௩ லூக் ௨௩ ௩௩ யோவா ௰௯ ௰௭

[8] மத் ௨௭. ௩௪.

[9] சங ௨௨ ௰௮. லூக் ௨௩ ௩௪. யோவா. ௰௯ ௨௩

களைப் பங்காகவைத்து, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக்கொள்ளும்படிக்கு அவைகளைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்.

௨௫ [1]அவரைச் சிலுவைமரத்திலே அறைந்தபொழுது மூன்றாம் மணி நேரமாயிற்று.

௨௬ [2]அவருடைய மரணத்தின் காரணத்தை அறிவிக்கும்படிக்கு, இவன் யூதர்களுடைய இராசா என்று எழுதி, அதைச் (சிலுவையின்மேல்) கட்டினார்கள்.

௨௭ [3]அல்லாமலும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு கள்ளனும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு கள்ளனுமாக இரண்டு கள்ளரை அவருடனேகூடச் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

௨௮ அதினாலே அவர் [4]அக்கிரமக்காரரோடே எண்ணப்படுவார் என்று சொல்லிய வேதவாக்கியம் நிறைவேறிற்று.

௨௯ [5]அல்லாமலும் அவ்வழியாய் நடந்துவருகிறபேர்கள் தங்கள் தலைகளை அசைத்து, ஆ [6]தேவாலயத்தை இடித்து மூன்றுநாளுக்குள்ளே அதைக் கட்டுகிறவனே,

௩௰ உன்னை இரட்சித்துக்கொண்டு சிலுவையிலிருந்து இறங்கிவா என்று சொல்லி, அவரைத் தூஷணித்தார்கள்.

௩௧ அப்படிப்போல பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஒருவரையொருவர் நோக்கி, மற்றவர்களை இவன் இரட்சித்தான்; தன்னைத்தானே இரட்சிக்கத் திராணி இல்லை.

௩௨ நாம் கண்டு விசுவாசிக்கும்படிக்கு, கிறிஸ்துவுமாய் இஸ்ரவேலருடைய இராசாவுமாயிருக்கிறவன் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரக்கடவன் என்று பரியாசமாகச் சொன்னார்கள்; [7]அவருடனேகூடச் சிலுவைமரங்களில் அறையப்பட்ட பேர்களும் அவரை நிந்தித்தார்கள்.

௩௩ ¶ [8]ஆறாம்மணி நேரம்முதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும், தேசம் எங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

௩௪ ஒன்பதாம்மணி நேரத்திலே இயேசுவானவர், [9]எலோயி, எலோயி, லம்மா சபகுத்தானி என்று மிகுந்த சத்தத்தோடு கூப்பிட்டார்? அதற்கு என் தேவனே, என் தேவனே, ஏன் நீர் என்னைக் கைவிட்டீர் என்று அருத்தமாம்.

௩௫ சமீபமாய் நின்றவர்களில் சிலர் அதைக்கேட்டு, இதோ, இவன் எலியாவை அழைக்கிறான் என்றார்கள்.

௩௬ [10]ஒருவன், பொறுத்துக்கொள்ளுங்கள், இவனை இறக்கும்படிக்கு எலியா வருவதைப் பார்ப்போம் என்று சொல்லி, [11]ஒரு கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கம்பின்மேல் பூட்டி, சுவைக்கும்படி அவருக்குக் கொடுத்தான்.

௩௭ ¶ [12]பின்பு இயேசுவானவர் மிகுந்த சத்தமிட்டுச் சீவனைவிட்டார்.

௩௮ [13]உடனே தேவாலயத்திலுள்ள திரைச்சீலை மேலே தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.

௩௯ [14]அல்லாமலும் அவருக்கு எதிரே நின்ற சேனைத்தலைவன், அவர் அப்படிப்பட்ட சத்தத்தோடே சீவனை விட்டதைக் கண்டு, மெய்யாய் இந்த மனிதன் தேவகுமாரனாயிருந்தான் என்றான்.

௪௰ [15]ஸ்திரிகளும் தூரத்திலிருந்து பார்த்தார்கள்; [16]அவர்களில் கலிலேயாநாட்டிலே அவருக்குப் பின்சென்று ஊழியம்செய்துவந்த [17]மகதல ஊராளாகிய மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேயுக்கும் தாயாகிய மரியாளும், சாலோமே என்பவளும்,

௪௧ அவருடனேகூட எருசலேமுக்கு வந்த மற்ற அநேக ஸ்திரிகளும் இருந்தார்கள்.

கி. பி. ௩௩.

[1] மத ௨௭ ௪௫ லூக ௨௩ ௪௪ யோவா ௰௯ ௰௪.
[2] மத ௨௭ ௩௭ யோவா ௰௯ ௰௯
[3] மத ௨௭ ௩௮
[4] ஏசா ௫௩ ௰௨ லூக் ௨௨ ௩௭
[5] சங ௨௨ ௭
[6] மாற ௰௪ ௫௮ யோவா ௨ ௰௯
[7] மத் ௨௭ ௪௪ லூக் ௨௩ ௩௯
[8] மத் ௨௭ ௪௫ லூக் ௨௩ ௪௪
[9] சங ௨௨ ௧ மத் ௨௭ ௪௬
[10] மத ௨௭ ௪௮ யோவா ௰௯ ௨௯
[11] சங ௬௯ ௨௧
[12] மத ௨௭ ௫௰ லூக ௨௩ ௪௬ யோவா ௰௯ ௩௰
[13] மத ௨௭ ௫௧ லூக். ௨௩ ௪௫
[14] மத ௨௭ ௫௪ லூக் ௨௩ ௪௭
[15] சங ௩௮ ௰௧
[16] மத் ௨௭ ௫௫ லூக் ௨௩ ௪௯
[17] லூக். ௮. ௨, ௩

௪௨ ¶ [1]ஓய்வுநாளுக்கு முந்தின நாள் எத்தன நாளானபடியினாலே, சாயந்தரமானபொழுது,

௪௩ [2]அறிமத்தியா ஊரானுமாய், கனமபொருந்திய ஆலோசனைக்காரனுமாய், பராபரனுடைய இராச்சியத்தின் ஆளுகை வரக் காததுக்கொள்ளுகிறவனுமாயிருநத யோசேபபு என்பவன், தயிரியஙகொண்டு பிலாத்துவினிடத்திற்குப போய் இயேசுவினுடைய சரீரத்தைக கேட்டுக்கொண்டான்.

௪௪ அவர் அபபடிச் சீக்கிரமாய் மரணம் அடைநததைக்குறிததுப பிலாத்து ஆச்சரியபபட்டுச் சேனைத்தலைவனை அழைபபித்து, அவா இறநதுபோய் எவவளவு காலமாயிற்று என்று விசாரிதது,

௪௫ சேனைத்தலைவனாலே அறிந்துகொண்டபின்பு, அந்தச் சரீரத்தை யோசேப்புககு ஒபபுக்கொடுததான்.

௪௬ அவன் போய் [3]புடவைவாங்கிக்கொண்டுவந்து, சரீரததை இறககிப புடவையிலே சுற்றி, கலமலையிலே வெட்டபபட்ட கல்லறையிலே அதை வைத்து, அநதக் கல்லறையின் திறபபிலே ஒரு கல்லைப புரட்டிவைததான்.

௪௭ அவரை வைக்கபபட்ட இடத்தை மகுதல ஊராளாகிய மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

௰௬. அதிகாரம்.

௧ ஒரு தேவதூதன் கிறிஸதுவினுடைய உயிரததெழுதலை மூன்று ஸதிரீகளுக்கு அறிவிததது ௯ கிறிஸது தாமே மகுதலேனாளாகிய மரியாளுக்கும, ௰௨ கிராமததுக்கு நடநதுபோகிற இரண்டுபேருக்கும, ௰௪ பினபு அபபோஸதலாகளுக்கும தரிசனையானது ௰௫ அபபோஸதலாகளை உலகமெஙகும பிரசஙகிக்குமபடி அனுபபினது ௰௯ அவா பரமணடலததுக்கு ஏறினது

[4]ஓய்வுநாளானபின்பு மகுதல ஊராளாகிய மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சாலோமே என்பவளும் அவருக்கு அபிஷேகம்பண்ணும்படிக்குச் [5]சுகந்த வருக்கங்களை வாங்கிக்கொண்டு,

௨ [6]ஓய்வுநாளுக்குப்பின் முதல் நாளின் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபொழுது, கல்லறைக்குப போனார்கள்.

௩ (போகையில்) அவர்கள் அந்தக் கல்லறையின் திறபபிலே இருக்கிற கல்லை நமக்காக யாவன் தள்ளிபபோடுவான் என்று சொல்லி,

௪ பின்பு அண்ணாந்து பார்க்கிறபொழுது, அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தும், அது தள்ளப்பட்டதென்று கண்டார்கள்.

௫ [7]கல்லறையிலே அவர்கள் பிரவேசித்தபொழுது, வலதுபக்கத்திலே வெணமையான அங்கியைத் தரித்து உளுக்காந்திருக்கிற ஒரு வாலிபனைக் கண்டு மிகவும் பயநதார்கள்.

௬ [8]அவன் அவர்களுடனே சொன்னது: பயபபடாதிருங்கள், சிலுவையிலே அறையபபட்ட நாசரேனாகிய இயேசுவை நீங்கள் தேடுகிறீர்கள், அவர் எழுந்தார், அவர் இஙகே இல்லை, இதோ, அவர் வைக்கபபட்ட இடம்.

௭ ஆகையால் நீங்கள் அவருடைய சீஷர்களிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய், [9]உஙகளுடனே அவர் சொன்னபடி உஙகளுக்குமுன்பாகக் கலிலேயா நாட்டுக்குப போவார் அங்கே அவரைக் காண்பீர்கள் என்று அவர்களுககுச் சொல்லுங்கள் என்றான்.

௮ உடனே அவர்கள் புறபபட்டு, திகிலோடும் பிரமிபபோடும் கல்லறையைவிட்டு ஓடிப்போனார்கள; [10]அவர்கள் பயப்பட்டபடியினாலே ஒருவருக்கும் ஒன்றையும் சொல்லவில்லை.

௯ ¶ ஓய்வுநாளுக்குப் பின்பு, முதல் நாளின் அதிகாலையில் அவர் எழுந்திருந்தபின்பு, [11]முதலாவது மகுதல ஊராளாகிய மரியாளுக்குக் காணப்பட்டார்.

கி. பி. ௩௩.

1 மத். ௨௭ ௫௭ லூக் ௨௩ ௫௰ யோவா. ௰௯ ௩௮
2 லூக் ௨ ௨௫, ௩௮
3 மத ௨௭ ௫௯, ௬௰ லூக் ௨௩ ௫௩ யோவா ௰௯ ௪௰
4 மத் ௨௮ ௧ லூக் ௨௪ ௧ யோவா ௨௰ ௧
5 லூக் ௨௩ ௫௬
6 லூக் ௨௪ ௧ யோவா ௨௰ ௧.
7 லூக் ௨௪ ௩ யோவா ௨௰ ௰௧, ௰௨
8 மத் ௨௮ ௫, ௭
9 மத ௨௬ ௩௨ மாற் ௰௪ ௨௮
10 மத ௨௮ ௮ லூக் ௨௪. ௯
11 லூக் ௮ ௨

௰ [1]அவராலே ஏழுபேய்களினின்று நீக்கபபட்டவள் அவளே; [2]அவள் புறபபட்டுப்போய் அவருடனேஇருந்தவாகளுமாய் புலம்பி அழுதுகொள்ளுகிறவர்களுமாயிருந்த (சீஷர்களுக்கு) அறிவிததாள்.

௰௧ [3]அவர், உயிரடைந்து அவளாலே காணப்பட்டாா என்று அவர்கள் கேள்விபபட்டும் அதை நம்பவில்லை.

௰௨ ¶ [4]அதின்பின்பு அவாகளில் இரண்டுபேர் ஒரு ஊருக்குபபுறபபட்டுப் போகையில், அவர்களுக்கும் அவர் மறுரூபத்தோடே காணபபட்டார்

௰௩ அவர்களும் திரும்பி அதை மற்றவாகளுக்கு அறிவிததாாகளா; அவர்களையும இவர்கள் நம்பவில்லை.

௰௪ ¶ [5]பின்பு அவர் போசனபந்தியில் இருந்த பதினொருவருககும் *காணப்பட்டு, தாம் உயிரோடு எழுந்து வந்ததைக கண்டபோகளுடைய(வார்த்தையை)அவாகள் நம்பாமல் இருந்தபடியால், அவாகளுடைய அவிசுவாசத்துககாகவும், இருதயத்திலுள்ள கடினததிற்காகவும் அவர்களைக் கடிந்துகொண்டார்.

௰௫ ¶ [6]ஆல்லாமலும், அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகத்தில் எங்கும்போய், சிருட்டிக்கபபட்டிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப பிரசஙகம்பண்ணுங்கள்

௰௬ [7]விசுவாசமுள்ளவனுகி ஞானஸநானம்பெற்றவன் இரட்சிக்கபபடுவான்; [8]விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாக்கபபடுவான்.

௰௭ [9]அனறியும், விசுவாசமுள்ளவாகளால் எப்படிப்பட்ட அதிசயஙகள் நடக்குமெனறால், என் நாமததினலே அவாகளா பேயகளைத் துரத்தி, [10]புதியபாஷைகளைப பேசிககொண்டு,

௰௮ [11]பாம்புகளையும் பிடிததுக் கொள்வாாகள்; அல்லாமலும் மரணத்திற்கு ஏதுவானதை அவாகளா குடித்தால், அது அவர்களைச் சேதபபடுத்தாமல் இருககும்; [12]அல்லாமலும், பிணியாளிகளின்மேல் அவர்கள் கைகளை வைக்கும்பொழுது, அவர்கள் சொஸதம் அடைவார்கள் என்றார்.

௰௯ ¶ [13]கர்த்தர் அவர்களுடனே பேசிக்கொண்ட பின்பு, [14]அவர் பரமண்டலத்துககு ஏற்றபபட்டுப [15]பராபரனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்

௨௰ அவர்கள் புறபபட்டு எங்கும் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்தார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியைசெய்து [16]அதிசயஙகளை நடக்கபபண்ணினதினலே, [17](அவாகளுடைய) உபதேசத்தை உறுதியாக்கினர்.—ஆமன்

கி. பி. ௩௩

1 யோவா உ௰ ௰௪
2 லூக் உ௪ ௰ யோவா உ௰ ௰௮
3 லூக் உ௪ ௰௧
4 லூக் உ௪ ௰௩
5 லூக் உ௪ ௩௬ யோவா உ௰ ௰௯ க கொரி ௰௫ ௫
* அலலது எலலாருக்கும
6 மத உ௮ ௰௯ யோவா ௰௫ ௰௬
7 கோலோ க உ௩
8 யோவா ௩ ௰௮, ௩௬ அப உ ௩௮ ௰௬ ௩௰,௩௨ உரோ ௰ ௯ க பே ௩ உ௧
9 யோவா ௰௨ ௪௮
10 லூக் ௰ ௰௭ அப.௫ ௰௬ அ ௭ ௰௬ ௰௮ ௰௯ ௰௨.
11 அப உ ௪ ௰ ௪௯ ௰௯ ௯ க கொரி ௰௨ ௰, உ௮
12 லூக ௰ ௰௯ அப உ௮ ௫
13 அப ௫ ௰௫ ௯ ௰௭ ௯ ௰ உ௮ ௮ யாக் ௫.௰௪, ௰௫
14 அப க உ, ௩
15 லூக் உ௪ ௫௧
16 சங ௱௰ க அப எ ௫௫
17 அப ௫ ௰௨ ௰௪ ௩ க கொரி உ ௪, ௫ எபி உ ௪.

LUKE.

லூக்கா என்பவர்

எழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

௧ லூக்காவின் முகவுரை ௫ யோவான்ஸ்நானனும், ௨௬ கிறிஸ்துவும் உற்பத்தியானது ௩௯ எலிசபேத்தும் மரியாளும் கிறிஸ்துவைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தது ௫௭ யோவானுடைய ஜெனனமும், சுன்னத்தும் சொல்லப்பட்டது ௬௭ சகரியா கிறிஸ்துவைக்குறித்தும் ௭௬ யோவானைக் குறித்தும் தீர்க்கதரிசனம் சொன்னது.

[1]மிகுந்த கனம்பொருந்திய தேயோப்பிலுவே, [2]எங்களுக்குள்ளே நிறைவேறின சங்கதிகளை ஆதிமுதல் கண்ணினாலே கண்டு, (சுவிசேஷ)வசனத்தைப் போதித்திருக்கிறவர்கள் [3]எங்களுக்கு ஒப்புக்கொடுத்ததின்படியே,

௨ அவைகளைக்குறித்துச் சரித்திரத்தை எழுதும்படிக்கு அநேகர் துணிந்தார்கள்.

௩ ஆகையால் [4]ஆதிமுதல் எல்லாவற்றையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்த நானும், [5]உமக்கு உபதேசிக்கப்பட்ட பொருள்களின் நிச்சயத்தை நீர் அறியும்படிக்கு,

௪ [6]அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதவேண்டும் என்று எனக்கு நன்றாய்த் தோன்றிற்று: (அவையாவன)

௫ ¶ [7]யூதேயா தேசத்தின் இராசாவாகிய எரோதேயின் நாள்களிலே [8]அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னப்பட்ட ஆசாரியன் இருந்தான்; ஆரோனின் குடும்பத்தில் பிறந்த எலிசபேத்து என்னப்பட்டவள் அவனுக்கு மனைவியாயிருந்தாள்.

கி பி. ௬.

1 அப ௧ ௧
2 மாற் ௧ ௧ யோவா ௰௫ ௨௭
3 எபி ௨ ௩ ௧ பே ௫ ௧ ௨ பே ௧ ௰௬ ௧ யோ ௧ ௧
4 அப ௰௫ ௰௯, ௨௫, ௨௮ ௧ கொரி ௭ ௪௰
5 யோவா ௨௰ ௩௧
6 அப ௰௧ ௪.
7 மத ௨ ௧
8 ௧ நாளா ௨௪ ௰, ௰௯. நெகே ௰௨ ௪, ௰௭
9 ௧ மோ ௭ ௧ ௰௭ ௧ ௧ இரா ௯ ௪ ௨ இரா ௨௰ ௩ யோபு ௧ ௧ அப ௨௩ ௧ ௨௪ ௰௬ பிலி ௩ ௬
10 ௧ நாளா ௨௪ ௰௯ ௨ நாளா ௮ ௰௪: ௩௧ ௨
11 ௨ மோ ௩௰ ௭, ௮ ௧ சாமு ௨, ௨௮ ௧ நாளா ௨௩ ௰௩ ௨ நாளா ௨௯ ௰௧
12 ௩ மோ ௰௬ ௰௭ வெளி ௮ ௩, ௪
13 ௨ மோ ௩௰ ௧
14 நியா ௬ ௨௨ ௰௩ ௨௨ தானி ௰ ௮ ௨௯ வச. லூக். ௨ ௯. அப ௰ ௪ வெளி ௧ ௰௭

௬ [9]அவ்விருவரும் பராபரனுக்குமுன்பாக நீதியுள்ளவர்களாய்க் கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியாயங்களின்படியேயும் குற்றமில்லாமல் நடந்து வந்தார்கள்.

௭ எலிசபேத்து மலடியாயிருந்ததுமல்லாமல், அவ்விருவரும் வயதுசென்றவர்களானபடியினாலே அவர்களுக்குப் பிள்ளை இல்லை.

௮ ¶ [10]அப்படியிருக்கும் காலத்தில், அவன் தன் ஆசாரியவகுப்பின் முறைப்படி பராபரனுக்குமுன்பாக ஆசாரிய ஊழியம் செய்துவருகிறபொழுது,

௯ ஆசாரியருடைய வழக்கத்தின்படி [11]அவன் தூபம் கொடுக்கிறதற்குச் சீட்டைப் பெற்றுத் தேவாலயத்தில் பிரவேசித்தான்.

௰ [12]தூபம்கொடுக்கிற வேளையிலே கூட்டமான சனங்கள் எல்லாரும் புறம்பே செபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

௰௧ [13]அப்பொழுது பராபரனுடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குக் காணப்பட்டான்.

௰௨ [14]சகரியா அவனைக்கண்டு கலங்கிப் பயமடைந்தான்.

௰௩ தூதன் அவனை நோக்கி, சகரியாவே, நீ பயப்படவேண்டாம்; உன் விண்ணப்பம் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய

எலிசபேத்து ஒரு குமாரனைப் பெறுவாள்; [1]அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.

௰௪ அவனால் உனக்குச் சந்தோஷமும் களிபபும் உண்டாகும்; அவனுடைய பிறப்பைக்குறிதது [2]அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

௰௫ என்னத்தினாலெனில், [3]அவன் பராபரனுககு முன்பாகப பெரியவனாய்த்திராட்சஇரசத்தையும் மதுபானத்தையும் குடியாமல் [4]தன் தாயின் வயிற்றிலே பரிசுத்த ஆவியினாலே நிரபபபபட்டிருபபான்.

௰௬ அல்லாமலும் [5]அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்களுடைய தேவனாகிய பராபரனிடத்திற்குத் திருபபுவான்.

௰௭ [6]பிதாக்களுடைய இருதயஙகளைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்பபடியாதவர்களை நீதிமான்களுடைய புத்திக்கும்* திருப்பி, செம்மையான சனஙகளைப பராபரனுக்காக எத்தனம்பண்ணும்படிககு, அவன் எலியாவின ஆவியையும் பலத்தையும உடையவனாய் அவருக்குமுன்னே நடபபான் என்றான்.

௰௮ அபபொழுது சகரியா தேவதூதனை நோக்கி, [7]நான் அதை எதினாலே அறிவேன்? நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே என்றான்.

௰௯ அவனுக்குத் தூதன் மாறுத்தரமாகச் சொன்னது: நான் தேவனுடைய சன்னிதானத்திலே நிற்கின்ற [8]காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசி, இவைகளை உனக்குச் சுவிசேஷமாக அறிவிக்கும்படிக்கு அனுப்பப்பட்டு வந்தேன்.

௨௰ என் வார்த்தைகள் தகுதியான காலத்திலே நிறைவேறும்; அவைகளை நீ விசுவாசியாதபடியினாலே இந்தக் காரியங்கள் சம்பவிக்கும் நாள்வரைக்கும் நீ பேசத்திராணியில்லாமல் [9]ஊமையனாயிருப்பான் என்றான்.

௨௧ சகரியாவை (காணக்) காததிருந்த சனங்கள் அவன் தேவாலயத்திலே தாமதித்ததினாலே ஆச்சரியப்பட்டார்கள்.

௨௨ அவன் வெளியே வந்தபொழுது அவர்களோடே பேசத திராணியில்லாமல் இருந்தான்; அதினாலே தேவாலயததில் ஒரு தரிசனையைக கண்டிருபபான் என்று அறிந்தார்கள்; அவனும் அவர்களுக்குச் சமிக்கை காட்டி ஊமையனாக இருந்தான்.

௨௩ ¶ பின்பு அவன் தன் ஊழியத்தின் [10]நாள்கள் நிறைவேறினபொழுது தன் வீட்டுக்குப போனான்

௨௪ அந்த நாள்களுக்குப பின்பு அவனுடைய மனைவியாகிய எலிசபேதது கருபபந்தரித்து,

௨௫ [11]சனங்களுக்குள்ளே எனக்கு உண்டாய் இருந்த நிநதையை நீக்கும்படிக்குப பராபரன் இநத நாள்களில் என்னை நோக்கி இப்படி எனக்குச் செய்தார் என்று சொல்லி, ஐநதுமாதம்வரையும் ஒளித்துககொண்டாள்.

௨௬ ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேதென்னும் பட்டணத்திலே,

௨௭ தாவீதின் குடும்பத்தானாகிய யோசேபபென்னும் நாமமுள்ள புருஷனுக்கு [12]நியமிக்கப்பட்டிருந்த கன்னியாகிய மரியாள் என்பவள் இடத்திற்குப் பராபரனால் அனுப்பப்பட்டு,

௨௮ அவள் இருக்கிற வீட்டுக்குள் பிரவேசித்து, [13]கிருபைபெற்றவளே,† [14]நீ வாழ்க, பராபரன் உன்னுடனே இருக்கிறார்; பெண்களுககுள்ளே நீ ஆசீர்வதிக்கபபட்டவள் என்றான்.

௨௯ அவள் அவனைக் கண்டு, [15]அவனுடைய வார்த்தையைக் கேட்டுக் கலங்கி, இந்த வாழ்த்து

கி. பி. ௬.

1 ௬௰ ௬௩. வச
2 ௫௮ வச
3 ௪ மோ ௬ ௩. நியா ௰௩ ௪ லூக் ௭. ௩௩
4 எரே ௧ ௫ கலா ௧ ௰௫
5 மல்கி ௪ ௫,௬
6 மல்கி ௪ ௫ மத ௰௧ ௰௪ மாற் ௯ ௰௨
* அல்லது புத்தியினால்
7 ௧ மோ ௰௭ ௰௭
8 தானி. ௮ ௰௬ ௯ ௨௧, ௨௨, ௨௩ மத ௰௮ ௰ எபி ௧ ௰௪
9 எசே ௩ ௨௬ ௨௪ ௨௭
10 ௨ இரா ௰௧ ௫ கலா ௯ ௨௫
11 ௧ மோ ௩௰ ௨௩. ஏசா ௪ ௧ ௫௪ ௧, ௪
12 மத் ௧ ௰௮ லூக். ௨ ௪, ௫
13 தானி ௯ ௨௩ ௰ ௰௯
† அல்லது தயவு பெற்றவளே. ௩௰ வசனம்
14 நியா ௬. ௰௨
15 ௰௨. வச.

தல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்தாள்.

௩௰ தூதன் அவளுடனே சொன்னது: மரியாளே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றபடியினாலே, நீ பயப்படவேண்டாம்.

௩௧ [1]நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு [2]இயேசு என்று பேரிடுவாயாக.

௩௨ அவர் பெரியவராய் [3]உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; [4]அல்லாமலும் தேவனாகிய பராபரன் அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின் இராசாசனத்தைக் கொடுப்பார்.

௩௩ [5]அவர் யாக்கோபினுடைய குடும்பத்திற்கு என்றென்றைக்கும் இராசனாயிருப்பார்; அவருடைய ஆளுகைக்கு முடிவுவாராது என்றான்.

௩௪ அதற்கு மரியாள் தூதனை நோக்கி, இது எப்படியாகும்? ஒரு புருஷனையும் அறியேனே என்றாள்.

௩௫ தூதன் அவளுக்கு மாறுத்தரமாகச் சொன்னது: [6]பரிசுத்த ஆவி உன்மேல் வரும்? உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆகையால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமானது [7]தேவனுடைய குமாரன் என்னப்படும்.

௩௬ அல்லாமலும் பராபரனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லாதபடியினாலே,

௩௭ [8]உனக்கு இனமாயிருக்கிற எலிசபேத்தும் தனது முதுமையான வயதிலே ஒரு புத்திரனைக் கருப்பந்தரித்தாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதமே என்றான்.

௩௮ அதற்கு மரியாள், இதோ, நான் ஆண்டவருக்கு அடிமையாயிருக்கிறேன், உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்; அப்பொழுது தேவதூதன் அவளைவிட்டுப் போனான்.

௩௯ ¶ அந்த நாள்களில் மரியாள் எழுந்து மலைத்தேசத்திலே [9]யூதாவிலுள்ள பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய்,

௪௰ சகரியாவின் வீட்டில் பிரவேசித்து எலிசபேத்தை வாழ்த்துதல் செய்தாள்.

௪௧ எலிசபேத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது அவளுடைய வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று; அல்லாமலும் எலிசபேத்து பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,

௪௨ மிகுந்த சத்தத்துடனே சொன்னதாவது: [10]பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்; உன் கருப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.

௪௩ என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்திற்கு வருகிறது எனக்கு எதினாலே கிடைத்தது?

௪௪ நீ வாழ்த்துதல் சொல்லிய சத்தம் என் காதுகளில் விழுந்தவுடனே என் வயிற்றில் பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று.

௪௫ விசுவாசித்தவளுக்குப் *பராபரனாலே சொல்லப்பட்டவைகள் நிறைவேறுவதால் அவள் பாக்கியமுள்ளவளே என்றாள்.

௪௬ ¶ அப்பொழுது மரியாள் சொன்னதாவது:

௪௭ [11]என் ஆத்துமா பராபரனைப் புகழுகின்றது; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகின்றது.

௪௮ [12]என்னத்தினாலெனில், அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; [13]வல்லமையுடையவர் எனக்குப் பெரியகாரியங்களைச் செய்தபடியினாலே,

௪௯ இதுமுதல் [14]வம்சத்தார் எல்லாரும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்; [15]அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

௫௰ [16]அவருடைய இரக்கம் தலைமுறை தலைமுறையாக அவருக்

கி. பி. ௬.

[1] ஏசா ௭. ௰௪. மத் ௧ ௨௧

[2] லூக் ௨. ௨௧

[3] மாற் ௫ ௮

[4] ௨ சாமு ௭ ௰௧, ௰௨ ஏசா ௯ ௬, ௭. ௰௬ ௫ சங ௱௩௨. ௰௧ எரே ௨௩ ௫ வெளி ௩ ௭.

[5] தானி ௨ ௪௪ ௭ ௰௪, ௨௭ ஒபதி. ௨௧. மீகா ௪ ௭. யோவா ௰௨. ௩௪ எபி ௧. ௮

[6] மத் ௧ ௨௰

[7] மத் ௰௪ ௩௩ ௨௬ ௬௩, ௬௪ மாற் ௧ ௧ யோவா ௧ ௩௪ ௨௰ ௩௧ அப ௮ ௩௭ ரோ ௧ ௪

[8] ௧ மோ ௰௮ ௰௪ எரே ௩௨ ௰௭ சகரி ௮ ௬. மத் ௰௯ ௨௬ மாற் ௰ ௨௭ லூக் ௰௮ ௨௭ ரோ. ௪ ௨௧.

[9] யோசு ௨௧ ௯, ௰, ௰௧.

[10] ௨௮ வச நியா. ௫ ௨௪

* அல்லது அதை விசுவாசித்த

[11] ௧ சாமு ௨. ௧ சங ௩௪ ௨, ௩௫ ௯. ஆப. ௩ ௰௮.

[12] ௧ சாமு ௧ ௰௧ சங ௱௩௮. ௬

[13] சங். ௭௧ ௰௯ ௱௨௬ ௨, ௩.

[14] மல்கி ௩ ௰௨. லூக் ௰௧. ௨௭

[15] சங ௱௰௧ ௯

[16] ௧ மோ ௰௭ ௭ ௨ மோ ௨௰ ௬ சங ௱௩ ௰௭, ௰௮

குப் பயப்படுகிறவர்களிடத்தில் உண்டாயிருக்கும்.

௫௧ [1]அவர் தம்முடைய கையினாலே பலத்த காரியங்களைச் செய்தார்; தங்கள் இருதயத்தின் சிந்தனையில் [2]இறுமாப்பாயிருக்கிறவர்களை அவர் சிதறப்பண்ணி,

௫௨ [3]பலவான்களைப் பத்திராசனங்களிலிருந்து தள்ளித் தாழ்மையுள்ளவர்களை உயர்த்தி,

௫௩ [4]பசியுள்ளவர்களை நன்மைகளினாலே நிரப்பிச் சம்பூரணமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பினார்.

௫௪ அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னபடியே, [5]ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம்செய்ய நினைத்து,

௫௫ [6]தம்முடைய தாசராகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்

௫௬ ¶ பின்பு மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்குத் திரும்பினாள்.

௫௭ எலிசபேத்துக்குப் பேறுகாலம் உண்டானபொழுது, அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.

௫௮ பராபரன் தமது இரக்கத்தை அவளிடத்தில் பெரிதாக்கினார் என்று அவளுடைய அயலகத்தாரும் பந்துசனங்களும் கேள்விப்பட்டு, [7]அவளுடனே கூடச் சந்தோஷப்பட்டார்கள்.

௫௯ பின்பு எட்டாம்நாளிலே [8]அவர்கள் பிள்ளைக்கு விருத்தசேதனம்பண்ணும்படிக்கு வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிட்டார்கள்.

௬௰ அப்பொழுது அதின் தாய் சொன்னது: அப்படியல்ல, [9]அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள்.

௬௧ அவர்கள் அவளை நோக்கி, உன் உறவிலே இந்தப்பேராக அழைக்கப்பட்டவர்களொருவரும் இல்லையே என்று சொல்லி,

௬௨ அதினுடைய தகப்பனை நோக்கி, இதற்கு என்ன பேரிடமனதாய் இருக்கிறீர் என்று சமிக்கையினாலே கேட்டார்கள்.

௬௩ அவன் எழுதுகிறதற்குப் பலகையைக் கேட்டு வாங்கி, [10]இதின் பேர் யோவான் என்று எழுதினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

௬௪ [11]அல்லாமலும் அந்நிமிஷத்திலே அவனுடைய வாயும் நாவும் திறக்கப்பட, அவன் பராபரனைத் தோத்திரம்செய்து பேசினான்.

௬௫ (அதினாலே) அவர்களைச் சுற்றி வாசமாயிருந்த எல்லாருக்கும் பயம் வந்தது; [12]அன்றியும் யூதேயாவின் மலைத்தேசம் எங்கும் அந்தச் சங்கதிகளெல்லாம் *சொல்லிக்கொள்ளப்பட்டன.

௬௬ (அவைகளைக்) [13]கேள்விப்பட்டவர்கள் எல்லாரும் (அவைகளைத்) தங்கள் மனதிலே வைத்துக்கொண்டு, அந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ என்றார்கள்; [14]கர்த்தருடைய கை அந்தப் பிள்ளையினிடத்தில்இருந்தது.

௬௭ ¶ அன்றியும் அவனுடைய தகப்பனாகிய சகரியா [15]பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனமாய்ப் பகர்ந்ததாவது:

௬௮ [16]நாம் நம்முடைய சத்துருக்களின் கைகளுக்குத் தப்புவிக்கப்பட்டவர்களாக,

௬௯ [17]நம்முடைய வாழ்நாள் எல்லாம் பயமில்லாமல் தேவபத்தியாயும் நீதியாயும் தமக்கு முன்பாக ஊழியம்செய்வதற்கு அனுக்கிரகம் செய்யும்பொருட்டாய்,

௭௰ தாம் [18]நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையாகிய தம்முடைய பரிசுத்த உடம்படிக்கையை நினைத்து,

௭௧ [19]நம்முடைய பிதாக்கள்மேல் இரக்கமாகி,

கி. பி. ௬.

[1] சங ௯௮ ௧ ௱௰௮ ௰௫ ஏசா ௪௰ ௰ ௫௧ ௯ ௫௨ ௰

[2] சங ௩௩, ௰ ௧ பே ௫ ௫

[3] ௧ சாமு ௨ ௬ ௮ யோபு ௫ ௰௨ சங ௱௰௩ ௬

[4] ௧ சாமு ௨ ௫ சங ௩௪ ௰

[5] ௧ மோ ௰௭ ௰௯ சங ௱௩௨ ௰௧ ௨ ரோ ௰௧ ௨௭ கலா ௩ ௰௬

[6] சங ௯௮ ௩ எரே ௩௧ ௩, ௨௰

[7] ௰௪ வச

[8] ௧ மோ ௰௭ ௰௨ ௩ மோ ௰௨, ௩

[9] ௰௩ வச.

[10] ௰௩ வச

[11] ௨௰ வச

[12] ௩௯ வச

* அல்லது பேசச் செல்லாம.

[13] லூக். ௨ ௰௯, ௫௧

[14] ௧ மோ ௩௯ ௨ சங ௮௰ ௰௭ ௮௯ ௨௧ அப ௰௧ ௨௧

[15] யோவே ௨ ௨௮

[16] ௨ ரோ ௯ ௰௮, ௨௨ எபி ௯ ௰௪

[17] எரே ௩௨ ௩௯, ௪௰ எபே ௪. ௨௪ ௨ தெச ௨ ௰௩ ௨ தீமோ ௧ ௯ தீத்து ௨ ௰௨ ௧ பே. ௧ ௰௫ ௨ பே ௧ ௪.

[18] ௧ மோ ௰௨ ௩. ௰௭, ௪ ௨௨ ௰௬ ௰௭ எபி ௬. ௰௩, ௰௭

[19] ௧ மோ ௨௬ ௪௨ சங ௯௮ ௩ ௱௫ ௮, ௯ ௱௬ ௪௫ எரே ௰௩ ௯௪ ௪ வச

௭௨ [1]தாம் உலகத்தின் தோற்றம் முதற்கொண்டிருந்த தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளால் அருளிச்செய்தபடியே,

௭௩ நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும்,

௭௪ [2]நம்மை இரட்சிக்கிற பலத்த இரட்சகரைத் தம்முடைய தாசனாகிய தாவீதின் குடும்பத்திலே தோன்றப்பண்ணி,

௭௫ (இவ்விதமாய்) [3]தம்முடைய சனங்களைச் சந்தித்து மீட்டுக்கொண்ட இஸ்ரவேலருடைய தேவனாகிய [4]பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக.

௭௬ பாலகனே, நீ மரணநிழலாகிய இருளிலே அகப்பட்டிருக்கிறவர்களுக்கு [5]ஒளியுண்டுபண்ணும்படியாயும், நம்முடைய கால்களைச் சமாதானமுள்ள மார்க்கத்திலே நடத்தும்படியாயும்,

௭௭ உன்னதத்திலிருந்து சூரிய உதயம்* நமக்குத் தோன்றப்பண்ணின நம்முடைய தேவனுடைய மிகுந்த இரக்கங்களினாலே,†

௭௮ [6]அவருடைய சனங்களுக்குப் பாவமன்னிப்பாகிய‡ இரட்சணியத்தைத் தெரியப்படுத்தி,

௭௯ [7]இவ்விதமாய் அவருக்காக மார்க்கத்தைச் செம்மையாக்கும் பொருட்டாக அவருக்கு முன்னே நடப்பாய், ஆகையால் நீ எல்லாரிலும் மேலானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய் என்றான்.

௮௰ ¶ [8]பின்பு அந்தப் பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலருக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் [9]வனாந்தரங்களில் இருந்தான்.

௨. அதிகாரம்.

௧ அகுஸ்து இராயன் உரோம இராச்சியத்தைக் குடிமதிப்புச் செய்தது ௬ கிறிஸ்து பிறந்தது ௮ அதை ஒரு தூதன் மேய்ப்பர்களுக்கு அறிவித்தது. ௰௩ அதற்காக அநேகம் தூதர் ஸ்தோத்திரம் பாடினது ௨௧ கிறிஸ்து சுன்னத்துப் பண்ணப்பட்டது ௨௨ மரியாள் சுத்திகரிக்கப்பட்டது ௨௫ சிமேயோனும், அன்னாளும் கிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தது ௪௰ இயேசு ஞானத்தில் வளர்ந்து, ௪௬ தேவாலயத்தில் சாஸ்திரிகளோடே சம்பாஷித்தது. ௫௧ தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்திருந்தது

அந்நாள்களிலே குடிகள் எல்லாருக்கும் உண்டாகிய பேர் § முதலானவைகளையும் எழுதவேண்டும் என்று அகுஸ்து இராயனுடைய கட்டளை வந்தது.

௨ [10]சிரியா நாட்டிலே கிரேனியு என்பவன் துரையானபொழுது, முதலாவது இந்தக் குடிமதிப்பு உண்டாயிற்று.

௩ அந்தப்படி எல்லாரும் எழுதப்படும்படிக்கு, தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

௪ அப்பொழுது யோசேப்பும் [11]தாவீதின் குடும்பத்தானும் வம்சத்தானுமாய் இருந்தபடியினாலே, [12]தனக்கு நியமிக்கப்பட்ட கர்ப்பவதியாகிய மனைவி மரியாளுடனே கூட எழுதப்படும்படிக்குக் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரைவிட்டு,

௫ [13]யூதேயா நாட்டிலுள்ள பெத்லெகேம் என்னப்பட்ட தாவீதின் ஊருக்குப் போனான்.

௬ ¶ அவ்விடத்திலே அவர்கள் இருக்கும் காலத்தில், அவள் பிள்ளைபெறுகிறதற்குக் காலம் சம்பவித்தது.

௭ அப்பொழுது அவள் [14]தன் முதற்பேறான குமாரனைப் பெற்று; அவரைப் புடவைகளில் சுற்றிச் சத்திரத்திலே (வேறு) இடம் இல்லாதபடியினாலே அவரைப் பசுத்தொட்டியிலே வைத்தாள்.

௮ ¶ அன்றியும் அந்தத் திசையிலே மேய்ப்பர் வெளியிலே தங்கி, ‖இராத்திரியிலே தங்கள் ஆட்டுக்கூட்டத்தைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

௯ அப்பொழுது பராபரனுடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நிற்க, பராபரனுடைய மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது; [15]அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

கி. பி ௫.

1 எரே ௨௩ ௫, ௬ [illegible]
2 [illegible]
4 [illegible]
5 [illegible]
* அல்லது பகற்றுவக்கம்
† இரக்கக் குடாசனையே
6 [illegible]
‡ அல்லது மன்னிப்பினாலே [illegible]
7 [illegible]
8 லூக் ௨ ௪௰
9 மத் ௩ ௧ [illegible]
§ அல்லது திறை
10 அப் ௫ ௩௭
11 [illegible] யோவா ௭ ௪௨
12 மத் ௧ ௧௮ லூக் ௧ ௨௭
13 மத் ௨ ௧ [illegible]
14 மத் ௧ ௨௫
‖ அல்லது இராக்காவல்
5 லூக் ௧ ௰௨

௰ உடனே தேவதூதன் அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள், [1]எல்லாச் சனங்களுக்கும் உண்டாகும் மிகுந்த சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன்.

௰௧ என்னவென்றால் [2]இன்று [3]கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் [4]தாவீதின் ஊரிலே உங்களுக்காகப் பிறந்தார்.

௰௨ பிள்ளையைப் புடவைகளில் சுற்றிப் பசுத்தொட்டியிலே வைத்திருக்கக் காண்பீர்கள்; அதுவே உங்களுக்கு அடையாளமென்றான்

௰௩ அப்பொழுது சடுதியாய்ப் [5]பரமண்டலத்திலுள்ள மிகுந்த சேனைகள் அந்தத் தூதனுடனே கூட இருந்தன

௰௪ [6]உன்னதங்களில் இருக்கிற பராபரனுக்குப் புகழ்ச்சியும், [7]பூமியிலே சமாதானமும், [8]மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று பராபரனைத் துதித்தார்கள்.

௰௫ பின்பு தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரமண்டலத்திற்குப் போனபொழுது, மேய்ப்பர்* ஒருவரை ஒருவர் நோக்கி, நாம் பெத்லெகேம் ஊருக்குப் போய், கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்டு நடந்த இந்தச் சங்கதியைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு,

௰௬ தீவிரமாய்ப்போய், மரியாளையும் யோசேப்பையும் பசுத்தொட்டியிலே கிடக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

௰௭ பின்பு அவர்கள் அந்தப் பிள்ளையைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட வார்த்தையைப் பிரசித்தம்பண்ணினார்கள்

௰௮ மேய்ப்பரால் சொல்லப்பட்டவைகளைக் கேட்ட யாவரும் அவைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

௰௯ [9]மரியாள் அவ்வார்த்தைகளை எல்லாம் தன் இருதயத்திலே காத்துச் சிந்தித்துக்கொண்டாள்.

௨௰ மேய்ப்பரும் தங்களுடனே சொல்லப்பட்டதின்படியே கேட்டுக் கண்ட யாவுக்காகவும் பராபரனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டு திரும்பினார்கள்.

௨௰௧ ¶ [10]பிள்ளைக்கு விருத்தசேதனம் செய்கிறதற்குரிய எட்டாம் நாளிலே அது கர்ப்பமாகிறதற்கு முன்னே தேவதூதனாலே சொல்லப்பட்ட [11]இயேசு என்னும் நாமம் அதற்குக் கொடுக்கப்பட்டது

௨௰௨ அல்லாமலும் [12]மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களைச் சுத்திகரிப்பதற்கான நாட்கள் நிறைவேறினபொழுது,

௨௰௩ [13]முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் பராபரனுக்குப் பிரதிஷ்டையாக்கப்பட வேண்டும் என்று [14]பராபரன் அருளிச்செய்த நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி,

௨௰௪ அவர்கள் அதைப் பராபரனுக்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கும் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒருசோடு காட்டுப்புறாவை அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியிடும்படிக்கும் பிள்ளையை எருசலேம் பட்டணத்திற்குக் கொண்டுபோனார்கள்

௨௰௫ அப்பொழுது சிமேயோன் என்று பேர்கொண்ட மனிதன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனுமாய் [15]இஸரவேலருக்கு ஆறுதல் செய்கிறவர் வரக் காத்திருக்கிறவனுமாய் இருந்தான், அவனில் பரிசுத்தஆவியானவர் இருந்தார்

௨௰௬ அல்லாமலும் பராபரனுடைய கிறிஸ்துவைக் காணும்முன்னே, [16]நீ மரணம் அடைவதில்லை என்று பரிசுத்தஆவியினாலே அவனுக்கு உத்தரவு உண்டாயிருந்தது.

௨௰௭ [17]அவன் அந்த ஆவியினாலே ஏவப்பட்டுத் தேவாலயத்திலே வந்திருந்தான்; அப்பொழுது இயேசு என்னும் பிள்ளையை நியாயப்பிர

கி. பி ரு.

[1] க மோ ௰௨. ௩. ௰௮. ௰௮. ௨௰௨. ௰௮. ௨௰௬. ௪. ௨௮. ௰௪. மாற் க௰௬. ௰௫. லூக் ௨௪. ௪௭. கொலோ க. ௨௩

[2] ஏசா ௯. ௬. லூக் க. ௩௧. அப் ௨. ௩௬. ௰௬. பிலி ௨. ௰௧

[3] மத் க. ௨௧

[4] ஏசா ௯. ௯

[5] க மோ ௨௮. ௰௨. சங் ௰௩. ௨௰. ௨௧. தானி ௭. ௰. எபி க. ௰௪. வெளி ௫. ௰௧

[6] லூக் ௰௯. ௩௮. எபே ௩. ௰௦. க. ௨௰. வெளி ரு. ௰௩

[7] ஏசா ௫௭. ௰௯. லூக் க. ௭௯. ரோ ௫. க. எபே ௨. ௰௭. கொலோ க. ௨௰

[8] யோவா ௩. ௰௬. எபே ௨. ௪. ௭. தெச ௨. ௰௬. க யோ ௪. ௯. ௰

*அல்லது மேய்ப்பராகிய மனுஷர்

[9] க மோ ௩௭. ௰௧. லூக் ௮. ௩௬. ௫௧

[10] க மோ ௰௭. ௰௨. ௩ மோ ௰௨. ௩. லூக் க. ௫௯

[11] மத் க. ௨௧. ௨௫. லூக் க. ௩௧

[12] ௩ மோ ௰௨. ௨. ௩. ௪. ௬

[13] ௨ மோ ௰௩. ௨. ௰௨. ௰௫. ௨௨. ௨௯. ௪ மோ ௩. ௰௩. ௮. ௰௭. ௰௮. ௰௯

[14] ௩ மோ ௰௨. ௨. ௬. ௮

[15] ஏசா ௪௦. க. மாற் ௰௫. ௪௩. லூக் ௨௮. ௨௫

[16] சங் ௮௯. ௪௮. எபி ௰௧. ௫

[17] மத் ௪. க

மாண முறைமையின்படி செய்யத் தாய்தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டுவருகையில்,

௨௮ அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, பராபரனைத் தோத்திரித்துச் சொன்னது:

௨௯ [1]ஆண்டவரே, புறத்தேசத்தார்களுக்கு அறிவைக் கொடுப்பதற்கும் உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலருக்கு மகிமை உண்டாகுவதற்குமான ஒளியாய்,

௩௦ உம்மாலே எல்லாச் சனங்களுக்கு முன்பாகவும்,

௩௧ ஏத்தனமாக்கப்பட்ட இரட்சணை நான் [2]என் கண்களாலே கண்டபடியிருந்தாலே,

௩௨ [3]தேவரீர் உம்முடைய வார்த்தையின்படி இப்பொழுது அடியேனைச் சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறீர் என்றான்.

௩௩ ¶ அப்படி அவரைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளை அவருடைய தாயும் யோசேப்பும் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

௩௪ பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளுடனே சொன்னது: இதோ, அநேகருடைய இருதயசிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு,

௩௫ இஸ்ரவேலில் [4]அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் [5]விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாயிருப்பதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்; [6]உன் ஆத்துமாவையே ஒரு கத்தி உருவிப்போம் என்றான்.

௩௬ ¶ அல்லாமலும் ஆசேருடைய கோத்திரத்திலே பானுவேலின் குமாரத்தியும் தீர்க்கதரிசியுமாகிய அன்னாள் என்பவள் இருந்தாள், அவள் கன்னியாய்ப் பின்பு ஏழு வருஷம் புருஷனோடே வாழ்ந்து மிகுந்த வயது சென்றவளாயிருந்தாள்.

௩௭ ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்தக் கைம்பெண் தேவாலயத்தைவிட்டு நீங்காமல் [7]இரவும் பகலும் செபம்பண்ணி உபவாசித்து ஆராதனைசெய்து கொண்டுவந்தாள்.

௩௮ அவளும் அவ்வேளையிலே போய் நின்று, பராபரனைத் துதித்து, [8]எருசலேமிலே* மீட்புண்டாகக் காத்திருந்த யாவருடனேயும் அவரைக்குறித்துப் பேசினாள்.

௩௯ பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்த பின்பு கலிலேயாதேசத்திலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்தூருக்குத் திரும்பினார்கள்.

௪௦ ¶ [9]பிள்ளையானது வளர்ந்து ஆவியிலே பலன்கொண்டு ஞானத்தால் நிறையப்பட்டுத் தேவதயவுள்ளவரானார்.

௪௧ [10]அவருடைய தாய்தகப்பன்மார் பஸ்காவின் பண்டிகைக்கு வருஷந்தோறும் எருசலேம் பட்டணத்திற்குப் போவார்கள்.

௪௨ அந்தப்படிக்கு அவர் பன்னிரண்டு வயதுள்ளவரானபொழுது அவர்கள் பண்டிகைமுறைமையின்படி எருசலேமுக்குப் போய்,

௪௩ வேண்டிய நாள் அங்கே இருந்து பின்பு திரும்பிவருகிறபொழுது, பிள்ளையாகிய இயேசு தம்முடைய தாய்க்கும் யோசேப்புக்கும் தெரியாமல் எருசலேமிலே தானே இருந்தார்.

௪௪ அவர்கள் அவர் பிரயாணக்காருடைய கூட்டத்தில் இருப்பாரென்று எண்ணி, ஒருநாள் பிரயாணமாய் நடந்துபோய், இனத்தாருக்குள்ளும் அறிமுகமானவர்களுக்குள்ளும் அவரைத் தேடி,

௪௫ அவரைக் காணாமலிருக்கிறபொழுது எருசலேமுக்குத் திரும்பி, அவரைத் தேடி,

௪௬ மூன்று நாளைக்குப் பின்பு தேவாலயத்திலே அவர் போதகருக்குள்ளே உளுக்கார்ந்திருக்கவும், அவர்களுக்குச் செவிகொடுக்க

இ. பி கு.

[1] ஏசா ௯. ௨. ௪௨. ௬. ௪௯. ௬. ௬௦. ௧–௩. மத் ௪. ௧௬. அப ௧௩. ௪௭. ௨௮. ௨௮.

[2] ஏசா ௫௨. ௧௦. லூக் ௩. ௬.

[3] ௧ மோ ௪௬. ௩௦. பிலி ௧. ௨௩.

[4] ஏசா ௮. ௧௪. ஓசே ௧௪. ௯. மத் ௨௧. ௪௪. ரோ ௯. ௩௨, ௩௩. ௧ கொரி ௧. ௨௩. ௨ கொரி ௨. ௧௬. ௧ பே ௨. ௭, ௮.

[5] அப ௨௮. ௨௨.

[6] சங் ௪௨. ௧௦. யோவா ௧௯. ௨௫.

[7] அப ௨௬. ௭. ௧ தீமோ ௫. ௫.

[8] மாற் ௧௫. ௪௩. ௨௫. வச ௩௮.

* அல்லது இஸ்ரவேலிலே

[9] ௫௨ வச லூக் ௧. ௮௦.

[10] ௨ மோ ௨௩. ௧௫, ௩௪. ௨௩. ௫ மோ ௧௬. ௧, ௧௬.

வும், அவர்களை வினவவும் கண்டார்கள்.

௪௭ [1]அவருடைய வசனங்களைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்.

௪௮ (தாய்தகப்பன்மார்) அவரைக் கண்டு அதிசயப்பட்டார்கள்; அல்லாமலும் அவருடைய தாய் அவரைநோக்கி, மகனே, என்னத்தினாலே நீ எங்களுக்கு இப்படிச்செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள், அதற்கு அவர்,

௪௯ நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள்? [2]நான் என் தகப்பனுக்கு ஏற்றவைகளிலே இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார்.

௫௰ [3]அவர்கள் தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையின் (கருத்தை) உணர்ந்துகொள்ளவில்லை.

௫௧ பின்பு அவர் அவர்களுடனேகூடப் போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழடங்கினார்; நடந்த சங்கதிகளையெல்லாம் [4]அவருடைய தாய் தன் இருதயத்தில் காத்துக்கொண்டாள்.

௫௨ இயேசுவானவர் [5]ஞானத்தையும், * வயதையும், பராபரனிடத்திலும் மனிதரிடத்திலும் தயையையும் அதிகம் அதிகமாய் அடைந்துகொண்டார்.

௩. அதிகாரம்.

௧ யோவானுடைய பிரசங்கத்தையும் ஞானஸ்நானத்தையுங்குறித்தது. ௰௫ அவன் கிறிஸ்துவைக்குறித்துக் கொடுத்த சாட்சி. ௰௯ ஏரோதே யோவானைக் காவலில் வைத்தது. ௨௧ கிறிஸ்து ஞானஸ்நானம்பெற்றபோது பரமண்டலத்திலிருந்து சாட்சி வெளிப்பட்டது. ௨௩ கிறிஸ்துவின் ஆயுசின் பிரமாணமும், யோசேப்பைத்தொடங்கி மேற்போகிற அவருடைய வம்சவரிசையின் அட்டவணையும்.

திபேரியு இராயன் இராச்சியபரிபாலனம்பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, பொந்தியுபிலாத்து என்பவன் யூதேயா நாட்டுக்குத் துரையாயும், ஏரோது என்பவன் காற்பங்காகிய கலிலேயா நாட்டுக்கு அதிபதியாயும், அவனுடைய சகோதரனாகிய பிலிப்பு என்பவன் காற்பங்காகிய இத்துரேயா நாட்டுக்கும் திராகோனித்தி நாட்டுக்கும் அதிபதியாயும், இலிசானி என்பவன் காற்பங்காகிய அபிலேனே நாட்டுக்கு அதிபதியாயும்,

௨ [6]அன்னா, காய்பா என்பவர்கள் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்திலே, வனாந்தரத்தில் சகரியாவின் குமாரனாகிய யோவானுக்குத் தேவவசனம் உண்டாயிற்று.

௩ ¶ ஆனபடியால் [7]அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் நடந்து, [8]பாவமன்னிப்புக்காக மனந்திரும்பும்படிக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்.

௪ [9]பராபரனுக்காக மார்க்கத்தை நன்றாகச்செய்து, அவருக்காகப் பாதைகளைச் செம்மைபண்ணுங்கள் என்றும்,

௫ பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலான பாதைகள் செம்மையாகும், முரட்டுவழிகள் சமனாகும் என்றும், [10]மனிதர் எல்லாரும் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும்,

௬ வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினுடைய புத்தகத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாகப் பிரசங்கித்தான்.

௭ ஆதலால் அவன், தன்னாலே ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த சனங்களை நோக்கி, [11]விரியன்பாம்புகளின் குட்டிகளே இனிவரும் கோபத்திற்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன் எவன்?

௮ (தப்ப விரும்பினால்) மனந்திரும்புகிறதற்கு ஏற்ற †கனிகளைக் கொடுங்கள், ஆபிரகாம் எங்களுக்

கி. பி. ௨௬.

[1] மத் ௭. ௨௮. மாற் ௧. ௨௨. லூக் ௪. ௨௨, ௩௨. யோவா ௭. ௰௫. ௪௬.

[2] யோவா ௨. ௰௬.

[3] லூக் ௯. ௪௫. ௰௮. ௩௪.

[4] ஆதி ௩௭. ௰௧. தானி ௭. ௨௮.

[5] ௧ சாமு ௨. ௨௬.

* அல்லது வளர்த்தியையும்.

[6] யோவா ௰௧. ௪௯, ௰௮. ௰௩. அப் ௪. ௬.

[7] மத் ௩. ௧. மாற் ௧. ௪.

[8] லூக் ௧. ௭௭.

[9] ஏசா ௪௰. ௩. மத் ௩. ௩. மாற் ௧. ௩. யோவா ௧. ௨௩.

[10] சங் ௯௮. ௨. ஏசா ௫௨. ௰. லூக் ௨. ௰.

[11] மத் ௩. ௭.

† அல்லது தகுதியான.

குத் தகப்பன் என்று உங்கள் உள்ளத்தில் சொல்லத் தொடங்காதிருங்கள்; ஆபிரகாமுக்குப் பராபரன் இந்தக் கற்களால் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராய் இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯ அல்லாமலும் இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகில் வைத்திருக்கின்றது; [1]ஆகையால் நல்ல கனிகொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.

௰ ¶ அப்பொழுது சனங்கள் அவனை நோக்கி, [2]அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

௰௧ அவர்களுக்கு மாறுத்தரமாக அவன் சொன்னது: [3]இரண்டு சட்டைகளை உடையவன் சட்டையில்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன், ஆகாரமுடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்.

௰௨ பின்பு [4]ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறும்படிக்கு அவனிடத்தில் சேர்ந்து போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டுமென்றார்கள்.

௰௩ அவர்களுடனே அவன் சொன்னது: [5]உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதற்கு மேலாக ஒன்றையும் பலவந்தமாய்க் கேட்டுக்கொள்ளாதிருங்கள் என்றான்.

௰௪ போர்ச்சேவகரும் அவனை நோக்கி, நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டார்கள், அவர்களுடனே அவன் சொன்னது: நீங்கள் ஒருவனுக்கும் இடுக்கண் [6]செய்யாமலும்,* ஒருவனைக் குறித்தும் பொய்ச்சாட்சி சொல்லாமலும், உங்கள் சம்பளமே† போதுமென்று எண்ணிக்கொண்டிருக்கக்கடவீர்கள் என்றான்.

௰௫ ¶ அப்பொழுது சனங்கள் காத்திருந்து,‡ யோவான் கிறிஸ்துவாய் இருக்கிறானோ என்று எல்லாரும் தங்கள் இருதயங்களில் அவனைக்குறித்துச் சிந்தனைகொண்டு§ இருக்கிறபொழுது,

௰௬ யோவான் எல்லாருடனேயும் சொன்னது: [7]நான் சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; என்னிலும் அதிக பலத்தவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

௰௭ தூற்றுஞ் சுளகு அவருடைய கையில் இருக்கின்றது; அவர் தம்முடைய களத்தை நன்றாய் விளக்கி, [8]கோதுமையைத் தம்முடைய களஞ்சியத்திலே சேர்த்து, பதரை அவியாத அக்கினியினாலே சுட்டெரிப்பார் என்று சொன்னதுமன்றி,

௰௮ மற்றும் அநேகம் புத்திகளைச் சொல்லிச் சனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

௰௯ ¶ [9]அப்படியிருக்கும் காலத்திலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது என்பவன் தன் சகோதரனான பிலிப்பினுடைய மனைவியாகிய ஏரோதியாளின் நிமித்தமாகவும், மற்றப் பொல்லாங்குகளைச் செய்ததின் நிமித்தமாகவும் யோவானாலே கடிந்துகொள்ளப்பட்டபொழுது,

௨௰ தான் செய்துவந்த பொல்லாங்குகளையாவையுமன்றி யோவானையும் காவலில் அடைத்தான்.

௨௧ ¶ சனங்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டகாலத்தில் [10]இயேசுவானவரும் ஞானஸ்நானம் பெற்றார்; அப்பொழுது அவர் செபம்பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டதுமல்லாமல்,

௨௨ கண்ணுக்குத் தோன்றிய உருவாய் ஒரு புறாவைப்போலப் பரிசுத்த ஆவியானவர் அவர்மேல்

கி. பி ௨௬

[1] மத் ௭ ௰௯

[2] அப் ௨. ௩௭

[3] லூக் ௰௧ ௪௧. ௨ கொரி ௮ ௰௪ யாக் ௨ ௰௫, ௰௬. ௧ யோ ௩ ௰௭

[4] மத் ௨௧ ௩௨. லூக் ௭ ௨௯

[5] லூக் ௰௯ ௮

[6] ௨ மோ ௨௩ ௧. ௩ மோ ௰௯ ௰௧

* அல்லது பலவந்தஞ் செய்யாமலும்

† அல்லது வாழ்வு

‡ அல்லது நோக்கிக்கொண்டு

§ அல்லது தர்க்கித்து

[7] மத் ௩ ௰௧

[8] மீகா ௪ ௰௨. மத் ௰௩ ௩௦

[9] மத் ௰௪ ௩. மாற் ௬ ௰௭

[10] மத் ௩ ௰௩. யோவா ௧ ௩௨

இறங்கினார்; அன்றியும், நீர் எனக்கு அன்பான குமாரனாயிருக்கிறீர், உம்மில் பிரியமாய் இருக்கிறேன் என்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

௨௩ ¶ இப்படி [1]இயேசுவானவர் ஏறக்குறைய முப்பது வயதுள்ளவராய் வெளிப்படத் தொடங்கினார்.

௨௪ [2]சனங்கள் அவரை யோசேப்பின் குமாரனென்று எண்ணினார்கள்

௨௫ அந்த யோசேப்பு எலியின் குமாரன், எலி, மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத்து, இலேவியின் குமாரன், இலேவி, மெல்கியின் குமாரன்; மெல்கி, இயன்னாவின் குமாரன்; இயன்னா, யோசேப்பின் குமாரன், யோசேப்பு, மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா, ஆமோசின் குமாரன்; ஆமோசு, நாகூமின் குமாரன், நாகூம், எஸ்லியின் குமாரன்; எஸ்லி, நங்காயின் குமாரன்.

௨௬ நங்காய், மாகாத்தின் குமாரன்; மகாத்து, மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா, சேமேயின் குமாரன்; சேமேய், யோசேப்பின் குமாரன்; யோசேப்பு, யூதாவின் குமாரன்; யூதா, யோவன்னாவின் குமாரன்.

௨௭ யோவன்னா, இரேசாவின் குமாரன்; இரேசா, சோரோப்பாபேலின் குமாரன்; சோரோபாபேல், சலாத்தியேலின் குமாரன்; சலாத்தியேல், நேரியின் குமாரன்.

௨௮ நேரி, மேலுகியின் குமாரன், மேலுகி, அத்தியின் குமாரன், அத்தி, கோசாமின் குமாரன், கோசாம், எல்மோதாமின் குமாரன்; எல்மோதாம், ஏரின் குமாரன்; ஏர், யோசேயின் குமாரன்

௨௯ யோசே, எலியேசரின் குமாரன்; எலியேசர், யோரீமின் குமாரன்; யோரீம், மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத்து, இலேவியின் குமாரன்.

௩௰ இலேவி, சீமையோனின் குமாரன்; சீமையோன், யூதாவின் குமாரன்; யூதா, யோசேப்பின் குமாரன்; யோசேப்பு, யோனானுடைய குமாரன்; யோனான், எலியாக்கீமின் குமாரன்.

௩௧ எலியாக்கீம் மேலேயாவின் குமாரன்; மேலேயா, மயினானுடைய குமாரன்; மயினான், மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா, [3]நாத்தானுடைய குமாரன்; நாத்தான், [4]தாவீதின் குமாரன்.

௩௨ தாவீது, [5]இயேசாயின் குமாரன்; இயேசாய், ஓபேதின் குமாரன், ஓபேது, போவோசின் குமாரன்; போவோசு, சலமோனுடைய குமாரன்; சலமோன், நகாசோனின் குமாரன்.

௩௩ நகாசோன், அமின்தாபின் குமாரன், அமின்தாப், ஆராமின் குமாரன், ஆராம், எஸ்ரோமின் குமாரன்; எஸ்ரோம், பாரேசின் குமாரன், பாரேசு, யூதாவின் குமாரன்; யூதா, யாக்கோபின் குமாரன்.

௩௪ யாக்கோபு, ஈசாக்கின் குமாரன்; ஈசாக்கு, ஆபிரகாமின் குமாரன், ஆபிரகாம், [6]தேராவின் குமாரன்; தேரா, நாகோரின் குமாரன்

௩௫ நாகோர், சேரூக்கின் குமாரன், சேரூக்கு, இராகுவின் குமாரன்; இராகு, பலேக்கின் குமாரன்; பலேக்கு, ஏபேரின் குமாரன், ஏபேர், சாலாமின் குமாரன்

௩௬ சாலாம், [7]கேனானின் குமாரன்; கேனான், அருப்பகுசாத்தின் குமாரன்; அருப்பகுசாத்து, [8]சேமின் குமாரன், சேம், நோவாவின் குமாரன், நோவா, இலாமேக்கின் குமாரன்.

௩௭ இலாமேக்கு, மெத்தூசலாக்கின் குமாரன்; மெத்தூசலாக்கு, ஏனோக்கின் குமாரன்; ஏனோக்கு, யாரேத்தின் குமாரன்; யாரேத்து, மலெலேயேலின் குமாரன்; மலெலே

இ பி ௨௬.

[1] ௪ மோ ௪ ௩, ௩௫, ௩௯, ௪௩, ௪௭

[2] மத ௰௩ ௫௫ யோவா ௬ ௪௨.

[3] சகரி. ௰௨ ௰௨

[4] ௨ சாமு ௫ ௰௪ ௧ நாளா ௩ ௫

[5] ரூத ௪ ௰௮ ௧ நாளா ௨ ௰

[6] ௧ மோ ௰௧ ௨௪, ௨௬

[7] ௧ மோ ௰௧ ௰௨.

[8] ௧ மோ ௫ ௯ ௯ ௰௧ ௰ ௯

யேல், காயினானின் குமாரன்; காயினான், ஏனோசின் குமாரன்.

௩௮ ஏனோசு, சேத்தின் குமாரன், சேத்து, ஆதாமின் குமாரன்: [1]ஆதாம், பராபரனால் உண்டானவன்.

௪. அதிகாரம்.

௧ கிறீஸ்து சோதிக்கப்பட்டு உபவாசம்பண்ணினது. ௰௩ அவர் பசாசை ஜெயித்தது. ௰௪ அவர் பிரசங்கிக்கத் தொடங்கினது. ௰௬ நாசரேத்தூரார் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டது. ௩௩ பசாசு பிடித்தவனையும் ௩௮ பேதுருவின் மாமியையும், ௪௰ பிணியாளரையும் பலவித வியாதிக்காரரையும் சொஸ்தப்படுத்தினது. ௪௧ பசாசுகள் அவரை இன்னாரென்று சொன்னதாலே கண்டிக்கப்பட்டது. ௪௩ அவர் பட்டணங்களிலேயும் பிரசங்கித்தது.

[2]இயேசுவானவர் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய், யோர்தானைவிட்டுத் திரும்பி, [3]ஆவியினாலே வனாந்தரத்தில் கொண்டுபோகப்பட்டார்.

௨ அங்கே நாற்பதுநாள் பசாசினாலே சோதிக்கப்பட்டு [4]அந்நாட்களிலே ஒன்றும் புசியாமல் இருந்தார்.

௩ அவைகள் முடிந்த பின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று, அப்பொழுது பசாசானவன் அவரை நோக்கி, நீ தேவனுடைய குமாரனானால், இந்தக் கல்லை அப்பமாகும்படி சொல் என்றான்.

௪ அதற்கு இயேசுவானவர், [5]மனிதன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, பராபரனுடைய வார்த்தை எதுவோ, அதினாலே பிழைப்பான் என்று எழுதி இருக்கின்றது என்றார்.

௫ பின்பு பசாசானவன் அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், ஒரு நிமிஷத்திலே உலகத்தின் இராச்சியங்களையெல்லாம் அவருக்குக் காண்பித்து,

௬ இவை எல்லாவற்றின்மேலும் அதிகாரமும் இவைகளின் மகிமையும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், நான் இவைகளை உனக்குத் தருவேன்; [6]என் இஷ்டப்படிக்கே நான் இவைகளை எவனுக்கும் கொடுக்கிறேன்,

௭ ஆகையால் நீ என்னைத் தொழுதுகொண்டால்,* எல்லாம் உன்னுடையதாயிருக்கும் என்று அவருடனே சொன்னான்.

௮ இயேசுவானவர் அவனுக்குச் சொன்னது: சாத்தானே, [7]நீ எனக்குப் பின்னாகப் போ, உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கின்றதே என்றார்.

௯ [8]அன்றியும் அவன் அவரை எருசலேம் பட்டணத்திலேக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் நிறுத்தி, உன்னைக் காப்பாற்றும்படிக்கு உன்னைக்குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார் என்றும்,

௰ [9]உன் கால் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் தங்கள் கைகளில் உன்னை ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும் எழுதியிருக்கின்றது.

௰௧ ஆகையால் நீ தேவனுடைய குமாரனானால், இங்கேயிருந்து தாழக்குதி என்று அவருடனே சொன்னான்.

௰௨ அதற்குமாறுத்தரமாக [10]இயேசுவானவர் சொன்னது. உன்னுடைய தேவனாகிய பராபரனைப் பரிட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கின்றது என்றார்.

௰௩ *பசாசானவன் (அவரைச்) சோதித்தவைகளையெல்லாம் முடித்தபொழுது, [11]சிலகாலம் அவரைவிட்டுப் போனான்.

௰௪ ¶ [12]பின்பு இயேசுவானவர் [13]ஆவியினுடைய பலத்தினாலே [14]கலிலேயா நாட்டுக்குத் திரும்பினார், அதைச் சூழ்ந்திருக்கிற தேசமெங்கும் அவருடைய கீர்த்தி பரவிற்று.

கி. பி. ௨௯.

1 ௧ மோ ௫ ௧, ௨

2 மத் ௪ ௧ மாற் ௧ ௰௨

3 ௰௪ வச ௰௫ ௭

4 உபா ௯ ௯ ௧ இரா ௰௯ ௮

5 உபா ௮ ௩

6 யோவா ௰௨ ௩௧ வெளி ௰௩ ௨ ௭

* அல்லது என் சமுகத்தில் விழுந்தால்

7 உபா ௬ ௰௩ ௰ ௨௰

8 மத் ௪ ௫

9 சங் ௯௧ ௰௧

10 உபா ௬ ௰௬

11 யோவா ௰௪ ௩௰ எபி ௪ ௰௫

12 மத் ௪ ௰௨ யோவா ௪ ௪௩

13 ௧ வச

14 அப் ௰ ௩௭

௰௫ அல்லாமலும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் உபதேசம்பண்ணி, எல்லாராலும் புகழ்ச்சி அடைந்தார்.

௰௬ ¶ அவர் தாம் வளர்ந்த [1]நாசரேத்தூருக்குப் போய், தமக்கு வழக்கமானபடி ஓய்வுநாளிலே [2]ஜெபஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நிற்கிறபொழுது,

௰௭ ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை அவருக்குக் கொடுத்தார்கள்; அந்தப் புத்தகத்தை அவர் விரித்தபொழுது,

௰௮ [3]பராபரனுடைய ஆவி என்னில் இருக்கின்றது; தரித்திரருக்கு நான் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி எனக்கு அபிஷேகம்பண்ணினார், நருக்குண்டவர்களைக் குணமாக்கும்படிக்கும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்க்குதலையும் பிரசங்கிக்கும்படிக்கும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கி,

௰௯ பராபரனாலே அங்கிகரிக்கப்படுவதற்கான வருஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும் என்னை அனுப்பினார் என்று எழுதியிருந்த இடத்தைக் கண்டு,

௨௰ புத்தகத்தைச் சுருட்டி ஊழியக்காரனிடத்தில் கொடுத்து உளுக்கார்ந்தார்; ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேலே நோக்கமாயிருந்தன.

௨௧ அப்பொழுது அவர் அவர்களுடனே பேசத்தொடங்கி, நீங்கள் கேட்ட வேதவாக்கியம் இன்றைத்தினமே நிறைவேறிற்று என்றார்.

௨௨ எல்லாரும் அவருக்கு நல்லசாட்சி கொடுத்து, அவர் திருவாய்மலர்ந்து அருளிச்செய்த கிருபையுள்ள வசனங்களைக்குறித்து [4]ஆச்சரியப்பட்டு, பின்பு [5]இவன் யோசேப்பினுடைய குமாரனல்லவோ என்றார்கள்.

௨௩ அவர்களுடனே அவர் சொன்னது: வயித்தியனே, உன்னைத்தானே குணமாக்கு என்கிற வழக்கச்சொல்லையும், நாங்கள் கேள்விப்பட்டபடி [6]கப்பர்நாகூம் ஊரில் (உன்னாலே) செய்யப்பட்டது எதுவோ [7]அதை உன் ஊராகிய இவ்விடத்திலேயும் செய் என்பதையும் நீங்கள் என்னுடனே சொல்லுவீர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

௨௪ அப்படியிருக்க, [8]தீர்க்கதரிசியானவன் தன் ஊரிலே அங்கிகரிக்கப்பட்டவன் அல்லவென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௫ அன்றியும் எலியாவின் காலத்திலே மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைக்கப்பட்டுத் தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபொழுது, இஸ்ரவேலருக்குள்ளே [9]அநேகம் கைம்பெண்கள் இருந்தும்,

௨௬ சீதோன் நாட்டிலுள்ள சரேப்பாத்தா ஊரில் இருந்த ஒரு கைம்பெண்ணிடத்திற்கே அன்றி, மற்றொருத்தியினிடத்துக்கும் எலியா அனுப்பப்படவில்லை.

௨௭ அல்லாமலும் [10]எலீசா என்னும் தீர்க்கதரிசியின் காலத்திலே, இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தும், சீரிய தேசத்தானாகிய நாகமானே அன்றி, அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லையென்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௮ ¶ ஜெபஆலயத்தில் இருந்த எல்லாரும் இவைகளைக் கேட்டபொழுது,

௨௯ கோபத்தால் நிரப்பப்பட்டு எழுந்து, அவரை ஊருக்குப்புறம்பே தள்ளி, தங்கள் ஊருக்கு அடுத்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து *அவரைத் தாழத்தள்ளும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

௩௰ [11]அவர் அவர்கள் மத்தியில் நின்று கடந்துபோனார்

[1] மத் ௨ ௨௩ ௰௩ ௫௪ மாற் ௬ ௧

[2] அப் ௰௩ ௰௪ ௰௭ ௨

[3] ஏசா ௬௧ ௧

[4] சங் ௪௫ ௨ மத் ௰௩ ௫௪ மாற் ௬ ௨ லூக் ௨ ௪௭

[5] யோவா ௬ ௪௨

[6] மத் ௪ ௰௩ ௰௧ ௨௩

[7] மத் ௰௩ ௫௪ மாற் ௬ ௧

[8] மத் ௰௩ ௫௭ மாற் ௬ ௪ யோவா ௪ ௪௪

[9] ௧ இரா ௰௭ ௯ யாக் ௫ ௰௭

[10] ௨ இரா ௫ ௰௪

* அல்லது நுனியிலிருந்து

[11] யோவா ௮ ௫௯ ௰ ௩௯

௩௧ ¶ [1]பின்பு அவர் கலிலேயா தேசத்திலுள்ள கப்பர்நகூம் பட்டணத்திற்குப் போய், ஓய்வுநாள்களில் சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்.

௩௨ [2]அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாய் இருந்தபடியினாலே, அவர்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.

௩௩ ¶ [3]அல்லாமலும் செபஆலயத்திலே அசுத்தமான ஆவியுள்ள ஒரு மனிதன் இருந்தான்.

௩௪ அவன் (அவரைக் கண்டு) ஐயோ! நாசரேத்தூரானாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்; [4]உம்மை அறிந்திருக்கிறேன்;* [5]நீர் பராபரனுடைய பரிசுத்தரே என்று மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டான்.

௩௫ அதற்கு இயேசுவானவர் நீ பேசாமல் இவனை விட்டுப் போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பசாசு அவனைச் சனங்களுக்குள்ளே தள்ளி, அவனுக்கு ஒரு சேதமும் செய்யாமல் அவனை விட்டுப்போயிற்று.

௩௬ எல்லாரும் பிரமிப்படைந்து, இவர் அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிட அவைகளும் புறப்படுகின்றனவே; இது என்ன வசனம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௩௭ அவருடைய கீர்த்தி அத்தேசத்திலுள்ள இடங்கள் யாவிலும் பிரசித்தமாயிற்று.

௩௮ ¶ [6]பின்பு அவர் செபஆலயத்தைவிட்டுச் சீமோன் என்பவனுடைய வீட்டுக்குப்போனார்; சீமோனுடைய மாமி மிகுந்த சுரமாய்க் கிடந்தாள்; அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௯ அப்பொழுது அவர் அவளிடத்தில் குனிந்து நின்று சுரத்தை அதட்டினார்; அது அவளைவிட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள்.

௪௰ ¶ பின்பு [7]சூரியன் அஸ்தமித்தபொழுது, அநேக சனங்கள் தங்களிடத்தில் இருந்த பலவியாதிகள் உள்ளவர்களை அவரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவர்கள் எல்லார்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினார்.

௪௧ அநேகரிடத்திலிருந்து [8]பசாசுகளும் புறப்பட்டன; [9]அவைகள், நீர் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று கூப்பிட்டன; அவர் தம்மைக் கிறிஸ்து என்று அவைகள் அறிந்தபடியினாலே, அவைகள் பேசுகிறதற்கு †இடங்கொடாமல் அதட்டினார்.

௪௨ ¶ [10]உதயமானபொழுது அவர் புறப்பட்டு வனாந்தரமான இடத்திற்குப் போனார்; சனங்கள் அவரைத் தேடி அவரிடத்தில் போய்த் தங்களைவிட்டுப் போகாதபடிக்கு அவரை நிறுத்திக்கொண்டார்கள்.

௪௩ அதற்கு அவர் அவர்களை நோக்கி, நான் மற்ற ஊர்களுக்கும் பராபரனுடைய இராச்சியத்தைச் சுவிசேஷமாய் அறிவிக்கவேண்டும், அதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்

௪௪ [11]அந்தப்படி அவர் கலிலேயா தேசத்திலுள்ள செபஆலயங்களில் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்தார்.

௫ அதிகாரம்.

கிறிஸ்து பேதுருவின் படவிலிருந்து சனங்களைப் போதித்தது ௪ மீன்கள் அதிசயமாய்ப் பிடிக்கப்பட்டதால் அவனும் அவன் தோழரும் மனிதரைப் பிடிக்கிறவர்களாகுவதைக் காண்பித்தது. ௰௨ குஷ்டரோகியைச் சுத்தஞ்செய்தது ௰௬ வனாந்தரத்தில் செபம்பண்ணினது ௰௮ திமிர்வாதக்காரனைக் குணமாக்கினது ௨௭. ஆயக்காரனை மத்தேயுவை அழைத்தது ௨௯. ஆத்தும வைத்தியனாயிருந்த கிறிஸ்து பாவிகளோடே புசித்தது ௩௪. தாம் பரமண்டலத்துக்கு ஏறினபிற்பாடு அப்போஸ்தலர்கள் உபவாசிக்கவேண்டியதையும் துன்பங்களையும் முன்னறிவித்தது ௩௬ பலவீன விசுவா

கி. பி. ௨௯.

[1] மத் ௪. ௰௩ மாற் ௧ ௨௧.

[2] மத் ௭ ௨௮. ௨௯ தீத் ௨ ௰௫.

[3] மாற். ௧ ௨௩

[4] ௪௧ வச

* அல்லது அகன்றுபோம்

[5] சங் ௰௬ ௰ தானி ௯ ௨௪ லூக் ௧ ௩௫

[6] மத் ௮ ௰௪ மாற் ௧ ௨௯

[7] மத் ௮ ௰௬ மாற் ௧ ௩௨

[8] மாற் ௧ ௩௪ ௩ ௰௧

[9] மாற் ௧ ௨௫, ௩௪ ௩௪ ௩௫ ௪௧ வச

† அல்லது தம்மை அவைகள் கிறிஸ்து என்று அறிந்ததைச் சொல்ல

[10] மாற் ௧ ௩௫

[11] மாற் ௧ ௩௯

சிலேப பழைய துருத்திகளுக்கும பழைய வஸ்திரங்களுக்கும ஒப்பாக்கினது

கி. பி. ௩௰௧

[1]ஒருகாலத்திலே சனங்கள் பராபரனுடைய வசனத்தைக் கேட்கும்படிக்கு அவரை நெருக்கி இருக்கிறபொழுது, அவர் கெனேசரேத்து என்னப்பட்ட சிறிய கடலின் அருகே நின்று,

௨ கடற்கரையில் இரண்டு படவுகளிலிருந்து மீன்பிடிக்கிறவர்கள் இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருக்க, அவ்விரண்டு படவுகளையும் கண்டு,

௩ அவைகளில் ஒன்றாகிய சீமோனுடைய படவில் எறி, அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டு அதிலே உளுக்காந்து, அங்கேயிருந்து சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்.

௪ ¶ அவர் உபதேசித்து முடித்த பின்பு சீமோனை நோக்கி, [2]நீ ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படிக்கு உங்கள் வலைகளைத் தாழவிடுங்கள் என்றார்.

௫ சீமோன் அவருக்கு மாறுத்தரமாகச் சொன்னது ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை, அப்படியிருந்தும், உம்முடைய சொல்லின்படி வலையைத் தாழவிடுகிறேன் என்றான்.

௬ அந்தப்படி அவர்கள் செய்தபொழுது, அவர்களுடைய வலை கிழிந்துபோகத்தக்கதாக, மிகுந்த மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள்.

௭ அப்பொழுது மற்றப் படவில் இருந்த பங்காளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்கு அவர்களுக்குச் சமிக்கை காட்டினார்கள்; அவர்கள்போய் இரண்டு படவுகளையும் அமிழ்த்தத்தக்க பாரமாக நிரப்பினார்கள்.

௮ சீமோன்பேதுரு அதைக்கண்டு, இயேசுவினுடைய முழங்கால்களின் அருகே விழுந்து, [3]ஆண்டவரே, நான் பாவியாய் இருக்கிறபடியினாலே நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.

௯ அவர்கள் அவ்வளவு மீன்களைப் பிடித்ததின் நிமித்தம், அவனுக்கும் அவனோடிருந்த யாவருக்கும் திகில் உண்டானபடியினாலே அப்படிச் சொன்னான்

௰ சீமோனுடைய தோழராகிய செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும் அந்தப்படியே உண்டாயிற்று; அப்பொழுது இயேசுவானவர் சீமோனை நோக்கி, நீ பயப்படவேண்டாம்; [4]இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய் என்றார்

௰௧ பின்பு அவர்கள் படவுகளைக் கரையோரத்திலே கொண்டுபோய் [5]நிறுத்தி, எல்லாவற்றையும்விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்.

௰௨ ¶ [6]மேலும் அவர் ஒரு ஊரில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனிதன் இயேசுவானவரைக் கண்டு வணக்கமாய் விழுந்து, ஆண்டவரே, உமக்குச் சித்தமுண்டானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

௰௩ அவர் தமது கையை நீட்டி அவனைத்தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று.

௰௪ [7]பின்பு அவர் அவனைநோக்கி, நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல் போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, சனங்களுக்குச் சாட்சியாக [8]மோசே நியமித்தபடியே நீ சுத்தமானதைக் குறித்துப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார்

௰௫ அப்படியிருந்தும் அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரவிற்று, [9]அநேகசனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், அவராலே தங்கள் வியாதிக

1 மத் ௪ ௰௮ மாற் ௧ ௰௬
2 யோவா ௨௧ ௬
3 ௨ சாமு ௬ ௯ ௧ இரா ௰௭ ௰௮
4 மத் ௪ ௰௯ மாற் ௧ ௰௭
5 மத் ௪ ௨௰ ௰௯ ௨௭ மாற் ௧ ௰௮ லூக் ௰௮ ௨௮
6 மத் ௮ ௨ மாற் ௧ ௪௰
7 மத் ௮ ௪
8 ௩ மோ ௰௪ ௪, ௰, ௨௧, ௨௨
9 மத் ௪ ௨௫ மாற் ௩ ௮ யோவா ௬ ௨

கி. பி. ௩௧.

ளில் நின்று சுகம் அடைந்துகொள்ளும்படிக்கும் கூடிவந்தார்கள்.

௰௬ [1]அவர் வனாந்தரத்திலே தனித்துப்போய்ச் செபம்பண்ணிக்கொண்டிருந்தார்.

௰௭ ¶ அன்றியும் ஒரு நாளிலே அவர் உபதேசித்துக்கொண்டிருக்கிறபொழுது, கலிலேயாநாட்டிலும் யூதேயாநாட்டிலும் உள்ள சகல கிராமங்களிலிருந்தும், எருசலேம் பட்டணத்திலிருந்தும் வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள்; பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய பலம் உண்டாயிற்று.

௰௮ ¶ [2]அப்பொழுது சில மனிதர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடே எடுத்துக்கொண்டு, உள்ளே போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடி,

௰௯ மிகுந்த கூட்டம் இருந்தபடியினாலே அவனை உள்ளே கொண்டுபோகிறதற்கு இடம் காணாமல், வீட்டின்மேல் ஏறித் தட்டோடுகளின் வழியாய்ப் படுக்கையுடனே கூட நடுவிலே இயேசுவுக்கு முன்பாக அவனை இறக்கினார்கள்.

௨௰ அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, மனிதனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன என்று அவனுடனே சொன்னார்.

௨௧ [3]அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணிச் சொன்னது: தேவதூஷணங்களைச் சொல்லுகிற இவன் யாவன்? [4]பராபரன் ஒருவரே தவிரப் பாவங்களை மன்னிக்கத் திராணியுள்ளவர் யார் என்றார்கள்.

௨௨ இயேசுவானவர் அவர்களுடைய யோச[illegible] அவர்களை நோக்கி [illegible] இருதயங்க[illegible]து என்ன?

௨௩ உன் [illegible]க கப்பட்டன [illegible]றதோ, எழுந்து நட என்று சொல்லுகிறதோ, எது எளிது?

௨௪ பூமியிலே பாவங்களை மன்னிக்கிறதற்கு மனிதனுடைய குமாரன் அதிகாரம் உடையவன் என்று நீங்கள் அறியும்படிக்குப் (பாருங்களென்று) சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௫ உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்திருந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, பராபரனைப் புகழ்ந்து, தன் வீட்டுக்குப் போனான்.

௨௬ ஆதலால் எல்லாரும் பிரமிப்படைந்து பராபரனைப் புகழ்ந்தார்கள்; அல்லாமலும் அவர்கள் பயத்தால் நிறையப்பட்டு, அதிசயமானவைகளை இன்று கண்டோம் என்றார்கள்.

௨௭ ¶ [5]அதின்பின்பு அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த இலேவி என்னும் ஆயக்காரனைக் கண்டு, நீ எனக்குப் பின்சென்றுவா என்றார்.

௨௮ அந்தப்படி அவன் எல்லாவற்றையும்விட்டு, எழுந்திருந்து, அவருக்குப் பின்சென்றான்.

௨௯ அல்லாமலும் [6]அந்த இலேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான்; [7]அநேக ஆயக்காரரும் மற்றப்பேர்களும் அவர்களுடனே பந்தியிருந்தார்கள்.

௩௰ உடனே அவ்விடத்து வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக மொறுமொறுத்து, என்னத்தினாலே நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசனபானம் பண்ணுகிறீர்கள் என்றார்கள்.

௩௧ இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொன்னது: சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்

[1] மத் ௰௪ ௨௩ மாற் ௬ ௪௬
[2] மத் ௯ ௨ மாற் ௨ ௩
[3] மத். ௯. ௩ மாற் ௨ ௬, ௭
[4] சங் ௩௨ ௫ ஏசா ௪௩ ௨௫
[5] மத் ௯ ௯ மாற் ௨ ௰௪
[6] மத் ௯ ௰ மாற் ௨ ௰௫
[7] லூக் ௰௫ ௧

தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்.

௩௨ மேலும் [1]நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்பும்படிக்கு அழைக்கவந்தேன் என்றார்.

௩௩ ¶ பின்பு அவர்கள் அவரை நோக்கி, [2]யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் அநேகந்தரம் உபவாசம்பண்ணிச் செபங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்களே, உம்முடைய சீஷர் போசனபானம்பண்ணலாமா என்றார்கள்.

௩௪ அதற்கு அவர் சொன்னது: மணவாளன் கலியாணத்திற்கு வந்த மனிதரோடு இருக்கும் காலத்திலே, நீங்கள் அவர்களை உபவாசம் பண்ணும்படி செய்யக்கூடுமோ?

௩௫ மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்படும் நாட்கள் வரும், அப்பொழுது அவர்கள் உபவாசிப்பார்கள் என்று சொல்லி,

௩௬ ¶ [3]பின்னும் உவமையாய்ச் சொன்னது: ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான், இணைத்தால் புதியதானது (பழையதைக்) கிழிக்கும்; அல்லாமலும் புதிய வஸ்திரத்துண்டு பழையதற்கு ஒவ்வமாட்டாது.

௩௭ அன்றியும் ஒருவனும் புதிய திராட்ச இரசத்தைப் பழைய துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வைத்தால் புதிய இரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும்; அப்பொழுது அது சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்.

௩௮ புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் இரண்டும் காத்துக்கொள்ளப்படும்.

௩௯ அல்லாமலும் பழைய இரசத்தைப் பானம்பண்ணுகிறவன் உடனே புதிய இரசத்தை விரும்பமாட்டான்; பழைய இரசம் அதிக நல்லதென்று சொல்வானே என்றார்.

௬. அதிகாரம்.

௧ ஓய்வுநாளை ஆசரிப்பதைக்குறித்துப் பரிசேயருடைய குருட்டாட்டத்தைக் கிறிஸ்து வேதத்தினாலும், புத்தியினாலும், அற்புதத்தினாலும் கண்டித்தது ௰௩ பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து ஏற்படுத்தினது ௰௭ பிணியாளிகளைக் குணமாக்கினது ௨௰ ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் காட்டி, ௨௭ பகைஞரைச் சிநேகிக்க வேண்டிய விசேஷத்தையும், ௪௬ அஸ்திவாரம் இல்லாத வீடு விழுந்துபோவதுபோலச் சோதனையின் காலத்தில் நாம் விழாமலிருக்க வசனத்தைக் கேட்டதோடே நற்கிரியைகளான கீழ்ப்படிதலும் கலந்திருக்கவேண்டும் என்பதையும் சனங்களுக்கு உவமையாகச் சீஷர்களுக்குப் போதித்தது.

(புளியாத அப்பங்களைச் சாப்பிடுகிற நாட்களில்) [4]இரண்டாம் நாளுக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே அவர் பயிர்வழியே நடந்து போகிறபொழுது, அவருடைய சீஷர் கதிர்களைக் கொய்து, கைகளினாலே கசக்கித் தின்றார்கள்.

௨ அவர்களுடனே பரிசேயரில் சிலர், [5]ஓய்வுநாட்களில் செய்யத்தகாததை நீங்கள் செய்யவேண்டுவதென்ன என்றார்கள்.

௩ அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: [6]தாவீதும் அவனோடு இருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது, அவன் தேவாலயத்தில் பிரவேசித்து,

௪ [7]ஆசாரியர்மாத்திரமேயன்றி மற்றொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களை எடுத்துப் புசித்து, பின்பு தன்னோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தான் என்று நீங்கள் வாசிக்கவில்லையா என்று சொல்லி,

௫ பின்பு மனிதனுடைய குமாரன் ஓய்வுநாளைக்குறித்தும் ஆண்டவராய் இருக்கிறார் என்று அவர்களுடனே சொன்னார்.

௬ ¶ [8]மற்றொரு ஓய்வுநாளிலே அவர் செபஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார்; அங்கே சூம்பின வலதுகையையுடைய ஒரு மனிதன் இருந்தான்.

இ. பி ௩௧.

[1] மத் ௯ ௰௩ ௧ தீமோ ௧ ௰௫

[2] மத் ௯ ௰௪ மாற ௨ ௰௮

[3] மத் ௯ ௰௬ ௰௭ மாற ௨ ௨௧, ௨௨

[4] மத் ௰௨ ௧ மாற ௨ ௨௩

[5] ௨ மோ ௨௰ ௰

[6] ௧ சாமு ௨௧ ௬

[7] ௩ மோ ௨௪ ௯

[8] மத் ௰௨ ௯ மாற ௩ ௧ லூக ௰௩ ௰௪ ௰௪ ௩. யோவா ௯ ௰௬.

கி. பி. ௩௧.

௭ அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றங் காணும்படிக்கு ஓய்வுநாளிலும் குணமாக்குவாரோ என்று எண்ணி, அவரை நோக்கிக் காத்திருந்தார்கள்.

௮ அவர்களுடைய யோசனைகளை அவர் அறிந்து, சூம்பின கையையுடையவனை நோக்கி, நீ எழுந்து நடுவே நில் என்றார்; அந்தப்படி அவன் எழுந்து நின்றான்.

௯ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாள்களில் நன்மைசெய்கிறதோ தீமைசெய்கிறதோ, சீவனைக் காக்கிறதோ அழிக்கிறதோ, எது நியாயம் என்று சொல்லி,

௰ அவர்கள் எல்லாரையும் சுற்றிப்பார்த்து அந்த மனிதனை நோக்கி, உன் கையை நீட்டு என்றார்; அவன் அப்படிச் செய்தான்; உடனே அவனுடைய கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

௰௧ பின்பு அவர்கள் மதியில்லாமையால் நிறையப்பட்டு, இந்த இயேசுவை என்ன செய்யலாம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

௰௨ ¶ அன்றியும் [1]அந்நாள்களில் அவர் செபம்பண்ணும்படிக்கு மலைக்குப் போய், இராத்திரி முழுவதும் பராபரனை நோக்கிச் செபம்பண்ணிக்கொண்டு,

௰௩ பின்பு உதயமாகிறபொழுது தம்முடைய சீஷரை வரவழைத்து,

௰௪ [2]அவர்களில் பேதுரு என்று தாம் பேரிட்ட [3]சீமோனையும், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவையும், யாக்கோபையும், யோவானையும், [illegible] பர்த்தொலொமே[illegible]

௰௫ மத்தேயு[illegible]ய
யும், அல்பே[illegible]ார
னாகிய யாக்[illegible]க
கியன் என்[illegible]ா
யும்,

௰௬ [4]யாக்கோபின் சகோதரனாகிய யூதாவையும், பின்பு தம்மைக் காட்டிக்கொடுத்த ஸ்காரியோத்தூரானாகிய யூதாவையும், இப்படிப் பன்னிரண்டுபேரையும் தெரிந்துகொண்டு அவர்களை அப்போஸ்தலர் என்று பேர்சொல்லி,

௰௭ பின்பு அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார்; அங்கே அவருடைய சீஷரில் அநேகம்பேரும் [5]அவருடைய உபதேசத்தைக் கேட்டு, தங்கள் வியாதிகளில் நின்று குணமாக்கப்படும்படிக்கு யூதேயா நாட்டின் திசைகள் யாவற்றிலும், எருசலேம் நகரத்திலும், தீருசீதோன் பட்டணங்களுள்ள கடலோரத்திலுமிருந்து அநேக சனங்களும் வந்திருந்தார்கள்.

௰௮ அசுத்தமான ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் கூடிவந்திருந்து ஆரோக்கியம் அடைந்தார்கள்.

௰௯ [6]வல்லமை அவரிலிருந்து புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே சனங்கள் எல்லாரும் [7]அவரைத் தொடப்பார்த்தார்கள்.

௨௰ ¶ அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்துச் சொன்னதாவது: [8]தரித்திரராகிய நீங்கள் பராபரனுடைய இராச்சியத்தை உடையவர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்.

௨௰௧ [9]இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் (இனி) திருத்தி அடைவீர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்; இப்பொழுது [10]அழுகிற நீங்கள் (இனி) நகைப்பீர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்.

௨௰௨ [11]மனிதனுடைய குமாரன் நிமித்தமாகச் சனங்கள் உங்களைப் பகைத்து, உங்களை விலக்கி [12]நிந்தைப்படுத்தி, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிப்போ

[1] மத். ௰௪. ௨௩.
[2] மத். ௰. ௧.
[3] யோவா. ௧. ௪௨.
[4] யூதா. ௧.
[5] மத். ௪. ௨௫. மாற். ௩. ௭.
[6] மாற். ௫. ௩௦. லூக். ௮. ௪௬.
[7] மத். ௰௪. ௩௬.
[8] மத். ௫. ௩; ௰௧. ௫. யாக். ௨. ௫.
[9] ஏசா. ௫௫. ௧; ௬௫. ௰௩. மத். ௫. ௬.
[10] ஏசா. ௬௧. ௩. மத். ௫. ௪.
[11] மத். ௫. ௰௧. ௧ பேது. ௨. ௰௯; ௩. ௰௪; ௪. ௰௪.
[12] யோவா. ௰௬. ௨.

டும்பொழுது, நீங்கள் பாக்கியராய் இருப்பீர்கள்.

௨௩ பரமண்டலத்திலே உங்கள் பலன் மிகுதியாய் இருப்பதால், [1]அக்காலத்திலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் [2]அப்படியே செய்தார்கள்.

௨௪ [3]ஐசுவரியவான்களாகிய நீங்கள் [4]உங்கள் நன்மைகளை அடைந்து தீர்ந்தபடியால், ஐயோ! [5]உங்களுக்கு வேதனை வரும்.

௨௫ [6]திருத்தியுள்ளவர்களாகிய நீங்கள் பசியை அடைவீர்கள், ஆகையால் ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; [7]இப்பொழுது நகைக்கிற நீங்கள் (இனி) துக்கப்படுவீர்கள், ஆகையால் ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்.

௨௬ [8]எல்லா மனிதர்களும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்பொழுது, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும், அவர்களுடைய பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

௨௭ ¶ [9]அன்றியும் (எனக்குச்) செவிகொடுக்கிற உங்களுக்கு நான் கட்டளையிடுகிறதாவது· உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்து,

௨௮ [10]உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, உங்களை வருத்தப்படுத்துகிறவர்களுக்காகச் செபம்பண்ணுங்கள்.

௨௯ [11]உன் கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு; [12]உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் அங்கியையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதிருப்பாயாக.

௩௰ [13]உன்னை வேண்டிக்கொள்ளுகிற யாவனுக்கும் கொடுப்பாயாக; உன்னுடையதை ஒருவன் எடுத்துக்கொண்டால், அவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதிருப்பாயாக.

௩௧ [14]சனங்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறது எப்படியோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யக்கடவீர்கள்.

௩௨ [15]உங்களைச் சிநேகிக்கிறவர்களை (மாத்திரம்) நீங்கள் சிநேகித்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.

௩௩ உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு (மாத்திரம்) நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்?

௩௪ [16]பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே, திரும்பக் கொடுப்பார்கள் என்று நீங்கள் நம்பி அப்படிச் செய்பவர்களுக்கு (மாத்திரம்) கடன் கொடுத்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்? பாவிகளும் சரியாய்த் திரும்ப அடைந்துகொள்ளும்படியாய், (மற்றப்) பாவிகளுக்குக் கடன்கொடுக்கிறார்களே.

௩௫ [17]ஆகையால் உங்கள் சத்துருக்களைச் சிநேகித்து நன்மை செய்து, கைம்மாறு எண்ணாமல் [18]கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்; அல்லாமலும் நன்றி அறியாதவர்கள்மேலும் பொல்லாதவர்கள்மேலும் தயவாயிருக்கிற [19]உன்னதமானவருக்குப் பிள்ளைகளாய் இருப்பீர்கள்.

௩௬ [20]ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

௩௭ [21]மற்றவர்களைக் குற்றவாளிகளென்று எண்ணிக்கொள்ளாதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று எண்ணிக்கொள்ளப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்

கி. பி. ௩௧.

1 மத். ௫. ௰௨. அப். ௫. ௪௧. கொலோ. ௧. ௨௪. யாக். ௧. ௨.
2 அப். ௭. ௫௧.
3 லூக். ௰௨. ௨௧.
4 ஆமோ. ௬. ௧. யாக். ௫. ௧.
5 மத். ௬. ௨, ௫, ௰௬. லூக். ௰௬. ௨௫.
6 ஏசா. ௬௫. ௰௩.
7 வாக். ௰௪. ௰௩.
8 யோவா. ௰௫. ௰௯. ௧ யோ. ௪. ௫.
9 ௨ மோ. ௨௩. ௪. வாக். ௨௫. ௨௧. மத். ௫. ௪௪. ௩௫ வச. ரோ. ௰௨. ௨௰.
10 லூக். ௨௩. ௩௪. அப். ௭. ௬௰.
11 மத். ௫. ௩௯.
12 ௧ கொரி. ௬. ௭.
13 ௫ மோ. ௰௫. ௭, ௮. வாக். ௨௧. ௨௬. மத். ௫. ௪௨.
14 மத். ௭. ௰௨.
15 மத். ௫. ௪௬.
16 மத். ௫. ௪௨.
17 ௨௭ வச.
18 சங். ௩௭. ௨௬. ௩௫ வச.
19 மத். ௫. ௪௫.
20 மத். ௫. ௪௮.
21 மத். ௭. ௧.

படி தீராதிருங்கள்; அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்கப்படாதிருப்பீர்கள், விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலையாக்கப்படுவீர்கள்.

௩௮ [1]கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து, உங்கள் [2]மடியிலே போடுவார்கள்; [3]நீங்கள் அளக்கிற அளவு எதுவோ, அதினாலே உங்களுக்குத் திரும்ப அளக்கப்படுமே என்றார்.

௩௯ ¶ பின்னும் அவர் உவமையாய் அவர்களுடனே சொன்னதாவது: [4]குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமா? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?

௪௰ [5]சீஷன் தன் போதகருக்கு மேற்பட்டவன் அல்ல; நிறைவாய்க் கற்றுக்கொண்டவனே தன் போதகனைப்போல இருப்பான்.*

௪௧ ¶ [6]நீ உன்னுடைய கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரனுடைய கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன?

௪௨ அல்லது நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல் இருக்க நீ உன் சகோதரனை நோக்கி, சகோதரனே நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடுகிறேன் இடம்கொடு என்று எப்படிச் சொல்லலாம்? வஞ்சகனே, [7]முன்பு நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரனுடைய கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடும் வகையைத் தெளிவாக அறிவாய்.

௪௩ [8]கெட்ட
மரம் நல்லம
கொடுக்கிற
அல்ல.

௪௪ [9]முட்
பழங்களைப் நெரிஞ்சிச்செடியிலே திராட்சத்தைப் † பறிக்கிறதுமில்லை, ஆகையால் எந்த மரமும் அதினதினுடைய கனியால் அறியப்படும்.

௪௫ [10]நல்லமனிதன் தன் இருதயத்திலுள்ள நற்பொக்கிஷத்தில் நலமானதையே எடுத்துக் காண்பிப்பான்; பொல்லாத மனிதனும் தன் இருதயத்திலுள்ள பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாததையே எடுத்துக் காண்பிப்பான், [11]இருதயத்தின் பரிபூரணத்தினால் அவனுடைய வாய் பேசுமே.

௪௬ ¶ [12]அன்றியும் நான் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்யாமலிருக்க, என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னத்துக்கு அழைக்கிறீர்கள்?

௪௭ [13]என்னிடத்தில் வந்து என் வசனங்களைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவனை உங்களுக்குக் காண்பிப்பேன்.

௪௮ அவன் எவனுக்கு ஒப்பாய் இருக்கிறான் என்றால், ஆழமாய்த் தோண்டிப் பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டின மனிதனுக்கே ஒப்பாய் இருக்கிறான்; பெருவெள்ளம் உண்டானபொழுது நீரோட்டம் அந்த வீட்டில் மோதியும், அது கல்மலையின் மேல் அஸ்திபாரம் போட்டிருந்தபடியால் அதை அசைக்கக்கூடாமல் போயிற்று.

௪௯ (என் வசனத்தைக்) கேட்டும் அதின்படி செய்யாதவன், அஸ்திபாரமில்லாமல் பூமியின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாய் இருக்கிறான்? வெள்ளம் அதில் மோதினவுடனே அது விழுந்து மிகவும் இடிந்துபோயிற்று என்றார்.

௭. அதிகாரம்.

௧ கிறிஸ்து ஒரு அஞ்ஞானியாயிருந்த சேனைக்காரனிடத்தில் யூதரின் விசுவாசத்திலும், அதிக விசுவாசத்தைக் கண்டது ௰ அவனுடைய வேலைக்காரனைக் குணமாக்கினது ௰௧ நாயீனூர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பினது ௰௯ யோவான் அனுப்பின தூதர்களுக்குத் தம்முடைய அற்புதங்களை ஒரு குறிப்பாகக் காட்டி, உத்தரவு

கி. பி ௩௧.

1 வாக ௰௯ ௰௭
2 சங ௭௯ ௰௨
3 மத் ௭ ௨
மாற் ௪ ௨௪
யாக் ௨ ௰௩
4 மத் ௰௫ ௰௪
5 மத் ௰ ௨௪
யோவா ௰௩
௰௬ ௰௫ ௨௰
* அல்லது தன் போதகனைப்போல நிறைவாயிருப்பான்
6 மத் ௭ ௩
7 வாக ௰௮ ௰௭
8 மத் ௭ ௰௬, ௰௭
9 மத் ௰௨ ௩௩
† கிரேக்கில் ஒரு திராட்சக்குலை
0 மத் ௰௨ ௩௫
11 மத் ௰௨ ௩௪
12 மல்கி ௧ ௬
மத் ௭ ௨௧
௨௫ ௰௧ லூக்
௰௩ ௨௫
13 மத் ௭ ௨௪

அருளிச்செயதது ௨௪ யோவானைக்குறித்துத் தம்முடைய தாறபரியத்தைச் சனஙகளுக்கு அறிவித்தது ௩௰ யோவானுடைய செயகைகளினலாவது, தம்முடைய செயகைகளினலாவது குணபபடாத யூதாகளைக் கடிநதுகொணடு, ௩௬ மகுதலேனாளாகிய மரியாளுககுச்செயத கிருபையினலே விசுவாசித்துக் குணபபடுகிற பாவிகளுககுப பாவஙகளை மனனிக்கிற பாவிகளுடைய சிநேகிதரென்று தமமைத திருஷடாந்தபபடுத்தினது

கி பி. ௩௧.

சனங்கள கேட்கததக்கதாக அவர் தம்முடைய வாக்கியஙகள யாவையும சொல்லி முடித்தபின்பு [1]கபபாநாகூம ஊருக்குப் போனார்

௨ அங்கே நூறு போர்ச்சேவகருக்குத் தலைவனுகிய ஒருவனுககுப பிரியமான வேலைககாரன் வியாதியினலே மரணத்திற்கு எதுவாய இருநதான்

௩ அநதத தலைவன இயேசுவைக குறிததுக் கேளவிபபட்டபொழுது, அவர் வநது தன வேலைககாரனைக குணமாககவேண்டும் என்று அவரை வேண்டிககொள்ளும படிக்கு, யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுபபினன்.

௪ அவர்கள் இயேசுவினிடத்தில் போய், அவரை மிகவும் வேண்டிககொணடு பினபு சொனனது: அவன் நம்முடைய தேசததாரில் அன்பாயிருநது, எஙகளுககாக ஒரு செபஆலயததையும கட்டினன்

௫ ஆகையால் உம்முடைய தயவுக்கு அவன் பாததிரனயிருககிறுன் என்ருாகள

௬ ¶ இயேசுவானவா அவாகளுடனே கூடச் சென்ருா; வீட்டுககுச் சமீபமாய்ப போனபொழுது அந்தத் தலைவன் சிநேகிதரை நோககி, (நீஙகள அவரிடததில போய்) ஆண்டவரே, நீா என வீட்டு வாசல்க்குள பிரவேசிககிறதற்கு நான் பாததிரன அல்ல

௭ அதினலே நானதானே உமமிடத்தில் வருகிறதற்கும் என்னை அபாததிரன என்று எண்ணினேன்; ஆகையால் நீா வருததபபடாதிரும்.

௮ அல்லாமலும நான அதிகாரததிற்குக கீழ்பபட்டவனயிருநதும், எனக்குக கீழிருககிற சேவகரில ஒருவனை* போவென்னப போகிறுன்; மற்றொருவனை வாவென்ன வருகிறுன; என வேலைககாரனை நோக்கி, இதைச செய்யென்னச் செய்கிறுன; ஆகையால் நீா ஒருவாாததைமாத்திரம சொன்னல், என் வேலைககாரன் சொஸதம அடைவான் என்று சொலலுஙகள என்று அனுபபினன்

௯ இயேசுவானவர் அதைக் கேட்டு அவனைககுறிதது ஆச்சரியபபட்டு திருமபிககொணடு, தமககுப பினசெல்லுகிற சனஙகளை நோக்கி, இப்படிபபட்ட விசுவாசததை நான் இஸ்ரவேலருககுள்ளும காணவிலலையென்று உஙகளுககுச சொல்லுகிறேன் என்ருா

௰ அனுபபபபட்டவாகள் திரும்ப வீட்டிற்கு வருகிறபொழுது, வியாதியாயிருநத வேலைககாரன ஆரோக்கியம அடைநதிருககிறதைக கண்டாாகள.

௰௧ மறுநாளிலே அவா நாயீன் என்னும ஊருககுப போனா, அவருடைய சீஷர் அநேகரும மற்ற அநேக சனஙகளும அவருடனே கூடபபோனாாகள்.

௰௨ அவா ஊரின வாசலுககுச சமீபமானபொழுது, ஒரு கைமபெண்ணினுடைய ஒரே குமாரன இறநதுபோய வெளியே கொணடுவரபபட்டான; ஊராரில் அநேக சனஙகளும அவளுடனேகூட வநதாாகள

௰௩ காததா அவளைபபாாதது அவள்மேல் உருககமாய் இரஙகி, நீ அழவேணடாம என்று சொல்லிககிட்டபபோகையில் பாடையைச† சுமககிறவாகள நின்ருாகள.

௰௪ உடனே அவர் அதைத தொட்டு, வாலிபனே, [2]எழுந்திரு என்று உனககுச சொல்லுகிறேன என்ருா்.

---

[1] மத ௮ ௫

* அலலது இநத மனிதனை

† அலலது ஈவப பெட்டியை

[2] லூக ௮ ௫௪ யோவா ௰௧ ௪௩ அப ௯ ௪௰ ரோ ௪ ௰௭

கி. பி ௩௧

௰௫ அப்பொழுது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான், அவனை அவர் தாய்க்கு ஒப்புக்கொடுத்தார்.

௰௬ [1]எல்லாரும் பயம் அடைந்து, [2]மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், [3]பராபரன் தம்முடைய சனங்களைச் சந்தித்துப் பார்த்தார் என்றும் சொல்லிப் பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௰௭ அல்லாமலும் இந்தச் சங்கதி யூதேயாநாடு முழுவதிலும் சுற்றியிருக்கிற தேசங்கள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

௰௮ ¶ இவை எல்லாவற்றையும் [4]யோவானுடைய சீஷர் அவனுக்கு அறிவித்தார்கள்.

௰௯ அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, நீங்கள் இயேசுவினிடத்தில் போய், வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரோ, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

௨௰ அந்தப்படி அவர்கள் அவரிடத்தில் போய், வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரோ, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேட்கும்படிக்கு யோவான்ஸ்நானன் எங்களை உம்மிடத்திற்கு அனுப்பினான் என்றார்கள்.

௨௧ அவ்வேளையிலே அவர் வியாதிகளையும் வேதனைகளையும் பொல்லாத ஆவிகளையுமுடை[illegible] அநேகம்பேரைக் குணமாக்கி, குருடர் அநேகருக்குப் பார்வையை அருளினார்.

௨௨ அப்பொ ளி
வா அவர்க ரா
[6]குருடர் ப கி
றார்கள், சப் றா
கள்; குஷ்ட கி
றார்கள்; செ ள்,
மரித்தோர் ள்,
[7]தரித்திரரு றி

விக்கப்பட்டு வருகின்றது; இப்படி நீங்கள் பார்க்கிறவைகளையும் கேட்கிறவைகளையும் யோவானுக்குப் போய் அறிவியுங்கள்.

௨௩ அல்லாமலும் என்னாலே இலச்சையடையாமல் இருக்கிறவன் பாக்கியவான் என்றார்.

௨௪ ¶ [8]யோவானுடைய தூதர்கள் போனபின்பு, அவர் யோவானைக்குறித்துச் சனங்களுடனே சொன்னது: காற்றினால் அசைக்கப்படுகிற நாணலையா நோக்கிப் பார்க்கும்படிக்கு வனாந்தரத்திற்குப் போனீர்கள்?

௨௫ அல்லது மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையா பார்க்கும்படிக்குப் புறப்பட்டீர்கள்? மகிமையான உடுப்போடும் செல்வத்தோடும் இருக்கிறவர்கள் அரசருடைய அரமனைகளில் இருக்கிறார்களே.

௨௬ அல்லது ஒரு தீர்க்கதரிசியையா பார்க்கும்படிக்குப் புறப்பட்டீர்கள்? ஒரு தீர்க்கதரிசியிலும் அதிகமானவனையே (பார்த்தீர்களென்று) உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௭ [9]இதோ நான் என்னுடைய தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன் நடந்து, உமக்காக மார்க்கத்தைத் திருத்துவான் என்று ஒருவனைக் குறித்து எழுதியிருக்கின்றதே, அவன் இவன்தான்.

௨௮ ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் இல்லை; ஆனாலும் பராபரனுடைய இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

௨௯ ¶ அன்றியும் (யோவானுடைய உபதேசத்தைக்) கேட்ட சகல சனங்களும் ஆயக்காரரும் அவனாலே [10]ஞானஸ்நானத்தைப்

1 லூக் ௧. ௬௫
2 லூக் ௨௪. ௰௯. யோவா ௪. ௰௯. ௬. ௰௪. ௯. ௰௭
3 லூக் ௧. ௬௮
4 மத் ௰௧. ௨
5 மத் ௰௧. ௩
6 ஏசா ௬௧. ௧
7 லூக் ௪. ௰௮
8 மத் ௰௧. ௭
9 மல்கி ௩. ௧
10 மத் ௩. ௫. லூக் ௩. ௧௨

கி. பி. ௩௧.

பெற்று, பராபரன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.

௩௰ பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமானவர்கள்மாத்திரம் அவனாலே ஞானஸ்நானத்தைப் பெறாமல், தங்களைக்குறித்துப்* பராபரனுடைய [1]ஆலோசனையைத் தள்ளினார்கள்.†

௩௧ ¶ அப்படியிருக்க, [2]இந்தத் தலைமுறையின் மனிதரை நான் யாருக்கு நிகர் சொல்லுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?

௩௨ சந்தையில் உளுக்கார்ந்து ஒருவரை ஒருவர் நோக்கி, உங்களுக்காக ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம் நீங்கள் அழவில்லை என்று எதிர் கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

௩௩ [3]எப்படியெனில், யோவான் ஸ்நானன் வந்து, அப்பம் புசியாமலும் திராட்சஇரசம் குடியாமலும் இருந்தான், அதினாலே அவன் பேய்கொண்டவன் என்கிறீர்கள்.

௩௪ மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம்பண்ணுகிறான்; அதினாலே இதோ, போசனப்பிரியன் மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்.

௩௫ [4]ஆனாலும் ஞானமானது தன் பிள்ளைகள் எல்லாராலும் நீதியாக்கப்படுகின்றது என்றார்.

௩௬ ¶ [5]பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போசனம்பண்ணும்படிக்கு, அவரை வேண்டிக்கொண்டான்; அந்தப்படி அவர் பரிசேயனுடைய வீட்டுக்குப் போய்ப் பந்தியிருந்தார்.

௩௭ ¶ அப்பொழுது பட்டணத்திலுள்ள பாவியாகிய ஒரு ஸ்திரி அவர் பரிசேயனுடைய வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதயிலம் கொண்டுவந்து,

௩௮ அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைக் கண்ணீரினாலே நனைத்துத் தன் தலையின் மயிராலே துடைத்து, அவருடைய பாதங்களை முத்தம் செய்து, பரிமளதயிலத்தைப் பூசினாள்.

௩௯ அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபொழுது, [6]இவர் தீர்க்கதரிசியானால் தம்மைத் தொடுகிற ஸ்திரி இன்னாள் என்றும், இப்படிப்பட்டவள் என்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டான்.

௪௰ ¶ இயேசுவானவர் அவனை நோக்கி, சீமோனே, உனக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன் என்றார், போதகரே, சொல்லும் என்றான்.

௪௧ (இயேசுவானவர் சொன்னது) கடன்காரன் ஒருவனுக்குக் கடனாளிகள் இரண்டுபேர் இருந்தார்கள்; அவர்களில் ஒருவன் ஐந்நூறு ‡ வெள்ளிக்காசும், மற்றொருவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியிருந்தது.

௪௨ அவர்கள் கொடுக்கிறதற்குத் திராணி இல்லாதவர்களானபொழுது, இருவருக்கும் கடனை மன்னித்தான்; ஆகையால் அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான் அதைச் சொல் என்றார்.

௪௩ [illegible]மோன் மாறுத்தரமாகச்சொன்னது: அதிகமான மன்னிப்பைப் பெற்றவன் எவனோ, அவனே என்று நினைக்கிறேன் என்றான்; அப்பொழுது அவர் நிதானமாய்த் தீர்த்தாய் என்று சொல்லி,

௪௪ பின்பு ஸ்திரியினிடத்திலே திரும்பிச் சீமோனுடனே சொன்னது: இந்த ஸ்திரியைப் பார்க்கிறாயா? நான் உனது வீட்டில் வந்தபொழுது, நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை; இவள்

---

* அல்லது தங்களுக்குள்ளே

[1] அப ௨௰ ௨௭

† அல்லது அழித்தார்கள்

[2] மத் ௰௧ ௰௬

[3] மத் ௩ ௪ மாற் ௧ ௬ லூக் ௧ ௰௫

[4] மத் ௰௧ ௰௯

[5] மத் ௨௬ ௬ மாற் ௰௪ ௩ யோவா ௰௧ ௨

[6] லூக் ௰௫ ௨

‡ மத் ௰௮ ௨௮

கண்ணீரினாலே என் கால்களை நனைத்து, தன் தலையின் மயிராலே துடைத்தாள்.

௪௫ நீ என்னை முத்தம்செய்யவில்லை; இவள் இங்கே பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தம்செய்தாள்.

௪௬ [1]நீ என் தலையில் எண்ணெயைப் பூசவில்லை, இவள் பரிமளதயிலத்தை என் பாதங்களில் பூசினாள்.

௪௭ [2]ஆனதால் இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டபடியினாலே, மிகவும் அன்பாயிருக்கிறாள் என்று உனக்குச் சொல்லுகிறேன்; அல்லாமலும் கொஞ்சம் மன்னிக்கப்பெற்றவன் எவனோ அவன் கொஞ்சம் அன்பாயிருக்கிறான் என்று சொல்லி,

௪௮ [3]பின்பு அவளை நோக்கி, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார்.

௪௯ அப்பொழுது பந்தியில்இருந்தவர்கள், [4]பாவங்களை மன்னிக்கிற இவன் யாவன் என்று சொல்லிக்கொண்டார்கள்.

௫௰ [5]அவர் (பின்னும்) ஸ்திரீயை நோக்கி, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

௮. அதிகாரம்.

௧ ஸ்திரீகள் கிறிஸ்துவுக்குத் தங்கள் ஆஸ்திகளாலே உதவிசெய்தது. ௪ கிறிஸ்து அப்போஸ்தலர்களோடே பலவிடங்களிலும் பிரசங்கம்பண்ணின [illegible] விதைக்கிறவனுடைய உவமையையும், ௰௬ விளக்கின் உவமையையும் எடுத்துக்காட்டி, ௨௧ தம்முடைய தாயும், சகோதரரும் இன்னாரென்று அறிவித்தது. ௨௨ காற்றை அதட்டி, ௨௬ ஒருலேகியோன் பிடித்திருந்த பசாசுகளைப் பன்றிகளின் கூட்டத்திலே துரத்தினது. ௩௭ அவர் கதரேனரால் விலக்கப்பட்டது. ௪௩ [illegible] ஒரு ஸ்திரீயைக் குணமாக்கின [illegible] பவனுடைய மகளை உ [illegible]

பின்பு அவ [illegible] பட்டணங்களி [illegible] தா றும் திரிந்து [illegible] இராசசியத்தை [illegible] ப பிரசங்கம்ப

௨ [6]பொல்ல [illegible] பாத ஆவிகளில் [illegible] ல் நின்றும் குணமாக்கப்பட்ட சில ஸ்திரீகளும் அவருடனே கூடப்போனார்கள்.

௩ [7]ஏழு பசாசுகளில் நின்றும் நீக்கப்பட்ட மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதேயின் காரியக்காரனாகிய கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம்செய்துகொண்டுவருகிற மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

௪ ¶ [8]பட்டணங்களிலிருந்து மிகுந்த சனங்கள் வந்து அவரிடத்தில் கூடியிருக்கிறபொழுது, அவர் உவமையாய்ச் சொன்னது:

௫ விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்து பின்பு மிதிக்கப்பட்டது; ஆகாசத்தின் பறவைகளும் வந்து அதைப் பட்சித்தன.

௬ சில விதை கற்பாறையின்மேல் விழுந்தது; அது முளைத்தபின் ஈரமில்லாததினாலே உலர்ந்துபோயிற்று.

௭ சில விதை முட்செடிகளுள்ள இடத்திலே விழுந்தது, முட்செடிகள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டன.

௮ சில விதை நல்ல நிலத்தில் விழுந்து முளைத்து நூறுமடங்காய்ப் பலன் தந்ததென்று சொல்லி, பின்பு கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூப்பிட்டார்.

௯ ¶ [9]அப்பொழுது அவருடைய சீஷர் அவரை நோக்கி, இந்த உவமையின் கருத்து என்னவென்று கேட்டார்கள்.

௰ அவர் சொன்னது: பராபரனுடைய இராசசியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு, நீங்கள் அருள் பெற்றவர்கள்; மற்றவர்கள் [10]கண்டும் காணாமலும், கேட்டும்

கி. பி. ௩௧

[1] சங். ௨௩. ௫.

[2] ௧ பேது. ௪. ௮.

[3] மத். ௯. ௨. மாற். ௨. ௫.

[4] மத். ௯. ௩. மாற். ௨. ௭.

[5] மத். ௯. ௨௨. மாற். ௫. ௩௪. ௰. ௫௨. ௮. ௪௮. ௰௭. ௧௯. ௧௮. ௪௨.

[6] மத். ௨௭. ௫௫, ௫௬.

[7] மாற். ௰௬. ௯.

[8] மத். ௰௩. ௨. மாற். ௪. ௧.

[9] மத். ௰௩. ௰. மாற். ௪. ௰.

[10] ஏசா. ௬. ௯. மாற். ௪. ௰௨.

கி. பி. ௩௨.

உணராமலும் இருக்கத்தக்கதாக (அவைகள்) உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லப்படுகின்றன.

௰௧ [1]அந்த உவமையின் கருத்தாவது: விதையானது பராபரனுடைய வசனமே.

௰௨ (விதை விழுந்த) வழியானது, (அந்த வசனத்தைக்) கேட்கிறபொழுது விசுவாசியாமலும் இரட்சிக்கப்படாமலும் இருக்கும்படிக்குத் தங்கள் இருதயத்திலிருந்து அவ்வசனம் பசாசினாலே எடுக்கப்படுகிறவர்களேயாம்.

௰௩ (விதை விழுந்த) கற்பாறையானது, (அவ்வசனத்தைக்) கேட்கிறபொழுது, சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு பின்பு அது தங்களுக்குள்ளே வேர்கொள்ளும்படி செய்யாமல் சிலகாலம் (மாத்திரம்) விசுவாசித்துச் சோதனைகாலத்திலே வழுவிப்போகிறவர்களேயாம்.

௰௪ (விதை விழுந்த) முட்செடிகளுள்ள நிலமானது தேவவசனத்தைக் கேட்கிறவர்களாயிருந்தும், நிறைந்த பலனைக் கொடாதபடிக்குக் கவலைகளும் ஐசுவரியமும் சீவனத்தின் செல்வமும் உள்ளவர்களாய் நடந்து, அவைகளினாலே அதை நெருக்கிப்போடுகிறவர்களேயாம்.

௰௫ (விதை விழுந்த) நல்லநிலமானது, அவ்வசனத்தைக் கேட்டு, நன்றும் உண்மையுமான இருதயத்திலே அதைக் காத்துக்கொண்டு, இடைவிடாமல் பலன்கொடுக்கிறவர்களேயாம்.

௰௬ ¶ [2]ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவும் கட்டிலின் கீழே வைக்கவும் மாட்டான்; உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படிக்கு அதைத் தண்டின்மேலே வைப்பான்.

௰௭ [3]அந்தப்படி வெளியரங்கமாகாத அந்தரங்கமும் இல்லை; அறியப்பட்டு வெளிக்கு வாராத மறைபொருளும் இல்லை.

௰௮ ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; என்னத்தினாலெனில், [4]உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவன் தனக்கு உண்டென்று நினைக்கிற* பொருளும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

௰௯ ¶ [5]அப்பொழுது அவருடைய தாயும் சகோதரரும் அவரிடத்திற்குப் போகையில், சனக்கூட்டத்தின் நிமித்தம் அவர்கள் அவரைச் சேருகிறதற்கு இடமில்லை.

௨௰ அப்பொழுது சிலர் அவரை நோக்கி, உம்முடைய தாயும் சகோதரரும் உம்மைப் பார்க்கவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

௨௰௧ அவர்களுக்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: பராபரனுடைய வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களே, என் தாயுமாய் என் சகோதரருமாய் இருக்கிறார்கள் என்றார்.

௨௰௨ ¶ [6]ஒருநாளிலே அவர் தம்முடைய சீஷரோடுகூட ஒரு படவில் ஏறி அவர்களை நோக்கி, கடலின் அக்கரைக்குப் போகக்கடவோம் என்றார்; அந்தப்படி கரையைவிட்டுப் போனார்கள்.

௨௰௩ அவர்கள் படவை நடத்துகையில், அவர் நித்திரைபண்ணினார்; அப்பொழுது படவு சலத்தினாலே நிரப்பப்படவும், அவர்களுக்கு மோசம் வரவும்தக்கதாகக் கடலில் சுழல்காற்று உண்டாயிற்று.

௨௰௪ உடனே அவர்கள் சேர்ந்து, ஆண்டவரே, ஆண்டவரே, நாம் கெட்டுப்போகிறோமே என்று (கூப்பிட்டு) அவரை எழுப்பினார்கள்; அப்பொழுது அவர் எழுந்து, காற்றையும் சலத்தின் உக்கிரத்தையும் அதட்டினார்; உடனே

---

[1] மத் ௰௩ ௰௮ மாற் ௪ ௰௪

[2] மத் ௫ ௰௫ மாற் ௪ ௨௧ லூக் ௰௧ ௩௩

[3] மத் ௰ ௨௬ லூக் ௰௨ ௨

[4] மத் ௰௩ ௰௨ ௨௫ ௨௯ லூக் ௰௯ ௨௬

* அல்லது காணப்படுகிற

[5] மத் ௰௨ ௪௬ மாற் ௩ ௩௧

[6] மத் ௮ ௨௩ மாற் ௪ ௩௫

அவைகள் நின்றுபோக அமைதல் உண்டாயிற்று.

௨௫ பின்பு அவர் அவர்களை நோக்கி, உங்கள் விசுவாசம் எங்கே என்றார்; அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு, இவர் எப்படிப்பட்டவரோ, காற்றுகளுக்கும் சலத்திற்கும் கட்டளை இடுகிறாரே, அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௨௬ ¶ [1]பின்பு கலிலேயா நாட்டுக்கு எதிரான கதரேனர் தேசத்திலே சேர்ந்தார்கள்.

௨௭ அவர் அக்கரையில் இறங்கினபொழுது, அநேக நாளாய்ப் பசாசுகள் பிடித்தவனுமாய், வஸ்திரம் தரியாதவனுமாய், வீட்டிலே தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அப்பட்டணத்து மனிதன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான்; அநேக காலமாய் அசுத்த ஆவி அவனை அலைக்கழித்துவந்தது.

௨௮ அல்லாமலும் அவன் சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டப்பட்டுக் காவல்பண்ணப்பட்டிருந்தும், அவன் விலங்குகளைத் தறித்துப்போட்டு, பசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப்பட்டான்; ஆதலால் இயேசுவானவர் அந்த ஆவி அவனைவிட்டுப் போகும்படிக்குக் கட்டளையிட்டார்.

௨௯ ஆனபடியினாலே அவன் இயேசுவானவரைக் கண்டபொழுது, கூக்குரலிட்டு அவருக்கு முன்பாக விழுந்து, இயேசுவே, உன்னதமான பராபரனுடைய குமாரனே, எனக்[illegible]ன? என்னை [illegible]டிக்கு உம்மை [illegible]ளுகிறேன் [illegible]

௩௰ அப்பொ[illegible]
வா அவனை [illegible]
என்னவென் [illegible]
கு அவன் இ[illegible]

சொன்னான், அநேகம் பசாசுகள் அவனுக்குள் புகுந்தபடியால் அந்தப் பேர் அவனுக்கு உண்டாயிற்று.

௩௧ அல்லாமலும் [2]தங்களைப் பாதாளத்திற்குப் போகும்படி கட்டளையிடாதபடிக்கு, அவைகள் அவரை வேண்டிக்கொண்டன.

௩௨ ¶ அப்பொழுது அவ்விடத்திலே அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தன; அவைகள் அந்தப் பன்றிகளுக்குள் பிரவேசிக்கும்படி, உத்தரவு கொடுக்கவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டன; அப்படியே அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

௩௩ உடனே பசாசுகள் அந்த மனிதனைவிட்டு நீங்கிப் பன்றிகளுக்குள் புகுந்தன; அப்பொழுது அந்தப் பன்றிக்கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்துபோயிற்று.

௩௪ அவைகளை மேய்த்தவர்கள் அதைக் கண்டு ஓடிப்போய், பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

௩௫ அப்படி நடந்ததைச் சனங்கள் பார்க்கும்படிக்குப் புறப்பட்டு இயேசுவினிடத்தில் போய், பசாசுகள் விட்டுப்போன மனிதன் இயேசுவினுடைய பாதங்கள் அருகே வஸ்திரம் தரித்தவனாய் உட்கார்ந்து, புத்தி அடைந்திருக்கிறதைக் கண்டு, பயப்பட்டார்கள்.

௩௬ பசாசுகள் பிடித்திருந்தவன் இரட்சிக்கப்பட்ட வகையைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

௩௭ ¶ [3]அப்பொழுது கதரேனருடைய சுற்றுத் தேசத்தின் திரளான சனங்கள் எல்லாரும் மிகுந்த பயம் அடைந்தவர்களானபடியினாலே, [4]தங்களை விட்டுப்போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி அவர் படவில் ஏறித் திரும்பினார்.

---

[1] மத். ௮: ௨௮. மாற். ௫: ௧.

* இம்லேகியோன் என்பதற்கு ஏறக்குறைய நாலாயிரம்பேரென்று அர்த்தமாம்.

[2] வெளி. ௨௰: ௩.

[3] மத். ௮: ௩௪.

[4] [illegible] ௰௬: ௩௯.

கி பி ௩௨.

௩௮ [1]பசாசுகள் விட்டுப்போன மனிதன் அவருடனே கூடப்போயிருக்கும்படிக்கு, அவரிடத்தில் உத்தரவு கேட்டுக்கொண்டான்.

௩௯ இயேசுவானவர் அவனை நோக்கி, நீ உன் வீட்டிற்குத் திரும்பிப்போய், பராபரன் உனக்குச் செய்த விசேஷங்களை அறிவிப்பாயாக என்று சொல்லி அனுப்பிவிட்டார்; அந்தப்படி அவன் போய், தனக்கு இயேசுவானவர் செய்த விசேஷங்களைப் பட்டணத்தில் எங்கும் பிரசித்தம்பண்ணினான்.

௪௰ ¶ பின்பு இயேசுவானவர் திரும்பி வந்தபொழுது, அவர் வரக் காத்துக்கொண்டிருந்த சனங்கள் எல்லாரும் அவரை உபசாரம் செய்தார்கள்.

௪௧ [2]அப்பொழுது செபஆலயத் தலைவனான யாவீரு என்பவன் வந்து, இயேசுவின் பாதங்களிடத்தில் விழுந்து, தனக்குண்டான பன்னிரண்டு வயதுள்ள ஒரே குமாரத்தி மரணத்துக்கு எதுவாயிருந்தபடியினாலே,

௪௨ தன் வீட்டிலே வரும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அவனுடனே கூடப் போகையில், சனங்கள் அவரை நெருக்கினார்கள்.

௪௩ ¶ [3]அப்பொழுது பன்னிரண்டு வருஷம் பெரும்பாடுபட்டு, தன் பொருள்கள் யாவையும் பரிகாரிகளுக்குச் செலவழித்து, ஒருவராலும் சுகம் அடையாத ஒரு ஸ்திரி, (அவருக்கு) பின்னாலே சேர்ந்து,

௪௪ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய இரத்தஊறல் நின்றுபோயிற்று.

௪௫ அப்பொழுது இயேசுவானவர், என்னைத் தொட்டவர் யார் என்றார்; நாங்கள் அறியோம் என்று எல்லாரும் சொன்னபொழுது, பேதுருவும் அவனோடிருந்தவர்களும் அவரை நோக்கி, ஐயரே, சனங்கள் உம்மை நெருக்கி உரசிக்கொண்டிருக்கிறார்களே; அப்படியிருக்க, என்னைத் தொட்டவர் யாரென்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள்.

௪௬ [4]இயேசுவானவர் சொன்னது: என்னிலிருந்து பலம் புறப்பட்டதை அறிந்திருக்கிறேன், ஆகையால் ஒருவர் என்னைத் தொட்டது உண்டென்றார்.

௪௭ அப்பொழுது ஸ்திரியானவள் மறைந்திருக்கக்கூடாதென்று கண்டு, நடுங்கி வந்து, அவர் முன்பாக வணக்கமாய் விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும், உடனே குணம் அடைந்ததையும் எல்லாச் சனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

௪௮ அவர் அவளுடனே சொன்னது: மகளே சந்தோஷமாயிரு, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

௪௯ ¶ [5]அவர் அப்படிப் பேசிக்கொள்ளுகையில், செபஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனை நோக்கி, உம்முடைய குமாரத்தி இறந்துபோனாள், போதகரை (இனி) வருத்தப்படுத்தாதிரும் என்றான்

௫௰ இயேசுவானவர் அதைக் கேட்டு, யாவீரு என்பவனை நோக்கி, நீர் பயப்படாமல் விசுவாசமாயிரும், அப்பொழுது இரட்சிக்கப்படுவாள் என்றார்

௫௧ பின்பு அவர் வீட்டிலே சேர்ந்தபொழுது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணினுடைய தகப்பனையும் தாயையும் தவிர, மற்றொருவரும் உள்ளே பிரவேசிக்கிறதற்கு இடம் கொடாமல்,

௫௨ எல்லாரும் அவளைக்குறித்து அழுது துக்கங்கொண்டாடுகிறதை (கண்டு) நீங்கள் அழவேண்டாம்; அவள் இறந்துபோகவில்

[1] மாற் ௫ ௰௮
[2] மத் ௯ ௰௮ மாற் ௫ ௨௨
[3] மத் ௯ ௨௰
[4] மாற் ௫ ௩௰ லூக் ௬ ௰௯
[5] மாற் ௫ ௩௫

லை, [1]நிததிரைபண்ணுகிறாள் என்றார்.

௫௩ அவள் இறந்துபோனாள் என்று அவர்கள அறிநது, அவரைககுறிதது நகைததாாகள்

௫௪ பினபு அவர் எல்லாரையும் வெளியே போகபபண்ணி, அவளுடைய கையைப பிடித்து, [2]பிள்ளையே, எழுநதிரு என்று கூபபிட்டார்.

௫௫ உடனே அவளுடைய ஆவி திரும்பி வநதபடியால் அவள் எழுநதிருநதாள, அவளுககுச் சாபபாடு கொடுக்கும்படிக்குக் கட்டளையிட்டாா.

௫௬ அவளுடைய தாய்தகபபன்மாா பிரமிததார்கள்; [3]அபபொழுது நடநததை ஒருவருககும் சொல்லாதபடிககு அவர்களுக்குக கட்டளையிட்டாா.

௯. அதிகாரம்.

௧ கிறிஸது தமமுடைய அபபோஸதலாகளை அறபுதஙகளை செயயவும பிரசஙகிக்கவும அனுபபினது ௭ அவரை ஏரோதே காண விருமபினது ௰௭ அவா ஐயாயிரமபேரைப போஷிததது ௰௮ உலகததாா தமமைககுறிததுஎவவிதமாய நினைககிறாகளென்று கேட்டு ௨௨ தமமுடைய பாடுகளை முனனறிவிததது ௨௩ தமமுடைய பொறுமையை மாதிரியாககக காணபிததது ௨௮ அவா மறுரூபபபட்டதா ௩௭ சநதிரரோகியைக் குணமாக்கினது ௪௩ தமமுடைய பாடுகளை மறுபடியும சீஷாகளுககு முனனறிவிததது ௪௬ தாழமையாய நடநது இககுரோதமகொளளாமல யாவரோடும சாநதமாயிருக்க அவாகளைப படிபபிததது ௫௭ தஙகள சுய இஷடபபடி ஒபபுவாராலும், அநேகா கிறிஸதுவைப பினசெலலுவாாகள எனபது

[4]பின்பு அவர் தமமுடைய பன்னிரண்டு சீஷரைக் கூடி வரவழைதது, எநதப் பசாசுகளையும் வியாதிகளையும நீக்குவதற்கு வல்லமையையும அதிகாரத்தையும் அவாகளுககுக கொடுதது,

௨ [5]பராபரனு யத்
தைககுறித ப
டிக்கும, பிணி லெ
தமாககுமபடி அ
னுபப,

௩ [6]அவர்க :
வழிககுத ப
யையாவது, ,
காசையாவது, எடுத்துக்கொள்ளாதிருஙகள; இரணடு அஙகிகளையும கொணடுபோகவேண்டாம்

௪ [7]நீஙகள பிரவேசிக்கும் வீடு எதுவோ, அதிலே நீஙகள் புறபபடுகிறவரைககும் தஙகுஙகள்

௫ [8]உஙகளை ஏற்றுக்கொள்ளாதவாகள எவர்களோ, அவர்களுடைய பட்டணத்தைவிட்டுப் புறபபடுகிறபொழுது, அவாகளுககு விரோதமான சாட்சிககாக [9]உஙகள காலகளின் தூளை உதறிபபோடுஙகள என்று சொல்லி அனுப்பினார்.

௬ [10]அந்தபபடி அவாகள புறப்பட்டுக கிராமஙகளதோறும் போயததிரிநது சுவிசேஷததைப பிரசஙகிதது, (பிணியாளிகளை) குணமாககினாாகள.

௭ ¶ [11]அககாலததிலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே அவராலே செயயபபட்ட யாவையும் கேளவிபபட்டு, சிலர் யோவான் மரிததோரிலிருநது எழுநதான் என்றும,

௮ சிலா எலியா தோன்றினார் என்றும், சிலர் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர் அடைநது எழுநதான என்றும் சொன்னபடியினாலே கலக்கம் அடைந்து,

௯ யோவானை நான் சிரசசேதம் பணணினேன்; இபபடிப்பட்டவைகளைச செய்ய நான் கேள்விபபடுகிற இவன யாவன் என்று ஏரோதே சொலலி, அவரைப [12]பார்ககக விரும்பினான்.

௰ ¶ [13]அபபோஸதலர்கள் திரும்பிவநது, தாஙகள செய்த யாவையும் அவருககு விவரித்துச் சொன்னார்கள்; [14]அபபொழுது அவர் அவாகளைக கூட்டிககொண்டு தனிததிருககும்படிக்குப பெத்சாயிதா என்னும பட்டணத்தைச் சேர்ந்த வனாநதரததிறகுப போனார்.

௰௧ சனங்கள் அதை அறிந்து, அவருக்குப்பின் போனார்கள்; அவர்களை அவர் அங்கிகரிததுக்கொ

கி. பி. ௩௨.

1 யோவா ௰௧. ௰௧, ௰௩
2 லூக் ௭ ௰௪ யோவா ௰௧ ௪௩
3 மத் ௮ ௪ ௯ ௩௰ மாற் ௫ ௪௩
4 மத் ௰ ௧ மாற் ௩ ௰௩ ௬ ௭
5 மத் ௰ ௭, ௮ மாற் ௬ ௰௨ லூக் ௰ ௧, ௯
6 மத் ௰ ௯ மாற் ௬ ௮ லூக் ௰ ௪ ௨௨ ௩௫
7 மத் ௰௧ மாற் ௬ ௰
8 மத் ௰ ௰௪
9 அப் ௰௩ ௫௧
10 மாற் ௬, ௰௨
11 மத் ௰௪ ௧ மாற் ௬ ௰௪.
12 லூக் ௨௩ ௮
13 மாற் ௬ ௩௰
14 மத் ௰௪ ௰௩

கி. பி. ௩௨

ண்டு, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தம் அடையவேண்டும் என்றிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.

௰௨ ¶ [1]சாயந்தரத்திலே பன்னிருவரும் சேர்ந்து அவரை நோக்கி, இங்கே வனாந்தரமான இடத்திலே இருக்கிறோம்; ஆகையால் சனங்கள் சுற்றியிருக்கிற பட்டணங்களுக்கும் ஊர்களுக்கும் போய் விடாயதீர்ந்து போசனம் சம்பாதித்துக்கொள்ளும்படிக்கு அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.

௰௩ அதற்கு அவர், நீங்களே அவர்களுக்குச் சாப்பாடு கொடுங்கள் என்றார்; ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தபடியினாலே,

௰௪ அவர்கள் சொன்னது: ஐந்து அப்பமும் இரண்டு மீனும்மாத்திரம் எங்களிடத்தில் உண்டு; ஆகையால் நாங்கள் போய், இந்தச் சனங்கள் எல்லாருக்காகவும் போசனத்திற்கு ஏற்றவைகளை வாங்கிக்கொள்ளாவிட்டால், (திருத்தி) உண்டாகமாட்டாதே) என்றார்கள்

௰௫ அவர் தம்முடைய சீஷருடனே சொன்னது: இவர்கள் ஐம்பது ஐம்பதாகப் பந்தியில் உளுக்காரும்படி செய்யுங்கள் என்றார். அவர்கள் அப்படியே செய்தார்கள், எல்லாரும் உளுக்கார்ந்தார்கள்.

௰௬ அப்பொழுது அவர் அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்துப்பிட்டு, சனங்களின் முன் வைக்கும்படிக்குச் சீஷருக்குக் கொடுத்தார்.

௰௭ எல்லாரும் புசித்துத் திருத்தி அடைந்தார்கள்; அல்லாமலும் பன்னிரண்டு கூடை நிறையச் சேஷமானவைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன

௰௮ ¶ [2]பின்பு ஒருநாள் அவர் தம்முடைய சீஷர்கூட இருக்கத் தனித்துச் செபம்பண்ணினபொழுது, அவர் அவர்களை நோக்கி, என்னைக்குறித்துச் சனங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றுகேட்டார்.

௰௯ அவர்கள் மாறுத்தரமாகச் சொன்னது: [3]சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர் அடைந்து எழுந்தான் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

௨௰ அவர் சொன்னது: நீங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார், அதற்குப் பேதுரு, [4]நீர் பராபரனுடைய கிறிஸ்து என்றான்.

௨௧ [5]அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு, அவர்களுக்குக் கெட்டியாய்க் கட்டளையிட்டார்.

௨௨ அன்றியும் அவர் சொன்னது: [6]மனிதனுடைய குமாரன் அநேகம் பாடுபடவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் தள்ளப்படவும், கொல்லப்படவும், பின்பு மூன்றாம்நாளிலே உயிரோடெழுந்திருக்கவும் வேண்டும் என்றார்

௨௩ ¶ [7]அல்லாமலும் அவர் எல்லாருடனேயும் சொன்னது: ஒருவன் எனக்குப் பின்செல்ல மனதாயிருந்தால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவைமரத்தைத் தினந்தோறும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்

௨௪ என்னத்தினாலென்னில், தன் சீவனை இரட்சித்துக்கொள்ள விரும்புகிறவன், அதை இழந்துபோவான், என்நிமித்தம் தன் சீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்வான்

௨௫ [8]அன்றியும் மனிதனானவன் உலகம் யாவையும் சம்பாதித்துக்கொண்டு தன்னைத்தான் அழித்தால், அல்லது சேதப்படுத்தினால்,

[1] மத். ௰௪. ௰௫. மாற். ௬. ௩௫. யோவா. ௬. ௫.

[2] மத். ௰௬. ௰௩. மாற். ௮. ௨௭.

[3] மத். ௰௪. ௨. [illegible]

[4] மத். ௰௬. ௰௬. யோவா. ௬. ௬௯.

[5] மத். ௰௬. ௨௰.

[6] மத். ௰௬. ௨௧. ௰௭. ௨௨.

[7] மத். ௰. ௩௮. ௰௬. ௨௪. மாற். ௮. ௩௪. லூக். ௰௪. ௨௭.

[8] மத். ௰௬. ௨௬. மாற். ௮. ௩௬.

அவனுக்கு என்ன லாபம் உண்டாயிருக்கும்?

௨௬ [1]அன்றியும் என்னைக்குறித்தும் என் வசனங்களைக்குறித்தும் வெட்கப்படுகிறவன் எவனோ அவனைக்குறித்து மனிதனுடைய குமாரன், தம்முடைய மகிமையோடும் பிதாவானவருடைய மகிமையோடும் பரிசுத்த தூதருடைய மகிமையோடும் வரும்பொழுது, வெட்கம் அடைவான்.

௨௭ [2]இங்கே நிற்கிறவர்களில் சிலர் பராபரனுடைய ஆளுகையைக் காணுமளவும், மரணத்தை அடைவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௮ ¶ [3]இந்த வசனங்களை * அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளானபொழுது, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு, செபம்பண்ணும்படிக்கு ஒரு மலையில் ஏறினார்.

௨௯ அவர் செபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று; அல்லாமலும் அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசங்கொடுத்தது.

௩௰ அன்றியும் மோசே எலியா இவ்விரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே பேசி,

௩௧ அவர் எருசலேமிலே நிறைவேற்றும் மரணத்தைக்குறித்துச் சம்பாஷணை பண்ணிக்கொண்டார்கள்.

௩௨ பேதுரு
தவர்களும் க
டைந்து [4]விழி
ழுது, அவரு
அவரிடத்தில
பேரையும் க

௩௩ அன்றி
அவரைவிட்டு
யில், பேதுரு
ஐயரே, நாம்

நல்லது, நாங்கள் உமக்கும் மோசேக்கும் எலியாவுக்கும் ஒரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டாக்குவோம் என்று தகுதியான யோசனைபண்ணாமல் சொன்னான்.

௩௪ அப்படி அவன் சொல்லுகிறபொழுது, ஒரு மேகம் வந்து அவர்கள்மேலே நிழலிட்டது; அவ்விருவரும் மேகத்திற்குள் பிரவேசிக்கையில் சீஷர் பயந்தார்கள்.

௩௫ அப்பொழுது, இவர் (எனக்கு) [5]அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், [6]இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

௩௬ அந்தச் சத்தம் உண்டாகுகையில் இயேசுவானவர்மாத்திரம் இருந்தார்; [7]பின்பு அவர்கள் கண்டவைகளில் ஒன்றையும் அக்காலத்திலே ஒருவருக்கும் அறிவியாமல் மவுனமாய் இருந்தார்கள்.

௩௭ ¶ [8]மறுநாளிலே அவர்கள் மலையிலிருந்து இறங்கினபொழுது, அநேக சனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

௩௮ அல்லாமலும் அவர்களில் ஒருவன் கூப்பிட்டுச் சொன்னது: போதகரே, நீர் என் மகனை நோக்கிப் பார்க்கும்படிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்; அவன் எனக்கு ஒரே பிள்ளையானவன்.

௩௯ ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது, உடனே அலறுகிறான்; அவனை நுரைதள்ள அலைக்கழித்து அவனைக் கசக்கினபின்பும், அவனைவிட்டு நீங்குகிறது அரிதாய் இருக்கின்றது.

௪௰ அதைத் துரத்தும்படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன்; அவர்களுக்கு அப்படிச் செய்யத் திராணியில்லை என்றான்.

௪௧ இயேசுவானவர் மாறுத்தரமாகச் சொன்னது: விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் உங்களிடத்திலிருந்து

---

[1] மத் ௰௬ ௨௭. மாற் ௮ ௩௮. ௨ தீமோ ௨ ௰௨.

[2] மத் ௰௬ ௨௮. மாற் ௯ ௧.

[3] மத் ௰௭ ௧. மாற் ௯ ௨.

* அல்லது காரியங்களை

[4] தானி ௮ ௰௮.

[5] மத் ௩ ௰௭.

[6] அப் ௩ ௨௨.

[7] மத் ௰௭ ௯.

[8] மத் ௰௭ ௰௪. மாற் ௯ ௰௪.

உங்களில் பொறுமையாயிருப்பேன் என்று சொல்லிப் பின்பு உன் மகனை இங்கே கொண்டுவா என்றார்.

௪௨ அவன் வருகிறபொழுது, பசாசு அவனைத் தொறுக்கி அலக்கழித்தது; இயேசுவானவர் அந்த அசுத்த ஆவியை அதட்டிப் பிள்ளையைக் குணமாக்கி, அவனைத் தகப்பனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

௪௩ (அதைக் கண்ட) எல்லாரும் பராபரனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பிரமித்தார்கள்; இயேசுவானவர்செய்த எல்லாவற்றையுங் குறித்து யாவரும் ஆச்சரியப்படுகிறபொழுது, அவர் தம்முடைய சீஷரை நோக்கிச் சொன்னது:

௪௪ [1]மனிதனுடைய குமாரன் மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவான்; இந்த வசனங்களை நீங்கள் நன்றாய்க் கேட்டுக் காத்துக்கொள்ளக்கடவீர்கள் என்றார்.

௪௫ [2]அவர்கள் அந்த வசனங்களின் கருத்தை அறியாமல் இருந்தார்கள்; அது அவர்களுக்குத் தோன்றாதபடிக்கு மறைபொருளாயிருந்தது; அல்லாமலும் அவர்கள் அந்த வசனங்களைக்குறித்து அவரிடத்தில் விசாரித்துக்கொள்ளுகிறதற்குப் பயப்பட்டார்கள்.

௪௬ ¶ [3]ஒருநாள் அவர்கள் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று யோசனை பண்ணிக்கொண்டார்கள்.

௪௭ அவர்களுடைய இருதயத்தின் யோசனையை இயேசுவானவர் அறிந்து ஒரு பிள்ளையை எடுத்து, அதைத் தமக்கு அருகே நிறுத்தி,

௪௮ [4]இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தின்நிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்; [5]ஆதலால் உங்கள் எல்லாரிலும் சிறியவனாயிருக்கிறவனே பெரியவனாய் இருப்பான் என்றார்.

௪௯ ¶ [6]அப்பொழுது யோவான் (அவரை நோக்கி,) ஐயரே, உம்முடைய நாமத்தினாலே பசாசுகளைத் துரத்துகிற ஒருவனை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட (உமக்குப்) பின்செல்லாதபடியினாலே அவனுக்குத் தடைபண்ணினோம் என்றான்.

௫௰ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நமக்கு [7]விரோதமாயிராதவன் நம்முடைய பங்கில் இருக்கிறான்; ஆகையால் நீங்கள் அவனுக்குத் தடைபண்ணவேண்டாம் என்றார்.

௫௧ ¶ [8]அவர் எடுக்கப்படும்படிக்குக் காலம் சமீபமானபொழுது, அவர் எருசலேமுக்குப் போகக் கண்ணோட்டமாகித் தமக்குமுன்பாகத் தூதர்களை அனுப்பினார்.

௫௨ அவர்கள் போய் அவருக்காக இடமாயத்தனம்பண்ணும்படிக்கு, சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.

௫௩ [9]அவர் எருசலேம் நகரத்திற்குப் போகிறவரானபடியினாலே, அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

௫௪ அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டு, ஆண்டவரே, [10]எலியாவானவர் செய்ததுபோல, நாங்கள் இவர்களை அழிக்கும்படிக்கு வானத்திலிருந்து அக்கினி வரும்படி சொல்லச் சித்தமாயிருக்கிறீரா என்றார்கள்.

௫௫ அப்பொழுது அவர் திரும்பி அவர்களை அதட்டி, நீங்கள் இன்ன ஆவியை உடையவர்கள் என்று அறியீர்கள்.

௫௬ [11]மனிதனுடைய குமாரன் மனிதருடைய சீவனை அழிக்கும்படிக்கல்ல, இரட்சிக்கும்படிக்கு வந்தானே என்றார்.

௫௭ ¶ [12]பின்பு வேறொரு கிராமத்திற்குப் போனார்கள்; அவர்கள் வழியிலே போகையில், ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே,

கி. பி. ௩௨.

1 மத் ௰௭ ௨௨.
2 மாற் ௯ ௩௨. லூக் ௨ ௫௰ ௰௮ ௩௪
3 மத் ௰௮ ௧ மாற ௯ ௩௪
4 மத ௰௪ ௰௫ ௰௮ ௫ மாற. ௯ ௩௭ யோவா ௰௨ ௪௪ ௰௩ ௨௰
5 மத் ௨௩ ௰௧, ௰௨
6 மாற ௯ ௩௮ ௪ மோ ௰௧ ௨௮
7 மத் ௰௨ ௩௰ லூக ௰௧ ௨௩
8 மாற ௰௬ ௰௯ அப ௧ ௨
9 யோவா ௪ ௪,௯
10 ௨ இரா ௧ ௰, ௰௨
11 யோவா ௩ ௰௭ ௰௨ ௪௭
12 மத ௮ ௰௯

நீர் போகும் இடம் எங்கேயோ அங்கே உமக்குப் பின்செல்லுவேன் என்றான்.

௫௮ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்தின் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனிதனுடைய குமாரனோ, தன் தலையைச் சாய்க்கிறதற்கு இடம் இல்லாதவனாயிருக்கிறான் என்றார்.

௫௯ [1]வேறொருவனை அவர் நோக்கி, எனக்குப் பின்சென்றுவா என்றார்; (அதற்கு) அவன் சொன்னது: ஆண்டவரே, முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ணும்படிக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

௬௰ அதற்கு இயேசுவானவர் சொன்னது: மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும், நீ புறப்பட்டுப் பராபரனுடைய ஆளுகையைப் பிரசித்தம்பண் என்றார்.

௬௧ பின்பு வேறொருவன் வந்து, [2]உமக்குப் பின்செல்லுவேன், அதற்கு முன்பு நான் போய் என் வீட்டில் இருக்கிறவர்களிடத்தில் அனுப்பிக்கொண்டு வரும்படி உத்தரவு கொடும் என்றான்.

௬௨ அவனுடனே இயேசுவானவர் சொன்னது; கலப்பையைப் பிடித்துக்கொண்டு பின்னாகப் பார்க்கிற எவனும், பராபரனுடைய இராச்சியத்திற்குத் தகுதியானவன் அல்ல என்றார்

௰. அதிகாரம்.

௧ கிறிஸ்து எழுபது சீஷர்களை அற்புதங்களை செய்யவும், பிரசங்கிக்கவும் அனுப்பினது ௱ள அவர்
கள தாழ்மையாயிரு
இன்னதின்னதில்
என்றும் புத்திசொ
தாவின் இருபைககா
ணி ௨௧ தமமுடை
பாராட்டினது ௨
வழியையும், உன
உனக்கிதத்தவ
மாத்தாளைக் கடி
கோதரி மரியாளைப

பின்பு கர்த்தா

ளை நியமித்து, தாம் போகச் சித்தமான பட்டணம் ஊர்கள் யாவுக்கும் அவர்களை [3]இருவர் இருவராகத் தமக்கு முன்னே அனுப்புகையில் அவர்களுடனே சொன்னதாவது: [4]அறுப்பு மிகுதியாகவே இருக்கின்றது.

௨ வேலையாள்கள் சிலர்மாத்திரம் இருக்கிறார்கள்; ஆகையால் அறுப்புக்கு எசமான் அறுக்கிறதற்கு (அதிக) வேலையாள்களை அனுப்பும்படிக்கு [5]அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

௩ நீங்கள் புறப்படுங்கள், [6]ஆடுகளைக் கோணாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனுப்புகிறேன்.

௪ [7]பணப்பையையாவது, சாமான்பையையாவது, பாதரட்சைகளையாவது கூட எடுத்துக்கொண்டு போகாமலும் [8]வழியில் ஒருவனையும் மினவுதல் செய்யாமலும் இருங்கள்.

௫ [9]ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபொழுது, இந்த வீட்டாருக்குச் சமாதான சவுக்கியம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள்.

௬ அவ்விடத்திலே சமாதானசவுக்கியத்திற்குப் பாத்திரன் ஒருவன் இருந்தால், நீங்கள் வாழ்த்திய சமாதானசவுக்கியம் அவனிடத்திலே தங்கும்; அப்படிப்பட்டவன் இல்லாதிருந்தால், அது உங்களிடமாய்த் திரும்பும்

௭ [10]அந்த வீட்டிலே நீங்கள் இருந்து, [11]வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனானபடியினாலே, [12]அவர்களுக்கு உண்டாயிருக்கிறவைகளைப் போசனபானம்பண்ணுங்கள்; வீடுகள்தோறும் போகாதிருங்கள்.

௮ ஒரு பட்டணத்தில் நீங்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச் சேர்த்துக்கொண்டால், உங்கள் முன் வைக்கிறவைகளைப் புசித்து,

---

கி. பி. ௬௨

[1] மத் ௮ ௨௧
[2] ௧ இரா ௰௯ ௨௰
[3] மத் ௰ ௧ மாற் ௬ ௭
[4] மத் ௯ ௩௭, ௩௮ யோவா. ௪ ௩௫
[5] ௨ தெச ௩ ௧.
[6] மத் ௰ ௰௬
[7] மத் ௰ ௯, ௰ மாற் ௬ ௮ லூக் ௯ ௩.
[8] ௨ இரா ௪ ௨௯
[9] மத் ௰ ௰௨
[10] மத் ௰ ௰௧
[11] மத் ௰ ௰ ௧ கொரி ௯ ௪ ௧ தீமோ ௫. ௰௮
[12] ௧ கொரி ௰ ௨௭

௯ [1]அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கி, [2]பராபரனுடைய இராச்சியம் உங்களுக்குச் சமீபமாய் வந்ததென்று அவர்களுக்கு அறிவியுங்கள்.

௰ ஒரு பட்டணத்திலே நீங்கள் பிரவேசித்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச் சேர்த்துக்கொள்ளாதிருந்தால், அதின் வீதிகளில் நீங்கள் புறப்பட்டு,

௰௧ [3]எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் புழுதியையும் உங்களுக்கு எதிராகத் துடைத்துப் போடுகிறோம்; ஆகிலும் பராபரனுடைய ஆளுகை உங்களுக்குச் சமீபமாய் வந்ததென்கிறதை அறியக்கடவீர்கள் என்று சொல்லுங்கள்.

௰௨ [4]அந்நாளிலே சோதோம் பட்டணத்தாரிலும் அப்படிப்பட்ட பட்டணத்தார் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௩ [5]ஐயோ! கோராசின் பட்டணத்தாரே, ஐயோ! பெத்சாயிதா பட்டணத்தாரே, உங்களுக்கு வேதனை வரும்; [6]உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீருசீதோன் என்னும் பட்டணங்களில் நடந்தனவானால், அவர்கள் சீக்கிரமாய்த் (துக்கத்தினாலே) இரட்டை உடுத்திச் சாம்பலிலும் உட்கார்ந்து மனந்திரும்பி இருப்பார்கள்.

௰௪ ஆகையால் நியாயத்தீர்ப்பு நாளிலே தீருசீதோன் பட்டணத்தாருக்கு வரும் தண்டிப்பு எளிதாய் இருக்கும்; நீங்கள் அதிக தண்டிப்பை அடைவீர்கள்.

௰௫ [7]வானபரியந்தம் உயர்ந்த [8]கப்பர்நாகூம் பட்டணத்தாரே, [9]நீங்களும் பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவீர்கள் என்று சொல்லி,

௰௬ பின்பு மறுபடியும் சீஷரை நோக்கி, [10]உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான், உங்களைத் தள்ளுகிறவன் [11]என்னைத் தள்ளுகிறான்; [12]என்னைத் தள்ளுகிறவன் என்னை அனுப்பினவரைத் தள்ளுகிறான் என்று சொல்லி அனுப்பினார்.

௰௭ ¶ பின்பு [13]அந்த எழுபதுபேரும் சந்தோஷத்துடனே திரும்பி வந்து, ஆண்டவரே, பசாசுகளும் உம்முடைய நாமத்தினாலே எங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன என்றார்கள்.

௰௮ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, [14]சாத்தான் வானத்திலிருந்து மின்னலைப்போல விழுகிறதைக் கண்டேன்.

௰௯ இதோ, [15]பாம்புகள்மேலும், தேள்கள்மேலும், சத்துருவின் வல்லமை எல்லாவற்றின்மேலும் மிதிக்கத்தக்கதாக அதிகாரத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

௨௰ ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதினாலே நீங்கள் சந்தோஷப்படாமல் [16]உங்கள் நாமங்கள் பரமண்டலங்களில் எழுதியிருக்கிறதினாலே சந்தோஷப்படுங்கள் என்றார்.

௨௰௧ ¶ [17]அந்நேரத்திலே இயேசுவானவர் ஆவியிலே களிகூர்ந்து சொன்னதாவது பிதாவே, வானத்தையும் பூமியையும் ஆளுகிறவரே, நீர் இவைகளை (உலக) ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியினாலே உம்மைத் துதிசெய்கிறேன்; ஆ பிதாவே, அப்படியே உமக்குப் பிரியமாயிருந்ததென்று சொல்லி,*

௨௰௨ [18]பின்பு சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன; [19]பிதா தவிர ஒருவனும் குமாரனை அறியான், குமாரன் தவிர ஒருவனும் பிதாவை அறியான்; குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் அவரை அறிவான் என்று சொல்லி,

கி. பி. ௩௨

1 லூக் ௯. ௨
2 மத் ௩. ௨. ௪. ௰௭. ௰. ௭. ௰௧ வ௪
3 மத் ௰. ௰௪. லூக் ௯. ௫. அப் ௰௩. ௫௧ ௰௮. ௬
4 மத் ௰. ௰௫. மாற் ௬. ௰௧
5 மத் ௰௧. ௨௧
6 எசே. ௩. ௬
7 ஆதி ௰௧. ௪. உபா ௧. ௨௮. ஏசா ௰௪. ௰௩. எரே ௫௧. ௫௩
8 மத் ௰௧. ௨௩
9 எசே ௨௬. ௨௰ ௩௨. ௰௮
10 மத் ௰. ௪௰. மாற் ௯. ௩௭. யோவா ௰௩. ௨௰
11 ௧ தெச ௪. ௮
12 யோவா ௫. ௨௩
13 ௯ வ௪
14 யோவா ௰௨. ௩௧. ௰௬. ௰௧. வெளி ௯. ௧. ௰௨. ௮. ௯
15 மாற் ௰௬. ௰௮. அப் ௨௮. ௫
16 ௨ மோ ௩௨. ௩௨. சங் ௬௯. ௨௮. ஏசா ௪. ௩. தானி ௰௨. ௧. பிலி ௪. ௩. எபி ௰௨. ௨௩. வெளி ௰௩. ௮. ௨௰. ௰௨. ௨௧. ௨௭
17 மத் ௰௧. ௨௫
* தமமுடைய சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது என்ற வார்த்தைகள் பூர்வத்திலிருந்த சில பிரதிகளில் இந்த வசனத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன
18 மத் ௨௮. ௰௮. யோவா ௩. ௩௫. ௰௭. ௨
19 யோவா ௧. ௰௮. ௬. ௪௪, ௪௬

௨௩ ¶ பின்பு சீஷரைமாத்திரம் நோக்கி, [1]நீங்கள் இவைகளைப் பார்க்கிறவர்களானபடியினாலே, நீங்கள் பாக்கியமுள்ளவர்கள்.

௨௪ [2]அநேக தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் பார்க்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௫ ¶ அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரைச் சோதிக்கும்படிக்குப் போதகரே, [3]நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

௨௬ அதற்கு அவர், வேதப்பிரமாணத்திலே என்ன எழுதியிருக்கின்றது? என்னத்தை அறிகிறீர் என்றார்.

௨௭ அவன் பிரதியுத்தரமாகச் சொன்னது: [4]உன் முழு இருதயத்தினாலும், உன் முழு ஆத்துமாவினாலும், உன் முழுப் பலத்தினாலும், [5]உன் முழுச் சிந்தையினாலும் உன் தேவனாகிய பராபரனிடத்தில் அன்புகூரவும் [6]நீ உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்தில் அன்புகூரவும் வேண்டுமென்று எழுதியிருக்கின்றது என்றான்.

௨௮ அவர் சொன்னது: நீர் சரியாய்ச் சொன்னீர்; நீர் அப்படிச் செய்தால் சீவனை அடைவீர் என்றார்.

௨௯ அப்பொ [illegible] [7] [illegible] ன்
னை நீதிமான் [illegible] க
மனதாய் இயே [illegible]
னக்கு அடுத்த [illegible]
றான்.

௩௰ ¶ அதற [illegible]
சொன்னது: [illegible]
லேம் நகரத் [illegible]
டணத்துக்குட [illegible]
ளர் கையில் [illegible]
வர்கள் அவனுடைய வஸ்திரங்களைக் கழற்றி, அவனைக் காயப்படுத்தி, அரை உயிராக விட்டுப் போனார்கள்.

௩௧ [8]அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே சென்று, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௨ அப்படிப்போல ஒரு லேவியனும் அவ்விடத்தில் சேர்ந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௩ [9]பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய்ப் போய், அவனிடத்தில் சேர்ந்து, அவனைக் கண்டு,

௩௪ உருக்கமாயிரங்கி, அணுகி, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்ச இரசமும் வார்த்துக் காயங்களைக் கட்டி, அவனைத் தன் மிருகத்தின்மேல் எற்றி ஒரு மண்டபத்திற்குக் கொண்டுபோய்ப் பராமரித்துக்கொண்டு,

௩௫ மறுநாளிலே புறப்படுகிறபொழுது இரண்டு *வெள்ளிக்காசை எடுத்து மண்டபத்தான் கையிலே கொடுத்து, நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் இவனுக்காக எதையாகிலும் செலவழித்தால் அதை நான் திரும்ப வரும்பொழுது உனக்குக் கொடுப்பேன் என்றான்.

௩௬ அப்படியிருக்க, கள்ளர்கையிலே அகப்பட்டவனுக்கு அந்த மூன்றுபேரில் எவன் அடுத்த பிறனாயிருந்தான்? உமக்கு எப்படித் தோன்றுகின்றது என்றார்.

௩௭ அவனிடத்தில் இரக்கம்செய்தவனே என்றான்; அப்பொழுது இயேசுவானவர் நீரும் போய் அந்தப்படியே செய்யும் என்றார்.

௩௮ ¶ பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்; அங்கே [10]மார்த்தாள் என்று பேர்கொண்ட ஒரு ஸ்திரி அவரைத் தன் வீட்டிலே உபசாரம்செய்தாள்.

கி. பி. ௩௨.

[1] மத். ௰௩. ௰௬.
[2] ௧பே ௧ ௰
[3] மத் ௰௯ ௰௬ ௨௨. ௩௫
[4] ௫ மோ ௬ ௫
[5] ௩ மோ ௰௯ ௰௮
[6] ௩ மோ ௰௮ ௫ நெகே ௯. ௨௯, எசே ௨௰ ௰௧ ௰௩, ௨௧ ரோ ௰ ௫
[7] லூக் ௰௬ ௰௫
[8] சங் ௩௮ ௰௧
[9] யோவா ௪ ௯
* மத ௨௰ ௨.
[10] யோவா ௰௧ ௧ ௰௨ ௨, ௩.

௩௯ [1]அவளுக்குச் [2]சகோதரியான மரியாள் இயேசுவின் பாதங்களருகே உட்கார்ந்துகொண்டிருந்து, அவருடைய வசனத்திற்குச் செவிகொடுத்தாள்.

௪௰ மார்த்தாள் மிகவும் ஊழியஞ்செய்யக் கவலையுள்ளவளாய் அவரிடத்தில் சேர்ந்து நின்று, ஆண்டவரே, நான்மாத்திரம் ஊழியஞ்செய்யும்படிக்கு என் சகோதரி என்னை விட்டிருக்கிறது உமக்குக் கவலையில்லையா? அவள் எனக்கு உதவிசெய்யும்படி சொல்லும் என்றாள்.

௪௧ இயேசுவானவர் அவளுக்கு மாறுத்தரமாகச் சொன்னது: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலக்கமாயிருக்கிறாய்.

௪௨ [3]ஒன்றுமாத்திரம் வேண்டும், மரியாளே நல்லபங்கைத் தெரிந்துகொண்டிருக்கிறாள்; அது அவளிடத்திலிருந்து எடுக்கப்படுவதில்லை என்றார்.

௰௧. அதிகாரம்.

௧ பராபரன் நல்ல ஈவுகளைக் கொடுப்பாரென்று ஊக்கமாய்ச் செபம்பண்ணப் படிப்பித்து, ஊமையான ஒரு பசாசைத் துரத்தித் தூஷணமுள்ள பரிசேயரைக் கண்டித்து, ௨௭ ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் இன்னாரென்று காண்பித்து, ௨௯ சனங்களுக்குப் பிரசங்கித்து, பரிசேயர், வேதபாரகர், நியாயசாஸ்திரிகள் என்பவர்களுடைய மாயமான வேஷத்தைக் கண்டித்தது.

ஒருநாள் அவர் ஒரு இடத்திலிருந்து செபம்பண்ணி முடித்த பின்பு அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்குச் செபம்பண்ணுகையைப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்.

௨ அதற்கு அவர் சொன்னது: நீங்கள் செபம்பண்ணும்பொழுது [4]பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக; உம்முடைய இராசரீகம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

௩ தினந்தோறும் * எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தாரும்.

௪ எங்களுக்குக் குற்றஞ்செய்த யாவருக்கும் நாங்கள் மன்னிக்கிறபடியினாலே, தேவரீரும் எங்கள் பாவங்களை மன்னித்தருளும்; நாங்கள் சோதனைக்குள் பிரவேசியாதபடி செய்து, பொல்லாங்கில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று சொல்லுங்கள் என்றார்.

௫ ¶ அன்றியும் அவர் அவர்களுடனே சொன்னதாவது: உங்களில் ஒருவன் பாதி இராத்திரியிலே தனக்குச் சிநேகிதனானவனிடத்திற்குப் போய், சிநேகிதனே, என் சிநேகிதன் பிரயாணமாய்† என்னிடத்திலே வந்திருக்கிறான்.

௬ அவன் போசனம்பண்ணச் செய்யும்படிக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் நீ எனக்கு மூன்று அப்பங்களைக் கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்கும்பொழுது,

௭ வீட்டினுள் இருக்கிறவன், எனக்குத் தொந்தரவுசெய்யாதிரு, இப்பொழுது கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னுடனே கூடப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள், நான் எழுந்து உனக்குக் கொடுக்கக்கூடாதென்று மாறுத்தரமாகச் சொல்லி,

௮ [5]தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினாலே அவனுக்குக் கொடாதிருந்தும், பின்பு தன்னை அவன் அதிக வருத்தஞ்செய்கிறபடியினாலே எழுந்திருந்து அவனுக்கு வேண்டியபடிக்குக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௯ [6]அந்தப்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;

கி. பி. ௩௩.

[1] ௧ கொரி ௭. ௩௨-௩௫

[2] லூக் ௮. ௩௫ அப ௨௨. ௩

[3] சங ௨௭. ௪

[4] மத் ௬. ௯

* அல்லது அன்றாடு

† அல்லது தன் வழியை விட்டு

[5] லூக் ௰௮. ௧-௫

[6] மத் ௭. ௭ ௨௧. ௨௨. மாற் ௰௧. ௨௪. யோவா. ௰௫. ௭. யாக் ௧. ௬. ௧ யோ ௩. ௨௨.

தேடிகெகொள்ளுஙகள், அபபொழுது கண்டடைவீாகள்; தட்டுங்கள், அபபொழுது உஙகளுககுத திறககபபடும.

௰ என்னததினுலெனில், வேண்டிககொளளுகிற எவனும் வாஙகிக்கொளளுகிருன், தேடிககொள்ளுகிறவன கண்டடைகிருன், தட்டுகிறவனுர்குத திறககபபடும்

௰௧ ¶ [1]அனறியுமஉஙகளிலதகபபனுனவனிடததில் குமாரன அபபம கேட்கிறபொழுது, அவனுககுக்கலலைககொடுபபானு? மீனைக் கேட்டால், மீனை அல்ல பாமபைச கொடுபபானு?

௰௨ முட்டையைக கேட்டால், அவனுககுத் தேளைக கொடுபபானு?*

௰௩ ஆதலால் பொல்லாதவாகளாகிய நீஙகள, உஙகள் பிளளைகளுககு நலல ஈவுகளைச செயயுமபடி அறிந்திருக்க, பரம பிதாவானவா தம்மை வேணடிககொளளுகிறவாகளுககு மிகவும அதிகமாயப பரிசுதத ஆவியைக கொடாமல் இருபபாரா என்ருா.

௰௪ [2]ஒருநாள ஊமையாகசசெயகிற பசாசைத துரத்தினுர், பசாசுபோனபினபு ஊமையன் பேசினுன; அதைக்குறிததுச் சனஙகள் ஆச்சரியபபட்டார்கள்.

௰௫ அவர்களில சிலா சொன்னது: [3]இவன பசாசுகளின் தலைவனுகிய பெயேல்செபூலினுலே† பசாசுகளைத துரததுகிருன என்ருாகள்.

௰௬ வேறுசிலர் அவரைச் சோதிக்கும்படிககு [4]

ஓர் அடையா ம்

படி அவரிட

ண்டாாகள

௰௭ [5]அவாச

களை அவா

னே சொனன

சியத்தாா தங

விளை உண்டு

கள் அழிநது

கி. பி. ௩௩

1 மத ௭ ௯

* அலலது செ [illegible]

2 மத ௯ ௩௨. ௰௨ ௨௨

3 மத ௯ ௩௪. ௰௨ ௨௪

† அலலது பெயேல செபூலினுலே, அபபடியே மறு வசனஙகளிலும

4 மத ௰௨ ௩௮. ௰௬ ௧

5 யோவா ௨ ௨௫

6 மத ௰௨ ௨௫. மாற ௩ ௨௪

7 ௧ யோ ௩ ௮

8 மத ௰௨ ௨௯. மாற ௩ ௨௭

9 எசா ௫௩ ௰௨. கொலோ ௨ ௰௫

10 மத ௰௨ ௩௰

11 மத ௰௨ ௪௩

டும்பத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உணடுபணணினுல், மடிநதுபோவாாகள.

௰௮ அபபடிக்குச் சாததானும் தனககுததானே விரோதமாகப் பிரிவு உணடுபணணினுல், அவனுடைய இராச்சியம் எபபடி நிற்கும்? இபபடியிருக்க நீஙகள் என்னைப பெயேல்செபூலினுலே பசாசுகளைத் துரத்துகிறவன் என்கிறீர்கள்

௰௯ நான் பெயேல்செபூலைக கொண்டு பசாசுகளைத துரததுகிறவனுனுல, உஙகள பிள்ளைகளா யாரைககொணடு அவைகளைத் துரததுகிருாகள? ஆகையால் அவாகள உஙகளுககு நியாயததீாபபுக கொடுககிறவாகளாய இருபபாாகள்.

௨௰ [7]நான பராபரனுடைய வல்லமையினுலே பசாசுகளைத துரததுகிறபடியால், பராபரனுடைய இராசசியம உஙகளுககுள்ளே சடுதியாய வநதிருககினறதே.

௨௧ [8]ஆயுதமதரித்த பலவான தன அரணமனையின் வாசலைக காககிறபொழுது, அவனுடைய பொருள் பததிரபபட்டிருக்கும்.

௨௨ [9]அவனிலும அதிக பலவான வநது அவனைச செயிததால, அவன் நம்பியிருநத சகல ஆயுதவர்க்கததையும பறிததுக்கொண்டு, அவனுடைய உடைமைகளைப பஙகிட்டுககொள்வான்.

௨௩ என்னுடனே [10]இராதவன் எனக்கு விரோதமாயிருக்கிருன்; என்னைபபோலச சோததுககொளளாதிருககிறவன் சிதற அடிக்கிருன்.

௨௪ ¶ [11]அசுதத ஆவி ஒரு மனிதனைவிட்டுப புறபபடுகிறபொழுது, அது தண்ணீரிலலாத இடஙகளில் இளைபபாறும் இடத்தைத் தேடித் திரிநது அடையாமல் இருக்கும் காலத்தில், அது தான் விட்டுவநத வீட்டிற்குத் திரும்பவேண்டும் என்று சொல்லி,

கி. பி. ௩௩.

௨௫ அந்தப்படி வருகிறபொழுது, அது பெருக்கிச் சிங்காரிக்கப்பட்டிருக்கக் கண்டு,

௨௬ பின்பு போய், தன்னிலும் அதிக பொல்லாத வேறே ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்து உட்பிரவேசித்து, அங்கே குடியிருக்கும்; [1]அப்பொழுது அம்மனிதனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார்.

௨௭ ¶ இவைகளை அவர் சொல்லுகையில், கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீயானவள் அவரை நோக்கி, [2]உம்மைச் சுமந்த வயிறும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சத்தமாய்க் கூப்பிட்டாள்.

௨௮ அவர் சொன்னது: அதனிலும் அதிகமாய்ப் [3]பராபரனுடைய வாக்கைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார்.

௨௯ ¶ அன்றியும் சனங்கள் திரளாய்க் கூடிவந்திருக்கிறபொழுது அவர் சொன்னதாவது: [4]இந்தச் சந்ததியார்கள் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள், ஓர் அடையாளத்தைத் தேடுகிறார்கள், ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி, வேறடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

௩௰ [5]ஆதலால் யோனாவானவன் நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்ததுபோல, மனிதனுடைய குமாரனும் இந்தச் சந்ததிக்கு இருப்பார்.

௩௧ [6]தெற்கு இராசஸ்திரி சாலோமோனுடைய ஞானத்தைக் கேட்கும்படிக்குப் பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; சாலோமோனிலும் இந்தச் சந்ததியிலே தோன்றினவன் அதிகமாயிருக்கிறான்; (ஆனாலும் இவர்கள் கேட்கமாட்டார்கள்;) ஆதலால் அந்த இராசஸ்திரி நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களுடனே கூட எழும்பி, இவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பாள்.

௩௨ [7]நினிவே பட்டணத்தார் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பினார்கள்; யோனாவிலும் இந்தச் சந்ததியிலே தோன்றினவன் அதிகமாய் இருக்கிறான்; ஆகையால் நினிவே பட்டணத்தார் நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களுடனேகூட எழும்பி, இவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்.

௩௩ [8]அன்றியும் ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, அதை அந்தரங்கத்திலாவது *மரக்காலின் கீழாவது வைக்கமாட்டான், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படிக்கு அதை ஒரு தண்டின்மேலே வைப்பான்.

௩௪ [9]கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கின்றது; அப்படியிருக்க, உன் கண் சொஸ்தமுள்ளதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும், அது கெட்டதானால் உன் சரீரம் இருள் அடைந்திருக்கும்.

௩௫ ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சமானது இருளாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௩௬ அப்படி உன் சரீரம் ஒரு புறத்திலும் இருள் அடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், அப்பொழுது ஒரு விளக்குத் தன் பிரகாசத்தினாலே† உன்னை வெளிச்சமாக்குகிறதுபோல, அது முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும் என்றார்.

௩௭ ¶ அவர் அப்படிப் பேசிக்கொள்ளுகையில், ஒரு பரிசேயன் தன்னுடனே கூடப் பகல்போசனம் பண்ணும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான்; அவர் போய்ப் பந்தியிருந்தார்.

௩௮ [10]போசனம்பண்ணுகிறதற்கு முன்னே அவர் ஸ்நானம்பண்

[1] யோவா ௫ ௧௪ எபி ௬ ௪ ௰ ௨௬ ௨ பே ௨ ௨௰
[2] லூக் ௧ ௨௮, ௪௮
[3] மத் ௭ ௨௧ லூக் ௮ ௨௧ யாக் ௧ ௨௫
[4] மத் ௰௨ ௩௮, ௩௯
[5] யோனா ௧ ௰௭ ௨ ௰
[6] ௧ இரா ௰ ௧
[7] யோனா ௩ ௫
[8] மத் ௫ ௰௫ மாற் ௪ ௨௧ லூக் ௮ ௰௬
* மத் ௫ ௰௫
[9] மத் ௬ ௨௨
† அல்லது ஒரு விளக்குத் தன் மின்னலினாலே
[10] மாற் ௭ ௩

ணாமல் இருந்ததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

௩௯ அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி, பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் [1]வெளிப்புறத்தைச் சுத்தம்பண்ணுகிறீர்கள்; [2]உங்கள் உள்ளம் கொள்ளையினாலும் துராசையினாலும் நிறைந்திருக்கிறது.

௪௰ ஆ புத்தியீனரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா?

௪௧ அப்படியிருக்க [3]உங்களுக்கு உண்டானவைகளைப் *பிச்சையாகக் கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்.

௪௨ [4]ஐயோ! பரிசேயராகிய உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், நீங்கள் துளசியிலும் அரூயிபூண்டிலும் சகலவித கீரைகளிலும் பத்தில் ஒன்றுகொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டு விலகுகிறீர்கள்; இவைகளை நீங்கள் நடப்பித்து, அவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டும்.

௪௩ [5]ஐயோ! பரிசேயரே, உங்களுக்கு வேதனைவரும், என்னத்தினாலெனில், செபஆலயங்களில் முதல் ஆசனத்தையும் சந்தைகளில் வாழ்த்துதல்களையும் விரும்புகிறீர்கள்.

௪௪ [6]ஐயோ! வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு வேதனைவரும்; [7]என்னத்தினாலெனில், காணப்படாத பிரேதக்குழிகளைப்போல இருக்கிறீர்கள்; மனி
தர் அவைகளை
கள்மேலே நட
சொல்லுகிறே

௪௫ ¶ நியா
ருவன் அவை
ரே, நீர் இப்ப
னாலே எங்களை
என்றான்.

௪௬ அதற்கு அவர் சொன்னது: ஐயோ! நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கும் வேதனைவரும், என்னத்தினாலெனில், [8]மிகவும் பாரமான சுமைகளை மனிதர்கள்மேலே ஏற்றுகிறீர்கள், நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடமாட்டீர்கள்.

௪௭ [9]ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், உங்கள் பிதாக்களால் கொலைசெய்யப்பட்ட தீர்க்கதரிசிகளுடைய பிரேதக்குழிகளின்மேலே திண்ணையைக் கட்டுகிறீர்கள்.

௪௮ உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலைசெய்தபின்பு நீங்கள், அவர்களுடைய கல்லறைகளின்மேல் வீடுகட்டுகிறபடியால் நீங்கள் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்குச் சம்மதிக்கிறவர்கள் என்று சாட்சிகொடுக்கிறீர்கள்.

௪௯ ஆகையால் பராபரனுடைய ஞானம் சொல்லுகிறதாவது: [10]நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரையும் அவர்களிடத்தில் அனுப்புவேன்; அவர்களில் சிலரைக் கொலைசெய்து சிலரைத் துன்பப்படுத்துவார்கள்.

௫௰ உலகத்தோற்றம் முதற்கொண்டு [11]ஆபேலின் இரத்தம் தொடங்கி, பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்குமநடுவே அழிக்கப்பட்ட [12]சகரியாவின் இரத்தம்வரைக்கும் சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் இந்தச் சந்ததியினிடத்திலே கேட்கப்படும்படிக்கு அப்படிச் செய்வார்கள்.

௫௧ இந்தச் சந்ததியினிடத்திலே அது கேட்கப்படும் என்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௫௨ [13]ஐயோ! நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், அறிவின் திறவுகோலை எடுத்துக்கொண்டு போனீர்கள்; நீங்களே உட்

[1] மத் உ௩ உ௫
[2] தீத் ௧ ௧௫
[3] ஏசா ௫அ ௭; தானி ௪ உ௭; லூக் ௰உ ௩௩
* அல்லது உங்களால் கூடிய அளவு
[4] மத் உ௩ உ௩
[5] மத் உ௩ ௬; மாற் ௰உ ௩அ ௩௯
[6] மத் உ௩ உ௭
[7] சங் ௫ ௯
[8] மத் உ௩ ௪
[9] மத் உ௩ உ௯
[10] மத் உ௩ ௩௪
[11] ௧ மோசே ௪ அ
[12] உ நாளா உ௪ உ௰,உ௧
[13] மத் உ௩ ௰௩

பிரவேசிக்கவில்லை; உட்பிரவேசிக்கிறவர்களுக்குத் தடைபண்ணினீர்கள்* என்றார்.

௫௩ ¶ இவைகளை அவர் அவர்களுடனே பேசிக்கொண்டபொழுது, வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றங்காணும்படிக்கு,

௫௪ [1]அநேககாரியங்களைக்குறித்து அவர் பேசும்படி மிகவும் அவரை நெருக்கமாய் வினவித் தந்திரமாய்க் காத்திருந்து, அவருடைய வாய்மொழியிலே தப்பிதம் காணப் பார்த்தார்கள்.

௰௨. அதிகாரம்.

௧, கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் மாயத்துக்கு இடங்கொடாமல் இருக்கவும் பயமில்லாமல் தம்முடைய உபதேசங்களைப் பிரசங்கிக்கவும் போதித்தது. ௰௩. அவர் பெரிய களஞ்சியங்களைக் கட்டின ஒரு ஐசுவரியவானை உவமையாகக்கொண்டு பொருளாசையைக்குறித்துச் சனங்களை எச்சரித்தது. ௨௨ அதிகமாய் உலக காரியங்களில் கவலைப்படாமலிருக்கவும், ௩௧ பராபரனுடைய இராச்சியத்தைத் தேடவும், ௩௩ பிச்சைகொடுக்கவும், ௩௫ கர்த்தர் வந்து தட்டும்போது அவருடைய வரவை எதிர்பார்த்திருந்து திறக்கவும் வேண்டுமென்பது. ௪௨ கிறிஸ்துவின் ஊழியக்காரர் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளைக்காத்து ௪௯ துன்பம் வருமென்று எதிர்நோக்கவேண்டியதென்பது. ௫௮ ஒப்புரவாகுதல் இல்லாமல் மரணமடைவது பயங்கரமானதால், ௫௪ சனங்கள் இந்தக் காலத்தையே கிருபையின் காலமென்று நினைக்கவேண்டுமென்பது.

அந்தத் தருணத்திலே [2]அநேக ஆயிரம் சனங்கள் ஒருவரை ஒருவர் மிதித்துக்கொள்ளத்தக்கதாகக் கூடிவந்திருக்கிறபொழுது, [3]அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது: பிரதானமாய் நீங்கள் வஞ்சகமாகிய பரிசேயருடைய புளிப்புள்ள மாவுக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்.*

௨ [4]வெளியாகாத மறைபொருளும் அறியப்படாத அந்தரங்கமும் ஒன்றுமில்லை.

௩ அப்படியிருக்க நீங்கள் இருளில் பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதுக்குள் சொன்னது எதுவோ, அது வீடுகள்மேலே பிரசங்கிக்கப்படும்.

௪ ¶ [5]அல்லாமலும் என் சிநேகிதரான உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: [6]சரீரத்தைக் கொலைசெய்தாலும் அதின்பின்பு அதிகம் ஒன்றும் உங்களுக்குச் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

௫ நீங்கள் பயப்படத்தக்கவர் இன்னார் என்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலைசெய்தபின்பு நரகத்திலே தள்ளுகிறதற்கு அதிகாரமுடையவராகிய (பராபரனுக்குப்) பயப்படுங்கள், அவருக்கே பயப்படக்கடவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬ இரண்டு காசுக்கு ஐந்து† அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவோ? ஆனாலும் அவைகளில் ஒன்றும் பராபரனாலே மறக்கப்படுகிறதில்லை.

௭ உங்கள் தலையிலுள்ள எல்லா மயிர்களும் எண்ணப்பட்டிருக்கின்றன, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளிலும் நீங்கள் மேன்மையாயிருக்கிறீர்கள்.

௮ ¶ அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [7]எவனாகிலும் மனிதர்முன்பாக என்னை அறிக்கைபண்ணினால், மனிதனுடைய குமாரனும் பராபரனுடைய தூதர்கள் முன்பாக அவனை அறிக்கைபண்ணுவான்.

௯ மனிதர்முன்பாக என்னை மறுதலிக்கிறவன் பராபரனுடைய தூதர்கள் முன்பாக மறுதலிக்கப்படுவான்.

௰ [8]எவனாகிலும் மனிதனுடைய குமாரனுக்கு விரோதமாய்ப் பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்; பரிசுத்த ஆவியைத் தூஷணிக்கிறவனுக்கு அது மன்னிக்கப்படாது.

௰௧ [9]அன்றியும் செபஆலயங்களுக்கும் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்பொ

கி. பி. ௩௩.

* அல்லது மறித்தீர்

[1] மாற் ௰௨. ௰௩

[2] மத் ௰௬. ௬ ; மாற் ௮. ௰௫

[3] மத் ௰௬. ௰௨

[4] மத் ௰. ௨௬ ; மாற் ௪. ௨௨ ; லூக் ௮. ௰௭

[5] யோவா ௰௫. ௰௪, ௰௫

[6] மத் ௰. ௨௮ ; ஏசா ௫௧. ௭, ௮ ; எரே ௧. ௮

† மத் ௰. ௨௯

[7] மத் ௰. ௩௨ ; மாற் ௮. ௩௮ ; ௨ தீமோ ௨. ௰௨ ; ௧ யோ ௨. ௨௩

[8] மத் ௰௨. ௩௧, ௩௨ ; மாற் ௩. ௨௮ ; ௧ யோ ௫. ௰௬

[9] மத் ௰. ௰௯ ; மாற் ௰௩. ௰௧ ; லூக் ௨௧. ௰௪

ழுது எப்படி, என்னத்தை, எதிர் உத்தரவாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்.

௰௨ நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பாரே என்றார்.

௰௩ ¶ அப்பொழுது கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கிப் போதகரே, என் சகோதரன் எனக்கும் தனக்கும் உண்டான சுதந்தர ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொள்ளும்படிக்குக் கட்டளையிடும் என்றான்.

௰௪ அதற்கு அவர் சொன்னது: மனிதனே, [1]என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் ஏற்படுத்தினவன் யாவன் என்று சொல்லி,

௰௫ [2]பின்பு எல்லாரையும் நோக்கி ஒருவனுக்கு எவ்வளவு ஆஸ்தி உண்டாயிருந்தாலும் அவைகளினாலே அவனுடைய சீவன் உண்டாயிராது; ஆகையால் நீங்கள் பொருளாசைக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள் என்றார்.

௰௬ ¶ அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார், அதாவது, ஐசுவரியமுள்ள ஒரு மனிதனுடைய காணி பூமி நன்றாய் விளைந்தது.

௰௭ அப்பொழுது அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு சொன்னது: என் தானியத்தைச் சேர்த்து வைக்கிறதற்கு வேண்டிய இடம் இல்லையே

௰௮ நான [illegible] ம?
என் களஞ்சி [illegible] த
து அதிக [illegible] க
கட்டி, எனக [illegible] ம
யாவையும் [illegible]
சேர்த்து

௰௯ பின்பு [illegible]
மாவே, அ [illegible]
உனக்காக [illegible]
வைக்கப்பட [illegible]

கையால் இளைப்பாறிப் புசித்துக் குடித்து மகிழ்ச்சியாயிரு என்று என் ஆத்துமாவுடனே சொல்லவேண்டும் என்றான்

௨௰ அப்பொழுது பராபரன் அவனுடனே சொன்னது: புத்தியீனனே, இந்த இராத்திரியிலே [4]உன் ஆத்துமாவை உன்னிடத்தில் கேட்டு எடுத்துக்கொள்வார்கள்;* [5]அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருக்காக இருக்கும் என்றார்.

௨௧ [6]பராபரனில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகப் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவனுக்கு அப்படியே சம்பவிக்கும் என்று சொல்லி,

௨௨ ¶ பின்பு தம்முடைய சீஷரை நோக்கி, [7]ஆகிலால் நீங்கள் உங்கள் சீவனைக்குறித்து என்ன உண்போம் என்றும், உங்கள் சரீரத்தைக்குறித்து என்ன உடுப்போம் என்றும், கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௩ ஆகாரத்திற்குச் சீவனும், உடைக்குச் சரீரமும், அதிகமாயிருக்கின்றதே

௨௪ காகங்களை நோக்கிப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டகசாலையும் களஞ்சியமும் இல்லை, [8]அவைகளுக்கும் பராபரன் உணவு கொடுக்கிறார்; பறவைகளிலும் நீங்கள் மிகவும் அதிக மேன்மையாய் இருக்கிறீர்கள் அல்லவா?

௨௫ அன்றியும் உங்களில் ஒருவன் கவலைப்படுகிறதினாலே, தன் சரீர அளவுக்கு ஒரே முழத்தையும் கூட்டுவானோ?

௨௬ மிகவும் சிறியதானது உங்களால் ஆகாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் என்னத்திற்குக் கவலைப்படுகிறீர்கள்?

௨௭ லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்; அவைகள் வருந்

கி. பி. ௩௩.

[1] யோவா ௰அ ௩௬
[2] ௧ தீமோ. ௬. ௭ ௮
[3] பிரச ௰௧ ௬ ௧ யோசி ௰இ ௬௨ யாக ௫ ௧
[4] யோபு ௨௰ ௨௨ ௭ ௮
* அல்லது உன் ஆத்துமா உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும் [illegible]
[5] சங் ௩௯ ௬ எரே ௰௭ ௰௧
[6] மத் ௬ ௰௯ ௨௰ ௧ தீமோ ௬ ௰௮, ௰௯ யாக் [illegible]
[7] மத் ௬ ௨௫
[8] யோபு ௩௮ ௪௧ சங் ௱௪௭ ௯

நுகிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; சாலோமோன் தானே மிகுநத மகிமையுடையவனாயிருநதும, அவைகளில ஒன்றைபபோல(அழகாய்) உடுததியிருககவில்லை எனறு உஙகளுக்குச சொலலுகிறேன்.

௨௮ அபபடியிருக்க, அற்பவிசுவாசிகளே, இன்றைக்கு வெளியிலிருநது நாளைக்கு அடுபபில போடபபடுகிற புல்லுக்குப பராபரன இவ்விதமாக உடுத்தினால், மிகவும அதிகமாய உஙகளுககு அபபடிச செயவார அல்லவா?

௨௯ ¶ ஆகையால என்னததை உண்போம, என்னததைப பானம பணணுவோம எனறு நீஙகள கேளாமலும் கலக்கம் அடையாமலும் இருங்கள்.*

௩௰ உலகத்தார் இபபடிபபட்டவைகள் யாவையும தேடுகிறார்கள; இவைகள உஙகளுக்கு வேண்டுமென்று உஙகள் பிதாவானவர அறிநதிருககிறார்.

௩௧ [1]விசேஷமாயப பராபரனுடைய இராசசியததைத தேடுஙகள; அபபொழுது இவைகள எலலாம உஙகளுககுக கூடக் கொடுககபபடும்.

௩௨ சிறிய [2]ஆட்டுககூட்டமே, உஙகள் பிதா இராசசியத்தை உஙகளுக்குக கொடுககப பிரியமாய் இருக்கிறார; ஆகையால் பயபபடாதிருஙகள்.

௩௩ [3]உஙகளுக்கு உண்டானவைகளை விற்றுப் பிசசைகொடுஙகள; உஙகள் பொக்கிஷம் எங்கேயோ, அஙகே உங்கள் இருதயமும இருக்கும்

௩௪ ஆகையால் [4]பழமையாய்ப் போகாத பணபபைகளையும குறைநதுபோகாத பொககிஷததையும பரமணடலஙகளில உஙகளுககாக உணடுபண்ணுஙகள; அஙகே திருடன் சேருகிறதுமிலலை, பூசசி கெடுககிறதுமில்லை.

௩௫ ¶ [5]உஙகள அரைகள் கட்டபபட்டவைகளாகவும [6]உஙகள் விளக்குகள் எரிகிறவைகளாகவும தஙகள எசமான் கலியாணததிலிருநது திருமபி வநது தட்டுமபொழுது, உடனே அவருககுத திறக்குமபடிககு அவன் வரக காததிருககிற மனிதருககு ஒபபாகவும இருஙகள.

௩௬ எசமான வநது விழிததிருககக காணும் ஊழியககாரரே பாககியர

௩௭ [7]அவன் அரையில் கச்சை கட்டிககொணடு அவர்களைப பநதியிருககச செயது, பின்பு வநது அவாகளுககு ஊழியமசெயவானெனறு மெயயாகவே உஙகளுககுச சொலலுகிறேன

௩௮ அவன இரணடாம் சாமததிலாவது மூன்றாம சாமததிலாவது வநது அபபடியே கணடால, அவ ஊழியககாரா பாககியவானகளாய இருபபாாகள.

௩௯ [8]திருடன் இன்னவின்னநேரததில வருவான எனறு வீட்டெசமான அறிநதால், அவன விழிததிருநது தன் வீட்டைக கனனமிடுமபடிககு இடஙகொடுககமாட்டான், அது உங்களுககுத தெரியும்

௪௰ [9]அநதபபடியே நீஙகளும் நினையாத நேரததிலே மனிதனுடைய குமாரன வருவதால் எததனமாயிருககககடவீாகள எனறார.

௪௧ ¶ அபபொழுது பேதுரு அவரை நோககி ஆணடவரே, இநத உவமையை நீா எஙகளுககு (மாததிரம்) சொல்லுகிறீரோ, எலலாருக்கும்சொல்லுகிறீரோவெனறான்.

௪௨ அதறகுக காததர் சொன்னது: [10]தகுதியான காலத்திலே படி கொடுககும்படிககு எசமான் தனனுடைய பணிவிடைசசனஙகள மேல வைக்கத்தக்க உணமையும புததியுமுளள விசாரணைககாரன் யாவன்?

௪௩ எசமான் வரும்பொழுது, அபபடிச செயயக காணபபடுகிற ஊழியககாரன பாககியவான.

கி. பி. ௩௩

---

* அலலது கவலையுளள சந்தேகங கொளளாதிருஙகள

[1] மத் ௬ ௩௩

[2] மத ௰௧ ௨௫, ௨௬

[3] மத ௰௯ ௨௧ அப ௨ ௪௫ ௪ ௩௪

[4] மத் ௬ ௨௰ லூக் ௰௬ ௯ ௧ தீமோ ௬ ௰௯

[5] எபே ௬ ௰௪ ௧ பே ௧ ௰௩

[6] மத ௨௫ ௧ மு

[7] மத ௨௪. ௪௬

[8] மத் ௨௪ ௪௩ ௧ தெச ௫ ௨ ௨ பே ௩ ௰ வெளி ௩ ௩ ௰௬ ௰௫

[9] மத ௨௪ ௪௪ ௨௫ ௰௩ மாற ௰௩ ௩௩ லூக் ௨௧ ௩௪, ௩௬ ௧ தெச ௫ ௬ ௨ பே ௩ ௰௨

[10] மத். ௨௪ ௪௫ ௨௫ ௨௧ ௧ கொரி ௪ ௨

கி. பி ௩௩.

௪௪ [1]எசமான் தனக்கு உண்டான எல்லாவற்றின்மேலும் அவனை வைப்பான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௫ [2]அந்த ஊழியக்காரன், என் எசமான் வரத் தாமதிக்கிறான் என்று தன் இருதயத்தில் எண்ணி, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும் புசித்துக் குடித்து வெறிகொள்ளவும் தொடங்கினால்,

௪௬ அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும் அறியாத நேரத்திலும் அவனுடைய எசமான் வந்து, அவனைத் துண்டித்துப்போட்டு * உண்மையில்லாதவர்களுடனே அவனுக்குள்ள பங்கை ஏற்படுத் [illegible] ன்.

௪௭ மிகுதியைப் பெற்றவன் எவனோ, அவனிடத்தில் மிகவும் விசாரிக்கப்படும், மிகுதியைப் பற்றிக்கொண்டவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்.

௪௮ [3]ஆதலால் தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும் எத்தனமாயிராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருக்கிற ஊழியக்காரன் அநேக அடிகளைப் பெற்றுக்கொள்வான், ([4]சித்தத்தை) அறியாதவனாயிருந்து அடிகளுக்கு ஏற்றவைகளைச் செய்கிறவன் கொஞ்ச அடிகளைப் பெற்றுக்கொள்வான்.

௪௯ ¶ [5]அக்கினியைப் பூமியின்மேல் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியும்படிக்கு விரும்புகிறேன்.

௫௰ [6]அதற் [illegible] அ
டையவேண் [illegible] ளம
உண்டு, அ [illegible] ன்
மிகவும் வ [illegible] †

௫௧ [7]நான [illegible] ளத்
தைத் தரு [illegible] ன
என்று நினை [illegible] ால
ல, [8]பிரிவி [illegible] கு
வந்தேன் [illegible] ச
சொல்லுகி

௫௨ [9]எப்படியெனில், இதுமுதல் ஒரே குடும்பத்திலே ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள்; மூன்று பேர் இரண்டு பேருக்கும், இரண்டு பேர் மூன்று பேருக்கும் விரோதமாய் இருப்பார்கள்.

௫௩ தகப்பன் மகனுக்கும், மகன் தகப்பனுக்கும்; தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி தன் மருமகளுக்கும், மருமகள் தன் மாமிக்கும் விரோதமாகப் பிரிந்துபோவார்கள் என்றார்.

௫௪ ¶ [10]பின்பு அவர் சனங்களை நோக்கிச் சொன்னது: நீங்கள் ஒரு மேகம் மேற்கிலே எழும்புகிறதைக் காணுகிற உடனே பெருமழை வரும் என்று சொல்லுகிறீர்கள், அந்தப்படியேயும் ஆகும்.

௫௫ அல்லாமலும் தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணுகிறபொழுது, காங்கை உண்டாகும் என்கிறீர்கள், அந்தப்படியேயும் ஆகும்.

௫௬ மாயக்காரரே, பூமியின் உருவத்தையும் வானத்தின் உருவத்தையும் வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள், இக்காலத்தைமாத்திரம் நீங்கள் வகையறாமல் இருக்கிறது எப்படி?

௫௭ ¶ அல்லாமலும் நியாயம் இன்னதென்று நீங்கள் உங்களாலே எண்ணிக்கொள்ளாமல் இருக்கிறதென்ன?

௫௮ [11]நீ உன் எதிராளியுடனே கூடத் துரையினிடத்துக்குப் போகிறபொழுது [12]அவனை விட்டு நீங்கும்படிக்கு வழியிலே பிரயாசப்படுவாய்‡, இல்லாவிட்டால் அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுபோவதுமல்லாமல் நியாயாதிபதி உன்னைச் சேவகனுக்கு ஒப்புக்கொடுப்பான், சேவகன் உன்னைக் காவலிலே போடுவான்.

௫௯ ‡நீ ஒரு காசாகிலும் குறையாமல் செலுத்துகிறவரைக்கும் அவ்விடத்திலிருந்து [illegible]

1 மத் ௨௪ ௪௭
2 மத் ௨௪ ௪௮
* அல்லது வெட்டிப்போட்டு மத் ௨௪ ௫௧
3 ௪ மோசே ௰௫ ௩௰ ௫ மோசே ௨௫ ௨ யோவா ௯ ௪௧ ௰௫ ௨௨ அப் ௰௭ ௩௰ யாக் ௪ ௰௭
4 ௧ மோசே [illegible]
5 [illegible]
6 மத் ௨௰ ௨௨ மாற் ௰ ௩௮
† அல்லது வருத்தப்படுகிறேன்
7 மத் ௰ ௩௪ ௩௫
8 மீகா ௭ ௬ [illegible]
9 மத் ௰௬ ௨
10 மத் ௰௬ ௨
11 [illegible] மத் ௫ ௨௫
12 [illegible]
‡ மாற் ௰௨ ௪௨

கப்படமாட்டாயென்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰௩. அதிகாரம்.

௧ கிறிஸ்து கலிலேயாமுதலானவர்களுக்கு வந்த கேட்டை அறிவித்து, மற்றவர்கள் குணப்படவேண்டுமென்று பிரசங்கித்தது ௬ வெட்டப்படக் கனி கொடாத அத்திமரத்தை உவமையாகக் காட்டினது ௰௧ கூனியாகிய ஒரு ஸ்திரீயைக் குணமாக்கினது, ௰௮ கடுகுவிதையின் உவமையினாலும், புளித்தமாவின் உவமையினாலும், தம்மாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் இருதயத்திலே நடந்தேறும் திருவசனத்தின் வல்லமையுள்ள கிரியைகளைக் காண்பித்தது, ௨௪ நெருக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசிக்கப் போதித்தது, ௩௧ ஏரோதையையும் எருசலேமையும் கடிந்துகொண்டது.

பிலாத்தென்பவன் சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளுடனே கலந்திருந்தான், அந்தக் கலிலேயரைக்குறித்து அவ்வேளையிலே அங்கேயிருக்கிற சிலர் அவருடனே பேசிக்கொண்டார்கள்.

௨ அவர்களுக்குப் பிரதியுத்தரமாக இயேசுவானவர் சொன்னதாவது: அந்தக் கலிலேயர் அப்படிப்பட்டவைகளை அனுபவித்ததினாலே, மற்றெல்லாக் கலிலேயரிலும் (அதிக) பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்கள்?

௩ அப்படி இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாவிட்டால், எல்லாரும் அப்படிக் கெட்டுப்போவீர்கள்.

௪ அல்லாமலும் சீலோவாவிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனிதர் எல்லாரிலும் அந்தப் பதினெட்டுப்பேரும் அதிக குற்றவாளிகளாய் *இருந்தார்களென்று நினைக்கிறீர்கள்?

௫ அப்படி இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாவிட்டால் எல்லாரும் அப்படிப்போலக் கெடுவீர்கள் என்றார்.

௬ ¶ அல்லாமலும் அவர் சொன்ன உவமையாவது: [1]ஒருவன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நாட்டியிருந்தான்.

௭ பின்பு அவன் வந்து அதிலே கனியைத் தேடினபொழுது ஒன்றும் காணவில்லை, உடனே அவன் தோட்டக்காரனை நோக்கி, இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன் ஒன்றும் காணவில்லை, இதை வெட்டிப்போடு, நிலத்தையும் இது என்னத்திற்குக் கெடுக்கிறது என்றான்.

௮ அதற்கு அவன் சொன்னது: ஐயா, நான் இதைச் சுற்றிக் கொத்தி எருப்போடுவேன்; ஒருவேளை இது கனி கொடுக்கும்; ஆகையால் இது இந்தவருஷமளவாகும் இருக்கட்டும்.

௯ கனி கொடாதிருந்தால், நீர் இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்.

௰ ¶ ஓர் ஓய்வுநாளில் அவர் ஒரு செபஆலயத்தில் போதகம்பண்ணிக்கொண்டு இருந்தபொழுது,

௰௧ பதினெட்டு வருஷமாய்ப் பலவீனமாகச்செய்கிற ஆவியையுடைய ஒரு ஸ்திரீ அங்கே இருந்தாள், அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.

௰௨ இயேசுவானவர் அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து, ஸ்திரீயே உன் பலவீனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டாயென்று சொல்லி, [2]அவள்மேலே தமது கைகளை வைத்தார்.

௰௩ உடனே அவள் நிமிர்ந்து, பராபரனைத் துதிசெய்தாள்.

௰௪ இயேசுவானவர் ஓய்வுநாளிலே குணமாக்கினதைச் செபஆலயத்தலைவன் கண்டு விசனமடைந்து சனங்களை நோக்கி, [3]வேலைசெய்யும்படிக்கான ஆறுநாள் உண்டு; [4]அவைகளிலே நீங்கள் வந்து குணமாக்கிக்கொள்ளுங்கள்; ஓய்வுநாளிலே அப்படிச் செய்யக்கூடாதென்றான்.

கி. பி. ௩௩.

* அல்லது கடன்காரர் மத் ௰௮ ௨௪ லூக் ௰௧ ௪

[1] ஏசா ௫ ௨ மத் ௨௧ ௰௯

[2] மாற் ௰௬ ௰௮ அப் ௯ ௰௭

[3] யாத் ௨௰ ௯

[4] மத் ௰௨ ௰ மாற் ௩ ௨ லூக் ௬ ௭ ௰௪ ௩

௰௫ அவனுக்கு மாறுத்தரமாகக் கர்த்தர் சொன்னது: வஞ்சகனே, [1]உங்களில் எவனானாலும் தன் எருதை அல்லது தன் கழுதையை ஓய்வுநாளிலே தொழுவிலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய் அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?

௰௬ அதுபோல ஆபிரகாமின் சந்ததியிலே பதினெட்டு வருஷம் சாத்தானாலே கட்டப்பட்டிருக்கிற [2]இவளை ஓய்வுநாளிலே அந்தச் சங்கிலியிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார்.

௰௭ அப்படி அவர் சொன்னபொழுது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்; அல்லாமலும் சனங்கள் யாவரும் அவர் செய்த மகிமையான செய்கைகளைக்குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்.

௰௮ ¶ [3]பின்பு அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியம் எதற்கு ஒப்பாயிருக்கின்றது? அதை எதற்கு நிகர்சொல்வேன்?

௰௯ அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கின்றது; (எப்படியெனில்) ஒரு கடுகை ஒரு மனிதன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான், அது வளர்ந்து பெரிய செடியாயிற்று, அப்பொழுது ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளிலே கூடுகட்டின என்றார்.

௨௰ ¶ அன்றியும் அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியத்தை எதற்கு நிகர்சொல்வேன்?

௨௧ அது புளி [illegible] பாவுக்கு
ஒப்பாயிருக [illegible] யெ
னில் அதை [illegible] ழ*
மூன்று மரக் [illegible] ம
புளிப்படை [illegible] லெ
அடைத்துவை

௨௨ ¶ [4]அ [illegible] ந
லேமுகப்ப [illegible] ா
கிறபொழு [illegible] கா
றும் கிராம [illegible] ய்
உபதேசமப

௨௩ ¶ அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, சிலபேர்மாத்திரந்தான் இரட்சிக்கப்படுவார்களோ என்றான்.

௨௪ ¶ அதற்கு அவர் சொன்னது: [5]இடுக்கமான வாசலின் வழியாய்ச் (சீவனில்) பிரவேசிக்க மிகவும் பிரயாசப்படுங்கள், [6]என்னத்தினாலெனில், அநேகர் உட்பிரவேசிக்கத் தேடினாலும் பிரவேசிக்கமாட்டார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௫ [7]வீட்டெசமான் எழுந்திருந்து கதவைப் பூட்டின பின்பு, [8]நீங்கள் வெளியே நின்று [9]கதவிலே தட்டி ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்று கூப்பிடத்தொடங்கும் காலத்திலே [10]அவர், நான் உங்களை அறியேன் என்றும் நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியமாட்டேன் என்றும் உங்களுடனே சொல்லும்பொழுது.

௨௬ நீங்கள் உமக்கு முன்பாகப் போசனபானம்பண்ணினோமே நீர் எங்கள் வீதிகளிலே போதகம்பண்ணினீரே என்று சொல்லுவீர்கள்.

௨௭ [11]ஆனாலும் அவர் சொல்வது. உங்களை அறியேன்; நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியேன்; [12]அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லாரும் என்னைவிட்டுப்போங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

௨௮ [13]நீங்கள் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களையும் சகல தீர்க்கதரிசிகளையும் பராபரனுடைய இராச்சியத்தில் உள்ளவர்கள் என்றும் உங்களைப் புறம்பே தள்ளப்பட்டவர்கள் என்றும் காணும்பொழுது, [14]உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்

௨௯ அன்றியும் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து சனங்கள்வந்து பராபர

கி. பி. ௩௩

1 லூக் ௰௪ ௫
2 லூக் ௰௯ ௯
3 மத் ௰௩ ௩௧ மாற் ௪ ௩௰
* மத் ௰௩ ௩௩
4 மத் ௭ ௰௩ ௰௪ மாற் ௭ ௭
5 மத் ௭ ௰௯
6 யோவா ௭ ௩௪ ௮ ௨௧ ௰௩ ௩௩ உரோ ௯ ௩௧
7 சங் ௩௨ ௬ ஏசா ௫௫ ௬
8 மத் ௨௫ ௰
9 லூக் ௬ ௪௬
10 மத் ௭ ௨௩ ௨௫ ௰௨
11 மத் ௭ ௨௩ ௨௫ ௪௧
12 சங் ௬ ௮ மத் ௨௫ ௪௧
13 மத் ௮ ௰௨
14 மத் [illegible]

னுடைய இராச்சியத்தில் பந்தியிருப்பார்கள்.

௩௰ [1]அப்பொழுது பிந்தினோர் முந்தினோராய் இருப்பார்கள்; முந்தினோர் பிந்தினோராவார்கள் என்றார்.

௩௧ ¶ அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்தில் போய், ஏரோதே உம்மைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறான்; ஆகையால் நீர் இவ்விடத்தை விட்டுப் போகவேண்டும் என்றார்கள்.

௩௨ அவர்களுடனே அவர் சொன்னது: நீங்கள் போய் இன்றைக்கும் நாளைக்கும் நான் பசாசுகளைத் துரத்தி ஆரோக்கியங்களைச் செய்து முடித்து, [2]மூன்றாம் நாளில் நிறைவடைவேன்.

௩௩ முக்கியமாக எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசி மடிந்து போகிறது வழக்கமல்லாதபடியால், நான் இன்றைக்கும் நாளைக்கும் பின் வருகிற நாளிலேயும் இவ்விடங்களில் நடக்கவேண்டியதாய் இருக்கின்றதென்று அந்த நரிக்குச் சொல்லுங்கள்.

௩௪ [3]எருசலேம் பட்டணமே, எருசலேம் பட்டணமே, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்கள்மேல் கல்லெறிந்து தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறாயே, ஒரு கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே சேர்த்துக்கொள்ளுகிற விதமாய் நான் அநேகந்தரம் உன் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன், நீங்கள் வரமாட்டோம் என்கிறீர்கள்.

௩௫ (ஆதலால்) [4]உங்கள் வாசஸ்தலம் உங்களுக்குப் பாழாக விடப்படும்; அல்லாமலும் [5]நீங்கள் பராபரனுடைய நாமத்தினால் வருகிறவர் தோத்திரம் செய்யப்படத்தக்கவர் என்று சொல்லும் காலபரியந்தம் என்னைக் காணாமல் இருப்பீர்கள் என்றார்.

௰௪. அதிகாரம்

௧ கிறிஸ்து நீர்க்கோவையுள்ள ஒருவனை ஓய்வுநாளிலே குணமாக்கினது, எ தாழ்மையாய் நடக்கவேண்டுமென்றும், ௰௨ எளியவர்களுக்கு விருந்துசெய்யவேண்டுமென்றும் கற்பித்தது, ௰௬ பராபரனுடைய வசனத்தை அசட்டைபண்ணுகிற லவுகீக சிந்தையுள்ள மனிதர்கள் பரமண்டலத்தில் பிரவேசிக்கக் கூடாததைப் பெரிய விருந்தின் உவமையினாலே காண்பித்தது, ௨௫ சிலுவையைச் சுமந்து தம்முடைய சீஷர்களாய் இருக்கவேண்டியவர்கள் வெட்கத்துடன் பின்வாங்கிப் போய், ௩௪ சாரமற்ற உப்பைப்போல அபிரயோசனமுள்ளவர்களாய் இராதபடிக்கு முன்னடியாய் கஷ்டத்தையும் நயத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்பது.

ஒரு ஓய்வுநாளில் அவர் பரிசேயருக்குள்ளே தலைவரானவர்களில் ஒருவனுடைய வீட்டிலே போசனம்பண்ணும்படிக்குப் போகிறபொழுது,

௨ பாண்டுவியாதியுள்ள ஒரு மனிதன் அவருக்கு முன்பாக நிற்கையில், அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

௩ அப்பொழுது இயேசுவானவர் நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் நோக்கி, [6]ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமா என்றார்.

௪ அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; அப்பொழுது அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கி,

௫ அனுப்பி பின்பு அவர்களுடனே சொன்னது: [7]உங்களில் எவனானாலும் தன் கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் ஒரு கிணற்றிலே விழுந்தால், உடனே அதைத் தூக்கிவிடானோ என்றார்.

௬ அதற்கு மாறுத்தரம் சொல்ல அவர்கள் திராணியில்லாதிருந்தார்கள்.

எ ¶ விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதல் இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு உவமையாய்ச் சொன்னது:

அ நீ ஒருவனால் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டபொழுது, பந்தியில் முதல் இடத்தில் உட்கார

கி. பி. ௩௩.

[1] மத். ௰௯. ௩௰; ௨௰. ௰௬; மாற். ௰. ௩௧.
[2] எபி. ௨. ௰.
[3] மத். ௨௩. ௩எ.
[4] ௩ மோ. ௨௬. ௩௧, ௩௨; சங். ௬௯. ௨௫; ஏசா. ௧. எ; தானி. ௯. ௨எ; மீகா. ௩. ௰௨.
[5] சங். ௱௰அ. ௨௬; மத். ௨௧. ௯; மாற். ௰௧. ௰; லூக். ௰௯. ௩அ; யோவா. ௰௨. ௰௩.
[6] மத். ௰௨. ௰.
[7] ௨ மோ. ௨௩. ௫; ௫ மோ. ௨௨. ௪; லூக். ௰௩. ௰௫.

ராதிரு; என்னத்தினாலென்றால உன்னிலும் அதிக கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்க,

௯ உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து, இவருக்கு இடங்கொடும் என்று சொல்ல, நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்தில் போயிருக்கவேண்டியதாய் இருக்கும்.

௰ ஆகையால் [1]நீ அழைக்கப்பட்டபொழுது, நீ போய்த் தாழ்ந்த இடத்தில் உட்காருவாயாக; அப்பொழுது உன்னை அழைத்தவன் உன்னிடத்தில் வந்து, சிநேகிதனே, மேலான இடத்தில் போயிரும் என்று சொல்ல, பந்தியில் இருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்.

௰௧ [2]அப்படிக்கு எவன் தன்னை உயர்த்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான், எவன் தன்னைத் தாழ்த்துகிறானோ அவன் உயர்த்தப்படுவான் என்றார்.

௰௨ ¶ அல்லாமலும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனுடனே சொன்னது: நீர் பகல்விருந்தை அல்லது இராவிருந்தைப் பண்ணுகிறபொழுது, உமது சிநேகிதரையும் சகோதரரையும் மற்ற இனத்தாரையும் ஐசுவரியமுள்ள பிறரையும் அழைக்கக் கூடாது, அழைத்தால் அவர்களும் உம்மை அழைப்பார்கள், அதினாலே உமக்குப் பதில் பலன் உண்டாகும்.

௰௩ நீர் விருந்து பண்ணும்பொழுது, [3]ஏழைகள், ஊனர், சப்பாணிகள், குருடர், இப்படிப்பட்டவர்களை அழைப்பீராக.

௰௪ அப்பொழு
குப் பதில்சொ
லாதபடியால்
பீர்; நீதிமான்
திருக்கும் கா
பதில் அளிக்க

௰௫ ¶ அவ
கியிருந்தவர்
வசனங்களைக்

அவன் அவரை நோக்கி, [4]பராபரனுடைய இராச்சியத்தில் போசனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.

௰௬ அதற்கு அவர் சொன்னது: [5]ஒரு மனிதன் பெரிய விருந்து பண்ணி,

௰௭ அநேகரை அழைத்து, விருந்துவேளையிலே தன் ஊழியக்காரனை நோக்கி, [6]நீ அழைக்கப்பட்டவர்களிடத்திற்குப் போய், சகலமும் எத்தனமாயிற்று, ஆகையால் வாருங்களென்று சொல் என்று அனுப்பினான்.

௰௮ அப்பொழுது அவர்கள் எல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள், ஒருவன் சொன்னது: ஒரு வயல்நிலத்தைக் கொண்டேன், நான் போய் அதைப் பார்க்க அவசியமாயிருக்கின்றது; ஆகையால் எனக்கு மன்னிக்கவேண்டும் என்று உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௰௯ வேறொருவன் சொன்னது: ஐந்து ஏர்மாடு கொண்டேன், அவைகளை நான் போய்ச் சோதிக்கவேண்டும், ஆகையால் எனக்கு மன்னிக்கும்படிக்கு உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௨௰ வேறொருவன் சொன்னது: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினாலே நான் வரக்கூடாது என்றான்.

௨௧ பின்பு அந்த ஊழியக்காரன் வந்து, அவைகளைத் தன் எசமானுக்கு அறிவித்தான்; அப்பொழுது வீட்டெசமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி, நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் போய், தரித்திரரையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே அழைத்துக்கொண்டுவா என்றான்.

௨௨ அந்தப்படி ஊழியக்காரன் அழைத்து வந்து, ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று,

[1] வாக் ௨௫ ௬, ௭

[2] யோபு ௨௨ ௨௯ சங் ௰௮ ௨௭ வாக் ௨௯ ௨௩ மத் ௨௩ ௰௨ லூக் ௰௮ ௰௪ யாக் ௪ ௬ ௧ பே ௫ ௫

[3] நெகே ௮ ௰, ௰௨

[4] வெளி ௰௯ ௯

[5] மத் ௨௨ ௨

[6] வாக் ௯ ௨, ௩

ADHYAYA

கி. பி. ௩௩.

௨௩ பினனும் இடம் உண்டு என்றான்; அபபொழுது எசமான் ஊழியக்காரனுடனே சொன்னது: நீ வழிகளிலேயும் வேலிகள் அருகேயும் புறபபட்டுபபோய, என் வீடுநிறைய வரும்படிக்குச சனஙகளை வருநதிக் கூட்டிக்கொண்டுவா.

௨௪ அழைக்கபபட்டிருந்த [1]அந்த மனிதரில ஒருவராகிலும் என்னுடைய விருந்தை ருசி பார்பபதில்லை என்று உஙகளுக்குச சொல்லுகிறேன் என்று சொன்னான் என்றார்.

௨௫ ¶ பினபு அநேக சனஙகள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப போகையில், அவா திரும்பிப பார்த்து அவர்களுடனே சொன்னதாவது:

௨௬ [2]ஒருவன் என்னிடததில் வநதும் [3]தன் தகப்பனையும, தாயையும், மனைவியையும, பிளளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், [4]தன சுயசீவனையும் பகையாவிட்டால் என் சீஷனாய் இருக்கமாட்டான்.

௨௭ [5]அல்லாமலும் தன் சிலுவை மரத்தைச சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் என் சீஷனாய் இருக்கமாட்டான.

௨௮ [6]உங்களில் எவனாகிலும் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்தால் தான் அஸ்திபாரம் போட்டபின்பு, அதை முடியக் கட்டுகிறதற்குத் திராணியில்லாமல் இருக்கும்பொழுது,

௨௯ அதைப் பாாககிறவர்கள் எல்லாரும், இந்த மனிதன் கட்டத் தொடஙகி முடிக்கிறதற்குத திராணி இல்லை என்று தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு,

௩௰ அவன் முன்பு உடகார்ந்து அதைக் கட்டித தீர்க்கிறதற்குத் திராணியுண்டா இல்லையா என்று அறியும்படி, செல்லும்செலவைக் கணக்குப பாராமல் இருபபானா?

௩௧ அல்லது, எந்த இராசாவானாலும் மற்றொரு இராசனுடனே யுததம்செய்யப போகிறதற்கு முன்பு, உடகாநது தனககு விரோதமாய் இருபதினாயிரம சேவகரைக் கொணடுவருகிறவனோடே பதினாயிரம் சேவகரைககொண்டு எதிாககக்கூடுமோ கூடாதா என்று ஆலோசனைபணணாமல இருபபானா?

௩௨ கூடாதென்று அறிந்தால், அவன தூரததில் இருககையில், தானாதிபதிகளை அனுபபிச சமாதானததுககாகக கேட்டுககொள்ளும்படிககு (அபபடிச் செய்வான அல்லவா?)

௩௩ அதுபோல உஙகளில் எவனானாலும் தனககு உணடான எல்லாவற்றையும வெறுததுவிடாவிட்டால் என் சீஷனாய் இருககமாட்டான.

௩௪ ¶ [7]உபபானது நல்லதுதான; உபபானது சாரம அற்றுபபோனால், எதினாலே அது சாரமாககபபடும்?

௩௫ அது நல்ல நிலததிலாகிலும் எருவிலாகிலும போடபபடததககதல்ல; அதை வெளியே கொட்டிபபோடுவாாகள்; கேட்கிறதற்குக காதுளளவன கேட்கக்கடவன் என்றார்.

௰௫. அதிகாரம்.

௧ காணாமறபோன ஆட்டையும, ௮ காணாமற போன பணததையும, ௰௧ கெட்டுபபோன குமாரனையும உவமைகளாகச் சொனனது

[8]அன்றியும் சகல ஆயககாரரும் பாவிகளும் அவருடைய வசனஙகளைக் கேட்கும்படிக்கு அவரிடததில சேர்நதார்கள.

௨ அபபொழுது பரிசேயரும் வேதபாரகரும் மொறுமொறுத்து, இவா [9]பாவிகளை ஏற்றுக்கொண்டு அவாகளோடே சாபபிடுகிறார் என்றார்கள்.

௩ அவர்களுடனே அவா சொன்ன உவமையாவது:

௪ ¶ [10]உங்களில் யாவனாகிலும் தனக்கு உடைமையான நூறு ஆடு

[1] மத ௨௧ ௪௩ ௨௨ ௮ அப ௰௩ ௪௬

[2] ௫ மோ ௰௩ ௬ ௩௩ ௯ மத ௰ ௩௭

[3] உரோ ௯ ௰௩

[4] வெளி ௰௨ ௰௧

[5] மத். ௰௬ ௨௪ மாற் ௮ ௩௪ லூக் ௯ ௨௩ ௨ தீமோ ௩ ௰௨

[6] வாக் ௨௪ ௨௭

[7] மத ௫ ௰௩ மாற. ௯ ௫௰

[8] மத ௯ ௰

[9] அப ௰௧ ௩ கலா ௨ ௰௨

[10] மத ௰௮ ௰௨.

கி. பி. ௩௩.

களில் ஒன்றை இழந்தால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுப்போய், இழந்ததைக் கண்டுபிடிக்கும் பரியந்தம் தேடாமல் இருப்பானா?

௫ கண்டுபிடித்தபின்பு, அவன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்களின்மேல் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்தபொழுது,

௬ சிநேகிதரையும் அயலாரையும் கூட வரவழைத்து, காணாமல் போன [1]என் ஆட்டைக் கண்டுபிடித்தேன்; ஆகையால் என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா?

௭ அதுபோல [2]மனம்திரும்ப அவசியப்படாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களிலும், மனம்திரும்புகிற ஒரே பாவியைக்குறித்துப் பரமண்டலத்தில் உள்ளவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

௮ ¶ அல்லது பத்துத் திராக்குமா *பணத்தை உடைய பெண் எவளானாலும் ஒரு திராக்குமாவை இழந்தால், விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்பரியந்தம் நன்றாய்த் தேடாமல் இருப்பாளா?

௯ கண்டுபிடித்த பின்பு அவள் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து, நான் இழந்த திராக்குமாவைக் கண்டுபிடித்தேன்; ஆகையால் என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?

௰ அதுபோல மனம்திரும்புகிற ஒரே பாவியைக்குறித்துப் பராபரனுடைய தூதருக்குமுன்பாகச் சந்தோஷம் உண்டாயிருக்கின்ற
தென்று உங்க
கிறேன் என்றா

௰௧ ¶ பின்னு
தாவது. ஒரும
குமாரர் இருந்

௰௨ அவர்க
தகப்பனை நோ

ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கைத் தரவேண்டும் என்றான்; அந்தப்படி அவன் அவர்களுக்குப் பொருளைப் பங்கிட்டான்.

௰௩ சிலநாளுக்குப் பின்பு இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்திற்குப் பிரயாணமாய்ப் போய், அங்கே கெட்ட மார்க்கமாய்ச் சீவனம் பண்ணித் தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

௰௪ எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு, அத்தேசத்திலே மிகுந்த பஞ்சகாலம் உண்டாயிற்று; அப்பொழுது அவனுக்குக் குறைவுவரத் தொடங்கினபடியினாலே,

௰௫ அவன் போய், அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனைச் சேர்ந்துகொண்டான்; அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களிலே பன்றிகளை மேய்க்கும்படிக்கு அனுப்பினான்.

௰௬ அப்பொழுது பன்றிகள் தின்னுகிற தவிடுகளினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான்; அவற்றையும் ஒருவனும் அவனுக்குக் கொடுக்கவில்லை.

௰௭ அப்படியிருக்கும் காலத்தில் அவன் புத்தியடைந்து சொன்னதாவது: ஆ என் தகப்பனிடத்திலே எத்தனை கூலிக்காரர் மிகுந்த உணவை உடையவர்களாய் இருக்கிறார்கள்; நான் இங்கே பசியினாலே கெட்டுப்போகிறேன்.

௰௮ நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவம்செய்தேன்.

௰௯ இதுமுதல் நான் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுவதற்கு அபாத்திரனாய் இருக்கிறேன்; உம்முடைய கூலிக்காரரில் ஒருவனைப்போல என்னை வைத்துக்கொள்ளும் என்றுசொல்லவேண்டும் என்றெண்ணி,

---

[1] ௧ பே. ௨ ம, ௨௫

[2] லூக் ௫ ௩௨

* அல்லது ஏழரைப் பேனிஸ்ரு, அல்லது உரோமருடைய ஒரு பேனிஸருச் சரியான அரைக்கால் அவுன்ச வெள்ளி மத் ௰௭ ௨௮

[3] மாற் ௰௨ ௪௪

௨௰ எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்திற்குப் போனான், [1]அப்பொழுது அவன் தூரமாய் இருக்கையில் தகப்பன் அவனைக் கண்டு, உருக்கமாய் இரங்கி ஓடி வந்து, அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்தான்.

௨௧ குமாரன் அவனை நோக்கி, [2]தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவம் செய்தேன்; இதுமுதல் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுவதற்கு நான் பாத்திரன் அல்லவென்று சொன்னபொழுது,

௨௨ தகப்பன் தன் வேலைக்காரரை நோக்கி, நீங்கள் (போய்) முக்கியமான வஸ்திரத்தைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி, இவனுடைய கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் கொடுத்து,

௨௩ பின்பு கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடித்துச் சமையுங்கள்.

௨௪ [3]என் குமாரனாகிய இவன் மரித்தான், மறுபடியும் உயிரோடிருக்கிறான்; இவன் காணாமல் போனான், இப்பொழுது காணப்பட்டான்; ஆகையால் நாம் புசித்து மகிழ்ச்சியாய் இருக்கக்கடவோம் என்றான்; அந்தப்படி அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

௨௫ அவனுடைய மூத்த குமாரன் வயலில் இருந்தான்; அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வந்தபொழுது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு,

௨௬ வேலைக்காரரில் ஒருவனை அழைத்து, இதென்ன என்று விசாரித்தான்.

௨௭ வேலைக்காரன் அவனை நோக்கி, உன் சகோதரன் வந்தான்; உன் தகப்பன் அவனைச் சுகத்தோடே திரும்பப் பெற்றுக்கொண்டபடியினாலே கொழுத்த கன்றை அடிப்பித்தான் என்றான்.

௨௮ அப்பொழுது அவன் கோபம் அடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான்; ஆதலால் தகப்பன் வெளியே வந்து, அவனை மிகவும் வேண்டிக்கொண்டு அழைத்தான்.

௨௯ அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது: இவ்வளவு வருஷம் நான் உமக்கு ஊழியம்செய்து, உமது கற்பனையை ஒருக்காலும் மீறி நடக்கவில்லை; அப்படியிருந்தும் நான் என் சிநேகிதரோடே மகிழ்ச்சியாய் இருக்கும்படிக்கு ஒருக்காலும் நீர் ஒரு ஆட்டுக்குட்டியை எனக்குக் கொடுக்கவில்லையே.

௩௰ உம்முடைய பொருள்களை வேசிகளோடே பட்சித்த உமது குமாரனாகிய இவன் வந்தபொழுது, கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீர் என்றான்.

௩௧ அதற்குத் தகப்பன் சொன்னது: மகனே, நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய்; அல்லாமலும் எனக்கு உண்டானவை யாவும் உன்னுடையவைகளாய் இருக்கின்றன.

௩௨ [4]உன் சகோதரனாகிய இவன் மரித்தான், மறுபடியும் உயிரோடிருக்கிறான்; காணாமல்போனான், (இப்பொழுது) காணப்பட்டான்; ஆனபடியினாலே நாம் மகிழ்ச்சியாகிக் களிப்படையவேண்டுமே என்று சொன்னான் என்றார்.

௰௬ அதிகாரம்.

௧ அநீதியுள்ள உக்கிராணக்காரனைக் குறித்த உவமை. ௰௪ கிறிஸ்து பொருளாசையும் வஞ்சனையும் உள்ள பரிசேயரைக் கடிந்தது. ௰௯ ஐசுவரியவானையும் ஏழையான இலாசருவையுங் குறித்த உவமை.

அன்றியும் அவர் தம்முடைய சீஷரோடு சொன்னதாவது: ஐசுவரியமுள்ள மனிதனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் எசமானுடைய ஆஸ்திகளை

கி. பி. ௩௩.

[1] அப். ௨. ௩௯; எபே. ௨. ௰௩, ௰௭.

[2] சங். ௫௧. ௪.

[3] ௩௨ வச.; எபே. ௨. ௧; ௫. ௰௪; வெளி. ௩. ௧.

[4] ௨௪ வச.

அழிக்கிறதாக அவனுக்கு அறிவித்தார்கள்.

௨ அப்பொழுது எசமான் அவனை அழைத்து, உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன், நீ இனிமேல் உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது; ஆகையால் உன் உக்கிராணக்கணக்கைக் கொடு என்றான்.

௩ அப்பொழுது உக்கிராணக்காரன் தனக்குள்ளே எண்ணிக்கொண்டதாவது: என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்னிலிருந்து எடுத்துக்கொள்ளுகிறபடியினாலே என்ன செய்யலாம்? (நிலம்) கொத்துகிறதற்குப் பெலன் இல்லை, இரக்க வெட்கமாயிருக்கின்றது.

௪ உக்கிராண விசாரிப்பை விட்டுத் தள்ளப்படும்பொழுது, என்னைத் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொள்ளுகிறதற்கான (சிநேகிதர்கள்) உண்டாகும்படிக்குச் செய்யவேண்டிய வகை தெரியவந்தது என்று எண்ணி,

௫ ¶ தன் எசமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒருவன் ஒருவனாக அழைத்து, முதலாவது வந்தவனை நோக்கி, நீ என் எசமானிடத்தில் பட்டகடன் எவ்வளவு என்றான்; அதற்கு அவன், நூறுகுடம்* எண்ணெய் என்றான்.

௬ அப்பொழுது உக்கிராணக்காரன் அவனைநோக்கி, நீ உன் சீட்டை எடுத்துச் சீக்கிரமாய் உட்கார்ந்து, ஐம்பது என்று எழுது என்றான்.

௭ பின்பு அவ [illegible] னை நோக்கி, நீ ப [illegible] வு என்றான்; [illegible] று கலன்† கோது [illegible] ப பொழுது உ [illegible] வ னைநோக்கி, [illegible] டு தது எண்பது [illegible] ன் றான்

அ அநீதியு [illegible] கா ரன் விவேக [illegible] லி னாலே எசமான் அவனைப் புகழ்ந்தான்; [1]இவ்விதமாய் ஒளியின்பிள்ளைகளிலும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக விவேகமாய் இருக்கிறார்கள்.

௯ ¶ நானும் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [2]நீங்கள் மாளும்பொழுது, உங்களை நித்தியமான வீடுகளில் சேர்த்துக்கொள்ளும்படிக்குக் கபடமுள்ள லவுகீகப்பொருளால்‡ உங்களுக்காகச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.

௰ [3]கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலேயும் உண்மையுள்ளவனாய் இருப்பான்; கொஞ்சமாய அநீதி செய்கிறவன் அநேகமாயும் அநீதி செய்வான்.

௰௧ அப்படியிருக்க நீங்கள் கபடமுள்ள லவுகீகப் பொருளிலே§ உண்மை இல்லாமல் இருந்தால், மெய்யான பொருள்களை உங்களுக்கு யார் நம்பிக்கையோடே ஒப்புவிப்பார்கள்?

௰௨ அல்லாமலும் நீங்கள் மற்றொருவனுடையதை உண்மையில்லாமையாய் நடத்தினால், உங்களுக்குச் சொந்தமாக எதையாகிலும் யார் உங்களுக்குக் கொடுப்பார்கள்?

௰௩ [4]எந்த வேலைக்காரனானாலும் இரண்டு எசமான்களுக்கு அடிமைசெய்யமாட்டான்; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; நீங்கள் பராபரனுக்கும் லவுகீகப் பொருளுக்கும், அடிமையாய் இருக்கமாட்டீர்கள் என்றார்

௰௪ ¶ [5]பணத்தின்மேல் ஆசையுள்ளவர்களாகிய பரிசேயரும் இந்த வசனங்கள் யாவையும் கேட்டு அவரைக்குறித்துப் பரியாசம்பண்ணினார்கள்

௰௫ அப்பொழுது அவர் அவர்களைநோக்கி, [6]நீங்கள் மனிதர்முன்பாக உங்களை நீதிமான்கள் என்ற

கி. பி. ௩௩

* ஐந்து மரக்கால் கொள்ளத்தக்க ஓர் அளவு எசே ௪௰ ௫, ௰௧, ௰௪

† இந்தக் கலம் பனிரண்டு மரக்கால் கலமாயிராமல் அத்தேசத்தில் வழங்கின ஏறக்குறைய ௰௬ - மரக்கால் கொள்ளத்தக்க கலமென்றறிக

[1] யோவா ௰௨. ௩௬. எபே ௫. ௮. ௧ தெச ௫. ௫

[2] தானி ௪. ௨௭ மத் ௬. ௰௯. ௰௯. ௨௪. லூக் ௰௨. ௩௩. ௧ தீமோ ௬. ௰௭, ௰௮, ௰௯

‡ அல்லது மம்மோனா

[3] மத் ௨௫. ௨௧. லூக் ௰௯. ௰௭

§ அல்லது மம்மோனா

[4] மத் ௬. ௨௪

[5] மத் ௨௩. ௰௪

[6] லூக் ௰. ௨௯

காண்பிக்கிறீர்கள்; [1]ஆனாலும் பராபரன் உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; [2]மனிதருக்குள்ளே மேன்மையாய் எண்ணப்பட்டிருக்கிறது பராபரனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கின்றது.

௰௬ [3]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளுடைய பிரமாணங்களும் யோவான்வரைக்கும் சென்றன; அதுமுதல் பராபரனுடைய இராச்சியம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகின்றது; யாவரும் வலுமையாய் அதற்கு உட்படுகிறார்கள்.

௰௭ [4]வானமும் பூமியும் ஒழிந்துபோகிறது எளிதாயிருந்தாலும், வேதப்பிரமாணத்தில் ஒரு எழுத்தின் உறுப்பும் கெட்டுப்போகாது

௰௮ [5]தன் மனைவியைத் தள்ளி வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரம்செய்கிறான்; புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரம்செய்கிறான்.

௰௯ ¶ அன்றியும் ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் மெல்லிதான உடையும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

௨௰ அல்லாமலும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரன் இருந்தான், அவன் பருக்கள் நிறைந்த தேகமுள்ளவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலின் அருகே கிடந்து, அவனுடைய பந்தியிலிருந்து விழும் உச்சிட்டங்களாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்.

௨௧ அதுவுமல்லாமல் நாய்கள் வந்து அவனுடைய பருக்களை நக்கும்.

௨௨ பின்பு அந்தத் தரித்திரனானவன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமினுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான்.

௨௩ பின்பு அவன் நரகத்திலே வேதனைப்படுகிறபொழுது தன் கண்களை உயர்த்தித் தூரத்திலே ஆபிரகாமையும் அவனுடைய மடியிலே இலாசருவையும் கண்டு,

௨௪ தகப்பனாகிய ஆபிரகாமே, இந்தச் [6]சுவாலையிலே மிகுந்த வேதனைப்படுகிறேன்; [7]ஆகையால் நீர் என்மேல் இரங்கி இலாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து, என்னுடைய நாவைக் குளிரப்பண்ணும்படிக்கு அவனை அனுப்பவேண்டும் என்று கூப்பிட்டான்

௨௫ அதற்கு ஆபிரகாம் சொன்னது: [8]மகனே, நீ பூமியிலே உயிரோடிருந்த காலத்திலே, உன் நன்மைகளைப் பெற்றுக்கொண்டாயே; இலாசருவும் அப்படியே தீமைகளைப் பெற்றுக்கொண்டான்; அதை நினைத்துக்கொள்; இப்பொழுது இவன் தேற்றப்படுகிறான், நீ வேதனைப்படுகிறாய்.

௨௬ அதுவுமல்லாமல் இவ்விடத்தைக் கடந்து உங்களிடத்துக்கு வரவும், அல்லது அவ்விடத்தைக் கடந்து எங்களிடத்துக்கு வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்றதே என்றான்.

௨௭ அதற்கு அவன் சொன்னது: தகப்பனே, அப்படியானால் (பூமியிலே) எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு; அவர்களும் வேதனையுள்ள இவ்விடத்துக்கு வராதபடிக்கு இவன் போய், அவர்களுக்கு (இதைக்குறித்துச்) சாட்சி கொடுக்கும்பொருட்டாய்,

௨௮ இவனை என் தகப்பனுடைய வீட்டுக்கு அனுப்பும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

கி. பி. ௩௩.

[1] சங். ௭ ௯
[2] ௧ சாமு. ௰௬ ௭
[3] மத். ௪ ௰௭ ௰௧ ௰௨, ௰௩ லூக். ௭ ௨௬.
[4] சங். ௱௨ ௨௬, ௨௭ ஏசா ௪௰ ௮ ௫௧ ௬ மத் ௫ ௰௮ ௧ பே ௧ ௨௫
[5] மத் ௫ ௩௨ ௰௯. ௯ மாற் ௰ ௰௧ ௧ கொரி ௭ ௰, ௰௧
[6] ஏசா ௬௬ ௨௪ மாற். ௯ ௪௪ ௪௮
[7] சகரி ௰௪ ௰௨
[8] யோபு ௨௧ ௰௩ லூக் ௬ ௨௪

௨௯ அதற்கு ஆபிரகாம் சொன்னது: [1]அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டே; அவர்களுக்குச் செவிகொடுக்கலாமே என்றான்.

௩௰ அவன் சொன்னது: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்துக்குப்போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

௩௧ அதற்கு அவன் சொன்னது: அவர்கள் மோசேயுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாமல் இருந்தால் [2]மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் சம்மதிக்கமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

௰௭. அதிகாரம்

௧ பிறருக்கு இடறல்செய்யாமலிருக்கவும், ௩ ஒருவருக்கொருவர் மன்னிக்கவும் கிறிஸ்து கற்பித்து, ௬ விசுவாசத்தின் பலனைச் சொன்னது ௭ நாம் பராபரனுக்கு அடங்கவேண்டியதேயொழிய அவர் நமக்கு அடங்கவேண்டியதில்லையென்பதும் ௰௧ இயேசு பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கி, ௨௰ பராபரனுடைய இராச்சியத்தையும் மனுஷகுமாரனுடைய வருகையையுங்குறித்துச் சொன்னது

அன்றியும் அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது: [3]குற்றம்செய்வதற்கான காரணங்கள் நடவாமல் இருக்கிறது கூடாத காரியந்தான்; ஆனாலும் ஐயோ! அவைகளைச் செய்கிறவனுக்கு வேதனைவரும்.

௨ அவன் இந்தச் சிறியரில் ஒருவன் குற்றஞ்செய்கிறதற்குக் காரணமாய் இராதபடிக்கு அவனுடைய கழுத்[illegible] [illegible]ாங்கல்லைக் கட்டிச [illegible] [illegible]வமிழ்த்தினால் அ[illegible] இருக்கும்.

௩ நீங்கள் [illegible] [illegible]க் கடவீர்கள்; [illegible] [illegible]ன க்கு விரோத[illegible] [illegible]ர னானால் அவ[illegible] [illegible]ள்; [5]அவன் மன[illegible] [illegible]அ வனுக்கு ம[illegible]

௪ அவன் [illegible] [illegible]ழ தரம் உனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, ஒரு நாளிலே எழுதரம் உன்னிடத்தில் வந்து, மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்.

௫ ¶ அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி, விசுவாசம் எங்களுக்குள்ளே பெருகும்படி செய்யும் என்றார்கள்.

௬ அதற்குக் கர்த்தர் சொன்னது: [6]கடுகுவிதை அவ்வளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி, நீ வேருடனே பிடுங்கப்பட்டுக் கடலில் நாட்டப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்

௭ ¶ அன்றியும் உங்களில் எவனாகிலும் உழுதலையாவது மேய்த்தலையாவது செய்கிற (தன்) வேலைக்காரனை வயலிலிருந்து வரக் (காணும்) பொழுது, நீ போய்ச் சாப்பிடு என்று உடனே அவனுக்குச் சொல்லுவான்?

௮ நீ எனக்காக இராப்போசனத்தை எத்தனம்பண்ணிக் கச்சைகட்டிக்கொண்டு, நான் போசனபானம் பண்ணுமளவும் [7]எனக்கு ஊழியம்செய்; பின்பு நீ போசனபானம் பண்ணலாம் என்றல்லவா அவனுடனே சொல்லுவான்?

௯ அந்தவேலைக்காரன் தனக்குக் கட்டளையிட்டவைகளைச் செய்தபடியினாலே எசமான் அவனை உபசாரஞ்செய்வானா? அப்படிச் செய்யமாட்டான் என்று நினைக்கிறேன்.

௰ அப்படிப்போல நீங்களும், உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபொழுதும், [8]நாங்கள் உபசாரம்பெற்றுக்கொள்ளுதற்கான ஊழியக்காரர் அல்ல, எங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைமாத்திரம் செய்தோமே என்று சொல்லுவீர்களாக என்றார்.

கி. பி. ௩௩.

1 ஏசா. ௮ ௨௰ ௩௪ ௰௬ யோவா ௫ ௩௯, ௪௫ அப ௰௫. ௨௧ ௰௭, ௧௧

2 யோவா ௰௨ ௰, ௰௧

3 மத ௰௮ ௬, ௭ மாற் ௯ ௪௨ ௧கொரி ௰௧ ௰௯

4 மத் ௰௮ ௰௫, ௨௧

5 ௬மோ ௰௯ ௰௭ லாக ௰௭ ௰ யாக் ௫ ௰௯

6 மத். ௰௭ ௨௰ ௨௧ ௨௧ மாற் ௯ ௨௩ ௰௧ ௨௩

7 லூக் ௰௨. ௩௭

8 யோபு ௨௨ ௩ [illegible] ௩௫ ௭ ரோமா ௰௧ ௩௫ ௰௩ ௩௫ ௧கொரி ௯ ௰௬, ௰௭ பிலே ௰௧.

௰௧ ¶ [1]அன்றியும் அவர் எருசலேமுக்குப பிரயாணமாய்ப் போகையில், சமாரியா நாட்டின வழியாயும் கலிலேயா நாட்டின் வழியாயும நடந்து,

௰௨ ஒரு கிராமததில் பிரவேசிககிறபொழுது, குஷ்டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து [2]தூரத்திலே நின்று,

௰௩ இயேசுவே, ஐயரே, எங்கள்மேல் இரஙகும் என்று கூபபிட்டார்கள்

௰௪ அவர்களை அவர் கண்டு, [3]நீங்கள் போய், உஙகளை ஆசாரியருககுக் காண்பியுங்கள் என்றா, அநதபபடி அவர்கள் போகையில் சுத்தமானார்கள.

௰௫ அபபொழுது அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியம் அடைந்ததைக் கண்டு,

௰௬ திரும்பி மிகுநத சததத்துடனே பராபரனைத் துதிதது அவருடைய பாதததின அருகே வணககமாய விழுநது, அவருககுத தோததிரம செலுத்தினான்.

௰௭ அவன் சமாரியா தேசததான், அபபொழுது இயேசுவானவா சொன்னது: பத்துபபேரும் அல்லவோ சுததமானாாகள, ஒனபதுபேர் எஙகே?

௰௮ பராபரனுக்குத் துதியைச செலுததும்படிக்கு இநத அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரவில்லையா என்று சொல்லி,

௰௯ அவனை நோக்கி, [4]நீ எழுந்து போ, உன் விசுவாசம உனனை இரட்சிததது எனறா

௨௰ ¶ பராபரனுடைய இராச்சியம் எபபொழுது வரும் என்று பரிசேயர் அவரிடததில் விசாரிததபொழுது, அவர் அவர்களுககு மறுமொழியாகச்சொன்னது: பராபரனுடைய இராச்சியம் வேடிக்கைப பிரகாரமாக * வாராது.

௨௧ [5]இதோ இங்கே என்றும், அதோ அஙகே என்றும் சொல்லமாட்டார்கள்; [6]பராபரனுடைய இராச்சியம் உங்களுககுள † இருக்கின்றதே என்றா.

௨௨ ¶ பின்னும சீஷருடனே அவர் சொன்னது: [7]மனிதகுமாரனுடைய நாள்களில் ஒனறைக காணும்படிக்கு நீஙகள் ஆசைபபடும் காலம வரும; அதைக காணாமல் இருபபீாகள.

௨௩ [8]அபபொழுது சிலா உஙகளை நோக்கி, இதோ இஙகே இருககிறார் என்றும, அதோ அஙகே இருக்கிறா என்றும் சொலலும காலததில, நீஙகள புறபபடாமலும பின்செல்லாமலும இருஙகள.

௨௪ [9]மினனானது வானததின ஒரு பககததிலிருநது மறறொரு பககம்வரைககும பிரகாசிககிறதுபோல, மனிதனுடைய குமாரன தன்னுடைய நாளில் இருபபாா.

௨௫ [10]அதற்குமுனபு அவா அநேகம பாடுகளை அனுபவிசது, இநதச சநததியினாலே தளளபபடவேணடியிருககின்றது.

௨௬ [11]நோவாவின் நாளகளில் நடநததுபோல, மனிதகுமாரனுடைய நாளகளிலும் நடககும்.

௨௭ நோவா பேழைககுள பிரவேசிதத நாளவரைககும சனஙகள போசனபானம்பணணியும, பெண்கொண்டும் பெண்கொடுததும வநதாாகள; அநநாளிலே சலபபிரளயம் வந்து எல்லாரையும அழித்தது

௨௮ [12]லோததினுடைய நாள்களில் நடந்ததுபோலவும் நடககும்; சனஙகள் போசனபானம் பண்ணியும், பொருள்களைக கொண்டும் விற்றும், செடிகளை நாட்டியும், (வீடுகளைக) கட்டியும வந்தாாகள்.

௨௯ [13]லோத்தென்பவன் சோதோம் ஊரைவிட்டுப் புறப்பட்ட நாளிலே வானததிலிருநது அககினியும் கந்தகமும் பெய்து எல்லாரையும் அழித்தது.

கி. பி. ௩௩.

1 லூக். ௯ ௫௧, ௫௨ யோவா. ௪ ௪

2 ௩ மோ. ௰௩ ௪௬

3 ௩ மோ ௰௩ ௨ ௰௪ ௨ மத ௮ ௪ லூக ௫ ௰௪

4 மத ௯ ௨௨. மாற ௫ ௩௪ ௰ ௫௨ லூக் ௭ ௫௰ ௮ ௪௮ ௰௮ ௪௨

* அலலது கண்ணுக்காண

5 ௨௩ வச

6 உரோ ௰௪ ௰௭

† அலலது உஙகள நடுவில யோவா ௧ ௨௬

7 மத் ௯ ௰௫ யோவா ௰௭ ௰௨

8 மத ௨௪ ௨௩ மாற ௰௩ ௨௧ லூக் ௨௧ ௮

9 மத. ௨௪ ௨௭

10 மாற ௮ ௩௧ ௯ ௩௧ ௰ ௩௩ லூக் ௯ ௨௨

11 ௧ மோ ௭ மத ௨௪ ௩௭

12 ௧ மோ. ௰௯

13 ௧ மோ ௰௯ ௰௬, ௨௪

௩௰ [1]மனிதனுடைய குமாரன் வெளிப்படும் நாளில் அப்படியே இருக்கும்.

௩௰௧ [2]அந்த நாளிலே வீட்டின் மேல் இருப்பவன் வீட்டுக்குள் இருக்கிறதன்பண்டங்களை எடுத்துக் கொண்டு போகும்படிக்கு இறங்காமல்போகக்கடவன்; அன்றியும் வயலில் இருப்பவன் பின்னிட்டுத் திரும்பாமல் போகக்கடவன்.

௩௰௨ [3]லோத்தினுடைய மனைவியை நினையுங்கள்.

௩௰௩ [4]எவனாகிலும் தன் சீவனை இரட்சித்துக்கொள்ளத் தேடினால் அதை இழந்துபோவான்; எவனாகிலும் அதை இழந்தால் அதைக் காத்துக்கொள்ளுவான்.

௩௰௪ [5]அந்த இராத்திரியில ஒரே படுக்கையின்மேல் கிடக்கும் இரண்டுபேரில் ஒருவன் பிடித்துக் கொள்ளப்படுவான், மற்றவன் விட்டுவிடப்படுவான்.

௩௰௫ மாவை அரைக்கும் இரண்டு பெண்களில ஒருத்தி பிடித்துக் கொள்ளப்படுவாள், மற்றவள் விட்டுவிடப்படுவாள் *

௩௰௬ வயலில் இருக்கும் இரண்டு பேரில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான், மற்றவன் விட்டுவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னபொழுது,

௩௰௭ அவர்கள் அவரை நோக்கி, ஆண்டவரே, [6]எங்கே என்றார்கள்; அதற்கு அவர் சொன்னது: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் சேரும் ...

௰௮.

௧ மிகவும் வேண்டு, உவமையாகக் காட் டாரனையும் குறித்தும் கள இரிஸதுவனை து ௰௮ கிரிஸதன தலைவன தன ஐ ஸ்வரியத்தைக்குறித்தது, ௨௮ வறுமையும் வெகுப லனைக்காட்டி, ௩௧ விசுது, ௩௫ ஒரு [illegible] தது

[7]அன்றியும் அவர்கள் சோர்ந்து போகாமல், எப்பொழுதும் செபம் பண்ண வேண்டுவதைக்குறித்து அவர் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது:

௨ ஒரு பட்டணத்திலே † ஒரு நியாயாதிபதி பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதரை எண்ணாமலும் இருந்தான்.

௩ அல்லாமலும் அந்தப் பட்டணத்திலே ஒரு கைம்பெண் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய், எனக்கு விரோதியானவனிடத்தில் பழிவாங்கவேண்டும் என்றாள்.

௪ அவன் அநேகநாள் மனதில்லாதிருந்தான்; பின்பு அவள் அவனிடத்தில் அதிகமாய்க் கேட்டபடியினாலே அவன் தனக்குள்ளே எண்ணினது; நான் பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதரை எண்ணாமலும் இருந்தும்,

௫ [8]இந்தக் கைம்பெண் என்னைத் தொந்தரவு பண்ணுகிறபடியால் நான் இவளுக்காகப் பழி வாங்கவேண்டும்; இல்லாவிட்டால் இவள் எப்பொழுதும் வந்து என்னை வருத்தப்படுத்துவாள் என்று எண்ணினான் என்று கர்த்தர் சொல்லி,

௬ பின்பு அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தியுங்கள்.

௭ [9]அந்தப்படி பராபரன் தாம் தெரிந்துகொண்டவர்களைக் குறித்துத் தாமதித்துத் தம்மை நோக்கி இரவும்பகலும் கூப்பிடுகிற அவர்களுக்காகப் பழிவாங்காமல் இருப்பாரா?

௮ [10]சீக்கிரத்தில அவர்களுக்காகப் பழிவாங்குவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகிலும் மனிதனுடைய குமாரன் வரும்பொழுது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.

௯ ¶ [11]அன்றியும் தங்களை நீதி

கி. பி. ௩௩.

1 ௨ தெச ௧. ௭.

2 மத் ௨௪ ௰௭ மாற ௰௩ ௰௫

3 ௧ மோ ௰௯. ௨௬

4 மத ௰ ௩௯ ௰௬ ௨௫ மாற அ ௩௫ லூக் ௯ ௨௪ யோவா ௰௨ ௨௫

5 மத் ௨௪ ௪௰, ௪௧ ௧ தெச ௪ ௰௭

* இந்த வசனம கிரேக்கபாஷையில அநேகம பிரதிகளில்இல்லை

6 யோபு ௩௯ ௩௰ மத ௨௪ ௨௮

7 லூக் ௰௧ ௫ ௨௧ ௩௬ ௨ரோ ௰௨ ௰௨ எபே ௬ ௰௮ கொலோ ௪ ௨ ௧ தெச ௫ ௰௭

† அல்லது ஒரு குறித்தபட்டணத்திலே

8 லூக ௰௧ ௮

9 வெளி ௬ ௰

10 [illegible]

11 [illegible]

மான்கள் என்று* நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலருக்கு அவர் சொன்ன உவமை யாவது:

௰ இரண்டு மனிதர் செபம்பண்ணும்படிக்குத் தேவாலயத்திற்குப் போனார்கள்; அவர்களில் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

௰௧ [1]பரிசேயனானவன் தனித்து நின்று பண்ணின செபமாவது: [2]பராபரனே, நான் பறிகாரர், அநீதர், விபசாரர், இப்படிப்பட்ட மற்ற மனிதரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராதவனானபடியினாலே உமக்குத் தோத்திரம் செலுத்துகிறேன்.

௰௨ வாரத்துக்குள்ளே இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; எனக்குண்டான யாவற்றிலும் பத்தில் ஒன்றைச் செலுத்துகிறேன் என்றான்.

௰௩ பின்பு ஆயக்காரன் தூரமாய் நின்று தன் கண்களையும் வானத்துக்கு உயர்த்தத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, பராபரனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும் என்றான்.

௰௪ அவன் அல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், [3]தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்றார்.

௰௫ [4]பின்பு குழந்தைகளை அவர் தொடும்படிக்கு அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; சீஷர் அதைக்கண்டு அவர்களை அதட்டினார்கள்.

௰௬ இயேசுவானவர் அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டுச் சொன்னது: பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்; [5]பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவர்களை உடையதே.

௰௭ [6]எவனாகிலும் பிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதில் பிரவேசிக்கமாட்டான் என்றார்.

௰௮ ¶ [7]அப்பொழுது தலைவனொருவன் அவரை நோக்கி, நல்ல போதகரே, நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

௰௯ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீர் என்னை நல்லவர் என்று என் சொல்லுகிறீர்? பராபரன் ஒருவரே அல்லாமல் மற்றொருவனும் நல்லவன் அல்லவே.

௨௰ [8]விபசாரம்பண்ணாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, [9]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்று சொல்லுகிற கற்பனைகளை அறிந்திருக்கிறீரே என்றார்.

௨௧ அதற்கு அவன் அவைகளை எல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

௨௨ இயேசுவானவர் அதைக் கேட்டு அவனுடனே சொன்னது: பின்னும் ஒன்றை நீர் செய்யவேண்டியதாயிருக்கின்றது, [10]உமக்கு உண்டானவைகளை எல்லாம் நீர் விற்றுப் பரமண்டலத்திலே உமக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்படிக்குத் தரித்திரருக்குப் பங்கிட்டுக் கொடுத்துப் பின்பு வந்து எனக்குப் பின்செல்லவேண்டும் என்றார்.

௨௩ அவன் மிகுந்த ஐசுவரியவான் ஆனபடியினாலே அந்த வசனத்தைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கம் அடைந்து(போனான்.)

௨௪ ¶ அவன் மிகுந்த துக்கம் அடைந்ததை இயேசுவானவர்

கி. பி. ௩௩.

* அல்லது நீதியுள்ளவர்கள் என்று

1 சங். ௱௩௫. ௨.

2 ஏசா. ௬௰௫. ௫. வெளி. ௩. ௰௭.

3 யோபு. ௨௨. ௨௯. மத். ௨௩. ௰௨. லூக். ௰௪. ௰௧. யாக். ௪. ௬. ௧ பேது. ௫. ௫.

4 மத். ௰௯. ௰௩. மாற். ௰. ௰௩.

5 ௧ கொரி. ௰௪. ௨௰. ௧ பேது. ௨. ௨.

6 மாற். ௰. ௰௫.

7 மத். ௰௯. ௰௬. மாற். ௰. ௰௭.

8 ௨ மோ. ௨௰. ௰௨, ௰௩. ௫ மோ. ௫. ௰௬, ௨௰. உரோ. ௰௩. ௯.

9 எபே. ௬. ௨. கொலோ. ௩. ௨௰.

10 மத். ௬. ௰௯, ௨௰. ௰௯. ௨௧. ௧ தீமோ. ௬. ௰௯.

LIBRARY
SANT NAGAR. MADRAS 600 090

கண்டு சொன்னதாவது: [1]ஆஸ்திகளை உடையவர்கள் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பது மிகவும் அரிது.

௨௫ ஒட்டகமானது ஒரு ஊசியின் காதிலே நுழைவது எளிதானால், ஐசுவரியவான் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறதும் எளிதாயிருக்கும் என்றார்.

௨௬ அதைக் கேட்டவர்கள் சொன்னது: அப்படியானால் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்றார்கள்.

௨௭ அதற்கு அவர் சொன்னது: [2]மனிதரால் ஆகமாட்டாதவைகள் பராபரனாலே ஆகும் என்றார்.

௨௮ ¶ [3]அப்பொழுது பேதுரு அவரைநோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும்விட்டு உமக்குப் பின்சென்று வருகிறோம் என்றான்.

௨௯ அதற்கு அவர் சொன்னது: [4]பராபரனுடைய இராச்சியத்தினிமித்தமாக வீட்டையாவது, தாய்தகப்பன்மாரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டவனெவனும்,

௩௰ [5]இம்மையிலே அதிக மடங்காயும் மறுமையிலே நித்திய சீவனையும் அடையாமல் இருப்பதில்லை என்றார்.

௩௧ ¶ பின்பு [6]அவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடனே சொன்னது: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனிதனு

குறித்துத் [7]தீர

தப்பட்ட யாவ

௩௨ [8]எப்ப

புறத்தேசத்தா

க்கப்பட்டு,

யும் அடைந்து

௩௩ அல்லாம

ளால் அடித்து

கள்; மேலும்

உயிரோடு எழுந்திருப்பான் என்றார்.

௩௪ [9]அவர்கள் இவைகளில் ஒன்றையும் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது; அவர் சொன்னவைகளை அறியாமல் இருந்தார்கள்.

௩௫ ¶ [10]அவர் எரிகோ ஊருக்குச் சமீபமானபொழுது, வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு குருடன்,

௩௬ சனங்கள் நடக்கிறதைக் கேள்விப்பட்டு, இது என்னவென்று விசாரித்தான்.

௩௭ நாசரேத்தூரானாகிய இயேசு நடந்துபோகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

௩௮ அப்பொழுது அவன் இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டான்.

௩௯ முன் நடப்பவர் அவன் பேசாமல் இருக்கும்படிக்கு அவனை அதட்டினார்கள்; அவன் தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டான்.

௪௰ அப்பொழுது இயேசுவானவர் நின்று அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்; அவன் கிட்ட வந்தபொழுது அவர் அவனை நோக்கி,

௪௧ நான் உனக்கு என்னசெய்ய வேண்டும் என்று இருக்கிறாய் என்றார்; அதற்கு அவன் ஆண்டவரே, நான் பார்வை அடையும்படி செய்யவேண்டும் என்றான்.

௪௨ இயேசுவானவர் அவனை நோக்கி, நீ பார்வை அடைவாயாக, [11]உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

௪௩ உடனே அவன் பார்வை அடைந்து [12]பராபரனைப் புகழ்ந்து அவருக்குப் பின்சென்றான்; அதைக் கண்ட சனங்கள் எல்லா

இ. பி. ௩௩

1 யாக். ௨. ௫. [illegible]

2 எரே. ௩௨. ௰௭. [illegible]

3 மத். ௰௯. ௨௭.

4 [illegible]

5 யோபு [illegible]

6 மத். ௨௰. ௰௭. [illegible]

7 சங். ௨௨. [illegible]

8 மத். ௨௭. ௨. [illegible]

9 மாற். ௯. ௩௨. [illegible]

10 மத். ௨௰. ௨௯. [illegible]

11 லூக். ௭. ௫௰.

12 லூக். ௫. ௨௬. [illegible]

ரும் பராபரனுக்குத் துதிசெலுத்தினார்கள்.

௰௯. அதிகாரம்.

௧ ஆயக்காரனான சக்கேயுவைக்குறித்துச் சொல்லியது ௰௧ பத்து இராத்தல் வெள்ளியைப் பெற்ற ஊழியக்காரரை உவமையாகக் காட்டியது. ௨௮ கிறிஸ்து கெம்பீரமாய் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், ௪௧ அதைக்குறித்து அழுது, ௪௫ தேவாலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்தி, ௪௭ அதிலே நாடோறும் உபதேசித்தது அதிகாரிகள் அவரைக் கொலை செய்ய விரும்பிச் சனங்களுக்கு அஞ்சினதினாலே கூடாமற்போனது

பின்பு அவர் எரிகோ ஊரில் பிரவேசித்து அப்புறம் நடந்துபோனார்.

௨ அப்பொழுது ஆயக்காரருக்குத் தலைவனுமாய் ஐசுவரியவானுமாய் இருந்த சக்கேயு என்னப்பட்ட மனிதன், இயேசுவானவரை அறியும்படிக்கு அவரைப் பார்க்க வகைதேடினான்.

௩ அவன் குட்டையனானபடியால் சனக்கூட்டத்திலே அவரைக் காணக்கூடாமல் இருந்தது.

௪ அப்பொழுது அவன் அவரைப் பார்க்கும்படிக்கு முன்னாக ஓடி, அவர் செல்லுகிற வழியிலே நிற்கின்ற காட்டத்திமரத்தின்மேல் ஏறினான்.

௫ இயேசுவானவர் அந்த இடத்தில் சென்றபொழுது, அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு, சக்கேயுவே, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும், ஆகையால் நீ சீக்கிரமாய் இறங்கி வா என்றார்.

௬ அந்தப்படி அவன் சீக்கிரமாய் இறங்கிச் சந்தோஷத்தோடே அவருக்கு உபசாரம்செய்தான்.

௭ அதைக் கண்ட அனைவரும் சொன்னது: [1]இவர் பாவியான மனிதனிடத்திலே தங்கும்படிக்குப் போகிறார் என்று மொறுமொறுத்தார்கள்.

௮ சக்கேயு என்பவன் நின்று கர்த்தரை நோக்கி, ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்; அல்லாமலும் [2]நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் எடுத்திருந்தேனானால் [3]நாலுமடங்காய்ப் பதில் செலுத்துகிறேன் என்றான்.

௯ அப்பொழுது இயேசுவானவர் அவனைக்குறித்துச் சொன்னது: [4]இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கும்படிக்கு மனிதனுடைய குமாரன் வந்திருக்கிறபடியினாலே, [5]இன்றைக்கு இந்தக் குடும்பத்திற்கு இரட்சிப்பு உண்டாயிற்று

௰ [6]இவனும் ஆபிரகாமினுடைய சந்ததியான் அல்லவா என்றார்.

௰௧ ¶ அன்றியும் அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர் எருசலேமுக்குச் சமீபமானபடியினாலும், [7]பராபரனுடைய ஆளுகை சீக்கிரமாகக் காணப்படும் என்று அவர்கள் நினைத்தபடியினாலும் அவர் சொன்ன உவமையாவது:

௰௨ [8]உயர்குலத்தானாகிய ஒருவன் ஒரு இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டு, பின்பு திரும்பி வரும்படிக்குத் தூரதேசத்துக்குப் போக மனதாய்,

௰௩ தன்னுடைய பத்து ஊழியக்காரரை அழைத்து, அவர்களுக்குப் பத்து இராத்தல்* திரவியம் கொடுத்து, நான் வருகிறவரைக்கும் இதினாலே தொழில் செய்யுங்கள் என்று சொல்லிப்போனான்

௰௪ [9]அவனுடைய பட்டணத்தார் அவனைப் பகைத்து, அவன் எங்களை ஆளுகைசெய்ய எங்களுக்கு மனதில்லை என்று சொல்லும்படிக்கு, அவனுக்குப் பின்னாகத் தானாதிபதிகளை அனுப்பினார்கள்.

௰௫ அப்படியிருந்தும் அவன் இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வந்து, தான் திரவியம் கொடுக்கப்பெற்றிருந்த அந்த ஊழியக்காரர் தொழில் செய்ததினாலே ஆதாயமாக்கிக்கொண்டது இவ்வளவென்று அறியும்படிக்கு,

கி. பி. ௩௩.

[1] மத் ௯ ௰௧ லூக் ௫ ௩௰
[2] லூக் ௩ ௰௪
[3] ௨ மோ ௨௨ ௧ ௧ சாமு ௰௨ ௩ ௨ சாமு ௰௨ ௬
[4] மத் ௰௮ ௰௧ மத ௰ ௬ ௰௫ ௨௪.
[5] உரோ ௪ ௰௧ ௰௨, ௰௬ கலா ௩ ௭
[6] லூக் ௰௩ ௰௬
[7] அப ௧ ௬
[8] மத ௨௫ ௰௪ மாற ௰௩ ௩௪
* ஒரு இராத்தல் Mina (௧௧௨) ரூபாயாம
[9] யோவா ௧ ௰௧

அவர்களைத் தன்னிடத்திற்கு அழைத்துவரச்சொன்னான்.

௰௬ அந்தப்படியே முந்தினவன் சேர்ந்து, ஆண்டவனே, உம்முடைய இராத்தல் பத்து இராத்தலை ஆதாயம்பண்ணிற்று என்றான்.

௰௭ அவனுடனே எசமான் சொன்னது: நல்லது உத்தம ஊழியக்காரனே, [1]நீ கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தபடியினாலே பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாய் இரு என்றான்.

௰௮ பின்பு இரண்டாம் ஊழியக்காரன் சேர்ந்து, ஆண்டவனே, உம்முடைய இராத்தல் ஐந்து இராத்தலை ஆதாயம்பண்ணிற்று என்றான்.

௰௯ அவனுடனேயும் அவன் சொன்னது: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

௨௰ பின்பு வேறொருவன் சேர்ந்து ஆண்டவனே, [2]நீர் வையாததை எடுக்கிறவருமாய் விதையாததை அறுக்கிறவருமாய் இருக்கிற கடினமுள்ள மனிதனாயிருக்கிறதை நான் அறிந்து உமக்குப் பயப்பட்டபடியினாலே,

௨௧ உம்முடைய இராத்தலை ஒரு சேலையிலே வைத்துக்கொண்டேன்; இதோ, அது இருக்கின்றது என்றான்.

௨௨ அவனுடனே அவர் சொன்னது: பொல்லாத ஊழியக்காரனே, [3]உன் வாக்கின்படி உனக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறேன்; [4]நான் வையாததை எடுக்கிறவனுமாய் விதையாததை அறுக்கிறவனுமாய் இருக்கிற கடினமுள்ள மனிதன் என [illegible]

௨௩ ஆகைய[illegible] பி
வருகிறபொ[illegible] த
தை வட்டியோ[illegible] கா
ள்ளும்படிக்(இ[illegible] க
காக) காசு[illegible] ா
கொடுக்கவில[illegible] ,

கி. பி. ௩௩.

1 மத் ௨௫ ௨௧ லூக் ௰௬ ௰
2 மத் ௨௫ ௨௪
3 ௨ சாமு ௧ ௰௬ யோபு ௰௫ ௬ மத் ௰௨ ௩௭
4 மத் ௨௫ ௨௬
5 மத் ௰௩ ௰௨ ௨௫ ௨௯ மாற் ௪ ௨௫ லூக் ௮ ௰௮
6 மாற் ௰ ௩௨
7 மத் ௨௧ ௧ மாற் ௰௧ ௧

௨௪ சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி, நீங்கள் அந்த இராத்தலை இவனிலிருந்து எடுத்துப் பத்து இராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்று கட்டளையிட்டபொழுது,

௨௫ அவர்கள், ஆண்டவனே, அவனுக்குப் பத்து இராத்தல் உண்டே என்ன,

௨௬ அவன் பின்னும் சொன்னது: நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [5]உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனுக்கு உண்டாயிருக்கிறதும் அவனிலிருந்து எடுக்கப்படும்.

௨௭ அன்றியும் நான் தங்களுக்கு இராசாவாயிருக்க மனதில்லாமல் எனக்குச் சத்துருக்களான அவர்களை இங்கே கொண்டுவந்து, எனக்குமுன்பாக வெட்டிப்போடுங்கள் என்று சொன்னான் என்றார்.

௨௮ இவைகளை அவர் சொன்னபின்பு, [6]அவர் எருசலேமுக்குப் போகும்படி முன்னே நடந்தார்.

௨௯ ¶ [7]அப்படி அவர் ஒலிவமலை என்னப்பட்ட மலையின் அருகே இருக்கிற பெத்பாகே ஊருக்கும், பெத்தானியா ஊருக்கும் சமீபமானபொழுது, அவர் தம்முடைய சீஷரில் இருவரை நோக்கி,

௩௰ அதோ உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்துக்குப் போங்கள், அதில் பிரவேசிக்கும்பொழுது, மனிதரில் ஒருவனாகிலும் ஒருக்காலும் ஏறாத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்.

௩௧ இதை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்று ஒருவன் உங்களிடத்தில் கேட்டால், ஆண்டவருக்கு இது வேண்டும் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

௩௨ ¶ அந்தப்படி அனுப்பப்பட்டவர்கள் போய், தங்களுக்கு அ

வர் சொன்னபிரகாரமாகக் கண்டார்கள்.

௩௩ கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கிறபொழுது, அதின் எசமான்கள் அவர்களை நோக்கி, குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்றார்கள்.

௩௪ அதற்கு அவர்கள், ஆண்டவருக்கு இது வேண்டும் என்று சொல்லி,

௩௫ அதை இயேசுவினிடத்திற்குக் கொண்டுவந்து, [1]தங்கள் வஸ்திரங்களைக் குட்டியின்மேல் போட்டு, இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள்.

௩௬ அப்படி அவர் போகையில், [2]அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்.

௩௭ அல்லாமலும் அவர் ஒலிவமலையின் அடிவாரமாய்ச் சேர்ந்து வருகிறபொழுது, சீஷரின் கூட்டத்தார் எல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்துச் சந்தோஷப்பட்டு, மிகுந்த சத்தத்துடனே பராபரனைத் துதிக்கத் தொடங்கி, [3]பராபரனுடைய நாமத்தினாலே வருகிற இராசா தோத்திரிக்கப்பட்டவர்.

௩௮ [4]பரமண்டலத்தில் சமாதானமும், உன்னதங்களில் புகழ்தலும் உண்டாவதாக என்றார்கள்.

௩௯ அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி, போதகரே, நீர் உம்முடைய சீஷரை அதட்டவேண்டும் என்றார்கள்.

௪௰ அவர்களுக்கு மறுமொழியாக அவர் சொன்னது: இவர்கள் பேசாமல் இருந்தால் [5]கற்களே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௪௧ ¶ அன்றியும் அவர் பட்டணத்துக்குச் சமீபமானபொழுது, [6]அவர் அதைப் பார்த்து, அதைக்குறித்துக் கண்ணீர்விட்டு, நீ உனக்குக் கிடைத்த இந்த நாளிலே உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளைச் சிந்தித்துக்கொண்டால், நலமாயிருக்கும்.

௪௨ இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன.

௪௩ உன்னைச் சந்திக்கும் காலத்தை [7]நீ சிந்தித்துக்கொள்ளாமல் இருக்கிறபடியினாலே, [8]உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு,

௪௪ எங்கும் உன்னை இறுகப்பிடித்து, [9]உன்னையும் உன்னில் உள்ளவர்களையும் தரையாக்கி, [10]உன்னிடத்தில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் இராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்.

௪௫ ¶ [11]பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து,

௪௬ அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் நோக்கி, [12]நம்முடைய ஆலயம் செபம்பண்ணுதற்கான ஆலயம் என்று எழுதியிருக்கின்றதே, [13]நீங்கள் இதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்று சொல்லி, அவர்களைப் புறம்பே துரத்தினார்.

௪௭ ¶ அல்லாமலும் நாடோறும் அவர் தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தார், [14]அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனத்தின் மூப்பரும் அவரைக்கொலைசெய்ய வகைதேடி,

௪௮ சனங்கள் எல்லாரும் மிகுந்த சிந்தனையோடே அவருக்குச் செவிகொடுத்தபடியினாலே* வகையைக் காணாமல் போனார்கள்.

௨௰. அதிகாரம்.

௧ ஆட்சேபித்த பரிசேயருக்குக் கிறிஸ்து தமது அதிகாரத்தை யோவானின் ஞானஸ்நானத்தைக்குறித்த கேள்வியினாலே ஸ்தாபித்தது ௯ திராட்சத்தோட்டக்காரரை உவமையாக எடுத்துச் சொன்னது ௰௯ இராயனுக்கு வரிசெலுத்துவதைக் குறித்துச் சொன்னது உயிர்த்தெழுதல் இல்லையென்ற சதுசேயருக்கு அதை உண்டென்று எண்பித்தது. ௪௧ கிறிஸ்து தாவீதின் குமார

இ பி. ௩௩.

1 உ இரா ௯. ௰௩ மத் ௨௧. ௭ மாற் ௰௧. ௭ யோவா ௰௨. ௰௪
2 மத் ௨௧. ௮
3 சங் ௱௰௮. ௨௬ லூக் ௰௩. ௩௫
4 லூக் ௨. ௰௪ எபே ௨. ௰௪
5 ஆப ௨. ௰௧
6 யோவா. ௰௧. ௩௫
7 தானி ௯. ௨௪ லூக் ௧. ௬௮, ௭௮ ௧ பே ௨. ௰௨
8 எசா ௨௯. ௩, ௪ எரே ௬. ௩, ௬ லூக் ௨௧. ௨௰
9 ௧ இரா ௯. ௭, ௮ மீகா ௩. ௰௨
10 மத் ௨௪. ௨ மாற் ௰௩. ௨ லூக் ௨௧. ௬
11 மத் ௨௧. ௰௨ மாற் ௰௧. ௰௧, ௰௫ யோவா ௨. ௰௪, ௰௫
12 எசா ௫௬. ௭
13 எரே ௭. ௰௧
14 மாற் ௰௧. ௰௮ யோவா ௭. ௰௯ அ ௮. ௩௭

---

* அல்லது, அவரில் பற்றினபடியினாலே. அப் ௰௬. ௰௪

னென்று அறிவித்ததைச் சொன்னது ௪௫ வேத பாரகரைக்குறித்துச் சீஷர்களை எச்சரித்தது

¹அந்நாள்களில் ஒரு நாளிலே, அவர் தேவாலயத்தில் சனங்களுக்கு உபதேசம்பண்ணிச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறபொழுது, பிரதான ஆசாரியரும் வேத பாரகரும் மூப்பரும் அவருக்கு விரோதமாய் வந்துநின்று,

௨ அவரை நோக்கி, ²நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இப்படிப்பட்ட அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் இன்னார் என்று எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்

௩ அதற்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: நானும் உங்களிடத்தில் ஒரே வினாவைக் கேட்பேன்.

௪ என்னவென்றால், யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ மனிதரால் உண்டாயிற்றோ, அதை எனக்குச் சொல்லுங்கள் என்றார்.

௫ அப்பொழுது அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணினதாவது:

௬ தேவனால் உண்டாயிற்றென்று நாம் சொன்னால் நீங்கள் அவரை ஏன் விசுவாசிக்கவில்லை என்பார்; அது மனிதரால் உண்டாயிற்றென்று நாம் சொன்னால், எல்லாச் சனங்களும் யோவானைத் ³தீர்க்கதரிசி என்று எண்ணிக்கொள்ளுகிறபடியினாலே, நமதுமேல் கல்லெறிவார்கள் என்று யோசனைபண்ணி,

௭ பின்பு அவ எங
களுக்குத் தெ கள்.
௮ அதற் வர்
சொன்னது. ன
இன்ன அதி வை
களைச் செய் ம
உங்களுக்கு ன்
என்றார்.
௯ ¶ பின்
னே சொன
⁴ஒரு மனித

கி. பி ௩௩.

1 மத ௨௧ ௨௩
2 அப ௪.௭ ௭. ௨௭
3 மத ௰௪ ௫. ௨௧ ௨௬ லூக ௭ ௨௯
4 மத ௨௧ ௩௩ மாற ௰௨ ௧

டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரர் வசமாய்விட்டு, அநேக காலமாய்ப் புறத்தேசம் போயிருந்தான்.

௰ தகுதியானகாலத்திலே அந்தத் தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒரு பங்கைத் தனக்குக் கொடுத்தனுப்பும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்துக்கு அனுப்பினான், அந்தத் தோட்டக்காரர் அவனை அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்

௰௧ பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்பினான், அவனையும் அவர்கள் அடித்து, நிந்தைப்படுத்தி, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்

௰௨ அதன்பின்பு அவன் மூன்றாம் ஊழியக்காரனை அனுப்பினான், அவனையும் அவர்கள் காயப்படுத்தித் துரத்தினார்கள்.

௰௩ அப்பொழுது திராட்சத்தோட்டத்தின் எசமான் எண்ணினது: நான் என்ன செய்யலாம்? எனக்குப் பிரியமான குமாரனை அனுப்பினால், அவர்கள் கண்டு கனம்செய்வார்கள் என்று எண்ணி, அவனை அனுப்பினான்.

௰௪ தோட்டக்காரர் அவனைக் கண்டபொழுது, இவன் சுதந்தரவாளி சுதந்தரம் நம்முடையதாகும்படிக்கு. இவனைக் கொலைசெய்யவேண்டும் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணி,

௰௫ வாருங்கள் என்று சொல்லி, அவனைத் திராட்சத்தோட்டத்துக்கு வெளியே தள்ளி, கொலைசெய்தார்கள்; ஆதலால் திராட்சத்தோட்டத்தின் எசமான் அவர்களை என்ன செய்வான்?

௰௬ அவன் வந்து, அந்தத் தோட்டக்காரரை அழித்து திராட்சத்தோட்டத்தை வேறுமனிதருக்குக் கொடுப்பான் அல்லவா என்றார்; அதை அவர்கள் கேட்டு அப்படி ஆகாதிருப்பதாக என்றார்கள்.

௰௭ ¶ அபபொழுது அவர் அவர்களைப பார்தது [1]வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தளளின கல்லே கோடிககுத தலையான கல்லாயிற்றென்றுஎழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?

௰௮ அந்தக கல்லின்மேல் விழுகிறவன் எவனோ, அவன் நொறுக்கபபடுவான்; அன்றியும், [2]அது விழப்படுபவன் எவனோ, அவனை நசுக்கிபபோடும் என்றார.

௰௯ அபபொழுது தங்களைககுறிதது அநத உவமையைச் சொன்னார என்று பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அறிநது, அநநேரத்திலே அவரமேல கைகளைப் போட விரும்பினார்கள்; சனஙகளுக்குப பயபபட்டபடியால (நிறுத்தினாரகள்.)

௨௰ ¶ [3]பின்பு அவர்கள அவரையே நோககிககொணடு, ஆளுகைக்கும் நியாயாதிகாரததுக்கும முன்பாக அவரை ஒபபுககொடுககிறதற்கு ஏதுவாக அவருடைய வசனததில் குற்றம் கணடுபிடிககும்படிக்கு, தஙகளை நீதிமான்கள்போலக் காணபிககிற வேவுகாரரை அவரிடத்தில் அனுபபினார்கள்

௨௧ [4]அவர்கள் வநது அவரை நோக்கி, போதகரே, நீர் செம்மையாய்ப பேசி உபதேசிககிறவர என்றும், பட்சபாதமில்லாமல் சத்தியமாய்ப *பராபரனுடைய மாரக்கத்தைப போதிக்கிறவர் என்றும அறிநதிருககிறோம்.

௨௨ நாம இராயனுககு வரிகொடுக்கலாமோ, கொடாமல் இருககலாமோ, என்று அவரிடததில் கேட்டார்கள்?

௨௩ அவர்களுடைய தநதிரத்தை அவர் அறிநது, அவர்களை நோக்கி, நீஙகள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

௨௪ பணததை †எனக்குக் காண்பியுங்கள்; அதில் இருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடையவைகள் என்றார்; அவை இராயனுடையவைகள என்று மாறுததரம் சொன்னார்கள்.

௨௫ அவர் சொன்னது: அப்படியானால், நீஙகள் இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதைப பராபரனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

௨௬ அவர்கள் அவரைச் சனங்களுக்குமுன்பாக ஒரு வசனத்தில் அகபபடுததக்கூடாமல், அவருடைய மாறுத்தரத்தைக்குறித்து ஆச்சரியபபட்டு மவுனமாய் இருநதாரகள.

௨௭ ¶ பின்பு [5]மறுமையாகிய உயிரோடு எழும்புதல் இல்லையென்று சொலலுகிற [6]சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வநது கேட்டதாவது:

௨௮ போதகரே, [7]பெண்ணை விவாகம்பண்ணின ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால, அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் (சேரநது) தன் சகோதரனுக்குச் சந்ததி உண்டாககவேண்டும் என்று மோசே நமககுக் கட்டளையாக எழுதினாரே.

௨௯ அந்தபபடி (ஒரிடததிலே) சகோதரர் ஏழுபேர் இருநதார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெணணை விவாகம்பண்ணிப பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

௩௰ அபபொழுது இரணடாம சகோதரன் அநதப பெணணை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறநதுபோனான்.

௩௧ மூன்றாம் சகோதரன் முதல் ஏழுபேர்வரைக்கும் அந்தபபடியே அவளை விவாகமபண்ணி, பிள்ளைகளைப் பெறாமல் இறந்துபோனார்கள்.

௩௨ அவர்கள் எல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.

௩௩ இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணினவர்க

கி. பி. ௩௩.

[1] சங். ௱௰௮. ௨௨ மத் ௨௧. ௪௨
[2] தானி ௨. ௩௪, ௩௫ மத் ௨௧ ௪௪
[3] மத் ௨௨ ௰௫
[4] மத் ௨௨ ௰௬ மாற் ௰௨ ௰௪
* அல்லது மெய்யாகவே
† மத் ௰௮ ௨௮
[5] அப் ௨௩. ௬, ௮
[6] மத் ௨௨ ௨௩ மாற் ௰௨ ௰௮
[7] ௫ மோ ௨௫. ௫

ளாய இருக்க, (மரிததோா) உயிரோடு எழுநதிருக்கும் காலததில் அவாகளில எவனுககு அவள் மனைவியாய் இருபபாள் என்றார்கள

௩௪ ¶ அவாகளுககு மாறுததரமாக இயேசுவானவா சொன்னது· இம்மையில் இருககிறவாகள் பெணகொணடும கொடுததும் வருகிறார்கள்

௩௫ மறுமையில் உள்ள பாக்கியததையும் மரிததோரிலிருநது எழுநதிருககுதலையும் அடைவதற்குப பாததிரராய எணணபபடுபவர்கள் பெண கொளவதும கொடுபபதும இல்லை.

௩௬ என்னததினாலெனில், [1]அவாகள உயிரோடு எழுநதிருககததககவர்களாயிருகக, தேவதூதருககு ஒப்பானவாகளுமாய் [2]பராபரனுடைய பிளளைகளுமாய் இருபபதால், அவர்கள் இனி மரிககககூடாதிருபபாாகளே

௩௭ அனறியும மரிததோர் எழுநதிருபபாாகள என்பதை [3]மோசேயும் முட்செடியைககுறித்து எழுதின சரிததிரததிலே காண்பிததார் எபபடியெனில், அவர் பராபரனை ஆபிரகாமினுடைய தேவனெனறும, ஈசாககினுடைய தேவனென்றும், யாககோபினுடைய தேவனென்றும சொல்லியிருக்கிறார்.

௩௮ பராபரன மரித்தோருடைய தேவனாய இராமல, சீவனுளளோருடைய தேவனாய் இருககிறா; [4]எல்லாரு … பி
ழைததிருககி …

௩௯ வேதபா … க
கேட்டு, … ச்
சொன்னீா …

௪௰ பின்பு … க்
தில் வே … த்
துணியவில் …

௪௧ ¶ அப … அ
வர்களை நோ … ா
வர் தாவீதின … ப

பார் என்றுஎன்னததினாலேசொல்லுகிறார்கள்?

௪௨ [6]அல்லாமலும், பராபரன் என் காததாவை நோக்கி, நான உம்முடைய சததுருக்களை உமது பாதபபடியாககிபபோடும் அளவும

௪௩ நீா எனது வலதுபாரிசத்தில் உளுக்காரும் எனறா என்று தாவீதுதானே சஙகீதபுததகததில சொலலியிருக்கிறாரே

௪௪ தாவீது அவரைக் கர்த்தரென்று சொலலியிருகக, எபபடி அவா அவனுடைய குமாரனாவாா என்றா.

௪௫ ¶ [7]அபபொழுது சனஙகள எலலாருமகேட்க, அவா தம்முடைய சீஷருடனே சொன்னதாவது

௪௬ [8]நீளமான வஸதிரஙகளைத தரிதது நடகக மனதாயிருந்து, [9]சநதைகளில வாழ்ததுதலையும், செபஆலயஙகளில முதல ஆசனஙகளையும், விருந்துகளில் முதல் இடஙகளையும் விருமபி,

௪௭ [10]கைம்பெணகளுடைய பொருள்களைப பட்சித்து, வஞ்சகமாய விஸதாரமான செபம்பண்ணி வருகிற வேதபாரகருக்கு நீங்கள் இடம் கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களே அதிக ஆக்கினையை அடைவாாகள் என்றா

௨௧. அதிகாரம்.

௧ கிறிஸது தருமபபெட்டியிலே இரண்டு காசைப போட்ட ஒரு ஏகமபெண்ணைப புகழ்நது, ௫ தேவாலயமும, எருசலேமும அழிக்கபபடுவதை முனனறிவித்து, ௨௫ கடைசி நாளுக்கு முனனுண்டாகும அடையாளஙகளைக் காட்டி, ௩௪ அவாகள விழிததிருக்குமபடிக்குப புத்தி சொனனது

பின்பு அவர் கண்ணை உயர்த்திப பார்க்கிறபொழுது, [11]ஐசுவரியவான்கள் தஙகள் காணிக்கைகளைத் தருமபபெட்டியில் போடுகிறதைக் கண்டார்.

இ. பி. ௩௩.

[1] ௧ கொரி ௰௫ ௪௨ ௪௩, ௪௪. ௧ யோ ௩ ௨
[2] ரோ ௮ ௨௩
[3] ௨ மோ ௩ ௬
[4] ரோ ௬ ௰, ௰௧
[5] மத் ௨௨ ௪௨. மாற ௰௨ ௩௫
[6] சங ௱௰ ௧. அப ௨ ௩௪
[7] மத் ௨௩ ௧. மாற ௰௨ ௩௮
[8] மத ௨௩ ௫
[9] லூக ௰௧ ௪௩
[10] மத ௨௩ ௰௪
[11] மாற ௰௨ ௪௧

௨ அல்லாமலும இரண்டு காசை *அதிலே போட்ட ஒரு ஏழைக கைம்பெண்ணையும அவர் கண்டு,

௩ ¹இந்த ஏழைக் கைம்பெண் மற்றெல்லாரிலும அதிகம் போட்டாள் என்று மெய்யாய் உஙகளுககுச் சொல்லுகிறேன

௪ எபபடியெனில, அவாகள எல்லாரும் தஙகள பரிபூரணததில் எடுத்து, தேவ காணிககைப பெட்டியில் போட்டாாகள், இவள தன் குறைவிலே தன் சீவனததுககு உண்டான யாவையும் போட்டாள என்றாா.

௫ ¶ பின்பு ²சிலா தேவாலயத்தைக்குறித்து அது அழகான கற்களாலும் காணிககைகளாலும் அலஙகரிக்கப்பட்டிருககின்றது என்று சொனனபொழுது, அவா சொன்னது:

௬ நீஙகள் பார்க்கிற இவைகளில் ³ஒரு கல் மற்றொரு கல்லின மேல் இராதபடிக்கு, எல்லாம இடிக்கபபடும நாள்கள வரும என்றார்.

௭ அப்பொழுது அவரை அவர்கள நோக்கி, போதகரே, அவைகள் எபபொழுது நடககும? அவைகள் சம்பவிக்கும் காலததுககு அடையாளம் என்னவென்று கேட்டாாகள்

௮ அதற்கு அவர் சொன்னது: அநேகர் என் நாமத்தை எடுதது, தஙகளை அவரே என்றும், காலம்† சமீபமாய வநததெனறும சொலலுவார்கள்; ⁴நீங்கள வஞ்சிககபபடாதபடிக்கு எசசரிக்கையுளளவர்களாய அவாகளுக்குப் பின்செல்லாமல் இருஙகள்.

௯ அல்லாமலும் யுததஙகளையும் கலகங்களையும் குறிததுக கேளவிப்படும்பொழுது, திகில் அடையாதிருங்கள்; அபபடிபபட்டவைகள் முன் நடககவேண்டுமே; ஆனாலும் முடிவு உடனே வாராதென்று சொல்லி, பின்பு திருவுளம் பற்றினதாவது:

௰ ⁵ஒரு சனக்கூட்டம மற்றொரு சனககூட்டத்துககும ஒரு இராசசியததார் மற்றொரு இராச்சியததாருககும விரோதமாக எழும்புவாாகள

௰௧ அல்லாமலும் பல இடஙகளிலே பூமி மிகவும அதிாதலும, பஞ்சஙகளும, பெருவாரிககாயசசலகளும உணடாயிருக்கும்; வானததிலிருநது பயம் உணடாக்குகிற காரியஙகளும் பெரிய அடையாளஙகளும உணடாகும்.

௰௨ ¶ ⁶அவைகள எலலாவறறிறகும்முன்னே எனனுடைய நாமததின நிமிததம் ⁷அவர்கள உஙகள மேலே தஙகள கைகளைபபோட்டு, உஙகளைததுனபபபடுததி, ⁸செபஆலயஙகளுககும சிறைசசாலைகளுககும ஒபபுககொடுதது, ⁹இராசாககளுககும துரைகளுககும முனபாகக கொணடுபோவாாகள்.

௰௩ ¹⁰ஆனாலும அது நீஙகள சாட்சிகொடுககும்படிககு ஏதுவாயிருக்கும்

௰௪ ¹¹ஆகையால், எபபடி மாறுததரவு சொலலலாம என்று நீஙகள கவலைபபடாதிருககுமபடி, உஙகள் மனதைதத் திடபபடுததுஙகள

௰௫ ¹²நானே உஙகளுககுத (தகுதியான) பேசசையும ஞானத்தையும கொடுபபேன; உஙகள எதிராளிகள் யாவரும அதறகு விரோதமாய்ப பேசவும எதிாநிற்கவும மாட்டாாகள.

௰௬ அன்றியும ¹³பெற்றாராலும, சகோதரராலும், இனததாராலும், சிநேகிதாாலும காட்டிககொடுககபபடுவீாகள; ¹⁴உஙகளிலசிலரைக் கொலைசெய்விபபாாகள்

௰௭ ¹⁵என நாமததினாலே நீஙகள் சகலவிதமான மனிதராலும பகைககபபடுவீாகள்

௰௮ ¹⁶ஆனாலும் உங்கள் தலையின் மயிரில் ஒன்றாகிலும் அழியாது.

௰௯ பொறுமையினாலே உங்கள் ஆததுமாக்களைக காத்துக்கொள்ளக்கடவீர்கள்.

இ பி ௩௩

* மாற் ௧௨ ௪௨

1 ௨ கொரி ௮ ௰௨

2 மத் ௨௪ ௧ மாற ௰௩ ௧

3 லூக ௰௯ ௪௪

† மத் ௩ ௨ ௪ ௰௭

4 மத் ௨௪ ௪ மாற ௰௩ ௫ எபே ௫ ௬ ௨ தெச ௨ ௩

5 மத் ௨௪ ௭

6 ௧ பே ௨ ௰௩

7 மாற ௰௩ ௯ வெளி ௨ ௰

8 அப ௪ ௩ ௫ ௰௮ ௨௪ ௨௪

9 அப ௨௫ ௨௩

10 பிலி ௧ ௨௮ ௨ தெச ௧ ௫

11 மத் ௰ ௰௯ மாற ௰௩ ௰௧ லூக ௰௨ ௰௧

12 அப ௬ ௰

13 மீகா ௭ ௬ மாற ௰௩ ௰௨

14 அப ௭ ௫௯ ௰௨ ௨

15 மத் ௰ ௨௨

16 மத் ௰ ௩௰

௨௰ ¶ [1]அன்றியும் சேனைகளால் எருசலேம் வளைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் காணும்பொழுது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

௨௧ அப்பொழுது யூதேயாநாட்டில் இருப்பவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமுக்குள்ளே இருப்பவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் அதற்குள் பிரவேசியாமல் இருக்கவும் கடவர்கள்.

௨௨ [2]எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படியாய், அந்நாள்களே பழிவாங்குதற்கானவைகளாய் இருக்கும்.

௨௩ அந்நாள்களில், [3]ஐயோ! கருப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் வேதனை உண்டாயிருக்கும்; என்னத்தினாலெனில், இத்தேசத்தின்மேல் மிகுந்த இடுக்கணும், இந்தச் சனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

௨௪ கட்கங்களினாலே அற்றுவிழுவார்கள்; அல்லாமலும் புறத்தேசத்தார் யாவருக்குள்ளேயும் சிறைப்பட்டுப்போவார்கள், அன்றியும் [4]புறத்தேசத்தாருடைய காலங்கள் நிறைவேறுகிறவரைக்கும் எருசலேம் புறத்தேசத்தாராலே மிதிக்கப்படும்.

௨௫ ¶ [5]சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும், அடையாளங்கள் தோன்றும், பூமியின்மேல் உள்ள சனங்களுக்குள்ளே கலக்கமான [illegible]டாகும்; சமுத்[illegible]ங்கள் கோஷ்டமாய [illegible]

௨௬ [6]வான[illegible]வ களும் அசை[illegible]லா கத்தின்மேல் [illegible]க ளுக்குப்பய[illegible]க கிப் பாரத்[illegible]கா கள் சோர்ந்து [illegible]

௨௭ அப்[illegible]று டைய குமா[illegible]ல மையோடும் மகிமையோடும் மேகத்தில் வரக்காண்பார்கள்.

௨௮ அவைகள் சம்பவிக்கத் தொடங்கும்பொழுது, [8]உங்கள் மீட்பு சமீபமாய் வருவதால், நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை உயர்த்தக்கடவீர்கள் என்று சொல்லி,

௨௯ ¶ பின்பு [9]உவமையாய்ச் சொன்னதாவது: அத்திமரத்தையும் மற்றச் சகல மரங்களையும் பாருங்கள்.

௩௰ அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்பொழுது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிகிறீர்கள்.

௩௧ அப்படியே நான் சொன்னவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது, பராபரனுடைய ஆளுகை சமீபமாயிற்றென்று அறியக்கடவீர்கள்.

௩௨ அவையெல்லாம் சம்பவிக்கிறவரைக்கும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௩ [10]வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வசனங்கள் ஒழிந்துபோகாது.

௩௪ ¶ அன்றியும் பூமியில் எங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அந்த நாள் ஒரு வலையைப்போல வருவதால்,

௩௫ [11]உங்கள் இருதயங்கள் பெருந்தீனியினாலும், வெறியினாலும், பிழைப்பின் கவலையினாலும் பாரமடையாதபடிக்கும், அந்த நாள் உங்களுக்குச் சடுதியாய் வாராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள்.

௩௬ ஆகையால் [12]இனிச் சம்பவிப்பவைகள் யாவுக்கும் நீங்கள் தப்புவித்துக்கொண்டு, [13]மனிதனுடைய குமாரனுக்குமுன்பாக நிற்கப் பாத்திரவான்களென்று எண்ணப்படும்படிக்கு, [14]எக்காலமும் செபம்பண்ணி, [15]விழித்திருக்கக்கடவீர்கள் என்று திருவுளம்பற்றினார்.

கி. பி. ௩௩

[1] மத். ௨௪. [illegible]
[2] தானி. ௯. ௨௬, ௨௭. [illegible]
[3] மத். ௨௪. [illegible]
[4] ரோ. ௧௧. ௨௫. [illegible]
[5] மத். ௨௪. ௨௯. [illegible]
[6] மத். ௨௪. ௨௯.
[7] மத். ௨௪. [illegible]
[8] [illegible]
[9] மத். ௨௪. ௩௨. [illegible]
[10] மத். ௨௪. ௩௫.
[11] ரோ. ௧௩. ௧௩. [illegible]
[12] [illegible]
[13] [illegible]
[14] லூக். ௧௮. ௧.
[15] மத். ௨௪. ௪௨. [illegible]

௩௭ ¶ அன்றியும் [1]அவர் பகற்காலங்களில் தேவாலயத்தில் உபதேசித்துக்கொண்டு, [2]இராக்காலங்களில் வெளியே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கி வந்தார்.

௩௮ அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கு, சனங்கள் எல்லாரும் அதிகாலையிலே தேவாலயத்தில் அவரிடத்துக்கு வந்தார்கள்.

௨௨. அதிகாரம்.

௧ யூதர்கள் கிறிஸ்துவைக் கொலைசெய்யும்படி தேடினது ௩ அவரைக் காட்டிக்கொடுக்கும்படி சாத்தான் யூதாவை ஏவினது ௭ அப்போஸ்தலர்கள் பஸ்காவை ஆயத்தம்பண்ணினது ௰௯ கிறிஸ்து பரிசுத்த இராப்போசனத்தைக் கட்டளையிட்டு ௨௧ தம்மைக் காட்டிக்கொடுப்பவனைக் குறிப்பாகச் சொல்லி, ௨௪ மற்ற அப்போஸ்தலர்களைப் பெருமை அற்றிருக்கப் போதித்து, ௩௧ பேதுருவின் விசுவாசம் அவனைவிட்டு எடுபடாதேபோனாலும், ௩௪ அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பான் என்று முன் அறிவித்தது ௩௯ அவர் மலையின்மேல் செபம்பண்ணி இரத்தவேர்வை விட்டு, ௪௭ முத்தியிடுதலினாலே காட்டிக்கொடுக்கப்பட்டு, ௫௰ மல்குஸின் அறுப்புண்ட காதைச் சொஸ்தப்படுத்தி ௫௪ பேதுருவினாலே மூன்றுதரம் மறுதலிக்கவும், ௬௩ பரியாசதூஷணம் பண்ணவும்பட்டு, ௬௬ தம்மைப் பராபரனுடைய குமாரனென்று அறிக்கையிட்டது.

[3]**ப**ஸ்கா என்னப்பட்ட புளியாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று.

*௨ அப்பொழுது [4]பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனங்களுக்குப் பயப்பட்டபடியினாலே, அவரைக் கொலைசெய்யும்படிக்கு (இரகசியமாய்) வகைதேடினார்கள்.

௩ [5]அக்காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்று பேர்கொண்ட யூதாவுக்குள்ளே சாத்தான் புகுந்தான்.

௪ ¶ ஆதலால் அந்த யூதா என்பவன் பிரதான ஆசாரியரும் ஆலயத்தலைவருமானவர்களிடத்தில் போய், அவர்களுக்கு அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களுடனே யோசனைபண்ணிக்கொண்டான்.

௫ அவர்கள் சந்தோஷப்பட்டு [6]அவனுக்குத் திரவியம் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

௬ அதற்கு அவன் பொருந்தி, சனக்கூட்டம் இல்லாதபொழுது* அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படிக்குத் தகுதியான காலத்தைத் தேடினான்.

௭ ¶ [7]பஸ்காவின் ஆட்டுக்குட்டியைப் பலியிடவேண்டிய புளியாத அப்பநாள் வந்தது.

௮ அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து, நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், நமக்காக அதை எத்தனம்பண்ணுங்கள் என்றார்.

௯ அதற்கு அவர்கள், நாங்கள் அதை எங்கே எத்தனம்பண்ண விரும்புகிறீர் என்றார்கள்.

௰ அவர் சொன்னது: நீங்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, ஒருவன் தண்ணீர்க்குடம் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிலே போய்,

௰௧ அந்த வீட்டெசமானை நோக்கி, நான் என் சீஷரோடுங்கூடப் பஸ்காவைப் புசிக்கத்தக்கதான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச்சொன்னார் என்று சொல்லுங்கள்.

௰௨ அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே எத்தனம்பண்ணுங்கள் என்று அனுப்பினார்.

௰௩ அவர்கள் போய், அவர் சொன்னபிரகாரமாகக் கண்டு, பஸ்கா போசனத்தை எத்தனம்பண்ணினார்கள்.

௰௪ ¶ தகுதியான நேரம் வந்தபொழுது, [8]அவரும் அவருடனே பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியில் இருந்தார்கள்.

௰௫ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நான் பாடுபடுகிறதற்குமுன்னே உங்களுடனேகூட

கி. பி. ௩௩.

[1] யோவா ௮ ௨
[2] லூக் ௨௧ ௩௭
[3] மத ௨௬ ௨ மாற ௰௪ ௧
[4] சங ௨ ௨ யோவா ௰௧ ௪௭ அப ௪ ௨௭
[5] மத ௨௬ ௰௪ மாற ௰௪ ௰ யோவா ௰௩ ௨, ௨௭
[6] சகரி ௰௧ ௰௨
* அல்லது சந்தடியில்லாமல்
[7] மத ௨௬ ௰௭ மாற ௰௪ ௰௨
[8] மத ௨௬ ௨௰ மாற் ௰௪ ௰௭

இந்தப் பஸ்காப்போசனம் பண்ண மிகவும் ஆசையாய்* இருந்தேன்

௰௬ என்னத்தினாலென்றால், [1]பராபரனுடைய இராச்சியத்திலே அது நிறைவேறும் அளவும் நான் பின்னும் இதில் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

௰௭ பின்பு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, தோத்திரம்செய்து,

௰௮ [2]பராபரனுடைய ஆளுகை வரும் அளவும், நான் மறுபடியும் திராட்ச இரசத்திலே பானம்பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகையால் நீங்கள் இதை எடுத்து, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்றார்.

௰௯ ¶ அல்லாமலும் [3]அவர் அப்பத்தை எடுத்துக்கொண்டு தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கின்றது; [4]என்னை நினைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லி,

இராப்போசனம்பண்ணின பின்பு,

௨௰ அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, [5]இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தினாலே புதிய உடம்படிக்கையாய் இருக்கின்றது என்று சொல்லி,

௨௧ ¶ பின்பு இதோ, [6]என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனே [illegible]யில் இருக்கின்றது

௨௨ [7]தீர்மா[illegible]ஷ தனுடைய [illegible]; அது மெய்த[illegible] யோ! எந்த[illegible] காட்டிக்கொ[illegible] ஷனுக்கு [illegible] றார்.

௨௩ அப்பொ[illegible] மில் யாவன் [illegible]

என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்.

௨௪ ¶ அன்றியும் அவர்கள் [10]தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தபொழுது,

௨௫ [11]அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: புறதேசத்தாருடைய இராசாக்கள் அவர்களைப் பலவந்தமாய் ஆண்டுகொள்ளுகிறார்கள்; அல்லாமலும் அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துகிறவர்கள் தருமதுரைகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

௨௬ [12]உங்களுக்குள்ளே அப்படி இருக்கக்கூடாது, [13]உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் ஊழியக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்.

௨௭ [14]பந்தியில் இருக்கிறவன், ஊழியம்செய்கிறவன், இவ்விருவரில் எவன் பெரியவன்? பந்தியில் இருக்கிறவன் அல்லவா? ஆனாலும் [15]நான் உங்களுக்குள்ளே ஊழியம் செய்கிறவனைப்போல இருக்கிறேன்

௨௮ மேலும் [16]எனக்கு வந்த துன்பகாலங்களில் என்னுடனே இருந்தவர்கள் நீங்களே.

௨௯ ஆகையால் [17]என் பிதா எனக்கு ஓர் இராச்சியத்தை ஏற்படுத்தியிருக்கிறபடியால்,

௩௰ [18]நீங்கள் என் இராச்சியத்தில் என் பந்தியிலே போசனபானம் பண்ணி, [19]இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர்களாய் ஆசனங்களின்மேல் உளுக்காரும்படிக்கு நான் உங்களை ஏற்படுத்துகிறேன் என்றார்.

௩௧ ¶ கர்த்தர் பின்னும் சொன்னதாவது: [20]சீமோனே, சீமோனே, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல, [21]உங்களைப் புடைக்கும்படிக்கு, சாத்தான் உத்தரவு கேட்டான்.

கி. பி. ௩௩

* அல்லது மன ஆசையாய்

[1] லூக் ௰௪ ௰௫ அப ௰ ௪௧ வெளி ௰௯ ௯

[2] மத் ௨௬ ௨௯ மாற் ௰௪ ௨௫

[3] மத் ௨௬ ௨௬ மாற் ௰௪ ௨௨

[4] ௧ கொரி ௰௧ ௨௪

[5] ௧ கொரி ௰ ௰௬

[6] ௪௧ ௯ மத் ௨௬ ௨௧ ௨௩ மாற் ௰௪ ௰௮ யோவா ௰௩ ௨௧, ௨௬

[7] அப் ௨ ௨௩ ௪ ௨௮

[8] மத் ௨௩ ௨௪

[9] மத் ௨௬ ௨௨ யோவா ௰௩ ௨௨, ௨௫

[10] மாற் ௯ ௩௪ லூக் ௯ ௪௬

[11] மத் ௨௰ ௨௫. மாற் ௰ ௪௨

[12] மத் ௨௰ ௨௬ ௧ பேது ௫ ௩

[13] லூக் ௯ ௪௮

[14] லூக் ௰௨ ௩௭

[15] மத் ௨௰ ௨௮ யோவா ௰௩ ௰௩, ௰௪ பிலி ௨ ௭

[16] எபி ௪ ௰௫

[17] மத் ௨௪ ௪௭ லூக் ௰௨ ௩௨ ௨ கொரி ௧ ௭ ௨ தீமோ ௨ ௰௨

[18] மத் ௮ ௰௧ லூக் ௰௪ ௰௫ வெளி ௰௯ ௯

[19] சங் ௪௯ ௰௪ மத் ௰௯ ௨௮ ௧ கொரி ௬ ௨ வெளி ௩ ௨௧

[20] ௧ பேது ௫ ௮

[21] ஆமோ ௯ ௯

௩௨ [1]நானோ, உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, உனக்காக வேண்டிக்கொண்டேன்; அந்தப்படி [2]நீ இனிமேல் மனந்திரும்பினபின் உன் சகோதரரை ஸ்திரப்படுத்துவாயாக என்றார்.

௩௩ அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, உம்முடனேகூட நான் காவலிலும் சாவிலும் வர எத்தனமாய் இருக்கிறேன் என்றான்.

௩௪ அவர் சொன்னது: [3]பேதுருவே, இன்று சேவல் கூவும்முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௫ ¶ பின்னும் அவர் அவர்களுடனே சொன்னது: [4]நான் உங்களைப் பணப்பையும், சாமான்பையும், பாத இரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபொழுது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாய் இருந்ததா என்றார்; ஒன்றும் குறைவாயிருக்கவில்லை என்றார்கள்.

௩௬ அவர் சொன்னது: இப்பொழுது பணப்பையையும் சாமான்பையையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன்; அல்லாமலும் கத்தியில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்.

௩௭ என்னத்துக்கென்றால், என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் முடிகிறபடியினாலே, [5]அக்கிரமக்காரரோடே எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிறது, என்னிடத்தில் நிறைவேறவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௩௮ அதற்கு அவர்கள் ஆண்டவரே, இதோ, இரண்டு கத்திகள் உண்டு என்றார்கள்; (அவைகளே) போதும் என்று அவர்களுடனே சொன்னார்.

௩௯ ¶ பின்பு [6]அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே [7]ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவருக்குப் பின்சென்றார்கள்.

௪௰ [8]அவ்விடத்தில் சேர்ந்தபொழுது, அவர் அவர்களை நோக்கி, நீங்கள் குற்றம்செய்வதற்கான காரணத்தில் பிரவேசியாதபடிக்கு, செபம்பண்ணுங்கள் என்று சொல்லி,

௪௧ [9]கல்லெறிதூரத்தில் அவர்களைவிட்டுப் போய்,

௪௨ முழங்கால் படியிட்டு, பிதாவே, உமக்குச் சித்தமானால் *இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும், [10]இல்லாவிட்டால், என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆவதாக என்று செபம்பண்ணினார்.

௪௩ அப்பொழுது [11]வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

௪௪ பின்னும் அவர் கொடிய வேதனைப்பட்டு, [12]அதிக உக்கிரத்தோடே செபம்பண்ணினார், அப்பொழுது அவருடைய வேர்வை இரத்தத்துளிகளைப்போலாகித் தரையின்மேல் விழுந்தது.

௪௫ பின்பு அவர் செபம்பண்ணி முடித்தபொழுது, எழுந்திருந்து தம்முடைய சீஷரிடத்தில் போய், அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணக் கண்டு,

௪௬ என்னத்திற்காகத் தூங்குகிறீர்கள்; நீங்கள் குற்றம்செய்வதற்கான காரணத்தில் பிரவேசியாதபடிக்கு, [13]எழுந்திருந்து செபம்பண்ணுங்கள் என்றார்.

௪௭ ¶ அவர் அப்படிப் பேசுகையில், [14]சனங்கள் கூட்டமாய்ச் சேர்ந்தார்கள்? அவர்களுக்கு முன்னாகப் பன்னிருவரில் ஒருவனான யூதா என்பவன் நடந்துபோய், இயேசுவை முத்தம்செய்யும்படிக்கு அவரிடத்தில் சேர்ந்தான்.

௪௮ அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, யூதாவே, நீ

கி. பி. ௩௩

[1] யோவா ௰௭ ௯, ௰௧, ௰௫
[2] சங ௫௧ ௰௩ யோவா ௨௧ ௰௫, ௰௬, ௰௭
[3] மத் ௨௬ ௩௪ மாற் ௰௪ ௩௰ யோவா ௰௩ ௩௮
[4] மத் ௰ ௯ லூக் ௯ ௩ ௰ ௪
[5] ஏசா ௫௩ ௰௨ மாற் ௰௫ ௨௮
[6] மத் ௨௬ ௩௬ மாற் ௰௪ ௩௨ யோவா ௰௮ ௧
[7] லூக் ௨௧ ௩௭
[8] மத் ௬ ௰௩ ௨௬ ௪௧ மாற் ௰௪ ௩௮ ௪௬ வச
[9] மத் ௨௬ ௩௯ மாற் ௰௪ ௩௫
* அல்லது நீங்கச் சித்தமானால்
[10] யோவா ௫ ௩௰ ௬ ௩௮
[11] மத் ௪ ௰௧
[12] யோவா ௰௨ ௨௭ எபி ௫ ௭
[13] ௪௰ வச
[14] மத் ௨௬ ௪௭ மாற் ௰௪ ௪௩ யோவா ௰௮ ௩

மனிதனுடைய குமாரனை முத்தத்தினாலேயா காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.

௪௯ அல்லாமலும் அவரைச் சுற்றியிருந்தவர்கள் சம்பவிப்பதை அறிந்து அவரை நோக்கி, ஆண்டவரே, கத்தியினாலே நாங்கள் வெட்டலாமா என்று சொல்ல,

௫௰ (உடனே) [1]அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்.

௫௧ அப்பொழுது இயேசுவானவர், இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைக் குணமாக்கினார்.

௫௨ [2]பின்பு இயேசுவானவர் தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியரையும், தேவாலயத்தலைவரையும், மூப்பரையும் நோக்கி, ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் கத்திகளோடும் தடிகளோடும் புறப்பட்டு வந்தீர்கள்.

௫௩ தினந்தோறும் நான் தேவாலயத்தில் உங்களுடனே இருக்கையில், நீங்கள் என்மேல் கைகளைப் போடவில்லை, [3]இதுவே உங்களுக்கு ஏற்றநேரமும் இருளின் வல்லமையுமாய் இருக்கின்றது என்றார்.

௫௪ ¶ அப்பொழுது [4]அவர்கள் அவரைப் பிடித்து, பிரதான ஆசாரியனுடைய மாளிகைக்குக் கொண்டுபோனார்கள்; [5]பேதுருவும் தூரமாக அவருக்குப் பின்சென்றான்.

௫௫ அல் ள்
மாளிகையி வி
லே நெருப ளி,
அதைச் சுற பா
ழுது பேது ா
னே உளுக்க

௫௬ அப க
காரி அவனை ல
இருக்கக் க ப

பார்த்து, இவனும் அவனோடிருந்தான் என்றாள்.

௫௭ அதற்கு அவன் ஸ்திரீயே, அவனை அறியேன் என்று அவரை மறுதலித்தான்.

௫௮ [7]சற்றுநேரத்துக்குப் பின்பு, வேறொருவன் அவனைக் கண்டு, நீயும் அவர்களில் ஒருவன் என்றான், அதற்குப் பேதுரு, மனிதனே, நானல்ல என்றான்.

௫௯ [8]ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து, மெய்யாய் இவனும் அவனோடே இருந்தான், இவன் கலிலேயன்தானே என்று நிச்சயத்தோடே சொன்னான்.

௬௰ அதற்குப் பேதுரு மனிதனே, நீ பேசுகிறதை அறியேன் என்றான், உடனே அவன் பேசுகையில் சேவல் கூவிற்று.

௬௧ அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார், [9]உடனே பேதுரு சேவல் கூவுமுன்னே [10]நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று தன்னோடே கர்த்தர் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு,

௬௨ வெளியே போய், மிகுந்த மனத்துக்கத்தோடே அழுதான்.

௬௩ ¶ [11]இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனிதர் அவரை அசட்டைபண்ணி,

௬௪ அடித்து, அவருக்கு முக்காட்டிட்டு, அவருடைய முகத்தில் அறைந்து, உன்னை அடித்தவன் யாவன், அதைத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லு என்று சொல்லி,

௬௫ மற்றும் அநேகவிதமாய் அவரைத் தூஷணித்தார்கள்.

௬௬ ¶ [12]உதயமானபொழுது சனத்தின் [13]மூப்பரும், பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவரும்படிசெய்து அவரை நோக்கி,

௬௭ [14]நீ கிறிஸ்துவானால் அதை எங்களுக்குச் சொல் என்றார்கள்;

கி. பி ௩௩.

[1] மத் ௨௬ ௫௧ மாற் ௧௪ ௪௭ யோவா ௧௮ ௰
[2] மத் ௨௬ ௫௫ மாற் ௧௪ ௪௮
[3] யோவா ௧௨ ௨௭
[4] மத் ௨௬ ௫௭
[5] மத் ௨௬ ௫௮ யோவா ௧௮ ௧௫
[6] மத் ௨௬ ௬௯ மாற் ௧௪ ௬௬ யோவா ௧௮ ௧௭
[7] மத் ௨௬ ௭௧ மாற் ௧௪ ௬௯ யோவா ௧௮ ௨௫
[8] மத் ௨௬ ௭௩ மாற் ௧௪ ௭௰ யோவா ௧௮ ௨௬
[9] மத் ௨௬ ௬௪, ௭௫ யோவா ௧௩ ௩௮
[10] மத் ௨௬ ௭௫ மாற் ௧௪ ௭௨
[11] மத் ௨௬ ௬௭, ௬௮ மாற் ௧௪ ௬௫
[12] மத் ௨௭ ௧
[13] அப் ௪ ௨௬ அப் ௨௨ ௫
[14] மத் ௨௬ ௬௩ மாற் ௧௪ ௬௧

அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் என்னை நம்பமாட்டீர்கள்.

௬௮ நான் உங்களிடத்தில் விசாரித்தாலும் நீங்கள் எனக்கு மாறுத்தரவு சொல்லவும் என்னை விடுதலையாக்கவும் மாட்டீர்கள்.

௬௯ [1]இதுமுதல் மனிதனுடைய குமாரன் சருவவல்லமையுள்ள பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருவான் என்றார்.

௭௰ அதற்கு அவர்கள் எல்லாரும், அந்தப்படி நீ பராபரனுடைய குமாரனோ என்றார்கள்; அவர் சொன்னது: [2]நீங்கள் சொல்லுகிறபடி நானே அவரென்றார்.

௭௧ [3]அப்பொழுது அவர்கள் சொன்னது: இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாம் தானே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்.

௨௩. அதிகாரம்.

௧ இயேசு பிலாத்துவுக்குமுன்பாகக் குற்றஞ்சாற்றப்பட்டு, ஏரோதேயினிடத்துக்கு அனுப்பப்பட்டது ௮ ஏரோதே அவரைப் பரிகாசம்பண்ணினது ௰௨ விரோதிகளாயிருந்த ஏரோதேயும் பிலாத்தும் சிநேகிதரானது ௰௮ பரபாசென்பவன் சனங்களுடைய கேட்டுக்கொள்ளுதலினாலே பிலாத்துவினாலே விடுதலையாக்கப்பட, இயேசுவானவர் சிலுவையில் அறையும்படி ஒப்புவிக்கப்பட்டது ௨௭ தமக்காகப் புலம்பின ஸ்திரீகளுக்கு எருசலேமின் அழிவைச் சொல்லி, ௩௪ தம்முடைய சத்துருக்களுக்காக வேண்டிக்கொண்டது ௩௯ இரண்டு குற்றவாளிகளும் அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டது ௪௬ அவர் மரித்து, ௫௰ அடக்கம்பண்ணப்பட்டது

[4]பின்பு அவர்களுடைய கூட்டத்தார் எல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவென்னும் துரையினிடத்துக்குக் கொண்டுபோய்,

௨ [5]இவன் தன்னை இராசாவாகிய கிறிஸ்து என்றும், [6]சனங்கள் இராயருக்கு வரிகொடுக்கவேண்டுவது இல்லையென்றும் சொல்லி, [7]அவர்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றம் சாற்றத் தொடங்கினார்கள்.

௩ [8]அப்பொழுது பிலாத்து என்பவன் அவரை நோக்கி, நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான்; அதற்கு அவர்: நீர் சொல்லுகிறபடியே இருக்கின்றது என்றார்.

௪ பின்பு பிலாத்து என்பவன் பிரதான ஆசாரியரையும் சனக்கூட்டத்தையும் நோக்கி, [9]இந்த மனிதனிடத்திலே ஒரு குற்றத்தையும் காணேன் என்றான்.

௫ அதற்கு அவர்கள் சொன்னது: இவன் கலிலேயா நாட்டைத் தொடங்கி, இவ்விடம்வரைக்கும் யூதேயா நாட்டில் எங்கும் உபதேசம்பண்ணி, சனங்களைக் கலக்கப்படுத்துகிறான் என்று அதிக உக்கிரத்தோடே சொன்னார்கள்.

௬ கலிலேயா நாடென்பதைப் பிலாத்துக் கேள்விப்பட்டபொழுது, இம்மனிதன் கலிலேயனோ என்று விசாரித்தபின்பு,

௭ [10]அவர் ஏரோதே இராசாவின் அதிகாரத்துக்கு உள்ளானவர் என்று அறிந்து, அந்நாள்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதினிடத்திற்கு அவரை அனுப்பினான்.

௮ ¶ ஏரோது என்பவன் [11]இயேசுவைக்குறித்து மிகுந்த காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியினாலே, [12]அநேகநாளாய் அவரைக் காண ஆசையாயிருந்தான்; ஆதலால் அவன் அவரைக் கண்டபொழுது, மிகவும் சந்தோஷப்பட்டு, அவர் செய்யும் அற்புதத்தைப் பார்க்கலாம் என்று எண்ணி,

௯ அநேகம் காரியங்களைக்குறித்து அவரிடத்தில் வினவினான்; அவர் அவனுக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை.

௰ பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் வந்து நின்று, உக்கிரமாய் அவர்மேல் குற்றம்சாற்றினார்கள்.

௰௧ அப்பொழுது ஏரோதென்பவனும், [13]அவனுடைய போர்ச்சேவகரும் அவரை அசட்டைபண்ணி, பிரகாசமுள்ள வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, இப்படிப் பரிகாசம்பண்ணினபின்பு,

கி. பி. ௩௩.

1 மத் ௨௬ ௬௪ மாற் ௰௪ ௬௨ எபி ௧ ௩ ௮ ௧
2 மத் ௨௬ ௬௪ மாற் ௰௪ ௬௨
3 மத் ௨௬ ௬௫ மாற் ௰௪ ௬௩
4 மத் ௨௭ ௨ மாற் ௰௫ ௧ யோவா ௰௮ ௨௮
5 யோவா ௰௯ ௰௨
6 மத் ௰௭ ௨௭ ௨௨ ௨௧ மாற் ௰௨ ௰௭.
7 அப் ௰௭ ௭
8 மத் ௨௭ ௰௧ ௧ தீமோ ௬ ௰௩
9 ௧ பே ௨ ௨௨
10 லூக் ௩ ௧
11 மத் ௰௪ ௧ மாற் ௬ ௰௪
12 லூக் ௯ ௯.
13 ஏசா ௫௩ ௩

கி. பி. ௩௩.

௰௨ அவனைத் திரும்பப் பிலாத்துவினிடத்துக்கு அனுப்பினான்; அந்தநாளிலே முன்னே ஒருவருக்கொருவர் பகைஞராய் இருந்த [1]பிலாத்து என்பவனும் ஏரோது என்பவனும் சிநேகிதரானார்கள்.

௰௩ ¶ அப்பொழுது [2]பிலாத்து என்பவன் பிரதான ஆசாரியரையும், தலைவரையும், சனங்களையும், கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி,

௰௪ நீங்கள் [3]இந்த மனிதன் சனங்களைக் கலகப்படுத்துகிறவன் என்று சொல்லி, இவனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; அந்தப்படி நான் உங்களுக்குமுன்பாக இவனைச் சோதித்தபொழுது, [4]நீங்கள் இவன்மேல் சாற்றின குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்திலே காணவில்லை.

௰௫ பின்பு உங்களை ஏரோதினிடத்திற்கு அனுப்பினேன்; அவரும் இவனில் குற்றம் காணவில்லை.

௰௬ ஆதலால் இவன் மரணத்துக்கு எதுவானது ஒன்றும் செய்யாதவனாயிருக்கிறபடியால், [5]நான் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்.

௰௭ [6]பண்டிகைதோறும் அவன் அவர்களுக்காக ஒருவனை விடுதலையாக்கவேண்டியிருந்தபடியால், அப்படிச் சொன்னான்.

௰௮ திரளான சனங்கள் எல்லாரும் அதைக்கேட்டு, [7]இவனை ஆக்கினைக்கு உட்படுத்தி, பரபாசை எங்களுக்காக விடுதலையாக்கவேண்டும் என [illegible] ட்டார்கள்.

௰௯ அந்தப [illegible] நகரத்திலே [illegible] துக்காகவும் [illegible] கவும் காவல [illegible] ருந்தான்.

௨௰ அப்பொ [illegible] வன் இயேசு [illegible] மனதாய், மறுபடியும் அவர்களுக்குச் சொன்னான்.

௨௧ அதற்கு அவர்கள் இவனைச் சிலுவைமரத்தில் அறையவேண்டும், இவனைச் சிலுவைமரத்தில் அறையவேண்டும் என்று கூக்குரலிட்டார்கள்.

௨௨ அவன் மூன்றாந்தரம் சொன்னது: இவன் எந்தப் பொல்லாங்கைச் செய்தான்? இவனிடத்திலே மரணத்துக்கு எதுவான குற்றம் ஒன்றையும் காணோமே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து விடுதலைபண்ணுவேன் என்றான்.

௨௩ அப்படியிருந்தும் அவனைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்கு, அவர்கள் மிகுந்த சத்தத்துடனே கேட்டுக்கொண்டார்கள்; அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்ட கூக்குரல் அதிகப்பட்டது.

௨௪ [8]அப்பொழுது பிலாத்து என்பவன் அவர்களுடைய மனுவின்படி ஆகும்படிக்குத் தீர்மானம் பண்ணி,*

௨௫ கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் வைக்கப்பட்டிருந்தவனை அவர்களுடைய விண்ணப்பத்தின்படி அவர்களுக்காக விடுதலையாக்கி, இயேசுவானவரையே அவர்களுடைய இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

௨௬ ¶ அந்தப்படி அவர்கள் அவரைக் கொண்டுபோகிறபொழுது [9]வயலிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைப் பிடித்துச் சிலுவைமரத்தை இயேசுவின் பின் சுமந்துபோகும்படி அவன்மேலே வைத்தார்கள்.

௨௭ திரளான கூட்டமாகிய சனங்களும், அவருக்காகத் துக்கமாய்ப் புலம்பி அழுகிற ஸ்திரிகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

௨௮ அப்பொழுது இயேசுவானவர் அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னது: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக

[1] அப் ௪ ௨௭

[2] மத் ௨௭ ௨௩ மாற் ௰௫ ௰௪ யோவா ௰௮ ௩௮ ௰௯ ௪

[3] ௧, ௨ வச.

[4] ௪ வச

[5] மத் ௨௭ ௨௬ யோவா ௰௯ ௧

[6] மத் ௨௭ ௰௫ மாற் ௰௫ ௬ யோவா ௰௮ ௩௯

[7] அப் ௩ ௰௪

[8] மத் ௨௭ ௨௬ மாற் ௰௫ ௰௫ யோவா ௰௯ ௰௬

* அல்லது சம்மதித்து ௨ மோ ௨௩ ௨

[9] மத் ௨௭ ௩௨ மாற் ௰௫ ௨௧ யோவா ௰௯ ௰௭

அழாமல், உஙகளுககாகவும் உஙகள பிள்ளைகளுககாகவும் அழுது கொள்ளுஙகள.

உ௯ என்னததினுலெனில், [1]மலடிகளும், பிள்ளைபெருத கருபபஙகளும, பாலகொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள என்று சொலலபபடும் நாள்கள் வரும.

௩௰ அபபொழுது இவர்கள் [2]மலைகளை நோககி, எஙகளமேல் விழுஙகள என்றும, குன்றுகளை நோககி, எஙகளை மூடிககொளளுஙகள என்றும் சொலலுவார்கள.

௩௧ [3]பசுமையான மரததுககு இபபடிச செய்தால், பட்டுபபோன மரத்துககு மிகவும் அதிகமாய இபபடிச் செய்யபபடுமே அல்லவா என்றார.

௩௨ ¶ [4]குற்றவாளிகளாகிய வேறு இரணடுபேரும அவரோடேகூட மரணம அடைவதறகுக கொண்டுபோகபபட்டார்கள.

௩௩ [5]தலையோட்டிடம * எனனபபட்ட இடததிலே அவர்கள்சோநதபொழுது, அஙகே அவரையும், அவருடைய வலதுபககததிலே ஒரு குறறவாளியையும, அவருடைய இடதுபககததிலே மற்றக குறறவாளியையும சிலுவைமரஙகளில அறைநதார்கள.

௩௪ ¶ அபபொழுது இயேசுவானவர, பிதாவே, [6]இவர்கள தஙகள செய்கையின் தன்மையை அறியாதிருககிறார்கள்; ஆதலால் [7]இவர்களுககு மன்னிததருளும் என்றார, [8]அவருடைய வஸதிரஙகளை அவர்கள பஙகிட்டு, (அவைகளைககுறிதது) சீட்டுபபோட்டார்கள்.

௩௫ [9]சனஙகள நின்று பாரததுக் கொணடார்கள; [10]அவர்களுடனேகூடத தலைவரும் அவரை இகழ்நது, இவன் மற்றவர்களை இரட்சிததான; இவன பராபரனுலே தெரிநதுகொளளபபட்ட கிறிஸதுவானுல, தன்னைத்தானே இரட்சிககலாமே என்றார்கள.

௩௬ போர்ச்சேவகரும் அவரை அசட்டைபணணி அவரிடத்தில், சேர்நது, அவருக்குக காடியைக் காண்பித்து,

௩௭ நீ யூதரின் இராசாவானுல் உன்னை இரட்சித்துககொள என்றார்கள்.

௩௮ அவருக்கு மேலாக, [11]இவன யூதருடைய இராசா என்று கிரேககை, லததீன், எபிரேயு என்னும் பாஷைகளால எழுதபபட்டிருநதது.

௩௯ ¶ [12]அல்லாமலும தூககிபபோடபபட்ட குறறவாளிகளில் ஒருவன அவரைத தூஷணிதது, நீ கிறிஸதுவானுல உன்னையும எஙகளையும இரட்சிததுககொள என்றான

௪௰ அபபொழுது மற்றவன அவனுடனே சொன்னது. இநத ஆககினைககு உளளாயிருககிற நீயும பராபரனுககுப பயபபடாமலா இருககிறாய? நாம் நமமுடைய நடகைகைகளுக்குத தகுதியாக இநத ஆககினையை நியாயமாய அடைகிறோம

௪௧ இவர தகாதது ஒன்றையும நடபபிககவிலலை என்று அவனைக கடிநதுகொணடு,

௪௨ பின்பு இயேசுவுடனே சொனனது: ஆணடவரே, நீர உம்முடைய இராசசியததில் சேரும்பொழுது, அடியேனை நினைததருளும என்றான்.

௪௩ அவனுடனே இயேசுவானவர் சொனனது: இன்றைககு நீ என்னுடனேகூடப பரதீசில இருபபாய் என்று மெயயாய உனககுச சொலலுகிறேன என்றார.

௪௪ ¶ பினபு [13]ஏறக்குறைய ஆறுமமணி நேரமாயிறறு, (அதுமுதல) ஒனபதாமமணி நேரமவரைககும, அநதத தேசத்தில் எஙகும்† அநதகாரம் உண்டாகச் சூரியன் இருள அடைநதது

௪௫ அலலாமலும [14]தேவாலயததில் உள்ள திரைசசீலை நடுவிலே கிழிநதுபோயிற்று.

கி. பி. ௩௩.

[1] மத். உ௪. ௰௯. லூக். உ௧. உ௩.
[2] ஏசா. உ. ௧௯. ஓசே. ௰. ௮. வெளி. ௬. ௧௬. ௯. ௬.
[3] நீதி. ௰௧. ௩௧. எரே. உ௫. உ௯. எசே. உ௰. ௪௭. உ௧. ௩, ௪. ௧ பே. ௪. ௰௭.
[4] ஏசா. ௫௩. ௰௨. மாற். ௧௫. உ௮.
[5] மத். உ௭. ௩௩. மாற். ௧௫. உ௨. யோவா. ௰௯. ௰௭, ௰௮.
* அல்லது கல்வாரிமலை.
[6] அப். ௩. ௰௭.
[7] மத். ௫. ௪௪. அப். ௭. ௬௰. ௧ கொரி. ௪. ௰௨.
[8] மத். உ௭. ௩௫. மாற். ௧௫. உ௪. யோவா. ௰௯. உ௩.
[9] சங். உ௨. ௰௭. சகரி. ௰௨. ௰.
[10] மத். உ௭. ௩௯. மாற். ௧௫. உ௯.
[11] மத். உ௭. ௩௭. மாற். ௧௫. உ௬. யோவா. ௰௯. ௰௯.
[12] மத். உ௭. ௪௪. மாற். ௧௫. ௩௨.
[13] மத். உ௭. ௪௫. மாற். ௧௫. ௩௩.
† அல்லது பூமியெங்கும்.
[14] மத். உ௭. ௫௧. மாற். ௧௫. ௩௮.

௪௬ அல்லாமலும் இயேசுவானவர், பிதாவே, [1]உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு, அதின்பின்பு [2]ஜீவனைவிட்டார்.

௪௭ ¶ [3]அப்படிச் சம்பவித்தவைகளைப் படைத்தலைவன் கண்டு, மெய்யாய் இந்த மனிதன் நீதிமானாய் இருந்தான் என்று பராபரனைத் துதிசெய்தான்.

௪௮ அல்லாமலும் அந்தச் சங்கதியைப் பார்க்கக் கூடிவந்திருந்த சனங்கள் எல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

௪௯ [4]அன்றியும், அவருக்கு அறிமுகமானவர்கள் எல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப்பின் சென்றுவந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று, அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

௫௰ ¶ [5]பின்பு யூதருடைய பட்டணமாகிய அறிமத்தியா ஊரானுமாய், உத்தமமும் நீதியுமுள்ளவனுமாய், [6]பராபரனுடைய ஆளுகை வரக்காத்திருந்தவனுமாய்,

௫௧ யூதருடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாத ஆலோசனைக்காரனுமாய் இருந்த யோசேப்பு என்பவன் பிலாத்துவினிடத்தில் போய்,

௫௨ இயேசுவின் சரீரத்தைக் கேட்டு,

௫௩ [7]அதை இறக்கி, மெல்லிய புடவையிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்ட [illegible]
லும் ஒருவனு[illegible]
துமாயிருந்த [illegible]
வைத்தான்.

௫௪ [8]அந்த [illegible]
யிருந்தது; ஓ[illegible]
மாயிற்று.

௫௫ ¶ [9][illegible]
அவருடனே [illegible]
திரிகள் அவனு[illegible] [10]கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து,

௫௬ பின்பு திரும்பிப்போய், [11]சுகந்தவர்க்கங்களையும் பரிமளதயிலங்களையும் எத்தனம்பண்ணி, [12]கற்பனைப்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

௨௪. அதிகாரம்.

௧ கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இரண்டு தூதர்களாலே கல்லறையினிடத்தில் வந்திருந்த ஸ்திரீகளுக்கு அறிவிக்கப்பட்டது ௯ இந்தச் செய்தியை இவர்கள் மற்றவர்களுக்கு அறிவித்தது ௰௩ கிறிஸ்து எம்மாவென்னும் கிராமத்திற்குப் போகிற இரண்டு சீஷர்களுக்குத் தரிசனையாகி, ௩௬ பின்பு அப்போஸ்தலர்கள் எல்லாருக்கும் காணப்பட்டு, அவர்களுடைய அவிசுவாசத்தைக் கடிந்துகொண்டு, ௪௭ அவர்களுக்கு ஒரு கட்டளை கொடுத்து ௪௯ பரிசுத்த ஆவியை அனுப்புவேனென்று வாக்குத்தத்தம்பண்ணி, ௫௧ பின்பு பரமண்டலத்துக்கு ஏறினது.

[13]வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலே, அவர்கள் தாங்கள் எத்தனம்பண்ணின [14]சுகந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு, வேறுசில ஸ்திரீகளுங்கூடக் கல்லறையினிடத்தில் சென்று,

௨ [15]அதின்மேல் இருந்த கல் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு,

௩ [16]உட்பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்,

௪ அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்துகொண்டிருக்கையில், (ரு) [17]பிரகாசமான வஸ்திரங்களையுடைய இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

௫ அப்பொழுது அந்த ஸ்திரீகள் பயந்து, தரையை நோக்கிக் குனிந்துநிற்கையில், அவ்விரண்டுபேரும் அவர்களை நோக்கி, உயிரோடு இருக்கிறவரை* நீங்கள் மரித்தோரிடத்தில் என்னத்தினாலே தேடுகிறீர்கள்? அவர் இங்கே இல்லை; எழுந்துபோனார்.

௭ முன்னே அவர் கலிலேயா நாட்டில் இருந்தகாலத்திலே, [18]மனிதனுடைய குமாரன் பாவிகளான மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்க

கி. பி. ௩௩

1 சங் ௩௧ ௫; ௧ பே ௨ ௨௩
2 மத் ௨௭ ௫௰; மாற் ௧௫ ௩௭; யோவா ௧௯ ௩௰
3 மத் ௨௭ ௫௪; மாற் ௧௫ ௩௯
4 சங் ௩௮ ௧௧; மத் ௨௭ ௫௫; மாற் ௧௫ ௪௰; யோவா ௧௯ ௨௫
5 மத் ௨௭ ௫௭; மாற் ௧௫ ௪௨; யோவா ௧௯ ௩௮
6 மாற் ௧௫ ௪௩; லூக் ௨ ௨௫, ௩௮
7 மத் ௨௭ ௫௯; மாற் ௧௫ ௪௬
8 மத் ௨௭ ௬௨
9 லூக் ௮ ௨
10 மாற் ௧௫ ௪௭
11 மாற் ௧௬ ௧
12 ௨ மோ ௨௰ ௰
13 மத் ௨௮ ௧; மாற் ௧௬ ௧; யோவா ௨௰ ௧
14 லூக் ௨௩ ௫௬
15 மத் ௨௮ ௨; மாற் ௧௬ ௪
16 ௨௩ வச. மாற் ௧௬ ௫
17 யோவா ௨௰ ௧௨; அப் ௧ ௰
18 மத் ௧௬ ௨௧; ௧௭ ௨௨; மாற் ௮ ௩௧; ௯ ௩௧; லூக் ௯ ௨௨

* அல்லது உயிரோடிருக்கிறவரை.

க்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டுமென்று உங்களுடனே சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள் என்றார்கள்.

௮ [1]அப்பொழுது அவர்கள் அவருடைய திருவசனங்களை நினைத்து,

௯ [2]கல்லறையை விட்டுத் திரும்பி, அந்தச் சங்கதியைப் பதினொருவருக்கும் மற்ற எல்லாருக்கும் அறிவித்தார்கள்.

௰ அதை அப்போஸ்தலருடனே சொன்னவர்கள், [3]மகுதலா ஊராளாகிய மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாய் மரியாளும், இவர்களுடனே இருந்த மற்ற ஸ்திரிகளுமே.

௰௧ [4]அவர்கள் சொன்ன வசனங்களை அப்போஸ்தலர்கள் ஒரு கட்டுக்கதையைப்போல எண்ணி, அவர்களுடைய சொல்லை நம்பவில்லை.

௰௨ [5]ஆனாலும் பேதுரு எழுந்து, கல்லறையினிடத்துக்கு ஓடி, அதற்குள்ளே பார்க்கக் குனிந்து, சேலைகளைத் தனியே வைத்திருக்கக் கண்டு, சம்பவித்திருக்கிறதைக்குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டு போனான்.

௰௩ ¶ [6]அன்றியும் அன்றைத்தினமே, அவர்களில் இரண்டுபேர் எருசலேம் நகரத்துக்கு அறுபது ஸ்தாதிவழி தூரமான எம்மாவு என்னும் ஊருக்குப் போனார்கள்.

௰௪ (போகையில்) அவர்கள் சம்பவித்திருந்த இக்காரியங்கள் யாவையும்குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

௰௫ அப்படி அவர்கள் பேசி விசாரித்துக்கொள்ளுகிறபொழுது, [7]இயேசுவானவர் தாமும் சமீபமாகி, அவர்களுடனேகூட நடந்தார்.

௰௬ [8]அப்படியிருந்தும், அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.

௰௭ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்றார்.

௰௮ அதற்கு அவர்களில் ஒருவனாகிய [9]கிலேயோப்பா என்பவன் சொன்னது: நீமாத்திரமோ எருசலேமில் இந்நாட்களில் சம்பவித்தவைகளை அறியாத அந்நியனாயிருக்கிறாய் என்றான்.

௰௯ அவர் எவையென்றார்; அதற்கு அவர்கள் சொன்னது: நாசரேத்தூரானாகிய இயேசுவைக்குறித்தவைகளே; [10]அவர் பராபரனுக்கும் சகல சனங்களுக்கும் முன்பாக, செய்கையிலும் வசனத்திலும் [11]வல்லமையுள்ள தீர்க்கதரிசியாய் இருந்தார்.

௨௰ அப்படியிருந்தும், [12]நம்முடைய பிரதான ஆசாரியரும் தலைவரும் அவரை மரண ஆக்கினைக்கு உட்படுத்திச் சிலுவைமரத்தில் அறைந்தார்கள்.

௨௰௧ [13]இஸ்ரவேலரை மீட்பவர் அவரே என்று நாங்கள் நம்பினோம்; அவைகள் சம்பவித்தது இன்று மூன்றுநாள் ஆகிறதே.

௨௰௨ எங்களில் சில ஸ்திரிகள் அதிகாலையிலே கல்லறையினிடத்தில் போய், அவருடைய சரீரத்தைக் காணாமல் திரும்பி வந்து,

௨௰௩ அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி [14]எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள்.

௨௰௪ [15]அப்பொழுது எங்களில் சிலர் கல்லறையினிடத்தில் போய், ஸ்திரிகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரைக் காணவில்லை என்றார்கள்.

௬௧ [16]மனிதனுடைய குமாரன் தான் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால், (எப்படியிருக்கும்?)

௬௨ [17]ஆவியே உயிர் உண்டாக்குகிறது; மாம்சம் , ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்களே ஆவியாயும் சீவனாயும் இருக்கின்றன என்று சொல்லி,

௬௩ [18]பின்பு இயேசுவானவர் விசுவாசம் இல்லாதவர்கள் இன்னார் என்றும் தம்மைக் காட்டிக்கொ

கி. பி. ௩௨.

1 யோவா ௧ ௰௮ ௫௧.
2 மத் ௰௧ ௨௭ லூக் ௰ ௨௨. யோவா ௧ ௰௮ ௭ ௨௯ ௮. ௰௯
3 யோவா ௩ ௰௬, ௰௮, ௩௬, ௪௰ வச
4 ௩௩, ௩௫ வச
5 ௩௧ வச
6 ௫௧ ௫௭ வச
7 யோவா ௩ ௰௩
8 எபி ௰ ௫, ௰
9 யோவா ௩ ௯
10 யோவா ௭ ௪௩ ௯ ௰௬ ௰ ௰௯
11 மத் ௨௬ ௨௬, ௨௮
12 ௨௭ ௪௰ ௫௨ வச யோவா ௪ ௰௪
13 ௧ யோ. ௩ ௨௪ ௪ ௰௫, ௰௬
14 ௪௮, ௪௯, ௫௰ வச
15 ௬௬ வச மத் ௰௧ ௬
16 யோவா ௩ ௰௩ மாற் ௰௬ ௰௯ அப் ௧ ௯ எபே ௪ ௮
17 ௨ கொரி ௩ ௬
18 யோவா ௨ ௨௪, ௨௫ ௰௩. ௰௧

டுபபவன் இன்னான் என்றும் ஆதிமுதல் அறிநதுவநதபடியால், அவர் பினனும் சொன்னது: [1]உஙகளில் சிலர் விசுவாசிக்கிறவர்கள் அல்ல.

௬௪ அதினாலே [2]ஒருவன் என் பிதாவினாலே அருளகொள்ளாவிட்டால, என்னிடததில் வர மாட்டான் என்று (முன்னே) உஙகளுக்குச் சொன்னேன் என்றார.

௬௫ [3]அதுமுதறகொண்டு அவருடைய சீஷரில் அநேகர் அபபுறம் அவருடனேகூட நடவாமல பின்வாஙகிபபோனார்கள்.

௬௬ அபபொழுது இயேசுவானவர் பன்னிருவரையும் நோககி, போகும்படிககு உங்களுக்கு மனதில்லையா என்றார்.

௬௭ அதற்குச் சீமோன்பேதுரு சொன்னது: ஆண்டவரே, யாரிடத்துககுப போவோம்? [4]உம்மிடத்தில் நித்தியசீவனுள்ள வசனஙகள் இருககின்றனவே.

௬௮ அல்லாமலும் [5]நீரே சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாஙகள விசுவாசித்து அறிநதுகொணடோம் என்றான்.

௬௯ இயேசுவானவர் சொன்னது: [6]பன்னிருவராகிய உஙகளை நான் தெரிந்துகொள்ளவில்லையா? [7]உங்களுக்குள்ளும் ஒருவன் பசாசாய் இருக்கிறான் என்றார்

௭௰ பன்னிருவரில் ஒருவனாகிய சீமோனின் குமாரன் யூதாஸகாரியோத்து என்பவன் தம்மைக் காட்டிக்கொடுக்கிறதற்கு ஏதுவாயிருநதபடியினாலே, அவனைககுறிததது இபபடிச் சொன்னார்.

௭. அதிகாரம்.

௧ இயேசு தமமுடைய இனததாருடைய வீண பெருமையைக் கடிந்துகொணடது ௰ அவர் கலிலேயாவிலிருநது கூடாரபபண்டிகைக்குப போய, ௰௪ தேவாலயத்தில் பிரசஙகமபணணினது. ௪௰ சனஙகள பலவிதமாக அவரைக்குறித்துப பேசினது ௪௫ சேவகர் அவரைப பிடியாததினாலே பரிசேயர் அவர்களையும அவருக்கு இசைநது பேசின நீக்கோதேமுவையும் கடிநது கொண்டது

கி. பி ௩௨.

1 ௬௯ வச
2 ௪௪, ௪௫ வச
3 கூ௰, வச
4 அப ௫ ௨௰
5 மத ௰௬ ௰௬ மாற் ௮ ௨௯ லூக ௯ ௨௰ யோவா ௧ ௪௯ ௰௧ ௨௭
6 லூக் ௬ ௰௩
7 யோவா ௰௩ ௨௭
8 யோவா ௫ ௰௬, ௰௮
9 ௩ மோ ௨௩ ௩௪
10 மாற ௩ ௨௧
11 மத ௰௨ ௪௬ மாற ௩ ௩௧ அப ௧௰௪
12 யோவா ௨ ௪ ௮ ௨௰ ௮, ௩௰ வச
13 யோவா ௰௫ ௰௯
14 யோவா, ௩ ௰௯
15 யோவா ௮ ௨௰ ௯ வச

அதின்பின்பு [8]இயேசுவானவர் யூதர்கள தம்மைக கொலைசெய்யத தேடினபடியினாலே யூதேயாநாட்டிலே சஞ்சரிகக மனதில்லாமல், கலிலேயா நாட்டிலே சஞ்சரிதது வநதார்.

௨ ¶ பின்பு [9]யூதருடைய கூடாரபபணடிகை சமீபமாயிற்று.

௩ [10]அபபொழுது அவருடைய சகோதரர் அவரை விசுவாசியாதபடியினாலே,

௪ அவரை நோக்கி, [11]நீர் செய்கிற கிரியைகளை உமமுடைய சீஷரும பார்க்கும்படிக்கு, நீர் இவ்விடம்விட்டு யூதேயா நாட்டுக்குப போகவேணடும்.

௫ பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் ஒருகாரியததையாகிலும் அநதரஙகததிலே செய்யமாட்டானே; நீர் இபபடிபபட்டவைகளைச செய்கிறபடியால், உம்மை உலகத்திற்கு வெளிபபடுததலாமே என்றார்கள்.

௬ அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது: [12]என்னுடைய நேரம் இபபொழுது வரவில்லை, உஙகள் நேரம எபபொழுதும் எததனமாய் இருககின்றது.

௭ [13]உலகததார் உங்களைப்பகைக்கமாட்டார்கள்; [14]அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகள் எனறு நான் சாட்சிகொடுககிறபடியினாலே என்னைப பகைக்கிறார்கள.

௮ நீங்கள் இந்தப பண்டிகைக்குபபோஙகள், [15]என்னுடைய நேரம் நிறைவேறாதபடியால், நான் இபபொழுது போகமாட்டேன் என்றார்.

௯ இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னும் கலிலேயா நாட்டில் இருந்தார்.

௰ அவருடைய சகோதரர் போனபின்பு அவரும் வெளியரங்க

மாக அல்ல, அந்தரங்கமாகப் பண்டிகைக்குப் போனார்.

௰௧ ¶ [1]பண்டிகை காலத்திலே யூதர்கள் அவரைத்தேடி, அவர் எங்கே இருக்கிறார் என்றார்கள்.

௰௨ [2]அல்லாமலும் சனங்களுக்குள்ளே அவரைக்குறித்து மிகுந்த பேச்சு உண்டாயிற்று; [3]சிலர், அவர் நல்லவர் என்றும், சிலர், அப்படி அல்ல, அவன் சனங்களை வஞ்சிக்கிறவன் என்றும் சொல்லிக்கொண்டார்கள்.

௰௩ [4]அவர்கள் யூதருக்குப் பயப்படுகிறவர்களானபடியினாலே, ஒருவனாகிலும் அவரைக்குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை.

௰௪ ¶ ஏறக்குறையப் பாதிப்பண்டிகை தீர்ந்தபொழுது, இயேசுவானவர் தேவாலயத்திற்குப் போய் உபதேசம்பண்ணினார்.

௰௫ [5]அப்பொழுது யூதர்கள் ஆச்சரியப்பட்டு, கல்லாதவராகிய இவர் வேதவாக்கியங்களை* எப்படி அறிந்தார் என்றார்கள்.

௰௬ அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது: [6]நான் பண்ணுகிற உபதேசம் என்னுடையதல்ல, என்னை அனுப்பினவருடையதாய் இருக்கின்றது

௰௭ [7]இந்த உபதேசம் பராபரனால் உண்டாயிருக்கிறது என்பதும், அல்லது நான் என்னாலே பேசுகிறேன் என்பதும், அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவனுக்கே தெரியும்.

௰௮ [8]தன்னாலே பேசுகிறவன் தனக்கே புகழ்ச்சிவரத் தேடுகிறவன்; தன்னை அனுப்பினவருக்குப் புகழ்ச்சிவரத் தேடுகிறவன் சத்தியமுள்ளவன்; அவனிடத்திலே கபடம

௰௯ [9]மோ யப்
பிரமாணத் ா
டுக்கவில்லை ு
ம், உங்களி த
நியாயப்பிர ய்

கி. பி. ௩௨.

1 யோவா. ௰௧ ௫௬.
2 யோவா ௯ ௰௬. ௰ ௰௯.
3 மத ௨௧ ௪௬ லூக் ௭ ௰௬ யோவா. ௬ ௰௪ ௪௰ ௪௧
4 யோவா. ௯ ௨௨ ௰௨. ௪௨, ௨௰ ௰௯ ௩௮
5 மத் ௰௩ ௫௪ மாற ௬ ௨ லூக் ௪ ௨௨ அப ௨ ௭.
* அல்லது கல்வியை
6 யோவா ௩ ௰௧ ௮ ௨௮ ௰௨. ௪௯. ௰௪ ௰, ௨௪.
7 யோவா ௮ ௪௩
8 யோவா ௫ ௪௧. ௮ ௫௰
9 ௨ மோ ௨௪ ௩ ௫ மோ ௩௩ ௪ யோவா ௧ ௰௭ அப ௭ ௩௮
10 மத ௰௨ ௰௪ மாற் ௩ ௬ யோவா ௫ ௰௬, ௰௮ ௰ ௩௧, ௩௯ ௰௧ ௫௩
11 யோவா ௮ ௪௮, ௫௨ ௰ ௨௰
12 ௧ மோ ௰௭ ௰
13 ௩ மோ ௰௨ ௩
† அல்லது தள்ளாமல்
14 யோவா ௫ ௮, ௯, ௰௬
15 ௫ மோ ௧ ௰௬, ௰௭ யாக் ௨ ௪ ௨௫ யோவா ௮ ௰௫ யாக் ௨ ௧
16 ௪௮ வச
17 மத ௰௩ ௫௫ மாற ௬ ௩ லூக் ௪ ௨௨

கிறதில்லை, [10]என்னத்திற்காக நீங்கள் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.

௨௰ அதற்குச் சனங்கள் சொன்னது: [11]நீ பசாசையுடையவன்; எவன் உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறான் என்றார்கள்

௨௧ இயேசுவானவர் சொன்னது: ஒரு கிரியையைச் செய்தேன்; அதைக்குறித்து நீங்கள் எல்லாரும் அதிசயப்படுகிறீர்கள்.

௨௨ [12]விருத்தசேதனம் மோசேயினாலே அல்ல, பிதாக்களால் உண்டாயிற்று; (பின்பு) மோசே உங்களுக்கு விருத்தசேதனத்தை ஏற்படுத்தினார்; [13]அந்த விருத்தசேதனத்தை நீங்கள் மனிதரில் ஒய்வுநாளிலேயும் பண்ணுகிறீர்கள்.

௨௩ மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் தள்ளாதபடிக்கு†, ஒரு மனிதன் விருத்தசேதனத்தை ஒய்வுநாளிலே பெறலாம் என்றால், [14]நான் ஒரு மனிதன் முழுவதையும் ஒய்வுநாளிலே சுகமாக்கினதினாலே, நீங்கள் என்மேல் எரிச்சலாயிருக்கலாமா?

௨௪ [15]புறம்பே தோன்றுகிறபடி தீர்மானம்பண்ணாமல், நீதியின்படியே தீர்மானம்பண்ணுங்கள் என்றார்.

௨௫ ¶ அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர் சொன்னது: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்?

௨௬ இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறான்; அவர்கள் இவனுடனே ஒன்றும் சொல்லவில்லையே; [16]இவன் மெய்யான கிறிஸ்துவாய் இருக்கிறான் என்று ஆண்டவர்கள் உண்மையாய் அறிந்தார்களா?

௨௭ [17]நாம் இவன் வந்த இடத்தை அறிந்திருக்கிறோம்; கிறிஸ்து வரும்பொழுது, அவர் வந்த இடத்தை ஒருவரும் அறியமாட்டார்களே என்றார்கள்.

௨௮ ¶ அப்பொழுது தேவாலயத்தில் உபதேசிக்கிற இயேசுவானவர் கூப்பிட்டதாவது: [1]என்னை அறிந்திருக்கிறீர்களா? நான் புறப்பட்டு வந்த இடத்தையும் அறிந்திருக்கிறீர்களா? [2]நான் என் சுயமாய் வரவில்லை; [3]என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், [4]அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்

௨௯ நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை அனுப்பினபடியினாலும் [5]நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார்.

௩௰ [6]அப்பொழுது அவரைப் பிடிக்க வகை தேடினார்கள்; [7]அவருடைய நேரம் அக்காலத்திலே வாராதபடியால், ஒருவனும் அவர்மேலே கைகளைப் போடவில்லை.

௩௧ [8]அக்காலத்தில் சனங்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி, கிறிஸ்து வரும்பொழுது இவர் செய்கிற அற்புதங்களிலும் அதிகமானவைகளை அவர் செய்வாரா என்றார்கள்.

௩௨ ¶ சனங்கள் அவரைக்குறித்து இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது, அவர்களும் பிரதான ஆசாரியரும் அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்குச் சேவகரை அனுப்பினார்கள்.

௩௩ ஆதலால் இயேசுவானவர் சொன்னது: [9]நான் இனிச் சிலகாலம்மாத்திரம் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போவேன்.

௩௪ [10]நீங்கள் என்னைத் தேடிக் காணாமல்போவீர்கள்; அல்லாமலும் நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றார்.

௩௫ அப்பொழுது யூதர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டது: இவரை நாம் காணாதபடிக்கு, இவர் எங்கே போவார்? [11]கிரேக்கருக்குள்ளே * சிதறியிருக்கிறவர்களிடத்தில் போவாரா? கிரேக்கருக்கு உபதேசம்பண்ணுவாரா?

௩௬ என்னைத் தேடிக் காணாமல் போவீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றும் அவர் சொன்ன வசனம் எப்படியிருக்கிறது என்றார்கள்.

௩௭ ¶ [12]பின்பு பண்டிகையின் கடைசியும் பெரிதுமான நாளிலே இயேசுவானவர் நின்று கூப்பிட்டதாவது: [13]ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்.

௩௮ [14]வேதவாக்கியம் சொன்னபடி என்னிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ, [15]அவன் உள்ளத்திலிருந்து சீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

௩௯ [16]இப்படி அவர் தம்மிடத்தில் விசுவாசமாகிறவர்கள் அடையும் ஆவியைக்குறித்துச் சொன்னார்; இயேசுவானவர் அப்பொழுது [17]மகிமையாக்கப்படாதபடியினாலே, அந்தப் பரிசுத்த ஆவி அக்காலத்திலே தோன்றவில்லை.

௪௰ சனங்களில் அநேகர் அந்த வசனத்தைக் கேட்டபொழுது, [18]இவர் மெய்யாய்த் தீர்க்கதரிசியானவர் என்றார்கள்.

௪௧ [19]வேறு சிலர் இவர் கிறிஸ்து என்றார்கள்; வேறு சிலர் சொன்னது: [20]கிறிஸ்து கலிலேயா நாட்டிலிருந்தா வருவார்?

௪௨ [21]தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த [22]பெத்லேகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதத்திலே சொல்லியிருக்கவில்லையா என்றார்கள்.

௪௩ [23]இவ்விதமாய் அவரைக்குறித்துச் சனங்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.

௪௪ [24]அல்லாமலும் அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதுள்ளவர்களாய் இருந்தார்கள்; ஆகிலும் ஒருவரும் அவர்மேல் கைகளைப் போடவில்லை.

கி. பி. ௩௨.

1 யோவா. ௮. ௰௪
2 யோவா. ௫. ௪௩ ௮. ௪௨.
3 யோவா. ௫. ௩௨ ௮ ௨௬ ௨ரோ ௩ ௪
4 யோவா ௧ ௰௮ ௮ ௫௫
5 மத் ௰௧. ௨௭. யோவா ௰ ௰௫
6 மாற் [illegible] ௰௮ லூ [illegible] ௪௭ ௨௰ ௰௯ ௰௯ ௪௩. யோவா ௮ ௩௭.
7 ௪௪ ௪௩ யோவா ௮ ௨௰
8 மத் ௰௨ ௨௩ யோவா ௩ ௨. ௮. ௩௰
9 யோவா ௰௩ ௩௩ ௰௬ ௰௬
10 ஓசே ௫ ௬ யோவா ௮ ௨௧ ௰௩ ௩௩
11 ஏசா. ௰௧ ௰௨ யாக் ௧ ௧ ௧ பே ௧ ௨
* அல்லது அந்நியா
12 ௩ மோ. ௨௩ ௩௬
13 ஏசா ௫௫ ௧ யோவா ௬ ௩௫. வெளி ௨௨ ௰௭
14 ௫ மோ ௰௮ ௰௫
15 வாக் ௰௮ ௪ ஏசா ௰௨ ௩ ௪௪ ௩ யோவா ௪ ௰௪
16 ஏசா ௪௪. ௩ யோவே ௨ ௨௭ யோவா ௰௬ ௭ அப ௨ ௰௭, ௩௩, ௩௮
17 யோவா ௰௨. ௰௬. ௰௬ ௭
18 ௫ மோ ௰௮ ௰௫, ௰௮ யோவா ௧ ௨௧ ௬ ௰௪
19 யோவா. ௪ ௪௨. ௬. ௬௯.
20 ௫௨. ௪௩. யோவா ௧ ௪௬
21 சங ௱௩௨ ௰௧. எரே. ௨௩ ௫. மீகா ௫ ௨ மத் ௨ ௫ லூக் ௨ ௪
22 ௧ சாமு ௰௬ ௧, ௪ — 23 ௰௨. ௪௩ யோவா ௯ ௰௬ ௰௯ — 24 ௩௰ ௪௩

கி. பி. ௩௨.

சரு ¶ பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும், பரிசேயரிடத்திற்கும் திரும்பிப் போனார்கள்; அவர்களை நோக்கி என்னத்தினாலே நீங்கள் அவனைக் கொண்டுவரவில்லை என்றார்கள்.

சசு சேவகர் மாறுத்தரமாகச் சொன்னது: [1]அந்த மனிதன் பேசுகிறதுபோல ஒருக்காலும் ஒருவனும் பேசவில்லை என்றார்கள்.

சஎ அதற்குப் பரிசேயர் சொன்னது: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?

சஅ [2]பெரியோர்களிலாவது, பரிசேயரிலாவது, ஒருவனாகிலும் அவன்மேல் விசுவாசமாய் இருக்கிறது உண்டோ?

சகூ வேதத்தை அறியாத சனங்கள்மாத்திரம சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.

ருய அவர்களில் ஒருவனுமாய், முன்னே [3]இராத்திரியில் அவரிடத்தில் *போனவனுமாய் இருந்த நீக்கோதேமு என்பவன் அப்பொழுது அவர்களை நோக்கி,

ருக [4]நாம் ஒரு மனிதனைச் சோதித்து, அவனுடைய செய்கைகளை அறிகிறதற்குமுன்னே அவனை ஆக்கினைக்கு உட்படுத்தலாமென்று நம்முடைய நியாயசாஸ்திரம் சொல்லுகிறதா என்றான்.

ருஉ அதற்கு அவர்கள் சொன்னது: நீரும் கலிலேயனோ? நீர் ஆராய்ந்து பார்த்தால், தீர்க்கதரிசிகள் கலிலேயா நாட்டிலிருந்து [5]தோன்றவில்லை என்று அறிவீர் என்றார்கள்.

ருங பின்பு எல்லாரும் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள்

அ. அதிகாரம்.

க விபசாரஸ்திரீ . . . ௩ . . .
௰௨ தாம உலக . . .
இருந்த தமமுடை . . . ௩௩
நியாயங்களை டெ . . . ௩௬
ரிந்தபட பெருமை . . . ௫௰
கொண்டு, ௫௯

இயேசுவான . . . ப்
போனார்.

உ மறுநாள் காலையிலே தேவாலயத்திற்குத் திரும்பினார்; சனங்கள் எல்லாரும் அவரிடத்தில் சேர்ந்தார்கள்; அவர் உளுக்காந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.

ங அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கபபட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி,

ச அவரை நோக்கி, போதகரே, இந்தப் பெண் விபசாரம்பண்ணுகிறபொழுதே பிடிக்கபபட்டாள்.

ரு [6]இப்படிபபட்டவர்களைக் கற்களால் கொலைசெய்யவேண்டுமென்று மோசேயானவர் நியாயசாஸ்திரத்திலே நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் எப்படிச்சொல்லுகிறீர் என்றார்கள்.

சு அவர்மேல் குற்றம்சாற்றுவதற்குக் காரணம் பெறும்படிக்கு, அவர்கள் இப்படிச் சொல்லி அவரைச் சோதித்தார்கள்; இயேசுவானவர் குனிந்து விரலினாலே தரையில் எழுதினார்.

எ அவாகள் பின்னும் அவரிடத்தில் கேட்டுக்கொண்டிருந்தபொழுது, அவர் நிமிர்ந்து அவர்களை நோக்கி, [7]உங்களில் பாவமில்லாதவன் எவனோ, அவன் முதல் கல்லை இவள்மேல் எறிந்துபோடவேண்டும் என்று சொல்லி,

அ மறுபடியும் குனிந்து தரையில் எழுதினார்.

கூ அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனதினாலே கடிந்துகொள்ளப்பட்டவர்களாய்இயேசுவானவர் தனித்திருக்க,அந்தபபெண் நடுவிலே நிற்க,அவர்களை விட்டுப் [8]பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒருவன் ஒருவனாக எல்லாரும் புறப்பட்டுப்போனார்கள்.

ய இயேசுவானவர் நிமிர்ந்து (பார்க்கையில்,) அந்தப் பெண்ணைத்தவிர மற்றொருவரையும் காணாதபொழுது, அவர் அவளை நோக்கி, ஸ்திரீயே உன்மேல் குற்றம்

[1] மத். எ ௨௯
[2] யோவா. ௰௨ ௪௨ அப. ௬ எ. க கொரி க ௨௰, ௨௬ ௨ அ.
[3] யோவா. ௩ ௨
* அல்லது இயேசுவண்டைக்கு.
[4] ௫ மோ க ௰எ ௰எ அ ௰௯ ௰௫ ௰௫
[5] ஏசா ௯ க, உ. மத் ச ௰௫ யோவா க ௪௬, ௪௧ ௰௪
[6] ௩ மோ ௨௰ ௰. ௫ மோ ௨௨ ௨௨
[7] ௫ மோ ௰எ ௭ ரோ ௨ க
[8] உரோ ௨ ௨௨

சாற்றினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க இல்லையா என்றார்.

௰௧ அவள் சொன்னது: ஆண்டவரே, ஒருவரும் அப்படிச்செய்ய இல்லை என்றாள்; இயேசுவானவர் சொன்னது: [1]நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டேன்; நீ போய், [2]இனிப் பாவம் செய்யாதிருப்பாயாக என்றார்.

௰௨ ¶ மறுபடியும் இயேசுவானவர் சனங்களை நோக்கி, [3]நான் உலகத்தின் ஒளியாய் இருக்கிறேன்; எனக்குப் பின்செல்லுகிறவன் இருளிலே நடவாமல், சீவனாகிய ஒளியை அடைந்திருப்பான் என்றார்.

௰௩ அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி, [4]நீரே உம்மைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறீர், உம்முடைய சாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளக்கூடாது என்றார்கள்.

௰௪ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் வந்த இடத்தையும், நான் போகும் இடத்தையும் அறிந்திருக்கிறபடியினாலே, என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தாலும், என்னுடைய சாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளவேண்டும்; [5]நீங்கள், நான் வந்த இடத்தையும் நான் போகும் இடத்தையும் அறியாமலிருக்கிறீர்கள்

௰௫ [6]நீங்கள் மாம்சத்திற்கு ஏற்றபடி தீர்மானம்பண்ணுகிறீர்கள்; [7]நான் ஒருவனைக்குறித்தும் தீர்மானம்பண்ணுகிறதில்லை.

௰௬ நான் தீர்மானம்பண்ணினால், நான்மாத்திரம் அல்ல, [8]நானும் என்னை அனுப்பின பிதாவும் கூட இருக்கிறபடியினாலே என்னுடைய தீர்மானம் சத்தியத்தின்படியே இருக்கும்.

௰௭ [9]இரண்டுபேருடைய சாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளவேண்டுமென்று உங்கள் நியாயசாஸ்திரத்திலேயும் எழுதியிருக்கின்றதே.

௰௮ அந்தப்படி நான் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவனாய் இருக்கிறேன்; [10]என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார் என்றார்.

௰௯ அப்பொழுது அவர்கள் உம்முடைய பிதா எங்கே என்றார்கள், இயேசுவானவர் சொன்னது: [11]நீங்கள் என்னையும் என் பிதாவையும் அறியாமலிருக்கிறீர்கள்; [12]என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் என்றார்

௨௰ ¶ தேவாலயத்திலே இயேசுவானவர் உபதேசம்பண்ணித் [13]தருமப் பெட்டியின் அருகே இருந்தபொழுது, இந்த வசனங்களைச் சொன்னார், [14]அப்படியிருந்தும், அவருடைய நேரம் வராதபடியினாலே, [15]ஒருவரும் அவரைப் பிடிக்க இல்லை.

௨௧ ¶ பின்பு இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் போவேன், [16]நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; [17]ஆகிலும் உங்கள் பாவத்தினாலே சாவீர்கள்; நான் போகும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றார்.

௨௨ அப்பொழுது யூதர்கள் (ஒருவரை ஒருவர்) நோக்கி, நான் போகும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்கிறானே, தன்னைத்தான் கொலைசெய்வானோ என்று பேசிக்கொண்டார்கள்.

௨௩ அவர் பின்னும் அவர்களுடனே சொன்னது: [18]நீங்கள் கீழேயிருந்து தோன்றினவர்கள்; நான் உயரத்திலிருந்து தோன்றினவன்; நீங்கள் [19]இவ்வுலகத்திற்கு உரியவர்கள்; நான் இவ்வுலகத்திற்கு உரியவன் அல்ல.

௨௪ ஆகையால் [20]நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; [21]பின்னும், அவரே நானென்று

கி. பி. ௩௨.

1 லூக் ௯. ௫௬. ௰௨. ௰௪. யோவா ௩. ௰௭
2 யோவா ௫. ௰௪
3 யோவா ௧. ௪, ௫, ௯. ௩. ௰௯. ௯. ௫. ௰௨. ௩௫, ௩௬, ௪௬
4 யோவா ௫. ௩௧
5 யோவா ௭. ௨௮. ௯. ௨௯.
6 யோவா. ௭. ௨௪
7 யோவா ௩. ௰௭. ௰௨. ௪௭. ௰௮. ௩௬.
8 ௨௯ வச யோவா ௰௬. ௩௨
9 ௫ மோ ௰௭. ௬. ௰௯. ௰௫. மத் ௰௮. ௰௬. ௨ கொரி ௰௩. ௧. எபி ௰. ௨௮
10 யோவா ௫. ௩௭
11 ௫௫ வச யோவா ௰௬. ௩
12 யோவா ௰௪. ௭
13 மாற் ௰௨. ௪௧
14 யோவா ௭. ௩௰
15 யோவா ௭. ௮
16 யோவா ௭. ௩௪. ௰௩. ௩௩
17 ௨௪ வச
18 யோவா ௩. ௩௧
19 யோவா ௰௫. ௰௯. ௰௭. ௰௬. ௧ யோவா ௪. ௫
20 ௨௧ வச
21 மாற் ௰௬. ௰௬

நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள பாவங்களிலே சாவீர்கள் எனருர்.

௨௫ அதற்கு அவர்கள், நீர் யார் என்ருர்கள்; இயேசுவானவர் சொன்னது: ஆதிமுதல் உங்களுக்குச் சொல்லிவநதேனே அவனே நான்.

௨௬ நான் உங்களைக்குறித்துப் பேசி நியாயம் சொல்லுகிறதற்கு அநேககாரியங்கள் உண்டு; [1]என்னை அனுபபினவர் சத்தியமுள்ளவா; நான் [2]அவரிடத்தில் கேள்விபபட்டவைகளையே உலகத்தாருக்கு அறிவிக்கிறேன் என்ருர்.

௨௭ அவா பிதாவைக்குறிததுச் சொன்ஞர் என்று அவர்கள் அறியாதிருநதாாகள்.

௨௮ ¶ ஆதலால் இயேசுவானவர் பின்னும அவர்களுடனே சொன்னது: [3]நீஙகள் மனிதனுடைய குமாரனை ஏற்றியிருக்கும்பொழுது [4]என்னையே அவ[illegible]என்றும், [5]என்ஞலே நான் ஒன்றும் செயயாமல் [6]என் பிதா எனக்குபபோதிக்கிறபடியே இவைகளைச் சொன்னேன் என்றுமஅறிவீாகள.

௨௯ [7]என்னை அனுப்பினவர் என்னுடனே இருக்கிருர்; [8]பிதாவுக்குப பிரியமானவைகளை நான் எபபொழுதும் செய்கிறபடியால், [9]அவர் என்னைத தனியே இருக்கவிட இல்லை என்ருர்.

௩௰ ¶ இவைகளை அவர் சொல்லுகையில, [10]அநேகம்பேர் அவரிடத்தில் விசுவாசமாஞர்கள்.

௩௧ ஆதலால் இயேசுவானவர் தம்மை விசுவாசிதத யூதரை நோக்கி, நீங்கள் என்னுடைய உபதேசத்திலே நிலைததிருந்தால், மெய்யாய் என் சீஷராய் இருப்பீர்கள்.

௩௨ அல்லாமலும் ச[illegible]தியத்தை அறிவீர்கள், [illegible] உஙகளை விடுத[illegible]ஏர்.

௩௩ ¶ அ[illegible]ான்னது: [12]நா[illegible] சநததியாராய்[illegible]லலாமல், நாஙக[illegible]ருவனுக்கு அடிமைகளாய் இருக்கவில்லையே, ஆதலால் நீங்கள் விடுதலையாவீாகள என்று நீர் எபபடிச் சொல்லுகிறீர் என்ருர்கள்.

௩௪ ¶ இயேசுவானவர் சொன்னது: [13]பாவததைச் செய்கிறவன் எவஞே, அவன் பாவத்திற்கு அடிமையாய் இருக்கிருன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௫ [14]அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே தங்கான்; குமாரனே என்றைக்கும அதிலே தங்குவான்.

௩௬ ஆகையால் [15]குமாரஞனவர் உஙகளை விடுதலையாக்கிஞல், மெய்யாய் விடுதலையாயிருபபீர்கள்.

௩௭ நீங்கள் ஆபிரகாமின் சந்ததியார் எனறு அறிநதிருககிறேன்; அபபடியிருநதும், என் உபதேசம் உஙகளில் தரியாமலிருக்கிறபடியால், [16]எனனைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்.

௩௮ [17]நான் என் பிதாவினிடத்திலே கண்டதைப பேசுகிறேன், அபபடியே நீஙகளும் உங்கள் பிதாவினிடத்திலே கண்டதைச் செய்கிறீர்கள் என்ருர்.

௩௯ அதற்கு அவர்கள், [18]ஆபிரகாமே எஙகள் தகபபஞயிருக்கிருர் என்ருாகள்; இயேசுவானவர் சொன்னது: [19]நீஙகள் ஆபிரகாமின் பிள்ளைகளாஞல், ஆபிரகாமின் கிரியைகளுக்கு ஒபபாய்ச் செய்வீாகளே

௪௰ [20]நீஙகள் பராபரனிடத்தில் கேள்விப்பட்ட சத்தியத்தை உஙகளுக்குச் சொன்ன மனிதஞகிய [21]என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்; ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே.

௪௧ நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளுக்கு ஒப்பாய்ச் செய்கிறீர்கள் என்ருர்; அதற்கு அவர்கள் சொன்னது: நாங்கள் வேசிமார்க்கத்திஞலே பிறந்தவர்கள் அல்ல, [22]ஒரே பிதா எங்களுக்கு

கி. பி. ௩௨.

[1] யோவா ௭ ௨௮
[2] யோவா. ௧. ௧௨. ௰௫. ௰௫
[3] யோவா ௩ ௰௪ ௰௨ ௩௨
[4] உரோ ௧ ௪
[5] யோவா ௫ ௰௯, ௩௰.
[6] யோவா ௩ ௰௧.
[7] யோவா ௰௪ ௰, ௰௧
[8] ௰௯ வச
[9] யோவா ௪. ௩௪ ௫ ௩௰ ௬ ௩௮
[10] யோவா ௭ ௩௧ ௰ ௪௨ ௰௧ ௪௫
[11] உரோ ௬ ௰௪ ௰௮ ௨௨ ௮ ௨ யாக் ௧ ௨௫ ௨ ௰௨.
[12] ௧ மோ ௨௫ ௪௨ மத் ௩ ௯ வச
[13] உரோ ௬ ௰௬ ௨௰ ௨ பே ௨ ௰௯
[14] கலா ௪ ௩௰
[15] உரோ ௮ ௨ கலா ௫ ௧
[16] யோவா ௭ ௰௯ ௪௰ வச
[17] யோவா ௩ ௩௨ ௫ ௰௯, ௩௰ ௰௪ ௰, ௨௪
[18] மத் ௩ ௯ ௯ வச
[19] உரோ ௨ ௨௮ ௯ ௭ கலா ௩, ௭, ௨௯
[20] ௨௬ வச.
[21] ௩௭ வச
[22] ஏசா ௬௩ ௰௬ ௬௪ ௮ மலகி ௧ ௬

உண்டு, பராபரனே அவர் என்றார்கள்

௪௨ ¶ இயேசுவானவர் சொன்னது: [1]பராபரனிலிருந்தே புறப்பட்டு வந்தேன்; [2]நான் என்னாலே வர இல்லை; அவரே என்னை அனுப்பினார்; ஆகையால் [3]பராபரன் உங்கள் பிதாவாய் இருந்தால், நீங்கள் என்னிடத்தில் அன்புகூருவீர்கள்.

௪௩ [4]என்னத்தினாலே என்னுடைய பேச்சை அறியாமல் இருக்கிறீர்கள்? என்னுடைய உபதேசத்தைக் கேட்க மனதில்லாதபடியினால் அல்லவோ (அப்படி இருக்கிறீர்கள்?)

௪௪ [5]பசாசானவனே உங்கள் பிதா; (ஆகையால்) உங்கள் பிதாவின் இச்சைகளின்படி செய்ய விரும்புகிறீர்கள்; ஆதிமுதற்கொண்டு அவன் மனித கொலைகாரனாய் இருக்கிறான்; அல்லாமலும் [6]சத்தியத்தில் அவன் நிலைநில்லாதபடியால் சத்தியம் அவனிடத்தில் இல்லை; அவன் பொய்யனுமாய்ப் பொய்யின் தகப்பனுமாய் இருக்கிறபடியால், பொய்பேசுகிறபொழுது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

௪௫ நான் சத்தியத்தை உங்களுக்குச்சொல்லுகிறபடியினாலே, நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.

௪௬ என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் எவன் நிச்சயமாய்ச் சொல்வான்? ஆகையால் நான் சத்தியத்தைச் சொல்லுகிறவனாய் இருக்க, நீங்கள் என்னை என்னத்தினாலே விசுவாசிக்கிறதில்லை?

௪௭ [7]பராபரனால் உண்டானவன் பராபரனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் பராபரனால் உண்டாயிராதபடியால், செவிகொடாமல் இருக்கிறீர்கள் என்றார்.

௪௮ அப்பொழுது யூதர்கள் அவனை நோக்கி, நாங்கள் உன்னைச் சமாரியன் என்றும், [8]பேயை உடையவன் என்றும் நியாயமாய்ச் சொல்லுகிறோம் அல்லவா என்றார்கள்.

௪௯ ¶ இயேசுவானவர் சொன்னது: நான் பேயை உடையவன் அல்ல, நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்; நீங்கள் என்னைக் கனஈனம்பண்ணுகிறீர்கள்.

௫௰ [9]அன்றியும் நான் எனக்குக் கனம்வரத் தேடுகிறதில்லை; அதைத்தேடி நியாயம் தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்.

௫௧ மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [10]ஒருவன் என்னுடைய வசனத்தைக் கைக்கொண்டால், அவன் ஒருக்காலும் மரணத்தை அடைவதில்லை என்று சொன்னபொழுது,

௫௨ யூதர்கள் அவனை நோக்கி, நீ பேயை உடையவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; [11]ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; நீ சொல்லுகிறது; ஒருவன் என் வசனத்தைக் கைக்கொண்டால், அவன் ஒருக்காலும் மரணத்தை ருசிபார்க்கமாட்டான் என்கிறாய்.

௫௩ எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார்; தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; நீ உன்னை எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள்.

௫௪ ¶ இயேசுவானவர் சொன்னது: [12]நானே என்னைக் கனம்பண்ணினால், அந்தக் கனம் வீணாயிருக்கும்; [13]என் பிதாவே என்னைக் கனம்பண்ணுகிறார்; அவரை நீங்கள் உங்கள் தேவனென்று சொல்லுகிறீர்கள்.

௫௫ அப்படியிருந்தும், [14]நீங்கள் அவரை அறிய இல்லை; நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியமாட்டேன் என்று சொன்னேனாகில், நான் உங்களைப

கி. பி. ௩௨.

[1] க யோ ௫. க
[2] யோவா ௰௬ ௨௭. ௰௭ ௮, ௨௫.
[3] யோவா. ௫. ௪௩ ௭ ௨௮, ௨௯
[4] யோவா ௭ ௰
[5] மத் ௰௩ ௩௮ க யோ ௩ ௮
[6] யூதா ௬
[7] யோவா ௰ ௨௬, ௨௭. க யோ ௪ ௬
[8] யோவா ௭ ௨௰ ௰ ௨௰ ௫௨ வச
[9] யோவா ௫ ௪௧ ௭ ௰௮
[10] யோவா ௫ ௨௪ ௰௧ ௨௬
[11] சகரி க ௫ எபி ௰௧. ௰௩
[12] யோவா ௫ ௩௧
[13] யோவா. ௫ ௪௧ ௰௬ ௰௪ ௰௭ க அப. ௩ ௰௩.
[14] யோவா ௭. ௨௮ ௨௯

போலப் பொய்யனுயிருப்பேன்; அவரை நான் அறிந்து அவருடைய வசனத்தைக் கைக்கொண்டுவருகிறேன்.

ருசு [1]உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காணக் களிப்பாய் ஆசைப்பட்டு, [2]அதையே கண்டு சந்தோஷபபட்டான் என்ருர்.

ருஎ அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி, உனக்கு ஐம்பது வயதில்லையே; நீ ஆபிரகாமைக கண்டாயா என்ருர்கள்.

ருஅ ¶ இயேசுவானவர் சொன்னது: [3]ஆபிரகாம் பிறநத காலத்திற்குமுன்னும் நானே இருக்கிறேன் என்று மெய்யாகவே உஙகளுக்குச் சொல்லுகிறேன் என்ருா.

ருகூ [4]அபபொழுது அவாமேலே எறியும்படிக்குக் கற்களை எடுத்துக் கொண்டாாகள; [5]இயேசுவானவர் மறைந்து, அவர்கள் நடுவே நடந்து, தேவாலயத்தைவிட்டு அபபுறமபோனா.

கூ. அதிகாரம்.

க இயேசுவினலே ஒரு பிறவிக்குருடன பாாவை அடைநது பரிசேயரிடத்தில கொணடுவரபபடடு, யஅ அதின நிமிததம அவாகள கோபமடைநது அவனைப புறமபே தளளினது ஙரு அவன இயேசுவினல் அஙகிகரிக்கபபடடு அவரைக்கு நீத்து நல்லறிக்கையிட்டது ஙகூ கிறிஸதுவினுல் பிரகாசிக்கிறவாகள இனனா எனறது.

அவர் அபபுறம் போகையில் பிறவிக்குருடனுகிய ஒரு மனிதனைக கண்டார்.

உ அபபொழுது அவருடைய சீஷர் அவரை நோக்கி இரபீ, [6]இவன் குருடனுய்ப் பிறக்கும்படிக்கு இவனே, இவனைப் பெற்றவாகளோ, யா பாவ செயததார்கள்
எனறு சே

௩ அதற் ர் சொ
ன்னது: செயய
இலலை, களும்
பாவம் பரனு
டைய கி த்தில்
வெளிப் (இப்
படிப பி

ச [8]பகற்காலம் இருக்கும் அளவும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியைகளைச் செய்யக்கூடாதபடிக்கு இராத்திரி வருகின்றது.

ரு நான் உலகத்தில் இருக்கையில், [9]உலகத்தின் ஒளியாய் இருக்கிறேன் என்ருர்

சு இப்படி அவர் சொல்லி, பின்பு [10]தரையிலே துப்பி, உமிழ்நீரினுல் சேறு உண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி,*

எ பின்பு நீ [11]சீலோவாக் குளத்தில் போய்க் கழுவு என்ருர்; சீலோவா என்பதற்கு அனுபபபட்டவன் என்று அர்த்தம்; [12]அந்தபபடி அவன் போய்க் கழுவிப் பார்வை அடைந்து, திரும்பி வந்தான்.

அ ¶ அப்பொழுது அயலகததாரும், முன்னே அவன் பிச்சைக்காரனுயிருந்ததைக் கண்டவர்களும் அவனைப பார்த்து, (இஙகே) உளுககாநது பிச்சைகேட்டுக்கொண்டிருந்தவன் இவன் அல்லவா என்ருர்கள்.

கூ வேறு சிலர், அவன் இவன்தான் என்ருர்கள்; வேறு சிலர், இவன் அவனுடைய சாயலாய் இருக்கிருன் என்ருர்கள்; அவன் சொன்னது: நானே அவன் என்ருன்.

ய அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, உன் கண்கள் எப்படித் திறக்கபபட்டன என்ருர்கள்.

யக அவன் சொன்னது: [13]இயேசு என்பவர் சேறு உண்டாக்கி, (அதை) என் கண்களின்மேலே பூசி, நீ சீலோவாக் குளத்திற்குப் போய்க் கழுவு என்ருர்; அந்தப்படி நான் போய்க் கழுவினபொழுது, பார்வை அடைந்தேன் என்ருன்

யஉ அவர்கள் சொன்னது: அந்த மனிதன் எங்கே என்ருர்கள்,

கி. பி. ஙஉ

[1] லூக். ய. உச
[2] எபி யக யங
[3] உ மோ ங யச எசா சங யங யோவா யஎ ரு, உச கொலோ. க யஎ. வெளி க அ
[4] யோவா யஙக, ஙகூ · யக அ
[5] லூக் ச ஙய
[6] ஙச வச
[7] யோவா. யக ச
[8] யோவா. ச ஙச ரு யங. ஙசு யக ஙு யஉ ஙரு யஎ ச
[9] யோவா க ரு, கூ ங யகூ ௨அ யஉ யஉ. ஙரு, சகூ.
[10] மாற் எ. ஙங அ. உங
* அல்லது கண்களைச் சேற்றினலே தடவி
[11] நெகே ங யரு
[12] உ இரா. ரு யச.
[13] கூ, எ லச

அவன் எனக்குத் தெரியாது என்றான்.

௰௩ ¶ அப்பொழுது முன்னே குருடனாய் இருந்தவனைப் பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

௰௪ இயேசுவானவர் சேறு உண்டாக்கி, அவனுடைய கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாய் இருந்தது.

௰௫ ஆதலால் பரிசேயரும் அவனை நோக்கி, நீ எப்படிப் பார்வை அடைந்தாய் என்று கேட்டார்கள்; அதற்கு அவன் சொன்னது: அவர் சேற்றை என் கண்களின மேல் வைத்தார்; பின்பு நான் கழுவினேன், இப்பொழுது காண்கிறேன் என்றான்.

௰௬ அப்பொழுது பரிசேயரில் சிலர் சொன்னது: அம்மனிதன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதிருக்கிறபடியினாலே, அவன் பராபரனால் வந்தவன் அல்ல என்றார்கள்; வேறு சிலர் சொன்னது: [1]பாவியாய் இருக்கிற ஒருவன் இபபடிப்பட்ட அற்புதங்களைச் செய்வது எப்படி என்றார்கள்; [2]ஆகையால் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.

௰௭ மறுபடியும் அவர்கள் குருடனாயிருந்தவனை நோக்கி, உன் கணகளைத் திறநத அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள்; அவன் சொன்னது: [3]அவர் தீர்க்கதரிசியாயிருக்கிறார் என்றான்.

௰௮ அப்பொழுது அவன் குருடனாயிருந்து, பின்பு பார்வை அடைந்தான் என்கிறதை யூதர்கள் நம்பாமல், பார்வையடைநதவனுடைய தாய்தகப்பன்மாரை அழைப்பித்து,

௰௯ அவர்களை நோக்கி, உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, அவன் இவனோ? இப்பொழுது இவனுக்கு எப்படிப் பார்வை உண்டாயிற்று என்று கேட்டார்கள்.

௨௰ அதற்கு அவனுடைய தாய்தகப்பன்மார் சொன்னது: இவன் எஙகள் குமாரனென்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும், அறிந்திருக்கிறோம்.

௨௰௧ இப்பொழுது இவன் பார்வை அடைந்த வகை எங்களுக்குத் தெரியாது;அவனுடைய கண்களைத் திறநதவனையும் அறியமாட்டோம்; இவன் பெரியவனாய் இருக்கிறானே; இவனிடத்திலே கேளுங்கள்; தன்னைக்குறித்து இவனே பேசுவான் என்றார்கள்.

௨௰௨ [4]அக்காலத்திற்கு முன்னே, இயேசுவைக் கிறிஸ்தென்று சொல்பவன் எவனோ அவனைச் செபஆலயத்திற்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் தீர்மானம்பண்ணியிருந்தபடியால், [5]குருடனாயிருந்தவனுடைய தாய்தகபபன்மார் அவர்களுக்குப பயந்து,

௨௰௩ இவன் பெரியவனாய் இருக்கிறானே, இவனிடத்தில் கேளுங்கள் என்று சொன்னார்கள்.

௨௰௪ ¶ ஆதலால் அவர்கள் குருடனாயிருந்தவனை இரண்டாம்தரம் அழைத்து, [6]நீ பராபரனைக் கனம் செய்வாயாக; [7]அம்மனிதன் பாவியாயிருக்கிறான் என்று நாங்கள் அறிந்திருக்கிறோமே என்றார்கள்.

௨௰௫ அதற்கு அவன் சொன்னது: அவர் பாவியோ அல்லவோ அது எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன்; இப்பொழுது காண்கிறேன், இது ஒன்றையே அறிந்திருக்கிறேன் என்றான்.

௨௰௬ அபபொழுது அவர்கள் மறுபடியும் அவனைநோக்கி, உனக்கு என்ன செய்தான்? உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

௨௰௭ அவன் சொன்னது: முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன்; நீங்கள் செவிகொடுக்க இல்லை; அதை மறுபடியும் கேட்க

கி. பி. ௩௨.

[1] ௩௩ வச. யோவா. ௩. ௨.
[2] யோவா. ௭. ௰௨, ௪௩. ௰௯.
[3] யோவா. ௪. ௰௯. ௬. ௰௪.
[4] யோவா. ௭. ௰௩. ௰௨. ௪௨. ௰௯. ௩௮. அப. ௫. ௰௩.
[5] ௩௪ வச. யோவா. ௰௬. ௨.
[6] யோசு. ௭. ௰௯. ௧ சாமு. ௬. ௫.
[7] ௰௬. ௨௪.

என்னத்தினாலே விரும்புகிறீர்கள்? நீங்களும் அவருக்குச் சீஷராக மனதுள்ளவர்களாய் இருக்கிறீர்களா என்றான்.

௨௮ அப்பொழுது அவர்கள் அவனை வைது, நீயே அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்.

௨௯ மோசேயானவருடனே பராபரன் பேசினதை அறிந்திருக்கிறோம்; [1]அவன் வந்த இடத்தை அறியமாட்டோம் என்றார்கள்.

௩௰ அதற்கு அந்த மனிதன் சொன்னது: [2]அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் வந்த இடத்தை நீங்கள் அறியாமலிருக்கிறது ஆச்சரியமான காரியம்.

௩௧ [3]அல்லாமலும் பாவிகளுக்குப் பராபரன் செவிகொடுக்கிறது இல்லையென்றும் அவர்மேல் பத்தியாயிருந்து, அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனுக்குச் செவிகொடுக்கிறார் என்றும் அறிந்திருக்கிறோம்.

௩௨ குருடனாய்ப் பிறந்தவனுடைய கண்களை ஒருவன் திறந்தான் என்று உலகம் உண்டானதுமுதற்கொண்டு கேள்விப்படவில்லையே.

௩௩ [4]அவர் பராபரனால் வாராதவராயிருந்தால், இப்படிப்பட்டவைகளில் ஒன்றையாகிலும் செய்யத் திராணியிருக்கமாட்டாதே என்றான்.

௩௪ அப்பொழுது அவர்கள் அவனைநோக்கி, [5]முழுவதும் பாவங்களிலே பிறந்த நீயா எங்களுக்கு உபதேசம்பண்ணுகிறவன் என்று சொல்லி, அவனைப் புறம்பே* தள்ளினார்கள்.

௩௫ ¶ அவனை அவர்கள் புறம்பே தள்ளினதை இயேசுவானவர் கேள்விப்பட்டு, பின்பு அவனைக் கண்டு, [6]நீ பராபரனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்.

௩௬ அதற்[illegible]வ

ரே, நான் அவர்மேல் விசுவாசமாயிருக்கும்படிக்கு, அவர் இன்னார் என்று (காட்டவேண்டும், என்றான).

௩௭ இயேசுவானவர் சொன்னது: நீ அவரைக் கண்டாய்; [7]உன்னுடனே பேசுகிறவரே அவர் என்றார்.

௩௮ உடனே அவன், ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவரைத் தொழுதுகொண்டான்.

௩௯ பின்பு இயேசுவானவர் சொன்னது: [8]காணாதவர்கள் காணவும் காண்கிறவர்கள் குருடராகவும் தக்கதாக [9]நியாயத்தீர்ப்புக் கொடுப்பதற்கு நான் இவ்வுலகத்திலே வந்தேன் என்றார்.

௪௰ ¶ பரிசேயரில் சிலர் அவருடனேகூட இருந்து, அதைக் கேட்டபொழுது, அவர்கள் அவரைநோக்கி, [10]நாங்களும் குருடரா என்றார்கள்.

௪௧ இயேசுவானவர்சொன்னது: [11]நீங்கள் குருடராயிருந்தால், உங்களுக்குப் பாவம் உண்டாயிருக்கமாட்டாது; நீங்கள் காண்கிறோமென்று சொல்லுகிறீர்படியால், உங்கள் பாவம் நிற்கும்.

௰. அதிகாரம்.

௧. கிறிஸ்து வாசலும் நல்ல மேய்ப்பருமானவர் என்றது ௰௯ அவரைக்குறித்த பலருடைய தாற்பரியங்களைச் சொல்லியது ௨௪ தாம் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று தம்முடைய கிரியைகளினாலே திருஷ்டாந்தப்படுத்தி, ௩௯. யூதர்களுக்கு விலகி, ௪௰ மறுபடியும் யோர்தானைக் கடந்துபோனபோது, அவரில் அநேகர் விசுவாசித்தது

மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஆட்டுக்கிடையின் வாசல்வழியாய் அதில் பிரவேசியாமல், வேறுவழியாய் அதில் பிரவேசிக்கிறவன் திருடனுமாய்க் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்.

௨ வாசலின் வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.

[1] யோவா ௮ ௰௪.

[2] யோவா ௩ ௰

[3] யோபு ௨௭ ௯ ௩௫ ௰௨. ௪௰ ௰௮ ௪௧ ௧௪ ௰௯ ௯௯ ௰௮ வாக் ௧ ௨௮ ௰௯ ௨௯: ௨௮ ௯ ஏசா ௧ ௰௯ எரே ௰௧ ௧௧. ௰௪. ௰௨ ஏசே ௮. ௰௮ மீகா ௩ ௪. சகரி ௭ ௰௩

[4] ௰௬ ௩௪.

[5] ௨ ௩௪.

* அல்லது சபையிலிருந்து

[6] மத் ௰௪ ௩௩ ௰௬. ௰௬ மாற் ௧. ௧ யோவா ௰௧ ௨௭ ௧ யோ ௫ ௰௩.

[7] யோவா ௪ ௨௬

[8] மத் ௰௩ ௰௩

[9] யோவா ௩ ௰௭. ௫ ௨௨, ௨௭ ௰௨. ௪௭

[10] உரோ ௨ ௰௯

[11] யோவா ௰௫ ௨௨, ௨௪.

௩ வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; அவனும் தன்னுடைய ஆடுகளைப் பேர்பேராக அழைத்து, அவைகளை வெளியே கொண்டுபோகிறான்.

௪ மேலும் அவன் தன்னுடைய ஆடுகளை வெளியிலே விட்ட பின்பு, அவைகளுக்கு முன்னாக நடந்துபோகிறான்; மேலும் ஆடுகள் அவனுடைய சத்தத்தை அறிகிறபடியினாலே, அவைகள் அவனுக்குப் பின்செல்லுகின்றன.

௫ அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினாலே, அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனைவிட்டு ஒடிப்போகும் என்றார்.

௬ இந்த உவமையை இயேசுவானவர் அவர்களுடனே சொன்னபொழுது, அவர்கள் தங்களுக்கு அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

௭ ¶ ஆதலால் இயேசுவானவர் மறுபடியும் அவர்களை நோக்கி, நானே ஆடுகளின் வாசல் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௮ எனக்குமுன்னே வந்தவர்கள் எல்லாரும் திருடருமாய்க் கொள்ளைக்காரருமாய் இருந்தார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

௯ [1]நானே வாசல், ஒருவன் என்னாலே உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்; அல்லாமலும், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டுபிடிப்பான்.

௰ திருடனானவன் திருடுகிறதற்கும் கொலைசெய்கிறதற்கும் கெடுக்கிறதற்குமே அன்றி வேறொன்றுக்கும் வாரான்; நான் அவர்களுக்குச் சீவனும் பரிபூரணமும் உண்டாகும்படிக்கு வந்தேன்.

௰௧ [2]நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பனானவன் ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான்.

௰௨ மேய்ப்பன் அல்லாதவனுமாய் ஆடுகளையுடையவன் அல்லாதவனுமாயிருக்கிற கூலியாள் கோனாய் வரக்காணும்பொழுது [3]ஆடுகளைவிட்டு ஓடிப்போவான்; அப்பொழுது கோனாய் அந்த ஆடுகளைப் பிடித்துச் சிதற அடிக்கும்.

௰௩ மேலும் கூலியாளானவன் கூலிக்காக வேலைசெய்கிறவனானபடியினாலும், ஆடுகளைக் குறித்து அவனுக்குக் கவலை தோன்றாதபடியினாலும் ஓடிப்போவான்.

௰௪ [4]நானே நல்ல மேய்ப்பன், என் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், [5]நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,

௰௫ நான் என்னுடையவைகளை அறிநது, என்னுடையவைகளால் அறியபபட்டு, [6]ஆடுகளுக்காகஎன் சீவனைக் கொடுக்கிறேன்.

௰௬ அன்றியும் இந்தக் கிடையில் உள்ளவைகள் அல்லாமல், [7]வேறாடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்; அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும்; [8]அப்பொழுது ஒரே ஆட்டுக்கூட்டமும் ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும்.

௰௭ நான் என் சீவனைப் பின்னும் அடைந்துகொள்ளும்படிக்கு, [9]அதைக்கொடுக்கிறபடியினாலே பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறார்

௰௮ ஒருவனும என்னிடத்திலிருந்து அதை வாங்கமாட்டான்; [10]நான என்னாலே அதைக்கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கிறதற்கும், அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளுகிறதற்கும் என்னிடத்தில் அதிகாரம் உண்டு; [11]இதற்கு ஏற்ற கட்டளையை என்பிதாவினாலே பெற்றுக்கொண்டேன் என்றார்.

கி. பி. ௩௨

[1] யோவா. ௰௪ ௬. எபே. ௨. ௰௮

[2] ஏசா. ௪௰. ௰௧ ஏசே. ௩௪. ௰௨, ௨௩ ௩௭. ௨௪. எபி ௰௩ ௨௰. ௧ பே. ௨. ௨௫. ௫ ௪.

[3] சகரி. ௰௧. ௰௬, ௰௭.

[4] மத் ௰௧ ௨௭

[5] ௨ தீமோ. ௨. ௰௯.

[6] யோவா. ௰௫ ௰௩

[7] ஏசா. ௫௬ ௮

[8] ஏசே ௩௭ ௨௨ எபே ௨. ௰௪ ௧ பே ௨. ௨௫

[9] ஏசா ௫௩ ௭, ௰௨ எபி ௨ ௯.

[10] யோவா ௨. ௰௯.

[11] யோவா ௬ ௩௮ ௰௭ ௪. அப் ௨ ௨௪, ௩௨.

௰௯ ¶ [1]இந்த வசனங்களைக் குறித்து யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினை உண்டாயிற்று.

௨௰ அவர்களில் அநேகர் சொன்னது: [2]அவன் பசாசையுடையவன், பயித்தியக்காரனாயிருக்கிறான்; என்னத்திற்காக அவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்.

௨௧ மற்றப்பேர்கள் சொன்னது: இப்படிப்பட்ட வசனங்கள் பேய்கொண்டவனுடையவைகள் அல்ல என்றும், [3]குருடரின் கண்களைப் [4]பேயானவன் திறப்பானா என்றும் சொன்னார்கள்.

௨௨ ¶ பின்பு மாரிகாலத்தில் எருசலேம் நகரத்திலே தேவாலயப் பிரதிஷ்டையின் பண்டிகையைக் கொண்டாடி வருகையில்,

௨௩ இயேசுவானவர் தேவாலயத்தில் [5]சாலோமோனுடைய மண்டபத்தில் உலாவிக்கொண்டிருக்கிறபொழுது,

௨௪ ¶ யூதர்கள் அவரை வளைந்துகொண்டு அவரை நோக்கி, எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாக்கள் சந்தேகமுள்ளவைகளாய் இருக்கும்படிசெய்கிறீர்*? நீர் கிறிஸ்துவானால், (இதை) எங்களுக்குத் தாராளமாய்ச் சொல்லும் என்றார்கள்.

௨௫ அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; [6]என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கின்றன.

௨௬ [7]அப்படியிருந்தும் நீங்கள் என் கிடையின் ஆடுகள் அல்லாதவர்களானபடியினாலே விசுவாசியாமல் இருக்கிறீர்கள்.

௨௭ [8]நான் உங்களுக்குச் சொன்னபடியே என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; அல்லாமலும் நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகளும் எனக்குப் பி[illegible]

௨௮ அல்லாமலும் நான் அவைகளுக்கு நித்தியசீவனைக் கொடுக்கிறேன்; [9]அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போகாது, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளான்.

௨௯ [10]அவைகளை எனக்குக் கொடுத்த என் பிதா எல்லாரிலும் [11]பெரியவராய் இருக்கிறார்; ஒருவனும் அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ளான்.

௩௰ [12]நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

௩௧ ¶ [13]அப்பொழுது யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு மறுபடியும் கற்களை எடுத்துக்கொண்டார்கள்.*

௩௨ இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அவைகளில் எந்தக் கிரியையின் நிமித்தம் நீங்கள் என்மேல் கல் எறிவீர்கள் என்றார்.

௩௩ யூதர்கள் சொன்னது: நற்கிரியையின்நிமித்தம் அல்ல, நீ மனிதனாயிருக்க, [14]உன்னைத் தேவனென்று சொல்லி, இவ்விதமாய்த் தேவதூஷணம் செய்கிறதின்நிமித்தமே உன்மேல் கல் எறிவோம் என்றார்கள்.

௩௪ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [15]தேவர்களாய் இருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பது உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?

௩௫ [16]பராபரனுடைய வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை அவர் தேவர்கள் என்று சொல்ல, வேதமும் தள்ளப்படக்கூடாததாயிருக்க,

௩௬ [17]பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் [18]உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற [19]நான் என்னைப் [20]பராபரனுடைய குமாரனென்று சொன்னதினாலே, தேவ

கி. பி. ௩௨.

1 யோவா. ௭ ௪௩. ௯. ௰௬.
2 யோவா. ௭ ௨௰. ௮ ௪௮, ௫௨.
3 யோவா. ௯ ௬, ௭, ௩௨, ௩௩
4 ௨ மோ. ௪. ௰௧ சங. ௯௪. ௯. ௱௪௬ ௮
5 அப. ௩ ௰௧ ௫. ௰௨
* அல்லது சந்தேகத்துக்குவைகிறீர்.
6 ௩௮ வசனம். யோவா ௩. ௨. ௫ ௩௬.
7 யோவா ௮ ௪௭. ௧ யோ ௪ ௬
8 ௪, ௰௪ வச.
9 யோவா ௬ ௩௯ ௰௭ ௰௧, ௰௨ ௰௮ ௯
10 யோவா. ௰௭. ௨ ௬, ௨௪.
11 யோவா ௰௪ ௨௮.
12 யோவா ௰௭. ௰௧, ௨௨.
13 யோவா, ௮ ௫௯
14 யோவா ௫ ௰௮
15 சங. ௮௨ ௬
16 உரோ. ௰௩ ௧.
17 யோவா ௬. ௨௭.
18 யோவா ௩. ௰௭ ௫ ௩௬, ௩௭ ௮ ௪௨.
19 யோவா. ௫. ௰௭, ௰௮ ௩௮ வச.
20 லூக் ௧ ௩௫ யோவா. ௯ ௩௫, ௩௭

தூஷணம்செய்தாய் என்று சொல்லலாமா?

௩௭ [1]நான் என் பிதாவின் கிரியைகளைச் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டுவதில்லை.

௩௮ (அவைகளை) நான் செய்திருக்கிறபடியால் [2]நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலேயும் நான் அவரிலேயும் இருக்கிறதை அறிந்து விசுவாசித்துக்கொள்ளும்படிக்கு [3]நீங்கள் அந்தக் கிரியைகளை விசுவாசிக்க வேண்டுமே என்றார்.

௩௯ ¶ [4]அப்பொழுது அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள்; அவர் அவர்களுடைய கைகளில் நின்று விலகிப் புறப்பட்டு,

௪௰ யோர்தான் ஆற்றின் அக்கரையிலே, முன்னே [5]யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்திற்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்.

௪௧ அநேகம்பேர் அவரிடத்தில் சென்று, பின்பு சொன்னது: யோவான் ஒரு அற்புதமும் செய்யாதிருந்தும், [6]இவரைக்குறித்துச் சொன்ன யாவும் மெய்யாயிருக்கின்றது என்றார்கள்.

௪௨. அவ்விடத்திலே அநேகம்பேர் அவர்மேல் [7]விசுவாசமுள்ளவர்களானார்கள்.

௰௧. அதிகாரம்.

க மரித்து நாலுநாள் அடக்கம்பண்ணப்பட்டிருந்த இலாசருவைக் கிறிஸ்து உயிரோடு எழுப்பினது ௪௫ அநேக யூதர்கள் அவரை விசுவாசித்தது ௪௭ கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் ஒரு சங்கத்தை உண்டாக்கினது. ௪௯ காயிபா என்பவன் அவரைக்குறித்த தீர்க்கதரிசனம் உரைத்தது ௫௪ இயேசு தம்மை மறைத்துக்கொண்டது ௫௫. பஸ்காபண்டிகையிலே சனங்கள் அவரைத் தேடினது.

அன்றியும் [8]மரியாளும் அவளுடைய சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா ஊராளகிய இலாசரு என்பவன் வியாதியுள்ளவனாய் இருந்தான்.

௨ [9]அந்த மரியாள் கர்த்தர்மேல் பரிமளதயிலத்தைப் பூசி, தன் மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவளே; அவளுடைய சகோதரனாகிய இலாசரு வியாதிப்பட்டிருந்தான்.

௩ அப்பொழுது அவனுடைய சகோதரிகள், ஆண்டவரே, உமக்கு அன்பாயிருக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்லி அனுப்பினார்கள்.

௪ ¶ இயேசுவானவர் அதைக் கேட்டு, அந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல், [10]பராபரனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்கு, பராபரனுடைய மகிமை விளங்குதற்கு ஏதுவாயிருக்கும் என்றார்.

௫ இயேசுவானவர் அந்த மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், இலாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.

௬ அப்படியிருந்தும், அவன் வியாதியாயிருக்கிறதை அவர் கேட்ட பின்பு, [11]அவர் தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்.

௭ அதின் பின்பு அவர் (தம்முடைய) சீஷரை நோக்கி, நாம் மறுபடியும் யூதேயா நாட்டிற்குப் போவோம் வாருங்கள் என்றார்.

௮ அதற்குச் சீஷர் சொன்னது: இரபீ, சிலநாளுக்குமுன்னே, [12]யூதர்கள் உமதுமேல் கல்லெறியமனதுள்ளவர்களாய் இருந்தார்களே; நீர் மறுபடியும் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.

௯ இயேசுவானவர் சொன்னது: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? [13]பகற்காலத்திலே நடக்கிறவன் இவ்வுலகத்தின் ஒளியைக் காண்கிறபடியினாலே இடறமாட்டான்.

௰ [14]இராத்திரிகாலத்திலே நடக்கிறவன் தனக்கு ஒளியில்லாதபடியினாலே இடறுவான் என்று சொல்லி,

கி· பி. ௩௩.

1 யோவா. ௰௫ ௨௪.
2 யோவா. ௰. ௩௮ ௰௪.௰, ௰௧.
3 யோவா ௰௪, ௰௧. ௰௭ ௨௧
4 யோவா ௭ ௩௰,௪௪ அ ௫௯
5 யோவா. ௧. ௨௮.
6 யோவா ௩. ௩௰
7 யோவா அ ௩௰ ௰௧ ௪௫.
8 லூக் ௰ ௩௮. ௩௯
9 மத் ௨௬. ௭ மாற் ௰௪. ௩ யோவா ௰௨ ௩
10 யோவா. ௯. ௩ ௪௰ ௪
11 யோவா. ௰ ௪௰
12 யோவா ௰ ௩௧
13 யோவா ௯. ௪
14 யோவா ௰௨. ௩௫.

௰௧ [1]பின்பு நமக்குச் சிநேகிதனாகிய இலாசரு நித்திரை அடைந்தான்; நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார்.

௰௨ அப்பொழுது அவருடைய சீஷர் சொன்னது: ஆண்டவரே, அவன் நித்திரை அடைந்திருந்தால் குணம் அடைவான் என்றார்கள்.

௰௩ இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொல்லியிருந்தார்; அவர்கள் அவர் நித்திரைபண்ணுதலைக்குறித்தே பேசினார் என்று நினைத்தார்கள்.

௰௪ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, இலாசரு மரித்தான் என்று தெளிவாய்ச் சொல்லி,

௰௫ பின்பு நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, நான் அங்கே இராததினாலே, உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.

௰௬ அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமாஸ் மற்றச் சீஷரை நோக்கி, அவரோடேகூட மரிக்கும்படிக்கு நாமும் போவோம் வாருங்கள் என்றான்.

௰௭ ¶ ஆதலால் இயேசுவானவர் போனபொழுது, அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாள் ஆயிற்றென்று அறிந்தார்.

௰௮ பெத்தானியாவூர் எருசலேம் நகரத்திற்குச் சமீபமாய் ஏறக்குறைய பதினைந்துஸ்தாதிவழி* தூரத்தில் இருந்தது

௰௯ அன்றியும் யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக்குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படிக்கு, அவர்களிடத்தில் போயிருந்தார்கள்.

௨௰ இயேசு[illegible]கிறார் என்று மார[illegible]பொழுது, அவ[illegible]ண்டு போனாள்; மரியாள் வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.

௨௧ பின்பு மார்த்தாள் இயேசுவினிடத்தில் (சேர்ந்து,) ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரிக்கமாட்டான்.

௨௨ இப்பொழுது [2]நீர் பராபரனிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ, அதைப் பராபரன் உமக்குக் கொடுப்பார் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

௨௩ அதற்கு இயேசுவானவர், உன் சகோதரன் உயிரோடு எழுந்திருப்பான் என்றார்.

௨௪ மார்த்தாள் சொன்னது: [3]கடைசிநாளிலே (மரித்தோர்) உயிரோடு எழுந்திருக்கும்பொழுது அவனும் எழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

௨௫ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [4]நானே உயிரோடு எழுப்புகிறவனுமாய், [5]சீவனுமாய் இருக்கிறேன், [6]என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

௨௬ அல்லாமலும் உயிரோடிருக்கையில் என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ, அவன் ஒருக்காலும் மரியாமல் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.

௨௭ அவள் சொன்னது: [7]ஆம் ஆண்டவரே, நீர் கிறிஸ்து, நீர் பராபரனுடைய குமாரன், நீர் உலகத்தில் வரவேண்டுபவர் என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்.

௨௮ ¶ இப்படிச் சொன்னபின்பு அவள் போய்த் தன் சகோதரி மரியாளை இரகசியமாய் அழைத்து, போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்.

௨௯ அதை அவள் கேட்டவுடனே சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் போனாள்.

௩௰ அக்காலத்திலே இயேசுவானவர் கிராமத்திற்குள் செல்லா

இ. பி. ௩௩.

[1] இ யோ. ௧௧. ௰௧. தானி ௰௨. ௨ மத் ௯ ௨௪ அப ௭ ௬௰ ௧ கொரி ௰௫ ௰௮, ௫௧.

* அல்லது ஒன்றரை நாழிகை.

[2] யோவா ௯. ௩௧.

[3] லூக் ௰௪ ௰௪ யோவா. ௫ ௨௯

[4] யோவா. ௫ ௨௧, ௬ ௩௯, ௪௰. ௪௪.

[5] யோவா. ௧. ௪ ௬ ௫௭ ௰௪ ௬. கொலோ ௩ ௪. ௧ யோ ௫ ௧, ௨: ௫ ௰௧

[6] யோவா ௩ ௩௬ ௧ யோ. ௫. ௰௩

[7] மத் ௰௬ ௰௬ யோவா ௪ ௪௨. ௬ ௰௪ ௬௯.

மல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்.

௩௧ [1]அப்பொழுது வீட்டிலே அவளுடனே கூட இருந்து அவளுக்கு ஆறுதல் செய்கிற யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்து புறப்பட்டுப்போகிறதைக் கண்டு, அவள் கல்லறையினிடத்திலே அழுதுகொள்ளும்படி போகிறாள் என்று பேசிக்கொண்டு, அவளுக்குப் பின்சென்றார்கள்.

௩௨ இயேசுவானவர் இருந்த இடத்திலே மரியாள் சேர்ந்து, அவரைக் கண்டவுடனே, அவருடைய பாதத்தின் அருகே விழுந்து, ஆண்டவரே, [2]நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டானே என்றாள்.

௩௩ அவளும் அவளுடனே கூடப் போன யூதரும் அழுகிறதை இயேசுவானவர் கண்டபொழுது, உள்ளத்திலிருந்து பெருமூச்சுவிட்டுக் கலங்கி*,

௩௪ அவனை எங்கே வைத்தீர்கள் என்றார்; ஆண்டவரே, நீர் வந்து பாரும் என்றார்கள்.

௩௫ [3]இயேசுவானவர் கண்ணீர் விட்டார்.

௩௬ யூதர்கள் அதைப்பார்த்து, இதோ, அவர் அவனிடத்தில் மிகவும் பட்சமாய் இருந்தாரே என்றார்கள்.

௩௭ அவர்களில் சிலர் சொன்னது: [4]குருடனுடைய கண்களைத் திறந்த இவர், அவனை மரியாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.

௩௮ அப்பொழுது இயேசுவா[illegible]வர் மறுபடியும் தமக்குள்ளே பெருமூச்சுவிட்டுப் பின்பு கல்லறையினிடத்தில் சேர்ந்தார், அது ஒரு குகையாய் இருந்தது, அதின்மேலே ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.

௩௯ அப்பொழுது இயேசுவானவர் கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார்; மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி, ஆண்டவரே, இவன் புதைக்கபபட்டு நான்குநாளானபடியினாலே நாறுமே என்றாள்.

௪௰ அவளை இயேசுவானவர் நோக்கி, [5]நீ விசுவாசித்தால் பராபரனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.

௪௧ பின்பு சவம் வைக்கப்பட்ட குகையில் இருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர் கண்களை உயர்த்திப் பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினாலே உம்மைத் தோத்திரம்செய்கிறேன்.

௪௨ நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறதை அறிந்திருக்கிறேன்; [6]சூழநிற்கிற சனங்கள் நீர் என்னை அனுப்பினதை விசுவாசிக்கும்படிக்கு, அவர்களின் நிமித்தமே இப்படிச் சொன்னேன் என்று சொல்லி,

௪௩ பின்பு, இலாசருவே, வெளியே வா என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்.

௪௪ [7]அப்பொழுது மரித்தவன் கால்களும் கைகளும்கட்டியிருந்த சேலைகளோடும் முகம் சுற்றப்பட்டிருந்த சேலையோடும் வெளியே வந்தான்; பின்பு இயேசுவானவர் சொன்னது: இவனுடைய கட்டவிழ்த்து இவனை விட்டுவிடுங்கள் என்றார்.

௪௫ ¶ அப்பொழுது மரியாளிடத்திற்குப் போய், [8]இயேசுவானவர் செய்தவைகளைக் கண்ட யூதரில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமானார்கள்.

௪௬ வேறுசிலர் பரிசேயரிடத்திற்குப் போய், இயேசுவானவர் செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

௪௭ ¶ [9]அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும், பெரிய ஆலோசனைச் சங்கத்தார் வந்து கூடும்படி செய்து பின்பு சொன்

கி. பி. ௩௩

[1] ௰௯. வச.

[2] ௨௧ வச

* அல்லது தம்மைக்கலக்கி.

[3] லூக் ௰௯ ௪௧

[4] யோவா ௯.௬

[5] ௪,௨௩ வச

[6] யோவா ௰௨ ௩௰

[7] யோவா ௨௰ ௭

[8] யோவா ௨ ௨௩ ௰ ௪௨. ௰௨ ௰,௰௮

[9] சங் ௨ ௨ மத் ௨௬ ௩ மாற் ௰௪ ௧ லூக் ௨௨ ௨.

ளதாவது: [1]அந்த மனிதன் அநேக அற்புதங்களைச் செய்து வருகிறான்.

௪௮ நாம் அவனுக்கு இடங்கொடுத்தால், எல்லாரும் அவனிடத்தில் விசுவாசமாவார்கள்; பின்பு உரோமர் வந்து, நம்முடைய ஸ்தலத்தையும் சனங்களையும் எடுத்துக்கொள்ளுவார்கள். ஆதலால், நாம் என்ன செய்வோம் என்றார்கள்.

௪௯ அப்பொழுது அவர்களில் ஒருவனுமாய் அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாய் இருந்த [2]காயிபா என்பவன் அவர்களை நோக்கி, நீங்கள் ஒன்றும் தெரியாதவர்கள்.

௫௰ [3]சனங்கள் எல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு, ஒரே மனிதன் சனங்களுக்காக மரணம் அடைவதே நமக்கு நலமாயிருக்கும் என்று நீங்கள் சிந்தியாமலும் இருக்கிறீர்கள் என்றான்.

௫௧ இப்படி அவன் தானாய்ச் சொல்லாமல் அவன் அந்த வருஷத்தில் பிரதான ஆசாரியனாயிருக்க, இயேசுவானவர் யூதசனங்களுக்காக மரணமடைவதைத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

௫௨ [4]மேலும் அந்தச் சனங்களுக்காகமாத்திரம் அல்ல, [5]அங்கங்கே சிதறிப்போயிருக்கிற பராபரனுடைய பிள்ளைகளை ஒன்றாகக் கூட்டிக்கொள்ளுகிறதற்காகவும் அவர் மரணம் அடைவதையே குறித்தான்.

௫௩ ¶ ஆதலால் அந்நாள்முதல் அவர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைபண்ணிக்கொண்டு வந்தார்கள்.

௫௪ அதினாலே [6]இயேசுவானவர் பின்னும் வெளியரங்கமாய் யூதருக்குள்ளே [illegible] டத்தைவிட்டு [illegible] சமீபமான இ[illegible]பிம் ஊருக்குப் [illegible]மு டைய சீஷ[illegible]ஞ்சரித்தார்.

௫௫ ¶ [7]அக்காலத்திலே யூதருடைய பஸ்காப்பண்டிகை சமீபமாயிருந்தது; அதற்குமுன்னே அந்நாட்டிலிருந்து அநேகர் தங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டாக எருசலேமுக்குப் போனார்கள்.

௫௬ [8]அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்திலே நிற்கையில் ஒருவரை ஒருவர் நோக்கி, உங்களுக்கு எப்படித்தோன்றுகின்றது? அவர் பண்டிகைக்கு வராமல் இருப்பாரா என்று பேசிக்கொண்டார்கள்.

௫௭ பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படிக்கு யோசித்து, அவர் இருக்கிற இடத்தை ஒருவன் அறிந்தால் அதை அறிவிக்கவேண்டும் என்று கட்டளைகொடுத்திருந்தார்கள்.

௰௨. அதிகாரம்.

௧ மரியாள் இயேசுவின் பாதங்களைப் பரிமளதயிலத்தால் பூசினது ௯. அநேக சனங்கள் இலாசருவைக் காணவந்தது ௰ பிரதான ஆசாரியர் கிறிஸ்துவைக் கொலைசெய்ய விரும்பினது ௰௨ அவர் எருசலேமுக்குச் சவாரியின்மேல் போனது. ௨௰ கிரேக்கர் அவரைக் காணவிரும்பினது ௨௩ அவர் தம்முடைய மரணத்தை முன் அறிவித்தது. ௩௭. யூதர்கள் அவிசுவாசிகளாயிருந்தாலும், ௪௨ யூதப் பிரபுக்களில் அநேகர் இரகசியமாய் விசுவாசித்தபடியினாலே, ௪௪ அவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும்படி இயேசு புத்தி சொன்னது

பின்பு பஸ்காப்பண்டிகை வருகிறதற்கு ஆறுநாளுக்குமுன்னே, இயேசுவானவர் தம்மாலே மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட [10]இலாசரு இருக்கிற பெத்தானியா ஊருக்குப் போனார்.

௨ அங்கே [11]அவருக்கு இராவிருந்துபண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடைசெய்தாள்; இலாசருதானும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாய் இருந்தான்.

௩ ¶ அப்பொழுது மரியாள் [12]விலையேறப்பெற்ற களங்கமில்லாத நருதென்னும் தயிலத்தில் ஒரு ராத்தலை எடுத்து, அதை இயேசுவினுடைய கால்களில் பூசி, தன் மயிரால் அவைகளைத் துடைத்தார்;

இ. பி ௬௬.

[1] யோவா. ௰௨. ௰௯ அப். ௪. ௰௬.

[2] லூக் ௩. ௨ யோவா. ௰௮ ௰௪ அப ௪ ௬

[3] யோவா ௰௮ ௰௪

[4] ஏசா. ௪௯ ௬ ௧ யோ ௨ ௨

[5] யோவா ௰௯ எபே ௨ ௰௪ ௰௭

[6] யோவா ௪ ௧, ௭ ௧

[7] ௨ நாளா ௰௧ ௰௯

[8] யோவா ௨ ௰௩ ௫௧ ௧௪

[9] யோவா ௰௧ ௮

[10] யோவா. ௰௧ ௧ ௪௩.

[11] மத் ௨௬ ௬ மாற் ௰௪ ௩.

[12] லூக் ௭ ௩௭, ௩௮ யோவா ௰௧ ௨

அந்தத் தயிலத்தின் பரிமளத்தினாலே வீடு நிரப்பப்பட்டது.

௪ அப்பொழுது சீஷரில் ஒருவனுமாய் அவரைக் காட்டிக்கொடுத்தவனுமாய்ச் சீமோனுடைய குமாரனுமாய் இருந்த யூதாஸ்காரியோத்து என்பவன் சொன்னது:

௫ இந்தத் தயிலம் முந்நூறு தேனாரியு விலைக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே, என்னத்தினாலே அப்படிச் செய்யவில்லை என்றான்.

௬ அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்படுகிறவனாக அப்படிச் சொல்லாமல்,அவன் திருடனாய்ப் [1]பணப்பையை வைத்துக்கொண்டு, (அதிலே) போடப்பட்டவைகளைச் சுமக்கிறவனானபடியினாலே இப்படிச் சொன்னான்.

௭ அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இவள் இதைக் காத்துக்கொண்டிருந்தாள்.

௮ [2]தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், நான் எப்பொழுதும் உங்களிடத்திலே இரேனே என்றார்.

௯ ¶ பின்பு யூதரில் அநேக சனங்கள் அவர் அங்கே இருக்கிறதை அறிந்து, இயேசுவின் பொருட்டாகமாத்திரம் அல்ல, [3]அவரால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட இலாசருவைக் காணும் பொருட்டாகவும் அவ்விடத்திலே போனார்கள்.

௰ [4]இலாசருவினாலே யூதர்களில் அநேகம்பேர் இயேசுவானவரிடத்தில் போய், அவர்மேல் விசுவாசம் வைத்தபடியினாலே,

௰௧ [5]பிரதான ஆசாரியர் இலாசருவையும் கொலைசெய்யும்படி தீர்மானம் பண்ணினார்கள்.

௰௨ ¶ [6]மறுநாளிலே இயேசுவானவர் எருசலேமுக்கு வருகிறார் என்று பண்டிகைக்குப்போன சனங்கள் அநேகர் கேள்விப்பட்டு,

௰௩ குருத்தோலைகளைப் பிடித்து. அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு, [7]ஓசன்னா, பராபரனுடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலரின் இராசா வாழ்த்தப்படக்கடவர் என்று சத்தமிட்டார்கள்.

௰௪ [8]அல்லாமலும், குமாரத்தியாகிய சீயோனே, நீ பயப்படாதிரு; இதோ, உன் இராசா ஒரு கழுதைக்குட்டியின்மேல் ஏறி வருகிறார் என்று எழுதியிருக்கிறபடியே,

௰௫ [9]இயேசுவானவர் ஒரு கழுதையின் குட்டியைக் கண்டு, அதின் மேல் ஏறிபோனார்.

௰௬ [10]அவரைக்குறித்து அப்படி எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர் அக்காலத்திலே அறியவில்லை; [11]இயேசுவானவர் மகிமையை அடைந்தபின் [12]அவர்கள் அதையும் தாங்கள் அப்படி அவருக்குச் செய்ததையும் நினைத்துக்கொண்டார்கள்.

௰௭ ¶ அன்றியும் அவருடனே இருந்த சனங்கள் அவர் இலாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து அவனை உயிரோடு எழுப்பினதைக்குறித்துச் சாட்சிகொடுத்தார்கள்.

௰௮ [13]அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று சனங்கள் கேள்விப்பட்டதினாலே, அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள்.

௰௯ ஆதலால் பரிசேயர் ஒருவரை ஒருவர் நோக்கி, [14]நாம்செய்கிறதினாலே ஒரு பிரயோசனமும் இல்லையென்று அறிவோமாக; உலகமே அவனுக்குப் பின்செல்லுகின்றதே என்று சொல்லிக்கொண்டார்கள்.

௨௰ ¶ [15]அன்றியும் (பராபரனைத்) தொழுது கொள்ளும்படி பண்டிகைக்குப் போனவர்களுக்குள்ளே [16]சில கிரேக்கர் இருந்தார்கள்.

கி. பி. ௩௩.

1 யோவா. ௰௩ ௨௯.
2 மத். ௨௬, ௰௧. மாற். ௰௪. ௭.
3 யோவா. ௰௧ ௪௩, ௪௪.
4 யோவா. ௰௧ ௪௫ ௰௮ ௨௪.
5 லூக். ௰௬ ௩௧
6 மத் ௨௧ ௮. மாற். ௰௧. ௮. லூக். ௰௯ ௩௫, ௩௬
7 சங். ௱௰௮. ௨௫, ௨௬
8 சகரி ௯. ௯
9 மத் ௨௧. ௭.
10 லூக் ௰௮ ௩௪.
11 யோவா ௭, ௩௯
12 யோவா ௰௪ ௨௬.
13 ௰. ௨௪
14 யோவா ௰௧ ௪௭, ௪௮.
15 ௧ இரா ௮. ௪௧, ௪௨. அப ௮ ௨௭
16 அப. ௰௭. ௪

௨௧ [1]அவர்கள் கலிலேயா நாட்டின் பெதசாயிதா ஊரானாகிய பிலிப்பினிடத்தில் போய், ஐயா நாங்கள் இயேசுவானவரைக் காண விரும்புகிறோம் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௨௨ பிலிப்பு என்பவன் அதை அந்திரேயாவுக்குச் சொன்னான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்பும் அதை இயேசுவுக்குச் சொன்னார்கள்.

௨௩ அப்பொழுது இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது: [2]மனிதனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்குக் காலம் வந்தது.

௨௪ மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [3]கோதுமை மணி நிலத்திற்குள் விழுந்து செத்துப்போகாவிட்டால் தனித்திருக்கும்; அது செத்ததானால் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

௨௫ [4]தன் சீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழப்பான்; இவ்வுலகத்திலே தன் சீவனைப் பகைக்கிறவன் அதை நித்தியசீவன்வரைக்கும் காத்துக்கொள்ளுவான்.

௨௬ ஒருவன் எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால் எனக்குப் பின்செல்லக்கடவன்; அப்பொழுது [5]நான் இருக்கும் இடம் எங்கேயோ, அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; அல்லாமலும் எனக்கு ஊழியம்செய்கிறவனைப் பிதா கனம்பண்ணுவார்.

௨௭ ¶ [6]இப்பொழுது என் ஆத்துமா கலங்குகின்றது; நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த நேரத்திலிருந்து என்னை இரட்சிக்கவேண்டும்என்று(சொல்வேனா?) [7]இந்த நேரத்தின்பொருட்டாகவே வந்தே [illegible] ல்லி,

௨௮ பின [illegible] ரு நா
மத்தின் [illegible] ண்பி
யும் என்ற [illegible] அ
தின் மகிமை [illegible] கன்,
இன்னும் [illegible] பன்

என்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

௨௯ அங்கே நின்ற சனங்கள் அதைக் கேட்டு, இடிமுழக்கம் உண்டாயிற்று என்றார்கள்; வேறு சிலர் சொன்னது: தேவதூதன் ஒருவன் அவருடனே பேசினான் என்றார்கள்.

௩௰ அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: [9]இந்தச் சத்தம் என்நிமித்தம் உண்டாகாமல், உங்கள்நிமித்தமே உண்டாயிற்று.

௩௧ இப்பொழுது இவ்வுலகத்திற்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கப்படுகின்றது; இப்பொழுது [10]இவ்வுலகத்தின் பிரபு புறம்பாகத் தள்ளப்படுவான்.

௩௨ அல்லாமலும் [11]நான் பூமியிலிருந்து ஏற்றப்பட்டிருக்கும்பொழுது, [12]எல்லாரையும் என்னிடத்தில்இழுத்துக்கொள்வேன் என்று,

௩௩ [13]தாம் மரணமடையும் விதத்தைக் குறித்தார்.

௩௪ ¶ அப்பொழுது சனங்கள் அவரை நோக்கி, [14]கிறிஸ்துவானவர் என்றென்றைக்கும் இருக்கிறார் என்று நாங்கள் வேதத்தால் கேள்விப்பட்டிருக்கிறோமே, அப்படியிருக்க, மனிதனுடைய குமாரன் ஏற்றப்படவேண்டும் என்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்? இந்த மனிதகுமாரன் எவன் என்றார்கள்.

௩௫ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [15]சிலகாலம்மாத்திரம் ஒளியானது உங்களுடனே இருக்கும்; [16]இருள் உங்களைப் பிடியாதபடிக்கு நீங்கள் ஒளியை உடையவர்களாயிருக்கையில், (அதிலே) நடவுங்கள்; [17]இருளிலே நடக்கிறவன் தான் நடந்துபோகிற இடம் இன்னது என்று அறியான்.

௩௬ [18]நீங்கள் ஒளியை உடையவர்களாயிருக்க ஒளியின் பிள்ளைகள் ஆகும்படிக்கு, ஒளியானதிலே விசுவாசமாய் இருப்பீர்களாக என்று இயேசுவானவர் சொல்

கி. பி. ௩௩

1 யோவா ௧. ௪௪
2 யோவா. ௰௩. ௩௨. ௰௭. ௧
3 ௧ கொரி ௰௫ ௩௬
4 மத். ௰. ௩௯. ௰௬. ௨௫ மாற் ௮. ௩௫. லூக் ௯. ௨௪. ௰௭. ௩௩
5 யோவா ௰௪. ௩. ௰௭ ௨௪ ௧ தெச ௪ ௰௭
6 மத் ௨௬. ௩௮, ௩௯ லூ ௰௨. ௫௰. யோவா ௰௩ ௨௧
7 லூக். ௨௨ ௫௩ யோவா. ௰௮ ௧௭.
8 மத் ௩. ௰௭
9 யோவா. ௰௧ ௪௨
10 மத ௰௨ ௨௯ லூக் ௰ ௰௮ யோவா ௰௪ ௩௰ ௰௬. ௰௧ அப ௨௬ ௰௮ ௨ கொரி ௪ ௪ எபே ௨. ௨. ௬ ௰௨
11 யோவா ௩ ௰௪ ௮ ௨௮
12 உரோ ௫ ௰௮ எபி. ௨. ௯
13 யோவா ௰௮. ௩௨
14 சங் ௮௯ ௩௬, ௩௭, ௱௰ ௪ ஏசா ௯ ௭ ௫௩ ௮ எசே ௩௭ ௨௫. தானி ௨. ௪௪ ௭ ௰௪, ௨௭ மீகா ௪ ௭
15 யோவா ௧ ௯ ௮ ௰௨ ௩௫ ௯ ௪௬ வச.
16 எரே ௰௩ ௰௬ எபே ௫ ௮
17 யோவா ௰௧ ௰ ௧ யோ ௨ ௰௧
18 லூக் ௰௬. ௮ எபே. ௫. ௮. ௧ தெச ௫ ௫ ௧ யோ ௨ ௯, ௰௧.

விப் புறப்பட்டு, [1]அவர்களுக்கு விலகி மறைந்தார்

௩௭ ¶ அவர் இவ்வளவு அற்புதங்களை அவர்களுக்குமுன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவர்மேல் விசுவாசமாய் இருக்கவில்லை.

௩௮ அதினுலே, [2]கர்த்தாவே, எங்கள் பிரசங்கத்தை விசுவாசித்தவன் யாவன்? பராபரனுடைய புயம் யாவனுக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறிற்று.

௩௯ [3]ஏசாயா என்பவன் அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப பேசிக்கொண்டிருக்கிறபொழுது,

௪௰ அவன் பின்னும் சொன்னது: [4]அவர்கள் தங்கள் கண்களினுலே காணுமலும், தஙகள் இருதயத்தினுல் உணராமலும், மனமதிருபபாமலும், என்னுலே ஆரோக்கியம் அடையாமலும இருக்கும்படிக்கு, அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினுர் என்பதே

௪௧ அதினுலே அவர்கள் விசுவாசிக்கக்கூடாதிருந்தார்கள்.

௪௨ [5]ஆகிலும் தலைவரில் அநேகரும் அவர்மேல் விசுவாசமாய் இருநதார்கள்.

௪௩ [6]அபபடி இருந்தும், அவர்கள் பராபரனுல் வருகிற கனத்திலும், மனிதரால் வருகிற கனத்தை அதிகமாய் விரும்பினபடியினுலே, பரிசேயராலே செபஆலயதிற்குப் புறம்பாக்கப்படாதபடிக்கு. (அதை) அறிக்கையிடாமல் இருந்தார்கள்.

௪௪ ¶ அப்பொழுது இயேசுவானவர் [7]சத்தத்தோடே சொன்னதாவது: என்மேல் விசுவாசமாயிருக்கிறவன் என்மேல்மாத்திரம் அல்ல, என்னை அனுப்பினவர்மேலும் விசுவாசமாயிருக்கிருன்.

௪௫ [8]அல்லாமலும் என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிருன்.

௪௬ [9]என்மேல் விசுவாசமாயிருக்கிற யாவரும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.

௪௭ அன்றியும் நான் உலகத்தாரை ஆக்கினைக்கு உட்படுத்தும்பொருட்டு அல்ல, [10]அவர்களை இரட்சிக்கும்பொருட்டே வந்தேன்; ஆகையால் ஒருவன் என் வசனங்களைக் கேட்டும விசுவாசித்துக்கொள்ளாமல்போனுல், [11]அவனை நான் ஆக்கினைக்கு உட்படுத்தமாட்டேன்.

௪௮ [12]என்னைத் தள்ளி என் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது ஒன்றிருக்கின்றது; [13]நான் பண்ணின உபதேசமே கடைசிநாளிலே அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீாக்கும்.

௪௯ என்னத்தினுலென்றுல், [14]நானுக ஒன்றும் பேசவில்லை; எனனை அனுபபின பிதாவே [15]நான் பேசவும் உபதேசிக்கவும் வேண்டியவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.

௫௰ அவருடைய கட்டளையே நித்தியசீவன் என்று அறிந்திருக்கிறேன்; ஆகையால் நான் உபதேசிக்கிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே உபதேசிக்கிறேன் என்ருர்.

௰௩. அதிகாரம்.

௧ சீஷர்களுடைய கால்களைக் கழுவி, ௰௪ மனத்தாழ்மையும சிநேகமும் உள்ளவர்களாயிருக்கும்படி இயேசு புத்திசொன்னது ௰௮ யூதா தம்மைக் காட்டிக்கொடுப்பான் எனறு முன் அறிவித்து, ஒரு குறிப்பினுல் அதை யோவானுக்கு வெளிப்படுத்தினது ௩௩ சீஷாகள் ஒருவரை ஒருவர் சிநேகிக்கும்படி புத்திசொல்லி, ௩௬ பேதுரு தம்மை மறுதலிப்பதைக்குறித்து அவனுக்கு அறிவித்தது

[16]பஸ்காப்பண்டிகைக்கு முன்னே இயேசுவானவர் இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடதிற்குப போகும்படிக்குத் [17]தமமுடைய

கி. பி. ௩௩.

1 யோவா அ ௫௯. ௰௧ ௫௪.
2 ஏசா ௫௩ ௧ ரோ. ௰ ௰௬
3 ஏசா ௬. ௧
4 ஏசா ௬ ௯, ௰. மத் ௰௩ ௰௪
5 யோவா ௭ ௰௩ ௯ ௨௨
6 யோவா. ௫ ௪௪
7 மாற் ௯ ௩௭. ௧ பே ௧ ௨௧ யோவா ௰௪ ௯
9 ௮ ௰௨, ௩௬ வச யோவா ௩ ௰௯ அ ௰௨ ௯ ௫, ௩௯
10 யோவா ௩ ௰௭
11 யோவா ௫ ௪௫ அ ௰௫, ௨௪
12 லூக ௰ ௰௬
13 உபா. ௰௮ ௰௯ மாற. ௰௬ ௰௬.
14 யோவா அ ௩௮ ௰௪ ௰
15 உ மோ ௰௮ ௰௮
16 மத். ௨௬ ௨.
17 யோவா ௰௬. ௨௮. ௰௭. ௧, ௰௧.

காலம் வந்தது என்று அறிந்து, இவ்வுலகத்திலுள்ள தம்முடையவர்களிடத்தில் வைத்த அன்பை முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் வைத்தார்.

உ ஆகையால் அக்காலத்திலே [1]பசாசானவன் சீமோனுடைய குமாரனாகிய யூதாஸ்காரியோத்தின் இருதயத்திலே அவரைக் காட்டிக்கொடுக்கும்படிக்கான (யோசனையை) வைத்திருந்தபின்பு,

ரூ அவர்கள் இராப்போசனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இயேசுவானவர் [2]தமக்குச் சகலத்தையும் பிதா ஒப்புக்கொடுத்ததையும், [3]தாம் பராபரனிடத்திலிருந்து வந்ததையும் பராபரனிடத்திற்குப் போகிறதையும் அறிந்து,

ச [4]இராப்போசனத்தை விட்டு எழுந்து, மேல் அங்கியைக் களைந்து, ஒரு சேலையை எடுத்துத் தம்மைச் சுற்றிக் கட்டிக்கொண்டு,

ரு பின்பு ஒரு சட்டியிலே தண்ணீர் வார்த்துச் சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சேலையினாலே துடைக்கவும் தொடங்கினா

சூ அவர் சீமோன்பேதுருவினிடத்தில் சேர்ந்தபொழுது, அவன்* அவரை நோக்கி, ஆண்டவரே, [5]நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.

எ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் செய்கிறது இன்னதென்று நீ இப்பொழுது அறியவில்லை; [6]இனிமேல் அதை அறிவாய் என்றார்.

அ பேதுரு பின்னும் அவரை நோக்கி, நீர் என் கால்களை ஒருக்காலும் கழுவக்கூடாது என்றான், அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]நான் உன்னைக் கழுவாவிட்டால், என் [illegible] னாக்குப் பங்கில்லை [illegible]

கூ அப் [illegible] ற்பேதுரு. ஆ [illegible] டியா ஞல்,) [illegible] திரம் அல்ல, என் கைகளையும் தலையையுங்கூட நீர் கழுவவேண்டும் என்றான்.

ய இயேசுவானவர் சொன்னது: ஸ்நானம்பண்ணினவனுடைய கால்களைமாத்திரம் கழுவவேண்டும்; மற்ற யாவும் அவனிடத்தில் சுத்தமாயிருக்கும்; [8]நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆனாலும் எல்லாரும் அல்ல என்றார்.

யக [9]அவர் தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தபடியினாலே, நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள், ஆனாலும் எல்லாரும் அல்ல என்று சொன்னார்.

யஉ ¶ அவர்களுடைய கால்களைக் கழுவினபின்பு, அவர் தமது மேல்அங்கியைத் தரித்துக்கொண்டு திரும்ப உளுக்கார்ந்து, அவர்களுடனே சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

யரூ [10]நீங்கள் என்னைப் போதகரென்றும, ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள்; நான் அவர்தான்; ஆகையால், நீங்கள் சரியாய்ச் சொல்லுகிறீர்கள்.

யச அப்படியிருக்க, [11]ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினபடியால், [12]நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

யரு [13]நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களும் செய்யும்படிக்கு உங்களுக்கு வகையைக் காண்பித்தேன்.

யசூ [14]மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஊழியக்காரனானவன் தன் எசமானிலும் அப்போஸ்தலனானவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவன அல்ல.

யஎ [15]நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியராய் இருப்பீர்கள்.

யஅ உங்கள் எல்லாரையுங்குறித்

கி. பி. ரூரூ.

[1] லூக் உஉ, க உஎ வச
[2] மத் மக உஎ உஅ மஅ யோவா க கடு மஎ உ அப உ ககூ க கொரி மடு உஎ. எபி உ அ
[3] யோவா அ சஉ மகூ உஅ
[4] லூக் உஉ உஎ பிலி உ எ. அ
* அல்லது பேதுரு
[5] மத ரூ மச
[6] மஉ வச
[7] யோவா க டு க கொரி கூ மக எபே டு உகூ தீத் க டு எபி ம உஉ
[8] யோவா மடு க
[9] யோவா க. கச
[10] மத உக அ,ம லூக் கூ சகூ க கொரி அ கூ மஉ க பிலி உ மக
[11] லூக் உஉ. உஎ.
[12] உரோ மஉ ம கலா. கூ க, உ க பே டு டு
[13] மத மக உகூ பிலி உ டு க பே உ உச க யோ உ கூ
[14] மத். ம உசு லூக் கூ சம யோவா மடு உம
[15] யாக் க உடு

து நான் பேசவில்லை; நான் தெரிந்துகொண்டவர்களை அறிந்திருக்கிறேன்; வேதவாக்கியம் நிறைவேறும்படியாக [1]என்னுடனே அப்பம் புசிக்கிறவன் எனக்கு விரோதமாய்த் தன் குதிகாலைத் தூக்கினான்.

௰௯ அது நடக்கும்பொழுது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, [2]அது நடப்பதற்குமுன்னாகிய இப்பொழுது * அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௰ என்னால் [3]அனுப்பப்படுகிறவன் எவனோ, அவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னையும் ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரையும் ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

௨௧ ¶ [4]இவைகளை வசனித்த பின்பு, [5]இயேசுவானவர் தமது ஆவியிலே கலக்கம் அடைந்து, [6]உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சாட்சியிட்டார்.

௨௨ அப்பொழுது சீஷர் யாரைக்குறித்துச் சொல்லுகிறாரோ என்று ஐயப்பட்டு, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

௨௩ அவ்வேளையிலே [7]அவருடைய சீஷரில் ஒருவன் அவருடையமடியிலே சாய்ந்திருந்தான்; அவன்மேலே இயேசுவானவரும் அன்பாயிருந்தார்.

௨௪ ஆனபடியினாலே அவர் இன்னாரைக்குறித்துச் சொன்னார் என்று விசாரிக்கும்படிக்குச் சீமோன்பேதுரு அவனுக்குச் சமிக்கைகாட்டினான்

௨௫ அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு, ஆண்டவரே, அவன் யாவன் என்றான்.

௨௬ இயேசுவானவர் சொன்னது: நான் இந்தத் துணிக்கையைத்† தோய்த்துக் கொடுக்கப்படுபவன் எவனோ, அவனே என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்துச் சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்திற்குக் கொடுத்தார்; துணிக்கையை அவன் வாங்கின பின்பு,

௨௭ [8]சாத்தான் அவனுக்குள் புகுந்தான்; அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்யென்றார்.

௨௮ அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியில் இருந்தவர்களில் ஒருவரும் அறியவில்லை

௨௯ சிலர் நினைத்தது; யூதா [9]பணப்பையை வைத்துக்கொண்டிருக்கிறபடியினாலே, அவன் போய்ப் பண்டிகைக்கு வேண்டிய பதார்த்தங்களைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசுவானவர் அவனுடனே சொல்லியிருப்பார் என்று நினைத்தார்கள்

௩௰ அவன் அந்தத் துணிக்கையை வாங்கின உடனே, புறப்பட்டுப் போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது

௩௧ ¶ அவன் புறப்பட்டுப் போனபின்பு, இயேசுவானவர் சொன்னதாவது: [10]இப்பொழுது மனிதனுடைய குமாரன் மகிமைப்படுவான்; அவனாலே [11]பராபரனுடைய மகிமையும் விளங்கும்.

௩௨ [12]பராபரனுடைய மகிமை அவனாலே விளங்கும்பொழுது, பராபரன் அவனையும் மகிமைப்படுத்துவார்; [13]சீக்கிரமாய் அவனை மகிமைப்படுத்துவார்.

௩௩ பிரியமான பிள்ளைகளே, இன்னும்சிலகாலம்மாத்திரம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; [14]அல்லாமலும் நான் போகும் இடத்

கி. பி. ௩௩.

[1] சங். ௪௧ ௯. மத். ௨௬ ௨௩. ௨௧. ௪௨
[2] யோவா. ௰௪ ௨௯; ௰௬ ௪
* அல்லது இன்றுமுதல்
[3] மத். ௰ ௪௰. ௨௫ ௪௰. லூக். ௰ ௰௬
[4] மத். ௨௬ ௨௧. மாற். ௰௪ ௰௮. லூக். ௨௨ ௨௧
[5] யோவா. ௰௨ ௨௭
[6] அப். ௧ ௰௭. ௧ யோ. ௨ ௰௯
[7] யோவா. ௰௯ ௨௬ ௨௰ ௨. ௨௧ ௭, ௨௰, ௨௪
† அல்லது வாய்நிறையத்தக்க துண்டை
[8] லூக். ௨௨ ௩. யோவா. ௬ ௭௰
[9] யோவா. ௰௨ ௬
[10] யோவா. ௰௨ ௨௩
[11] யோவா. ௰௪ ௰௩. ௧ பேது. ௪ ௰௧.
[12] யோவா. ௰௭ ௧, ௪, ௫, ௧
[13] யோவா. ௰௨ ௨௩
[14] யோவா. ௭. ௩௪. ௮ ௨௧.

திற்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.

௩௪ [1]நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களிடத்தில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்று புதிதான கற்பனையை உங்களுக்குக் கொடுக்கிறேன்

௩௫ நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருந்தால், [2]நீங்கள் என்னுடைய சீஷர் என்று எல்லாரும் அறிவார்கள் என்றார்.

௩௬ ¶ சீமோன்பேதுரு அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான்; அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் போகிற இடத்திற்கு நீ இப்பொழுது எனக்குப் பின்செல்லமாட்டாய்; [3]பின்பு எனக்குப் பின்செல்லுவாய் என்றார்.

௩௭ பேதுரு சொன்னது: ஆண்டவரே, நான் என்னத்தினாலே இப்பொழுது உமக்குப் பின்செல்லக்கூடாது? [4]உமக்காக என் சீவனைக் கொடுப்பேன் என்றான்.

௩௮ இயேசுவானவர் சொன்னது: நீ எனக்காக உன் சீவனைக் கொடுப்பாயா? சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

௰௪. அதிகாரம்.

௧ கிறிஸ்து தம்முடைய சீஷர்களை மோட்சமடையலாமென்கிற நம்பிக்கையினாலே தேற்றினது. ௬ தம்மை வழியென்றும், சத்தியமென்றும், சீவனென்றும், பிதாவோடே ஒருவராயிருக்கிறவரென்றும் கூறி, ௰௩. தமது நாமத்தை முன்னிட்டு அவர்கள் செய்யும் ஜெபங்கள் பலிக்குமென்கிற நிச்சயத்தைக் காட்டி, ௰௫ தம்மிடத்தில் அவர்கள் அன்பும் அடக்கமும் உடையவர்களாயிருக்கும்படி புத்திசொல்லி, ௰௬. தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை [illegible] வாக்குத்தத்தம்பண்ணி, ௨[illegible] அருளிச்செய்தது.

[5]உங்கள் இ[illegible]ருப்பதாக; பராபரனில் நம்பிக்கையாயிருங்கள்; என்னிடத்திலும் நம்பிக்கையாயிருங்கள்.

௨ என் பிதாவின் வீட்டிலே அநேகம் வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லி இருப்பேன்; [6]ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக எத்தனம் பண்ணப்போகிறேன்.

௩ நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை எத்தனம்பண்ணின பின்பு, [7]நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்கு, [8]திரும்பிவந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.

௪ நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள்; வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்று சொன்னபொழுது,

௫ ¶ தோமா என்பவன் அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியமாட்டோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்?

௬ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [9]நானே வழியுமாய்ச் [10]சத்தியமுமாய்ச் [11]சீவனுமாய் இருக்கிறேன்; [12]என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்குச் செல்லமாட்டான்.

௭ [13]நீங்கள் என்னை அறிந்தால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; மேலும் இப்பொழுது நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்

௮ பிலிப்பு சொன்னது: ஆண்டவரே நீர் பிதாவை எங்களுக்குக் காண்பிக்கவேண்டும்; அப்பொழுது எங்களுக்குத் திர்ப்தி உண்டாயிருக்கும் என்றான்.

௯ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: பிலிப்பே, நான் இவ்வளவு காலம் உங்களுடனே கூட இருந்தும், நீ என்னை அறியவில்லையா? [14]என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படி

கி. பி. ௩௩.

1 ௩ மோ ௰௯ ௰௮ யோவா. ௰௫ ௰௨, ௰௭ எபே ௫. ௨. ௧ தெச. ௪ ௯ யாக் ௨ ௮ ௧ பே ௧ ௨௨ ௧ யோ ௨ ௭, ௮. ௩ ௰௧, ௨௩ ௪ ௨௧.
2 ௧ யோ ௨. ௫ ௪ ௨௰.
3 யோவா ௨௧ ௰௮ ௨ பே ௧ ௰௪
4 மத ௨௬ ௩௩, ௩௪, ௩௫ மாற் ௰௪ ௨௯, ௩௰, ௩௧ லூக் ௨௨ ௩௩, ௩௪
5 ௨௭ வச யோவா ௰௬ ௨௨, ௨௩
6 யோவா ௰௩ ௩௩ ௩௬
7 ௰௮ ௨௮ வச அப ௧ ௰௧
8 யோவா ௰௨ ௨௬ ௰௭ ௨௪ ௧ தெச ௪ ௰௭
9 எபி ௯ ௮
10 யோவா ௧ ௰௭ ௮ ௩௨
11 யோவா ௧ ௪ ௰௧ ௨௫
12 யோவா ௰ ௯
13 யோவா ௮ ௰௯.
14 யோவா ௰௨ ௪௫. கொலோ ௧. ௰௫ எபி ௧ ௩.

யிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?

௰ [1]நான் பிதாவிலேயும், பிதா என்னிலேயும் இருககிறதை நீ விசுவாசியாமல் இருக்கலாமா? [2]நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என்னாலே சொல்லவில்லையே; (என்) கிரியைகளையும் எனக்குள் வாசமாயிருக்கிற பிதாவானவரே செய்துவருகிறார்.

௰௧ நான் பிதாவிலேயும பிதா என்னிலேயும் இருக்கிறதை நம்புங்கள்; (என் வசனததின்நிமிததம்) நம்பாதிருநதால், [3]என் கிரியைகளின்நிமித்தமே என்னை நம்புங்கள்.

௰௨ [4]மெய்யாகவே நான் உங்களுக்குச சொல்லுகிறதாவது: என்னிடததில விசுவாசமாய இருககிறவன் நான் செய்கிற கிரியைகளைபபோலக் கிரியைகளைச் செய்வான, இவைகளிலும் அதிக பெரியவைகளையே செயவான்; என்னத்தினாலெனில், நான் என் பிதாவினிடத்திற்குப போகிறேன.

௰௩ அதுவுமல்லாமல், [5]நீங்கள் என் நாமத்தினாலே கேட்டுககொள்வது எதுவோ, அதைப பிதா குமாரனாலே புகழபபடும்பொருட்டு நான் செய்வேன்

௰௪ நீஙகள என் நாமத்தினாலே கேட்டுக்கொள்வது எதுவோ, அதை நான் செய்வேன்.

௰௫ ¶ [6]நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுஙகள்.

௰௬ மேலும் என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கா[illegible] [7]சத்திய ஆவியாகிய வேறு தேற்றுகிறவரைப பிதாவானவர் உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் அவரை வேண்டிக்கொள்வேன்.

௰௭ [8]அந்தச் சத்திய ஆவியை [9]உலகத்தார் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால், அவர்கள் அவரை அடைந்துகொள்ளமாட்டார்கள்; [10]அவர் உங்களுடனேகூட இருந்து உங்களுக்குள்ளே இருபபதால நீஙகள் அவரை அறிவீர்கள்.

௰௮ [11]நான் உங்களைத் திக்கற்றவர்களாக* விடுவதில்லை.

௰௯ [12]உஙகளிடததில் வருவேன், சிலகாலத்திற்குப் பின்பு உலகத்தார் என்னைக் காணார்கள், [13]நீஙகள் என்னைக காணபீர்கள், [14]நான் பிழைககிறபடியால் நீஙகளும் பிழைபபீர்கள்

௨௰ [15]நான் என் பிதாவிலேயும் நீஙகள் என்னிலேயும் நான் உங்களிலேயும் இருககிறதை அநநாளிலே அறிவீகள்.

௨௧ [16]என் கற்பனைகளை அடைந்து அவைகளைக் கைககொள்ளுகிறவனே, என்னிடத்தில் அனபுகூருகிறவன; என்னிடத்தில் அன்புகூருகிறவன்மேல் என் பிதா அன்பாயிருபபார், நானும அவன்மேல் அன்பாயிருநது என்னை அவனுககு வெளிபபடுததுவேன் என்று சொன்னபொழுது,

௨௨ ¶ ஸ்காரியோததல்லாத [17]யூதா எனபவன் அவரை நோககி, ஆண்டவரே, நீர் உமமை உலகததாருக்கு அல்ல, எஙகளுக்கு வெளிபபடுத்துகிறதற்குக காரணம் என்ன என்றான்.

௨௩ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [18]ஒருவன் என்னிடத்தில் அன்புகூர்நதால், அவன் என் வசனததைக் கைககொளவான், அவனிடத்தில் என பிதா அன்பாயிருபபார்; அல்லாமலும் [19]நாஙகள் அவனிடத்தில் வநது அவனோடே வாசம்பண்ணுவோம்.

௨௪ என்னிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் என் வசனஙகளைக் கைககொள்ளமாட்டான்; [20]நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதல்ல, என்னை அனுபபின பிதாவினுடையதாகவே இருக்கின்றது.

கி. பி. ௩௩.

1 ௨௰ வச யோவா ௰௩அ; ௰௭ ௨௧, ௨௩
2 யோவா. ௫ ௰௯ ௭ ௰௯ அ ௨௮ ௰௨ ௬௯
3 யோவா ௫ ௩௬. ௰. ௩௮.
4 மத் ௨௧. ௨௧. மாற். ௰௧ ௰௭ லூக் ௰ ௰௭
5 மத் ௭ ௭ ௨௧ ௨௨ மாற் ௰௧ ௨௪ லூக் ௰௧. ௯ யோவா ௰௫ ௭, ௰௬ ௰௬ ௨௩, ௨௪ யாக் ௧ ௫ ௧ யோ. ௩ ௨௨ ௫. ௰௪
6 ௨௧ ௨௩ வச யோவா ௰௫ ௰, ௰௪ ௧ யோ ௫ ௩
7 யோவா ௰௫ ௨௬ ௰௬ ௭ ௨ரோ. ௮ ௰௫, ௨௬
8 யோவா ௰௫. ௨௬ ௰௬ ௰௩ ௧ யோ ௪ ௬
9 ௧ கொரி ௨ ௰௪
10 ௧ யோ ௨ ௨௭
11 மத் ௨௮ ௨௰
* அல்லது ஆதரவற்றவர்களாக
12 யோவா ௬ ௨௮
13 யோவா ௰௬ ௰௬
14 ௧ கொரி ௰௫ ௨௰
15 ௰ வச யோவா ௰௩௮ ௰௭ ௨௧, ௨௩, ௨௬
16 ௰௫, ௨௩ வச ௧ யோ ௨ ௫ ௩
17 லூக ௬ ௰௬
18 ௰௫ வச
19 ௧ யோ ௨ ௨௪ வெளி ௩ ௨௰.
20 ௰ வச யோவா ௫ ௰௯, ௩௮ ௭ ௰௯ அ ௨௮ ௰௨. ௬௯.

௨௫ ¶ நான் உங்களுடனே இருக்கையில், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

௨௬ [1]பின்பு பிதாவானவர் என் நாமத்தினாலே அனுபபும் பரிசுத்த ஆவியாகிய தேற்றுகிறவரே [2]சகலத்தையும் உங்களுக்கு உபதேசம்பண்ணி, நான் உங்களுக்குச் சொன்ன யாவையும் நீங்கள் நினைக்கும்படி செய்வார்

௨௭ [3]சமாதானத்தை உங்களுக்குக் கொடுத்துப்போகிறேன்; என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்; உலகத்தார் கொடுக்கிறதுபோல நான் உங்களுக்குக் கொடுககமாட்டேன்; [4]உஙகள் இருதயம கலஙகவும் பயபபடவும் வேண்டுவதில்லை.

௨௮ [5]நான் போய், பின்பு உஙகளிடததிற்குத் திரும்பி வருவேன் என்று நான் உங்களுடனேசொன்னதைக் கேட்டீர்களே; நீஙகள் என்னிடத்தில் அன்புகூாநதிர்களானால், [6]என்னிலும் பிதா பெரியவராகையால், [7]நான் பிதாவினிடத்தில் போகிறதைக்குறித்து நீஙகள் சநதோஷப்படுவீர்கள்.

௨௯ அது நடககும்பொழுது நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, [8]அது நடக்கிறதற்கு முன்னாகிய இபபொழுது அதை உஙகளுக்குச் சொனனேன்.

௩௰ ¶ இனி நான் மிகவும் உங்களுடனே பேசுவதில்லை, [9]உலகத்தின் பிரபு வருகிறானே, அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

௩௧ நான் பிதாவினிடத்தில் அன்புகூர்ந்து, [10]அவர் எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறதை உலகத்தார் அறியும்படிக்கு, (அபபடி நடக்கும்,) எழுந்திருஙகள் இவ்விடம் [illegible]ாகக்கடவோம்.

௰௫ [illegible]

க. கிறிஸ்து திர[illegible] [illegible]ஞலே
தமக்கும் தம[illegible] [illegible]யுருக்கிற
அன்பின ஐ[illegible] [illegible] உலகத்தின் பகையையும், துன்பத்தையுங்குறி[illegible] ஆறுதல் சொன்னது. ௨௬ பரிசுத்தஆவியின் செயகைகளையும, அபபோஸ்தலர்களுடைய செயகைகளையுங்குறித்துச் சொன்னது

நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரன்.

௨ [11]என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் எடுத்துப்போடுகிறார், கனிகொடுக்கிற கொடி அதிக கனிகளைக் கொடுக்கும்படிக்கு அதைச் சுத்தம்பண்ணுகிறார்.

௩ [12]நான் உஙகளுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீஙகள் இப்பொழுது சுத்தமாய் இருக்கிறீர்கள்.

௪ என்னில் [13]நிலைத்திருங்கள், நானும் உஙகளில் நிலைததிருப்பேன்; கொடியானது திராட்சச்செடியிலே நிலைத்திராவிட்டால், அது தன்னாலே கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைததிராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்.

௫ நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், என்னை அன்றி* உஙகளால் ஒன்றும் செய்யக்கூடாதபடியினாலே என்னிடத்தில் நிலைகொண்டும் நான் நிலைகொள்ளபபட்டும் இருக்கிறவன் [14]மிகுந்த கனிகளைக்கொடுப்பான்.

௬ ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், [15]அவன் உலர்ந்துபோன கொடியைபபோல வெளியே போடபபடுவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போட்டுச் சுட்டெரிக்கிறார்கள்.

௭ நீங்கள் என்னிலேயும் என் வசனங்கள் உங்களி[illegible]ம் நிலைத்திருந்தால் [16]நீஙகள் கேட்டுக்கொள்வது எதுவோ, அது உங்களுக்கு உண்டாகும்.

௮ நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுத்து, [17]எனக்குச் சீஷர்களாவதினாலே [18]என் பிதா புகழப்படுவார்.

கி. பி. ௩௩.

1 மக வச லூக். உச சகூ யோவா மஇ. உசு மக எ
2 யோவா. உ உஉ மஉ. மக மகூ மரு க யோ உ. உம, உஎ
3 பிலி ச எ கொலோ க மஇ
4 க வச
5 ரு. மஅ வச
6 மஉ வச யோவா. மக மக உம மஎ
7 யோவா இ மஅ ம கம பிலி உ க
8 யோவா மரு மகூ மக ச
9 யோவா மஉ கக மக மக
10 யோவா ம மஅ பிலி உ அ எபி இ. அ
11 மத மஇ மக
12 யோவா மக ம மச மஎ எபே இ உக க பே க உஉ
13 கொலோ க உக க யோ உ கூ

* அல்லது என்னில பிரிக்கபபட்டு, அப ச மஉ

14 ஓசே மச அ பிலி க மக ச மக
15 மத க ம எ மகூ.
16 மக வச யோவா மச மக, மச மக. உக
17 யோவா அ கக மக. கஇ
18 மத். இ மக பிலி க மக

௯ பிதா என்னிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறதுபோல, நானும் உங்களிடத்தில் அன்புகூருகிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

௰ நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, [1]நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

௰௧ ¶ உங்களிடத்தில் என்னுடைய சந்தோஷம் நிலைத்திருக்கும்படிக்கும், [2]உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

௰௨ [3]நான் உங்களிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறதுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்.

௰௩ [4]ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் பிராணனைக் கொடுக்கும்படியான அன்புக்கு அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை.

௰௪ நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற யாவையும் நீங்கள் செய்தால் [5]என்னுடைய சிநேகிதராய் இருப்பீர்கள்

௰௫ ஊழியக்காரனானவன் தன் எசமான் செய்கிறதை அறியாதிருக்கிறபடியால், இனி நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்லமாட்டேன்; [6]நான் என் பிதாவினிடத்தில் கேள்விப்பட்ட யாவையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, நான் உங்களைச் சிநேகிதரென்[illegible] சொல்லுகிறேன்.

௰௬ [7]நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; [8]நீங்கள் என்னுடைய நாமத்தினாலே பிதாவானவரிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் புறப்பட்டுக் கனிகளைக் கொடுக்கும்படிக்கும் உங்கள் கனிகள் நிலைத்திருக்கும்படிக்கும், [9]நானே உங்களைத் தெரிந்துகொண்டு ஏற்படுத்தினேன்.

௰௭ [10]நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

௰௮ ¶ [11]உலகத்தார் உங்களைப் பகைக்கும்பொழுது அவர்கள் உங்களுக்குமுன்னே என்னைப் பகைத்தார்கள் என்று நினைக்கக்கடவீர்கள்.

௰௯ [12]நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகத்தார் தங்களைச் சேர்ந்தவர்களாகிய (உங்களைச்) சிநேகிப்பார்கள்; [13]நீங்கள் உலகத்தாராயிராமல் என்னாலே உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறபடியினாலே, உலகத்தார் உங்களைப் பகைக்கிறார்கள்.

௨௰ [14]ஊழியக்காரன் தன் எசமானுக்கு மேற்பட்டவன் அல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வசனத்தை நினைத்துக்கொள்ளுங்கள்; அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுபோல, உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; [15]அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுபோல, உங்களுடையதையும் கைக்கொள்ளுவார்கள்

௨௧ என்னை அனுப்பினவரை அறியாதபடியினாலே [16]அவர்கள் என் நாமத்தினிமித்தமே இப்படிப்பட்ட யாவையும் உங்களுக்குச் செய்வார்கள்.

௨௨ [17]நான் வந்து அவர்களுக்குச் சொல்லாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவம் உண்டாயிருக்கமாட்டாது; [18]இப்பொழுது அவர்கள் தங்கள் பாவத்திற்காகப் போக்குச்சொல்ல* இடமில்லை.

௨௩ [19]என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.

௨௪ [20]மற்றொருவன் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்

கி. பி. ௩௩.

1 யோவா. ௰௪ ௰௫, ௨௧, ௨௩.
2 யோவா. ௰௬ ௨௪ ௰௭. ௰௩ ௧ யோ ௧ ௪
3 யோவா ௰௩ ௩௪ ௧ தெச ௪ ௯ ௧ பே. ௪ ௮. ௧ யோ ௩ ௰௧ ௪. ௨௧.
4 யோ ௰ ௰௧, ௰௫ ௨ரோ ௫ ௭, ௮ எபே ௫. ௨ ௧யோ ௩ ௰௬
5 யோவா ௰௪ ௰௫, ௨௧ மத் ௰௨ ௫௰
6 ௧ மோ ௰௮ ௰௭ யோவா ௰௭ ௨௬ அப ௨௰ ௨௭
7 யோவா ௬ ௭௰ ௰௩ ௰௮. ௧யோ ௪ ௰, ௰௯
8 மத் ௨௮ ௰௯ மாற் ௰௬ ௰௫ கொலோ ௧ ௬
9 ௭ ௨௪ யோவா. ௰௪ ௰௩.
10 ௰௨ ௨௪
11 ௧ யோ ௩ ௧, ௰௩
2 ௧ யோ. ௪ ௫
13 யோவா ௰௭ ௰௪
14 மத் ௰ ௨௪ லூக் ௬ ௪௰ யோவா ௰௩ ௰௬.
15 எசே. ௩ ௭.
16 மத் ௰. ௨௨ ௨௪ ௯ யோவா ௰௬ ௩
17 யோவா. ௯. ௪௧
18 ௨ரோ ௧. ௨௰. யாக் ௪ ௰௭,
19 ௧ யோ ௨. ௨௩
20 யோவா ௩ ௨. ௭ ௩௧; ௯. ௩௨.

---

* அல்லது பாவத்தை மறைக்க

குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவம் உண்டாயிருக்கமாட்டாது; அவைகளை அவர்கள் கண்டிருந்தும், என்னையும் என் பிதாவையும் பகைக்கிறார்கள்.

௨௫ [1]நிமித்தம் இல்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறத்தக்கதாக (இப்படிச் செய்கிறார்கள்.)

௨௬ ¶ பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்படுபவருமாய், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாய் இருக்கிற [2]சத்திய ஆவியாகிய தேற்றுகிறவர் வரும்பொழுது [3]அவர் என்னைக் குறித்துச் சாட்சிகொடுப்பார்.

௨௭ [4]நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் [5]சாட்சிகொடுப்பீர்கள்.

௰௬. அதிகாரம்.

௧ கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வரும் துன்பத்தைக்குறித்து ஆறுதலாகப் பரிசுத்தஆவியின் வருகையையும், தாம் உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறுவதையும் முன் அறிவித்தது. ௨௩ தம்முடைய நாமத்தில் செய்யப்படும் விண்ணப்பம் பிதாவினால் அங்கிகரிக்கப்படுமென்று திருவுளம்பற்றி, ௩௩ அவர்கள் தமக்குள் சமாதானமும் உலகத்திலே துன்பமும் அடைவார்கள் என்று சொன்னது.

[6]நீங்கள் வழுவாதபடிக்கு இவைகளை உங்களுடனே சொன்னேன்.

௨ [7]அவர்கள் உங்களைச் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்குவார்கள்; [8]அதுவுமல்லாமல் உங்களைக் கொலைசெய்கிறவன் எவனோ, அவன் பராபரனுக்கு ஆராதனை செய்கிறேன் என்று நினைக்கும் காலம் வரும்.

௩ [9]அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே இப்படிப்பட்டவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.

௪ அந்தக் காலம் வரும்பொழுது [10]நான் இப்பொழுது உங்களுக்குச் சொன்னதை நீங்கள் நினைக்கும்படிக்கு, இவைகளை உங்களுடனே சொன்னேன். [11]நான்தானே உங்களுடனேகூட இருந்தபடியினாலே, நான் இவைகளை ஆரம்பத்திலே உங்களுடனே சொல்லவில்லை.

௫ [12]இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீர் என்று உங்களில் ஒருவனும் என்னிடத்தில் கேளாமல்,

௬ நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினாலே [13]துக்கம் நிறைந்த இருதயமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்.

௭ ¶ நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்; எப்படியெனில் நான் போகாதிருந்தால் [14]அந்தத் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வாரார்; [15]போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

௮ அவர் வந்து, பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து உலகத்தாருக்கு மெய்யறிவைக் கொடுப்பார்.*

௯ [16]அவர்கள் என்னிடத்தில் விசுவாசமாய் இராதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,

௰ [17]நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே [18]நீதியைக்குறித்தும்,

௰௧ [19]இவ்வுலகத்தின் பிரபு நியாயத்தீர்ப்பு அடைந்தபடியினாலே [20]நியாயத்தீர்ப்பைக்குறித்துமே அறிவைக் கொடுப்பார்.

௰௨ ¶ நான் இன்னும் அநேககாரியங்களை உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது; [21]நீங்கள் அவைகளை இப்பொழுது சகிக்கமாட்டீர்கள்.

௰௩ [22]சத்திய ஆவியானவர் வரும்பொழுது [23]சகல சத்தியத்திலேயும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்படுபவைகள் எவைகளோ அவைகளைப் பேசி இனி

இ. பி. ௩௩.

1 சங். ௩௫. ௰௯. ௬௯. ௪.
2 லூக். ௨௪. ௪௯. யோவா. ௰௪. ௰௭, ௨௬. ௰௬. ௭, ௰௩. அப். ௨. ௩௩.
3 ௧ யோ. ௫. ௬.
4 லூக். ௧. ௨. ௧ யோ. ௧. ௧, ௨.
5 லூக். ௨௪. ௪௮. அப். ௧. ௮, ௨௧, ௨௨. ௨. ௩௨. ௩. ௰௫. ௪. ௨௰, ௩௩. ௫. ௩௨. ௰. ௩௯. ௰௩. ௩௧. ௧ பே. ௫. ௧. ௨ பே. ௧. ௰௬.
6 மத். ௰௧. ௬. ௨௪. ௰. ௨௬. ௩௧.
7 யோவா. ௯. ௨௨, ௩௪. ௰௨. ௪௨.
8 அப். ௮. ௧. ௯. ௧, ௨௬. ௯, ௰, ௰௧.
9 யோவா. ௰௫. ௨௧. ரோ. ௰. ௨. ௧ கொரி. ௨. ௮. ௧ தீமோ. ௧. ௰௩.
10 யோவா. ௰௩. ௰௯. ௰௪. ௨௯.
11 மத். ௯. ௰௫.
12 ௰, ௰௬ வச. யோவா. ௭. ௩௩. ௰௩. ௩. ௰௪. ௨௮.
13 ௨௨ வச. யோவா. ௰௪. ௧.
14 யோவா. ௭. ௩௯. ௰௪. ௰௬, ௨௬. ௰௫. ௨௬.
15 அப். ௨. ௩௩. எபே. ௪. ௮.
* அல்லது கடிந்துகொள்ளுவார்.
16 அப். ௨. ௨௨-௩௭.
17 அப். ௨. ௩௨.
18 யோவா. ௩. ௰௪. ௫. ௩௨.
19 அப். ௨௬. ௰௮.
20 லூக். ௰. ௰௮. யோவா. ௰௨. ௩௧. எபே. ௨. ௨. கொலோ. ௨. ௰௫. எபி. ௨. ௰௪.
21 மாற். ௪. ௩௩. ௧ கொரி. ௩. ௨. எபி. ௫. ௰௨.
22 யோவா. ௰௪. ௰௭. ௰௬. ௨௬.
23 யோவா. ௰௪. ௨௬. ௧ யோ. ௨. ௨௰, ௨௭.

வரும் காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார்.

௰௪ அவர் என்னுடையதிலே எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால், அவர் என்னுடைய மகிமையை விளங்கப்பண்ணுவார்.

௰௫ [1]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்று சொன்னேன்.

௰௬ [2]நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, [3]சற்றுக்காலமானபின்பு நீங்கள் என்னைக் காணாமல் இருப்பீர்கள்; மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் சொன்னபொழுது,

௰௭ ¶ அவருடைய சீஷரில் சிலர் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதாவது: சற்றுக்காலமானபின்பு என்னைக் காணாமல் இருப்பீர்கள் என்றும், மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்றும், நான் பிதாவினிடத்தில் போகிறேன் என்றும் அவர் நம்முடனே சொன்னதின் கருத்தென்ன?

௰௮ சற்றுக்காலமென்று அவர் சொன்னதின் கருத்தென்ன? அவர் சொன்னது நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.

௰௯ பின்னும் தம்மிடத்தில் அவர்கள் வினாவ விரும்புகிறதை இயேசுவானவர் அறிந்து அவர்களுடனே சொன்னது: சற்றுக்காலமானபின்பு என்னைக் காணாதிருப்பீர்கள்; மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக் குறித்தா நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்கள்?

௨௰ மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகத்தார் சந்தோஷப்படுவார்கள்; நீங்கள் துக்கப்படுவீர்கள், உங்கள் துக்கம் சந்தோஷமாகும்.

௨௧ [4]கர்ப்பஸ்திரியானவளுக்குப் பிரசவகாலம் வந்தபொழுது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளை பெற்றபின்பு ஒரு மனிதன் உலகத்தில் பிறந்ததினாலே வருகிற சந்தோஷத்தின் நிமித்தம் அந்த உபத்திரவத்தை நினையாள்.

௨௨ அதுபோல [5]நீங்களும் இப்பொழுது துக்கம் அடைந்திருக்கிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், [6]அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்; அல்லாமலும் உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.

௨௩ அந்த நாளிலே நீங்கள் ஒன்றையும் என்னிடத்தில் கேட்கமாட்டீர்கள்; [7]மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்.

௨௪ இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையும் கேட்கவில்லை; கேட்டுக்கொள்ளுங்கள், [8]அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படிக்குப் பெற்றுக்கொள்வீர்கள்.

௨௫ ¶ இவைகளை நான் உவமைகளாய்* உங்களுடனே பேசினேன்; காலம் வரும், அப்பொழுது நான் பிதாவைக்குறித்து உவமைகளாய்† உங்களுடனே பேசாமல், வெளிப்படையாகவே உங்களுக்கு அறிவைக் கொடுப்பேன்.

௨௬ [9]அந்த நாளிலே நீங்கள் என் நாமத்தினாலே விண்ணப்பம் பண்ணுவீர்கள்; உங்களைக்குறித்து நான் பிதாவை நோக்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று உங்களுடனே சொல்லமாட்டேன்.

௨௭ [10]நீங்கள் என்னைச் சிநேகித்து, என்னைப் பராபரனிடத்திலிருந்து வந்தவன் என்று விசுவா

கி. பி. ௩௩.

[1] மத். ௰௧. ௨௭. யோவா. ௩. ௩௫. ௰௩. ௩. ௰௭. ௰.
[2] ௨௮ வச. யோவா. ௰௩. ௩.
[3] ௰. வச. யோவா. ௭. ௩௩. ௰௩. ௩௩. ௰௪. ௰௯.
[4] ஏசா. ௨௬. ௰௭.
[5] ௬ வச.
[6] லூக். ௨௪. ௪௧, ௫௨. யோவா. ௰௪. ௧, ௨௭. ௨௰. ௨௰. அப். ௨. ௪௬. ௰௩. ௫௨. ௧ பே. ௧. ௮.
[7] மத். ௭. ௭. யோவா. ௰௪. ௰௩. ௰௫. ௰௬.
[8] யோவா. ௰௫. ௰௧.

* அல்லது பழமொழிகளாய

† அல்லது பழமொழிகளாய.

[9] ௨௩. வச.
[10] யோவா. ௰௪. ௨௧, ௨௩.

சித்திருக்கிறபடியினாலே, [1]பிதாவானவர் தாமே உங்களைச் சிநேகிக்கிறாரே.

௨௮ [2]நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னபொழுது,

௨௯ ¶ அவருடைய சீஷர் அவரை நோக்கி, இப்பொழுது நீர் *உவமை இல்லாமல் வெளிப்படையாய்ப் பேசுகிறீர்.

௩௰ [3]நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மிடத்தில் வினவுகிறது உமக்கு வேண்டுவதில்லை என்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம்; [4]இதினாலே நீர் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

௩௧ அதற்கு இயேசுவானவர் சொன்னது: இப்பொழுது விசுவாசிக்கிறீர்கள்; கேளுங்கள்,

௩௨ [5]நீங்கள் என்னைத் தனியே வைத்துச் சிதறி அவரவரிடத்திற்குப்† போகும் நேரம் வரும்; [6]அது இப்பொழுது வந்திருக்கின்றது; நான் தனித்திரேன்; [7]பிதாவானவர் என்னுடனே இருக்கிறார்.

௩௩ [8]என்னாலே நீங்கள் சமாதானமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, இவைகளை உங்களுடனே சொன்னேன்.

௩௪ [9]இவ்வுலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டாயிருக்கும்; [10]ஆனாலும் தயிரியம்கொள்ளுங்கள்; [11]நானே உலகத்தைச் செயித்தேன் என்றார்.

௰௭. அதிகாரம்.

௧ கிறிஸ்து தம்முடைய பிதாவை நோக்கித் தம்மை மகிமைப்படுத்தவும், ௬ அப்போஸ்தலர்களை, ௰௧ ஒருமையிலும், ௰௭ சத்தியத்திலும் காக்கவும், ௨௰ அவர்களோடே மற்றெல்லா விசுவாசிகளையும் தம்முடனேகூட மோட்சத்தில் மகிமைப்படுத்தவும் வேண்டிக்கொண்டது.

இவைகளை இயேசுவானவர் சொன்னபின்பு, அவர் தம்முடைய கண்களை வானத்திற்கு நேராக உயர்த்தித் திருவுளம்பற்றினதாவது:

௨ [12]பிதாவே, நேரம் வந்தது; [13]நீர் உம்முடைய குமாரனுக்குக் கொடுத்த யாவருக்கும் அவன் நித்தியசீவனைக் கொடுக்கும்பொருட்டாய், [14]மனிதர் யாவர்மேலும் அவனுக்கு அதிகாரம் கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்முடைய மகிமையை விளக்கும்படிக்கு நீர் அவனை மகிமைப்படுத்துவீராக.

௩ [15]ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் [16]அனுப்பின இயேசுக்கிறிஸ்துவையும் [17]அறிந்துகொள்ளுகிறதே நித்தியசீவன்

௪ [18]பூமியிலே நான் உம்முடைய மகிமையை விளக்கினேன், [19]நான் செய்யும்படிக்கு நீர் கொடுத்த கிரியையை [20]முடித்தேன்.

௫ இப்பொழுது பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே [21]உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த உம்முடைய மகிமையினாலே என்னை மகிமைப்படுத்தும்.

௬ ¶ நீர் [22]உலகத்தாரில் எடுத்து எனக்குக் கொடுத்த மனிதருக்கு [23]உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்; அவர்கள் உம்முடையவர்களாய் இருந்தார்கள்; அவர்களை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்; அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

௭ நீர் எனக்குக் கொடுத்த யாவும் உம்மாலே உண்டாயின என்று அவர்கள் இப்பொழுது அறிந்துகொண்டார்கள்.

௮ அல்லாமலும், [24]நீர் எனக்குக் கொடுத்த வசனங்களை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; [25]அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, என்னை உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவன் என்று மெய்

கி. பி. ௩௩.

1 ௩௰ வச யோவா ௩ ௰௬ ௰௭ அ
2 யோவா ௰௩ ௩
* அல்லது பழமொழி
3 யோவா. ௨௧ ௰௭
4 ௨௭ வச யோவா ௰௭ அ
5 மத ௨௬ ௩௧ மாற் ௰௪ ௨௭
† அல்லது சொந்தத்துக்கு
6 யோவா ௨௰ ௰
7 யோவா அ ௨௯ ௰௪ ௰,௰௧
8 ஏசா. ௯ ௬ யோவா ௰௪ ௨௭ உரோ ௫ ௧ எபே ௨ ௰௪ கொலோ ௧ ௨௰
9 யோவா ௰௫ ௰௯, ௨௰, ௨௧. ௨ தீமோ ௩ ௰௨
10 யோவா ௰௪. ௧.
11 உரோ அ ௩௭. ௧ யோ ௪. ௪ ௫ ௪.
12 யோவா ௰௨ ௨௩ ௰௩ ௩௨
13 தானி ௭ ௰௪ மத் ௰௧ ௨௭ ௨௮. ௰௮ யோவா ௩. ௩௫ ௫ ௨௭ ௧ கொரி ௰௫ ௨௫, ௨௭ பிலி ௨. ௰ எபி ௨ அ
14 ௬,௯,௨௪ வச யோவா ௬. ௩௭
15 யோவா ௩ ௩௪ ௫ ௩௯, ௩௭ ௯ ௨௯, ௫௭ ௭ ௨௯. ௰ ௩௬ ௰௧ ௪௨
16 ௧ கொரி அ ௪. ௧ தெச ௧ ௯
17 ஏசா ௫௩ ௰௧ எரே. ௯ ௨௪
18 யோவா ௰௩. ௩௧ ௰௪. ௰௩
19 யோவா ௪ ௩௪ ௫ ௩௬: ௯ ௪: ௰௯ ௩௰.
20 யோவா ௰௪ ௩௧: ௰௫ ௰

---

21 யோவா ௧.௧,௨: ௰ ௩௰· ௰௪ ௯ பிலி ௨ ௬. கொலோ ௧ ௰௫,௰௭ எபி. ௧ ௩,௰.—22 ௨௬ வச. ௬௯. ௨௨,௨௪.
23 ௨,௯,௰௬,வச யோவா.௬.௩௭,௩௯:௰.௨௯.௰௫ ௰௯.—24 யோவா அ ௨௮:௰௨.௪௯:௰௪ ௰.—25 ௨௫ வச.யோவா.௰௬.௨௭,௩௰

யாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

௯ நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; [1]உலகத்தாருக்காக அல்ல, நீர் எனக்குக் கொடுத்தவர்கள் உம்முடையவர்களானபடியால் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰ என்னுடைய யாவும் உம்முடையவைகள் [2]உம்முடையவைகள் என்னுடையவைகளாயிருக்கின்றன; என்னுடைய மகிமை அவர்களுக்குள்ளே விளங்கியிருக்கின்றது.

௰௧ [3]நான் உலகத்தில் இனி இரேன்; அவர்கள் உலகத்திலே இருப்பார்கள், நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; பரிசுத்தமுள்ள பிதாவே, [4]நீர் எனக்குக் கொடுத்தவர்கள் [5]நம்மைப்போல [6]ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொள்ளும்.

௰௨ இவ்வுலகத்திலே நான் அவர்களுடனேகூட இருக்கையில், [7]அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குக் கொடுத்தவர்களைக் காத்துக்கொண்டு வந்தேன்; [8]வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, [9]கேட்டின் மகன் கெட்டுப்போனானே அல்லாமல், [10]அவர்களில் ஒருவனாயினும் கெட்டுப்போகவில்லை.

௰௩ இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; இவர்கள் என்னில் நிறைவாய்ச் சந்தோஷப்படும்படிக்கு இவ்வுலகத்திலே இவைகளைச் சொல்லுகிறேன்.

௰௪ ¶ [11]நான் உம்முடைய வசனத்தை இவர்களுக்குக் கொடுத்தேன்; மேலும் [12]நான் இவ்வுலகத்தின் தன்மை இல்லாதவனாயிருக்கிறதுபோல, அவர்களும் இவ்வுலகத்தின் தன்மை இல்லாதவர்களாய் இருக்கிறபடியினாலே [13]உலகத்தார் அவர்களைப் பகைக்கிறார்கள்.

௰௫ நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி அல்ல, [14]அவர்களைப் பொல்லாங்கிலிருந்து காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰௬ [15]நான் உலகத்தான் அல்லாதவனாயிருக்கிறதுபோல, அவர்களும் இவ்வுலகத்தார் அல்ல.

௰௭ [16]உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பிரதிஷ்டையாக்கும், [17]உம்முடைய வசனமே சத்தியம்.

௰௮ [18]நீர் என்னை இவ்வுலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

௰௯ [19]அல்லாமலும் அவர்களும் சத்தியமாய்ப் *பிரதிஷ்டையாக்கப்பட்டவர்களாய் இருக்கும்படிக்கு அவர்களுக்காக நான் என்னைத்தானே பிரதிஷ்டையாக்குகிறேன்.

௨௰ ¶ அல்லாமலும் நான் இவர்களுக்காகமாத்திரம் அல்ல, இவர்களுடைய போதிப்பினாலே என்னிடத்தில் விசுவாசமாகும் பேர்களுக்காகவும், [20]எல்லாரும் ஒன்றாயிருக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௰௧ ஆ பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகத்தார் விசுவாசிக்கத்தக்கதாக, [21]நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களும் நம்மிலே ஒன்றாயிருக்கும்படிக்கே (வேண்டிக்கொள்ளுகிறேன்).

௨௰௨ அல்லாமலும் [22]நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் எனக்குக் கொடுத்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

௨௰௩ [23]அவர்கள் ஒருமைப்பாட்டிலே நிறைந்தவர்களாயிருக்கும்படிக்கும், நீர் என்னை அனுப்பினதையும் நீர் என்னிடத்தில் அன்புகூருகிறதுபோல அவர்களிடத்தி

கி. பி. ௩௩.

1 ௧ யோ ௫ ௰௯.
2 யோவா. ௰௬ ௰௫
3 யோவா ௰௩. ௧ ௰௬. ௨௮.
4 ௧ பே. ௧. ௫ யூதா ௧
5 ௨௰௧ வச
6 யோவா ௰ ௩௰
7 யோவா ௬ ௩௯. ௰ ௨௮. எபி ௨ ௰௩.
8 சங. ௱௯ ௮ அப ௧ ௨௰.
9 யோவா ௬. ௭௰ ௰௩ ௰௮
10 யோவா ௰௮ ௯ ௧ யோ ௨ ௰௯.
11 ௮ வச
12 யோவா. ௮ ௨௩ ௰௪ வச
13 யோவா ௰௫ ௰௮,௰௯ ௧ யோ ௩ ௰௩
14 மத ௬ ௰௩ கலா ௧ ௪. ௨ தெச ௩ ௩ ௧ யோ ௫ ௰௮
15 ௰௪ வச.
16 யோவா ௰௫ ௩ அப ௰௫ ௯. எபே ௫ ௨௬ ௧ பே ௧ ௨௨
17 ௨ சாமு ௭ ௨௮ சங ௱௰௯ ௱௪௨, ௱௫௧ யோவா ௮. ௪௰
18 யோவா ௨௰ ௨௧
19 ௧ கொரி ௧ ௨, ௩௰ ௧ தெச ௪ ௭ எபி ௰ ௰
* அல்லது சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய.
20 ௰௧, ௨௨, ௨௧ வச. யோவா ௰ ௰௬ உரோ. ௰௨ ௫ கலா. ௩ ௨௮
21 யோவா ௰ ௩௮ ௰௪ ௰௧
22 யோவா. ௰௪. ௨௰ ௧ யோ ௧. ௩ ௩ ௨௪
23 கொலே. ௩. ௰௪.

லும் அன்புகூருகிறதையும் உலகத்தார் அறியும்படிக்கும், நான் அவர்களிலேயும் நீர் என்னிலேயும் இருக்கவேண்டும்.

௨௪ ¶ [1] பிதாவே, [2] உலகம் தோன்றின காலத்திற்குமுன்னே, நீர் என்னிடத்தில் அன்புகூர்ந்தபடியினாலே, எனக்குக் கொடுத்த என்னுடைய மகிமையை நீர் எனக்குக் கொடுத்தவர்கள் காணும்படிக்கு, நான் இருக்கும் இடம் எங்கேயோ, அங்கே அவர்களும் என்னோடேகூட இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்

௨௫ நீதியுள்ள பிதாவே, [3] உலகத்தார் உம்மை அறியவில்லை; [4] நான் உம்மை அறிந்திருக்கிறேன். அல்லாமலும் [5] நீர் என்னை அனுப்பினதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

௨௬ அன்றியும் [6] நீர் என்னிடத்தில் வைத்திருக்கிற அன்பு இவர்களிலே இருக்கும்படிக்கும், நான் இவர்களிலே இருக்கும்படிக்கும், [7] உம்முடைய நாமத்தை இவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; பின்னும் அப்படியே தெரியப்படுத்துவேன் என்றார்.

௰௮. அதிகாரம்.

௧ யூதா இயேசுவைக் காட்டிக்கொடுத்தது ௬ சேவகர் தரையில் விழுந்தது. ௰ பேதுரு மல்குசின் காதை வெட்டினது ௰௨. அன்னா காய்பா என்பவர்களுக்குமுன்பாக இயேசு கொண்டுபோகப்பட்டது ௰௫ பேதுரு மறுதலித்தது ௰௯ இயேசுவானவர் காய்பாவுக்குமுன்பாகச் சோதிக்கப்பட்டது ௨௮ அவர் பிலாத்துக்குமுன்பாக குற்றஞ்சாற்றப்பட்டது ௩௬ தாம் தம்முடைய இராச்சியத்தைக்குறித்துச் சொல்லியது ௪௰ யூதர்கள் பரபாவை விடுதலையாக்கும்படி கேட்டுக்கொண்டது.

இயேசுவானவர் இவைகளைச் சொன்னபின்பு [8] அவர் தம்முடைய சீஷருடனேகூடக் [9] கீதிரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது; அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.

௨ [10] இயேசுவானவர் தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே கூடிவந்திருந்தபடியினாலே, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அந்த இடத்தை அறிந்தான்.

௩ [11] ஆதலால் யூதாவானவன் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவர்த்திகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்குப் போனான்.

௪ ¶ அப்பொழுது இயேசுவானவர் தமதுமேல்வரும் யாவையும் அறிந்து புறப்பட்டு அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.

௫ அதற்கு அவர்கள் நாசரேத்தூரானாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்; இயேசுவானவர், நானே அவன் என்றார்; அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அவர்களுடனேகூட நின்றான்.

௬ நானே அவன் என்று அவர் சொன்னபொழுது, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

௭ பின்பு அவர் மறுபடியும் அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார்; நாசரேத்தூரானாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.

௮ இயேசுவானவர் சொன்னது: நானே அவன் என்று உங்களுடனே சொன்னேனே, நீங்கள் என்னைத் தேடினீர்களானால் இவர்களை விட்டுவிடுங்கள் என்றார்.

௯ அதினாலே, [12] நீர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையாகிலும் நான் இழக்கவில்லை என்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறிற்று.

௰ ¶ [13] அப்பொழுது சீமோன் பேதுரு தன்னிடத்தில் இருக்கிற கத்தியை உருவிப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய வலதுகாதை வெட்டினான், அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பேர்.

இ. பி. ௩௩.

1 யோவா ௰௨. ௨௬: ௰௪. ௩. ௧ தெச ௪. ௰௭.
2 இ வச.
3 யோவா ௰௫ ௨௧; ௰௬. ௩.
4 யோவா ௭ ௨௯: ௮ ௫௫. ௰ ௰௫
5 ௮ வச யோவா ௰௬. ௨௭
6 யோவா. ௰௫. ௯
7 ௬ வச. யோவா ௰௫ ௰௫.
8 மத். ௨௬ ௩௬ மாற் ௰௪. ௩௨. லூக் ௨௨ ௩௯
9 ௨ சாமு ௰௫ ௨௩
10 லூக். ௨௧ ௩௭ ௨௨. ௩௯
11 மத் ௨௬ ௪௭ மாற் ௰௪ ௪௩ லூக் ௨௨ ௪௭ அப ௧ ௰௬.
12 யோவா ௰௭. ௰௨
13 மத் ௨௬ ௫௧. மாற் ௰௪. ௪௭. லூக். ௨௨. ௪௯, ௫௰

௰௧ இயேசுவானவர் பேதுருவை நோக்கி, கத்தியை உறையிலே போடு, [1]பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாமல் இருப்பேனா என்றார்.

௰௨ ¶ பின்பு போர்ச்சேவகரும், ஆயிரம் சேனைக்குத் தலைவனும், யூதர்களுடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி,

௰௩ [2]முதலாவது அன்னா என்பவனிடத்தில்[3]கொண்டுபோனார்கள்; அந்த அன்னா அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காயபா என்பவனுக்கு மாமனாயிருந்தான்.*

௰௪ [4]ஒரே மனிதன் சனங்களுக்குப் பதிலாக மடிந்துபோனால், நலமாயிருக்கும் என்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் அந்தக் காய்பாவே.

௰௫ ¶ [5]சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள்; அல்லாமலும் அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமுள்ளவனாய், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரியனுடைய மாளிகைக்குள் பிரவேசித்தான்.

௰௬ [6]பேதுரு வெளிவாசற்படியிலே நின்றான்; ஆதலால் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமுள்ள அந்த மற்றச் சீஷன் வெளியே போய், வாசலைக் காக்கிறவளுடனே சொல்லி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டான்.

௰௭ அப்பொழுது வாசலைக் காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி, நீயும் அந்த மனிதனுடைய சீஷரில் ஒருவன் அல்லவா என்றாள்; அவன், நான் அப்படிப்பட்டவன் அல்ல என்றான்.

௰௮ குளிர்ச்சியான காலமானபடியினாலே வேலைக்காரரும் ஊழியக்காரரும் நெருப்பு உண்டாக்கி நின்று குளிர்காய்ந்தார்கள்; அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர்காய்ந்தான்.

௰௯ ¶ பிரதான ஆசாரியன் இயேசுவானவருடைய சீஷரையும் போதகத்தையும் குறித்து அவரிடத்தில் வினாவினான்.

௨௰ அவனுடனே இயேசுவானவர் சொன்னதாவது: [7]அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசாமல் வெளியரங்கமாய் லோகத்துடனே பேசினேன்; செபஆலயத்திலேயும், யூதர்கள் எல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசம்பண்ணினேன்.

௨௧ என்னத்திற்கு நீர் என்னிடத்தில் விசாரிக்கிறீர்? எனக்குச் செவிகொடுத்தவர்களுக்கு நான் சொல்லியவைகளைக்குறித்து அவர்களிடத்திலே விசாரிப்பீராக; நான் பேசினவைகளை அறிந்திருக்கிறார்களே என்றார்.

௨௨ இப்படி அவர் சொன்னபொழுது, சமீபமாய் நின்ற ஊழியக்காரரில் ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு இப்படி மாறுத்தரவு சொல்லலாமா என்று சொல்லி, [8]இயேசுவானவரை ஒரு அடி அடித்தான்†; அவனுடனே இயேசுவானவர் சொன்னது:

௨௩ நான் தகாதவிதமாய்ச் சொன்னேனானால், தகாதது இருக்கிறதை ஒப்புவி, நான் தகுதியாய்ச் சொல்லியிருக்க என்னத்தினாலே என்னை அடிக்கிறாய் என்றார்.

௨௪ [9]அன்னா என்பவன் கட்டப்பட்டவரான அவரைப் பிரதான ஆசாரியனான காய்பாவினிடத்திற்கு அனுப்பியிருந்தான்.

௨௫ ¶ சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்தான்; [10]அப்பொழுது சிலர் அவனை நோக்கி, நீயும் அவனுடைய சீஷரில் ஒருவன் அல்லவா என்றார்கள்; அதற்கு அவன், நான் அல்லவென்று மறுதலித்தான்.

௨௬ பின்பு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் ஒருவனுமாய்ப் பேதுருவினாலே காதற வெட்டப்பட்டவனுக்கு இனத்

கி. பி. ௩௩.

[1] மத். ௨௰ ௨௨, ௨௬ ௩௯, ௪௨

[2] லூக் ௩, ௨.

[3] மத் ௨௬ ௫௭.

* அன்னா கிறிஸ்துவைக் கட்டப்பட்டவராகப் பிரதான ஆசாரியனாகிய காயபாவண்டைக்கு அனுப்பினான், ௨௪ வச

[4] யோவா ௰௧ ௫௰

[5] மத் ௨௬ ௫௮. மாற் ௰௪ ௫௪ லூக் ௨௨ ௫௪

[6] மத் ௨௬ ௬௯ மாற ௰௪ ௬௬ லூக் ௨௨ ௫௫

[7] மத் ௨௬ ௫௫ லூக் ௪ ௰௫ யோவா ௭ ௰௪, ௨௬, ௨௮ அ ௨.

[8] எரே ௨௰ ௨ அப ௨௩ ௨

† அல்லது தடியினாலே அடித்தான்

[9] மத் ௨௬ ௫௭

[10] மத் ௨௬. ௬௯, ௭௧ மாற ௰௪. ௬௯ லூக் ௨௨. ௫௮

தானுமாய் இருந்தவன் அவனை நோக்கி, நான் உன்னை அவரோடேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான.

௨௭ அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; [1]உடனே சேவல் கூவிற்று.

௨௮ ¶ விடியற்காலமானபொழுது அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து [2]இயேசுவானவரைப் பெரிய துரையின் நியாயஸ்தலத்திற்குக்* கொண்டுபோனார்கள்; [3]அவர்கள் அசுசிப்படாமல் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு, தாங்கள் அந்த நியாயஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவில்லை.

௨௯ ஆதலால் பிலாத்தென்னும் துரை அவர்களிடத்திற்குப் போய், இந்த மனிதன்மேல் என்ன குற்றம் சாற்றுகிறீர்கள் என்றான்.

௩௰ அவனுடனே அவர்கள் சொன்னது: இவன் பொல்லாங்கு செய்தவன் அல்லாதவனாயிருந்தால், இவனை உமக்கு ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள்.

௩௧ ஆதலால் பிலாத்தென்பவன் அவர்களை நோக்கி, இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயசாஸ்திரத்தின்படி இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுங்கள் என்றான்; அதற்கு யூதர்கள் சொன்னது: ஒருவனுக்கு மரணத்தைக் கொடுக்கிறதற்கு எங்களிடத்தில் அதிகாரம் இல்லையே என்றார்கள்

௩௨ [4]இயேசுவானவர் தமக்கு மரணம் வரும் வகையைக்குறித்துச் சொன்ன வசனம் நிறைவேறத்தக்கதாக (அப்படிப் பேசினார்கள்).

௩௩ ¶ [5]அப்பொழுது பிலாத்தானவன் மறுபடியும் நியாயஸ்தலத்திற்குள் பிரவேசித்து இயேசுவை அழைத்து, நீ யூதருடைய இராசனா என்று கேட்டான்.

௩௪ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: இதை நீர் உம்மாலே சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இதை உமக்குச் சொன்னார்களோ என்றார்.

௩௫ பிலாத்து மறுமொழியாகச் சொன்னது: நான் யூதனா? உன்னுடைய தேசத்தாரும் பிரதான ஆசாரியரும் உன்னை எனக்கு ஒப்புக்கொடுத்தார்கள், என்ன செய்தாய் என்றான்.

௩௬ [6]அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]என் இராசசியம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்ல, என் இராச்சியம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதானால், நான் யூதர் கையில் அகப்படாதபடிக்கு, என் ஊழியக்காரர் போராட்டம் செய்வார்கள்; என் இராச்சியம் இம்மையின் தன்மையுடையதல்ல என்றார்.

௩௭ அப்பொழுது பிலாத்தானவன் அவரை நோக்கி, ஆதலால் நீ இராசன் அல்லவா என்றான்; இயேசுவானவர் சொன்னது: நீர் சொல்லுகிறபடி நான் இராசன்தான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்கும்படிக்கு நான் பிறந்தேன், அதற்காகவே இவ்வுலகத்திற்கு வந்தேன்; [8]சத்தியத்தின் தன்மையுள்ளவன் எவனோ, அவன் எனக்குச் செவிகொடுக்கிறான் என்றார்.

௩௮ ¶ அதற்குப் பிலாத்து, சத்தியம் எது என்று சொல்லி, மறுபடியும் யூதரிடத்திற்குப்போய், அவர்களை நோக்கி, [9]நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.

௩௯ [10]பஸ்காப்பண்டிகையிலே நான் உங்களுக்காக ஒருவனை விடுதலையண்ணுகிறது வழக்கமாயிருக்கிறதே; ஆகையால் நான் யூதருடைய இராசனை உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு விருப்பமுண்டா என்றான்.

௪௰ [11]அப்பொழுது அவர்களெல்லாரும் இவனை அல்ல, பரபாவை விடுதலைபண்ணவேண்டும் என்று கூப்பிட்டார்கள்; [12]பரபா என்பவன் கள்ளனாயிருந்தான்.

கி. பி. ௩௩.

1 மத் ௨௬. ௭௪. மாற். ௰௪. ௭௨. லூக். ௨௨. ௬௰ யோவா ௰௩. ௩௮
2 மத் ௨௭ ௨. மாற் ௰௫. ௧ லூக் ௨௩. ௧ அப ௩. ௰௩
* அல்லது பிலாத்துவின் வீட்டுக்கு மத் ௨௭ ௨௭
3 அப ௰ ௨௮ ௰௧ ௩.
4 மத் ௨௰ ௰௯ யோவா ௰௨ ௩௨, ௩௩
5 மத் ௨௭ ௰௧
6 ௧ தீமோ. ௬ ௰௩
7 தானி ௨ ௪௪ ௭ ௰௪ லூக் ௰௨. ௰௪ யோவா ௬ ௰௫ அ ௰௫
8 யோவா அ ௪௭ ௧ யோவா ௰௩ ௪ ௬
9 மத் ௨௭ ௨௪ லூக் ௨௩. ௪ யோவா. ௰௯ ௪, ௬
10 மத். ௨௭ ௰௫ மாற். ௰௫ ௬. லூக். ௨௩. ௰௭
11 அப ௩ ௰௪
12 லூக் ௨௩ ௰௯

௰கூ. அதிகாரம்.

க. கிறிஸ்து வாரினால் அடிக்கவும், முள்முடி தரிக்கவும், கையினால் அறையவும்பட்டது ச. பிலாத்து அவரை விடுதலையாக்க நினைத்தும், யூதர்களுடைய அமளியினால் சிலுவையில் அறையும்படி அவரை ஒப்புவித்தது உங. அவர்கள் அவருடைய வஸ்திரங்களுக்காகச் சீட்டுப்போட்டது உரு. அவர் தம்முடைய தாயாரை யோவானிடத்தில் ஒப்புவித்து, உஅ. மரணமடைந்தது. ஙக. அவருடைய விலாவிலே ஈட்டியினால் குத்தப்பட்டது ஙஅ. யோசேப்பும் நிக்கோதேமும் அவரை அடக்கம்பண்ணினது

அப்பொழுது [1]பிலாத்தென்பவன் இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.

உ அல்லாமலும் போர்ச்சேவகர் முள்ளுக்களினால் ஒரு முடியைப் பின்னி அதை அவருடைய சிரசின்மேல் வைத்து, ஒரு சிவப்பான அங்கியை அவருக்குத் தரிப்பித்து,

ங யூதருடைய இராசாவே, வாழ்க என்று சொல்லி, அவருடைய கன்னத்தில் அடித்தார்கள்.

ச பிலாத்தானவன் மறுபடியும் வெளியேபோய் அவர்களை நோக்கி, இதோ, [2]இவனிடத்தில் ஒரு குற்றத்தையும் நான் காணாமலிருக்கிறதை நீங்கள் அறியும்படிக்கு இவனை உங்களிடத்தில் கொண்டு வருகிறேன் என்றான்.

ரு உடனே முள்முடியும் சிவப்பான அங்கியும் தரிக்கப்பட்டவராய் இயேசுவானவர் வெளியே வந்தார்; அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, இந்த மனிதனைப் பாருங்கள் என்றான்.

சா [3]பிரதான ஆசாரியரும் ஊழியக்காரரும் அவரைக் கண்டபொழுது, இவனைச் சிலுவைமரத்திலே அறையும், இவனைச் சிலுவைமரத்திலே அறையும் என்று கூப்பிட்டார்கள்; அதற்குப் பிலாத்து சொன்னது: இவனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லையே; ஆகையால் நீங்களே இவனைக் கொண்டுபோய், சிலுவைமரத்தில் அறையுங்கள் என்றான்.

எ யூதர்கள் மறுமொழியாகச் சொன்னது: [4]எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம் உண்டு; இவன் [5]தன்னைப் பரமபரனுடைய குமாரனென்று சொன்னபடியினாலே, அந்த நியாயப்பிரமாணத்தின்படியே இவன் சாகவேண்டும் என்றார்கள்.

அ ¶ இந்த வசனத்தைப் பிலாத்து கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, மறுபடியும் நியாயஸ்தலத்திற்குள்ளே போய்,

கூ இயேசுவானவரை நோக்கி, நீ எவ்விடத்தான் என்றான்; [6]அதற்கு இயேசுவானவர் மாறுத்தரம் சொல்லவில்லை.

௰ ஆதலால் பிலாத்து அவரை நோக்கி, நீ எனக்கு மறுமொழி சொல்லுகிறதில்லையா? உன்னைச் சிலுவைமரத்தில் அறையும்படியும் எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலைபண்ணும்படியும் எனக்கு அதிகாரம் உண்டென்றும் நீ அறியாமலா இருக்கிறாய் என்றான்.

௰க இயேசுவானவர் சொன்னது: இந்த அதிகாரம் உமக்கு உயரத்திலிருந்து கொடுக்கப்படாதிருந்தால், [7]எனக்கு விரோதமாய்ச் செய்யும் அதிகாரம் உமக்கு உண்டாயிருக்கமாட்டாது; ஆனபடியினாலே என்னை உமக்கு ஒப்புக்கொடுத்தவன் அதிக பாவமுள்ளவன் என்றார்.

௰உ ¶ அதுமுதல் பிலாத்தானவன் அவரை விடுதலைபண்ணத் தேடினான்; யூதர்கள் அவனை நோக்கி, [8]இவனை விடுதலைபண்ணினால் நீ இராயனுக்குச் சிநேகிதன் அல்ல, [9]தன்னை இராசா என்கிறவன் எவனோ அவன் இராயனுக்கு விரோதியாய் இருக்கிறான் என்று கூப்பிட்டார்கள்.

௰ங [10]அந்நாள் பஸ்காவுக்கு எத்தனமாக்கப்படுகிற நாளுமாய், ஏறக்குறைய ஆறும்மணி நேரமுமாயிருக்க,

௰ச பிலாத்தானவன் இந்த வசனத்தைக் கேட்டபொழுது, அவன்

இ. பி. ஙங.

[1] மத் உ௰ ௰கூ உஎ உசா மாற் ௰ரு ௰ரு லூக். ௰அ ஙங
[2] யோவா ௰அ ஙஅ கூ வச
[3] அப ங. ௰ங
[4] ங மோ. உச ௰சா
[5] மத் உசா. சாங யோவா ரு ௰அ ௰ ஙங.
[6] ஏசா ருங எ மத். உஎ. ௰உ, ௰ச
[7] லூக் உஉ. ருங. யோவா எ ங௰
[8] லூக் உங உ
[9] அப ௰எ எ
[10] மத் உஎ கூஉ

இயேசுவை வெளியே அழைத்துபபோய், தளவரிசைப்படுத்தின இடமென்றும், எபிரேயுபாஷையிலே கப்பத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே நியாயாசனத்தின்மேல் உளுக்காந்து யூதர்களை நோக்கி, உங்கள் இராசாவைப் பாருங்கள் என்றான்.

௰௫ அவர்கள், இவனை அகற்றும் அகற்றும், இவனைச் சிலுவைமரத்திலே அறையுமென்று கூப்பிட்டார்கள்; பிலாத்தானவன் சொன்னது: உங்கள் இராசாவை நான் சிலுவைமரத்திலே அறையலாமா என்றான்; அதற்குப் பிரதான ஆசாரியர், [1]இராயனே அல்லாமல் ஒரு இராசா எங்களுக்கு இல்லை என்றார்கள்.

௰௬ [2]அப்பொழுது அவனைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்கு அவன் அவனை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான்; அந்தபபடி அவர்கள் இயேசுவானவனைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

௰௭ ¶ [3]அவர் தம்முடைய சிலுவைமரத்தைச் சுமந்துகொண்டு, எபிரேயு பாஷையிலே [4]கொல்கத்தா என்று சொல்லப்பட்ட தலையோட்டிடம் என்னும் இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.

௰௮ அங்கே அவர்கள், நடுவிலே அவனையும் அவருடனேகூட இருபக்கங்களிலே வேறிரண்டு பேனையும் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

௰௯ ¶ அன்றியும் பிலாத்தானவன் [5]நாசரேத்தூரானாகிய இயேசு யூதருடைய இராசா என்று எபிரேயுபாஷையிலேயும் கிரேக்கைப்பாஷையிலேயும் இலத்தீன்பாஷையிலேயும் எழுதி, அதைச் சிலுவைமரத்தின்மேல் சேர்த்தான்.

௨௰ இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடம் நகரத்திற்குச் சமீபமாய் இருந்தபடியினாலே, யூதர்களில் அநேகம்பேர் அந்த மேல் எழுத்தை வாசித்தார்கள்.

௨௧ அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவினிடத்திற்குப் போய், யூதருடைய இராசா என்று நீர் எழுதாமல் நான் யூதருடைய இராசா என்று அவன் சொன்னான் என்றே எழுதவேண்டும் என்றார்கள்.

௨௨ அதற்குப் பிலாத்து நான் எழுதினது எழுதியாயிற்று என்றான்.

௨௩ ¶ [6]போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவைமரத்திலே அறைந்தபின்பு அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்கு வரும்படி நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள்; அந்த அங்கி தைத்தலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டிருந்தபடியால்,*

௨௪ அவர்கள் இதைக் கிழியாமல் இதைப் பெற்றுக்கொள்ளுகிறவனை அறியும்படிக்குச் சீட்டுப்போடக்கடவோம் என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்; [7]என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் அப்படிச் செய்தார்கள்.

௨௫ ¶ [8]அல்லாமலும் இயேசுவின் சிலுவைமரத்தின் அருகே அவருடைய தாயும், அவளுடைய சகோதரியாகிய கிலேயோப்பா† மரியாளும், [9]மகுதல ஊராளாகிய மரியாளும் நின்றார்கள்.

௨௬ அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய தாயையும், [10]அங்கே நின்ற தமக்கு அன்பான சீஷனையும் கண்டு,

௨௭ தம்முடைய தாயை நோக்கி, [11]ஸ்திரியே, இவனே உன் மகன் என்றார்; பின்பு அந்தச் சீஷனை நோக்கி, இவளே உன் தாய் என்றார்; [12]அந்நேரமுதற்கொண்டு

இ. பி. ௩௩.

[1] ௧ மோ. ௪௯. ௰.
[2] மத். ௨௭. ௨௬, ௩௧. மாற் ௰௫ ௰௫. லூக். ௨௩. ௨௪.
[3] மத். ௨௭ ௩௧, ௩௩ மாற். ௰௫. ௨௧, ௨௨. லூக் ௨௩. ௨௬, ௩௩.
[4] ௪ மோ ௰௫ ௩௫. எபி. ௰௩ ௰௨.
[5] மத் ௨௭ ௩௭ மாற் ௰௫ ௨௬. லூக் ௨௩. ௩௮.
[6] மத். ௨௭. ௩௫ மாற். ௰௫. ௨௪. லூக். ௨௩. ௩௪
[7] சங். ௨௨ ௰௮
[8] மத ௨௭. ௫௫. மாற். ௰௫ ௪௰ லூக் ௨௩ ௪௯
[9] லூக். ௨௪. ௰௮
[10] யோவா ௰௩ ௨௩: ௨௰ ௨. ௨௧ ௭, ௨௰, ௨௪.
[11] யோவா ௨. ௪
[12] யோவா. ௧. ௰௧ ௰௬. ௩௨

---

* அல்லது தையலில்லாமல் செய்யப்பட்ட.

† அல்லது கிலோப்பா

அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய்ச் சேர்த்துக்கொண்டான்.

௨௮ ¶ இதின்பின்பு இயேசுவானவர் எல்லாம் முடிந்து தீர்ந்ததென்று அறிந்து, [1]வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகத் தாகமாயிருக்கிறேன் என்றார்.

௨௯ அங்கே காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது; [2]ஆதலால் அவர்கள் கடற்காளானைக் காடியில் தோய்த்து, ஈசோப்புத் தண்டில் பூட்டி, அவருடைய வாயினிடத்திற்கு நீட்டிக் கொடுத்தார்கள்.

௩௰ இயேசுவானவர் காடியை வாங்கினபின்பு, [3]முடிந்ததென்று சொல்லித் தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புவித்தார்.

௩௧ ¶ [4]அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளானபடியினாலே, [5]உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைமரங்களில் இராதபடி யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய் அவர்களுடைய கால் எலும்புகள் முறிக்கப்படும்படிக்கும் உடல்கள் எடுத்துப்போடப்படும்படிக்கும் அவனிடத்தில் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.

௩௨ அந்தப்படி போர்ச்சேவகர் போய், அவருடனேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட முந்தினவனுடைய கால் எலும்புகளையும் மற்றவனுடைய கால் எலும்புகளையும் முறித்தார்கள்.

௩௩ அவர்கள் இயேசுவினிடத்தில் சேர்ந்தபொழுது அவர் மரித்ததைக் கண்டு, அவருடைய கால் எலும்புகளை முறிக்கவில்லை.

௩௪ போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினால் அவருடைய விலாவில் குத்தினான்; [6]உடனே இரத்தமும் சலமும் புறப்பட்டன.

௩௫ ¶ அதைக் கண்டவன் அதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறான்; அவனுடைய சாட்சி மெய்யாய் இருக்கின்றது; நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.

௩௬ அவருடைய [7]எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இவை நடந்தன.

௩௭ அல்லாமலும் [8]தாங்கள் குத்தினவரைப் பார்ப்பார்களென்றும் வேறு வேதவாக்கியம் சொல்லுகின்றது.

௩௮ ¶ [9]அதற்குப்பின்பு அறிமத்திய ஊரானுமாய், இயேசுவானவருக்குச் சீஷனாயிருந்தும் [10]யூதர்களுக்குப் பயப்பட்டதினாலே அதை மறைத்தவனுமாயிருந்த யோசேப்பென்பவன் இயேசுவினுடைய சரீரத்தை எடுத்துக்கொள்ளும்படிக்குப் பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் போய், இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டான்.

௩௯ [11]ஆரம்பத்திலே ஓர் இராத்திரியில் இயேசுவினிடத்திற்குப் போயிருந்த நிக்கோதேமு என்பவனும் சேர்ந்து, வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்த ஏறக்குறைய நூறுராத்தல் பரிமளத்தைக் கொண்டுவந்தான்.

௪௰ அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு, [12]யூதர்கள் சவங்களில் சுகந்தவருக்கமிடுகிற வழக்கத்தின்படி, அதைச் சுகந்தவருக்கங்களுடனேகூடச் சேலைகளில் கட்டினார்கள்.

௪௧ மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்திலே ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்திலே ஒருக்காலும் ஒருவரும் வைக்கப்பட்டிராத புதிய கல்லறையும் இருந்தது.

௪௨ [13]யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும் அந்தக் கல்லறை சமீபமானபடியினாலும் இயேசுவானவரை [14]அவ்விடத்திலே வைத்தார்கள்.

இ. பி. ௩௩.

1 சங். ௬௯. ௨௧.
2 மத். ௨௭. ௪௮.
3 யோவா. ௰௭. ௪.
4 ௪௨. வச. மாற். ௰௫. ௪௨.
5 ௫ மோ. ௨௧. ௨௩.
6 ௧ யோ. ௫. ௬, ௮.
7 ௨ மோ. ௰௨. ௪௬. ௪ மோ. ௯. ௰௨. சங். ௩௪. ௨௰.
8 சங். ௨௨. ௰௬, ௰௭. சகரி. ௰௨. ௰. வெளி. ௧. ௭.
9 மத். ௨௭. ௫௭. மாற். ௰௫. ௪௨. லூக். ௨௩. ௫௰.
10 யோவா. ௯. ௨௨. ௰௨. ௪௨.
11 யோவா. ௩. ௧, ௨. ௭. ௫௰.
12 அப். ௫. ௬.
13 ௩௧. வச.
14 ஏசா. ௫௩. ௯.

௨௰. அதிகாரம்.

க. மரியாளும், ௩. பேதுருவும், யோவானும், அவர் உயிர்த்தெழுந்ததை அறியாமல் கல்லறையினிடத்தில் போனது. ௰௧. இயேசு மகுதலேனா மரியாளுக்கும், ௰௯ தம்முடைய சீஷர்களுக்கும் காட்சியானது. ௨௪ தோமாவின அவநம்பிக்கையையும் நல்லறிக்கையையுங்குறித்துச் சொல்லியது. ௩௰ வேதஎழுத்துகள் இரட்சணியத்துக்குப் போதுமானவைகளென்பது.

[1]பின்பு வாரத்தின் முதலாம்கிழமை காலையிலே இருட்டிருக்கையில், மகுதலேனாளாகிய மரியாள் கல்லறையினிடத்திற்குப் போய், அதில் இருந்த கல்லை எடுத்துப் போட்டதைக் கண்டாள்.

௨ ஆதலால் அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் [2]இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய், கல்லறையிலிருந்த கர்த்தரை எடுத்துக்கொண்டார்கள்; அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்.

௩ [3]அப்பொழுது பேதுருவும், அந்த மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள்.

௪ பேதுருவிலும் அந்த மற்றச் சீஷன் அதிக துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில்சேர்ந்து,

௫ குனிந்து நின்று அதற்குள்ளே பார்க்கையில், [4]சேலைகள் வைத்திருக்கக் கண்டான்.

௬ அவன் உள்ளே போகவில்லை; சீமோன்பேதுரு அவனுக்குப் பின்சென்று போய், கல்லறைக்குள்ளே பிரவேசித்து,

௭ [5]சேலைகள் வைத்திருக்கிறதையும், அவருடைய தலையைச் சுற்றியிருந்த சேலை மற்றச் சேலைகளுடனே வையாமல் தனியாய் ஓரிடத்திலே சுருட்டிவைத்திருக்கிறதையும் கண்டான்.

௮ அப்பொழுது முந்திக் கல்லறையினிடத்திற்குப் போன மற்றச் சீஷனும் உள்ளே பிரவேசித்துக் கண்டு நம்பினான்.

௯ [6]அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் அதுவரைக்கும் அறிந்துகொள்ளாதிருந்தார்கள்.

௰ பின்பு அந்தச் சீஷர் தங்களுடைய இடத்திற்குத் திரும்பினார்கள்.

௰௧ ¶ [7]மரியாள் கல்லறையின் அருகான வெளியிலே அழுதுகொண்டு நின்றாள்; அப்படி அழுதுகொள்ளுகையில், அவள் கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்து,

௰௨ இயேசுவின் சரீரம் வைக்கபபட்டிருந்த இடத்திலே வெண்மையான உடையுள்ளவர்களாய், தலைமாட்டிலே ஒருவனும் கால்மாட்டிலே ஒருவனுமாக இரண்டு தூதர்கள் உளுக்காந்திருக்கிறதைக் கண்டான்.

௰௩ அவர்கள் அவளை நோக்கி, ஸ்திரியே, என்னத்தினாலே அழுகிறாய் என்றார்கள்; அதற்கு அவள் சொன்னது: என் கர்த்தாவை எடுத்துக்கொண்டு போனார்கள்; அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை; (அதினாலே அழுகிறேன்) என்று சொல்லிப பின்னாகத் திரும்புகையில், [8]இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டாள்.

௰௪ [9]அவள் அவரை இயேசு என்று அறியவில்லை; அப்பொழுது இயேசுவானவர் அவளை நோக்கி,

௰௫ ஸ்திரியே, என்னத்தினாலே அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய் என்றார்; அவள் அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி அவருடனே சொன்னது: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனீரானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லவேண்டும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்.

௰௬ அப்பொழுது இயேசுவானவர் மரியாளே என்று அவளுடனே சொன்னார்; உடனே அவள் திரும்பிக்கொண்டு, இரபூனி என்

இ. பி. ௩௩.

1 மத். ௨௮. ௧. மாற். ௰௬. ௧. லூக். ௨௪. ௧.
2 யோவா. ௰௩. ௨௩. ௰௯ ௨௬ ௨௧ ௭, ௨௰, ௨௪.
3 லூக் ௨௪. ௰௨.
4 யோவா. ௰௯. ௪௰.
5 யோவா. ௰௧ ௪௪.
6 சங் ௰௬. ௰ அப ௨. ௨௭- ௩௧ ௰௩. ௩௪, ௩௫.
7 மாற். ௰௬. ௯
8 மத் ௨௮ ௯ மாற் ௰௬ ௯
9 லூக் ௨௪ ௰௬, ௩௧ யோவா ௨௧ ௪

று அவருடனே சொன்னாள்; இரபூனி என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

௰௭ இயேசுவானவர் சொன்னது: நீ என்னைத் தொடாதிரு, இன்னம் என் பிதாவினிடத்திற்கு நான் [1]எழுந்துபோகவில்லையே, இப்பொழுது நீ என் சகோதரரிடத்திற்குப் போய், [2]என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் [3]என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் எழுந்துபோகிறேன் என்று அவர்களுடனே சொல் என்றார்.

௰௮ [4]மகதல ஊராளாகிய மரியாள் போய்த் தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

௰௯ ¶ [5]வாரத்தின் முதல்கிழமையாகிய அன்றைத்தினம் அஸ்தமனகாலத்திலே சீஷர்கள் யூதர்களுக்குப் பயப்பட்டதினாலே கதவுகளைப் பூட்டிக் கூடியிருக்கையில், இயேசுவானவர் தோன்றி நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக என்று சொல்லி,

௨௰ தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்; [6]சீஷர் கர்த்தரைக் கண்டபொழுது சந்தோஷப்பட்டார்கள்.

௨௧ பின்பு இயேசுவானவர் மறுபடியும் அவர்களுடனே சொன்னது: உங்களுக்குச் சமாதான சவுக்கியம் உண்டாவதாக; [7]பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,

௨௨ அவர்கள்மேல் ஊதிப் பின்பு சொன்னதாவது: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

௨௩ [8]எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாமல் இருப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படாமல் இருக்கும் என்றார்.

௨௪ ¶ அப்பொழுது இயேசுவானவர் வந்திருந்த காலத்திலே, [9]பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா அவர்களுடனேகூட இருக்கவில்லை.

௨௫ ஆதலால் மற்றச் சீஷர் அவனை நோக்கி, நாங்கள் கர்த்தரைக் கண்டோம் என்றார்கள்; அதற்கு அவன் சொன்னது: அவருடைய கைகளில் ஆணிகள் அடித்திருந்த தழும்பை நான் கண்டு, அந்தத் தழும்பிலே என் விரலை வைத்து, அவருடைய விலாவிலே என் கையை வையாவிட்டால் விசுவாசிக்கமாட்டேன் என்றான்.

௨௬ ¶ எட்டுநாளுக்குப் பின்பு அவருடைய சீஷர் மறுபடியும் அறைக்குள்ளே இருந்தார்கள், தோமாவும் அவர்களுக்குள்ளே இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தன; அப்பொழுது இயேசுவானவர் தோன்றி நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக என்று சொல்லி,

௨௭ பின்பு தோமாவை நோக்கி, உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், மேலும் [10]உன் கையை நீட்டி என் விலாவிலே வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இருப்பாயாக என்றார்.

௨௮ அதற்கு மாறுத்தரமாகத் தோமா அவரை நோக்கி, என் கர்த்தாவே, என் தேவனே என்றான்.

௨௯ இயேசுவானவர் சொன்னது: தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்தாய்; [11]காணாமலிருந்து விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

௩௰ ¶ அன்றியும் [12]இந்தப் புத்தகத்தில் எழுதப்படாத அநேக அற்புதங்களையும் இயேசுவானவர் தம்முடைய சீஷருக்கு முன்பாகச் செய்தார்.

௩௧ இவைகள் [13]இயேசுவானவர்

கி. பி. ௩௩.

[1] சங. ௨௨. ௨௨ மத். ௨௮. ௰ ௨ரோ ௮. ௨௯. எபி ௨. ௰௧.
[2] யோவா. ௰௬. ௨௮
[3] எபே ௧. ௰௭
[4] மத். ௨௮. ௰ லூக். ௨௪ ௰
[5] மாற். ௰௬ ௰௪ லூக் ௨௪ ௩௬. ௧ கொரி. ௰௫. ௫
[6] யோவா. ௰௬ ௨௨
[7] மத். ௨௮. ௰௯ யோவா ௰௭ ௰௮, ௰௯. ௨ தீமோ ௨. ௨ எபி ௩ ௧
[8] மத் ௰௬. ௰௯ ௰௮ ௰௮
[9] யோவா. ௰௧ ௰௬.
[10] ௧ யோ. ௧. ௧.
[11] ௨ கொரி ௫. ௭. ௧ பே ௧ ௮
[12] யோவா. ௨௧ ௨௫
[13] லூக். ௧ ௪.

பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிப்பதற்கும், [1]விசுவாசித்தபின்பு அவருடைய நாமத்தினாலே சீவனை அடைவதற்கும் ஏதுவாக எழுதப்பட்டிருக்கின்றன.

௨௧. அதிகாரம்.

௧ கிறிஸ்து மறுபடியும் சீஷர்களுக்குத் தரிசனையாகி, அவர்களுக்குப் பிடிபட்ட ஏராளமான மீன்களினாலே அவரை அவர்கள் இன்னாரென்று அறிந்துகொண்டது. ௰௨ அவர் அவர்களோடே அசனம்பண்ணி, ௰௫ பேதுருவைத் தம்முடைய ஆட்டுக்குட்டிகளையும் ஆடுகளையும் மேய்க்கும்படி உறுதியாய்க் கற்பித்து, ௰௮ அவனுடைய மரணத்தின விவரத்தை அவனுக்கு முன்னறிவித்து, ௨௨ யோவானைக்குறித்துத் தம்மைக் கேட்ட கேள்விக்கு உத்தரவு சொன்னது ௨௫ முடிவுரை

அதன்பின்பு இயேசுவானவர் திபேரியாவின் கடல்கரையிலே சீஷருக்குத் தம்மை மறுபடியும் காண்பித்தார்; அங்கே காண்பித்த பிரகாரமாவது:

௨ சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், [2]கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரானாகிய நாத்தான்வேலும், [3]செபெதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறிரண்டுபேரும் கூடியிருக்கும் காலத்திலே, சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி, நான் மீன்பிடிக்கப்போகிறேன் என்றான்; அவர்கள், நாங்களும் உன்னுடனேகூட வருகிறோம் என்றார்கள்.

௩ உடனே அவர்கள் புறப்பட்டுப்போய்ப் படவேறினார்கள்; அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

௪ ¶ விடியற்காலமானபொழுது இயேசுவானவர் கரையிலே நின்றார்; [4]அவரை இயேசுவென்று சீஷர் அறியாமலிருந்தார்கள்.

௫ [5]அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, பிள்ளைகளே,* போசனம்பண்ணுகிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார்; அதற்கு அவர்கள் ஒன்றும் இல்லை என்றார்கள்.

௬ அவர் சொன்னது: [6]நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடவேண்டும், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார்; அந்தப்படி அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினாலே அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

௭ ஆதலால் [7]இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவை நோக்கி, அவர் கர்த்தர் என்றான்; அவர் கர்த்தரென்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனானபடியினாலே சட்டையைக் கட்டிக்கொண்டு, கடலிலே குதித்தான்.

௮ மற்றச் சீஷர் ஏறக்குறைய இருநூறுமுழமமாத்திரம் கரைக்குத் தூரத்திலே இருந்தபடியினாலே, மீன்களுடனே வலையை இழுத்துக்கொண்டு, படவினோடே (கரையைச்) சேர்ந்தார்கள்.

௯ அவர்கள் கரையில் சேர்ந்து இறங்கினபொழுது, அக்கினிக்கரிகள் இருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.

௰ பின்பு இயேசுவானவர்சொன்னது: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சில கொண்டுவாருங்கள் என்றார்.

௰௧ அப்பொழுது சீமோன்பேதுரு படவுக்குத் திரும்பி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இவ்வளவு இருந்தும் வலை கிழியவில்லை.

௰௨ ¶ பின்பு இயேசுவானவர் அவர்களை அழைத்து, [8]போசனம் பண்ண வாருங்கள் என்றார்; அப்பொழுது அவரைக் கர்த்தர் என்று சீஷர் அறிந்தபடியினாலே, அவர்களில் ஒருவனாயினும் நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.

௰௩ அன்றியும் இயேசுவானவர் சேர்ந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்துஅவர்களுக்குப்பரிமாறினார்.

௰௪ இயேசுவானவர் மரித்தோரி

கி. பி. ௩௩.

[1] யோவா. ௩. ௰௫. ௰௬: ௫. ௨௪ ௧ யோ ௫. ௧௩
[2] யோவா. ௧ ௪௫
[3] மத் ௪ ௨௧.
[4] யோவா. ௨௰ ௰௪.
[5] லூக் ௨௪ ௪௧
* அல்லது ஐயன்மாரே.
[6] லூக் ௫ ௪, ௬, ௭
[7] யோவா ௰௩ ௨௩. ௨௰ ௨
[8] அப ௰. ௪௧

விருந்து எழுந்தபின்பு, [1]தம்முடைய சீஷருக்குக் காட்டின தரிசனைகளில் இது மூன்றாவது.

௰௫ ¶ அவர்கள் போசனம்பண்ணினபின்பு, இயேசுவானவர் சீமோன்பேதுருவை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னிடத்தில் அதிகமாய் அன்புகூருகிறாயா என்றார்; அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்பாயிருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவர் சொன்னது: [2]என் ஆட்டுக்குட்டிகளைப் போஷிப்பாயாக என்றார்.

௰௬ பின்பு அவர் இரண்டாந்தரம் அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்றார்; அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்புகூருகிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவர் சொன்னது: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

௰௭ பின்பு அவர் மூன்றாந்தரம் அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்றார்; என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னுடனே சொன்னபடியினாலே பேதுரு துக்கமடைந்து, ஆண்டவரே, [3]நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மிடத்தில் அன்புகூருகிறதையும் அறிந்திருக்கிறீர் என்றான்; இயேசுவானவர் சொன்னது: என் ஆடுகளைப் போஷிப்பாயாக.

௰௮ அல்லாமலும் [4]நீ இளவயதுள்ளவனாயிருக்கையில், நீயே உன் அரையில் கச்சைகட்டிக்கொண்டு, உன் இஷ்டப்படிக்கு நடந்து திரிந்தாய், நீ முதிர்ந்த வயதுள்ளவனாயிருக்கும்பொழுது உன் கைகளை நீட்டுவாய்; மேலும் வேறொருவன் உன் அரையில் கச்சைகட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்திற்குக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰௯ அவன் பராபரனுக்குப் புகழுண்டாகத்தக்கதாக [5]அடையும் மரணவகையைக்குறித்து இப்படிச்சொன்னார்; அப்படிச் சொன்னபின்பு, எனக்குப் பின்சென்றுவா என்று அவனுடனே சொன்னார்.

௨௰ ¶ அந்தப்படி பேதுரு (பின்செல்லுகையில்) திரும்பிப்பார்த்து, [6]இயேசுவுக்கு அன்பாயும் இராப்போசனம்பண்ணுகையில் அவருடைய மார்பிலே சாய்ந்து ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுபபவன் யாவனென்று கேட்டும் இருந்த சீஷனும் பின்செல்லுகிறதைக் கண்டு,

௨௧ இயேசுவானவரை நோக்கி, ஆண்டவரே, இவன் என்னமாய் இருப்பான் என்றான்.

௨௨ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]நான் வருமளவும் இவன் இருக்க எனக்குச் சித்தமானால், அதினாலே உனக்கென்ன, நீ எனக்குப் பினசெல் என்றார்.

௨௩ அதினாலே அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே உண்டாயிற்று; இயேசுவானவர் அவன் மரிப்பதில்லைஎன்றுசொல்லாமல், நான் வருமளவும் அவன் இருக்க எனக்குச் சித்தமானால் அதினாலே உனக்கென்ன என்று சொன்னார்.

௨௪ ¶ அந்தச் சீஷனே இந்தச் சங்கதிகளைக்குறித்துச்சாட்சிகொடுத்து, இவைகளை எழுதியிருக்கிறான்; [8]அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்; [9]அன்றியும் இயேசுவானவர் செய்த மற்ற அநேக காரியங்களும் உண்டு. [10]அவைகள் ஒவ்வொன்றாய் எழுதப்பட்டால் அதினாலே உண்டாகும் புத்தகங்கள் வைக்கிறதற்கு உலகம் போதாதென்று எண்ணுகிறேன்.—ஆமென்.

கி. பி. ௩௩.

[1] யோவா. ௨௰. ௰௯, ௨௬.
[2] அப. ௨௰. ௨௮ எபி. ௰௩. ௨௰, ௧பே ௨. ௨௫. ௫. ௨, ௪.
[3] யோவா. ௨ ௨௪, ௨௫. ௰௬. ௩௰.
[4] யோவா. ௰௩ ௩௬. அப. ௰௨. ௩, ௪
[5] ௨ பே ௧ ௰௪
[6] யோவா ௰௩ ௨௩, ௨௫ ௨௰. ௨.
[7] மத். ௰௬ ௨௭, ௨௮: ௨௫. ௩௧ ௧ கொரி ௪ ௫ ௰௧ ௨௬ வெளி ௨. ௨௫. ௩ ௰௧ ௨௨ ௭, ௨௰.
[8] யோவா ௰௯. ௩௫ ௩ யோ. ௰௨.
[9] யோவா. ௨௰. ௩௰
[10] ஆமோ. ௭ ௰

4902 (7895)

ACTS.

அப்போஸ்தலருடைய

நடபடிகள்.

௧. அதிகாரம்.

௧ கிறிஸ்து பரமண்டலம் போவதை அப்போஸ்தலர் காணும்பொருட்டு ஒலிவமலையண்டையில் அவர்களைக் கூட்டி, உலக சாட்சிகளாயிருக்கும்படி சில நாளுக்குப்பின்பு பரிசுத்தஆவியை அனுப்புவோமென்று வாக்குத்தத்தம்பண்ணி, எருசலேமிலே அவர்கள் அந்த ஆவியின் வருகைக்குக் காத்திருக்கும்படி கற்பித்தது. ௯. அவர் பரமண்டலத்துக்கு ஏறினபின்பு இரண்டு தூதர்கள் அவருடைய இரண்டாம் வருகைக்கு எதிர்பார்த்திருக்க அவர்களுக்குப் புத்திசொன்னது ௰௨. அவர்கள் எருசலேமுக்குப் போய் யூதாவுக்குப் பதிலாக மத்தியாவை அப்போஸ்தலனாகத் தெரிந்துகொண்டது.

[1]தேயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட [2]அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்டபின்பு,

௨ [3]அவர் உயர்த்தப்பட்ட நாள்வரைக்கும் செய்தும் உபதேசித்தும் இருந்த யாவையுங்குறித்து முதலாம் பிரபந்தத்தைப் பண்ணினேன்.

௩ அவர் பாடுபட்டபின்பு [4]நாற்பதுநாள் அளவும் அவர்களுக்குத் தரிசனையாகி, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்து அவர்களுடனே பேசிக்கொண்டு, இவ்விதமாய் அவர்களுக்கு அநேக திருட்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவர் என்று காண்பித்தார்.

௪ [5]அன்றியும் அவர் அவர்களைக் கூடிவரச் செய்து,* அவர்களை நோக்கி, [6]யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; [7]நீங்கள் சிலநாள்களுக்குப்பின்பு பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள்.

௫ [8]ஆகையால் நீங்கள் எருசலேம் நகரத்தைவிட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.

௬ ¶ அப்பொழுது [9]கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி, ஆண்டவரே, [10]இராச்சியபரிபாலனத்தை இஸ்ரவேலருக்கு நீர் இக்காலத்திலா திரும்பக்கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

௭ அதற்கு அவர் சொன்னது: [11]பிதாவானவர் தம்முடைய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களையாகிலும் வேளைகளையாகிலும் அறிகிறது உங்களுக்குத் தகாது.

௮ [12]பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்பொழுது,† [13]நீங்கள் பெலனடைந்து, [14]எருசலேமிலும் யூதேயா சமாரியா தேசங்களில் எங்கும், பூமியின் எல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்.

கி. பி. ௩௩.

1 லூக் ௧ ௧
2 மத் ௨௮ ௰௯ மாற் ௰௬ ௰௫. யோவா ௨௰ ௨௧ அப் ௰ ௪௧, ௪௨.
3 மாற் ௰௬ ௰௪ லூக் ௯ ௩௬. ௨௪ ௩௬. ௯ வச. ௧ தீமோ. ௩. ௰௬
4 மாற் ௰௬ ௰௪. லூக் ௨௪ ௪௯ யோவா ௨௰. ௰௬, ௨௬ ௨௬ ௧, ௰௪ ௧ கொரி. ௰௫ ௫
5 லூக் ௨௪. ௪௫, ௪௯
* அல்லது அவர்களோடு புசித்து
6 மத் ௧ ௰௧ அப ௰௧ ௰௯. ௰௯ ௪.
7 யோவே ௩. ௰௮ அப ௨௪· ௰௧ ௰௫
8 லூக் ௨௪ ௪௯. யோவா. ௰௪ ௰௬, ௨௬, ௨௭. ௰௫ ௨௬ ௰௬, ௭ அப. ௨ ௩௩.
9 மத் ௨௪. ௬
10 ஏசா ௧ ௨௯ தானி ௭ ௨௭ ஆமோ ௯ ௰௧.
11 மத் ௨௪ ௩௯ மாற் ௰௬ ௩௨ ௧ தெச. ௫. ௧

---

12 லூக் ௨௪ ௫௨. † பரிசுத்த ஆவியின வல்லமை வருகிறதால் —13 அப். ௨. ௧, ௪ —14 லூக். ௨௪ ௪௮. யோவா. ௰௯ ௨௭. ௨௨ ௪௪. அப் ௨. ௩௨.

௯ ¶ [1]இவைகளைச் சொன்னபின்பு, [2]அவர் அவர்களுடைய கண்களுக்குமுன்பாக உயர்த்தப்பட்டார்; அவர்கள் அவரைக் காணாதபடிக்கு ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டுபோயிற்று.

௰ அவர் போனபொழுது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்திருக்கையில், [3]வெண்மையான வஸ்திரமுள்ள மனிதர் இரண்டுபேர் அவர்களின் அருகே நின்று,

௰௧ கலிலேயராகிய மனிதரே, [4]நீங்கள் என்னத்துக்காக வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களைவிட்டு வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த [5]இயேசுவானவர் உங்கள் கண்களுக்குமுன்பாக வானத்துக்கு எழுந்துபோனவிதமாய்த் திரும்பிவருவார் என்றார்கள்.

௰௨ ¶ [6]அப்பொழுது அவர்கள் ஒலீவ என்னப்பட்ட மலையைவிட்டு எருசலேம் நகரத்துக்குத் திரும்பினார்கள்; அந்த மலை ஒரு ஓய்வுநாள் பிரயாணதூரமாய் எருசலேமுக்குச் சமீபமாயிருக்கின்றது.

௰௩ அவர்கள் அங்கே போனபொழுது, [7]மேல்வீட்டில் ஏறினார்கள்; [8]அங்கே பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பருத்தோலோமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், [9]செலோத்தே என்னப்பட்ட சீமோனும், [10]யாக்கோபின் சகோதரனாகிய • யூதாவும் தங்கியிருந்தார்கள்.

௰௪ [11] இவர்கள் எல்லாரும், [12]இயேசுவின் தாயாகிய மரியாள் முதலான ஸ்திரிகளோடும் [13]அவருடைய சகோதரரோடும்கூட ஒருமனப்பட்டு, செபத்திலேயும் வேண்டுதலிலேயும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

௰௫ ¶ அந்நாள்களில் ஒருநாள், [14]ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடிவந்திருந்தபொழுது, பேதுரு என்பவன் சீஷருக்குள்ளே எழுந்திருந்து சொன்னதாவது:

௰௬ சகோதரர்களே, [15] இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின [16]யூதாவைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினாலே முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேறவேண்டியதாய் இருந்தது.

௰௭ [17] அவன் நமக்குள்ளே ஒருவனாக எண்ணப்பட்டு, [18]இந்த ஊழியத்தில் பங்கைப் பெற்றவனாய் இருந்தானே.

௰௮ [19]அன்றியும் அவனே அநியாயமான கூலியினாலே [20]ஒரு நிலத்தைச் சம்பாதித்துக்கொள்ள ஏதுவாயிருந்து, பின்பு தலைகீழாக விழுந்து நடுவாய் வெடிக்கப்பட்டான்; அவனுடைய குடல்களெல்லாம் சரிந்துபோயின.

௰௯ அதை எருசலேமிலுள்ள குடிகள் யாவரும் அறிந்திருக்கிறார்கள்; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்த நிலம் என்று அர்த்தம்கொள்ளுகிற அக்கெல்தாமா என்னப்பட்டிருக்கின்றது.

௨௰ சங்கீத புத்தகத்திலே [21]எப்படி எழுதியிருக்கிறதென்றால், அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பதாக என்றும், [22]அவனுடைய கண்காணிப்பை *வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கின்றது.

௨௧ ஆதலால் கர்த்தராகிய இயேசுவானவர் [23]யோவான் ஞானஸ்நானம்கொடுத்த காலம்முதற்கொண்டு, [24]தாம் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும்,

௨௨ நமக்குள்ளே வருகிறவராயும் போகிறவராயும் இருந்த காலங்களிலே, நம்முடனேகூட இருந்த [25]மனிதர்களில் ஒருவன்•

இ. பி. ௩௩.

1 லூக். ௨௪. ௫௧. யோவா. ௬ ௬௨.
2 ௨ வச
3 மத் ௨௮. ௩ மாற். ௰௬ ௫. லூக் ௨௪ ௪ யோவா ௨௰. ௰௨ அப ௰ ௩, ௩௰
4 அப் ௨, ௭: ௰௩ ௩௧
5 தானி ௭ ௰௩. மத் ௨௪ ௩௰. மாற் ௰௩ ௨௬. லூக் ௨௧ ௨௭. யோவா ௰௪ ௩ ௧ தெச ௧௰ ௪. ௰௬ ௨ தெச ௧ ௰ வெளி ௧ ௭
6 லூக் ௨௪ ௫௨
7 அப ௯. ௩௭, ௨௰ ௮
8 மத் ௰ ௨, ௩, ௪
9 லூக் ௬ ௰௫
10 யூதா. ௧.
11 அப ௨ ௧, ௪௬
12 லூக் ௨௩ ௪௯, ௫௫. ௨௪. ௰
13 மத் ௰௩ ௫௫
14 வெளி ௩ ௪
15 லூக் ௨௨ ௪௭ யோவா ௰௮ ௩
16 சங ௪௧ ௯ யோவா. ௰௩ ௰௮.
17 மத் ௰ ௪. லூக். ௬ ௰௬.
18 ௨௫ வசனம் அப ௰௨ ௨௫ ௨௰ ௨௪: ௨௧. ௰௯
19 மத் ௨௭ ௫, ௭, ௮
20 மத் ௨௬. ௰௫ ௨ பே. ௨ ௰௫
21 சங ௬௯ ௨௫
22 சங ௱௯ ௮
* அல்லது தொழிலை.
23 மாற் ௧. ௧
24 ௯ வச.
25 யோவா. ௰௫ ௨௭. ௮. வச அப ௪. ௩௩

அவர் உயிரோடே எழுந்திருக்கிறதைக்குறித்து நம்முடனேகூடச் சாட்சியாகவேண்டும் என்றான்.

உங ¶ அப்பொழுது அவர்கள் யுஸ்து என்று மறுநாமமுள்ள [1]பருசபா என்னபபட்ட யோசேப்பு, மத்தியா, இவ்விரண்டுபேரையும் தெரிந்தெடுத்துச் செபம்பண்ணினதாவது:

உச [2]எல்லாருடைய இருதயங்களையும் அறிநதிருக்கிற காத்தாவே,

உரு யூதாவானவன் தனக்கேற்ற இடததுக்குப் போகும்படிக்கு அபபோஸ்தல ஊழியத்தின் பங்கைவிட்டு விலகினானே, [3]அந்தபபஙகைப் பெற்றுக்கொள்ளும்படிக்குத் தேவரீர் இவ்விரண்டுபேரில் தெரிந்துகொண்டவன் எவனோ, அவனை எங்களுக்குக் காண்பிபபீராக என்று சொல்லி,

உசா பின்பு அவர்களைக்குறித்துச் சீட்டுகளைப் போட்டார்கள்; சீட்டானது மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே (அபபோஸ்தலனாகச்) சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

உ. அதிகாரம்.

க அப்போஸதலாகள பரிசுத்தஆவியினால் நிரபபபபட்டுப பலபாஷைகளைப பேசினபோது, சிலரால புகழபபட்டுச் சிலரால இகழபபட்டது ௰ச இகழநதவாகளைப பேதுரு கடிநது கொண்டு, அபபோஸதலாகள பரிசுத்தஆவியின பெலததினாலே பேசினாகளெனறும், இயேசு உயிாதெழுநது பாமண்டலததுக்கு ஏறி, பரிசுத்தஆவியை அளித்துப பலவித அற்புதங்களைச் செயது பாாபரனாலே அஙகிகரிக்கபபட்டவரும, அவருடைய ஆதி தீாமானததினபடி சிலுவையில அறையபபட்டவருமான மேசியாவெனறும் காண்பித்து, ஙஎ. குணபபட்ட அநேகரை ஞானஸ்நானமபண்ணினது. சக. குணபபட்டவாகள அநநியோநநிய ஐக்கமாயிருநததையும, அப்போஸதலாகள பல அற்புதஙகள செயததையும, பாாபரன திருச்சபையை நாளுக்குநாள் பெருகச்செயததையும் காட்டியது

[4]பெந்தேகோஸ்தென்னும் நாள் வந்திருக்கையில், [5]அவர்கள் எல்லாரும் அவ்விடத்திலே ஒருமனப்பட்டிருந்தார்கள்.

உ அப்பொழுது சடுதியாய்ப் பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து முழக்கம உண்டாகி, [6]அவர்கள் உளுக்காந்திருந்த வீடு முழுவதையும் நிரபபிற்று.

ங அல்லாமலும் அக்கினியுள்ள நாவுகள்போலப் பிரிக்கப்பட்ட நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் யாவர்மேலும் வநதிருந்தன.

ச அவர்கள் [7]எல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, தங்களுக்கு ஆவியானவர் கொடுத்த திராணியின்படி, [8]வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

ரு ¶ (அக்காலத்திலே) வானத்தின் கீழிருக்கிற சகலவிதமான தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபத்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.

சா அந்தச் சத்தம் உண்டானபொழுது, *திரளான சனங்கள் கூடிவநது, யாவரும் தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதைக் கேட்டபடியினாலே கலக்கம் அடைந்தார்கள்.†

எ எல்லாரும் பிரமித்து ஆச்சரியபபட்டு, ஒருவரை ஒருவர் [9]நோக்கி, பேசுகிற இவர்கள் எல்லாரும் கலிலேயர் அல்லவா?

அ நம்முடைய சென்மபாஷைகளிலே அவர்கள் பேச நாம் யாவரும் கேட்கிறோமே, அது எப்படியாயிற்று?

கூ பருத்தரும், மேதரும், எலாமீத்தரும், மேசோப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பீலியா,

௰ எகிப்து என்னும் தேசங்களிலேயும் கிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற இலீபியாவின் திசைகளிலேயும் குடியிருப்பவர்களும், இங்கே சஞ்சரிக்கிற உரோமைப்பட்டணத்தாரும்,

௰க யூதரும் யூதமார்க்கத்தில் சேர்க்கப்பட்டவர்களும், கிரேத்

கி.. பி. ௩௩.

[1] அப. ௰ரு. உஉ

[2] க சாமு ௰சா எ க நாளா உஅ கூ உகூ. ௰எ எரே ௰எ உ௰ ௰எ ௰ அப ௰ரு அ வெளி உ. உங

[3] ௱கூ. அ

[4] ங மோ உங ௰ரு ரு மோ ௰சா கூ அப உ௰ ௰சா

[5] அப. க ௰ச

[6] அப ச ஙக.

[7] அப க ரு

[8] மாற் ௰சா ௰எ அப ௰. சசா ௰கூ. சா க கொரி ௰உ ௰, உஅ, ஙம ௰ச க ௰ச உ

* அல்லது இது எங்கும் பிரசித்தமானபோது

† அல்லது பிரமித்தார்கள்

[9] அப. க ௰க.

தைத் தீவாரும், அரபி தேசத்தாருமாகிய நம்முடைய பாஷைகளிலே அவர்கள் பராபரனுடைய மகிமைகளைப் பேசிக்கொள்ளக் கேட்கிறோமே என்றார்கள்.

௰௨ பின்னும் எல்லாரும் பிரமித்து, மிகவும் சந்தேகப்பட்டு, இதென்ன வரம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௰௩ மற்றப்பேர் மதுபானத்தினாலே நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம்பண்ணினார்கள்.

௰௪ ¶ அப்பொழுது பேதுரு என்பவன் பதினொருவரோடும் கூட நின்று, உரத்த சத்தத்தோடே அவர்களுடனே சொன்னதாவது: யூதரும், எருசலேமில் குடியிருக்கிற மற்றவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பீர்களாக.

௰௫ என்னவெனில், நீங்கள் நினைக்கிறதுபோல இவர்கள் வெறிகொண்டவர்கள் அல்ல, [1]பொழுதுவிடிந்து மூன்றாம்மணி வேளையாயிருக்கிறதே.

௰௬ தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடி இதுவே நடந்துவருகின்றது.

௰௭ [2](அவரைக்கொண்டு) பராபரன் உரைத்ததாவது: [3]கடைசிநாள்களில் நான் சகல மனிதர் மேலும் என்னுடைய ஆவியை ஊற்றுவேன்; [4]அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனைகளைக் காண்பார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களை அடைவார்கள்.

௰௮ என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும், அந்நாள்களில் என்னுடைய ஆவியை ஊற்றுவேன்; [5]அப்பொழுது தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.

௰௯ [6]அல்லாமலும் கர்த்தருடைய பெருமையும் பிரகாசமுமான நாள் வருமுன்னே, உயர்ந்த வானத்தில் அற்புதங்களையும் தாழ்ந்த பூமியில் அதிசயங்களையும் உண்டாக்குவேன்.

௨௰ இரத்தமும், அக்கினியும், புகைக்காடும் உண்டாகும்படி செய்வேன்; [7]சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாற்றப்படும்.

௨௰௧ [8]அப்பொழுது பராபரனுடைய நாமத்தைத் தொழுது கூப்பிடுபவன் எவனோ, அவன் இரட்சிக்கப்படுவான் என்பதே.

௨௰௨ ¶ இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்களே அறிந்திருக்கிறபடி நாசரேத்தூராராகிய இயேசுவானவராலே பராபரன் உங்களுக்குள்ளே [9]பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

௨௰௩ அப்படியிருந்தும் [10]பராபரன் நியமித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவர் முன் அறிந்ததின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, [11]அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவைமரத்தில் அறைந்து கொலைசெய்தீர்கள்.

௨௰௪ அவரைக்குறித்துத் தாவீது சொல்லுகிறதாவது: [12]நான் அசைக்கப்படாதபடிக்கு, பராபரன் என் வலதுபாரிசத்திலே இருக்கிறபடியினாலே, நான் எப்பொழுதும் அவரை எனக்குமுன்பாக வைத்துக்கொள்ளுகிறேன்.

௨௰௫ அதினாலே என் இருதயம் மகிழ்ச்சியாய் இருக்கின்றது, என் நாவு சந்தோஷமாய்ப் பேசுகின்றது.

௨௰௬ மேலும் நீர் என் ஆத்துமாவை மரித்தோர் ஸ்தலத்திலே விட

கி. பி. ௩௩.

1 ௧ தெச ௫ ௭
2 ஏசா. ௪௪ ௩ எசே ௰௧ ௰௯ ௩௬. ௨௭ யோவே ௨. ௨௮, ௨௯, சகரி. ௰௨ ௰ யோவா. ௭ ௩௮
3 அப ௰ ௪௫
4 அப ௨௧ ௯
5 அப ௨௧. ௪, ௯, ௰. ௧ கொரி ௰௨ ௰, ௨௮ ௰௪. ௧
6 யோவே. ௨ ௩௰, ௩௧
7 மத ௨௪. ௨௯. மாற ௰௩ ௨௪. லூக் ௨௧. ௨௫
8 உரோ. ௰ ௰௩.
9 யோவா ௩ ௨ ௰௪ ௰, ௰௧. அப ௰ ௩௮ எபி ௨. ௪
10 மத் ௨௬ ௨௪ லூக் ௨௨ ௨௨ ௨௪ ௪௪ அப. ௩ ௰௮ ௪ ௨௮
11 அப. ௫ ௩௰.
12 சங ௰௬. ௮.

வும், உம்முடைய பரிசுத்தவான் அழிவைக்காணும்படி செய்யவும் மாட்டீர்.

உஎ ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர், உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தாலே நிரப்புவீர்; ஆதலால், என்னுடைய சரீரமும் நம்பிக்கையோடே படுத்துக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்

உஅ ஆனபடியினாலே மரணமானது இயேசுவை அடக்கிக்கொள்ளக்கூடாதிருக்க, பராபரன் [1]அதின் உபாதிகளின் கட்டவிழ்த்து, அவரை எழுப்பினார்.

உகூ ¶ சகோதரர்களே, [2]நமது கோத்திரத்தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தயிரியமாய்ப் பேசுகிறேன்* கேட்பீர்களாக; அவர் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டார்; அவருடைய சமாதி இந்நாள்வரைக்கும் நம்மிடத்தில் இருக்கின்றது.

ஈய ஆதலால், [3]அவர் தீர்க்கதரிசியாயிருந்து உன் ஆசனத்தில் வீற்றிருக்கும்படிக்கு, சரீர சம்பந்தமாய் உன்னுடைய சந்ததியில் கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று பராபரன் தனக்கு ஆணைகொடுத்ததை அறிந்து,

ஈக [4]அவர் கிறிஸ்துவினுடைய ஆத்துமா மரித்தோர் ஸ்தலத்திலே விடப்படுவதில்லை என்றும், அவருடைய சரீரம் அழிவை அடைவதில்லை என்றும் முன் அறிந்து, அவர் உயிரோடெழுந்திருப்பதைக் குறித்துப் பேசினார்.

ஈஉ [5]இந்த இயேசுவையே பராபரன் எழுப்பினார்; [6]அதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்; மேலும் தாவீது பரமண்டலத்திற்கு எழுந்துபோகவில்லை.

ஈஈ அதுவுமல்லாமல், அவர் சொன்னது: உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதப்படியாக்கிப்போடுமளவும்,

ஈச [7]எனது வலதுபாரிசத்திலே உளுக்காரும் என்று பராபரன் என்ஆண்டவருடனே சொன்னார் என்றான்.

ஈரு ஆதலால் [8]இயேசுவானவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலே உயர்த்தப்பட்டபின்பு, [9]பரிசுத்த ஆவியைக்குறித்துப் பிதாவினாலே வாக்குத்தத்தத்தைப் பெற்றபடியால், [10]நீங்கள் இப்பொழுது கண்டு கேட்கிறபடி அதை ஊற்றினார்.

ஈசு ஆனபடியினாலே நீங்கள் சிலுவைமரத்தில் அறைந்த அந்த [11]இயேசுவையே பராபரன் ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.

ஈஎ ¶ அதை அவர்கள் கேட்டபொழுது [12]இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகிப் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் நோக்கி, சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

ஈஅ ¶ அதற்குப் பேதுரு சொன்னதாவது: [13]உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு நீங்கள் மனந்திரும்பி, ஒருவன் ஒருவனாய் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியாகிய ஈவையும் பெறுவீர்கள்.

ஈகூ (அதைக்குறித்து) வாக்குத்தத்தமானது [14]உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் [15]நம்முடைய தேவனாகிய பராபரன் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிற்றே என்று சொல்லி,

சய மற்ற அநேக வார்த்தைகளாலும் (அதைக்குறித்துச்) சாட்சியிட்டு, தாறுமாறுள்ள இந்தச் சந்ததியைவிட்டு இரட்சிக்கப்படுவீர்களாக என்று புத்திசொன்னான்.

சக ¶ அந்தப்படியே அவனுடைய வார்த்தையைச் சந்தோஷ

கி. பி. ஙங.

1 கஉ. ஙச அப கூ மஇ சமூ'ம. சம மக கம,கச மஎ கக உரோ. ச உச அ மக க கொரி. சு மச மஇ மஇ உ கொரி ச மச கலா க கஎ பே க. உம கொலோ உ மஉ க தெச க ம எபி மக உம க பே க உக

2 க இரா உ ம அப மக கக

* அல்லது நான பேசட்டும.

3 உ சாமு எ மஉ, மக சஉ ஙகஉ மக தூக் க ஙஉ, கூக உரோ க க உ தீமோ உ அ

4 சஉ மகூ ம அப மக கஇ

5 உச ஙச

6 அப க அ

7 சஉ ஙம கமத் உஉ சச க கொரி மஇ உஇ எபே க உம. எபி கமக

8 அப இ கக பிலி உ கூ எபி ம மஉ.

9 யோவா மச. உகூ மஇ உகூ மகூ எ,மக அப க ச

10 அப ம சஇ எபே ச அ

11 அப இ கக

12 சகரி மஉ ம தூக் கம அப கூ கூ மகூ கம

13 தூக் உச சஎ அப ங மகூ

14 யோவே உ. உஅ அப. க உஇ.

15 அப ம சஇ மக மஇ, மஅ மச உஎ மஇ க,அ,மச எபே. உ, மக, மஎ

மாய் ஏற்றுக்கொண்டவர்கள் எவர்களோ, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அந்நாளிலே ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

௪௨ [1]அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலேயும், ஒருவரோடொருவர் ஐக்கப்படுதலிலேயும், அப்பம்பிட்குதலிலேயும், செபம்பண்ணுதலிலேயும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

௪௩ ஆத்துமாக்கள் யாவுக்கும் பயபத்தி உண்டாயிற்று; அன்றியும் [2]அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அதிசயங்களும் செய்யப்பட்டன.

௪௪ எல்லா விசுவாசிகளும் ஒருமித்திருந்து, [3]சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்து,

௪௫ ஆஸ்திகளையும் உடைமைகளையும் விற்று, [4]அவைகளில் ஒவ்வொருவனுக்கு வேண்டுவது எவ்வளவோ, அவ்வளவு பகிர்ந்து கொடுத்தார்கள்.

௪௬ [5]தினந்தோறும் அவர்கள் ஒருமனப்பட்டு, [6]தேவாலயத்திலே தரித்திருந்து, [7]வீடுகள்தோறும்* அப்பம்பிட்டு, மகிழ்ச்சியும் கபடமில்லாமையுமுள்ள இருதயத்தோடு போசனம்பண்ணிப் பராபரனைப் புகழ்ந்துகொண்டு,

௪௭ (மற்றச்) [8]சனங்கள் எல்லாரிடத்திலும் கிருபைபெற்றிருந்தார்கள்; [9]அன்றியும் இரட்சிக்கப்படுகிற (மற்றப்) பேர்களைக் கர்த்தர் தினந்தோறும் சபையோடே சேர்த்தார்.

௩. அதிகாரம்.

௧ குணமாக்கப்பட்ட ஒரு சப்பாணியைப் பார்க்க வந்த சனங்களுக்குப் பேதுரு பிரசங்கித்தது ௰௨. அவன் குணமாக்கப்பட்டது, தனக்கும் யோவானுக்கும் இருந்த வல்லமையினாலும் பரிசுத்தத்தினாலும் அல்ல, பராபரனும் அவருடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினாலுமே என்று சொல்லி, ௰௩ இயேசுவைச் சிலுவையில் அறைந்ததற்காக அவர்களைக் கடிந்துகொண்டது. ௰௭ பராபரனுடைய ஆதி தீர்மானத்தின்படியும் வேத எழுத்துக்களின்படியும் நடந்ததாயினும், அந்தப் பாதகத்தை அவர்கள் அறியாமையினாலே ஏற்றுக்கொண்டதினால், ௰௯ அவர்கள் மனம்திரும்பி விசுவாசித்து, அந்த இயேசுவினாலேயே பாவமன்னிப்பும் இரட்சிப்பும் அடையும்படி புத்திசொன்னது.

அக்காலத்தில் [10]ஒருநாள் செபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் [11]தேவாலயத்துக்குப் போனார்கள்.

௨ அப்பொழுது [12]தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதன் சுமந்துவரப்பட்டான்; தேவாலயத்தில் பிரவேசிப்பவர்களிடத்தில் [13]பிச்சை கேட்கும்படிக்கு, நாடோறும் அவனை அலங்காரவாசல் என்னப்பட்ட தேவாலய வாசலினிடத்திலே வைப்பார்கள்.

௩ தேவாலயத்தில் பிரவேசிக்கும்படி போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு, பிச்சைகேட்டான்.

௪ அப்பொழுது யோவானுடனேகூடப் பேதுரு அவனை உற்றுப்பார்த்து, எங்களை நோக்கிப்பார் என்றான்.

௫ அவன் அவர்களுடைய கையில் ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான்.

௬ அப்பொழுது பேதுரு சொன்னது: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, எனக்கு உண்டானதை உனக்குத் தருகிறேன்; [14]நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நடவென்று சொல்லி,

௭ வலதுகையினாலே அவனைப் பிடித்துத் தூக்கி எடுத்தான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் ஸ்திரமடைந்தன.

௮ [15]அவன் குதித்து எழுந்து நின்று நடந்து, அவர்களுடனேகூடத் தேவாலயத்தில் பிரவேசித்து, நடந்து குதித்துப் பராபரனைத் துதிசெய்தான்.

௯ [16]அவன் நடக்கிறதையும் பராபரனைத் துதிக்கிறதையும் சனங்

கி. பி. ௩௩.

[1] ௪௧ வச. அப ௧ ௰௪. உரோ ௰௨ ௰௨. எபே. ௬ ௰௮. கொலோ ௪ ௨. எபி ௰,௨௫
[2] மாற் ௰௬ ௰௭. அப ௪ ௩௩. ௫. ௰௨
[3] அப ௪ ௩௨, ௩௪
[4] ஏசா ௫௮ ௭
[5] அப ௧ ௰௪
[6] லூக் ௨௪ ௫௩. அப ௫ ௪௨
[7] அப ௨௰ ௭
* அங்கங்கே
[8] லூக் ௨ ௫௨. அப ௪ ௩௩. உரோ. ௰௪ ௰௮
[9] அப. ௫. ௰௪. ௰௧ ௨௪.
[10] சங் ௫௫ ௰௭
[11] அப ௨ ௪௬
[12] அப ௰௪ ௮
[13] யோவா. ௯ ௮.
[14] அப ௪ ௰
[15] ஏசா ௩௫. ௬
[16] அப. ௪ ௰௬, ௨௧.

கள் எல்லாரும் கண்டார்கள்.

௰ அல்லாமலும் தேவாலயத்தின் [1]அலங்கார வாசலினிடத்திலே பிச்சைகேட்க உளுக்காந்திருந்தவன் இவன்தான் என்று அவர்கள் அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் பிரமிதது, அதிசயபபட்டார்கள்.

௰௧ ¶ அன்றியும் குணமாக்கப்பட்ட சபபாணி பேதுருவையும் யோவானையும்அடுத்துக்கொண்டிருந்தபடியால், சனஙகள் எல்லாரும் பிரமிப்புள்ளவாகளாய், [2]சாலோமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபததிலே அவர்களிடததில் ஓடிபபோய்க் கூடினார்கள்.

௰௨ பேதுரு அதைக்கண்டு சனங்களுடனே சொன்னதாவது: இஸரவேலரே, இதைக்குறித்து நீஙகள் ஆசசரியபபடுகிறதென்ன? அல்லது நாங்கள் எஙகள் சுயவல்லமையினாலாவது பத்தியினாலாவது இவனை நடக்கபபண்ணினவர்களாக நீஙகள எஙகளை நோக்கிப பார்க்கிறதென்ன?

௰௩ [3]நம்முடைய முன்னோர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாககோபு என்பவர்களுடைய தேவனாயிருககிறவர் தம்முடைய குமாரனாகிய [4]இயேசுவை மகிமைப்படுததினார்; அந்த இயேசுவைப் பிலாத்து விடுதலையாக்க எண்ணினபொழுது, [5]நீங்கள் அவனுக்கு முன்பாக அவரை ஒபபுக்கொடுத்து [6]மறுதலித்தீர்கள்.

௰௪ [7]பரிசுத்தமும் [8]நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலிதது, கொலைபாதகனான மனிதனை உங்களுக்காக விடுதலையாக்கவேண்டுமென்று கேட்டீர்கள்; சீவனையுடைய அதிபதியையே* கொலை செய்தீர்கள்.

௰௫ [9]அவரைப் பராபரன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்; [10]அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

௰௬ மேலும் [11]அவருடைய நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைஸ்திரபபடுத்திற்று; அவரைப் பற்றிக்கொண்ட விசுவாசமே உங்கள் எல்லாருக்குமுன்பாகவும் இந்தச் சர்வாஙக சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.

௰௭ ¶ சகோதரரே, நீங்களும் உங்கள் தலைவரும் [12]அதை அறியாமையினாலே செய்தீர்கள் என்று அறிநதிருக்கிறேன்.

௰௮ [13]பராபரன் கிறிஸ்து பாடுபடவேணடுமென்று தம்முடைய தீர்ககதரிசிகள் எல்லாருடைய வாககினாலும் [14]முன் அறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்.

௰௯ ¶ ஆனபடியினாலே பராபரனுடைய சந்நிதானத்திலிருந்து சவுககியம் உண்டாகும் காலங்கள் வரவும், முனனே குறிக்கப்பட்ட இயேசுக்கிறிஸ்துவை அவர் உஙகளிடததில் அனுப்பவும் தக்கதாக உஙகள் பாவங்கள் நிவிர்த்தி செய்யபபடும்படிக்கு,

௨௰ [15]நீங்கள் மனதைத் திருத்திக் குணப்படுங்கள்.

௨௧ [16]உலகம் உண்டானதுமுதல் பராபரன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் [17]நிறைவேறும் காலம் வரும்பரியந்தம் [18]இயேசுவானவர் பரமண்டலத்திலே இருக்கவேண்டும்.

௨௨ ¶ அந்தத் தீர்க்கதரிசிகளில் மோசேயானவர் நம்முடைய முன்னோர்களுடனே சொன்னதாவது: [19]உங்கள் தேவனாகிய பராபரன் என்னைப்போலத் தீர்க்கதரிசி ஒருவரை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து தோன்றப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் யாவற்றிற்கும் செவிகொடுப்பீர்களாக.

கி. பி. ௩௩.

1 யோவா ௯.௮
2 யோவா ௰ ௨௩. அப ௫ ௰௨
3 அப ௫ ௩௰
4 யோவா ௭ ௩௯. ௰௨. ௰௬. ௰௭ ௧
5 மத் ௨௭ ௨
6 மத் ௨௭ ௨௰. மாற் ௰௫ ௰௧ லூக் ௨௩ ௰௮, ௨௰, ௨௧ யோவா ௰௮ ௪௰ ௰௯ ௰௫ அப ௰௩ ௨௮
7 சங. ௰௬ ௰ மாற். ௧ ௨௪ லூக் ௧ ௩௫ அப ௨ ௨௭ ௪. ௨௭
8 அப ௭. ௫௨ ௨௨ ௰௪
* அலலது காரணரை எபி ௨ ௰ ௫ ௯ ௧ யோ ௫ ௰௧
9 அப ௨. ௨௪
10 அப ௨ ௩௨
11 மத் ௯ ௨௨ அப ௪ ௰ ௰௪ ௯
12 லூக் ௨௩ ௩௪ யோவா ௰௬ ௩. அப ௰௩ ௨௭ ௧ கொரி ௨ ௮ ௧ தீமோ ௧ ௰௩
13 லூக் ௨௪ ௪௪ அப ௨௬ ௨௨
14 சங ௨௨. ஏசா ௫௰ ௬ ௫௩ ௫ தானி ௯ ௨௬ ௧ பே ௧ ௰, ௰௧
15 அப ௨ ௩௮
16 லூக் ௧ ௭௰
17 அப ௧ ௰௧
18 மத் ௰௭ ௰௧
19 ௫ மோ ௰௮ ௰௫, ௰௮, ௰௯ அப. ௭. ௩௭.

௨௩ அந்தத் தீர்க்கதரிசியின் சொல் கேளாதவன் எவனோ, அவன் தன் சனத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்று சொன்னார்.

௨௪ சாமுவேலும் அவனுக்குப் பின்வந்து பேசின தீர்க்கதரிசிகள் எல்லாரும் இந்த நாள்களை முன் அறிவித்தார்கள்.

௨௫ [1]நீங்களே அந்தத் தீர்க்கதரிசிகளுடைய சந்ததியாருமாய், பூமியிலுள்ள வம்சத்தார் எல்லாரும் [2]உன் சந்ததியினாலே ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று பராபரன் ஆபிரகாமுக்குச் சொல்லி, இவ்விதமாய் நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடம்படிக்கைக்கு உள்ளானவர்களுமாய் இருக்கிறீர்கள்.

௨௬ ஆதலால் முதலாவது உங்களுக்காகவே [3]பராபரன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை எழுப்பி, [4]உங்களில் தங்கள் பொல்லாங்குகளை விட்டுத் திரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் எல்லாரையும் [5]அவர் ஆசீர்வதிக்கும்படிக்கு அவரை அனுப்பினார் என்றான்.

௪. அதிகாரம்.

௧ யூதர்களுடைய தலைவர்கள் பேதுருவின் பிரசங்கத்துக்காகத் தாங்கலடைந்து, ௪ (திருவசனத்தைக் கேட்ட அநேகமாயிரம்பேர்கள் குணப்பட்டாலும்) அவனையும் யோவானையும் காவலில் அடைத்தது ௫ அவனைச் சோதித்தபோது அவன் சப்பாணியாயிருந்தவன் இயேசுவின் நாமத்தினால் சுகமடைந்தானென்றும், அந்த இயேசுவினாலேயே நாம் நித்திய இரட்சிப்பை அடைய வேண்டுமென்றும் தயிரியமாய்ச் சொல்ல, ௰௩ அவர்கள் அவனுக்கும் யோவானுக்கும் அந்த நாமத்தில் பிரசங்கிக்கக் கூடாதென்று கற்பித்து, அவர்களைப் பயமுறுத்தினதினிமித்தம், ௨௩ சபையார் செபம்பண்ணினது ௩௧. பராபரன் அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைத்ததால் அவர்கள் செபத்தைக் கேட்டாரென்று சாட்சியிட்டு, திருச்சபைக்குப் பரிசுத்தஆவியின் ஈவையும் அந்நியோந்நிய ஐக்கியத்தையும் உண்டுபண்ணினது.

இப்படி அவனும் யோவானும் சனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில்,

௨ அவர்கள் சனங்களுக்கு உபதேசித்ததினாலும், இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்கிறார் என்று அறிவித்ததினாலும், ஆசாரியரானவர்களும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும்,* சதுசேயரானவர்களும் [6]விசனப்பட்டு,

௩ அவர்களிடத்தில் போய் அவர்களைப் பிடித்து, சாயங்காலமானபடியினாலே மறுநாள்வரைக்கும் காவலில் வைத்தார்கள்.

௪ அப்போஸ்தலருடைய வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்களுடைய தொகை ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தது.

௫ ¶ மறுநாளிலே சனங்களுடைய தலைவரும், மூப்பரும், வேதபாரகரும்,

௬ [7]பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரிய குடும்பத்தாராகிய மற்ற யாவரும் எருசலேமிலே கூடிவந்து,

௭ அவர்களை நடுவே நிற்கப்பண்ணி, [8]நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

௮ அப்பொழுது [9]பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களுடனே சொன்னதாவது: சனத்தலைவரும் இஸ்ரவேலரின் மூப்பருமானவர்களே,

௯ உபகாரத்தைப் பெற்றுக்கொண்ட வியாதிக்காரனை இவன் எதினாலே சொஸ்தம் அடைந்தான் என்று இன்றைக்கு எங்களிடத்தில் விசாரிக்கிறபடியால்,

௰ உங்களாலே சிலுவைமரத்தில் அறையப்பட்டவருமாய், [10]பராபரனாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாய் இருக்கிற [11]நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் உங்களுக்குமுன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறான் என்று நீங்களும்

கி. பி. ௩௩.

[1] அப ௨. ௩௯ ரோ. ௯ ௪, ௮. ௰௫ ௮ கலா ௩ ௨௬
[2] ௧ மோ ௰௨. ௩ ௰௮ ௰௮ ௨௨ ௰௮ ௨௬ ௪ ௨௮ ௰௪. கலா ௩ ௮.
[3] மத ௰ ௫ ௰௫ ௨௪ லூக் ௨௪. ௪௭. அப ௰௩ ௩௨ ௩௩, ௪௬.
[4] மத ௧ ௨௧.
[5] ௨௨ வச
* அல்லது தேவாலயத்தின் பிரதானி லூக் ௨௨ ௪. அப ௫ ௨௪.
[6] மத் ௨௨ ௨௩ அப ௨௩ ௮.
[7] லூக். ௩ ௨ யோவா ௰௧ ௪௯ ௰௮. ௰௩
[8] ௨ மோ ௨ ௰௪ மத ௨௧. ௨௩. அப ௭ ௨௭.
[9] லூக் ௰௨ ௰௧, ௰௨
[10] அப ௨ ௨௪
[11] அப ௩. ௬, ௰௬.

இஸ்ரவேல் சனங்கள் எல்லாரும் அறிந்திருப்பீர்களாக.

௰௧ [1]வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அசட்டைபண்ணப்பட்ட கல் அவரே; அவரே கோடிக்குத் தலைக்கல்லானவர்.

௰௨ [2]அல்லாமலும் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்புக் கிடையாது; நாம் இரட்சிப்பை அடையும்படிக்கு வானத்தின்கீழ் எங்கும் மனிதர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளை இடப்படவும் இல்லை என்றான்.

௰௩ ¶ பேதுருவும் யோவானும் காண்பித்த தயிரியத்தை அவர்கள் பார்த்து, [3]அவர்கள் படியாதவர்கள் என்றும் தாழ்மையானவர்கள் என்றும் அறிந்தபடியினாலே ஆச்சரியப்பட்டார்கள்; அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள் என்றும் அறிந்தார்கள்.

௰௪ மேலும் குணமாக்கப்பட்ட மனிதனை [4]அவர்கள் அருகே நிற்கக்கண்டபடியால், அவர்கள் எதிர்பேசுகிறதற்குஇடமிருக்கவில்லை.

௰௫ அப்பொழுது அவர்கள் சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, பின்பு தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு சொன்னதாவது:

௰௬ [5]எருசலேமில் வாசம்பண்ணுகிற யாவருக்கும் தெரிந்திருக்கிற வெளியரங்கமான அற்புதம் அந்த மனிதர்களால் செய்யப்பட்டது; [6]அதை நாம் இல்லை என்று சொல்லக்கூடாது; ஆகையால் நாம் அவர்களை என்னசெய்யலாம்?

௰௭ சனங்களுக்குள்ளே அது அதிகமாய்ப் பிரசித்தமாகாதபடிக்கு, இதுமுதல் அவர்கள் அந்த நாமத்தைக்குறித்து ஒரு மனிதனோடும் பேசக்கூடாதென்று நாம் அவர்களைப் பயப்படுத்திக் கட்டளை இடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு,

௰௮ [7]அவர்களை அழைத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசாமலும் போதியாமலும் இருக்கும்படி அவர்களுக்குக் கட்டளை இட்டார்கள்.

௰௯ ¶ அதற்கு மாறுத்தரமாகப் பேதுருவும் யோவானும்சொன்னதாவது: [8]நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப்படுகிறதிலும், உங்களுக்குக் கீழ்ப்படுகிறது பராபரனுக்குமுன்பாக நியாயமாயிருக்குமா? இதை நீங்கள் நிதானித்துப்பாருங்கள்.

௨௰ [9]நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் [10]பேசாமல் இருக்கக்கூடாதே என்றார்கள்.

௨௧ அப்படியிருந்தும் அற்புதத்தால் சொஸ்தமாக்கப்பட்ட மனிதன் நாற்பதுவயதுக்கு அதிக வயதுள்ளவனானபடியால்,

௨௨ [11]நடந்ததைக்குறித்துச் சனங்கள் எல்லாரும் பராபரனைப் புகழ்ந்தபடியினாலே, [12]அப்போஸ்தலர்களைத் தண்டிக்கும்படிக்குச் சனங்களினிமித்தம் சங்கத்தார் வகை ஒன்றும் காணாமல், அவர்களைப் பின்னும் பயப்படுத்திவிட்டுவிட்டார்கள்.

௨௩ ¶ [13]அவர்கள் விடப்பட்டபின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்திற்குப் போய், தங்களுக்குப் பிரதான ஆசாரியரும் மூப்பரும் சொன்ன யாவையும் அறிவித்தார்கள்.

௨௪ அவர்கள் அதைக் கேட்டு ஒருமனப்பட்டுப் பராபரனை நோக்கிச் சொன்னதாவது: ஆண்டவரே, [14]நீர் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனாய் இருக்கிறீர்.

௨௫ உம்முடைய தாசனாகிய தாவீதைக்கொண்டு தேவரீர் சொன்னது: உலகத்தார் என்னத்திற்குக் கலகம்பண்ணுகிறார்கள்? [15]சனக்கூட்டங்கள் என்னத்திற்கு வீணானகாரியங்களைச் சிந்திக்கிறார்கள்.

கி. பி. ௩௩.

1 சங ௱௰௮. ௨௨; ஏசா ௨௮. ௰௬; மத் ௨௧. ௪௨.
2 மத் ௧. ௨௧; அப ௰. ௪௩; ௧ தீமோ ௨. ௫, ௬.
3 மத் ௰௧. ௨௫; ௧ கொரி ௧. ௨௭.
4 அப ௩. ௰௧.
5 அப ௩. ௯, ௰.
6 யோவா. ௰௧. ௪௭.
7 அப ௫. ௪௰.
8 அப ௫. ௨௯.
9 அப ௨௨. ௰௫; ௧ யோ ௧. ௧, ௩.
10 அப. ௧. ௮; ௨. ௩௨.
11 மத் ௨௧. ௨௬; லூக். ௨௰. ௬, ௰௯; ௨௨. ௨; அப ௫. ௨௬.
12 அப. ௩. ௭, ௮.
13 அப ௰௨. ௰௨.
14 ௨ இரா ௰௯. ௰௫.
15 சங. ௨. ௧.

உசு பூமியிலுள்ள இராசாக்களும் காரியத்தலைவரும் பராபரனுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் விரோதமாய் எழும்பி, ஏகமாய்க் கூடினார்கள் என்றீர்.

உஎ அதின்படி இந்த நகரத்திலே ஏரோதும் பொந்தியுபிலாத்துவும் அஞ்ஞானிகளோடும் [1]இஸ்ரவேல் சனங்களோடுங்கூடத் தேவரீருடைய கையும் ஆலோசனையும் முன்னே குறித்தவைகள் யாவையும் செய்வதற்கு,

உஅ [2]தேவரீர் அபிஷேகம்பண்ணிவைத்த உம்முடைய [3]பரிசுத்த குமாரனாகிய இயேசுவுக்கு [4]விரோதமாக மெய்யாய்க் கூடினார்கள்.

உகூ அப்படியிருக்கக் கர்த்தாவே, [5]அவர்கள் (எங்களைப) பயபபடுத்துகிறதைத் தேவரீர் நோக்கிப்பார்த்து,

ஙய [6](பிணியாளிகளைக்) குணமாக்குதற்கு உம்முடைய வல்லமை வெளிப்படும்படியாயும், உம்முடைய [7]பரிசுத்த குமாரனாகிய இயேசுவின் நாமத்தினாலே [8]அதிசயங்களும் அற்புதங்களும் நடககும்படியாயும் செய்து, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை மிகுந்த தயிரியததோடு சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகம் செய்யும் என்றார்கள்.

ஙக ¶ அவர்கள் செபம்பண்ணினபொழுது, [9]அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது; அல்லாமலும் அவர்கள் எல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, [10]பராபரனுடைய வசனத்தைத் தயிரியத்தோடே சொன்னார்கள்.

ஙஉ ¶ அன்றியும் திரளான விசுவாசிகளுக்கு [11]ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவும் இருந்தன; [12]ஒருவனாகிலும் தனக்கு உள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தன.

ஙங [13]கர்த்தராகிய இயேசு உயிரோடெழுந்ததைக்குறித்து [14]அபபோஸ்தலர்கள் மிகுந்த பலத்தோடே [15]சாட்சிகொடுத்தார்கள்.

ஙச [16]மேலும் நிலங்களையும் வீடுகளையுமுடைய யாவரும் அவைகளை விற்று, விற்கப்பட்ட பொருள்களின் விலைக்கிரயத்தை [17]அபபோஸ்தலரிடத்தில் கொண்டுபோய், அவர்களுடைய பாதத்திலே வைத்தார்கள்.

ஙரு (அதில்) [18]அவனவனுக்கு வேண்டியிருந்தபடி பகிர்ந்துகொடுக்கபபட்டது. ஆதலால் அவர்களில் ஒருவனும் குறைவுபடவில்லை; ஆனபடியினாலே மிகுந்த கிருபை அவர்கள் எல்லாருக்கும் உண்டாயிருந்தது.

ஙசு இலேவியனுமாய், சீப்புருதீவில் பிறந்தவனுமாய், ஆறுதலின் மகனென்று அருத்தங்கொள்ளுகிற பருனபா என்று பேரை அப்போஸதலராலே பெற்றுக்கொண்டவனுமாயிருந்த யோசேப்பென்பவனும் [19]தனக்கு உண்டான நிலத்தை விற்று,

ஙஎ திரவியத்தைக் கொண்டுபோய், அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

கி. பி. ஙங.

1 அப. உ உங ங. மஅ
2 மத் உக, க லூக் உஉ உ உக, க, அ.
3 லூக் க ஙரு
4 லூக் ச மஅ யோவா. ம ஙசு
5 மங, ஙக வச அப கூ உஎ மங சகூ மச ங மகூ அ உகூ உகூ உஅ ஙக எபே க மகூ
6 அப உ சங. ரு மஉ.
7 அப ங.கூ, மகூ
8 உஎ வச
9 அப உ உ,ச மகூ உக
10 உகூ வச
11 அப ரு மஉ. உரோ மரு ரு, கூ உ கொரி மங மக. பிலி க உஎ உ உ. க பே ங அ
12 அப உ சச
13 அப க அ
14 அப க உஉ
15 அப உ சஎ
16 அப உ சரு
17 ஙஎ. வச அப. ரு உ
18 அப உ சரு கூ க
19 ஙச, ஙரு. வச. அப ரு க, உ

ரு. அதிகாரம்.

க அனனீயாவும, அவன பெணசாதி சபபீராளும செயத மாயததின நிமிததம பேதுருவிஞலே கணடிக்கபபடடு, விழுந்து செத்தது மஉ. சபையின் விசுவாசம பெருகுமபடி மறற அபபோஸதலாகளும அநேக அறபுதஙகளைச் செயதது மஎ அநத அபபோஸதலர் மறுபடியும காவலில் அடைக்கப்படடும், மகூ ஒரு தேவதூதஞல் விடுதலையாக்கபபடடு, யாவருக்கும பிரசஙகிக்கக் கட்டளை பெற்றது உக அவர்கள தேவாலயத்தில் பிரசஙகிதததிஞலே, உகூ மாணத்துக்கு ஏதுவாயிருக்கையில் யூதாகளுக்குள்ளே பெரிய ஆலோசனைக்காரஞயிருநத காமாலியேல் சொனன ஆலோசனையினபடி உயிரோடே விடபபட்டபினபு, சம அடிபடடும் நாள்தோறும் பிரசஙகித்துப பராபரனை மகிமைபபடுததினது.

அல்லாமலும் அனனீயா என்னப்பட்டவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் (தங்கள்) காணியை விற்றார்கள்.

௨ பின்பு அவன் தன் மனைவியும் அறிய அந்தக் கிரயத்திலே சில பணத்தை வஞ்சித்துவைத்து, [1]ஒரு பங்கைமாத்திரம் கொண்டுபோய், அப்போஸதலருடைய பாததிலே வைத்தான்.

௩ [2]அபபொழுது பேதுரு சொன்னது: அனனீயாவே, [3]நிலத்தின் விலைக்கிரயததிலே சில பணத்தை நீ மறைததுவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படிக்கு,* சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?

௪ அது விற்கப்படாமலிருந்தபொழுது உன்னுடையதாய்இருக்கவில்லையோ? அதை விற்றபின்பு, (அதின் கிரயம்) உன் அதிகாரத்தில் இருக்கவில்லையோ? அப்படியிருக்க, என்னத்தினாலே நீ இநதக் காரியத்தை உன் இருதயததிலே வைத்தாய்? நீ மனிதரிடத்தில் அல்ல, பராபரனிடத்திலே பொய்சொன்னாய் என்றான்.

௫ இநத வார்த்தைகளை அனனியா கேட்டபொழுது, [4]அவன் விழுந்து சீவனை விட்டான்; இந்தச் சஙகதியைக்கேட்ட யாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று.

௬ சில வாலிபர் எழுந்து, [5]அவனை ஒரு சேலையில் கட்டி, வெளியே கொண்டுபோய், அடக்கம் பண்ணினார்கள்.

௭ ¶ ஏறக்குறைய மூன்றுமணி நேரத்திற்குப பின்பு, அவனுடைய மனைவி அநத நடக்கையை அறியாமல் உள்ளே போனாள்.

௮ அவளுடனே பேதுரு (உங்கள்) நிலத்தை இவ்வளவு கிரயத்திற்கா விற்றீர்கள், அதை எனக்குச் சொல்லென்றான்; அவள் இவ்வளவுக்கே அதை விற்றோம் என்றாள்.

௯ அபபொழுது பேதுரு சொன்னதாவது: [6]பராபரனுடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் என்னத்தினாலே ஒருமைப்பட்டீர்கள்? உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் உன்னையும் வெளியே கொண்டுபோகும்படிக்கு அதோ வாசற்படியிலே வந்திருக்கின்றன என்றான்.

௰ [7]உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுநது, சீவனைவிட்டாள்; வாலிபர் உள்ளே சென்று, அவள் மரித்ததைக் கண்டு, அவளை வெளியே கொண்டுபோய், அவளுடைய புருஷனிடத்தில் அடக்கம்பண்ணினார்கள்.

௰௧ அதினாலே [8]சபையார் எல்லாருக்கும் அதைக் கேட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று.

௰௨ ¶ [9]பின்னும் அபபோஸ்தலருடைய கைகளினாலே அநேக அதிசயங்களும் அற்புதங்களும் சனஙகளுக்குள்ளே செய்யபபட்டன; [10]எல்லாரும் ஒருமனப்பட்டு, சாலோமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்.

௰௩ [11]மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேர்ந்திருக்கத் துணியவில்லை.

௰௪ அப்படியிருந்தும் திரளான புருஷரும் ஸ்திரிகளும் கர்த்தாவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

௰௫ [12]அல்லாமலும் சனங்கள் அபபோஸ்தலரை மேன்மைப்படுத்தினார்கள்; அதினாலே அவர்கள் பிணியாளிகளைப படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில், [13]அவனுடைய நிழலாகிலும் சிலரில் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில்† கொண்டுபோனார்கள்.

௰௬ சுற்றுக் கிராமங்களிலுமிருந்து திரளான சனங்கள் [14]பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்; அவர்கள் எல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.

இ. பி. ௩௩.

1 அப. ௪ ௩௭.

2 ௪ மோ ௩௰ உ ௫ மோ ௨௩ ௨௨ பிர. ௫ ௪

3 லூக் ௨௨ ௩

* அல்லது வஞ்சிக்கிறதற்கு, ௯ வச

4 ௰, ௰௧ வச

5 யோவா ௰௯. ௪௰

6 ௯ வச மத். ௪ ௭

7 ௫ வச

8 ௫ வச அப ௨ ௪௩. ௰௯ ௰௭

9 அப ௨ ௪௩ ௰௪ ௩. ௰௯ ௰௧. ௨ரோ ௰௫ ௰௯ ௨ கொரி ௰௨ ௰௨ எபி ௨ ௪

10 அப ௩. ௰௧ ௪ ௩௨

11 யோவா. ௯ ௨௨ ௰௨. ௪௨ ௰௯. ௩௮

12 அப ௨ ௪௭ ௪ ௨௧.

13 மத். ௯ ௨௰ ௰௪. ௩௬. அப ௰௯ ௰௨

† அல்லது வீதிகள்தோறும்.

14 மாற் ௰௬ ௰௭, ௰௮ யோவா. ௰௪. ௰௨

௰௭ ¶ [1]அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேயர் வகுப்பைச் சேர்ந்த அனைவரும் எழும்பி வைராக்கியத்தால்* நிரப்பப்பட்டு,

௰௮ [2]அப்போஸ்தலர்களைப் பிடித்து, நகரத்தின் சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

௰௯ இராத்திரியிலே [3]பராபரனுடைய தூதன் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவந்து,

௨௰ நீங்கள் போய்த் தேவாலயத்திலே நின்று இந்தச் [4]சீவவார்த்தைகள் எல்லாவற்றையும் சனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

௨௧ அந்தப்படி அவர்கள் கேட்டு, அதிகாலையிலே தேவாலயத்திற்குப் போய்ப் போதகம்பண்ணினார்கள்; அத்தருணத்திலே [5]பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்தவர்களும் போய், பெரிய சங்கத்தாரையும் இஸ்ரவேல் சனங்களின் மூப்பர் எல்லாரையும் கூடிவரவழைத்து, அப்போஸ்தலரைக் கொண்டுவரும்படி சிறைச்சாலைக்கு (சேவகரை) அனுப்பினார்கள்.

௨௨ அந்தப்படி சேவகர் காவல்வீட்டிற்குப் போய், அங்கே அவர்களைக் காணாமல் திரும்பி,

௨௩ சிறைச்சாலை மிகவும் பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் கதவுகளின் முன்னே நிற்கவும் கண்டோம்; அவைகளைத் திறந்தபொழுது, உள்ளே ஒருவரையும் காணோமென்று அறிவித்தார்கள்.

௨௪ இந்தச் செய்தியை ஆசாரியனும், தேவாலயத்தைக் காக்கிற [6]சேனைத்தலைவனும், பிரதான ஆசாரியரும் கேட்டு, இதென்னமாய் இருக்கிறதென்று அவர்களைக்குறித்துச் சந்தேகப்பட்டார்கள்.

௨௫ அப்பொழுது ஒருவன் சேர்ந்து, நீங்கள் காவலில் வைத்த மனிதர் தேவாலயத்திலே நின்று, சனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள் என்று அறிவித்தான்.

௨௬ ¶ உடனே சேனைத்தலைவன் சேவகரோடும் கூடப்போய்ச் சனங்களாலே கல்லெறியப்படாதபடிக்கு, அவர்களுக்குப் [7]பயந்ததினாலே பலவந்தம்பண்ணாமல் அப்போஸ்தலரை அழைத்துக்கொண்டான்

௨௭ அப்படி அவர்கள் அவர்களை அழைத்துப்போய், பெரிய சங்கத்தாருக்குமுன்பாக நிறுத்தினார்கள்; அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி,

௨௮ [8]நீங்கள் அந்த நாமத்தைக்குறித்து உபதேசம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்குக் கெட்டியாய்க் கட்டளையிடவில்லையோ? அப்படியிருந்தும், நீங்கள் உங்கள் உபதேசத்தினாலே எருசலேமை நிரப்பி, அந்த மனிதனுடைய [9]இரத்தப்பழி எங்கள்மேல் வரப்பண்ண [10]விரும்புகிறீர்கள் என்று சொன்னான்.

௨௯ ¶ அதற்குப் பேதுருவும் (மற்ற) அப்போஸ்தலரும் சொன்னதாவது: நாங்கள் மனிதருக்குக் கீழ்ப்படிகிறதிலும் [11]பராபரனுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

௩௰ [12]நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை [13]நம்முடைய முன்னோர்களுடைய தேவன் எழுப்பி,

௩௧ [14]இஸ்ரவேலருக்கு மனம் திருப்புதலையும் பாவமன்னிப்பையும் கொடுக்கிறதற்கு, [15]அவரை அதிபதியாகவும் [16]இரட்சகராகவும் [17]தமது வலதுகையினாலே உயர்த்தினார்.

௩௨ இந்தச் சங்கதிகளைக்குறித்து [18]நாங்களும், பராபரன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கொடுத்த [19]பரிசுத்த ஆவியும், அவருடைய சாட்சிகளாயிருக்கிறோம் என்றார்கள்.

௩௩ ¶ [20]அதை அவர்கள் கேட்டு மிகுந்த மூர்க்கம் அடைந்து, அ

கி. பி. ௩௩.

[1] அப. ௪. ௧, ௨, ௬

* அல்லது பொறாமையினால.

[2] லூக ௨௧ ௰௨.

[3] அப ௰௨. ௭ ௰௬ ௨௬.

[4] யோவா. ௬. ௬௮ ௰௭ ௩ ௧ யோ ௫ ௰௧

[5] அப ௪ ௫, ௬

[6] லூக் ௨௨ ௪. அப ௪ ௧.

[7] மத் ௨௧ ௨௬

[8] அப ௪ ௰௮.

[9] அப ௨ ௨௩, ௩௬ ௩ ௰௫. ௭ ௫௨.

[10] மத் ௨௩ ௩௫. ௨௭ ௨௫

[11] அப ௪ ௰௯

[12] அப ௰ ௩௯ ௰௩ ௨௯ கலா ௩ ௰௩ ௧ பே ௨. ௨௪.

[13] அப. ௩. ௰௩, ௰௫ ௨௨ ௰௪

[14] லூக். ௨௪ ௪௭ அப ௩ ௨௬ ௰௩ ௩௮ எபே ௧ ௭. கொலோ ௧ ௰௪.

[15] அப ௩ ௰௫

[16] மத் ௧ ௨௧

[17] அப ௨. ௩௩, ௩௬. பிலி ௨. ௯ எபி ௨ ௰ ௰௨ ௨

[18] அப ௨. ௪. ௰ ௪௪.

[19] யோவா ௰௫. ௨௬, ௨௭

[20] அப. ௨. ௩௭: ௭. ௫௪.

வர்களைக் கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணினார்கள்.

௩௪ அப்பொழுது எல்லாச் சனங்களாலும் கனம்பெற்றுக்கொண்ட வேதசாஸ்திரியாகிய [1]கமாலியேல் என்னப்பட்ட பரிசேயனானவன் பெரிய சங்கத்தாருக்குள்ளே எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச் சொல்லிச் சங்கத்தாருடனே சொன்னதாவது:

௩௫ இஸ்ரவேலரே, நீங்கள் அந்த மனிதருக்குச் செய்ய நினைக்கிறதைக்குறித்து, எச்சரிக்கையாய் இருப்பீர்களாக

௩௬ இந்த நாள்களுக்குமுன்னே தெயுதா என்பவன் எழும்பி, தன்னைப் பெரியவன் என்று சொல்லி, ஏறக்குறைய நானூறுபேர் தன்னை அடுத்துக்கொள்ளும்படி செய்து பின்பு அழிக்கப்பட்டான்; அவனை நம்பியிருந்த* அனைவரும் கலைந்து வீணாய்ப் போய்விட்டார்கள்.

௩௭ அவனுக்குப்பின்பு குடிமதிப்புச் செய்யப்பட்ட நாள்களிலே, கலிலேயனாகிய யூதா எழும்பி, அநேக சனங்களைத் தன்வசமாக்கினான்; அவனும் அழிந்துபோனான், அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்.

௩௮ ஆனபடியினாலே நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், [2]இந்த மனிதர்களுடைய யோசனை, அல்லது இவர்களுடைய கிரியை மனிதரால் உண்டானதானால் அது ஒழிந்துபோம்.

௩௯ [3]அது பராபரனால் உண்டானால், அதை நீங்கள் ஒழித்துப்போடமாட்டீர்கள்; ஆதலால் [4]நீங்கள் பராபரனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்கு, இவர்களுக்கு ஒன்றும்செய்யாமல் இவர்களை விடுங்கள் என்றான்.

௪௰ ¶ அவனோடே மற்றவர்கள் பொருந்தி, [5]அப்போஸ்தலரை வரவழைத்து, [6]அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து அவர்கள் பேசாதிருக்கும்படிக்குக் கட்டளையிட்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

௪௧ அவர்கள் தாங்கள் அவருடைய நாமத்திற்காகக் கனஈனப்படுகிறதற்குப் பாத்திரர் என்று எண்ணப்பட்டபடியினாலே, [7]சந்தோஷமாய்ப் பெரிய சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்,

௪௨ [8]தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் [9]ஓயாமல் உபதேசம்பண்ணி, இயேசுவைக் கிறிஸ்தென்று சுவிசேஷமாய் அறிவித்து வந்தார்கள்.

௬. அதிகாரம்.

௧ அப்போஸ்தலர்கள் ஆத்தும போசனமாகிய தேவவசனத்தைப் பரிமாறவேண்டியதாகையால், ஏழைக்காகச் சீர பாராமரிப்புகளின்நிமித்தம், ௩ தெரிந்துகொள்ளப்பட்ட ஏழுபேர்கள் உதவிக்காரர்களாக ஏற்படுத்தப்பட்டது ௫ இவ்வேழுபேர்களில் விசுவாசத்தாலும் பரிசுத்தத்தாலும் நிறைந்த ஸ்தேவான் ஒருவன், ௰ தர்க்கத்தால் செயிக்கப்பட்ட எதிராளிகளாலே பிடிக்கப்பட்டு, ௰௩ பரிசுத்த ஸ்தலத்தையும் நியாயப்பிரமாணத்தையும் தூஷணித்ததாய அநியாயமாய்க் குற்றம் சாற்றப்பட்டது

அந்த நாள்களில் [10]சீஷர்கள் பெருகினபொழுது கிரேக்கரானவர்களில் உள்ள [11]கைம்பெண்கள் நாள்தோறும் உள்ள விசாரணையிலே நன்றாய் எண்ணிக்கொள்ளப்படாதபடியினாலே, [12]கிரேக்கரானவர்கள் எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.

௨ அப்பொழுது பன்னிருவரும் சீஷர்களாகிய திரளைக் கூடிவரவழைத்துச் சொன்னதாவது: [13]நாங்கள் பராபரனுடைய வசனம் போதிக்கிறதை விட்டு, பந்திகளைக்குறித்து விசாரிக்கிறது தகாது.

௩ ஆகையால் சகோதரரே; நீங்கள் உங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்

கி. பி. ௩௩.

[1] அப ௨௨. ௩

* அல்லது அவனுக்குக் கீழ்ப்படிந்த

[2] நீதி ௨௧. ௩௰ ஏசா ௮. ௰. மத் ௰௫. ௰௩

[3] லூக் ௨௧. ௰௫ ௧ கொரி ௧ ௨௫.

[4] அப ௭ ௫௧; ௯ ௫ ௨௩ ௯

[5] அப ௪ ௰௮

[6] மத் ௰ ௰௭ ௨௩ ௩௪ மாற் ௰௩ ௯

[7] மத் ௫ ௰௨ உரோ ௫ ௩. ௨ கொரி ௰௨ ௰. பிலி ௧ ௨௯ எபி ௰ ௩௪ யாக் ௧ ௨ ௧ பே ௪ ௰௩, ௰௬

[8] அப ௨ ௪௬.

[9] அப ௪ ௨௰, ௨௯.

[10] அப ௨. ௪௧ ௪ ௪ ௫ ௰௪.

[11] அப. ௪ ௩௫

[12] அப் ௯. ௨௯ ௰௧ ௨௰.

[13] ௨ மோ ௰௮. ௰௭

சாட்சி பெற்றிருக்கிற [1]எழுபேரையும் தெரிநதுகொள்ளுஙகள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

௪ [2]நாங்கள் செபம்பண்ணுதலிலும் (தேவ) வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருபபோம் என்றார்கள்.

௫ இந்த யோசனை சபையார் எல்லாருக்கும் பிரியமாய் இருந்தது. ஆதலால் அவர்கள் [3]விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், [4]பிலிபபையும், பிரோகோரையும், நிககானோரையும், தீமோனையும், பருமேனாவையும் [5]யூதமார்ககத்தானான அந்தியோகிய பட்டணததானாகிய நிக்கோலாவையும் தெரிநதுகொண்டு,

௬ அவர்களை அப்போஸ்தலருக்குமுன்பாக நிறுத்தினாகள், [6]இவர்கள் செபம்பணணி, [7]அவர்கள்மேலே தங்கள் கைகளை வைத்தார்கள்.

௭ ¶ பின்பு [8]பராபரனுடைய வசனம் வளர்நதது; சீஷருடைய இலக்கம் எருசலேமிலே மிகவும் பெருகிற்று; [9]ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்பபட்டார்கள்.

௮ ¶ அன்றியும் ஸ்தேவானென்பவன் கிருபையினாலும் பலத்தினாலும் நிறைந்து, சனஙகளுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்தான்.

௯ அப்பொழுது லிபருத்தினர் என்னப்பட்டவர்களின் செபஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், கிரேனே பட்டணத்தாரிலும், அலேக்குசந்தரிய பட்டணத்தாரிலும், கிலீக்கியா தேசத்தாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தருக்கம்பண்ணிக்கொண்டார்கள்.

௰ [10]அவன் பேசின ஞானத்தோடும் ஆவியோடும் எதிர்த்துநிற்க அவர்களுக்கு வல்லமையில்லை.

கி. பி. ௩௩.

1 ௫ மோ ௧ ௰௩ அப ௧ உ௧ ௰௬. உ ௧ தீமோ ௩ ௭

2 அப. ௨ ௪௨.

3 அப. ௰௧ ௨௪

4 அப ௮ ௫, ௨௬ ௨௧ ௮.

5 வெளி ௨. ௬, ௰௫

6 அப ௧. ௨௪

7 அப ௮ ௰௭ ௯ ௰௭ ௰௩, ௩ ௧ தீமோ. ௪ ௰௪ ௫ ௨௨ ௨ தீமோ ௧ ௬.

8 அப. ௰௨ ௪௨ ௰௯ ௨௰ கொலோ ௧ ௬.

9 யோவா ௰௨ ௪௨

10 லூக் ௨௧ ௰௫ அப ௫ ௩௯ ௨ மோ ௪ ௰௨ ஏசா ௫௪ ௰௭

11 ௧ இரா ௨௧ ௰, ௰௩ மத ௨௬ ௫௯, ௬௰

12 அப ௨௫ ௮

13 தானி ௬ ௫

* அலலது சடஙகுகளை

14 அப. ௨௨. ௧.

௰௧ அபபொழுது அவர்கள் இரகசியமாய்ச் சில மனிதரைச் சமபாதித்து, இவன் [11]மோசேயுக்கும் பராபரனுக்கும் விரோதமாகத் தூஷணமான வசனங்களைப் பேசக் கேட்டோம் என்று சொல்லும்படி செய்து,

௰௨ பின்பு சனங்களையும், மூப்பரையும், வேதபாரகரையும் எழுபபி, அவன்மேல் பாய்நது, அவனைப பெரிய சங்கத்தாருக்குமுன்பாக இழுத்துக்கொண்டுபோய்,

௰௩ பொய்ச்சாட்சிகளையும் ஏற்படுததினாகள்; அவர்கள் சொன்னது: இவன் பரிசுத்த ஸதலத்திறகும வேத நூலுக்கும் தூஷணமான வசனஙகளை ஓயாமல் பேசுகிறான்.

௰௪ நாசரேத்தூராராகிய [12]அநத இயேசு என்பவர் இநத ஸதலத்தை அழிததது, [13]மோசே நமககுக் கொடுத்த முறைமைகளை* மாற்றுவாரென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள.

௰௫ பெரிய சங்கத்தில் உளுக்காந்திருநத யாவரும் அவன்மேல் கண்ணோட்டமானபொழுது, அவனுடைய முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்.

௭. அதிகாரம்.

௰௩ ¶ பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போபட்டணத்தைவிட்டு, பம்பீலியா நாட்டிலுள்ள பெருகே பட்டணத்திற்குப் போனார்கள்; [5]யோவான் அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினான்.

௰௪ ¶ பின்பு அவர்கள் பெருகே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் பிசீதிய நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்குப் போய், [6]ஓய்வு நாளிலே செபஆலயத்திற்குப் போய் உளுக்காந்தார்கள்.

௰௫ (அங்கே) [7]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன (ஆகமமும்) வாசிக்கப்பட்டுத் தீர்ந்தபின்பு, சகோதரர்களே, [8]நீங்கள் சனங்களுக்குப் புத்திசொல்ல விரும்பினால் சொல்வீர்களாக என்று ஆலயத்தலைவர் அவர்களுக்குச் சொல்ல ஆள் அனுப்பினார்கள்.

௰௬ ¶ அப்பொழுது [9]பவுல் எழுந்து கையினால் சாடைகாண்பித்துச் சொன்னதாவது: இஸ்ரவேலரே, [10]பராபரனுக்குப் பயந்து நடக்கிற சகல சனங்களே, கேட்பீர்களாக.

௰௭ இந்த இஸ்ரவேல் சந்ததியாருடைய [11]தேவன் நம்முடைய முன்னோர்களைத் தெரிந்துகொண்டு [12]எகிப்துதேசத்திலே சஞ்சரித்துவந்த அவர்களுடைய சந்ததியை மேன்மைப்படுத்தி, [13]பலத்த வல்லமையினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி,

௰௮ [14]நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்களைப் போஷித்துக்கொண்டு,*

௰௯ [15]கானான்தேசத்திலுள்ள ஏழு வகைச் சனக்கூட்டங்களை நீக்கிவிட்டு, [16]அவர்களுடைய தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டு,

௨௰ [17]பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்திற்குள்ளே [18]சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்காக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.

௨௧ சாமுவேலின் காலம்முதல், [19]அவர்கள் ஒருஇராசா வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்; அதின்படி பராபரன் அவர்களுக்குப் பென்யமீனுடைய கோத்திரத்தானாகிய கீசென்பவனுடைய குமாரனாகிய சவுலைக் கொடுத்தார்; அவன் நாற்பதுவருஷம் இருந்தான்.

௨௨ [20]பின்பு அவர் அவனை விலக்கி, இயேசே என்பவனுடைய கு

கி. பி. ௪௫.

1 அப ௭. ௰௧ ௨ தீமோ ௩ ௮
2 அப ௪ ௮
3 மத் ௰௩. ௩௮ யோவா ௮. ௪௪ ௧ யோ ௩. ௮
4 ௨ மோ ௯ ௩ ௧ சாமு ௫ ௬.
5 அப ௰௫ ௩௮
6 அப ௰௪. ௰௧ ௰௭ ௨. ௰௮ ௪
7 லூக் ௪ ௰௬. ௨௭ ௪௪
8 எபி ௰௩ ௨௨
9 அப ௰௨ ௰௭
10 ௨௬, ௪௨, ௪௩ ௪௪ அப ௰௯
11 ௫ மோ ௭ ௬, ௭.
12 ௨ மோ. ௧ ௧ சங. ௱௫ ௨௩, ௨௪ அப ௭. ௰௭
13 ௨ மோ ௬ ௬ ௰௩ ௰௪, ௰௬
14 ௨ மோ ௰௬ ௩௫ ௪ மோ ௰௪ ௩௩. ௩௪ சங ௯௫ ௯, ௰ அப ௭ ௩௬

* கிரேக்கு, தைத் தாய தன பிளளைகளைக் காப பாற்றுகிறது போல அவாகளைக் காபபாறறி. ௫ மோ ௧ ௩௧

15 ௫ மோ ௭ ௧
16 யோசு ௰௪ ௧, ௨ சங ௭௮ ௫௫
17 நியா. ௨ ௰௬
18 ௧ சாமு ௩ ௨௰
19 ௧ சாமு. ௮ ௫ ௰ ௧.
20 ௧ சாமு ௰௫ ௨௩, ௨௬, ௨௮ ௰௬ ௧ ஓசே ௰௩ ௰௧

மாரனாகிய [1]தாவீதை [2]எனது திருவுள்ளத்திற்கு ஏற்றவன் என்று கண்டேன், அவன் என்னுடைய சித்தத்தின்படி முழுவதும் செய்வான் என்று தாவீதைக்குறித்துச் சாட்சியிட்டு, [3]அவனையே அவர்களுக்கு இராசனாக ஏற்படுத்தினார்.

௨௩ [4]அவனுடைய சந்ததியிலே பராபரன் [5]தமது வாக்குத்தத்தத்தின்படி, இஸ்ரவேலருக்காக [6]இயேசு என்னும் இரட்சகனைத் தோன்றப்பண்ணினார்.

௨௪ [7] அவருடைய பிரவேசத்திற்குமுன்னே யோவான் மனம்திருப்புதற்கேற்ற ஞானஸ்நானத்தை எல்லா இஸ்ரவேலருக்கும் பிரசங்கித்தான்.

௨௫ ¶ மேலும் யோவான் (பணிவிடை) ஓட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது (சனங்களுடனே) சொன்னதாவது: [8]நீங்கள் என்னை எவனென்று எண்ணுகிறீர்கள்? நான் அவரல்ல, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாத இரட்சையை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரனல்ல என்று சொன்னான்.

௨௬ ஆபிரகாமின் சந்ததியாராகிய சகோதரர்களே, பராபரனுக்குப் பயப்படுகிற மற்றவர்களே, [9]இந்த இரட்சிப்பை அறிவிக்கிற உபதேசம் உங்களுக்கே அனுப்பப்பட்டிருக்கின்றது.

௨௭ என்னவெனில், எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்களுடைய தலைவரும், அவரையாவது [10]ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற [11]தீர்க்கதரிசிகளின்வாக்கியங்களையாவது அறியாமல், [12]அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினாலே அவைகளை நிறைவேற்றினார்கள்.

௨௮ [13]மரணத்திற்கு எதுவான ஒன்றையும் (அவரிடத்தில்) காணாமலிருந்தும், [14]அவர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு, பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

௨௯ [15]அவரைக்குறித்து எழுதியிருக்கிற யாவையும் அவர் முடித்தபின்பு, (சிலர்) [16]அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.

௩௰ [17]பராபரன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

௩௧ அன்றியும் அவர் தம்முடனே கூட [18]கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு [19]அநேகநாள் தரிசனையானார்; [20]அவர்களே சனங்களுக்குமுன்பாக அவருடைய சாட்சிகளாய் இருக்கிறார்கள்.

௩௨ [21]நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைச் செனிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்திலே எழுதியிருக்கிறபடி,

௩௩ இயேசுவை எழுப்பினதினாலே பராபரன் (நம்முடைய) முன்னோர்களுக்கு உண்டான [22]வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்.

௩௪ அவர் மறுபடியும் மரியாதபடிக்கு, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பச் சித்தமானபடியினாலே [23]தாவீதிற்குச் (செய்த) உறுதியான தயவுகளை* உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார்.

௩௫ அன்றியும் [24]உம்முடைய பரிசுத்தவான் அழிவை அடையும்படி செய்யமாட்டீர் என்று வேறொரு சங்கீதத்திலே சொல்லியிருக்கின்றது.

௩௬ தாவீது தனது காலத்திலே பராபரனுடைய சித்தத்திற்கு ஊழியம்செய்த† பின்பு [25]நித்திரை

கி. பி. ௪௫.

[1] சங் ௮௯ ௨௰
[2] ௧ சாமு. ௰௩ ௰௪ அப ௭ ௪௬
[3] ௧ சாமு ௰௬. ௰௩. ௨ சாமு. ௨. ௪. ௫. ௩
[4] ஏசா. ௰௧ ௧ லூக் ௧ ௩௨, ௬௯ அப ௨ ௩௰ ரோ ௧ ௩
[5] ௨ சாமு ௭ ௰௨ சங் ௱௩௨ ௰௧
[6] மத் ௧ ௨௧ ரோ ௰௧ ௨௬
[7] மத் ௩ ௧ லூக் ௩ ௩
[8] மத் ௩, ௰௧ மாற் ௧ ௭, லூக். ௩ ௰௬ யோவா ௧ ௨௰, ௨௭
[9] மத் ௰ ௬ லூக் ௨௪ ௪௭ ௪௬ ௪௭. அப ௩ ௨௬
[10] லூக் ௨௩ ௩௪ அப ௩ ௰௭ ௧ கொரி ௨ ௮
[11] ௰௪. ௰௫ வசனங்கள் அப ௰௫ ௨௧
[12] லூக் ௨௪ ௨௰, ௪௪ அப ௨௬ ௨௨ ௨௮ ௨௩
[13] மத் ௨௭ ௨௨. மாற் ௰௫ ௰௩, ௰௪ லூக் ௨௩ ௨௧, ௨௨ யோவா ௰௯ ௬, ௰௫
[14] அப ௩ ௰௩, ௰௪
[15] லூக் ௰௮ ௩௧ ௨௪ ௪௪ யோவா ௰௯ ௨௮, ௩௰, ௩௬, ௩௭
[16] மத் ௨௭ ௫௯ மாற் ௰௫ ௪௬. லூக் ௨௩ ௫௩ யோவா. ௰௯ ௩௮
[17] மத் ௨௮ ௬ அப ௨ ௨௪ ௩ ௰௩, ௰௫, ௨௬ ௫ ௩௰
[18] அப ௧ ௰௧
[19] மத் ௨௮ ௰௬ அப ௧ ௩ ௧ கொரி ௰௫ ௫ ௬, ௭
[20] அப. ௧ ௮ ௨ ௩௨, ௩ ௰௫ ௫ ௩௨

---

[21] சங் ௨ ௭ எபி ௧ ௫ ௫. ௫ —[22] ௧ மோ ௩ ௰௫ ௰௨ ௩. ௨௨ ௰௮. அப ௨௬ ௬ ரோ ௪ ௰௩ கலா. ௩ ௰௬ —[23] ஏசா ௫௫ ௩ —* அல்லது பரிசுத்தமானவைகளை, நீதியானவைகளை.—[24] சங் ௰௬ ௰ அப ௨ ௩௧.—† அல்லது தாவீது தன காலத்தாருக்குப பராபரனுடைய சித்தத்தினபடி பணிவிடை செயது ௨௨ வச. சங் ௭௮ ௭௨.—[25] ௧ இரா. ௨ ௰. அப ௨ ௨௯.

அடைந்து, தன் பிதாக்களிடத்தில் சேர்க்கபபட்டு, அழிவை அடைந்தான்.

௩௭ பராபரனாலே எழுபபபபட்டவர் அழிவை அடையவில்லை.

௩௮ ¶ ஆதலால் சகோதரர்களே [1]அவர்மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிபபு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

௩௯ அல்லாமலும் மோசேயின் நியாயபபிரமாணத்தினாலே நீங்கள் விடுதலையாக்கக்கூடாத காரியம் எதுவோ, அதில் நின்று [2]விசுவாசிக்கிற யாவனும் அவராலே விடுதலையாகிறான் என்று அறிந்துகொள்வீர்களாக.

௪௰ [3]அன்றியும் தீர்க்கதரிசிகளுடைய புத்தகத்திலே, அசட்டைககாரரே பாருஙகள, உஙகள் நாளகளில் ஒரு கிரியை செய்வேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச சொன்னாலும் நீங்கள் விசுவாசியாமல் இருபபீர்கள், அது 'அபபடிப்பட்ட கிரியையாகவே இருக்கும்

௪௧ ஆதலால் பிரமிபபடைந்து அழிநதுபோங்கள் என்று சொல்லியிருக்கிறதின்படி உஙகளுக்கு வராதபடிக்கு, சாவதானமாய் இருபபீாகளாக எனறான்

௪௨ பின்பு அவாகள் புறப்படுகையில், மறு ஓயவுநாளிலே* அநத வசனஙகளைத் தஙகளுக்குச சொல்லவேண்டுமெ என்று புறத்தேசத்தார்வேண்டிக்கொண்டார்கள்.

௪௩ மேலும் செபஆலய சபை கலைநதுபோனபின்பு யூதர்களிலும், யூதமார்க்கத்தில் பிரவேசித்துத தேவபத்தியாயிருந்தபோகளிலும் அநேகர் பவுலுக்கும் பருனபாவுக்கும் பின்சென்றாகள், அவர்களுடனே அவர்கள் பேசிக்கொண்டு, [4]பராபரனுடைய கிருபையினாலே நிலைகொண்டிருக்கும்படிககுப் [5]புத்திசொன்னார்கள்.

௪௪ ¶ மறு ஓய்வுநாளிலே கொஞ்சம்குறைய பட்டணத்தார் எல்லாரும் பராபரனுடைய வசனத்தைக் கேட்கும்படிக்குக் கூடிவந்தார்கள்.

௪௫ யூதர்கள் அவ்வளவு சனங்களைக் கண்டபொழுது, [6]பொறாமையினாலே நிறையபபட்டு, பவுல் சொன்னவைகளுக்கு விரோதமாய்ப பேசினார்கள்; விரோதிததும் தூஷணித்தும் வந்தார்கள்.

௪௬ அபபொழுது பவுலும் பருனபாவும் தயிரியங்கொண்டு சொன்னதாவது: [7]முதலாவது உஙகளுககே பராபரனுடைய வசனத்தைச சொல்லவேண்டியதாய் இருநதது; [8]நீங்கள் அதைத் தளளி உஙகளை நித்தியசீவனுக்கு அபாத்திரா என்று தீர்ததுக்கொள்ளுகிறபடியினாலே, [9]நாங்கள் புறத்தேசத்தாரிடத்திற்குப் போகிறோம்.

௪௭ நீா பூமியின் எல்லைபரியந்தமும் இரட்சகராய இருக்கும்படிக்கு, [10]உம்மைப புறத்தேசததார்களுக்கு ஒளியென்று ஏற்படுத்தினேன் என்கிற வேதவாக்கியத்தினபடி பராபரன் எங்களுக்குக் கட்டளையிட்டருளினபடியினாலே அபபடிச் செய்கிறோம் என்றார்கள்.

௪௮ ¶ புறததேசத்தார்கள் அதைக் கேட்டுச் சந்தோஷம் அடைந்து, காத்தருடைய வசனத்தைப் புகழ்நது, [11]நிததியசீவனுக்கு நியமிககப்பட்டவர்கள் எவர்களோ, அவர்கள் விசுவாசித்தார்கள்

௪௯ பின்பு கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரபலமாயிற்று.

௫௰ யூதர்கள் பத்தியும் கனமும் பொருந்திய ஸ்திரிகளையும் பட்டணத்தின் முதலாளிகளையும் எழுபபி, [12]பவுல் பருனபா என்பவர்களைத் துன்பப்படுத்தும்படி செய்து, தஙகள் எல்லைகளிலிருந்து அவர்களைத் துரத்தினார்கள்.

௫௧ [13]அபபொழுது அவர்கள் தங்கள் கால்களில் பட்ட தூளை அவர்கள்மேல் சாட்சியாக உதறிப்

கி. பி. ௪௫.

[1] எரே. ௩௧, ௩௪. தானி ௯, ௨௪ லூக் ௨௪ ௪௭. ௧ யோ. ௨ ௰௨

[2] எசா ௫௩, ௰௧ உரோ ௩ ௨௮ ௮ ௩ எபி ௭ ௰௯

[3] எசா ௨௯ ௰௪ ஆப ௧ ௫

* கிரேக்கபாஷையில் அடுதத வாரத்தின ஓயவுநாளில்.

[4] அப ௰௧ ௨௩ ௰௪ ௨௨

[5] தீத ௨, ௰௧ எபி ௰௨ ௰௫. ௧ பே ௫ ௰௨

[6] அப ௰௮ ௬ ௧ பே ௪ ௪ யூதா ௰

[7] மத ௰ ௬ அப ௩ ௨௬. ௨௬ வச உரோ ௧ ௰௬

[8] உ மோ ௩௨ ௰ ௫ மோ ௩௨ ௨௧ எசா ௫௫ ௫ மத ௨௧ ௪௩ உரோ ௰ ௰௯

[9] அப ௰௮ ௬ ௨௮ ௨௮

[10] எசா ௪௨ ௬ ௪௯ ௬ லூக் ௨ ௩௨

[11] அப ௨ ௪௭

[12] ௨ தீமோ. ௩ ௰௧

[13] மத் ௰ ௰௪ மாற். ௬ ௰௧ லூக் ௯ ௫ அப ௰௮ ௬

போட்டு, இக்கோனியா பட்டணத்திற்குப் போனார்கள்; [1]சீஷரானவர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் நிறையப்பட்டார்கள்.

௰௪. அதிகாரம்.

௧ பவுலும் பருனபாவும் துன்பப்பட்டு இக்கோனியாவை விட்டது ௮. இலீஸ்திராவிலேபவுல் ஒரு சப்பாணியைக் குணமாக்கினதினால் அவர்கள் தேவர்களென்று எண்ணப்பட்டது. ௰௯. பவுல் கல்லெறியப்பட்டது. ௨௧ அவர்கள பற்பல ஊர்களிலிருந்த சபைகளைச் சந்தித்துச் சீஷர்களை விசுவாசத்திலும் பொறுமையிலும் ஸ்திரப்படுத்தி, ௨௬ அந்தியோகுக்குத் திரும்பிவந்து பராபரன் அவர்களைக்கொண்டு செய்ததை அறிவித்தது

இக்கோனியாப் பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய செபஆலயத்திற்குப் போய்ப் பிரசங்கம் பண்ணினபொழுது, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான சனங்கள் விசுவாசித்தார்கள்.

௨ விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறத்தேசத்தாருடைய மனதை எழுப்பி, பகை உண்டாக்கினார்கள்.

௩ அப்படியிருந்தும், அவர்கள் அங்கே நெடுங்காலம் சஞ்சரித்து, கர்த்தரைக்குறித்துத் தயிரியமாய்ப் போதகம்பண்ணினார்கள்; [2]அவர் தமது கிருபையைக் காட்டிய வசனத்திற்குச் சாட்சி உண்டாக அதிசயங்களும் அற்புதங்களும், அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகித்தார்.

௪ அந்தப் பட்டணத்தின் சனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் [3]சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்தார்கள்.

௫ அப்பொழுது [4]அவர்களை நிந்தித்து அவர்கள்மேல் கல்லெறியும்பொருட்டாக, புறத்தேசத்தாரும் யூதர்களும் அவர்களுடைய தலைவருடனேயுங்கூடக் கலகம்பண்ணுகிறதை அவர்கள் அறிந்து,

௬ [5]இலிக்கவோனியா நாட்டிலுள்ள இலீஸ்திரா ஊருக்கும் தெருபை ஊருக்கும் அவைகளைச் சூழ்ந்த புறத்திற்கும் ஓடிப்போய்,

௭ அங்கே சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டு வந்தார்கள்.

௮ ¶ [6]இலீஸ்திரா ஊரிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்து, ஒருக்காலும் நடவாமல் பெலனில்லாத கால்களோடே உளுக்கார்ந்திருந்து,

௯ பவுல் பேசுகிறதைக் கேட்டான்; அவன்மேல் பவுல் கண்ணூன்றி, [7]இரட்சிக்கப்படும்படிக்கான விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு,

௰ [8]நீ உன் கால்களை ஊன்றி, செம்மையாய் எழுந்து நில்லென்று மிகுந்த சத்ததோடே சொன்னான்; உடனே அவன் குதித்து எழுந்து நடந்தான்.

௰௧ பவுல் செய்ததைச் சனங்கள் கண்டு, [9]தேவர்கள் மனிதரூபம் எடுத்து நம்மிடத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று இலிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

௰௨ மேலும் பருனபாவை யூப்பித்தர் தேவனென்றும் பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினாலே, அவனை மெருக்கூரி தேவனென்றும் அழைத்தார்கள்.

௰௩ அல்லாமலும், பட்டணத்திற்குப் புறம்பே இருந்த யூப்பித்தருடைய பூசாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலின் அருகே கொண்டுபோய்ச் [10]சனங்களோடேகூடப் பலியிட மனதாயிருந்தான்.

௰௪ அப்போஸ்தலராகிய பருனபாவும் பவுலும் அதைக் கேள்விப்பட்டு,(விசனத்தினாலே)[11]தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

௰௫ கூட்டத்திற்குள் ஓடி, மனிதர்களே, [12]என்னத்திற்கு இப்படிச் செய்கிறீர்கள்? [13]நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனிதராயிருந்து,

௰௬ [14]நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு [15]வானத்தையும்

இ. பி. ௪௬.

1 மத். ௫. ௰௨. யோவா. ௰௬. ௨௨. அப். ௨. ௪௬.
2 மாற். ௰௬ ௨௰ எபி ௨. ௪.
3 அப. ௰௩ ௩.
4 ௨ தீமோ. ௩. ௰௧
5 மத் ௰. ௨௩.
6 அப. ௮ ௪
7 மத். ௮. ௰: ௯. ௨௮, ௨௯.
8 ஏசா ௩௫ ௬
9 அப ௨௮. ௬.
10 தானி ௨ ௪௬
11 மத். ௨௬. ௬௫
12 அப ௰ ௨௬
13 யாக் ௫ ௰௭ வெளி ௰௯ ௰
14 ௧ சாமு ௰௨. ௨௧. ௧ இரா ௰௬. ௰௩. எரே. ௰௪ ௨௨. ஆமோ. ௨ ௪. ௧ கொரி ௮ ௪
15 ௧ மோ ௧. ௧ சங். ௧௪௬ ௬ வெளி ௰௪. ௭.

பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின [1]சீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டும் என்று உங்களுக்குச் சுவிசேஷமாய்ச் சொல்லுகிறோம்; [2]சென்ற காலங்களில் அவர் எல்லாப் புறத்தேசத்தாரையும் தஙகள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்,

௰௭ அவர்களுக்கு [3]நன்மைசெய்துவந்து, வானததிலிருந்து மழைகளையும் செழிபபுள்ள காலங்களையும் நமக்குக் கொடுத்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, [4]இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சிகொடாமல் இருக்கவில்லையென்று கூப்பிட்டார்கள்.

௰௮ இப்படி அவர்கள் சொல்லி, தங்களுக்குச் சனங்கள் பலியிடாதபடிக்குப் பிரயாசத்தோடே நிறுத்தினார்கள்.

௰௯ ¶ பின்பு [5]அந்தியோகியா ஊரிலும் இக்கோனி ஊரிலுமிருந்து யூதர்கள் அங்கே போய், சனங்களுக்குப போதனைசெய்து, [6]பவுலின்மேல் கல்லெறிந்து, அவன் மரித்தான் என்று நினைத்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே இழுத்தார்கள்.

௨௰ அங்கே சீஷர்கள் அவனைச் சூழ்ந்துகொள்ளுகையில், அவன் எழுந்து, ஊருக்குள் பிரவேசித்து, மறுநாளிலே பருனபாவுடனே தெருபை ஊருக்குப் போனான்.

௨௧ ¶ அந்த ஊராருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து, [7]அநேகரைச் சீஷராக்கின* பின்பு, அவர்கள் இலீஸ்திரா ஊருக்கும் இக்கோனி ஊருக்கும் அந்தியோகியா ஊருக்கும் திரும்பி,

௨௨ சீஷருடைய ஆத்துமாக்களை ஸ்திரப்படுத்தி, [8]விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படிக்குப் புத்திசொல்லி, [9]நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்ப் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டார்கள்.

௨௩ அன்றியும் சபைகள்தோறும் அவர்களுக்காக [10]மூப்பரைத் தெரிந்து ஏற்படுத்தி உபவாசித்துச் செபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துக்கொண்டிருந்த கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்; பின்பு அவர்கள் பிசீதியா நாட்டைக் கடந்துபோய், பம்பீலியா நாட்டிலே சேர்ந்து,

௨௪ பெருகே ஊரிலே சுவிசேஷவசனத்தை அறிவித்து,

௨௫ அத்தாலியா பட்டணத்திற்குச் சென்று, அங்கே கப்பலேறி,

௨௬ தாங்கள் [11]நிறைவேற்றின கிரியைக்காகப் பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கபபட்டுப் [12]புறப்பட்ட அந்தியோகியா பட்டணத்திற்குப் போனார்கள்.

௨௭ ¶ அங்கே சேர்ந்தபொழுது, அவர் சபையைக் கூடிவரப்பண்ணி, [13]தங்களால் பராபரன் செய்தவைகளையும், [14]அவர் புறத்தேசத்தார்களுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் என்பதையும் அறிவித்து, பின்பு அங்கே சீஷருடனேகூட அநேககாலம் சஞ்சரித்துக்கொண்டுவந்தார்கள்.

௰௫. அதிகாரம்.

௧ சன்னத்தைக்குறித்துப பெரியவாக்குவாதம உண்டானது ௩. அபபோஸ்தலர் அதைக்குறித்து ஆலோசித்தது ௨௨. அவர்களுடைய தீர்மானத்தை நிருபங்களைவழியாயச் சபைகளுக்கு அனுபபினது ௩௬. பவுலும பருனபாவும ஒருமித்துச் சகோதரரைச் சகதிக்க நினைத்தும் விகற்பபபட்டுப் பிரிந்துபோனது.

அக்காலத்திலே [15]சிலர் யூதேயாவிலிருந்துபோய், [16]நீங்கள் மோசேயின் முறைமையின்படியே [17]விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.

௨ அதினாலே கலகமும், அவர்களுக்கும் பவுல் பருனபா என்ப

கி. பி. ௪௯.

1 ௧ தெச. ௧. ௯.
2 சங். ௮௧. ௰௨ அப். ௰௭. ௩௰ ௧ பே. ௪. ௩
3 ௩ மோ. ௨௬. ௪ ௫ மோ. ௰௧. ௰௪ ௨௮. ௰௨. யோபு ௫. ௰ சங். ௬௫. ௯ ௬௮. ௯. ௱௪௭. ௮ எரே. ௰௪. ௨௨ மத். ௫. ௪௫
4 அப். ௰௭. ௨௭ உரோ. ௧. ௨௰.
5 அப். ௰௩. ௪௫.
6 ௨ கொரி. ௰௧. ௨௫ ௨ தீமோ. ௩. ௰௧
7 மத். ௨௮. ௰௯
* அல்லது போதித்த
8 அப். ௰௧. ௨௩ ௰௩. ௪௩.
9 மத். ௰. ௩௮ ௰௬. ௨௪ லூக். ௨௨. ௨௮, ௨௯ உரோ. ௮. ௰௭ ௨ தீமோ. ௨. ௰௧, ௰௨ ௩. ௰௨
10 தீத். ௧. ௫.
11 அப். ௰௩. ௧, ௩
12 அப். ௰௫. ௪௰
13 அப். ௰௫. ௪, ௨௧. ௰௯
14 ௧ கொரி. ௰௬. ௯ ௨ கொரி. ௨. ௰௨. கொலோ. ௪. ௩. வெளி. ௩. ௮
15 கலா. ௨. ௰௨.
16 ௧ மோ. ௰௭. ௰. ௩ மோ. ௰௨. ௩.
17 யோவா. ௭. ௨௨ இ. கலா. ௫. ௨ பிலி. ௩. ௨. கொலோ. ௨. ௮, ௰௬.

வர்களுக்கும் மிகுந்த தருக்கமும் உண்டானபொழுது, அநதத் தருக்ககாரியத்தைக்குறித்துப [1]பவுலும், பருனபாவும், தங்களில் வேறே சிலரும் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டும் என்று தீர்மானம் பண்ணினார்கள்.

௩ அந்தப்படி [2]அவர்கள் சபையாராலே வழிவிட்டு அனுபபப்பட்டபின்பு பெனீக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப்போய், [3]புறத்தேசத்தார் மனம்திருபபினதை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.

௪ எருசலேமிலே அவர்கள் சேர்ந்து, சபையினாலும் அப்போஸ்தலராலும் மூபபராலும் எற்றுக்கொள்ளபபட்டபின்பு, [4]தஙகளால் பராபரன் செய்தவைகளை அறிவித்தார்கள்.

௫ அபபொழுது பரிசேயராகிய வகுப்பிலே விசுவாசிகளான சிலர் எழுந்து* அவர்கள் [5]விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொண்டு மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படிக்கு உத்தரவு அனுப்பவேண்டும் என்றார்கள்.

௬ ¶ பின்பு அபபோஸ்தலரும் மூப்பரும் அந்தக் காரியத்தை ஆராய்ந்து பார்க்கும்படிக்குக் கூடினார்கள்.

௭ மிகுந்த தருக்கம் உண்டானபொழுது, பேதுரு எழுந்து அவர்களுடனே சொன்னதாவது: [6]சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி, பராபரன் அநேக நாள்களுக்குமுன்னே உங்களில் ஒருவனாகிய என்னுடைய வாயினாலே புறத்தேசத்தார்கள் சுவிசேஷத்தின் வார்த்தையைக் கேட்டு, விசுவாசிகளாகும்படி (என்னைத்) தெரிந்தெடுத்தார்.

௮ மேலும் [7]இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன் நமக்குக் கொடுத்ததுபோல, அவர்களுக்கும் [8]பரிசுத்தஆவியைக் கொடுத்து,

௯ (இவ்விதமாய்) அவர்களைக் குறித்துச் சாட்சியிட்டு, [9]அவர்கள் இருதயங்களை விசுவாசத்தினாலே சுத்தமாக்கி, அவர் [10]நமக்கும் அவர்களுக்கும் ஒரு வித்தியாசமும் பண்ணவில்லை.

௰ அப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் [11]நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷருடைய கழுத்தின்மேல் பிணைக்கிறதினாலே நீங்கள் பராபரனைச் சோதிக்கிறதென்ன?

௰௧ அப்படி அல்ல, [12]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறபிரகாரமாக, நாம் அப்படியே இரட்சிக்கபபடுவோம் என்று நம்பி இருக்கிறோமே என்றான்.

௰௨ ¶ அதன்பின்பு கூடிவந்த யாவரும் அமைந்திருந்து, பருனபாவும் பவுலும் தங்களாலே பராபரன் [13]புறத்தேசத்தார்களுக்குள்ளே செய்த அதிசயங்களையும் அற்புதங்களையும் விவரித்துச்சொல்லக் கேட்டார்கள்.

௰௩ ¶ அவர்கள் பேசி முடித்தபின்பு, [14]யாக்கோபு சொன்னதாவது: சகோதரர்களே, எனக்குச் செவிகொடுப்பீர்களாக.

௰௪ பராபரன் தமது நாமத்திற்காகப் புறத்தேசத்தார்களில் ஒரு சனக்கூட்டத்தை எடுத்துக்கொள்ளும்படிக்கு, முதலாவது அவர்களை நோக்கிபபார்த்ததைச் [15]சீமோன் சொன்னானே.

௰௫ அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வசனங்களும் ஒத்திருக்கின்றன.

௰௬ மற்ற மனிதர்களும், என்னுடைய நாமத்தைப் பெற அழைக்கப்படும் புறத்தேசத்தார் எல்லாரும் பராபரனைத் தேடிக்கொள்ளும்படிக்கு,

௰௭ [16]நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்த தாவீதின் கூடா

கி. பி. ௫௨.

[1] கலா. ௨. ௧

[2] உரோ. ௰௫. ௨௪ ௧ கொரி ௰௬ ௬, ௰௧

[3] அப. ௰௪. ௨௭

[4] ௰௨ வச அப ௰௪ ௨௭: ௨௧ ௰௯.

* அல்லது அவர்கள் சொன்னதென்னவென்றால் வேண்டுமென்பார்களென்பதே.

[5] ௧ வசனம்.

[6] அப ௰ ௨௰ ௰௧ ௰௨.

[7] ௧ நாளா. ௨௮ ௯ அப ௧ ௨௪

[8] அப. ௰ ௪௪

[9] அப. ௰. ௰௫, ௨௮, ௪௩ ௧ கொரி ௧ ௨, ௧ பே ௧ ௨௨

[10] உரோ. ௰. ௰௨.

[11] மத் ௨௩ ௪. கலா ௫ ௧.

[12] உரோ. ௩ ௨௪ எபே. ௨. ௮ தீத் ௨ ௰௧ ௩ ௪, ௫

[13] அப. ௰௪ ௨௭.

[14] அப ௰௨ ௰௭.

[15] ௭ வச

[16] ஆமோ ௯ ௰௧, ௰௨.

ரத்தை மறுபடியும் எழுப்புவேன், அதில்இடிந்துபோன இடங்களைத் திரும்பக்கட்டி, அதைத் திரும்பச் செம்மையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாம் செய்கிற பராபரன் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கின்றதே.

௰௮ அநாதிகாலம்முதலாய்ப் பராபரனுடைய கிரியைகள் எல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கின்றன.

௰௯ [1]ஆகையால் புறத்தேசத்தார்களில் பராபரனிடத்திற்கு [2]மனந்திரும்புகிறவர்களைக் கலக்கப்படுத்தாதபடிக்கு,

௨௰ அசுசிப்படுத்துகிற [3]விக்கிரக போசனங்களுக்கும், [4]வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்தவைகளுக்கும், [5]இரத்தத்திற்கும் விலகும்படியே அவர்களுக்கு எழுதவேண்டும் என்று எண்ணுகிறேன்.

௨௧ பூர்வகாலம் முதற்கொண்டு, [6]செபஆலயங்களில் ஓய்வுநாள்தோறும் மோசேயின ஆகமங்கள் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பட்டணந்தோறும் அவைகளைப் பிரசித்தம்பண்ணுகிறவர்களும் உண்டே என்றான்.

௨௨ ¶ அப்பொழுது அப்போஸ்தலரும், மூப்பரும், சபையார் எல்லாரும் தங்களில் சகோதரருக்குள்ளே கனம்பொருந்திய [7]பருசபா என்னப்பட்ட யூதாவையும் சீலாவையும் தெரிந்துகொண்டு, அவர்களைப் பவுலுடனேயும் பருனபாவுடனேயும்கூட அந்தியோகியா பட்டணத்திற்கு அனுப்பவேண்டும் என்று யோசித்து எழுதின நிருபமாவது:

௨௩ அந்தியோகியா பட்டணத்திலும், சீரியா நாட்டின் மற்ற இடங்களிலும், கிலீக்கியா நாட்டிலும் இருக்கிற புறத்தேசத்தார்களிலிருந்து உண்டான சகோதரர்களுக்கு அப்போஸ்தலரும், மூப்பரும், (மற்றச்) சகோதரருமாகிய நாங்கள் சவுக்கியம் உண்டாகும்படி வாழ்த்துகிறோம்.

௨௪ எங்களால் [8]கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனம் அடையவேண்டும் என்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளினாலே உங்களைக் கலக்கப்படுத்தி, உங்கள் ஆத்துமாக்களைத் தள்ளாடப்பண்ணி இருக்கிறார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,

௨௫ நாங்கள் தெரிந்துகொண்ட சில மனிதரை நம்முடைய கர்த்தராகிய [9]இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும்விட எத்தனமாயிருந்தவர்களுமாய்,

௨௬ எங்களுக்குப் பிரியமானவர்களுமாய் இருக்கிற பருனபாவோடும் பவுலோடும்கூட உங்களிடத்திற்கு அனுப்பவேண்டுமென்று ஒருமனப்பட்டு யோசனைபண்ணிக்கொண்டு,

௨௭ அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்புகிறோம்; அவர்களும் இவைகளை வாக்கினாலே* உங்களுக்கு அறிவிப்பார்கள்.

௨௮ எவையெனில், [10]விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், [11]இரத்தத்திற்கும், நெருக்குண்டுசெத்ததற்கும், வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்கவேண்டும்; இதுவே அல்லாமல், வேறு அதிகமான பாரம் ஒன்றும் உங்கள்மேல் போடாமல் இருக்கும்படிக்கு,

௨௯ பரிசுத்தஆவியும் நாங்களும் சித்தமாயிருக்கிறோம்; மேல்சொல்லியவைகளில் நின்று நீங்கள் உங்களைக் காத்துக்கொண்டால் நன்றுசெய்வீர்கள், சுகமாயிருப்பீர்களாக என்று எழுதி அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினார்கள்.

கி. பி. ருஉ.

[1] உஅ. வச.
[2] க தெச. க. க
[3] க மோ, க௰.உ உ மோ. உ௰.க உக ஏசே. உ௰ க௰, க கொரி. அ, க வெளி. உ ௰ச, உ௰ ௰. உ௰, உஅ
[4] க கொரி. க க, ௰அ கலா. ௯ ௰க. எபே ௯ க கொலோ க ௯. க தெச, ச க. க பே ச க.
[5] க மோ கூ. ச. க மோ. க ௰எ. ௯ மோ. ௰உ. ௰க, உக.
[6] அப. ௰க ௰௯, உஎ
[7] அப க உக.
[8] க, வச. கலா உ ச. ௯ ௰உ தீத் க. ௰, ௰க
[9] அப ௰க ௰௯ ௰ச, ௰க க கொரி. ௰௯. க௰. உ கொரி. ௰க. உக, உக.

* அல்லது வாய மொழியாய.

[10] உ௰ வச. அப். உக உ௯. வெளி. உ ௰ச, உ௰.
[11] கமோ ௰எ ௰ச

௩௰ ¶ அவர்கள் அனுப்பிவிடப்பட்டு அந்தியோகியா பட்டணத்திற்குப்போய், சபையைக் கூடிவரச்செய்து, அந்த நிருபத்தைக் கொடுத்தார்கள்.

௩௰௧ அதை அவர்கள் வாசித்தபின்பு, அதில் அடங்கிய ஆறுதலான* வசனங்களைக்குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்.

௩௰௨ பின்பு யூதாவும், சீலாவும், தாங்களும் தீர்க்கதரிசிகளானபடியினாலே, அநேக வசனங்களினாலே சகோதரருக்குப் [1]புத்திசொல்லி, அவர்களை ஸ்திரப்படுத்தி,

௩௰௩ சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்துடனே [2]அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப்பட்டார்கள்.

௩௰௪ சீலா பின்னும் அங்கேதங்கினால், நலமாயிருக்குமென்று எண்ணியிருந்தான்.

௩௰௫ [3]அன்றியும் பவுலும் பருனபாவும் அந்தியோகியா ஊரிலே சஞ்சரித்து, வேறு அநேகரோடும்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து, சுவிசேஷமாய்ப் பிரசங்கித்துக்கொண்டு வந்தார்கள்.

௩௰௬ ¶ சில நாளுக்குப்பின்பு, பவுல் பருனபாவை நோக்கி, கர்த்தருடைய வசனத்தை நாம் அறிவித்திருந்த [4]சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர் சுகமாய் இருக்கிறார்களோ, இல்லையோ, என்று அதைப் பார்க்கும்படிக்குத் திரும்பிப் பிரயாணமாய்ப் போவோம் வா என்றான்.

௩௰௭ அப்பொழுது பருனபாவானவன், மாற்கு என்று அழைக்கப்பட்ட [5]யோவானைக் கூட அழைத்துக்கொள்ளும்படியோசனை சொன்னான்.

௩௰௮ பவுல் [6]பம்பீலியா நாட்டிலே தங்களுடனேகூடக் கிரியைக்கு வாராமல், தங்களை விட்டுப் பிரிந்துபோன அவனை அழைத்துக்கொள்ளத் தகாதென்று சொன்னான்.

௩௰௯ அப்பொழுது கோபம் உண்டானதினாலே அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்; பருனபாவானவன் மாற்கைக் கூட்டிக்கொண்டு கப்பலேறி, சீப்புரு தீவுக்குப் போனான்.

௪௰ பவுலானவன் சீலாவைத் தெரிந்துகொண்டு, [7]சகோதரராலே பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு,

௪௰௧ புறப்பட்டுச் சீரியா நாட்டிலேயும் கிலீக்கியா நாட்டிலேயும் திரிந்து, [8]சபைகளை ஸ்திரப்படுத்தினான்.

௰௬. அதிகாரம்.

௧. பவுல் தீமோத்தேயுவைச் சன்னத்தப்பண்ணி, ௭ பரிசுத்தஆவியினால் மறுதேசங்களுக்குப் போகத் தரிசனையடைந்து, ௰௪. லீதியாளைக் குணமாக்கி, ௰௬. ஒரு பேயைத் துரத்தினது ௰௯. அதின் நிமித்தம் பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டது ௨௬ காவற்கதவுகள் திறந்தது ௩௩. காவற்காரன் குணப்பட்டது. ௩௭. அவர்கள் விடுதலையானது

[9]பின்பு அவன் தெருபை ஊருக்கும் இலீஸ்திரா ஊருக்கும் போனான்; அங்கே [10]தீமோத்தேயு என்னப்பட்ட சீஷன் இருந்தான்; [11]அவனுடைய தாய்* விசுவாசமுள்ள ஒரு யூதஸ்திரியானவள்; அவனுடைய தகப்பன் கிரேக்கனானவன்.

௨ [12]மேலும் அவன் இலீஸ்திராவிலும் இக்கோனியாவிலும் இருக்கிற சகோதரராலே நற்சாட்சி பெற்றவன்.

௩ அவனைப் பவுல் தன்னுடனே கூடப் புறப்படவேண்டும் என்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களில் இருக்கிற யூதர்கள் எல்லாரும் அறிந்தபடியால், [13]அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

௪ பின்பு அவர்கள் பட்டணங்களில் திரிந்து நடக்கையில், எருசலேமிலுள்ள அப்போஸ்தலராலும் மூப்பராலும் [14]தீர்மானம்பண்ணப்பட்ட சட்டங்களைக் காத்

கி. பி. ௫௨.

* அல்லது போதனைகளை.

[1] அப். ௰௪, ௨௨. ௰௮ ௨௩.

[2] ௧ கொரி ௰௬. ௰௧ எபி ௰௩.௨௩

[3] அப ௰௩ ௧

[4] அப். ௰௩ ௪, ௰௩, ௰௪, ௫௧. ௰௪. ௧, ௬, ௨௪, ௨௫.

[5] அப. ௰௨ ௰௨, ௨௫ ௰௩. ௫ கொலோ ௪ ௰ ௨ தீமோ ௪ ௰௧ பிலே ௨௪

[6] அப ௰௩ ௰௩.

[7] அப. ௰௪ ௨௬

[8] அப ௰௬ ௫

[9] அப ௰௪. ௬

[10] அப ௰௯. ௨௨ ரோ ௰௬ ௨௧ ௧ கொரி ௪ ௰௭. பிலி ௨ ௰௯ ௧ தெச ௩ ௨. ௧ தீமோ ௧ ௨ ௨ தீமோ ௧. ௨

[11] ௨ தீமோ. ௧ ௫

[12] அப் ௬. ௩.

[13] ௧ கொரி ௯ ௨௰ கலா ௨,௩. ௫ ௨.

[14] அப் ௰௫ ௨௮, ௨௯.

துக்கொள்ளும்படிக்குச் சனங்களுக்கு ஒப்புவித்தார்கள்.

௫ [1]அதினாலே சபைகள் விசுவாசத்திலே ஸ்திரப்பட்டு, நாள்தோறும் பெருகினார்கள்.

௬ ¶ பின்பு அவர்கள் பிரிகியா நாட்டிலேயும் கலாத்தியா நாட்டிலேயும் திரிந்துகொண்டு வருகிறபொழுது, ஆசியாதேசத்திலே அவர்கள் சுவிசேஷ வசனத்தைச் சொல்லாதபடிக்கு, பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,

௭ பின்பு மீசியா நாட்டிற்குப் போய், பித்தீனியா நாட்டிற்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; அதற்கும் இயேசுவினுடைய ஆவியானவர் தடைபண்ணினார்.

௮ [2]அப்பொழுது அவர்கள் மீசியா நாட்டைக்கடந்து, துரோவஸ்பட்டணத்திற்குப்போனார்கள்

௯ அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனை உண்டாயிற்று; என்னவெனில், [3]மக்கேதோனியா தேசத்தான் ஒருவன் நின்று, நீ மக்கேதோனியாவில் வந்து, எங்களுக்கு உதவிசெய்வாயாக என்று அவனை வேண்டிக்கொண்டதாக இருந்தது.

௰ அந்தத் தரிசனையை அவன் கண்டபொழுது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக்கு, கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயமாய் அறிந்து, உடனே [4]மக்கேதோனியா தேசத்திற்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம்பண்ணி,

௰௧ ¶ கப்பலேறித் துரோவஸ்பட்டணத்தைவிட்டு, நேராய்ச் சமொத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நேயாப்போலி பட்டணத்திற்கும் போய்,

௰௨ அங்கே இருந்து மக்கேதோனியா தேசத்தின் தலையானதுமாய்,* உரோமர் குடியேறினதுமாய் இருக்கிற [5]பிலிப்பி பட்டணத்தில் சேர்ந்து, சிலநாள் அதிலே சஞ்சரித்தோம்

௰௩ பட்டணத்திற்கு வெளியே ஆற்றின் அருகே வழக்கமாய்ச் செபம்பண்ணுதற்கான இடத்திற்கு ஓய்வுநாளில்,† நாங்கள் போய் அங்கே உட்கார்ந்து, கூடிவந்திருந்த ஸ்திரிகளுடனே பேசிக்கொண்டோம்.

௰௪ ¶ ஒரு ஸ்திரி தீயத்திரா ஊராளுமாய், இரத்தாம்பரம் விற்கிறவளுமாய், தேவபத்தியுள்ளவளுமாய், லீதியாள் என்று பேர்கொண்டவளுமாய் இருந்தாள்; அவள் பவுலினால் சொல்லப்பட்டவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவைகளுக்கு அவள் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு, [6]கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தார்.

௰௫ பின்பு அவளும் அவளுடைய குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றபொழுது, அவள் எங்களை நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தாவினிடத்தில் விசுவாசமானவள் என்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருப்பீர்களாக என்று [7]எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு இருத்தினாள்.

௰௬ ¶ நாங்கள் செபத்திற்குப் போகையில், பீத்தோனுடைய ஆவியைக்‡ [8]கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினாலே தன் எசமான்களுக்கு [9]மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு வேலைக்காரி எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

௰௭ அவள் பவுலுக்கும் எங்களுக்கும் பின்சென்று, இந்த மனிதர் உன்னதமான பராபரனுடைய ஊழியக்காரர், உங்களுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை அறிவிக்கிறவர்கள் என்று கூப்பிட்டாள்.

௰௮ இப்படி அநேகநாள் செய்தாள்; [10]அப்பொழுது பவுல் விசனம் அடைந்து திரும்பிக்கொண்டு அந்த ஆவியுடனே சொன்னது: இவளைவிட்டுப் புறப்படும்படிக்கு, இயேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே உனக்குக் கட்டளை

கி. பி. ௫௩.

[1] அப ௰௫ ௪௧
[2] ௨ கொரி. ௨ ௰௨ ௨ தீமோ ௪ ௰௩
[3] அப் ௰ ௩௦.
[4] ௨ கொரி. ௨ ௰௩
* அல்லது மூதன்மையானதும்.
[5] பிலி ௧ ௧
† ஓரேக்கு, தேவ ஆராதனை நாளிலே
[6] லூக் ௨௪ ௪௫
[7] ௧ மோ ௰௮ ௩. ௩௩ ௰௯ நியா ௰௯ ௨௧ லூக் ௨௪ ௨௯ எபி ௰௩. ௨.
‡ அல்லது குறி சொல்ல ஏவுகிற ஆவியை
[8] ௧ சாமு ௨௮. ௭
[9] அப ௰௯ ௨௪.
[10] மாற். ௧ ௨௫, ௩௪.

யிடுகிறேன் என்றான்; [1]அந்நேரம் அது புறப்பட்டுப்போயிற்று.

௰௯ ¶ [2]அவளுடைய எசமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்று என்று அறிந்து, [3]பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள * தலைவரிடத்திற்கு [4]இழுத்து,

௨௰ பின்பு அவர்களைத் துரைகளுக்கு முன்பாகக் கொண்டுபோய், யூதர்களாகிய இந்த மனிதர் நம்முடைய பட்டணத்தைக் [5]கலங்கப்பண்ணி,

௨௧ உரோமராகிய நம்மாலே ஏற்றுக்கொள்ளவும், செய்யவும்படாத முறைமைகளை அறிவிக்கிறார்கள் என்றார்கள்.

௨௨ அப்பொழுது சனங்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினதுமல்லாமல், துரைகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப் போடவும், [6]அவர்களை அடிக்கவும் சொல்லி,

௨௩ மிகுதியாய் அவர்களை அடிப்பித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படிக்குச் சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

௨௪ அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்றபொழுது, அவர்களை உள்ளுக்குள்ளான காவல் அறையிலே போட்டு, அவர்கள் கால்களை மரத்தில் அடித்து வைத்தான்.

௨௫ ¶ அப்படியிருந்தும், பாதியிராத்திரியிலே பவுலும் சீலாவும் செபம்பண்ணி, பராபரனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்ட மற்றவர்கள் அதைக் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

௨௬ சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையத்தக்கதாக [7]பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே [8]கதவுகளெல்லாம் திறக்கப்பட்டன; எல்லாரையும் கட்டியிருந்த சங்கிலிகள் அற்றுப்போயின.

௨௭ சிறைச்சாலைக்காரன் விழித்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, அதில் வைக்கப்பட்டவர்கள் ஓடிப்போனார்கள் என்று நினைத்து, கத்தியை உருவி, தன்னைக் கொலைசெய்ய எத்தனமாயிருந்தான்.

௨௮ பவுலென்பவன், நாங்கள் எல்லாரும் இங்கே இருக்கிறோம், ஆகையால் நீ உனக்குக் கேடொன்றும் செய்யாதிருப்பாயாக என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௨௯ அப்பொழுது அவன் விளக்குகளை அழைப்பித்து உள்ளே ஓடி, நடுக்கம் அடைந்தவனாய்ப் பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

௩௰ பின்பு அவர்களை வெளியே அழைத்துப்போய், ஆண்டவர்களே, [9]இரட்சிக்கப்படுகிறதற்கு நான் என்னசெய்யவேண்டும் என்றான்.

௩௧ அதற்கு அவர்கள், [10]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்வாயாக, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

௩௨ அவனுக்கும் அவனுடைய வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

௩௩ மேலும் அவ்விராத்திரியிலே அந்நேரத்திலே அவன் அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அடிகளாலான காயங்களைக் கழுவினான்; அன்றியும் அவனும் அவனைச் சேர்ந்த யாவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௩௪ பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குள் அழைத்துப்போய், [11]அவர்களுக்குப் போசனம்கொடுத்து, தானும் தன் வீட்டார் அனைவரும் பராபரனில் விசுவாசிகளானபடியினாலே மிகவும் மகிழ்ச்சியாயிருந்தான்.

கி. பி. ௫௯.

[1] மாற். ௰௬. ௰௭.
[2] அப. ௰௯. ௨௫, ௨௬.
[3] ௨. கொரி ௬ ௫.
* அல்லது நியாயஸ்தலத்திலுள்ள.
[4] மத். ௰ ௰௮.
[5] ௧ இரா. ௰௮. ௰௭ அப ௰௭ ௬.
[6] ௨. கொரி. ௬ ௫: ௰௧ ௨௩, ௨௫ ௧ தெச. ௨ ௨
[7] அப ௪. ௩௧
[8] அப. ௫ ௰௯ ௰௨ ௭, ௰.
[9] லூக் ௩ ௰ அப் ௨. ௩௭. ௩௮.
[10] யோவா ௩ ௰௬, ௩௬ ௬. ௪௭ ௧ யோ ௫ ௰.
[11] லூக். ௫. ௨௯: ௰௯ ௬.

௩௫ ¶ உதயமானபொழுது துரைகள் தலையாரிகளை அழைத்து, அந்த மனிதரை விட்டுவிடும்படி சொல்லுங்கள் என்று அனுப்பினார்கள்.

௩௬ சிறைச்சாலைக்காரன் பவுலுடனே சொன்னதாவது: உங்களை விடுதலையாக்கும்படிக்குத் துரைகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் புறப்பட்டுச் சமாதானத்துடனே போவீர்களாக என்றான்.

௩௭ அதற்குப் பவுல் சொன்னது: [1]உரோமராகிய எங்களை அவர்கள் நியாயம்விசாரியாமல், வெளியரங்கமாய் அடிப்பித்து, சிறைச்சாலையிலே போட்டு, இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களா? அப்படி அல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடக்கடவர்கள் என்றான்.

௩௮ இந்த வசனங்களைத் தலையாரிகள் துரைகளுக்கு அறிவித்தார்கள்; உரோமராய் இருக்கிறார்கள் என்று அவர்கள் கேட்டபொழுது, பயமடைந்து வந்து, அவர்களுடனே தயவாகப் பேசிக்கொண்டு,

௩௯ பின்பு அவர்களை வெளியே அழைத்துப்போய்ப் [2]பட்டணத்தைவிட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள்.

௪௰ அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு, [3]லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் புறப்பட்டுப்போனார்கள்.

௰௭. அதிகாரம்.

௧ பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் பிரசங்கித்தது ௪. அவ்விடத்தில் சிலர் அவனை விசுவாசித்ததும், சிலர் அவனைத் தூஷணித்ததும், ௰. அவன் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பப்பட்டு அங்கே பிரசங்கித்தது ௰௩. தெசலோனிக்கே பட்டணத்திலும் துன்பப்படுத்தப்பட்டு, ௰௫ பின்பு அத்தேனே பட்டணத்துக்கு வந்து அவ்வூராரோடே தர்க்கித்து. அவர்கள் அறியாத தேவனை அவர்களுக்கு அறிவித்தது ௩௨. அதனால் அநேகர் கிறிஸ்தவரானது

அவர்கள் அம்பிபோலிப் பட்டணத்தையும் அப்பொலோனிய பட்டணத்தையும் கடந்து, தெசலோனிக்கா பட்டணத்திற்குப் போனார்கள்; அங்கே யூதர்களுக்காக ஒரு செபஆலயம் இருந்தது

௨ பவுல் தன்வழக்கத்தின்படி [4]அவர்களிடத்திற்குப் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து, அவர்களுடனே சம்பாஷித்துக்கொண்டு வருகையில்,

௩ [5]கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டுமென்றுகாண்பித்து, நான் உங்களுக்கு அறிவிக்கிற இயேசுவே கிறிஸ்து என்று* திருஷ்டாந்தப்படுத்தினான்.

௪ [6]அவர்களில் சிலர் அதற்குச் சம்மதித்து, பவுலையும் [7]சீலாவையும்சேர்ந்துகொண்டார்கள்; தேவபக்தியுள்ள கிரேக்கரிலும் அநேகம்பேரும், கனம்பொருந்திய ஸ்திரிகளில் மிகுதியானபேரும் அப்படியே செய்தார்கள்.

௫ ¶ சம்மதியாத யூதர்கள் வைராக்கியம்கொண்டு, தெருக்களிலே திரிந்து அலைகிற சில பொல்லாத மனிதரைச் சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தைக் கலகப்படுத்தி, [8]யாசோனுடைய வீட்டிற்குமுன் போய் நின்று, அவர்களைச் சனங்களுக்குமுன்பாகக் கொண்டுபோகும்படி வகைதேடினார்கள்.

௬ அவர்களைக் காணாமலிருந்தபொழுது, அவர்கள் யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்துத் தலைவரிடத்திற்கு இழுத்துக்கொண்டுபோய் [9]உலகத்தைக் கலகப்படுத்துகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்.

௭ யாசோன் இவர்களை ஏற்றுக்கொண்டான், இவர்கள் எல்லாரும் [10]இயேசு என்னும் வேறொருவனை இராசாவென்று சொல்லி,

கி. பி. ௫௩.

[1] அப் ௨௨. ௨௫.

[2] மத் ௮. ௩௪.

[3] ௰௪ வச.

[4] லூக் ௪ ௰௬. அப ௯ ௨௰ ௰௩ ௰, ௰௪. ௰௪ ௧ ௰௯. ௰௯: ௰௯ அ

[5] லூக் ௨௪ ௨௬, ௪௬ அப ௰௮ ௨௮ கலா ௩ ௧

* அல்லது அவன் சொன்னது நான் உங்களுக்கு அறிவிக்கிற கிறிஸ்து வென்று

[6] அப ௨௮ ௨௪

[7] அப ௰௫ ௨௨, ௨௭, ௩௨, ௪௰

[8] உரோ ௰௬ ௨௧.

[9] அப. ௰௬ ௨௰

[10] லூக் ௨௩. ௨ யோவா ௰௯ ௰௨ ௧ பே ௨, ௰௩

இராயனுடைய கட்டளைக்கு விரோதமாய்ச் செய்கிறார்கள் என்று கூப்பிட்டு,

௮ இவைகளைக் கேட்டுக்கொண்ட சனங்களையும், பட்டணத்துத் தலைவரையும் கலங்கப்பண்ணினார்கள்.

௯ அப்பொழுது அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கையெழுத்து வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

௰ ¶ [1]உடனே சகோதரர்கள் இராத்திரிகாலத்திலே, பவுலையும் சீலாவையும் பெரோயா ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதர்களுடைய செபஆலயத்திற்குப் போனார்கள்.

௰௧ தெசலோனிக்கேயில் உள்ளவர்களிலும் அவர்கள் மேன்மையுள்ளவர்களாய் மிகுந்த மனப்பூர்வத்தோடே சுவிசேஷவசனத்தை ஏற்றுக்கொண்டு, [2]காரியங்கள் மெய்யாய் அப்படிப்பட்டவைகளோ அல்லவோ என்று நாள்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்தார்கள்.

௰௨ ஆதலால் அவர்களில் அநேகம்பேரும், கனம்பொருந்திய அநேக கிரேக்க ஸ்திரிகளும், புருஷரும், விசுவாசிகளானார்கள்.

௰௩ பெரோயா ஊரிலேயும் பராபரனுடைய வசனம் பவுலினால் அறிவிக்கப்படுகின்றதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபொழுது, அங்கேயும்போய், சனங்களைக் கலக்கப்படுத்தினார்கள்.

௰௪ [3]உடனே சகோதரர்கள் பவுலைச் சமுத்திரத்தின் வழியாய்ப் போக அனுப்பினார்கள்; சீலாவும் தீமோத்தேயும் பின்னும் அங்கே தங்கினார்கள்.

௰௫ பவுலை வழிநடத்திப்போனவர்கள் அவனை அத்தேனே பட்டணத்திற்கு அழைத்துப்போய், [4]அங்கே சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரம் தன்னிடத்தில் வரவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லும்படி கற்பனைபெற்றுப் புறப்பட்டுப் போனார்கள்.

௰௬ ¶ அவர்கள் வரும்படிக்குப் பவுல் என்பவன் அத்தேனே பட்டணத்தில் காத்துக்கொண்டிருக்கையில், பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைப்* பார்த்து, [5]மனதில் மிகுந்த வைராக்கியத்தை அடைந்துகொண்டு,

௰௭ பின்பு செபஆலயத்திலே யூதர்களோடும், மற்றத் தேவபத்தியுள்ள பேர்களோடும், சந்தைவெளியிலே தனக்கு எதிர்ப்பட்டவர்களோடும் நாள்தோறும் பேசிக்கொண்டான்.

௰௮ அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம்பண்ணிக்கொண்டு வருங்காலத்திலே, சிலர் இந்த வாயாடி† என்ன பேசுவான் என்றார்கள்; சிலர் அவன் இயேசுவையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே, இவன் அந்நிய தேவர்களை அறிவிக்கிறவன் என்று தோன்றுகின்றது என்றார்கள்.

௰௯ அப்பொழுது அத்தேனே பட்டணத்தார் எல்லாரும், அங்கே தங்கும்படி வருகிற அந்நியரும் புதியவைகளைக் கேட்கிறதினாலும் பேசுகிறதினாலுமே அன்றி, மற்றொருவிதமாய்த் தங்கள் காலத்தைப் போக்க விரும்பாதவர்களானபடியால்,

௨௰ அவர்கள் அவனை மாருஸ் தேவனுடைய மேடையிலுள்ள‡ நியாயஸ்தலத்திற்கு அழைத்துப் போய், நீ சொல்லுகிற புதிய உபதேசத்தை நாங்கள் அறியலாமா?

௨௧ நவமான காரியங்களையே எங்கள் காது கேட்கப்பண்ணுகிறாய். ஆகையால் நாங்கள் அவைகளை அறியவேண்டும் என்று இருக்கிறோம் என்றார்கள்.

கி. பி. ௫௰.

[1] அப. ௯. ௨௫. ௰௪ ௨௪

[2] ஏசா ௩௪. ௰௬. லூக். ௰௬. ௨௯. யோவா ௫. ௩௯.

[3] மத். ௰. ௨௩

[4] அப. ௰௮. ௫

* அல்லது விக்கிரகாராதனைக்குட்பட்டிருக்கிறதை

[5] ௨ பே. ௨. ௮

† அல்லது நீசன

‡ அல்லது ஆரியோபகாஸ், அத்தேனே பட்டணத்தில் இருந்த பிரதான நியாயஸ்தலம்

௨௨ ¶ அப்பொழுது பவுல் மாருஸ் மேடையின் நடுவிலே* நின்று சொன்னதாவது: அத்தேனரே, எல்லாவற்றிலும் தேவபத்தியே உஙகளுக்கு மிகவும் உண்டாயிருக்கிறதென்று எனக்குத தோன்றுகிறது; எபபடியென்றால் நான் திரிநது உஙகள் தேவ ஆராதனைககு ஏறறவைகளை† நோக்கிப் பார்த்தபொழுது, அறியபபடாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பீடத்தையும் கண்டேன்

௨௩ நீஙகள் அறியாமல் பணிவுசெய்கிறவரையே நான் உஙகளுக்கு அறிவிக்கிறேன்.

௨௪ [1]உலகத்தையும் அதிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனானவர், [2]வானததிற்கும பூமிக்கும் ஆண்டவரானதால, [3]கைகளால் செய்யபபட்ட கோவிலகளில் வாசம்பண்ணுகிறதும் இல்லை

௨௫ [4]யாதொன்று தமக்கு வேண்டுவதாக மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதும் இல்லை; [5]எல்லாருககும் சீவனையும், சுவாசத்தையும, மற்ற யாவையும் அவர் கொடுத்திருக்கிறாரே.

௨௬ அல்லாமலும் அவரே ஒரே இரததததிலிருநது மனிதா எல்லாரும் தோன்றபபண்ணி, [6]நமமில் ஒருவருக்கும் தூரமல்லாத பராபரனாகிய தம்மை அவர்கள் தடவி அடைந்துகொள்ளத்தக்கதாக,

௨௭ [7]தம்மைத் தேடும்படிக்கு, அவர்களுக்காக முன் திட்டமாககபபட்ட காலங்களையும் [8]குடியிருபபு எல்லைகளையும் குறிதது அவாகள் பூமியில் எஙகும் குடியிருக்கும்படி செய்தார்.

௨௮ [9]அவரால் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அதுபோல [10]உங்களில் சில புலவர்களும், அவருடைய வம்சத்தாராய் இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

௨௯ ஆதலால் நாம் பராபரனுடைய வம்சத்தாராயிருக்க, [11]தெய்வம் மனிதருடைய சித்திரவேலையினாலும் தோற்றுதலினாலும் பொன், வெள்ளி, கல் இவைகளால் செய்யபபட்டதற்கு ஒபபாப இருக்கின்றதென்று நாம் நினைக்கலாகாது.

௩௰ [12] அறியாமையுள்ள காலங்களைப் பராபரன் காணாதவர்போல இருநதார்; [13]இபபொழுது மனந்திருபபவேண்டும் என்று எவ்விடத்திலுமுள்ள மனிதர் யாவருககும் கட்டளையிடுகிறா.

௩௧ மேலும் [14]ஒரு நாளைக் குறித்தார்; அதிலே அவா தாம் நியமித்த ஒருவரைக்கொண்டு பூசசககரததிலுளள யாவருககும் நியாயத்தீரபபுக் கொடுபபார்; [15]அவரை மரிததோரிலிருந்து எழுபபினதினாலே, அவா அதின் நிசசயத்தை‡ எல்லாருக்கும் விளஙகபபண்ணினார் என்றான்.

௩௨ ¶ மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது சிலா இகழ்ந்தார்கள, சிலா பினனொருவேளை இதைககுறித்து உன்னிடததில் கேட்போம் என்றார்கள்.

௩௩ அபபொழுது பவுல் அவர்களிலிருநது புறபபட்டுப போனான்.

௩௪ சிலா அவனைப பற்றிக்கொண்டு, பின்பு விசுவாசிகளானார்கள்; அவாகளில் தியொனீசியென்னும நியாயாதிபதியும், தாமரியென்று பேருள்ள ஒரு ஸதிரியும இவாகளுடனேகூட வேறு சிலரும இருநதார்கள்.

௰௮. அதிகாரம்.

௧ பவுல் தன கைகளால வேலைசெயது, கொரிந்து பட்டணததிலே அஞ்ஞானிகளுக்குப பிரசஙகித்தது ௯ காததா ஒரு தரிசனையில அவனுக்குத தயிரியம சொன்னது ௰௨ அவன பிரதிதுரையாகிய கலலியோனுக்குமுனபாகக் குற்றம்சாறறபபடடும விடுதலையானது ௰௮ பினபு படடணஙகளதோறும போயச சீஷாகளைத திடபபடுததினது ௨௪. அபபொலலோ ஆக்கிலாவாலும பிரிஸகிலலாளாலும போதிக்கபபடடு, ௨௮ பிரயோசனம உணடாகக கிறிஸதுவைக்குறித்துப பிரசஙகிததது

கி. பி. ௫௪.

* அலலது ஆறியோ பெக்கருடைய நியாயஸ தலத்தில

† அலலது நீஙகள் பணிகிற தேவாகளை ௨ தெச ௨ ௪

1 அப ௰௪ ௰௫.
2 மத் ௰௧ ௨௫
3 அப ௭ ௪௮.
4 சஙு ௫௰ ௮
5 ௧ மோ ௨ ௭ ௪ மோ ௰௬ ௨௨ யோபு ௰௨ ௰ ௨௭ ௩ ௩௩ ௪ ஏசா ௪௨ ௫ ௫௭ ௰௬ சகரி ௰௨ ௧
6 அப ௰௪ ௰௭
7 உரோ ௧ ௨௰
8 ௫ மோ ௩௨ ௮
9 கொலோ ௧ ௰௭ எபி ௧ ௩
10 தீத ௧ ௰௨
11 ஏசா ௪௰ ௰௮
12 அப ௰௪ ௰௬ உரோ ௩ ௨௫
13 லூக் ௨௪ ௪௭ தீத ௨ ௰௧ ௰௨ ௧ பே ௧ ௰௪ ௪ ௩
14 அப ௰ ௪௨ உரோ ௨ ௰௬ ௰௪ ௰
15 அப ௨ ௨௪

‡ அல்லது அதை நமபுமபடி இடத்தை

அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தைவிட்டுக் கொரிந்து பட்டணத்திற்குப் போய்,

௨ இராயனாகிய கிலவுதி, யூதர் எல்லாரையும் உரோமை நகரியை விட்டுப் போகும்படி கட்டளையிட்டபடியினாலே, இத்தாலி நாட்டில் நின்று நவமாய் வந்திருந்த [1]ஆக்கில்லா என்று நாமமுள்ள பொந்து தேசத்தானாகிய ஒரு யூதனையும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு,

௩ அவர்களிடத்தில் போய், தானும் அவர்களும் ஒரே தொழில் செய்தவர்களானபடியினாலே, [2]அவர்களிடத்திலே தங்கித் தொழில் செய்தான், அவர்களுடைய தொழில் கூடாரம்பண்ணுதல்.

௪ அன்றியும் அவன் [3]ஓய்வு நாள்தோறும் செபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும்புத்திசொன்னான்.

௫ [4]மக்கேதோனியா நாட்டிலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்தபொழுது, [5]பவுல் தன் ஆவியிலே அதிக வைராக்கியங்கொண்டு, இயேசுவானவரே கிறிஸ்து* என்று யூதருக்குக் காண்பித்தான்.

௬ ¶ அவர்களே [6]எதிர்பேசித் தூஷணித்தபொழுது, [7]அவன் தன் வஸ்திரங்களை உதறி, [8]உங்களுக்குக் கேடு வரும்படிக்கு நீங்களே ஏதுவாயிருக்கிறீர்கள்.

௭ [9]நான் சுத்தமாய் இருக்கிறேன், [10]இதுமுதல் நான் புறத்தேசத்தார்களிடத்தில் போகிறேன் என்று அவர்களுடனே சொல்லி, அவ்விடத்தைவிட்டுத் தேவபத்தியுள்ள யூஸ்து என்பவனுடைய வீட்டிலே போனான்; அந்த வீடு செபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது.

௮ மேலும் செப[11]ஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு தன் வீட்டார் அனைவரோடுங்கூடக் கர்த்தரை விசுவாசித்தான்; கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௯ [12]பின்பு இராத்திரியிலே கர்த்தர் ஒரு தரிசனத்திலே பவுலுடனே சொன்னதாவது: இந்தப் பட்டணத்திலே அநேகம்பேர் என்னுடைய சனங்களாய் இருக்கிறார்கள்; [13]ஆகையால் நான் உன் பங்கில் இருப்பேன்; ஒருவனும் உனக்குத் தீமைசெய்யும்படிக்கு உன்மேல் கைபோடுவதில்லை.

௰ ஆனபடியினாலே நீ பயப்படாமல் பேசுவாயாக; மவுனமாய் இராதிருப்பாயாக என்றார்.

௰௧ அந்தப்படி அவன் ஒருவருஷமும் ஆறுமாதமும் அங்கே தங்கி,† பராபரனுடைய வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்.

௰௨ ¶ பின்பு கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிலே பிரதிதுரையானபொழுது, யூதர்கள் ஒருமனப்பட்டுப் பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்திற்கு முன்பாகக் கொண்டுபோய்,

௰௩ இவன் வேதநூலுக்கு விரோதமான விதமாய்ப் பராபரனைச் சேவிக்கும்படி, மனிதருக்குப் போதிக்கிறான் என்றார்கள்.

௰௪ அதற்குப் பவுல் தன் வாயைத் திறக்கையில், கல்லியோன் யூதருடனே சொன்னதாவது: யூதரே, [14]இது அநீதி, அல்லது மிகவும் பொல்லாங்கான காரியமானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுக்க நியாயம் உண்டாயிருக்கும்.

௰௫ இது உபதேசத்திற்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதநூலுக்கும் ஏற்ற தருக்கமானபடியினாலே, இப்படிப்பட்டவைகளைக் குறித்து நான் நியாயாதிபதியாயிருக்க விரும்புகிறதில்லை; ஆகை

கி. பி. ௫௪.

[1] உரோ ௰௬ ௩. ௧ கொரி ௰௬ ௰௯. ௨ தீமோ. ௪ ௰௯
[2] அப ௨௰ ௩௪. ௧ கொரி ௪ ௰௨. ௧ தெச ௨ ௯. ௨ தெச ௩ ௮
[3] அப ௰௭ ௨
[4] அப ௰௭ ௰௪, ௰௫
[5] யோபு ௩௨ ௰௮ அப ௰௭ ௩ ௨௮ ௨௩
* அல்லது கிறிஸ்துதான
[6] அப ௰௩ ௪௫ ௧ பே ௪ ௪
[7] நெகே ௫, ௰௩ மத ௰ ௰௪ அப ௰௩ ௫௧
[8] ௩ மோ ௨௰ ௯, ௰௧, ௰௨. ௨ சாமு ௧ ௰௬ எசே ௰௮ ௰௩ ௩௩ ௪
[9] எசே ௩ ௰௮, ௰௯ ௩௩ ௯ அப ௨௰ ௨௬
[10] அப ௰௩ ௪௬ ௨௮ ௨௮
[11] ௧ கொரி ௧ ௰௪
[12] அப ௨௩ ௰௧
[13] எரே ௧ ௰௮, ௰௯ மத ௨௮ ௨௰
† அல்லது இருந்து
[14] அப ௨௩ ௨௯, ௨௫ ௰௯

யால் நீங்களே பார்ப்பீர்களாக என்று சொல்லி,

௰௬ அவர்களை நியாயாசனத்தை விட்டுப் போகப்பண்ணினான்.

௰௭ அப்பொழுது கிரேக்கர் எல்லாரும் செபஆலயத்தலைவனாகிய [1]சொஸ்தெனேயைப் பிடித்து, நியாயாசனத்திற்கு முன்பாகத் தானே அடித்தார்கள்; அதைக்குறித்துக் கல்லியோன் விசாரணைபண்ணாமல் இருந்தான்.

௰௮ ¶ பின்னும் பவுல் அநேக நாள் அங்கே தரித்திருந்தபின்பு, அவன் சகோதரருடைய உத்தரவு வாங்கிக்கொண்டு தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியால், [2]கெங்கிரேயா பட்டணத்திலே, [3]சிரச்சவரம்பண்ணி, சீரியா தேசத்திற்குப் போகும்படி கப்பலேறிப் போனான்; பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவனுடனே கூடப்போனார்கள்.

௰௯ அவன் எபேசு பட்டணத்திற்குச் சேர்ந்தபொழுது, அவர்களை அங்கே விட்டுச் செபஆலயத்திற்குள் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷணை பண்ணினான்.

௨௰ அவர்கள் அவனைச் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டும் என்றுகேட்டுக்கொண்டபொழுது, அவன் சம்மதியாமல்,

௨௧ [4]வருகிற பண்டிகையிலே நான் எப்படியும் எருசலேமில் இருக்கவேண்டும்; [5]பராபரனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்று சொல்லி, அவர்களுடைய உத்தரவு வாங்கிக்கொண்டு கப்பலேறி எபேசுபட்டணத்தைவிட்டு,

௨௨ செசாரியா பட்டணத்திற்குப் போய், பின்பு (எருசலேமுக்குப்) போய், சபையாரின் சுகத்தை விசாரித்துக்கொண்டு, பின்பு அந்தியோகியா ஊருக்குச் சென்று,

௨௩ அங்கே சிலகாலம் சஞ்சரித்துப் பின்பு புறப்பட்டு, [6]கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் ஊர்கள்தோறும் திரிந்து, [7]சீஷர் எல்லாரையும் ஸ்திரப்படுத்திக்கொண்டுவந்தான்.

௨௪ ¶ அக்காலத்திலே [8]அலேக்குசந்திரி பட்டணத்தில் பிறந்தவனுமாய், சாதுரியவானுமாய், வேத எழுத்துக்களில் வல்லவனுமாய் இருக்கிற அப்பொல்லோஸ் என்று பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்திற்குப் போனான்.

௨௫ அவன் கர்த்தருடைய மார்க்கத்தைக்குறித்து உபதேசம் கேட்டு, [9]யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்தும், காத்தாவுக்கு உரியவைகளை மிகுந்த [10]சாக்கிரதையுள்ள மனதோடே பேசி, திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான்.

௨௬ செபஆலயத்திலே தயிரியமாய்ப் பேசினான்; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டபொழுது, அவனைச் சேர்த்துக்கொண்டு, பராபரனுடைய மார்க்கத்தை அவனுக்கு அதிக திட்டமாய்க் காண்பித்தார்கள்.

௨௭ பின்பு அவன் அகாயா நாட்டிலே போகவேண்டும் என்று இருக்கையில், சீஷர்கள் அவனை உபசாரம்செய்யும்படிக்குச் சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள்.

௨௮ அவன் அங்கேசேர்ந்தபின்பு, அவன் வெளியரங்கமாய் யூதர்களுடனே பலமாய்த் தருக்கம் பண்ணிக்கொண்டு, [11]இயேசுவே கிறிஸ்து* என்று வேதவாக்கியங்களாலே தெளிவாய்க் காண்பித்தபடியால், கிருபையினாலே விசுவாசிகளாய் இருந்தவர்களுக்கு [12]மிகுந்த உதவியாய் இருந்தான்.

௰௯. அதிகாரம்.

௧ பவுல் கைகளை வைத்ததால பரிசுத்தஆவி அளிக்கப்பட்டது ௯ அவனுடைய உபதேசங்களை யூதர்கள் தூஷணித்தும் அவைகள் அற்புதங்களால் மெய்ப்பிக்கப்பட்டது ௰௩ யூதர்களுக்குள் இருந்த மந்திரவாதிகள், ௰௬ பசாசினால் அடிக்கப்பட்டது ௰௯ மந்திர தந்திர புத்தகங்கள் சுட

கி. பி. ௫௫.

[1] ௧ கொரி ௧ ௨
[2] ௪ மோ ௬. ௰௮ அப ௨௧ ௨௪
[3] ௨ரோ ௰௬ ௧
[4] அப ௰௯ ௨௧ ௨௰ ௰௬
[5] ௧ கொரி ௪ ௰௯. எபி ௬ ௩ யாக் ௪ ௰௫
[6] கலா ௧ ௨ ௪. ௰௪
[7] அப ௰௪ ௨௨ ௰௫ ௩௨, ௪௧
[8] ௧ கொரி ௧ ௰௨ ௩ ௫, ௬ ௪ ௬ தீத ௩ ௰௩
[9] அப ௰௯ ௩
[10] ௨ரோ ௰௨ ௰௧
[11] அப ௯ ௨௨ ௰௭ ௩ ௫ வச
*அல்லது கிறிஸ்துதான்.
[12] ௧ கொரி ௩ ௬

டெரிக்கப்பட்டது ௨௪ தெமேத்திரியு ஆதாயத்தின்நிமித்தம் பவுலுக்கு விரோதமாய்ப் பண்ணின கலகத்தை, ௩௫ சம்பிரதி அமர்த்தினது

[1]அப்பொல்லோஸ் என்பவன் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில், பவுல் மேலான தேசங்களில் திரிந்துகொண்டு எபேசுபட்டணத்திற்குப் போனபொழுது,

௨ சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளானபொழுது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டீர்களா என்றான்; [2]அதற்கு அவர்கள், பரிசுத்த ஆவி உண்டென்று நாங்கள் கேள்விப்படவும் இல்லை என்றார்கள்.

௩ அப்பொழுது அவன் சொன்னது: அப்படியானால் எப்படிப்பட்ட ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான், [3]அவர்கள் யோவான் கொடுத்த ஸ்நானத்தைப் பெற்றோம் என்றார்கள்

௪ அப்பொழுது பவுல் சொன்னது: [4]யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவை விசுவாசிக்க வேண்டுமென்று சனங்களுக்குச் சொல்லி, மனமதிருப்புதற்கு எற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்

௫ அதை அவர்கள் கேட்டபொழுது, அவர்கள் [5]கர்த்தராகிய இயேசுவினுடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௬ அல்லாமலும், [6]பவுல் அவர்கள்மேலே கைகளை வைத்தபொழுது, பரிசுத்தஆவியானவர் அவர்களிடத்தில் வந்தார்; [7]அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

௭ அந்த மனிதர் எல்லாரும் எறக்குறையப் பன்னிரண்டுபேராம்.

௮ ¶ பின்பு (பவுல்) [8]செபஆலயத்திற்குப் போய், தயிரியமாய்ப் பிரசங்கம்பண்ணி, மூன்றுமாதமளவும் [9]பராபரனுடைய இராச்சியத்திற்கு உரியவைகளைப் பேசி, தெளிவாய்க் காண்பித்துக்கொண்டுவந்தான்.

௯ [10]சிலர் கடினமான மனதுள்ளவர்களுமாய் அவிசுவாசிகளுமாயிருந்து, [11]கூட்டத்திற்குமுன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபொழுது, அவன் அவர்களைவிட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்பவனுடைய பள்ளிக்கூடத்திலே நாள்தோறும் சம்பாஷித்துக்கொண்டுவந்தான்.

௰ [12]இப்படி இரண்டுவருஷம் நடந்தது; அதினாலே ஆசியாவிலே குடியிருந்த யூதர்கள் கிரேக்கர் இவர்கள் எல்லாரும் கர்த்தராகிய இயேசுவைக்குறித்து வசனத்தைக் கேள்விப்பட்டார்கள்.

௰௧ அன்றியும் [13]அதிசயமான அற்புதங்களைப் பராபரன் பவுலின் கைகளினாலே செய்துவருகையில்,

௰௨ [14]அவனுடைய சரீரத்தில் இருந்த வேர்வைச்சேலைகளையும் கச்சைகளையும் வியாதியுள்ளவர்கள்மேல் வைத்தவுடனே வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களிலிருந்து புறப்பட்டன.

௰௩ ¶ [15]அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் [16]கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரிலே உங்களுக்கு ஆணையிடுகிறோம் என்றார்கள்

௰௪ பிரதான ஆசாரியனாகிய இஸ்கேவா என்னும் யூதனுடைய குமாரர் எழுபேர்களே அப்படிச் செய்தார்கள்.

௰௫ அவர்களுக்கு உத்தரவாகப் பொல்லாத ஆவி சொன்னதாவது: இயேசுவை அறிந்திருக்கிறேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொன்னவுடனே,

கி. பி. ௫௬.

1 ௧ கொரி ௧. ௰௨. ௩. ௫, ௬
2 அப ௮. ௰௬ ௧ சாமு ௩. ௭
3 அப ௰௮. ௨௫
4 மத் ௩. ௰௧ யோவா ௧. ௰௫, ௨௭, ௩௰ அப ௧. ௫ ௰௧. ௰௬ ௰௩. ௨௪, ௨௫
5 அப ௮. ௰௬
6 அப ௬. ௬ ௮. ௰௭
7 அப ௨. ௪ ௰. ௪௬
8 அப ௰௭. ௨ ௰௮. ௪
9 அப ௧. ௩ ௨௮. ௨௩
10 ௨ தீமோ ௧. ௰௫ ௨ பேது ௨. ௨ யூதா ௰
11 அப ௯. ௨ ௨௨. ௪ ௨௪. ௰௪ ௨௨ வச
12 அப ௨௰. ௩௧
13 மாற் ௰௬. ௨௰ அப ௰௪. ௩
14 அப ௫. ௰௫ ௨ இரா ௪. ௨௯
15 மத் ௰௨. ௨௭
16 மாற் ௯. ௩௮ லூக் ௯. ௪௯

கி. பி. ௫௮

௰௬ பொல்லாத ஆவியையுடைய மனிதன் அவர்களமேல் பாய்ந்து, அவர்களைத் தனக்குட்படுத்திச் செயிக்க, அவர்கள் நிருவாணிகளாயும் காயம்பட்டவர்களாயும் அந்த வீட்டைவிட்டு ஓடிபபோனார்கள்.

௰௭ அது எபேசிலே குடியிருக்கிற யூதர், கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபொழுது, [1]அவர்கள் எல்லாரும் பயமடைந்தார்கள்; அல்லாமலும் காததராகிய இயேசுவின் நாமம் அவர்களுக்குள்ளே மேன்மைபபட்டது.

௰௮ அன்றியும், விசுவாசிகளானவர்களில் அநேகர் சேர்ந்து, [2]தங்கள செய்கைகளை வெளிபபடுத்தி அறிக்கையிட்டார்கள்.

௰௯ அன்றியும், வீண்வித்தைக்காரராய் இருநதவாகளில் அநேகா தங்கள் புததகஙகளைக் கொண்டு வநது, எல்லார்முன்பாகவும சுட்டெரித்தாாகள்

௨௰ அவைகளின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு என்று மதிககபபட்டது; [3]இவ்வளவு பலமாயக காததருடைய வசனம் வளர்ந்து வல்லமையைக் காண்பிததது.

௨௧ ¶ [4]இவை நிறைவேறினபின்பு, [5]பவுல் மக்கேதோனியா அகாயா என்னும் தேசஙகளின் வழியாய் எருசலேமுக்குப் போகும்படி மனதிலே யோசனைகொண்டு, நான் அங்கேயிருந்து, பின்பு [6]உரோமை நகரியையும் பார்க்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு,

௨௨ [7]தனக்கு உதவிசெய்தவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும், [8]எரஸ்துவையும் மக்கேதோனியா நாட்டிற்கு அனுப்பி, தான் பின்னும் சிலகாலம் ஆசியாநாட்டிலே இருந்தான்.

௨௩ ¶ [9]அக்காலத்திற்குள்ளே [10]இந்த மார்க்கததைக்குறித்து மிகுந்த கலகம் உண்டாயிற்று.

௨௪ எப்படியென்றால், தேமேத்திரி என்று நாமமுள்ள ஒரு தட்டான் தியானாள்தேவிக்காகவெள்ளியினால் சிறு கோவில்களைச் செய்துகொண்டு, [11]தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்து வந்தான்.

௨௫ அவர்களையும், அப்படிப்பட்ட தொழிலைச் செய்கிற மற்றவர்களையும் அவன் கூடிவரச்செய்து சொன்னதாவது: மனிதர்களே, உங்களுக்குத்தெரிநதிருக்கிறபடி, பிழைபபு இந்தத தொழிலினாலே நமககு வருகின்றது.

௨௬ மேலும் நீங்கள் கண்டும் கேட்டுமிருக்கிறபடி, [12]அந்தப பவுலென்பவன் கைகளால் செய்யபபட்டவைகள் தேவர்களல்ல என்று சொல்லி, எபேசிலேமாத்திரம் அல்ல, கொஞ்சங குறைய ஆசியா நாட்டில் எங்கும் அநேக சனஙகளுக்குப போதித்து, அவர்களை மாறுபாடாக்குகிறான்.

௨௭ அதினாலே நமமுடைய அலுவல் கனஈனமடைவதற்கு எதுவாயிருக்கிறதும் அல்லாமல், மகாதேவியாகிய தியானாளுடையகோவில் எண்ணமற்றுபபோகிறதற்கும் ஆசியாதேசத்தார் எல்லாராலும் பூசசக்கரததிலுள்ள யாவராலும் சேவிக்கபபடுகிற அவளுடைய மகிமை அழிநதுபோகிறதற்கும்எது உண்டாயிருக்கின்றது என்றான்

௨௮ ¶ அதை அவர்கள் கேட்டு, மிகுந்த கோபமடைந்து, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று கூபபிட்டுக்கொண்டார்கள்.

௨௯ பட்டணம் முழுவதும் கலகத்தினாலே நிரப்பப்பட்டது, மேலும் அவர்கள் பவுலுடனேகூடப் பிரயாணமாய் வந்த மக்கேதோனியராகிய [13]காயுவையும் [14]அரிஸ்தருகுவையும் இழுத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு, வேடிக்கைஸ்தலத்திற்குப் பாய்ந்து ஓடினார்கள்.

[1] லூக் ௧. ௬௫ ௭ ௰௬ அப ௨ ௪௩ ௫ ௫, ௰௧
[2] மத ௩ ௬
[3] அப ௬ ௭ ௰௨ ௨௪
[4] உரோ ௰௫ ௨௫ கலா ௨ ௧
[5] அப ௨௰ ௨௨
[6] அப ௰௮ ௨௧ ௨௩ ௰௧ உரோ ௰௫ ௨௪ ௨௮
[7] அப. ௰௩ ௫
[8] உரோ ௰௬ ௨௩ ௨ தீமோ ௪ ௨௰
[9] ௨ கொரி ௧ ௮
[10] அப ௯ ௨
[11] அப ௰௬ ௰௬, ௰௯
[12] சங ௱௰௫ ௪ ஏசா ௪௪ ௰-௨௰ எரே ௰ ௩
[13] உரோ ௰௬ ௨௩ ௧ கொரி ௧. ௰௪
[14] அப ௨௰ ௪: ௨௭ ௨ கொலோ. ௪ ௰ பிலே. ௨௪

௩௰ அப்பொழுது பவுல் கூட்டத்தில் போக மனதாயிருந்தான்; சீஷர் அவனைப் போகவிடவில்லை.

௩௧ மேலும் வேடிக்கை ஸ்தலத்திற்கு அவன் போகாமலிருப்பதற்கு வேண்டிக்கொள்ளும்படிக்கு அவனுடைய சிநேகிதராகிய ஆசியா தேசத்தலைவரில் சிலர் அவனிடத்திற்கு ஆளனுப்பினார்கள்.

௩௨ அன்றியும் கூட்டம் கலக்கமுள்ளதாயிருக்க, அநேகர் தாங்கள் கூடிவந்த காரணத்தை அறியாதவர்களானபடியினாலே, சனங்கள் பலவிதமாய்க் கூக்குரலிட்டார்கள்.

௩௩ அப்பொழுது யூதர்கள் அலேக்குசந்தர். என்பவனை முன்னிற்கத் தள்ளுகையில், கூட்டத்தில் சிலர் அவனை முன்னே இழுத்தார்கள்; [1]அலேக்குசந்தர் கையினால் [2]சமிக்கைகாட்டி, சனங்களுக்கு உத்தரவுசொல்ல விரும்பினான்.

௩௪ அவனே யூதனென்று அவர்கள் அறிந்தபொழுது, எல்லாரும் எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணிநேரமளவும் ஏகமாய்க் கூப்பிட்டுக்கொண்டார்கள்.

௩௫ ¶ பின்பு மணியக்காரனானவன் சனங்கள் பேசாமலிருக்கும்படி செய்து சொன்னதாவது. எபேசியரே, எபேசிபட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும், வானத்திலிருந்து விழுந்த சொரூபத்திற்கும், கோவில் பரிசாரகியாய்* இருக்கிறதை அறியாதவன் உண்டா?

௩௬ அது எதிர்ப்பேசப்படாத காரியமானபடியினாலே, நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமைந்திருக்கவேண்டும்.

௩௭ இந்தமனிதர் கோவில்கொள்ளைக்காரர் அல்ல, உங்கள் தேவியைத் தூஷணித்தவர்களும் அல்ல, இப்படியிருந்தும் இவர்களை இங்கே கொண்டுவந்தீர்கள்.

௩௮ தேமேத்திரியுக்கும், அவனைச் சேர்ந்திருக்கிற தொழிற்காரருக்கும், ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக்கும் நாள்களும்† துரைகளும் இருக்கிறபடியினாலே, ஒருவருக்கொருவர் விரோதமான பிராது அங்கே பண்ணக்கடவர்கள்.

௩௯ நீங்கள் வேறொரு காரியத்தை விசாரித்தால், அது நியாயசங்கத்திலே‡ தீர்க்கப்படுமே.

௪௰ இன்றைக்கு உண்டான கலகத்திற்காக நாம் உத்தரவு சொல்ல அழைக்கப்படுவதற்கு ஏது உண்டாயிருக்கின்றது, இந்தக் கலகம் பண்ணுவதற்கு நிமித்தமில்லாதபடியால், நாம் அதைக்குறித்து உத்தரவு சொல்லத் திராணியில்லாதிருப்போமே என்று சொல்லி,

௪௧ பின்பு கூட்டத்தை அனுப்பிவிட்டான்.

௨௰. அதிகாரம்.

௧ பவுல் மக்கேதோனியாவுக்குப் போனது ௭ அவன் கர்த்தருடைய இராப்போசனத்தைப் பகிர்ந்து பிரசங்கித்தது ௯ ஐத்திகு விழுந்து செத்த பின்பு, ௰ உயிரோடெழுப்பப்பட்டது ௰௭ மிலேத்துவிலிருந்து மூப்பர்களை அழைப்பித்து அவர்களுக்குத் தனக்குச் சம்பவிக்கப்போகிறதைச் சொல்லி, ௨௮ பராபரனுடைய சபையை அவர்களுக்கு ஒப்புவித்து, ௨௯ கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொல்லி, ௩௨ அவர்களைப் பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவித்து, ௩௬ அவர்களோடே செபம்பண்ணிப் பயணப்பட்டது

௧ கலகம் அமைந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்தில் அழைத்து உத்தரவு வாங்கிக்கொண்டு, [3]மக்கேதோனியாவுக்குப் போகப் புறப்பட்டுப்போய்,

௨ அந்தப்புறங்களில் திரிந்துகொண்டு, சீஷர்களுக்கு அநேக வார்த்தைகளினால் புத்திசொல்லிக்கொண்டு, கிரேக்கை தேசத்திலே சேர்ந்தான்.

௩ அங்கே மூன்றுமாதம் சஞ்சரித்தபின்பு, அவன் கப்பலேறிச் சீரியா நாட்டிற்குப் போக மனதாயிருந்தபொழுது, [4]யூதர்கள் அவனுக்குத் தீமைசெய்ய இரகசிய

கி. பி. ௫௯.

[1] ௧ தீமோ ௧. ௨௰ ௨ தீமோ ௪ ௰௪

[2] அப ௰௨ ௰௭

* அல்லது தொண்டனைய

† அல்லது நியாயப் பிரமாணமும்

‡ அல்லது முறைமைச் சங்கத்திலே

[3] ௧ கொரி ௰௬ ௫. ௧ தீமோ ௧. ௩.

[4] அப ௯. ௨௩ ௨௩ ௰௨ ௨௫ ௨ கொரி ௰௧ ௨௬.

மாய் யோசனைகொண்டிருந்தபடியால் மக்கேதோனியா நாட்டின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான்.

௪ அப்பொழுது ஆசியாதேசம்வரைக்கும் அவனோடுகூடப் போனவர்கள் பேரோசியா ஊரானாகிய சொப்பத்தர், தெசலோனிக்கேயரில் [1]அரிஸ்தர்க்கு, செக்குந்து, [2]தெருபேயனாகிய காயு, [3]தீமோத்தேயு, [4]ஆசியாதேசத்தாராகிய திகிக்கு, [5]திரோப்பிமு இவர்களே.

௫ அவர்கள் முன்னாகப் போய்த் துரோவா பட்டணத்திலே நாங்கள் வரும்படி காத்திருந்தார்கள்.

௬ நாங்கள் [6]புளியாத அப்பப் பண்டிகை நாள்களுக்குப் பின்பு கப்பலேறி, பிலிப்பு பட்டணத்தைவிட்டு ஐந்து நாளைக்குள்ளே [7]துரோவா பட்டணத்திலே அவர்களிடத்தில் சேர்ந்து, அங்கே ஏழு நாள் சஞ்சரித்தோம்.

௭ ¶ [8]அப்பொழுது வாரத்து முதல் நாளிலே, [9]சீஷர் அப்பம் பிட்கும்படிக்குக் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே பேசிக்கொண்டு பாதி இராத்திரி அளவும் பிரசங்கத்தை நீடித்துப் பேசினான்.

௮ [10]நாங்கள் கூடியிருந்த மெத்தைவீட்டிலே அநேக விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன.

௯ அப்பொழுது ஐத்திகு என்று பேர்கொண்ட ஒரு வாலிபன் சாளரவாசலில் உளுக்கார்ந்திருந்து, பவுல் மிகுந்தகாலம் பேசிக்கொண்டுவருகையில், கனதூக்கம் அடைந்து, நித்திரையினால் ஜெயிக்கப்பட்டுச் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து தாழவிழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

௰ உடனே பவுல் இறங்கிப் போய், [11]அவன்மேலே விழுந்து அணைத்துக்கொண்டு, பின்பு [12]உயிர் இவனுக்குள் இருக்கின்றதாகையால் கலக்கப்படாதிருங்கள் என்று சொல்லி,

௰௧ பின்பு ஏறிப்போய் அப்பம்பிட்டுப் புசித்து, மிகுந்த நேரம் விடியற்காலம் அளவும் பேசிக்கொண்டு பின்பு புறப்பட்டான்.

௰௨ அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாக அழைத்துவந்து, மிகவும் ஆறுதலடைந்தார்கள்.

௰௩ ¶ பவுல் (அசுபட்டணம்வரைக்கும்) தான் காலால் நடக்க விரும்பி, நாங்கள் முன்னாலே கப்பலேறி அவ்விடத்திற்குப் போய், அங்கே தன்னை ஏற்றிக்கொள்ளும்படி எங்களுக்கு உத்தரவுகொடுத்தபடியினாலே, நாங்கள் அசுபட்டணத்திற்குப் போயிருந்தோம்.

௰௪ பின்பு அவன் அவ்விடத்திலே எங்களோடே சேர்ந்தபொழுது, நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு, மித்திலேனுபட்டணத்திற்குப் போய்,

௰௫ பின்பு அவ்விடத்தைவிட்டு, மறுநாளிலே கீயுதீவுக்கு எதிராகச் சென்று,

௰௬ பவுல் எப்படியும் [13]பெந்தேகோஸ்துப் பண்டிகை நாளிலே [14]எருசலேம் நகரத்தில்சேரவேண்டும் என்று [15]தீவிரப்பட்டபடியினாலே அவன் ஆசியா நாட்டிலே காலம்போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்துபோகவேண்டும் என்று தீர்மானம்பண்ணினதால், மறுநாளிலே சாமுதீவை அடைந்து, துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி, மறுநாளிலே மிலேத்து பட்டணத்திற்குப் போனோம்.

௰௭ ¶ மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவிலுள்ள சபையின் மூப்பரை அழைத்துவரும்படிக்கு ஆளனுப்பினான்; அவர்கள் தன்னிடத்தில் சேர்ந்தபொழுது,

௰௮ அவன் அவர்களுடனே சொன்னதாவது: [16]நான் ஆசியா நாட்டில் வந்த முதலாம் நாள்தொ

கி. பி ௬௰.

1 அப ௰௯ ௨௯ ௨௭ ௨. கொலோ ௪ ௰
2 அப ௰௯ ௨௯
3 அப ௰௬. ௧
4 எபே ௬ ௨௧ கொலோ ௪. ௭. ௨ தீமோ ௪ ௰௨ தீத ௩ ௰௨
5 அப ௨௧ ௨௯ ௨ தீமோ ௪ ௨௰
6 ௨ மோ ௰௨ ௰௪, ௰௫ ௨௩ ௰௫
7 அப ௰௬ ௮ ௨ கொரி ௨ ௰௨ ௨ தீமோ ௪ ௰௩
8 ௧ கொரி ௰௬ ௨ வெளி ௧ ௰
9 அப ௨ ௪௨, ௪௬ ௧ கொரி ௰ ௰௬ ௰௧ ௨௰
10 அப ௧ ௰௩
11 ௧ இரா ௰௭ ௨௧ ௨ இரா ௪ ௩௪
12 மத ௯ ௨௪
13 அப ௨ ௧ ௧ கொரி ௰௬ ௮
14 அப ௨௪ ௰௭
15 அப ௰௮ ௨௧ ௰௯ ௨௧ ௨௧ ௪, ௰௨.
16 அப ௰௮ ௰௯ ௧, ௰.

டங்கி எல்லாக் காலங்களிலும் நான் உங்களுடனேகூட இருந்த வகையை அறிந்திருக்கிறீர்கள்.

௰௯ எல்லாவிதமான மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், [1]யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தருக்கு ஊழியம் செய்துகொண்டு வந்தேன்.

௨௰ [2]பிரயோசனமானவைகளில் ஒன்றையும் நான் மறைத்துவைக்கவில்லை, வெளியரங்கமாயும் வீடுகள்தோறும் உங்களுக்கு அறிவித்து, உங்களுக்கு உபதேசம்பண்ணிக்கொண்டு வந்தேன்.

௨௧ [3]பராபரனிடத்திற்கு மனந்திரும்புதலையும், நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்ளுதலையுங் குறித்து, [4]நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சிகொடுத்தேன்

௨௨ இப்பொழுது நான் [5]ஆவியிலே கட்டுண்டு எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு எதிர்ப்படும் காரியங்களை நான் அறியேன்.

௨௩ கயிறுகளும் உபத்திரவங்களும் எனக்காக வைத்திருக்கின்றன* என்று [6]பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் (எனக்கு) அறிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன்.

௨௪ அப்படியிருந்தும் [7]அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையென்று எண்ணேன்; [8]என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், பராபரனுடைய கிருபையை அறிவிக்கிற சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு [9]நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற [10]ஊழியத்தை முடிக்கவுமே விரும்புகிறேன்.

௨௫ அன்றியும் [11]நான் உங்களுக்குள்ளே திரிந்து, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துப் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்தேனே, அதைக் கேட்டவர்களாகிய நீங்கள் எல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள் என்று அறிந்திருக்கிறேன்.

௨௬ அப்படியிருக்க, [12]பராபரனுடைய ஆலோசனையில் ஒன்றையும் [13]நான் மறைத்துவையாமல், யாவையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,

௨௭ உங்களில் ஒருவன் கெட்டுப்போனால், [14]அதினாலே எனக்குக் குற்றம் வருவதில்லை என்று இன்றைக்கே உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.

௨௮ ஆகையால் நீங்கள் உங்களைக்குறித்தும், பராபரன் தமது [15]சுய இரத்தத்தினாலே [16]சம்பாதித்துக்கொண்ட தமது சபையாகிய ஆட்டுக்கூட்டம் முழுவதையும் மேய்ப்பதற்குப் [17]பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்தபடியால், அதைக்குறித்தும் [18]எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

௨௯ மேலும் நான் போனபின்பு, ஆட்டுக்கூட்டத்தைத் தயையோடே நடப்பியாமல், [19]கொடிதாயிருக்கிற கோனாய்கள் உங்களுக்குள்ளே பிரவேசிக்கும்.

௩௰ அதுவுமல்லாமல் [20]உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படிக்கு, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.

௩௧ ஆனபடியினாலே நீங்கள் விழித்துக்கொண்டு, [21]நான் மூன்று வருஷமாய் இரவும்பகலும் அவனவனுக்குக் கண்ணீரோடே புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்துக்கொள்வீர்களாக.

௩௨ இப்பொழுது சகோதரரே, பராபரனுக்கும் [22]அவருடைய கிருபையை அறிவிக்கிற வார்த்தைக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்; [23]அவரே உங்களை ஏறக்

இ பி. ௬௰.

1 ௯. ௨௩
2 ௨௭. ௨௩
3 மாற் ௧ ௰௫ லூக் ௨௪ ௪௭ அப ௨ ௩௮
4 அப ௰௮ ௫
5 அப ௰௯ ௨௧
* அல்லது நேரிடுகின்றன
6 அப ௨௧ ௪, ௰௧ ௧ தெச ௩ ௩
7 அப ௨௧ ௰௩ ௨ரோ அ ௩௫ ௨ கொரி ௪ ௰௬
8 ௨ தீமோ ௪ ௭
9 கலா ௧ ௧ தீத் ௧ ௩
10 அப ௧ ௰௭ ௨ கொரி ௪ ௧
11 ௩அ. ௨௩ ௨ரோ ௰௫ ௨௩
12 லூக். ௭ ௩௰ யோவா ௰௫ ௰௫ எபே ௧ ௰௧
13 ௨௰ ௨௩
14 அப ௰௮ ௬ ௨ கொரி ௭ ௨
15 எபி ௯ ௰௪
16 எபே. ௧ ௭, ௰௪ கொலோ ௧ ௰௪ எபி ௯ ௰௨. ௧ பே ௧ ௰௯ வெளி ௫ ௯
17 ௧ கொரி ௰௨ ௨௮
18 ௧ தீமோ ௪ ௰௬. ௧ பே ௫ ௨
19 மத் ௭ ௰௫ ௨ பே ௨ ௧
20 ௧ தீமோ ௧ ௨௰ ௧யோ ௨ ௰௯
21 அப ௰௯. ௰
22 எபி ௰௩ ௯
23 அப ௯ ௩௧.

கட்டவும், [1]பரிசுத்தமாக்கப்பட்ட எல்லாரும் இருக்கிற இடத்திலே சுதந்தரத்தை உங்களுக்குக் கொடுக்கவும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

௩௩ [2]ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் உடுப்பையாகிலும் நான் இச்சிக்கவில்லை.

௩௪ நீங்கள் அறிந்திருக்கிறபடி நானும் என்னுடனேகூட இருந்தவர்களும் வேண்டிய பதார்த்தங்களை அடையும்படிக்கு, [3]இந்தக் கைகளே வேலைசெய்தன.

௩௫ [4]அப்படியே வேலைசெய்து பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வசனங்களை நினைக்கவும் வேண்டும் என்று எல்லாவிதத்தாலும் உங்களுக்குக் காண்பித்தேன் என்று சொல்லி,

௩௬ ¶ பின்பு [5]முழங்காற்படியிட்டு, அவர்கள் எல்லாரோடுங்கூடச் செபம்பண்ணினான்.

௩௭ இனிமேல் நீங்கள் என்னுடைய முகத்தைப் பார்க்கமாட்டீர்கள் என்று [6]அவன் சொன்ன வசனத்திற்காக, அவர்கள் எல்லாரும் அதிகமாய்த் துக்கப்பட்டு,

௩௮ மிகவும் அழுதுகொண்டு, [7]பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தம்செய்து, பின்பு கப்பல்வரைக்கும் அவனுடனேகூடப்போய் அனுப்பிவிட்டார்கள்.

௨௧. அதிகாரம்.

௧ பவுல் எருசலேமுக்குப் பயணமானது, ௯ பிலிப்பின் குமாரத்திகள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாயிருந்தது ௰௭ பவுல் எருசலேமுக்கு வந்தது, ௨௭ யூதர்களில் பிடிக்கப்பட்டபோது, ௩௧ பிரதான சேனைக்காரனால் விடுதலையாகிச் சனங்களிடத்தில் பேசும்படி உத்தரவுபெற்றது

நாங்கள் அவர்களைவிட்டுப் பிரிந்து துறைபோந்தபின்பு, நேராய்ப் போய்க் கோஸ்தீவில் சென்று, மறுநாளிலே உரோது தீவில் சென்று, அதில்நின்று பத்தரா பட்டணத்திற்குப் போய்,

௨ அங்கே பேனீக்கே தேசத்திற்குப்போக எத்தனமாயிருந்த கப்பலைக் கண்டு அதில் ஏறிப்போய், சீப்புரு தீவைக் கண்டு,

௩ அதை இடதுபுறமாக விட்டுச் சீரியா நாட்டிற்கு ஓடி, தீறு பட்டணத்திலே அவர்கள் கப்பலின் சரக்குகளை இறக்கவேண்டியபடியால் அவ்விடத்திலே சேர்ந்து,

௪ பின்பு சீஷரைக் கண்டு ஏழுநாள் அங்கே தங்கினோம்; அவர்கள் பவுலை நோக்கி, நீர் [8]எருசலேமுக்குப் போகக்கூடாதென்று ஆவியினாலே சொன்னார்கள்.

௫ நாங்கள் அந்நாட்களை முடித்த பின்பு புறப்பட்டுப்போனபொழுது, அவர்கள் எல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்திற்குப் புறம்பே (சற்றுத்தூரம்)வரைக்கும் எங்களை வழிநடத்தினார்கள்; கடற்கரையிலே நாங்கள் [9]முழங்காற் படியிட்டுச் செபம்பண்ணி,

௬ ஒருவரிடத்திலே ஒருவர் உத்தரவு வாங்கிக்கொண்ட பின்பு, நாங்கள் கப்பலேறினோம்; [10]அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

௭ ¶ நாங்கள் தீறு பட்டணத்தை விட்டுப் பித்தோலேமாயா பட்டணத்திற்குப்போய், கப்பல் யாத்திரையை முடித்துச் சகோதரரை வாழ்த்தி, ஒருநாள் அவர்களிடத்தில் தங்கினோம்.

௮ மறுநாளிலே பவுலைச் சேர்ந்த நாங்கள் புறப்பட்டுச் சேசாரியா பட்டணத்திற்குப்போய், [11]ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் [12]சுவிசேஷனுடைய வீட்டிற்குச் சென்று, அவனிடத்திலே தங்கினோம்.

௯ அவனுக்கு உண்டான குமாரத்திகளாகிய நான்கு கன்னிகைகளும் [13]தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாய் இருந்தார்கள்.

கி. பி. ௬௰.

1 அப ௨௬ ௰௮. எபே ௧ ௰௮ கொலோ ௧ ௰௨ ௩ ௨௪ எபி ௯ ௰௫ ௧ பே ௧ ௪
2 ௧ சாமு ௰௨ ௩ ௧ கொரி ௯ ௰௨ ௨ கொரி ௭ ௨ ௰௧ ௯ ௰௨ ௰௭
3 அப ௰௮ ௩ ௧ கொரி ௪ ௰௨ ௧ தெச ௨ ௯, ௨ தெச ௩ ௮
4 உரோ ௰௫ ௧ ௧ கொரி ௯ ௰௨ ௨ கொரி ௰௧ ௯, ௰௨ ௰௩ ௰௪ எபே ௪ ௨௮ ௧ தெச ௪ ௰௧ ௫ ௰௪ ௨ தெச ௩ ௮
5 அப ௭ ௬௰ ௨௧ ௫
6 ௨௫ வச
7 ௧ மோ ௪௫ ௰௪ ௪௬ ௨௯
8 ௰௨ வச அப. ௨௰ ௨௩.
9 அப ௨௰ ௩௬
10 யோவா ௧ ௰௧
11 அப ௬ ௫. ௮. ௨௬, ௪௰
12 எபே ௪ ௰௧ ௨ தீமோ ௪ ௫
13 யோவே ௨ ௨௮ அப ௨. ௰௭

௰ மேலும் நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், [1]ஆகாபு என்று பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்திருந்தான்.

௰௧ அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்து, தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு,[2] இந்தக் கச்சையை உடையவனை எருசலேமிலுள்ள யூதர்கள் இப்படிக் கட்டி, புறதேசத்தார்களுடைய கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்தஆவி சொல்லுகிறார் என்றான்.

௰௨ அதை நாங்கள் கேட்டபொழுது, அவன் எருசலேமுக்குப் போகாதபடிக்கு நாங்களும் அத்தலத்தாரும் வேண்டிக்கொண்டோம்.

௰௩ பவுல் மாறுத்தரவாகச் சொன்னதாவது: [3]நீங்கள் அழுதுகொண்டு என் இருதயம் உடைந்துபோகப்பண்ணுகிறதென்ன? எருசலேமிலே நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரம் அல்ல, மரிப்பதற்கும் எத்தனமாய் இருக்கிறேன் என்றான்.

௰௪ இப்படி அவன் சம்மதியாதபடியினாலே, [4]நாங்கள் கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமைந்திருந்தோம்.

௰௫ ¶ அந்நாட்களுக்குப்பின்பு, நாங்கள் பிரயாணச்சாமான்களைச் சேர்த்துக்கொண்டு எருசலேமுக்குப் போனோம்.

௰௬ செசாரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலரும் எங்களுடனேகூட வந்து, சீப்புருதீவானுமாய், மிகுந்த காலம் சீஷனுமாய் இருந்த மினாசோனிடத்திலே தங்கும்படிக்கு எங்களை அவனிடத்தில் அழைத்தார்கள்.

௰௭ ¶ [5]நாங்கள் எருசலேமில் சேர்ந்தபொழுது, சகோதரர் எங்களைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார்கள்.

௰௮ மறுநாளிலே பவுலும் நாங்களும் [6]யாக்கோபினிடத்திற்குப் போனோம்; எல்லா மூப்பர்களும் அங்கே கூடிவந்தார்கள்.

௰௯ அவர்களுக்கு அவன் வாழ்த்துதல் செய்து, [7]பின்பு தன் ஊழியத்தினாலே பராபரன் [8]புறத்தேசத்தாருக்குள்ளே செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச்சொன்னான்.

௨௰ (அதை) அவர்கள் கேட்டு, கர்த்தரைத் தோத்திரம்பண்ணி, பின்பு அவனுடனே சொன்னதாவது: சகோதரனே, யூதர்களில் அநேகம் ஆயிரம்பேர் விசுவாசிகளானதைப் பார்த்திருக்கிறாய்; அவர்கள் எல்லாரும் [9]நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

௨௧ நீ புறத்தேசத்தாருக்குள்ளே இருக்கிற யூதரெல்லாரும் (தங்கள்) பிள்ளைகளை விருத்தசேதனம்பண்ணவும், மற்ற முறைமைகளின்படியே நடக்கவும் வேண்டுவதில்லையென்று சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயைவிட்டு விலகும்படி உபதேசிக்கிறாயென்று அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

௨௨ இப்பொழுது என்ன செய்யலாம்? நீ வந்ததை அவர்கள் கேள்விப்பட்டு, மெய்யாய்க் கூட்டங்கூடுவார்கள்.

௨௩ ஆகையால் நாங்கள் உனக்குச் சொல்லுகிறபடி நீ செய்யவேண்டும்; என்னவென்றால், நான்குபேர் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு எங்களிடத்தில் இருக்கிறார்கள்.

௨௪ அவர்களை நீ சேர்த்து அவர்களுடனேகூடச் சுத்திபண்ணிக்கொண்டு, [10]அவர்கள் சிரச்சவரம்பண்ணுவதற்கு வேண்டிய செலவுபண்ணுவாயாக; அப்படிச் செய்தால் எல்லாரும் தங்களுக்கு உன்னைக்குறித்து அறிவிக்கப்பட்

கி. பி. ௬௰.

[1] அப ௰௧ ௨௮
[2] ௯ ௰௬ அப ௨௰. ௨௩
[3] அப ௨௰ ௨௪.
[4] மத ௬ ௰ ௨௬. ௪௨. லூக் ௰௧. ௨ ௨௨ ௪௨
[5] அப ௰௫. ௪
[6] அப ௰௫ ௰௩ கலா ௧ ௰௯ ௨ ௯
[7] அப ௧ ௰௭ ௨௰ ௨௪
[8] அப ௰௫ ௪, ௰௨ ௨ரோ. ௰௫ ௰௮, ௰௯
[9] அப. ௨௨ ௩ ௨ரோ. ௰ ௨. கலா. ௧ ௰௪.
[10] ௪ மோ. ௬ ௨, ௰௩, ௰௮ அப ௰௮ ௰௮

டது ஒன்றுமில்லை என்றும், நீதானே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவன் என்றும் அறிவார்கள்.

௨௫ விசுவாசிகளான புறத்தேசத்தார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல் விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும்மாத்திரம் விலகியிருக்கவேண்டும் என்று நாங்கள் தீர்மானம்பண்ணி, [1]அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள்.

௨௬ ¶ அப்பொழுது பவுல் அந்த மனிதரைச் சேர்த்துக்கொண்டு மறுநாளிலே அவர்களுடனேகூடச் சுத்தம்பண்ணி, பின்பு [2]தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலி கொடுக்கப்படுமளவும், [3]சுத்தமாக்குதற்கேற்ற நாள்களை நிறைவேற்றுவேன் என்று அறிவித்தான்.

௨௭ ¶ அதற்கு ஏற்ற எழுநாளும் நிறைவேறிவருகையில், [4]ஆசியாதேசத்திலிருந்து வந்த யூதர்கள் தேவாலயத்திலே அவனைக் கண்டு, கூட்டமெல்லாம் கூடிவர அழைத்து,

௨௮ [5]அவன்மேல் கைகளைப் போட்டு, ஒய் இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள்; [6]இவனே நம்முடைய சனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறான்; அதுவுமல்லாமல், இந்தத் தேவாலயத்திலே கிரேக்கரையும் அழைத்து வந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை அசுசிப்படுத்தினான் என்று கூப்பிட்டார்கள்.

௨௯ முன்பு எபேசியனாகிய [7]திரோப்பிமு என்பவனைப் பட்டணத்திலே அவனுடனேகூட இருக்கக் கண்டிருந்து, பின்பு பவுல் அவனைத் தேவாலயத்திலே அழைத்து வந்தான் என்று நினைத்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

௩௰ அப்பொழுது [8]நகரம் முழுவதும் கலக்கப்பட்டது; மேலும் சனங்கள் கூட்டமாய் ஒடிவந்து, பவுலைப் பிடித்து, அவனைத் தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்தார்கள்; உடனே வாசல்கள் பூட்டப்பட்டன.

௩௧ ¶ மேலும் அவர்கள் அவனைக் கொலைசெய்ய வகைதேடுகையில், எருசலேம் முழுவதும் கலக்கம் அடைந்திருக்கிறதென்று போர்ச்சேவகரின் சேனாதிபதி கேள்விப்பட்டு,

௩௨ [9]உடனே போர்ச்சேவகரையும் அவர்களுடைய தலைவரையும் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்திற்கு ஒடினான்; சேனாதிபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபொழுது, பவுலை அடிப்பதை விட்டார்கள்.

௩௩ அப்பொழுது சேனாதிபதி சேர்ந்து அவனைப் பிடித்து, [10]இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி, இவன் யாவனென்றும் என்ன செய்தானென்றும் விசாரித்தான்.

௩௪ அதற்குச் சனங்கள் பலவிதமாய்க் கூப்பிட்டார்கள்; அப்பொழுது கலகத்தினாலே அவன் நிச்சயத்தை அறியக்கூடாதிருந்தபடியால், அவனைக் கோட்டைக்குக் கொண்டுபோகச் சொன்னான்.

௩௫ அவன் படிகள்மேல் ஏறினபொழுது, கூட்டம் பின்சென்று, [11]அவனைக் கொலைசெய்யுமென்று கூப்பிட்டுக்கொண்டு,

௩௬ உக்கிரமாயிருந்தபடியினாலே, சேவகர் அவனைத் தூக்கி எடுத்துக்கொண்டு போனார்கள்.

௩௭ ¶ அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோக எத்தனமாயிருக்கையில், அவன் சேனாதிபதியை நோக்கி, நான் உம்மு

கி. பி. ௬௰.

[1] அப ௰௫ ௨௰, ௨௮
[2] அப ௨௪ ௰௮
[3] ௪ மோ ௬ ௰௩
[4] அப ௨௪ ௰௮
[5] அப ௨௬ ௨௧
[6] அப ௨௪ ௫ ௬
[7] அப ௨௰ ௪
[8] அப ௨௬ ௨௧
[9] அப ௨௩ ௨௭ ௨௪ ௭
[10] ௰௧ வச அப ௨௰ ௨௩
[11] லூக ௨௩ ௰௮ யோவா ௰௯. ௰௫ அப ௨௨ ௨௨

டனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான்; அதற்கு அவன் சொன்னது: கிரேக்கபாஷை உனக்குத் தெரியுமா?

௩௮ இந்தக் காலத்திற்குமுன்னே கலகம் உண்டாக்கி, நாலாயிரம் கொலைபாதகரை வனாந்தரத்திலே கொண்டுபோன [1]எகிப்தியன் நீ அல்லவா என்றான்.

௩௯ பவுல் சொன்னது: [2]நான் சிலீசியா நாட்டிலுள்ள கீர்த்தி அடைந்திருக்கிற தர்சு பட்டணத்தானாகிய யூதன்; நான் சனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௪௰ அவனுக்கு உத்தரவு கொடுத்தபின்பு, பவுல் படிகளின்மேலே நின்று, [3]கையினாலே சனங்களுக்குச் சமிக்கைகாட்டினான், மிகுந்த அமைதல் உண்டானபொழுது, அவன் எபிரேய பாஷையிலே சத்தமிட்டுச் சொன்னதாவது:

௨௨. அதிகாரம்.

௧ பவுல் தான் குணப்பட்டு விசுவாசியானவிதத்தையும், ௰௭. அப்போஸ்தலப் பட்டத்துக்கு அழைக்கப்பட்ட விதத்தையும், வெளியாக்கமாய் அறிவித்தது ௨௨ தான் அந்நியர்களுக்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தலனென்று சொன்னபோது யூதர்கள் கலகம்பண்ணினது ௨௪ அவர்கள் அவனைச் சவுக்கால் அடிக்க நினைத்தபோது, ௨௫ தன்னை ரோமை நாட்டானென்று தப்பித்துக் கொண்டது

[4]சகோதரர்களே, பிதாக்களே, உங்களுக்கு நான் இப்பொழுது சொல்லும் உத்தரவுக்குச் செவிகொடுப்பீர்களாக என்று சொன்னபொழுது,

௨ எபிரேய பாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்டு, அதிக அமைதலாயிருந்தார்கள்; அவன் பின்னும் சொன்னதாவது:

௩ நான் யூதன், [5]சிலீசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே நான் பிறந்து, பின்பு இந்த நகரத்திலே [6]கமாலியேலின் [7]பாதத்தினிடத்தில் வளர்ந்து, [8]முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே கெட்டியாய்ப் போதிக்கப்பட்டு [9]இன்றைத்தினம் நீங்கள் எல்லாரும் இருக்கிறதுபோல, [10]பராபரனைக்குறித்து வைராக்கியனாயிருந்து,

௪ [11]இந்த மார்க்கத்தாரை மரணபரியந்தம் துன்பப்படுத்தி, புருஷரையும் ஸ்திரிகளையும் கட்டி, சிறைச்சாலைகளுக்கு ஒப்புக்கொடுத்துவந்தேன்

௫ அதற்குப் பிரதான ஆசாரியரும் [12]மூப்பர்கள் யாவரும் சாட்சிகொடுப்பார்கள்; [13]அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக்கொண்டு, தமஸ்கு ஊரில் இருக்கிறவர்களும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவதற்கு அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன்.

௬ அப்படி நான் [14]பிரயாணப்பட்டுத் தமஸ்கு ஊருக்குச் சமீபமானபொழுது, மத்தியான வேளையிலே சடுதியாய் வானத்திலிருந்து மிகுந்த ஒளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.

௭ உடனே நான் தரையிலே விழுந்து, சவுலே, சவுலே, என்னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்

௮ அதற்கு நான், ஆண்டவரே, நீர் யார் என்றேன்; அவர் என்னுடனே சொன்னது: நீ துன்பப்படுத்துகிற நாசரேத்தூரானாகிய இயேசுவே நான் என்றார்.

௯ [15]என்னுடனேகூட இருந்தவர்கள் அந்த ஒளியைக் கண்டு பயம் அடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை.

௰ பின்னும் நான், ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும் என்றேன்; அதற்குக் கர்த்தர் சொன்னது: நீ எழுந்து தமஸ்கு ஊருக்

கி. பி. ௬௰.

[1] அப ௫ ௩௬
[2] அப ௯ ௰௧ ௨௨ ௩
[3] அப ௰௨ ௰௭
[4] அப ௭ ௨.
[5] அப ௨௧ ௩௯ ௨ கொரி ௰௧ ௨௨. பிலி ௩ ௫
[6] அப ௫ ௩௪
[7] ௫ மோ ௩௩ ௩ ௨ இரா ௪ ௩௮ லூக் ௰ ௩௯
[8] அப ௨௬ ௫
[9] ரோ ௰ ௨
[10] அப ௨௧ ௨௰ கலா ௧ ௰௪
[11] அப அ ௩ ௨௬ ௯, ௰, ௰௧ பிலி ௩ ௬ ௧ தீமோ ௧ ௰௩
[12] லூக ௨௨ ௬௬ அப ௪ ௫
[13] அப ௯ ௨ ௨௬ ௰, ௰௨
[14] அப ௯ ௩ ௨௬ ௰௨, ௰௩
[15] அப ௯. ௭. தானி ௰ ௭

குப் போ; நீ செய்யும்படிக்குக் கட்டளையிடப்பட்ட யாவும் அங்கே உனக்குச்சொல்லப்படும் என்றார்.

௰௧ பின்பு நான் அந்த ஒளியின் மகிமையினாலே பார்வை அற்றுப்போனபடியால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து அழைக்கப்பட்டுப் போய்த் தமஸ்கு ஊரில் சேர்ந்தேன்.

௰௨ அப்பொழுது வேதப்பிரமாணத்தின்படியே பத்தியுள்ளவனுமாய், [1]அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் [2]நல்லவன் என்று நற்சாட்சி பெற்றவனுமாயிருக்கிற [3]அனனீயா என்னும் ஒருவன் என்னிடத்தில் வந்து நின்று,

௰௩ என்னை நோக்கி, சகோதரனாகிய சவுலே, பார்வை அடைவாயாக என்றான்; அந்நேரமே நான் அவனை நோக்கிப்பார்த்தேன்.

௰௪ பின்பு அவன் சொன்னது: [4]நீ கண்டு கேட்டவைகளைக்குறித்து, [5]சகலவித மனிதருக்கும் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கும்படிக்கு,

௰௫ [6]நம்முடைய முன்னோர்களின் தேவன் [7]உன்னை முன்குறித்திருந்து, தம்முடைய சித்தத்தை நீ அறியவும் [8]நீதிபரரைக் [9]காணவும் [10]அவருடைய திருவாயின் சத்தத்தைக் கேட்கவும்பண்ணினார்

௰௬ இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து, [11]கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம்பெற்று, உன் [12]பாவங்களை நீக்குவாயாக என்றான்.

௰௭ பின்பு நான் [13]எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே செபம்பண்ணிக்கொண்டிருக்கையில், நான் ஞானதிருஷ்டி அடைந்து அவரைத்தரிசித்தேன்.

௰௮ [14]அவர் என்னுடனே நீ என்னைக்குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் எற்றுக்கொள்ளாமலிருப்பதால் [15]நீ தாமதப்படாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் போ என்றார்.

௰௯ அப்பொழுது நான் சொன்னது: ஆண்டவரே, உம்மை விசுவாசித்தவர்களை [16]நான் காவலில் வைத்து, செப ஆலயங்களிலே அவர்களை அடிப்பித்திருந்ததையும்,

௨௰ [17]உமக்குச் சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்பட்டபொழுது, நானும் அருகே நின்று [18]அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டதையும், இவர்கள் [19]அறிந்திருக்கிறார்களே என்றேன்.

௨௰௧ அவர் சொன்னது: [20]நான் உன்னைத் தூரமாய்ப் புறத்தேசத்தாரிடத்திற்கு அனுப்புவேன், ஆதலால் நீ போ என்று சொன்னார் என்றான்.

௨௰௨ ¶ இந்த வார்த்தைவரைக்கும் அவர்கள் அவனுக்குச் செவிகொடுத்து, [21]இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து அகற்றவேண்டும், [22]இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்கள்

௨௰௩ இப்படி அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, ஆகாசத்திலே புழுதி தூற்றிக்கொண்டு வருகையில,

௨௰௪ சேனாதிபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, பின்பு அவர்கள் அவன்மேல் இப்படிக் கூக்குரலிட்டதற்கான காரணத்தை அறியும்படிக்கு, அவனைச் சவுக்காலே அடித்து விசாரிக்கச்சொன்னான்.

௨௰௫ அந்தப்படி அவர்கள் அவனை வார்களினால் அழுந்தக் கட்டுகையில் பவுல் சமீபமாய் நின்ற படைத்தலைவனை நோக்கி, [23]உரோமனுமாய் நியாயமாய் ஆக்கினைக்கு உட்படாதவனுமாய் இருக்கிற ம

கி. பி. ௬௰.

1 ௧ திமோ ௩ ௭
2 அப ௰ ௨௨
3 அப ௯ ௰௭
4 அப ௪ ௨௰ ௨௩ ௰௫.
5 அப ௨௩ ௰௧
6 அப ௩ ௰௩ ௫ ௩௰
7 அப ௯ ௰௫ ௨௬ ௰௬
8 அப ௩ ௰௪ ௭ ௫௨
9 ௧ கொரி ௯ ௧ ௰௫ ௮
10 ௧ கொரி ௰௧ ௨௩ கலா ௧ ௰௨
11 அப ௯ ௰௪ உரோ ௰ ௰௩
12 அப ௨ ௩௮ எபி ௰ ௨௨
13 அப ௯ ௨௬ ௨ கொரி ௰௨ ௨
14 ௰௪ வச
15 மத ௰ ௰௪
16 மத ௰ ௰௭
17 அப ௭ ௫௮
18 லூக ௰௧ ௪௮ அப அ ௧ உரோ ௧ ௩௨
19 ௪ வச அப அ ௩
20 அப ௯ ௰௫ ௰௩ ௨,௪௬,௪௭ ௰௮ ௯ ௨௬ ௰௭ உரோ ௧ ௫ ௰௧ ௰௩ ௰௫ ௰௫ கலா ௧ ௰௫, ௰௬ ௨ ௭, எபே ௩ ௭, ௧ திமோ ௨ ௭ ௨ திமோ ௧ ௰௧
21 அப ௨௧ ௩௬
22 அப ௨௫ ௨௪
23 அப ௰௬ ௩௭

னிதனை நீங்கள் அடிக்கிறது நியாயமா என்றான்.

௨௬ தலைவன் அதைக் கேட்டு, சேனாதிபதியினிடத்திற்குப்போய், அந்த மனிதன் உரோமன், ஆதலால் நீர் செய்வதைக்குறித்துச் சாவதானமாய் இருக்கவேண்டும் என்று அறிவித்தான்.

௨௭ அப்பொழுது சேனாதிபதி பவுலினிடத்தில் வந்து, நீ உரோமனா, எனக்குச் சொல் என்றான்; அதற்கு அவன் அப்படித்தான் என்றான்.

௨௮ சேனாதிபதி சொன்னது: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த மேன்மையைச் சம்பாதித்தேன் என்றான்; அதற்குப் பவுல் சொன்னது: நான் அப்படிப்பட்டவனாகப் பிறந்தேன் என்றான்

௨௯ ஆதலால் அவனை அடித்து விசாரிக்கும்படி* எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டார்கள்; மேலும் சேனாதிபதி அவன் உரோமனென்று அறிந்து, தான் அவனைக் கட்டினதினாலே பயந்தான்

௩௰ ¶ மறுநாளிலே பவுல் யூதரால் ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று அவன் நிச்சயத்தை அறிய மனதாய் அவனுடைய கட்டவிழ்க்கும்படி செய்து, பிரதான ஆசாரியரையும் அவர்களுடைய பெரிய சங்கத்தார் எல்லாரையும் கூடிவரும்படி கட்டளையிட்டுப் பின்பு பவுலைத் தாழக் கொண்டுபோய், அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

௨௩. அதிகாரம்.

௧ பவுல் ஆலோசனைச் சங்கத்தாருக்குமுன் தன்னை எடுத்துப் பேசும்பொழுது, ௨ அனனீயா அவனை அடிக்கும்படி உத்தரவுகொடுத்தது. ௭ அவன்மேல் குற்றஞ்சாற்றினவர்களுக்குள்ளே பிரிவினை உண்டானது. ௰௧ பராபரன் அவனைத் திடப்படுத்தினது. ௰௪. யூதர்கள் அவனுக்கு மோசஞ்செய்ய நினைத்தது. ௨௰ பிரதான சேனைக்காரனுக்கு அறிவிக்கப்பட்டது. ௨௭ அவன் பவுலைப் பேலிக்குத் துரையினிடத்திற்கு அனுப்பினது.

அப்பொழுது பவுல் பெரிய சங்கத்தாரை நோக்கிச் சொன்னதாவது: சகோதரர்களே, [1]இந்நாள்வரைக்கும் என் மனது எனக்கு எவ்விதத்தாலும் நற்சாட்சிகொடுக்கத்தக்கதாக, பராபரனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னபொழுது,

௨ பிரதான ஆசாரியனாகிய அனனீயா அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி, [2]இவன் வாயிலே அடியுங்கள் என்று கட்டளையிட்டான்.

௩ அப்பொழுது பவுல் அவனுடனே சொன்னது: சாந்துபூசப்பட்ட சுவரே, பராபரன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி எனக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி உட்கார்ந்திருக்கிற நீர், [3]நியாயப்பிரமாணத்திற்குத் தப்பிதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான்.

௪ சமீபத்தில் நின்றவர்கள் சொன்னது: பராபரனுடைய பிரதான ஆசாரியனையா வைகிறாய் என்றார்கள்.

௫ அதற்குப் பவுல் சொன்னது: சகோதரரே, [4]இவர் பிரதான ஆசாரியனென்று நான் நினைக்கவில்லை; [5]உன் சனத்தின் தலைவனைக் குறித்துத் தீதுசொல்லாதிருப்பாயாக என்று எழுதியிருக்கின்றதே என்றான்.

௬ ¶ பின்பு அவர்களில் ஒரு பங்கு சதுசேயரென்றும் ஒரு பங்கு பரிசேயரென்றும் பவுல் அறிந்து, மிகுந்த சத்தத்தோடே [illegible]த்தாருக்குள்ளே கூப்பிட்டுச் சொன்னதாவது: சகோதரர்களே, [6]நான் பரிசேயனுமாய் ஒரு பரிசேயனுடைய மகனுமாய் இருக்கிறேன்; [7]நித்திய சீவனுக்கு ஏற்ற நம்பிக்கையைக்குறித்தும், மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக்குறித்தும், நான் நியாயத்தீர்ப்பு அடையும்படி இருக்கிறேன் என்று சொன்னபொழுது,

௭ [8]சதுசேயர் உயிரோடெழுந்தி

கி. பி. ௬௰

---

* அல்லது வருத்தும்படி

[1] அப ௨௪ ௰௬ ௧ கொரி ௪ ௪. ௨ கொரி ௧ ௰௨ ௪ ௨. ௨ தீமோ ௧ ௩ எபி. ௰௩ ௰௮

[2] ௧ இரா ௨௨ ௨௪ எரே ௨௰ ௨ யோவா ௰௮ ௨௨

[3] ௩ மோ ௰௯ ௩௫ ௫ மோ ௨௫ ௧,௨ யோவா ௭ ௫௧

[4] அப ௨௪ ௰௭

[5] ௨ மோ ௨௨ ௨௮ பிர ௰ ௨௰ ௨ பே ௨. ௰ யூதா ௮

[6] அப ௨௬ ௫ பிலி ௩ ௫

[7] அப ௨௪ ௰௫, ௨௧ ௨௬ ௬ ௨௮. ௨௰

[8] மத் ௨௨ ௨௩ மாற் ௰௨ ௰௮ லூக் ௨௰. ௨௭

ருக்குதலும் இல்லை, அரூபியும் ஆவியும் இல்லை என்று சொல்லுகிறபடியினாலும் பரிசேயர் அவ்விரண்டும் உண்டெனறு அறிக்கைபண்ணுகிறபடியினாலும்,

௮ பரிசேயருக்கும் சதுசேயருக்கும வாக்குவாதமு உண்டாயிற்று; கூட்டமும் பிரிவினை அடைந்தது.

௯ மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று; அபபொழுது பரிசேயரைச் சேர்நத வேதபாரகர் எழுநது மிகவும் விரோதமாய்ப பேசி, [1]இநத மனிதனிடத்தில் ஒரு பொல்லாஙகையும் காணோம், [2]ஒரு ஆவி அல்லது ஒரு தூதன் இவனுடனே பேசினதுணடானால் [3](அதினால் என்ன) என்றார்கள்.

௰ பின்பு மிகுந்த கலகம் உண்டானபொழுது, பவுல் அவர்களால் பீறுணடுபோவான் என்று பெரிய சேனைத்தலைவன் பயந்து, அவனை அவர்களிலிருநது பறித்து, கோட்டைககுக கொணடு போகும்படி போர்ச்சேவகருக்குக் கட்டளையிட்டான்.

௰௧ [4]அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று, பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறிதது எருசலேமிலே சாட்சிகொடுததுபோல, உரோமை நகரியிலேயும் சாட்சிகொடுபபாய் என்றார்

௰௨ ¶ விடியற்காலமானபொழுது [5]யூதரில் சிலர் இரகசியமாய்க் கூ[illegible] அந்தப் பவுலை நாம் கொலைசெய்யும் அளவும் புசியாமலும் குடியாமலும் இருபபோமாக என்று சபதம்பண்ணிக்கொண்டு,* தங்களுக்குள்ளே கட்டுப்பாடு செய்தார்கள்.

௰௩ இப்படிச் சபதத்தினாலே கட்டுபபாடுசெய்தவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள்.

௰௪ அவர்கள் பிரதான ஆசாரியரிடததிலும் மூப்பரிடத்திலும் போய்ச் சொன்னதாவது: நாங்கள் பவுலைக் கொலைசெய்யும் அளவும் ஒன்றையும் ருசிபார்க்ககூடாதென்று கொடிய சபதம்பண்ணிக்கொண்டோம்.

௰௫ ஆனபடியினாலே நீங்கள் பெரியசங்கத்தாருடனேயுங்கூட அவனுடைய காரியத்தை அதிக கெட்டியாய் விசாரிக்க மனதுளளவர்கள்போலச சேனாதிபதிக்குக காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கொண்டு வரும்படி கேட்பீர்களாக; அபபொழுது அவன் உஙகளுக்குச் சமீபமாய் வரும்முன்னே நாஙகள் அவனைக் கொலைசெய்ய எத்தனமாயிருக்கிறோம் என்றார்கள்.

௰௬ ¶ அநதச் சாபபனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, உடனே கோட்டைக்குப போய், பவுலுக்கு அறிவிததான்.

௰௭ அபபொழுது பவுல் படைத்தலைவரில் ஒருவனை அழைதது, இநத வாலிபன் சேனாதிபதிககு ஒரு காரியத்தை அறிவிபபான்; ஆகையால் இவனை அவரிடத்திற்குக் கொணடுபோகவேணடும் என்றான்.

௰௮ அநதப்படி அவன் அவனைச் சேர்தது, சேனாதிபதியிடத்திறகுக் கொண்டுபோய், காவலில் வைக்கபபட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கு ஒரு காரியத்தைச் சொல்லவேண்டுமென்று இருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டுபோகும்படி என்னை வேண்டிக்கொண்டான் என்றான்.

௰௯ அப்பொழுது சேனாதிபதி அவனுடைய கையைப பிடித்துத தனிமையான இடத்தில் கொண்டுபோய், நீ எனக்கு என்ன அறிவிக்க விரும்புகிறாய் எனறு கேட்டான்.

௨௰ அவன் சொன்னதாவது: [6]யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக கெட்டியாய் விசாரிகக மனதுள்

கி. பி. ௬௰.

[1] அப ௨௫ ௨௫ ௨௬ ௩௧

[2] அப ௨௨ ௭, ௰௭, ௰௮

[3] அப ௫ ௩௯

[4] அப ௰௮ ௯ ௨௭ ௨௩, ௨௪.

[5] ௨௧, ௩௰ வச அப ௨௫ ௩

* அல்லது சாபமிட்டுக்கொண்டு

[6] ௰௨. வச.

கி. பி. ௬௰.

ளவர்கள்போல வநது, நீர் நாளைக்கு அவனைப் பெரிய சங்கத்தாரிடத்திற்குக கொண்டுவரும்படிக்கு, உம்மை வேண்டிக்கொள்ளத் தீர்மானம்பண்ணினார்கள்; அவாகளுக்குச் சம்மதியாதிருப்பீராக.

௨௧ என்னத்தினாலெனில், அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானபேர்கள் அவனைக கொலைசெய்யுமளவும், புசிககவும் குடிக்கவும் மாட்டோம என்று சபதமபண்ணிக்கொணடு, அவனுக்காக ஒளிததிருநது, இபபொழுது உமமுடைய உத்தரவுவரக் காத்துக்கொண்டு, எத்தனமாய் இருக்கிறாகள் என்றான்.

௨௨ அபபொழுது சேனாதிபதி சொன்னது: நீ இவைகளை எனககு அறிவிததததை ஒருவருக்கும் சொல்லாதிரு என்று வாலிபனுககுக் கட்டளையிட்டு அவனை அனுபபி,

௨௩ ¶ பின்பு படைததலைவர் இருவரை அழைதது, சேசாரியாபட்டணததிற்குப போகும்படிக்கு, இருநூறு போர்சசேவகரையும், குதிரைப போர்ச்சேவகர் எழுபதுபேரையும், இருநூறு விற்காரரையும் இராத்திரியின் மூன்றாம் மணி நேரத்திற்கு எத்தனம்பண்ணுங்கள்.

௨௪ அல்லாமலும் பவுலை ஏற்றிததுரையாகிய பேலிககுசினிடத்திற்குப பத்திரமாய்க கொண்டுபோகும்படிக்கு, வாகனஙகளில் இருக்கும்படி செய்யுங்கள் என்று சொல்லி,

௨௫ பின்பு எழுதின நிருபத்தின் விவரமாவது:

௨௬ கனம்பொருந்திய துரையாகிய பேலிக்குசுக்குக் கிலவுதியூலிசியா சவுக்கியம் உண்டாக வாழ்த்துகிறேன்.

௨௭ [1]இந்த மனிதன் யூதர்களால் பிடிக்கப்பட்டு அவர்களால் கொலைசெய்யபபடுவதற்கு ஏதுவாயிருந்தபொழுது, நான் போர்ச்சேவகருடனேகூடப போய் இவனை இழுததுககொணடு வந்தபொழுது இவன் உரோமனென்று அறிந்தேன்

௨௮ [2]அவர்கள் இவன்மேல் சாற்றின குற்றத்தை நான் அறிய மனதாய் இவனை அவர்களுடைய பெரிய சஙகத்திற்குக் கொண்டுபோனேன்.

௨௯ [3]அங்கே அவன் மரணததிற்கு அல்லது சங்கிலிகளுக்கு ஏற்ற குற்றம் இல்லாமல் அவர்களுடைய [4]வேதத்திற்குரியதருக்கங்களைக் குறித்துக் குற்றம் சாற்றப்பட்டவன் என்று எனக்குத் தெரியவநதது.

௩௰ பின்பு [5]யூதர்கள் இந்த மனிதனுககு விரோதமாய் இரகசியமான யோசனைபணணிக்கொள்ளுகிறாகள என்று எனக்குத் தெரிந்தபொழுது நான் உடனே இவனை உம்மிடத்திற்கு அனுபபி, [6]குற்றமசாற்றுகிறவர்களும் தாங்கள் இவனுககு விரோதமாய்ச் சொல்லுகிற காரியஙகளை உமக்குமுன்பாகப போய்ச் சொல்லும்படி கட்டளையிட்டேன்; சுகமாயிருப்பீராக என்று எழுதி அனுபபினான்.

௩௧ ¶ போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிடபபட்டபடியே பவுலைச் சேர்த்துக்கொண்டு, இராத்திரியிலே அநதிபபத்திரி ஊருக்குக் கொண்டுபோய்,

௩௨ மறுநாளிலே குதிரைப் போர்ச்சேவகரை அவனுடனேகூடப போக அனுப்பி, தாங்களோ கோட்டைக்குத் திரும்பினார்கள்.

௩௩ அவர்கள் சேசாரியா பட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் துரைககுக் கொடுத்து, பவுலையும் அவன்முன்பாக நிறுத்தினார்கள்.

௩௪ துரை அதை வாசித்து, நீ எந்தத் தேசத்தான் என்று கேட்டு, [7]கிலீக்கிய தேசத்தான் என்று அறிந்து,

[1] அப ௨௧. ௩௩ ௨௪ ௭.

[2] அப ௨௨ ௩௰

[3] அப ௨௬ ௩௧

[4] அப ௧௮ ௧௫ ௨௫ ௧௯

[5] ௨௰ வச

[6] அப ௨௪ ௮ ௨௫ ௬

[7] அப ௨௧ ௩௯.

௩௫ பின்பு [1]உன்மேல் குற்றம் சாற்றுகிறவர்களும் வந்திருக்கும்பொழுது, உன்னிடத்தில் விசாரிப்பேன் என்று சொல்லி, [2]ஏரோதேயின் அரமனையிலே அவனைக் காவலில் வைக்கும்படி கட்டளையிட்டான்.

௨௪. அதிகாரம்.

௧ பவுல் தொத்துல்லு என்ற வாயச்சாலகனால் குற்றம்சாற்றபபட்டபோது, ௰ அவன தன நடக்கையையும் உபதேசத்தையுஙகுறித்து உத்தரவுசொனனது. ௨௪ துரைக்கும அவன பெண்சாதிக்கும கிறிஸ்துவைப பிரசஙகித்தது ௨௬ துரை லஞ்சத்தை விருமபியும அடையாமற்போனது ௨௭ அந்தத் துரையின் உத்தியோகம் மாறிபபோனதும பவுலைக் காவலில வைத்துபபோனதும.

[3]ஐந்துநாளைக்குப் பின்பு, [4]பிரதான ஆசாரியனாகிய அனனீயா மூப்பரோடும், பேச்சில் கெட்டிககாரனாகிய தெர்த்துல்லுவோடும் கூடப்போய், பவுலுக்கு விரோதமாய்த் துரையினுடைய சன்னிதானத்தில் பிரவேசித்தார்கள்.

௨ அவன் அழைக்கபபட்டு வநதபொழுது, தொத்துல்லு குற்றம ஏற்படுத்தினதாவது:,

௩ மிகுநத கனமபொருந்திய பேலிக்குசே, உம்மாலே நாஙகள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அனுபவிக்கிறதையும் உம்முடைய விசாரிப்பினாலே இந்தத தேசத்தாருக்காக மிகுந்த மகிமையுள்ள கிரியைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் பெரிய உபகாரமென்று எண்ணி, அறிக்கையிடுகிறோம்.

௪ நான் அதிக வார்த்தைகளாலே உமக்கு வருத்தத்தை உண்டுபண்ணாதபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் உம்முடைய பொறுமையோடே கேட்கவேண்டிக்கொள்ளுகிறேன்.

௫ என்னவென்றால், [5]இந்த மனிதன் பெருவாரிக்காய்ச்சலைப்போல, பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்பியிருக்கிறதையும், நாசரேத்தாரென்னும் கெட்ட பிரிவுக்கு முதலாளியாய் இருக்கிறதையும்,

௬ எஙகள் [6]தேவாலயத்தை அசுசிப்படுத்தத் தேடினதையும், நாங்கள் கண்டறிநது இவனைப பிடித்து, [7]எங்கள் வேதநூலின்படியே இவனுக்கு நியாயததீர்பபுக் கொடுக்க மனதாயிருநதோம்.

௭ அபபொழுது சேனாதிபதியாகிய [8]லீசியா என்பவர் வந்து, மிகுந்த பலவந்தமாய் இவனை எஙகள் கைகளிலிருந்து பறித்துக்கொண்டுபோய்,

௮ இவன்மேல் [9]குற்றம்சாற்றுகிறவர்கள் உம்மிடததில் வரும்படி கட்டளையிட்டார்; நீர் இவனிடத்தில் கெட்டியாய் விசாரித்தால், நாஙகள் இவன்மேல் குற்றம் சாற்றுகிற காரியங்கள் யாவையும் அறிநதுகொள்வீர் என்றான்.

௯ மற்ற யூதர்களும் அதற்கு இசைந்து, இபபடியே இருக்கிறதென்று சொன்னார்கள்.

௰ ¶ அபபொழுது பவுல் பேசுகிறதற்குத் துரையினாலே சமிக்கைபெற்றபின்பு அவன் சொன்னமாறுத்தரமாவது: அநேக வருஷம் நீர் இந்தத தேசததாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறதைநான் அறிந்து, அதிக சந்தோஷத்தோடே எனக்காக உத்தரவு சொல்லுகிறேன்.

௧௧ நீர் அறியும்படி [10]நான் பராபரனைத்தொழுதுகொள்ளும்படிக்கு, எருசலேமுக்குப போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிறறு.

௧௨ [11]தேவாலயத்திலே நான் ஒருவரோடும் தருக்கம்பண்ணவும், செபஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் சனங்களுக்குள்ளே கலகம் எழுபபவும், இவர்கள் காணவுமில்லை.

௧௩ இப்பொழுது, என்மேல் சாற்றுகிற குற்றங்களுக்குச் சாட்சிகளைக் காண்பிக்கவுமாட்டார்கள்.

௧௪ நான் உமக்கு அறிக்கையிடுகிறது என்னவென்றால், [12]இவர்

கி. பி. ௬௰.

1 அப ௨௪ ௧,௰ ௨௫ ௰௬
2 மத் ௨௭ ௨௭.
3 அப ௨௧ ௨௭
4 அப ௨௩ ௨, ௩௰, ௩௫ ௨௫ ௨
5 லூக் ௨௩ ௨ அப ௬ ௰௩ ௰௬ ௨௰ ௰௭ ௬ ௨௧ ௨௮ ௧ பே ௨ ௰௨, ௰௫
6 அப ௨௧ ௨௮
7 யோவா ௰௮ ௩௧
8 அப ௨௧ ௩௩
9 அப ௨௩ ௩௰
10 ௰௭ ௰௪ அப ௨௧ ௨௬
11 அப ௨௫. ௮ ௨௮ ௰௭
12 ஆமோ ௭ ௰௪. அப ௯ ௨

கி. பி. ௬௰.

கள் கெட்டபிரிவு என்றுசொல்லுகிற மார்க்கத்தின்படியே[1] நான் நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசனப் புத்தகங்களிலேயும் எழுதியிருக்கிற யாவையும் விசுவாசித்துக்கொண்டு, [2]எங்கள் முன்னோர்களுடைய தேவனுக்கு ஆராதனை செய்து,

௰௫ [3]மரித்தோராகிய நீதிமான்களும் அநீதிமான்களும் மறுபடியும் உயிரோடெழுந்திருப்பார்கள் என்று [4]இவர்களும் அடைந்திருக்கிற நம்பிக்கையைப் பராபரன்மேல் வைத்திருக்கிறேன்.

௰௬ அதினாலே [5]நான் பராபரனுக்கும் மனிதருக்கும் முன்பாக எப்பொழுதும் நற்சாட்சி கொடுக்கிற மனதுள்ளவனாயிருக்கும்படி முயற்சிப்படுகிறேன்.

௰௭ அநேக வருஷங்களுக்குப் பின்பு [6]நான் என் தேசத்தாருக்குத் தருமங்களை ஒப்புக்கொடுக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்.

௰௮ கூட்டமில்லாமலும் அமளி இல்லாமலும் நான் தேவாலயத்தில் அப்படிச் செய்து சுத்தம்பண்ணிக்கொண்டிருக்கையில், [7]ஆசியாதேசத்தாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள்.

௰௯ [8]அவர்களிடத்தில் எனக்கு விரோதமான காரியம் உண்டானால், அவர்களே உமக்குமுன்பாக இங்கே வந்து, குற்றம்சாற்ற வேண்டும்.

௨௰ அல்லது நான் பெரிய சங்கத்தாருக்குமுன்பாக நின்றபொழுது, என்ன குற்றத்தை என்னிடத்தில் கண்டார்கள்; அதை இவர்களும் சொல்லலாமே.

௨௧ நான் அவர்களுக்குள்ளே நின்றபொழுது, [9]மரித்தோர் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்கிறதைக்குறித்து நான் இன்றைக்கு உங்களால் நியாயத்தீர்ப்பு அடையும்படி இருக்கிறேன் என்று நான் கூப்பிட்டேன்; இந்த ஒரே சொல்லின்நிமித்தமே அன்றி வேறொன்றின்நிமித்தமும் குற்றம்காணவில்லையே என்றான்.

௨௨ ¶ பேலிக்குசென்பவன் அதைக் கேட்டு இந்த மார்க்கத்தைக் குறித்து அதிக விவரமாய் அறிந்த பின்பு, சேனாதிபதியாகிய [10]லீசியா வரும்பொழுது, நான் உங்கள் காரியத்தைக் கெட்டியாய் விசாரித்துக்கொள்வேன் என்று சொல்லி அவர்களை அனுப்பி,

௨௩ பின்பு பவுலைக் காத்துக்கொள்ளும்படிக்கும், அவனுக்குக் கண்டிப்புச் செய்யாதபடிக்கும் [11]அவனுடைய மனிதர்களில் ஒருவனாகிலும் அவனிடத்தில் போய், அவனுக்கு ஊழியம் செய்வதற்குத் தடைபண்ணாதபடிக்கும் தலைவனுக்குக் கட்டளையிட்டான்.

௨௪ ¶ சிலநாளுக்குப் பின்பு பேலிக்குசு யூதஸ்திரியாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான்.

௨௫ அந்தப்படி அவன் நீதியையும் இச்சை அடக்கத்தையும் பின்வரும் நியாயத்தீர்ப்பையுங்குறித்துப் பேசிக்கொள்ளுகையில், பேலிக்குசு பயமடைந்து இப்பொழுது நீ போகலாம், இனிமேல் எனக்குச் சாவகாசம் இருக்கும்பொழுது உன்னை மறுபடியும் அழைப்பிப்பேன் என்றான்.

௨௬ மேலும் [12]அவன் பவுலை விடுதலைபண்ணும்படியாய்த் தனக்கு அவன் பணங்கொடுப்பான் என்று நம்பிக்கையாயிருந்தான்; அதின்நிமித்தமே அவன் அநேகந்தரம் அவனை அழைப்பித்து அவனுடனே பேசிக்கொண்டான்.

௨௭ இரண்டுவருஷமானபொழுது பேலிக்குசுக்குப் பதிலாகப் பொர்க்கியுபெஸ்து என்னும் துரை வந்தான்; [13]அப்பொழுது பேலிக்குசு யூதர்களுக்குச் சந்தோ

1 அப ௨௬ ௨௨. ௨௮ ௨௩
2 ௨ தீமோ ௧ ௩
3 தானி ௰௨ ௨. யோவா ௫ ௨௮, ௨௯
4 அப ௨௩ ௬. ௨௬ ௬,௭ ௨௮ ௨௰
5 அப ௨௩ ௧
6 அப ௰௧ ௨௯, ௩௰ ௨௰ ௰௬ உரோ ௰௫ ௨௫ ௨ கொரி ௮ ௪ கலா ௨ ௰
7 அப ௨௧ ௨௬, ௨௭ ௨௬ ௨௧
8 அப ௨௩ ௩௰ ௨௫ ௰௬
9 அப ௨௩ ௬ ௨௮ ௨௰
10 ௭ வச
11 அப ௨௭ ௩. ௨௮ ௰௬
12 ௨ மோ ௨௩ ௮
13 ௨ மோ ௨௩ ௨. அப ௰௨ ௩. ௨௫ ௯, ௰௪

ஷஞ்செய்ய மனதாய், பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான்.

௨௫. அதிகாரம்.

௧ யூதர்கள் பெஸ்துவுக்குமுன்பாகப் பவுல்மேல் குற்றம்சாற்றினது. ௮ அதற்கு அவன் உத்தரவு சொல்லி, ௰௧ இராயனுக்கு அபயமிட்டது. ௰௪ பெஸ்து இந்தக் காரியத்தை அகிரிப்பா இராசாவுக்கு அறிவித்தது, ௨௩ பவுல் விசாரிக்கப்பட்டு, ௨௫ மரணத்துக்குப் பாத்திரவானல்லவென்று பெஸ்துவினாலே தீர்ப்படைந்தது.

பெஸ்து என்பவன் துரைத்தனத்திற்கு வந்து மூன்று நாளுக்குப்பின்பு, சேசாரியா பட்டணத்திலிருந்து எருசலேமுக்குப்போனான்.

௨ [1]அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதருடைய பெரியோர்களும் அவனிடத்தில் சேர்ந்து, பவுலுக்கு விரோதமாய்ப் பிராதுபண்ணி,

௩ [2]அவனை வழியிலே கொலைசெய்ய இரகசியமான யோசனையுள்ளவர்களாய், நீர் கிருபைசெய்து, அவனை எருசலேமுக்கு வரவழைப்பிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

௪ அதற்குப் பெஸ்து சொன்னது: பவுல் சேசாரியாவிலே காக்கப்பட்டிருக்கிறானே.

௫ நானும் சீக்கிரமாக அங்கே போவேன்; ஆதலால் உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து [3]அந்த மனிதனிடத்தில் குற்றம் உண்டானால் அதை அவன்மேல் சாற்றுவார்களாக என்றான்.

௬ ¶ பின்பு அவன் ஓர் எட்டுப்பத்துநாள்* அவர்களிடத்தில் சஞ்சரித்தபின்பு, சேசாரியா பட்டணத்திற்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டுவரச்சொன்னான்.

௭ அவன் வந்தபொழுது எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் சுற்றிநின்று, [4]அநேகமான குற்றங்களைப் பவுலின்மேல் சாற்றினார்கள்; அவைகளை அவர்கள் மெய்ப்படுத்தத் திராணி இருக்கவில்லை.

௮ பின்பு பவுல் சொன்னது: [5]நான் யூதருடைய வேதநூலுக்காகிலும், தேவாலயத்திற்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாய் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றான்.

௯ அப்பொழுது பெஸ்து [6]யூதர்களுக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பவுலுடனே சொன்னது: [7]நீ எருசலேமுக்குப் போய், அங்கே என்னாலே இந்தக் காரியங்களைக்குறித்து நியாயத்தீர்ப்பு அடைய மனதிருக்கிறதா என்றான்.

௰ அதற்குப் பவுல் சொன்னது: இராயனுடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிற்கிறேன்; அதற்குமுன்பாக நான் நியாயத்தீர்ப்பு அடையவேண்டும்; யூதருக்கு நான் ஒரு அநியாயமும் செய்யவில்லை; அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.

௰௧ அநியாயமானதையாவது [8]மரணத்திற்குப் பாத்திரமானதையாவது நான் நடப்பித்தேனானால், நான் சாகிறதற்கு மறுக்கமாட்டேன்; இவர்கள் என்மேல் சாற்றுகிற குற்றங்கள் எல்லாம் வீணாயிருக்கிறபடியால், ஒருவரும் என்னை அவர்களுக்குச் சந்தோஷமாக ஒப்புக்கொடுக்கக்கூடாது; [9]இராயருக்கே அபயமிடுகிறேன் என்றான்.

௰௨ அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே பேசிக்கொண்டு, நீ இராயருக்கு அபயமிட்டாய்; இராயரிடத்திற்கே போவாய் என்று உத்தரவுசொன்னான்.

௰௩ ¶ சிலநாள் சென்றபின்பு, இராயனாகிய அகிரிப்பாவும், பெர்னீக்கேயாளும் பெஸ்துவை வாழ்த்தும்படிக்கு, சேசாரியா பட்டணத்திற்குப் போனார்கள்.

௰௪ அங்கே அவர்கள் அநேகநாள் சஞ்சரித்திருக்கையில் பெஸ்து பவுலின் சங்கதியை இராயனுக்கு விவரித்துச் சொன்னதாவது: [10]பேலிக்சென்பவராலே காவலில் வைத்துவிடப்பட்ட ஒரு மனிதன் இருக்கிறான்.

கி. பி. ௬௨.

[1] அப். ௨௪. ௧. ௰௫ வச.
[2] அப். ௨௩. ௰௨, ௰௫.
[3] அப். ௰௮. ௰௪. ௰௮ வச.
* அல்லது சில பிரதிகளில் பத்துநாளுக்கு அதிகமாய.
[4] மாற். ௰௫. ௩. லூக். ௨௩. ௨, ௰. அப். ௨௪. ௫, ௰௩.
[5] அப். ௬. ௰௩. ௨௪. ௰௨. ௨௮. ௰௭.
[6] அப். ௨௪. ௨௭.
[7] ௨௰ வச.
[8] ௨௫ வச. அப். ௰௮. ௰௪. ௨௩. ௨௯. ௨௬. ௩௧.
[9] அப். ௨௬. ௩௨. ௨௮. ௰௯.
[10] அப். ௨௪. ௨௭.

௰௫ நான் எருசலேமிலே இருந்தபொழுது [1]பிரதான ஆசாரியரும் யூதருடைய மூப்பரும் அவனுக்கு விரோதமாய்ப் பிராதுபண்ணி, அவன்மேல் ஆக்கினைத்தீர்ப்பைக் கேட்டுக்கொண்டார்கள்.

௰௬ [2]அவர்களுக்கு நான் உத்தரவு சொன்னது: குற்றம்சாற்றப்பட்டவன் தன்மேல் குற்றம்சாற்றினவர்களுக்குமுன்பாக நின்று, அவர்கள் சாற்றின குற்றத்தைக்குறித்துத் தனக்காக எதிர்உத்தரம் சொல்லும்படிக்கு அவன் இடம் அடைகிறதற்குமுன்னே, அப்படிப்பட்டவனை அவர்களுக்குத் தயவாய் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறது உரோமருக்குள்ளே வழக்கமல்ல என்றேன்.

௰௭ அந்தப்படி அவர்கள் இங்கே கூடிவந்தபொழுது, [3]நான் தாமதம் எவ்வளவும் பண்ணாமல் மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, அந்த மனிதனைக் கொண்டுவரச்சொன்னேன்.

௰௮ அப்பொழுது குற்றம்சாற்றினவர்கள் வந்து நின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் ஏற்படுத்தாமல்,

௰௯ [4]தங்கள் மார்க்கத்திற்கும், மரணமடைந்த இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறான் என்று பவுல் சொன்னதற்கும் ஏற்ற சில தருக்கங்களை அவனுக்கு விரோதமாய்ச் சொன்னார்கள்.

௨௰ நான் இப்படிப்பட்ட தருக்கங்களைக்குறித்துச் *சந்தேகப்பட்டபடியினாலே நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட மனதிருக்கிறதா என்றேன்.

௨௧ அதற்குப் பவுல் தான் இராயருக்குமுன்பாக விசாரிக்கப்படுமளவும் †வைக்கப்படவேண்டுமென்று அபயமிட்டபொழுது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்பும்வரைக்கும் காத்துவைக்கும்படி கட்டளையிட்டேன் என்றான்.

௨௨ [5]அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவுடனே சொன்னது: நானும் அந்த மனிதனுடைய வசனங்களைக் கேட்க விரும்புகிறேன் என்றான்; அதற்கு அவன்: நாளைக்கு நீர் அப்படிக் கேட்கலாம் என்றான்.

௨௩ ¶ அந்தப்படி மறுநாளிலே அகிரிப்பாவும் பொனீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்தோடே வந்து, சேனாதிபதியுடனேயும் பட்டணத்தில் பிரதான மனிதருடனேயுங்கூட நியாயஸ்தலத்திற்குப் போனார்கள்; உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்.

௨௪ அப்பொழுது பெஸ்து சொன்னதாவது: அகிரிப்பா இராசாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் இருக்கிற மனிதர்களே, நீங்கள் பார்க்கிற இந்த மனிதனைக் குறித்து [6]யூதருடைய சபையெல்லாம் எருசலேமிலேயும் இவ்விடத்திலேயும் என்னை வேண்டிக்கொண்டு, [7]இவன் இனி உயிரோடிருக்கத்தகாதென்று கூப்பிட்டார்கள்.

௨௫ நான் [8]இவன் மரணத்திற்குப் பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லை என்று அறிந்து, [9]இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலே, இவனை அவரிடத்தில் அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன்.

௨௬ இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியம் எனக்குத் தெரியாது; ஆதலால் காவலில் உட்பட்ட ஒருவனைக்குறித்துக் குற்றத்தை அறிவியாமல், அவனை அனுப்புகிறது எனக்குப் புத்தியீனமான காரியமாய்த்தோன்றினபடியினாலே,

௨௭ இவனை விசாரித்துப்பார்த்தபின்பு எழுதத்தக்க விசேஷம் எனக்கு உண்டாகும்படிக்கு, இவனை உங்கள்முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா இராசாவே,

கி. பி. ௬௨

[1] ௨, ௩ வச
[2] ௪, ௫ வச
[3] ௬ வச
[4] அப ௰௮ ௰௫ ௨௩ ௨௯
* அல்லது எப்படி விசாரிக்கிறதென்று
† அல்லது நிர்த்தாரிக்கப்படுமளவும்
[5] அப ௯ ௰௫
[6] ௨, ௩, ௭ வச
[7] அப ௨௨ ௨௨
[8] அப ௨௩ ௯, ௨௯ ௨௬ ௩௧
[9] ௰௧, ௰௨ வச

உமக்குமுன்பாகவும் கொண்டு வந்தேன் என்றான்.

௨௬. அதிகாரம்.

௨, பவுல் அகிரிப்பாவுக்குமுன்பாகத் தன் சிறுவயது முதற்கொண்டு தான் நடந்த நடத்தையைக்குறித்தும், ௰௨ தான் அற்புதமாய்க் குணப்பட்டு அப்போஸ்தலப் பட்டத்துக்கு அழைக்கப்பட்டதைக் குறித்தும் திட்டமாய் அறிவித்தது ௨௪ பெஸ்து, நீ பயித்தியக்காரனென்று சொன்னபோது, நியாயமான உத்தரவுசொன்னது ௨௮ அகிரிப்பா கிறிஸ்தவனாகக் கொஞ்சங்குறையச் சம்மதித்தது ௩௧ கூட்டத்தாரெல்லாரும் பவுலைக் குற்றமற்றவனென்று தீர்த்தது

பின்பு அகிரிப்பாவானவன் பவுலை நோக்கி, நீ உனக்காகப் பேசும்படிக்கு உத்தரவு கொடுத்தேன் என்றான்; அப்பொழுது பவுல் கையை நீட்டி, தனக்காகச் சொல்லிக்கொண்ட உத்தரமாவது:

௨ அகிரிப்பா இராசாவே, யூதர்கள் என்மேல் சாற்றுகிற சகல குற்றங்களைக்குறித்தும், நான் இன்றைக்கு உமக்குமுன்பாக மாறுத்தரம் சொல்லவேண்டுவதினாலே, என்னைப் பாக்கியவான் என்று எண்ணுகிறேன்.

௩ விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தருக்கங்களையும் அறிந்தவராயிருக்கிறீரே; ஆகையால் நீர் நீடிய பொறுமையுடனே எனக்குச் செவிகொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

௪ நான் என் வாலிபவயது முதற்கொண்டு எருசலேமிலே என் தேசத்தாருக்குள்ளே இருந்தபடியால், என் வாலிபமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்;

௫ நம்முடைய மார்க்கத்திலே மிகவும் கெட்டியான [1]பரிசேயர் வகுப்பிலே நான் பரிசேயனாய்ச் சீவனம்பண்ணினதையும் ஆதிமுதல் அறிந்திருக்கிறார்கள்; அவர்களும் சாட்சிசொல்ல மனதாயிருந்தால், இப்படியே சொல்லுவார்கள்.

௬ இப்பொழுது [2]நம்முடைய பிதாக்களுக்குப் பராபரன் அருளிச்செய்த வாக்குத்தத்தத்திற்கு ஏற்ற நம்பிக்கைக்காக [3]நான் நியாயத்தீர்ப்பு அடையும்படி நிற்கிறேன்.

௭ [4]இரவும்பகலும்* இடைவிடாமல் பராபரனுக்கு ஆராதனைசெய்கிற [5]நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் [6]அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நம்பியிருக்கிறார்கள்; அகிரிப்பா இராசாவே, அந்த நம்பிக்கையின்நிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றம் சாற்றுகிறார்கள்.

௮ பராபரன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியம் என்று நீங்கள் எண்ணுகிறது எப்படி?

௯ முன்னே [7]நானும் நாசரேத்தூரானாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

௰ [8]அப்படியே எருசலேமிலே செய்தேன்; [9]நான் பிரதான ஆசாரியராலே அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைக் காவல்வீடுகளில் அடைத்தேன்; அவர்களைக் கொல்லவும் சம்மதித்தேன்.

௰௧ [10]அநேகந்தரம் நான் சகல செபஆலயங்களிலேயும் அவர்களைத் தண்டித்துத் தூஷணிக்கும்படிக்கு, அவர்களைப் பலவந்தம் செய்தேன்; நான் மிகவும் அவர்கள்மேலே மூர்க்கவெறியாயிருந்து, அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்.

௰௨ இப்படிச் செய்துவருகையில், நான் [11]பிரதான ஆசாரியரிடத்தில் பெற்ற அதிகாரத்தோடும் உத்தரவோடும் தமஸ்கு ஊருக்குப் போனபொழுது,

௰௩ இராசாவே, வழியிலே மத்தியானகாலத்தில் நான் சூரியனுடைய பிரகாசத்திற்கு அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும்

கி. பி. ௬௨.

[1] அப ௨௨ ௩ ௨௩ ௬ ௨௪ ௰௫, ௨௨ பிலி ௩ ௫

[2] ௧ மோ ௩ ௰௫ ௨௨ ௰௮ ௨௬ ௪ ௪௯. ௰ ௫ மோ ௰௮ ௰௫ ௨ சாமு ௭ ௰௨ சங ௱௩௨ ௰௧ ஏசா ௪ ௨ ௭ ௰௪ ௯ ௬ ௪௰ ௰ எரே ௨௩ ௫ ௩௩ ௰௪ ௰௫, ௰௬ எசே ௩௪ ௨௩ ௩௭ ௨௪ தானி ௯ ௨௪ மீகா ௭ ௨௰ அப ௰௩ ௩௨ ரோ ௰௫ ௮ தீத் ௨ ௰௩

[3] அப ௨௫ ௬

[4] லூக் ௨ ௩௭ ௧ தீமோ ௫ ௫ ௧ தெச ௩ ௰

* அல்லது பகலும் இரவும்

[5] யாக் ௧ ௧

[6] பிலி ௩ ௰௧

[7] யோவா ௰௬ ௨ ௧ தீமோ ௧ ௰௩

[8] அப ௮ ௩ கலா ௧ ௰௩

[9] அப ௯ ௰௪, ௨௧ ௨௨ ௫

[10] அப ௨௨ ௰௯

[11] அப ௯ ௩ ௨௨ ௬

4402 (7845)

கி. பி. ௬௨.

என்னுடனேகூடப் பிரயாணப்பட்டவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக்கண்டேன்.

௰௪ உடனே நாங்கள் எல்லாரும் தரையிலே விழுந்தபொழுது, சவுலே, சவுலே, என்னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரேயு பாஷையிலே சொன்ன சத்தத்தைக் கேட்டேன்.

௰௫ அதற்கு நான், ஆண்டவரே, நீர் யாரென்றேன்; அவர் சொன்னது: நான், நீ துன்பப்படுத்துகிற இயேசு.

௰௬ இப்பொழுது நீ எழுந்து காலூன்றி நில்; நீ கண்டவைகளையும் நான் உனக்குக் காண்பிப்பவைகளையுங்குறித்து [1]நான் உன்னை ஊழியக்காரன் என்றும்சாட்சியென்றும் ஏற்படுத்தும்படிக்கு உனக்குத் தரிசனையானேன்.

௰௭ ஆதலால் நான் உன் தேசத்தாரில் நின்றும் புறத்தேசத்தாரில் நின்றும் உன்னை விடுதலையாக்கி,

௰௮ [2]அவர்கள் என்னைப் பற்றிக்கொள்ளும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், [3]பரிசுத்தவான்கள் இருக்கிற இடத்திலே [4]சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படிக்கு [5]அவர்களுடைய கண்களைத் திறக்கவும், [6]அவர்களை இருளில்நின்று ஒளியினிடத்திற்கும், பசாசினுடைய அதிகாரத்திலநின்று பராபரனிடத்திற்கும் திருப்பவும் [7]உன்னை அவர்களிடத்தில் அனுப்புகிறேன் என்றார்.

௰௯ அகிரிப்பா இராசாவே, அந்தப் பரம தரிசனைக்கு நான் கீழ்ப்படாதவனாயிராமல்,

௨௰ முதலாவது [8]தமஸ்கு ஊரிலேயும் பின்பு எருசலேமிலேயும் யூதேயாதேசமெங்கும் உள்ளவர்களுக்குள்ளும் மற்றத் தேசத்தாருக்குள்ளும் போய்,அவர்கள் மனதை மாற்றிப் பராபரனிடத்திற்குத் திரும்பி, [9]மனந்திரும்புதற்கு ஏற்ற கிரியைகளைச் செய்யவேண்டும் என்று அறிவித்தேன்.

௨௧ [10]இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்து, பின்பு கொலைசெய்யும்படி தேடினார்கள்.

௨௨ பராபரன் எனக்கு உதவி செய்ததினாலே நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிசொல்லி நிற்கிறேன்; [11]தீர்க்கதரிசிகளும் [12]மோசேயும் பின்வரும் என்று சொன்னதின்படியே,

௨௩ [13]கிறிஸ்து பாடுபட்டும், [14]மரணத்தில்நின்று உயிரோடெழுந்திருப்பவர்களில் முதன்மையானவராயும் இருந்து, [15]யூதசனங்களுக்கும் மற்றத் தேசத்தாருக்கும் ஒளியைப் பிரசித்தம்பண்ணுகிறார் என்று நான் சொல்லுகிறதே அன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்

௨௪ ¶ இவ்விதமாய்ப் பவுல் தனக்காக உத்தரவு சொன்னபொழுது பெஸ்து மிகுந்த சத்தத்துடனே சொன்னது: பவுலே, [16]நீ பித்தங்கொண்டிருக்கிறாய்; அதிக கல்வி உன்னைப் பயித்தியக்காரனாக்குகின்றது என்றான்.

௨௫ அதற்கு அவன் சொன்னது: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பித்தங்கொண்டிருக்க இல்லை; சத்தியமும் நற்புத்தியுமான வார்த்தைகளை வசனிக்கிறேன்.

௨௬ இந்தச் சங்கதிகளை இராசா அறிந்திருக்கிறார்; இவை ஒரு மூலையிலே நடந்த காரியங்கள் அல்ல; ஆதலால் இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவாய் இருக்கமாட்டாது என்று நான் எண்ணி, தயிரியமாய் அவருடனே பேசுகிறேன்.

௨௭ அகிரிப்பா இராசாவே, தீர்க்கதரிசிகள்மேல் உமக்கு விசுவாசம் உண்டா? விசுவாசிக்கிறீர் என்று அறிந்திருக்கிறேன் என்றான்.

1 அப். ௨௨. ௰௫.
2 லூக். ௧. ௭௯.
3 அப். ௨௰. ௩௨.
4 எபே. ௧. ௰௧. கொலோ. ௧. ௰௨.
5 ஏசா. ௩௫. ௫. ௪௨. ௭. லூக். ௧. ௭௯. யோவா. ௮. ௰௨. ௨ கொரி. ௪. ௬. எபே. ௧. ௰௮. ௫. ௮.
6 ௨ கொரி. ௬. ௰௪. எபே. ௪. ௰௮. ௫. ௮. கொலோ. ௧. ௰௩. ௧ பேது. ௨. ௯.
7 அப். ௨௨. ௨௧.
8 அப். ௯. ௨௰, ௨௨. ௰௧. ௨௧. ௰௩. ௰௪. ௰௬, ௰௭, ௰௮, ௨௰, ௨௧.
9 மத். ௩. ௮.
10 அப். ௨௧. ௩௰. ௩௧.
11 லூக். ௨௪. ௨௭. ௪௪. அப். ௨௪. ௰௪. ௨௮. ௨௩. ரோ. ௩. ௨௧.
12 யோவா. ௫. ௪௬.
13 லூக். ௨௪. ௨௬. ௪௬.
14 ௧ கொரி. ௰௫. ௨௰. கொலோ. ௧. ௰௮. வெளி. ௧. ௫.
15 லூக். ௨. ௩௨.
16 ௨ இராஜா. ௯. ௰௧. யோவா. ௰. ௨௰. ௧ கொரி. ௪. ௰. ௨. ௰௩. ௧௪. ௬. ௯.

௨௮ அப்பொழுது அகிரிப்பா பவுலுடனே சொன்னது: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சம் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்.

௨௯ அதற்குப் பவுல் சொன்னது: நீமாத்திரம் அல்ல, இன்று என் வசனங்களைக் கேட்ட யாவரும் கொஞ்சமாய் அல்ல (முழுவதுமே) இந்தச் சங்கிலிகளைத் தவிர என்னைப்போல ஆகும்படிக்கு [1]பராபரனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௩௰ ¶ இவைகளை அவன் சொன்னபின்பு, இராசாவும் துரையும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனேகூட உளுக்கார்ந்திருந்தவர்களும் எழுந்துபோகையில்,

௩௧ ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, [2]இந்த மனிதன் மரணத்திற்கு அல்லது சங்கிலிகளுக்குப் பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லை என்றார்கள்.

௩௨ மேலும் அகிரிப்பா பெஸ்துவுடனே சொன்னது: [3]அந்த மனிதன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால் அவனை விடுதலைபண்ணத் தகுதியாயிருக்கும் என்றான்.

௨௭. அதிகாரம்.

௧ பவுல் உரோமாபுரிக்குப் போகக் கப்பலேறி, ௰ யாத்திரையினாலே உண்டாகும் நஷ்டத்தைச் சொல்லியும், ௰௧ கப்பற்காரர் நம்பாதது ௰௪ கொடுங்காற்றினாலே கப்பல் அங்கும் இங்கும் அலைந்து, ௨௧ சேதமாகியும், ௨௨ ௩௪ ௪௪ சனங்கள் சுகமாய்க் கரைசேர்ந்தது.

பின்பு நாங்கள் கப்பலேறி, [4]இத்தாலியா தேசத்திற்குப் போகும்படி தீர்மானம் உண்டானபொழுது, பவுலும், காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரும், இராயனுடைய சேனையில் இயூலியென்று பேர்கொண்ட தலைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்.

௨ அந்தப்படி நாங்கள் அதிர்மீத்துப் பட்டணத்தில் கப்பலேறி, ஆசியாதேசத்துக் கரையோரத்தின்வழியாய்ப் போக நினைத்துப் புறப்பட்டோம்; மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய [5]அரிஸ்தர்க்கு எங்களுடனேகூட இருந்தான்.

௩ மறுநாளிலே சீதோன் துறையில் சேர்ந்தோம்; இயூலி என்பவன் பவுலைப் [6]பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய், பராமரிப்பை அடையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்.

௪ அவ்விடத்தை நாங்கள் விட்டுப் புறப்பட்டு, காற்றுகள் எதிரானபடியினாலே சீப்புருதீவுக்கு அருகாகப் போய்,

௫ கிலிக்கியா பம்பிலியா தேசங்களின் கடலின் வழியாய்ப் போய், உலூக்கியா தேசத்து மீறாப்பட்டணத்தில் சேர்ந்தோம்.

௬ ¶ அங்கே இத்தாலியா தேசத்திற்குப் போக எத்தனமான அலெக்குசந்தரியா பட்டணத்துக் கப்பலைச் சேனைத்தலைவன் கண்டு, எங்களை அதிலே ஏறப்பண்ணினான்.

௭ காற்று எங்களுக்குத் தடைபண்ணினதினாலே நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினிது பட்டணத்திற்கு எதிரே போய், கிரேத்தை* தீவின் கீழ்ப்புறமான சாலுமோன் என்னும் இடத்திற்கு எதிராய்ப் போய்,

௮ வருத்தத்தோடே அதைக் கடந்து, கலூஸ்லீம் என்னப்பட்ட இடத்தில் சேர்ந்தோம்; இலசேய பட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது.

௯ ¶ அதுவரைக்கும் மிகுந்த காலம் சென்றபடியினாலும், [7]உபவாசபண்டிகைநாளும் கழிந்துபோனதால் அதிகமாய்ப் போகிறது மோசம்வருதற்கு ஏதுவானபடியினாலும் பவுல் அவர்களைநோக்கி,

௰ புருஷரே, இந்த யாத்திரைக் கப்பலில் உள்ள சரக்குகளுக்கும்

கி. பி. ௬௨.

[1] ௧ கொரி ௭ ௭
[2] அப் ௨௩ ௯, ௨௯ ௨௫ ௨௫
[3] அப் ௨௫ ௰௧
[4] அப் ௨௫ ௰௨, ௨௫
[5] அப் ௰௯ ௨௯
[6] அப் ௨௪ ௨௩, ௨௮ ௰௬
* அல்லது கந்தி
[7] ஏழாம் மாதத்தின் பத்தாம் நாள் உபவாசநாளாயிருந்தது ௩ மோ ௨௩ ௨௭, ௨௯.

4702. A1. V.1

கபபல்களுககுமமாத்திரம் அல்ல, நம்முடைய சீவனுககுஙகூட வருததமும்* மிகுந்த சேதமுமாய் இருககும என்று காணகிறேன் என்று எச்சரித்தான்.

௰௧ சேனைததலைவன் பவுலினால் சொல்லபபட்டவைகளிலும், மாலுமியையும் கபபற்காரனையும் அதிகமாய் நம்பினான்.

௰௨ அலலாமலும் அந்தத துறை மழைகாலததில தங்குதற்குத தகுதி அல்லாதபடியினாலே தெனமேற்கேயும் வடமேற்கேயும நோக்குகிற பினீகஸ் என்னும கிரேத்தை தீவின துறைமுகத்திலே மழைகாலததிற்குத தஙகுதறகு அஙகே சேரககூடுமானால், சேரும்படிக்கு இவ்விடம்விட்டுப புறபபடவேணடுமென்று அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள்.

௰௩ ¶ மேலும் தென்றல் மெதுவாய் அடிததபடியால், அவர்கள் தஙகள யோசனையின்படி நிச்சயமாய் நடககுமென்று எண்ணி அவ்விடமவிட்டுப போந்து, கிரேததை தீவுககு அருகாயப போனார்கள்.

௰௪ சில காலததிற்குபபின்பு, ஐரோக்கிலிதோன் எனனபபட்ட கடுஙகாற்று அதில் மோதிற்று.†

௰௫ கபபல் அதில் அகபபட்டுககொண்டு காற்றுக்கு எதிரததுப போகமாட்டாதபடியினாலே, நாஙகள் காற்றின் போககிலே கொணடுபோகப்பட்டோம்.

௰௬ அபபடி கலவுதை என்னபபட்ட ஒரு சிறிய தீவைக கடந்து ஓடுகையில், ஓடததை வசபபடுத்திக்கொள்ளுதற்கு மிகுந்த வருத்தம் உண்டாயிருந்தது.

௰௭ அதை அவர்கள் தூக்கி எடுத்தபின்பு, எல்லாருடைய உதவியினாலும் கபபலைச் சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோம் என்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகபபட்டோம்.

௰௮ மேலும் நாங்கள் பெருங்காற்று மழையினாலே மிகவும் அடிககப்பட்டபடியால், மறுநாளிலே சில பாரத்தைக் கடலில் எறிந்தார்கள.

௰௯ மூன்றாம் நாளிலே கபபலின் [1]தளபாடஙகளை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்.

௨௰ அநேக நாளாய்ச் சூரியனாகிலும் நட்சததிரஙகளாகிலும் காணபபடாமல் மிகுந்த பெருங்காற்றும மழையும் எஙகளைச் சூழ்ந்திருநதபடியினாலே, தபபிபபோவதற்கான நம்பிக்கையெல்லாம் அற்றுபபோயிற்று

௨௧ அபபடியிருககையில், மிகுந்த காலம அவர்கள போசனம பணணாமல் இருநதபொழுது பவுல் அவர்களுககுள்ளே எழும்பிச சொன்னதாவது: புருஷரே, இநத வருததமும் சேதமும் வாராதபடிககு, நீஙகள் என சொல்லுக்குச் செவிகொடுத்து, கிரேததை தீவை விட்டுப புறபபடாமல் இருக்க வேண்டியதாயிருநதது.

௨௨ இபபொழுது திடச்சித்தமாயிருஙகள் என்று உங்களை வேண்டிககொள்ளுகிறேன்; கபபல் சேதமே அன்றி, உஙகளில் ஒருவனுக்கும பிராணசேதம் வருவதில்லை

௨௩ எபபடியென்றால், [2]நான் ஆதீனமாயிருநது ஆராதனைசெய்கிற [3]பராபரனுடைய தூதன் இநத இராததிரியிலே என்னிடத்தில் வநது நின்று, பவுலே, பயபபடாதிரு; நீ இராயனுக்குமுன்பாக நிற்க வேணடும்.

௨௪ அல்லாமலும் உன்னுடனே கூட யாத்திரையாய் வருகிற யாவரையும் பராபரன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான்.

௨௫ ஆனபடியினாலே புருஷரே, திடச்சித்தமாயிருஙகள், [4]எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று பராபரனை நம்புகிறேன்.

---

* அலலது நஷடமும

† அல்லது எழும்பிற்று

[1] யோனா ௧ ௫

[2] தானி ௬ ௰௬ உரோ ௧ ௯ ௨ தீமோ ௧ ௩

[3] அப ௨௩ ௰௧

[4] லூக் ௧ ௪௫ உரோ ௪ ௨௰, ௨௧ ௨ தீமோ ௧ ௰௨

ATHA IYER LIBRARY

௨௬ நாம் [1]ஒரு தீவிலே விழுகிறதுமாத்திரம் நடக்கவேண்டும் என்றான்.

௨௭ ¶ பதினான்காம் இராத்திரியானபொழுது நாங்கள் ஆதிரியா கடலில் அலைந்து திரிகையில், நடுச்சாமத்திலே கப்பலாள்களுக்கு ஒரு கரை கிட்டியிருக்கிறதாய்த் தோன்றிற்று.

௨௮ உடனே அவர்கள் சலத்தின் அளவைச் சோதித்து, இருபது பாகம் என்று கண்டார்கள்; சற்று அப்புறம் போனபொழுது, மறுபடியும் சோதித்துப் பதினைந்து பாகம் என்று கண்டு,

௨௯ பாறை இடங்களில் விழுவோம் என்று பயந்து, கப்பலின் பின்பக்கத்திலிருந்து நான்கு நங்கூரங்களைப் போட்டு, உதயம் எப்பொழுது உண்டாகும் என்று இருந்தார்கள்.

௩௰ அப்பொழுது கப்பல் மனிதர்கள் கப்பலைவிட்டு ஓடிப்போக வகைதேடி, தாங்கள் கப்பலின் முன்பக்கத்திலிருந்து நங்கூரங்களைப் போட மனதுள்ளவர்கள் போல, ஓடத்தைக் கடலில் இறக்குகையில்,

௩௰௧ பவுல் சேனைத்தலைவனையும் போர்ச்சேவகரையும் நோக்கி, இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப்போகமாட்டீர்கள் என்றான்.

௩௰௨ அப்பொழுது போர்ச்சேவகர் ஓடத்தின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழ விழவிட்டார்கள்.

௩௰௩ உதயமாகத் தொடங்கினபொழுது எல்லாரும் போசனம் பண்ணுதற்குப் பவுல் அவர்களைத் தயிரியப்படுத்திச் சொன்னதாவது: நீங்கள் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாய்க் காத்திருந்து இன்று பதினான்காம் நாளாயிற்றே.

௩௰௪ ஆகையால் போசனம்பண்ணும்படி உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்; நீங்கள் தப்புவதற்கு அதுவே உதவியாயிருக்கும்; [2]உங்கள் தலைகளிலிருந்து ஒரு மயிரும் விழாது என்று சொல்லி,

௩௰௫ அப்பத்தை எடுத்துக்கொண்டு எல்லார் முன்பாகவும் [3]பராபரனைத் தோத்திரித்து அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான்.

௩௰௬ அப்பொழுது மற்றெல்லாரும் திடச்சித்தம் அடைந்து, போசனம்பண்ணினார்கள்.

௩௰௭ கப்பலில் [4]இருநூற்று எழுபத்தாறுபேர் இருந்தோம்.

௩௰௮ திருத்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலில் எறிந்து, கப்பலை லெகுவாக்கினார்கள்.

௩௰௯ உதயமானபொழுது இன்ன பூமியென்று அறியாமல், சமமான கரையுள்ள ஒரு துறைமுகத்தைப் பார்த்து, அங்கே போகக்கூடுமானால் அவ்விடத்திற்குத்தானே கப்பலைப் போகப்பண்ணவேண்டும் என்று யோசனையாயிருந்து,

௪௰ நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டு,* சுக்கானுடைய கயிறுகளையும் தளரவிட்டுச் சிறிய பாயைக் காற்றுக்கு விரித்துக் கரைக்கு நேராய்ப்போகையில்,

௪௰௧ [5]இருபுறமும் கடலுள்ள ஓர் இடத்திலே சென்று, கப்பல் தட்டிற்று, அதின் முன்பக்கம் அசையாமல் ஊன்றியிருந்தது, பின்பக்கம் அலைகளின் பலத்தினாலே உடைந்துபோயிற்று.

௪௰௨ அப்பொழுது காவலில் இருந்தவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு, அவர்களைக் கொலைசெய்யவேண்டும் என்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள்.

௪௰௩ அவர்களுடைய தலைவன் பவுலைக் காப்பாற்ற மனதாய் அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்,

௪௰௪ மற்றவர்களில் சிலர் பலகைகளின்மேலும் சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேற

---

[1] அப். ௨௮. ௧.

[2] ௧ இரா. ௧௪. ௪௫. மத். ௰. ௩௰. லூக். ௨௧. ௧௮.

[3] ௧ சாமு. ௯. ௰௩. மத். ௰௫. ௩௬. மாற். ௮. ௬. யோவா. ௬. ௰௧. ௧ தீமோ. ௪. ௩, ௪.

[4] அப். ௨. ௪௧. ௭. ௰௪. ௧ பேது. ௩. ௨௰.

* அல்லது நங்கூரமிழுத்துக் கடலுக்குள் போனபொழுது

[5] ௨ கொரி. ௧௧. ௨௫.

வும் கட்டளையிட்டான்; [1]இவ்விதமாய எல்லாரும் தபபிக் கரைசேர்நதாாகள்.

௨௮. அதிகாரம்.

௧ கபபல சேதமானபின்பு பவுல அநநியசாதியாரால அஙகிகரிக்கபபட்டது ௩ அவன கையைச் சுறறிக்கொணட விஷப்பூச்சி அவனைத் தீண்டாதிருநதது ௭ அவன அநதத தீவில அநேக வியாதிக்காரரைச் சொஸதமாக்கினது ௰௧ உரோமாபுரிக்குப போனது ௰௭ தான வநத நோக்கத்தை யூதாகளுககு அறிவித்தது ௨௪ அவன பிரசங்கித்தபின்பு சிலா விசுவாசித்ததும, சிலா விசுவாசியாமற்போனதும ௩௰ அஙகே இரண்டுவருஷகாலம பிரசங்கித்துக்கொணடிருநதது

அவாகள் தபபிக் கரைசேர்ந்த பின்பு, [2]அநதத தீவின்பேர மெலித்தா என்று அறிநதார்கள்.

௨ [3]அநநியராகிய அந்தத் தீவார் எஙகளுககு மிகுநத அன்பைக் காண்பிததாாகள; அவ்வேளையில இருநத மழைககாகவும் குளிர்ச்சிககாகவும் அவாகள் நெருபபை உணடுபண்ணி, எஙகளை அனைவரையும் சோத்துக்கொணடாாகள.

௩ அபபொழுது பவுல் சில விறகுகளை வாரி அநத நெருபபின மேல்போடுகையில், ஒரு விரியன் பாமபு அனலினாலே புறப்பட்டு, அவனுடைய கையைச சுற்றிக் கொண்டது.

௪ தீவார் அநதப பொல்லாத பூச்சியை அவனுடைய கையிலே தொஙகக் கண்டபொழுது, மெய்யாய இநத மனிதன் கொலைபாதகன், இவன் சமுத்திரததிற்குத் தபபிவந்தும், பழியானது இவனைப பிழைக்கஒட்டவில்லை என்று தங்களுக்குளளே சொல்லிக்கொண்டார்கள்.

௫ அவன் அநதப பூச்சியைத் தீயிலே உதறி, [4]ஒரு தீமையும் அடையாதிருந்தான்

௬ அவர்கள் இவன் வீக்கங்கொண்டு சடுதியாய் மரித்து விழுவானென்று காத்திருந்தாாகள்; மிகுந்த காலம் அவர்கள் அப்படிக் காத்திருந்து, சேதம் எவ்வளவும் அவனுக்கு வராததைக் கண்டபொழுது, அவர்கள் வேறு சிந்தையை அடைந்து, [5]அவனைத் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.

௭ மேலும் அவ்விடத்திற்குச் சமீபமாய அந்தத் தீவுக்கு முதலாளியாகிய புபிலியென்று பேர் கொண்டவனுடைய காணிபூமி இருநதது; அவன் எஙகளை ஏற்றுக்கொண்டு, மூன்றுநாளும் பட்சமாய் விசாரித்துக்கொண்டான்.

௮ புபிலியினுடைய தகப்பன் சுரத்தோடும் கழிச்சலோடும் கிடநதான்; பவுல் அவனிடத்தில் போய்ச் [6]செபம்பண்ணி, [7]அவன் மேலே தன் கைகளை வைத்து, அவனைக் குணமாககினான்.

௯ அபபடி நடந்தபொழுது, தீவிலே இருநத மறற வியாதிககாரரும் வநது குணமாககபபட்டார்கள.

௰ அவாகள் [8]எஙகளை மிகவும் கனஞ்செயது, நாங்கள் கப்பல் ஏறினபொழுது, எஙகளுககு வேண்டியவைகளை ஏற்றினாாகள்.

௰௧ மூன்றுமாதம் சென்றபின்பு, தீவிலே மழைகாலததிற்குத் தஙகியிருநத மிதுனம் என்னும் அடையாளமுள்ள அலேககுசந்தரி பட்டணததுக் கபபலிலே நாஙகள ஏறிப புறபபட்டுபபோய்,

௰௨ சீர்ககூசைப பட்டணத்தைச் சோநது, அஙகே மூன்று நாள் தஙகி,

௰௩ பின்பு அவ்விடம்விட்டு (சிசிலிதீவைச) சுற்றியோடி, இரேகியு பட்டணத்தில் சேர்ந்து, ஒரு நாளுக்குப்பின் தென்றல்காற்று எடுக்கையில், இரண்டாம் நாளிலே புத்தேயோலி பட்டணத்திற்குபபோய்,

௰௪ அங்கே சகோதரரைக் கண்டோம்; அவர்கள் ஏழுநாள் தங்களிடத்தில் இருக்கும்படி எங்களை வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி நாங்கள் (இருந்து,) பின்பு உரோமைபுரிக்குப் போனோம்.

கி. பி. ௬௨.

1 ௨௨ ௰௪
2 அப ௨௭ ௨௬
3 உரோ ௧ ௰௪ ௧ கொரி ௰௪ ௰௧ கொலோ. ௩ ௰௧
4 மாற் ௰௬ ௰௮ லூக் ௰ ௰௯
5 அப ௰௪ ௰௧
6 யாக் ௫ ௰௪, ௰௫
7 மாற் ௬ ௫ ௭ ௩௨ ௰௬ ௰௮ லூக் ௪ ௪௰ அப ௰௯ ௰௧ ௰௨ ௧ கொரி ௰௨ ௯ ௨௮
8 மத ௰௫ ௬ ௧ தீமோ ௫ ௰௭

௰௫ அவ்விடத்திலுள்ள சகோதரர் எங்கள் சங்கதிகளைக் கேள்விப்பட்டுப் புறப்பட்டு, (சிலர்) அப்பியுபுரமென்னும் இடம்வரைக்கும் (சிலர்) மூன்று சத்திரமென்னும் இடம்வரைக்கும் எங்களுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, பராபரனைத் தோத்திரம் செய்து, திடன்கொண்டான்.

௰௬ உரோமைபுரியில் நாங்கள் சேர்ந்தபொழுது, சேனைத்தலைவன் தன் காவலில் இருந்தவர்களைச் சேனாதிபதிக்கு ஒப்புக்கொடுத்தான்; [1]அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கும்படியான சேவகனுடனேகூடத் தனித்திருக்கும்படிக்கு உத்தரவு பெற்றுக்கொண்டான்.

௰௭ மூன்று நாளுக்குப் பின்பு பவுல் யூதரில் பிரதானமானவர்களைக் கூடி வரவழைத்தான், அவர்கள் கூடி வந்திருந்தபொழுது, அவன் அவர்களுடனே சொன்னதாவது: சகோதரர்களே, (நம்முடைய) [2]சனங்களுக்காவது முன்னோர்களின் முறைமைகளுக்காவது விரோதமான ஒன்றையும் நான் செய்யாமலிருந்தும், [3]காவலில் வைக்கப்பட்டு, எருசலேமிலிருந்து உரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன்.

௰௮ [4]அவர்கள் என் காரியத்தை விசாரித்தபொழுது, மரணத்திற்கு எதுவான குற்றம் ஒன்றையும் என்னிடத்தில் காணாதபடியினாலே, என்னை விடுதலையாக்க மனதாய் இருந்தார்கள்.

௰௯ யூதர்கள் எதிர்பேசினபொழுது, [5]நான் இராயருக்கு அப்பயமிடும்படிக்குப் பலவந்தப்பட்டேன்; என் தேசத்தார்மேலே யாதொரு குற்றம்சாற்ற மனதில்லாமல் அப்படிச் செய்தேன்.

௨௰ இந்தச் சங்கதியைக்குறித்து நான் உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன்; [6]இஸ்ரவேலருடைய நம்பிக்கையின் நிமித்தமே [7]இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான்.

௨௧ அவனுடனே அவர்கள் சொன்னதாவது: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து காகிதங்கள் எங்களிடத்தில் வரவுமில்லை, (அங்கே இருந்து) வந்த சகோதரரில் ஒருவனும் உன்மேல் பொல்லாங்கை அறிவித்துச் சொல்லவுமில்லை.

௨௨ [8]இந்த மார்க்கவகுப்பு எங்கும் விரோதமாய்ப் பேசப்படுகின்றதென்று நாங்கள் அறிந்திருக்கிறபடியால், நீ சிந்திக்கிறவைகளை உன்னிடத்திலே கேட்க விரும்புகிறோம் என்றார்கள்.

௨௩ அதற்காக அவர்கள் அவனுக்குக் குறித்தநாளிலே, அநேகம்பேர் அவன் தங்கின இடத்திலே சேர்ந்தார்கள்; அப்பொழுது அவன் காலைதொடங்கிச் சாயங்காலம்வரைக்கும் [9]மோசேயின் வேதநூலிலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுமிருந்து [10]இயேசுவுக்குரியவைகளை அவர்களுக்குப் போதித்து, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துச் சாட்சிகொடுத்து, வியாக்கியானம்பண்ணினான்.

௨௪ அவன் சொன்னவைகளைச் [11]சிலர் ஒத்துக்கொண்டார்கள்; சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.

௨௫ இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் இசைவாயிராமல் வெளியே போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன ஒரே வாக்கியமாவது:

௨௬ இந்தச் சனங்கள் [12]கண்களினாலே காணாமலும் காதுகளினாலே கேளாமலும் இருதயத்தினால் சிந்தித்துக்கொள்ளாமலும் மனந்திரும்பாமலும் என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு, இவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமுடையவர்களுமாய் வருத்தத்தோடே கேட்கிற

கி. பி ௬௰௨.

1 அப ௨௪ ௨௫ ௨௭ ௩
2 அப ௨௪ ௰௨, ௰௩ ௨௫ ௮
3 அப ௨௧ ௩௩
4 அப ௨௨ ௨௪ ௨௪ ௰ ௨௫ ௮ ௨௬ ௩௧.
5 அப ௨௫ ௰௧
6 அப ௨௬ ௬, ௭
7 அப ௨௬ ௨௯ எபே ௩ ௧ ௪ ௧ ௨௰ ௨ தீமோ ௧ ௰௬ ௨ ௯ பிலே ௰ ௰௩
8 லூக் ௨ ௩௪ அப ௨௪ ௫ ௰௪ ௧ பே ௨ ௰௨ ௪ ௰௪
9 லூக் ௨௪ ௨௭ அப ௰௭ ௩ ௰௯ ௮
10 அப ௨௬ ௬, ௨௨
11 அப ௰௪ ௪ ௰௭ ௪ ௰௯ ௯
12 ஏசா ௬ ௯ எரே ௫ ௨௧ எசே ௰௨ ௨ மத் ௰௩ ௰௪, ௰௫ மாற் ௪ ௰௨ லூக் ௮ ௰ யோவா ௰௨ ௪௰ உரோ ௰௧ ௮.

காதுள்ளவர்களுமாய் மூடிக்கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே,

உள நீங்கள் உற்றுக்கேட்டாலும் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள், உற்றுப்பார்த்தாலும் அறியாமலிருப்பீர்கள் என்று இந்தச் சனங்களிடத்திற்குப் போய்ச் சொல் என்கிறதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு நம்முடைய முன்னோர்களுடனே நன்றாய்ச் சொன்னார்

உஅ ஆதலால் [1]பராபரனுடைய இரட்சிப்புப் புறத்தேசத்தார்களுக்கு அனுப்பப்பட்டதென்று நீங்கள் அறிந்துகொள்வீர்களாக; அவர்களே அதற்குச் செவிகொடுப்பார்கள் என்றான்.

உகூ இவைகளை அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தருக்கம்பண்ணிக்கொண்டு போய்விட்டார்கள்.

௩௰ ¶ பின்பு பவுல் தனக்காகக் கூலிக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு,

௩௧ [2]மிகுந்த தயிரியத்தோடும் தடையில்லாமலும் பராபரனுடைய இராசியத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் விசேஷங்களை உபதேசித்துக்கொண்டு வந்தான் — ஆமன்.

கி பி. ௬௬.

[1] மத் ௨௧ ௪௩, ௬௬ அப் ௰௩ ௪௬, ௪௭ ௨௨ ௨௧ ௨௬ ௰௮ ௨௭ ௰௪ ௨௪

[2] அப் ௪ ௩௧ எபே ௬ ௰௯

ROMANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

உரோமாபுரியருக்கு

எழுதின நிருபம்.

௧ அதிகாரம்.

௧ பவுல் உரோமருக்குத் தான் அப்போஸ்தல அதிகாரம் பெற்றதையும், ௮ அவர்களிடத்திற்குச் செல்ல விரும்பினதையும் காட்டினது. ௰௬ தான் பிரசங்கிக்கும் சுவிசேஷம் இன்னதென்றும், அதினால் விளங்கும் நீதி இன்னதென்றும் காண்பித்தது. ௰௮ எல்லாவித பாவங்களைக்குறித்துப் பராபரன் கோபத்தையும், ௨௧ அஞ்ஞானிகள் செய்யும் பாவங்கள் இன்னவைகளென்பதையும் காட்டினது.

[1]மனித்தத்தன்மையின்படிக்குத் தாவீதின் சந்ததியில் [2]பிறந்தவருமாய்,

௨ [3]பரிசுத்தமுள்ள ஆவிக்குரிய தன்மையின்படிக்கு மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே [4]பராபரனுடைய குமாரன் என்று பலமாய்க் காண்பிக்கப்பட்டவருமாய்,* தேவகுமாரனுமாய், நம்முடைய கர்த்தருமாய்,

௩ தம்மாலே அழைக்கப்பட்ட உங்களோடேகூட [5]உலகத்தாராவரையும் [6]தமது திருநாமத்தின் நிமித்தம் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணும்பொருட்டு,†

௪ [7]எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தலப் பட்டத்தையும் கொடுத்தவருமாய் இருக்கிற இயேசுக்கிறிஸ்துவைக்குறித்து,

௫ [8]பராபரன் தம்முடைய தீர்க்கதரிசிகளினாலே [9]பரிசுத்த வேதவாக்கியங்களில் முன்வாக்குத்தத்தம்பண்ணியிருந்த [10]சுவிசேஷத்திற்காகப் பிரித்து எடுக்கப்பட்டும், [11]அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டும்,

௬ இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாயிருக்கிற பவுல்,

௭ [12]உரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் அழைக்கப்பட்ட பரிசுத்தருமாகிய அனைவருக்கும் (எழுதுகிறதாவது.) [13]நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

௮ ¶ [14]உங்கள் விசுவாசத்தைக்குறித்து உலகத்தில் எங்கும் பேசிக்கொள்ளுகிறபடியினாலே, முதலாவது நான் உங்கள் எல்லாருக்காகவும் இயேசுக்கிறிஸ்து மூலமாய் [15]என்னுடைய பராபரனைத் தோத்திரம்செய்கிறேன்.

௯ பராபரனுடைய குமாரனுக்குரிய சுவிசேஷத்திலே [16]நான் என் (முழு) மனதோடும்‡ அவருக்கு ஊழியம்செய்துவருகிறேனே, [17]அவர் நான் இடைவிடாமல் உங

கி. பி. ௫௰.

1 யோவா ௪ ௰௪
கலா ௪ ௪
2 மத ௪ ௪,௰௯
நீதி க ௩
அப உ ௩
உ தீமோ உ அ
3 எபி ௩ ௰௪
4 அப ௰௩ ௩௩
* [illegible] யமிக்கப்பட்டவராய்
5 அப ௬ எ
உரோ ௰௬ உ௬
6 அப ௬ ௰௫
† அல்லது கீழ்ப்படியும் பொருட்டு
7 உரோ ௰உ௬
௰௫ ௰௫
க கொரி ௰௫ ௰
கலா க ௰௫ உ
௬ எபே க ௰
8 உரோ ௩ உக
௰௬ உ௫ கலா
௩ அ
9 அப உ௬ ௬
தீத க உ
10 அப ௩ ௰௫
௰௩ உ கலா க
௰௫
11 அப உஉ
உக ௪ கொரி
கக கலா கக
க தீமோ க ௰க
உ எ உ தீமோ
க ௰க

---

12 உரோ ௬ உ௪ க கொரி க உ க தெச ௪ எ.—13 க கொரி க ௩ உ கொரி க உ கலா க ௩ —14 உரோ ௰௬ ௰௬ க தெச க அ —15 க கொரி க எ பிலி க,௪ கொலோ க ௩,௪ க தெச க உ பிலே ௫ —16 அப உஎ உ௩ உ தீமோ க ௩ —‡ அல்லது ஆவியிலே, யோவா ௪ உ௩,உ௪ பிலி ௩ ௩ —17 க தெச ௩ ௰

களை நினைத்துககொண்டிருககிறதைககுறிததுச [1]சாட்சியாய இருககிறார

௰ நீஙகள ஸதிரபபடுவதற்காகச் [2]சில ஞானவரஙகளை உஙகளுக்குக கொடுககுமபடிக்கு, நான் உஙகளைக காண மிகவும் ஆசையாயிருககிறபடியினாலே,

௰௧ நான உஙகளிடத்தில் வருகிறதற்கு, [3]பராபரனுடைய சிததம எனக்கு நல்ல பிரயாணம கிடைககபபண்ணவேணடுமெ என்று [4]எபபொழுதும் என செபஙகளில் வேணடிக்கொள்ளுகிறேன்.

௰௨ உஙகளிலும் என்னிலுமுள்ள விசுவாசததினாலே [5]நாம ஒருவருககொருவா* ஆறுதலாய இருககுமபடிககே, அபபடிச செய்துவருகிறேன்.

௰௩ ¶ சகோதராகளே, [6]மற்றத் தேசததாருககுளளே நான பலனை அடைநததுபோல, உஙகளுககுளளும† சில பலனை அடையுமபொருட்டாக, [7]உஙகளிடததில வர அடிககடி மனதாயிருநதேன், [8]ஆகிலும், இதுவரைககும் எனககுத தடை உணடாயிற்று என்று அறிவீர்களாக

௰௪ [9]கிரேககருக்கும் அநநிய சனஙகளுககும, ஞானிகளுககும மூடருககும் நான் கடனாளியாய் இருக்கிறேனே

௰௫ ஆதலால [10]முதலாவது, யூதரிலும் பினபு கிரேககரிலும எவன கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறானோ, [11]அவனுக்கு இரட்சிபபு உணடாகும்படிக்கு அநதச் சுவிசேஷம தேவபலமுள்ளதாய் இருககிறபடியினாலே,

௰௬ [12]நான் அதைககுறித்து வெட்கபபடாமல், என்னுடைய திராணியின்படி அதை உரோமாபுரியில் உள்ள உங்களுககும் பிரசஙகமபண்ண விரும்புகிறேன்.

௰௭ ¶ [13]விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, [14]விசுவாசத்தினாலாகும் தேவநீதி விசுவாசத்திற்கு ஏதுவென்று அநதச சுவிசேஷததில வெளிபபடுததபபட்டிருககின்றது.

௰௮ ¶ என்னத்தினாலெனில் [15]சத்தியததை அநியாயத்தினாலே அடககிக்கொள்ளுகிற மனிதருடைய எல்லாவித அவபததிக்கும் அநியாயததிறகும் விரோதமாய்ப் பராபரனுடைய கோபம வானததிலிருநது வெளிபபடுகினறது.

௰௯ அதெபபடியென்றால் [16]பராபரனைக்குறித்து அறியபபடுவது அவாகளுககுள்ளே‡ வெளிபபட்டிருக்கின்றது; [17]பராபரனே அதை அவர்களுக்கு வெளிபபடுத்தினார

௨௰ எபபடியென்றால், உலகம் உணடானதுமுதற்கொண்டு[18]அவருடைய நித்திய வல்லமை தேவததுவம் என்பவைகள் காணபபடாதவைகளாயிருநதும், உண்டாககபபட்டிருககிற வஸ்துககளினாலே தெளிவாய் அறியபபடும், ஆதலால அவாகள் போககுசசொல்லிக்கொள்ளுகிறதற்கு இடமில்லை §

௨௰௧ அவாகள் பராபரனை அறிநதும், அவரைப பராபரன் என்று புகழாமலும் தோத்திரம்செய்யாமலும் இருநது, [19]தஙகள் யோசனைகளினாலே வீணரானாகள்; புத்தியில்லாத அவாகளுடைய இருதயம் இருள் அடைந்தது.

௨௰௨ [20]அவர்கள் தஙகளை ஞானிகளென்று சொல்லிப பயிததியக்காரராகி,

௨௰௩ [21]அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர், பறவைகள், மிருகங்கள், ஊர்வன என்றிவைகளுடைய சொரூபமாக மாற்றினார்கள்.

கி. பி கூம.

1 உரோ கூ ௯ உ கொரி க உக பிலி க அ க தெச உ. கூ
2 உரோ மகூ உகூ
3 யாக ச மகூ
4 உரோ மகூ உக, நஉ. க தெச ரு ம
5 தீத் க ச உ பே ச க
* அலலது உங கள் நான
6 பிலி ச மா
† அலலது உங்க ளிடததிலும
7 உரோ மரு உகூ
8 அப மகூ எ க தெச உ மஅ
9 க கொரி கூ மகூ
10 லூக் உ உக. கூ உச சஎ. அப கூ உகூ மக உக, சகூ உரோ உ ம
11 க கொரி க மஅ மஉ உ
12 சங சம கூ,ம மாற் அ கூஅ உதீமோ க அ
13 அப உ ச யோவா க ககூ கலா க மக பிலி க கூ எபி ம கூஅ
14 உரோ க உச
15 அப மஎ கூம எபே கூ ம கொலோ க சு
16 அப மச மஎ
‡ அல்லது அவா களில்
17 யோவா ககூ
18 சங மகூ க ழ அப மச மஎ மஎ உஎ
§ அல்லது சொலலாதபடிக்கு அவைகள் காரணமாயிருக்கினறன
19 உ இரா மஎ மகூ எரே. உ

கி எபே ச மஎ,மஅ —20 எரே. ம மச.—21 கி மோ ச மகூ ழ சஙாகூ உம சா சம. மஅ, உக எரே உ. மக எசே அ ம அப மஎ உகூ

௨௪ ¶ அதற்காக [1]அவர்கள் தங்கள் இருதயங்களின் இச்சைகளினாலே [2]ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களைக் கனவீனப்படுத்தத்தக்கதாக, பராபரன் [3]அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

௨௫ [4]பராபரனைக்குறித்து அறிந்த சத்தியத்தை [5]அவர்கள் பொய்யாக மாற்றி, என்றென்றைக்கும் துதிக்கப்படத்தக்க சிருஷ்டிகரைப் பார்க்கிலும்* சிருஷ்டியைத் தொழுதுகொண்டு சேவித்தபடியினாலே,

௨௬ பராபரன் அவர்களை [6]இகழ்ச்சியுள்ள ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்தார், அந்தப்படி அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

௨௭ அதுபோல ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், தங்கள் மோக இச்சைகளினாலே ஒருவருக்கொருவர் பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, இவ்விதமாகத் தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களிடத்திலே பெற்றுக்கொண்டார்கள்.

௨௮ அறிவினாலே பராபரனைப் பற்றிக்கொள்ளும்படிக்கு† அவர்கள் கவலைப்படாமல் இருந்தபடியால், [7]தகாதவைகளைச் செய்யும்படி மந்தமுள்ள‡ மனதுக்குப் பராபரன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்.

௨௯ அவர்கள் எல்லாவித அநீதியினாலும் வேசித்தனத்தினாலும் பொல்லாங்கினாலும் பொருளாசையினாலும் தீமையினாலும் பொறாமையினாலும் கொலையினாலும் வாக்குவாதத்தினாலும் தந்திரத்தினாலும் துர்க்குணத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,

௩௰ புறங்கூறுகிறவர்களுமாய், நிந்திக்கிறவர்களுமாய்ப் பராபரனைப் பகைக்கிறவர்களுமாய், இறுமாப்புள்ளவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், தகாத விசித்திரங்களை உண்டுபண்ணுகிறவர்களுமாய், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய்,

௩௧ விவேகம் இல்லாதவர்களுமாய், உடம்படிக்கையைத் தள்ளுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய்,§ மன்னியாதவர்களுமாய், இரக்கம் இல்லாதவர்களுமாய்,

௩௨ இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் [8]மரணத்திற்குப் பாத்திரராய் இருக்கிறார்கள் என்று [9]பராபரனுடைய நியாயப்பிரமாணத்தை அறிந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், [10]அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் சந்தோஷப்படுகிறவர்களுமாய்|| இருக்கிறார்கள்.

௨. அதிகாரம்.

௪ தாங்களே பாவஞ்செய்து மற்றவர்களைக் கடிந்துகொள்ளுகிற யூதர்களாலும், அஞ்ஞானிகளாலும், போக்கில்லாமல் பராபரனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாவதையும், ௰௪ அஞ்ஞானிகளிலும், ௰௭ சுன்னத்தடைந்த யூதர்களிலும், ௨௫ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்கள் ஆக்கினைக்குத் தப்பாததையும் காட்டினது.

அப்படியிருக்க, (மற்றவர்களைக் குறித்து) தீர்ப்புச் சொல்லுகிறவனே, [11]நீ தீர்ப்புச்சொல்லுகிற காரியங்கள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களுக்குக் கொடுக்கிற தீர்ப்பினாலே உன்னைத்தானே ஆக்கினைக்கு உள்ளாக்குகிறாய்; ஆதலால் [12]நீ போக்குச்சொல்லிக்கொள்ளுகிறதற்கு இடமில்லை. மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி,

௨ இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குப் பராபரன் கொடுக்கிற நியாயத்தீர்ப்புச் சத்தியத்தின்படியே இருக்கின்றது.

௩ ஆனபடியினாலே இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தீர்ப்புச் சொல்லுகிற மனித

கி பி. ௬௰.

[1] ௩ மோ ௰௮ ௨௨
[2] ௧ கொரி ௬ ௰௮ ௧ தெச. ௪ ௪ ௧ பே ௪ ௩
[3] சங் ௮௧ ௰௨ அப ௭. ௪௨ எபே ௪ ௰௮, ௰௯ ௨ தெச ௨ ௰௧, ௰௨
[4] ௧ தெச ௧ ௯ ௧ யோ ௫ ௨௰
[5] எசா ௪௪ ௨௰ எரே ௰௬ ௰௯ ஆமோ ௨ ௪
* அல்லது சிருஷ்டிகருக்குப் பதிலாக
[6] ௩ மோ ௰௮ ௨௨, ௨௩ எபே ௫ ௰௨ யூதா ௰
† அல்லது அறிக்கைபண்ணும்படிக்கு
[7] எபே ௫ ௪
‡ அல்லது கெட்ட
§ அல்லது கொள்கையற்றவர்களுமாய்
[8] உரோ ௬ ௨௧
[9] உரோ ௨ ௨
[10] ஓசே ௭ ௩ சங் ௫௰ ௰௮
|| அல்லது இணங்குகிறவர்களுமாய்
[11] ௨ சாமு ௰௨ ௫-௭ மத் ௭ ௧ ௨ யோவா ௮ ௯
[12] உரோ ௧. ௨௰

21 . D. 137. . 4962.

னே, நீயே அவைகளைச் செய்திருகக, பராபரனுடைய நியாயததீர்பபுக்குத தபபிபபோகலாமென்று நினைககிறாயா?

௪ அல்லது [1]பராபரனுடைய தயவு, [2]பொறுமை, [3]நீடியசாநதம் இவைகளின் ஐசுவரியத்தை நீ அசட்டைபண்ணி, [4]அவருடைய தயவு உன் மனம்திருபபுதற்கு ஏதுவாய் இருக்கவேணடுமென்று அறியாமல இருக்கிறாயா?

௫ நீ உன் இருதயததைக கடினபபடுததி, மனம்திருபபாமல் இருககிறதால, பராபரனுடைய கோபாககினையும [5]நீதியுள்ள தீர்பபும வெளிபபடும நாளிலே உனககுக கோபாககினை வரும்படி அதைச சேர்த்துககொள்ளுகிறாய்.

௬ [6]அபபொழுது அவர அவனவனுடைய கிரியைகளுக்குததககதாய, அவனவனுக்குப பதில் அளிபபார.

௭ இடைவிடாமல் நற்கிரியைகளைச செயது, மகிமையையும கனததையும்அழியாமையையும தேடுகிறவரகளுககு நிததியசீவனை அளிபபார.

௮ சண்டைககாரராய் இருநது [7]சததியததிற்குக கீழ்பபடியாமல், அநியாயததிற்குக கீழ்பபடிநதவரகளோ,

௯ உககிரகோபாக்கினையை அடைவார்கள; [8]பராபரனிடததில் பட்சபாதமிலலை.

௰ [9]ஆதலால் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்* எநத மனிதன் பொல்லாஙகைச் செயகிறானோ அவனுக்கு உபாதியும் வியாகுலமும் வரும்.

௰௧ முன்பு யூதர்களிலும் பின்பு கிரேக்கரிலும்† எவன் நன்மை செய்கிறானோ [10]அவனுக்கு மகிமையும கனமும் சமாதானசவுக்கியமும் உண்டாகும்.

கி. பி. ௬௰.

1 உரோ ௯. ௨௩. எபே ௧. ௭. ௨. ௪, ௭.
2 உரோ ௩. ௨௫.
3 உரோ ௯. ௨௨.
4 ஏசா ௩௰. ௰௮. ௨ பேது ௩. ௯, ௰௫.
5 ௫ மோ ௩௨. ௩௪. யாக் ௫. ௩.
6 யோபு ௩௪. ௰௧. சங் ௬௨. ௰௨. நீதி ௨௪. ௰௨. எரே ௰௭. ௰. ௩௨. ௰௯. மத் ௰௬. ௨௭. உரோ ௰௪. ௰௨. ௧ கொரி ௩. ௮. ௨ கொரி ௫. ௰. வெளி ௨. ௨௩. ௨௰. ௰௨. ௨௨. ௰௨.
7 யோபு ௨௪. ௰௩. உரோ ௧. ௰௮. ௨ தெச ௧. ௮.
8 ௫ மோ ௰. ௰௭. ௨ நாளா ௰௯. ௭. யோபு ௩௪. ௰௯. அப் ௰. ௩௪. கலா ௨. ௬. எபே ௬. ௯. கொலோ ௩. ௨௫. ௧ பேது ௧. ௰௭.
9 ஆமோ ௩. ௨. லூக் ௰௨. ௪௭, ௪௮. ௧ பேது ௪. ௰௭.
* அல்லது புறசாதியாரிலும
† அல்லது புறசாதியாரிலும
10 ௧ பேது ௧. ௭.
11 உரோ ௰௬. ௨௫. ௧ தீமோ ௧. ௰௧. ௨ தீமோ ௨. ௮.
12 யோவா ௫. ௨௨. அப் ௰. ௪௨. ௰௭. ௩௧. ௨ தீமோ ௪. ௧. ௧ பேது ௪. ௫.
13 பிரச ௰௨. ௰௪. மத் ௨௫. ௩௧. யோவா ௰௨. ௪௮. உரோ ௩. ௬. ௧ கொரி ௪. ௫. வெளி ௨௰. ௰௨.

௰௨ ¶ மேலும் நியாயபபிரமாணத்தை அடையாமல் எவர்கள பாவம்செய்கிறார்களோ, அவர்கள் நியாயபபிரமாணத்தின்படியே நியாயத்தீரபபு அடையாமல் கெட்டுபபோவார்கள், நியாயப்பிரமாணம் உள்ளவரகளாய் எவர்கள் பாவமசெயகிறார்களோ, அவர்கள் நியாயபபிரமாணததின்படி ஆக்கினைக்கு உள்ளாக்கபபடுவார்கள்.

௰௩ [11]நான் பிரசஙகிக்கிற சுவிசேஷததினபடியே [12]இயேசுக்கிறிஸதுவைககொண்டு பராபரன் [13]மனிதருடைய அநதரஙகஙகளைககுறிதது நியாயததீர்புக்கொடுக்கும் நாளிலே (அப்படி நடக்கும;) அதெபபடியென்றால்,

௰௪ [14]நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவரகளமாத்திரம் பராபரனுககுமுன்பாக நீதிமான்களாய் இருககமாட்டார்கள்; நியாயபபிரமாணத்தின்படி செய்கிறவர்களே, நீதிமான்களாககபபடுவார்கள.

௰௫ அன்றியும், நியாயபபிரமாணம இலலாத சனஙகள் இயல்பாய நியாயபபிரமாணததின்படி செய்கிறபொழுது, நியாயபபிரமாணம் இல்லாத அவர்கள் தஙகளுககுததாமே நியாயபபிரமாணமாய் இருககிறார்கள.

௰௬ அவரகளுடைய மனதுகூடச் சாட்சி‡ பகருகிறதினாலும, அவர்களுடைய சிநதனைகள ஒன்றுககொன்று§ குற்றம் உணடு, அல்லது குற்றம் இல்லையென்று தீர்க்கிறதினாலும், அவர்கள் தஙகள் இருதயஙகளில் நியாயபபிரமாணத்திற்கு ஏற்ற கிரியை எழுதியிருக்கின்றதென்று காண்பிக்கிறார்களே

௰௭ ¶ [15]கேள், நீ யூதனென்று பேர்பெற்றிருந்து, [16]நியாயப்பிரமாணத்தை ஊன்றிச்கொண்டு

---

14 மத் ௭. ௨௧. யாக் ௧. ௨௨, ௨௩, ௨௫. ௧ யோவா ௩. ௭. ‡ அல்லது அவர்களோடே சாட்சி § அல்லது அவ்வேளையில்.
15 மத் ௩. ௯. யோவா ௮. ௩௩. உரோ ௯. ௬, ௭. ௨ கொரி ௰௧. ௨௨. — 16 மீகா ௩. ௰௧. உரோ ௯. ௪.

[1]பராபரனைக்குறித்துப் பெருமை பாராட்டி,

௰௮ நியாயப்பிரமாணத்தினாலே உபதேசிக்கப்பட்டவனாய் [2]அவருடைய சித்தத்தை அறிந்து, [3]வித்தியாசமானவைகளைச் சோதித்து அறிகிறாய்.*

௰௯ அல்லாமலும் [4]நியாயப்பிரமாணத்திலே மெய்யறிவையும் சத்தியத்தையும் காட்டிய குறிப்பிடமுள்ளவனாய் [5]நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டுகிறவன் என்றும்,

௨௰ அந்தகாரத்தில் உள்ளவர்களுக்கு ஒளி கொடுக்கிறவன் என்றும், புத்தியீனருக்கு உபாத்தி என்றும், குழந்தைகளுக்குப் போதகன் என்றும் சொல்லுகிறாய்

௨௧ இப்படிப்பட்டவனானால் [6]மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமல் இருக்கலாமா? களவுசெய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா?

௨௨ விபசாரப்பண்ணக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் பண்ணலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ [7]பரிசுத்தமானதைக் கொள்ளையிடலாமா?

௨௩ [8]நியாயப்பிரமாணத்தைக்குறித்துப் பெருமைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, பராபரனைக் கனஈனம்பண்ணலாமா?

௨௪ பராபரனுடைய நாமம் மற்றத் தேசத்தாருக்குள்ளே உங்களாலே தூஷணிக்கப்படுகின்றதென்று [9]எழுதியிருக்கிறபடி. (செய்கிறாயே).

௨௫ ¶ [10]நீ வேதப்பிரமாணத்தின்படி செய்தால் விருத்தசேதனம் மெய்யாய் உனக்குப் பிரயோசனமாய் இருக்கும்; நீ வேதப்பிரமாணத்தை மீறி நடந்தாயாகில் உன் விருத்தசேதனம் விருத்தசேதனம் இல்லாமையாயிற்று

௨௬ [11]மேலும் விருத்தசேதனம் இல்லாதவன் வேதப்பிரமாணத்துக்கு ஏற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனம் இல்லாமை விருத்தசேதனமே என்று எண்ணப்படும் அல்லவோ?

௨௭ அல்லாமலும் விருத்தசேதனம் இல்லாமல் சுபாவப்படிக்கே இருந்து வேதப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவன் [12]எழுத்தின்படியான விருத்தசேதனத்தினாலே யூதனாய் வேதப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவான் அல்லவோ?

௨௮ ஆதலால் [13]புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாகச் சரீரத்தில் உண்டான விருத்தசேதனம் விருத்தசேதனமல்ல.

௨௯ [14]உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி அல்ல [15]ஆவியின்படி [16]இருதயத்தில் உண்டான விருத்தசேதனமே விருத்தசேதனம், [17]இப்படிப்பட்டவனுடைய புகழ்ச்சி மனிதரால் அல்ல, பராபரனாலே உண்டாயிருக்கின்றது.

௩. அதிகாரம்.

௧ இப்படிப்பட்டதென்று யூதருடைய மேன்மையையும், ௩ அதை அவர்கள் இழந்துபோகாததையும் ௯ நியாயப்பிரமாணம் அவர்களைப் பாவிகளென்று தீர்மானிக்கிறதையும், ௨௰ ஒருவரும் நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக்கப்படாமல், ௨௮ எல்லாரும் வித்தியாசமில்லாமல் விசுவாசத்தினாலேமாத்திரம் நீதிமான்களாக்கப்படுவதையும், ௩௧ விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணம் ஒழிந்துபோகாததையுங்குறித்துச் சொல்லியது.

இப்படியானால் யூதருடைய மேன்மை என்ன? அல்லது விருத்தசேதனத்தினாலே பிரயோசனம் என்ன என்று கேட்டால்,

௨ அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கின்றது; [18]பராபரனுடைய வாக்கியங்கள் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டபடியினாலே, அவர்களுக்குப் பிரதானமாய் மேன்மை உண்டாயிருக்கின்றது.

௩ [19]சிலர் விசுவாசியாமற்போனபடியால், [20]அவர்களுடைய அவிசு

கி. பி. ௬௰.

1 ஏசா ௪௮ ௨௫ ௪௮ ௨. யோவா ௮ ௪௧
2 ௫ மோ ௪ ௮ ௪௩ ௱௪௭ ௰௯, ௨௰
3 பிலி [illegible] ௰
* அல்லது மேன்மையானவைகளை அங்கிகரித்துக் கொள்ளுகிறாய
4 உரோ ௯ ௰௭ ௨ தீமோ ௩ ௰௫ ௫
5 மத ௰௫ ௰௪ ௨௩ ௰௬, ௰௭, ௰௯ ௨௪ யோவா ௯ ௩௪, ௪௰, ௪௧
6 சங ௫௰ ௰௬ ௫ மத ௨௩ ௩ ௫
7 மல்கி ௩ ௮
8 ௰௭ வச
9 ௨ சாமு ௰௨ ௰௪ ஏசா ௫௨ ௫ எசே ௩௬ ௨௰ ௨௩
10 கலா ௫ ௩
11 அப ௰ ௩௪, ௩௫
12 மத் ௰௨ ௪௧, ௪௨
13 மத் ௩ ௯ யோவா ௮ ௩௯ உரோ ௯ ௬, ௭ கலா ௬ ௰௫ வெளி ௨ ௯
14 ௧ பே ௩ ௪
15 உரோ ௭ ௬ ௨ கொரி ௩ ௬
16 கொலோ ௨ ௰௧ பிலி ௩ ௩
17 ௧ கொரி ௪ ௫ ௨ கொரி ௰ ௰௮ ௧ தெச ௨ ௪
18 ௫ மோ ௪ ௭, ௮ சங ௱௪௭ ௰௯ ௨௰ உரோ ௯ ௪.
19 உரோ ௰ ௰௬ எபி ௪ ௨
20 ௪ மோ ௨௩ ௰௯ உரோ ௯ ௬ ௰௧ ௨௯ ௨ தீமோ ௨ ௰௩

வாசம பராபரனுடைய உண்மையை அவமாககுமல்லவோ என்று கேடடால, [1]அபபடியாக்கமாட்டாது.

௪ [2]தேவரீர் அபபடிக கடிநது பேசுமபொழுது நீதிபரராகவும, நியாயமதீாககுமபொழுது புனிதராகவும இருபபீரெனறு எழுதியிருககிறபடி, [3]மனிதா யாவரும பொயயராயிருநதாலும [4]பராபரனே சததியமுடையவா எனபோமாக

௫ ¶ [5]பின்னும நான் மனிதபிரகாரமாகப பேசுகிறேன், நமது அநீதி பராபரனுடைய நீதியை விளஙகபபணணினுல், நாம என்ன சொலலலாம? பராபரன கோபாககினையைச் செலுததுகிறது அநியாயமலலவோ எனருல,

௬ அபபடிச சொல்லவே கூடாது, [6]அபபடியானுல உலகத்தாருககுப பராபரன எபபடி நியாயததீாபபுச செயவாா?

௭ ஆகிலும பராபானுககுப புகழ்ச்சி உணடாகததககதாக அவருடைய சததியம என பொய்யினுலே அதிக மேன்மை அடைநததுணடானுல், நான பாவியெனறு தீாக்கபபடுவது என்னவென்று (நீ சொலல,)

௮ [7]நனமை வரும்படிககுத தீமை செய்யககடவோமென்றும சொல்லலாம் அல்லவோ? நாஙகளே அபபடிச செய்கிறவர்களென்று நிநதிக்கபபடுகிறோம, நாஙகளே அபபடிப போதிககிறவாகள எனறு சிலர் சொல்லுகிருாகள், அபபடிப போதிக்கிறவர்கள ஆக்கினைக்கு உளளாககபபடுகிறது நியாயநதான்.

௯ ¶ அபபடியானுல், (கிரேக்கருககு) மேன்மையாய் இருககிறோமோ என்று கேட்டால, அப்படி ஒருககாலும் இருக்கமாட்டோம; யூதாகள் [8]கிரேககா யாவரும் பாவததிற்குக் கீழானவர்கள் என்று முன் திருஷ்டாநதபபடுத்தினோமே.*

௰ அநதபபடியும் எழுதியிருக்கிறதாவது: [9]நீதிமான் ஒருவனும இல்லை

௰௧ மெய்யுணர்வுள்ளவன் இல்லை, பராபரனைத் தேடுகிறவன் இலலை

௰௨ எல்லாரும் வழிதப்பி ஏகமாயக் கெட்டுபபோகிருர்கள்.

௰௩ நன்மைசெய்கிறவன் ஒருவனும இலலை; [10]அவர்கள் தொண்டை திறககபபட்ட சமாதியாய் இருககினறது; தஙகள் நாவுகளால வஞ்சனை செயகிருர்கள, [11]பாம்புகளின் விஷம் அவாகளுடைய உதடுகளின்கீழ் இருக்கின்றது

௰௪ [12]அவர்களுடைய வாய் சபிபபினுலும், உபாதிக்கிற பேசசினுலும நிறைநதிருக்கின்றது.

௰௫ [13]அவாகளுடைய கால்கள் இரததஞ்சிநதுகிறதற்குத் தீவிரமாய் இருக்கின்றன

௰௬ அழிவும் இடுககணும் அவர்களுடைய வழிகளில் இருககின்றன.

௰௭ சமாதான மாாக்கத்தை அவர்கள் அறியாாகள்

௰௮ [14]அவாகள் கண்களுக்கு முன்பாகத் தெயவபயம் இல்லை என்பதே.

௰௯ ¶ [15]மேலும் வாய்கள் யாவும் அடைக்கபபடும்படிக்கும், [16]உலகததார் எல்லோரும் பராபரனுடைய ஆககினைக்கு எதுவானவர்கள்† ஆகும்படிக்கும், [17]நியாயபபிரமாணம சொல்லுகிற யாவும் நியாயபபிரமாணததிற்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லப்பட்டிருககின்றன என்று அறிநதிருக்கிறோம்.

௨௰ இபபடியிருக்க, [18]நியாயப்பிரமாணத்தினுலே பாவத்தை அறிகிற அறிவு வருகிறபடியால், [19]ஒரு மனிதனும் நியாயப்பிரமாணத்திற்கு எற்ற கிரியைகளினுலே அவருக்குமுன்பாக நீதிமானாக்கபபடுவதில்லை.

கி. பி. ருய.

1 யோபு ௩௪ அ
2 சங ௫௧ ௪
3 சங ௬௨ ௯ ௱௧௬ ௰௧
4 யோவா ௩௩
5 உரோ ௬ ௰௯ கலா ௩ ௰௫
6 ௧ மோ. ௰௮ ௨௫ யோபு ௩௪ ௯௭ ௰௭
7 உரோ ௫ ௨௰ ௬ ௧, ௰௫
8 ௧ ௩ ௨௨ கலா ௩ ௨௨
9 சங ௰௪ ௧-௩ ௫௩ ௩
10 சங ௫ ௯ எரே ௫ ௰௬
11 சங ௱௪௰ ௩
12 சங ௰ எ
13 ஏசா ௫௯ ௭ ௮ பிரச ௧ ௰௬
14 சங ௩௬ ௧
15 யோபு ௫ ௰௬ சங ௱௭ ௪௨ எசே ௰௬ ௬௩ உரோ ௧ ௨௰ ௨ ௧
16 ௩ ௨௩ உரோ ௨ ௨
17 யோவா ௰௩ ௰௫ ௨௫
18 உரோ ௭ ௭
19 சங ௱௪௩ ௨ அப ௰௩ ௩௯ கலா ௨ ௰௬ ௩ ௰௧ எபே ௨. அ, ௯. தீத ௩ ௫

* ஓிம் ௧௫, ௬௪ர திமோ, உரோ ௧ ௨௰ ௪ ௨ ௨ ௧௨

† அலலது பாாபானுக்கு முனபாகக் குறறவாளிகள

௨௧ இப்பொழுது [1]நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை இல்லாமல், பராபரனுக்குமுன்பாக நீதிமானாகும் வகை வெளிப்பட்டிருக்கின்றது; அதைக்குறித்து [2]நியாயப்பிரமாணமும் [3]தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகின்றன.

௨௨ [4]இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பராபரன் வரப்பண்ணுகிற நீதி அதுவே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது வரும்.

௨௩ [5]வித்தியாசமே இல்லை; [6]எல்லாரும் பாவம்செய்து, பராபரனுடைய மகிமை அற்றவர்களாய் இருந்து,

௨௪ [7]கைமாறில்லாமல் [8]அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள்.

௨௫ [9]பராபரன் தாம் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை [10]மன்னித்துவிட்டதைக்* குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாக, [11]இயேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் விசுவாசமாய் இருக்கிறதினாலே வரும் கிருபைக்கு மூலாதாரமாக அவரையே ஏற்படுத்திவைத்தார் †

௨௬ [12]இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை நீதிமானாக்குகிறதில் அவர் நீதியுள்ளவராய் இருக்கும்படிக்கு, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவே (அப்படிச் செய்தார்).

௨௭ ¶ ஆனபடியினாலே [13]மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே; எந்தப் பிரமாணத்தினாலே என்றால், கிரியைகளைக் குறிக்கிற பிரமாணத்தினாலே அல்ல, விசுவாசத்தைக் குறிக்கிற பிரமாணத்தினாலே அப்படி ஆயிற்று.

௨௮ ஆதலால் [14]மனிதர்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே அல்ல, விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள் என்று தீர்க்கிறோம்.

௨௯ அன்றியும் பராபரன் யூதருக்குமாத்திரம் தேவனாயிருக்கிறாரோ? மற்றத் தேசத்தாருக்கும் தேவனாயிருக்கிறார் அல்லவோ? மெய்யாய் அவர் மற்றத் தேசத்தாருக்கும் தேவனாயிருக்கிறார்.

௩௰ தேவன் ஒருவரே; ஆகையால் [15]அவர் விருத்தசேதனம் உள்ளவர்களையும் விருத்தசேதனம் இல்லாதவர்களையும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகச் சித்தமாய் இருக்கிறார்.

௩௧ இப்படியானால் விசுவாசம் என்கிறதினாலே நாம் நியாயப்பிரமாணத்தை அழித்துப்போடுகிறோமா? அப்படி அல்லவே, நியாயப்பிரமாணத்தை (அதினாலே) நிலையாகவே நிறுத்துகிறோம்.

௪. அதிகாரம்.

௧ ஆபிரகாமுடைய விசுவாசம் ௰ அவன் சுன்னத்தடைவதற்குமுன்னமே அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது ௰௩ அவனும், அவன் வித்தாரும் விசுவாசத்தினாலேயே வாக்குத்தத்தத்தைப் பெற்றது ௰௬ விசுவாசிகள் எல்லாருக்கும் ஆபிரகாம் தகப்பனென்றது ௨௪ நம்முடைய விசுவாசமும் நமக்கு நீதியாக எண்ணப்படுமென்றது.

அன்றியும் நம்முடைய தகப்பனாகிய [16]ஆபிரகாம் சரீர (கருமங்களினாலே) என்னத்தைப் பெற்றுக்கொண்டான்?

௨ ¶ [17]ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில், அவன் (தன்னை) மேன்மையாகப் பாராட்டலாம்; ஆகிலும் பராபரனுக்குமுன்பாக அப்படி ஒன்றுமில்லை.

௩ வேதவாக்கியம் எப்படிச் சொல்லுகிறதென்றால், [18]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான்; அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டதென்று சொல்லுகின்றது.

௪ அன்றியும் [19]கிரியைகளையுடை

கி. பி. ௬௰.

1 அப் ௰௫ ௰௧. உரோ ௧ ௰௭. பிலி ௩ ௯. எபி ௰௧ ௪-௭.
2 யோவா ௫ ௪௬. அப் ௨௬ ௨௨.
3 உரோ ௧ ௨. ௧பே ௧ ௰.
4 உரோ ௪.
5 உரோ ௰ ௰௨. கலா ௩ ௨௮. கொலோ ௩ ௰௧.
6 ௯ வச. உரோ ௰௧ ௩௨. கலா ௩ ௨௨.
7 உரோ ௪ ௰௬. எபே ௨ ௮. தீத் ௩ ௫, ௭.
8 மத் ௨௰ ௨௮. எபே ௧ ௭. கொலோ ௧ ௰௪. ௧தீமோ ௨ ௬. எபி ௯ ௰௨. ௧பே ௧ ௰௮, ௰௯.
9 அப் ௰௭ ௩௰. எபி ௯ ௰௫.
10 அப் ௰௩ ௩௮, ௩௯. ௧தீமோ ௧ ௰௫.
* அல்லது பாராமல் விட்டதை
11 கொலோ ௧ ௨௰.
† அல்லது வெளிப்படுத்தினார்
12 ௩ோ ௰௬ ௰௫. ௧யோ ௨ ௨. ௪ ௰.
13 உரோ ௨ ௰௭, ௨௩. ௪ ௨. ௧கொரி ௧ ௨௯, ௩௧. எபே ௨ ௯.
14 அப் ௰௩ ௩௮, ௩௯. ௨௰, ௨௧, ௨௨ வச. உரோ ௮ ௩. கலா ௨ ௰௬.
15 உரோ ௰ ௰௨, ௰௩. கலா ௩ ௮, ௨௰, ௨௮.
16 ஏசா ௫௧ ௨. மத் ௩. ௯. யோவா ௮ ௩௩, ௩௯. ௨கொரி ௰௧. ௨௨.
17 உரோ ௩ ௨௰, ௨௭, ௨௮.
18 ௧மோ ௰௫ ௬. கலா ௩ ௬. யாக் ௨ ௨௩.
19 உரோ. ௰௧ ௬.

யவனுக்கு வருகிற கூலி கிருபை யென்று எண்ணபபடாமல, கடனென்று எணணபபடும்

௫ கிரியைகளை உடையவனு யிராமல் [1]துன்மார்க்கனை நீதிமானுக்குகிறவர்மேல் விசுவாசமாயிருநதால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியென்று எண்ணபபடும.

௬ ¶ அநதப்படி தாவீதும் கிரியைகள் இலலாமல, பராபரனுலே நீதிமான் எனறு எணணபபடுகிற மனிதனுடைய பாககியததைக காணபிகக,

௭ [2]எவர்களுடைய அககிரமஙகள மன்னிககபபட்டனவோ எவாகளுடைய பாவஙகள் மூடபபட்டனவோ அவாகளே பாககியவானகள எனறும,

௮ எவனுடைய பாவததைப பராபரன் எணணுமல இருககிருரோ அவனே பாககியவான எனறும சொல்லியிருக்கிருன

௯ ¶ இநதப பாக்கியம விருததசேதனம உள்ளவனுககுமாததிரமா, அனறி, விருததசேதனம இலலாதவனுககு வருமோ? (இருவருககுமே வரும,) அது எபபடியென்ருல், நாஙகள நிச்சயிதத படி விசுவாசமே ஆபிரகாமுககு நீதியெனறு எணணபபட்டது.

௰ ¶ எபபொழுது அது அவனுககு அபபடி எணணபபட்டது? அவன் விருததசேதனம் உள்ளவனுய் இருநதபொழுதோ, விருத்தசேதனம இல்லாதவனுய் இருநதபொழுதோ (என்ருல்) விருத்தசேதனம் உள்ளவனுயிருந்தபொழுது அல்ல, விருததசேதனம் இல்லாதவனுயிருந்தபொழுதே அபபடி எணணபபட்டது.

௰௧ [3]மேலும் விருத்தசேதனம் இல்லாத காலத்திலே அவன் விசுவாசத்தினுலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதன அடையாளத்தைப் பெற்ருன்; விருத்தசேதனம் இல்லாமல் விசுவாசமுள்ளவர்களும் நீதிமான்கள் ஆககபபடும்பொருட்டாக, [4]அபபடிபபட்ட விசுவாசிகளுக்கு அவன் தகப்பனுய் இருக்கும்படிக்கும்,

௰௨ விருத்தசேதனத்தை உடையவாகளாய்மாத்திரம் அல்ல, நம்முடைய முன்னேருகிய ஆபிரகாம் விருததசேதனம் இல்லாத காலத்திலே நடநத விசுவாசமாாக்கத்தில் நடக்கிறவர்களாயும் இருககிறவர்கள் நீதிமான்கள் ஆக்கபபடும்பொருட்டாக, அப்படிபபட்ட விருததசேதனம் உள்ளவர்களுககும தகபபனுயிருக்கும்படிககும (அநத அடையாளத்தைப பெற்ருன்).

௰௩ ¶ அன்றியும், [5]உலகத்தைச் சுதநதரிபபான என்கிற வாக்குததத்தம் ஆபிரகாமுககும் அவனுடைய சநததிக்கும் நியாயபபிரமாணத்தினுல் வருகிற நீதியினுல அலல, விசுவாசததினுல் வருகிற நீதியினுலே கிடைததது.

௰௪ அதலால [6]நியாயபபிரமாணததினுலே வருகிற நீதியை உடையவாகள் சுதந்தரராஞல், விசுவாசம் வீணுயபபோம்; வாக்குத்ததத மும் அபத்தமாய்பபோம்.

௰௫ மேலும், [7]நியாயபபிரமாணம் கோபாக்கினையை நடப்பிக்கின்றது; நியாயபபிரமாணம இல்லாவிட்டால், அககிரமமும் தோன்ருதே.

௰௬ ஆதலால் அந்த வாக்குத்தத்தம் சநததியார் எல்லாருக்கும் நிச்சயமாய் இருககும்பொருட்டாக, (அந்தச் சுதந்தரம்) [8]கிருபையினுல் உண்டாகும்படிக்கு, அது விசுவாசத்தினுலே வருகின்றது; [9]நியாயபபிரமாணத்தை உடையவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரம் அல்ல, அநேகதேசத்தாருக்கு உன்னைத் தகபபனென்று ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, [10]நம்மெல்லாருக்கும் தகப்பனுகிய ஆபிரகாமைப்போல, விசுவா

கி. பி. ௬௰.

[1] யோசு ௨௪ ௨.

[2] சங் ௩௨ ௧,௨ / கலோ ௰௫ ௰ / 1 தீமு ௧ ௰௩ ௧௬ / ௰௨, ௰௬ வச / கலோ ௩ ௰ / 1 கலோ ௰௫ ௪ / ௰௦ ௰ / ௰ ௬

[6] கலா ௩ ௰

[7] உரோ ௩ ௨௰ / ௫ ௰௩, ௨௰ / அ, ௰, ௰௧ / க கொரி ௰௩ / ௰௬ ௨ கொரி / ௩ ௭,௯ கலா ௩ / ௰, ௰௯ ௧ யோ / ௩ ௪

[8] உரோ ௩ ௨௪

[9] கலா ௩ ௨௨

[10] ஏசா ௫௧ ௨ / உரோ ௯ அ

சத்தை உடையவர்களான சந்ததி யாருக்கும் அது நிச்சயமாயிருக்கும்.

௰௭ [1]மரித்தோரை உயிர்ப்பித்து, [2]இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவராகிய பராபரனை அவன் விசுவாசித்துக்கொண்டு அவராலே* [3](அப்படிப்பட்ட தகப்பனானான்).

௰௮ ¶ [4]உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, அவன், தான் அநேக தேசத்தாருக்குத் தகப்பனாவதை நம்புதற்கு ஏதுவில்லாமலிருந்தும், நம்பிக்கையோடே அதை விசுவாசித்தான்.

௰௯ அவன் விசுவாசத்திலே பலஈனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதானபடியால், [5]தன் சரீரம் செத்துப்போனதையும் சாராள் கர்ப்பம் உண்டாகாமலிருந்ததையும் எண்ணாமல் இருந்தான்.

௨௰ பராபரனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,

௨௧ பராபரன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றவும் [6]வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று உறுதியாய் நினைத்து, பராபரனைப் புகழ்ந்து, பலத்த விசுவாசமுள்ளவனானான்.

௨௨ ஆகையால் அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டது.

௨௩ ¶ [7]அது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டதென்பது அவனுக்காகமாத்திரம் அல்ல, நமக்காகவும் எழுதியிருக்கின்றது.

௨௪ [8]நம்முடைய அக்கிரமங்களின்நிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் நம்மை நீதிமான்களாக்குதற்கு,

௨௫ [9]எழுப்பப்பட்டும் இருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுவை [10]மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினவரை விசுவாசித்துக்கொண்டால், நமக்கும் அது அப்படியே எண்ணப்படும்.

௫. அதிகாரம்.

௧ விசுவாசத்தினாலே நீதிமான்களாகிப் பராபரனிடத்தில் சமாதானம் பெற்று, ௨ நம்பிக்கையில் சந்தோஷமடைந்து, ௮ பாவிகளாயிருந்தபோதிலும் அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினிமித்தம் ஒப்புரவடைந்தால், ௰ அது கிடைத்தபின்பு இரட்சிக்கப்படுவோம் என்றது. ௰௨ பாவமும், மரணமும், ஆதாமினாலே வந்ததுபோல, ௰௭ நீதியும், சீவனும் இயேசுகிறிஸ்துவினாலே வந்ததென்றது. ௨௰ பாவம் பெருகியிருந்தும் கிருபை அதிகமாய்ப் பெருகுகிறதென்பது.

இவ்விதமாய் [11]நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு [12]நாம் பராபரனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

௨ [13]மேலும் நாம் நிற்கின்ற கிருபைக்குள் பிரவேசிக்குதலையும் [14]நாம் அவரைக்கொண்டு விசுவாசத்தினாலே பெற்றும், [15]பராபரனுடைய மகிமையை அடைவோம் என்று நம்பி மேன்மை பாராட்டியும் இருக்கிறோம்.

௩ ¶ அதுவுமல்லாமல் [16]உபத்திரவம் பொறுமையையும், [17]பொறுமை நிச்சயத்தையும், நிச்சயம் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றன என்று நாங்கள் அறிந்திருந்து,

௪ [18]உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம்.

௫ மேலும் [19]நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியினாலே பராபரனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், [20]அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

௬ ¶ அன்றியும் நாம் பெலனற்றவர்களாய் இருக்கையில், கிறிஸ்து தகுதியான† காலத்திலே [21]அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

௭ நீதிமானுக்காக மற்றொருவன் மரிக்கிறது அருமையாயிருக்கும்; நல்லவனுக்காக ஒருவேளை மற்றொருவன் மரிக்கத் துணிவான்.

௮ கிறிஸ்துவோ [22]நாம் பாவிகளா

கி. பி. ௬௰.

1 உரோ ௮ ௰௧ எபே ௨. ௧. ௫
2 உரோ [illegible] ௧ கொரி [illegible]
* அல்லது அவரைப்போல
3 [illegible]
4 [illegible]
5 [illegible]
6 [illegible]
7 [illegible]
8 [illegible]
9 [illegible]
10 [illegible]
11 [illegible]
12 [illegible]
13 [illegible]
14 [illegible]
15 [illegible]
16 [illegible]
17 [illegible]
18 [illegible]
19 [illegible]
20 [illegible]
† அல்லது குறித்த
21 [illegible]
22 [illegible]

யிருக்கையிலே நமக்காக மரித்ததினாலே, பராபரன் நமதுமேல் வைத்த அன்பை விளஙகபபண்ணினா.

௯ இபபடி நாம் [1]அவருடைய இரததததினாலே நீதிமானகளாக்கபபட்டிருக்க (வரும [2]கோபாக்கினையில் நினறு அவராலே மிகவும் அதிகமாய இரட்சிககபபடுவோமே).

௰ நாம [3]பராபரனுககுப பகைஞராயிருக்கையில், அவா குமாரனுடைய மரணததினாலே [4]அவருடனே ஒபபுரவாக்கபபட்டோமானால், ஒபபுரவாக்கபபட்டபின நாம் [5]அவருடைய சீவனாலே மிகவும அதிகமாய் இரட்சிககபபடுவோமே.

௰௧ ¶ அதுவுமல்லாமல் இபபொழுது ஒபபுரவாக்குதலை[*] நமககுச கிடைக்கபபண்ணின நமமுடைய காததராகிய இயேசுககிறிஸது மூலமாய நாம பராபரனைக குறிதது [6]மேன்மைபாராட்டுகிறோம்

௰௨ ¶ என்னததினாலெனறால், [7]ஒரே மனிதனாலே பாவமும, பாவததினாலே மரணமும் [8]உலகததிலே பிரவேசித்தபினபு எல்லாமனிதரும் பாவிகளானபடியினாலே,[†] மரணம எல்லா மனிதருககும் வநததுபோல, (கிறிஸதுவினாலே எல்லாருக்கும ஒபபுரவாக்குதல் உண்டாயிறறு).

௰௩ நியாயபபிரமாணம்வருதற்கு முன்னேபாவம் உலகததில இருநதது; நியாயபபிரமாணம இல்லாதிருநதால, [9]பாவம் எணணிககைபபடமாட்டாது.

௰௪ அபபடியிருநதும், மரணமானது ஆதாமமுதல் மோசேவரைககும் ஆதாமின் மீறுதலுக்கு ஒபபாய்ப பாவம்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; [10]அந்த ஆதாம், பின்பு வநதவருக்கு அடையாளமானவன்.

௰௫ ஆனாலும் கிருபையுள்ள ஈவின் சஙகதி விழுதலின் சங்கதியைபபோல இருக்கிறதில்லை; ஒரே மனிதன் விழுநததினாலே அநேகர் மரிததிருககக, மிகவும் அதிகமாய்ப பராபரனுடைய கிருபையும் இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே மனிதனுடைய கிருபையினால் வருகிற ஈவும, [11]அநேகாமேல் பெருகியிருககின்றன.

௰௬ மேலும அநத ஈவு பாவம்செய்த ஒருவனால் உண்டான நியாயததீாபபைபபோல இருககவில்லை; அநதத தீாபபு ஒரே குற்றததினிமித்தம் ஆககினைக்கு ஏதுவாயிருநதது, கிருபையுள்ள ஈவானது அநேக பாவஙகளை நீககி நீதியாக்குதற்கு ஏதுவாயிருக்கின்றது.

௰௭ அலலாமலும் ஒரே மனிதன் விழுநதபினபு[‡] அநத ஒரே மனிதனாலே மரணம் ஆண்டுகொணடிருககக கிருபையாகிய பரிபூரணததையும் நீதியாகிய ஈவின் பரிபூரணததையும் பெறுகிறவர்கள, இயேசுககிறிஸது என்னும் ஒரே மனிதனாலே மிகவும் அதிகமாயச சீவனை அடைநது ஆளுவாாகள

௰௮ ஆகையால ஒரே மனிதனுடைய தபபிதததினாலே[§] எலலா மனிதருக்கும் ஆக்கினைககு ஏதுவான தீாபபு உணடானதுபோல, ஒரே மனிதனுடைய நீதியினாலும்[||] [12]எல்லா மனிதருக்கும சீவனாகிய நீதிககு ஏதுவான தீர்பபு உணடாயிற்று

௰௯ அன்றியும் ஒரே மனிதன் கீழ்பபடியாமலிருநததினாலே அநேகாபாவிகளாக்கபபட்டாாகள்; அதுபோல ஒரே மனிதன் கீழ்பபடிநததினாலே அநேகர் நீதிமான்களாக்கபபட்டு வருவார்கள்.

௨௰ ¶ [13]மேலும் நியாயபபிரமாணம தோன்றினதினாலே தபபிதம் பெருகிற்று; அபபடிப பாவம் பெருகியிருந்தும் [14]கிருபை அதிகமாய்ப பெருகிற்று. ஆதலால் பாவம்மரணததுக்கு ஏதுவாக (மனிதரை) ஆண்டுகொண்டதுபோல,

௨௰௧ நம்முடைய கர்த்தராகிய

[1] உரோ ௩ ௨௫ எபே ௨ ௰௩ எபி ௯ ௰௪ ௧ யோ ௧ ௭

[2] உரோ ௧ ௰௮ ௧ தெச ௧ ௰

[3] உரோ ௮ ௭

[4] ௨ கொரி ௫ ௰௮, ௰௯ எபே ௨ ௰௬ கொலோ ௧ ௨௰ ௨௧

[5] யோவா ௰௪ ௰௯ ௨ கொரி ௪ ௰, ௰௧

[*] அலலது பாவ நிவாரணையை, [illegible]

[6] உரோ [illegible] கலா [illegible]

[7] ஆதி ௩ ௬ ௧ கொரி ௰௫ ௨௧

[8] ஆதி ௨ ௰௭ உரோ ௬ ௨௩ ௧ கொரி ௰௫ ௨௨

[†] அலலது அவரில பாவிகளானபடியினாலே

[9] உரோ ௪ ௰௫ ௧ யோ ௩ ௪

[10] ௧ கொரி ௰௫ ௨௧, ௨௨, ௪௫

[11] ஏசா ௫௩ ௰௧ மத் ௨௰ ௨௮ ௨௬ ௨௮

[‡] அலலது ஒரே பாவத்தினாலே

[§] அலலது ஒரே தபபிதத்தினாலே

[||] அலலது ஒரே நீதியினாலே

[12] யோவா ௰௨ ௩௨ எபி ௨ ௯

[13] யோவா ௰௫ ௨௨ உரோ ௩ ௨௰ ௪ ௰௫ ௭ ௮. கலா ௩ ௰௯, ௨௩

[14] லூக் ௭ ௪௭ ௧ தீமோ ௧ ௰௪

இயேசுக்கிறிஸ்துவினாலே கிருபையானது, நித்திய சீவனுக்கு ஏதுவான நீதியினாலே ஆண்டுகொண்டது.

௬. அதிகாரம்.

௧ பாவத்துக்கு மரித்த நாம் பாவத்தில் நிலைநிற்கக்கூடாதென்பதற்கு ஞானஸ்நானம் அடையாளமென்பது ௰௨ நீதியின் ஊழியத்துக்கு நம்மை ஒப்புவித்திருக்கிறதினாலும், பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறதினாலும், பாவம் நம்மை இனி ஆளாதென்பது

ஆகையால் நாம் என்ன சொல்லலாம்? [1]கிருபை பெருகும்படிக்கு, பாவத்திலே நிலைநிற்கக்கடவோம் என்று சொல்லலாமா?

௨ அப்படிக் கூடாதே, [2]பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?

௩ [3]கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற* நாம் அனைவரும் [4]அவருடைய மரணத்திற்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

௪ மேலும் [5]பிதாவின் மகிமையினாலே [6]கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் [7]புதிதான சீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு மரணத்திற்குள்ளான [8]ஞானஸ்நானத்தினாலே அவருடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்

௫ [9]ஆதலால் அவருடைய மரணத்திற்கு ஒப்பாக நாம் அவருடனே நாட்டப்பட்டவர்களாயிருக்க அவர் உயிரோடு எழுந்திருக்குதலுக்கு ஒப்பாகவும் அப்படியே இருப்போம்.

௬ மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நாம் இனிப் பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, [10]பாவமாகிய சரீரம் அழிந்துபோகும்பொருட்டாக [11]நம்முடைய பழைய மனிதத்தத்துவம் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது.

௭ ஆகையால் [12]மரித்தவன் பாவத்திற்கு விலக்கப்பட்டானே.†

கி. பி. ௬௰.

1 உரோ ௩ அ ௰௩ வச
2 ௰௧ வசனம் உரோ ௭ ௪ கலா ௨ ௰௯ ௬ ௰௪ கொலோ ௩ ௩ ௧ பேது ௨ ௨௪
3 கலா ௩ ௨௭
* அல்லது [illegible]
4 ௧ கொரி ௰௫ ௨௯
5 யோவா ௨ ௰௧ ௪௰
6 உரோ ௮ ௰௧ ௨ கொரி ௰௩ ௪
7 கலா ௬ ௰௫ எபே ௪ ௨௨, ௨௪ கொலோ ௩ ௰
8 கொலோ ௨ ௰௨
9 பிலி ௩ ௰௦
10 கொலோ ௨ ௰௧
11 கலா ௨ ௨௰ ௫ ௨௪ எபே ௪ ௨௨ கொலோ ௩ ௫, ௯
12 ௧ பேது ௪ ௧
† [illegible] பாவத்துக்கு [illegible] நீதிமானாக்கப்பட்டான்
13 ௨ தீமோ ௨ ௰௧
14 வெளி ௧ ௰௮
15 எபி ௯ ௨௭, ௨௮
16 லூக் ௨௰ ௩௮
17 ௨ வச
18 கலா ௨ ௰௯
19 சங் ௰௯ ௰௩
20 உரோ ௭ ௪, ௬ கலா ௫ ௰௮
21 உரோ ௭ ௫ கொலோ ௩ ௫ ௧ பேது ௪ ௨
‡ கிரேக்கு கருவிகளாக
22 உரோ ௰௨ ௧ ௧ பேது ௨ ௨௪ ௪ ௨
23 ௧ கொரி ௯ ௨௧

௮ மேலும் [13]கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்திருக்க,

௯ [14]மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்றும் மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாதென்றும் நாம் அறிந்தபடியால், அவருடனேகூடப் பிழைத்தும் இருக்கலாம் என்று நம்புகிறோம்.

௰ அன்றியும் [15]அவர் பாவத்திற்காக ஒரேதரம் மரித்தார்; பின்பு [16]அவர் பிழைத்திருக்கிறது பராபரனுக்காக இருக்கிறது.

௰௧ [17]அதுபோல நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்கள் என்றும், [18]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு பராபரனுக்குப் பிழைத்திருக்கிறவர்கள் என்றும் எண்ணிக்கொள்வீர்களாக

௰௨ ¶ ஆகையால் [19]சாவுக்கினமான உங்கள் சரீரத்தின் இச்சைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியத்தக்கதாக, பாவம் அதிலே ஆளாதிருப்பதாக.

௰௩ அன்றியும் நீங்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, கிருபையின்கீழ் இருக்கிறபடியால், [20]பாவம் உங்களைப் பலபந்தப்படுத்தமாட்டாது.

௰௪ ஆதலால் [21]நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதிக்குரிய ஆயுதங்களாகப்‡ பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், [22]உங்களை மரித்தோரிலிருந்து பிழைக்கிறவர்கள் என்று பராபரனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகப் பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக

௰௫ ¶ இதினாலே பொருளென்ன ஆயிற்று? [23]நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் இராமல் கிருபையின்கீழ் இருக்கிறபடியினாலே, பாவம் செய்யலாமென்ற பொருளா? அப்படி அல்லவே.

௰௬ மரணத்திற்கு ஏதுவான பாவத்துக்காகிலும் நீதிக்கு ஏதுவான

கீழ்ப்படிதலுக்கானாலும், [1] எதற்குக்கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள் என்று அறியாமலிருக்கிறீர்களா?

௰௭ முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தீர்கள், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட* [2]உபதேசத்தின் பிரமாணத்திற்கு நீங்கள் மனச்சந்தோஷமாய்க் கீழ்ப்படிந்திருக்கிறபடியினாலே பராபரனுக்குத் தோத்திரம்.

௰௮ இப்படி [3]நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

௰௯ உங்கள் சரீரத்தின் பலஈனத்தின்நிமித்தம் மனிதர் பிரகாரமாகச் சொல்லுகிறேன்; அக்கிரமத்தை நடப்பிக்கும்படி (முன்னே) நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்பீர்களாக.

௨௰ [4]பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாய் இருந்த காலத்திலே நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தீர்கள்.†

௨௧ [5]இப்பொழுது நீங்கள் வெட்கப்படுகிற காரியங்களினாலே அக்காலத்திலே உங்களுக்கு என்ன பிரயோசனம் உண்டாயிற்று? [6]மரணமே அவைகளின் முடிவாயிருக்கின்றது.

௨௨ [7]இப்பொழுது நீங்கள் பாவத்தில்நின்று விடுதலையாக்கப்பட்டுப் பராபரனுக்கு அடிமைகளான பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுக்குப் பிரயோசனமாயிற்று; நித்தியசீவனே அதின் கடைசிப் பலனாயிருக்கின்றது.

௨௩ [8]பாவத்தினால் வருகிற சம்பளம் மரணம்; [9]பராபரனுடைய கிருபையுள்ள ஈவோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் உண்டான நித்தியசீவனே.

௭. அதிகாரம்.

௧ உயிர் நீங்கின பின்பு நியாயப்பிரமாணம் மனுஷனை ஆளாதென்பது ௪ நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்திருந்தாலும், ௭ அது பாவமாயிராமல், ௰௨ பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாய் இருக்கிறதென்பது ௰௯ பவுலதானே அதைக் கைக்கொள்ளக்கூடாததின் நிமித்தம் விதனப்படுகிறதைச் சொல்லியது

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்; சகோதரரே, ஒரு மனிதன் உயிரோடிருக்குமளவுமாத்திரம் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகின்றது என்று அறியீர்களா?

௨ அதெப்படியென்றால் [10]புருஷனைக்கொண்ட ஸ்திரி தன் புருஷனுடைய சீவகாலமளவும் நியாயப்பிரமாணத்தினபடியே அவனோடே சேர்க்கப்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்தபின்பு அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திற்கு நீக்கப்படுகிறாள்.

௩ மேலும் [11]புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்று அழைக்கப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தில் நின்று விடுதலையாகி, வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல.

௪ ¶ அப்படிப்போல என் சகோதரரே, நாம் [12]பராபரனுக்குக் கனியைக் கொடுக்கும்படிக்கு, மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்கள் ஆவதற்கு, நீங்களும் அவருடைய [13]சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்தில்நின்று நீங்க மரித்தவர்களானீர்கள்.

௫ நாம் சரீரத்தின்படி நடந்தகாலத்திலே நியாயப்பிரமாணத்திலே தோன்றிய பாவமான இச்சைகள்,‡ நாம் [14]மரணத்திற்கு ஏது

கி பி. ௬௰.

[1] மத். ௬. ௨௪. யோவா. ௮. ௩௪. ௨ பே. ௨. ௰௯.

* கிரேக்கு: நீங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற

[2] ௨ தீமோ. ௧. ௰௩.

[3] யோவா. ௮. ௩௨. ௧ கொரி. ௭. ௨௨. கலா. ௫. ௧. ௧ பே. ௨. ௰௬.

[4] யோவா. ௮. ௩௪.

† கிரேக்கு: நீதியைவிட்டு நீங்கினவர்களா

[5] ௨ ரோ. ௭. ௫.

[6] ௨ ரோ. ௧. ௩௨.

[7] யோவா. ௮. ௩௨.

[8] ௧ மோ. ௨. ௰௭. ௨ ரோ. ௫. ௰௨. யாக். ௧. ௰௫.

[9] ௨ ரோ. ௨. ௭. ௫. ௰௫, ௨௧. ௧ பே. ௧. ௪.

[10] ௧ கொரி. ௭. ௩௯.

[11] மத். ௫. ௩௨.

[12] கலா. ௫. ௨௨.

[13] ௨ ரோ. ௮. ௨. கலா. ௨. ௰௯. ௫. ௰௮. எபே. ௨. ௰௫. கொலோ. ௨. ௰௪.

‡ அல்லது பாவவியாகுலங்கள்

[14] ௨ ரோ. ௬. ௨௧. கலா. ௫. ௰௯. யாக். ௧. ௰௫.

வான கனிகளைக் கொடுககததக்கதாக, நம்முடைய அவயவங்களிலே [1]பலனுசெய்திருநதன.

௬ இபபொழுது நாம் மரித்தவர்களாயிருக்க,* நாம் பழமையான எழுததின்படியல்ல, [2]புதுமையான ஆவியின்படி ஊழியம்செய்யததக்கதாக, நம்மைக் கட்டியிருநத நியாயபபிரமாணத்தில் நின்று விடுதலையாக்கபபட்டிருககிறோம்.

௭ ¶ இதனாலே பொருள் என்ன ஆயிற்று? நியாயபபிரமாணம் பாவமாயிருக்கினறதென்பதோ? அபபடி அலலவே; மேலும் [3]இச்சியாதிருபபாயாக என்று நியாயபபிரமாணம் சொல்லாதிருநதால, இச்சிபபைப† பாவமென்று நான் அறியாமல் இருபபேன். [4]ஆதலால், பாவம் இன்னதெனறு நியாயபபிரமாணததினாலே அறிநதேன்.

௮ இபபடி [5]நியாயபபிரமாணம் இல்லாவிட்டால, பாவம் செத்ததாயிருக்கும்; ஆதலால் [6]பாவமானது கட்டளையினாலே இடமபெற்று, சகலவித இசசைகளையும் என்னில் நடபபிசததது.

௯ இபபடியிருக்க, முன்னே நியாயபபிரமாணம் இல்லாதபொழுது நான் சீவனுள்ளவனாயிருநதேன்; கட்டளை வநதபொழுது பாவம் திரும்ப உயிர்கொண்டது; நான் மரித்தேன்.

௰ இபபடிப பாவமானது கட்டளையினாலே இடமபெறறு எனனை வஞ்சிததது, அதினாலே என்னைக கொலைசெய்ததினாலே,

௰௧ [7]சீவனுககாகக கொடுககபபட்ட கட்டளையை எனக்கு மரணததைக்கொடுக்கிறதெனறு கண்டேன்.

௰௨ [8]ஆகையால் நியாயப்பிரமாணமே பரிசுத்தமாயிருக்கின்றது, கட்டளையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கின்றது.

௰௩ இபபடியானால் நன்மையானது என் மரணத்திற்கு எதுவாயிற்று என்று கேட்டால், அபபடி ஆகவே இல்லை; பாவமே எனக்கு அபபடி ஆயிற்று; பாவம் கட்டளையினாலே மிகவும் பெரிதான பாவமாகுமபடிககு, அதுவே நலமானதினாலே எனககு மரணம் உண்டாக்குகிறதாகத தோன்றிற்று.

௰௪ மேலும் நமககுத தெரிநதிருக்கிறபடி நியாயபபிரமாணம் ஆவிக்குரியதாய் இருககின்றது; (மனிதனாகிய) [9]நானோ பாவததுக்குக கீழாக விற்கபபட்டு,

௰௫ மாம்சததுககு உரியவனாய் இருககிறேன, எபபடியெனில நான் நடபபிக்கிறதற்கு என மனது சமமதிக்கிறதில்லை.‡ [10]நான் விரும்புகிறதைச செய்யாமல், பகைக்கிறதையே செய்கிறேன்.

௰௬ இபபடி என் மனது விரும்பாததை நான் செயதிருக்க நியாயபபிரமாணம் நல்லதெனறு ஒத்துககொள்ளுகிறேன்.

௰௭ ஆதலால நானல்ல, எனககுள் வாசமாயிருககிற பாவமே அபபடி நடபபிககினறது

௰௮ அது எபபடியென்றால் நான் அறிநதிருககிறபடி மாம்ச தேகியாகிய [11]எனககுள்ளே நன்மை வாசமாயிருககிறதில்லை; நன்மை செயவதற்கான விருபபம எனனுடனே இருககின்றது; அபபடிச செயகிறதை என்னிடத்தில் காணேன்.

௰௯ ஆதலால் எனக்கு விருப்பமான நன்மையை நான் செய்யாமல், எனககு விருபபமில்லாத தீமையை நடபபிககிறேன்.

௨௰ அநதபபடி எனக்கு விருபபம் இலலாததை நான் செய்கிறவனாயிருக்க நானல்ல, எனககுள்ளே வாசமாயிருக்கிற பாவமே அபபடிச் செய்கின்றது.

௨௧ ஆனபடியினாலே நன்மை செய்ய விருமபுகிற என்னிடத்திலே தீமைசெய்யபபண்ணுகிற பிரமாணத்தைக காண்கிறேன்.

௨௨ [12]என் உள்ளத்தோடே [13]பரா

கி. பி. ௬௰.

[1] உரோ ௬ ௰௩.

* அலலது நம்மைக் கட்டியிருநதது செததிருகக, உரோ ௬ ௨ ௪ ௰௪

[2] உரோ ௨ ௨௯ ௨ கொரி ௩ ௬

[3] ௨ மோ ௨௰. ௰௭ ௫ மோ ௫ ௨௧ அப ௨௰ ௩௩ உரோ ௰௩ ௯

† அலலது போசையை

[4] உரோ ௩ ௨௰

[5] ௧ கொரி ௰௫ ௫௬

[6] உரோ ௪ ௰௫ ௫ ௨௰

[7] ௩ மோ ௰௮ ௫ எசே ௨௰ ௰௧, ௰௩, ௨௧ ௨ கொரி ௩ ௭

[8] சங ௰௯ ௮ ௱௰௯ ௯௮, ௱௩௭ ௧ தீமோ ௧ ௮

[9] ௧ இரா ௨௧ ௨௰, ௨௫ ௨ இரா ௰௭ ௰௭

‡ கிரேக்கு, அறிகிறதிலலை, சங ௧ ௬

[10] கலா ௫ ௰௭

[11] ௧ மோ ௬ ௫ ௮ ௨௧

[12] ௨ கொரி ௪. ௰௬ எபே ௩ ௰௬ கொலோ ௩ ௯, ௰

[13] சங ௧

பரனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்.

௨௩ [1]என் அவயவங்களிலே [2]என் மனதின் பிரமாணத்துக்கு எதிராய்ப் போராடுகிற வேறு பிரமாணத்தைக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை அடிமையாக்கிக்கொள்ளுகிறது.

௨௪ ஐயோ, நான் நிர்ப்பாக்கியமுள்ள மனிதன்; இந்த மரணத்திற்கு ஏதுவான சரீரத்தினின்று* யார் என்னை விடுதலையாக்குவார்.

௨௫ [3]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே (என்னை விடுதலையாக்குகிற) பராபரனையே தோத்திரம்செய்கிறேன், ஆதலால் நானே என் மனதினாலே பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்துக்கும் ஊழியம் செய்கிறேன்.

௮. அதிகாரம்.

௧ கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு தேவ ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை வராதென்றும், ௫ ௰௩ மாம்சத்துக்கேற்ற சிந்தையினால் வரும் தீமை இன்னதென்றும், ௬ ௰௪ ஆவிக்கேற்ற சிந்தையினாலும், ௰௭ பராபரனுடைய புத்திரராயிருப்பதினாலும் வரும் நன்மை இன்னதென்றும், ௰௯ பராபரன் நீதியாய்த் தீர்மானித்த தம்முடைய புத்திரரின் மகிமையான விடுதலைக்குச் சிருஷ்டிகளெல்லாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்குமென்றும், ௩௮ பராபரனுடைய அன்பினின்று உத்தமரை யாதொன்றும் நீக்கமாட்டாதென்றும் காட்டியது

ஆனபடியினாலே [4]மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படியே நடந்து, கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வராது.

௨ கிறிஸ்து இயேசுவினாலே சீவனைக் கொடுக்கிற [5]ஆவியின் [6]பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்றிவைகளின் [7]பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

௩ அது எப்படியெனில் [8]மாம்சத்தினாலே பலஈனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைப் [9]பராபரன் செய்ய, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும்† அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

௪ [10]மாம்சத்துக்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிற நம்மாலே நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படி ஆயிற்று.

௫ இப்படியிருக்க, [11]மாம்சத்துக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் [12]ஆவிக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்.

௬ [13]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‡ மரணத்துக்கு ஏதுவானது; ஆவிக்கு ஏற்ற சிந்தை§ சீவனுக்கும் சமாதானத்துக்கும் ஏதுவானது.

௭ எப்படியென்றால், [14]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‖ பராபரனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும் [15]கீழ்ப்படியத் திராணியில்லாமலும் இருக்கிறபடியால், அது பராபரனுக்கு விரோதமான பகையாயிருக்கின்றது.

௮ ஆனதால் மாம்சத்திற்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் பராபரனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள்.

௯ ¶ [16]பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்திற்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்; [17]கிறிஸ்துவினுடைய ஆவியை உடையவன் அல்லாதவன் அவருடையவன் அல்ல.

௰ மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தபடியால், பாவத்தின்நிமித்தம் சரீரம் அழிந்துபோனாலும் ஆவியானது நீதியின்நிமித்தம் சீவனாயிருக்கின்றது.

௰௧ அன்றியும் இயேசுவை மரித்தோரில்நின்று எழுப்பினவரு

கி. பி. சூம.

1 உரோ ௬ ௰௩, ௰௯
2 கலா ௫ ௰௭
* அல்லது மரணத்தின் சரீரத்தினின்று
3 ௧ கொரி ௰௫ ௫௭
4 ௪ வச கலா ௫ ௰௬, ௨௫
5 ௧ கொரி ௰௫ ௪௫ ௨ கொரி ௩ ௬
6 யோவா ௮ ௩௬ உரோ ௬ ௰௮, ௨௨ கலா ௫ ௧
7 உரோ ௭ ௨௪, ௨௫
8 அப் ௰௩ ௩௯ உரோ ௩ ௨௰ எபி ௭ ௰௮, ௰௯ ௰ ௧, ௨ ௰, ௰௪
9 ௨ கொரி ௫ ௨௧ கலா ௩ ௰௩
† அல்லது பாவத்துக்காக
10 ௧ வச
11 யோவா ௩ ௬ ௧ கொரி ௨ ௰௪
12 கலா ௫ ௨௨, ௨௫
13 ௰௩ வச உரோ ௬ ௨௧ கலா ௬ ௮
‡ இதுக்கு, மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை, ௭ வச
§ இதுக்கு, ஆவியைச் சிந்திக்கிற சிந்தை
14 யாக் ௪ ௪
‖ இதுக்கு மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை
15 ௧ கொரி ௨ ௰௪
16 ௧ கொரி ௩ ௰௬ ௬ ௰௯
17 யோவா ௩ ௩௪ கலா ௪ ௬ பிலி ௧ ௰௯ ௧ பே ௧ ௰௧

டைய [1]ஆவி உஙகளில் வாசமாயிருக்கிறபடியால், [2]கிறிஸ்துவை மரித்தோரிலிருநது எழுபபினவா உஙகளில் வாசமாயிருககிற தம்முடைய ஆவியிஞலே* மரணத்துக்குரிய உஙகள சரீரங்களை உயிரோடிருக்கசசெய்வார்.

௰௨ ¶ [3]ஆகையால் சகோதரரே, மாம்சததுகக் ஏற்றபடி சீவனம பணணததககதாக, நாம மாமசததுககுக் கடஞளிகளாய இருககிறதிலலை.

௰௩ [4]மாம்சத்துக்கு ஏற்றபடி சீவனம்பணணிஞல் சாவீாகள்; ஆவியிஞலே சரீரததின் செய்கைகளை [5]அழிததுபபோட்டால் பிழைபபீாகள்.

௰௪ மேலும் [6]எவர்கள் பராபரனுடைய ஆவியிஞலே நடததபபடுகிருாகளோ அவாகள் பராபரனுடைய புததிரராய இருக்கிருாகள்.

௰௫ அநதபபடி நீஙகளும் பினனும [7]பயபபடுகிறதற்கு அடிமையின் [8]ஆவியை அடையாமல், [9]அபபா பிதாவே என்று கூபபிடபபணஞுகிற [10]புததிரசுவிகாரததின் ஆவியையே அடைநதிருககிறீாகள்.

௰௬ [11]நாம் பராபரனுடைய புததிரராய் இருககிறதைக குறிதது ஆவியானவா தாமே நம்முடைய ஆவியுடனேகூடச சாட்சிகொடுக்கிருர்.

௰௭ மேலும் நாம் புததிரராயிருகக, [12]சுதந்தரராயும் இருககிறோம, [13]கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைபபடும்படிககு அவரோடேகூடப் பாடுபட்டால், அவரோடேகூடச் சுதந்தரராய்ப பராபரனுடைய சுதந்தரராகவே இருபபோம்.

௰௮ ¶ **ஆதலால்** [14]இக்காலத்துபபாடுகள் இனி நம்மிடத்தில் வெளிபபடும் மகிமைக்கு ஒப்பிடபபாத்திரமானவைகள் அல்ல என்று **எண்ணுகிறேன்.**

௰௯ மேலும் தற்செயலாலே அல்ல, சிருட்டிகளும் அழிவுககு ஏற்ற அடிமைததனததில்நினறு விடுதலையாக்கபபடடு,

௨௰ பராபரனுடைய புததிரா மகிமையாய அடையும் இரட்சிபபுக்கு வரும்படிககான நம்பிககையோடே [15]கீழ்பபடுததினவராலே வீணுககுக கீழ்பபட்டிருககிறபடியால,

௨௧ [16]சிருட்டிகளும் பராபரனுடைய புத்திரா வெளிபபடுகிறதற்கு [17]மிகுநத ஆசையோடே காததுககொண்டிருககினறன.

௨௨ ஆனபடியால் நமககுத் தெரிநதிருககிறபடி சகல சிருட்டிகளுமகூட† [18]இதுவரைககும தவிதது வேதனைபபடுகினறன.

௨௩ அவைகள்மாததிரம அல்ல, [19]ஆவியின முதற்பலன்களைப பெற்ற நாமும்கூட [20]நம்முடைய சரீரம் மீட்கபபடுதலாகிய [21]புததிரசுவிகாரம வருவதற்குக காததிருநது,

௨௪ [22]நமக்குள்ளே தவிககிறோம், (அதன்மேலுள்ள) நம்பிககையாய நாம் இரட்சிககபபடுகிறோம, [23]காணபபடுகிற பொருளை நம்புகிறது நம்பிககையல்ல; ஒருவன தான் காணகிறதை நம்பவேண்டுவது என்ன?

௨௫ நாம் காணுததை நம்புகிறபடியால் அது வருவதற்குப பொறுமையோடே காததிருக்கிறோம்.

௨௬ ¶ அல்லாமலும் [24]நாம் தகுதியாயச் செபம்பண்ணவேணடுவது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால் [25](தேவ) ஆவியானவர் தாமே சொல்லக்கூடாத பெருமூச்சுகளாலே நமக்காக வேண்டுதல்பணணி, நம்முடைய பலஈனஙகளில் (நமக்கு) உதவிசெய்கிருர்.

௨௭ ஆவியானவர் [26]பராபரனுடைய சிததத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்பண்

கி. பி. ௬௰.

1 அப ௨ ௨௪
2 உரோ ௬ ௪, ௫
௧ கொரி ௬ ௰௪
௨ கொரி ௪ ௰௪
எபே ௨ ௫
* அலலது ஆவியின நிமிததமாக
3 உரோ ௬ ௭, ௰௪
4 ௬ வச கலா ௬ ௮
5 எபே ௪ ௨௨
கொலோ ௩ ௫
6 கலா ௫ ௰௮
7 உ தீமோ ௧ ௭
௧ யோ ௪ ௰௮
8 ௧ கொரி ௨ ௰௨ எபி ௨ ௰௫
9 மாற ௰௪ ௩௬
10 ஏசா ௫௬ ௫
கலா ௪ ௫, ௬
11 ௨ கொரி ௧ ௨௨ ௫ ௫
எபே ௧ ௰௩ ௪ ௩௰
12 அப ௨௬ ௰௮
கலா ௪ ௭
13 அப ௰௪ ௨௨
பிலி ௧ ௨௯
௨ தீமோ ௨ ௰௨
14 ௨ கொரி ௪ ௰௭
௧ பே ௧ ௬, ௭ ௪ ௰௩
15 ௨௨ வசனம
௧ மோ ௩ ௰௯
16 ௧ யோ ௩ ௨
17 ௨ பே ௩ ௰௩
† அல்லது சகல சீவபபிராணிகளும, மாற ௰௬ ௰௫ கொலோ ௧ ௨௩
18 எரே ௰௨ ௰௧
19 ௨ கொரி ௫ ௫ எபே ௧ ௰௪
20 தூக் ௨௧ ௨௮ எபே ௪ ௩௰
21 லூக் ௨௰ ௩௬
22 ௨ கொரி. ௫ ௩, ௪
23 ௨ கொரி ௫ ௭ எபி ௰௧ ௧
24 மத் ௨௰ ௨௨
யாக் ௪ ௩
25 சகரி ௰௨ ௰
எபே ௬ ௰௮
26 ௧ யோ ௫ ௰௪

ணுகிறபடியால்* ¹இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிந்துகொள்ளுகிறார்.

௨௮ ¶ அன்றியும் அவருடைய முன்யோசனையின்படி ²அழைக்கப்பட்டவர்களாய்ப் பராபரனில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மையாகும்படிக்கு ஏதுவாயிருக்கின்றது என்று அறிந்திருக்கிறோம்.

௨௯ அது எப்படியெனில், ³பராபரன், தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராய் இருக்கும்படிக்கு, ⁴தாம் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களையும் ⁵அவருடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு ⁶முன் குறித்தார்.

௩௰ அல்லாமலும் எவர்களை முன் குறித்தாரோ, ⁷அவர்களை அழைத்தும் இருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ, அவர்களை ⁸நீதிமான்களாக்கியும் இருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ ⁹அவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார்.

௩௧ இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லவேண்டும்? ¹⁰பராபரன் நம்முடைய பங்கிலிருக்க நமக்கு விரோதமாயிருப்பவன் எவன்?

௩௨ ¹¹அவர் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் ¹²நம்மெல்லாருக்காகவும் அவரையே ஒப்புக்கொடுத்திருக்க, அவரோடேகூட மற்ற யாவையும் நமக்கு அநுக்கிரகம்பண்ணாமல் இருப்பாரா?

௩௩ பராபரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்மேல் யார் குற்றம் சாற்றலாம்? ¹³பராபரனே (அவர்களை) நீதிமான்களாக்குகிறவர்.

௩௪ ¹⁴யார் (அவர்களை) ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கலாம்? கிறிஸ்துவே (அவர்களுக்காக) மரித்தார்; மேலும் எழுந்தவராயும் இருக்கிறார், அதுவுமல்லாமல் ¹⁵அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலிருந்து ¹⁶நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

௩௫ ¹⁷உமது நிமித்தம் நாம் எந்நேரமும் கொலைசெய்யப்படுகிறோம் என்றும் அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்றும் எழுதியிருக்கிறபடியே இருந்தும்,

௩௬ நம்மைக் கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யாவன்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பப்படுதலோ, பசியோ, நிருவாணமோ, நாசமோசமோ, கட்கமோ,

௩௭ ¹⁸இவையெல்லாவற்றையும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே அதிகமாய்ச் செயங்கொள்ளுகிறோம்.

௩௮ மரணமானாலும் சீவனானாலும், தேவதூதர்களானாலும் ¹⁹அதிகாரிகளானாலும் வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும்,

௩௯ உயர்வானாலும் தாழ்வானாலும், வேறொரு சிருஷ்டியானாலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் விளங்கிய பராபரனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

௯. அதிகாரம்.

௧ பவுல் யூதர்களைக்குறித்துத் துக்கித்தது. ௭ ஆபிரகாமின் வித்தெல்லாம் வாக்குத்தத்தத்தின் புத்திரரல்லவென்பது. ௰௫ பராபரன் தமக்கு இஷ்டமானவர்கள்மேலே இரக்கம் வைக்கிறாரென்பது. ௨௧ குயவன் களிமண்ணினாலே தனக்கு இஷ்டமான பாண்டங்களைச் செய்கிறானென்பது. ௨௫ அஞ்ஞானிகள் சுதந்தரத்துக்குள்ளாகி யூதர்கள் புறம்பாக்கப்பட்டதை முன் அறிவிக்கப்பட்டதென்பது. ௩௨ யூதர்கள் விசுவாசத்தினாலே உண்டாகும் நீதியை அங்கிகாரம்பண்ணாததின் முகாந்தரம் இன்னதென்பது.

---

* அல்லது பண்ணுகிறார் என்று

1 ௧ நாளா ௨௮. ௯. சங் ௭. ௯. எரே ௰௧. ௨௰. ௰௭. ௰. ௨௰. ௰௨. அப் ௧. ௨௪. ௧ தெச ௨. ௪. வெளி. ௨. ௨௩.
2 உரோ ௯. ௰௧, ௨௩, ௨௪.
3 கொலோ ௧. ௰௫. ௰௮. எபி ௧. ௬. வெளி ௧. ௫.
4 ௨ மோ ௩௩. ௰௨. ௰௭. சங் ௧. ௬. எரே ௧. ௫. மத் ௭. ௨௩. உரோ ௰௧. ௨. ௨ தீமோ ௨. ௰௯. ௧ பே ௧. ௨.
5 யோவா ௰௭. ௨௨. ௨ கொரி ௩. ௰௮. பிலி ௩. ௨௧. ௧ யோ ௩. ௨.
6 எபே ௧. ௫. ௰௧.
7 உரோ ௧. ௬. ௯. ௨௪. எபே ௪. ௪. எபி ௯. ௰௫. ௧ பே ௨. ௯.
8 ௧ கொரி. ௬. ௰௧.
9 யோவா ௰௭. ௨௨. எபே ௨. ௬.
10 ௪ மோ ௰௪. ௯. சங் ௰௮. ௬.
11 உரோ ௫. ௬, ௰.
12 உரோ ௪. ௨௫.
13 ஏசா ௫௰. ௮, ௯. வெளி ௰௨. ௰, ௰௧.
14 யோபு ௩௪. ௨௯.
15 மாற் ௰௬. ௰௯. கொலோ ௩. ௧. எபி ௧. ௩. ௮. ௧. ௰௨. ௨. ௧ பே ௩. ௨௨.

16 எபி ௭. ௨௫. ௯. ௨௪. ௧ யோ ௨. ௧.—17 சங் ௪௪. ௨௨. ௧ கொரி ௰௫. ௩௰, ௩௧. ௨ கொரி ௪. ௰௧.
18 ௧ கொரி ௰௫. ௫௭. ௨ கொரி ௨. ௰௪. ௧ யோ ௪. ௪. ௫. ௪. வெளி. ௰௨. ௰௧.
19 எபே ௧. ௨௧. கொலோ ௧. ௰௬. ௨. ௰௫. ௧ பே ௩. ௨௨.

சரீரசம்பந்தமான என் வம்சத்தாராகிய என் இனத்தாருக்காக [1]நானே கிறிஸ்துவினால் சபிக்கப்பட்டவனாகவேண்டும்* என்று இருந்து,

௨ [2]அவர்களைக்குறித்து மிகுந்த துக்கமும் இடைவிடாத மனநோவும் உள்ளவனாயிருக்கிறேன்.

௩ [3]இயேசுக்கிறிஸ்துவின்மேலே ஆணைப்படிக்கு (இப்படி) மெய்யாய்ச் சொல்லுகிறேன்; பரிசுத்த ஆவியின்மேலே ஆணைப்படிக்குப் பொய்சொல்லாமல்இருக்கிறேன், என் மனதுகூடச் சாட்சியாய் இருக்கின்றது.

௪ [4]அவர்கள் இஸ்ரவேல் சந்ததியாராய் இருக்கிறார்களே, [5]புத்திரசுவிகாரமும் [6]மகிமையும் [7]உடம்படிக்கைகளும்† [8]வேதப்பிரமாணமிடுதலும் [9]தேவ ஆராதனையும் [10]வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே.

௫ [11]பிதாக்கள் அவர்களுடையவர்களாய் இருக்கிறார்களே; மேலும் [12]சரீரத்தின்படிக்குக் கிறிஸ்து அவர்களில் உண்டானாரே, [13]அவர் என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவனானவர்.—ஆமென்.

௬ ¶ [14]பராபரனுடைய வசனம் அவமாய்ப்போயிற்று என்றுசொல்லக்கூடாது; என்னத்தினாலென்றால் [15]இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலர் அல்லவே.

௭ அன்றியும் [16]அவர்கள் ஆபிரகாமின் சந்ததியானாலும் எல்லாரும் புத்திரரும் அல்லவே; [17]ஈசாக்கினாலே உனக்குச் சந்ததி உண்டாகுமென்று சொல்லியிருக்கின்றதே.

௮ இதன் பொருள் என்னவென்றால், சரீரமுறைமையின்படி புத்திரரானவர்கள் பராபரனுடைய புத்திரர் அல்ல, [18]வாக்குத்தத்தத்தினாலே குறிக்கப்பட்ட புத்திரரே (அப்படிப்பட்ட) சந்ததி என்று எண்ணப்படுகிறார்கள்.

௯ அந்த வாக்குத்தத்தமான வார்த்தைகளாவன: [19]இக்காலத்திலே வருவேன்; அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பவைகளே.

௰ இவைமாத்திரமல்ல, நம்முடைய முன்னோராகிய ஈசாக்கென்னும் ஒருவனாலே கருப்பவதியான [20]இரேபேக்காளும், அதற்குச் சாட்சி; எப்படியென்றால்,

௰௧ அவளுடைய பிள்ளைகள் பிறவாமலும் நன்மைதீமை ஒன்றும் செய்யாமலும் இருந்தகாலத்திலே, [21]மூத்தவன்‡ இளையவனுக்கு§ ஊழியம்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது.

௰௨ அப்படிப்போல, [22]யாக்கோபின்மேல் அன்பாயிருந்து ஏசாவைப் பகைக்கிறேன் என்றும் எழுதியிருக்கின்றது.

௰௩ பராபரனுடைய சித்தம் தெரிந்துகொண[illegible]படியே இருந்து, கிரியைகளினாலே அல்ல, [23]அழைக்கிறவராலே ஆகும்படிக்கு அப்படிச் சொல்லியிருக்கின்றது.

௰௪ ¶ ஆகையால் நாம் என்ன சொல்லலாம்? [24]பராபரனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? அப்படி ஒருக்காலும் சொல்லக்கூடாது; மோசேயுடனே அவர் சொன்னதாவது:

௰௫ [25]எவன்மேல் தயையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் தயையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்றாரே.

௰௬ ஆகையால் மனிதர் விரும்புகிறதினாலும் ஓடுகிறதினாலும் அல்ல, பராபரனுடைய தயையினாலே ஆயிருக்கின்றது.

கி. பி. ௯௰.

1 ௨ மோ ௩௨. ௩௨
* அல்லது கிறிஸ்துவிலிருந்து விலக்க
2 ௨ ரோ ௰ ௧
3 ௨ ரோ ௧ ௯ ௨ கொரி ௧ ௨௩ ௰௧ ௩௧ ௰௨ ௰௯ கலா ௧ ௨௰ பிலி ௧ ௮ ௧ தீமோ ௨ ௭
4 ௫ மோ ௭ ௬
5 ௨ மோ ௪ ௨௨ ௫ மோ ௰௪ ௧ எரே ௩௧ ௯
6 ௧ சாமு ௪ ௨௧ ௧ இரா ௮ ௰௧ சங் ௬௩ ௨ ௭௮ ௬௧
7 அப ௩. ௨௫ எபி ௮ ௮,௯,௰
† அல்லது ஏற்பாடுகளும்
8 சங் ௱௪௭ ௰௯
9 எபி ௯ ௧
10 அப ௰௩ ௩௨ ௨ ரோ ௩ ௨ எபே ௨ ௰௨
11 ௫ மோ ௰ ௰௫ ௨ ரோ ௰௧ ௨௮.
12 லூக் ௩ ௨௩ ௨ ரோ ௧ ௩
13 எரே ௨௩ ௬ யோவா ௧ ௧ அப ௨௰ ௨௮ எபி ௧ ௮ ௧ யோ. ௫ ௨௰
14 ௪ மோ ௨௩ ௰௯. ௨ ரோ ௩. ௩
15 யோவா ௮ ௩௯ ௨ ரோ ௨ ௨௮ ௨௯ ௪ ௰௨, ௰௬ கலா ௬ ௰௬
16 கலா ௪ ௨௩
17 ௧ மோ ௨௧ ௰௨ எபி ௰௧. ௰௮
18 கலா ௪ ௨௮
19 ௧ மோ ௰௮ ௰ ௰௪
20 ௧ மோ ௨௫ ௨௧
21 ௧ மோ ௨௫ ௨௩

---

‡ அல்லது பெரியவன் —§ அல்லது சிறியவனுக்கு —22 மல்கி ௧ ௨,௩. ௫ மோ. ௨௧ ௰௫ வாக் ௰௩ ௨௪ மத் ௰௩ ௰௬ லூக் ௰௪ ௨௬ யோவா ௰௨ ௨௫ —23 ௨ ரோ ௪ ௰௭ அ ௨௮ —24 ௫ மோ ௩௨ ௪ ௨ நாளா ௰௯ ௭ யோபு ௮ ௩ ௩௪ ௰ சங் ௯௨ ௰௫ —25 ௨ மோ ௩௩ ௰௯

4702 1845

௰௭ [1]பின்னும் வேதத்திலே பார்வோனுடனே அவர் சொன்னதாவது: [2]உன்னிடத்தில் என்னுடைய வல்லமையைக் காண்பிக்கும் பொருட்டாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்பொருட்டாகவும் உன்னை நிலைநிற்கப்பண்ணினேன் என்றார்.

௰௮ ஆதலால் அவர் தமது இஷ்டத்தின்படி ஒருவனுக்குத் தயையாயிருக்கிறார்; தமது இஷ்டத்தின்படி மற்றொருவனைக் கடினப்படுத்துகிறார்.

௰௯ ¶ இப்படியானால் ஏன் அவர் குற்றம் பிடிக்கிறார்? [3]அவருடைய சித்தத்திற்கு யாவன் எதிர்நிற்பானென்று என்னுடனே சொல்வாய்.

௨௰ ஆ மனிதனே, பராபரனுக்கு எதிராய்த் தர்க்கிக்கிற* நீ யாவன்? [4]உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, நீ ஏன் என்னை இப்படி உண்டாக்கினாயென்று சொல்லுமா?

௨௧ அல்லது மிதியிட்ட களிமண்ணினாலே குயவன் [5]ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்திற்கும், மற்றொன்றைக் கனஈனமான காரியத்திற்கும்பண்ணும்படி, மண்ணின்மேல் [6]அதிகாரமுள்ளவன் அல்லவா?

௨௨ ஆனதால் பராபரன் தமது கோபத்தைக் காண்பிக்கவும் தமது வல்லமையைத்தெரியப்படுத்தவும் சித்தமாய், [7]அழிவுக்குத் தகுதியான† கோபாக்கினைப் [8]பாத்திரங்கள்மேலே மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமை வைத்துக்கொண்டதும் அல்லாமல்,

௨௩ [9]தாம் மகிமைக்காக எத்தனமாக்கின தயாபாத்திரங்கள்மேலே [10]தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தச் சித்தமாய், அப்படிப் பொறுத்துக்கொண்டால் (நீ எப்படித் தர்க்கிக்கலாம்?)

௨௪ அப்படிப்பட்டவர்கள் ஆகும்படி அவர் [11]யூதரில்மாத்திரம் அல்ல, புறத்தேசத்தாரிலுமிருந்து நம்மை அழைத்தார்.

௨௫ அந்தப்படி ஓசேயாவின் புத்தகத்திலே அவர் சொல்லுகிறதாவது: [12]எனக்குச் சனங்கள் அல்லாதவர்களை என்னுடைய சனங்கள் என்றும் சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் அழைப்பேன்.

௨௬ [13]நீங்கள் என்னுடைய சனங்கள் அல்லவென்று தங்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே, அவர்கள் சீவனுள்ள பராபரனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள் என்கிறார்.

௨௭ அல்லாமலும் ஏசாயா என்பவன் இஸ்ரவேலைக்குறித்துக் கூப்பிடுகிறதாவது: [14]இஸ்ரவேல் சந்ததியார் சமுத்திரத்தின் மணலைப்போலப் பெருக்கமாயிருந்தும் [15]மீதியான சிலமாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்.

௨௮ நீதியோடே சீக்கிரமாய்க் கர்த்தா காரியத்தைத்‡ தீர்த்து நிறைவேற்றுவார்; [16]சீக்கிரமாகவே அவர் காரியத்தைப் பூமியிலே தீர்த்துப்போடுவார் என்றான்.

௨௯ அல்லாமலும் அதற்கு முன்னே ஏசாயா சொன்னது: [17]சேனைகளையுடைய பராபரன் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வையாதிருந்தாரானால் [18]நாம் சோதோமைப்போலாகிக் கொமோராவுக்கு ஒத்திருப்போம் என்றான்.

௩௰ ¶ இவைகளின் பொருள் என்ன ஆயிற்று என்று கேட்டால், [19]நீதியைத் தேடாமலிருந்த புறத்தேசத்தார் [20]விசுவாசத்தினாலேவருகிற நீதியையே பெற்றுக்கொண்டார்கள்.

௩௧ [21]நியாயப்பிரமாணத்தினாலே நீதியைத் தேடின இஸ்ரவேலரோ விசுவாசத்தினால் அல்ல,

௩௨ நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே அதைத்தே

கி. பி. ௬௰.

[1] கலா ௩ ௮, ௨௨
[2] ௨ மோ ௯ ௰௬
[3] ௨ நாளா ௨௰ ௬ யோபு ௯ ௰௨ ௨௩ ௰௩ தானி ௪ ௩௫
* அல்லது மறுமொழி சொல்லுகிற, யோபு ௩௩. ௰௩
[4] ஏசா ௨௯ ௰௬ ௪௫ ௯ ௬௪ ௮
[5] ௨ தீமோ. ௨ ௨௰
[6] வாக். ௰௬. ௪ எரே ௰௮ ௬
[7] ௧ பே ௨ ௮ யூதா ௪
† அல்லது செய்யப்பட்ட
[8] ௧ தெச ௫ ௯
[9] உரோ ௮ ௨௮. ௨௯ ௩௰
[10] உரோ ௨ ௪ எபே ௧ ௭ கொலோ ௧. ௨௭
[11] உரோ ௩ ௨௯
[12] ஓசே. ௨. ௨௩ ௧ பே ௨ ௰
[13] ஓசே ௧ ௰
[14] ஏசா ௰ ௨௨, ௨௩
[15] உரோ ௰௧ ௫
‡ அல்லது கணக்கை
[16] ஏசா ௨௮ ௨௨
[17] ஏசா ௧ ௯ புலம் ௩ ௨௨
[18] ஏசா ௰௩ ௰௯ எரே ௫௰ ௪௰
[19] உரோ ௪ ௰௧ ௰ ௨௰.
[20] உரோ ௧ ௰௭.
[21] உரோ ௰. ௨ ௰௧. ௭.

டினபடியால், நியாயப்பிரமாணத்திலே [1]நீதியை அடையவில்லை.

௩௩ [2]இதோ, விழுதற்கான கல்லையும், இலச்சை அடைவதற்கான கல்மலையையும் சீயோனிலே வைக்கிறேன்; [3]அதினிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை* என்று எழுதியிருக்கிறதின்படி [4]அவர்கள் விழுதற்கான அக்கல்லின்மேல் விழுந்தார்கள்.

௰. அதிகாரம்.

௧ நியாயப்பிரமாணத்தின் நீதிக்கும் விசுவாசத்தின் நீதிக்கும் வித்தியாசத்தையும், ௰௧ விசுவாசிக்கிறவனும் வெட்கப்படானென்றும், ௰௮ அஞ்ஞானிகளும் வேதவசனத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பார்கள் என்றும் சொல்லியது ௰௯ இஸ்ரவேல் சனங்கள் இந்தச் சங்கதிகளை அறியாதவர்கள் அல்லவென்பது

சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்று நான் என் இருதயத்தோடே மிகவும் விரும்பி, பராபரனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன்.

௨ [5]அவர்கள் பராபரனைக்குறித்து வைராக்கியமாயிருக்கிறார்கள் என்று நானும் அவர்களுக்குச் சாட்சி சொல்லுகிறேன்.

௩ அந்த வைராக்கியம் அறிவுக்கு ஏற்றதல்ல, எப்படியென்றால், [6]பராபரனால் வருகிற நீதியை அவர்கள் அறியாமல் [7]தங்கள் சுய நீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால், அவரால் வருகிற நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.

௪ விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் [8]கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறாரே.

௫ ¶ மேலும் மோசே நியாயப்பிரமாணத்தினால்வருகிற நீதியைக் குறித்து [9]இவைகளைச் செய்கிற மனிதன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதினார்.

௬ விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிரமாணமோ சொல்லுகிறதாவது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படிக்கு வானத்துக்கு ஏறிப்போபவன் யாவன்?

௭ கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படிக்குப் பாதாளத்தில் இறங்கிப்போபவன் யாவன் என்று [10]உன் இருதயத்திலே நினையாதிருப்பாயாக என்பதும் அல்லாமல்,

௮ அது பின்னும் சொல்லுகிறதாவது: [11]இந்தச் சங்கதி உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கின்றது என்று சொல்லுகின்றது; அந்தச் சங்கதி நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் சங்கதிதான்.

௯ என்னவென்றால் நீதிமான்களாக்கப்படுவதற்கு இருதயத்தோடே விசுவாசிக்கவும், இரட்சிக்கப்படுவதற்கு [12]வாயினாலே அறிக்கையிடவும் வேண்டுவதால்,

௰ நீ உன் வாயினாலே கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிட்டு, பராபரன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பப்பண்ணினார் என்று உன் இருதயத்தோடே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

௰௧ அந்தப்படி [13]அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதமும் சொல்லுகின்றது.

௰௨ ¶ அன்றியும் [14]எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்காகவும் [15]ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறபடியால் [16]யூதருக்கும் கிரேக்கருக்கும் வித்தியாசமே இல்லை.

௰௩ ஆதலால் [17]கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்பவன் எவனோ, [18]அவன் இரட்சிக்கப்படுவான்.

௰௪ ¶ அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி அவரை விசுவாசிப்பார்கள்? மேலும் [19]பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

கி. பி. ௬௰.

1 கலா ௫ ௪
2 சங் ௱௰௮ ௨௨ ஏசா ௮ ௰௪ ௨௮ ௰௬ மத் ௨௧ ௪௨ ௧ பே ௨, ௬, ௭, ௮
3 உரோ ௰ ௰௪
* அல்லது கலக்கப்படுவதில்லை
4 லூக் ௨ ௩௪ ௧ கொரி ௧ ௨௩
5 அப் ௨௧ ௨௰ ௨௨ ௩ கலா ௧ ௰௪ ௪ ௰௭ உரோ ௯ ௩௧
6 உரோ ௧ ௰௭ ௯ ௩௰
7 பிலி ௩. ௯
8 மத் ௫ ௰௭ கலா. ௩ ௨௪
9 ௩ மோ ௰௮ ௫ நெகே ௯ ௨௯ எசே ௨௰ ௰௧, ௰௩, ௨௧ கலா ௩ ௰௨
10 ௫ மோ ௩௰ ௰௨, ௰௩
11 ௫ மோ ௩௰ ௰௪
12 மத் ௰ ௩௨ லூக் ௰௨ ௮ அப் ௮ ௩௭
13 ஏசா ௨௮ ௰௬ சங் ௨௫ எரே ௰௭ ௭ உரோ. ௯ ௩௩
14 அப் ௰ ௩௪ உரோ ௩ ௨௨ ௧ தீமோ ௨ ௫
15 எபே ௧ ௭ ௨ ௪, ௭
16 அப். ௰௫ ௯ உரோ ௩ ௨௨ கலா ௩ ௨௮
17 அப் ௯ ௰௪
18 யோவே. ௨ ௩௨ அப் ௨ ௨௧
19 தீத ௧ ௩

௰௫ மேலும், ஆ சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிககிறவர்களுடைய [1]பாதங்கள மிகவும் அழகானவைகள் என்று எழுதியிருக்கிறபடி சிலர் அனுபபபபடாவிட்டால், எபபடிப பிரசஙகம்பண்ணுவாாகள்?

௰௬ ஆனாலும் [2]இநதச சுவிசேஷததிற்கு எலலாரும கீழ்பபடிய இல்லை; அதைககுறிதது ஏசாயா சொன்னதாவது. [3]கர்த்தாவே, நாங்கள்* பிரசங்கம்பண்ணுகிறதை† யாவன் விசுவாசித்தான் என்றான்?

௰௭ ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி பராபரனுடைய வசனத்தினாலே வருகின்றது.

௰௮ இபபடியிருக்க நான் விசாரிக்கிறதென்னவென்றால், அவர்கள் கேள்விபபடவில்லையா? [4]அவைகளின் தொனி பூமி எங்கும் சென்றது; [5]அவைகளின் வசனங்கள் பூசசக்கரக கடைசிவரைககும் புறபபட்டன என்பதின்படி, அவாகள் மெய்யாய்க் கேள்விபபட்டாாகளே.

௰௯ பின்னும் நான் விசாரிக்கிறது என்னவெனில், இஸரவேலா அறியவில்லையோ? (அறியாமல் இருககமாட்டார்கள; என்னததினாலென்றால்) முதலாவது மோசே சொன்னது: [6]எனக்குச் சனங்கள் அல்லாதவர்களைக கொண்டு நான் உங்களுக்குப பொறாமை உண்டாககுவேன்; [7]புத்தியீனமுள்ள சனஙகளாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் என்றான்.

௨௰ அல்லாமலும் ஏசாயா தயிரியமாய்ச் சொன்னது: [8]என்னைத் தேடாதவர்களாலே கண்டு அறியபபட்டேன்; என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்றான்.

௨௰௧ இஸ்ரவேலரைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது: கீழ்பபடியாதவர்களுமாய் விரோதம் பேசுகிறவர்களுமாய் இருக்கிற சனங்களிடத்திற்கு [9]முழுநாளும் என் கைகளை நீட்டினேன் என்பதே.

௰௧. அதிகாரம்.

௧ பராபரன இஸ்ரவேலரெல்லாரையும் தள்ளவில்லையென்றும், ௭ சிலர் தெரிந்துகொள்ளப்பட்டு, மற்றவாகள கடினபபட்டுப போனாாகளெனறும், ௰௧ அவாகள் குணப்படுவாாகளென்ற நம்பிக்கை உண்டெனறும, ௰௮ அவர்களமேல் அஞ்ஞானிகள பெருமைபாராட்டக்கூடாதென்றும், ௨௬ யூதர்களும ரட்சிப்புக்கு வந்து சேருவார்களென்றும, ௩௩ பராபரனுடைய செயகைகள் அளவறுக்கக்கூடாதெனறும் காட்டியது

இப்படியிருக்கப் [10]பராபரன் தம்முடைய சனங்களைத் தள்ளிவிட்டாரா என்று கேட்டால், அப்படி அவர் செய்யவே இல்லை.

௨ [11]நானும் ஆபிரகாமின் சந்ததியாயும், பென்யமீன் கோத்திரத்தானாயும் இருக்கிற இஸ்ரவேலனாயிருககிறேனே; [12]பராபரன் தாம் முன் அறிந்துகொண்ட தம்முடைய சனங்களைத் தள்ளவே இல்லை; எலியாவைக்குறித்து‡ வேதம் சொல்லுகிறதை அறியீர்களா?

௩ அவன் பராபரனைநோக்கி, கர்த்தாவே, [13]உமமுடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பீடங்களை இடித்துப் போட்டார்கள்.

௪ நான்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாஙகத் தேடுகிறார்கள் என்று இஸ்ரவேலரைககுறித்து முறையிட்டபொழுது, அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்னவென்றால், பாகாலுக்குமுன்பாக முழங்காற்படியிடாத [14]ஏழாயிரம் பெயரை எனக்காக மீதியாய் வைத்தேன் என்பதே.

௫ அந்தபபடி இக்காலத்திலேயும் [15]கிருபையால் தெரிந்துகொள்ளப்பட்ட மீதி உண்டாயிருக்கின்றது.

௬ [16]அது கிருபையினால் உண்டாயிருக்கிறபடியால், அது கிரியைகளினாலே ஆகவில்லை; அப்படி அல்லவென்றால் கிருபையானது கிருபையாயிராது; அன்றியும் அது கிரியைகளினால் உண்டாயிருந்

இ. பி ௯௰.

[1] ஏசா. ௫௨. ௭ நாகூ. ௧ ௰௫

[2] உரோ ௩ ௩. எபி ௪ ௨.

[3] ஏசா ௫௩ ௧ யோவா ௰௨. ௩௮

* இபே க்கு, எங்களைக்கேட்டு

† அலலது எங்கள கூறுதலை

[4] சங ௰௯ ௪ மத் ௨௪ ௰௪ ௨௮ ௰௯ மாற் ௰௬ ௰௫ கொலோ க ௬, ௨௩

[5] ௧ இரா ௰௮ ௰ மத ௪ ௮

[6] ௫ மோ ௩௨ ௨௧, உரோ ௰௧ ௰௧

[7] தீத் ௩ ௩

[8] ஏசா ௬௫ ௧ உரோ ௯ ௩௰

[9] ஏசா ௬௫ ௨.

[10] ௧ சாமு ௰௨ ௨௨ எரே ௩௧ ௩௭

[11] ௨ கொரி ௰௧ ௨௨ பிலி ௩ ௫

[12] உரோ ௮ ௨௯

‡ இபேக்கு, எலியாவின தீர்க்கதரிசனத்தில

[13] ௧ இரா ௰௯ ௰௪

[14] ௧ இரா ௰௯ ௰௮

[15] உரோ ௯ ௨௭

[16] உரோ ௪ ௪, ௫ கலா ௫ ௪ ௫ மோ ௯ ௪, ௫

தால், அது கிருபையினால் இராது; அல்லவென்றால், கிரியையானது கிரியையல்ல.

௭ ¶ இதினாலே என்ன தோன்றுகிறதெனில், [1]இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்தார்கள்; மற்றவர்கள் இன்றைத்தினம்வரைக்கும் கடினமான* இருதயமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

௮ [2]பராபரன் கனநித்திரையுள்ள† ஆவியையும், [3]காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் அவர்களுக்குக் கொடுத்தாரென்று எழுதியிருக்கிறபிரகாரமாக அப்படி இருக்கிறார்கள்.

௯ தாவீதும் சொல்லுகிறதாவது: [4]அவர்களுடைய உணவிடம் அவர்களுக்குக் கண்ணியாயும் வலையாயும் விழுதற்கான கல்லாயும் பதில்பெறுதற்கு ஏதுவாயும் இருக்கக்கடவது.

௰ [5]காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக்கடவது; அவர்களுடைய முதுகு எப்பொழுதும் குனியும்படி செய்யுமென்று சொல்லியிருக்கிறான்.

௰௧ ¶ இப்படியிருக்க அழிந்துபோகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்டால், அப்படியல்ல அவர்களுக்குள்ளே எரிச்சலை எழுப்புகிறதற்காக [6]அவர்கள் விழுந்ததினாலே புறத்தேசத்தாருக்கு இரட்சிப்புக் கிடைத்தது.

௰௨ அவர்கள் விழுந்தது உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்கள் குறைவானது‡ புறத்தேசத்தாருக்கு ஐசுவரியமுமானதாயிருக்க அவர்கள் நிறைவானால் மிகவும் அதிகமாய் அப்படியாகும் அல்லவோ?

௰௩ [7]புறத்தேசத்தாருக்காக நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே புறத்தேசத்தாராகிய உங்களுடனே பேசுகிறேன்.

௰௪ அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் மரித்தோரிலிருந்து சீவன் உண்டானதுபோல இருக்கும் அல்லவோ?

௰௫ ஆதலால் நான் எப்படியும் [8]என் இனத்தாரை எவி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று என் ஊழியத்தை மேன்மைபாராட்டுகிறேன்

௰௬ ¶ [9]மேலும் முதல் விளைச்சல் பரிசுத்தமாயிருக்க, அம்பாரமும் அப்படியே இருக்கின்றது; வேரானது பரிசுத்தமாயிருக்க, கிளைகளும் அப்படியே இருக்கின்றன.

௰௭ [10]சில கிளைகள் ஒடித்துத் தள்ளப்பட்டதுமல்லாமல் காட்டு ஒலிவமரமாகிய [11]நீ அவைகளுடைய இடத்திலே§ ஒட்டவைக்கப்பட்டு ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்திற்கும் உடன்பங்காளியாயிருக்க,

௰௮ [12]நீ அந்தக் கிளைகளுக்கு எதிராயப் பெருமைபாராட்டாதிருப்பாயாக; பாராட்டுவாயானால் நீ வேரைச் சுமக்காமல், வேரே உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.

௰௯ நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் ஒடித்துப்போடப்பட்டன என்று நீ சொல்லுகிறாய்.

௨௰ நல்லது அவிசுவாசத்தினாலே அவைகள் ஒடித்துத் தள்ளப்பட்டன; நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; [13]இறுமாப்பைக் காணபியாதிருப்பாயாக.

௨௧ சுபாவத்தின்படி கிளைகளானவைகளைப் பராபரன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தள்ளாதபடிக்குப் [14]பயந்திருப்பாயாக.

௨௨ ¶ மேலும் பராபரனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்த்துக்கொள்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும் உன்னிடத்திலே தயவையுமே பார்; [15]அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயாக; இல்லாவிட்டால் [16]நீயும் வெட்டுண்டுபோவாய்.

கி. பி. ௬௰.

[1] உரோ ௯. ௩௧, ௰. ௩

* அல்லது குருடான, ௨ கொரி ௩. ௰௪

[2] ஏசா ௨௯. ௰

† அல்லது கிலேசமுள்ள

[3] உபா ௨௯. ௪, ஏசா ௬. ௯, எரே ௫. ௨௧, எசே ௰௨. ௨, மத் ௰௩. ௰௪, யோவா ௰௨. ௪௰, அப் ௨௮. ௨௬, ௨௭

[4] சங் ௬௯. ௨௨

[5] சங் ௬௯. ௨௩

[6] அப் ௰௩. ௪௬, ௰௮. ௬, ௨௨. ௰௮, ௨௧, ௨௮. ௨௪, ௨௮, உரோ ௰. ௰௯

‡ அல்லது அழிவானது

[7] அப் ௯. ௰௫, ௰௩. ௨, ௨௨. ௨௧, உரோ ௰௫. ௰௬, கலா ௧. ௰௬, ௨. ௭, ௮, ௯, எபே ௩. ௮, ௧ தீமோ ௨. ௭, ௨ தீமோ ௧. ௰௧

[8] ௧ கொரி ௭. ௰௬, ௯. ௨௨, ௧ தீமோ ௪. ௰௬, யாக் ௫. ௨௰

[9] ௩ மோ ௨௩. ௰, ௪ மோ ௰௫. ௰௮, ௰௯, ௨௰, ௨௧

[10] எரே ௰௧. ௰௬

[11] அப் ௨. ௩௯, எபே ௨. ௰௨, ௰௩

§ அல்லது அவைகளுக்குள்

[12] ௧ கொரி ௰. ௰௨

[13] உரோ ௰௨. ௰௬

[14] நீதி ௨௮. ௰௪, ஏசா ௬௬. ௨, பிலி ௨. ௰௨

[15] ௧ கொரி ௰௫. ௨, எபி ௩. ௬, ௰௪

[16] யோவா ௰௫.

௨௩ அன்றியும் [1]அவர்களும் அவிசுவாசத்திலே நிலைத்திராவிட்டால் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குப் பராபரன் வல்லவராயிருக்கிறாரே.

௨௪ அன்றியும் நீ சுபாவத்தின்படி காட்டு ஒலிவாகிய மரத்திலிருந்து வெட்டப்பட்டு உன் சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருக்க, மிகவும் அதிகமாய்ச் சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவார்கள் அல்லவா?

௨௫ ¶ ஆதலால் சகோதரரே, [2]நீங்கள் உங்கள் சுயபுத்தியிலே சாயாதபடிக்கு, ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்று இருக்கிறேன்; என்னவெனில், [3]புறத்தேசத்தார் நிறைவாய்ப் பிரவேசிக்குமளவும், இஸ்ரவேலரில் [4]ஒரு பங்குக்குக் கடினமான* மனது உண்டாயிருக்கும்.

௨௬ [5]பின்பு மீட்பர் சீயோனுக்கு வந்து, அக்கிரமத்தை இயாக்கோபிலிருந்து நீக்குவார் என்றும்,

௨௭ நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்பொழுது [6]இதுவே நான் அவர்களுடனே பண்ணும் உடம்படிக்கையென்றும் எழுதியிருக்கிறபடியே, இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.

௨௮ சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்.

௨௯ தெரிந்துகொள்ளுதலைக்குறித்துப் பராபரன் கிருபைகொடுத்தலும் அழைத்தலும் [7]மாறாதவைகளானபடியால், அவர்கள் பிதாக்களின்நிமித்தம் [8]அன்புகூரப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

௩௰ [9]ஆதலால் நீங்கள் முற்காலத்திலே பராபரனுக்குக் கீழ்ப்படியாதிருந்து† இப்பொழுது அவர்களுடைய அவிசுவாசத்தினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்து,‡ (பின்பு) உங்களுக்குண்டான இரக்கத்தினாலே (ஏவப்பட்டு) இரக்கம்பெறுவார்கள்.

௩௧ எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாகப் [10]பராபரன் எல்லாரையும் அவிசுவாசத்திற்குள்ளே அடைத்துப்போட்டபடியால்§ அப்படியேயாம்.

௩௨ ¶ ஆ பராபரனுடைய ஞானம் அறிவு என்பவைகளின் சம்பூரணம் மிகுந்த ஆழமுள்ளதாயிருக்கின்றது.

௩௩ [11]அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவறுக்கப்படாதவைகள்; அவருடைய [12]நெறிகள் ஆராய்ந்துபார்க்கப்படாதவைகளாய் இருக்கின்றன, [13]கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் எவன்?

௩௪ [14]அல்லது அவருக்கு உசாவுதுணையாய் இருந்தவன் எவன்?

௩௫ [15]அல்லது தனக்குப் பதில்கொடுக்கும்படிக்கு அவருக்கு முந்தி ஒன்றைக் கொடுத்தவன் எவன்?

௩௬ [16]சகலமும் அவராலும் அவர்மூலமாயும் அவருக்காகவும் இருக்கின்றன, [17]அவருக்கே என்றென்றைக்கும் புகழ்ச்சி உண்டாகக்கடவது.—ஆமென்.

௰௨. அதிகாரம்.

௧ பராபரனுடைய இரக்கங்களை ௩ எவனும் பெருமைபாராட்டாமல், தன் தன் நிலைமையை அறிந்து நடக்கவும், ௬ அவரைப் பிரியப்படுத்தும்படி நம்மை ஏவவும், ௯ அன்புமுதலிய நற்குணங்கள் உள்ளவர்களாயிருக்கவும், ௰௯ குரோதத்தை நீக்கவும் வேண்டுமென்பது.

அப்படியிருக்கச் சகோதரரே, [18]நீங்கள் புத்தியுள்ள ஆராதனை செய்ய, [19]உங்கள் சரீரங்களைச் சீவனுமாய், பரிசுத்தமுமாய், பராபரனுக்குப் பிரியமுமாயிருக்கிற [20]பலியாக நிறுத்தவேண்டும் என்று பராபரனுடைய இரக்கங்களின் நிமித்தம் [21]உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

௨ மேலும் [22]நீங்கள் இவ்வுலகத்

கி. பி. ௫௰.

1 ௨ கொரி ௩ ௰௬
2 உரோ ௰௨ ௰௬
3 லூக ௨௧ ௨௪ வெளி ௭ ௯
4 ௭ வச ௨ கொரி ௩, ௰௪
* அல்லது குருடான
5 ஏசா ௫௯ ௨௰ சங ௰௪ ௭
6 ஏசா ௨௭ ௯ எரே ௩௧ ௩௧ எபி ௮ ௮ ௰ ௰௬
7 ௪மோ ௨௩ ௰௯
8 ௫மோ ௭ ௮ ௯ ௫ ௰ ௰௫
9 எபே ௨ ௨ கொலோ ௩ ௭
† அல்லது பராபரனை விசுவாசியாதிருந்து
‡ அல்லது விசுவாசியாமல்
10 உரோ ௩ ௯ கலா ௩ ௨௨
§ அல்லது அடக்கி
11 சங ௩௬ ௬
12 யோபு ௰௧ ௭ ஏசா ௪௰ ௨௮
13 யோபு ௰௫ ௮ ஏசா ௪௰ ௰௩ எரே ௨௩ ௰௮ ௧ கொரி ௨ ௰௬
14 யோபு ௩௬ ௨௨
15 யோபு ௩௫ ௭ ௪௧ ௰௧
16 ௧ கொரி ௮ ௬ கொலோ ௧ ௰௬
17 கலா ௧ ௫ ௧ தீமோ ௧ ௰௭ ௨ தீமோ ௪ ௰௮ எபி ௰௩ ௨௧ ௧ பே ௫ ௰௧ ௨ பே ௩ ௰௮ யூதா ௨௫ வெளி ௧ ௬
18 ௧ பே ௨ ௫
19 சங ௫௰. ௰௩, ௰௪ உரோ ௬ ௰௩, ௰௬, ௰௯ ௧ கொரி ௬ ௰௩, ௨௰
20 எபி ௰ ௨௰
21 ௨ கொரி ௰. ௧
22 ௧ பே ௧ ௰௪ ௧ யோ ௨ ௰௫

திற்கு ஒபபாய் நடவாமல், [1]பராபரனுடைய நன்மையும் பிரியமும் நிறைவுமான சித்தம் இன்னதென்று நீங்கள் பகுத்து அறியத்தக்கதாக, [2]உங்கள் மனதைப புதிதாக்குதலினாலே மறுரூபமாய் நடந்துகொள்ளுஙகள்.

௩ ¶ அல்லாமலும் [3]எனக்குக் கொடுத்திருக்கிற கிருபையினாலே நான் இன்னும் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து [4]நினைக்கவேண்டியதற்கு மேலாக நினையாமல், [5]அவனவனுக்குப பராபரன் பஙகிட்ட விசுவாசம் எவ்வளவோ, அவ்வளவின்படி புத்தியாய்*நடககத்தக்கதாகத் (தனனைக்குறித்து நினைக்கவேண்டும்).

௪ அது எபபடியெனில் [6]ஒரே சரீரத்திலே நாம் அநேக அவயவஙகளை உடையவர்களாயிருககு, அவயவங்கள் யாவும் ஒரே தொழில இல்லாதவைகளாய் இருககிறது போல,

௫ [7]அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள்ளே ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவா அவயவங்களாய்,

௬ [8]நமக்குக் கொடுக்கபபட்ட கிருபையின்படியே [9]பலவித வரங்கள் உள்ளவர்களாயிருக்கிறோம், [10]அந்தப்படி தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவன விசுவாச அளவுக்கு ஏற்றதாக அபபடிச் செய்யக்கடவன்

௭ உதவிசெய்கிற வரத்தை உடையவன் உதவிசெய்கிறதிலே சாக்கிரதையாய்இருக்கக்கடவன்; [11]போதிக்கிறவன் போதிக்கிறதிலே சாக்கிரதையாய் இருக்கக்கடவன்.

௮ [12]புத்திசொல்லுகிறவன் புத்திசொலலுகிறதிலே சாககிரதையாய் இருக்கக்கடவன்; [13]தருமங்களைக் கொடுக்க† வேணடுபவன் கபடம் இல்லாமையாய்‡ அபபடிச் செய்யககடவன். [14]முதலாளியானவன் சாக்கிரதையுடனே இருக்கக்கடவன்; [15]இரக்கம்செயகிறவன உசசாகத்துடனே அபபடிச செய்யக்கடவன்.

௯ ¶ [16]உங்கள் அன்பு மாயமற்றதாய் இருபபதாக; [17]பொல்லாஙகானதை அருவருத்து, நன்மையில் ஒட்டிககொண்டிருபபீர்களாக.

௰ சகோதரசிநேகத்திலே§ ஒருவருக்கொருவர் [18]மிகவும் பட்சமாயிருஙகள; [19]கனம்பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முநதிககொள்ளுங்கள்.

௰௧ அலுவலில் நீங்கள் அசதியாயிருக்கக்கூடாது; உங்கள் ஆவியிலே தீபவளர்ச்சியைபபோல இருநது, கர்ததருக்கு ஊழியம்செய்யுஙகள்.

௰௨ [20]நம்பிக்கையிலே சநதோஷமாய் இருப்பீர்களாக; [21]உபத்திரவகாலததிலே பொறுமையாயிருங்கள்.

௰௩ [22]செபத்தில்உறுதியாய்த் தரித்திருங்கள், [23]வருத்தபபடுகிற பரிசுததவான்களுககு உதவிசெய்யுங்கள்; [24]அந்நியருக்கு உபசாரம்செய்கிறதை நாடுஙகள்.

௰௪ [25]உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வாதமே அன்றிச் சாபமிடாதிருபபீர்களாக.

௰௫ [26]சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷபபடுஙகள்; அழுகிறவாகளுடனே அழுங்கள்.

௰௬ [27]ஒருவருக்கொருவர் ஐக்க

கி. பி ௬௰.

1 எபே ௫. ௰, ௰௮ ௧ தெச ௪ ௩
2 எபே ௧ ௰௮ ௪ ௨௩ கொலோ ௧ ௨௧ ௨௨ ௩ ௯
3 உரோ ௧ ௫ ௰௫. ௧ கொரி ௩ ௰ ௰௫ ௰ கலா ௨ ௯ எபே ௩ ௨, ௭, ௮
4 லூக் ௨௫ ௨௭ பிர ௭ ௰௯ உரோ ௰௧ ௨௰
5 ௧ கொரி ௰௨ ௭, ௰௧ எபே ௪ ௭
* இரேக்கு, புத திககு
6 ௧ கொரி ௰௨ ௰௨ எபே ௪ ௰௬
7 ௧ கொரி ௰ ௰௭ ௰௨ ௨௰, ௨௭ எபே ௧ ௨௩ ௪ ௨௫
8 ௩ வச
9 ௧ கொரி ௰௨ ௪ ௧ பே ௪ ௰, ௰௧
10 அப ௰௧ ௨௭ ௧ கொரி ௰௨ ௰, ௨௮ ௰௩ ௨ ௰௪ ௧, ௬, ௨௯, ௩௧
11 அப ௰௩ ௧ கலா ௬ ௬ எபே ௪ ௰௧ ௧ தீமோ ௫ ௰௭
12 அப ௰௫ ௩௨ ௧ கொரி ௰௪ ௩
13 மத் ௬ ௧, ௨, ௩
† அலலது பகிாநது கொடுக்க
‡ அலலது தாராளமாய, ௨ கொரி ௮ ௨
14 அப ௨௰ ௨௮ ௧ தீமோ ௫ ௰௭ எபி ௰௩ ௭, ௨௪ ௧ பே ௫ ௨
15 ௨ கொரி ௯ ௭

---

16 ௧ தீமோ ௧ ௫ ௧ பே ௧. ௨௨ —17 சங் ௩௪ ௰௪ ௩௬ ௪ ௩௭ ௰ ஆமோ ௫ ௰௫ — § அலலது சகோதா சிநேகத்தோடே —18 எபி ௰௩ ௧ ௧ பே ௧ ௨௨ ௨ ௰௭ ௩ ௮ ௨ பே ௧ ௭ —19 பிலி ௨ ௩ ௧ பே ௫ ௫ —20 லூக் ௰ ௨௰ உரோ ௫. ௨ ௰௫. ௰௩ பிலி ௩ ௧ ௪ ௪ ௧ தெச ௫ ௰௬ எபி ௩ ௬ ௧ பே ௪ ௰௩ —21 லூக் ௨௧ ௰௯ ௧ தீமோ ௬ ௰௯ எபி ௰ ௩௬: ௰௨ ௧ யாக் ௧ ௪ ௫ ௭ ௧ பே ௨ ௰௩ ௨௰ —22 லூக் ௰௮ ௧ அப. ௨. ௪௨ ௰௨. ௫. எபே ௬ ௰௮. கொலோ ௪ ௨ ௧ தெச ௫. ௰௭ —23 ௧ கொரி ௰௬ ௧ ௨ கொரி ௯ ௧, ௰௨ எபி ௯ ௰. ௰௩ ௰௬ ௧ யோ ௩ ௰௭ —24 ௧ தீமோ ௩ ௨ தீத் ௧ ௮ எபி ௰௩ ௨ ௧ பே ௪ ௯ —25 மத் ௫ ௪௪ லூக் ௬ ௨௮ ௨௩ ௩௪ அப ௭ ௬௰. ௧ கொரி ௪ ௰௨ ௧ பே ௨ ௨௩ ௩ ௯ -26 ௧ கொரி ௰௨. ௨௬ -27 உரோ ௰௫ ௫ ௧ கொரி ௧. ௰ பிலி ௨. ௨ ௩ ௰௬ ௧ பே ௩ ௮

மான சிந்தையுள்ளவர்களாய் இருப்பீர்களாக; [1]மேன்மையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்.*

௰௭ ¶ [2]உங்கள் சுயபுத்தியில் சாயாதிருப்பீர்களாக; [3]யாவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; [4]எந்த மனிதருக்கும்முன்பாக யோக்கியமானவைகளை நடப்பியுங்கள்.

௰௮ [5]எல்லா மனிதரோடும் சமாதானமாய் இருக்கக்கூடுமானால், உங்களால் ஆனமட்டும் அப்படியே செய்யுங்கள்.

௰௯ பிரியமானவர்களே, [6]பழிவாங்குதல் எனக்கு ஏற்றது, நானே பதில் செய்வேனென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், [7]நீங்கள்தாமே பழிவாங்காமல் (அவருடைய) கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

௨௰ ஆதலால் [8]உன் சத்துருவுக்குப் பசி உண்டாயிருக்கும்பொழுது அவனுக்குப் போசனம் கொடு; அவனுக்குத் தாகம் உண்டாய் இருக்கும்பொழுது அவன் தாகத்தைத் தீர்ப்பாயாக; நீ இப்படிச்செய்தால் அவனுடைய தலையின்மேல் நெருப்புள்ள கரிகளைக் குவிப்பாய்.

௨௧ தீமையினாலே நீ செயிக்கப்படாமல், தீமையை நன்மையினாலே செயிப்பாயாக.

௰௩. அதிகாரம்.

௧ துரைத்தனத்தாருக்குச் செலுத்தவேண்டிய கீழ்ப்படிதல் முதலான கடமைகளைக் குறித்தது ௮ அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுமென்றும், ௰௩ பெருந்தீனி குடிமுதலிய பாவச்செய்கைகள் சுவிசேஷத்துக்கு ஒவ்வாதென்றும் காட்டியது

[9]அதிகாரம் உள்ளவர்கள் பராபரனாலே அன்றி இருக்கமாட்டார்கள்; [10]ஆதலால் எந்த மனிதனும் அதிகாரம் உடையவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; உண்டாயிருக்கிற அதிகாரிகள் பராபரனாலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.†

௨ [11]ஆனதால் அதிகாரம் உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறவன் பராபரனுடைய நியமத்துக்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத்தாமே ஆக்கினை வரப்பண்ணுகிறார்கள்.

௩ மேலும் துரைகளானவர்கள் நற்கிரியைகளுக்கு அல்ல துர்க்கிரியைகளுக்குப் பயங்கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்துக்குப் பயமில்லாதிருக்கவேண்டும் என்றிருந்தால், [12]நன்மை செய்வாயாக, அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாம்.

௪ உனக்கு நன்மை உண்டாகும்பொருட்டு அவன் பராபரனுடைய ஊழியக்காரனாயிருக்கிறான், நீ தீமைசெய்தால் பயம் கொள்வாயாக; கட்கத்தை அவன் வீணாய்ப் பிடிக்கவில்லை; பொல்லாங்கைச் செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயும் இருக்கிறானே.

௫ ஆகையால் [13]நீங்கள் (அவர்களுக்குக்) கீழ்ப்படியவேண்டியதாயிருக்கின்றது; கோபாக்கினையின் நிமித்தமாத்திரம் அல்ல, [14]மனச்சாட்சியின் நிமித்தமும் அப்படி இருக்கவேண்டும்.

௬ அதினாலே நீங்கள் (அவர்களுக்கு) வரிப்பணத்தையும் கொடுக்கிறீர்களே; அவர்கள் தங்கள் உத்தியோகத்தை இடைவிடாமல் பற்றிக்கொள்ளுகிற தேவ ஊழியக்காரர்களாய் இருக்கிறார்களே.

௭ ஆனபடியினாலே [15]எவர்களுக்கும் கடமைகளைச் செலுத்துவீர்களாக; வரியைச் செலுத்தவேண்டியது எவனுக்கோ, அவனுக்கு வரியைச் செலுத்துங்கள்; தீர்வையைச் செலுத்தவேண்டியது எவனுக்கோ, அவனுக்குத் தீர்வையைச் செலுத்துங்கள்; பயப்பட

கி பி ௯௰.

[1] சங ௱௩௧ ௧,௨ எரே ௪௫ ௫

* அல்லது தாழ்மையானவைகளில் மனரம்மியமாயிருங்கள்

[2] வாக் ௩ ௭ ௨௬ ௰௨ எசா ௫ ௨௧ உரோ ௰௧ ௨௫

[3] வாக ௨௰ ௨௨, மத் ௫ ௩௯ ௧ தெச ௫ ௰௫ ௧ பே ௩ ௯

[4] உரோ ௰௪ ௰௬ ௨ கொரி ௮ ௨௧

[5] மாற். ௯ ௫௰ உரோ ௰௪ ௰௯ எபி ௰௨ ௰௪

[6] ௫ மோ ௩௨ ௩௫ எபி ௰ ௩௰

[7] ௩ மோ,௰௯,௰௮. வாக் ௨௪ ௨௯ ௰௭ வச

[8] ௨ மோ ௨௩ ௪, ௫ வாக் ௨௫ ௨௧, ௨௨ மத் ௫ ௪௪

[9] வாக் ௮ ௰௫, ௰௯ தானி ௨ ௨௧ ௪ ௩௨ யோவா ௰௯ ௰௧

[10] தீத ௩ ௧ ௧ பே ௨ ௰௩

† அல்லது கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்

[11] தீத ௩ ௧

[12] ௧ பே ௨ ௰௪ ௩ ௰௩

[13] பிர ௮ ௨

[14] ௧ பே,௨,௰௯

[15] மத் ௨௨,௨௧ மாற் ௰௨ ௰௭. லூக் ௨௰ ௨௫.

வேண்டியது எவனுக்கோ, அவனுக்குப் பயப்படுங்கள், கனத்தைச் செலுத்தவேண்டியது எவனுக்கோ, அவனுக்குக் கனத்தைச் செலுத்துங்கள்.

௮ ¶ ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கிறதே அன்றி, மற்றொன்றும் ஒருவனுக்கும் கடன்படாதிருப்பீர்களாக, [1]மற்றவனில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறானே.

௯ எப்படியென்றால் [2]விபசாரம்பண்ணாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்று இந்தக் கற்பனைகளும் வேறு எந்தக் கற்பனையும் [3]உன்மேல் அன்புகூருகிறதுபோல, பிறன்மேலும் அன்புகூர்வாயாக என்கிற ஒரே பிரமாணத்திலே தொகையாய் அடங்கியிருக்கின்றன.

௰ அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கைச் செய்யாது; ஆதலால் [4]அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதாயிருக்கின்றது

௰௧ ¶ மேலும் [5]நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்று என்று நாம் காலத்தை அறிந்திருக்கிறபடியால், இப்படி எச்சரிக்கிறேன்; அன்றியும் நாம் விசுவாசிகளானபொழுது இரட்சிப்பு சமீபமாயிருந்ததிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கின்றது

௰௨ இரவு சென்றுபோயிற்று; பகல் சமீபமாயிற்று [6]ஆனபடியினாலே அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிப்போட்டு, [7]ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.

௰௩ [8]பேருண்டையாவது, வெறிகொள்ளுதலையாவது, [9]வேசித்தனத்தையாவது, காமவிகாரத்தையாவது, [10]சண்டையையாவது, பொறாமையையாவது, நடப்பியாமல் பகலிலே நடக்கிறவர்கள்போல [11]யோக்கியமாய்* நடக்கக்கடவோம்.

௰௪ [12]துர்இச்சைகளுக்கு இடமாய் உங்கள் தேகத்தைப் போஷியாமல், [13]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வீர்களாக.

௰௪. அதிகாரம்.

௧ சொற்பமானவைகளில் ஒருவனை ஒருவன் குற்றம் சாற்றவும், அசட்டைபண்ணவும் கூடாதென்றும், ௰௩ அவைகளினாலே ஒருவருக்கொருவர் விக்கினம் உண்டாக்காதிருக்கவேண்டுமென்றும், ௰௨ நியாயம் காட்டியது.

[14]விசுவாசத்தில் பலஈனமுள்ளவனுடைய நினைவுகளை நீங்கள் குற்றமாய் எண்ணாமல், †அவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

௨ [15]ஒருவன் எல்லாப் பதார்த்தங்களையும் புசிக்கலாம் என்று நம்புகிறான்; பலஈனமுள்ள மற்றொருவன் மரக்கறிகளைமாத்திரம் புசிக்கிறான்.

௩ புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அசட்டைபண்ணாதிருப்பானாக; [16]புசியாமலிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றமுள்ளவன் என்று நினையாதிருப்பானாக; பராபரன் அவனைச் சேர்த்துக்கொண்டாரே.

௪ [17]மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றமுள்ளவன் என்று தீர்க்கிற நீ யாவன்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய சொந்த எசமானே அவனை விசாரிப்பான்; மேலும் பராபரன் அவனை நிலைநிறுத்த வல்லவரானபடியால் அவன் நிலைநிறுத்தப்படுவான்.

௫ ¶ அன்றியும் [18]ஒருவன் ஒருநாளை மற்ற நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாய் எண்ணுகிறான்; (அதைக்குறித்து) அவனவன் தன் மனதிலே முழுநிச்சயத்தை‡ உடையவனாய் இருக்கக்கடவன்.

கி பி ௬௰.

[1] ௰ வச. கலா ௫ ௰௪. கொலோ ௩ ௰௪. ௧ தீமோ ௧ ௫. யாக் ௨ ௮.
[2] ௨ மோ ௨௰ ௰௩. ௫ மோ ௫ ௰௭. மத் ௰௯ ௰௮.
[3] ௩ மோ ௰௯ ௰௮. மத் ௨௨ ௩௰௯. மாற் ௰௨ ௩௧. கலா ௫ ௰௪. யாக் ௨ ௮.
[4] மத் ௨௨ ௪௰. ௮ வச.
[5] ௧ கொரி ௰௫ ௩௪. எபே ௫ ௰௪. ௧ தெச ௫ ௫, ௬.
[6] எபே ௫ ௰௧. கொலோ ௩ ௮.
[7] எபே ௬ ௰௩. ௧ தெச ௫ ௮.
[8] லூக் ௨௧ ௩௪. ௧ பேது ௪ ௩.
[9] ௧ கொரி ௬ ௯. எபே ௫ ௫.
[10] யாக் ௩ ௰௪.
[11] பிலி ௪ ௮. ௧ தெச ௪ ௰௨. ௧ பேது ௨ ௰௨.

* அல்லது நாணயமாய்

[12] கலா ௫ ௰௬. ௧ பேது ௨ ௰௧.
[13] கலா ௩ ௨௭. எபே ௪ ௨௪. கொலோ ௩ ௰.
[14] உரோ ௰௫ ௧, ௭. ௧ கொரி ௮ ௯, ௯ ௨௨.

† அல்லது சமுசயமுள்ள தர்க்கங்களில்லாமல்

[15] ௰௪ வச. ௧ கொரி ௰ ௨௫. ௧ தீமோ ௪ ௪. தீத்து ௧ ௰௫.
[16] கொலோ ௨ ௰௬.
[17] யாக் ௪ ௰௨.
[18] கலா ௪ ௰. கொலோ ௨ ௰௬.

‡ அல்லது நம்பிக்கையை

௬ [1]ஒருநாளை விசேஷித்துக்கொள்ளுகிறவன்* கர்த்தருக்கென்று அப்படிச் செய்கிறான்; நாள்களை விசேஷித்துக்கொள்ளாமல் இருக்கிறவனும் கர்த்தருக்கென்று அப்படிச் செய்கிறான்; புசிக்கிறவன் பராபரனுக்குத் தோத்திரம் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான், புசியாமல் இருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாமலிருந்து [2]பராபரனுக்குத் தோத்திரம்செலுத்துகிறான்.

௭ [3]நம்மில் யாவனும் தனக்காகப் பிழைக்கிறதும் இல்லை; யாவனும் தனக்காக மரிக்கிறதும் இல்லையே, நாம் பிழைக்கிறது கர்த்தருக்காகப் பிழைக்கிறோம்; மரிக்கிறது கர்த்தருக்காக மரிக்கிறோம்.

௮ ஆகையால் நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயே இருப்போம்.

௯ [4]அதற்காகக் கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் சீவனுள்ளோர்மேலும் [5]ஆண்டவராயிருக்கும்பொருட்டாக மரித்தும் எழுந்தும் உயிரடைந்தும் இருக்கிறார்.

௰ ¶ இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றமுள்ளவன் என்று நினைக்கிறதென்ன? அல்லது, உன் சகோதரனை அசட்டைபண்ணுகிறதென்ன? [6]நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிறுத்தப்படுவோமே.

௰௧ [7]நான் சீவனுள்ளவன்; முழங்கால் யாவும் எனக்குமுன்பாக முடங்கும்; நாவுகள் யாவும் பராபரனை அறிக்கைபண்ணுமென்று பராபரன் திருவுளம்பற்றுகிறார் என்று எழுதியிருக்கிறதல்லவோ?

௰௨ [8]அந்தப்படி நம்மில் அவனவன் தன்தன்னைக்குறித்துப் பராபரனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான்.

௰௩ ¶ ஆதலால் நாம் இனிமேல் ஒருவரை ஒருவர் குற்றமுள்ளவர்களென்று எண்ணாதிருப்போமாக; [9]வழுவுதற்காவது விழுதற்காவது எதையாகிலும் சகோதரனுக்குமுன்பாக வைத்துப்போடாதபடிக்கே எண்ணமுள்ளவர்கள் ஆவீர்களாக.

௰௪ நான் கர்த்தராகிய இயேசுவினாலே அறிந்திருக்கிறபடி, [10]ஒரு பொருளை அசுத்தம்† என்று எண்ணிக்கொள்ளுகிறவனுக்கு அது அசுத்தமாயிருக்கிறதே அன்றி, [11]ஒரு பொருளும் தானாய் அசுத்தம்‡ இல்லை.

௰௫ அன்றியும் புசிக்கிறதினாலே உன்சகோதரனுக்கு விசனம் உண்டாகினால், நீ அன்பாய்§ நடக்கிறவன் அல்ல, அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே, [12]அப்படிப்பட்டவனை உன் போசனத்தினாலே கெடுத்துப்போடாதிருப்பாயாக.

௰௬ [13]உங்கள் நன்மை தூஷணிக்கப்படாதிருப்பதாக.

௰௭ [14]பராபரனுடைய இராச்சியம் புசிப்பினாலும் குடிப்பினாலும் அல்ல, நீதியினாலும் சமாதானத்தினாலும் பரிசுத்தஆவியால் வருகிற சந்தோஷத்தினாலும் பொருந்தியிருக்கின்றது.

௰௮ ¶ [15]இவைகளாலே கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்கிறவன் பராபரனுக்குப் பிரியமானவனுமாய், மனிதருக்குப் பாத்திரனுமாய் இருக்கிறான்.

௰௯ இப்படியிருக்க, [16]சமாதானத்திற்கும் [17]யாவரையும் ஐக்கப்படுத்துதற்கும் ஏற்றவைகளைத் தேடிக்கொள்ளக்கடவோம்.

௨௰ [18]போசனத்தினிமித்தம் பராபரனுடைய கிரியையை அழித்துப்போடாதிருப்பாயாக; [19]எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; (மற்றவன்) விழுதற்கு ஏதுவாகும்படி [20]எதையாகிலும் புசிக்கிறவனுக்கே அது தீமையாயிருக்கும்.

௨௰௧ உன் சகோதரன் வழுவுதற்காவது, விழுதற்காவது, பலஈனமாகுதற்காவது ஏதுவான [21]மாம்

கி பி ௬௰.

1 கலா ௪ ௰
* [illegible] ரித்துக்கொள்ளு கிறவ
2 க கொரி ௰ ௬௬ க தீமோ ௪ ௬.
3 க கொரி ௬ ௰௬, உ௰ கலா உ உ௰ க தெச ரு. ௰ க பே ச உ
4 உ கொரி ரு ௰௫
5 அப ௰ ௬௬
6 மத உரு ௬௬, ௬௨ அப ௰ ௪௨ ௰௭ ௬௮ உ கொரி ரு ௰. யூதா ௰௪ ௰௫
7 ஏசா ௪௫ உ௩ பிலி உ ௰
8 மா ௰உ ௬௬ கலா ௬ ரு க பே ௪ ரு
9 க கொரி அ ௬, ௰௩ ௰ ௬௬
10 க கொரி அ எ ௰
† ஓயோ கது, பொது
11 அப ௰ ௰ரு உ உ ௰ வச க கொரி ௰ உ௬ க தீமோ ௪ ௪ தீத் க ௰ரு
‡ ஓயோக்கு, பொது
§ ஓயோ க்கு, அன்பின
12 க கொரி அ ௰க
13 ௨ ரோ ௰௨ ௰எ
14 க கொரி அ அ
15 உ கொரி அ உக
16 சங். ௬௪. ௰௪ உ ரோ ௰உ ௰அ
17 உ ரோ ௰௫ உ க கொரி ௰௪ ௰உ க தெச ரு. ௰க
18 ௰௫ வச
19 மத் ௰௫ ௰௪ அப ௰௰ ௰௪ வச தீத் க ௰ரு
20 க கொரி அ ௬, ௰, ௰௧, ௰௨
21 க கொரி அ ௰௩

சத்தைப் புசியாமலும், இரசத்தைப் பானம்பண்ணாமலும், மற்ற எதையாகிலும் செய்யாமலும் இருக்கிறதே நன்மையாயிருக்கின்றது.

௨௨ நீ நிச்சய அறிவுள்ளவனானால், அதைப் பராபரனுக்குமுன்பாக நீ தானாய்க் கொள்வாயாக; ஒருவன் தான் சம்மதிக்கிற பொருளினாலே தனக்குக் குற்றம் வரப்பண்ணாதிருந்தால், [1]அவன் பாக்கியவானாயிருப்பான்.

௨௩ (போசன பதார்த்தங்களுக்குள்ளே,) வித்தியாசம்பண்ணுகிறவன்* (அவைகளை) நிச்சய அறிவில்லாமல் புசித்தபடியினாலே ஆக்கினைக்கு ஏதுவாயிருப்பான்; [2]நிச்சய அறிவினாலே வாராத யாவும் பாவமாயிருக்கின்றன.

௰௫. அதிகாரம்.

௧ பலமுள்ளோர் பலஈனரைத் தாங்கவேண்டுமென்பது. ௨ கிறிஸ்து தம்மைப் பிரியப்படுத்தாமல் யூதரையும் அஞ்ஞானிகளையும் ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் நம்மைப் பிரியப்படுத்தாமல் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது. ௰௫ பவுல் நிருபத்தை எழுதினதற்காக நியாயஞ்சொல்லி, ௨௮ அவர்களை வந்து காண்பேனென்று வாக்குத்தத்தம்பண்ணி, ௩௦ அவர்கள் தனக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டது.

ஆனபடியினாலே [3]பலமுள்ளவர்களாகிய நாம் [4]பலஈனமுள்ளவர்களுடைய பலஈனங்களைப் பொறுமையோடே சகிக்கவேண்டும்; அல்லாமலும் நாம் நமக்குப் பிரியமாய் நடவாமல்,

௨ [5]அவனவன் தன்தனக்கடுத்த பிறனுடைய ஞான வளர்ப்புக்கு ஏதுவான [6]நன்மை உண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவோம்.

௩ [7]கிறிஸ்துவானவரும் தமக்குப் பிரியமாய் நடவாமல், [8]உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தன என்று எழுதியிருக்கிறபடி நடந்தார்.

௪ அன்றியும் வேதவாக்கியங்கள் திருஷ்டாந்தப்படுத்தின பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்கள் ஆகும்பொருட்டாய், முன்பு [9]எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதகமாக எழுதப்பட்டிருக்கின்றன.

௫ [10]அந்தப்படி பொறுமையையும் ஆறுதலையும் கொடுக்கிற பராபரன், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குத் தேவனும் [11]பிதாவுமானவரை நீங்கள் ஐக்கமாய் ஒரே வாயினாலே துதிக்கும்படிக்கு,

௬ கிறிஸ்து இயேசுவினுடைய சித்தத்தின்படியே† ஒருவருக்கொருவர் ஒரேவிதமான சிந்தையுள்ளவர்களாய் இருப்பதற்கு அநுக்கிரகஞ்செய்வாராக.

௭ ¶ அப்படியே [12]பராபரனுக்குப் புகழ்ச்சி உண்டாகத்தக்கதாய்க் கிறிஸ்து நம்மைச் சேர்த்துக்கொண்டதுபோல, [13]நீங்களும் ஒருவரை ஒருவர் சேர்த்துக்கொள்ளுங்கள்.

௮ (இதைக்குறித்து) நான் பின்னும் சொல்லுகிறதாவது: [14]பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கு, [15]பராபரனுடைய சத்தியத்தின்நிமித்தம் இயேசுக்கிறிஸ்து விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு ஊழியக்காரரானார்.

௯ [16]புறத்தேசத்தாரும் (அவருடைய) இரக்கத்திற்காகப் பராபரனைத் துதிக்கும்படிக்கு அப்படியானார்; ஆதலால் எழுதியிருக்கிறதாவது: [17]இதின்நிமித்தம் நான் புறத்தேசத்தாருக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம்பாடுவேன் என்பதே; மறுபடியும் அவன் சொல்லியிருக்கிறது.

௰ [18]புறத்தேசத்தார்களே, அவருடைய சனங்களோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பதே.

௰௧ மறுபடியும் அவன் சொன்னது: எல்லாப் புறத்தேசத்தார்களே, [19]பராபரனைத் துதியுங்கள்;

கி. பி. சா௰.

1 ௧ யோ ௩ ௨௧
* அல்லது சந்தேகங்கொள்ளுகிறவன்
2 தீத ௧ ௰௫
3 கலா ௬ ௧
4 உரோ ௰௪ ௧
5 ௧ கொரி ௯ ௰௯, ௨௨ ௰ ௨௪, ௩௩ ௰௩ ௫ பிலி ௨ ௪, ௫
6 உரோ ௰௪ ௰௯
7 மத ௨௬ ௩௯ யோவா ௫ ௩௰ ௬ ௩௮.
8 சங ௬௯ ௯
9 உரோ ௪ ௨௩, ௨௪ ௧ கொரி ௯ ௯ ௰ ௰௧ ௨ தீமோ ௩ ௰௬, ௰௭
10 உரோ ௰௨ ௰௬ ௧ கொரி ௧ ௰ பிலி ௩, ௰௬
11 அப ௪ ௨௪ ௩௨
† அல்லது மாதிரியின்படியே
12 உரோ ௫ ௨
13 உரோ ௰௪ ௧, ௩.
14 உரோ ௩ ௩ ௨ கொரி ௧ ௨௰
15 மத் ௰௫ ௨௪ யோவா. ௪ ௰௨ அப ௩ ௨௫, ௨௬ ௰௩ ௪௬
16 யோவா ௰ ௰௬ உரோ ௯ ௨௪
17 சங ௰௮ ௪௯
18 உபா ௩௨. ௪௩
19 சங ௱௰௭ ௧.

எல்லாச் சனங்களே, அவரை மிகவும் துதியுங்கள் என்றான்.

௰௨ ஏசாயாவும்சொன்னது: [1]ஈசாயின் வேர் இருக்கும்; புறத்தேசத்தாரை ஆளும்படி எழும்புவாரும் இருபபார; அவரில் புறத்தேசத்தார்கள் நம்பிக்கையாய் இருப்பார்கள் என்றான்.

௰௩ அந்தப்படியே நீங்கள் பரிசுத்தஆவியின் பலத்தினாலே அந்த நம்பிக்கையை அதிகமாய் அடையும்படிக்கு நம்பிககைக்கு ஏதுவான பராபரன் [2]விசுவாசததினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதான சவுககியத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

௰௪ ¶ [3]என் சகோதரரே, நீங்கள் தாமே நற்குணத்தினால் நிறைந்தவர்களுமாய், சகல அறிவினாலும் நிறைந்தவர்களுமாய், [4]ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்கள் என்று நானும் உங்களைக்குறித்து நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

௰௫ [5]அப்படியிருந்தும் சகோதரரே, பராபரன் எனக்குக் கொடுத்த கிருபையினாலே நான் உங்களுக்கு ஞாபகபபடுத்தும்படிக்கு, இவைகளை அதிக தயிரியமாய் எழுதினேன்.

௰௬ [6]புறத்தேசத்தார்கள் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாககப்பட்டுப் பராபரனுக்கு மிகவும் பிரியமான பலியாகுமபடிக்கு,* [7]நான் புறத்தேசததாருக்கு இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாய்ப் பராபரனுடைய சுவிசேஷத்திற்கு எற்ற ஆராதனைசெய்யும்பொருட்டு, (அந்தக் கிருபை எனக்கு உண்டாயிற்று).

௰௭ ஆதலால் நான் இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு [8]பராபரனுக்கு உரியவைகளைக்குறித்து மேன்மைபாராட்டுதற்கு முகாந்தரம் உண்டு.

௰௮ ஆனபடியினாலே கிறிஸ்துவானவர் என்னாலே [9]நடப்பியாதவைகளில் ஒன்றையுங்குறித்துப் பேசத் துணியாமல்,

௰௯ [10]புறத்தேசத்தார் வார்த்தையிலும் செய்கையிலும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு, எருசலேம் நகரத்தைத் தொடங்கி அதைச் சூழ்ந்ததிசையிலேயும் இல்லீரிக்குத தேசம்வரைக்கும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை விஸ்தாரமாய்ப் பிரசங்கிக்கத்தக்கதாக [11]அற்புதங்கள் அதிசயங்கள் என்று இவைகளின் பலத்தினாலும் பரிசுத்த ஆவியினுடைய பலத்தினாலும் அவர் என்னாலே நடப்பித்தவைகளைக்குறித்துமாத்திரம் பேசத் துணிகிறேன்.

௨௰ மேலும் [12]அவரைக்குறித்து அறிவை அடையாதவர்கள் அவரைப் பார்ப்பார்கள் என்றும், கேள்விப்படாதவர்கள் அறிந்துகொள்வார்கள் என்றும் எழுதியிருக்கிறபடியே,

௨௧ [13]நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேலே கட்டாதபடிக்கு, கிறிஸதுவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களிலே சுவிசேஷத்தை அறிவிக்கும்படி, அதிக கருத்துள்ளவனாய் இருக்கிறேன்.

௨௨ ¶ [14]அதினாலே நான் உங்களிடத்தில் வருகிறதற்கு அநேகந்தரம்† தடை உண்டாயிற்று.

௨௩ இபபொழுது நான் இந்தத் திசைகளிலே இருக்கிறதற்கு இடம் இல்லாதபடியினாலும், [15]உங்களிடத்துக்கு வரும்படி அநேக வருஷங்களாய் எனக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிருந்தபடியினாலும்,

௨௪ நான் இஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போகும்பொழுது, உங்களிடத்தில் வந்து உங்களைக் கண்டுபேசவும், உங்களோடு‡ இருக்கிறதினாலே முந்திச் சற்று மனச்சந்தோஷம் அடைந்த பின்பு [16]அவ்வழியே உங்களால்

கி. பி. ௬௰.

[1] ஏசா. ௰௧. ௧, ௰. வெளி. ௫. ௫, ௨௨. ௰௬.

[2] உரோ ௰௨. ௰௨. ௰௪. ௰௭.

[3] ௨ பே ௧ ௰௨. ௧ யோ ௨ ௨௧

[4] ௧ கொரி ௮. ௧, ௭, ௰

[5] உரோ ௧ ௫. ௰௨ ௩ கலா ௧. ௰௫ எபே ௩ ௭, ௮.

[6] ஏசா ௬௬ ௨௰. பிலி ௨ ௰௭

* அல்லது காணிக்கை

[7] உரோ ௰௧ ௰௩. கலா ௨ ௭, ௮, ௯. ௧ தீமோ ௨, ௭. ௨ தீமோ ௧ ௰௧

[8] எபி. ௫ ௧

[9] அப ௨௧ ௰௯. கலா ௨. ௮

[10] உரோ ௧ ௫. ௰௬ ௨௬

[11] அப ௰௯ ௰௧. ௨ கொரி. ௰௨. ௰௨

[12] ஏசா ௫௨ ௰௫

[13] ௨ கொரி ௰. ௰௩, ௰௫, ௰௬

[14] உரோ ௧ ௰௩. ௧ தெச. ௨ ௰௭, ௰௮

† அலலது மிகுதியாய

[15] அப ௰௯ ௨௧. ௩௰ வச உரோ. ௧ ௰௧.

‡ அல்லது உஙகள் இனததோடு, ௩௨ வச

[16] அப. ௰௫. ௩.

அனுப்பிவிடப்படவும் நம்பியிருக்கிறேன்.

௨௫ இப்பொழுது [1]மக்கேதோனியா நாட்டிலும் அகாயா நாட்டிலும் உள்ள சபையார் எருசலேமில் இருக்கிற பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற ஏழைகளுக்காகச் சில தருமங்களைச் சேர்த்துக்கொள்ளப் பிரியமானபடியினாலே,

௨௬ [2]நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படி அவ்விடத்திற்குப் பிரயாணமாய்ப்போக எத்தனமாயிருக்கிறேன்.

௨௭ அப்படிப்பட்ட பிரியமுள்ளவர்கள் ஆவதற்கு அவர்களுடைய கடனாளிகளாயும் இருக்கிறார்கள்; எப்படியென்றால், [3]புறதேசத்தார் அவர்களுடைய ஞான நன்மைகளில் பங்குபெற்றிருக்க, (தங்கள்) [4]சரீர நன்மைகளால் அவர்களுக்கு ஊழியம்செய்ய நியாயமாயிருக்கின்றதே.

௨௮ இந்த ஊழியத்தை நான் நிறைவேற்றி, [5]இந்தப் பலனை அவர்கள் கையிலே பத்திரப்படுத்தினபின்பு, உங்கள் ஊர்வழியாய் இஸ்பானியா தேசத்திற்குச் செல்லுவேன்.

௨௯ [6]நான் உங்களிடத்தில் வரும்பொழுது, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திலுள்ள சம்பூரணமான ஆசீர்வாதங்களோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்.

௩௰ ¶ மேலும் சகோதரரே, [7]யூதேயா தேசத்தில் இருக்கிற அவிசுவாசிகளுக்கு* நான் தப்புவிக்கப்படும்படிக்கும், [8]பராபரனுடைய சித்தத்தினாலே [9]நான் சந்தோஷத்துடனே உங்களிடத்திற்கு வந்து [10]உங்களோடேகூடச் சவுக்கியப்படத்தக்கதாக,

௩௧ [11]நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற ஊழியம் அவர்களுக்குப் பிரியமாயிருக்கும்படிக்கும்,

௩௨ [12]என்னோடேகூட நீங்கள் எனக்காகப் பராபரனை நோக்கி, போராட்டமாய்ச் செபம்பண்ணவேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தமும் [13]ஆவியானவரால் வரும் அன்பின் நிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௩௩ [14]சமாதானத்தை அளிக்கிற பராபரன் உங்கள் அனைவரோடுங்கூட இருக்கக்கடவர்.—ஆமென்.

௰௬. அதிகாரம்.

௧ பவுல் அநேகருக்குச் சகோதர வாழ்த்துதல் சொல்லவும், ௰௭ பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டுபண்ணுகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவும் காட்டி, ௨௧ அநேகர் வினவுதல்களை அறிவித்து, பராபரனுக்குத் துதியும் தோத்திரமும் செலுத்தி நிருபத்தை முடித்தது.

பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி நீங்கள் [15]கெங்கிரேயா ஊரின் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பொய்பேயாளைக் கர்த்தரைப்பற்றி இருக்கிறவள் என்று [16]உபசாரம் செய்து,

௨ அவளுக்கு உங்கள் உதவி வேண்டிய காரியம் ஏதோ, அதிலே அவளுக்கு உதவியாய் இருக்கவேண்டுமென்று அவளை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன், அவளும் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாய் இருந்தாளே.

௩ ¶ கிறிஸ்து இயேசுவினிடத்தில் என்னுடனேகூட வேலையாள்களாகிய [17]பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துதல் செய்யுங்கள்.

௪ அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தையும் நீட்டினவர்கள்; அவர்களுக்கு நான்மாத்திரமல்ல, புறதேசத்தாரில் உண்டான சபையார் எல்லாரும் நன்றியறிதலைக் காண்பிக்கத்தக்கது.

௫ [18]அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள், அகாயா நாட்டிலே [19]கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய எனக்

கி. பி. ௬௰

[1] ௧ கொரி ௰௬. ௧, ௨. ௨ கொரி ௮. ௧. ௯. ௨, ௰௨.

[2] அப ௰௯. ௨௧. ௨௰. ௨௨. ௨௪. ௰௭.

[3] உரோ ௰௧. ௰௭.

[4] ௧ கொரி ௯. ௰௧. கலா ௬. ௬.

[5] பிலி ௪. ௰௭.

[6] உரோ ௧. ௰.

[7] ௨ தெச ௩. ௨.

* அல்லது கீழ்ப்படியாதவர்களுக்கு.

[8] அப ௰௮. ௨௧. ௧ கொரி ௪. ௰௯. யாக் ௪. ௰௫.

[9] உரோ ௧. ௰௨.

[10] ௧ கொரி ௰௬. ௰௮. ௨ கொரி ௭. ௰௩. ௨ தீமோ ௧. ௰௬. பிலே ௭. ௨௰.

[11] ௨ கொரி ௮. ௪.

[12] ௨ கொரி ௧. ௰௧. கொலோ ௪. ௰௨.

[13] பிலி ௨. ௧.

[14] உரோ ௰௬. ௨௰. ௧ கொரி ௰௪. ௩௩. ௨ கொரி ௰௩. ௰௧. பிலி ௪. ௯. ௧ தெச ௫. ௨௩. ௨ தெச ௩. ௰௬. எபி ௰௩. ௨௰.

[15] அப ௰௮. ௰௮.

[16] பிலி ௨. ௨௯. ௩ யோ ௫. ௬.

[17] அப ௰௮. ௨. ௰௮. ௨௬. ௨ தீமோ ௪. ௰௯.

[18] ௧ கொரி ௰௬. ௰௯. கொலோ ௪. ௰௫. பிலே ௨.

[19] ௧ கொரி ௰௬. ௰௫.

குப் பிரியமான எப்பெனெத்து என்பவனை வாழ்த்துங்கள்.

௬ எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.

௭ அப்போஸ்தலர்களால் புகழ்ச்சி அடைந்தவர்களுமாய், [1]எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்கு உள்ளானவர்களுமாய், என் இனத்தாருமாய், என்னுடனே கூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்களுமாய் இருக்கிற அந்திரோனிக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள்.

௮ கர்த்தாவினாலே எனக்குப் பிரியமான அம்பிலியாவை வாழ்த்துங்கள்.

௯ கிறிஸ்துவினிடத்திலே நம்முடனேகூட வேலையாளாகிய உர்பானுவையும் எனக்குப் பிரியமான இஸ்தாக்குவையும் வாழ்த்துங்கள்.

௰ கிறிஸ்துவினிடத்தில் உண்மையான அப்பெல்லேயை வாழ்த்துங்கள், அரிஸ்தோபுலியினுடையவர்களை* வாழ்த்துங்கள்.

௰௧ என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்; கர்த்தரைப்பற்றி இருக்கிறவர்களாகிய நர்க்கீசுவினுடையவர்களை† வாழ்த்துங்கள்.

௰௨ கர்த்தாவின் நிமித்தம் பிரயாசப்படுகிற திரிபேனாளையும் திரிபோசாளையும் வாழ்த்துங்கள்; கர்த்தாவின்நிமித்தம் மிகவும் பிரயாசப்பட்டு, எனக்குப் பிரியமாயிருக்கிற பெர்சிசாளை வாழ்த்துங்கள்.

௰௩ [2]கர்த்தராலே தெரிந்துகொள்ளப்பட்ட உரூப்புவையும் எனக்கும் அவனுக்கும் தாயானவளையும் வாழ்த்துங்கள்.

௰௪ அசிங்கிரித்துவையும் பிலெகோனையும் எர்மாவையும் பத்திரோபாவையும் எர்மேயையும் அவர்களுடனே இருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள்.

௰௫ பிலொலோகையும் யூலியாளையும் நேரேயையும் அவனுடைய சகோதரியையும் ஒலிம்பாவையும் அவர்களோடிருக்கிற பரிசுத்தவான்கள் எல்லாரையும் வாழ்த்துங்கள்.

௰௬ [3]ஒருவரையொருவர் பரிசுத்தமாய் முத்தஞ்செய்து வாழ்த்துங்கள்; கிறிஸ்துவின் சபையார்கள் உங்களை வாழ்த்துகிறார்கள்.

௰௭ ¶ மேலும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் விழுதற்கு ஏதுவானவைகளையும் [4]உண்டாக்குகிறவர்களை [5]ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

௰௮ அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அல்ல, [6]தங்கள் வயிற்றுக்கு ஊழியஞ்செய்து, [7]நயவசனிப்பினாலும் ஆசீர்வாதஞ்சொல்லுகிறதினாலும் பேதைமையானவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களானபடியினாலே, நீங்கள் அவர்களைவிட்டு விலகுவீர்களாக.

௰௯ [8]நீங்கள் கீழ்ப்படிகிறவர்கள் என்பது யாவருக்கும் தெரியவந்திருக்கின்றது, ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; [9]மேலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளுமாய், தீமைக்குப் பேதைகளுமாய்‡ இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

௨௰ [10]மேலும் சமாதானசவுக்கியத்தை அளிக்கிற பராபரன் சீக்கிரமாய்ச் [11]சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடும்படி§ செய்வார்; [12]நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது.—ஆமென்.

௨௰௧ [13]என் உடன்வேலையாளாகிய தீமோத்தேயும் என் இனத்தாராகிய இலூக்கியும் [14]இயாசோனும்

கி. பி ௫௰.

[1] கலா ௧. ௨௨.
* அல்லது குடும்பத்தாரை
† அல்லது குடும்பத்தாரை
[2] ௨ யோ ௨.
[3] ௧ கொரி ௰௬. ௨௰. ௨ கொரி ௰௩. ௰௨. ௧ தெச ௫. ௨௬. ௧ பே ௫. ௰௪.
[4] அப் ௰௫. ௧. ௫. ௨௪. ௧ தீமோ ௬. ௩.
[5] ௧ கொரி ௫. ௯. ௰௧. ௨ தெச ௩. ௬. ௰௪. ௨ தீமோ ௩. ௫. தீத்து ௩. ௰. ௨ யோ ௰.
[6] பிலி ௩. ௰௯. ௧ தீமோ ௬. ௫.
[7] கொலோ ௨. ௪. ௨ தீமோ ௩. ௬. தீத்து ௧. ௰. ௨ பே ௨. ௩.
[8] உரோ ௧. ௮.
௨௬ உங்கள் மனது அடைந்த அறிவினாலே நீங்கள் ஒன்றையும் விசாரியாமல், [9]கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்.

௨௭ அல்லாமலும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களைப் போசனபந்திக்கு அழைக்கும்பொழுது, நீங்கள் போக மனதுண்டானால் உங்கள் மனது அடைந்த அறிவினாலே ஒன்றையும் விசாரியாமல் [10]உங்கள்முன் வைக்கப்பட்ட எதையும் புசியுங்கள்.

௨௮ அப்பொழுது இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், [11]அப்படி அறிவித்தவன் நிமித்தமும் மனதறிவின் நிமித்தமும் புசியாதிருங்கள்; [12]பூமியும் அதிலுள்ள நிறைவு யாவும் கர்த்தருடையதே.

௨௯ உன்னுடைய மனதைக்குறித்து அல்ல, மற்றொருவனுடைய மனதைக்குறித்தே சொல்லுகிறேன்; ஆகிலும் என்னுடைய சுயாதீனம் மற்றொருவனுடைய மனதின் நிமித்தம் குற்றமாய் [13]எண்ணப்படவேண்டுவதென்ன?

௩௰ மேலும் நான் அதைத் தோத்திரிப்புடனே* அநுபவித்தால், [14]தோத்திரித்து அநுபவிக்கிறதற்காக நான் தூஷணிக்கப்படவேண்டுவதென்ன?

௩௧ அதினாலேதானே [15]நீங்கள் புசித்தாலும், பானம்பண்ணினாலும், எதைச் செய்தாலும் சகலத்தையும் பராபரனுக்குப் புகழ்ச்சி உண்டாகச் செய்யுங்கள்.

௩௨ [16]நான் எனக்கு* (மாத்திரம்) பிரயோசனத்தைத் தேடாமல் அநேகரும் இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களுக்காகவும் பிரயோசனத்தைத் தேடிக்கொண்டு, [17]எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல,

௩௩ நீங்களும் யூதருக்கும் கிரேக்கருக்கும்† [18]பராபரனுடைய சபைக்கும் [19]விதனம் உண்டாகாதபடிக்கு* எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

௰௧. அதிகாரம்.

௧ சபை கூடிவருகிறபோது, ௪ புருஷர்கள் தங்கள் தலைகளை மூடிக்கொண்டிருந்ததற்காகவும், ௫ ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக்கொள்ளாததற்காகவும், ௰௭ அவர்களுடைய கூட்டங்களை நிமித்தமாய் ௨௰. கர்த்தருடைய இராப்போசனத்தோடே தங்கள் விருந்துகளைச் சேர்த்து அதை அசுசிப்படுத்தினதற்காகவும் அவர்களைக் கடிந்துகொண்டு, ௨௩ இராப்போசன ஒழுங்கு இன்னதென்று காட்டுகிறது.

கி. பி. ௫௯.

1 [illegible]
2 [illegible] கொரி [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible]
6 ௧ கொரி [illegible]
7 [illegible]
8 [illegible]
9 [illegible]
10 [illegible]
11 [illegible]
12 [illegible]
13 [illegible]
* அல்லது [illegible]
14 [illegible]
15 [illegible]
16 [illegible]
17 [illegible] கொரி [illegible]
† அல்லது புறச் சாதியாருக்கு
18 [illegible]
19 [illegible]

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, [1]நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கக்கடவீர்கள்.

௨ சகோதரரே, நீங்கள் எல்லாவிதத்திலும் [2]என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு [3]ஒப்புவித்த முறைமைகளின்படியே* அவைகளைக் கைக்கொண்டிருக்கிறதற்காக உங்களைப் புகழுகிறேன்.

௩ இப்பொழுது நீங்கள் என்ன அறியவேண்டுமென்று இருக்கிறேன் என்றால், [4]கிறிஸ்து புருஷனானவனுக்குத் தலையாயிருக்கிறார், [5]புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; [6]பராபரன் கிறிஸ்துவுக்குத் தலையாயிருக்கிறார்.

௪ எந்தப் புருஷனானாலும் செபம்பண்ணி அல்லது [7]தீர்க்கதரிசனம் சொல்லுகிறபொழுது, தன் தலையை மூடிக்கொண்டிருந்தால் தன் தலையைக் கனவீனப்படுத்துவான்.

௫ [8]ஸ்திரியானவள் செபம்பண்ணி அல்லது தீர்க்கதரிசனம் சொல்லுகிறபொழுது, தலையை மூடிக்கொள்ளாமலிருந்தால், தன் தலையைக் கனவீனப்படுத்துவாள்; [9]அவள் தலை சிரைக்கப்பட்டதுபோல இருக்குமே.

௬ ஆனதால ஸ்திரியானவள் மூடிக்கொள்ளாவிட்டால், மயிரைக் கத்தரித்துப்போடக்கடவள், [10]அப்படி மயிர் கத்தரிக்கப்படுகிறது அல்லது சிரைக்கப்படுகிறது ஸ்திரிக்கு வெட்கமானபடியினாலே, மூடிக்கொண்டிருக்கக்கடவள்.

௭ [11]புருஷனானவன் பராபரனுடைய சாயலுமாய் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவது இல்லை.

௮ [12]மேலும் புருஷன் ஸ்திரியினாலே தோன்றினவன் அல்ல, ஸ்திரியே புருஷனால் தோன்றினவள்.

௯ [13]அல்லாமலும் புருஷன் ஸ்திரிக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல, ஸ்திரியே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.

௰ ஆகையால ஸ்திரியானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறதும் அல்லாமல், [14]தூதர்களின் நிமித்தம் [15]அவள் தன் தலையின்மேல் வஸ்திரத்தால மூடிவைக்கவேண்டும்.†

௰௧ ஸ்திரி புருஷனால் இருக்கிறதுபோலப் புருஷனும் ஸ்திரியினாலே இருக்கிறதால்,

௰௨ [16]கர்த்தருடைய முறைமையின்படி ஸ்திரி இல்லாமல் புருஷனும் இல்லை; புருஷன் இல்லாமல் ஸ்திரியும் இல்லை; [17]சகலமும் பராபரனாலே இருக்கின்றது.

௰௩ ¶ ஸ்திரியானவள் பராபரனைத் தொழுது செபம்பண்ணுகையில, தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலக்கணமாய் இருக்குமோ என்று உங்களுக்குள்ளே நீங்களே எண்ணிக்கொள்ளுங்கள்.

௰௪ அல்லது புருஷன் மயிரை நீளமாய் வளர்த்தால் அது அவனுக்குக் கனவீனமாயிருக்கின்றது என்றும்,

௰௫ ஸ்திரி தனக்கு முக்காடாக‡ மயிர் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினாலே தன் மயிரை நீளமாய் வளர்த்தால், அது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையோ?

௰௬ ஆகிலும் (இதைக்குறித்து) [18]ஒருவன் வாக்குவாதம் செய்யப் பிரியனாய் இருந்தால், எங்களுக்கும் [19]பராபரனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கம் இல்லையென்று அறியக்கடவன்.

௰௭ பின்னும் நான் அறிவிக்கிறது என்னவெனில், நீங்கள் கூடிவருதல் அதிக நன்மைக்கு அல்ல; அதிக தீமைக்கே ஏதுவாயிருக்கின்றது; அதைக்குறித்து நான் உங்களைப் புகழக்கூடாது.

௰௮ என்னவென்றால் முதலா

கி. பி. ௫௯.

[1] ௧ கொரி ௪. ௰௬. எபே ௫. ௧. பிலி ௩. ௰௭. ௧ தெச ௧. ௬. ௨ தெச ௩. ௯.

[2] ௧ கொரி ௪. ௰௭.

[3] ௧ கொரி ௭. ௰.

* அல்லது கட்டளைகளின்படி, ௨ தெச ௨. ௰௫.

[4] எபே ௫. ௨௩.

[5] ௧ மோ ௩. ௰௬. ௧ தீமோ ௨. ௰௧, ௰௨. ௧ பேது ௩. ௧, ௫.

[6] யோவா ௰௪. ௨௮. ௧ கொரி ௩. ௨௩. [illegible]

[7] ௧ கொரி ௰௨. ௰.

[8] அப ௨௧. ௯.

[9] ௫ மோ ௨௧. ௰௨.

[10] ௪ மோ ௫. ௰௮.

[11] ௧ மோ ௧. ௨௬. [illegible]

[12] ௧ மோ ௨. ௨௨.

[13] ௧ மோ ௨. ௰௮.

[14] பிர ௫. ௬.

[15] ௧ மோ ௨௪. ௬௫.

† அதாவது தன் புருஷனுக்கு அடங்கினவளென்பதற்குக் குறியாக முக்காடிட்டவளாயிருப்பதென்பதாம்.

[16] கலா ௩. ௨௮.

[17] ரோ ௰௧. ௩௬.

‡ அல்லது மூடியாக.

[18] ௧ தீமோ ௬. ௪.

[19] ௧ கொரி ௭. ௰௭. ௰௪. ௩௩.

வது, நீங்கள் சபையின் வீட்டிலே கூடிவந்திருக்கும்பொழுது, [1]உங்களில் பிரிவினைகள்* உண்டென்று கேள்விப்படுகிறேன்.

௰௯ [2]பாத்திரவான்கள் வெளியாகும்படிக்கு [3]மார்க்கபேதங்களும்† உங்களில் உண்டாயிருக்கவேண்டியதால், நான் (கேள்விப்பட்டவைகளில்) சில நம்புகிறேன்.

௨௰ ஆனதால் நீங்கள் ஏகமாய்க் கூடிவந்து சாப்பிடுங்காலத்தில், ஒருவன் பசியாயிருக்கவும் [4]ஒருவன் திருத்தி அடையவுந்தக்கதாக, முன்னே அவனவன் தன் சொந்தப் போசனத்தைப் பண்ணுவான்.

௨௧ அப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போசனம்பண்ணுதல் அல்லவே.‡

௨௨ அதென்ன? போசனபானம் பண்ணுதற்கு உங்களுக்கு வீடுகள் இல்லையா? [5]அல்லது பராபரனுடைய சபையின் வீட்டை அசட்டைபண்ணி, [6]போசனம் இல்லாதவர்களை§ வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களைக்குறித்து நான் என்ன சொல்லலாம்? உங்களைப் புகழலாமா? அதைக்குறித்து நான் உங்களைப் புகழக்கூடாது.

௨௩ ¶ [7]நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தராலே அடைந்தேன்; என்னவெனில், [8]கர்த்தராகிய இயேசு தம்மைக் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள்.

௨௪ இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கின்றது; என்னை நினைத்துக்கொள்ளும்படிக்கு|| இப்படிச் செய்யுங்கள் என்றார்.

௨௫ அந்தப்படியே அவர் இராப்போசனம் பண்ணினபின்பு, பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு, இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்திலே புதிய உடம்படிக்கையாய் இருக்கின்றது; நீங்கள் பானம்பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைத்துக்கொள்ளும்படிக்கு இப்படிச் செய்யுங்கள் என்றார்.

௨௬ [9]ஆகையால் கர்த்தர் வருமளவும் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்பொழுதெல்லாம் அவருடைய மரணத்தைக் கூறுகிறீர்கள்.¶

௨௭ ¶ இப்படியிருக்க [10]எவனாகிலும் கர்த்தருடைய அப்பத்தையாவது பாத்திரத்தையாவது அபாத்திரமானவிதமாய்ப் போசனபானம் பண்ணினால், அவன் கர்த்தருடைய சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் குற்றமுள்ளவனாய் இருப்பான்.

௨௮ அந்தப்படி அபாத்திரமான விதமாய் அதைப் போசனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரத்தை விசேஷித்துக்கொள்ளாமல், தனக்கு ஆக்கினைவரும்படி** போசனபானம் பண்ணுகிறபடியினாலே,

௨௯ எவனாகிலும் [11]தன்னைத்தான் சோதித்து அறிந்து, பின்பு இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம்பண்ணக்கடவன்.

௩௰ அந்தக் குற்றத்தினாலேதானே உங்களில் அநேகர் பலஈனருமாய் வியாதியுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்; வேறு அநேகரும் இறந்துபோயிருக்கிறார்கள்.

௩௧ [12]நம்மை நாமே வகையறுத்துப்பார்த்தால், நாம் அப்படித் தண்டிக்கப்படுவதில்லை.

௩௨ நாம் தண்டிக்கப்பட்டிருக்க, [13]உலகத்தோடே நித்திய ஆக்கினைக்கு உள்ளாக்கப்படாதபடிக்கு, கர்த்தராலே தண்டிக்கப்படுகிறோம்.

௩௩ ஆகையால் என் சகோதரரே, நீங்கள் போசனம்பண்ணக் கூடிவருகிறபொழுது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.

௩௪ [14]ஒருவனுக்குப் பசியிருந்தால் நீங்கள் ஆக்கினைக்கு†† ஏதுவா

கி. பி. ௫௯.

1 ௧ கொரி ௧ ௰ ௰௧, ௰௨ ௩ ௩

* அல்லது பேதங்கள்

2 லூக் ௨ ௩௫ ௧ யோ ௨ ௰௯ ௫ மோ ௰௩ ௩

3 மத ௰௮ ௭ லூக் ௰௭ ௧ அப ௨௰ ௩௰ ௧ தீமோ ௪ ௧ ௨ பே ௨ ௧,௨

† அல்லது வகுப்புகளும்

4 ௨ பே ௨ ௰௩ யூதா ௰௨

‡ அல்லது அப்படியிருக்காலநீங்கள் கர்த்தருடைய இராப்போசனம் பண்ணக்கூடாது

5 ௧ கொரி ௰ ௩௨

6 யாக் ௨ ௬

§ அல்லது தரித்திரரை

7 ௧ கொரி ௰௫ ௩ கலா ௧ ௧, ௰௧, ௰௨

8 மத ௨௬ ௨௬ மாற் ௰௪ ௨௨ லூக் ௨௨ ௰௯

|| அல்லது நினைப்பூட்டுதலாக

9 யோவா ௰௪ ௩ ௨௧ ௨௨ அப ௧ ௰௧ ௧ கொரி ௪ ௫ ௰௫ ௨௩ ௧ தெச ௪ ௰௬ ௨ தெச ௧ ௰ யூதா ௰௪ வெளி ௧ ௭

¶ அல்லது கூறுங்கள்

10 ௪ மோ ௯ ௰, ௰௩ யோவா ௬ ௫௧, ௬௩, ௬௪ ௰௩ ௨௭ ௧ கொரி ௰ ௨௧

** அல்லது நியாயத்தீர்ப்பு, ரோ ௰௩. ௨

11 ௨ கொரி ௰௩ ௫ கலா ௬ ௪

12 சங் ௩௨ ௫ ௧ யோ ௧ ௯

13 சங் ௯௪ ௰௨ எபி ௰௨ ௫-௰௧

14 ௨௧ வச.

†† அல்லது தீர்ப்புக்கு

சக் கூடிவாராதபடிக்கு, [1]அவன் வீட்டிலே சாப்பிடக்கடவன்; மற்றக்காரியங்களை [2]நான் வரும்பொழுது [3]திட்டம்பண்ணுவேன்.

௰௨. அதிகாரம்.

௧ தேவவரங்கள், ௪ பலவிதமாயிருந்தாலும், ௭ எல்லாம் பிரயோசனத்துக்கு ஏதுவானவைகள் என்றும், ௮ அதற்கு அவைகள் பலவிதமாய் அளிக்கப்படுகின்றன என்றும், ௰௨. சுபாவ சரீரத்தின் அவயவங்கள் எல்லாம், ௰௪ சரீரத்துக்கு அழகும், ௨௨. பிரயோசனமும், ௨௪ உதவியுமுள்ளவைகளாய் இருக்கிறதுபோல, ௨௭ திருச்சபையாகிய கிறிஸ்துவின் சரீரமும் ஒழுங்குபட்ட அதின் அவயவங்களாகிய [illegible] இருக்கவேண்டியதென்றும் சொல்லியது.

மேலும் சகோதரரே, [4]ஆவியால் வருகிற வரங்களைக்குறித்து நீங்கள் அறிவீனராயிருக்க எனக்கு மனதில்லை.

௨ (முன்னே) [5]நீங்கள் அஞ்ஞானிகளாய், மற்றவர்களால் நடத்தப்பட்ட பிரகாரமாகவே [6]ஊமையான விக்கிரகங்களைச் சேர்ந்திருந்தீர்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கின்றது.

௩ ஆதலால் நான் உங்களுக்கு அறிவிக்கிறது என்னவெனில், [7]பராபரனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவன் என்று* சொல்லமாட்டான்; [8]அன்றியும் பரிசுத்த ஆவியினாலே அல்லாமல் ஒருவனும் இயேசுவைக் கர்த்தரென்று சொல்லமாட்டான்.

௪ ¶ [9]வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.

௫ [10]ஆவி ஒருவரே; [11]ஊழியங்களிலேயும்† வித்தியாசங்கள் உண்டு; கர்த்தர் ஒருவரே.

௬ உள்ளான கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு; எல்லாவற்றையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற [12]பராபரன் ஒருவரே.

௭ [13]ஆவியின் வரங்கள் பிரயோசனம் உண்டாகும்படியே, அவனவனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

௮ எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே [14]ஞானத்தைப் போதித்தல் கொடுக்கப்பட்டது; வேறொருவனுக்கு [15]அந்த ஆவியினாலேதானே கல்வியோடே போதித்தல் உண்டாயிற்று.

௯ வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேதானே [16]விசுவாசம் உண்டாயிற்று; வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேதானே [17]குணமாக்கும் வரங்கள் உண்டாயின.

௰ வேறொருவனுக்குப் [18]பலத்த அற்புதங்களைச் செய்கிற பலன்களும், வேறொருவனுக்குத் [19]தீர்க்கதரிசனம் சொல்லுதலும், வேறொருவனுக்கு [20]ஆவிகளை வகையறுக்குதலும், வேறொருவனுக்கு அந்நியபாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு [21]அந்நியபாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

௰௧ இந்த வரங்களை எல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, [22]தமது சித்தத்தின்படி [23]அவனவனுக்குத்தகுதியானவைகளைப் பகிர்ந்துகொடுக்கிறார்.

௰௨ ¶ அது எப்படியெனில், [24]சரீரம் ஒன்றாய் அநேகம் அவயவங்கள் உள்ளது; ஒரே சரீரத்தின் அவயவங்கள் எல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாயிருக்கின்றது; [25]அதுபோலக் கிறிஸ்துவும் இருக்கிறார்.

௰௩ [26]நாம் யூதராயிருந்தும், கிரேக்கராயிருந்தும்,‡ அடிமைகளாயிருந்தும், சுயாதீனராய் இருந்தும் எல்லாரும் [27]ஒரே சரீரமாக ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் [28]ஒரே ஆவியில் பானம்பண்ணும்படி செய்யப்பட்டோம்.

௰௪ ¶ சரீரமும் ஒரே அவயவம் உள்ளதாயிராமல், அநேக அவயவங்கள் உள்ளதாயிருக்கின்றது.

கி. பி. ௫௯.

1 ௨௨ வச.
2 ௧ கொரி ௪ ௰௯.
3 ௧ கொரி ௭ ௰௭ தீத் ௧ ௫.
4 ௧ கொரி ௰௪. ௧, ௩௭.
5 ௧ கொரி ௬ ௰௧ எபே ௨ ௰௧,௰௨ ௧ தெச ௧ ௯ தீத் ௩ ௩ ௧ பே ௪ ௩.
6 சங் [illegible]
7 மாற் ௯ ௩௯ ௧ யோ ௪ ௨, ௩.
* அல்லது சாபமென்று.
8 மத் ௰௬ ௰௭ யோவா ௰௫ ௨௬ ௨ கொரி ௩ ௫.
9 ௨ ரோ ௰௨ ௪ [illegible]
10 எபே ௪ ௪.
11 ௨ ரோ ௰௨ ௬, ௭ எபே ௪ ௰௧.
† அல்லது பணிவிடை கிரியைகளிலேயும்.
12 எபே ௧ ௨௩.
13 ௨ ரோ ௰௨ ௬, [illegible] ௧ கொரி ௰௪ ௨௬ எபே ௪ ௭ ௧ பே ௪ ௰, ௰௧.
14 ௧ கொரி ௨ ௬, ௭.
15 ௧ கொரி ௧ ௫ [illegible] ௨ கொரி ௮ ௭.
16 மத் ௰௭ ௰௯, ௨௦ ௧ கொரி ௰௩ ௨ ௨ கொரி ௪ ௰௩.
17 மாற் ௰௬ ௰௮ யாக் ௫ ௰௪.
18 [illegible]
19 [illegible] ௧ கொரி [illegible]
20 ௧ கொரி ௰௪ ௨௯ ௧ யோ ௪ ௧.
‡ [illegible]

---

21 அப [illegible] ௧ கொரி ௰௪, ௨. —22 யோவா ௩ ௮ [illegible] —23 ௨ ரோ ௰௨ ௬ [illegible] ௧ கொரி ௭ ௭ ௨ கொரி ௰ ௰௩ [illegible] எபே ௪ [illegible] —25 [illegible] —26 கலா ௩ ௨௮ [illegible] எபே ௨ ௰௩, ௰௪ [illegible] —27 [illegible] —28 யோவா [illegible]

௰௫ காலானது நான் கையாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவம் அல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவம் அல்லாமல் போகுமா?

௰௬ காதானது நான் கண்ணாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவம் அல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவம் அல்லாமல் போகுமா?

௰௭ சரீரமுழுவதும் கண்ணானால், செவி எங்கே இருக்கும்? அது முழுவதும் செவியானால், மோத்தல் எங்கே உண்டாயிருக்கும்?

௰௮ ஆனதால் [1]பராபரன் தமது சித்தத்தின்படி [2]அவயவங்களை ஒன்றொன்றாகச் சரீரத்திலே வைத்தார்.

௰௯ அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எப்படி இருக்கும்?

௨௰ ஆனதால் அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே.

௨௧ அன்றியும் கண்ணானது கையுடனே நீ எனக்கு வேண்டுவதில்லை என்றும், அல்லது தலையானது கால்களுடனே நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை என்றும் சொல்லமாட்டாது.

௨௨ அதைத்தவிர சரீர அவயவங்களில் பலஈனமாய்க் காணபபடுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாய் இருக்கின்றன.

௨௩ அல்லாமலும் சரீர அவயவங்களில் கனஈனமாய்க் காணபபடுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்;* இவ்விதமாய் நம்மிடத்தில் அவலட்சணமானவைகளுக்கே அதிக இலட்சணம் உண்டாயிருக்கின்றது.

௨௪ இலட்சணமானவைகளுக்கு அப்படிச் செய்யவேண்டுவதில்லை; ஆனதால் சரீரத்திலே பிரிவினை † உண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஒரேவிதமான கவலையாயிருக்கும்படிக்கு,

௨௫ பராபரன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை ஏற்படுத்தினார்.

௨௬ ஆனதினாலே ஒரு அவயவம் பாடுபடும்பொழுது, மற்ற அவயவங்கள் யாவும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமை அடையும்பொழுது, மற்ற அவயவங்கள் யாவும் கூடச் சந்தோஷப்படும்.

௨௭ [3]நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் [4]தனித்தனியான அவயவங்களாயும் இருக்கிறீர்கள்.

௨௮ ¶ அவர்களில் சிலரைப் [5]பராபரன் சபையிலே முதலாவது, [6]அப்போஸ்தலராகவும், இரண்டாவது, [7]தீர்க்கதரிசிகளாகவும், மூன்றாவது, போதகராகவும், பின்பு [8]வல்லமைகளையும், [9]பின்பு குணமாக்கும் வரங்களையும், [10]உதவிசெய்தலையும், [11]ஆளுகைகளையும், அந்நிய‡ பாஷைகளையும் ஏற்படுத்தினார்.

௨௯ எல்லாரும் அப்போஸ்தலர்களாய் இருக்கிறார்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளாய் இருக்கிறார்களா? எல்லாரும் போதகராய் இருக்கிறார்களா? எல்லாரும் வல்லமைகளைச் செய்கிறவர்களா?§

௩௰ எல்லாரும் குணமாக்கும் வரங்கள் உள்ளவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?

௩௧ ¶ அப்படியிருக்க, [12]நீங்கள் அதிக நன்மையான வரங்களைத் தேடிக்கொள்ளுங்கள், அதற்காக மிகவும் அதிகமேன்மையான வழியையே உங்களுக்காகக் காண்பிக்கிறேன்.

௰௩. அதிகாரம்.

௧ மற்றெல்லாச் சிறந்த வரங்களும், ௨. ௩ அன்பில்லாவிட்டால் பயன்படாதென்று, ௪ அதைப் புகழ்ந்து, ௰௩ அது நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் சிறந்ததென்று காட்டியது

நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு இராவிட்

கி. பி. ௫௯.

[1] உரோ ௰௨. ௩ ௧ கொரி ௩ ௫ ௰௧ வசனம்

[2] ௨௮ வச

* அல்லது வைக்கிறோம

† அல்லது பேதம்.

[3] உரோ ௰௨ ௫ எபே ௧ ௨௩. ௪ ௰௨ ௫ ௨௩, ௩௰ கொலோ ௧ ௨௪

[4] எபே ௫ ௩௰

[5] எபே ௪ ௰௧

[6] எபே ௨ ௨௰ ௩ ௫

[7] அப ௰௩ ௧ உரோ ௰௨. ௬

[8] ௰ வச

[9] ௯ வச

[10] ௪ மோ ௰௧ ௰௭

[11] உரோ ௰௨ ௮ ௧ தீமோ ௫ ௰௭ எபி ௰௩ ௰௭, ௨௪

‡ அல்லது பலவித, ௰ வசனம்

§ அல்லது எல்லாருக்கும வல்லமைகளுண்டா

[12] ௧ கொரி. ௰௪ ௧, ௩௯

டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளத்தைப்போலவும் இருப்பேன்.

௨ நான் [1]தீர்க்கதரிசனங்களை அடைந்தாலும், சகல இரகசியங்களையும் சகலகல்விகளையும்அறிந்தாலும், [2]மலைகளைப் பேர்க்கத்தக்கதாக மிருந்த விசுவாசம் உள்ளவனாயிருந்தாலும், [3]அன்பு எனக்கு இராவிட்டால் வீணாய் இருப்பேன்.

௩ மேலும் [3]எனக்கு உண்டான ஆஸ்திகள் யாவையும் ஏழைகளுக்குக் கொடுத்தாலும், சுட்டெரிக்கப்படுவதற்கு என் சரீரத்தைக் கொடுத்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் எனக்குப் பிரயோசனம் வராது.

௪ ¶ [4]அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது; அன்புக்கு பொறாமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது,* இறுமாப்பாயிராது, ஆகாததைச் செய்யாது.

௫ [5]தன் பொழிவைப் பாராது, உக்கிரத்தை அடையாது, பொல்லாங்கானதைச சிந்தியாது.

௬ [6]அநியாயத்தில் சந்தோஷப்படாமல், [7]சத்தியத்தில்† சந்தோஷபபடுகின்றது; அது [8]சகலத்தையும் மூடுகின்றது.

௭ சகலத்தையும் விசுவாசிக்கின்றது; சகலத்தையும் நம்புகின்றது, சகலத்தையும் சகிக்கின்றது.

௮ ¶ தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஒழிந்துபோம்; அந்நியபாஷைகளும் ஓய்ந்துபோம்; கல்வியும் ஒழிந்துபோம்; அன்பே ஒருக்காலும் ஒழியாது.

௯ அல்லாமலும் [9]நம்முடைய அறிவு குறைவுள்ளது; நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது.

௰ நிறைவானது வரும்பொழுது, குறைவானது ஒழிந்துபோம்.

௰௧ நான் குழந்தையாயிருந்தபொழுது குழந்தையைப்போலப் பேசினேன்; குழந்தையைப்போலச் சிந்தித்தேன்;‡ குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபொழுது குழந்தைக்கு ஏற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

௰௨ இப்பொழுது [10]கண்ணாடியிலே நிழலாய்ப்§ பார்க்கிறோம், [11]அப்பொழுது முகமுகமாகவே பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன்; அப்பொழுது நான் அறியப்பட்டபடி அறிந்துகொள்வேன்.

௰௩ ¶ ஆனதால் இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிற்கின்றன; இவைகளில் அன்பே பெரிதாயிருக்கின்றது.

௰௪. அதிகாரம்.

௧ தீர்க்கதரிசனப் போதிப்பு, ௨ ௩. ௪ அந்நியபாஷைகளைப்பார்க்கிலும நல்லதெனறு, ௬. கீதவாத்தியங்களைக்கொண்டு ஒப்பனையிடப்படடும, ௰௨. தீர்க்கதரிசனமாவது, அந்நியபாஷையாவது பிரயோசனத்தை, ௨௨ தருகிறதாயிருக்கவேண்டியதெனறும, ௨௬ அவற்றின பிரயோசனங்கள இன்னவையெனறும, ௨௭ அவைகள் இப்படி நடத்தப்படவேண்டுமென்றும், ௩௪ ஸ்திரிகள் சபையில் பேசக்கூடாதென்றும் சொல்லியது.

அன்பையே அதிகமாய்த் தொடருங்கள்; [12]ஆவிக்குரிய வரங்களையும் தேடுங்கள்; (அவைகளில்) [13]தீர்க்கதரிசனம் காட்டுகிற வரத்தையே விரும்புங்கள்.

௨ என்னத்தினாலெனில், [14]அந்நியபாஷையில் பேசுகிறவன் மனிதருக்கு அல்ல, பராபரனுக்குத்தெரியப் பேசுகிறான்; ஆவியினாலே அவன் இரகசியங்களைப் பேசிக்கொள்ளுகிறபடியால், ஒருவனும் அவன் பேசுகிறதை அறிய|| மாட்டானே.

௩ தீர்க்கதரிசனம் காட்டுகிறவனே மனிதருக்கு எழுப்புதலும் புத்தியும் ஆறுதலும் உண்டாகத் தக்கவிதமாகப் பேசுகிறான்.

௪ அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்குத்தானே எழுப்புதல் உண்டாக்குகிறான்; தீர்க்கதரிசனம் காட்டுகிறவனே சபைக்கு எழுப்புதல் உண்டாக்குகிறான்.

௫ நீங்கள் எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேச விரும்புகிறேன்;

கி. பி. ௫௯.

1 ௧ கொரி. ௰௨. ௮, ௯, ௰, ௨௮ ௰௪. ௧ ஷ மத். ௭. ௨௨.

2 மத் ௰௭ ௨௰ மாற் ௰௧ ௨௩. லூக் ௰௭ ௬

3 மத் ௬. ௧, ௨.

4 நீதி ௰ ௰௨ ௧ பே ௪ ௮

* அல்லது தனனை எண்ணுமலிராது

5 ௧ கொரி ௰ ௨௪ பிலி. ௨ ௪

6 சங் ௰ ௩ ரோ ௧ ௩௨

7 ௨ யோ ௪

† அலலது சத்தியத்துடனே

8 ரோ ௰௫. ௧ கலா. ௬. ௨ ௨ தீமோ. ௨. ௨௪

9 ௧ கொரி. ௮ ௨

‡ அல்லது எண்ணினேன

10 ௨ கொரி. ௩ ௰௮ ௫ ௭ பிலி ௩ ௰௨

§ கிரேக்கு, சல்லடைக்கூடாக.

11 மத் ௰௮. ௰ ௧ யோ ௩ ௨.

12 ௧ கொரி ௰௨ ௩௧

13 ௪ மோ ௰௧. ௨௫, ௨௯.

14 அப ௨ ௪ ௰ ௪௬

|| கிரேக்கு, கேட்க, அப ௨௨. ௯.

கி. பி. ருக.

ஆகிலும் அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு எழுப்புதல் உண்டாகும்படிக்கு அதின் அருத்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனம் காட்டுகிறவன் அவனிலும் பெரியவனாயிருப்பதினாலே நீங்கள் தீர்க்கதரிசனம் காட்டுகிறவர்களாகவேண்டும் என்று அதிகமாய் விரும்புகிறேன்.

சு ¶ அந்தபபடி சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து, உங்களுக்கு இரகசியங்களை [1]வெளிப்படுத்தலுக்காவது, உயர்ந்த அறிவு உண்டாக்குதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவதற்காவது, மற்றப போதகம் உண்டாகுதற்காவது, ஏதுவானதைச் சொன்னாலும், அந்நியபாஷைகளில் பேசினால் உங்களுக்கு என்னாலே எந்தப் பிரயோசனம் வரும்?

எ சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களும் தீங்குழலானாலும் சுரமண்டலமானாலும் சட்டமான தொனிகளினாலே[*] வித்தியாசம் காட்டாவிட்டால், ஊதினது அல்லது கொட்டினது இன்னதென்று எபபடித் தெரியும்?

அ அந்தப்படி எக்காளமானது சட்டமில்லாத தொனியை இட்டால், எவன் யுத்தத்திற்கு எத்தனம்பண்ணுவான்.

கூ அதுபோல நீங்களும் தெளிவான[†] பேச்சை நாவினாலே வசனியாவிட்டால், சொல்லப்பட்டது இன்னது என்று எப்படித் தெரியும்? ஆகாசத்தில் சொல்லுகிறவர்களாயிருப்பீர்களே.

ய உலகத்திலே இத்தனை விதமான பாஷைகள் உண்டாயிருக்கின்றன.

யக அவைகளில் ஒன்றும் கருத்தில்லாததல்ல; அது மெய்தான். ஆகிலும் நான் பாஷையின் கருத்தை அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேனே; பேசுகிறவன் எனக்கும் அந்நியனாயிருப்பான்.

யஉ ¶ ஆனதால் நீங்களும் ஆவிக்குரிய வரங்களை[‡] நாடுகிறவர்களாயிருக்க, சபையாருக்கு எழுப்புதலுக்கு ஏற்றவைகளையே அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளப் பாருங்கள். .

யங அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் கருத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.

யச என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமே அன்றி, என்னுடைய கருத்து (மற்றவர்களுக்குப்) பலன் அற்றதாயிருக்கும்.

யரு ஆனதால் நான் என்னசெய்யவேண்டும்? ஆவியாலே நான் விண்ணப்பம்பண்ணவேண்டும்; அதின் கருத்தும் விளங்க விண்ணபபம் பண்ணவேண்டும்; [2]நான் ஆவியாலே பாடவேண்டும்; [3]அதின்கருத்தும் விளங்கப் பாடவேண்டும்.

யசு இல்லாவிட்டால் நீ [4]ஆவியினாலே தோத்திரம்செய்யும்பொழுது, கல்லாத கூட்டத்தாரிடத்தில் இருக்கிறவன் உன் பேச்சை அறியாதபடியால், உன்னுடைய தோத்திரத்துக்கு ஆமன் என்று எப்படிச் சொல்வான்?

யஎ நீ நன்றாய்த் தோத்திரிப்பாய்; மற்றவன் எழுப்பப்படமாட்டானே.

யஅ உங்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப்பேசிக்கொண்டு, என் தேவனைத் தோத்திரிக்கிறேன்.

யகூ அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களுக்குப் பிரயோசனமாய் உபதேசம் சொல்லும்படிக்கு, என் கருத்து விளங்கத்தக்கதாக ஐந்து வார்த்தைகளை மாத்திரம் பேசவே அதிகமாய் விரும்புகிறேன்.

[1] உக வச

[*] அல்லது இராகங்களினாலே

[†] அல்லது இலகுவான

[‡] கிரேக்கு, ஆவிகளை.

[2] எபே ரு யகூ கொலோ. ங யசு

[3] சங் சஎ எ.

[4] க கொரி யக உச.

௨௰ ¶ சகோதரரே [1]நீங்கள் புத்திக்குக் குழந்தைகளாயிராமல், [2]துர்க்குணத்திற்குக் குழந்தைகளைப் போல இருங்கள்; புத்தியிலே தேறினவர்கள்* ஆவீர்களாக.

௨௧ மறு பாஷைகளாலும் மறு உதடுகளினாலும் இந்தச் சனங்களுடனே பேசுவேன்; அப்படியும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று [3]வேதத்தில் [4]எழுதியிருக்கிறதே.

௨௨ ஆனபடியினாலே அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அல்ல, அவிசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றன; தீர்க்கதரிசனம் காட்டுதல் அவிசுவாசிகளுக்கு அல்ல, விசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றது.

௨௩ ¶ அப்படியிருக்கச் சபையார் எல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து எல்லாரும் அந்நியபாஷைகளில் பேசிக்கொண்டால் கல்லாதவர்கள் அல்லது அவிசுவாசிகள் உள்ளே பிரவேசிக்கும்பொழுது [5]நீங்கள் பயித்தியம்பிடித்தவர்கள் என்பார்கள் அல்லவோ?

௨௪ எல்லாரும் தீர்க்கதரிசனம் காட்டினால், அவிசுவாசி அல்லது கல்லாதவன் ஒருவன் உள்ளே பிரவேசிக்கும்பொழுது, அவன் எல்லாராலும் கண்டிக்கப்பட்டும் எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்.

௨௫ அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாம்; இவ்விதமாய் அவன் முகங்கீழாக விழுந்து, பராபரனைப் பணிந்துகொண்டு, [6]பராபரன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறார் என்று அறிக்கையிடுவான்

௨௬ ¶ அப்படிக்கன்றி சகோதரரே, நீங்கள் கூடியிருக்கிறபொழுது உங்களில் ஒருவன் சங்கீதம் பாடவும், [7]ஒருவன் போதகம் பண்ணவும், ஒருவன் அந்நியபாஷை பேசவும், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்தவும், ஒருவன் வியாக்கியானம்பண்ணவும் வேண்டுவதென்ன? [8]அவையெல்லாம் எழுப்புதல் உண்டாகத்தக்கதாக நடக்கக்கடவது.

௨௭ அந்தப்படி ஒருவன் அந்நிய பாஷையிலே பேசவேண்டுமானால், அவன் இரண்டு, அல்லது மிகுதியானால் மூன்று (வாக்கியங்களை) மாத்திரம் வெவ்வேறாகப் பேசவும், ஒருவன் வியாக்கியானம்பண்ணவும் வேண்டும்.

௨௮ வியாக்கியானம்பண்ணுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் பராபரனுக்கும் தெரியப் பேசக்கடவன்.

௨௯ தீர்க்கதரிசனம் காட்டுகிற இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் பேசலாம்; [9]மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்.

௩௰ அப்பொழுது உளுக்காந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், [10]முந்தினவன் பேசாமலிருக்கக்கடவன்.

௩௧ எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் ஆறுதலை அடைகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒருவன் ஒருவனாகத் தீர்க்கதரிசனம் காட்டலாமே.

௩௨ தீர்க்கதரிசனம் காட்டுகிறவர்களுக்கு உண்டான [11]ஆவிக்கு உரிய வரங்கள் அதைக் காட்டுகிறவர்களுடைய அதிகாரத்திற்குள்ளே இருக்குமே

௩௩ பராபரனும் கலகத்தில்† பிரியமானவர் அல்ல, சமாதானத்தில் பிரியமானவராய் இருக்கிறாரே; [12]பரிசுத்தவான்களுடைய எல்லாச் சபைகளிலேயும் நடக்கிறது போல,

௩௪ ¶ உங்கள் சபைகளிலேயும் [13]பெண்பிள்ளைகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; [14]பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை; அவர்கள் கீழ்ப்படியவேண்டும்.

௩௫ [15]அப்படி வேதமும்சொல்லு

கி. பி. ருகூ.

[1] சங் ௱௩௧ ௨. மத் ௰௧ ௨௫. ௰௮ ௩. ௰௯ ௰௪. ரோ ௰௬ ௰௯.
[2] ௧ கொரி ௩. ௧ எபே ௪ ௰௪ எபி. ௫ ௰௨, ௰௩ மத் ௰௮ ௩ ௧ பே ௨ ௨
* அல்லது பெரியவர்கள்,
௧ கொரி ௨ ௬
[3] யோவா ௰ ௩௪
[4] ஏசா ௨௮ ௰௧, ௰௨
[5] அப் ௨ ௰௩
[6] ஏசா ௪௫ ௰௪ சகரி ௮ ௨௩
[7] ௬ வச ௧ கொரி ௰௨ ௮ ௯, ௰
[8] ௧ கொரி ௰௨ ௭ ௨ கொரி ௰௨ ௰௯ எபே ௪ ௰௨.
[9] ௧ கொரி ௰௨ ௰
[10] ௧ தெச ௫ ௰௯, ௨௰.
[11] ௧ யோ ௪ ௧
† அல்லது குழப்பத்தில்.
[12] ௧ கொரி ௰௧ ௰௬
[13] ௧ தீமோ ௨ ௰௧, ௰௨
[14] ௧ கொரி ௰௧ ௩ எபே ௫ ௨௨ கொலோ ௩ ௰௮ தீத் ௨ ௫ ௧ பே ௩ ௧
[15] ௧ மோ ௩ ௰௬

கின்றது; அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்திலே விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரிகள் சபையிலே பேசுகிறது அவலட்சணமாயிருக்கிறதே.

௩௬ அல்லது பராபரனுடையவசனம் உங்களிடத்தில்இருந்தா புறப்பட்டது? அல்லது அது உங்களிடத்திற்குமாத்திரமா வந்தது?

௩௭ ¶ [1]ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசி அல்லது ஆவியைப் பெற்றவன் என்று எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளாயிருக்கின்றன என்று அறிக்கையிடக்கடவன்.

௩௮ ஒருவன் அறியாமற்போனால், அவன் அறியாமல்போகட்டும்.

௩௯ ஆகையால் சகோதரரே, [2]தீர்க்கதரிசனம் காட்டுகிற வரத்தைத் தேடிக்கொள்வீர்களாக; அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.

௪௰ [3]சகலமும நல்லொழுக்கமாயும் சட்டத்தின்படியேயும் நடக்கக்கடவது.

௰௫. அதிகாரம்.

௧ கிறிஸ்துவின உயிர்த்தெழுதலினால், ௰௨ உயிர்த்தெழுதல இல்லையென்றவாகளுக்கு எதிரிடையாக நம்முடைய உயிாத்தெழுதலைத திருஷ்டாநதபபடுத்தி, ௨௧ அதற்கு மூலமும, ௩௫ வகையும சொல்லி, ௫௧ உயிரோடிருக்கிறவாகள அடையும் ஆறுதலைக்குறித்தும் சொன்னது

அன்றியும் சகோதரரே, [4]நான் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேனே; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, [5]அதிலே நிலைநிற்கிறீர்களே.

௨ அல்லாமலும் [6]நீங்கள் வீணாய் விசுவாசியாமல், நான் உங்களுக்குப பிரசங்கித்த விதமாய்* அதைக் கைக்கொண்டிருந்தால்† [7]இரட்சிப்பு உங்களுக்கு அதினாலே கிடைக்குமே; அந்தச் சுவிசேஷத்தை நான் உங்களுக்கு மறுபடியும் அறிவிக்கிறேன்.

௩ [8]நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக [9]ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் [10]வேதவாக்கியஙகளின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தும்,

௪ [11]வேதவாக்கியங்களின்படி அடக்கம்பண்ணப்பட்டும் மூன்றாம்நாளில் எழுந்தும் இருக்கிறார்.

௫ [12]கேபாவுக்கும், பின்பு [13]பன்னிருவருக்கும் தரிசனையானார்.

௬ அதின்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒருமிக்கத் தரிசனையானார், அவர்களில் சிலர்மாத்திரம் நித்திரை அடைந்தார்கள்; மற்ற அதிகமானவர்கள் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்.

௭ பின்பு யாக்கோபுக்கும், [14]அதின்பின்பு அபபோஸ்தலர் எல்லாருக்கும் தரிசனையானார்.

௮ [15]எல்லாருக்கும் பின்பு எனக்கும் தரிசனையானார்; நான் பூரண கர்பபத்தில் பிறவாமல், அதற்கு முன்பிறந்த* பிள்ளையைப்போல அபபோஸ்தலனானவன்.

௯ [16]நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; [17]பராபரனுடைய சபையைத் துன்பப்படுத்தினபடியினாலே, நான் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதற்குப் பாத்திரன் அல்ல.

௰ [18]பராபரனுடைய கிருபையினாலே இருக்கிறேன்; அன்றியும் அவர் என்மேல் வைத்த கிருபை வீணாயிருக்கவில்லை; [19]மற்ற எல்லாரிலும் நான் அதிகமாய் உழைத்தேன்; [20]நானாக அல்ல, என்னுடனே இருக்கிற பராபரனுடைய கிருபையினாலே அபபடிச் செய்தேன்.

௰௧ ஆகையால் நானாவது அவர்களாவது இப்படியே பிரசங்கித்து வருகிறோம்; நீங்களும் இப்படியே விசுவாசித்து வருகிறீர்கள்.

கி. பி. ௫௧.

[1] உ கொரி. ௰ எ. க யோ ௪. ௧.
[2] க கொரி. ௰௨. ௩௧. க தெச. ௫ ௨௰
[3] ௩௩ ௰௪
[4] கலா க. ௰௧
[5] உரோ ௫ ௨
[6] கலா ௩ ௪
* இரேக்கு, பிரசங்கததினாலே
† அல்லது உறுதியாயப பிடித்தால்
[7] உரோ. க ௰௬ க கொரி க ௨௧
[8] கலா க ௰௨
[9] க கொரி ௰க ௨, ௨௩
[10] சஙகீ ௨௨. ௰௫ ஏசா ௫௩ ௫, ௬ தானி ௯ ௨௬ சகரி ௰௩ எ லூக் ௨௪ ௨௬ ௪௬ அப ௩ ௰௮ ௨௬ ௨௩ கபே க ௰௩ ௨௪
[11] சங ௨ எ ௰௬ ௰ ஏசா ௫௩ ௯ ௰ ஓசே ௬ ௨ லூக் ௨௪ ௨௬, ௪௬, அப. ௨ ௨௫-௩௧ ௰௩ ௩௩, ௩௪, ௩௫ ௨௬ ௨௨, ௨௩ க பே க ௰௧
[12] லூக் ௨௪ ௩௪
[13] மத ௨௮ ௰௭ மாற் ௰௬ ௰௪ லூக ௨௪ ௩௬ யோவா ௨௰ ௰௯, ௨௬ அப ௰ ௪௧
[14] லூக் ௨௪ ௫௰ அப க ௩,௪
[15] அப ௯ ௪,௰௭ ௨௨ ௰௪, ௰௮ க கொரி ௯ க
* அல்லது சீருவழிதத
[16] எபே. ௩. ௮.
[17] அப. ௮ ௩ ௯ க கலா க ௰௩ பிலி ௩ ௬ க தீமோ க ௰௩
[18] எபே ௩ எ, ௮
[19] உ கொரி ௰௧ ௨௩ ௰௨ ௰௧

[20] மத் ௰. ௨௰. உரோ. ௰௫ ௰௮,௰௯. உ கொரி ௩ ௫ கலா உ அ எபே ௩,௭. பிலி. ௨.௰௩.

௰௨ ¶ அந்தப்படி கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறார் என்று பிரசங்கித்திருக்க மரித்தோர் உயிரோடெழும்புதல் இல்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?

௰௩ மரித்தோர் உயிரோடெழும்புதல் இல்லாவிட்டால் [1]கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

௰௪ கிறிஸ்து எழும்பாமல் இருந்தால் எங்கள் பிரசங்கம் அபத்தமாயிருக்குமே, உங்கள் விசுவாசமும் அபத்தமாயிருக்குமே.

௰௫ மரித்தோர் மெய்யாய் எழும்பாவிட்டால், பராபரன் எழுப்பாத கிறிஸ்துவைப் பராபரன் எழுப்பினாரென்று [2]அவரைக்குறித்துச் சாட்சிசொன்னதினாலே நாங்கள் பராபரனுக்காகப் பொய்ச்சாட்சிகளாயும் இருப்போமே.

௰௬ அந்தப்படி மரித்தோர் எழும்பாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

௰௭ அன்றியும் கிறிஸ்து எழும்பாமலிருந்தால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்குமே, நீங்கள் எப்பொழுதும் [3]உங்கள் பாவங்களோடே இருப்பீர்களே.

௰௮ கிறிஸ்துவைப்பற்றி நித்திரை அடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே.

௰௯ அந்தப்படி நாம் கிறிஸ்துவின்மேலே [4]இம்மைக்காகமாத்திரம் நம்பிக்கையாயிருந்தால், எல்லா மனிதர்களிலும் நாம் அதிக நிர்ப்பாக்கியம் உள்ளவர்களாய் இருப்போம்.

௨௰ ¶ அப்படி அல்ல, [5]கிறிஸ்து நித்திரை அடைந்தவர்களில் முதற்பாகமாக [6]மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறார்.

௨௧ [7]அந்தப்படி ஒரு மனிதனால் மரணம் உண்டானபடியினாலே, [8]ஒரு மனிதனாலும் மரணத்தினின்று உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கின்றது.

௨௨ ஆதாமினாலே எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவினாலே எல்லாரும் உயிராக்கப்படுவார்கள்.

௨௩ [9]அவனவன் தன் இனவரிசையிலே அப்படி ஆவான்; முதற்பாகமானவர் கிறிஸ்து, பின்பு அவர் வரும்பொழுது அவரைச் சேர்ந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.

௨௪ அதன்பின்பு முடிவிருக்கும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, [10]இராச்சியபரிபாலனத்தைப் பிதாவாகிய பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பார்.

௨௫ [11]இப்படி அவர் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டும்.

௨௬ [12]அவர் பரிகரிக்கும் கடைசி சத்துரு மரணம்.

௨௭ [13]எல்லாவற்றையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது என்று சொல்லும்பொழுது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர்தவிர என்பது வெளியரங்கமாய் இருக்கின்றது.

௨௮ [14]சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்பொழுது, பராபரனே எல்லா இடங்களிலும் எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கத்தக்கவிதமாகக் [15]குமாரன் தாமும் தமக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

௨௯ ¶ பின்னும் மரித்தோர் எழும்பாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்னசெய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம்பெறுவார்கள்?

௩௰ [16]நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாவோம்?

௩௧ [17]நாடோறும் நான் மரிக்கிறேன்; [18]அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலே உங்களைக்குறித்து எனக்கு உண்

இ. பி. ௫௯.

[1] க தெச. ௪ ௰௪
[2] அப ௨ ௨௪, ௩௨ ௪ ௰, ௰௩ ௩௰.
[3] உரோ ௪. ௨௫
[4] ௨ தீமோ. ௧ ௰௨
[5] அப ௨௬ ௨௨ ௨௩ வச கொலோ ௧ ௰௮ வெளி ௧. ௫
[6] ௧ பே ௧ ௩
[7] உரோ ௫ ௰௨, ௰௭
[8] யோவா ௰௧ ௨௫ உரோ ௬ ௨௩
[9] ௨௰ வச ௧ தெச. ௪. ௰௬, ௰௭
[10] தானி ௭ ௰௪, ௨௭
[11] சங ௱௰ ௧ அப ௨ ௩௪, ௩௫ எபே ௧ ௨௨ எபி ௧ ௰௩ ௰ ௰௩
[12] ௨ தீமோ. ௧. ௰. வெளி. ௨௰ ௰௪
[13] சங. ௮ ௬ மத் ௨௮ ௰௮ எபி ௨ ௮ ௧ பே ௩ ௨௨
[14] பிலி ௩ ௨௧
[15] ௧ கொரி ௩ ௨௩ ௰௧ ௩
[16] ௨ கொரி. ௰௧. ௨௬ கலா ௫ ௰௧
[17] உரோ ௮ ௩௬. ௧ கொரி ௪ ௯ ௨ கொரி ௪. ௰, ௰௧: ௰௧. ௨௩
[18] ௧ தெச ௨. ௰௯

4902 (7448)

டாயிருக்கிற மேன்மையின்* பேரிலே நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்.

௩௨ [1]மரித்தோர் எழும்பாவிட்டால், நான் எபேசுவிலே மனிதர் வழக்கமாய்த்† துஷ்டமிருகங்களுடனே போராடினதினாலே, எனக்கு என்ன பிரயோசனம் வரும்? நாளைக்குச் சாவோம்; ஆகையால் [2]புசிக்கவும் குடிக்கவும் கடவோம் என்று சொல்லலாமே.

௩௩ வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக; [3]பொல்லாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

௩௪ நீங்கள் பின்னும் பாவம்செய்யாமல், [4]நியாயமானபடி தெளிவு அடையுங்கள்; (உங்களில்) [5]சிலர் பராபரனை அறியாதிருக்கிறார்களே; [6]உங்களுக்கு வெட்கம்வர இதைச் சொல்லுகிறேன்.

௩௫ ¶ [7](ஆகிலும்) மரித்தோர் எப்படி எழும்புவார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள் என்று கேட்டால்,

௩௬ ஆ புத்தியீனனே, [8]நீ விதைக்கிற தானியம் கெடாவிட்டால், புதிதான பயிர் தோன்றமாட்டாதே.

௩௭ மேலும் நீ விதைக்கிறபொழுது இனிமேல் விளையும் உடலை விதையாமல், கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறுமணியையே விதைக்கிறாய்

௩௮ அதற்குப் பராபரன் தமது சித்தத்தின்படியே உடலைக் கொடுக்கிறார்; அந்தப்படி விதைவகைகள் யாவற்றிற்கும் அதற்கதற்கு ஏற்ற உடல் உண்டு.

௩௯ எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சம் அல்ல; மனிதருடைய மாம்சமும் வேறே, மிருகங்களுடைய மாம்சமும் வேறே, மச்சங்களுடையதும் வேறே, பறவைகளுடையதும் வேறே,

௪௰ பரமண்டலத்திற்கு உரிய தேகங்களும் உண்டு; பூமிக்கு உரிய தேகங்களும் உண்டு, பரமண்டலத்திற்கு உரிய தேகங்களுடைய மகிமையும் வேறே, பூமிக்கு உரிய தேகங்களுடைய மகிமையும் வேறே.

௪௧ சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, அவைகளில் ஒரு நட்சத்திரத்தினுடைய மகிமை மற்றொரு நட்சத்திரத்தின் மகிமைக்கு மேற்படுகின்றதே.

௪௨ ¶ [9]அப்படிப்போல, மரித்தோர் உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கும்; அழிவுள்ள சரீரம் விதைக்கபபட்டு, பின்பு அழிவில்லாமையாய் எழுந்திருக்கும்.

௪௩ [10]கனஈனமானசரீரம் விதைக்கபபட்டு, பின்பு மகிமையாய் எழுந்திருக்கும்; பலஈனமுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப பின்பு பலமாய் எழுந்திருக்கும்

௪௪ சீவனுள்ள சரீரம் விதைக்கப்பட்டும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; இரத்தமாம்சமுடைய சரீரமும் உண்டு; ஆவிக்குரிய சரீரமும் உண்டு.

௪௫ ஆனதால் வேதத்திலே எழுதியிருக்கிறபடி [11]முந்தின மனிதனாகிய ஆதாம் சீவாத்துமாவானான்; [12]பிந்தின ஆதாம் [13]உயிர்ப்பிக்கிற ஆவியானார்.

௪௬ ஆவியான சரீரம் முந்தினதாயிராமல், இரத்த மாம்சமுடைய சரீரமே முந்தினதாயிருக்கிறது.

௪௭ பின்பு ஆவியான சரீரம் உண்டாம்; [14]முந்தின மனிதன் பூமியின் [15]மண்ணானவன்; [16]இரண்டாம் மனிதன் பரமண்டலத்திற்குரிய கர்த்தர்.

௪௮ மண்ணானவன் எப்படியோ அப்படி மண்ணானவர்களும் இருப்பார்கள்; [17]பரமண்டலத்திற்குரியவர் எப்படியோ அப்படி பரமண்டலத்திற்குரியவர்களும் இருப்பார்கள்.

௪௯ [18]மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்

கி. பி. ௫௯.

* சில பிரதிகளில், உங்களுடைய மேன்மையின்

[1] ௨ கொரி ௧ ௮

† மனித வழக்கமாய்ப் பேசில்.

[2] பிரச ௨ ௨௪ ஏசா ௨௨ ௰௩ ௫௬ ௰௨ லூக் ௰௨ ௰௯

[3] ௧ கொரி ௫ ௬

[4] உரோ ௰௩ ௰௧ எபே ௫ ௰௪.

[5] ௧ தெச ௪ ௫

[6] ௧ கொரி. ௬ ௫

[7] எசே ௩௭ ௩

[8] யோவா. ௰௨ ௨௪

[9] தானி ௰௨. ௩. மத் ௰௩ ௪௩.

[10] பிலி ௩. ௨௧

[11] ௧ மோ ௨ ௭

[12] உரோ ௫ ௰௪

[13] யோவா. ௫. ௨௧ ௬. ௩௩, ௩௯, ௪௰, ௫௭ பிலி ௩. ௨௧ கொலோ. ௩ ௪

[14] யோவா ௩ ௩௧

[15] ௧ மோ. ௨. ௭ ௩ ௰௯

[16] யோவா. ௩ ௰௩, ௩௧.

[17] பிலி ௩ ௨௰, ௨௧

[18] ௧ மோ. ௫ ௩

கிறதுபோல, [1]பரமண்டலத்திற்குரியவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.

௫௰ ¶ சகோதரரே, [2]மாம்சமும் இரத்தமும் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிக்கக்கூடாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிக்கமாட்டாது; ஆனதால் இவைகளைச் சொன்னேன்.

௫௧ மேலும் நான் உங்களுக்கு இரகசியத்தை அறிவிக்கிறேன்; (என்னவெனில்,) [3]நாம் எல்லாரும் நித்திரை அடைந்துபோவதில்லை; ஆகிலும் எல்லாரும் கடைசி எக்காளம் தொனிக்கும்பொழுது ஒரு நிமிஷத்திலே [4]ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம்.

௫௨ [5]எக்காளம் தொனிக்குமே; அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள்.

௫௩ அன்றியும் அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், [6]சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டியபடியால், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

௫௪ ¶ அந்தப்படி அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்பொழுது, [7]மரணம் செயமாக விழுங்கப்பட்டதென்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

௫௫ [8]ஆ மரணமே, உன் கூர்மை எங்கே? பாதாளமே,* உன் செயம் எங்கே? மரணத்தின் கூர்மை பாவம்.

௫௬ [9]பாவத்தின் பலன் நியாயப்பிரமாணம்.

௫௭ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே, [10]நமக்குச் செயம்கொடுத்திருக்கிற [11]பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக.

௫௮ [12]ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, [13]கர்த்தரைக் குறித்து உங்கள் வேலை வீணாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிக்கொள்ளுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

௰௬. அதிகாரம்.

௧ எருசலேமிலுள்ள எளிய கிறிஸ்தவர்களுக்குத் தருமங்களைச் சேர்த்து அனுப்பவேண்டுமென்றும், ௰ தீமோத்தேயுவை அங்கிகாரம்பண்ணவேண்டுமென்றும் சொல்லி, ௰௩ சில பட்சமுள்ள புத்திமதிகளையும் எழுதி, ௰௯ அநேகரை வாழ்த்தி நிருபத்தை முடித்தது.

[14]பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தருமங்களைக்குறித்து நான் கலாத்தியதேசத்துச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே, நீங்களும் செய்வீர்களாக.

௨ நான் வரும்பொழுதே தருமம் சேர்க்குதல் உண்டாயிராதபடிக்கு, உங்களில் அவனவன் [15]வாரத்து முதல்நாள்தோறும் தன்தன் வாழ்வுக்குத்தக்கதாக எதையாகிலும் எடுத்து, தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.

௩ நான் வந்திருக்கும்பொழுது, உங்களுடைய உபகாரத்தை† எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு நீங்கள் [16]நிருபங்களினாலே ஏற்படுத்துகிறவர்கள் எவர்களோ, அவர்களை அனுப்புவேன்.

௪ [17]நானும் போகத் தகுதியானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.

௫ ¶ [18]நான் மக்கெதோனியாநாட்டின் வழியாய்ப் போகிறேன்; அதின் வழியாய்ப் போகும்பொழுது, உங்களிடத்திற்கு வருவேன்.

௬ ஒருவேளை நான் உங்களிடத்தில் சிலகாலம் தரித்திருப்பேன்; [19]நான் எங்கேபோனாலும், நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, ஒருவேளை மாரிகாலம் முடியுமளவும் இருப்பேன்.

௭ ஆனதால் நான் இப்பொழுது போகிற பிரயாணத்திலே உங்க

கி. பி. ௫௯.

[1] உரோ ௮. ௨௯. ௨ கொரி ௩. ௰௮. ௪. ௰௧. பிலி ௩. ௨௧. ௧ யோ ௩. ௨.
[2] மத் ௰௬. ௰௭. யோவா ௩. ௩, ௫.
[3] ௧ தெச ௪. ௰௫, ௰௬, ௰௭.
[4] பிலி ௩. ௨௧.
[5] சகரி ௯. ௰௪. மத் ௨௪. ௩௧. யோவா ௫. ௨௫. ௧ தெச ௪. ௰௬.
[6] ௨ கொரி ௫. ௪.
[7] ஏசா ௨௫. ௮. எபி ௨. ௰௪, ௰௫. வெளி ௨௰. ௰௪.
[8] ஓசே ௰௩. ௰௪.
* அல்லது பிரேதக்குழியே.
[9] உரோ ௪. ௰௫. ௫. ௰௩. ௭. ௫, ௰௩.
[10] ௧ யோ ௫. ௪, ௫.
[11] உரோ ௭. ௨௫.
[12] ௨ பே ௩. ௰௪.
[13] ௧ கொரி ௩. ௮.
[14] அப ௰௧. ௨௯. ௨௪. ௰௭. உரோ ௰௫. ௨௫. ௨ கொரி ௮. ௪. ௯. ௧, ௰௨. கலா ௨. ௰.
[15] அப ௨௰. ௭. வெளி ௧. ௰.
† இரேக்கு, கொடையை, ௨ கொரி ௮. ௪, ௬, ௰௯.
[16] ௨ கொரி ௮. ௰௯.
[17] ௨ கொரி ௮. ௪, ௰௯.
[18] அப ௰௯. ௨௧. ௨ கொரி ௧. ௰௬.
[19] அப ௰௫. ௩. ௰௭. ௰௫. ௨௧. ௰௫. ௨௧. ௨ கொரி. ௧ ௰௬.

ளைப் பார்க்கமாட்டேன்; [1]கர்த்தர் உத்தரவு கொடுத்தால், உங்களிடத்தில் சிலகாலம் தரித்திருக்கலாம் என்று நம்பியிருக்கிறேன்.

௮ இந்த எபேசுபட்டணத்திலே [2]பெரிதும்பெலனுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறபடியினாலும் [3]விரோதம் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறபடியினாலும்,

௯ பெந்தக்கோஸ்து பண்டிகைவரைக்கும் இங்கே இருப்பேன்.

௰ ¶ [4]தீமோத்தேயு உங்களிடத்திற்கு வரும்பொழுது, அவன் உங்களிடத்தில் பயமில்லாமல் இருக்கும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; [5]என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே.

௰௧ ஆனபடியினாலே [6]ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; அன்றியும் அவனும் அவனுடனேகூட இருக்கிற சகோதரரும் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், [7]நீங்கள் அவனைச் சமாதானத்தோடே என்னிடத்தில் வரும்படிக்கு வழிவிட்டனுப்புங்கள்.

௰௨ சகோதரனாகிய [8]அப்பொல்லோவும் இந்தச் சகோதரரோடுங்கூட உங்களிடத்தில் வரும்படிக்கு, அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன்; அப்படியிருந்தும் இப்பொழுது போக அவனுக்கு மனதே இல்லை; அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்பொழுது உங்களிடத்தில் வருவான்.

௰௩ ¶ [9]விழித்திருங்கள் [10]விசுவாசத்திலே நிலைத்திருங்கள்; புருஷராயிருங்கள்; [11]பெலன்கொள்ளுங்கள்.

௰௪ [12]உங்கள் காரியங்களை எல்லாம் அன்போடே செய்வீர்களாக.

௰௫ சகோதரரே, [13]ஸ்தேவானுடைய குடும்பத்தார் அகாயதேசத்திலே [14]முதற்பாகமானவர்கள் என்றும், [15]பரிசுத்தவான்களுக்கு ஊழியம்செய்யும்படிக்கு அவர்கள் தங்களை நியமித்தவர்கள் என்றும் அறிந்திருக்கிறீர்களே.

௰௬ இப்படிப்பட்டவர்களுக்கும் உதவிசெய்து [16]பிரயாசப்படுகிற மற்றயாவருக்கும் [17]நீங்களும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

௰௭ ஸ்தேவானும் பொருத்துநாத்தும் அகாயிக்குசும் வந்துசேர்ந்ததினாலே சந்தோஷமாய் இருக்கிறேன்.

௰௮ உங்கள் ஆவிக்குச் செய்ததுபோல [18]அவர்கள் என்னுடைய ஆவிக்கும் ஆறுதல்செய்தபடியால் [19]நீங்கள் இல்லாததினால் உண்டான குறைவை நீக்கி நிறைவுண்டாக்கினார்கள்; [20]இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணிக்கொள்வீர்களாக.

௰௯ ¶ ஆசிய தேசத்திலுள்ள சபைகள் உங்களை வாழ்த்துதல் செய்கிறார்கள்; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் [21]தங்கள் வீட்டிலே கூடிய சபையோடுங்கூடக் கர்த்தரைப் பற்றிய உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.

௨௰ சகோதரர் எல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள்; [22]நீங்கள் ஒருவரை ஒருவர் பரிசுத்தமான முத்தத்தினால் வாழ்த்துதல்செய்வீர்களாக.

௨௧ ¶ [23]பவுலாகிய நான் என் கையெழுத்தோடே வாழ்த்துதல் செய்கிறேன்.

௨௨ ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் [24]அன்புகூராமற்போனால், [25]அவன் சபிக்கப்பட்டவனாய் இருப்பான்; [26]அவனுக்குத் தண்டிப்பாகக் கர்த்தா வருவார்

௨௩ கர்த்தராகிய [27]இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது.

௨௪ என்னுடைய அன்பு கிறிஸ்து இயேசுவைப் பற்றிக்கொள்ளுகிற உங்கள் எல்லாரோடுங்கூட இருக்கின்றது.—ஆமென்.

கி. பி. ௫௯.

1 அப ௰௮ ௨௧ ௧ கொரி ௪ ௰௯ யாக் ௪ ௰௫.
2 அப ௰௪. ௨௭ ௨ கொரி ௨ ௰௨ கொலோ ௪. ௩ வெளி ௩ ௮
3 அப ௰௯ ௯
4 அப ௰௯ ௨௨ ௧ கொரி ௪ ௰௭
5 உரோ. ௰௬ ௨௧ பிலி ௨ ௨௰, ௨௨ ௧ தெச ௩ ௨
6 ௧ தீமோ ௪ ௰௨
7 அப ௰௫ ௩௩
8 ௧ கொரி. ௧ ௰௨ ௩ ௬
9 மத ௨௪ ௪௨ ௨௫ ௰௩ ௧ தெச ௫ ௬ ௧ பே ௫ ௮
10 ௧ கொரி ௰௫ ௧ பிலி ௧ ௨௭ ௪ ௧ ௧ தெச ௩. ௮ ௨ தெச ௨ ௰௫
11 எபே ௬ ௰ கொலோ ௧ ௰௧
12 ௧ கொரி ௰௪ ௧ ௧ பே ௪ ௮
13 ௧ கொரி ௧ ௰௬
14 உரோ ௰௬ ௫
15 ௨ கொரி ௮ ௪ ௯ ௧. எபி ௬. ௰
16 எபி ௬ ௰
17 எபி ௰௩ ௰௭
18 கொலோ ௪ ௮
19 ௨ கொரி ௰௧ ௯ பிலி ௨ ௩௰ பிலே ௰௩
20 பிலி ௨ ௨௯ ௧ தெச ௫ ௰௨.
21 உரோ ௰௬ ௫, ௰௫ பிலே ௨
22 உரோ ௰௬ ௰௬
23 கொலோ ௪ ௰௮ ௨ தெச ௩ ௰௭
24 எபே ௬ ௨௪
25 கலா ௧ ௮, ௯.
26 யூதா ௰௪, ௰௫
27 உரோ ௰௬ ௨௰

II. CORINTHIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்
கொரிந்தியருக்கு எழுதின
இரண்டாம் நிருபம்.

௧. அதிகாரம்.

௧ அப்போஸ்தலன் தன் உபத்திரவங்களிலேயெல்லாம் விசேஷமாய், ௮ ஆசியாவிலே அடைந்த துன்பத்தில் உண்டான ஆறுதலினாலே சபைக்கு ஆறுதல் சொல்லி, ௧௨ தான் சுவிசேஷத்தின் மாறாத சத்தியத்தை உத்தமமாய்ப் பிரசங்கித்ததற்குத் தன் மனச்சாட்சியையும், அவர்களுடைய மனச்சாட்சியையும் சாட்சியிட்டு, ௧௫ தான் கொரிந்துக்கு வராததற்கு நியாயம் சொன்னது.

பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவின் [1]அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும் கொரிந்துபட்டணத்திலுள்ள பராபரனுடைய சபைக்கும் [2]அகாயதேசமெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்கூட எழுதுகிறதாவது.

௨ நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் [3]கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ ¶ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமாய், பராபரனுமாய், மிகுந்த தயையுடைய பிதாவுமாய், சகலவிதமான ஆறுதலையும் அநுக்கிரகிக்கிற [4]தேவனுமாய் இருக்கிறவர் தோத்திரிக்கப்படக்கடவர்.

௪ அவரே எங்களுக்கு வரும் சகல உபத்திரவகாலங்களிலேயும் எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்; பராபரனாலே நாங்கள் அடைகிற ஆறுதலினாலே சகலவித உபத்திரவகாலங்களிலும் அகப்படுகிற மற்றவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியாய் இருக்கிறோம்.

௫ எப்படியெனில், [5]கிறிஸ்துவின்நிமித்தம் பாடுகள் எங்கள்மேலே பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகின்றது.

௬ ஆனதால் நாங்கள் உபத்திரவப்பட்டால், [6]அது உங்கள் ஆறுதலுக்காகவும், இரட்சிப்புக்காகவும் இருக்கும்; நாங்கள் ஆறுதலடைந்தால், அதுவும் உங்கள் ஆறுதலுக்காக இருக்கும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல, நீங்களும் படுகிற பாடுகளைப் பொறுமையோடே சகிக்கிறதினாலே அந்த ஆறுதல் பலனைச் செய்கின்றது.*

௭ [7]அப்படி நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுமல்லாமல் எங்களோடேகூட ஆறுதலையும் அடைகிறீர்கள் என்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறோம்.

௮ ¶ ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு வந்த [8]உப

கி. பி. ௬௰

1 ௧ கொரி ௧ ௧
எபே ௧ ௧
கொலோ ௧ ௧
௧ தீமோ ௧ ௧
௨ தீமோ ௧ ௧
2 பிலி ௧ ௧
கொலோ ௧ ௨
3 உரோ ௧ ௭
௧ கொரி ௧ ௩
கலா ௧ ௩
பிலி ௧ ௨
கொலோ ௧ ௨
௧ தெச ௧ ௧
௨ தெச ௧ ௨
பிலே ௩
4 எபே ௧ ௩
௧ பேது ௧ ௩
5 அப ௯ ௪
௨ கொரி ௪ ௰
கொலோ ௧ ௨௪
6 ௨ கொரி ௪ ௰௫
* அல்லது உண்டாக்கப்படுகின்றது
7 உரோ ௮ ௰௭
௨ தீமோ ௨ ௰௨
8 அப ௰௯ ௨௩
௧ கொரி ௰௫ ௩௨

கி. பி. ௬௰.

த்திரவத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டும் என்று எங்களுக்கு மனதில்லை; என்னவெனில் பிழைப்போமா என்றும் நாங்கள் மிகவும் சந்தேகப்படத்தக்கதாக, (எங்கள்) பலத்திற்கு மிஞ்சின அதிக பாரம் எங்களுக்கு உண்டாயிற்று.

௯ மேலும் மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.* [1]அது எங்கள்மேலே அல்ல, மரித்தோரை எழுப்புகிற பராபரன்மேலே நாங்கள் நம்பிக்கையாய் இருக்கும்படிக்கு எதுவாயிருந்தது.

௰ [2]அப்படிப்பட்ட மரணத்தினின்று அவர் எங்களை இழுத்தார்; இப்பொழுதும் இழுக்கிறார்; பின்னும் இழுப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்.

௰௧ அதற்காக [3]நீங்களும் விண்ணப்பத்தினாலே எங்களுக்கு உதவிசெய்யும்பொழுது, அநேகர் நிமித்தம் எங்களுக்கு உண்டான [4]ஈவுக்காக அநேகராலே எங்கள் நிமித்தம் தோத்திரங்களும் செலுத்தப்படும்.

௰௨ ¶ அதற்கு எதுவாக எங்களுடைய புகழ்ச்சி என்னவென்றால், நாங்கள் உலகத்திலே விசேஷமாக உங்களிடத்திலே கபடமில்லாமல் [5]திவ்விய உண்மையோடும் [6]மாம்சத்திற்கு எற்ற ஞானத்தோடே அல்ல, பராபரனுடைய கிருபையோடும் சஞ்சரித்தோம் என்று எங்கள் மனது எங்களுக்குச் சாட்சிசொல்லுகின்றது; இதுவே எங்களுடைய புகழ்ச்சி.

௰௩ ஆனதால் (இங்கே) நீங்கள் வாசித்தும் அறிந்து ஒத்துக்கொண்டும் இருக்கிற பொருள்களையே அன்றி, வேறே பொருள்களை நாங்கள் உங்களுக்கு எழுதுகிறதில்லை; முடிவுபரியந்தமும் அப்படியே அறிந்து ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்பியிருக்கிறேன்.

௰௪ கர்த்தராகிய இயேசுவினுடைய நாளிலே [7]நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பதுபோல, [8]நாங்களும் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருக்கிறதை ஒரு பாகமாய் அறிந்து ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே.

௰௫ ¶ இப்படிப்பட்ட நம்பிக்கையினாலே நான் [9]உங்களுக்கு மறுபடியும் உபகாரம்† உண்டாகும்படிக்கு,

௰௬ [10]முதலாவது உங்களிடத்தில் வரவும், உங்கள் ஊர்வழியாக மக்கேதோனியாநாட்டுக்குப் போகவும், [11]மக்கேதோனியாவை விட்டுத் திரும்ப உங்களிடத்தில் வரவும், உங்களால் யூதேயா நாட்டுக்கு வழிவிட்டு அனுப்பப்படவும் யோசனையாய் இருந்தேன்.

௰௭ இப்படி நான் வீணாகவா யோசித்தேன்? அல்லது என்னிடத்திலே ஆம் என்பது ஆமென்றும் அல்லவென்பது அல்லவென்றும் இருக்கத்தக்கதாக, நான் யோசிக்கிறவைகளைத் [12]தேக இச்சையின்படியா யோசிக்கிறேன்?

௰௮ ¶ அப்படியல்ல, நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை‡ ஆம் என்றும், அல்ல என்றும் இருக்கவில்லை என்கிறதற்கு உண்மையுள்ள பராபரனே சாட்சியாய் இருக்கிறார்.

௰௯ [13]பராபரனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுக்கிறிஸ்துவினாலே ஆமென்றும் ஆமனென்றும் இருக்கிறபடியால்,

௨௰ பராபரனுடைய மகிமை பிரஸ்தாபமாகும்படிக்கு, என்னாலும் சிலுவானுவினாலும் தீமோத்தேயுவினாலும் உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட [14]பராபரனுடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும் ஆமென்றும் அல்லவென்றும் இராமல், [15]ஆம் என்று (எப்பொழுதும் ஒரேவிதமாய்) இருந்தாரே.

௨௰௧ எங்களையும் உங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி,

---

* அல்லது தீர்த்திருந்தோம்.

[1] எரே ௰௭. ௫, ௭

[2] ௨ பே ௨. ௯

[3] ௨ரோ ௰௫. ௩௰ பிலி ௧ ௰௯ பிலே ௨௨

[4] ௨ கொரி ௪ ௰௫

[5] ௨ கொரி. ௨ ௰௭ ௪ ௨.

[6] ௧ கொரி ௨ ௪, ௰௩

[7] பிலி ௨ ௰௬ ௪ ௧ ௧ தெச ௨ ௰௯, ௨௰

[8] ௨ கொரி ௫ ௰௨

[9] ௨ரோ ௧ ௰௧

† அல்லது கிருபை

[10] ௧ கொரி ௪ ௰௯

[11] ௧ கொரி ௰௬. ௫

[12] ௨ கொரி ௰ ௨

‡ அல்லது பிரசங்கம்

[13] ௨ரோ ௰௫. ௮. ௯.

[14] மாற் ௧ ௧ லூக் ௧ ௩௫ அப் ௯ ௨௰.

[15] எபி ௰௩. ௮.

[1]நமக்கு அபிஷேகம்பண்ணினவர் பராபரன்.

௨௨ [2]அவரும் நம்மை முத்திரைப்படுத்தி, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் [3]அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்

௨௩ ¶ [4]நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்துபட்டணத்திற்கு வாராதிருக்கிறேன்; [5]இதைக்குறித்து என் ஆத்துமாவுக்குச் சாட்சியாகப் பராபரனையே அழைக்கிறேன்.

௨௪ [6]விசுவாசத்தின் நிமித்தம் நாங்கள் உங்களைப் பலவந்தமாய் ஆளுகிறவர்களாக அல்ல, [7]நீங்கள் (இதுவரைக்கும்) விசுவாசத்திலே நிலைநிற்கிறபடியால், உங்கள் சந்தோஷத்திற்கு உதவிக்காரராகவே இப்படிச் சொல்லுகிறேன்.

௨. அதிகாரம்

௧. தான் அவர்களிடத்தில் வாராததற்கு நியாயம் சொல்லி, ௬ புறம்பாக்கப்பட்டவன் உத்தம மனஸ்தாபம் அடைந்ததினால் தான் அவனை மன்னித்துத் தேற்றக்கட்டளையிட்டு, ௰௨ தான் துரோவாவிலிருந்து மக்கேதோனியாவுக்குப் போன முகாந்தரத்தையும், ௰௪ தன் பிரசங்கத்தினாலே பார்பான எங்கும் உண்டாக்கின நற்பலனையும்குறித்துச் சொன்னது

ஆனதால், [8]துக்கத்துடனே நான் உங்களிடத்திலே திரும்ப வாராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானம் செய்தேன்.

௨ நான் உங்களைத் துக்கப்படுத்தினால் என்னாலே துக்கம் அடைந்தவனே அல்லாமல், எவன் என்னைச் சந்தோஷப்படுத்துவான்?

௩ ஆகையால் [9]என்னுடைய சந்தோஷம் உங்கள் எல்லாருக்கும் சந்தோஷமாய் இருக்குமென்று நான் உங்கள் எல்லாரையும் நம்பிக்கொண்டு, [10]நான் வரும்பொழுது எனக்குச் சந்தோஷம் உண்டாக்கவேண்டியவர்களால் நான் துக்கம் அடையாதபடிக்கு, (முன்னே) அப்படித்தானே உங்களுக்கு எழுதினேன்.

௪ அன்றியும் மிகுந்த வியாகுலமும் மனஇடுக்கமும் அடைந்தவனாய், அதிகமான கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்; [11]நீங்கள் துக்கப்படும்படிக்கு அல்ல, உங்கள்மேலே அதிகமாயிருக்கிற என்னுடைய அன்பை நீங்கள் அறியும்படிக்கே அப்படிச் செய்தேன்.

௫ ¶ [12]துக்கம் உண்டாக்கினவன் [13]என்னை (மாத்திரமல்ல) நான் அதிக பாரம் வையாதபடிக்கு, (என்னாலே) ஒருவிதமாய் உங்கள் எல்லாரையும் துக்கப்படுத்தினான்.

௬ அப்படிப்பட்டவனுக்கு [14]அநேகரால் உண்டான இந்தத் தண்டனை* போதும்.

௭ ஆனதால் அவன் அதிக துக்கத்தினாலே விழுங்கப்படாதபடிக்கு, [15]நீங்கள் அதிக சந்தோஷமாய் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும்.

௮ அந்தப்படி நீங்கள் உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிப்பீர்களாக என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்

௯ அதற்காகவும் [16]நீங்கள் சகலத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்கள் குணத்தை அறியவும் இப்படி எழுதியிருந்தேன்.

௰ ஆனதால் யாருக்கு மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் (இப்பொழுது) மன்னித்தேனோ, அதை நான் உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே† மன்னித்தேன்.

௰௧ சாத்தானுடைய யோசனைகள் எங்களுக்குத் தெரியாமல் இருக்கவில்லை; ஆனதால் நாம் அவனாலே மேற்கொள்ளப்படாதபடிக்கு அப்படிச் செய்தேன்.

௰௨ ¶ மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி [17]துரோவாப்பட்டணத்

கி. பி. ௬௰.

1 ௧ யோ ௨. ௨௰, ௨௭
2 எபே ௧. ௰௩ ௪ ௩௰ ௨ தீமோ ௨. ௰௯ வெளி ௨. ௰௭
3 ௨ கொரி ௫ ௫ எபே ௧. ௰௪
4 ௧ கொரி ௪ ௨௧ ௨ கொரி ௨. ௧ ௰௨. ௨௰ ௰௩. ௨, ௰
5 உரோ ௧ ௯ ௨ கொரி ௰௧ ௩௧, கலா ௧ ௨௰ பிலி ௧ ௮
6 ௧ கொரி ௩ ௫ ௧ பே ௫ ௩
7 உரோ ௰௧ ௨௰ ௧ கொரி ௰௫ ௧
8 ௨ கொரி ௧ ௨௩ ௰௨ ௨௰, ௨௧ ௰௩ ௰
9 ௨ கொரி. ௭ ௰௩ ௮ ௨௨ கலா. ௫ ௰
10 ௨ கொரி ௰௨ ௨௧
11 ௨ கொரி ௭ ௮ ௯, ௰௨
12 ௧ கொரி ௫ ௧
13 கலா ௪ ௰௨
14 ௧ கொரி ௫ ௪, ௫ ௧ தீமோ ௫ ௨௰
* அல்லது கண்டிப்பு
15 கலா ௬ ௧
16 ௨ கொரி ௭ ௰௫ ௰௩ ௯
† அல்லது கிறிஸ்துவுக்காக
17 அப [illegible]

திலே வந்தபொழுது, [1]கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கபபட்டிருக்கையில்,

௰௩ நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே [2]என் ஆவிக்கு அமைதல் இருக்கவில்லை; ஆனதால் நான் அவர்களாலே அனுப்பப்பட்டு, மக்கேதோனியா நாட்டுக்குப புறபபட்டுப் போனேன்.

௰௪ ¶ கிறிஸ்துவினாலே எங்களை எப்பொழுதும வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எஙகளைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிபபடுத்துகிற பராபரனுககுத் தோத்திரம் உண்டாவதாக.

௰௫ [3]இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் [4]கெட்டுப்போகிறவர்களுககுள்ளேயும் நாஙகள் பராபரனுக்குக் கிறிஸ்துவின் நற்கநதமாய் இருக்கிறோமே.

௰௬ [5]கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கு ஏதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே சீவனுககு ஏதுவான சீவவாசனையாகவுமே இருக்கிறோம்; [6]இவைகளைப (போதிக்கிறதற்கு) யார் தகுதியாயிருக்கிறார்கள்.

௰௭ அநேகர் செய்கிறதுபோல [7]நாஙகள் பராபரனுடைய வசனத்தைக் கலபபாய்ப* பேசாமல், [8]துபபுரவாகவும் பராபரனாலே பெற்றதாகவும் பராபரனுக்கு முன்பாகவும் கிறிஸ்துவைக்குறித்துப† பேசுகிறோம்.

௩. அதிகாரம்.

௧ கள்ளபபோதகர்கள் தனபேரில் வீண்பெருமை சமததாதபடிக்குக் கொரிந்தியர் விசுவாசமும், நற்கிரியையுமே தன் ஊழியத்துக்குத் திருஷ்டாந்தமென்றும், ௬. பழைய உடம்படிக்கையின் ஊழியக்காரருக்கும் புது உடம்படிக்கையின ஊழியக்காரருக்கும் வித்தியாசத்தைக் காண்பித்து, ௰௨. குற்றஞ்சாற்றுகிற நியாயபபிரமாணத்தைபபார்க்கிலும் சீவனையும், விடுதலையையும் கொடுக்கிற சுவிசேஷம மேனமையுள்ளதுபோலத் தன் ஊழியம் பழைய உடமபடிக்கையின் ஊழியத்தைபபார்க்கிலும் மேன்மையுள்ளதென்றும் சொன்னது.

[9]எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடஙகுகிறோமா? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறதுபோல, [10]உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும், அல்லது உங்களிடத்தில் உபசார நிருபங்களை வாங்கவும், எங்களுக்கு வேண்டுமோ?

௨ [11]நீங்களே எங்களுக்கு அப்படிப்பட்ட நிருபமாயிருக்கிறீர்கள்; அது எங்கள் இருதயஙகளில் எழுதபபட்டிருக்கிறது; மேலும் அது சகல மனிதராலும் அறிந்து வாசிக்கபபட்டு வருகின்றது.

௩ நீஙகளே [12]எஙகள் ஊழியத்தில் உணடான கிறிஸ்துவினுடைய நிருபமாக வெளியரஙகமாக்கப்பட்டவாகள்; அது மையினாலல்ல, சீவனுள்ள பராபரனுடைய ஆவியினாலே [13]கற்பலகைகளில் அல்ல, [14]மாம்சமான இருதயஙகளாகிய பலகைகளிலே எழுதபபட்டிருக்கின்றது.

௪ ¶ இப்படிபபட்ட நம்பிக்கையை நாங்கள் பராபரனுக்குமுன்பாகக் கிறிஸ்துவின் மூலமாகக் கொண்டிருககிறோம்.

௫ ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே [15]திராணியுள்ளவர்களாக அல்ல, [16]எங்களுடைய திராணி பராபரனால் உண்டாயிருக்கின்றது.

௬ நாஙகள் [17]புது உடம்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி [18]அவரே எஙகளுக்குத் திராணியைக் கொடுத்தார்; அந்த உடம்படிக்கை [19]எழுத்திற்குரியதல்ல, ஆவிக்குரிய உடம்படிக்கையாயிருக்கின்றது. [20]எழுத்திற்குரியது கொலைசெய்கின்றது; [21]ஆவிக்குரியது உயிர்ப்பிக்கின்றதே.‡

௭ [22]கற்களில் எழுத்துக்களால் பதிந்திருந்த [23]மரணத்திற்கு ஏது

கி. பி. ௬௰.

1 ௧ கொரி ௰௬. ௯
2 ௨ கொரி. ௭. ௫, ௬.
3 ௧ கொரி ௧ ௰௮
4 ௨ கொரி ௪ ௩
5 லூக் ௨. ௩௪ யோவா ௯. ௩௯. ௧ பே ௨, ௭, ௮
6 ௧ கொரி ௰௫. ௰ ௨ கொரி. ௩ ௫, ௬
7 ௨ கொரி ௪ ௨ ௰௧ ௰௯ ௨ பே ௨ ௩
* அலலது வஞ்சனையாய
8 ௨ கொரி ௧ ௰௨ ௪ ௨
† அலலது கிறிஸதுவுககுளளாகி
9 ௨ கொரி ௫ ௰௨ ௰ அ, ௰௨ ௰௨ ௰௧
10 அப ௰௮ ௨௭
11 ௧ கொரி ௯ ௨
12 ௧ கொரி ௩ ௫
13 ௨ மோ ௨௪ ௰௨ ௩௪ ௧
14 சங ௩௰ அ எரே. ௩௧ ௩௩ எசே ௰௧ ௰௯ ௩௬ ௨௬ எபி அ ௰
15 யோவா ௰௫ ௫ ௨ கொரி ௨ ௰௬
16 ௧ கொரி ௰௫ ௰ பிலி ௨ ௰௩
17 எரே ௩௧ ௩௧ மத் ௨௬ ௨அ எபி அ ௯, அ
18 ௧ கொரி ௩ ௫ ௰௫ ௰ ௨ கொரி ௫ ௰அ எபே ௩ ௭ கொலோ ௧ ௨௫, ௨௯ ௧ தீமோ ௧ ௰௨, ௰௨ ௨ தீமோ ௧ ௰௧
19 ௨ரோ ௨ ௨௭, ௨௯ ௭ ௬
20 ௨ரோ ௩ ௨௦ ௪ ௰௫ ௭, ௯, ௰. ௰௧ கலா ௩ ௰
21 யோவா ௬ ௬௩ ௨ரோ அ ௨

---

‡ அல்லது உயிரைக் கொடுக்கின்றது.—22 ௨ மோ ௩௪ ௧, ௨ அ ௫ மோ ௯. ௧ ௯ —23 ௨ரோ ௭ ௯.

வான ஊழியத்தை மோசே செய்தபொழுது, அவனுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானதால், [1]இஸ்ரவேல் சந்ததியார் அவனுடைய முகத்தை நோக்கிப் பார்க்கமாட்டாமல் இருந்தார்களே; ஒழிந்துபோன மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருக்க,

௮ ஆவிக்கேற்ற [2]உடம்படிக்கையின் ஊழியம் மிகவும் அதிகமாய் மகிமையுள்ளதாய் இருக்குமல்லவா?

௯ ஆக்கினைத்தீர்ப்பைக் கொடுத்த ஊழியம் மகிமையுள்ளதாயிருக்க, [3]நீதியைக் கொடுக்கிற ஊழியம் மிகவும் அதிகமான மகிமையாய் இருக்கும் அல்லவா?

௰ இதின்பொருட்டாக மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற அதிக மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல.

௰௧ அன்றியும் ஒழிந்துபோனது மகிமைகொண்டிருப்பதால், நிலைநிற்பது மிகவும் அதிகமாய் மகிமையுள்ளதாயிருக்குமே.

௰௨ ¶ ஆனதால் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாய், [4]நாங்கள் மிகுந்த தயிரியத்தோடே* நடக்கிறோம்.

௰௩ அன்றியும் [5]ஒழிந்துபோகிறதின் முடிவை இஸ்ரவேல் சந்ததியார் நோக்கிப்பாராதபடிக்கு, [6]மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டதுபோல, நாங்கள் போடுகிறதில்லை.

௰௪ [7]அவர்களுடைய புத்தி கடினமாயிருந்தது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாட்டின் புத்தகம் வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு அவர்களிடத்தில் இருக்கின்றது.

௰௫ அந்தப் பழைய உடம்படிக்கை கிறிஸ்துவினாலே நீக்கப்பட்டதென்று அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதில்லை; ஆனதால் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்பொழுது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேலே கிடக்கின்றது.

௰௬ [8]அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திருப்பும்பொழுது, [9]அந்த முக்காடு எடுக்கப்படும்.

௰௭ [10]கர்த்தரே அந்த ஆவியாயிருக்கிறார்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் இருக்கின்றது.

௰௮ ஆதலால் நாம் எல்லாரும் திறந்தமுகமாய்க் [11]கர்த்தருடைய மகிமையைக் [12]கண்ணாடியிலே கண்டாற்போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால்† அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமை அடைந்து [13]மறுரூபப்படுகிறோம்.

௪. அதிகாரம்.

௧ தான் இளைப்படையாமல் உத்தமமும், உண்மையுமுள்ள சாக்கிரதையோடே சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததையும், ௭ அதினாலே தான் அடைந்த வருத்தங்களும், துன்பங்களும் பராபரனுடைய வல்லமைக்குப் புகழாயும், ௰௫. திருச்சபைக்குப் பிரயோசனமாயும், ௰௬ தனக்குத்தானே நித்திய மகிமைக்கு ஏதுவாயும் இருந்ததென்பதையும் சொல்லியது.

[14]இப்படிப்பட்ட ஊழியம் எங்களுக்கு [15]இரக்கமாய் உண்டாயிருக்கிறபடியால், நாங்கள் இளைப்படையாமல்,

௨ அவலட்சணமான‡ அந்தரங்க காரியங்களைத் தள்ளிப்போட்டு, தந்திரமாய் நடவாமலும், [16]பராபரனுடைய வசனத்தைப் புரட்டாமலும், [17]சத்தியத்தையே வெளிப்படுத்துகிறதினாலே பராபரனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனதுக்கும் எங்களை (நிசஸ்தரென்று) [18]ஒப்புவிக்கிறோம்.

௩ ¶ அப்படியும் நாங்கள் பிரசங்கிக்கிற சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், [19]தங்களைக் கெடுக்கிறவர்களுக்குள்ளேமாத்திரம் அது மறைபொருளாயிருக்கும்.

இ. பி. கூய.

[1] ௨ மோ ௩௪ ௨௯,௩௰,௩௫.
[2] கலா ௩ ௯
[3] உரோ. ௧ ௰௭. ௩ ௨௧
[4] ௨ கொரி. ௭. ௪ எபே. ௬. ௰௯
* அல்லது தெளிவோடே.
[5] உரோ ௰ ௪. கலா ௩ ௨௩.
[6] ௨ மோ. ௩௪ ௩௩, ௩௫
[7] ஏசா ௬ ௰ மத் ௰௩ ௰௪, ௰௫ யோவா ௰௨ ௪௰ அப ௨௮ ௨௬ உரோ ௰௧ ௭ அ,௨௫ ௨ கொரி ௪ ௪
[8] ௨ மோ ௩௪ ௩௪ உரோ ௰௧ ௨௩,௨௬
[9] ஏசா ௨௫ ௭
[10] ௯ வச ௧ கொரி ௰௫ ௪௫
[11] ௨ கொரி ௪ ௪,௬ ௧ தீமோ ௧ ௰௧
[12] ௧ கொரி ௰௩ ௰௨
† அல்லது கர்த்தரின் ஆவியினால்
[13] உரோ ௮ ௨௯ ௧ கொரி ௰௫ ௪௯ கொலோ ௩ ௰
[14] ௨ கொரி ௩ ௬
[15] ௧ கொரி ௭ ௨௫ ௧ தீமோ ௧ ௰௩
‡ வெட்கு, இலச்சையான, உரோ ௧ ௰௬
[16] ௨ கொரி ௨ ௰௭ ௧ தெச ௨ ௩,௫
[17] ௨ கொரி ௬ ௪,௭ ௰௭ ௰௪
[18] ௨ கொரி ௫ ௰௧
[19] ௧ கொரி ௧ ௰௮ ௨ கொரி ௨ ௰௫ ௨ தெச. ௨ ௰

௪ அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப [1]பராபரனுடைய சாயலாகிய [2]கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாயிராதபடிக்கு [3]இவ்வுலகத்தின் தலைவன் [4]அவர்களுடைய புத்தியைக் குருடாக்கினான்.

௫ [5]நாங்கள் (எங்களைக் கர்த்தரென்று) பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவையே கர்த்தரென்றும், [6]எங்களை இயேசுவுக்காக உங்கள் ஊழியக்காரர் என்றும் பிரசங்கிக்கிறோம்.

௬ [7]இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிக்கச் சொன்ன பராபரன் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் உள்ள தமது மகிமையை அறிகிற அறிவாகிய [8]ஒளியை (உங்களுக்கு) தோன்றப்பண்ணும்பொருட்டாக, [9]எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.*

௭ ¶ இப்படிப்பட்ட மகிமையான வல்லமை எங்களால் அல்ல, [10]பராபரனால் உண்டாயிருக்கின்றதென்று தோன்றும்படிக்கு, [11]இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

௮ [12]நாங்கள் எப்பக்கத்திலேயும் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் திடனற்றவர்கள் † ஆகிறதில்லை.

௯ தொடரபபட்டும் கைவிடப்படுகிறதில்லை; [13]கீழே தள்ளப்பட்டும், கெட்டுப்போகிறதில்லை.

௰ [14]இயேசுவினுடைய சீவனும் எங்கள் சரீரத்திலே வெளியரங்கமாகும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவின் மரணத்தை [15]எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

௰௧ சாவுக்கினமான எங்கள் சரீரத்திலே இயேசுவினுடைய சீவனும் வெளியரங்கமாகும்படிக்கு, உயிரோடிருக்கிற [16]நாங்கள் எப்பொழுதும் இயேசுவின்நிமித்தமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.

௰௨ ¶ [17]இப்படி மரணமானது எங்களிடத்திலும் சீவனானது உங்களிடத்திலும் கிரியைசெய்கின்றது.

௰௩ [18]நான் விசுவாசித்திருக்கிறபடியால் பேசிக்கொள்ளுகிறேன் என்று எழுதியிருக்கிறபடி, [19]விசுவாச ஆவியை உடையவர்களாய்,

௰௪ நாங்களும் கர்த்தராகிய இயேசுவை [20]எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்து விசுவாசித்துப் பேசிக்கொள்ளுகிறோம்.

௰௫ [21]திரளான கிருபை அநேகருடைய தோத்திரத்தினாலே பராபரனுடைய மகிமை விளங்குதற்கு ஏதுவாகப் பெருகும்படிக்கு, [22]இவையெல்லாம் உஙகள் (நன்மைக்காக) நடக்கின்றன.

௰௬ ¶ ஆனபடியினாலே நாங்கள் இளைபபடைகிறதில்லை; மேலும் எஙகள் புறம்பான மனிதத்துவம் அழிகையிலும் [23]உள்ளான மனிதத்துவம் நாள்தோறும் புதிதாக்கப்படுகின்றது.

௰௭ மேலும் அதிசீக்கிரமாய் நீங்குவதுமாய் [24]இலகுவுமாயிருக்கிற நம்முடைய உபத்திரவம் மிகவும் மிகுதியான நித்திய கனமகிமையை நமக்கு உண்டாக்குகின்றது.

௰௮ [25]காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கே அப்படி உண்டாக்குகின்றது; காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளே நித்தியமானவைகள்.

கி. பி. சுயி.

1 யோவா ௧ ௰௮ ௰௨ ௪௬: ௰௪. ௯ பிலி ௨.௯ கொலோ. ௧ ௰௫. எபி ௧ ௩
2 ௨ கொரி. ௩ ௮, ௯, ௰௧, ௰௮ ௧ ௰௪
3 யோவா ௰௨ ௩௧: ௰௪ ௩௰ ௰௬ ௰௧ எபே ௨ ௰௨.
4 ஏசா ௬ ௰ யோவா ௰௨ ௪௰ ௨ கொரி ௩ ௰௪.
5 ௧ கொரி ௧ ௰௩, ௨௩ ௰ ௩௩
6 ௧ கொரி ௯ ௰௯ ௨ கொரி ௧.௨௪
7 ௧ மோ. ௧ ௩
8 ௪ ௰௪ ௧ பே ௨ ௯
9 ௨ பே ௧ ௰௯
*இரேக்கு. பிரகாசித்தவராய் இருக்கிறார்
10 ௧ கொரி ௨ ௫ ௨ கொரி ௰௨ ௯
11 ௨ கொரி ௫ ௧
12 ௨ கொரி. ௭ ௫
† அல்லது நம்பிக்கையற்றவர்கள்
13 ௪௰ ௩௨ ௨௪.
14 ௨ரோ. ௮ ௰௭ ௨ தீமோ ௨ ௰௧, ௰௨ ௧ பே ௪ ௰௩
15 ௧ கொரி ௰௫ ௩௧. ௨ கொரி ௧ ௫,௯. கலா ௬ ௰௭ பிலி ௩ ௰
16 ௪௰ ௪௪ ௨௨. ௨ரோ ௮ ௩௬ ௧ கொரி ௰௫ ௩௧, ௪௯ ௨ கொரி ௧ ௮, ௯
17 ௨ கொரி ௰௩ ௯
18 ௧௰௬. ௱௰௯ ௰

---

19 ௨ரோ. ௧ ௰௨. ௨ பே. ௧ ௧ —20 ௨ரோ ௮ ௰௧ ௧ கொரி ௬ ௰௪ —21 ௨ கொரி ௧ ௰௧ அ ௰௯. ௯ ௧௫,௰௨.—22 ௧ கொரி. ௩ ௨௨. ௨ கொரி. ௧ ௬ கொலோ ௧ ௨௪ ௨ தீமோ ௨ ௰ —23 ௨ரோ ௭ ௨௨ எபே ௩ ௰௬. கொலோ ௩ ௰ ௧ பே ௩ ௪.—24 மத் ௫ ௰௨. ௨ரோ ௮ ௰௮. ௧ பே. ௧. ௬. ௫ ௰ —25 ௨ரோ ௮ ௨௪. ௨ கொரி ௫ ௭. எபி. ௰௧ ௧.

ரு. அதிகாரம்.

க. தான் நித்திய மகிமையின் நம்பிக்கையை உடையவனாக, கூ. அந்த மகிமையையும் பொதுவான நியாயத்தீர்ப்பையும் அடைய நன்மனச்சாட்சியைக் காத்துக்கொண்டு, ௰உ. அதினால் மேன்மைபாராட்டும்பொருட்டல்ல, ௰ச. கிறிஸ்துவினிடத்தில் ஜீவனைப் பெற்ற தான் கிறிஸ்துவின் மகிமைக்குப் புதுச் சிருஷ்டியாய்ச் ஜீவனம்பண்ணவேண்டியதென்றும், ௰அ. எல்லாரும் கிறிஸ்துவினால் பராபரனோடு ஒப்புரவாகும்படி ஒப்புரவாக்கும ஊழியத்தை அடைந்தானென்றும் சொல்லியது

அது எப்படியென்றால், [1]பூமிக்குரிய கூடாரம்போன்ற நம்முடைய வீடு இடிந்துபோகும்பொழுது, பரமண்டலங்களிலே கையால் செய்யப்படாமல், தேவனால் உண்டாக்கப்பட்ட நித்தியமான வீடாகிய வாசஸ்தலம் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

உ [2]நாம் வீடில்லாதவர்கள் அல்ல:

௩ தரிக்கப்பட்டவர்களாய் இருக்க, பரமண்டலத்திலுள்ள நமது வாசஸ்தலத்தை நாம் தரித்துக்கொள்ள மிகவும் விரும்புகிறவர்களாய், [3]இந்த வீட்டிலே தவித்திருக்கிறோம்.

ச இந்தக் கூடாரத்தில் இருக்கையில், நாம் பாரம்சுமந்து தவிக்கிறோம்; ஆனதால் நாங்கள் (இதைப்) போக்க விரும்பாமல் சீவனாலே மரணம் விழுங்கப்படத்தக்கதாக, (உடனே) [4]அதைத் தரித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ரு [5]இப்படியே இருக்கும்படி பராபரனே எங்களை எத்தனம்பண்ணி, [6]ஆவியென்னும் அச்சாரத்தையும் எங்களுக்குத் தந்தார்.

சா ஆகையினாலே நாங்கள் இந்தத் தேகத்திலே குடியிருக்கையில், [7]தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறதால்,

எ கர்த்தரைச் சேராத வழிப்போக்கராயிருக்கிறோம் என்று அறிந்தும், (எப்பொழுதும்) தயிரியமாய் இருக்கிறோம்.

அ நாங்கள் தயிரியமாகவே இருந்து, [8]இந்தத் தேகத்தைவிட்டுப் போகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

கூ அதின் நிமித்தமே நாங்கள் (அவரிடத்தில்) குடியிருந்தாலும், (அவரைவிட்டு) இங்கே சஞ்சரித்தாலும், அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க முக்கியமாய் நாடுகிறோம்.*

௰ [9]நாம் எல்லாரும் அவனவன் தான் நடப்பித்த நன்மைக்காகிலும் தீமைக்காகிலும் தக்கவைகளைச் சரீரத்திலே அடையும்படிக்கு, [10]கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்படவேண்டுமே.

௰க ஆகையால் [11]கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று நாங்கள் அறிந்து, மனிதருக்குப் போதிக்கிறோம்; [12]இப்படிப் பராபரனுக்குமுன்பாக வெளியரங்கமாய் இருக்கிறோம்; உங்கள் மனதிலேயும் (அப்படியே) வெளியரங்கமாய் இருக்கிறோம் என்று நம்புகிறேன்.

௰உ [13]இதினாலே நாங்கள் உங்களுக்குமுன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்தால் அல்ல [14]வெளிவேஷத்தால்† மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே நீங்கள் எங்களைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு ஏது கொடுக்கிறோம்.

௰௩ (அதிலே) நாங்கள் பித்தங்கொண்டவர்கள் என்றால் [15]பராபரனுக்காகவும், தெளிந்த புத்தியுள்ளவர்கள் என்றால் உங்களுக்காகவும் அப்படி இருக்கும்.

௰ச அதற்காகக் கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகின்றது; எப்படி நிதானிக்கிறோமென்றால், [16]எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள்.

௰ரு மேலும் [17]பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழையாமல், தங்களுக்காக மரித்

கி. பி. சுய.

1 யோபு. ச. ௰கூ. உ கொரி ச எ ௨ பே. க ௰௩, ௰ச
2 வெளி க ௰அ ௰க ௰கூ
3 உரோ. அ உ௩
4 க கொரி ௰ரு ரு௰,ருச
5 ஏசா உகூ உ௩ எபே உ௰
6 உரோ அ உ௩ உ கொரி. க உஉ எபே க ௰ச ச ௩௰
7 உரோ. அ உச, உரு க கொரி ௰௩ ௰உ உ கொரி ச ௰அ எபி ௰க க
8 பிலி க உ௩
* கிரேக்கு, தெண்டிக்கிறோம
9 உரோ உ க கலா சு எ எபே க அ கொலோ ௩ உச, உகூ வெளி உஉ,௰உ
10 மத் உகூ ௩௩, ௩உ, உரோ ௰ச ௰
11 யோபு ௩௩ உ௩ எபி ௰௩ ௩௩ யூதா உ௩
12 உ கொரி ச உ
13 உ கொரி ௩ க
14 உ கொரி. க ௰ச
† கிரேக்கு, முகத்தால்.
15 உ கொரி ௰க க,௰௩ ௰எ ௰உ க,௰௩
16 உரோ.௰ச ௰ரு.
17 உரோ ௩ ௰க, ௰உ. ௰ச எ,அ க கொரி சா ௰கூ கலா உ உ௰ க தெச ரு ௰ க பேது ச உ

து எழுந்தவருக்கென்று பிழைக்கும்படிக்கு, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரே என்று நிதானிக்கிறோம்.

௰௬ ஆகையால் [1]இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; முன்னே நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்தும், [2]இப்பொழுதும் இனிமேலும் அவரை அப்படியாக அறியோம்.

௰௭ [3]கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன் [4]புதுச் சிருஷ்டியாயிருக்கிறானே;* [5]பழையவைகள் ஒழிந்துபோயின; சகலமும் புதிதாயிற்றே.

௰௮ இவையெல்லாம் பராபரனாலே இருக்கின்றன; [6]அவர் இயேசுக் கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்தார்.

௰௯ என்னவெனில் [7]கிறிஸ்துவினாலே பராபரன் உலகத்தாருடைய பாவங்களை அவர்கள்மேலே சுமத்தாமல் அவர்களைத்தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாக்குதலாகிய உபதேசத்தை எங்களிடத்தில் ஏற்படுத்தினார்.†

௨௰ ¶ ஆனபடியினாலே [8]நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தானாபதிகளாயிருக்கிறோம்; [9]பராபரனே எங்களாலே புத்திசொல்லுகிறவராயிருக்க, நாங்கள் கிறிஸ்துவுக்காக (மனிதர்களை) நோக்கி,

௨௧ பாவத்தை அறியாதவராலே நாம் பராபரனுக்குமுன்பாக [10]நீதிமான்களாக்கப்படும்படிக்கு, பராபரன் [11]அவரை நமக்காகப் பாவமாக்கினார்; ஆகையால் பராபரனோடே ஒப்புரவாகுங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

௬. அதிகாரம்.

௧ தன் போதகத்திலும், உ. நன்னடக்கையிலும், ௩ சுவிசேஷத்தின் நிமித்தம் பொறுமையோடே சகிக்கும் எல்லாத் துன்பத்திலும், [illegible] தன்னைக் கிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரனென்று திருஷ்டாந்தப்படுத்தி, ௰. அதைக்குறித்துத் தாராளமாய்ப் பட்சமுள்ள தன் இருதயத்தை அவர்களுக்கு விரித்துக்காண்பித்ததுபோல, ௰௩. அவர்களும் பட்சத்தைப் பாராட்டும்படி விரும்பி, ௰௪ அவர்கள் ஜீவனுள்ள பராபரனுடைய தேவாலயங்களாயிருக்க அஞ்ஞானிகளையும், அவர்கள் [illegible] விலகியிருக்கச் சொல்லியது.

மேலும் (எனக்குத்) தகுதியான காலத்திலே [12]நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சண்ணிய நாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரே, பாருங்கள், இப்பொழுதே மிகவும் தகுதியான காலம், இப்பொழுதே இரட்சண்ணியநாள்.

௨ ஆனதால் [13]எங்களுடனே கூட வேலைசெய்கிறவர்களே, [14]நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாய்ப் பெறாதபடிக்குப் [15]புத்திசொல்லுகிறேன்.

௩ நம்முடைய ஊழியத்தைக் குற்றப்படுத்தத்தக்கதாக [16]நாம் ஒருவருக்கும் முகாந்தரத்தைக் கொடாமல், [17]எல்லா விதத்திலேயும் நம்மைப் பராபரனுடைய ஊழியக்காரராக ஒப்புவிக்கக்‡ கடவோம்.

௪ உபத்திரவங்கள், இடுக்கண்கள், நெருக்கங்கள்,

௫ [18]அடிகள், காவல்கள், கலகங்கள்,§ பிரயாசங்கள், தூக்கமில்லாமை, உபவாசங்களுள்ள காலங்களில் மிகுந்த பொறுமையினாலும், கற்பினாலும், அறிவினாலும்,

௬ நீடிய சாந்தத்தினாலும், தயவினாலும், பரிசுத்த மனதினாலும், வஞ்சகமில்லாத அன்பினாலும்,

௭ [19]சத்தியமுள்ள வசனத்தினாலும் [20]திவ்விய பலத்தினாலும், [21]நீதியாகிய வலது இடதுபக்கத்து ஆயுதங்களினாலும்,

௮ கனத்தையும் கனஈனத்தையும் பெறுங்காலத்திலேயும், துர்க்கீர்த்தியையும் நற்கீர்த்தியையும் பெறுங்காலத்திலேயும், எத்தர் என்னப்பட்டாலும் நிசஸ்தராகவும்,

௯ அறியப்படாதவர்கள் என்னப்

இ. பி. சுய.

[1] மத். ௧௨. ௫௰ யோவா ௰௫. ௰௪. கலா. ௫ ௬. பிலி. ௩. ௭, ௮ கொலோ. ௩ ௰௧.
[2] யோவா ௬ ௬௩
[3] உரோ ௮ ௯' ௰௬. ௭. கலா ௬ ௰௫.
[4] கலா. ௫ ௬: ௬. ௰௫.
* அல்லது இருக்கக்கடவன்
[5] ஏசா. ௪௩ ௰௮, ௰௯' ௬௫ ௰௭. எபே ௨ ௰௫. வெளி ௨௧ ௫
[6] உரோ. ௫ ௰ எபே ௨. ௰௬ கொலோ ௧ ௨௰ ௧ யோ ௨. ௨: ௪ ௰
[7] உரோ ௩. ௨௪, ௨௫
† கிரேக்கு, வைத்தார்.
[8] யோபு ௩௩. ௨௩. மல்கி ௨ ௭ உ கொரி ௩. ௬ எபே ௬ ௨௰.
[9] உ கொரி. ௬ ௧
[10] உரோ ௩. ௰௯ ௰௪ ௰௬.
[11] ஏசா ௫௩. ௬, ௯, ௰௨. கலா ௩ ௰௩. ௧ பேது ௨ ௨௨, ௨௪ ௧ யோ ௩ ௫
[12] ஏசா ௪௯ ௮
[13] ௧ கொரி ௩ ௯
[14] எபி ௰௨. ௰௫.
[15] உ கொரி ௫ ௨௰
[16] உரோ ௰௪ ௰௩ ௧ கொரி ௯ ௰௨. ௰ ௩௨
[17] ௧ கொரி ௪ ௧
‡ கிரேக்கு, விளங்கப்பண்ண, உ கொரி ௪ ௨.
[18] உ கொரி ௰௧ ௨௩ ௨௭
§ அல்லது அலைவுகள்
[19] உ கொரி ௪ ௨ ௭ ௰௪.
[20] ௧ கொரி ௨ ௪
[21] உ கொரி ௰ ௪ எபே ௬ ௰௧, ௰௩ ௨ தீமோ ௪ ௭

பட்டாலும் [1]நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், [2]மரித்தவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், [3]தண்டிக்கப்பட்டவர்களானாலும் கொலைசெய்யப்பட்டிராதவர்களாகவும்,

௰ துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்கள் ஆக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் நம்மை ஒப்புவிக்கக்கடவோம்.

௰௧ ¶ ஆ கொரிந்தியரே, எங்கள் வாய் உங்கள் பட்சமாய்த் திறக்கப்பட்டிருக்கிறது; [4]எங்கள் இருதயம் விஸ்தாரமாக்கப்பட்டிருக்கின்றது.

௰௨ எங்கள் உள்ளம் உங்களைக் குறித்து நெருக்கப்படவில்லை; [5]உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கப்பட்டிருக்கின்றது.

௰௩ ஆதலால் மறுஈடாக நீங்களும் விஸ்தாரமாகுங்கள் என்று (என்) [6]பிள்ளைகளைப்போல உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

௰௪ ¶ [7]ஒரே நுகத்திலே அவிசுவாசிகளுடனே பூட்டப்படாதிருப்பீர்களாக; என்னத்தினாலெனில், [8]நீதிக்கும் அக்கிரமத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கம் என்ன?

௰௫ கிறிஸ்துவுக்கும் பசாசுக்கும் இசைவுண்டா? அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்குண்டா?

௰௬ விக்கிரகக்கோவில்களுக்கும் பராபரனுடைய ஆலயத்திற்கும் சம்பந்தம் உண்டா? [9]நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே நடந்துகொண்டு அவர்களுடைய தேவனாயிருப்பேன் என்றும், அவர்கள் என்னுடைய சனங்களாயிருப்பார்கள் என்றும் பராபரன் சொன்னபடி [10]நீங்கள் சீவனுள்ள பராபரனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

௰௭ [11]ஆனபடியினாலே நீங்கள் அவர்களிடத்திலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்.

௰௮ அப்பொழுது நான் உங்களை அங்கிகரித்துக்கொண்டு [12]உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்; நீங்கள் எனக்குக் குமாரருமாய்க் குமாரத்திகளுமாய் இருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள பராபரன் சொல்லுகிறார்.

௭. அதிகாரம்.

௧ பரிசுத்தமாய் நடக்கும்படிக்கும், ௨ தான் அவர்களுக்குப் பாராட்டின பட்சத்தை அவர்கள் தனக்குப் பாராட்டவும், ௩ தன்னுடைய முந்தின நிருபத்தில் அவர்களுக்குச் சொல்லிய புத்திகளை ஏற்றுக்கொண்டு தேவ சித்தமாய்த் துக்கப்பட்டதைத் தீத்துவினால் கேள்விப்பட்டதற்காகவும், ௰௪ தான் முந்தி அவர்களைக்குறித்துப் பெருமைபாராட்டினதற்கு ஒத்தநாய் அவர்கள் தீத்துவில் அன்புகூர்ந்து அவனுக்குக் கீழ்ப்படிந்ததற்காகவும் தன் உபத்திரவங்களிலும் சந்தோஷப்பட்டானென்று சொல்லியது.

[13]இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்க, பிரியமானவர்களே, சரீரத்தையும் ஆவியையும் அசுசிப்படுத்துகிற யாவற்றிற்கும் நாம் விலகி, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, தேவபயத்தோடே முழுவதும் பரிசுத்தவான்களாகும்படி நடந்துகொள்ளக்கடவோம்.

௨ ¶ எங்களை அங்கிகரித்துக்கொள்ளுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை; [14]ஒருவனையும் கெடுக்கவில்லை.

௩ ஒருவனையும் வஞ்சிக்கவில்லை; உங்களைக் குற்றவாளிகளாக்கும்பொருட்டாக இப்படி நான் சொல்லுகிறதில்லை; [15]முன்னே நான் சொன்னபடி (உங்களுடனே) கூடச் சாவவும் கூடப் பிழைக்கவும் தக்கதாக, எங்கள் இருதயங்களில் இருக்கிறீர்களே.

கி. பி. ௬௰.

1 ௨ கொரி. ௪ ௨; ௫. ௰௧; ௰௧ ௬
2 ௧ கொரி ௪ ௯ ௨ கொரி. ௧ ௯ ௪. ௰, ௰௧
3 சங் ௱௰௮ ௰௮.
4 ௨ கொரி ௭ ௩
5 ௨ கொரி ௰௨ ௰௫
6 ௧ கொரி. ௪ ௰௪
7 ௫ மோ ௭. ௨, ௩. ௧ கொரி ௫ ௯ ௭ ௩௯
8 ௧ சாமு ௫. ௨, ௩. ௧ இரா ௰௮ ௨௧ ௧ கொரி ௰. ௨௧. எபே. ௫ ௭, ௰௧
9 ௨ மோ ௨௯ ௪௫ ௩ மோ ௨௬ ௰௨ எரே ௩௧ ௩௩; ௩௨ ௩௮ எசே ௰௧ ௨௦ ௩௬. ௨௮: ௩௭ ௨௬ ௨௭ சகரி அ. அ ௰௩ ௯.
10 ௧ கொரி ௩. ௰௬. ௬ ௰௯. எபே ௨. ௨௧, ௨௨ எபி ௩ ௬
11 ஏசா ௫௨ ௰௧ ௨ கொரி ௭ ௧ வெளி ௰௮. ௪
12 எரே. ௩௧. ௧, ௯ வெளி ௨௧. ௭
13 ௨ கொரி ௬. ௰௭ ௧ யோ ௩. ௩
14 அப். ௨௦ ௩௩, ௨ கொரி ௰௨. ௰௭
15 ௨ கொரி. ௬. ௰௧, ௰௨.

௪ (ஆனதால்) [1]மிகுந்த தயிரியத்தோடே உங்களுடனே பேசுகிறேன்; [2]உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன்; [3]ஆறுதலால் நிறையப்பட்டிருக்கிறேன்; எங்களுக்கு வந்திருக்கிற மிகுந்த உபத்திரவத்திலே பரிபூரண சந்தோஷப்படுகிறேன்.

௫ ¶ எப்படியென்றால், [4]நாங்கள் மக்கேதோனியா நாட்டிலே வந்தபொழுது, [5]எங்கள் சரீரத்திற்கு அமைதல் ஒன்றுமில்லாமல் எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; [6]புறம்பே போராட்டங்களும் உள்ளே பயங்களும் இருந்தன.

௬ ஆகிலும் [7]தாழ்மையானவர்களுக்கு ஆறுதல்செய்கிற பராபரன் [8]தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல் செய்தார்.

௭ அவன் வந்ததினால்மாத்திரம் அல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், எனக்காக உங்களுக்குள்ள பத்திவைராக்கியத்தையும் அவன் எங்களுக்கு அறிவித்தபொழுது, தான் உங்களாலே ஆறுதல் அடைந்ததினாலும் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.

௮ ஆனதால் நான் என் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும் மனஸ்தாபப்படமாட்டேன்; அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்திற்றென்று நான் பார்த்து, [9]மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது நீங்கள் துக்கப்பட்டதினாலே அல்ல,

௯ நீங்கள் மனந்திரும்புகிறதற்கு ஏதுவாகத் துக்கப்பட்டதினாலே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவ எத்தனமான* துக்கம் அடைந்தீர்களே.

௰ [10]தேவ எத்தனமான துக்கம் பின்னே மனஸ்தாபம் இல்லாமல், இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது; [11]இலவுகீக துக்கம் மரணத்தை உண்டாக்குகின்றது.

௰௧ பாருங்கள், நீங்கள் (தேவ எத்தனமான) துக்கம் அடைந்தது, உங்களிடத்தில் எத்தனை சாக்கிரதையையும், எத்தனை நியாயம்சொல்லுதலையும், எத்தனை விசனத்தையும், எத்தனை பயத்தையும், எத்தனை வாஞ்சையையும், எத்தனை பத்திவைராக்கியத்தையும், எத்தனை தண்டனையையும் உண்டாக்கிற்று? அந்தச் சங்கதியைக்குறித்து நீங்கள் எவ்விதத்திலேயும் உங்களைச் சுத்தவான்களென்று ஒப்புவித்தீர்கள்.

௰௨ ஆகையினாலே நான் உங்களுக்கு அப்படி எழுதியிருந்தும், அநியாயத்தைச் செய்தவன்நிமித்தம் அல்ல, அநியாயம் செய்யப்பட்டவன்நிமித்தமும் அல்ல, [12]பராபரனுக்குமுன்பாக உங்களைக்குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற சாக்கிரதை உங்களிடத்தில் வெளிப்படுவதின் நிமித்தமாகவே அப்படி எழுதியிருந்தேன்.

௰௩ ¶ ஆனதால் நீங்கள் ஆறுதல் அடைந்ததினாலே நாங்களும் ஆறுதல் உள்ளவர்களாயிருக்கிறோம்; விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்கள் அனைவராலும் [13]ஆறுதல் அடைந்ததினாலே அவனுக்கு வந்த சந்தோஷத்தால் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டோம்.

௰௪ இப்படியிருக்க, உங்களுக்குப் புகழ்ச்சியாய் நான் அவனுடனே சொன்னதைக்குறித்து நான் வெட்கப்படமாட்டேன்; நாங்கள் சகலத்தையும் உங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னதுபோல, தீத்துவுடனே நான் உங்களுக்குப் புகழ்ச்சியாய்ச் சொன்னதும் சத்தியமாக விளங்கிற்றே.

௰௫ மேலும் அவன் தன்னை நீங்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும் ஏற்றுக்கொண்டதையும், [14]நீங்கள் எல்லாரும் கீழ்ப்படிந்ததையும் நினைத்துக்கொண்டு, தன்மனதிலே†

இ. பி. ௬௰.

1 ௨ கொரி. ௩. ௰௨.
2 ௧ கொரி. ௧. ௪. ௨ கொரி. ௧, ௰௪
3 ௨ கொரி ௧. ௪ பிலி ௨ ௰௭ கொலோ. ௧. ௨௪
4 ௨ கொரி ௨ ௰௩
5 ௨ கொரி. ௪ ௮.
6 இ மோ ௩௨ ௨௫
7 ௨ கொரி ௧ ௪.
8 ௨ கொரி. ௨ ௰௩.
9 ௨ கொரி ௨. ௪.
* அல்லது தேவனுக்கேற்ற
10 ௨ சாமு ௰௨ ௰௩ மத் ௨௬. ௭௫
11 வாக் ௰௭ ௨௨
12 ௨ கொரி. ௨ ௪.
13 ௨. கோ ௰௬
14 ௨ கொரி ௨ ௯. பிலி. ௨. ௰௨
† கிரேக்கு, செருலில்; ௨ கொரி ௧ ௰௨

உங்கள்மேலே அதிக அன்புள்ளவனாகிறான்.

௰௬ ஆகையால் [1]நான் எவ்விதத்திலேயும் உங்களைக்குறித்துத் திடனாயிருக்கலாம் என்று சந்தோஷப்படுகிறேன்.

௮. அதிகாரம்.

௧ எருசலேமில் இருந்த எளிய சகோதரர்களுக்குத் தருமம்செய்யும்படி அவர்களை மக்கெதோனியருடைய திருஷ்டாந்தத்தினாலும், ௭ முன் அவர்கள் செய்த உதவியினாலும், ௯ கிறிஸ்துவினுடைய கிருபையினாலும், ௰௪. அவர்களுக்கு உண்டாகும் ஞான நன்மைகளினாலும் அவர்களை ஏவி, ௰௬ அவர்களுடைய தருமத்தைச் சேகரம்பண்ணத் தீத்து முதலானவர்கள் தன்னுடைய கேட்டுக்கொள்ளுதலின்படி மனராசியாய் அவர்களிடத்தில் வந்ததற்காக அவர்களை அங்கிகரிக்கும்படி ஒப்புவித்ததைச் சொல்லியது.

பின்னும் சகோதரரே, மக்கெதோனியா தேசத்துச் சபைகளுக்குப் பராபரன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

௨ என்னவென்றால் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், [2]கொடிய தரித்திரராயிருந்தும், தங்கள் பரிபூரணமான சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரமாய்*(தருமத்தைக்) கொடுத்தார்கள்.

௩ மேலும் அவர்கள் தங்களால் ஆனமட்டும், தங்கள் பலத்திற்கு மேலாகவும் கொடுக்கும்படிக்கு, தாங்களே மனதுள்ளவர்களாய் இருந்தார்கள், அதற்கு நானே சாட்சியாய் இருக்கிறேன்.

௪ மேலும் அவர்கள் தங்களுக்கு உபகாரத்தையும் [3]பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தரும ஊழியத்தின் பங்கையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு,

௫ எங்கள் நம்பிக்கைக்கு மேலாகத் தங்களைத்தாமே முதலாவது கர்த்தருக்கும், பின்பு பராபரனுடைய சித்தத்தினாலே எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.

௬ ஆனதால் [4]தீத்து தான் முன்னே தொடங்கினபிரகாரமாக இந்தத் தருமகாரியத்தை† உங்களிடத்திலே முடிக்கவும் வேண்டுமென்று அவனிடத்தில் கேட்டுக்கொண்டோம்.

௭ ¶ அல்லாமலும் நீங்கள் விசுவாசத்திலேயும் பேச்சிலேயும் அறிவிலேயும் எல்லாவித சாக்கிரதையிலேயும் எங்கள்மேல் உள்ள உங்கள் அன்பிலேயும் மற்றும் பலவித நன்மைகளிலேயும் [5]பெருகியிருக்கிறதுபோல, [6]இந்தத் தருமகாரியத்திலேயும் பெருகவேண்டுமென்று விரும்புகிறோம்.

௮ இப்படி நான் [7]கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய சாக்கிரதையின் நிமித்தமும் உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்பொருட்டாகவும், என்னுடைய யோசனையைமாத்திரம் சொல்லியிருக்கிறேன்.

௯ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; [8]அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்கள் ஆகும்படிக்கு, உங்கள்நிமித்தமே தரித்திரர் ஆனாரே.

௰ மேலும் (இந்தத் தருமத்தைச்) செய்கிறதுமாத்திரமல்ல, [9]ஒருவருஷத்திற்குமுன்பு (அதை) ஆரம்பம்பண்ணும்படி தோன்றின விருப்பமும்‡ உங்களுக்குப் [10]பிரயோசனமாயிருக்கும்.

௰௧ ஆகையால் செய்கிறதையும் இப்பொழுது நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டுமென்றும் ஆசை உண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உண்டானவைகளில் எடுத்து, அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக.

௰௨. [11]ஒருவனுக்கு மன ஆசையாயிருந்தால், அவன் தனக்கு இல்லாததின்படி அல்ல, தனக்கு உள்ளதின்படி அங்கிகரிக்கப்படுவானே.

௰௩ மற்றவர்களுக்குச் சந்தோஷமும் உங்களுக்கு உபத்திரவமும்

கி. பி. ௬௰.

[1] ௨ தெச ௧.௪ பிலே. ௮ ௨௧.

[2] மாற் ௰௨ ௪௪.

* இரேக்கு, கபடில்லாமல்; ௨ கொரி.௧.௰௨

[3] அப் ௰௧, ௨௯ ௨௪ ௰௭ உரோ. ௰௫ ௨௫, ௨௬. ௧ கொரி ௰௬ ௧, ௩.௪. ௨ கொரி ௯ ௧.

[4] ௰௭, வசனம் ௨ கொரி. ௰௨ ௰௮

† அல்லது தயவை, ௪ ௰௬ வச.

[5] ௧ கொரி ௧. ௫. ௰௨ ௰௧.

[6] ௨ கொரி ௯ ௮

[7] ௧ கொரி ௭ ௬

[8] மத் ௮ ௨௰ லூக் ௯ ௫௮ பிலி ௨.௬, ௭

[9] ௨ கொரி ௯ ௨

‡ அல்லது சாக்கிரதையும்

[10] வாக். ௰௯ ௰௭ மத். ௰ ௪௨ ௧ தீமோ ௬ ௰௮, ௰௯ எபி ௰௩ ௰௬

[11] மாற் ௰௨ ௪௩, ௪௪. லூக் ௨௧ ௩

உண்டாயிருக்கும் பொருட்டாக அல்ல, சமமான நிலைமை இருக்கும்பொருட்டாகவே சொல்லுகிறேன்.

௰௪ எப்படியெனில் (மற்றொருகாலத்திலே) அவர்களுடைய பரிபூரணம் உங்கள் வறுமையை நீக்கும்படிக்கு இக்காலத்திலே உங்கள் பரிபூரணம் அவர்களுடைய வறுமையை நீக்கக்கடவது.

௰௫ இவ்விதமாய் [1]மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகம் இருக்கவில்லை என்றும் அற்பமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவு இருக்கவில்லை என்றும் எழுதியிருக்கிறபடி, சமமான நிலைமை உண்டாயிருக்கும்.

௰௬ ¶ அன்றியும் உங்களுக்காக இப்படிச் சாக்கிரதையாயிருக்கும்படிக்குத் தீத்துவின் இருதயத்திலே அருள்கொடுத்த பராபரனுக்குத் தோத்திரம்.

௰௭ [2]நான் வேண்டிக்கொண்டதை ஏற்றுக்கொண்டதுமல்லாமல் அவன் அதிக சாக்கிரதையாயிருந்து, தன் சுயமனதினாலே உங்களிடத்திற்கு வருகிறான்.

௰௮ அவனோடேகூட [3]ஒரு சகோதரனை அனுப்பியிருக்கிறேன்; அவன் சுவிசேஷ ஊழியத்திலே எல்லாச் சபைகளினாலும் புகழ்ச்சிபெற்றிருக்கிறவன்.

௰௯ அதுமாத்திரமல்ல, [4]கர்த்தருக்கே துதியுண்டாகும்படியாகவும், உங்கள் மன ஆசை விளங்கும்படியாகவும் எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படுகிற தருமப்பணத்தைக்* (கொண்டுபோகையில்,) எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படிக்கு [5]அவனே சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாகவும் இருக்கிறான்.

௨௰ எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் மிகுந்த தருமப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு, நாங்கள் எச்சரிக்கையாயிருந்து,

௨௧ கர்த்தருக்கு முன்பாகமாத்திரம் அல்ல, மனிதருக்கு முன்பாகவும் [6]நலமானவைகளை முன்யோசித்துக்கொண்டு, (இந்தச் சகோதரன் கூடவரும்படி செய்தேன்).

௨௨ நம்முடைய சகோதரனாகிய அவன் அநேகம் காரியங்களில் சாக்கிரதையுள்ளவன் என்றும், இப்பொழுது உங்கள்மேலுள்ள† மிகுந்த நம்பிக்கையினால் மிகவும் அதிக சாக்கிரதை உள்ளவனாயிருக்கிறான் என்றும் நாங்கள் அடிக்கடி கண்டறிந்து, அவனை இவர்களோடுங்கூட அனுப்பினோம்.

௨௩ தீத்தைக்குறித்து (ஒருவன் விசாரித்தால்,) அவன் எனக்குக் கூட்டாளியுமாய் உங்களுக்காக என் உடன்வேலையாளுமாய் இருக்கிறானென்று அறியக்கடவன்; எங்கள் சகோதரரைக்குறித்து (ஒருவன் விசாரித்தால்,) அவர்கள் சபைகளால் [7]அனுப்பப்பட்டவர்களுமாய்க் கிறிஸ்துவுக்குப் புகழ்ச்சிவருதற்கு ஏதுவானவர்களுமாய் இருக்கிறார்கள் என்று அறியக்கடவன்.

௨௪ ஆனபடியினாலே உங்கள் அன்பையும், [8]நாங்கள் உங்களைக்குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும் அவர்களுக்கும், சபைகளுக்கும் முன்பாக வெளிப்படுத்துங்கள்.

௯. அதிகாரம்.

அவர்களுடைய தருமகுணத்தைத் தான் அறிந்திருந்தாலும் தீத்தையும், மற்றச் சகோதரர்களையும் அனுப்பினதற்கு முகாந்தரம் விளம்பி, ௫ தருமச் செயலை, ௬ நற்பலனைத் தரும பயிர்த்தொழிலுக்கு ஒப்பாக்கி, ௰௧ அதினால் பராபரனுக்கு ஸ்தோத்திரப்பலிகள் செலுத்தப்படுமென்று சொல்லி, அவர்கள் தயாளமான மனதுள்ளவர்களாயிருக்கும்படி புத்திசொல்லியது.

[9]பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைக்குறித்து நான் அதிகமாய் உங்களுக்கு எழுதவேண்டுவது இல்லை.

௨ உங்கள் [10]மனப்பூர்வத்தை அ

---

[1] ௨ மோ ௰௬ ௰௮

[2] ௬ வச

[3] ௨ கொரி. ௰௨ ௰௮

[4] ௨ கொரி ௪ ௰௫

* அல்லது உபகாரத்தை, ௪ ௯, ௭. வச ௨ கொரி ௯ ௮

[5] ௧ கொரி. ௰௬ ௩, ௪

[6] ௨ ரோ ௰௨. ௰௭ பிலி ௪ ௮ ௧ பே ௨. ௰௨

† அல்லது நான் உங்கள்மேல் வைத்திருக்கிற

[7] பிலி ௨. ௨௫

[8] ௨ கொரி ௭ ௰௪ ௯ ௨

[9] அப ௰௧ ௨௯ ௨ ரோ ௰௫ ௨௬ ௧ கொரி ௰௬ ௧ ௨ கொரி ௮ ௪ கலா. ௨ ௰

[10] ௨ கொரி ௮ ௰௯

றிந்திருக்கிறேன்; அதைக்குறித்து [1]அகாயாவில் உள்ளவர்கள் ஒரு வருஷமாய்த் தருமப்பணத்தைச் சேர்க்க எத்தனமாயிருக்கிறார்கள் என்று நான் [2]மக்கேதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தும் இருந்தேனே.

௩ மேலும் உங்களில் உண்டான சாக்கிரதை அநேகரை எழுப்பியும் இருந்தது; அப்படியிருந்தும், உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தச் சங்கதியிலே வீணாய்ப் போகாமல், நான் சொன்னபடி நீங்கள் எத்தனம்பண்ணுகிறவர்களாய் இருப்பதற்கு [3]இந்தச் சகோதரரை அனுப்பினேன்.

௪ மக்கேதோனியர் என்னுடனேகூட வரும்பொழுது, உங்களை எத்தனப்படாதவர்களாகக் கண்டால், இத்தனை நிச்சயமாய்ப் புகழ்ந்ததற்காக நீங்களென்று நான் சொல்லமாட்டாமல் நாங்களே வெட்கப்படாதபடிக்கு (எத்தனமாயிருக்கவேண்டும்).

௫ ஆகையால் இந்தச் சகோதரர் முன்னாக உங்களிடத்திற்குப் போகும்படிக்கும், முன் அறிவிக்கப்பட்டிருக்கிற* உங்கள் தரும ஆசீர்வாதம்† கட்டாயமாக அல்ல, தரும ஆசீர்வாதமாகவே எத்தனமாயிருக்கப் பார்க்கும்படிக்கும் அவர்களை வேண்டிக்கொள்ளவேண்டுமென்று எண்ணி, அப்படிச் செய்தேன்.

௬ ¶ [4]பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பரிபூரணமாய் விதைக்கிறவன் பரிபூரணமாய் அறுப்பான்.

௭ [5]அவனவன் விசனமாய் அல்ல, கட்டாயமாயும் அல்ல, தான் மனதிலே விரும்புகிறபடியே கொடுக்கக்கடவன்.

௮ சந்தோஷமாய்க் கொடுக்கிறவனிடத்தில் [6]பராபரன் அன்பாயிருக்கிறாரே, பராபரனும் நீங்கள் எல்லாவற்றிலேயும் எப்பொழுதும் மிகுந்த திருத்தி உடையவர்களாய்ச் சகலவித நற்கிரியைகளுக்கும் சம்பூரணமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, [7]உங்களிடத்தில் சகலவித கிருபையும் சம்பூரணமாயிருக்கச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

௯ [8]அவன் தெளித்தான்; ஏழைகளுக்குக் கொடுத்தான்; அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்குமென்று எழுதியிருக்கிறவிதமாயிருக்கும்.

௰ அந்தப்படி [9]விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு அப்பத்தையும் அளிக்கிறவர் உங்கள் விதையையும் அதிகமாய்ப் பெருகப்பண்ணி, [10]உங்கள் நீதியின் விளைச்சல்களை வளரச்செய்வார்.

௰௧ அதினாலே நீங்கள் மிகுந்த உதாரமுள்ளவர்களாய்‡ இருக்கும்படிக்கு, எவ்விதத்திலேயும் சம்பூரணம் உள்ளவர்களாவீர்கள்; அதினாலே [11]நாங்களும் பராபரனுக்குத் தோத்திரம் செலுத்துதற்கு எழுப்பப்படுவோம்.

௰௨ இந்தத் தருமாட்டத்தையின் ஊழியம் பரிசுத்தவான்களுடைய குறைவுகளை [12]நீக்குகிறதற்குமாத்திரம் அல்ல, அநேகர் பராபரனைத் தோத்திரிக்கிறதற்கும் மிகுந்த பலனுள்ளதாய் இருக்கின்றதே.

௰௩ அவர்கள் இவ்வூழியத்தின் உத்தமத்தைக் கண்டு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கைபண்ணுகிறதற்காகவும் தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் [13]உதாரமாய்த் தருமத்தைச் செய்கிறதற்காகவும் [14]பராபரனைத் துதித்து,

௰௪ உங்களுக்காக வேண்டுதல் செய்து, பராபரன் உங்களுக்கு [15]அளித்த மிகவும் மேன்மையான கிருபையின்நிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

௰௫ [16]பராபரன் அனுக்கிரகித்த

கி. பி. ௫௰.

1 ௨ கொரி. ௮ ௰
2 ௨ கொரி ௮ ௨௪
3 ௨ கொரி, ௮ ௬, ௰௭, ௰௮, ௨௨
* அல்லது சொல்லப்பட்டிருக்கிற
† அல்லது தருமம்; ௧ மோ ௩௩ ௰௧. ௧ சாமு. ௨௫ ௨௭ ௨ இரா ௫ ௰௫
4 வாக். ௰௧. ௨௪ ௰௬ ௰௭ ௨௨. ௬. கலா ௬. ௭, ௬.
5 ௫ மோ. ௰௫ ௭
6 ௨ மோ ௨௫. ௨ ௩௫ ௫ வாக். ௰௧, ௨௫ ௨ரோ ௰௨. ௮ ௨ கொரி ௮. ௰௨.
7 வாக் ௰௧ ௨௪, ௨௫ ௨௮ ௨௭. பிலி. ௪. ௰௬
8 சங் ௱௰௨. ௯.
9 ஏசா ௫௫ ௰.
10 ஓசே ௰ ௰௨ மத் ௬ ௧
‡ அல்லது தாராளமுள்ளவர்கள், கிரேக்கு, கபடமற்றவர்கள்
11 ௨ கொரி ௧ ௰௧ ௪. ௰௫.
12 ௨ கொரி ௮. ௰௪
13 எபி ௰௩. ௰௬.
14 மத் ௫ ௰௬.
15 ௨ கொரி. ௮. ௧
16 யாக் ௧ ௰௭

சொல்லமுடியாத ஈவுக்காக அவருக்குத் தோத்திரம் உண்டாவதாக.

௰. அதிகாரம்.

௧ தன்னை இகழ்ச்சிசெய்த கள்ள அப்போஸ்தலர்களுக்குத் தன்னுடைய அதிகாரத்தையும், அவர்களை வெல்லுகிறதற்கு ஏதுவான தனனிடத்தில் உள்ள ஞானயுதங்களையும் இன்னதென்று கூறி, எ நிருபங்களிலே வல்லமையுள்ளவனாய் இருக்கிறதுபோலத் தான் அவர்களிடத்தில் வரும்போது வசனத்திலும் வல்லவனாய் இருப்பேனென்று சொல்லி, ௰௨. அவர்களுடைய வீணான பெருமைபாராட்டலையும், அவர்கள் மற்றவர்களுடைய பிரயாசைகளைத் தங்களுடையவைகளாக்கிக்கொள்ளுதலையும் கடிந்துகொண்டது

[1]மேலும் உங்களுக்கு முன்பாக* இருக்கும்பொழுது தாழ்மையாயும் தூரத்திலே இருக்கும்பொழுது உங்கள்மேல் தயிரியமாயும் இருக்கிற [2]பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தினாலும் தயையினாலும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

௨ [3]நான் கேட்டுக்கொள்ளுகிறது என்னவெனில், நான் உங்கள் முன்பாக இருக்கும்பொழுது, எங்களைச் சரீரத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற † சிலருக்கு நான் துணிவாயிருக்க நினைக்கிறதால், அந்தத் துணிவோடே நான் தயிரியமுள்ளவனாய் இராதபடிக்குச் செய்வீர்களாக.

௩ நாங்கள் சரீரத்தோடே நடந்து திரிந்தும், சரீரத்தின்படி போராட்டம்பண்ணமாட்டோம்.

௪ [4]எங்களுடைய போர்ஆயுதங்கள் [5]மாம்சத்திற்கு ஏற்ற பலஈனமுள்ளவைகளாய் இராமல், [6]அரண்களை நிர்மூலமாக்குதற்குத் திவ்விய‡ [7]பெலனுள்ளவைகளாய் இருக்கின்றனவே.

௫ அவைகளால் நாங்கள் அகந்தையான§ சிந்தனைகளையும், பராபரனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் உயருகிற எல்லாவித மேட்டிமையையும் [8]நிர்மூலமாக்கி, எந்தப் புத்தியையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருந்து,

௬ [9]நீங்கள் நிறைவாய்க் கீழ்ப்படிந்திருக்கும்பொழுது [10]எல்லாக்கீழ்ப்படியாமைக்குந்தக்கநீதியுள்ள தண்டனையைச் செலுத்த எத்தனமாயிருக்கிறோம்.

௭ ¶ [11]முகத்திற்கு முன்னிருக்கிறவைகளை (மாத்திரம்) பார்க்கிறீர்களா? [12]ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்கு உரியவன் என்று நம்பிக்கொண்டால், அவன் தான் கிறிஸ்துவுக்கு உரியவனாய் இருக்கிறதுபோல, [13]நாங்களும் கிறிஸ்துவுக்கு உரியவர்கள் என்று தன்னிலேதானே சிந்திக்கக்கடவன்.

௮ அதுவுமல்லாமல் உங்களை நிர்மூலமாக்குதற்கு அல்ல, எழுப்புதற்குக்காத்தர் எங்களுக்குக்கொடுத்த [14]அதிகாரத்தைக்குறித்துநான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மைபாராட்டினாலும் [15]நான் வெட்கபபடுவதில்லை.

௯ நான் நிருபங்களாலே உங்களைப பயமுறுத்துகிறவனாய்த் தோன்ருதபடிக்குமாத்திரம், (அப்படி மேன்மைபாராட்டமாட்டேன்.)

௰ அவனுடைய நிருபங்கள் பாரமும் பெலனுமுள்ளவைகள்; ஆகிலும் [16]சரீரத்தின் தோற்றம் பெலஈனமுமாய் அவனுடைய [17]வசனம் அற்பமுமாயிருக்கிறது என்கிறார்களே.||

௰௧ அப்படிச் சொல்லுகிறவன் நிருபங்களின் வசனத்தினாலே தூரத்தில் இருக்கிற நாங்கள் தோன்றுகிறது எப்படியோ, அப்படி முகத்திற்குமுன்பாகவும் கிரியையிலேயும் தோன்றுவோம் என்று சிந்திக்கக்கடவன்.

௰௨ ஆகிலும் தங்களைத்தாமே புகழுகிற சிலருக்கு. [18]நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; அவர்கள் தங்களாலே தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொண்டு, (தங்களை) அறியாதவர்களாய்* இருக்கிறார்கள்.

௰௩ நாங்கள் (எங்களுக்கு) அ

கி. பி. ௬௰.

1 ௰. வசனம். ௨ கொரி. ௰௨ ௬, ௭, ௯.

* அல்லது வெளித் தோற்றத்தில்.

2 ௨ரோ ௰௨ ௧

3 ௧ கொரி ௪ ௨௧ ௨ கொரி ௰௩ ௨, ௰

† அல்லது நினைக்கிற

4 எபே ௬ ௰௩ ௧ தெச ௫ ௮

5 ௧ தீமோ. ௧ ௰௮ ௨ தீமோ ௨. ௩

6 எரே ௧ ௰

‡ அல்லது பராபரனால்.

7 அப ௭ ௨௨ ௧ கொரி. ௨ ௫. ௨ கொரி ௯ ௭ ௰௩. ௩, ௪

§ அல்லது மன

8 ௧ கொரி ௩. ௰௯ ௧ ௰௯.

9 ௨ கொரி ௨, ௯ ௭ ௰௬

10 ௨ கொரி. ௰௩. ௨, ௰.

11 யோவா ௭. ௨௪ ௨ கொரி. ௫. ௰௨. ௰௮

12 ௧ கொரி ௰௪ ௩௭ ௧ யோ ௪ ௬.

13 ௧ கொரி. ௩ ௨௩ ௯ ௧ ௨ கொரி. ௰௩ ௨௩.

14 ௨ கொரி. ௰௩ ௰.

15 ௨ கொரி ௭ ௰௪. ௰௨ ௬.

16 ௧ கொரி ௨. ௧, ௪ ௧ வச ௨ கொரி ௰௨ ௬, ௭, ௯ கலா ௪ ௰௩

17 ௧ கொரி ௧ ௰௭ ௨ ௧, ௪ ௨ கொரி. ௰௩ ௩.

|| கிரேக்கு, இருக்குதென் கிறார்

18 ௨ கொரி ௩ ௧. ௫ ௰௨

* அல்லது ஞானமற்றவர்கள்

ளந்துகொடாதவைகளைக் குறித்து [1]மேன்மைபாராட்டாமல், உங்கள் இடம்வரைக்கும் எட்டத்தக்கதாக, பராபரன் எங்களுக்கு அளந்துகொடுத்த அளவின்படியே* மேன்மைபாராட்டுகிறோம்.

௰௪ [2]கிறிஸ்துவின், சுவிசேஷத்தோடே நாங்கள் உங்கள் இடம்வரைக்கும் சென்றோமே; ஆகையால் உங்களிடத்தில் வந்து எட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப் போகிறதில்லை.

௰௫ அளவுக்கு மிஞ்சி [3]அந்நியருடைய வேலைக்கு உட்பட்டு, மேன்மைபாராட்டமாட்டோம்.

௰௬ ஆகிலும் உங்கள் விசுவாசம் வளர்ந்திருககும்பொழுது, உங்களுக்கு அபபுறமான இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் அந்நிய எல்லைகளுக்குள்ளே† செய்யப்பட்டவைகளை (நாங்கள் செய்ததாக) மேன்மைபாராட்டாதிருக்கவும்தக்கதாக, எங்கள் அளவு உங்களாலே‡ மிகவும் பெருகுமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

௰௭ [4]மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தாவைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

௰௮ [5]தன்னைத்தான் புகழுகிறவன் அல்ல, [6]கர்த்தராலே புகழபபடுகிறவன் எவனோ, அவன் உத்தமனாயிருப்பானே.

௰௧. அதிகாரம்.

௧ தன்னைப்பார்க்கிலும் கள்ள அப்போஸ்தலர்களை மேன்மையாக எண்ணின கொரிந்தியர்பேரிலே தனக்கிருந்த வைராக்கியத்தினாலே தன்னைக் கட்டாயத்தினால் மேன்மைபாராட்டி, ௫. தான் பிரதான அப்போஸ்தலருக்குச் சரியானவனென்றும், ௭ கொரிந்தியருக்கு இலவசமாய்ச் சுவிசேஷத்தை அறிவித்தவனென்றும், ௰௩ கள்ளப் போதகர்களைப்பார்க்கிலும் தான் லௌகீக மேன்மைகளிலும், ௨௩. கிறிஸ்துவின் ஊழியத்திலும் பலபாடுகளிலும் குறைந்தவன் அல்லவென்றும் சொல்லியது.

ஆ நீங்கள் என் [7]புத்தியீனத்திற்கு சற்றே பொறுமையாயிருந்தால், நலமாயிருக்கும்; எனக்குப் பொறுத்தும்§ இருக்கிறீர்களே.

௨ [8]நான் உங்களைக் கற்புள்ள கன்னியாஸ்திரீயாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு [9]ஒபபுக்கொடுக்க [10]நியமித்தபடியால் உங்களுக்காகத் [11]தேவ வைராக்கியமாய் வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

௩ ஆகிலும் [12]அந்தப் பாம்பு தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, [13]உங்கள் மனதும் கிறிஸ்துவின்மேலுள்ள பத்தியின் உண்மையைவிட்டு விலகக் கெடுக்கப்படுமோ என்று பயந்திருக்கிறேன்.

௪ எபபடியெனில் (உங்களிடத்தில்) வந்திருக்கிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது, நீங்கள் பெறாத வேறொரு ஆவியையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளாத [14]வேறொரு சுவிசேஷத்தையும் (அவனாலே) பெற்றீர்களானால், அவனை‖ நன்றாய் ஏற்பீர்கள்.

௫ மிகவும் பெரிய அந்த அப்போஸ்தலருக்கு [15]நான் எவ்வளவாகிலும் குறைவுள்ளவன் அல்ல என்று எண்ணுகிறேன்.

௬ நான் பேச்சிலே [16]கல்லாதவனாயிருந்தாலும், [17]அறிவிலே கல்லாதவன அல்ல, எப்பொழுதும் [18]எல்லாவிதங்களிலேயும் உங்களுக்குள்ளே (அப்படியே) வெளிபபட்டிருக்கிறோமே.

௭ அல்லது நீங்கள் உயர்த்தப்படும்படிக்கு நான் [19]என்னைத்தானே தாழ்த்தி, பராபரனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்கு அறிவித்ததினாலே குற்றம்செய்தேனோ?

௮ (இல்லையே,). உங்களுக்கே ஊழியம்செய்யும்படிக்கு மற்றச் சபைகள் கையிலே நான் சம்பளம் பற்றிக்கொண்டேன்.

௯ நான் உங்களிடத்திலிருந் [illegible] படிக்கபொழு

இ. பி. சுய.

1 ௰௫ வச
* அல்லது முறைபபடியே.
2 ௧ கொரி ௩ ௫, ௰:௪ ௰௫. ௬ ௧.
3 உரோ ௰௫. ௨௰.
† அல்லது ஒழுங்குகளின்படி
‡ அல்லது உங்களில்
4 ஏசா ௬௫ ௰௬ எரே. ௯. ௨௪. ௧ கொரி ௧ ௩௧
5 வாக் ௨௭. ௨.
6 உரோ ௨ ௨௯ ௧ கொரி ௪ ௫
7 ௰௬ வசனம ௨ கொரி ௫ ௰௩.
§ அல்லது மெயயாயப பொறுத்து
8 ௯ ஹோ ௨௰ ௰௯
9 கொலோ ௧ ௨௮
10 ஒசே ௨ ௰௯, ௨௰ ௧ கொரி. ௪ ௰௫.
11 கலா ௪ ௰௭, ௰௮
12 ௧ மோ ௩ ௪ யோவா. ௮ ௪௪
13 எபெ ௬ ௨௪ கொலோ. ௨ ௪, ௮, ௰௮ ௧ தீமோ ௧ ௩ ௪ ௪ எபி ௰௩ ௯ ௨ பே ௩ ௰௭
14 கலா ௧ ௭, ௮
‖ அல்லது என்னை.
15 ௧ கொரி ௰௫ ௰ ௨ கொரி ௰௨ ௰௧ கலா ௨ ௬
16 ௧ கொரி ௧ ௰௭ ௨ ௧, ௰௩ ௨ கொரி ௰ ௰
17 எபே ௩ ௪
18 ௨ கொரி ௪ ௨ ௫ ௰௨; ௰௨ ௰௨.
19 அப ௰௮ ௩ ௧ கொரி ௯ ௬ ௰௨ ௨ கொரி ௰ ௧

தும் [1]ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; [2]மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நீக்கினார்களே; [3]எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாய் இராதபடிக்குப் பார்த்தேன்; இனிமேலும் அப்படியே பார்ப்பேன்.

௰ [4]அகாயாநாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னிடத்தில் நின்றுநீங்குவதில்லையென்று* என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய [5]உண்மையைக்கொண்டு சொல்லுகிறேன்.

௰௧ என்னத்தினாலே (அப்படிச் செய்வேன்)? [6]நான் உங்களைச் சிநேகியாதபடியினாலோ (அப்படிச் செய்வேன்)? அதினால் அல்லவென்று பராபரனே அறிந்திருக்கிறார்.

௰௨ மேலும் தங்களை மேன்மைபாராட்டுகிறதினாலே எங்களைப்போலக் காணப்படச் சமயம் தேடுகிறவர்களுக்குச் [7]சமயம் அற்றுப்போகும்பொருட்டாக நான் இப்படிச் செய்கிறேனு, பின்னும் இப்படிச் செய்வேன்.

௰௩ ¶ [8]அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர், [9]கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் ரூபத்தை எடுத்து, நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

௰௪ அது அதிசயமல்ல, [10]சாத்தானும் ஒளியையுடைய தூதனைப்போன்ற ரூபத்தை எடுப்பானே.

௰௫ ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் [11]நீதியின் ஊழியக்காரரைப்போன்ற ரூபத்தை எடுத்தால், மிகுந்த அதிசயமாகமாட்டாது; [12]அவர்களுடைய முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.

௰௬ ¶ [13]பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில், ஒருவனும் என்னைப் புத்தியீனன் என்று எண்ணாதிருப்பானாக; எண்ணினால் நானும் சற்றே மேன்மைபாராட்டுகிறபொழுது, நீங்கள் என்னைப் புத்தியீனனைப்போலாகிலும் சகிக்கக்† கடவீர்கள்.

௰௭ இப்படித் [14]தயிரியமாய் மேன்மைபாராட்டுகையில், [15]நான் சொல்லுகிறது கர்த்தரால் ஆனபடியே சொல்லாமல் புத்தியீனனைப்போலச் சொல்லுகிறேன்.

௰௮ [16]அநேகர் சரீரத்தின்படி மேன்மைபாராட்டிக்கொள்ளுகையில், நானும் மேன்மைபாராட்டுவேன்.

௰௯ [17]புத்தியுள்ள நீங்கள் புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே.

௨௰ [18]ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் (உங்கள் ஆஸ்திகளைப்) பிடித்துக்கொண்டாலும், ஒருவன் உங்களுக்கு முன்பாகத் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே.

௨௧ [19]நாங்கள் பெலஈனராக எங்களுக்கு வந்த நிந்தையைக்குறித்து (இப்படிப்) பேசுகிறேன்; [20]ஒருவன் துணிகிறது எதுவோ, அதிலே நானும் துணிவாயிருக்கிறேன்; இப்படிப் புத்தியீனமாய்ப் பேசுகிறேன்

௨௨ அவர்கள் எபிரேயரானால் [21]நானும் எபிரேயன்; அவர்கள் இஸ்ரவேலரானால், நானும் இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியானால் நானும் ஆபிரகாமின் சந்ததியான்

௨௩ அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரானால், நான் அவர்களுக்கு மேற்பட்டவன்; (மறுபடியும்) புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; அவர்களிலும் [22]நான் அதிக வேலைகளைச் செய்தேன்; [23]அதிகமாய் அடிபட்டேன்; அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டேன்;

கி. பி. ௬௰.

1 அப் ௨௰ ௩௩. ௨ கொரி. ௰௨. ௰௩. ௧ தெச ௨. ௯. ௨ தெச ௩. ௮, ௯

2 பிலி ௪. ௰, ௰௫, ௰௬

3 ௨ கொரி ௰௨. ௰௪; ௰௬

4 ௧ கொரி. ௯. ௰௫

* அல்லது இந்தப் புகழ்ச்சியை நான் அடையாதபடிக்கு, ஒருவனும் தடைசெய்யமாட்டானென்று

5 ரோ ௯. ௧

6 ௨ கொரி ௬. ௰௧. ௭. ௩. ௰௨. ௰௫

7 ௧ கொரி ௯. ௰௨

8 அப் ௰௫. ௨௪. ௨ ரோ. ௰௬. ௰௮. கலா ௧. ௭. ௬. ௰௨. பிலி ௧. ௰௫. ௨ பே ௨. ௧. ௧ யோ ௪. ௧. வெளி ௨. ௨

9 ௨ கொரி ௨. ௰௭. பிலி ௩. ௨. தீத் ௧. ௰, ௰௧

10 கலா ௧. ௮

11 ௨ கொரி ௩. ௯

12 பிலி ௩. ௰௯

13 ௧ வசனம. ௨ கொரி ௰௨. ௬, ௰௧

† அல்லது ஏற்றுக்கொள்ள

14 ௨ கொரி, ௯. ௪

15 ௧ கொரி ௭. ௬, ௰௨

16 பிலி ௩. ௩, ௪

17 ௧ கொரி ௪. ௰

18 கலா ௨. ௪. ௪. ௯

19 ௨ கொரி ௰. ௰

20 பிலி ௩. ௪

21 அப் ௨௨. ௩. ௨ ரோ ௰௧. ௧. பிலி ௩. ௫

22 ௧ கொரி ௰௫. ௰

23 அப் ௯. ௰௬. ௨௰. ௨௩. ௨௧. ௰௧. ௨ கொரி ௬. ௪, ௫

அநேகந்தரம் [1]மரணத்திற்கு ஏதுவாயிருந்தேன்.

௨௪ [2]யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்துதரம் பட்டேன்.

௨௫ [3]மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்; [4]ஒருதரம் கல்லெறியுண்டேன்; [5]மூன்றுதரம் கப்பல் சேதமானதில் இருந்தேன்; ஓர் இராப்பகல் முழுவதும் ஆழத்திலே இருந்தேன்.

௨௬ அநேகந்தரம் பிரயாணமாய்ப் போனேன்; ஆறுகளால் வருகிற மோசங்களிலும், கள்ளரால் வருகிற மோசங்களிலும், [6]என் சொந்த தேசத்தாரால் வந்த மோசங்களிலும், [7]புறத்தேசத்தாரால் வந்த மோசங்களிலும், ஊர்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரால் வந்த மோசங்களிலும்,

௨௭ வேலையிலும் வருத்தத்திலும் [8]அநேகந்தரம் கண்விழிப்புகளிலும் [9]பசியிலும் தாகத்திலும், அநேகந்தரம் உபவாசங்களிலும் குளிரிலும் நிருவாணத்திலும் இருந்தேன்.

௨௮ புறம்பே உண்டான இவைகளைத்தவிர எல்லாச் சபைகளைக் குறித்தும் இருக்கிற [10]கவலை என்னை நாள்தோறும் நெருக்குகின்றன.

௨௯ ¶ [11]பெலவீனம் அடைகிறவன் எவனோ, அவனுக்கு நானும் பெலவீனனாயிருக்கிறதில்லையோ? இடறுகிறவன் எவனோ, அவனுக்கு (உதவிசெய்ய) எரிச்சல் இல்லாமல் இருக்கிறேனோ?

௩௰ மேன்மைபாராட்டவேண்டியதால், [12]என் பெலவீனத்திற்கு உரியவைகளைச் சொல்லி, மேன்மைபாராட்டுவேன்.

௩௧ [13]என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்ட பராபரனும், [14]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய்சொல்லுகிறதில்லை என்று அறிந்திருக்கிறார்.

௩௨ [15]தமஸ்கு நகரியிலே அரேத்தா என்னும் இராசாவினுடைய சேனைத்தலைவன் என்னைப் பிடிக்கவேண்டும் என்று தமஸ்கருடைய பட்டணத்தின் வாசல்களில் காவல்வைத்துக் காத்தான்.

௩௩ அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, பலகணியிலிருந்து மதில்வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைகளுக்குத் தப்பிப்போனேன்.

௰௨. அதிகாரம்.

௧ தான் கண்ட தரிசனங்களிலே தன் அப்போஸ்தலப்பட்டத்தைக்குறித்து மேன்மையைப் பாராட்டாமல், ௯ தன் பலவீனங்களில் மேன்மைபாராட்ட விரும்பி, ௰௧ அப்படியே தன்னைக்குறித்து மேன்மைபாராட்டுவதற்குக் காரணமாயிருந்த அவர்கள்பேரிலேயே குற்றஞ்சாட்டி, ௰௪ மறுபடியும் அவர்களிடத்தில் வரும்போது பிதாவின பட சந்தோடே வராமல், ௨௰ அநேக குற்றவாளிகளையும், அநேக தாறுமாறுகளையும் காண்பதினாலே மனசஞ்சலத்தோடே வருவானென்றும் சொல்லியது

இப்படியிருக்க மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகாது; ஆகிலும்* கர்த்தர் கொடுத்த தரிசனைகளையும் வெளிப்படுத்துதல்களையும் சொல்லிவருகிறேன்.

௨ ¶ கிறிஸ்துவைப்பற்றிய [16]ஒரு மனிதனை அறிந்திருக்கிறேன்; அவன் பதினாலு வருஷத்திற்குமுன்னே [17]மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான் (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ, அதற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியமாட்டேன்; அது பராபரனுக்குத் தெரியும்.

௩ இப்படிப்பட்ட மனிதன் [18]பரதீசுக்கு உயர்த்தப்பட்டு, மனிதர் பேசக்கூடாத,† வாக்குக்கு எட்டாத வார்த்தைகளைக் கேட்டான் என்று அறிந்திருக்கிறேன்.

௪ (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ, அதற்குப் புறம்பே இருந்தானோ அதை அறி

கி. பி. ௬௰.

1 ௧ கொரி ௰௫. ௩௰, ௩௧, ௩௨. ௨ கொரி ௧ ௯, ௪ ௰௧ ௬ ௯
2 உபா. ௨௫ ௩
3 அப ௰௬. ௨௨
4 அப ௰௪ ௰௯
5 அப ௨௭ ௪௧
6 அப ௯ ௨௩ ௰௩ ௫௰ ௰௪ ௫ ௰௭ ௫ ௨௰ ௩ ௨௧ ௩௧ ௨௩ ௰, ௰௨ ௨௫ ௩
7 அப ௰௪ ௫ ௰௯ ௨௩
8 அப ௨௰ ௩௪ ௨ கொரி ௯ ௬
9 ௧ கொரி ௪ ௰௧
10 அப ௨௰ ௰௮ ரோ ௧ ௰௪
11 ௧ கொரி ௮ ௰௩ ௯ ௨௨
12 ௨ கொரி ௰௨ ௫, ௯, ௰
13 ரோ ௯ ௫
14 ரோ ௧ ௯ ௯ ௧ ௨ கொரி ௧ ௨௩ கலா ௧ ௨௰ ௧ தெச ௨ ௫
15 அப ௯ ௨௪, ௨௫
* ஓரோக்கு, எனென்றால்
16 ரோ ௰௬ ௭ ௨ கொரி ௫ ௰௭ கலா ௧ ௨௨
17 அப ௨௨ ௰௭ [illegible], அப ௰௪ ௯.
18 லூக் ௨௩ ௪௩
† அல்லது தகாத

யமாட்டேன்; பராபரனுக்கே தெரியும்.

௫ ¶ இப்படிப்பட்டவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்; என்னைக்குறித்து என் பலவீனங்களிலே அன்றி, [1]வேறொன்றிலும் மேன்மைபாராட்டமாட்டேன்.

௬ சத்தியமானதை நான் பேசுகிறேன்; ஆதலால் [2]மேன்மைபாராட்ட மனதிருந்தாலும், நான் புத்தியீனன் அல்ல; ஒருவனும் என்னிடத்தில் காண்கிறதற்கும், அல்லது என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அதை நிறுத்துகிறேன்.

௭ ¶ அன்றியும் அதிக மேன்மையானவைகள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டதினாலே நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சதேகத்திலே [3]ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, என்னைக் குட்டும் சாத்தானுடைய [4]தூதனே இருக்கிறான்.

௮ அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு [5]நான் மூன்றுதரம் கர்த்தாவை வேண்டிக்கொண்டேன்.

௯ அவர் என்னுடனே சொன்னது: எனது கிருபை உனக்குப் போதும், என்னுடைய வல்லமை (உன்) பெலவீனத்திலே நிறைவாய்த் தோன்றுகின்றதே என்றார்; ஆகையால் [6]கிறிஸ்துவின் வல்லமை என்மேல் இறங்கியிருக்கும்படிக்கு, [7]நான் மிகவும் அதிக விருப்பமாய் என் பெலவீனங்களைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்.

௰ அந்தப்படி, [8]நான் பெலவீனமாய் இருக்கும்பொழுது பெலனாய் இருக்கிறபடியால் கிறிஸ்துவின்நிமித்தம் எனக்கு வரும் பெலவீனங்களிலும் நிந்தைகளிலும் வறுமைகளிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் [9]நான் பிரியமாயிருக்கிறேன்.

௰௧ ¶ மேன்மைபாராட்டினதால் [10]நான் புத்தியீனன் ஆனேன்; நீங்களே அதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். [11]நான் பிரயோசனம் இல்லாதவனாய் இருந்தாலும், மிகவும் பிரதான அப்போஸ்தலருக்கும் [12]நான் எவ்வளவிலும் குறைந்தவனாயிராததால், உங்களாலே நான் மெச்சிக்கொள்ளப்பட நியாயமாயிருந்ததே.

௰௨ [13]அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் உங்களுக்குள்ளே எல்லாவிதமான பொறுமையோடும் அதிசயங்களாலும் அற்புதங்களாலும் வல்லமைகளாலும் என்னாலே நடப்பிக்கப்பட்டன அல்லவா? [14]மற்றச் சபைகளுக்கு நீங்கள் எதிலே குறைவாயிருக்கிறீர்கள்?

௰௩ நான் உங்கள்மேலே [15]சுமையை வையாதிருந்ததினாலே அன்றி வேறொன்றிலும் இல்லையே; [16]இந்த அநியாயத்தை நீங்கள் எனக்கு மன்னிக்கவேண்டும்.

௰௪ ¶ இப்பொழுது உங்களிடத்திற்கு வர [17]மூன்றாந்தரம் எத்தனமாயிருக்கிறேன்; (அப்பொழுதும்) [18]நான் உங்களுடையதை அல்ல, உங்களையே தேடுகிறபடியால் நான் உங்கள்மேல் சுமையை வைப்பதில்லை; [19]பெற்றாருக்குப் பிள்ளைகள் அல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டுமே.

௰௫ ஆனதால் [20]நான் உங்களுக்குக் காட்டுகிற அன்பு எவ்வளவோ, அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தும், [21]மிகவும் சந்தோஷமாய் நான் [22]உங்கள் ஆத்துமாக்களுக்காக* என்னைச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்.

௰௬ ¶ அப்படி ஆகட்டும், [23]அவன் உங்களுக்குப் பாரமாய் இருக்கவில்லை; அது மெய்தான், ஆகிலும் தந்திரமுள்ளவனாய் இருந்

கி. பி. ௬௰.

1 ௨ கொரி ௰௧ ௩௰
2 ௨ கொரி ௰ ௮ ௰௧ ௰௬
3 எசே ௨௮ ௨௪ கலா ௪ ௰௩, ௰௪
4 யோபு ௨ ௭ லூக் ௰௩ ௰௬
5 ௫ மோ ௩ ௨௩, ௨௭ மத் ௨௬ ௪௪
6 ௧ பே ௪ ௰௪
7 ௨ கொரி ௰௧ ௩௰
8 ௨ கொரி ௰௩ ௪
9 ௨ரோ ௫. ௩. ௨ கொரி. ௭ ௪
10 ௨ கொரி ௰௧ ௧, ௰௬, ௰௭
11 ௧ கொரி ௩ ௭ ௰௫, ௮, ௯ எபே ௩ ௮
12 ௨ கொரி ௰௩ ௫ கலா ௨ ௬, ௭, ௮
13 ௨ரோ ௰௫ ௰௮, ௰௯ ௧ கொரி ௯ ௨. ௨ கொரி ௪ ௨ ௯ ௪ ௰௧, ௯
14 ௧ கொரி ௧ ௭.
15 ௧ கொரி ௯ ௰௨ ௨ கொரி ௰௧ ௯
16 ௨ கொரி ௰௧ ௭
17 ௨ கொரி ௰௩ ௧
18 அப ௨௰ ௩௩ ௧ கொரி ௰ ௩௩
19 ௧ கொரி ௪ ௰௪, ௰௫
20 ௨ கொரி ௬ ௰௨, ௰௩
21 ௧ தெச ௨ ௮ பிலி ௨ ௰௭
22 யோவா ௰ ௰௧ ௨ கொரி ௧ ௬ கொலோ ௧, ௨௪ ௨ தீமோ ௨ ௰
* அல்லது உங்களுக்காக
23 ௨ கொரி ௰௧ ௯

து, உங்களைக் கபடத்தினாலே பிடித்தான் என்கிறார்கள்.

௰௭ (அது எப்படி?) [1]நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் யாராலே உங்களிடத்தில் பொழிவைத் தேடினேன்?

௰௮ [2]தீத்து உங்களிடத்தில் போகவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, [3]அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேனே; தீத்து உங்களிடத்தில் ஒரு பொழிவையாகிலும் தேடினனோ? நாங்கள் ஒரே ஆவியோடே அல்லவா நடந்தோம்? ஒரே மார்க்கமாயல்லவோ நடந்தோம்.

௰௯ ¶ [4]உங்களுக்குமுன்பாகக் குற்றம் அடக்கும்படி பேசுகிறோம் என்றும் மறுபடியும் எண்ணுகிறீர்களா? பிரியமானவர்களே, [5]பராபரனுடைய சந்நிதானத்திலே கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, இவைகளை எல்லாம் [6]உங்களை எழுப்பும்படிக்கே பேசுகிறோம்.

௨௰ ஆகிலும் நான் வந்து உங்களை என் மனதின்படி இருக்கிறவர்களாகக் காணாமலும், [7]உங்களுக்கு நானும் உங்கள் மனதின்படி இருக்கிறவனாகக் காணப்படாமலும் இருப்பேனோ? விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், புறங்கூறுதல், கோள்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்களும், உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோ?

௨௧ மறுபடியும் நான் வருகிறபொழுது, என் பராபரன் உங்களிடத்தில் என்னைத் [8]தாழ்மைப்படுத்தும்படிக்கு, [9]முன் பாவம்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும், [10]வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும்விட்டு மனம்திருப்பாமல் இருக்கிறதைக்குறித்து நான் துக்கப்படவேண்டியதாய் இருக்குமோ என்று இவைகளைக்குறித்துப் பயந்திருக்கிறேன்.

கி. பி. ௬௰.

1 ௨ கொரி ௭ ௨.
2 ௨ கொரி ௮ ௬, ௰௬, ௨௨
3 ௨ கொரி ௮ ௰௮
4 ௨ கொரி ௫ ௰௨
5 ரோ ௯ ௧ ௨ கொரி ௰௧ ௧௧
6 ௧ கொரி ௰. ௩௩
7 ௧ கொரி, ௪ ௰௪ ௨ கொரி, ௰௨ ௰௪ ௨,௰
8 ௨ கொரி ௨ ௧, ௪
9 ௨ கொரி ௰௬ ௨
10 ௧ கொரி ௫ ௧
11 ௨ கொரி ௰௨ ௰௪
12 ௪ மோ ௩௫ ௩௰ ௫ மோ ௰௭ ௬ ௰௯ ௰௫ மத் ௰௮ ௰௬ யோவா ௮ ௰௭ எபி ௰ ௨௮
13 ௨ கொரி ௧ ௨௩
14 ௨ கொரி ௰௨ ௨௧
15 ௨ கொரி ௰ ௨
16 மத் ௰ ௨௰ ௧ கொரி ௫ ௪ ௨ கொரி ௨ ௰
17 ௧ கொரி ௯ ௨
18 பிலி ௨ ௭ ௮ ௧ பே ௩ ௰௮
19 ரோ ௬ ௪
20 ௨ கொரி ௰ ௩, ௪
* அல்லது அவருக்குள்
21 ௧ கொரி ௰௧ ௨௮
22 ௧ கொரி ௯ ௨௭
23 ரோ ௮ ௰ கலா ௪ ௰௯

௰௩. அதிகாரம்.

௧ குணப்படாத பாவிகளுக்குத் தண்டனையைக் கொண்டும், தன் அப்போஸ்தல அதிகாரத்தைக் கொண்டும் பயமுறுத்தி, ௫ அவர்கள் தங்கள் விசுவாசத்தைக்குறித்துப் பரிசோதிக்கவும், ௭ தான் வருகிறதற்குள்ளே தங்கள் பாவங்களை விட்டுவிலகவும் கற்பித்து, ௰௧ மற்றப் பொதுவான சில புத்திகளையும் சொல்லி அவர்களை வாழ்த்தி நிருபத்தை முடித்தது

[11]இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன்; சகல சங்கதிகளும் [12]இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்

௨ நான் மறுபடியும் வரும்பொழுது, [13]தப்பவிடமாட்டேன் என்று [14]முன் பாவம்செய்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் [15]முன் சொன்னேனே; இப்பொழுது தூரமாயிருந்தும், உங்களிடத்தில் இருக்கிறவனாக நான் இரண்டாந்தரம் அப்படியே முன்னறிவித்துச் சொல்லுகிறேன்.

௩ என்றாலே கிறிஸ்து பேசுகிறதைக்குறித்துத் [16]திருட்டாந்தத்தைக் காணத் தேடுகிறீர்களே; அவர் உங்களுக்குள்ளே பலஈனர் அல்ல, [17]வல்லவராயிருக்கிறார்.

௪ அல்லாமலும், [18]அவர் பலஈனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், [19]பராபரனுடைய வல்லமையால் பிழைத்திருக்கிறார்; அப்படி [20]நாங்களும் அவர் நிமித்தம்* பெலஈனராயிருந்தும், அவருடனேகூடப் பராபரனுடைய வல்லமையால் உங்களுக்குள்ளே சீவனைக் காண்பிப்போம்.

௫ உங்களுக்கு விசுவாசம் உண்டோ? [21]அதைக்குறித்து உங்களைச் சோதியுங்கள்; உங்களைத்தாமே விசாரித்து அறியுங்கள்; அல்லது [22]நீங்கள் உதாரணம் இல்லாதவர்களாயிராவிட்டால், [23]இயேசுக்கிறிஸ்து உங்களிடத்தில் இருக்கிறார் என்று உங்களைத்தாமே அறிகிறதில்லையா?

௬ நாங்கள் உதாரணம் இல்லா

தவர்கள் அல்லவென்பதை அறிவீர்கள் என்று நம்புகிறேன்.

௭ மேலும் நீங்கள் எவ்வளவாகிலும் பொல்லாங்கைச் செய்யாதிருக்கும்படியாக, பராபரனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன்; [1]நாங்கள் உத்தாரணம் உள்ளவர்கள் என்று காணப்படும்பொருட்டு அல்ல, நீங்கள் நலமானதைச் செய்யும்பொருட்டே அப்படிச் செய்கிறேன். (அப்படி நீங்கள் செய்தால்,) நாங்கள் உத்தாரணம் இல்லாதவர்களாயிருக்கலாம்

௮ சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றும் செய்யக்கூடாமல் சத்தியத்திற்கு நேராகச் செய்வோமே.

௯ ஆகையால், [2]நாங்கள் பலவீனராயிருந்தாலும் நீங்கள் பலமுள்ளவர்களானால் சந்தோஷப்படுவோம்; [3]அந்தப்படி நீங்கள் நற்சீர் பொருந்தும்படிக்கே வேண்டுதல்பண்ணுகிறோம்.

௰ அதினாலே நான் உங்களிடத்தில் வந்திருக்கும்பொழுது, [4]இடிக்கிறதற்கு அல்ல, எழுப்பிக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எனக்குக் கொடுத்த [5]அதிகாரத்தின்படியே நான் கண்டிதம்பண்ணாதபடிக்கு, இவைகளைத் தூரமாயிருந்து [6]எழுதுகிறேன்

௰௧ ¶ கடைசியிலே சகோதரரே, சந்தோஷமாயிருங்கள்; நற்சீர் பொருந்துங்கள்; ஆறுதலை அடையுங்கள்; [7]ஏகசிந்தையாயிருங்கள்; சமாதானமாயிருங்கள்; அப்பொழுது அன்புக்கும் [8]சமாதானத்திற்கும் காரணராகிய பராபரன் உங்கள் பங்கில் இருப்பார்.

௰௨ [9]ஒருவரை ஒருவர் பரிசுத்த முத்தத்தினாலே வாழ்த்துங்கள்.

௰௩ பரிசுத்தவான்கள் எல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்.

௰௪ [10]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையும் பராபரனுடைய அன்பும் [11]பரிசுத்த ஆவியோடே ஐக்கியமும் உங்களனைவருடனேயும் இருக்கக்கடவது.—ஆமென்.

கி. பி. ௬௰.

1 ௨ கொரி ௧௩. ௬
2 ௧ கொரி ௪ ௰; ௨ கொரி ௰௧ ௩௰ ௰௨ ௯, ௰.
3 ௧ தெச. ௩ ௰.
4 தீத் ௧ ௰௩
5 ௨ கொரி ௰ ௮
6 ௧ கொரி ௪ ௨௧ ௨ கொரி ௨. ௩ ௰ ௨ ௰௨ ௨௰ ௨௧
7 ௨ ரோ ௰௨ ௰௬ ௰௫ ௫ ௧ கொரி ௧ ௰ பிலி ௨ ௨ ௩ ௰௬ ௧ பே ௩ ௮
8 ௨ ரோ ௰௫ ௩௩
9 ௨ ரோ ௰௬ ௰௬ ௧ கொரி ௰௬ ௨௰ ௧ தெ ௫ ௨௬ ௧ பே ௫ ௰௪
10 ௨ ரோ ௰௬ ௨௪
11 பிலி ௨ ௧

GALATIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

கலாத்தியருக்கு எழுதின

நிருபம்.

க. அதிகாரம்.

க கலாத்தியசபையார் தன்னையும் சுவிசேஷத்தையும் இத்தனை சீக்கிரமாய் விட்டுவிட்டதற்கு ஆச்சரியப்பட்டு, அ தான் பிரசங்கித்த சுவிசேஷத்தைத் தவிர மற்ற விபரீதங்களைப் பிரசங்கிக்கிறவர்களைச் சபித்து, கக தான் சுவிசேஷத்தை மனுஷர்களால் அல்ல, பராபரனாலேயே கற்றறிந்தானென்றும், கரு தான் அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைக்கப்பட்டதற்குமுன் இப்படிப்பட்டவனாய் இருந்தானென்றும், கஎ அழைக்கப்பட்டவுடனே இவற்றைச் செய்தானென்றும் காட்டியது.

[1]மனிதரிலிருந்தும் அல்ல, ஒரு மனிதனாலும் அல்ல, [2]இயேசுக்கிறிஸ்துவினாலும் [3]அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய பராபரனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலும்,

உ [4]என்னுடனேகூட இருக்கிற எல்லாச் சகோதரரும் கலாத்திய நாட்டிலுள்ள [5]சபைகளுக்கு எழுதுகிறதாவது:

ங [6]இப்பொழுது இருக்கிற பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து நம்மை நீக்கிவிடும்படிக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நம்முடைய பிதாவாகிய பராபரனுடைய சித்தத்தின்படியே [7]நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தாரே; அவராலும் பிதாவாகிய பராபரனாலும்,

ச [8]உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

ரு. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.—ஆமென்.

சு ¶ உங்களைக் கிறிஸ்துவின் கிருபைக்குள் [9]அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பினதால் நான் ஆச்சரியப்படுகிறேன்.

எ (இதுவன்றி,) [10]வேறொரு சுவிசேஷமும் இல்லையே, [11]அப்படியிருந்தும் சிலர் உங்களைக் கலக்கப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை மாறுபாடாக்க மனதாயிருக்கிறார்கள்.

அ [12]நாங்கள் உங்களுக்கு அறிவித்த சுவிசேஷத்தைத்தவிர, நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தால், சபிக்கப்பட்டவர்களாயிருக்கக்கடவோம்.

கூ [13]ஒருவன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தைத்தவிர, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தால், சபிக்கப்பட்டவனாகவே இருக்கக்கடவன்,

கி. பி. ருஅ.

1 [illegible]
2 [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible]
6 [illegible]
7 [illegible]
8 [illegible]
9 [illegible]
10 [illegible]
11 [illegible]
12 [illegible]
13 [illegible] வெளி உஉ. கஅ

என்று முன்சொன்னதுபோல, மறுபடியும சொல்லுகிறேன்.

௰ இபபொழுது [1]நான் மனிதரை [2]நாடுகிறேனா? அல்லது பராபரனை நாடுகிறேனா? அல்லது [3]மனிதருக்குப பிரியமாயிருககப பார்ககிறேனா? நான் மனிதருக்குப பிரியமானவனானால், நான் கிறிஸதுவின் ஊழியக்காரனாய் இருபபதில்லை.

௰௧ ¶ மேலும் சகோதரரே, நான் உங்களுக்கு நிச்சயிக்கிறது என்னவெனில், [4]என்னால் பிரசங்கிககபபட்ட சுவிசேஷம் மனிதருடைய இச்சைக்கு ஏற்றதல்ல.

௰௨ [5]நான அதை ஒரு மனிதனால் அடையவும் படிக்கவும் இலலையே; [6]இயேசுக்கிறிஸ்துவே அதை எனக்கு வெளிபபடுததினார்

௰௩ நான் யூதமாரககததிலே இருநதபொழுது, என்னுடைய நடக்கையைக்குறிததுக் கேள்விபபட்டிருப்பீர்கள், [7]பராபரனுடைய சபையை நான் மிகவும் துன்பபபடுத்தி, [8]அதைப பாழாககி,

௰௪ என் தேசத்தாரில் என் வயதுள்ள,* அநேகரிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், [9]என் பிதாக்களுடைய பாரம்பரை நியாயங்களுக்காக [10]மிகுந்த பத்திவைராககியனாய் இருந்தேன்.

௰௫ ¶ அப்படி இருக்கும் காலத்திலே, என் தாயின் கருப்பமுதல் [11]என்னைப பிரிததெடுத்துத் தமது கிருபையினால் அழைத்த பராபரன்,

௰௬ [12]தமமுடைய குமாரனை நான் புறத்தேசத்தாரிடததில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, [13]அவரை எனக்குள் வெளிபபடுததப பிரியசித்தமாய் இருந்தபொழுது, நான் எவ்வளவாகிலும் [14]மாம்ச இரத்தத்தோடே யோசனைபண்ணாமலும்,

௰௭ எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குத் திரும்பாமலும், அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும தமஸ்கு ஊருக்குத் திரும்பிவநதேன்.

௰௮ அதின்பின்பு மூன்று வருஷம் சென்றபொழுது பேதுருவைப் பார்தது அறியும்படிக்கு, [15]நான் எருசலேமுககுப போய்,† அவனிடததில் பதினைந்து நாள் இருநதேன்.

௰௯ [16]கர்த்தருடைய சகோதரனாகிய யாககோபைத்தவிர, [17]அப்போஸ்தலரில் வேறொருவனையும் நான் காணவில்லை.

௨௰ நான் உஙகளுககு எழுதுகிற இவைகள் பொயயல்ல என்று [18]பராபரனுககு முன்பாக உங்களுககு நிசசயிக்கிறேன்.

௨௧ [19]பின்பு சீரியா, சிலிசியா தேசங்களுடைய புறஙகளில் வநதேன்.

௨௨ மேலும் [20]யூதேயாநாட்டிலே [21]கிறிஸ்துவைபபற்றிய சபைகளுக்கு முகம் அறியாதவனாய் இருநதேன்

௨௩ முன்னே நம்மைத் துன்பபபடுததினவன்தானே அழிக்கத் தேடின சுவிசேஷத்தை இபபொழுது அறிவிக்கிறான் என்றுமாத்திரம் அவர்கள் கேள்விபபட்டிருந்து,

௨௪ என்னைக்குறித்துப பராபரனைத் துதிததார்கள்.

௨. அதிகாரம்.

௧ நான் எருசலேமுக்கு மறுபடியும் போனகாலமும், முகாந்தரமும் இனனதென்றும, ௩ தீத்து சுன்னத்தடையாததில்லையென்றும், ௰௧ தான பேதுருவைக் கடிந்துகொண்ட நியாயம இனனதென்றும, ௰௪. தானும மற்றவர்களும யூதர்களாயிருந்தும் விசுவாசத்தினாலேயல்லாமல் கிரியைகளினால் நீதிமான்களாககூடாதென்றும், ௨௰. அபபடி நீதிமான்களாகிறவர்கள பாவத்திற்கு இடம கொடுக்கிறவர்கள அல்லவென்றும் காட்டுகிறது

பின்பு பதினாலுவருஷம் சென்றபொழுது, நான் தீத்தைக் கூட்டிக்கொண்டு, பருனபாவோடேகூட மறுபடியும் [22]எருசலேமுக்குப் போனேன்.

கி. பி. ௫௮.

1 ௧ தெச ௨ ௪.
2 ௧ சாமு ௨௪.
௭ மத ௨௮
௰௪ ௧ யோ ௧
௰௯
3 ௧ தெச ௨ ௪
யாக ௪ ௪
4 ௧ கொரி ௰௫
௧
5 ௧ கொரி ௰௫
௧, ௯ ௧ வச
6 எபே ௩ ௩
7 அப ௯, ௧
௨௨ ௪ ௨௯
௰௧ ௧ தீமோ ௧
௰௩
8 அப ௮ ௩
* அல்லது எனக்குச்சரியான
9 எரே ௯ ௰௪
மத ௰௫ ௨
யாத் ௭ ௫
10 அப ௨௨ ௩
௨௬ ௯ பிலி ௩
௬
11 ஏசா ௪௯ ௧,
௫ எரே ௧ ௫
அப ௯ ௰௫
௰௩ ௨ ௨௨ ௰௪
௰௫ ௨௬ ௰௬
௧
12 அப ௯ ௰௫
௨௨ ௨௧ ௨௬
௰௭ ௰௮ ௨௬
௰௧ ௰௩, எபே
௩ ௮
13 ௨ கொரி ௪
௬
14 மத ௰௬ ௰௭
௧ கொரி ௰௫
௫௰ எபே ௬
௰௨
15 அப ௯ ௨௬
† அல்லது திருமபி
16 மத் ௰௩ ௫௫
மாற் ௬ ௩
17 ௧ கொரி ௯ ௫
18 உரோ ௯ ௧
19 அப ௯ ௩௰
20 ௧ தெச ௨ ௰௪.
21 உரோ ௰௬ ௭
22 அப ௰௫ ௨.

௨ அந்தப் பிரயாணத்தை நான் தேவ அறிவிப்பினாலே செய்து, [1]நான் ஓடுகிறதும் அல்லது ஓடினதும் வீணாகாதபடிக்கு, புறத்தேசத்தாரிடத்திலே நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கும் [2]விசேஷமாகப்* பெரியோர்களுக்கும் விவரித்துக் காண்பித்தேன்.

௩ அப்பொழுது என்னுடனே கூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும், விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை.

௪ இயேசுக்கிறிஸ்துவினால் நமக்கு உண்டான [3]விடுதலையை வேவுபார்த்து, நம்மை நியாயப்பிரமாணத்திற்கு [4]அடிமைகள் ஆக்கும்பொருட்டாக, பக்கவழியாய் நுழைந்து உட்புகுந்த [5]கள்ளச் சகோதரர்நிமித்தமே அப்படி ஆயிற்று.

௫ [6]சுவிசேஷத்தின் சத்தியமும் உங்களிடத்திலே நிலைநிற்கும்படியாக, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படியவில்லை.

௬ அல்லாமலும் [7]பெரியோர்களென்று எண்ணப்பட்டவர்களாலும் (நான் ஒன்றையும் அடையவில்லை); முன்னே அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும், எனக்குக் கவையில்லை [8]பராபரன் மனிதருடைய முகத்தைப் பார்க்கிறவர் அல்லவே, [9]அந்தப் பெரியோர்கள் எனக்கு அதிகம் ஒன்றும் போதியாமல்,

௭ விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாய் இருக்கும்படி, பேதுருவைப் [10]பலப்படுத்தினவர் புறத்தேசத்தாருக்கு அப்போஸ்தலனாய் இருக்கும்படி [11]என்னையும் பலப்படுத்தினதால்,

௮ விருத்தசேதனம் உள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்கு ஒப்புவிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு அப்படியே செய்யும்படி, [12]எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்று [13]அவர்கள் கண்டு,

௯ அந்தப்படி [14]எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபொழுது,* அவர்களில் [15]தூண்களென்று எண்ணப்பட்ட யாக்கோபும் கேபாவும் யோவானும் தாங்கள் விருத்தசேதனம் உள்ளவர்களுக்கும், நாங்கள் புறத்தேசத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கு ஐக்கியப்படுதற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகைகளைக் கொடுத்து,

௰ தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் புத்திசொன்னார்கள்; [16]நானும் அப்படியே செய்யச் சாக்கிரதையாயிருந்தேன்.

௰௧ ¶ [17]மேலும் பேதுரு அந்தியோகியா ஊருக்கு வந்தபொழுது, அவன் தப்பிதம்செய்ததினாலே நான் முகமுகமாய் அவனோடு எதிர்த்தேன்.

௰௨ எப்படியென்றால், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே, [18]அவன் புறத்தேசத்தாருடனே சாப்பிட்டான், அவர்கள் வந்தபொழுது விருத்தசேதனம் உள்ளவர்களுக்குப் பயந்து விலகிப் பிரிந்தான்.

௰௩ மற்ற யூதரும் அப்படியே வஞ்சகம்பண்ணினார்கள், அவர்களுடைய வஞ்சகத்தினாலே பர்னபாவும்கூட இழுக்கப்பட்டான்.

௰௪ இப்படி அவர்கள் [19]சுவிசேஷத்தின் சத்தியத்திற்குத் தக்கதாக நடவாததை நான் கண்டபொழுது, [20]எல்லாருக்கும்முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னதாவது: [21] யூதனாயிருக்கிற நீர் யூதர்முறைமையாக அல்ல புறத்தேசத்தார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறத்தேசத்தாரை யூதர் முறைமையாய் நடக்

கி. பி. ௫௮.

1 பிலி ௨. ௰௬ ௧ தெச ௩. ௫
2 அப ௰௫. ௰௨
* அல்லது இரகசியமாக
3 கலா ௩. ௨௫ ௫ ௧, ௰௩
4 ௨ கொரி ௰௧ ௨௰ கலா. ௪ ௩, ௯
5 அப ௰௫ ௧. ௨௪ ௨ கொரி ௰௧ ௨௬
6 ௰௪ வச கலா ௩ ௧ ௪ ௰௬
7 கலா ௬ ௩
8 அப ௰ ௩௪ ௨ரோ ௨ ௰௧
9 ௨ கொரி ௰௨ ௰௧
10 அப ௯ ௰௫ ௰௩ ௨ ௨௨ ௨௧ ௨௬ ௰௭ ௰௮ ௧ கொரி ௰௫ ௰ கலா ௧ ௰௬ கொலோ ௧ ௨௫.
11 கலா ௧ ௰௬
12 ௧ தெச ௨ ௪
13 அப ௰௩ ௪௬ ௨ரோ ௧ ௫ ௰௧ ௰௩ ௧ தீமோ ௨ ௭ ௨ தீமோ ௧. ௰௧.
14 ௨ரோ ௧ ௫ ௰௨ ௩, ௬ ௰௫ ௰௫ ௧ கொரி ௰௫ ௰ எபே ௩ ௮
15 மத ௰௬ ௰௮ எபே ௨ ௨௰ வெளி ௨௧ ௰௪
16 அப ௰௧ ௩௰ ௨௪ ௰௭, ௨ரோ. ௰௫ ௨௫ ௧ கொரி ௰௬ ௧ ௨ கொரி. ௮ ௯
17 அப ௰௫ ௩௫
18 அப ௰ ௨௮ ௰௧ ௩.
19 ௫ வச.
20 ௧ தீமோ ௫ ௨௰
21 அப ௰ ௨௮ ௰௫ ௰

கும்படி நீர எப்படிக் கட்டாயம் பண்ணலாம்.

௰௫ ¶ [1]ஒரு மனிதனும நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுவது இல்லையே.

௰௬ ஆதலால் [2]புறத்தேசத்தாரில் பிறந்த பாவிகளாயிராமல், [3]சுபாவப்படி யூதராயிருக்கிற நாமும், [4]இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே அன்றி, நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளால் மனிதன் [5]நீதிமானாகிறதில்லை என்று அறிந்து, நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினால் அல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகும்படிக்கு, கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோமே.

௰௭ அந்தப்படி கிறிஸ்துவினாலே நீதிமான்களாகப் பார்க்கையில் [6]நாமும் பாவிகளாகக் காணப்பட்டால் கிறிஸ்து பாவத்திற்கு ஊழியக்காரர் ஆவாரா? அப்படி ஆகவேமாட்டார.

௰௮ நான் இடித்துப்போட்டவைகளை நானே மறுபடியும் கட்டினால், என்னை அக்கிரமக்காரன் என்று காண்பிப்பேன.

௰௯ [7]பராபரனுக்காகப் பிழைக்கும்படிக்கு [8]நியாயப்பிரமாணத்தின் வழியாய் [9]நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே

௨௰ [10]கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன, அப்படியிருந்தும பிழைத்திருக்கிறேன்; நான்தானே அல்ல, கிறிஸ்துவே எனக்குள்ளே பிழைத்திருக்கிறார, அந்தப்படி இப்பொழுது என் தேகத்திலுள்ள சீவன், என்னில் அன்புகூர்ந்து [11]எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த [12]பராபரனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைக்கின்றது

௨௧ [13]நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வந்தால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே; ஆதலால் நான் பராபரனுடைய கிருபையைத் தள்ளிவிடேன் என்றேன.

௩. அதிகாரம்.

௧. அவர்கள் விசுவாசத்தைவிட்டு நியாயப்பிரமாணத்தைப் பற்றின முகாந்தரம் ஏதென்று கேட்டு, ௬. விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாகி, ௯. ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்று, ம பல திருஷ்டாந்தங்களினாலே காட்டியது

ஆ புத்தியீனமுள்ள கலாத்தியரே, நீங்கள [14]சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போகத்தக்கவிதமாக [15]யாவன் உங்களை மயக்கப்படுத்தினான்? உங்களுக்குப் பிரத்தியட்சமாய் இயேசுக்கிறிஸ்து உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டவராயக் குறிக்கப்பட்டிருந்தாரே

௨ [16]ஆவியை நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலோ, [17]விசுவாசப் பிரசங்கத்தினாலோ (எதினாலே) பெற்றீர்கள்? இதைமாத்திரம் உங்களிடத்தில அறிய விரும்புகிறேன்

௩ [18]ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது [19]மாம்சத்தினாலே முடிவுசெய்ய இத்தனை புத்தியீனராய் இருக்கிறீர்களா?

௪ [20]இத்தனை* பாடுகளை வீணாய்ப் பட்டீர்களா? அது வீணாயிருக்கமாட்டாதே

௫ அன்றியும் உங்களுக்கு [21]ஆவியை வரச்செய்கிறவனும் உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவனுமானவன் அப்படி நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலோ விசுவாசப் பிரசங்கத்தினாலோ (எதினாலே) செய்கிறான்

௬ அப்படி [22]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான், அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டது †

கி. பி. ௫அ.

[1] சங ௱சக ௨. உரோ ௩ ௨௰. கலா. ௩ ௰௧
[2] மத. ௯ ௰௩, எபே ௨ ௩,௰௨
[3] அப ௰௫ ௰,௰௧
[4] உரோ ௧ ௰௭ ௩ ௨௨, ௨௮ ௮ ௩ கலா ௩ ௨௪ எபி ௭ ௰௮, ௰௯
[5] அப ௰௩ ௩௮, ௩௯
[6] ௧ யோ ௩ ௮, ௯
[7] உரோ ௬ ௰௧ ௨ கொரி ௫ ௰௫ ௧ தெச ௫ ௰ எபி ௯ ௰௪ ௧ பே ௪ ௨
[8] உரோ ௮ ௨
[9] உரோ ௬ ௰௪ ௭ ௪, ௬
[10] உரோ ௬ ௬ கலா ௫ ௨௪ ௯ ௰௪
[11] கலா ௧ ௪ எபே ௫ ௨ தீத ௨ ௰௪
[12] ௨ கொரி ௫ ௰௫ ௧ தெச ௫ ௰ ௧ பே ௪ ௨
[13] கலா ௩ ௨௧ எபி ௭ ௰௧ உரோ ௰௧ ௬ கலா ௫ ௪
[14] கலா ௨ ௰௯ ௫ ௭
[15] கலா ௫ ௭
[16] அப ௨ ௩௮ ௰ ௰௫ ௰ ௪௭ ௰௫ ௮ ௰௪ வச எபே ௧ ௰௩ எபி ௯ ௪
[17] உரோ ௰ ௰௭ ௰௭
[18] கலா ௪ ௯
[19] எபி ௭ ௰௯ ௯ ௰
[20] ௨ யோ ௰ ௯, ௯ ௨ யோ ௮
* அல்லது இவ்வளவு பெரிய
[21] ௨ கொரி ௩ ௫
[22] ஆதி ௰௫ ௬ ௯ உரோ ௪ ௩, ௯, ௨௨, ௨௨ யாக ௨ ௨௩
† அல்லது நீதியாகக் கணக்கிடப்பட்டது

எ ¶ ஆகையால் [1]விசுவாசமார்க்கத்தாரே ஆபிரகாமின் பிளளைகளாய் இருக்கிறாகள் என்று அறிவீர்களாக.

அ மேலும் பராபரன் விசுவாசத்தினலே உலகததாரை நீதிமான்களாககுவார் என்று [2]வேதாகமம் முன் அறிந்து, [3]உன்னலே எல்லா உலகத்தாரும் ஆசீாவதிக்கப்படுவார்கள் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன் அறிவித்தது.

கூ அநதபபடி விசுவாசமாாக்கத்தா விசுவாசமுள்ள ஆபிரகாமுடனேகூட ஆசீாவதிககபபடுகிருர்கள்.

ய ¶ நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைக்காரராகிய யாவருமநியாயபபிரமாண புததகததில எழுதப்பட்டவைகளை . எலலாமசெயயததககதாக அவைகளில் நிலைதகிராதவன் எவனே, [4]அவன் சபிககபபட்டவன் எனறு எழுதியிருசகிறபடியால், சாபததிற்குக் கீழாயிருககிறாாகள்

யக மேலும் [5]நியாயபபிரமாணத்தினலே ஒருவனும் பராபரனிடததிலே நீதிமான் ஆகிறதிலலை என்பது வெளியரஙகமாய் இருககின்றது; எபபடியெனில், [6]விசுவாசத்தால் நீதிமானனவன் பிழைப்பான் என்று சொல்லியிருககிறதே.

யஉ அன்றியும் [7]நியாயபபிரமாணமானது விசுவாசததை ஏற்படுத்துகிறதில்லை; [8]இவைகளைச செயகிற மனிதன் இவைகளால் பிழைபபான் என்று ஏற்படுத்துகின்றது.

யஙூ இப்படியிருக்க, மரத்திலே தூக்கபபட்ட யாவனும் [9]சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, [10]கிறிஸ்து நமக்காகச் சாபத்தை அடைந்து, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை விலக்கி இரட்சித்தார்.

யச [11]ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினலே புறத்தேசத்தாருக்கு வரும்படியாகவும், [12]வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியை நாம விசுவாசததினலே பெறும்படியாகவுமே அபபடி ஆயிற்று.

யரு ¶ சகோதரரே, மனிதர் முறைமையாகச் சொல்லுகிறேன்; [13]மனிதர்களுக்குள்ளே உறுதிபண்ணபபட்ட ஓர் உடம்படிக்கையை* ஒருவனும் தள்ளவும் அதினேடே எதையாகிலும் கூட்டவும்மாட்டானே

யசூ [14]ஆபிரகாமுககும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தஙகள் பண்ணபபட்டன; அபபொழுது சந்ததிகளுக்கென்று அநேகரைக்குறிததுச சொல்லாமல், உன் சந்ததிககென்று ஒருவனைககுறிததுச சொலலியிருககிறா, [15]அநதச சநததி கிறிஸதுவே.

யஎ ஆனதால் நான் சொல்லுகிறது என்னவெனில், கிறிஸ்துவுக்கு நேராகப பராபரனல முன் உறுதிபண்ணபபட்ட உடம்படிககை உண்டே, அபபொழுது உண்டான வாக்குத்தத்தசைத் தள்ளத்தககதாக அநத உடம்படிககையை [16]நானூற்றுமுபபது வருஷத்திற்குபபின் உண்டான [17]நியாயப்பிரமாணம் நீககமாட்டாது

யஅ அன்றியும் [18]சுதநதரமானது நியாயபபிரமாணத்தினலே உண்டானல், [19]அவ்வாக்குததத்தத்தினல் உண்டாயிராதே; ஆபிரகாமுககுப பராபரன் அதை வாக்குத்தத்தத்தினலே அருளிச்செய்தார்.

யகூ அப்படியானல் நியாயப்பிரமாணம் என்னத்துக்கு என்றால், [20]அது வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் தேவதூதரைக் கொண்டு [21]மத்தியஸ்தன் கையில் [22]கட்டளையிடபபட்டு [23]அக்கிரமங்களின் நிமித்தமாகக் கூட்டப்பட்டிருந்தது.

கி பி. ருஅ.

1 யோவா அ ஙகூ. உரோ ச யக, யஉ, யசூ
2 உரோ கூ யஎ உஉ வச
3 க மோ யஉ ங யஅ யஅ உஉ யஅ அப ங. உரு
4 ரு மோ உஎ உங எரே யக ங
5 கலா உ யசூ
6 ஆப உ ச உரோ க யஎ எபி ய ஙஅ
7 உரோ ச ச, ரு ய ரு, ஙூ யக ங
8 ங மோ யஅ. ரு நெகே கூ உகூ எசே உய யக உரோ ய ரு
9 ரு மோ உக, உங
10 உரோ அ ங உ கொரி ரு உக கலா ச ரு
11 உரோ ச ஙூ, யஙூ
12 ஏசா ஙஉ யரு சச ங எரே ஙக ஙங ஙஉ சய எசே யச யஙூ ஙங உஎ யோவே உ உஅ, உஙூ சகரி யஉ ய யோவா எ ஙகூ அப உ ஙங
13 எபி கூ யஎ
* அலலது ஏறபாடடை
14 க மோ யஉ ங, எ யஎ எ, அ வச
15 க கொரி யஉ யஉ,
16 உ மோ யஉ சய, சக
17 உரோ ச யங, யச உக வச
18 உரோ அ யஎ
19 உரோ ச யச
20 யகூ. வச
21 உ மோ உய யஙூ, உக, உஉ

ரு மோ ரு ரு,உஉ,உங,உஎ,ஙக யோவா க யஎ அப எ ஙஅ க தீமோ உ ரு —22 அப எ.ருங எபி உ உ
23 யோவா யரு உஉ உரோ ச யரு ரு உய எ அ,யங க தீமோ.க ங

௨௰ மத்தியஸ்தன் ஒருவனுடையவன் அல்ல, [1]பராபரன் ஒருவரே இருக்கிறார்.

௨௧ ¶ அப்படியானால் நியாயப்பிரமாணம் பராபரனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமாயிருக்கிறதா என்றால் அப்படி இருக்கிறதே இல்லை; எப்படியெனில், [2]உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்ததானால், நீதியானது மெய்யாய் நியாயப்பிரமாணத்தினாலே உண்டாகும்.

௨௨ அப்படி இராதபடியால், [3]வேதாகமம், இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே [4]வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நீதி, விசுவாசம் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படிக்கு, [5]எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது.

௨௩ ஆனதால் விசுவாசம் வருதற்குமுன்னே நாங்கள் வெளிப்படுவதாயிருந்த விசுவாசத்திற்கு ஏதுவாக அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காக்கப்பட்டிருந்தோம்.

௨௪ இவ்விதமாய் [6]நாம் விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆவதற்கு [7]நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்துகிற உவாத்தியாய் இருந்ததே.

௨௫ ¶ விசுவாசம் வந்தபின்பு நாங்கள் பின்னும் அந்த உவாத்திக்குக் கீழானவர்கள் அல்ல.

௨௬ நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே [8]பராபரனுடைய பிள்ளைகளாய் இருக்கிறீர்களே.

௨௭ உங்களில் [9]கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் [10]கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

௨௮ இப்படி [11]நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவினாலே ஒன்றாயிருக்கிறபடியால், [12]யூதன் என்றும், கிரேக்கன் என்றும், அடிமை என்றும் சுயாதீனன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும், இவ்வேற்றுமை உங்களுக்கு இல்லையே

௨௯ [13]மேலும் நீங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களாயிருக்க, ஆபிரகாமின் சந்ததியாராயும் [14]வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

௪. அதிகாரம்

௧ சுதந்தரவாளி சிறுபிள்ளையாய் இருக்கும்காலமட்டும் தன் காரியக்காரருக்குக் கீழிருப்பதுபோலக் கிறிஸ்து வருமட்டும் நாமும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழிருந்தோமென்றும், ௫ கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கினபடியால், ௭ இனி அதற்கு நாம் அடிமைகள் அல்லவென்றும், ௰௨ கலாத்தியர் தங்களுக்குப் பாராட்டின பட்சத்தையும் அவர்கள்மேலுள்ள தன்னு[illegible]ய பட்சத்தையும் இன்னதென்றும், ௨௨. நாம் ஆபிரகாமின் சுயாதீன மனைவியின் புத்திரரென்றும் காட்டியது

பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எசமானாயிருந்தும், அவன் குழந்தையாயிருக்கிற காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசம் இல்லை.

௨ தகப்பன் குறித்தகாலம்வரைக்கும் அவன் உவாத்திமாருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழாயிருக்கிறான்.

௩ அப்படிப்போல நாமும் குழந்தைகளாயிருந்த காலத்திலே இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு* [15]அடிமைப்பட்டவர்களாய் இருந்தோம்.

௪ [16]காலம் நிறைவேறினபொழுது, பராபரன் தம்முடைய குமாரனை அனுப்ப, அவர் [17]நியாயப்பிரமாணத்தின் கீழானவர்களாகிய நம்மை மீட்டுக்கொண்டு, [18]புத்திரசுவிகாரம் நமக்கு உண்டாகும்படி செய்யும்படிக்கு,

---

கி. பி ௫௮.

[1] உரோ ௩ ௨௯, ௩௰
[2] கலா. ௨. ௨௧
[3] அ ௨௪
[4] உரோ ௪ ௰௧, ௰௨, ௰௬.
[5] உரோ. ௩ ௯, ௰௯, ௨௩. ௰௧ ௩௨
[6] அப ௰௩ ௩௯ கலா ௨ ௰௬
[7] மத் ௫ ௰௭ உரோ ௰ ௪ கொலோ ௨ ௰௭ எபி ௯ ௯, ௰
[8] யோவா ௧ ௰௨ உரோ ௮ ௰௪, ௰௫, ௰௬ கலா ௪ ௫ ௧ யோ ௩ ௧, ௨
[9] உரோ ௬ ௩.
[10] உரோ ௰௩ ௰௪
[11] யோவா ௰ ௰௬ ௰௭ ௨௰, ௨௧ எபே ௨ ௰௪, ௰௫, ௰௬ ௪ ௪, ௰௫
[12] உரோ. ௰ ௰௨ ௧ கொரி ௰௨ ௰௩ கலா ௫ ௬ கொலோ. ௩ ௰௧
[13] ௧ மோ ௨௧ ௰, ௰௨ உரோ ௯ ௭ எபி ௰௧ ௰௮
[14] உரோ ௮,௰௭ கலா ௪ ௭,௨௮ எபே ௩ ௬
* அல்லது மூலகாரணங்களுக்கு
[15] ௯ வச கலா ௨ ௪ ௫ ௧ கொலோ ௨ ௮, ௨௰ எபி ௯ ௰
[16] ௧ மோ ௪௯ ௰ தானி ௯ ௨௪ மாற் ௧ ௰௫ எபே ௧ ௰
[17] மத் ௨௰ ௨௮ கலா ௩ ௰௩ தீத ௨ ௰௪ எபி ௯ ௰௨. எபே ௧ ௭. ௧ பே ௧ ௰௮, ௰௯.
[18] யோவா ௧ ௰௨. கலா ௩ ௨௬ எபே ௧ ௫.

௫ [1]ஸ்திரீயினிடத்தில் [2]பிறந்து, [3]நியாயப்பிரமாணத்திற்குக் கீழானார்.

௬ மேலும், நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினாலே அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக, பராபரன் தம்முடைய குமாரனுடைய [4]ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

௭ ஆகையால், இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாய் இருக்கிறாய்; மேலும் [5]நீ புத்திரனாயிருக்க, கிறிஸ்துவின் மூலமாய்ப் பராபரனுடைய சுதந்தரனாயும் இருக்கிறாய்.

௮ ¶ [6]நீங்கள் பராபரனை அறியாமல் இருந்தபொழுது [7]சுபாவத்தின்படி தேவர்கள் அல்லாதவர்களுக்கு அடிமைகளாய் இருந்தீர்கள்.

௯ இப்பொழுது [8]நீங்கள் பராபரனை அறிந்துகொண்டபின்பு அல்லது, பராபரனாலே அறிந்துகொள்ளப்பட்டபின்பு, எப்படி நீங்கள் [9]பலஈனமும் வெறுமையுமான அவ்வழிபாடுகளுக்கு* [10]மறுபடியும் †திரும்பி மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்பட்டிருக்க விரும்புகிறீர்கள்?

௰ நாட்களையும் மாதங்களையும் மற்றக் காலங்களையும் வருஷங்களையும் [11]நோக்கிப் பார்க்கிறீர்களே.

௰௧ ஆ [12]நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போகுமோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன்.

௰௨ ¶ சகோதரரே, நான் உங்களைப்போல ஆனபடியால் நீங்களும் என்னைப்போல ஆகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; [13]எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை.

௰௩ உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, [14]முதலாந்தரம் நான் உங்களுக்குச் சுவிசேஷத்தைச் [15]சரீர பலஈனத்தோடே அறிவித்தேன்.

௰௪ அப்படியிருந்தும் எனக்குச் சோதனையான அந்தச் சரீர பலஈனத்தை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும் பராபரனுடைய [16]தூதனைப்போலவும் [17] கிறிஸ்து இயேசுவைப்போலவும் என்னை ஏற்றுக்கொண்டீர்கள்.

௰௫ அப்பொழுது எவ்வளவு பாக்கியமுள்ளவர்களாய் இருந்தீர்கள்;‡ நீங்கள் உங்கள் கண்களைப் பிடுங்கி, எனக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்வீர்களே என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்.

௰௬ [18]நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னபடியினாலே, உங்களுக்குச் சத்துருவானேனா?

௰௭ ¶ [19]அவர்கள் உங்களுக்கு வைராக்கியபட்சத்தைக் காண்பிக்கிறார்கள்; ஆகிலும், நல்லமனதாய் அப்படிச் செய்கிறதில்லை; அல்லாமலும், அவர்கள் தங்களுக்கு நீங்கள் வைராக்கியபட்சத்தைக் காண்பிக்கும்பொருட்டு, (என்னிலிருந்து) உங்களை§ நீக்க விரும்புகிறார்கள்.

௰௮ நன்மையைக்குறித்து வைராக்கியபட்சமாயிருக்கிறது நல்லதுதான், அப்படியே நான் உங்களிடத்தில் இருக்கும்பொழுதுமாத்திரம் அல்ல, எப்பொழுதும் செய்யவேண்டும்.

௰௯ [20]ஆ என் பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் வடிவுகொள்ளுமளவும் உங்களுக்காக மறுபடியும் கருப்பவேதனைப்படுகிறேன்.

௨௰ மேலும், நான் உங்களைக்குறித்துச் சந்தேகப்படுகிறபடியால்,|| நான் இப்பொழுதே உங்களிடத்திலிருந்து என் பேச்சை மாற்றிக்கொள்ள ஆசையாயிருக்கிறேன்.

கி. பி. ௫௮.

1 ௧ மோ ௩ ௰௫ ஏசா ௭. ௰௪ மீகா ௫ ௩ மத் ௧ ௨௩ லூக் ௧ ௩௧ ௨ ௭
2 யோவா ௧ ௰௪ உரோ ௧ ௩ பிலி ௨ ௭ எபி ௨ ௰௪
3 மத் ௫ ௰௭ லூக் ௨ ௨௭
4 உரோ ௫ ௫ ௮ ௰௫
5 உரோ ௮ ௰௬, ௰௭ கலா ௩ ௨௯
6 எபே ௨ ௰௨ ௧ தெச ௪ ௫
7 உரோ ௧ ௨௫ ௧ கொரி ௰௨ ௨ எபே ௨ ௰௧,௰௨ ௧ தெச ௧ ௯
8 ௧ கொரி ௮. ௩ ௰௩ ௰௨ ௨ தீமோ ௨ ௰௯
9 உரோ ௮ ௩ எபி ௭ ௰௮
* அல்லது மூல காரணங்களுக்கு, ௩, ௯, வசனம்
10 கலா ௩. ௯ கொலோ ௨ ௨௰
† அல்லது பின்னாக
11 உரோ ௰௪ ௫ கொலோ ௨ ௰௬
12 கலா ௨ ௨ ௫ ௨,௪ ௧ தெச ௩ ௫
13 ௨ கொரி ௨ ௫
14 கலா ௧ ௬
15 ௧ கொரி ௨ ௩ ௨ கொரி ௰௧ ௩௰ ௰௨ ௭, ௯
16 ௨ சாமு ௰௯ ௨௭ மல்கி ௨ ௭ சகரி ௰௨ ௮
17 மத் ௰ ௪௰ லூக் ௰ ௰௬ யோவா ௰௩ ௨௰ ௧ தெச ௨ ௰௩

---

‡ அல்லது அப்பொழுது இருந்த உங்கள் பாக்கியம் எங்கே? — 18 கலா ௨ ௫,௰௪ — 19 உரோ ௰௨ ௨ கொரி ௰௧ ௨

§ அல்லது எங்களை — 20 ௧ கொரி ௪ ௰௫ பிலே ௰ யாக ௧ ௰௮ — || அல்லது கலக்கப்படுகிற

உக ¶ நியாயப்பிரமாணத்திற்குக் கீழாயிருக்க மனதுள்ள நீங்கள், நியாயப்பிரமாணத்தைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்?

உஉ எப்படி எழுதியிருக்கிறதென்றால், ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; ஒருவன் [1]அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் [2]சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்.

உங அடிமையானவளிடத்தில் பிறந்தவன் [3]சரீர பலத்தினாலே பிறந்தான்; சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன [4]வாக்குத்தத்தத்தினாலே பிறந்தான்.

உச இவைகள் ஞான அருத்தமுள்ளவைகள்; என்னவெனில், அந்த ஸ்திரிகள் இரண்டு ஏற்பாடுகளேயாம்.* ஒன்று அடிமைத்தனத்திற்கு ஏதுவாகப் பிள்ளைபெறுகிற [5]சீனாபர்வதத்தின் † ஏற்பாடு, அதை ஆகார் என்பது குறிக்கின்றது.

உரு ஆகார் என்பது அரபிதேசத்திலுள்ள சீனாபர்வதத்திற்குப் பேராயிருக்கிறதே; மேலும் அந்த ஆகார் என்பவள் இப்பொழுது இருக்கிற எருசலேமுக்குச் சரியாய்‡ இருக்கிறாள்; அது தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கின்றதே.

உசா [6]மேலான எருசலேமே சுயாதீனமான ஸதிரியினாலே குறிக்கப்பட்டது; அவள் நம்மெல்லாருக்கும் தாயானவள்.

உஎ அந்தப்படி எழுதியிருக்கிறதாவது: புருஷனை அடைந்தவளிலும் அவாந்தரமுள்ளவளுக்கே அதிக பிள்ளைகள் உண்டு; ஆகையால் பிள்ளைபெறாத மலடியே, [7]மகிழ்ந்திரு; கருப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பிச் சத்தமிடு என்பதே.

உஅ ஆனதால் சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல [8]வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.

உகூ அல்லாமலும், அக்காலத்திலே [9]சரீரபலத்தினாலே பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனைத் துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் [10]நடக்கின்றது.

ஙய அதைக்குறித்து [11]வேத எழுத்து எப்படிச் சொல்லுகிறது என்றால், [12]அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாய் இருக்கக்கூடாது; ஆகையால் அடிமையானவளையும் [13]அவளுடைய குமாரனையும் புறம்பே தள் என்றே சொல்லுகின்றது.

ஙக இப்படியிருக்கச் சகோதரரே, நாம் அடிமையானவளுக்கு அல்ல, [14]சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாய் இருக்கிறோம்.

ரு அதிகாரம்.

க அவர்களுடைய விடுதலையைப்பற்றி நின்று, உ. சுன்னத்தடையவேண்டியதில்லையென்றும, யங நியாயப்பிரமாணத்தின பொருளாகிய அன்பைப பாராட்டவேண்டுமென்றும, யகூ மாம்சத்தின் கிரியைகளும, உஉ ஆவியின கனிகளும் இன்னவைகளென்று காட்டி, உரு அவர்கள் ஆவியினாலே நடக்கும்படி புத்திசொல்லியது.

ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் [15]அடிமைத்தனத்தின நுகத்தடிக்கு உட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின [16]சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருப்பீர்களாக.

உ ¶ பின்னும் கேளுங்கள்; பவுல் என்னும் நானே உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [17]நீங்கள் விருத்தசேதனத்தைப் பண்ணிக்கொண்டால், கிறிஸ்து உங்களுக்கு ஒரு பிரயோசனமும் ஆகமாட்டார்.

ங மேலும் விருத்தசேதனத்தைப் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனிதனும் [18]நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாய் இருக்கிறான் என்று மறுபடியும் சாட்சியாக அறிவிக்கிறேன்.

ச நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள்

கி. பி. ருஅ.

[1] க மோ யசா யரு
[2] க மோ உக உ
[3] உரோ. கூ எ, அ.
[4] க மோ யஅ ய யச உக க, உ எபி. யக யக
* அல்லது உடன்படிக்கைகளாம
[5] ரு மோ ஙங உ
† கிரேக்கு, சினேயா
‡ அல்லது எருசலேமின வரிசையில்
[6] எசா உ உ எபி யஉ, உஉ வெளி [illegible] உ உக உ, ய
[7] எசா ருச க
[8] அப ங உரு உரோ கூ அ கலா ங உகூ
[9] க மோ உக கூ
[10] கலா ரு யக சா, யஉ.
[11] கலா ங அ, உஉ
[12] யோவா அ ஙரு
[13] க மோ உக ய, யஉ.
[14] யோவா அ ஙசா கலா ரு க, யங
[15] அப யரு ய கலா உ, ச
[16] யோவா அ ஙஉ உரோ சா யஅ க பே உ யசா
[17] அப யரு க அப. யசா [illegible]
[18] கலா ங ய

[1]கிறிஸ்துவைவிட்டு நீங்கி, [2]அவருடைய கிருபைக்குப புறம்பே விழுந்தீர்கள்.

௫ நாங்கள் ஆவியைக்கொண்டு விசுவாசததினுலே [3]நீதிவருதற்கு நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்.

௬ [4]கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றுக்கும் உதவாதே; [5]அன்பினுல் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.

௭ [6]நீங்கள் நன்ருய் ஓடினீர்கள்; சத்தியததிற்குக் கீழ்பபடியாமல் போகததக்கதாக, [7]யாவன் உங்களுககுத் தடைசெய்தான்.*

௮ நீங்கள் அடைந்த இநதப போதனை [8]உங்களை அழைத்தவனுலே உணடானதலல.

௯ [9]புளிப்புள்ள கொஞ்சமாகிய மா பிசைநதமாவை எல்லாம் உபபபணணுகிறது

௰ [10]நீங்கள் வேருெரு சிந்தையாயிருபபதும் இல்லை என்று நான காததராலே உங்களைக்குறித்து நமபிக்கையானேன்; [11]உங்களைக கலககபபடுததுகிறவன் எப்படிப பட்டவனுயிருநதாலும, [12]ஆககினையைச சுமநதுகொள்வான்.

௰௧ [13]சகோதரரே, இதுவரைக்கும் நான் விருததசேதனத்தைப பிரசஙகிக்கிறவனுயிருநதால, [14]இதுவரைககும் என்னத்திற்குத துன்பபபடுகிறேன்? சிலுவையைப (பிரசங்கிக்கிறதினுலே) வருகிற [15]இடறல் ஒழிநதிருக்குமே.

௰௨ [16]உங்களைக் கலகம்பண்ணுகிறவர்கள் தறிபபுண்டுபோனுலே [17]நலமாய் இருக்கும்.

௰௩ ¶ சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கபபட்டீர்களே; [18]இந்தச் சுயாதீனத்தை நீங்கள் சரீரததிற்கு ஏற்றதாக அநுசரியாமல், [19]அன்பினுலே ஒருவருக்கொருவர் ஊழியம்செய்யுங்கள்.

௰௪ [20]பிறனிடத்தில் உன்னைப போல அன்பாயிருபபாயாக என்ற இநத ஒரே வார்த்தையினுலே [21]நியாயபபிரமாணம முழுவதும நிறைவேறுகின்றதே.

௰௫ நீங்கள் ஒருவரை ஒருவர் கடிததுப பட்சிததுவருகிறபடியினுலே, ஒருவரால் ஒருவர் அழிககபபடாதபடிக்குப் பாருங்கள்.

௰௬ ¶ பின்னும் நான் சொல்லுகிறது என்னவென்ருல், சரீரத்தின் இசசையை நிறைவேற்ருதிருந்து† [22]ஆவியின்படி நடந்துகொள்ளுங்கள்.

௰௭ [23]சரீரம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி சரீரத்திற்கு விரோதமாகவும் இச்சிககிறதே; [24]நீஙகள் செய்யவேணடுமென்று இருக்கிறவைகளைச் செயயாதபடிககு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றனவே.

௰௮ [25]ஆவியினுல் ஏவபபடுவீர்களானுல், நீஙகள நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல

௰௯ [26]சரீரத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருககின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

௨௰ விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதஙகள், வைராக்கியஙகள், கோபஙகள், சண்டைகள், பேதகங்கள், அவமார்க்கங்கள், பொருமைகள், கொலைகள்,

௨௧ வெறிகள், பெருந்தீனிகள் முதலானவைகளே; [27]இபபடிப பட்டவைகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிபபதில்லை என்று முன்னே நான் சொன்னதுபோல, இபபொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௨ [28]ஆவியின் கனியோ, அன்

கி. பி. ௫௮.

1 உரோ ௯ ௩௧, ௩௨ கலா ௨ ௨௧

2 எபி ௰௨ ௰௫

3 உரோ ௮ ௨௪, ௨௫ ௨ தீமோ ௪. ௮

4 ௧ கொரி ௭ ௰௯ கலா ௩ ௨௮ ௬ ௰௫ கொலோ. ௩ ௰௧

5 ௧ தெச ௧ ௩ யாக் ௨ ௰௮, ௨௰, ௨௨

6 ௧ கொரி ௯ ௨௪.

7 கலா ௩ ௧

* அலலது பின்னோடினை

8 கலா ௧ ௬

9 ௧ கொரி ௫ ௬ ௰௫ ௩௩

10 ௨ கொரி ௨ ௩ ௮ ௨௨

11 கலா ௧ ௭

12 ௨ கொரி ௰ ௬

13 கலா ௬ ௰௨

14 ௧ கொரி ௰௫ ௩௰ கலா ௪ ௨௯ ௬ ௰௭

15 ௧ கொரி ௧ ௨௩

16 அப ௰௫ ௧, ௨, ௨௪

17 யோசு ௭ ௨௫ ௧ கொரி ௫ ௰௩ கலா ௧ ௮, ௯

18 ௧ கொரி ௮ ௯ ௧ பே ௨ ௰௬ ௨ பே ௨ ௰௯ யூதா ௪

19 ௧ கொரி ௯ ௰௯. கலா ௬ ௨

20 ௩ மோ ௰௯ ௰௮ மத் ௨௨ ௩௯ உரோ ௰௩ ௮, ௯

21 மத் ௭ ௰௨ ௨௨ ௪௰ யாக் ௨ ௮

† அலலது இருக்குமபடி

22 உரோ ௬ ௰௨ ௮ ௧, ௪, ௰௨ ௰௩ ௰௪ ௨௫ ௨௪. ௧ பே ௨ ௰௧

23 உரோ ௭ ௨௩. ௮ ௬, ௭

24 உரோ. ௭ ௰௫, ௰௯ —25 உரோ ௬ ௰௪ ௮ ௨ —26 ௧ [illegible], எபே ௫ ௩ கொலோ ௩ ௫ யாக் ௩ ௰௪, ௰௫
27 ௧ கொரி ௬ ௯ எபே ௫ ௫ கொலோ ௩ ௬ வெ[illegible] ௰௫ —28 யோவா ௰௫ ௨ எபே ௫ ௯.

பு, சந்தோஷம், சமாதானம், நீடிய சாந்தம், [1]தயவு [2]நற்குணம்,

௨௩ [3]உண்மை, பொறுமை, இச்சையடக்கம், [4]இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு நியாயப்பிரமாணம் விரோதமாயிருக்கிறதில்லை.

௨௪ மேலும், [5]கிறிஸ்துவின் பாரிசமானவர்கள் தங்கள் சரீரத்தை அதின் பலவித இச்சைகளோடும் கூடச்* சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

௨௫ [6]நாம் ஆவியைக்கொண்டு பிழைக்கிறபடியால் ஆவியின்படி நடக்கவும் கடவோம்.

௨௬ [7]வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவருக்கொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை வையாமலும் இருக்கக்கடவோம்.

௬. அதிகாரம்.

௧ வழுவுகிற சகோதரனை மெத்தனவாய் நடத்தவும், ௨ ஒருவர் மற்றொருவருடைய பாரத்தைச் சுமக்கவும், ௬ போதகர்களைப் பராமரிக்கவும், ௯ நன்மைசெய்வதில் இளைப்படையாமலிருக்கவும், ௰௨ சுன்னத்தைப் பிரசங்கிக்கிறவர்களுடைய நோக்கம் இன்னதென்றும், ௰௪ தான் கிறிஸ்துவின் சிலுவையிலேயேயொழிய மற்றொன்றிலும் மேன்மைபாராட்டவில்லை என்றும் சொல்லியது.

சகோதரரே, [8]ஒரு மனிதன் ஒரு தப்பிதத்தில் அகப்பட்டால்,† [9]ஆவியையுடைய நீங்களும் [10]தூண்டிவிடப்படாதபடிக்கு, உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அப்படிப்பட்டவனைச் [11]சாந்தமுள்ள மனதோடே சீர்பொருந்தப்பண்ணுங்கள்.

௨ [12]ஒருவருக்கு உண்டான பாரத்தை ஒருவர் சுமந்துகொண்டு, [13]இப்படியே கிறிஸ்துவின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

௩ [14]மேன்மையில்லாத [15]ஒருவன் தன்னை மேன்மையுள்ளவன் என்று எண்ணினால் தன்னைத்தானே வஞ்சிப்பானே.

௪ [16]அவனவன் தன் தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்; [17]அப்பொழுது மற்றவனைப் பார்க்கையில் அல்ல, தன்னையே பார்க்கையில் புகழ்ச்சியைப் பெறுவான்.

௫ [18]அவனவன் தன் தன் சுயபாரத்தைச் சுமப்பானே.

௬ [19]மேலும், சுவிசேஷ வசனத்தைக்குறித்து உபதேசம் கேட்கிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பங்கைக் கொடுக்கக்கடவன்.

௭ [20]உங்களை வஞ்சியாதிருப்பீர்களாக; [21]பராபரன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; ஆனதால், [22]மனிதன் விதைக்கிறது எதுவோ, அதையே அறுப்பான்.

௮ [23]தன் தேக இச்சைகளுக்குத் தக்கதாக விதைக்கிறவன் அந்தத் தேக இச்சைகளினால் அழிவை அறுப்பான்; ஆவிக்குத் தக்கதாக விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

௯ ஆகையால், [24]நன்மைசெய்கிறதில் இளைப்படையாமல் இருப்போமாக; [25]நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்திலே அறுப்போமே.

௰ இப்படியிருக்க, [26]நமக்குக் காலம் நேரிடுகிறபடி [27]யாவருக்கும், விசேஷமாக [28]விசுவாசிகளாகிய குடும்பத்தாருக்கு நன்மைசெய்யக்கடவோம்.

௰௧ ¶ பாருங்கள், இவ்வளவு என் கையெழுத்தோடே எழுதினேன்.

௰௨ சரீரத்தின்படி நல்லவர்களாகத் தோன்ற விரும்புகிறபேர்கள் [29]தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின்நிமித்தம் [30]துன்பப்படாதபடிக்குமாத்திரமே உங்களை [31]விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்.

௰௩ விருத்தசேதனத்தை அடைந்

கி. பி. ௫ அ.

1 கொலோ. ௩. ௰௨ யாக். ௩. ௰௭
2 உரோ. ௰௫. ௰௪
3 ௧ கொரி. ௰௩. ௭
4 ௧ தீமோ. ௧. ௯
5 உரோ. ௬. ௬ ௰௩. ௰௪ கலா. ௨. ௨௦ ௧ பே. ௨. ௰௧
* அல்லது ஆசை இச்சைகளோடும்
6 உரோ. ௮. ௪, ௫ ௰௩ வ௪
7 பிலி. ௨. ௩
8 உரோ. ௰௪. ௧ ௰௫. ௧ எபி. ௰௨. ௰௩ யாக். ௫. ௰௯
† அல்லது அகப்பட்டாலும்
9 ௧ கொரி. ௨. ௰௫. ௧.
10 ௧ கொரி. ௭. ௫ ௰. ௰௨
11 ௧ கொரி. ௪. ௨௧ ௨ தெச. ௩. ௰௫ ௨ தீமோ. ௨. ௨௫
12 உரோ. ௰௫. ௧ கலா. ௫. ௰௩ ௧ தெச. ௫. ௰௪
13 யோவா. ௰௩. ௰௪, ௰௫, ௩௪ ௰௫. ௰௨ யாக். ௨. ௮ ௧ யோ. ௪. ௨௧
14 ௨ கொரி. ௩. ௫ ௰௨. ௰௧
15 உரோ. ௰௨. ௩ ௧ கொரி. ௮. ௨ கலா. ௨. ௬
16 ௧ கொரி. ௰௧. ௨௮ ௨ கொரி. ௰௩. ௫
17 லூக். ௰௮. ௰௧
18 உரோ. ௨. ௬ ௧ கொரி. ௩. ௮
19 உரோ. ௰௫. ௨௭ ௧ கொரி. ௯. ௰௧, ௰௪
20 ௧ கொரி. ௬. ௯ ௰௫. ௩௩
21 யோபு ௰௩. ௯
22 லூக். ௰௬. ௨௫ உரோ. ௨. ௬ ௨ கொரி. ௯. ௬.

23 யோபு ௪. ௮ வாக். ௰௧. ௰௮ ௨௨. ௮ ஓசே. ௮. ௭ ௰௨ உரோ. ௮. ௰௩ யாக். ௩. ௰௮ —24 ௧ கொரி. ௰௫. ௫௮ ௨ தெச. ௩. ௰௩ 25 மத். ௨௪. ௰௩ எபி. ௩. ௬, ௰௪ ௰௨. ௩, ௫ வெளி. ௨. ௰ —26 யோவா. ௯. ௪ ௰௨. ௩௫ —27 ௧ தெச. ௫. ௰௫ ௧ தீமோ. ௬. ௰௮ தீத். ௩. ௮ —28 எபே. ௨. ௰௯ எபி. ௩. ௬ —29 கலா. ௫. ௰௧. —30 பிலி. ௩. ௰௮ —31 கலா. ௨. ௩, ௰௪

திருக்கிறவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் சரீரத்தைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று இருக்கிறார்கள்.

௰௪ நான் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தே அல்லாமல் வேறொன்றைக்குறித்தும் [1]மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால்* உலகம் எனக்குச் [2]சிலுவையில் அறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்கு அப்படியே இருக்கிறேன்.

௰௫ [3]கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனத்தாலாவது விருத்தசேதனம் இல்லாமையாலாவது பிரயோசனம் இல்லையே; [4]புதியசிருட்டியாகிறதினாலே பிரயோசனம் வரும்.

௰௬ [5]இந்தப் பிரமாணத்தின்படியே [6]நடந்துவருகிறவர்கள் எவர்களோ, பராபரனுடைய [7]இஸ்ரவேலராகிய அவர்களுக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாயிருக்கக்கடவது.

௰௭ ¶ கடைசியிலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய [8]அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே சுமந்துகொண்டிருக்கிறபடியால், ஒருவனும் எனக்கு அதிக வருத்தம் உண்டாக்காதிருப்பானாக.

௰௮ சகோதரரே, [9]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே இருக்கக்கடவது.—ஆமன்.

கி. பி. ௫௮.

[1] பிலி ௩ ௩, ௭, ௮

* அல்லது அதினால்

[2] உரோ. ௬ ௬ கலா. ௨ ௨௰

[3] ௧ கொரி ௭ ௰௯. கலா. ௫ ௬ கொலோ ௩ ௰௧

[4] ௨ கொரி ௫ ௰௭

[5] பிலி ௩ ௰௬.

[6] சங் ௱௨௫ ௫

[7] உரோ ௨ ௨௯ ௪ ௰௨ ௯ ௬, ௭, ௮ கலா ௩ ௭, ௯, ௨௯ பிலி ௩ ௩

[8] ௨ கொரி ௧ ௫, ௪ ௰, ௰௧ ௨௩ கலா ௫ ௰௧ கொலோ ௧ ௨௪

[9] ௨ தீமோ ௪ ௨௨ பிலே ௨௫

4902
(7895)

EPHESIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

எபேசியருக்கு எழுதின

நிருபம்.

க. அதிகாரம்.

௧ பவுல் எபேசியிலுள்ள சபையை வாழ்த்தி, ௩ அவர்களுக்காகப் பராபரனை ஸ்தோத்திரித்து, ௪ பராபரன் நம்மைத் தெரிந்துகொண்டதையும், ௬ கிருபையினாலே நாம் புத்திரசுவிகாரம் அடைந்ததையும், ௰௧ மனுஷருடைய இரட்சிப்புக்கு மூலகாரணமாய் இருக்கிறதென்பதையும் சொல்லி, ௰௩ இந்த இரகசியத்தின் மேன்மை எளிதாய்க் கண்டறியக்கூடாததினாலே, ௰௬ அவர்கள் அந்த அறிவுக்கு வந்து எட்டவும், ௰௮ கிறிஸ்துவுக்குள் அதைச் சுதந்தரித்துக்கொள்ளவும் வேண்டிக்கொண்டது.

[1]பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு ஊரிலே [2]கிறிஸ்து இயேசுவினிடத்தில் விசுவாசமும் [3]பரிசுத்தமும் உள்ளவர்களுக்கு எழுதுகிறதாவது:

௨ நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் [4]உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ ¶ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய பிதாவுமாய்த் தேவனுமாயிருக்கிறவருக்குத் [5]தோத்திரம் உண்டாவதாக; என்னத்தினாலெனில், அவர் தமக்குமுன்பாக [6]நாம் பரிசுத்தராயும் பிழையில்லாதவர்களாயும் இருப்பதற்கு [7]லோகத்தோற்றத்திற்குமுன்னே இயேசுக்கிறிஸ்துவின்மூலமாய் [8]நம்மைத் தெரிந்துகொண்டபடியே,

௪ அவர் மூலமாய்ப் பரமஸ்தலங்களிலே* பலவித திவ்விய நன்மைகளால் நம்மை ஆசீர்வதித்தார்.

௫ அன்றியும் [9]அவர் தமக்கு அன்பாயிருக்கிறவருக்குள் [10]நமது மேல் வைத்தருளின தமது கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,

௬ [11]தம்முடைய தயையுள்ள சித்தத்தின்படி இயேசுக்கிறிஸ்து மூலமாக நம்மைத் தமக்குப் [12]புத்திரசுவிகாரம் உள்ளவர்களாக அன்பினாலே [13]முன்குறித்திருக்கிறார்.

௭ அன்றியும் அவர் மிகுந்த விவேகத்தோடும் புத்தியோடும் நமக்குச் சம்பூரணமாய்த் தெரியப்படுத்தின [14]ஐசுவரியமான கிருபையின்படியே,

௮ [15]அந்த இயேசுக்கிறிஸ்து தமது திரு இரத்தத்தைச் சிந்தினதினாலே

கி. பி. ௬௪

1 ௨ கொரி ௧ ௧
2 ௧ கொரி ௧ ௨ ௰ எபே ௬ ௨௧ கொலோ ௧ ௨
3 ௨ ரோ ௭ ௨ கொரி ௧ ௧
4 கலா ௧ ௩ தீத் ௧ ௪
5 ௨ கொரி ௧ ௩ ௧ பேது ௧ ௩
6 லூக் ௧ ௭௫ எபே ௨ ௰ ௫ ௨௭ கொலோ ௧ ௨௨ ௧ தெச ௪ ௭ தீத் ௨ ௰௨
7 ௧ பேது ௧ ௨, ௨௰
8 ௨ ரோ ௮ ௨௯ ௨ தெச ௨ ௰௩ ௨ தீமோ ௧ ௯ ௧ பேது ௧ ௨ ௨ ௯
*அல்லதுகாரியங்களிலே, எபே ௩ ௰.
9 மத் ௩ ௰௭ யோவா ௩ ௩௫
10 ௨ ரோ ௩ ௨௪ ௫ ௰௫

---

11 மத் ௰௧ ௨௬ லூக் ௰௨ ௩௨ ௧ கொரி ௧ ௨௧ ௬ வச —12 யோவா ௧ ௰௨ ௨ ரோ ௮ ௰௫ ௨ கொரி ௬ ௰௮ கலா ௪ ௫ —13 ௨ ரோ ௮ ௨௯ ௩௰ ௰௧ வச —14 ௨ ரோ ௨ ௪ ௯ ௨௩ ௬ ௭ எபே ௨ ௭ ௩ ௮ ௰௬ பிலி ௪ ௰௯.
15 அப் ௨௰ ௨௮ ௨ ரோ ௩ ௨௪ கொலோ ௧ ௰௪ எபி ௯ ௰௨ ௧ பேது ௧ ௰௮ ௰௯ வெளி ௫ ௯

லே நமக்குப் பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கின்றது.

௯ மேலும், [1]காலங்கள் நிறைவேறும்பொழுது, உண்டாகும் விசாரணையினாலே வானங்களிலும்* பூமியிலும் உள்ளவைகள் [2]யாவும் தலையாகிய கிறிஸ்துவுக்குக் [3]கீழாகக் கூட்டப்படவேண்டுமென்று,

௰ [4]தமக்குள்ளே தீர்மானித்திருந்த சந்தோஷமான [5]சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.

௰௧ மேலும், [6]தமது சித்தத்தினுடைய ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே,

௰௨ [7]நாங்கள் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த† வர்களாய் [8]அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாய் இருக்கும்படிக்கு, [9]முன் குறிக்கப்பட்டு, அவராலே [10]சுதந்தரத்தையும் அடைந்தோம்.

௰௩ நீங்களும் அப்படியே (சுதந்தரராகும்படிக்கு,) உங்கள் இரட்சிப்புக்கு ஏற்ற சுவிசேஷமாகிய [11]சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசித்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியோடே அவரால் [12]முத்திரைப்படுத்தப்பட்டீர்கள்.

௰௪ [13]சம்பாதிக்கப்பட்டவர்கள் [14]அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக [15]மீட்கப்படுமளவும் [16]அந்த ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்திற்கு அச்சாரமாயிருக்கிறார்.

௰௫ ¶ ஆனபடியினாலே கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும் எல்லாப் பரிசுத்தவான்கள்மேல் உள்ள உங்கள் அன்பையும் [17]நான் கேள்விப்பட்டபின்பு,

௰௬ [18]இடைவிடாமல் உங்களுக்காகத் தோத்திரம்பண்ணி, என் செபங்களில் உங்களை நினைத்து,

௰௭ [19]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் தேவனுமாய மகிமையின் பிதாவுமாயிருக்கிறவர் [20]அவரை அறிந்துகொள்ளுதற்கு ஏற்ற ‡ ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும்,

௰௮ தாம் நம்மை அழைத்ததினாலே [21]நாம் நம்பத்தக்க பாக்கியம் இன்னதென்றும், பரிசுத்தவான்களுக்குத் தாம் கொடுக்கும் [22]சுதந்தரத்தின் மகிமையின் பெருமை இன்னதென்றும்,

௰௯ [23]தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, [24]எல்லாத் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் வல்லமையுள்ளவர்களுக்கும் கர்த்தாக்களுக்கும் இம்மையிலேமாத்திரம் அல்ல, [25]மறுமையிலேயும் மற்றும் பேர்கொண்டிருக்கிற யாவற்றிற்குமேல் உயர்ந்திருக்கத்தக்கதாக,

௨௰ [26]அவரைப் பரமண்டலங்களிலே தமது வலதுபாரிசத்திலே உளுக்காரும்படி செய்து,

௨௧ [27]இப்படிச் சகலத்தையும் அவருடைய பாதங்களின் கீழ்ப்படுத்தி, (அவருடைய) சபைக்காக [28]அவரைச் சகலத்திற்கும் தலைவராக ஏற்படுத்தி,

௨௨ இப்படி அவரிடத்தில் வெளிப்படுத்தின [29]தமது பலத்த வல்லமையின் தத்துவத்தின்படியே § விசுவாசிகளாகிய நம்மிடத்திலே தாம் காண்பிக்கும் வல்லமையின் மகா மேன்மை இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு, [30]பிரகாசமுள்ள புத்தியாகிய கண்களைக் கொடுக்கவேண்டும் என்றும் (செபம்பண்ணுகிறேன்).

கி. பி. ௬௪.

1 கலா ௪. ௪. எபி ௧. ௨. ௯. ௰. ௧ பே ௧. ௨௰.
* அல்லது வானத்திலும
2 பிலி ௨. ௯, ௰. கொலோ ௧. ௨௰.
3 ௧ கொரி ௩. ௨௨, ௨௩. ௰௧. ௩. எபே ௨. ௰௫. ௩. ௰௫.
4 எபே ௩. ௰௧. ௨ தீமோ ௧. ௯.
5 உரோ ௰௬. ௨௫. எபே ௩. ௪, ௯. கொலோ ௧. ௨௬.
6 ஏசா ௪௬. ௰, ௰௧.
7 யாக் ௧. ௰௮.
† அல்லது விசுவாசித்த
8 ௬, ௰௪ வச. ௨ தெச ௨. ௰௩.
9 ௫ வச.
10 அப ௨௰. ௩௨. ௨௬. ௰௮. உரோ ௮. ௰௭. கொலோ ௧. ௰௨. ௩. ௨௪. தீத ௩. ௭. யாக் ௨. ௫. ௧ பே ௧. ௪.
11 யோவா ௧. ௰௭. ௨ கொரி ௬. ௭.
12 ௨ கொரி ௧. ௨௨. எபே ௪. ௩௰.
13 அப ௨௰. ௨௮.
14 ௯. ௰௨ வச. ௧ பே ௨. ௯.
15 லூக் ௨௧. ௨௮. உரோ ௮. ௨௩. எபே ௪. ௩௰.
16 ௨ கொரி ௧. ௨௨. ௫. ௫.
17 கொலோ ௧. ௪. பிலே ௫.
18 உரோ ௧. ௯. பிலி ௧. ௩, ௪. கொலோ ௧. ௩. ௧ தெச ௧. ௨. ௨ தெச ௧. ௩.
19 யோவா ௨௰. ௰௭.
20 கொலோ ௧. ௯.

---

‡ அல்லது அறிக்கைபண்ணுதற்கேற்ற. கொலோ ௨. ௨. — 21 எபே ௨. ௰௨. ௪. ௪. — 22 ௰௧ வச. — 23 அப ௨. ௨௪. ௩௩. 24 உரோ ௮. ௩௮. கொலோ ௧. ௰௩. ௨. ௰௫. — 25 பிலி ௨. ௯. ௰. கொலோ ௨. ௰. எபி ௧. ௪. — 26 சங. ௱௰௧. அப ௭. ௫௫, ௫௬. கொலோ ௩. ௧. எபி ௧. ௩. ௰௨. — 27 சங ௮. ௬. மத். ௨௮. ௰௮. ௧ கொரி ௰௫. ௨௭. எபி ௨. ௮. — 28 எபே ௪. ௰௫, ௰௬. கொலோ ௧. ௰௮. எபி ௨. ௭. — 29 எபே ௩. ௭. கொலோ ௧. ௨௯. ௨. ௰௨. — § கிரேக்கு வல்லமையின பலத்தத்துவத்தின்படியே. — 30 அப ௨௬. ௰௮.

௨௩ (அவருடைய சபை) [1]எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய [2]நிறைவான [3]சரீரமாய் இருக்கின்றது.

௨. அதிகாரம்.

௧ சுபாவத்திலே நமக்கிருக்கும் நிலைமையையும், ௫. கிருபையினாலே நமக்கு உண்டாகும் வேற்றுமையையும் இன்னதென்று கூறி, ௰ நற்கிரியைகளுக்கென்று உண்டாக்கப்பட்டு, ௰௩ கிறிஸ்துவோடு ஐக்கமானவர்கள், ௰௧ அஞ்ஞானிகளைப்போலும், ௰௨ அந்நியரைப்போலும் நடவாமல், ௰௯ பரிசுத்தவான்களைச் சேர்ந்தவர்களைப்போலும், பராபரனுடைய குடும்பத்தாரைப்போலும் நடக்கவேண்டுமென்பது.

அக்கிரமங்களாலும் பாவங்களாலும் [4]செத்தவர்களாயிருந்த [5]உங்களையும் உயிர்ப்பித்தார்.

௨ [6]முற்காலத்திலே இப்பிரபஞ்சத்தின் வழக்கத்தின்படியேயும், [7]கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாசத்தின் [8]அதிகாரமுள்ள பிரபுவாகிய ஆவியின்படியேயும், அவைகளில் நடந்துகொண்டீர்கள்.

௩ [9]அவர்களோடேகூட நாங்கள் எல்லாரும் முற்காலத்திலே [10]எங்கள் மாம்சத்தேக இச்சைகளின்படியே நடந்து, எங்கள் மாம்சத்தேகமும் சிந்தனைகளும் இச்சித்தவைகளைச்* செய்து, [11]மற்றவர்களைப்போலக் கோபாக்கினைக்கு உள்ளானவர்களாயிருந்தோம்.

௪ இப்படி நாம் [12]அக்கிரமங்களினாலே செத்தவர்களாயிருக்கையில்,

௫ [13]இரக்கத்தில் ஐசுவரியமுள்ள பராபரன் தாம் நமதுமேல் வைத்த மிகுந்த அன்பினாலே [14]நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே† இரட்சிக்கப்பட்டீர்கள்.

௬ [15]கிறிஸ்து இயேசுவுக்குள்ளே அவர் நமதுமேல் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மிகுந்த ஐசுவரியத்தை வருங்காலங்களிலே திருஷ்டாந்தமாய்க் காண்பிப்பதற்காக,

௭ நம்மைக் கிறிஸ்து இயேசுவுடனேகூட எழுப்பி, [16]பரமண்டலங்களிலே இருக்கும்படி செய்தார்.

௮ [17]கிருபையினாலே [18]விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.

௯ அது உங்களாலும் அல்ல, [19]கிரியைகளினாலும் அல்ல, ஒருவரும் மேன்மைபாராட்டாதபடிக்கு, [20]அது பராபரனுடைய ஈவாயிருக்கின்றது.

௰ நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவினாலே சிருஷ்டிக்கப்பட்டு, பராபரனுடைய [21]செய்கையாயிருக்கிறோமே; அவைகளை நாம் செய்து நடக்கும்படிக்கு [22]அவர் நம்மை முன்னுக்கு எத்தனம்பண்ணி‡ இருக்கிறார்.

௰௧ ¶ ஆனபடியினாலே முன்னே சரீரத்தின்படி புறத்தேசத்தாராயிருந்து, [23]சரீரத்திலே கையினால் செய்யப்படுகிற விருத்தசேதனம் உள்ளவர்களாலே விருத்தசேதனம் இல்லாதவர்கள் என்னப்பட்ட நீங்கள்,

௰௨ [24]அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களுமாய், [25]இஸ்ரவேலருடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களுமாய் [26]வாக்குத்தத்தத்தின் உடம்படிக்கைகளுக்கு அந்நியருமாய், [27]நம்பிக்கையில்லாதவர்களுமாய், [28]பராபரனை இழந்தவர்களுமாய் இவ்வுலகத்திலே இருந்தீர்கள் என்று [29]நினைத்துக்கொள்வீர்களாக.

௰௩ [30]முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது [31]கிறிஸ்து

கி. பி ௬௪.

1 ௧ கொரி ௰௨. ௬ எபே ௪ ௰. கொலோ ௩ ௰௧
2 கொலோ ௨ ௯
3 ௨ரோ ௰௨. ௫ ௧ கொரி ௰௨. ௰௨, ௨௭ எபே ௪ ௰௨ ௫ ௨௩, ௩௰ கொலோ ௧ ௰௮, ௨௪
4 ௫ வ௪ எபே ௪ ௰௮
5 யோவா ௫ ௨௪ கொலோ ௨ ௰௩
6 ௧ கொரி ௬ ௰௧ எபே ௪ ௨௨ கொலோ ௩ ௨௧ ௩ ௭ ௧ யோ ௫ ௰௯
7 எபே ௫ ௬ கொலோ ௩ ௬
8 எபே ௬ ௰௨
9 தீத ௩ ௩ ௧ பேச ௩
10 கலா ௫ ௰௬
* இச்சிக்கு, கருதாப்பியந்தவைகளை
11 சங் ௫௧ ௫ ௨ரோ ௫ ௰௨, ௰௪
12 ௨ரோ ௫ ௬ ௭, ௰ ௧ வ௪
13 ௨ரோ ௰௰௨ எபே ௧ ௭ வ௪
14 ௨ரோ ௬ ௪, ௫ கொலோ ௨ ௰௨ ௰௩ ௩ ௧,
† அல்லது அவருடைய கிருபையினாலே, அப்படியே ௰௮ ஆம் வசனம் நீ ௫
15 நீத் ௩ ௪
16 எபே ௧ ௨௰
17 ௫ வ௪ ௨ரோ ௩ ௨௪ ௨ தீமோ ௧ ௯
18 ௨ரோ ௪ ௰௬
19 ௨ரோ ௩ ௨௰ ௨௭, ௨௮ ௪ ௨ ௯ ௰௧ ௯

---

௧ கொரி ௧ ௨௯ ௩௰, ௩௧. ௨ தீமோ ௧ ௯ நீத ௩ ௫ —20 மத ௰௬ ௰௭ யோவா, ௬ ௪௪, ௬௫ ௨ரோ ௰ ௰௪ ௰௫ ௰௭. எபே ௧ ௰௯ பிலி ௧. ௨௯ —21 ௫ ரோ ௩ ௨௬ சங் ௱ ௩ ஏசா ௰௯ ௨௫ ௨௯ ௨௩ ௪௪ ௨௧ யோவா ௩ ௩, ௫ ௧ கொரி ௩ ௯ ௨ கொரி, ௫ ௫, ௰௭ எபே ௪ ௨௪ தீத் ௨ ௰௪ —22 எபே. ௧ ௪ —‡ அல்லது நியமித்து —23 ௨ரோ ௨ ௨௮, ௨௯ கொலோ ௨ ௰௧ 24 எபே ௪ ௰௮ கொலோ ௧ ௨௧ —25 எசே ௰௩ ௯. யோவா ௰ ௰௬ —26 ௨ரோ ௯ ௪ அ —27 ௧ தெச ௪ ௰௩ —28 கலா ௪ ௮ ௧ தெச ௪ ௫ —29 ௧ கொரி ௰௨ ௨ எபே ௫ ௮ கொலோ ௧ ௨௧ ௨ ௰௩ —30 அப ௨ ௩௯ ௰ வ௪ —31 கலா ௩ ௨௮

இயேசுவைச் சேர்ந்து, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே சமீபமானீர்கள்

௰௪ எப்படியெனில் [1]அவரே நம்முடைய சமாதானத்திற்குக் காரணராகி, [2]இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,

௰௫ சடங்குச்சட்டங்களைக் குறித்து உண்டான கற்பனைகளாகிய நியாயப்பிரமாணமாகிய[3]பகையைத் தம்முடைய சரீரத்தினாலே [4]நீக்கிப்போட்டு, இப்படிச் சமாதானம்பண்ணினதால், [5]இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனிதனாகச் சிருட்டித்து,

௰௬ [6]பகைக்கு ஏதுவானதைத் தம்மாலே* அழித்ததால், சிலுவையினால் இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகப் பராபரனுக்கு [7]ஒப்புரவாக்கினார்.

௰௭ அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் [8]சமீபமாயிருந்த அவர்களுக்கும் [9]சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.

௰௮ அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் [10]ஒரே ஆவியோடே பிதாவினிடத்தில் சேருகிற நிலைமையை [11]அவராலே பெற்றிருக்கிறோம்.

௰௯ ¶ ஆகையால் நீங்கள் இனிமேல் அந்நியருமாய், குடும்பத்தைச் சேராதவர்களுமாய் இராமல், [12]பரிசுத்தவான்களோடே கூட்டப்பட்டவர்களுமாய், [13]பராபரனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமாய்,

௨௰ [14]அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய [15]அஸ்திபாரத்தின்மேல் [16]கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள்; [17]அந்த அஸ்திபாரத்திற்கு இயேசுக்கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.

௨௧ [18]அவர்மேலே மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, [19]கர்த்தருக்குப் பரிசுத்த ஆலயமாகப் பெருகுகின்றது.

௨௨ [20]அவர்மேலே நீங்களும் ஆவியினாலே பராபரனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

௩. அதிகாரம்.

௩ புறச்சாதிகளும் இரட்சிக்கப்படுவார்களென்ற பரமஇரகசியம், ௫ பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டு, ௯ தனக்கு அருள் கிடைத்ததென்று சொல்லி, ௰ அதை யாவருக்கும் அறிவிக்க, ௰௩ தான் அநுபவிக்கிற உபத்திரவங்களினிமித்தம் அவர்கள் சோர்ந்துபோகாதிருக்கவும், ௰௪ அவர்கள்மேல் கிறிஸ்து பாராட்டின மிகுந்த அன்பை அவர்கள் அறியவும், ௰௯ பவுல் வேண்டிக்கொண்டது.

இது முகாந்தரமாகப் பவுல் என்னும் நான் [21]புறத்தேசத்தாராய் இருக்கிற உங்களுக்காகக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் [22]காவலில் வைக்கப்பட்டவனாயிருக்கிறேன்.

௨ [23]உங்களுக்காக எனக்குக் கொடுத்திருக்கிற தேவகிருபையைக் காட்டிய [24]உத்தியோகம் இன்னதென்று கேட்டிருப்பீர்களே.

௩ என்னவெனில், புறத்தேசத்தார் சுவிசேஷத்தினாலே [25]உடன் சுதந்தரருமாய் [26]அவர்களுடனே கூட ஒரே சரீரமுமாய், கிறிஸ்துவின்மேல் அவர் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு [27]உடன் பங்காளிகளுமாய் இருக்கிறார்கள் என்று [28]இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

௪ [29]முன்னே† நான் இதைக்குறித்துச் சுருக்கமாய் எழுதினேன்.

௫ அதை நீங்கள் வாசிக்கையில், [30]கிறிஸ்துவின் இரகசியத்

கி. பி. ௬௪.

[1] மீகா ௫ ௫ யோவா ௰௬ ௩௩ அப. ௰ ௩௬ உரோ ௫ ௧ கொலோ ௧ ௨௰
[2] யோவா ௰ ௰௬ கலா ௩ ௨௮
[3] கொலோ. ௧ ௨௨
[4] கொலோ ௨ ௰௪,௨௰
[5] ௨ கொரி ௫ ௰௭ கலா ௬ ௰௫ எபே ௪ ௨௪
[6] உரோ ௬ ௬ ௮ ௩ கொலோ ௨ ௰௪
* அல்லது சிலுவையிலறையுண்டு
[7] கொலோ ௧ ௨௰, ௨௧, ௨௨
[8] சங் ௱௪௮, ௰௪
[9] ஏசா ௫௭ ௰௯ சகரி ௯ ௰ அப ௨ ௩௯ ௰ ௩௬ உரோ ௫ ௧ ௰௩, ௰௭ வச
[10] ௧ கொரி ௰௨ ௰௩ எபே ௪ ௪
[11] யோவா ௰ ௯ ௰௪ ௬ உரோ ௫ ௨ எபே ௩ ௰௨ எபி ௪ ௰௬ ௰௯, ௨௰ ௧ பேது ௩ ௰௮
[12] பிலி ௩ ௨௰ எபி ௰௨ ௨௨, ௨௩
[13] கலா ௬ ௰ எபே ௩ ௰௫
[14] ௧ கொரி ௰௨ ௨௮ எபே ௪ ௰௧
[15] மத் ௰௬ ௰௮ கலா ௨ ௯ வெளி. ௨௧ ௰௪
[16] ௧ கொரி ௩ ௯, ௰ எபே ௪ ௰௨ ௧ பேது ௨ ௪, ௫
[17] சங் ௱௰௮ ௨௨ ஏசா ௨௮ ௰௬ மத் ௨௧ ௪௨
[18] எபே ௪ ௰௫, ௰௬

[19] ௧ கொரி ௩ ௰௭ ௬ ௰௯ ௨ கொரி ௬ ௰௬ —[20] ௧ பேது ௨ ௫ —[21] கலா ௫ ௰௧ கொலோ ௧ ௨௪ ௨ தீமோ ௨ ௰ [22] அப ௨௧ ௩௩ ௨௮ ௰௭,௨௰ எபே ௪ ௧ ௬ ௨௰ பிலி ௧ ௭,௰௩ ௰௪ ௰௬ கொலோ ௪ ௩,௰௮ பிலே ௧ ௯ ௨ தீமோ ௧ ௮ ௨ ௯ —[23] அப ௯ ௰௫ ௰௩ ௨ உரோ ௰௨ ௩. கலா ௧ ௰௬ ௮ வச —[24] உரோ ௧ ௫ ௰௧ ௰௩ ௧ கொரி ௪ ௧ எபே ௪ ௭ கொலோ ௧ ௨௫ —[25] கலா ௩ ௨௮, ௨௯ எபே ௨ ௰௪ —[26] எபே ௨ ௰௫, ௰௬ —[27] கலா ௩ ௰௪ —[28] உரோ ௰௬ ௨௫. கொலோ ௪ ௨௬ ௨௭ —[29] எபே. ௧ ௯, ௰ —† அல்லது சற்றுமுன்னே —[30] ௧ கொரி ௪ ௧ எபே ௬, ௰௯

தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்வீர்கள்.

௬ [1]அந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் தேவ ஆவியினாலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, [2]முன்னிருந்த தலைமுறைகளின் மனிதர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

௭ [3]இந்தச் சுவிசேஷத்திற்கு நான் [4]பராபரனுடைய பலத்த தத்துவத்தால் [5]எனக்கு அளிக்கப்பட்ட கைமாறில்லாத கிருபையினாலே [6]ஊழியக்காரனானேன்.

௮ [7]பராபரன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் செய்து முடித்த அநாதியான தீர்மானத்தின்படியே,

௯ அநேகவிதமான தமது ஞானம் பரமண்டலங்களில் உள்ள [8]துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் [9]சபையினாலே தெரியவரும் [10]பொருட்டாக,

௰ [11]கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் [12]புறத்தேசத்தாரிடத்தில் சுவிசேஷமாக அறிவிக்கிறதற்கும்,

௰௧ [13]இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருட்டித்த பராபரனுக்குள்ளே [14]ஆதிகாலங்கள்முதல் மறைந்திருந்த [15]இரகசியத்தோடே ஐக்கப்படுதல் இன்னதென்று எல்லாருக்கும் வெளிச்சமாகக் காண்பிக்கிறதற்குமான அந்தக் கிருபையே, [16]எல்லாப் பரிசுத்தவான்களிலும் சிறியவனாகிய எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

௰௨ அந்த இயேசுக்கிறிஸ்துவினாலே [17]அவரைப்பற்றும் விசுவாசத்தால் நமக்குத் தயிரியமும் திடநம்பிக்கையோடே [18]பராபரனைச் சேருகிற நிலைமையும் உண்டாயிருக்கிறது.

௰௩ ஆகையால் [19]உங்கள்நிமித்தமாக நான் அநுபவிக்கிற [20]உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰௪ ¶ [21]அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கின்றனவே.

௰௫ அதற்காக நான் [22]பரமண்டலங்களிலும் பூமியிலும் உள்ள குடும்பத்தார் எல்லாருக்கும் நாமத்தைக் கொடுத்தவராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி என் முழங்கால்களை முடக்கி,

௰௬ [23]நீங்கள் உங்கள் உள்ளத்திலே [24]அவருடைய ஆவியினாலே வல்லமையாய்ப் பலப்படுத்தப்படும்படியாகவும்,

௰௭ [25]விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கும்படியாகவும், நீங்கள் [26]அன்பிலே வேரூன்றி, அஸ்திபாரப்பட்டவர்களாய்,

௰௮ சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய (அன்பின்) [27]அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்துகொண்டு,

௰௯ அறிவுக்கு மேலான அவ்வன்பை அறிந்துகொள்ளுதற்கு [28]வல்லவர்களாகும்படியாகவும், (இப்படி) பராபரனுடைய [29]மிகுந்த பரிபூரணத்தால் நிறையப்படும்படியாக, [30]அவர் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்

௨௰ ¶ [31]நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் [32]நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்ப

கி. பி. ௬௪.

1 எபே ௨. ௨௰
2 அப ௰. ௨௮ உரோ ௰௬. ௨௫ ௯ வச
3 கலா ௧. ௰௨
4 உரோ ௰௫. ௰௬ எபே ௧. ௰௯ கொலோ ௧. ௨௯
5 உரோ ௧. ௫
6 உரோ ௰௫. ௰௫ கொலோ ௧. ௨௩, ௨௫
7 எபே ௧. ௯
8 உரோ ௮. ௩௮ எபே ௧. ௨௧ கொலோ ௧. ௰௬ ௧பே ௩. ௨௨
9 ௧கொரி ௨. ௭ ௧தீமோ ௩. ௰௬
10 ௧பே ௧. ௰௨
11 எபே ௧. ௭ கொலோ ௧. ௨௭
12 கலா ௧. ௰௬ ௨. ௮ ௧தீமோ ௨. ௭ ௨தீமோ ௧. ௰௧
13 சங ௩௩. ௬
14 உரோ ௰௬. ௨௫ ௯ வச ௧கொரி ௨. ௭ கொலோ ௧. ௨௬
15 ௧ வச எபே ௧. ௯
16 ௧கொரி ௰௫. ௯ ௧தீமோ. ௧. ௰௩, ௰௫.
17 எபி ௪. ௰௬
18 எபே ௨. ௰௮
19 ௧ வச
20 அப ௰௪. ௨௨ பிலி ௧. ௰௪ ௧தெச ௩. ௩
21 ௨கொரி ௧. ௬
22 எபே ௧. ௰ பிலி ௨. ௯, ௰, ௰௧
23 உரோ ௭. ௨௨. ௨கொரி ௪. ௰௬
24 எபே ௬. ௰ கொலோ ௧. ௰௧
25 யோவா ௰௪. ௨௩ எபே ௨. ௨௨

26 கொலோ ௧. ௨௩. ௨. ௭ —27 உரோ. ௰ ௩, ௰௩, ௰௨ —28 எபே ௧. ௰௮ —29 யோவா ௧. ௰௬ எபே ௧. ௨௩ கொலோ ௨. ௯, ௰ —30 உரோ ௯. ௨௩ எபே ௧. ௭ பிலி ௪. ௰௯ கொலோ ௧. ௨௭ —31 ௧கொரி ௨. ௯.
32 ௭ வச கொலோ ௧. ௨௯

டியே செய்ய [1]வல்லமையுள்ள [2]அவருக்கு,

௨௧ கிறிஸ்து இயேசுவைப்பற்றிய சபையினாலே எல்லாத் தலைமுறைகளிலேயும் என்றென்றைக்கும் துதியுண்டாவதாக.—ஆமென்.

௪. அதிகாரம்.

௧ ஐக்கமாயிருக்கவும், ௭ திருச்சபை, ௰௧ நிலைபெற்று, ௰௬ கிறிஸ்துவுக்குள் ஓங்கவும் கட்டளையிட்டு, பராபரன் மனுஷர்களுக்குப் பல ஈவுகளை அளிக்கிறாரென்று சொல்லி, ௰௮ அஞ்ஞானிகளுடைய அசுத்தங்களை விட்டுவிலகி, ௨௪ புதிய குணத்தைத் தரித்துக்கொண்டு, ௨௫ பொய்யையும், ௨௯ கெட்ட சம்பாஷணையையும் நீக்கிவிடச் சொன்னது.

ஆனதால் [3]கர்த்தர்நிமித்தம்* காவலில் வைக்கப்பட்டிருக்கிற நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி என்னவெனில், அழைக்கப்பட்டிருக்கிற நீங்கள் அந்த அழைப்புக்குப் பாத்திரராய்,

௨ [4]மிகுந்த மனத்தாழ்மை, பொறுமை, நீடிய சாந்தத்தோடும் [5]நடந்துகொண்டு, ஒருவரை ஒருவர் அன்பாய்த் தாங்கிக்கொண்டு,

௩ [6]சமாதானக் கட்டினாலே ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளச் சாக்கிரதையாய் இருப்பீர்களாக.

௪ உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் [7]ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல,

௫ [8]ஒரே சரீரமும் [9]ஒரே ஆவியும் [10]ஒரே கர்த்தரும் [11]ஒரே விசுவாசமும் [12]ஒரே ஞானஸ்நானமும்,

௬ [13]எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு, அவர் எல்லாவற்றின்மேலும் [14] எல்லாவற்றின் வழியாயும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

௭ ¶ இப்படியிருந்தும் கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக [15]நம்மில் அவனவனுக்குக் கிருபை கொடுத்திருக்கிறது.

௮ ஆனதால் [16]அவர் உன்னதத்திற்கு ஏறி, [17]சிறையாக்கினவைகளைச்† சிறையாக்கிப்போட்டு, மனிதருக்கு ஈவுகளைக் கொடுத்தார் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

௯ [18]அவர் ஏறினதால் அதற்குமுன்னே மிகவும் தாழ்ந்த பூதலங்களில் இறங்கினார் என்று விளங்குகின்றது அல்லவா?

௰ இறங்கிவந்த அவரே [19]எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக,‡ எல்லா வானங்களின்மேலும் [20]ஏறினவராயும் இருக்கிறார்.

௰௧ மேலும், நாம் அனைவரும் பராபரனுடைய குமாரனைப்பற்றிய விசுவாசத்திலேயும் [21]அறிவிலேயும் ஒருமையுள்ளவர்களாகி,§ கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்த்தியின்|| அளவுக்குத்தக்கதாகத் [22]தேறினவர்களாயிருக்கும்வரைக்கும்,

௰௨ [23]கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையை எழுப்பிக் [24]கட்டுதற்கு ஏதுவான ஊழியத்தின் கிரியைக்குப் [25]பரிசுத்தவான்கள் நிறைவாக்கப்படும்பொருட்டாக,

௰௩ அவரே சிலரை [26]அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் [27]சுவிசேஷகராகவும் சிலரை [28]மேய்ப்பராகவும் [29]உபதேசிகளாகவும் ஏற்படுத்தினார்.

௰௪ மனிதருடைய சூதும், [30]வஞ்சிக்கிறதற்கு ஏதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவிதக் [31]காற்றினாலே, [32]நாம் இனி அடிக்கப்பட்டு அலைகிற [33]பிள்ளைகளாயிராமல்,

௰௫ [34]அன்போடே உண்மையுள்ளவர்களாயிருந்து,¶ [35]அவயவங்க

கி. பி. ௬௪.

1 ௨ரோ ௰௬ ௨௫ யூதா ௨௪
2 ௨ரோ ௰௧ ௩௬ ௰௬ ௨௭ எபி ௰௩ ௨௧
3 எபே ௩ ௧ பிலே ௧ ௯
* அல்லது காத்தருக்குள்
4 அப ௨௰ ௰௯ கலா ௫ ௨௨, ௨௩ கொலோ ௩ ௰௨, ௰௩,
5 பிலி ௧ ௨௭ கொலோ ௧ ௰ ௧ தெச ௨ ௰௨
6 கொலோ ௩ ௰௪
7 எபே ௧ ௰௮
8 ௨ரோ ௰௨ ௫ ௧ கொரி ௰௨ ௰௨, ௰௩ எபே ௨ ௰௬
9 ௧ கொரி ௰௨ ௪, ௰௧
10 ௧ கொரி ௧ ௰௩ ௮ ௬ ௰௨ ௫ ௨ கொரி ௰௧ ௪
11 யூதா ௩ ௰௩
12 கலா ௩ ௨௭, ௨௮ எபி ௬ ௬
13 மல்கி ௨, ௰ ௧ கொரி ௮ ௬ ௰௨ ௬
14 ௨ரோ ௰௧ ௩௬
15 ௨ரோ ௰௨ ௩, ௬ ௧ கொரி ௰௨ ௰௧
16 சங் ௬௮ ௰௮
17 நியா ௫ ௰௨ கொலோ ௨ ௰௫
† அல்லது சிறையாக்குதலை
18 யோவா ௩ ௰௩ ௬ ௩௩, ௬௨
19 அப ௨ ௯
‡ அல்லது நிறைவேற்ற
20 அப ௧ ௰, ௰௧ ௧ தீமோ ௩, ௰௬ எபி ௪ ௰௪ ௭ ௨௬ ௮ ௧ ௯ ௨௪

---

21 கொலோ ௨ ௨ — § அல்லது ஒருமைக்குள்ளானவர்கள் — || அல்லது வயதின். — 22 ௧ கொரி ௰௪ ௨௰ கொலோ ௧ ௨௮
23 எபே ௧ ௨௩ கொலோ ௧ ௨௪ — 24 ௧ கொரி ௰௪ ௨௬ — 25 ௧ கொரி ௰௨ ௭ — 26 ௧ கொரி ௰௨ ௨௮ எபே ௨ ௨௰
27 அப் ௨௧ ௮ ௨ தீமோ ௪ ௫ — 28 அப ௨௰ ௨௮ — 29 ௨ரோ ௰௨ ௭ — 30 ௨ரோ ௰௬ ௰௮ ௨ கொரி ௨ ௰௭ — 31 மத் ௰௧ ௭
32 எபி ௰௩ ௯ — 33 ஏசா ௨௮ ௯ ௧ கொரி ௰௪ ௨௰ — 34 சகரி ௮ ௰௬. ௨ கொரி ௪ ௨ ௬ வச ௧ யோ, ௩ ௰௮ — ¶ அல்லது சத்தியத்தைப்பேசி — 35 கொலோ ௧ ௰௮

ளாகிய எல்லாரையும் தலையாகிய கிறிஸ்துவினிடத்திலே [1]வளர்க்கிறவர்களாயிருக்கும்படிக்கு, (அப்படிச் செய்தார்).

௰௬ [2]அவராலே சரீரம் முழுவதும் உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் தகுதியாய்க் கூட்டி இணைக்கப்பட்டதாயிருக்க, அவயவந்தோறும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தன்னை எழுப்பிக் கட்டுதற்கு எதுவாகச் சரீரவளர்த்தியை உண்டாக்குகிறார்.

௰௭ ¶ ஆனதால், கர்த்தரைக் கொண்டு நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறது என்னவெனில், மற்றச் சனங்கள் [3]தங்கள் வீணான மனதின்படி நடக்கிறதுபோல,

௰௮ [4]நீங்கள் இனிமேல் நடவாமல் இருப்பீர்களாக; அவர்கள் [5]அந்தகாரப்பட்ட புத்தியுள்ளவர்களாய், தங்களிலுள்ள அறியாமையினாலும் தங்கள் இருதயத்தின் [6]கடினத்தினாலும்* பராபரனுக்கு ஏற்ற சீவனுக்கு [7]அந்நியராயிருந்து,

௰௯ [8]மெய்யுணர்வு இல்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆசையோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு [9]ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

௨௰ நீங்கள் இப்படிக் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை.

௨௧ இயேசுவினிடத்தில் சத்தியம் உண்டாயிருக்கிறபடியே [10]நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் உபதேசம் அடைந்தீர்கள்.

௨௨ அந்தப்படி [11]நீங்கள் முன்னே நடந்தபிரகாரமாக வஞ்சனையுள்ள இச்சைகளாலே கெடுதியான [12]பழைய மனிதத்துவத்தைக் [13]களைந்துபோட்டு,

௨௩ [14]உங்கள் மனதிலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,

௨௪ நீதியிலும் மெய்யான பரிசுத்தத்திலும்† பராபரனுடைய சாயலாகச் [15]சிருட்டிக்கப்பட்ட [16]நவமான மனிதனைத் தரித்துக்கொள்வீர்களாக.

௨௫ ¶ அன்றியும் [17]நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியினாலே, பொய்யைக் களைந்து, அவனவன் தனக்கு அடுத்த பிறனுடனே [18]மெய்யைப் பேசுங்கள், [19]மேலும் பாவமில்லாமல் கோபங்கொள்ளுங்கள்.

௨௬ ¶ உங்கள் எரிச்சலின்மேலே சூரியன் அஸ்தமிக்கவொட்டாமலும், [20]பசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

௨௭ ¶ திருடனானவன் இனித் திருடாமல், [21]குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக,‡

௨௮ தன் கைகளினால் நல்ல வேலையைச் செய்து, [22]பிரயாசப்படக்கடவன்.

௨௯ ¶ [23]கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படக்கூடாது; [24]மற்றவர்களை எழுப்புதற்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால், [25]அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோசனம் உண்டாகும்படி§ பேசிக்கொள்ளுங்கள்.

௩௰ அன்றியும் நீங்கள் [26]மீட்கப்படும் [27]நாள்வரைக்கும் முத்திரையாகப் பெற்ற பராபரனுடைய பரிசுத்த [28]ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்பீர்களாக.

௩௧ ¶ [29]சகலவிதமான கசப்பும் மூர்க்கமும் கோபமும் கூக்குரலும் [30]தூஷணமும் [31]மற்றெந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.

கி. பி. ௬௪.

[1] எபே ௧ ௨௨ ௨ ௨௧

[2] கொலோ ௨. ௰௯

[3] உரோ ௧ ௨௧

[4] எபே ௨ ௧, ௨. ௩ ௨௨ ௨௪ கொலோ ௩ ௭ ௧ பே ௪ ௩

[5] அப ௨௬ ௰௮

[6] உரோ ௧ ௨௧

* அல்லது குருட்டாட்டத்தினாலும

[7] எபே ௨. ௰௨ கலா ௪ ௮ ௧ தெச ௪ ௫

[8] ௧ தீமோ ௪ ௨

[9] உரோ ௧ ௨௪, ௨௬. ௧ பே ௪ ௩

[10] எபே ௧ ௰௩

[11] எபே ௨ ௨ ௩ ௰௭ ௨௪ கொலோ ௩ ௭ ௧ பே ௪ ௩

[12] உரோ ௬ ௬

[13] கொலோ ௨ ௰௧ ௩ ௮, ௯ எபி ௰௨ ௧ ௧ பே ௨ ௧

[14] உரோ ௰௨ ௨ கொலோ ௩ ௰

† அல்லது மெய்யின் பரிசுத்தத்திலும்

[15] எபே. ௨ ௰

[16] உரோ ௬ ௪ ௨ கொரி ௫ ௰௭ கலா ௬ ௰௫ எபே ௬ ௰௧ கொலோ ௩ ௰

[17] உரோ ௰௨ ௫

[18] சகரி ௮ ௰௬ ௰௫ ௨௫ கொலோ ௩ ௯

[19] சங் ௪ ௪ ௩௭ ௮

[20] ௨ கொரி ௨ ௰, ௰௧ யாக் ௪ ௭ ௧ பே ௫ ௯

[21] லூக் ௩ ௰௧

‡ அல்லது பகிர்ந்துகொடுக்க

[22] அப ௨௰ ௩௫ ௧ தெச ௪ ௰௧ ௨ தெச. ௩ ௮, ௰௧ ௰௨ —[23] மத் ௰௨ ௩௬ எபே ௫ ௪ கொலோ ௩ ௮ —[24] கொலோ ௪ ௬ ௧ தெச. ௫ ௰௧

[25] கொலோ ௩ ௰௬ —§ அல்லது பிரயோசனமாய் ஊன்றக்கட்டும்படி —[26] லூக் ௨௧ ௨௮ உரோ ௮. ௨௩ எபே ௧ ௰௪

[27] எபே ௧ ௰௩ —[28] ஏசா ௭ ௰௩ ௬௩ ௰ எசே ௰௬ ௪௩ ௧ தெச ௫ ௰௯ —[29] கொலோ ௩ ௮, ௰௯ —[30] தீத் ௩ ௨ யாக் ௪ ௰௧ ௧ பே ௨ ௧ —[31] தீத் ௩ ௩

௩௨ அதைத்தவிர, [1]நீங்கள் ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, பராபரன் கிறிஸ்துவினாலே உங்களுக்கு மன்னித்ததுபோல, [2]ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

௫ அதிகாரம்.

௨ ஒருவரை ஒருவர் சிநேகித்து, ௩ விபசாரம், ௪ வம்பு ௭ கெட்டவர்களின் சகவாசமுதலியவைகளை விலகி, ௰௫ எச்சரிக்கையாய் நடந்து, ௰௮ ஆவியால் நிரப்பப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லி, ௨௨ பெண்சாதிகள் புருஷர்களுக்குக் கீழ்ப்படியவேண்டியதையும், ௨௫ கிறிஸ்துசபையில் அன்புகூருவதுபோலப் புருஷர்கள் பெண்சாதிகளில் அன்புகூரவேண்டியதையுஞ்சொன்னது.

இவ்விதமாய் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல, பராபரனைப் [3]பின்பற்றுகிறவர்களாகி,

௨ [4]கிறிஸ்துவானவர் நமக்காகத் தம்மைப் பராபரனுக்குச் [5]சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து, நம்மிடத்தில் அன்புகூர்ந்ததுபோல [6]நீங்களும் அன்புள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்.

௩ ¶ அன்றியும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடியே, [7]வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும் அல்லது பொருளாசையும் [8]உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது.

௪ [9]வம்பும் புத்தியீனமான பேச்சும் பரியாசமும் அப்படியே இருக்கப்படாது; [10]அவைகள் தகாதவைகள்; தோத்திரம் செய்தலே தகும்.

௫ [11]வேசித்தனக்காரன், அல்லது அசுத்தவான் அல்லது விக்கிரக [12]ஆராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் ஒருவனும் பராபரனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே [13]சுதந்தரத்தை அடைவதில்லை என்று அறிந்திருக்கிறீர்களே.

௬ இப்படிப்பட்டவைகளுக்காகக் [14]கீழ்ப்படாமையுள்ள* பிள்ளைகள்மேலே [15]பராபரனுடைய கோபாக்கினை வருவதால், [16]ஒருவனும் உங்களை வீணான வார்த்தைகளால் வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து,

௭ அவர்களுக்குப் பங்காளிகள் ஆகாதிருப்பீர்களாக.

௮ [17]முற்காலத்திலே அந்தகாரமுள்ளவர்களாய் இருந்தீர்கள்; [18]இப்பொழுது கர்த்தரைக்கொண்டு ஒளியுள்ளவர்களாயிருக்கிறீர்கள்; [19]ஒளியின் பிள்ளைகளுக்கு ஏற்றதாய் நடந்துகொள்ளுங்கள்.

௯ [20]ஆவியின் கனி சகலவித நற்குணமும் நீதியும் சத்தியமுமானது.

௰ [21]கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் ஆராய்ந்து பார்த்து,

௰௧ [22]பலனற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு [23]ஐக்கமாயிராமல், [24]அவைகளைக் கடிந்துகொள்வீர்களாக.

௰௨ [25]அவர்களால் ஒளிப்பிடமாய்ச் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.

௰௩ [26]அவைகள் எல்லாம் ஒளியினால் கடிந்துகொள்ளப்பட்டு† வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகின்றவை எல்லாம் ஒளியாய் இருக்கின்றது.

௰௪ ஆதலால் [27]தூங்குகிற நீ விழித்து, [28]மரித்தோரைவிட்டு எழுந்திரு; அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் என்று சொல்லியிருக்கின்றது.‡

௰௫ ¶ ஆனபடியினாலே நீங்கள் ஞானம் அற்றவர்களைப்போல அல்ல, ஞானமுள்ளவர்களைப்போ

கி. பி. ௬௪.

1 ௨ கொரி ௨. ௰; கொலோ ௩. ௰௨,௰௩
2 மத் ௬. ௰௪; மாற் ௰௧. ௨௫
3 மத் ௫. ௪௫, ௪௮; லூக் ௬. ௩௬; எபே ௪. ௩௨.
4 கலா ௧. ௪; ௨. ௨௰; எபி ௭. ௨௭; ௯. ௰௪, ௨௬; ௰. ௰, ௰௨; ௧ யோ ௩. ௰௬
5 ௧ மோ ௮. ௨௧; ௩ மோ ௧. ௯; ௨ கொரி ௨. ௰௫
6 யோவா ௰௩. ௩௪; ௰௫. ௰௨; ௧ தெச ௪. ௯; ௧ யோ ௩. ௰௧, ௨௩; ௪. ௨௧
7 உரோ ௯. ௰௩; ௧ கொரி. ௬. ௰௮; ௨ கொரி ௰௨. ௨௧; எபே ௪. ௰௯, ௨௰; கொலோ ௩. ௫; ௧ தெச ௪. ௩-௭
8 ௧ கொரி ௫. ௧
9 மத். ௰௨. ௩௫; எபே ௪. ௨௯
10 உரோ ௧. ௨௮
11 ௧ கொரி ௬. ௯; கலா ௫. ௰௯,௨௧
12 கொலோ ௩. ௫; ௧ தீமோ ௬. ௰௭
13 கலா ௫. ௨௧; வெளி ௨௨. ௰௫
14 எபே ௨. ௨
* அல்லது அவிசுவாசமுள்ள,
கொலோ ௩. ௬
15 உரோ ௧. ௰௮
16 எரே ௨௯. ௮; மத் ௨௪. ௪; கொலோ ௨. ௪, ௮, ௰௮; ௨ தெச ௨. ௩
17 ஏசா ௯. ௨; மத் ௪. ௰௬; அப் ௨௬. ௰௮; உரோ. ௧. ௨௧.

எபே ௨. ௰௧,௰௨; ௪. ௰௮; தீத் ௩. ௩. ௧ பே ௨. ௯ —18 யோவா ௮. ௰௨; ௰௨. ௪௬. ௨ கொரி ௩. ௰௮; ௪. ௬. ௧ தெச ௫. ௫
௧ யோ ௨. ௯ —19 லூக் ௰௬. ௮; யோவா ௰௨. ௩௬ —20 கலா ௫. ௨௨ —21 உரோ ௰௨. ௨; பிலி ௧. ௰. ௧ தெச ௫. ௨௧; ௧ தீமோ ௨. ௩
22 உரோ ௬. ௨௧; ௰௩. ௰௨; கலா ௬. ௮ — 23 ௧ கொரி ௫. ௯,௰௧; ௰. ௨௰; ௨ கொரி ௬. ௰௪; ௨ தெச ௩. ௬,௰௪ — 24 ௩ மோ ௰௯. ௰௭; ௧ தீமோ. ௫. ௨௰ — 25 உரோ. ௧. ௨௪,௨௬ ௫ வச — 26 யோவா ௩. ௨௰,௨௧; எபி ௪. ௰௩ —† அல்லது காணப்படு
27 ஏசா. ௬௰. ௧; உரோ ௰௩. ௰௧,௰௨; ௧ கொரி ௰௫. ௩௪. ௧ தெச ௫. ௬ —28 யோவா. ௫. ௨௫. உரோ. ௬. ௪, ௫; எபே ௨. ௫
கொலோ. ௩. ௧ —‡ அல்லது சொல்லியிருக்கிறார்

441

லவே [1]எச்சரிக்கையாய் நடந்து கொள்ளப்பார்த்து,

௰௬ நாட்கள் [2]பொல்லாங்குள்ளவைகளாயிருக்கிறபடியால், [3]காலத்தை வாங்கிக்கொள்ளுங்கள்.

௰௭ ஆகையால் [4]நீங்கள் மதியற்றவர்கள் ஆகாமல், [5]கர்த்தருடைய சித்தம் இன்னதென்று [6]அறிந்திருக்கிறவர்களாகி,

௰௮ கெட்ட மார்க்கத்திற்கு ஏதுவாய்த் [7]திராட்சஇரசத்தால் வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறையப்பட்டு,

௰௯ [8]சங்கீதங்களாலும் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி,

௨௰ [9]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் [10]பிதாவாகிய பராபரனைத் தோத்திரித்து,

௨௧ தேவபயத்தோடே [11]ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

௨௨ ¶ [12]ஸ்திரிகளே, [13]கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, நீங்கள் உங்கள் சுயபுருஷருக்குக் கீழ்ப்படுங்கள்.

௨௩ [14]கிறிஸ்து (தமது) சபையாகிய சரீரத்திற்குத் தலையாயும் [15]இரட்சகராயும் இருக்கிறதுபோல, [16]புருஷனானவனும் (தன்) மனைவிக்குத் தலையாயிருக்கிறான்.

௨௪ ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுகிறதுபோல, மனைவிகளும் [17]எக்காரியத்திலேயும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படவேண்டும்.

௨௫ ¶ [18]புருஷர்களே, கிறிஸ்து தமது சபையில் அன்புகூர்ந்து, [19]அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததுபோல, நீங்களும் உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கடவீர்கள்.

௨௬ அவர் தமது சபையை மாசு திரை முதலானவைகளில் ஒன்றும் இல்லாமல் [20]பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ளதாகத் [21]தமக்குமுன் நிறுத்திக்கொள்ளும் பொருட்டாக,

௨௭ அதைப் பரிசுத்தமாக்கி, [22]திவ்விய வசனத்தோடே கூடிய [23]தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கும்படிக்கே அப்படிச் செய்தார்.

௨௮ அதுபோலப் புருஷர்களும் தங்கள் சொந்தச் சரீரங்களைப்போல, தங்களுடைய மனைவிகளில் அன்புகூரக் கடனாளிகளாய் இருக்கிறார்கள்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னிலே அன்புகூருகிறான்.

௨௯ தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனும் இல்லையே, கர்த்தர் (தமது) சபையைச் செய்கிறதுபோல, அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.

௩௰ [24]அவர் தமது சரீரத்திற்கு நாம் அவயவங்களுமாய், தமது மாம்சத்தையும் எலும்புகளையும் சேர்ந்தவர்களுமாய் இருக்கிறபடியால், (அப்படியே செய்கிறார்.)

௩௧ [25]அதினாலே மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியுடனே இசைந்து, இருவரும் [26]ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.

௩௨ இது மிகுந்த இரகசியப் பொருள் உள்ளது, கிறிஸ்துவையும் சபையையும் குறித்தே இப்படிச் சொல்லுகிறேன்.

௩௩ அந்தப்படி [27]நீங்களும் அவனவன் தன்னில் அன்புகூருகிறதுபோல, தன்தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவீர்கள்; மனைவியானவள் புருஷனுக்குப் [28]பயந்திருக்கக்கடவள்.

கி. பி. ௬௪.

1 கொலோ. ௪ ௫
2 பிர. ௰௧ ௨. ௰௨ ௧ யோவா ௰௨ ௩௫ எபே ௬ ௰௩
3 கலா ௫ ௰ கொலோ ௪ ௫
4 கொலோ ௪ ௫
5 ௧ தெச ௪ ௩ ௫ ௰௮.
6 உரோ ௰௨ ௨
7 லூக் ௨௧ ௩௪, ௩௫ ஏசா ௫ ௰௧ ௨௨ லூக் ௨௧ ௩௪
8 அப ௰௬ ௨௫ ௧ கொரி ௰௪ ௨௬ கொலோ ௩ ௰௬ யாக ௫ ௰௩
9 எபி ௰௩ ௰௫ ௧ பே ௨ ௫ ௪ ௰௧
10 சங். ௯௪ ௧ ஏசா ௬௩ ௭ கொலோ ௩ ௰௭ ௧ தெச ௫ ௰௮. ௨ தெச ௧ ௩
11 பிலி ௨ ௩ ௧ பே ௫ ௫
12 ௧ மோ ௩ ௰௬ ௧ கொரி ௰௪ ௩௪ கொலோ ௩ ௰௮ தீத ௨ ௫. ௧ பே ௩ ௧
13 எபே ௬ ௫
14 எபே ௧ ௨௨ ௨௩ கொலோ ௧ ௰௮
15 எபே ௧ ௨௩
16 ௧ கொரி ௰௧ ௩
17 கொலோ ௩ ௨௰, ௨௨ தீத ௨ ௯
18 கொலோ. ௩ ௰௯ ௧ பே ௩ ௭
19 அப ௨௰ ௨௮ கலா ௧ ௪ ௨ ௨௰ வச
20 எபே ௧ ௪
21 ௨ கொரி ௰௧ ௨. கொலோ. ௧ ௨௨
22 யோவா ௰௫ ௩

23 யோவா ௩ ௫. தீத் ௩ ௫ எபி ௰. ௨௨. ௧ யோ ௫ ௬ — 24 ௧ மோ ௨ ௨௩ உரோ ௰௨ ௫ ௧ கொரி ௬ ௰௫ ௰௨ ௨௭
25 ௧ மோ ௨ ௨௪ மத் ௰௯ ௫ மாற் ௰ ௭,௮ — 26 ௧ கொரி ௬ ௰௬ — 27 ௨௫ வச கொலோ ௩ ௰௯ — 28 ௧ பே ௩ ௬

௬. அதிகாரம்.

௧ தாயதகப்பன்மாருக்குப் பிள்ளைகள் செலுத்தவேண்டிய கடமைகளையும், ௫ பணிவிடைக்காரர் எசமான்களுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளையும் காண்பித்து, ௰ நம்முடைய சீவகாலம் போராட்டக்காலமென்றும், ௰௨ நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, ஆத்துமசத்துருக்களோடும் போராடுகிறோமென்றும், ௰௧ கிறிஸ்தவன் தரித்துக்கொள்ளவேண்டிய சர்வாயுதவருக்கம் இன்னதென்றும், ௰௮ அதை இவ்விதமாய்க் கையாளவேண்டுமென்றும் சொல்லி, ௨௧ தீகிக்குவை அவர்கள் தயவுக்கு ஒப்புவித்தது.

பிள்ளைகளே, கர்த்தருக்குள் உங்களைப் பெற்றவர்களுக்குக் [1]கீழ்ப்படுங்கள்; அதுவே நியாயமாயிருக்கிறது.

௨ உனக்கு நன்மை உண்டாயிருக்கும்படிக்கும், பூமியிலே உன் வாழ்நாள் மிகுதியாயிருக்கும்படிக்கும்,

௩ [2]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாய் இருக்கிறது.

௪ ¶ [3]தகப்பன்மார்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் உண்டாக்காமல், [4]கர்த்தருக்கு ஏற்ற கண்டிப்போடும் போதகத்தோடும் அவர்களை வளர்க்கக்கடவீர்கள்

௫ ¶ [5]வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குச் செய்கிறதுபோல, மாம்சத்தின்படி உங்களுக்கு எசமான்களானவர்களுக்குப் [6]பயமும் நடுக்கமும் [7]கபடம் இல்லாமையும் உள்ள இருதயத்தோடே கீழடங்குவீர்களாக.

௬ மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்கள்போல, (எசமான்கள்) [8][illegible]ணும்பொழுதுமாத்திரம் ஊழியம்செய்யாமல்,

௭ கிறிஸ்துவின் ஊழியக்காரர்போல, மனப்பூர்வமாய்ப் பராபரனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாய் மனிதருக்கு அல்ல, கர்த்தாவுக்கே ஊழியம்செய்கிறவர்களாய் நல்ல மனதோடே அப்படிச் செய்து,

௮ [9]அடிமையானவனானாலும், சுயாதீனம் உள்ளவனானாலும், [10]அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான் என்று அறிவீர்களாக.

௯ ¶ [11]எசமான்களாகிய நீங்களும் அவர்களுக்கு அப்படியே செய்து, [12]உங்களுக்கும்* பரமண்டலங்களிலே எசமான் இருக்கிறார் என்றும் [13]அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, [14]மிரட்டுதலை விட்டுவிடுவீர்களாக †

௰ ¶ கடைசியிலே என் சகோதரரே, கர்த்தரைக்கொண்டும் அவருடைய [15]மிகுந்த வல்லமையைக்கொண்டும் பலத்திருங்கள்.

௰௧ அல்லாமலும் இரத்தத்தோடும் [16]மாம்சத்தோடும் அல்ல,‡ ஆகாச§ மண்டலத்திலுள்ள [17]துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் [18]இவ்வுலகத்தின் இருளை ஆளுகிறவர்களோடும் மற்றப் பொல்லாத ஆவிகளோடும்|| நாம் போராடுகிறவர்களாய் இருக்கிறபடியால்,

௰௨ பசாசினுடைய தந்திரமான வகைபாடுகளைப் பலமாய் விரோதித்து நிற்கும்படிக்கு, [19]திவ்விய சர்வாயுதவருக்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்.

௰௩ [20]பொல்லாத காலத்திலே நீங்கள் அவைகளை விரோதித்திருக்கவும், சகலத்தையும் முடித்துப் ¶ போட்ட பின்பு நிலைநிற்கவும் திராணி இருக்கும்படிக்கு, [21]திவ்விய சர்வாயுதவருக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

௰௪ என்னவெனில், [22]சத்தியம் என்னும் கச்சையை உங்கள்

கி. பி. ௬௪.

1 லூக் ௨. ௫௧. கொலோ ௩. ௨௰.
2 ௨ மோ ௨௰. ௰௨. ௫ மோ ௫. ௰௬. ௨௭. ௰௬. எரே ௩௫. ௰௮. எசே ௨௨. ௭. மல்கி ௧. ௬. மத் ௰௫. ௪. மாற் ௭. ௰.
3 கொலோ ௩. ௨௧.
4 ௧ மோ ௰௮. ௰௯. ௫ மோ ௪. ௯, ௬. ௭, ௨௰. ௰௧. ௰௯. சங். ௭௮. ௪. வாக். ௰௯. ௰௮. ௨௨. ௬. ௨௯. ௰௭.
5 கொலோ ௩. ௨௨. ௧ தீமோ ௬. ௧. தீத். ௨. ௯. ௧ பே ௨. ௰௮.
6 ௨ கொரி ௭. ௰௫. பிலி ௨. ௰௨.
7 ௧ நாளா ௨௯. ௰௭. கொலோ ௩. ௨௨.
8 கொலோ ௩. ௨௨, ௨௩.
9 கலா ௩. ௨௮. கொலோ ௩. ௰௧.
10 உரோ ௨. ௯. ௨ கொரி ௫. ௰. கொலோ ௩. ௨௪.
11 கொலோ ௪. ௧.
12 யோவா ௰௩. ௰௩. ௧ கொரி ௭. ௨௨.
* சில பிரதிகளில், உங்களுக்கும் எங்களுக்கும்
13 உரோ ௨. ௰௧. கொலோ. ௩. ௨௫.
14 ௩ மோ ௨௫. ௪௩.
† அல்லது தணிப்பீர்களாக
15 எபே ௧. ௰௯. ௩. ௰௬. கொலோ ௧. ௰௧.

---

16 மத் ௰௬. ௰௭. ௧ கொரி ௰௫. ௫௰. —‡ அல்லது மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல.—§ அல்லது உயர்ந்த; எபே ௧. ௩. 17 உரோ ௮. ௩௮. எபே ௧. ௨௧. கொலோ ௨. ௰௫. —18 லூக் ௨௨. ௫௩. யோவா. ௰௨. ௩௧. ௰௪. ௩௰. எபே ௨. ௨. கொலோ ௧. ௰௩. —|| அல்லது ஆவிக்குரிய பொல்லாப்புகளோடும் —19 உரோ ௰௩. ௰௨. ௨ கொரி ௬. ௭. ௰. ௪, ௧ தெச ௫. ௮. —20 எபே ௫. ௰௬. ¶ அல்லது மேற்கொண்டு —21 ௨ கொரி ௬. ௭. ௰. ௪ —22 ஏசா ௰௧. ௫. லூக் ௰௨. ௩௫. ௧ பே ௧. ௰௩.

அரைகளில்சுற்றிக்கட்டி [1]நீதிஎன்னும் மார்பின் கவசததை உடுத்தி,

௰௫ [2]சமாதானததை உண்டாக்குகிற சுவிசேஷத்தை அறிவிக்க எத்தனமாயிருக்குதலைப் (பாதஇரட்சையைப்போல,) உங்கள் கால்களிலே தொடுத்து,

௰௬ பொல்லாஙகன் எய்யும் அக்கினி அம்புகளை எல்லாம் நீங்கள் அவித்துப்போடத்தக்க [3]விசுவாசம் என்னும் கேடகத்தைப பிரதான முக்கியமாய்ப் பிடித்துக்கொண்டு நில்லுங்கள்.

௰௭ மேலும் [4]இரட்சண்ணியம் என்னும் தலையைக் காக்கும் மூடியையும் [5]தேவவசனமாகிய ஆவியின் கட்கததையும் நீங்கள் எற்றுககொண்டு,

௰௮ [6]ஆவியினாலே சம்பூரணமான செபமும் விண்ணப்பமும் பண்ணி, எபபொழுதும் வேண்டிக்கொண்டு, இதற்காக மிகுந்த மனஉறுதியோடும் [7]சகல பரிசுத்தவான்களுக்காகவும் விண்ணப்பம் பண்ணுதலோடும் [8]விழிததுக்கொள்வீர்களாக.

௰௯ நான் [9]தயிரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு [10]வசனம் எனக்குக் கொடுக்கபபடும்படியாயும்,

௨௰ சுவிசேஷத்திற்காகச் [11]சங்கிலியால் கட்டப்பட்டு,* [12]தானாதிபதியாயிருக்கிற நான் அதைச்† சொல்லவேண்டியபடி [13]தயிரியமாய்ச் சொல்லும்படியாயும், எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுவீர்களாக.

௨௧ ¶ அன்றியும் [14]எனக்குச் சம்பவித்தவைகளையும் என்னுடைய செய்கைகளையும் நீங்கள் அறியும்படிக்கு, அவைகளை எல்லாம் (நமக்குப்) பிரிய சகோதரனுமாய்க் கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரனுமாய் இருக்கிற [15]தீகிக்கு என்பவன் உஙகளுக்கு அறிவிபபான்.

௨௨ நீங்கள் எங்கள் செய்திகளை அறியும்படியாயும் அவன் உங்கள் இருதயங்களுககு ஆறுதல் செய்யும்படியாயுமே [16]அவனை உஙகளிடத்தில் அனுபபினேன்.

௨௩ ¶ பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் [17]சமாதானமும் விசுவாசத்தோடே அன்பும் சகோதரருக்கு உண்டாகக்கடவது.

௨௪ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸதுவினிடத்தில் [18]உணமையாய்‡ அன்புகூருகிற யாவரோடும் கிருபை இருப்பதாக.—ஆமன்.

கி. பி. ௬௪.

1 ஏசா ௫௯ ௰௭ ௨ கொரி ௬.௭ ௧ தெச ௫ ௮
2 ஏசா ௫௨ ௭ ௨ ரோம ௰௫
3 ௧ யோ ௫ ௪
4 ஏசா ௫௯ ௰௭ ௧ தெச ௫ ௮
5 எபி ௪ ௰௨ வெளி ௧ ௰௬ ௨ ௰௬ ௰௯ ௰௫
6 லூக் ௰௮ ௧ ௨ ரோ ௰௨ ௰௨ கொலோ ௪ ௨ ௧ தெச ௫ ௰௭
7 எபே ௧ ௰௬ பிலி ௧ ௪ ௧ தீமோ ௨ ௧
8 மத் ௨௬ ௪௧ மாற ௰௩ ௩௩
9 ௨ கொரி ௩ ௰௨
10 அப ௪ ௨௯ கொலோ. ௪ ௩ ௨ தெச ௩ ௧
11 அப. ௨௬ ௨௯ ௨௮ ௨௰ எபே ௩ ௧ பிலி ௧ ௭. ௰௩, ௰௪ ௨ தீமோ ௧ ௰௬ ௨ ௯ பிலே ௰

* அலலது கட்டுகளில

12 ௨ கொரி ௫ ௨௰

† அல்லது அதில்

13 அப ௨௮ ௩௧ பிலி ௧ ௨௰ ௧ தெச ௨ ௨

---

14 கொலோ. ௪ ௭ — 15 அப் ௨௰ ௪ ௨. தீமோ ௪ ௰௨ தீத ௩ ௰௨ — 16 கொலோ ௪ ௮ — 17 ௧ பே ௫ ௰௪
18 தீத் ௨.௭ — ‡ அலலது அழிவில்லாமையாய

PHILIPPIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

பிலிப்பியருக்கு எழுதின

நிருபம்.

௧ அதிகாரம்.

௧ பவுல் பிலிப்பியர் தந்த விசுவாசத்தின் கனிகளுக்காகவும், தன் பாடுகளில் அவர்களும் உடந்தையாயிருந்ததற்காகவும், பராபரனுக்குத் தோத்திரஞ் செலுத்தி, அவர்களுக்கு அன்பு பாராட்டி, ௯ அவர்கள் நாடோறும் கிருபையிலே பெருகும்படி வேண்டிக்கொண்டு, ௰௨ தனக்கு உரோமாவிலே உண்டான துன்பங்களினாலே கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்துக்கு உண்டான நன்மை இதுவென்றும், ௨௰ தான் செத்தாலும், பிழைத்தாலும் கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்துவேனென்றும் காண்பித்து, ௨௭ அவர்கள் ஒருமைப்பட்டிருக்கவும், ௨௮ துன்பத்தில் உறுதியாய் நிற்கவும் புத்திசொன்னது.

இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும் பிலிப்புப்பட்டணத்திலே [1]கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிகளுக்கும் ஊழியக்காரருக்கும் எழுதுகிறதாவது:

௨ நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் [2]கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ ¶ [3]சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட நாள்முதலாக இதுவரைக்கும் நீங்கள் அதற்கு ஐக்கமானவர்கள் ஆனபடியால்,

௪ நான் உங்களை நினைத்து,* உங்கள் எல்லாருக்காகவும் விண்ணப்பம்பண்ணும்பொழுதெல்லாம் [4]என் பராபரனைத் தோத்திரிக்கிறேன்.

௫ நான் உங்களுக்காகச் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி,

௬ உங்களிடத்தில் [5]நற்கிரியையைத் தொடங்கினவர் [6]இயேசுக்கிறிஸ்துவினுடைய நாள்பரியந்தம் அதை முடிய நடத்திவருவார்† என்று நம்பியிருக்கிறேன்.

௭ [7]நான் கட்டப்பட்டுச் [8]சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி, அதைத் திட்டப்படுத்திக்கொண்டுவருகையில், நீங்கள் அனைவரும் [9]உங்கள் இருதயத்திலே என்னைத்‡ தரித்துக்கொண்டு, என்னோடேகூடக் [10]கிருபையில்§ பங்குள்ளவர்களாய் இருக்கிறபடியினாலே உங்கள் எல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது நியாயமாய் இருக்கின்றது.

௮ அந்தப்படி இயேசுக்கிறிஸ்துவினுடைய உருக்கமான அன்பைப்போல உள்ள அன்பினாலே நான் உங்கள் எல்லார்மேலும் [11]மிகவும் வாஞ்சையாய் இருக்கிறேன் என்பதைக்குறித்துப் [12]பரா

கி. பி. ௯௪.

1 ௧ கொரி ௧ ௨.
2 உரோ ௧ ௭
௨ கொரி ௧ ௨.
௧ பே ௧ ௨.
3 உரோ ௰௨
௰௩ ௰௫ ௨௯
௨ கொரி அ ௧
பிலி ௪ ௰௪
௰௫
* அல்லது உங்களைக்குறித்துக்கேள்விப்பட்டு
4 உரோ ௧ அ
௯ ௧ கொரி ௧
௪ எபே ௧ ௰௫,
௰௬ கொலோ
௧ ௩ ௧ தெச
௧ ௨ ௨ தெச
௧ ௩
5 யோவா ௯
௨௯ ௧ தெச
௧ ௩
6 ௰ வச
† அல்லது நிறைவேற்றுவார்
7 எபே ௩ ௧ ௬
௨௰ கொலோ
௪ ௩, ௰௮
௨ தீமோ ௧ ௮
8 ௰ வச
9 ௨ கொரி ௩ ௨
௭ ௩
‡ அல்லது உங்களை நான் என் இருதயத்தில்
10 பிலி ௪.௰௪.

---

§ அல்லது எனக்குக் கிடைத்த கிருபையில் —11 பிலி ௨ ௨௬ ௪ ௧ —12 உரோ. ௧ ௯,
௧௬ கலா ௧.௨௰ ௧ தெச ௨ ௫

பரனே எனக்குச் சாட்சியாய் இருக்கிறார்.

௯ [1]மேலும், வித்தியாசமான*வைகளை வகையறுப்பதற்கு† ஏதுவாக நீங்கள் அறிவினாலும் சகலவித மெய்யுணர்வினாலும்‡ [2]அதிகம் அதிகமான அன்புள்ளவர்களாயும்,

௰ [3]கிறிஸ்துவின் நாள்வரைக்கும் [4]உண்மையும் வழுவில்லாமையும் உள்ளவர்களாயும்,

௰௧ [5]பராபரனுக்குத் துதியும் புகழ்ச்சியும் உண்டாக, [6]இயேசுக்கிறிஸ்துவினாலே வருகிற நீதியாகிய கனியினால் நிறைந்தவர்களாயும் இருக்கும்படிக்குச் செபம்பண்ணுகிறேன்.

௰௨ ¶ அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறது என்னவெனில், எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் அதிக பிரபலமாகும்படிக்கு ஏதுவாய் இருந்தன.

௰௩ எப்படியென்றால், நான் கிறிஸ்துவின்நிமித்தம்§ கட்டப்பட்டிருக்கிறது [7]இராச அரண்மனையில் எங்கும் உள்ளவர்களுக்கும்|| மற்ற யாவருக்கும்¶ வெளியரங்கமானதும் அல்லாமல்,

௰௪ கர்த்தரைப்பற்றிய சகோதரரில் அநேகமானவர்கள் நான் கட்டப்பட்டிருந்ததினாலே திடன்கொண்டு, (திவ்விய) வசனத்தைப் பயமில்லாமல் சொல்லும்படி, அதிக துணிவுள்ளவர்கள் ஆனார்கள்.

௰௫ சிலர் பொறாமையினாலும் [8]விரோதத்தினாலும், சிலர் நல்ல மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்து வருகிறார்கள்.

௰௬ இவர்கள் சுவிசேஷத்திற்காக [9]நான் நியாயம் பேசிக்கொள்ளும்படி வைக்கப்பட்டிருக்கிறதை அறிந்து, அன்பினாலே அப்படிச் செய்கிறார்கள்.

௰௭ அவர்கள் நான் கட்டப்பட்டதினால் இருக்கிற உபத்திரவத்தோடே உபத்திரவத்தைக் கூட்டலாம் என்று எண்ணி உண்மையில்லாமல், விரோதத்தினாலே கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள்.

௰௮ இதினால் என்ன ஆயிற்று? வஞ்சகத்தினாலாவது உண்மையினாலாவது பிரசங்கித்தாலும், கிறிஸ்துவே அறிவிக்கப்படுகிறார்; அதினாலே சந்தோஷப்படுகிறேன்; இன்னும் சந்தோஷப்படுவேன்.

௰௯ [10]நான் ஒன்றினாலும் வெட்கப்படாமல் [11]மிகுந்த தயிரியமாய் இருந்து, எப்பொழுதும்போல இப்பொழுதும் சீவனாலாகிலும் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே புகழப்படுவார் என்று நான் மிகவும் [12]ஆசைப்பட்டு நம்பிக்கொள்ளுகிறபடியே,

௨௰ அந்தப் பிரசங்கம் [13]உங்கள் வேண்டுதலினாலும் [14]இயேசுக்கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியும் என்று அறிந்திருக்கிறபடியால், (அப்படிச் சந்தோஷப்படுகிறேன்.)

௨௧ ¶ கிறிஸ்து எனக்குச் சீவனாயிருக்கிறாரே, சாவும் எனக்கு ஆதாயமாயிருக்கும்.

௨௨ ஆகிலும், தேகத்தில் பிழைக்கிறதினாலே என் கிரியைக்குப் பலன் உண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியாது.

௨௩ [15]அவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; [16]பிரிந்துபோய், கிறிஸ்துவினிடத்தில் இருக்கும்படி மிகவும் விரும்புகிறேன்; அது மிகவும் அதிக நன்மையாயும் இருக்குமே

௨௪ அப்படியிருந்தும், தேகத்தில் இங்கே தரித்திருக்கிறது உங்களுக்காக அதிக அவசியமாய் இருக்கிறது.

௨௫ [17]இதை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறபடியால், நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால், நீங்கள் என்னைக்குறித்துக்

கி. பி. ௬௪

1 உரோ ௨. ௰௮. ௰௨. ௨ எபே ௧௰
* அல்லது மேன்மையான
† அல்லது அங்கீகரிப்பதற்கு
‡ அல்லது விவேகத்தினாலும்
2 ௧ தெச ௩. ௰௨. பிலே ௯
3 ௧ கொரி ௧. ௮
4 அப ௨௪. ௰௬. ௧ தெச ௫. ௰௩. ௬ ௨௩
5 யோவா ௰௫. ௮. எபே ௧. ௰௨, ௰௪
6 யோவா ௰௫. ௪, ௫. எபே ௨. ௰. கொலோ ௧. ௬
§ அல்லது கிறிஸ்துவுக்குள்
7 பிலி ௪. ௨௨
|| அல்லது சீஷருடைய ஸ்தானங்களிலும்
¶ அல்லது மற்ற இடங்களிலும்
8 பிலி ௨. ௩ [illegible]
10 உரோ ௫. ௫
11 எபே ௬. ௰௯, ௨௰
12 உரோ ௮. ௰௯
13 ௨ கொரி ௧. ௰௧
14 உரோ ௮. ௯
15 ௨ கொரி ௫. ௮
16 ௨ தீமோ ௪. ௬
17 பிலி ௨. ௨௪

கிறிஸ்து இயேசுவினாலே மேன்மைபாராட்டிக்கொள்ளுதல்பெருகும்பொருட்டாக,

௨௬ விசுவாசத்தில் நீங்கள் சம்பூரணமும் [1]சந்தோஷமும் உள்ளவர்கள் ஆகும்படிக்கு, நான் பின்னும் (உயிர்) தரித்துக்கொண்டு, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேன் என்று அறிந்திருக்கிறேன்.

௨௭ ¶ எப்படியும் நான் வந்து, உங்களைக் கண்டாலும், உங்களுக்குத் தூரமாய் இருந்தாலும், [2]நீங்கள் ஒரே ஆவியினாலே உறுதியாய் நின்று, [3]ஒரே ஆத்துமாவினாலே [4]சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப் போராட்டம் பண்ணி எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்கள் என்று உங்களைக்குறித்து நான் கேட்கும்படிக்கு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமாகமாத்திரம் [5]நடந்துகொள்ளக்கடவீர்கள்.

௨௮ [6]அதுவே அவர்கள் கெட்டுப்போகுதற்கும் [7]நீங்கள் இரட்சிக்கப்படுதற்கும் அடையாளமாய் இருக்கின்றது; அதுவும் பராபரனுடைய செயல்.

௨௯ அவராலே நீங்கள் கிறிஸ்துவின்மேலே [8]விசுவாசமாய் இருக்கிறதற்குமாத்திரமல்ல, முன்னே [9]என்னிடத்திலே நீங்கள் கண்டதுமாய் இப்பொழுது எனக்கு உண்டென்று கேள்விப்படுகிறதுமாய் இருக்கிற [10]போராட்டமே உங்களுக்கும் உண்டாயிருக்கிறதால்,

௩௰ [11]அவர்நிமித்தம் பாடுபடுகிறதற்கும் அருள்பெற்றீர்களே.

௨. அதிகாரம்.

௧ அவர்கள் ஏகசிந்தையுள்ளவர்களும், தாழ்மையுள்ள மனதுள்ளவர்களுமாயிருந்து, தாழ்மைப்பட்டு மேன்மையடைந்த கிறிஸ்துவைப் பின்பற்றவும், ௰௨ இந்தச் சீர்கெட்ட லோகத்தில் சுடர்களைப்போலப் பிரகாசிக்கவும், ௰௬ பராபரனுக்குச் செலுத்தப்படும்படி ஆயத்தமாயிருக்கிற அவர்களின் அப்போஸ்தலனாகிய தனக்கு ஆறுதலாயிருக்கவும், இரட்சிப்பின் பாதையிலே எச்சரிக்கையாய் நடக்கவும் புத்திசொல்லி, ௰௯ அவர்களிடத்தில் தான அனுப்புகிற தீமோத்தேயுவையும், ௨௫ அனுப்பின எப்பாப்பிரோதீத்துவையும் மெச்சிக்கொண்டது.

ஆனதால், கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே சந்தோஷப்படுதலும், [12]ஆவியோடே ஐக்கமும், [13]உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்,

௨ நீங்கள் ஒரேவிதமாய்ச் சிந்தனைபண்ணிக்கொண்டு, ஒரேவிதமான அன்புள்ளவர்களாய் இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே [14]சிந்தித்துக்கொண்டு, இப்படி [15]என் சந்தோஷத்தை நிறைவேற்றுவீர்களாக.

௩ [16]ஒன்றையும் நீங்கள் வாதத்தினாலே அல்லது வீண்பெருமையினாலே செய்யாமல், [17]மனத்தாழ்மையினாலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்கள் என்று எண்ணிக்கொள்வீர்களாக.

௪ [18]அவரவர் தங்களுக்கு ஆனவைகளைமாத்திரமல்ல, பிறருக்கு ஆனவைகளையும் நோக்குவீர்களாக.

௫ ¶ [19]கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே, உங்களிலும் இருக்கக்கடவது.

௬ அவர் [20]பராபரனுடைய சாயலாயிருந்தும், [21]பராபரனுக்கு ஒப்பாயிருக்குதலைக் கொள்ளையிடப்பட்ட உடைமை என்று எண்ணாமல்,

௭ [22]தம்மைத்தாமே வெறுமையாக்கி, [23]அடிமையின் உருவம் எடுத்து, [24]மனிதர் சாயலாகப்* பிறந்ததும் அல்லாமல்,

௮ அவர் மனிதரூபமாகக் காணப்பட்ட பின்பு, [25]மரணத்திற்குத் தம்மைத் தாழ்த்தி, சிலுவையின் மரணத்திற்கே கீழ்ப்பட்டவர் ஆனார்.

கி. பி ௬௪.

1 ௨ கொரி ௧ ௰௪ ௫ ௰௨
2 பிலி ௪ ௧
3 ௧ கொரி ௧ ௰
4 யூதா ௩
5 எபே ௪ ௧ கொலோ ௧ ௰ ௧ தெச ௨ ௰௨ ௪ ௧
6 ௨ தெச ௧ ௫
7 உரோ. ௮ ௰௭ ௨ தீமோ ௨, ௰௧
8 எபே ௨ ௮
9 அப ௰௬ ௰௯ ழ ௧ தெச ௨ ௨.
10 கொலோ ௨ ௧
11 அப ௫ ௪௧ உரோ ௫ ௩
12 ௨ கொரி ௰௩ ௰௪
13 கொலோ ௩ ௰௨
14 உரோ ௰௨ ௰௬ ௰௫ ௫ ௧ கொரி ௧ ௰ ௨ கொரி ௰௩ ௰௧ பிலி ௧ ௨௭ ௩ ௰௬ ௪ ௨ ௧ பே ௩ ௮
15 யோவா ௩. ௨௯
16 கலா ௫ ௨௬ பிலி ௧ ௰௫,௰௬ யாக். ௩ ௰௪
17 உரோ ௰௨ ௰ எபே ௫ ௨௧ ௧ பே ௫.௫
18 ௧ கொரி ௰ ௨௪,௩௩ ௰௩ ௫
19 மத். ௰௧ ௨௯ யோவா ௰௩ ௰௫ ௧ பே ௨ ௨௧ ௧ யோ ௨ ௬
20 யோவா ௧ ௧, ௨ ௰௭ ௫. ௨ கொரி ௪ ௪ கொலோ ௧ ௰௫ எபி ௧. ௩.
21 யோவா ௫ ௰௮ ௰. ௩௩
22 சங் ௨௨ ௬ ஏசா ௫௩ ௩ தானி. ௯ ௨௬ மாற ௯ ௰௨ உரோ. ௰௫. ௩
23 ஏசா. ௪௨. ௧ ௪௯. ௩, ௬ ௫௨ ௰௩ ௫௩ ௰௧

ஏசே ௩௪ ௨௩, ௨௪ சகரி ௩ ௮ மத் ௨௰ ௨௮ லூக். ௨௨ ௨௭.--24 யோவா. ௧. ௰௪ உரோ ௧ ௩ ௮ ௩ கலா ௪ ௪ எபி ௨ ௰௪,௰௭.

* அல்லது மனித இயல்பாக --25 மத் ௨௬ ௩௯, ௪௨ யோவா ௰ ௰௮. எபி ௫.௮ ௰௨.௨

௯ அதினாலே பராபரனும் [1]அவரை மிகவும் உயர்த்தி,

௰ பரமண்டலத்திலும் பூமண்டலத்திலும் கீழ்லோகத்திலும் உள்ளயாவும் [2]இயேசுவின் நாமத்தைத் தொழுது, முழங்காற்படியிடும்படிக்கும்,

௰௧ பிதாவாகிய பராபரனுக்குத் துதியுண்டாக இயேசுக்கிறிஸ்து கர்த்தர் என்று [3]நாவுகள் யாவும் அறிக்கையிடும்படிக்கும், சகல நாமங்களுக்கும் [4]மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார்.

௰௨ ¶ ஆகையினாலே எனக்குப் பிரியமானவர்களே, [5]நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடி, நான் உங்களுக்குச் சமீபமாய் இருக்கிறபொழுதுமாத்திரமல்ல, நான் தூரமாய் இருக்கிற இப்பொழுதும், மிகவும் அதிகமாய்ப் [6]பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை அடையப் பிரயாசப்படுங்கள்.

௰௩ விருப்பத்தையும் செய்கையையும் [7]பராபரன் உவப்பாய் உங்களுக்குள்ளே உண்டாக்குகிறவராய் இருக்கிறாரே.

௰௪ [8]கோணலும் வழுவுமுள்ள [9]சந்ததியாருக்குள்ளே நீங்கள் குற்றமும் கபடமும் இல்லாதவர்களாயும்,* [10]பராபரனுடைய மாசில்லாத பிள்ளைகளாயும் இருப்பதற்கு,

௰௫ சகலத்தையும் [11]மொறுமொறுப்பில்லாமலும் [12]தருக்கிப்பில்லாமலும் செய்வீர்களாக.

௰௬ [13]நான் வீணாக ஓடினதும் வீணாய்ப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற [14]மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளிலே எனக்கு உண்டாயிருப்பதற்கு நீங்கள் சீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, [15]உலகத்திலே அவர்களுக்குள்ளே சுடர்களைப்போலப் பிரகாசியுங்கள்.†

௰௭ ¶ நான் உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் [16]ஊழியத்தின்மேலும் [17]வார்க்கப்பட்டுப்‡ போனாலும், மகிழுவேன்; உங்கள் அனைவரோடும்கூட [18]மகிழ்ச்சியாகவே இருப்பேன்.

௰௮ இந்தப்பிரகாரமாக நீங்களும் மகிழுங்கள்; என்னோடேகூடவே மகிழ்ச்சியாய் இருங்கள்.

௰௯ ¶ அன்றியும்§ நானும் உங்கள் செய்திகளை அறிந்து, மனதிலே சந்தோஷம் அடையும்படிக்கு, [19]சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாம் என்று கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையாய் இருக்கிறேன்

௨௰ அவனையன்றி, உங்கள் காரியங்களை உத்தமமாய் விசாரிக்கிறதற்குத் [20]தகுதியான மனதுள்ள|| வேறொருவனும் என்னிடத்தில் இல்லையே.

௨௰௧ மற்றவர்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்கு உரியவைகளை அல்ல, [21]தங்களுக்கு உரியவைகளையே தேடுகிறார்கள்.

௨௰௨ அவன்மாத்திரம் தகப்பனோடே பிள்ளை இருக்கிறதுபோல, [22]என்னுடனேகூடச் சுவிசேஷத்திற்கு ஊழியம்செய்ததினாலே, அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்கள்.

௨௰௩ ஆகையால், என் காரியங்கள் இப்படி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனையே அனுப்ப நம்பியிருக்கிறேன்.

௨௰௪ [23]எப்படியும் நான்தானே சீக்கிரமாய் வருவேன் என்று கர்த்தராலே நினைத்திருக்கிறேன்.

௨௰௫ ¶ அன்றியும் என் சகோதரனுமாய், உடன் வேலையாளுமாய், [24]உடன் சேவகனுமாய், [25]உங்கள் தானாதிபதியுமாய், [26]என் குறைச்சல்களை நீக்க விசாரிக்கிறவனுமாயிருக்கிற [27]எப்பாப்பிரோதீத்து என்பவன்,

கி. பி. ௬௪.

1 யோவா ௰௭ ௧, ௨,௫ அப ௨. ௩௩, எபி ௨. ௯
2 ஏசா ௪௫ ௨௩ மத. ௨௮ ௰௮ உரோ ௰௪ ௰௧ வெளி ௫ ௰௩
3 யோவா. ௰௩ ௰௩ அப ௨ ௩௬. உரோ. ௰௪ ௯ ௧ கொரி ௮ ௬ ௰௨. ௩
4 எபே ௧ ௨௰. ௨௧ எபி ௧ ௪
5 பிலி ௧ ௫
6 எபே ௬ ௫
7 ௨ கொரி ௩ ௫ எபி ௰௩ ௨௧
8 ௫ மோ ௩௨ ௫
9 ௧ பே ௨ ௰௨
* அல்லது குற்றமில்லாதவர்களா
10 மத் ௫. ௪௫ எபே ௫. ௧
11 ௧ கொரி. ௰ ௰. ௧ பே ௪ ௯
12 உரோ ௰௪ ௧
13 கலா. ௨ ௨. ௧ தெச ௩ ௫
14 ௨ கொரி ௧ ௰௪ ௧ தெச ௨ ௰௯
15 மத ௫ ௰௪,௰௬ எபே.௫.௮.
† அல்லது பிரகாசிக்கிறீர்கள்
16 உரோ. ௰௫ ௰௬.
17 ௨ தீமோ. ௪ ௬,
‡ அல்லது ஒப்புக் கொடுக்கப்பட்டு
18 ௨ கொரி ௭ ௪ கொலோ. ௧.௨௪
§ அல்லது ஆனாலும்
19 உரோ ௰௬ ௨௧ ௧ தெச ௩ ௨.
20 சங் ௫௫ ௰௩
|| அல்லது எனக்கு அருமையான
21 ௧ கொரி ௰. ௨௪,௩௩ ௰௩ ௫

௨ தீமோ ௪ ௰,௰௬ —22 ௧ கொரி ௪ ௰௭ ௧ தீமோ.௧ ௨ ௨ தீமோ.௧ ௨ —23 பிலி ௧. ௨௫ பிலே ௨௨.—24 பிலே. ௨
25 ௨ கொரி ௮ ௨௩ —26 ௨ கொரி ௰௧ ௯. பிலி.௪ ௰௮ —27 பிலி ௪ ௰௮.

௨௬ [1]உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனாய், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் கஸ்திபபட்டிருக்கிறபடியால், அவனை உடனே உங்களிடத்தில் அனுப்ப வேண்டும் என்று எண்ணினேன

௨௭ அவன் மரணத்திற்குச் சமீபமாக வியாதிப்பட்டிருநதான்; பராபரன் அவனுககு இரஙகினார்; அதினாலே அவனுக்குமாத்திரமல்ல, துக்கத்தின்மேலே துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு எனக்கும் இரஙகினார்.

௨௮ ஆகையால், நீங்கள் அவனை மறுபடியும் கண்டு, சந்தோஷபபடும்படியாகவும், என் துக்கம் குறையும்படியாகவும் அதிசீககிரமாய அவனை அனுபபினேன்.

௨௯ ஆனபடியினாலே, கர்த்தருக்குள் அவனை மிகுந்த சந்தோஷததோடே ஏற்றுககொண்டு, [2]இபபடிபபட்டவர்களைக் கனமாய் எண்ணுவீர்களாக.*

௩௰ நீஙகள் இஙகே இல்லாததினாலே எனக்கு [3]இருக்கிற குறைச்சலை நீக்கி எனக்கு ஊழியம் செய்யும்படிக்கு, அவன் தன் பிராணனை எண்ணாமல், கிறிஸ்துவின் வேலையின் நிமித்தம் மரணத்திற்குச் சமீபமாய் இருநதபடியினாலே அபபடிச் செயயுஙகள்.

௩. அதிகாரம்.

௧ சனனசதுளள கள்ளபபோதகர்களைக்குறிததது அவர்களை எச்சரிததது ௪ அவாகளைபபாாக்கிலும தனக்கு நியாயபபிரமாணததின நீதியை நமப அதிக முகாநதரமிருநதும, ௭ கிறிஸதுவையும,'அவரால உணடாகும நீதியையும பெற்றுக்கொளள அதைக் குபபையாக எண்ணி, ௰௨. தன குறறஙகளை அறிக்கைசெயது, ௰௫ அவாகள இக்காரியஙகளில் தன்னைபபோலச் சிநதிக்கவும், ௰௭ தனனைப பினபற்றவும், ௰௮ மாம்சசிந்தையுள்ள கிறிஸதவாகளைப் பினபற்றுமலிருக்கவும புத்திசொல்லியது.

மேலும் என் சகோதரரே, [4]கர்த்தருக்குள் 'சந்தோஷபபடுங்கள்; நான் ஒரேவிதமான காரியங்களை உங்களுக்கு எழுதுகிறது எனக்கு வருத்தமல்ல, உங்களுக்கு அது நிசசயத்தை உண்டாக்கும்.

௨ ¶ [5]அந்த நாய்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருங்கள், [6]அநதப் பொல்லாத வேலையாட்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; [7]அந்தச் சேதக்காரரைக்குறித்து எச்சரிக்கையாய் இருஙகள்.

௩ சரீரத்தின்மேல், நமபிககையாய் இராமல் [8]ஆவியினாலே பராபரனுக்கு ஊழியம்செய்து, [9]கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே [10]விருத்தசேதனக்காரர்.

௪ [11]நானும் சரீரத்தின்மேலே நமபிக்கையாய் இருக்கத்தககவைகளை உடையவனாய் இருக்கிறேன்; அல்லாமலும், வேறொருவன் சரீரததினமேல் நம்பிக்கையாய் இருக்க நினைத்தால், அவனிலும் நான் அதிகமாய் அபபடி இருக்கலாம்.

௫ (எப்படியெனில்) [12]நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் அடைநதவன்; [13]இஸ்ரவேலின் வம்சத்தில் [14]பென்யமீன கோததிரத்தில் பிறநதவன்; [15]எபிரேயரில் பிறந்த எபிரேயன்; நியாயபபிரமாணத்தைக்குறிதது நான் [16]பரிசேயன்.

௬ [17]பத்திவைராக்கியததைக்குறித்து நான் (கிறிஸது) [18]சபையைத் துன்பபபடுத்தினவன்; நியாயபபிரமாணததினால் வருகிற [19]நீதியைக்குறித்து நான் [20]பிழையில்லாதவன்.

௭ ஆகிலும், எனக்கு லாபமாயிருந்த [21]இவைகளை நான் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.

௮ நிச்சயமாகவே என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் [22]மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; அவருக்காக நான் அவைகளை எல்லாம் நஷ்டமாகத் தள்ளினேன்.

கி. பி. ௬௪.

[1] பிலி ௧ ௮
[2] ௧ கொரி ௰௬. ௰௮ ௧ தெச ௫ ௰௨ ௧ தீமோ ௫ ௰௭
* அலலது பேணிக்கொளவீர்களாக
[3] ௧ கொரி ௰௬. ௰௭ பிலி ௪. ௰
[4] ௨ கொரி ௰௩. ௰௧. பிலி ௪. ௪ ௧ தெச ௫ ௰௬
[5] ஏசா ௫௬. ௰ கலா ௫. ௰௫
[6] ௨ கொரி ௰௧ ௰௩
[7] உரோ ௨ ௨௮ கலா. ௫ ௬.
[8] யோவா ௪ ௨௩ ௨௪ உரோ ௭ ௬
[9] கலா ௬ ௰௪
[10] ௫ மோ ௰ ௰௬ ௩௰ ௬. எரே ௪ ௪ உரோ ௨ ௨௯ ௪ ௰௧, ௰௨ கொலோ ௨ ௰௧.
[11] ௨ கொரி ௰௧ ௰௮ ௨௧.
[12] ௧ மோ ௰௭ ௰௨
[13] ௨ கொரி ௰௧ ௨௨
[14] உரோ ௰௧. ௧
[15] ௨ கொரி ௰௧ ௨௨
[16] அப ௨௩ ௬ ௨௬ ௪. ௫.
[17] அப ௨௨. ௩. கலா ௧ ௰௩, ௰௪
[18] அப. ௮. ௩ ௯ ௧
[19] உரோ ௰ ௫.
[20] லூக ௧ ௬
[21] மத ௰௩. ௪௪
[22] ஏசா ௫௩ ௰௧ எரே ௯ ௨௩, ௨௪ யோவா ௰௭ ௩ ௧ கொரி ௨ ௨ கொலோ ௨. ௨.

௯ நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற [1]சுயநீதியை அல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே வருகிறதுமாய், விசுவாசமூலமாய்ப் பராபரனால் வருகிறதுமாய் இருக்கிற [2]நீதியையே உடையவனாய் இருந்து, இப்படிக் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனாகக் காணப்படும்படிக்கும், சகலத்தையும் குப்பையைப்போல எண்ணியிருக்கிறேன்.

௰ இப்படி நான் அவரையும் அவர் உயிரோடெழும்புதலின் பலத்தையும் அவருடைய பாடுகளோடே [3]ஐக்கத்தையும் அறிந்திருக்கிறதுமல்லாமல்,

௰௧ எப்படியும் நானும் மரித்தோரிலிருந்து [4]உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு, அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்கு ஏதுவாய் இருக்கிறேன்.

௰௨ ¶ (அதை) [5]நான் இப்பொழுதே அடைந்தவனாக அல்லது இப்பொழுதே [6]தேறினவனாகச் சொல்லாமல் கிறிஸ்து இயேசுவினாலே நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதைப் பிடித்துக்கொள்ளும்படி பின்தொடருகிறேன்.

௰௩ சகோதரரே, நான் (அதைப்) பிடித்துக்கொண்டேன் என்று எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன்; [7]பின்னானவைகளை நான் மறந்து, [8]முன்னானவைகளைச் சாக்கிரதையாய் நாடி,

௰௪ கிறிஸ்து இயேசுவினாலே பராபரன் உயரத்திலிருந்து என்னை [9]அழைத்துவைத்த பந்தயப்பொருளுக்காகக் [10]குறித்திருக்கிற மார்க்கமாய்ப் பின்தொடருகிறேன்.

௰௫ ¶ ஆகையால் நம்மில் [11]தேறினவர்கள் யாவரும் இப்படியே [12]சிந்திக்கக்கடவோம்; எதையாகிலும் நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திப்பீர்களானால், அதையும் பராபரன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

௰௬ எப்படியும் நாம் எதுவரையில் வந்திருந்தாலும், [13]இந்தப் பிரமாணத்தின்படியே [14]நடந்துகொண்டு, [15]ஒரேவிதமாய்ச் சிந்தனைபண்ணக்கடவோம்.

௰௭ சகோதரரே, [16]நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, [17]நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை நோக்குங்கள்.

௰௮ அநேகர் [18]கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக நடக்கிறார்கள்; அவர்களைக்குறித்து முன்னே உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன்; இப்பொழுது அழுதலோடேயும் (அப்படிச்) சொல்லுகிறேன்.

௰௯ [19]அவர்களுடைய முடிவு அழிவு; [20]அவர்களுடைய தேவன் வயிறு; [21]அவர்களுடைய மகிமை அவர்கள் இலச்சையில் இருக்கிறது; [22]பூமிக்குரி —— ளைச் சிந்திக்கிறார்கள்.

௨௰ [23]நம்முடைய இருப்பிடம் பரமண்டலங்களில் இருக்கின்றது; [24]அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இரட்சகர் வரப் [25]பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

௨௰௧ [26]அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தும்படிக்கு, [27]மிகுந்த பலமுடையவர்; ஆகையால், நம்முடைய அற்பமான சரீரம் மகிமையுள்ள தமது சரீரத்திற்கு ஒப்பாய் இருக்கும்படி, [28]அதை மறுரூபப்படுத்துவார்.

௪. அதிகாரம்

௧ தனித்தும், ௪ பொதுவாகவும், சில புத்திகள் சொல்லி, ௰ காவலிலிருந்த தனக்கு அவர்கள் அனுப்பின உதவிக்காகவும், விசேஷமாக அவர்களிலிருந்த தேவகிருபைக்காகவும் சந்தோஷப்பட்டு,

---

கி. பி. ௬௪.

[1] உரோ ௰ ௩, ௫.
[2] உரோ. ௧. ௰௭ ௩. ௨௧, ௨௨ ௯ ௩௰. ௰. ௩, ௯ கலா ௨. ௰௬.
[3] உரோ. ௬ ௫, ௮ ௰௭ ௨ கொரி ௪ ௰, ௰௧ ௨ தீமோ ௨ ௰௧, ௰௨ ௧ பே ௪. ௰௩
[4] அப ௨௬ ௭
[5] ௧ தீமோ ௬ ௰௨
[6] எபி ௰௨ ௨௩
[7] சங ௪௫ ௰ லூக் ௯ ௬௨ ௨ கொரி ௫ ௰௬
[8] ௧ கொரி ௯ ௨௪, ௨௬ எபி ௰௨ ௧
[9] எபி ௩ ௧
[10] ௨ தீமோ ௪ ௭, ௮ எபி ௰௨ ௧
[11] ௧ கொரி ௨ ௬ ௰௪ ௨௰
[12] கலா ௫ ௰
[13] கலா ௬. ௰௬
[14] உரோ. ௰௨ ௰௬, ௰௫ ௫
[15] பிலி ௨ ௨
[16] ௧ கொரி ௪ ௰௬ ௰௧ ௧ பிலி ௪ ௯ ௧ தெச ௧ ௬
[17] ௧ பே ௫ ௩
[18] கலா ௧ ௭ ௨. ௨௧ ௬ ௰௨ பிலி ௧ ௰௫, ௰௬
[19] ௨ கொரி ௰௧. ௰௫ ௨ பே ௨. ௧
[20] உரோ ௰௬ ௰௮ ௧ தீமோ ௬ ௫ தீத் ௧ ௰௧
[21] ஓசே ௪ ௭ ௨ கொரி ௰௧ ௰௨ கலா ௬ ௰௩
[22] உரோ ௮ ௫
[23] எபே ௨ ௬, ௰௯ கொலோ ௩ ௧, ௩.
[24] அப. ௧ ௰௧
[25] ௧ கொரி ௧ ௭ ௧ தெச ௧. ௰ தீத் ௨ ௰௩
[26] ௧ கொரி ௰௫ ௨௬, ௨௭.—[27] எபே ௧ ௰௯.—[28] ௧ கொரி ௰௫ ௪௩, ௪௮, ௪௯ கொலோ ௩ ௪ ௧ யோ ௩ ௨

௧. அவர்களுக்காகச் செபம்பண்ணி அவர்களை வாழ்த்தினது.

ஆனபடியினாலே எனக்கு அன்பானவர்களுமாய், [1]என்னாலே ஆசிக்கப்பட்டவர்களுமாய், [2]எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமாய் இருக்கிற சகோதரரே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தரிடத்தில் [3]நிலைகொண்டு இருப்பீர்களாக.

௨ ¶ கர்த்தராலே [4]ஒரேவிதமான சிந்தையாய் இருக்கும்படிக்கு, ஐயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்.

௩ அல்லாமலும், என் உத்தமக் கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாய் இருக்கும்படிக்கு, உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெஞ்சோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடும் கூடச் சுவிசேஷத்தைக்குறித்து என்னோடேகூடிப் [5]போராடினார்களே; அவர்களுடைய நாமங்கள் [6]ஜீவபுஸ்தகத்தில் இருக்கின்றன.

௪ ¶ [7]கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

௫ உங்களிலுள்ள சாந்தகுணம் எல்லாச் சனங்களுக்கும் தெரியவரக்கடவது; [8]கர்த்தர் சமீபமாய் இருக்கிறார்.

௬ [9]நீங்கள் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களைத் தோத்திரிப்புடனேகூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறிவிப்பீர்களாக.

௭ அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான [10]தேவசமாதானம், கிறிஸ்து இயேசுவினாலே உங்கள் இருதயங்களையும் சிந்தனைகளையும் காப்பாற்றும்.

௮ ¶ சகோதரரே, கடைசியிலே சத்தியமுள்ளவைகள் எவைகளோ, இலக்கணமுள்ளவைகள்* எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, சிநேகத்திற்கு ஏதுவானவைகள் எவைகளோ, [11]நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, மற்றப் புண்ணியம் எதுவோ, புகழ்ச்சியுள்ளது எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொள்வீர்களாக.

௯ நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், [12]கண்டும் இருக்கிறவைகளைச் செய்யுங்கள்; [13]அப்பொழுது சமாதானம் பொருந்திய பராபரன் உங்கள் பங்கிலே இருப்பார்.

௰ ¶ என்னை விசாரிக்கும்படிக்கு [14]நீங்கள் இக்காலத்திலே மறுபடியும் மலர்ந்திருக்கிற†படியினாலே, கர்த்தராலே மிகவும் சந்தோஷப்பட்டேன்; (முன்னேயும்) இப்படிச்செய்யச் சிந்தையாய் இருந்தீர்கள்; சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை.

௰௧ என் குறைச்சலினாலே நான் இப்படிச் சொல்லவில்லை; எந்த நிலைமையில் இருந்தாலும், [15]மனச்சந்தோஷமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன்.

௰௨ தாழ்ந்திருக்கவும் [16]எனக்குத் தெரியும்; பெருகியிருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலேயும் எல்லாவற்றிலேயும் திருப்தியாய் இருக்கவும், பசியாய் இருக்கவும், பரிபூரணப்படவும், குறைவுபடவும் படித்தேன்.

௰௩ [17]என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நான் எவ்வற்றையும் செய்யத் திராணியுண்டு.

௰௪ ¶ அப்படியிருந்தும் [18]என் உபத்திரவத்திலே என்னுடனே ஐக்கப்பட்ட நீங்கள் நன்றாய்ச் செய்தீர்கள்.

௰௫ பிலிப்பியரே, உங்களுக்கும் தெரிந்திருக்கிறபடி சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கேதோனியா நாட்டுக்குப் புறப்பட்டபொழுது, நீங்கள்மாத்திரமே அல்லாமல், [19]வேறொரு சபை

கி. பி. ௬௪.

1 பிலி ௧ ௮
2 ௨ கொரி ௧ ௰௪ பிலி ௨ ௰௬ ௧ தெச ௨ ௰௯, ௨௰
3 பிலி ௧ ௨௭
4 பிலி ௨ ௨ ௩ ௰௬
5 ௨ ரோ ௰௬ ௩ பிலி ௧ ௨௭
6 ௨ மோ ௩௨ ௩௨ சங் ௬௯ ௨௮ தானி ௰௨ ௧ லூக் ௰ ௨௰ வெளி ௩ ௫ ௰௩ ௮ ௨௰ ௰௨ ௨௧ ௨௭
7 ௨ ரோ ௰௨ ௰௨ பிலி ௩ ௧ ௧ தெச. ௫ ௰௬ ௧ பே ௪ ௰௩
8 எபி ௰. ௨௫ யாக் ௫ ௮, ௯ ௧ பே ௪ ௭ ௨ பே ௩ ௮, ௯ ௨ தெச ௨ ௨
9 சங் ௫௫ ௨௨ லூக் ௰௨ ௯ மத். ௬ ௨௫ லூக் ௰௨ ௨௨ ௧ பே ௫ ௭
10 யோவா ௰௪ ௨௭ ௨ ரோ ௫ ௧ கொலோ ௩ ௰௫
* அல்லது கண்ணியமான.
11 ௧ தெச ௫ ௨௨
12 பிலி ௩ ௰௭
13 ௨ ரோ ௰௫ ௩௩ ௰௬ ௨௰ ௧ கொரி ௰௪ ௩௩ ௨ கொரி ௰௩ ௰௧ ௧ தெச ௫ ௨௩ எபி ௰௩ ௨௰
14 ௨ கொரி ௰௧ ௯.
† அல்லது உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிற
15 ௧ தீமோ ௬ ௬, ௮
16 ௧ கொரி. ௪ ௰௧ ௨ கொரி ௬ ௰ ௰௧ ௨௭
17 யோவா ௰௫. ௫ ௨ கொரி ௰௨ ௯
18 பிலி ௧ ௭
19 ௨ கொரி ௰௧. ௮, ௯

யும் கொடுக்கல் வாங்கல் என்பதைக்குறித்து உதவியாய் இருக்கவில்லை.

௰௬ நான் தெசலோனிக்கை ஊரில் இருந்தபொழுதும், நீங்களே என் குறைச்சலை நீக்கும்படிக்கு, இரண்டொருதரம் அனுப்பினீர்கள்.

௰௭ காணிக்கையை நான் விரும்பாமல், உங்கள் கணக்குப் பெருகவேண்டும் என்று [1]பலனை விரும்புகிறேன்.

௰௮ இப்பொழுது வேண்டியவை எல்லாம் எனக்கு வந்திருக்கின்றன;* பரிபூரணம் உண்டாயிருக்கின்றது; உங்களால் அனுப்பபபட்டவைகளாயும், பராபரனுக்குச் [2]சுகந்தவாசனையாயும், பிரியமும் [3]சந்தோஷமுமான பலியாயும் இருக்கிறவைகளை, [4]எப்பாப்பிரோதீத்துவின் கையில் வாங்கிக்கொண்டதால் நான் நிறைவாய் இருக்கிறேன்.

௰௯ அன்றியும் என் தேவனானவர் [5]தமது மகிமையுள்ள ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவுகள் யாவையும் கிறிஸ்து இயேசுவினாலே நீக்கி, [6]நிறைவை அருளிச்செய்வார்.

௨௰ [7]நம்முடைய பராபரனும் பிதாவுமானவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாகக்கடவது.—ஆமன்.

௨௰௧ ¶ கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள்; [8]என்னுடனே இருக்கிற சகோதரர் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

௨௰௨ பரிசுத்தவான்கள் அனைவரும், [9]விசேஷமாக இராசனுடைய அரண்மனையில் உள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

௨௰௩ [10]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும்கூட இருக்கக்கடவது.—ஆமன்.

கி. பி. ௬௪.

[1] உரோ. ௰௫ ௨௮ தீத் ௩ ௰௪.

* அல்லது எல்லாவற்றையும நான் பெற்றுக் கொண்டேன.

[2] எபி. ௰௩ ௰௬

[3] ௨ கொரி. ௯ ௰௨

[4] பிலி. ௨ ௨௫

[5] எபே ௧ ௭, ௩ ௰௬

[6] சங். ௨௩ ௧ ௨ கொரி. ௯ ௮

[7] உரோ ௰௬ ௨௭ கலா. ௧ ௫

[8] கலா. ௧ ௨

[9] பிலி ௧ ௰௩.

[10] உரோ ௰௬ ௨௪.

COLOSSIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

கொலோசியருக்கு எழுதின

நிருபம்.

௧. அதிகாரம்.

௧ அவர்களை வாழ்த்தி அவர்கள் விசுவாசத்துக்காகப் பராபரனைத் தோத்திரித்து, ௭ எப்பாப்பிராவின் உபதேசத்தை ஸ்திரப்படுத்தி, ௯ அவர்கள் கிருபையில் வளரும்படி செபம்பண்ணி, ௰௪ மெய்யான கிறிஸ்துவின் மகிமையைக்கூறி, ௨௧ அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளும்படி ஏவித் தன் ஊழியத்தைக்குறித்துச் சொல்லியது

பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவினுடைய [1]அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும்,

௨ கொலோசை ஊரிலே கிறிஸ்துவுக்குள் இருக்கிற [2]பரிசுத்தவான்களுமாய், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரருக்கு எழுதுகிறதாவது. நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் [3]கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ ¶ நீங்கள் [4]இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறதையும் சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே முன்பு கேட்டதுமாய்,

௪ [5]பரமண்டலங்களில் உங்களுக்காக வைக்கப்பட்டதுமாய் இருக்கிற (நித்திய சுதந்தரத்தை) நம்புகிறதினாலே சகல பரிசுத்தவான்கள்மேலும் [6]அன்புகூருகிறதையும் நாங்கள் கேள்விப்பட்டு,

௫ உங்களுக்காக எப்பொழுதும் செபம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமாய்த் தேவனுமாய் இருக்கிறவரைத் [7]தோத்திரம் செய்கிறோம்.

௬ [8]இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கும் வியாபித்து, [9]பலனைக் கொடுக்கிறதுபோல, (அது) உங்களிடத்திலும் சேர்ந்து, [10]நீங்கள் பராபரனுடைய கிருபையை உண்மையாய்க் கேட்டு அறிந்துகொண்ட நாள்முதல் உங்களுக்குள்ளும் பலனைக் கொடுக்கிறதாய் இருக்கின்றது.

௭ அதை நீங்கள் எங்களுக்குப் பிரியமான உடன்வேலைக்காரனுமாய், உங்களுக்காகக் [11]கிறிஸ்துவினுடைய உண்மையான ஊழியக்காரனுமாய் இருக்கிற [12]எப்பாப்பிராவினிடத்தில் கற்றுக்கொண்டவர்களாயும் இருக்கிறீர்கள்.

௮ [13]ஆவிக்கேற்ற உங்கள் அன்பை அவன் எங்களுக்கு அறிவித்தவனாயும் இருக்கிறான்.

௯ ¶ ஆகையால், அதைக் கேள்விப்பட்ட நாள்முதல் நாங்கள்

கி. பி. ௬௪.

[1] எபே ௧. ௧.
[2] ௧ கொரி ௪. ௰௭. எபே. ௬. ௨௧.
[3] கலா ௧. ௩.
[4] ௯ வச. எபே ௧. ௰௫. பிலே ௫.
[5] ௨ தீமோ ௪. ௮. ௧ பே ௧. ௪.
[6] எபி ௬. ௰.
[7] ௧ கொரி ௧. ௪. எபே ௧. ௰௬. பிலி ௧. ௩. ௪.
[8] மத் ௨௪. ௰௪. மாற் ௰௬. ௰௫. உரோ ௰. ௰௮. ௨௩ வச.
[9] மாற் ௪. ௮. யோவா. ௰௫. ௰௬. பிலி ௧. ௰௧.
[10] ௨ கொரி. ௬. ௧. எபே. ௩. ௨. தீத். ௨. ௰௧. ௧ பே ௫. ௰௨.
[11] ௨ கொரி ௰௧. ௨௩. ௧ தீமோ ௪. ௬.
[12] கொலோ ௪. ௰௨. பிலே ௨௩.
[13] உரோ ௰௫. ௩௰.

உங்களுக்காக விண்ணப்பம்பண்ணி, [1]நீங்கள் எல்லாவிதமான நற்கிரியைகளைச் செய்கிறவர்களாயும், பராபரனை அறிகிற அறிவை அதிகமதிகமாய் அடைகிறவர்களாயும்,

௰ [2]சந்தோஷத்தோடே [3]பொறுமையாயும் நீடிய சாந்தமாயும் இருப்பதற்கு, அவருடைய மகிமை பொருந்திய வல்லமையினாலே எல்லாவிதமான [4]பெலத்தை உடையவர்களாயும்,

௰௧ [5]ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்திற்குப பங்காளிகள் ஆவதற்கு நம்மைத் தகுதியானவர்களாக்கி, [6] இருளினுடைய அதிகாரத்தில் நின்று விடுதலைபண்ணி, தமக்கு [7]அன்பாயிருக்கிற* குமாரனுடைய இராச்சியத்திற்கு உட்படுத்திவைத்த [8]பிதாவைத் தோத்திரம்செய்கிறவர்களாயும் இருந்து,

௰௨ (இப்படிக்) [9]கர்த்தாவுக்குப் பாத்திரமாயும் [10]மிகுந்த பிரியமாயும் நடக்கும்படிக்கு,

௰௩ [11]எல்லா ஞானத்தோடும் பரிசுத்த ஆவிக்கேற்ற விவேகத்தோடும் தமது [12]திருச்சித்தத்தை அறிகிற அறிவினாலே [13]உங்களை நிரப்பவேண்டுமென்று [14]ஓயாமல் அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம்.

௰௪ [15]அவருடைய குமாரன் தம்முடைய திரு இரத்தத்தைச் சிந்தினதினாலே, நமக்குப பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கின்றது.

௰௫ [16]அவர் அதரிசனமாயிருக்கிற பராபரனுடைய சாயலுமாய்,

௰௬ பரமண்டலங்களிலும் பூமியிலுமுள்ள, காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமாகிய யாவற்றையும், சிங்காசனங்களில் இருக்கிறவர்களையும், [17]கர்த்தத்துவமுடையவர்களையும், பிரபுக்களையும், அதிகாரிகளையும் [18]உண்டாக்கினபடியினாலே, [19]சிருட்டிகள் யாவுக்கும் முதன்மையுமாய் இருக்கிறார்; [20]சகலமும் அவராலும் அவருக்காகவும் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன.

௰௭ [21]எல்லாவற்றிற்கும் முன்னமே இருக்கிறார்; சகல வஸ்துக்களும் அவராலே நிலையாயிருக்கின்றன.

௰௮ [22]அவர் தமது சபையாகிய சரீரத்திற்குத் தலையாய் இருக்கிறதுமல்லாமல், எல்லாவற்றிற்கும்† அவர் முந்தினவராய் இருக்கும்படிக்கு, ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த [23]முதற்பேறுமானவராய் இருக்கிறார்.

௰௯ ¶ [24]சகல சம்பூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கும்படிக்கும்,

௨௰ அவர் சிலுவைமரத்திலே [25]சிந்தின தமது இரத்தத்தினாலே சமாதானம் உண்டுபண்ணினபின்‡ பூமியிலும் பரமண்டலங்களிலுமுள்ள [26]வஸ்துக்கள் யாவையும் [27]அவராலே தம்முடனே ஒப்புரவாகும்படிக்கும், பிதாவானவர் பிரியமாயிருந்தார்.

௨௧ ¶ [28]முன்னே நீங்கள் பொல்லாத கிரியைகளினாலே (உங்கள்) மனதிலே§ சத்துருக்களுமாய் [29]அந்நியருமாய் இருந்தீர்கள்.

௨௨ இப்பொழுது [30]உங்களைப் பரிசுத்தவான்களாகவும் மாசற்றவர்களாகவும் குற்றம்சாற்றப்படாதவர்களாகவும் தமக்குமுன்பாக நிறுத்தும்படிக்கு, [31]அவர் தமது மாம்சதேகத்தை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததினாலே உங்களையும் ஒப்புரவாக்கினார்.

௨௩ நீங்கள் கேட்டதாயும், [32]வானத்தின்கீழுள்ள சகலவித சனங்களுக்கும் [33]பிரசங்கம்பண்

கி. பி. ௬௪.

1 யோவா ௰௫ ௰௬ ௨ கொரி ௯. ௮. பிலி ௧ ௰௧ தீத். ௩ ௩ எபி ௰௩ ௨௧
2 அப. ௫ ௪௧ உரோ. ௫ ௩
3 எபே. ௪ ௨
4 எபே. ௩. ௰௬. ௩௰
5 அப ௨௬ ௰௮ எபே ௧ ௰௧
6 எபே. ௬. ௰௨ எபி ௨. ௰௪ ௧ பே ௨. ௯
7 ௧ தெச ௨. ௰௨. ௨ பே ௧ ௰௧
* இரேக்கு, தம தன்பின், மத் ௩ ௰௭ எபே ௧ ௬
8 எபே ௫,௨௰ கொலோ ௩ ௰௫
9 எபே. ௪ ௧ பிலி ௧ ௨௭ ௧ தெச ௨ ௰௨
10 ௧ தெச ௪, ௧
11 எபே ௧ ௮
12 உ.ரோ ௰௨ ௨. எபே ௫,௰,௰௭,
13 ௧ கொரி ௧ ௫
14 எபே ௧ ௰௬, ௰௯ ௩, ௪. ௰௪
15 எபே ௧ ௭
16 ௨ கொரி ௪ ௪ எபி ௧ ௩
17 உ.ரோ ௮ ௩௮ எபே ௧ ௨௧ கொலோ. ௨. ௰. ௰௫ ௧ பே ௩ ௨௨
18 யோவா ௧ ௩ ௧ கொரி. ௮ ௬. எபே ௩ ௯. எபி ௧ ௩
19 வெளி ௪. ௰௪
20 உ.ரோ ௰௧. ௩௬ எபி ௨. ௰.
21 யோவா ௧ ௧. ௩ ௰௭ ௫ ௧ கொரி ௮ ௬
22 ௧ கொரி ௰௧ ௩ எபே ௧ ௰,௨௨. ௪ ௰௫ ௫.௨௩
† அல்லது எல்லாருக்குள்ளும.

23 அப ௨௬ ௨௩ ௧ கொரி. ௰௫ ௨௰, ௨௩. வெளி ௧ ௫ — 24 யோவா. ௧ ௰௬: ௩ ௩௪. கொலோ. ௨, ௯. ௩. ௰௧
25 எபே ௨. ௰௪, ௰௫, ௰௬.—‡ அல்லது உண்டுபண்ணி —26 எபே ௧ ௰.—27 ௨ கொரி. ௫. ௰௮ —28 தீத். ௩. ௰௫, ௰௬.
§ அல்லது பொல்லாத கிரியைகளில உங்கள் மனதால், — 29 எபே. ௨. [illegible], ௰௨, ௰௯: ௪. ௰௮, — 30 லூக் ௧ ௭௫. எபே. ௧, ௪: ௫ ௨௭, ௧ தெச. ௪. ௭ தீத் ௨ ௰௪ யூதா. ௨௪.—31 எபே. ௨. ௰௫, ௰௬.—32 ௧ வச.—33 உ.ரோ ௰. ௰௮

ஸ்பட்டதாயும், [1]பவுலென்னும் என்னாலே ஊழியம்செய்யப்படுகிறதாயும் இருக்கிற சுவிசேஷத்தினாலே (தெரியவந்த இரட்சிப்பை) [2]நீங்கள் அசைவில்லாமல் நம்புகிறவர்களுமாய், விசுவாசத்தினாலே [3]ஸ்திரமும் உறுதியும் உள்ளவர்களுமாய் நிலைகொண்டு இருந்தீர்களானால், (உங்களை) அப்படியே தமக்குமுன்பாக நிறுத்துவார்.

௨௪ ¶ இப்பொழுது நான் [4]உங்களுக்காகப் படுகிற பாடுகளினாலே [5]சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய [6]உபத்திரவங்களில் சேஷமான உபத்திரவங்களை [7]அவருடைய சரீரம் என்னும் சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.

௨௫ [8]பராபரனுடைய நியமிப்பின்படியே நான் அந்தச்சபைக்கு ஊழியக்காரன் ஆனேன்.

௨௬ ஆதிகாலங்களுக்கும் தலைமுறைதலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது [9]அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட [10]மறைபொருளாகிய தேவவசனத்தை நிறைவாய்ப் பிரசங்கம்பண்ணும்படிக்கு* அந்த நியமிப்பு உங்களுக்காக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

௨௭ உலகத்தாரைக்குறித்து [11]இந்த மறைபொருளிலுள்ள சம்பூரணமான மகிமை இன்னதென்று அந்தப் பரிசுத்தவான்களுக்குத் [12]தெரியப்பண்ணச் சித்தமாயிருந்தார்; மகிமை உண்டாகும் என்கிற [13]நம்பிக்கைக்கு ஏதுவான கிறிஸ்து உங்களில்† இருக்கிறதே அந்தச் சம்பூரணமான மகிமை.

௨௮ [14]எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவினாலே தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனிதனுக்கும் [15]புத்திசொல்லி, சகலவிதமான ஞானத்தோடும் உபதேசிக்கிறோம்.

௨௯ அதற்காக [16]நான் எனக்குள்ளே வல்லமையாயிருக்கிற அவருடைய பெலத்தின்படி [17]போராடிப் [18]பிரயாசப்படுகிறேன்.

௨. அதிகாரம்.

௧ கிறிஸ்துவை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவும், ௮ உலகஞானத்துக்கும், வீணான பாரம்பரைகளுக்கும் எச்சரிக்கையாயிருக்கவும், ௰௮. தேவதூதராராதனையையும், ௨௰ கிறிஸ்துவுக்குள் நிறைவேறிப்போன சடங்காசாரங்களையும் செய்யாமலிருக்கவும் புத்திசொல்லியது

ஆகையால், [19]ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் அடங்கியிருக்கிற கிறிஸ்துவுக்கும்‡ பிதாவாகிய பராபரனுக்கும் உரிய மறைபொருளை,

௨ [20]நீங்கள் அறிக்கை இடும்படிக்கான மிகவும் மிகுந்த நிச்சயமுள்ள விவேகத்தை அடைந்து, [21]அன்பினாலே இணைக்கப்பட்டவர்களாய் இருக்கத்தக்கதாக,

௩ உங்கள் இருதயங்களும், இலாவோதிக்கேயா ஊரிலுள்ளவர்களுடைய இருதயங்களும், மற்றும் என்முகத்தை மாம்சத்தில் காணாதிருக்கிற எல்லாருடைய [22]இருதயங்களும் ஆறுதலை அடையும்படிக்கு, நான் உங்களுக்காகவும் அவர்களுக்காகவும் [23]பண்ணுகிற மிகுந்த பிரயாசத்தை§ நீங்கள் அறியவேண்டும் என்று விரும்புகிறேன்.

௪ [24]ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

௫ என்னத்தினாலெனில், [25]நான் தேகத்தின்படி தூரமாயிருந்தும் என் ஆவியின்படி உங்களுடனே கூட இருந்து, உங்கள் [26]ஒழுங்கை

கி. பி. ௬௪.

1 அப. ௧ ௰௭ ௨ கொரி ௧ ௧. ௪ ௧ ௫ ௰௮ எபே ௩ ௭ ௨௫ வசனம் ௧ தீமோ ௨ ௭
2 யோவா. ௰௫ ௧
3 எபே ௩ ௰௭ கொலோ ௨ ௭
4 எபே ௩ ௧, ௰௩
5 உரோ ௫ ௩ ௨ கொரி ௭ ௪
6 ௨ கொரி ௧ ௫. பிலி ௩ ௰, ௨ தீமோ ௧ ௮ ௨ ௰
7 எபே ௧ ௨௩
8 ௧ கொரி ௯ ௰௭ கலா. ௨ ௭ எபே ௩ ௨ ௨௩ வச
9 மத ௰௩ ௰௧ ௨ தீமோ ௧ ௰
10 உரோ ௰௬ ௨௫ ௧ கொரி ௨ ௭ எபே ௧ ௯
* அல்லது நிறைவேறும்படிக்கு, உரோ ௰௫ ௰௯
11 உரோ ௯ ௨௩ எபே ௧ ௭ ௩ ௮
12 ௨ கொரி ௨ ௰௪.
13 ௧ தீமோ ௧ ௧
† அல்லது உங்களுக்குள்ளே
14 ௨ கொரி ௰௧ ௨ எபே ௫ ௨௭ ௨௨ வச
15 அப ௨௰ ௨௰, ௨௭, ௩௧
16 எபே ௧ ௰௯, ௩ ௭, ௨௰
17 கொலோ ௨ ௧
18 ௧ கொரி ௰௫ ௰
19 ௧ கொரி ௧ ௨௪. ௨௰, ௭ எபே ௧ ௮ கொலோ ௧, ௯
‡ அல்லது அடங்கின கிறிஸ்துவுக்கும்
20 பிலி ௧ ௮. கொலோ ௧ ௯

21 கொலோ ௩. ௰௪. —22 ௨ கொரி. ௧ ௬. —23 பிலி. ௧. ௩௰. கொலோ. ௧. ௨௯. ௧ தெச. ௨. ௨ —§ அல்லது பயத்தை, அல்லது கவலையை —24 உரோ. [illegible] ௨ கொரி ௰௧. ௰௩ எபே. ௪ ௰௪ ௫ ௬, ௮, ௰௮ வச. —25 ௧ கொரி ௫. ௩ ௧ தெச. ௨. ௰௭. —26 ௧ கொரி. ௰௪. ௪௰.

யும் கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் [1]விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்.

௬ [2]ஆனபடியினாலே நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டு இருக்கிறபடியால்,

௭ நீங்கள் போதனை அடைந்தபடி [3]அவருக்குள்ளே வேரூன்றி, அவர்மேலே கட்டப்பட்டு, விசுவாசத்தில் உறுதியைப பெற்று, இப்படி அவருக்கு ஏற்றபடி நடந்துகொண்டு, தோத்திரம் செய்து, அந்த விசுவாசத்தை அதிகமதிகமாய் அடைவீர்களாக.

௮ கிறிஸ்துவின்படியல்ல, [4]மனிதருடைய பாரம்பரை நியாயத்தின்படியேயும், [5]உலகத்திலுள்ள சிறுமையான வழிபாடுகளின் *படியேயும் ஆன வீணுமாய் வஞ்சனையுமாய் இருக்கிற கல்வியினாலே [6]ஒருவனும உங்களைக் கொள்ளையிடாதபடிக்குப் பாருங்கள்.

௯ என்னத்தினாலெனில், தேவத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாய்க் [7]கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கின்றன.

௰ மேலும், சகல [8]துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் [9]தலைவராயிருக்கிற அவருக்குள் [10]நீங்கள் நிறைவுள்ளவர்களாய இருக்கிறீர்கள்.

௰௧ அவரோடே நீங்கள் ஞானஸ்நானத்தினாலே அடக்கம்பண்ணபபட்டவர்கள் ஆனபொழுது, அவர் பண்ணுகிற விருத்தசேதனத்தினாலே [11]நீங்கள் பாவங்களுள்ள மாம்சதேகத்தைக் கழற்றினபடியால், [12]கையால் செய்யப்பட்டிராத விருத்தசேதனத்தை அவருக்குள்ளும் பெற்றுக்கொண்டீர்கள்.

௰௨ மேலும், பராபரன் [13]அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பலத்த செய்கையை [14]விசுவாசிக்கிறதினாலே [15]நீங்கள் அந்த ஞானஸ்நானத்திலே [16]அவருடனேகூட எழுந்தும் இருக்கிறீர்கள்.

௰௩ எப்படியெனில் பாவங்களாலும் உஙகள் மாம்சததின் நுனிததோல் என்னும் (அஞ்ஞானமார்க்கததாலும்) [17]மரித்தவர்களாய் இருந்த உங்களை அவரோடேகூடவும் அவர் உயிர்பபித்து, பாவங்களை எல்லாம் உங்களுக்கு மன்னித்து,

௰௪ நமக்காகச் செய்யப்பட்டதுமாய் நமக்கு விரோதமுமாய் இருந்த [18]கட்டளைகளின் கையெழுத்தைக் கொலைத்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுதது, அதைச் சிலுவைமரத்தில் சேர்த்து, ஆணி அடித்துபபோட்டு,

௰௫ [19]துரைத்தனங்களையும் அதிகாரங்களையும [20]கொள்ளையிட்டு, வெளியரஙகமாய்க் காண்பித்து, இவ்விதமாய்† அவைகளைச செயித்துக் கெம்பீரம் அடைநதார்.

௰௬ ¶ ஆதலால் [21]போசனத்தையும் பானத்தையும்‡ பண்டிகையையும் மாதப்பிறப்பையும் [22]ஓய்வுநாள்களையும்§ குறித்து எவனானாலும [23]உஙகளைக் குற்றவாளிகள் ஆக்காதிருப்பானாக.

௰௭ [24]அவைகள் பின்வந்தவைகளுக்கு நிழலாயிருக்கின்றன; அவைகளின் பொருள் கிறிஸ்துவினிடத்திலே உண்டாயிருக்கின்றது.

௰௮ (மாயமான) தாழ்மையின் மேலும்,|| தேவதூதருக்குச் செய்யும் ஆராதனையின்மேலும் விருப்பமுற்றிருக்கிற யாவனானாலும் உங்கள் [25]பந்தயபபொருளை நீங்கள் இழந்துபோகும்படி செய்யாதிருப்பானாக;¶ அப்படிப்பட்டவன் [26]தான் காணாதவைகளைத் துணிவாய் நடத்துகிறவனுமாய், தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிறவனுமாய்,

கி. பி. ௬௰௪.

1 ௧ பே ௫. ௯
2 ௧ தெச ௪ ௧ யூதா ௩
3 எபே ௨ ௨௧ ௨௨ ௩ ௰௭ கொலோ. ௧ ௨௩
4 மத் ௰௫ ௨ கலா ௧ ௰௪ ௨௨ வச
5 கலா ௪ ௩, ௯ ௨௰ வச.
* அல்லது மூல காரணங்களை,
6 எரே ௨௯. ௮ உரோ ௰௬ ௰௭ எபே ௫ ௬ ௰௩ வச எபி ௰௩ ௯
7 யோவா ௧ ௰௪ கொலோ ௧ ௰௯
8 கொலோ ௧ ௰௬
9 எபே ௧ ௨௰, ௨௧ ௧ பே ௩ ௨௨
10 யோவா ௧ ௰௬.
11 உரோ ௯ ௯ எபே ௪ ௨௨ கொலோ ௩ ௮, ௯
12 ௫ மோ ௰ ௰௬ ௩௰ ௬ எரே ௪ ௪ உரோ ௨ ௨௯ பிலி ௩ ௩
13 அப ௨ ௨௪
14 எபே, ௧ ௰௯ ௩ ௭
15 உரோ ௬ ௪.
16 கொலோ. ௩ ௧.
17 எபே ௨. ௧, ௫, ௬, ௰௧
18 எபே ௨. ௰௫
19 எபே ௬, ௰௨
20 ௧ மோ ௩ ௰௫ சங். ௬௮ ௰௮ ஏசா ௫௩, ௰௨ மத் ௰௨ ௨௯ லூக. ௰ ௰௮ ௰௧, ௨௨ யோவா ௰௨, ௩௧ ௰௬ ௰௧ எபி ௨ ௰௪
† அலலது தமக்குள

---

21 உரோ. ௰௪ ௨, ௰௭. ௧ கொரி. ௮ ௮. — ‡ அல்லது போசனபானம்பண்ணுதலையும். — 22 உரோ. ௰௪. ௫ கலா. ௪. ௰. — § அல்லது பண்டிகைக்கடுத்த காரியத்தையும் — 23 உரோ. ௰௪ ௩, ௰,௰௩ — 24 எபி அ [illegible] ௯. ௯. ௰ ௧ — || கிரேக்கு. தாழ்மையிற் பிரியமாயிருக்குதலின்மேலும்; ௨௩. வசனம் — 25 ௪ வச — ¶ அல்லது தீராணை — 26 எசே ௰௩. ௩ ௧ தீமோ. ௧, ௭.

௧௯ கணுக்களாலும் கட்டுதற்கானவைகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்ட சரீரமெல்லாம் தேவ வளர்த்தியாக வளரச்செய்கிற [1]தலையைப் பற்றிக்கொள்ளாதவனுமாய் இருக்கிறான்

௨௰ ¶ அப்படியிருக்கக் கையாளுகிறதினாலே, அழிவுக்கு ஏதுவான பதார்த்தங்களில் இதைச் சாப்பிடக்கூடாது,

௨௧ இதை ருசிபார்க்கக்கூடாது, [2]இதைத் தீண்டக்கூடாது என்று சொல்லிய [3]மனிதருடைய கற்பனைகளின்படியேயும் போதகங்களின்படியேயும் சிலர் கற்பிக்கிறார்களே.

௨௨ [4]அப்படிப்பட்ட கற்பனைகள் [5]சுயசித்த ஆராதனையினாலும் தாழ்மையினாலும் சரீரத்திற்கு வேண்டிய கனம்செய்யாமல், அதை வருத்தப்படுத்துகையினாலும்* ஞானவேஷமுள்ளவைகளாய் இருக்கின்றது உள்ளதுதான்.

௨௩ ஆனாலும் கிறிஸ்துவுடனேகூட நீங்கள் [6]உலகத்திலுள்ள சிறுமையான வழிபாடுகளுக்கு† [7]மரித்தவர்களானபடியால், நீங்கள் உலகத்தின்படி பிழைக்கிறவர்கள் போல [8]அந்தக் கட்டளைகளைச் சுமந்துகொள்ளுகிறதென்ன?

௩. அதிகாரம்.

௧ கிறிஸ்துவை இப்படித் தேடவேண்டுமென்றும, ௫ இச்சைகளை அடக்கவும், ௯. பழைய மனிதனைக் களைந்துவிட்டுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவும, ௰௨. தருமம் தம்மைமுதலிய கடமைகளைச் செய்யவும் புத்திசொல்லியது.

[9]நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுப்பப்பட்டிருந்தால் [10]கிறிஸ்து பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காந்திருக்[illegible] இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடிக்கொள்ளுங்கள்.

௨ [11]நீங்கள் மரித்தீர்களே, அல்லாமலும், [12]கிறிஸ்துவுடனேகூட உங்கள் சீவன் பராபரனிடத்தில் மறைந்திருக்கின்றதே.

௩ ஆகையால், பூமியில் உள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே சிந்தித்துக்கொள்ளுங்கள்.‡

௪ [13]நமக்குச் சீவனாகிய [14]கிறிஸ்து வெளிப்படும்பொழுது, அவருடனேகூட நீங்களும் [15]மகிமையோடே வெளிப்படுவீர்கள்.

௫ ¶ ஆகையால், பூமியிலே [16]வேசித்தனமும் அசுத்தமும் விரகதாபமும் [17]துர்இச்சையும் [18]விக்கிரகஆராதனையான பொருளாசையுமாகிய [19]உங்கள் அவயவங்களை [20]அழித்துப்போடுங்கள்.

௬ [21]அவைகளின்நிமித்தம் பராபரனுடைய கோபம் [22]கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகள்மேல் வருமே.

௭ முற்காலத்திலே நீங்களும் அவர்களுடனேகூடச் சீவனம்பண்ணினபொழுது, [23]அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்.

௮ இப்பொழுது கோபமும் மூர்க்கமும் துர்க்குணமும தூஷணமும், [24]நீங்கள் பேசின வம்பு வார்த்தைகளுமாகிய அவைகளை எல்லாம் [25]விட்டுவிடுங்கள்.

௯ [26]பழைய மனிதனையும், அதினுடைய செய்கைகளையும் நீங்கள் கழற்றிப்போட்டு, [27]தன்னைச் சிருட்டித்தவருடைய [28]சாயலுக்கு ஏற்ற [29]அறிவு உண்டாகும்படிக்கு, புதிதாக்கப்பட்ட புதியமனிதனைத் தரித்துக்கொண்டவர்களாய்,

௰ [30]ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்.

௰௧ அங்கே [31]கிரேக்கன் என்றும், யூதன் என்றும், விருத்தசேதனமுள்ளவன் என்றும், விருத்தசேதனமில்லாதவன் என்றும், புறத்தேசத்தான் என்றும், இஸ்கீத்தன் என்றும், அடிமை என்றும், சுயாதீனன் என்றும் (சொல்லப்பட்ட

கி. பி. ௬௪

[1] எபே ௪ ௰௫, ௰௬
[2] ௧ தீமோ ௪ ௩
[3] ஏசா ௨௯ ௰௩ மத் ௰௫ ௯ தீத் ௧ ௰௪
[4] ௧ தீமோ. ௪ ௮
[5] ௰௮ வச
* அல்லது அதை அசட்டைபண்ணுதலிலும
[6] ௮ வச
† அல்லது மூல காரணங்கள்
[7] ரோ ௬ ௩, ௭ ௪ கலா ௨ ௰௯ எபே ௨ ௰௫
[8] கலா ௪ ௩, ௯
[9] ரோ ௬ ௫ எபே ௨ ௬ கொலோ ௨ ௰௨
[10] ரோ ௮ ௩௪ எபே ௧ ௨௰
[11] ரோ ௬ ௨ கலா. ௨ ௨௰ கொலோ ௨ ௨௰
[12] ௨ கொரி ௫ ௭. கொலோ ௧ ௫
‡ அல்லது விரும்புகளை
[13] யோவா ௰௧ ௨௫ ௰௪ ௬
[14] ௧ யோ ௩. ௨
[15] ௧ கொரி ௰௫ ௪௩ பிலி ௩ ௨௧
[16] எபே ௫ ௩
[17] ௧ தெச ௪ ௫
[18] எபே ௫ ௫
[19] ரோ ௬ ௰௩
[20] ரோ ௮ ௰௩ கலா ௫ ௨௪
[21] ரோ ௧ ௰௮, எபே ௫ ௬ வெளி ௨௨ ௰௫
[22] எபே ௨ ௨
[23] ரோ ௬ ௰௯, ௨௰, ௭ ௫ ௧ கொரி ௬ ௰௧ எபே ௨ ௨, தீத் ௩ ௩
[24] எபே ௪.௨௯: ௫ ௪

[25] எபே ௪ ௨௨ ௧ பே ௨ ௧ எபி ௰௨ ௧ யாக், ௧ ௨௧ —[26] எபே ௪ ௨௨, ௨௪.—[27] எபே ௨ ௰ —[28] எபே. ௪ ௨௩, ௨௪ [29] ரோ ௰௨ ௨ —[30] [illegible]ோ ௰௯ ௰௧ எபே ௪ ௨௫ —[31] ரோ ௰ ௰௨ ௧ கொரி. ௰௨ ௰௩, கலா ௩. ௨௮ ௫ ௬ எபே ௬. ௮.

வேற்றுமை) இல்லை; [1]கிறிஸ்துவே எல்லாருக்குள்ளும் எல்லாமுமாய் இருக்கிறார்.

௰௨ ¶ அப்படியிருக்க, [2]நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயும், பரிசுத்தராயும், சிநேகிக்கப்பட்டவர்களாயும் இருக்கையால், [3]உருக்கமான இரக்கத்தையும் தயையையும் மனத்தாழ்மையையும் பொறுமையையும் நீடிய சாந்தத்தையும் [4]தரித்துக்கொண்டு,

௰௩ [5]ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவன் மற்றொருவன்மேல் விதனமாயிருந்தால்,* கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கு ஒருவர் மன்னியுங்கள்.

௰௪ [6]அன்றியும் அவைகள் எல்லாவற்றின்மேலும் [7]அன்பைத் தரித்துக்கொள்ளக்கடவீர்கள், [8]அதுவே பூரண சற்குணங்களை இணைக்கிற கச்சையாயிருக்கின்றது.

௰௫ அல்லாமலும் [9]பராபரனுடைய சமாதானம் உங்கள் இருதயங்களுக்குள்ளே ஆளுகைசெய்யக்கடவது; [10]நீங்கள் ஒரே சரீரமாய் இருக்கும்படிக்கு, [11]அந்தச் சமாதானத்திற்கு அழைக்கப்பட்டீர்களே. [12]நன்றியறிதல் உள்ளவர்களாயும் இருப்பீர்களாக.

௰௬ ¶ கிறிஸ்துவினுடைய வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாய் வாசமாயிருக்கக்கடவது; சகல ஞானத்தோடும் [13]சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும், மற்ற ஞானப்பாட்டுக்களினாலும், ஒருவருக்கு ஒருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, [14]பராபரனை உங்கள் இருதயங்களிலே இனிதாய்ப் பாடி,

௰௭ [15]நீங்கள் வசனம்சொன்னாலும், கிரியைசெய்தாலும், எவைசெய்தாலும், அவைகளை எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாய்ப் [16]பிதாவாகிய பராபரனைத் தோத்திரியுங்கள்.

௰௮ ¶ [17]ஸ்திரிகளே, [18]கர்த்தருக்கு ஏற்கும்படி உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்பட்டிருங்கள்.

௰௯ [19]புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; [20]அவர்களுக்குக் கசப்புக்கொடாதிருங்கள்.

௨௰ ¶ [21]பிள்ளைகளே, உங்களைப் பெற்றவர்களுக்கு [22]எவ்விதத்திலும் கீழ்ப்பட்டிருங்கள்; அதுவே பராபரனுக்குப் பிரியமாயிருக்கிறது.

௨௧ [23]பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.

௨௨ ¶ [24]வேலைக்காரரே, [25]சரீரத்தின்படி உங்களுக்கு எசமான்களானவர்களுக்கு, நீங்கள் [26]எவ்விதத்திலும் கீழ்ப்படிந்து, மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்கள்போல எசமான்கள் காணும்பொழுதுமாத்திரம் ஊழியம் செய்கிறவர்களாய் இராமல் பராபரனுக்குப் பயந்து, கபடமில்லாத இருதயத்தோடே கீழ்ப்படியுங்கள்.

௨௩ [27]மேலும், நீங்கள் கர்த்தாவாயிருக்கிற கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்கிறபடியால், சுதந்தரமென்னும் பலனைப் [28]பெறுவோம் என்று அறிந்தவர்களாய்,

௨௪ [29]எவைகளைச் செய்தாலும் அவைகளை எல்லாம் மனிதருக்காக அல்ல, கர்த்தருக்காகவே மனச்சந்தோஷமாய்ச் செய்யுங்கள்.

௨௫ அநியாயம்செய்கிறவன் தான் செய்த அநியாயத்தால் வரும் பலனை அடைவான், [30]பட்சபாதமே இல்லை.

கி. பி. ௯௪.

1 எபே ௧ ௨௩
2 ௧ தெச ௧ ௪. ௧ பே ௧ ௨ ௨ பே ௧ ௰
3 கலா ௫ ௨௨ பிலி ௨. ௧ எபே. ௪ ௨, ௩௨
4 எபே ௪. ௨௪
5 மாற ௰௪ ௨௫ எபே ௪ ௨, ௩௨
* அலலது முறைபபாடு பண்ணினால
6 ௧ பே ௪ ௮
7 யோவா ௰௩ ௩௪ உரோ ௰௩ ௮ ௧ கொரி ௰௩ எபே ௫ ௨ கொலோ ௨ ௨ ௧ தெச ௪.௯ ௧ தீமோ ௧ ௫ ௧ யோ ௩ ௨௩ ௪ ௨௧
8 எபே ௪ ௩
9 உரோ ௰௪ ௰௭ பிலி ௪ ௭
10 எபே ௨ ௰௬, ௰௭ ௪ ௪
11 ௧ கொரி ௭ ௰௫
12 கொலோ ௨ ௭ ௰௭.௫௪
13 ௧ கொரி ௰௪ ௨௬ எபே ௫ ௰௯
14 கொலோ ௪ ௬
15 ௧ கொரி ௰ ௩௧
16 உரோ ௧. ௮ எபே ௫ ௨௰ கொலோ ௧ ௰௨ ௨ ௭ ௧ தெச ௫.௰௮ எபி ௰௩ ௰௫
17 எபே ௫ ௨௨ தீத். ௨ ௫ ௧ பே ௩ ௧
18 எபே ௫ ௩
19 எபே ௫.௨௫, ௨௮,௩௩ ௧ பே ௩ ௭
20 எபே ௪ ௩௧
21 எபே ௬ ௧
22 எபே ௫ ௨௪ தீத ௨ ௯
23 எபே ௬. ௪
24 எபே ௬ ௫.௭ ௧ தீமோ ௬ ௧ தீத் ௨ ௯ ௧ பே.௨ ௰௮ —25 பிலே.௰௬.—26 ௨௰.௨௪.—27 ௧ கொரி.௭.௨௨.
28 எபே,௬.௮.—29 எபே ௬ ௬,௭ —30 உரோ.௨.௰௧ எபே ௬.௯. ௧ பே.௧ ௰௭. [illegible]

௪. அதிகாரம்.

௧. அவர்கள் ஜெபம்பண்ணவும், ௫ கிறிஸ்துவின மெய்யறிவுக்கு வந்து சேராதவர்களைக்குறித்து ஞானமாய் நடந்துகொள்ளவும் புத்திசொல்லி, ௰ அவாகளை வாழ்த்தினது

எசமான்களே, உங்களுக்கும் பரமண்டலங்களில் எசமான் இருக்கிறார் என்று அறிந்தவர்களாய் நீங்கள் வேலைக்காரருக்கு [1]நீதியுமாய்ச் செவ்வையுமாய் இருக்கிறதைக் கொடுங்கள்.

௨ ¶ [3]தோத்திரத்தோடே விண்ணப்பம்பண்ணுதற்கு விழித்திருந்து, [3]உறுதியாய் விண்ணப்பம் பண்ணுங்கள்.

௩ அவ்வேளையிலே [4]கிறிஸ்துவின் மறைபொருளின் நிமித்தம் [5]கட்டப்பட்டிருக்கிற நான் பேசவேண்டிய பிரகாரமாக அதை வெளிப்படுத்திப் பேசும்படிக்கு,
௪ [6]பராபரன் இந்த வசனத்திற்கு வாசலைத் திறக்கவேண்டுமென்று, [7]எங்களுக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.

௫ ¶ [8]நீங்கள் காலத்தைப் பற்றிக்கொண்டு, புறம்பானவர்களுக்குமுன்பாக [9]ஞானமாய் நடந்துகொள்வீர்களாக.

௬ நீங்கள் [10]அவனவனுக்குத் தகுதியான உத்தரவுசொல்லும் வகையை அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் [11]இனிதாயும், [12]உப்பால் இரசம் ஏற்றுகிறதுபோலவும் இருக்கக்கடவது.

௭ ¶ பிரியமான சகோதரனுமாய், உண்மையுள்ள ஊழியக்காரனுமாய், என்னுடனேகூடக் காத்தருக்கு வேலையாளுமாய் இருக்கிற தீகிக்கு என்பவன் [13]என் செய்திகளை எல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்.

௮ உங்கள் செய்திகளை அறிந்து, உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல் செய்யும்படிக்கு,
௯ நான் [14]அவனையும், உங்களில் ஒருவனாகிய உண்மையுள்ள பிரிய சகோதரனான [15]ஒநேசிமு என்பவனையும் உங்களிடத்திற்கு அனுப்பியிருக்கிறேன்; அவாகள் இவ்விடத்துச் செய்திகளை எல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

௰ ¶ என்னோடேகூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறவனாகிய [16]அரிஸ்தருக்கு என்பவனும், பருனபாவுக்கு இனத்தானாகிய [17]மாற்கு என்பவனும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்; இந்த மாற்கைக்குறித்துக் கட்டளைகளை அடைந்தீர்களே, அவன் உங்களிடத்தில் வரும்பொழுது அவனை அங்கிகரித்துக்கொள்ளுங்கள்.
௰௧ இயுஸ்து என்னப்பட்ட இயேசுவும் உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறான்; விருத்தசேதனம் உள்ளவர்களில் இவாகள்மாத்திரம் பராபரனுடைய இராச்சியத்திலே என்னுடனேகூட ஊழியக்காரராய் எனக்கு ஆறுதல்செய்துகொண்டுவந்தார்கள்.
௰௨ உங்களில் ஒருவனாயிருக்கிற கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய [18]எப்பாப்பிரா என்பவன் உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறான்; நீங்கள் பராபரனுடைய சித்தமானது எல்லாவற்றிலேயும் [19]நிலைநின்று தேறினவாகளுமாய் நிறைவுள்ளவர்களுமாய் * இருக்கும்படிக்கு [20]அவன் எப்பொழுதும் உங்களுக்காக விண்ணப்பங்களினால் போராடுகிறான் †
௰௩ அப்படியே அவன் உங்களுக்காகவும், இலாவோதிக்கையா இயேராப்பொலி என்னும் ஊர்களில் உள்ளவர்களுக்காகவும் மிகுந்த சாக்கிரதையுள்ளவனாய் இருக்கிறான் என்பதற்குச் சாட்சியாய் இருக்கிறேன்.
௰௪ பிரியமான வைத்தியனாகிய [21]லூக்கா என்பவனும் [22]தேமா என்பவனும் உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறார்கள்.

கி. பி. ௬௪.

[1] எபே ௬ ௯
[2] கொலோ ௨ ௭ ௧ ௰௫
[3] லூக் ௰௮ ௧ உரோ ௰௨ ௰௨ எபே ௬. ௰௮ ௧ தெச. ௫ ௰௭, ௰௮
[4] மத் ௰௩ ௰௧ ௧ கொரி ௪ ௧ எபே ௬. ௰௯ கொலோ ௧ ௨௬ ௨ ௨
[5] எபே ௬ ௨௰ பிலி ௧ ௭.
[6] ௧ கொரி ௰௬ ௯ ௨ கொரி ௨ ௰௨
[7] எபே ௬ ௰௯ ௨ தெச ௩ ௧
[8] எபே ௫ ௰௫
[9] எபே ௫ ௰௬ ௧ தெச ௪ ௰௨
[10] ௧ பே ௩ ௰௫
[11] பிரச ௰ ௰௨ கொலோ ௩ ௰௬
[12] மாற ௯ ௫௰
[13] எபே ௬ ௨௧
[14] எபே ௬ ௨௨
[15] பிலே ௰.
[16] அப ௰௯ ௨௯ ௨௰ ௪ ௨௭ ௨ பிலே ௨௪
[17] அப ௰௫ ௩௭ ௨ தீமோ. ௪ ௰௧
[18] கொலோ ௧ ௭ பிலே ௨௩
[19] மத் ௫. ௪௮ ௧ கொரி ௨. ௬ ௰௪ ௨௰ பிலி ௩ ௰௫ எபி ௫ ௰௪

* அலலது நிரப்பப்பட்டவாகளுமாய

[20] உரோ ௰௫ ௩௰

† அலலது பிரயாசப்படுகிறான

[21] ௨ தீமோ. ௪ ௰௧
[22] ௨ தீமோ. ௪ ௰ பிலே. ௨௪.

௰௫ ¶ இலாவோதிக்கையாவில் இருக்கிற சகோதரர்களுக்கும் நிம்பா என்பவனுக்கும் [1]அவன் வீட்டிலே கூடுகிற சபையாருக்கும் வாழ்த்துதலைச் சொல்லுங்கள்.

௰௬ [2]இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின், இது இலாவோதிக்கையா சபையிலும் வாசிக்கப்படும்படிக்கும், இலாவோதிக்கையாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசிக்கும்படிக்கும் செய்யுங்கள்.

௰௭ [3]அருகிப்புவை நோக்கி: நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றப் [4]பார்ப்பாயாக என்று சொல்லுங்கள்.

௰௮ ¶ [5]பவுலாகிய நான் உங்களுக்கு வாழ்த்துதல் செய்து, இதை என் கையினாலே எழுதினேன்; [6]நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள்; [7]கிருபை உங்களுடனே இருக்கக்கடவது.—ஆமென்.

கி. பி. ௬௰௪.

[1] ௨ரோ ௰௬ ௫ ௧ கொரி ௰௬ ௰௯
[2] ௧ தெச. ௫ ௨௭
[3] பிலே ௨
[4] ௧ தீமோ. ௪ ௬
[5] ௧ கொரி ௰௬ ௨௧ ௨ தெச ௩ ௰௭
[6] எபி ௰௩ ௩
[7] எபி ௰௩ ௨௫

I. THESSALONIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

தெசலோனிக்கேயருக்கு

எழுதின முதலாம் நிருபம்.

க. அதிகாரம்

க தெசலோனிக்கேயரைப் பவுல் எப்போதும் நினைவுகூர்ந்து அவர்களுக்காகத் தோத்திரமும் ஜெபமும் பண்ணினதையும், ரு அவர்களுடைய விசுவாசத்தின் நிச்சயத்தையும், அவர்களுடைய குணப்படுதலின் உத்தமத்தையுங்குறித்துத் தான் அடைந்திருந்த நிச்சயத்தையும் அறிவித்தது.

பவுலும் [1]சிலுவானும் தீமோத்தேயும், பிதாவாகிய பராபரனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கை ஊரிலுள்ள சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் [2]உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

உ ¶ பராபரனாலே அன்புகூரப்படுகிற சகோதரரே, [3]எங்கள் சுவிசேஷம் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும் [4]பரிசுத்தஆவியோடும் [5]மிகுந்த நிச்சயத்தோடும் உங்களுக்குள்ளே பிரவேசித்ததினாலே,

ங நீங்கள் (அவராலே) [6]தெரிந்துகொள்ளப் * பட்டவர்கள் என்று நாங்கள் அறிந்து,

ச நம்முடைய பிதாவாகிய பராபரனுக்குமுன்பாக விசுவாசத்தினாலே நீங்கள் செய்கிற [7]கிரியையையும், அன்பினாலே பண்ணுகிற [8]பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் உள்ள நம்பிக்கையினாலே காண்பிக்கிற பொறுமையையும், நாங்கள் [9]இடைவிடாமல் நினைத்துக்கொண்டு,

ரு எங்கள் ஜெபங்களிலே உங்களைக்குறித்துப் பேசி, உங்கள் எல்லாருக்காகவும், எப்பொழுதும் [10]பராபரனைத் தோத்திரம்செய்கிறோம்.

சு [11]நாங்கள் உங்களுக்குள்ளே இருந்தபொழுது, உங்களுக்காக இப்படிப்பட்டவர்களாய் இருந்தோம் என்று அறிந்திருக்கிறீர்களே; அன்றியும், நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே [12]பரிசுத்தஆவியின் சந்தோஷத்தோடே வசனத்தை ஏற்றுக்கொண்டு, [13]எங்களையும் கர்த்தரையும் பின்பற்றி,

எ இப்படி மக்கேதோனியா நாட்டிலும், அகாயா நாட்டிலும் உள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரியை வைத்தீர்கள்.

அ எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய [14]வசனம் மக்கேதோனியா அகாய[illegible]டுகெ

கி. பி. ருச.

1 உ கொரி க மகூ உ தெச. க க க பே ங மஉ
2 எபே க உ
3 மாற மகூ உம க கொரி உ ச ச உம
4 உ கொரி சு கூ
5 கொலோ உ உ எபி உ கூ
6 கொலோ கூ மஉ உ தெச உ மகூ
* அல்லது அன்புகூரப்படுகிற சகோதரரே, நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ள.
7 யோவா சு உகூ கலா ஙு சுக தெச கூ சு உ தெச ச கூ, மக யாகூ உ மஎ
8 உரோ மகூ சு எபி சு ம
9 க தெச உ மகூ
10 உரோ க அ எபே க மகூ பிலே ச
11 க தெச உ க, கு, ம, மக உ தெச கூ எ
12 அப கு சக, எபி ம கச

13 க கொரி ச மகூ மகக பிலி க மஎ. க தெச உ மச உ தெச க கூ — 14 உரோ. ம ௰அ.

ளில் பிரசித்தமானதுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து எதையாகிலும் சொல்லவேண்டியிராதபடிக்கு, நீங்கள் பராபரனைப்பற்றின விசுவாசம் [1]எவ்விடங்களிலேயும் வெளியரங்கமாயிற்று.

௯ [2]நாங்கள் உங்களிடத்தில் அடைந்த பிரவேசம் இப்படியிருந்ததென்றும், சீவனையுடைய மெய்யான தேவனுக்குப் பணிவிடை செய்யும்படிக்கும், [3]அவர் மரித்தோரிலிருந்து எழுப்பினவருமாய், [4]இனி வரும் கோபாக்கினையில் நின்று நம்மை இழுத்து இரட்சிக்கிறவருமாய் இருக்கிற [5]அவருடைய குமாரனாகிய இயேசுவைப் [6]பரமண்டலங்களிலிருந்து வரப்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும்,

௰ [7]நீங்கள் விக்கிரகங்களை விட்டு, பராபரனிடத்திற்கு இவ்விதமாய் மனந்திரும்பினீர்கள் என்றும் அவர்கள் தாமே அறிவிக்கிறார்களே.

௨. அதிகாரம்

௧ தெசலோனிக்கேயருக்குள் சுவிசேஷம் வந்து பிரசங்கிக்கப்பட்ட விதத்தையும், அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட விதத்தையும், ௰௭ பரிசுத்தவானாகிய பவுல் வெகுகாலம் அவர்களிடத்திற்கு வராதிருந்ததற்கும், அவர்களை வந்து பார்க்க விருப்பமுடையவனாயிருந்ததற்கும் முகாந்தரத்தையும் சொல்லியது.

அன்றியும் சகோதரரே, [8]உங்களிடத்திலே நாங்கள் அடைந்த பிரவேசம் வீணாய் இருக்கவில்லை என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்.

௨ அல்லாமலும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே [9]பிலிப்புப்பட்டணத்திலே நாங்கள் பாடுகளையும் நிந்தைகளையும் அடைந்திருந்தும், பராபரனுடைய சுவிசேஷத்தை அதிக [10]போராட்டத்தோடே [11]உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய பராபரனாலே [12]தயிரியமுள்ளவர்களாய் இருந்தோம்.

௩ [13]அன்றியும் எங்கள் போதகம் வஞ்சகத்திலும், அசுத்தத்திலுமிருந்து தோன்றவில்லை, அது கபடமுள்ளதாயிருக்கவுமில்லை.

௪ [14]சுவிசேஷத்தை எங்களுக்கு ஒப்புவிக்கத்தக்கதாக, [15]பராபரன் எங்களை உத்தமரென்று எண்ணினபடியே நாங்கள் மனிதருக்கு அல்ல, [16]எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற பராபரனுக்கே [17]பிரியமாய்ச் சொல்லுகிறோம்.

௫ ஆனதால் உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் [18]ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவும் இல்லை; பொருளாசையை மூடிக்கொண்டு நடக்கவும் இல்லை; அதற்குப் [19]பராபரனே சாட்சியாய் இருக்கிறார்.

௬ உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது [20]நாங்கள் மனிதர் மகிமையைத் தேடவும் இல்லை; [21]நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராய் இருக்கிறபடியால், (உங்கள்மேல்) [22]பாரத்தை [23]ஏற்றலாமே.*

௭ அப்படியிருந்தும், தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, [24]உங்களுக்கு லகுவுண்டாக நடந்தோம்.

௮ இப்படி நாங்கள் உங்கள்மேல் மிகவும் விருப்பமாயிருந்து, பராபரனுடைய சுவிசேஷத்தை மாத்திரமல்ல, நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, [25]எங்கள் சீவனையும் உங்களுக்குப் பகிர்ந்துகொடுக்க [26]மனதாயிருந்தோம்.

௯ அன்றியும் சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும், வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; [27]உங்களில் ஒருவனுக்காகிலும் பாரமாயிராதபடிக்கு, [28]இரவும்பகலும் நாங்கள் வேலைசெய்

கி. பி. ௫௪.

1 உரோ ௧ ௮
௨ தெச ௧ ௪
2 ௧ தெச ௨ ௧.
3 அப ௨ ௨௪
4 மத் ௩ ௭
உரோ ௫ ௯
௧ தெச ௫ ௯
5 உரோ ௨ ௭
பிலி. ௩ ௨௰
தீத ௨ ௰௩
௨ பே ௩ ௰௨.
வெளி ௧ ௭.
6 அப ௧ ௰௧
௧ தெச ௪ ௰௬
௨ தெச ௧ ௭
7 ௧ கொரி ௰௨
௨ கலா ௪ ௮
8 ௧ தெச ௧ ௫, ௯
9 அப. ௰௬ ௨௨
10 பிலி ௧ ௩௰
கொலோ ௨ ௧
11 அப. ௰௭ ௨.
12 ௧ தெச ௧ ௫
13 ௨ கொரி ௭
௨ ௬ வச
௨ பே ௧ ௰௬
14 ௧ கொரி ௯
௰௭ கலா ௨ ௭
தீத ௧ ௩
15 ௧ கொரி ௭
௨௫ ௧ தீமோ
௧ ௰௧, ௰௨.
16 வாக் ௰௭ ௩
உரோ ௮ ௨௭
17 கலா ௧ ௰
18 அப ௨௰ ௩௩
௨ கொரி ௨
௰௭ ௪ ௨ ௭
௨ ௰௨ ௰௭
19 உரோ ௧ ௯
20 யோவா ௫
௪௧, ௪௪ ௰௨
௪௩ ௧ தீமோ
௫ ௰௭
21 ௧ கொரி ௯
௧, ௨, ௬
22 ௨ கொரி ௰௧
௯ ௰௨ ௰௩ ௰௪
௨ தெச ௩ ௮
23 ௧ கொரி ௯
௪, ௬, ௰௨, ௰௮
௨ கொரி ௰ ௧,
௨, ௰, ௰௧ ௰௩ ௰
௨ தெச ௩ ௯
பிலே ௮, ௯
வச

* அல்லது அதிகாரத்தைச் செய்யலாமே

24 ௧ கொரி. ௨ ௩ ௯ ௨௨. ௨ கொரி ௰௩ ௪ ௨ தீமோ ௨. ௨௪ —25 ௨ கொரி. ௰௨ ௰௫. —26 உரோ ௧ ௰௧ ௰௫ ௨௯.
27 ௨ கொரி ௰௨ ௰௧, ௰௪ —28 அப ௨௰ ௩௪. ௧ கொரி ௪ ௰௨ ௨ கொரி ௰௧ ௯ ௨ தெச ௩ ௮

து, பராபரனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கிததோமே.

௰ விசுவாசிகளாகிய உங்களுடனே நாங்கள் [1]எவ்வளவு பரிசுத்தமாகவும், நீதியாகவும், பிழையிலலாமையாகவும் இருந்ததற்கு, நீங்களும் பராபரனேடேகூட [2]சாட்சிகளாய் இருக்கிறீர்கள்.

௰௧ மேலும் தம்முடைய [3]இராச்சியத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்திருக்கிற பராபரனுக்கு [4]நீங்கள் பாத்திரமாய் நடககவேண்டும் என்று,

௰௨ தகபபன் தன் பிள்ளைகளுககுச் செய்கிறதுபோல, நாங்கள் உங்களில் யாவருக்கும் புத்தியும் ஆறுதலும் சாட்சியும் சொன்னதை அறிந்திருக்கிறீகள்

௰௩ ¶ ஆகையால், நீஙகள் பராபரனுடைய வசனததை எங்களாலேகேள்விப்பட்டுஎற்றுக்கொண்டபொழுது [5]அதை மனிதர் வசனமென்று அல்ல, பராபரனுடைய வசனமென்றே ஏற்றுக்கொண்டதினலே, நாஙகள் [6]இடைவிடாமல் பராபரனுக்குத் தோத்திரம் செலுத்துகிறோம்; அது மெய்யாய் அவருடைய வசனம்தான்; விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பலனும் செய்கின்றது.

௰௪ எபபடியெனில், சகோதரரே, நீங்கள் யூதேயா நாட்டிலே கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பராபரனுடைய [7]சபைகளைப பின்பற்றினவர்களாகிய, [8]அவர்கள் யூதராலே பாடுபட்டதுபோல [9]நீஙகளும் உங்கள் சுய கோத்திரத்தாராலே பாடுபட்டீர்கள்.

௰௫ அந்த யூதர்கள் [10]கர்த்தராகிய இயேசுவையும், [11]தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலைசெய்து, எங்களையும் துன்பபபடுத்தி,* இபபடிப பராபரனுக்குப் பிரியமாயிராதவர்களுமாய், [12]மனிதர் யாவருக்கும் விரோதிகளுமாய் இருக்கிறார்கள்.

௰௬ [13]அவர்கள் தங்கள் பாவஙகளை எபபொழுதும், நிறைவாககத்தக்கதாக, புறத்தேசத்தார் இரட்சிக்கப்படுதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் [14]தடைபண்ணுகிறார்கள்; [15] கோபாக்கினை அதிசீக்கிரமாய் அவர்களுக்கு வருகின்றது.

௰௭ ¶ சகோதரரே, நாங்கள் இருதயத்தினல் அல்ல, [16]முகமுகமாய் (மாத்திரம்) கொஞ்சக்காலம் உங்களைக் காணமல் பிரிந்திருநதபடியினலே [17]உஙகள் முகத்தைப் பார்க்கவேண்டும் என்று, மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினேம்.

௰௮ ஆனபடியினலே உங்களிடத்தில் வருகிறதற்கு நாங்கள் இரண்டொருதரம் மனதாய் இருந்தோம்; பவுலாகிய நான் விசேஷமாக அபபடியிருந்தேன்; [18]சாத்தான்மாத்திரம் எஙகளுக்குத் தடைபண்ணினன்.

௰௯ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து [19]வரும்பொழுது, அவருடைய சந்நிதானத்திலே யார் [20]எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், [21]புகழ்ச்சியாகிய† கிரீடமும் வருவதற்கு ஏதுவாய் இருப்பார்கள், நீங்களல்லவோ அபபடியிருப்பீர்கள்?

௨௰ நீங்கள் எங்களுக்கு மகிமையுமாய்ச் சந்தோஷமுமாய் இருக்கிறீர்களே.

௩. அதிகாரம்.

௧ அவர்களைப பலபபடுத்தித் தேற்றும்படி தீமோத்தேயுவை அவாகளிடத்தில் அனுபபினதினலும, அவர்களுடைய நற்சீரில தான சந்தோஷபபட்டதினலும், ௬ அவாகளுக்காகச் செபமபண்ணி அவாகளிடத்தில் சுகமாய வந்து சேரவிருமபினதினலும பவுல் தெசலோனிக்கேயர்பேரில் தனக்கிருந்த பெரிய அனபைப பாராட்டினது.

௧ ஆகையால், [22]நாங்கள் அதிகமாய்ப பொறுக்கமாட்டாமல் [23]அத்தேனே பட்டணத்திலே தனித்து விடபபட விரும்பி,

௨ [24]இந்த உபத்திரவங்களினலே

கி. பி. ௫௪.

1 ௨ கொரி ௭ ௨. ௨ தெச ௧ ௭
2 ௧ தெச ௧ ௫
3 ௧ கொரி ௧ ௯. ௧ தெச ௫ ௨௪. ௨ தெச ௨ ௰௪. ௨ தீமோ ௧ ௯.
4 எபே ௪ ௧ பிலி ௧ ௨௭ கொலோ ௧ ௰ ௧ தெச ௪ ௧
5 மத் ௰ ௪௰ கலா ௪ ௰௪ ௨ பே ௧ ௨
6 ௧ தெச ௧ ௬
7 கலா ௧ ௨௨
8 எபி ௰௩, ௩௪
9 அப ௰௭ ௫, ௰௩
10 அப ௨ ௨௩ ௩ ௰௫ ௫ ௩௰ ௭ ௫௨
11 மத் ௫ ௰௨ ௨௩ ௩௪, ௩௭ லூக ௰௩ ௩௩, ௩௪ அப ௭ ௫௨
* அலலது வெளியே துரததி
12 எஸ ௩ ௮
13 ௧ மோ ௰௫ ௰௬. மத் ௨௩ ௩௨.
14 லூக் ௰௧ ௫௨ அப ௰௩ ௫௰ ௰௪ ௫. ௰௯ ௰௭ ௫, ௰௩ ௰௮ ௰௨ ௰௯ ௯ ௨௨ ௨௧, ௨௨
15 மத ௨௪ ௯, ௰௪
16 ௧ கொரி. ௫ ௩ கொலோ ௨ ௫
17 ௧ தெச ௩ ௰
18 ரோ ௧ ௰௩ ௰௫ ௨௨
19 ௧ கொரி ௰௫ ௨௩ ௧ தெச ௩ ௰௩ வெளி ௧ ௭ ௨௨ ௰௨.
20 ௨ கொரி ௧ ௰௪ பிலி ௨ ௰௬ ௪ ௧
21 யாக் ௰௯ ௧௨.
† அல்லது சந்தோஷமாகிய
22 ௫ வச
23 அப ௰௭ ௰௫
24 எபே. ௩ ௰௩.

ஒருவரும் அசைக்கப்படாதபடிக்கு, உங்கள் விசுவாசத்தைக்குறித்து உங்களை ஸதிரப்படுத்தும்பொருட்டாக, நமமுடைய சகோதரனுமாய், பராபரனுடைய ஊழியக்காரனுமாய், கிறிஸ்துவின சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாய் இருக்கிற [1]தீமோத்தேயுவை அனுபபினேம்

௩ நீங்களே அறிநதிருக்கிறபடி [2]இபபடிபபட்டதைச் சகிககிறதற்கு நாம் வைக்கபபட்டிருககிறேமே.

௪ மேலும் நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உஙகளிடததில இருந்தபொழுது, [3]உங்களுக்கு முனனறிவிததோமே; அபபடியுமநடநதது; அதை நீஙகள் அறிநதிருக்கிறீர்கள்.

௫ ஆனபடியினலே [4]நான் அதிகமாயப பொறுக்கமாட்டாமல, [5]எஙகள வேலை வீணய்பபோகத்தக்கதாகச் [6]சோதனைககாரன் உஙகளைச சோதனைக்கு உட்படுத்தினது உண்டோ என்று உஙகள விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுபபினேன்.

௬ ¶ சகோதரரே, இபபொழுது [7]தீமோத்தேயு உங்களிடத்திலிருநது எங்களிடததில் வந்து, நீஙகள் விசுவாசமாயும் அன்பாயும் இருநது, எபபொழுதும் எஙகளை நன்றாய் நினைத்துக்கொண்டு,

௭ [8]நாஙகள் உங்களைக் காண மிகுநத ஆசையாய் இருக்கிறது போல, நீஙகளும் எஙகளைக் காண ஆசையாய் இருக்கிறீர்கள் என்று எங்களுக்கு நற்செய்தியைச் சொன்னவுடனே எங்களுடைய [9]உபத்திரவம் இடுக்கண் யாவற்றிலேயும், உங்கள் விசுவாசத்தினலே உங்களைக்குறித்து ஆறுதல் அடைந்தோம்.

௮ நீங்கள் [10]கர்த்தரிடத்தில் நிலைநிற்கிறதால் இபபொழுது பிழைக்கிறோம்.

௯ அல்லாமலும் நாங்கள் உங்களைக்குறித்து நம்முடைய பராபரனுடைய சந்நிதானததிலே அடைநதிருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காகப [11]பராபரனுக்கு எநதத தோத்திரம் செலுத்துவோம்?

௰ உங்கள் [12]முகத்தைக் கண்டு [13]உங்கள் விசுவாசததின் குறைவுகளை நீககி, நிறைவு உண்டாக்குமபொருட்டாக, [14]இரவும்பகலும் [15]மிகவும் வேண்டுதல்செய்கிறோம்.

௰௧ அந்தபபடியே நம்முடைய பிதாவாகிய பராபரனும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும், [16]எங்கள வழியை உங்களிடத்திற்கு (நேராக்ககடவர்).*

௰௨ அல்லாமலும் நாங்கள் உங்கள்மேல் வைத்திருக்கிற அன்புக்கு ஒபபாய், [17]நீஙகளும் ஒருவரிடத்தில் ஒருவரும், மற்றெந்த மனிதரிடதநிலும் அதிகமாய் நிறைந்த அன்புள்ளவர்கள் ஆகும்படி [18]கர்ததா செய்து,

௰௩ இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுககிறிஸ்து [19]தம்முடைய பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்பொழுது, நீஙகள நம்முடைய பிதாவாகிய பராபரனுக்குமுன்பாகப பிழையில்லாத பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கும்படி, [20]உங்கள் இருதயஙகளை ஸ்திரபபடுத்தக்கடவர்.

௪. அதிகாரம்.

௧ பரிசுத்தமும, ௩ சனமாக்கமுமாய நடக்கவும, ௯ ஒருவரை ஒருவா சிநேகிக்கவும, ௰௧ அமைதலாயத் தஙகள சொநத அலுவலகளைச்செயயவும், ௰௩ மரித்தவாகளுக்காக மட்டாயத் துக்கஙகொணடாடவும புததிசொலலி, ௰௬ உயிரதெழுதலின மேலும கிறிஸது நியாயாதிபக்க உலகத்தில் இரண்டாமவிசை வருவதைக்குறிததும சில நியாயஙகள் சொலலியது

மேலும் சகோதரரே, [21]நீங்கள் இன்ன இன்னபிரகாரமாக நடக்கவும [22]பராபரனுக்குப் பிரியமாய் இருக்கவும் வேண்டுமென்று எங்களால் [23]ஏற்றுக்கொண்டபடியே அதிகமதிகமாய்ப் பெருகும்படிக்

கி. பி. ௫௪.

1 உரோ ௰௬ ௨௧. ௧ கொரி ௰௬ ௰ ௨ கொரி ௧ ௰௯
2 அப ௯ ௰௬ ௰௪ ௨௨ ௨௰ ௨௩ ௨௧ ௰௧ ௧ கொரி ௪ ௯ ௨ தீமோ. ௩ ௰௨ ௧ பே ௨ ௨௧.
3 அப ௨௰ ௨௪
4 ௧ வச
5 கலா ௨ ௨ ௪ ௰௧ பிலி ௨ ௰௬
6 ௧ கொரி ௭ ௫ ௨ கொரி ௰௧ ௩
7 அப ௰௮ ௧,௫
8 பிலி ௧ ௮
9 ௨ கொரி ௧ ௪ ௭ ௬,௭, ௰௩
10 பிலி ௪ ௧
11 ௧ தெச ௧ ௨
12 ௧ தெச ௨ ௰௭
13 ௨ கொரி ௰௩, ௯,௰௧ கொலோ ௪ ௰௨
14 அப ௨௬ ௭ ௨ தீமோ ௧ ௩
15 உரோ ௧ ௰, ௰௫ ௩௨
16 மாற் ௧ ௩
* அலலது காடடக்கடவர்
17 ௧ தெச ௪ ௯ ௫ ௰௫ ௨ பே ௧ ௭
18 ௧ தெச ௪ ௰
19 சகரி ௰௪ ௫ யூதா ௰௪
20 ௧ கொரி ௧ ௮ பிலி ௧ ௰
21 ௧ தெச ௫ ௨௩ ௨ தெச ௨ ௰௭ ௧ யோ ௩ ௨௰, ௨௧
22 ௧ தெச ௨ ௰௨ கொலோ ௧ ௰
23 பிலி ௧ ௨௭ கொலோ. ௨ ௬

ளுக் கர்த்தராகிய இயேசுவினாலே உங்களை வேண்டிக்கொண்டு* புத்திசொல்லுகிறோம்.†

௨ கர்த்தராகிய இயேசுவினால் நாங்கள் உஙகளுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீககளே.

௩ நீஙகள் [1]பரிசுத்தமுள்ளவர்கள் ஆகிறதே [2]பராபரனுடைய சித்தமாயிருக்கிறது; [3]அநதபபடிநீஙகள் வேசிமாாககத்திற்கு விலகி,

௪ [4]பராபரனை அறியாத[5] அஞ்ஞானிகளைபபோல [6]விரகதாபமாகிய இச்சைக்கு உள்ளாகவல்ல,

௫ பரிசுத்தத்திற்கும், கனத்திற்கும் உளளாகவே உஙகளில் அவனவன் தன்தன் சரீரபாண்டததைக் [7]காத்துக்கொள்ளுதற்கு வகையை அறிந்து,

௬ இநதச் [8]செய்கையினாலே‡தன் சகோதரனை ஒடுக்காமலும், வஞ்சியாமலும்§ இருக்கவேண்டும், முன்னேயும் நாஙகள் உங்களுக்குச் சொல்லிச் சாட்சிகொடுத்தபடி, இபபடிபபட்ட எல்லாவற்றையும்குறிததுக் கர்த்தர் நீதியாய்ப [9]பழிவாங்குகிறவராய் இருக்கிறாரே.

௭ பராபரன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல, [10]பரிசுத்தத்திற்கு அழைத்தாரே.

௮ ஆனதால் [11]அசட்டைபண்ணுகிறவன்|| மனிதனை அல்ல, [12]தமது பரிசுதத ஆவியை எஙகளுக்குக கொடுத்த பராபரனையே அசட்டைபண்ணுகிறான்.

௯ ¶ சகோதர [13]சிநேகத்தைக்குறித்து நான் உங்களுககு எழுத வேண்டுவதில்லை; நீங்கள்தாமே [14]ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருக்கும்படிக்குப [15]பராபரனால் போதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறீர்களே.

௰ அந்தப்படியேயும நீஙகள் மக்கேதோனியா நாட்டில் எங்குமுள்ள [16]சகோதரர் எல்லாருக்கும செய்துவருகிறீாகள்.

௰௧ இன்னும் சகோதரரே, [17]அதிலே நீஙகள அதிகமாய்ப் பெருகவும், [18]புறம்பே இருக்கிறவாகளுக்கு நீஙகள யோக்கியமாய் நடந்து,

௰௨ ஒரு குறைவையும்¶ அடையாதபடிககு, நாஙகள் உங்களுககுக் கட்டளையிட்டபடி அமைதலாயிருக்க மிகுதியாய விரும்பவும, [19]உஙகளுடைய சொநத அலுவலைப பாாததுககொள்ளவும், [20]உங்கள் சொநதக கைகளினால் வேலைசெய்யவும் வேண்டும் என்று உஙகளுககுப புததிசொல்லுகிறோம்.

௰௩ ¶ அல்லாமலும் சகோதரரே, [21]நம்பிக்கை அற்றவர்களைபபோல [22]நீஙகளும துககபபடாதபடிக்கு, நிததிரை அடைநதவர்களைக்குறித்து நீஙகள் அறியாமல் இருககிறது எனக்கு விருபபமில்லை

௰௪ என்னததினாலெனில், [23]இயேசுவானவர் மரிததுப பின்பு எழுநதிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறதுபோல, [24]இயேசுவைப பற்றி நிததிரை அடைநதவாகளையும் பராபரன் அவரோடேகூடப புறபபடபபணணுவார்.

௰௫ மேலும் [25]காத்தருடைய வாாத்தையினபடி நாஙகள் உஙகளுக்கு அறிவிக்கிறது என்னவென்றால், காததர் வரும்பொழுது உயிரோடே மீதியாயிருக்கும் [26]நாம் நித்திரை அடைநதவர்களுக்கு முந்திககொள்வதில்லை.

௰௬ அதெபபடியெனில், [27]கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதன் இடும் சத்தத்தோடும், [28]தேவ எக்காளத்தோடும் வானத்

கி. பி. ௫௪.

* அலலது மன்றாடிக்கொண்டு

† அலலது வேண்டிககொளளுகிறோம

1 எபே ௫ ௨௭

2 உரோ ௰௨ ௨; எபே ௫ ௰௭

3 ௧ கொரி ௬. ௰௫, ௰௮; எபே ௫ ௩; கொலோ ௩ ௫

4 ௧ கொரி ௰௫ ௩௪. கலா ௪ ௮; எபே ௨ ௰௨; ௪ ௰௮; ௨ தெச ௧ ௮

5 எபே ௪ ௰௭, ௰௮

6 கொலோ ௩ ௫; உரோ ௧ ௨௪, ௨௬

7 உரோ ௬ ௰௩; ௧ கொரி ௬ ௰௫, ௰௮

8 ௩ மோ ௰௯ ௰௧, ௰௩; ௧ கொரி ௬. ௮

‡ அலலது யாதொரு செயகையினாலே

§ அலலது நெருககாமலும

9 ௨ தெச ௧ ௮

10 ௩ மோ ௰௧ ௪௪; ௰௯ ௨; ௧ கொரி ௧ ௨; எபி ௰௨ ௰௪; ௧ பே ௧ ௰௪, ௰௫

11 லூக் ௰ ௰௬

|| அலலது தளளுகிறவன

12 ௧ கொரி ௨ ௰; ௭ ௪௰; ௧ யோ ௩ ௨௪

13 ௧ தெச ௫ ௧

14 மத் ௨௨ ௩௯; யோவா ௰௩ ௩௪; ௰௫ ௰௨; எபே ௫ ௨; ௧ பே ௪ ௮; ௧ யோ ௩ ௰௧, ௨௩; ௪ ௨௧

15 எரே ௩௧ ௩௪; யோவா ௬ ௪௫; ௪ ௰௪ ௨௬

எபி ௩ ௰௧; ௧ யோ. ௨. ௨௰, ௨௭ —16 ௧ தெச ௧ ௭ —17 ௧ தெச ௩ ௰௨ —18 உரோ ௰௩ ௰௩; ௨ கொரி ௮ ௨௧; கொலோ ௪ ௫; ௧ பே ௨ ௰௨ —¶ அலலது குறைவுக்காக ஒரு மனிதனிடத்திலும் —19 ௨ தெச ௩ ௰௧; ௧ பே ௪ ௰௫ —20 அப ௨௰ ௩௫; எபே ௪ ௨௮; ௨ தெச ௩ ௭, ௮, ௰௨. —21 எபே ௨ ௰௨ —22 ௩ மோ ௰௯ ௨௮; ௫ மோ ௰௪ ௧, ௨; ௨ சாமு ௰௨ ௨௰ —23 ௧ கொரி ௰௫ ௰௩ —24 ௧ கொரி ௰௫ ௰௮, ௨௩; ௧ தெச ௩ ௰௩. —25 ௧ இரா ௰௩ ௰௭, ௰௮; ௨௰ ௩௫ —26 ௧ கொரி. ௰௫ ௫௧ —27 மத் ௨௪ ௩௰, ௩௧; அப ௧ ௰௧. ௨ தெச. ௧ ௭ —28 ௧ கொரி ௰௫ ௫௨

திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவிலிருந்து [1]மரித்தவர்கள் முதலாவது எழும்புவார்கள்.

௰௭ பின்பு [2]உயிரோடே மீதியான நாமும் ஆகாயத்தில் வருகிற கர்த்தாவுக்கு நேராக அவர்களோடேகூட [3]மேகங்களில் எடுத்துக்கொண்டுபோகப்பட்டு, இப்படி எப்பொழுதும் [4]கர்த்தருடனேகூட இருப்போம்.

௰௮ ஆகையால் இந்த வார்த்தைகளினாலே [5]நீங்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல்செய்யுங்கள்.*

௫. அதிகாரம்.

௧ கிறிஸ்து நியாயந்தீர்க்கவருவதைக்குறித்துச் சொல்லி, ௰௪ பல புத்திமதிகளைப் படிப்பித்து, ௨௩. நிருபத்தை முடித்தது.

இவைகள் நடக்கும் [6]காலங்களையும் நேரங்களையுங்குறித்துச் சகோதரரே, [7]நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை.

௨ இரவிலே திருடன் வருகிற விதமாய், [8]கர்த்தருடைய நாள் வரும் என்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

௩ சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்பொழுது, [9]கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, [10]அழிவு சடுதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதே இல்லை.

௪ ¶ சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களையும் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, [11]நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள் அல்ல

௫ நீங்கள் எல்லாரும் [12]ஒளியின் பிள்ளைகளுமாய், பகலின் பிள்ளைகளுமாய் இருக்கிறீர்களே, நாம் இரவுக்கும், அந்தகாரத்திற்கும் உள்ளானவர்கள் அல்ல

௬ ஆகையால் மற்றவர்களைப்போல [13]நாம் தூங்காமல் [14]விழித்துக்கொண்டு தெளிவாய் இருக்கக்கடவோம்.

௭ [15]தூங்குகிறவர்கள் இராத்திரியில் தூங்குவார்களே; [16]வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியில் வெறிகொள்ளுவார்களே.

௮ பகல் மனிதராகிய நாம், விசுவாசம் அன்பு என்னும் [17]மார்பின் கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டு தெளிவாயிருக்கக்கடவோம்

௯ [18]பராபரன் நம்மைக் கோபாக்கினைக்கு ஆல்ல, [19]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துமூலமாய் இரட்சிப்பை அடைந்துகொள்ளுதற்கு ஏற்படுத்தினாரே.

௰ நாம விழித்திருப்பவர்களானாலும், நித்திரை அடைந்தவர்களானாலும தம்முடனேகூட உயிரோடிருக்கும்படிக்கு, [20]அவர் நமக்காக மரித்தாரே.

௰௧ [21]ஆகையால், நீங்கள் செய்துவருகிறதுபோல ஒருவருக்கு ஒருவர் ஆறுதல்† சொல்லி, ஒருவரை ஒருவர் ஊன்றக்கடவீர்கள்.

௰௨ ¶ அன்றியும் சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள்ளாக உங்களுக்கு முதலாளிகளாய் இருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிற பேர்களை [22]நீங்கள் அறிந்துகொண்டு,

௰௩ அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படிக்கு உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்; [23] உங்களுக்குள்ளே சமாதானமாய் இருப்பீர்களாக.

௰௪ ¶ அன்றியும் சகோதரரே, நாங்கள் உங்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லுகிறது‡ என்னவென்றால், [24]ஒழுங்கில்லாதவர்களுக்குப்§ புத்திசொல்லுங்கள்; [25]திடனற்றவர்களுக்கு ஆறுதல்செய்

கி. பி. ௫௪

1 ௧ கொரி ௰௫ ௨௩, ௫௨.
2 ௧ கொரி ௰௫ ௫௧
3 அப ௧ ௯ வெளி ௰௧ ௰௨
4 யோவா ௰௨ ௨௬ ௰௪ ௩ ௰௭ ௨௪
5 ௧ தெச ௫ ௰௧
* அல்லது புத்தி சொல்லுங்கள்
6 மத் ௨௪ ௩, ௩௬ அப ௧ ௭
7 ௧ தெச ௪ ௯
8 மத் ௨௪ ௪௩, ௪௪ ௨௫ ௰௩ லூக் ௰௨ ௩௯, ௪௰ ௨ பே ௩ ௰ வெளி ௩ ௩ ௰௬ ௰௫
9 எரே ௰௩ ௨௧ ஓசே ௰௩ ௰௩
10 ஏசா ௰௩ ௬-௯
11 உரோ ௰௩ ௰௨, ௰௩ ௧ யோ ௨ ௮
12 எபே ௫ ௮
13 மத் ௨௫ ௫
14 மத் ௨௪ ௪௨ ௨௫ ௰௩ உரோ ௰௩ ௰௧, ௰௨, ௰௩ ௧ பே ௫ ௮
15 லூக் ௨௧ ௩௪, ௩௫ உரோ ௰௩ ௰௩ ௧ கொரி ௰௫ ௩௪ எபே ௫ ௰௪
16 அப ௨ ௰௫
17 ஏசா ௫௯ ௰௭ எபே ௬ ௰௪, ௰௬, ௰௭
18 உரோ ௯ ௨௨ ௧ தெச ௧ ௰ ௧ பே ௨ ௮ யூதா ௪
19 ௨ தெச ௨ ௰௩, ௰௪
20 உரோ ௰௪ ௮, ௯ ௨ கொரி ௫ ௰௫.
21 ௧ தெச ௪ ௰௮.
† அல்லது புத்தி
22 ௧ கொரி ௰௬ ௰௮ பிலி ௨ ௨௯ ௧ தீமோ ௫ ௰௭ எபி ௰௩ ௭, ௰௭

---

23 மாற் ௯ ௫௰ —‡ அல்லது உங்களை மன்றாடுகிறது —24 ௨ தெச ௩ ௬, ௰௧, ௰௨.—§ அல்லது அடங்காத —25 எபி ௰௨, ௰௨

யுங்கள். [1]பெலஈனரைத் தாங்குங்கள்; [2]எல்லாருக்கும் நீடியசாந்தமாய் இருங்கள்.

௰௫ ¶ [3]எவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமையைச் செய்யாமல், எப்பொழுதும் உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் [4]நன்மைசெய்யப் பின்தொடரும்படி எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

௰௬ ¶ [5]எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; [6]இடைவிடாமல் செபம்பண்ணுங்கள்.

௰௭ [7]எல்லாவற்றிலேயும் தோத்திரம்செய்யுங்கள்.

௰௮ அப்படிச் செய்கிறதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துப் பராபரனுடைய சித்தமாய் இருக்கின்றது.

௰௯ ¶ [8]ஆவியை அடக்கிப்போடாதிருப்பீர்களாக.

௨௰ [9]தீர்க்கதரிசனங்களை அசட்டைபண்ணாதிருங்கள்.

௨௧ [10]யாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, [11]நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

௨௨ [12]பொல்லாங்காய்த் தோன்றுகிற யாவற்றையும்விட்டு விலகுவீர்களாக.

௨௩ ¶ [13]சமாதானத்தின் பராபரனே [14]முழுவதும் உங்களைப் பரிசுத்தமாக்குவாராக; இப்படி உங்கள் முழு ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வருகையில் [15]பிழையில்லாதவைகளாய் இருக்கும்படி காக்கப்படக்கடவது.

௨௪ [16]உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்; அவரும் அப்படியே செய்வார்.

௨௫ ¶ சகோதரரே, [17]எங்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள். ●

௨௬ [18]எல்லாச் சகோதரரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துதல்செய்யுங்கள்.

௨௭ [19]இந்த நிருபத்தைப் பரிசுத்தமான சகோதரர் யாவரும் படித்து அறியும்படி செய்யவேண்டும் என்று கர்த்தர்மேல் ஆணையிட்டு உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.*

௨௮ ¶ [20]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே இருக்கக்கடவது.—ஆமென்.

கி. பி. ௫௪.

1 உரோ ௰௪ ௧. ௰௫ ௧ கலா ௬ ௧, ௨
2 கலா ௫ ௨௨ எபே ௪ ௨ கொலோ ௩ ௰௨ ௨ தீமோ ௪ ௨
3 ௩ மோ ௰௯ ௰௮. லூக். ௨௰ ௨௨ ௨௪ ௨௯ மத் ௫ ௩௯,௪௪ உரோ ௰௨ ௰௭ ௧ கொரி ௬ ௭ ௧ பே ௩ ௯
4 கலா ௯ ௰ ௧ தெச ௪ ௰௨
5 ௨ கொரி ௬ ௰ பிலி ௪ ௪
6 லூக் ௰௮ ௧ ௨௧ ௩௬ உரோ ௰௨ ௰௨. எபே ௬ ௰௮ கொலோ ௪ ௨ ௧ பே ௪ ௭
7 எபே ௫ ௨௰ கொலோ. ௩ ௰௭
8 எபே ௪ ௩௰ ௧ தீமோ ௪.௰௪ ௨ தீமோ ௧ ௬ ௧ கொரி ௰௪ ௩௰
9 ௧ கொரி. ௰௪ ௧, ௩௯
10 ௧ கொரி ௨. ௰௧,௰௫ ௧ யோ ௪ ௧

---

11 பிலி ௪ ௮ —12 ௧ தெச ௪ ௰௨ —13 பிலி ௪. ௯ —14 ௧ தெச ௩ ௰௩ —15 ௧ கொரி ௧ ௮ —16 ௧ கொரி ௧ ௯ ௰ ௰௩ ௨ தெச ௩ ௩ —17 கொலோ ௪ ௩ ௨ தெச ௩ ௧ —18 உரோ ௰௬ ௰௬ —19 கொலோ ௪ ௰௬ ௨ தெச ௩ ௰௪ —* அல்லது கர்த்தருடைய நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.—20 உரோ ௰௬ ௨௰,௨௪ ௨ தெச ௩ ௰௮

II. THESSALONIANS.

அப்போஸ்தலனாகிய *பவுல்

தெசலோனிக்கேயருக்கு

எழுதின இரண்டாம் நிருபம்.

௧. அதிகாரம்.

௧ அவர்களுடைய விசுவாசத்தையும், அன்பையும் பொறுமையையுங்குறித்துப் பவுல் மெச்சிக்கொண்டு, ௰௧ அவற்றினாலே துன்பத்தில் இவர்கள் ஆறுதலடையவும், பராபரன் நீதிபரரென்று உணரவும் பல நியாயங்களைச் சொன்னது

பவுலும் [1]சிலுவானும் தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய [2]பராபரனையும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவையும் பற்றியிருக்கிற தெசலோனிக்கே ஊரிலுள்ள சபைக்கு எழுதுகிறதாவது:

௨ [3]நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது

௩ ¶ சகோதரரே, [4]நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகப் பராபரனைத் தோத்திரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் வளருகிறபடியினாலும், நீங்கள் எல்லாரும் ஒருவருக்கு ஒருவர் காட்டுகிற அன்பு அதிகமாகிறபடியினாலும் நாங்கள் அப்படியே செய்யத்தக்கது.

௪ ஆதலால் [5]நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலேயும், உபத்திரவங்களிலேயும் [6]பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறபடியினாலே, உங்களைக்குறித்து நாங்களே [7]பராபரனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறோம்.

௫ பராபரனுடைய இராச்சியத்தின்நிமித்தம் நீங்கள் (இப்படிப்) [8]பாடுபடுகிறவர்களாயிருக்க, அவ்விராச்சியத்திற்குப் பாத்திரர் என்று எண்ணப்படுவதற்கு ஏதுவாகப் பராபரன் நியாயமான தீர்ப்புச்செய்வார் என்பதற்கு [9]அவைகள் அத்தாட்சியாய் இருக்கின்றன.

௬ அல்லாமலும், கர்த்தராகிய இயேசு தமது வல்லமையுள்ள தூதரோடும்,* [10]சுவாலையாய் எரிகிற அக்கினியோடும் [11]வானத்திலிருந்து வெளிப்படும்பொழுது,

௭ [12]உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு [13]எங்களோடேகூட ஆறுதலையும் பதில்கொடுக்கிறது பராபரனுக்குமுன்பாக நீதியாய் இருக்கின்றது.

௮ அப்பொழுது [14]பராபரனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் [15]சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்துவார்.†

௯ அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், [16]அவருடை

கி. பி. ௫௪.

1 ௨ கொரி ௧ ௰௯
2 ௧ தெச ௧ ௧
3 ௧ கொரி ௧ ௩
4 ௧ தெச ௧ ௨, ௩ ௩ ௯, ௬ ௨ தெச ௨ ௰௩
5 ௧ தெச ௨ ௰௪
6 ௧ தெச ௧ ௩
7 ௨ கொரி ௭ ௰௪ ௯ ௨ ௧ தெச, ௨ ௰௯, ௨௰
8 ௧ தெச ௨ ௰௪.
9 பிலி ௧ ௨௮
* கிரேக்கு, வல்லமையின் தூதரோடும
10 எபி ௰ ௨௭ ௰௨ ௨௯ ௨ பே ௩ ௭ வெளி ௨௧ ௮
11 ௧ தெச ௪ ௰௬ யூதா ௰௪
12 வெளி ௬ ௰
13 வெளி ௰௪ ௰௩
14 சங ௭௯ ௬ ௧ தெச ௪ ௫
15 உரோ. ௨ ௮
† அல்லது நீதியைச் சரிக்கட்டுவார்
16 ஏ மோ ௯௯. ௨ ஏசா ௨ ௰௯ ௨ தெச. ௨ ௮

ய வல்லமையின் மகிமையில் நின்றும் நீங்கி, [1]நித்தியமான அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.

௰ [2]அவருடைய மகிமை அவருடைய பரிசுத்தவான்களிடத்தில் விளங்கும்படியாயும், [3]அவர் விசுவாசிகள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப்படுத்தப்படும்படியாயும் வரும்பொழுது, (அப்படியே நடக்கும்;) நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே, (உங்களிடத்திலும்) அப்படியே அந்நாளிலே (ஆச்சரியப்படுத்தப்படுவார்).

௰௧ ¶ ஆகையால் நம்முடைய தேவனுமாய்க் கர்த்தருமாய் இருக்கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையின்படியே, [4]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படுத்தப்படும்பொருட்டாக,

௰௨ நம்முடைய பராபரன் [5]உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராகவும்,* (தமது) தயையுள்ள சித்தம் முழுவதையும் [6]விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் (உங்களிடத்தில்) நிறைவேற்றவும் வேண்டும் என்று எப்பொழுதும் உங்களுக்காக விண்ணப்பம்பண்ணுகிறோம்.

௨. அதிகாரம்.

௧ அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தை உறுதியாய்ப் பற்றியிருக்கப் போதித்து, ௩ விசுவாசத்தினின்று வழுவுதலையும், ௮ கர்த்தருடைய நாள் வருமுன் அந்திக்கிறிஸ்துவின் வெளிப்படுதலையும் தீர்க்கதரிசனமாக அறிவித்து, ௰௩ அதின் மேல் முன்சொன்ன புத்திகளை மறுபடியும் சொல்லி அவர்களுக்காக வேண்டிக்கொண்டது.

அன்றியும் சகோதரரே, [7]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வருவதையும், [8]நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும் குறித்து நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்,

௨ கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லுகிற ஆவியினாலாவது, வாயினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாகக் காட்டுகிற நிருபத்தினாலாவது, நீங்கள் சீக்கிரமாய் [9]உங்கள் மனதிலே அசைவுபடாமலும் கலங்காமலும் இருப்பீர்களாக.

௩ [10]உங்களை வஞ்சிக்கும்படி வருகிற எவனுக்கும், எவ்விதத்தினாலும் இடங்கொடாதிருங்கள்; என்னத்தினாலெனில், [11]அந்தநாள் வருதற்குமுன்னே சுவிசேஷத்தைவிட்டு விலகுதல் உண்டாகவேண்டும்; அல்லாமலும் [12]கேட்டின் மகனாகிய [13]பாவமனிதனும் வெளிப்படவேண்டும்.

௪ அவன் [14]தேவன் என்னப்பட்ட யாவர்க்கும், தேவ ஆராதனை அடைகிற யாவர்க்கும் [15]விரோதமாய்த் தன்னை உயர்த்தி, இப்படிப் பராபரனுடைய ஆலயத்திலே தேவன்போல உட்கார்ந்து, தானே தேவன் என்று தன்னைக் காண்பிப்பான்.

௫ ¶ நான் உங்களிடத்தில் இருந்தபொழுது, இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று உங்களுக்கு ஞாபகமில்லையா?

௬ அவன் தனது காலத்திலே வெளியாகும்வரைக்கும், இப்பொழுது அவனுக்குத் தடையாயிருக்கிறது† இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

௭ [16]அக்கிரமமுள்ள அந்த இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கின்றது; இக்காலத்தில் (அதற்குத்) தடையாய் இருக்கிறவன் நீக்கப்படுவதுமாத்திரம் வேண்டும்.

௮ அப்பொழுது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தராகிய இயேசு தம்முடைய [17]வாயின் சுவாசத்தினாலே [18]அழித்து, தமது வருகையின் [19]பிரகாசத்தினாலே நாசம்பண்ணுவார்.

௯ அவன் எப்படித் தோன்றுவா

கி. பி. ௫௪.

[1] பிலி ௩ ௰௯. ௨ பேது ௩ ௭
[2] சங் ௮௯ ௭
[3] சங் ௬௮ ௩௫
[4] ௧ பே ௧ ௭ ௪ ௰௪
[5] ௫ ௰௪
* அல்லது பாத்திரராக எண்ணவும
[6] ௧ தெச ௧ ௩
[7] ௧ தெச ௪ ௰௬
[8] மத் ௨௪ ௩௧ மாற் ௰௩ ௨௭ ௧ தெச ௪ ௰௭
[9] மத் ௨௪ ௪ எபே ௫ ௬ ௧ யோ ௪ ௧
[10] மத் ௨௪ ௪ எபே ௫ ௬
[11] ௧ தீமோ ௪ ௧
[12] யோவா ௰௭ ௰௨
[13] தானி ௭ ௨௫ ௧ யோ ௨ ௰௮ வெளி ௰௩ ௰௧
[14] ௧ கொரி ௮ ௫
[15] ஏசா ௰௪ ௰௩ எசே ௨௮ ௨, ௬, ௯ தானி ௭ ௨௫ ௰௧ ௩௬ வெளி ௰௩ ௬
† அல்லது அவனைப் பிடித்துக்கொள்ளுகிறது
[16] ௧ யோ ௨ ௰௮ ௪ ௩
[17] யோபு ௪ ௯ ஏசா ௰௧ ௪ ஓசே ௬ ௫ வெளி ௨ ௰௬ ௰௯ ௰௫, ௨௰, ௨௧
[18] தானி ௭ ௰, ௰௧
[19] ௨ தெச ௧ ௮, ௯ எபி ௯ ௨௮

னெனில், [1]சாத்தானுடைய நடத்தையின் விதமாய், பொய்யான அற்புதங்களோடும், [2]அடையாளங்களோடும், மிகுந்த வல்லமையோடும்,

௰ அநீதியினால் உண்டாகும் எல்லாவித வஞ்சகத்தோடும், [3]கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே தோன்றுவான்; இரட்சிக்கப்படும்படிக்கு ஏதுவான சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் தரித்துக்கொள்ளாமல் இருப்பதால், அப்படி நடக்கும்.

௰௧ அதினாலே சத்தியத்தை நம்பாமல், [4]அநீதியில் பிரியமான யாவரும் ஆக்கினைக்கு உள்ளாக்கப்படும்படிக்கு,

௰௨ அவர்கள் [5]பொய்யானதை நம்புதற்கு ஏதுவாக வஞ்சகத்தை நடப்பிக்கிறதைப் பராபரன் [6]அவர்களுக்கு அனுப்புவார்.

௰௩ ¶ கர்த்தராலே அன்புகூரப்பட்ட சகோதரராகிய நீங்கள், [7]ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்பு அடையும்படிக்கு [8]ஆதிமுதல் பராபரன் [9]உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, [10]நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் பராபரனைத் தோத்திரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்.

௰௪ நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் [11]மகிமையை அடையும்பொருட்டாக, எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.

௰௫ ¶ ஆனபடியினாலே சகோதரரே, [12]நீங்கள் நிலைகொண்டு, எங்கள் வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் [13]உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைப் பற்றிக்கொள்வீர்களாக.

௰௬ [14]நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நித்திய ஆறுதலையும் [15]நல்ல நம்பிக்கையையும், கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய பராபரனும், [16]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும் உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல்செய்து,

௰௭ எல்லாவித நல்வசனத்திலும், நற்கிரியையிலும் உங்களை [17]ஸ்திரப்படுத்தக்கடவர்.

௩. அதிகாரம்.

௧ தனக்காகச் செபம்பண்ணவேண்டுமென்றும், ௩ அவர்கள்மேல் தனக்குள்ள நம்பிக்கை இன்னதென்றும் சொல்லி, ௫ அவர்களுக்காகப் பராபரனை வேண்டிக்கொண்டு, ௬ சில புத்திகள் சொல்லி, விசேஷமாய்ச் சோம்பலையும் கெட்ட சகவாசத்தையும் விலக்கக் கற்பித்து, ௰௬ செபத்தோடும், வாழ்த்தலோடும் நிருபத்தை முடித்தது.

சகோதரரே, கடைசியிலே உங்களிடத்திலே நடக்கிறதுபோல, கர்த்தருடைய வசனம் ஓடி[*] மகிமைப்படும்படிக்கும்,

௨ [18]துர்க்குணராகிய[†] பொல்லாத மனிதர் கையில்நின்று நாங்கள் இழுக்கப்படும்படிக்கும் [19]எங்களுக்காக விண்ணப்பம்பண்ணுவீர்களாக; [20]விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே.

௩ [21]கர்த்தரே உண்மையுள்ளவர்; அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, பொல்லாங்கனுக்கு [22]விலக்கிக் காத்துக்கொள்வார்.

௪ மேலும் நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டவைகளைச் செய்கிறீர்கள் என்றும், இனிமேலும் செய்வீர்கள் என்றும், உங்களைக்குறித்துக் [23]கர்த்தரிடத்தில் நம்பிக்கையாய் இருக்கிறோம்.

௫ [24]கர்த்தர் உங்கள் இருதயங்களைப் பராபரனுடைய அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும்[‡] நேராக நடத்தக்கடவர்.

௬ பின்னும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறது என்னவெனில், [25]நீங்கள்

கி. பி. ௫௪.

1 யோவா. ௮ ௪௪ எபே. ௨ ௨ வெளி ௰௩ ௨௩
2 இமோ ௰௩ ௧ மத ௨௪ ௨௪ வெளி ௰௬ ௰௪ ௰௯ ௨௧.
3 ௨ கொரி. ௨ ௰௫ ௪ ௩
4 உரோ. ௧ ௩௨.
5 மத ௨௪. ௫, ௰௧ ௧ தீமோ ௪ ௧
6 உரோ ௧ ௨௪ ழு ௧ இரா ௨௨ ௨௨ ஏசே ௰௪ ௯
7 லூக ௧ ௭௫ ௧ பே ௧ ௨
8 எபே ௧ ௪
9 ௧ தெச ௧ ௪
10 ௨ தெச ௧ ௩
11 யோவா ௰௭ ௨௨ ௧ தெச ௨ ௰௨ ௧ பே ௫ ௰
12 ௧ கொரி ௰௬ ௰௩ பிலி ௪ ௧
13 ௧ கொரி ௰௧ ௨ ௨ தெச ௩ ௬.
14 ௧ யோ ௪ ௰ வெளி ௧ ௫
15 ௧ பே ௧ ௩
16 ௨ தெச ௧ ௧. ௨
17 ௧ கொரி ௧ ௮ ௧ தெச ௩ ௰௩ ௧ பே ௫ ௰
[*] அல்லது பரம்பி
18 ௨ ரோ ௰௫ ௩௧
[†] இரோக்கு, முறையற்ற
19 எபே ௬ ௰௯ கொலோ ௪ ௩ ௧ தெச ௫ ௨௫
20 அப ௨௮ ௨௪ ௨ ரோ ௰ ௰௬
21 ௧ கொரி ௧ ௯ ௧ தெச ௫ ௨௪
22 யோவா ௰௭ ௰௫ ௨ பே ௨ ௯
23 ௨ கொரி ௭ ௰௬ கலா ௫ ௰
24 ௧ நாளா ௨௯ ௰௮

[‡] அல்லது கிறிஸ்துவைக் காத்திருக்கும் பொறுமைக்கும் ௧ தெச ௧ ௩.—25 ௨ தெச ௨ ௰௫.

எங்களிடத்தில் கேட்டு ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், [1]ஒழுங்கில்லாமையாய் நடக்கிற [2]எந்தச் சகோதரனையும் [3]விட்டு விலகவேண்டும்.

௭ [4]எங்களை இன்ன இன்னவிதமாய்ப் பின்பற்றவேண்டும் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; [5]நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கில்லாமையாய் நடவாமல்,

௮ ஒருவனுடைய அப்பத்தையும் கைம்மாறில்லாமல் சாப்பிடாமல் உங்களில் ஒருவனுக்கும் பாரமாய் இராதபடிக்கு, இரவும்பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் [6]வேலைசெய்து (சாப்பிட்டோம்).

௯ (அப்படிப் பாரத்தை வைப்பதற்கான) [7]அதிகாரம் எங்களுக்கு இல்லை என்றல்ல, [8]நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கான திருட்டாந்தமாக எங்களை உங்களுக்குக் காண்பிக்க மனதாயிருந்தபடியினாலே அப்படிச் செய்தோம்.

௰ [9]ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது என்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபொழுது உங்களுக்குக் கட்டளையிட்டோம்.

௰௧ [10]இப்பொழுது உங்களில் சிலர் வேலையொன்றும் செய்யாமல் வீண் அலுவலாய் நடந்து, [11]ஒழுங்கில்லாமையாய்த்திரிகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

௰௨ இப்படிப்பட்டவர்கள் [12]அமைதலோடே வேலைசெய்து, தங்கள் அன்னத்தைச் சாப்பிடவேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே [13]அவர்களுக்குப் புத்தியாகக் கட்டளையிடுகிறோம்.

௰௩ சகோதரரே, [14]நீங்கள் நன்மைசெய்கிறதிலே இளைப்படையாமல்* இருப்பீர்களாக.

௰௪ மேலும் ஒருவன் இந்த நிருபத்தின்படி எங்கள் வசனத்திற்குக் கீழ்ப்படியாமற்போனால்† அவனைக் குறித்துக்கொண்டு, [15]அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருப்பீர்களாக.

௰௫ அப்பொழுதும் [16]அவனைச் சத்துருவைப்போல எண்ணாமல், [17]சகோதரன் என்று எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்.

௰௬ [18]சமாதானத்தின் கர்த்தா எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தை அநுக்கிரகிக்கக்கடவர்; கர்த்தர் உங்கள் எல்லாரோடும்கூட இருப்பாராக.

௰௭ ¶ [19]பவுலாகிய நான் என் கையெழுத்தோடே வாழ்த்துதலை எழுதினேன்; நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; அப்படி எழுதுகிறேன்.

௰௮ [20]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும்கூட இருக்கக்கடவது. — ஆமென்.

கி. பி. ௫௪.

1 ௧ தெச ௪ ௰௧ ௫ ௰௪ ௰௧, ௰௨, ௰௪ வச
2 ௧ கொரி ௫ ௰௧, ௰௩
3 உரோ ௰௬ ௰௭ ௰௪ வச ௧ தீமோ ௬ ௫ ௨ யோ ௰
4 ௧ கொரி ௪ ௰௬. ௰௧ ௧ ௧ தெச ௧ ௬,௭
5 ௧ தெச ௨ ௰
6 அப ௰௮ ௩ ௨௰ ௩௪ ௨ கொரி ௰௧ ௯ ௧ தெச ௨ ௯
7 ௧ கொரி ௯ ௬ ௧ தெச ௨ ௬
8 ௭ வச
9 ௧ மோ ௩ ௰௯ ௧ தெச ௪ ௰௧
10 ௧ தெச ௪ ௰௧ ௧ தீமோ ௫ ௰௩ ௧ பே ௪ ௰௫
11 ௬ வச
12 எபே ௪ ௨௮
13 ௧ தெச ௪ ௰௧
14 கலா ௬ ௯

* அல்லது வாடிப்போகாமல்

† அல்லது ஒருவன் கீழ்ப்படியாமற்போனால் நிருபத்தினாலே

15 மத் ௰௮ ௰௫ ௧ கொரி ௫ ௯, ௰௧ ௬ வச
16 ௩ மோ ௰௯ ௰௭ ௧ தெச ௫ ௰௪.

17 தீத் ௩ ௰ — 18 உரோ ௰௫ ௩௩ ௰௬ ௨௰ ௧ கொரி ௰௪ ௩௩ ௨ கொரி ௰௩ ௰௧ ௧ தெச ௫ ௨௩.
19 ௧ கொரி ௰௬ ௨௧ கொலோ ௪ ௰௮ — 20 உரோ ௰௬ ௨௪

I. TIMOTHY.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுவுக்கெழுதின

முதலாம் நிருபம்.

௧. அதிகாரம்.

௧ பவுல் மக்கேதோனியாவுக்குப் போனபோது, தான் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த கட்டளைகளை நினைப்பூட்டி, ௫ நியாயப்பிரமாணத்தை அநுசரிப்பதையும், அதின் கடைசிப்பொருளையுங்குறித்தும், ௰௧ தான் அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைக்கப்பட்டதைக்குறித்தும், ௨௰ இமெனேயு, அலேக்குசாந்தர் என்ற இரண்டு துரோகிகளைக்குறித்துஞ் சொல்லியது.

நம்முடைய இரட்சகராயிருக்கிற [1]பராபரனும், [2]நமது நம்பிக்கைக்குரித்தான கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும் கொடுத்த [3]கட்டளையினாலே, இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்,

௨ [4]விசுவாசத்தினாலே உத்தம குமாரனாகிய [5]தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் [6]கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ ¶ [7]வேற்றுமையாய்ப் போதகம்பண்ணாதபடிக்கும், விசுவாசத்தினால் வருகிற திவ்விய எழுப்புதலை அல்ல, [8]தருக்கங்களை உண்டாக்குகிற முடியாத வம்ச அட்டவணைகளையும் கட்டுக்கதைகளையும் [9]பற்றிக்கொள்ளாதபடிக்கும் நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக,

௪ [10]நான் மக்கேதோனியாவுக்குப் போனபொழுது, உன்னை எபேசுபட்டணத்தில் இருக்கவேண்டிக்கொண்டதின்படி (நீ செய்வாயாக).

௫ ¶ [11]கட்டளையின் கடைசிப்பொருள் என்னவென்னில், [12]சுத்தமான இருதயத்தினாலும், நல்மனச்சாட்சியினாலும், வஞ்சனை இல்லாத விசுவாசத்தினாலும் பிறக்கிற அன்பே.

௬ சிலர் அந்தப் பொருளைவிட்டு விலகி,* [13]வீணான பேச்சைப் பேசிவருகிறார்கள்.

௭ அவர்கள் தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் திருட்டாந்தப்படுத்துகிறது இன்னதென்றும் [14]அறியாதிருந்தும், நியாயசாஸ்திரிகளாய் இருக்க விரும்புகிறார்கள்.

௮ நியாயப்பிரமாணத்தை ஒருவன் நியாயப்படி அநுசரித்தால் [15]அது (அவனுக்கு) நன்மையாய் இருக்கும் என்று அறிந்திருக்கிறோம்.

இ. பி. ௬௫.

1 க தீமோ ௨ ௩ ௪ ௰ தீத் க. ௩ ௨. ௰ ௩ ௪ யூதா ௨௫
2 கொலோ க ௨௭
3 அப. ௯ ௰௫ கலா. க க, ௰க
4 தீத் க ௪
5 அப ௰௬ க க கொரி ௪ ௰௭ பிலி ௨ ௰௯ க தெச ௩ ௨
6 கலா க ௩ ௨ தீமோ க. ௨ க பே க ௨
7 கலா க. ௬, ௭ க தீமோ ௬ ௩, ௰
8 க தீமோ ௬ ௪
9 க தீமோ. ௪. ௭ ௬ ௪, ௨௰ ௨ தீமோ ௨ ௰௪, ௰௬, ௨௩. தீத் க ௰௪ ௩ ௯
10 அப ௨௰ க, ௩ பிலி ௨ ௨௪
11 உரோ ௰௩ ௮, ௰ கலா ௫ ௰௪
12 ௨ தீமோ ௨ ௨௨
* அல்லது நோக்காமல்
13 க தீமோ ௬ ௪, ௨௰
14 க தீமோ ௬ ௪
15 உரோ ௭ ௰௨

௯ அன்றியும் [1]எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் நீதிமான்களுக்கு அல்ல, அக்கிரமக்காரருக்கும், கீழ்ப்படியாதவர்களுக்கும், தேவபக்தி இல்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், லவுகீக நடக்கையுடையவர்களுக்கும், தாய்தகப்பன்மாரைக் கொலைசெய்கிறவர்களுக்கும், மற்ற மனிதரைக் கொலைசெய்கிறவர்களுக்கும்,

௰ வேசிமார்க்கருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனிதரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்க்காரருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்,

௰௧ [2]பாக்கியமுள்ள பராபரனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி இருக்கிற [3]ஆரோக்கியமான உபதேசத்திற்கு விரோதமாயிருக்கிற மற்றெந்தப் பொல்லாங்கைச் செய்கிறவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

௰௨ [4]அந்தச் சுவிசேஷம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டது; [5]என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்னை [6]உண்மையுள்ளவன் என்றெண்ணி, [7]இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவருக்குத் தோத்திரஞ்செய்கிறேன்.

௰௩ முன்னே நான் [8]தூஷணிக்கிறவனுமாய், துன்பப்படுத்துகிறவனுமாய், நிந்திக்கிறவனுமாய் இருந்தேன்; அப்படியிருந்தும், [9]நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினாலே இரக்கம் பெற்றேன்.

௰௪ ¶ மேலும் [10]நம்முடைய கர்த்தாவின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள [11]விசுவாசத்தோடும் [12]அன்போடுங்கூட எனக்கு மிகவும் சம்பூரணமாய் உண்டாயிற்று.

௰௫ [13]பாவிகளை இரட்சிக்கும்படிக்குக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிறது [14]உண்மையும், எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமான வார்த்தையாய் இருக்கின்றது; பாவிகளில் நான் பிரதானமானவன்.

௰௬ அப்படியிருந்தும் நித்திய சீவனை அடையும்படி இனிமேல் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாய் இருப்பவர்களுக்குத் [15]திருஷ்டாந்தத்தைக் கொடுக்கும்பொருட்டாக, பிரதான பாவியாகிய என்னிடத்திலே எல்லா நீடிய பொறுமையைக் காண்பிக்கும்படிக்கு [16]இரக்கம்பெற்றேன்.

௰௭ [17]நித்தியமும் [18]அழிவில்லாமையும் [19]அதரிசனமுமுள்ள இராசனுமாய், [20]ஒருவராகிய ஞானமுள்ள பராபரனுமாய் இருக்கிற அவருக்குக் [21]கனமும் துதியும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.—ஆமன்.

௰௮ ¶ என் குமாரனாகிய தீமோத்தேயே, [22]உன்னைக்குறித்து முன்னுண்டான தீர்க்கதரிசனங்களின்படியே [23]நான் இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

௰௯ [24]அந்தப்படி நீ விசுவாசமும், நற்சாட்சியையுடைய மனதும் உள்ளவனாய் அவைகளாலே [25]நல்ல போராட்டம்பண்ணுவாயாக; அப்படிப்பட்ட மனதைச் சிலர் தள்ளி, விசுவாசமாகிய [26]கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.

௨௰ அவர்களில் [27]இமெனேயும், [28]அலேக்குசந்தரும் இருக்கிறார்கள்; [29]அவர்கள் தூஷணியாதபடிக்குக் கற்றுக்கொள்ளும்பொருட்டாய் [30]அவர்களைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்.

கி. பி. ௬௫.

1 கலா ௫ ௰௯ ௯ ௨௧
2 ௧ தீமோ ௬ ௰௫
3 ௧ தீமோ ௬ ௩ ௨ தீமோ ௪ ௩ தீத்த ௧ ௯ ௨ ௧
4 ௧ கொரி ௯ ௰௭ கலா ௨ ௭ கொலோ ௧ ௨௫ ௧ தெச ௨ ௪ ௧ தீமோ ௨ ௭ ௨ தீமோ ௧. ௰௧ தீத் ௧ ௩
5 ௨ கொரி ௰௨ ௯
6 ௧ கொரி. ௭ ௨௫
7 ௨ கொரி ௩ ௫, ௬ ௪ கொலோ. ௧ ௨௫
8 அப ௮ ௩ ௯ ௧ ௧ கொரி ௰௫ ௯ பிலி ௩ ௬
9 லூக் ௨௩ ௩௪ யோவா ௯ ௩௯, ௪௧ அப ௩ ௰௭ ௨௬ ௯
10 உரோ ௫ ௨௰ ௧ கொரி ௰௫ ௰
11 ௨ தீமோ ௧ ௰௩
12 லூக் ௭ ௪௭
13 மத ௯ ௰௩ மாற ௨ ௰௭ லூக ௫ ௩௨ ௰௯ ௰ உரோ ௫ ௮ ௧ யோ ௩ ௫
14 ௧ தீமோ ௩ ௧ ௪ ௯ ௨ தீமோ ௨ ௰௧ தீத் ௩ ௮
15 அப ௰௩ ௩௯
16 ௨ கொரி ௪ ௧
17 சங் ௰ ௰௬ ராச ௰௩ தானி ௭ ௰௪ ௧ தீமோ ௬ ௰௫, ௰௬
18 உரோ ௧ ௨௩
19 யோவா ௧ ௰௮ எபி ௰௧ ௨௭ ௧ யோ ௪ ௰௨
20 உரோ ௰௬ ௨௭ யூதா ௨௫

௨. அதிகாரம்.

௧ யாவருக்காகவும் செபம்பண்ணவேண்டுமென்றும், அதற்கு முகாந்திரம் இன்னதென்றும், ௯. ஸதிரிகள் இவ்விதமாய் உடுக்கவேண்டியதென

21 ௧ நாளா ௨௯ ௰௧ —22 ௧ தீமோ ௪ ௰௪. —23 ௧ தீமோ ௬ ௰௩, ௰௪, ௨௰ ௨ தீமோ ௨. ௨. —24 ௧ தீமோ ௩ ௯ —25 ௧ தீமோ ௬ ௰௨ ௨ தீமோ ௪ ௭ —26 ௧ தீமோ ௩ ௯ —27 ௨ தீமோ ௨ ௰௭ —28 ௨ தீமோ ௪ ௰௪ —29 அப ௰௯ ௩௩ —30 ௧ கொரி ௫ ௫

4902 C 2848)

றும், யஉ அவர்கள் சபையிலே போதிக்கக்கூடாதென்றும், யரு அவர்கள்மேல் பராபரனுடைய கோபாக்கினை இருந்தாலும் அவர்கள் விசுவாசத்தில் நிலைநிற்பார்களானால் பிள்ளைப்பேற்றில் இரட்சிக்கப்படுவார்களென்றும் சொல்லியது

பின்னும் நான் பிரதானமாய்ப் புத்திசொல்லுகிறது * என்னவெனில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதலையும், தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

உ நாம் எல்லாப் பத்தியோடும் யோக்கியத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள சீவனம்பண்ணும்படிக்கு, [1]இராசாக்களுக்காகவும் [2]அதிகாரமுள்ள† யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

ங [3]நம்முடைய இரட்சகராகிய பராபரனுக்கு முன்பாக [4]அது நன்மையாயும் பிரியமாயும் இருக்கின்றது.

ச எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், [5]சத்தியத்தை அறிகிற அறிவுக்கு வரவும் [6]அவரே சித்தமாய் இருக்கிறார்.

ரு ஏனெனில், [7]பராபரன் ஒருவரே; பராபரனுக்கும் மனிதருக்கும் [8]மத்தியஸ்தரும் ஒருவரே.

சு எல்லாரையும் மீட்கும்பொருளாகத் [9]தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே; (அந்த மீட்புத்) [10]தகுதியான காலங்களில் [11]சாட்சிசொல்லப்பட்டு‡ வருகின்றது.

எ அதற்காக நான் புறத்தேசத்தாருக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் [12]விளங்கப்பண்ணுகிற போதகனாகவும், பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும் [13]ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன்; [14]நான் பொய்சொல்லாமல் உண்மையே சொல்லுகிறேன்.

அ ¶ அல்லாமலும் என்னுடைய சித்தம் என்னவென்றால், [15]எல்லா இடங்களிலேயும், புருஷர்கள் கோபமும் தருக்கமும் இல்லாமல் [16]பரிசுத்தமான கைகளை உயர்த்தி ஜெபம்பண்ணவேண்டும்.

கூ [17]அந்தப்படி ஸ்திரிகளும் மயிரைப் பின்னுதலாலாவது,§ பொன்னாலாவது, முத்துக்களாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தாலாவது, தங்களை அலங்கரியாமல் தேவபத்தியைக் காண்பிக்கிற பெண்பிள்ளைகளுக்கு ஏற்றபடியே,

ய [18]கற்புக்குரிய வஸ்திரத்தாலும், நாணத்தாலும், தெளிவான புத்தியினாலும், நற்கிரியைகளாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்.

யக ¶ ஸ்திரியானவள் அமைதலோடே படித்துக்கொண்டு இப்படி எவ்விதத்திலும் கீழ்ப்படிதலைக் காண்பிக்கக்கடவள்.

யஉ [19]உபதேசம்பண்ணும்படியாயும், [20]புருஷன்மேலே அதிகாரத்தைச் செலுத்தும்படியாயும், நான் ஸ்திரியானவளுக்கு உத்தரவு கொடுக்கிறதில்லை.

யங அவள் அமைதலாய் இருக்கவேண்டும்; என்னத்தினாலெனில், முதலாவது [21]ஆதாமும், இரண்டாவது ஏவாளும், உருவாக்கப்பட்டார்கள்.

யச மேலும் [22]ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை; ஸ்திரியானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

[11] க, ௰ச வச தீத உ ௰ச
[12] க தீமோ க ச உ தீமோ. உ உ௩. தீத் க ௰ச
[13] உ தீமோ; உ. ௰ச
[14] உ கொரி ௰௩ உ
[15] மத் ௰அ ௰எ உரோ ௰௬ ௰எ உ தெச ௩ ௬, ௰ச உ தீமோ ௩ ரு உ யோ ௰.
[16] அப் ௰௬ ச௬
[17] அப் உ௰ ச உ தீமோ ச ௰உ.
[18] அப. ௰அ உச,
[19] உரோ, ௰ரு உஅ, பிலி. க ௰க ச ௰எ. கொலோ க. ௰. உ பே க அ
[20] அ. வச.
‡ அல்லது நல்ல வேலைகளைச்செய்ய.

PHILEMON.

அப்போஸ்தலனாகிய பவுல்

பிலேமோனுக்கு எழுதின

நிருபம்.

பிலேமோனுடைய விசுவாசத்தையும அன்பையுங்குறித்துச் சந்தோஷப்பட்டு, ௯. அவன் தன ஊழியக்காரனாகிய ஒனேசிமுவை மன்னித்து அன்பாய ஏற்றுக்கொள்ளும்படி அவனை வேண்டிக் கொண்டது

கிறிஸ்து இயேசுவின் நிமித்தம் [1]கட்டப்பட்டிருக்கிறவனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயுவும், எங்களுக்குப் பிரியனுமாய் [2]உடன்வேலையாளுமாய் இருக்கிற பிலேமோனுக்கும், எங்களுக்குப் பிரியமான அப்பியாளுக்கும்,

௨ [3]எங்களுடனேகூடப் போர்ச்சேவகனாகிய [4]அர்க்கிப்புக்கும், [5]உமது வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது:

௩ நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் [6]கிருபையும், சமாதானமும் உண்டாகக்கடவது.

௪ ¶ கர்த்தராகிய இயேசுவின்மேலும், எல்லாப் பரிசுத்தவான்கள்மேலும் உள்ள உம்முடைய [7]அன்பையும் உமது விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு,

௫ என் செபங்களில் உம்மை நினைத்துக்கொண்டு எப்பொழுதும் [8]என் பராபரனுக்குத் தோத்திரம்செய்து,

௬ உங்களிலுள்ள சகலவித நன்மைகளையும் (மற்றவர்களும்) [9]அறிந்துகொள்ளுகிறதினாலே உமது விசுவாசத்திற்குரிய தருமகுணம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பெலனைக் காண்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

௭ சகோதரனே, பரிசுத்தவான்களுடைய இருதயங்கள் உம்மாலே [10]சவுக்கியப்பட்டதால் உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம்.

௮ ¶ ஆகையால் விருத்தாப்பியமுள்ளவனுமாய் இயேசுக்கிறிஸ்துவின்நிமித்தம் இப்பொழுது [11]கட்டப்பட்டவனுமாயிருக்கிற பவுலாகிய நான்,

௯ தகுதியான காரியத்தைக்குறித்து உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவினாலே மிகுந்த [12]தயிரியமுள்ளவனாயிருந்தும், (அப்படிச்செய்யாமல்) அன்பினாலே உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰ என்னவென்றால், [13]நான் கட்டப்பட்டிருக்கையில் பெற்றவனையும்,

௰௧ முன்னே உமக்குப் பிரயோசனமில்லாதவனையும், இப்பொழுது உமக்கும் எனக்கும் நல்ல

கி. பி. ௬௪.

1 எபே. ௩. ௧. ௪. ௧. ௨ தீமோ. ௧. ௮, ௯ வச.
2 பிலி ௨. ௨௫
3 பிலி ௨. ௨௫.
4 கொலோ ௪. ௰௭
5 ௧ரோ ௰௬. ௫ ௧ கொரி. ௰௬ ௰௯.
6 எபே ௧ ௨
7 எபே. ௧. ௰௫. கொலோ ௧ ௪
8 எபே ௧. ௰௬ ௧ தெச ௧. ௨. ௨ தெச. ௧ ௩
9 பிலி ௧ ௩, ௰௧.
10 ௨ கொரி ௭ ௰௩. ௨ தீமோ. ௧ ௰௬. ௨௰ வச.
11 ௧ வச.
12 ௧ தெச. ௨ ௯.
13 ௧ கொரி ௪. ௰௫ கலா. ௪ ௰௯

கி. பி. ௬௪.

பிரயோசனமுள்ளவனாயும் இருக்கிற என் மகனாகிய [1]ஒனேசிமுக்காகவே உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்; அவனைத் திரும்ப அனுப்பினேன்.

௰௨ அவனை நீர் என் உள்ளம்போல ஏற்றுக்கொள்வீராக.

௰௩ சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற எனக்கு ஊழியம்செய்யும்படிக்கு உமக்குப் [2]பதிலாக அவனை என்னிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இருந்தேன்.

௰௪ ஆனாலும் [3]உம்முடைய நன்மை கட்டாயத்தினால் அல்ல, மனப்பூர்வத்தால் இருக்கத்தக்கதாக நான் உமது சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய மனதில்லை.

௰௫ இனிமேல் அவன் உமக்கு அடிமையானவனாக அல்ல, அடிமையானவனுக்கு மேலாகப் [4]பிரியமான சகோதரனாகவும், என்றென்றைக்கும் உம்முடையவனாகவும் இருக்கும்படிக்கு,

௰௬ [5]அவன் கொஞ்சக்காலமாய் உம்மைவிட்டுப் பிரிக்கப்பட்டான் என்று தோன்றுகின்றது; எனக்கும் அவன் பிரியமான சகோதரன்தான்; உமக்குச் [6]சரீரத்தின்படியேயும் கர்த்தர்நிமித்தமும் மிகவும் அதிகமாய் அப்படி இருக்கிறான் அல்லவா?

௰௭ ஆதலால் [7]நீர் என்னை உமக்கு ஐக்கமானவன் என்று எண்ணினால், அவனை என்னைப்போல ஏற்றுக்கொள்ளவேண்டும்.

௰௮ அவன் உமக்கு யாதொரு அநியாயம்செய்ததும் அல்லது, கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே எழுதுவீராக.

௰௯ பவுலாகிய நான் என் கையெழுத்துப்போட்டேன்; நானே செலுத்தித் தீர்ப்பேன், நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்தவேண்டும் என்று நான் உமக்குச் சொல்லாதபடிக்கு அப்படிச் செய்கிறேன்.

௨௰ ஆம் என் சகோதரனே, கர்த்தர்நிமித்தம் உம்மாலே இந்தப் பிரயோசனம் எனக்கு உண்டாகக்கடவது; [8]கர்த்தர்நிமித்தம் என் இருதயத்தை ஆறுதல் செய்வீராக.

௨௰௧ [9]நீர் கீழ்ப்படிவீரென்று நான் நிச்சயமாய் அறிந்து, இப்படி உமக்கு எழுதினேன்; நான் கேட்டதற்கு மேலாகவும் செய்வீரென்றும் அறிந்திருக்கிறேன்.

௨௰௨ அல்லாமலும் [10]உங்கள் விண்ணப்பங்களினாலே [11]உங்களுக்குத் (திரும்பக்) கொடுக்கப்படுவேன் என்று நான் நம்பியிருக்கிறபடியால், நான் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக எத்தனம்பண்ணுவீராக.

௨௰௩ ¶ கிறிஸ்து இயேசுவினிமித்தம் என்னோடேகூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிற [12]எப்பாப்பிராவும்,

௨௰௪ என் உடன்வேலையாள்களாகிய [13]மாற்குவும், [14]அரிஸ்தர்க்குவும், [15]தேமாவும், [16]லூக்காவும் உமக்கு வாழ்த்துதல்செய்கிறார்கள்.

௨௰௫ [17]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே இருக்கக்கடவது.—ஆமென்.

[1] கொலோ. ௪ ௯
[2] ௧ கொரி ௰௬ ௰௭ பிலி. ௨ ௩௰
[3] ௨ கொரி. ௯ ௭.
[4] மத் ௨௩. ௮ ௧ தீமோ ௬ ௨.
[5] ௧ மோ ௪௫ ௫, ௮
[6] கொலோ ௩ ௨௨.
[7] ௨ கொரி ௮. ௨௩.
[8] ௭ வச
[9] ௨ கொரி. ௭. ௰௬.
[10] ௨ கொரி ௧ ௰௧
[11] பிலி ௧ ௨௫. ௨ ௨௪
[12] கொலோ. ௧ ௭. ௪. ௰௨.
[13] அப ௰௨. ௰௨, ௨௫
[14] அப ௰௯. ௨௯ ௨௭ ௨ கொலோ ௪ ௰.
[15] கொலோ ௪ ௰௪
[16] ௨ தீமோ. ௪. ௰௧
[17] ௨ தீமோ ௪. ௨௨

HEBREWS.

அப்போஸ்தலனாகிய பவுல்

எபிரேயருக்கு எழுதின

நிருபம்.

௧. அதிகாரம்.

௧ இக்கடைசிநாளகளில் பிதாவிலிருந்து நமமிடத்திற்கு வந்த கிறிஸது, ௪. தன்மையிலும் செயகையிலும தேவதூதர்களைப்பார்க்கிலும் சிறந்தவர் என்று சொல்லியது.

பூர்வீகத்திலே பலகாலங்களிலும் [1]பலவிதமாய்ப் பராபரன் (நம்முடைய) முன்னோர்களுடனே தீர்க்கதரிசிகளின் மூலமாய்த் திருவுளம்பற்றினதும் அன்றி,

௨ [2]இந்தக் கடைசிக் காலத்திலே குமாரன்மூலமாய் நம்முடனே [3]திருவுளம்பற்றினார்; [4]அவரைச் சகலத்திற்கும் சுதந்தரவாளியாக வைத்தார்; [5]அவராலே உலகங்களையும் உண்டாக்கினார்.

௩ [6]அவர் பராபரனுடைய மகிமையின் பிரகாசமாயும், அவருடைய தன்மையின் சொரூபமாயும், [7]எல்லாவற்றையும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயும் இருந்து, [8]பின்பு தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்து, [9]உன்னதத்திலுள்ள மகத்துவருடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்.

௪ இப்படி அவர் தேவதூதரிலும் [10]அதிக விசேஷமாகச் சுதந்தரித்துக்கொண்ட நாமம் எவ்வளவோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவராயிருக்கிறார்.

௫ ¶ எப்படியெனில் [11]நீர் என்னுடைய குமாரன் என்றும், இன்று நான் உம்மைச் செனிப்பித்தேன் என்றும், [12]அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும் பராபரன் ஒருகாலத்திலாகிலும் தூதர்களில் ஒருவனுக்குச் சொன்னாரா?

௬ மறுபடியும் [13]தமது முதற்பேறானவரை இவ்வுலகத்தில்* பிரவேசிக்கச் செய்தபொழுது, [14]தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்.

௭ அன்றியும் தேவதூதரைக்குறித்துச் † சொல்லியிருக்கிறதாவது: [15]தம்முடைய தூதர்களைக் காற்றுக்களாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிச்சுவாலைகளாகவும் செய்தாரென்று சொல்லியிருக்கிறது.

௮ குமாரனைக்குறித்து எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால், பராபரனே, [16]உமது சிங்காசனம்

கி. பி. ௬௪.

1 ௪ மோ. ௰௨. ௧, அ
2 ௫ மோ ௪ ௰ கலா. ௪. ௪ எபே ௧. ௰
3 யோவா ௧. ௰அ · ௰௫ ௰௫ எபி. ௨. ௩
4 சங் ௨ அ மத் ௨௧ ௩அ ௨அ ௰அ யோவா ௩ ௩௫ ௨ரோ. அ. ௰எ
5 யோவா ௧. ௩ ௧ கொரி அ ௬ கொலோ ௧ ௰௬
6 யோவா ௧ ௰௪: ௰௪ ௯. ௨ கொரி ௪ ௪ கொலோ. ௧ ௰௫.
7 யோவா ௧. ௪ கொலோ ௧ ௰எ வெளி. ௪ ௰௧
8 எபி எ. ௨எ: ௯. ௰௨, ௰௪, ௨௬
9 சங் ௱௰, ௧ எபே. ௧ ௨௰, எபி. அ ௧. ௰. ௰௨ ௰௨ ௨ ௧ பே. ௩. ௨௨
10 எபே. ௧. ௨௧ பிலி ௨. ௯, ௰

---

11 சங் ௨ எ அப். ௰௩. ௩௩, எபி ௫. ௫.—12 ௨ சாமு. எ ௰௪. ௧ நாளா ௨௨ ௰ ௨அ ௬. சங். அ௯. ௨௬, ௨எ.—13 ௨ரோ. அ. ௨௯. கொலோ. ௧. ௰அ. வெளி ௧. ௫.—* அல்லது தமது முதற்பேறானவரை இவ்வுலகத்தில் மறுபடியும்.—14 ௫ மோ. ௩௨. ௪௩ சங். ௯எ. எ. ௧ பே ௩ ௨௨.—† கிரேக்கு, தேவதூதருக்கு.—15 சங் ௱௪. ௪.—16 சங். ௪௫ ௬, ௭.

என்றென்றைக்கும் உள்ளதாயிருக்கும்; உம்முடைய இராச்சியத்திலுள்ள, செங்கோல் செம்மையான* செங்கோலாயிருக்கின்றது.

௯ நீதியில் அன்புகூர்ந்து அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர்; ஆதலால் பராபரனே உம்முடைய பராபரன் உம்முடைய தோழரிலும் உம்மை [1]மகிழ்ச்சி என்னும் எண்ணெயினாலே அபிஷேகம் பண்ணினார் என்றும்,

௰ [2]கர்த்தாவே, ஆதியிலே நீர் பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்கின்றன.

௰௧ [3]அவைகள் அழிந்துபோம்; நீர்மாத்திரம் நிலைநிற்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்.

௰௨ ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர்; அப்பொழுது மாறிப்போம்; நீர்மாத்திரம் (எப்பொழுதும்) ஒரேவிதமாய் இருப்பீர்; உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கின்றது.

௰௩ ¶ மேலும் நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதப்படியாக்கிப்போடுமளவும் [4]என் வலதுபாரிசத்தில் உளுக்காரும் என்று இப்படி அவர் ஒருகாலத்திலாகிலும் தூதர்களில் ஒருவனுக்குச் சொன்னாரா?

௰௪ [5]இரட்சிப்பைச் சுதந்தரிப்பவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் [6]அனுப்பப்படுகிற பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்களல்லவா?

௨. அதிகாரம்.

௧ நாம் கிறிஸ்து இயேசுவுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்றும், ௫ அதற்கு அவர் நம்முடைய சுபாவத்தை, ௰௪ வேண்டியபடி ஏற்றுக்கொண்டாரென்றும் காட்டியது.

ஆகையால், நாம் கேட்டறிந்தவைகளை விட்டுவிலகாதபடிக்கு† அதிக எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

௨ என்னத்தினாலெனில், [7]தேவதூதரால் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான [8]எந்தச் செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்பட்டிருந்ததாயிருக்க,

௩ முதலாவது [9]கர்த்தராலே அறிவிக்கப்பட்டுப் பின்பு [10]அவரிடத்தில் கேட்டவர்களால் நமக்கு உறுதியாக்கப்பட்டதுமாய்,

௪ [11]அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கையினாலும், [12]பரிசுத்த ஆவியைத்தம்முடைய சித்தத்தின்படி (நமக்குப்) [13]பகிர்ந்து கொடுத்ததினாலும்‡ [14]பராபரன் சாட்சிகொடுக்கப்பட்டதுமாய் இருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையில்லாமல்போனால் (தண்டனைக்கு) [15]எப்படித் தப்பிப்போவோம்?

௫ ¶ அன்றியும் [16]இனிமேல் வரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை; ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாகச் சொன்னது:

௬ மனிதனை நீர் நினைத்துக்கொள்ளுகிறதற்கும், அல்லது மனிதனுடைய புத்திரனை நீர் விசாரித்துக்கொள்ளுகிறதற்கும் [17]அவன் எம்மாத்திரம்.

௭ கொஞ்சக்காலமாய்§ அவனைத் தேவதூதரிலும் சிறியவன் ஆக்கினீர்; பின்பு மகிமையோடுங் கனத்தோடும் அவனுக்குமுடிசூட்டி, உம்முடைய கைகளின் கிரியைகளுக்கு அதிகாரியாக வைத்

கி. பி. ௬௪.

* அல்லது நீதியின

1 ஏசா. ௬௧. ௧ அப. ௪. ௨௭ ௰. ௩௮.

2 சங். ௱௨. ௨௫

3 ஏசா. ௩௪. ௪ ௫௧. ௬ மத். ௨௪. ௩௫ ௨ பே. ௩. ௭, ௰ வெளி. ௨௧. ௧

4 சங். ௱௰. ௧ மத். ௨௨. ௪௪ மாற். ௰௨. ௩௬ லூக். ௨௰. ௪௨ எபி. ௰. ௰௨ ௰௩

5 உரோ. ௮. ௰௭ யாக். ௨. ௫. ௧ பே. ௧. ௭

6 ௧ மோ. ௰௯. ௧ ௩௨. ௧, ௨, ௨௪ சங். ௩௪. ௭ ௯௧. ௰௧ தானி. ௩. ௨௮. ௭. ௰ ௰. ௰௧ மத். ௰௮. ௰ லூக். ௧. ௰௯, ௨. ௯, ௰௩ அப. ௰௨. ௭ ௨௭. ௨௩.

† இரேக்கு, ஓட்டையுள்ள பாத்திரங்களைப்போல ஒழுகிப்போகாதபடிக்கு

7 ௫ மோ. ௩௩. ௨ சங். ௬௮. ௰௭ அப. ௭. ௫௩ கலா. ௩. ௰௯

8 ௪ மோ. ௰௫. ௩௰, ௫ மோ. ௪. ௩, ௰௭. ௨, ௫, ௰௨ ௨௭. ௨௬

9 மத். ௪. ௰௭ மாற். ௧. ௰௪ எபி. ௧. ௨

10 லூக். ௧. ௨.

11 அப. ௨. ௨௨, ௪௩

12 எபே. ௪. ௫, ௯.

13 ௧ கொரி. ௰௨. ௪, ௭, ௰௧

‡ அல்லது ஈந்ததினாலும்

14 மாற். ௰௬. ௨௰ அப். ௰௪. ௩ ௰௯. ௰௧ உரோ. ௰௫. ௰௯ ௧ கொரி. ௨. ௪.—15 எபி. ௰. ௨௮, ௨௯ ௰௨. ௨௫.
16 எபி. ௬. ௫ ௨ பே. ௩. ௰௩.—17 யோபு. ௭. ௰௭ சங். ௮. ௪ ௱௪௪. ௩.—§ அல்லது கொஞ்சம்

துச் சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்றான்.

அ இந்தப்படி அவர் [1]சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்துகையில் அவனுக்குக் கீழ்ப்பட்டிராதபடிக்குத் தாம் ஒரு பொருளையும் வைத்துக்கொள்ளவில்லை; [2]இப்பொழுது சகலமும் அவனுக்குக் கீழ்ப்படக் காணோம்.

கூ இயேசுவானவர்மாத்திரம் பராபரனுடைய கிருபையினாலே [3]யாவருக்காகவும் மரணத்தை அநுபவிக்கும்பொருட்டாகக்* கொஞ்சக்காலமாய்த் [4]தேவதூதரிலும் சிறியவர் ஆக்கப்பட்டுப் பின்பு மரணத்தைச சகித்ததினாலே [5]மகிமையோடும் கனத்தோடும் முடிசூட்டப்படக் காண்கிறோம்.

ய மேலும் [6]தமக்காகச் சகலத்தையும் உண்டாக்கினவா அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுபோகையில் [7]அவர்களுக்கு இரட்சண்ணியத்தை உண்டாக்கின அதிபதியை [8]உபத்திரவங்களின் வழியாய்த் தேறினவர் ஆக்குகிறது [9]அவருக்குத் தகுதியாயிருநதது.

யக ¶ எபபடியெனில் [10]பரிசுத்தம்செய்கிறவரும் பரிசுத்தமசெயயபபடுகிறவாகளுமாகிய யாவரும் [11]ஒருவரிலிருந்து வருகிறார்கள்; அதினிமித்தானே [12]அவர்களைச் சகோதரரென்று அழைக்க வெட்கப்படாமல்,

யஉ [13]உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்துச் சபையாருக்குள்ளே உமக்குத் துதியாகப் பாடுவேன் என்றும், [14]நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்,

ய௩ இதோ, [15]நானும் [16]பராபரன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.

யச ஆனதால் பிள்ளைகள் மாம்சஇரத்ததேகமுள்ளவர்களாயிருக்க [17]அவரும் மரணத்தை வருவிக்க வல்லமையுடையவனாகிய பசாசானவனைத் (தமது) மரணத்தினாலே அழிககும்படிக்கும்,

யரு ஜீவகாலமளவும் [18]மரணத்திற்குப் பயந்து அடிமையாயிருந்த யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் [19]அவர்களைபபோல மாம்ச இரத்ததேகமுள்ளவரானார்.

யசா ஆதலால் அவர் தேவதூதரின் சுபாவத்தை எடுத்துக்கொள்ளாமல், ஆபிரகாமின் சந்ததியிலே (மனித சுபாவத்தை) எடுத்திருக்கிறார்.†

யஎ அன்றியும் அவர் (தம்முடைய) சனங்களின் [20]பாவங்களை நிவிர்த்திசெய்வதற்கு ஏதுவாக இரக்கமுள்ளவராயும், பராபரனுக்கு உரியவைகளைக்குறித்து உண்மையான பிரதான ஆசாரியராயும் இருக்கும்படிக்கு [21]எவ்விதத்திலும் (தம்முடைய) சகோதரருக்கு ஒபபாகவேண்டியதாய் இருந்தது.

யஅ ஆதலால் [22]அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடு அநுபவித்ததினாலே, சோதிக்கபபடுகிறவர்களுக்குச் சகாயஞ்செய்யத் திராணியுள்ளவராய் இருக்கிறார்.

௩. அதிகாரம்.

க மோசேயிலும கிறிஸது அதிக மகிமையுள்ளவராகையால், உ அவரை நாம் விசுவாசியாவிடில், கடின நெஞ்சுள்ள இஸ்ரவேலரைபபார்க்கிலும் அதிக ஆக்கினைக்குப பங்குள்ளவர்களாய இருபபோமென்று சொல்லியது.

இப்படியிருக்கப் பரம [23]அழைப்பை அடைநதவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற [24]அப்போஸ்தலருமாய்ப் பிரதான ஆசாரியருமாய் இருக்கிற கிறிஸ்து இயேசுவை உற்றுப் பாருங்கள்.

கி. பி. சூச.

1 மத் உ.அ ம.அ க கொரி. மஇ உ.எ எபே. க உ.உ எபி க மக
2 க கொரி மஇ. உஇ.
3 யோவா க மக மஉ கக உ.ரோ இ மஅ அ கஉ உ கொரி இ மஇ க தீமோ. உ க க யோ. உ. உ வெளி இ கூ
* அல்லது அநுபவித்ததினாலே.
4 பிலி உ எ,அ. கூ
5 அப உ கக
6 உ.ரோ மக கக
7 அப க மஇ இ கக. எபி மஉ உ
8 லூக் மக கஉ எபி இ கூ
9 லூக் உச சக
10 எபி ம ம, மச
11 அப மஎ உக
12 மத் உ.அ ம யோவா உம மஎ உ.ரோ அ உக
13 சங் உ.உ உஉ, உஇ
14 சங் ம,அ. உ ஏசா மஉ உ
15 ஏசா அ மஅ
16 யோவா ம யகூ மஎ கூ, கூ, மக, மஉ
17 க கொரி மஇ இச, இஇ கொலோ உ. மஇ உ தீமோ க ம
18 லூக் க எச உ.ரோ அ மஇ உ தீமோ க எ
19 யோவா. க மச உ.ரோ அ. க. பிலி உ எ.
† இரேக்கு, அவர் தேவதூதரில எடுத்துக்கொள்ளாமல் ஆபிரகாமின வித்தில எடுத்திருக்கிறார்

20 பிலி.உ.எ —21 எபி.ச மஇ:இ.க,உ.—22 எபி. ச மஇ,மக இ உ எ உஇ.—23 உ.ரோ க.எ. க கொரி. க,உ. எபே. சக பிலி. க மச உ தெச கமக உ தீமோ க கூ உ பேக.ம —24 உ.ரோ.மஇ.அ.
எபி ௩ மஎ ௰மச இஇ.க,உம அ.க: கூ,மக: ம உச

௨ [1]மோசே என்பவன் தேவ ஆலயமெங்கும் உண்மையாயிருந்ததுபோல, அவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு* உண்மையுள்ளவராய் இருந்தார்.

௩ ¶ எந்த ஆலயமும் மனிதனாலே உண்டாக்கப்பட்டிருக்கிறது, [2]பராபரன் சகலத்தையும் உண்டாக்கினவர்.

௪ ஆகையால் ஆலயத்திலும் [3]ஆலயத்தை உண்டாக்கினவருக்கு உண்டாயிருக்கிற கனம் எவ்வளவோ, அவ்வளவாய் மோசேயிலும் இயேசுவானவர் அதிக மகிமைக்குப் பாத்திரராய் இருக்கிறார்.

௫ ¶ அந்தப்படி [4]சொல்லவேண்டியிருந்தவைகளுக்குச் சாட்சியாக [5]மோசே ஊழியக்காரனாய் [6]அவருடைய ஆலயம் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்.

௬ ஆகிலும் [7]கிறிஸ்துவானவர் அவருடைய ஆலயத்திற்கு மேலான குமாரனாய் (உண்மையாய்) இருக்கிறார்; (நித்திய சீவன்மேலுள்ள) நம்பிக்கைக்கு ஏற்ற தயிரியத்தையும் மேன்மைபாராட்டலையும் [8]முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், [9]நாமே அவருடைய ஆலயமாய் இருப்போம்.

௭ ¶ ஆகையால் [10]பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே, [11]இன்று நீங்கள் அவருடைய சத்தத்தைக் கேட்கையில், வனாந்தரத்திலே,

௮ உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்து எனக்குக் கோபம் மூட்டின நாளிலே நடந்ததுபோல,

௯ உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்; அவர்கள் நாற்பது வருஷமாய் என்னுடைய கிரியைகளைக் கண்டிருந்தும் என்னைச் சோதித்து என்னை நிதானித்தார்கள்.

௰ ஆனதால் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழிதப்பி நடக்கிற மனதுள்ளவர்களாய் என்னுடைய நெறிகளை அறியாதிருக்கிறார்கள என்று சொல்லி,

௰௧ இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்தில் அவர்கள் பிரவேசியாமல் இருக்கக்கடவர்கள் என்று† எனது கோபத்தினால் ஆணையிட்டேன் என்றார்.

௰௨ அந்தப்படி சகோதரரே, சீவனையுடைய பராபரனைவிட்டு விலகுதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனிடத்திலும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருந்து,

௰௩ உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் ஒருவருக்கொருவர் நாடோறும் புத்தி சொல்லி வருவீர்களாக.

௰௪ நாம் நம்பிக்கையை அடைந்ததுமுதல் [12]முடிவுபரியந்தம் அதை உறுதியாய்ப் பற்றிக்கொண்டால் நாம் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போமே.

௰௫ இன்றைக்கு நீங்கள் அவருடைய சத்தத்தைக் கேட்கையில் கோபம் மூட்டுதலுள்ள நாளிலே நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்றுசொல்லியிருக்கிறபடியால், (அப்படியே பற்றிக்கொள்ளவேண்டும்).

௰௬ அதெப்படியெனில் [14]கேட்டவர்களில் சிலர் கோபமூட்டினார்கள், அப்படிச் செய்தவர்கள் மோசேயினாலே எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அல்ல, மேலும் அவர் நாற்பதுவருஷமாய் எவர்களை அரோசித்தார்?

௰௭ பாவம்செய்தவர்களை அல்லவா? [15]அவர்களுடைய சரீரங்கள் வனாந்தரத்திலே விழுந்துபோயின.

௰௮ பின்னும் இளைப்பாறுதற்

கி. பி. ௬௪.

1 ௪ மோ ௰௨. ௭ வச

* கிரேக்கு, உண்டாக்கினவருக்கு, ௧ சாமு ௰௨. ௬.

2 எபே ௨. ௰ ௩ ௯. எபி ௧ ௨

3 சகரி ௬. ௰௨. மத் ௰௬. ௰௮

4 ௫ மோ ௰௮. ௰௫, ௰௮, ௰௯

5 ௨ மோ. ௰௪ ௩௧ ௪ மோ ௰௨ ௭ ௫ மோ ௩௪ ௫ யோசு ௧ ௨ ௮ ௩௪

6 ௨ வச.

7 எபி ௧ ௨

8 ௰௪ வச மத் ௰ ௨௨ ௨௪ ௰௩ உரோ ௫ ௨ கொலோ ௧ ௨௩ எபி. ௬ ௰௧ ௰ ௨௩

9 ௧ கொரி ௩ ௰௬. ௬. ௰௯. ௨ கொரி ௬. ௰௬ எபே ௨ ௨௧, ௨௨ ௧ தீமோ. ௩ ௰௫ ௧ பே ௨ ௫

10 ௨ சாமு ௨௩ ௨ அப ௧ ௰௬

11 ௰௫ வசனம சங ௯௫ ௭

† கிரேக்கு, பிரவேசித்தால்

12 ௬ வச

13 ௭ வச

14 ௪ மோ ௰௪. ௨, ௪, ௰௧ ௨௪ ௩௦ ௫ மோ ௧ ௩௪, ௩௫, ௩௮

15 ௪ மோ ௰௪. ௨௨, ௨௯ ஞி. ௨௯ ௯௬ சங ௯௯ ௨௯ ௧ கொரி ௰ ௫. யூதா ௫

கான என்னுடைய இடத்திலே பிரவேசியாதிருக்கக்கடவர்கள் என்று அவர் யாரைக்குறித்து [1]ஆணையிட்டார்? விசுவாசியாதவர்களைக்குறித்து அல்லவா?

௰௯ ஆனதால், அவிசுவாசத்தினாலே [2]அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமல் போனார்கள் என்று பார்க்கிறோமே.

௪. அதிகாரம்.

௧ விசுவாசத்தினால் கிறிஸ்தவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டென்றும், ௰௨ பராபரனுடைய வசனம் வல்லமையுள்ளதென்றும், ௰௪ பாவமில்லாமல் பலவீனங்களுக்குரிய தேவகுமாரனும், பிரதான ஆசாரியருமாகிய இயேசுவினால், ௰௬. நாம் கிருபாசனத்தண்டைக்குத் தயிரியத்தோடே போகக்கூடுமென்றும் சொல்லியது.

ஆனபடியினாலே இளைப்பாறுதற்கான அவருடைய இடத்திலே பிரவேசிக்கும்படிக்கு ஏற்ற வாக்குத்தத்தம் பின்னும் நமக்கு உண்டாயிருக்க நம்மில் ஒருவனாகிலும் (அதை அடையாதபடி) தாமதமாயிருக்கிறவனாகத் தோன்றாதபடிக்குப் [3]பயந்திருக்கக்கடவோம்.

௨ எப்படியெனில் சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல, நமக்கும் அறிவிக்கப்பட்டது; அந்த வசனத்தைக் கேட்டும் அவர்களுக்குள்ளே விசுவாசம் இல்லாதபடியால்* அந்தக் கேள்வி† அவர்களுக்குப் பிரயோசனமாய் இருக்கவில்லை.

௩ [4]விசுவாசிகளாகிய நாம் இளைப்பாறுதற்கான இடத்தில் பிரவேசிப்போம்; அதற்குத் திருட்டாந்தமாக உலகம் சிருட்டிக்கப்பட்டபொழுது தம்முடைய கிரியைகளைச் செய்து முடித்து இளைப்பாறினபின்பு அவர் சொன்னது: இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்திலே அவர்கள் பிரவேசிப்பதில்லை என்று [5]நான் ஆணையிட்டேன் என்று சொன்னார்.

௪ அதற்குத் திருட்டாந்தமாக ஓரிடத்திலே ஏழாம் நாளைக்குறித்துச் சொல்லியிருக்கிறது ஏன்னவெனில், [6]பராபரன் ஏழாம்நாளிலே தம்முடைய கிரியைகளை எல்லாம் முடித்து, ஓசோறையாய் இருந்தார் என்று சொல்லியிருக்கிறது.

௫ மறுபடியும் மேற்சொல்லிய இடத்திலே அவர்கள் இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்தில் பிரவேசியாமலிருக்கக்கடவர்கள் என்றும் சொல்லியிருக்கிறார்.

௬ ஆகையால் பின்னும் சிலர் அதில் பிரவேசிக்கிறதற்கு ஏதுவுண்டாயிருந்தபடியினாலும், முதலாவது [7]சுவிசேஷத்தைக்‡ கேட்டவர்களும் அவிசுவாசத்தினாலே அதில் பிரவேசியாமல் போனபடியினாலும்,

௭ ¶ [8]இன்று அவருடைய சத்தத்தைக் கேட்கையில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று அநேக காலத்திற்குப் பின்பு தாவீதின் புத்தகத்திலே சொல்லியிருக்கிறபடி, இன்றைக்கு என்பதினாலே (பராபரன்) பின்னும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்.

௮ யோசுவா§ என்பவன் அவர்களை இளைப்பாறச்செய்தானானால் பின்பு அவர் வேறொரு நாளைக்குறித்துப் பேசமாட்டாரே.

௯ ஆனபடியால், இளைப்பாறும்படிக்கான காலம்|| பின்னும் பராபரனுடைய சனங்களுக்கு வருகிறதாயிருக்கின்றது.

௰ அந்தப்படி பராபரன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்ததுபோல, இளைப்பாறுதற்கான அவருடைய இடத்தில் பிரவேசித்தவனும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.

௰௧ ஆகையால், அந்தத் திருட்டாந்தத்தின்படி [9]ஒருவனாகிலும் அவிசுவாசத்தினாலே¶ விழாதபடிக்கு, நாம் மேற்சொல்லிய இளைப்பாறுதற்கான இடத்தில் பிரவேசிக்கச் சாக்கிரதையாய் இருக்கக்கடவோம்

கி. பி. ௬௪.

[1] ௪ மோ. ௰௪. ௨௮ ௫ மோ. ௧. ௩௪, ௩௫.

[2] எபி ௩ ௧.

[3] எபி ௰௨ ௰௫

* அல்லது விசுவாசத்தோடே கலக்கப்படாதபடியால்.

† அல்லது பிரசங்கிக்கப்பட்ட வசனம்

[4] எபி ௩. ௰௪

[5] சங் ௯௫ ௰௧ எபி ௩ ௰௧

[6] ௧ மோ. ௨. ௨ ௨ மோ ௨௰ ௰௧ ௩௰௧ ௰௭

[7] எபி ௩ ௰௯

‡ அல்லது அதை

[8] சங் ௯௫ ௭ எபி ௩. ௭

§ அதாவது இயேசு

|| அல்லது ஓய்வுநாளைக் கைக்கொளுதல்.

[9] எபி ௩ ௰௨, ௰௮, ௰௯.

¶ அல்லது கீழ்ப்படியாமையினாலே

௰௨ [1]பராபரனுடைய வார்த்தை உயிர்ப்பிக்கிறதுமாய், பலமுள்ளதுமாய், [2]இருபுறமும் கருக்குள்ள எந்தக் கத்தியிலும் [3]கருக்கானதுமாய், ஆத்துமாவையும், ஆவியையும், (சரீர) மொழிகளையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதுமாய், இருதயத்தின் சிந்தனைகளையும் [4]யோசனைகளையும் வகையறுத்துத் தீர்க்கிறதுமாய் இருக்கிறதே; அவருக்குமுன்பாகத் தோன்றுதிருக்கிற சிருட்டி ஒன்றுமில்லை.

௰௩ [5]சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிருவாணமாயும், [6]வெளியரங்கமாயும் இருக்கின்றன; அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

௰௪ ¶ ஆகையால், [7]வானங்களின் வழியாய்ப் (பரமண்டலத்திற்குப) போன தேவகுமாரனாகிய இயேசுவென்னும் [8]மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினாலே, (அவரை) [9]அறிக்கையிடுகிறதில் உறுதியாயிருக்கக்கடவோம்.

௰௫ அவர் நம்முடைய் பலஈனங்களைக்குறித்து நமக்கு இரங்கத் திராணியில்லாத [10]பிரதான ஆசாரியர் அல்லவே; [11]பாவத்தைத் தவிர [12]மற்றெந்தவிதத்திலுைம நம்மைப்போலச் சோதிக்கபபட்டாரே.

௰௬ ஆதலால் நாம் இரக்கத்தைப பெற்றுக்கொள்ளும்படிக்கும், காலத்திற்குத் தகுதியான உதவியாகிய கிருபையைய் அடைந்துகொள்ளும்படிக்கும் [13]தயிரியமாய்க் கிருபாசனத்தினிடத்திலே சேரக்கடவோம்

௫. அதிகாரம்.

௧. நம்முடைய இரட்சகரின் ஆசாரிய பட்டத்துக்குரிய அதிகாரத்தையும் மேன்மையையும் சொல்லி, ௰௧ அந்த அறிவுக்கு வந்து எட்டாதிருபபதைக்குறித்துக் கடிந்துகொண்டது

அன்றியும் மனிதரில் எடுக்கப்பட்ட பிரதான ஆசாரியன் யாவனும் [14]பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தி, [15]இப்படி மனிதருக்காகத் [16]தேவகாரியங்களை நடபபிக்கும்படிக்கு வைக்கப்படுவான்.

௨ அல்லாமலும் [17]அவன் தானும் பலஈனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் வழிவிலகிபோனவர்களுக்கும் [18]மனஉருக்கமாய் இருக்கத்தக்கவனாய் இருப்பான்.*

௩ [19]அந்த முகாந்தரத்தினாலே அவன் சனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடுகிறதுபோலத் தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது

௪ ¶ மேலும் ஒருவனாயினும் [20]அந்தக் கனமான உத்தியோகத்தைத் தன்னாலே ஏற்றுக்கொள்ளாமல், [21]ஆரோன் அழைக்கப்பட்டதுபோலப் பராபரனாலே அதற்கு அழைக்கபபடுவான்.

௫ [22]அந்தப்படி கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; [23]நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைச் செனிபபித்தேன் என்று அவரோடே (சொன்னவரே அவரை உயர்த்தினார்).

௬ அப்படி வேறொரு இடத்திலேயும், நீர் மெல்கிசேதேக்கின் முறைமையாய் [24]என்றென்றைக்கும் ஆசாரியரானவர் என்று சொல்லியிருக்கிறது.

௭ (அன்றியும்) அவர் மனிதனாகப் பூமியிலே சஞ்சரிக்கையில் [25]தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, [26]பலத்த சத்தத்தோடும் அழுகையோடும் [27]விண்ணப்பம்பண்ணி மிகவும் வேண்டிக்கொண்டு,

கி. பி. ௬௪.

1 எசா ௪௯. ௨. எரே ௨௩. ௨௯. ௨ கொரி ௰ ௪; ௬ ௭ பே ௧ ௨௩
2 எபே ௬ ௰௭ வெளி ௧ ௰௬ ௨ ௰௬.
3 வாக் ௫ ௪
4 ௧ கொரி ௰௪ ௨௪, ௨௫
5 சங ௩௩ ௰௩, ௰௪ ௧௩௯ அ ௧௧, ௰௨
6 யோபு ௨௬ ௬ ௩௪ ௨௨ வாக் ௰௫ ௰௧
7 எபி ௭ ௨௬ ௯ ௰௨, ௨௪.
8 எபி ௩ ௧
9 எபி ௰ ௨௩
10 ஏசா ௫௩ ௩ எபி ௨ ௰௮
11 ௨ கொரி ௫ ௨௧ எபி ௭ ௨௬ ௧ பே ௨ ௨௨ ௧ யோ ௩ ௫
12 லூக் ௨௨ ௨௮
13 எபே ௨ ௰௮ ௩ ௰௨ எபி ௰ ௰௯, ௨௨
14 எபி ௮ ௩, ௪ ௯ ௯ ௰௧ ௰
15 எபி ௨ ௫
16 எபி ௨ ௰௭
17 எபி ௭ ௨௮
18 எபி ௨ ௰௮ ௪ ௰௫

* அறியாதவர்களுக்கும் வழிவிலகிப்போனவர்களுக்கும் இரக்கமாயிருக்கத் தக்கவன்

19 லேவி ௪ ௩ ௯ ௭ ௰௬ ௬, ௰௫ எபி ௭ ௨௭ ௯ ௭
20 ௨ நாளா ௨௬ ௰௮ யோவா ௩ ௨௭
21 யாத் ௨௮ ௧ எண் ௰௬ ௫, ௪௦ ௧ நாளா ௨௩ ௰௩

---

22 யோவா ௮ ௫௪ — 23 சங் ௨. ௭ எபி ௧. ௫ — 24 சங் ௱௰ ௪ எபி. ௭ ௰௭, ௨௧ — 25 மத். ௨௬. ௩௯ மாற் ௰௪ ௩௬ — 26 சங் ௨௨. ௧ மத் ௨௭ ௪௬, ௫௦ மாற் ௰௫ ௩௪, ௩௭ — 27 லூக். ௨௨ ௪௪, ௪௨, ௪௪ மாற் ௰௪ ௩௬, ௩௯. யோவா. ௰௭ ௧

¹தமக்குண்டான பயத்தினின்று* விடுதலையாக்கப்பட்டு,

௮ ²குமாரனாயிருந்தும் தாம் பட்டபாடுகளாலே ³கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,

௯ ⁴தாம் தேறினவரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்தியமான இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

௰ (இப்படிப்) பராபரனால் ⁵மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று வாழ்த்தப்பட்டார்.

௰௧ ¶ இந்தச் சங்கதியைக்குறித்து ⁶நான் விஸ்தாரமாய்ப் பேசலாம்; ⁷நீங்கள் தாமதமாய் அறிகிறவர்களானபடியால் அதை விவரித்துக் காண்பிக்கிறது அரிதாய் இருக்கின்றது.

௰௨ காலத்தைப் பார்க்கிறபொழுது போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குப் ⁸பராபரனுடைய வாக்கியங்களின் முதல் நியாயங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாய் இருக்கின்றது; உணவை அல்ல ⁹பாலைச் சாப்பிடத்தக்கவர்கள் ஆனீர்களே.

௰௩ ¹⁰பால் உண்கிறவன் குழந்தையாய் இருக்கிறபடியினாலே, நீதிக்குரிய வசனத்தை அறிந்துகொள்ளத்திராணி†யுள்ளவன் அல்லவே.

௰௪ கெட்டியான உணவு நிறைவாய் வளர்ந்தவர்களாயும்,‡ ¹¹நன்மையையும் தீமையையும் வகையறுக்கிறதற்கு முயற்சியினாலே§ தகுதியாக்கப்பட்ட புத்தியுள்ளவர்களாயும் இருக்கிறவர்களுக்கே ஏற்றதாயிருக்கின்றது.

௬. அதிகாரம்

௧ விசுவாசத்தைவிட்டு மருளவிழாமல், ௯-௰. உறுதியாயிருந்து, ௰௨ பராபரனைச் சாக்கிரதையோடும் பொறுமையோடும் சேவித்திருக்கக் கற்பித்து, ௰௩. பராபரன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று சொல்லியது

ஆகையால் ¹²மரணத்திற்கு ஏதுவான கிரியைகளைவிட்டு மனந்திரும்புகிறதற்கும், பராபரனை விசுவாசிக்கிறதற்கும்,

௨ ¹³ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசத்திற்கும், ¹⁴கைகளை வைக்கிறதற்கும், ¹⁵மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்புதற்கும் ¹⁶நித்தியமான நியாயத்தீர்ப்புக்கும் ஏதுவான உபதேசங்களினாலே நாம் மறுபடியும் அஸ்திபாரம் போடாதபடிக்கு, ¹⁷கிறிஸ்துவுக்குரிய முதல் நியாயங்களைச்|| சொல்லுகிற உபதேசத்தை நாம் இப்பொழுது நிறுத்தி, உயர்ந்த உபதேசங்களைக்குறித்துப் பேசிக்கொள்வோமாக.

௩ ¹⁸பராபரனுக்குச் சித்தமானால் அப்படியே செய்வோம்.

௪ என்னத்திற்காகவெனில், ¹⁹ஒருகாலத்திலே பிரகாசமாக்கப்பட்டும் ²⁰பரமஈவை ருசிபார்த்தும் ²¹பரிசுத்த ஆவியைப் பெற்றும்,

௫ பராபரனுடைய நல்வார்த்தையையும் ²²இனிமேல் வரும் யுகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும் இருக்கிறவர்கள் மறுதலித்து விழுந்தபின்பு,

௬ பராபரனுடைய குமாரனைத் தங்களுக்குள்ளே ²³மறுபடியும் சிலுவையில் அறைந்து அபகீர்த்தி செய்தபடியால் மனந்திரும்புகிறதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதிதாக்கக் ²⁴கூடாத காரியமாயிருக்கின்றது.

௭ ¶ இதற்குத் திருட்டாந்தமாகப் பூமியானது தனக்கு அடிக்கடி வருகிற மழையை உட்கொண்டு தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கு ஏற்ற¶ பயிரை முளைப்பிக்கும்பொழுது, ²⁵பராபரனால் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

௮ ²⁶முட்செடிகளையும் முட்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலம் தகாததாயும், சபிக்கப்படுதற்

கி. பி. ௬௪.

1 மத். ௨௬. ௩௯ மாற். ௰௪. ௩௬ லூக். ௨௨. ௪௪ யோவா. ௰௨. ௨௭

* அல்லது தேவ பத்தியினின்று

2 எபி. ௧. ௨

3 பிலி. ௨. ௮

4 எபி. ௨. ௰. ௰௧. ௪௰

5 சங். ௱௰. ௪, எபி. ௬. ௨௰

6 யோவா. ௰௬. ௰௨ ௨ பேது. ௩. ௰௬

7 மத். ௰௩. ௰௫

8 எபி. ௭. ௰௮

9 ௧ கொரி. ௩. ௧, ௨, ௩

10 ௧ கொரி. ௰௩. ௰௧ ௰௪. ௨௰ எபே. ௪. ௰௪ ௧ பேது. ௨. ௨

† [illegible]

‡ அல்லது தேறினவர்களாயும், ௧ கொரி. ௨. ௬ எபே. ௪. ௰௩ பிலி. ௩. ௰௫

11 ஏசா. ௭. ௰௫ ௧ கொரி. ௨. ௰௪, ௰௫

§ அல்லது பழக்கத்தினாலே

12 எபி. ௯. ௰௪

13 அப். ௰௯. ௪, ௫

14 அப். ௮. ௰௪, ௰௭. ௰௯. ௬

15 அப். ௰௭. ௩௧, ௩௨

16 அப். ௨௪. ௨௫ ரோ. ௨. ௰௬

17 பிலி. ௩. ௰௨, ௰௩, ௰௪

|| அல்லது முதன் மொழிகளை

18 அப். ௰௮. ௨௧ ௧ கொரி. ௪. ௰௯

19 எபி. ௰. ௨௬

20 யோவா. ௪. ௰ ௬. ௩௨ ௧ பேது. ௨. ௩

21 கலா. ௩. ௨, ௫ எபி. ௨. ௪

22 எபி. ௨. ௫

23 எபி. ௰. ௨௯

24 மத். ௰௨. ௩௧, ௩௨ எபி. ௰. ௨௬ ௨ பேது. ௨. ௨௰, ௨௧ ௧ யோவா. ௫. ௰௬.—¶ அல்லது பயிரிடுகிறவர்களால்.

25 சங். ௬௫. ௰ —26 ஏசா. ௫. ௬.

குச் சமீபமாயும் இருக்கின்றது; கடைசியிலே அது முழுவதும் காய்ந்துபோம்

௯ ¶ பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொல்லியும், இரட்சிப்புக்கு ஏற்ற நன்மையான யோசனைகள் உங்களுக்கு உண்டாயிருக்கின்றன என்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

௰ [1]பராபரனும் [2]உங்கள் கிரியையையும் [3]பரிசுத்தவான்களுக்கு நீங்கள் ஊழியம்செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறக்கத்தக்கதாக [4]அநியாயமுள்ளவர் அல்லவே.

௰௧ ¶ ஆகையால் நீங்கள் தாமதமாய் இராமல், [5]வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கும்படிக்கு,

௰௨ [6]நீங்கள் யாவரும் (எங்கள்) நம்பிக்கை பரிபூரணமுள்ளதாகும்படி முடிவுபரியந்தம் சாக்கிரதையையே [7]காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

௰௩ ஆபிரகாமுக்குப் பராபரன் வாக்குத்தத்தம்பண்ணினபொழுது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவரும் இல்லாதபடியினாலே [8]தமதுபேரிலே ஆணையிட்டு,

௰௪ நான் உன்னை மிகவும் ஆசீர்வதித்து, உன்னை மிகவும் பெருகப்பண்ணுவேன் என்றார்.

௰௫ அவனும் அந்தப்படியே பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.

௰௬ அது எப்படியெனில், மனிதர்கள் தங்களிலும் பெரியவன் பேரில் ஆணையிடுவார்கள்; [9]உறுதிபண்ணும்படிக்கு ஏற்ற ஆணையே அவர்களுக்குள்ளே சகல வியாச்சியங்களையும் நிறைவேற்றும்.

௰௭ அந்தப்படி பராபரனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் [10]சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது யோசனையின் [11]மாறாத நிச்சயத்தைக் காண்பிக்கும்படி அதிக சித்தமுள்ளவராய் ஓர் ஆணையினாலே அவைகளை ஸ்திரப்படுத்தினார்.*

௰௮ பராபரன் பொய்பேசக்கூடாததாயிருக்க, நாம் நம்பிக்கொள்ளும்படி [12]நமக்குமுன் வைக்கப்பட்டதைப் பிடிக்கிறதற்கு ஓடிவந்த நாம் மாறாத இரண்டு பொருள்களினாலே பலத்த ஆறுதலுள்ளவர்கள் ஆகும்பொருட்டாக அப்படிச் செய்தார்.

௰௯ அந்த நம்பிக்கை நம்முடைய ஆத்துமாவுக்கு நிலையும் உறுதியுமான நங்கூரம்போலாகித் [13]திரைச்சீலைக்குள் போகிறதாயிருக்கின்றது.

௨௰ [14]நமக்குமுன் ஓடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி [15]நித்தியமான பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைச்சீலைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

௭. அதிகாரம்.

௧ கிறிஸ்து இயேசு மெல்கிசேதேக்கின் முறைமைப்படிக்கு ஆசாரியராய் இருக்கிறபடியினாலே, ௰௧ ஆரோனின் முறைமைப்படிக்கு உண்டாயிருக்கிற ஆசாரியர்களைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவர் என்று சொல்லியது.

[16]அந்த மெல்கிசேதேக்கு என்பவன் இராசாக்களை அடித்துத் திரும்பிவந்த ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு அவனை ஆசீர்வதித்து அவனாலே பத்தில் ஒருபாகத்தைப் பெற்றுக்கொண்டவன்.

௨ அவன் சாலேமின் இராசா, உன்னதமான தேவனுக்குமுன்பாக ஆசாரியனாயிருந்தவன்; முதல்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியுள்ள இராசா என்று அருத்தமாம்; பின்பு சாலேமின்

[1] வாக். ௰௪ ௧௧. மத். ௰ ௪௨. ௨௫ ௪௰. யோவா. ௰௩ ௨௰.
[2] ௧ தெச. ௧ ௩.
[3] உரோ. ௰௫ ௨௫. ௨ கொரி. ௮ ௪. ௯ ௧. கல. ௬ ௰. ௨ தீமோ. ௧ ௰௮.
[4] உரோ. ௩ ௪. ௨ தெச. ௧ ௬, ௭.
[5] எபி. ௰ ௩௬.
[6] கொலோ. ௨ ௨.
[7] எபி. ௩ ௬, ௰௪.
[8] ௧ மோ. ௨௨ ௰௬, ௰௭. சங். ௱௫ ௯. லூக். ௧ ௭௩.
[9] ௨ மோ. ௨௨ ௰௧.
[10] எபி. ௰௧ ௯.
[11] உரோ. ௰௧ ௨௯.
* கிரேக்கு, தாமே மத்தியஸ்தரானார்.
[12] எபி. ௰௨ ௧.
[13] ௩ மோ. ௰௬ ௰௫. எபி. ௯ ௭.
[14] எபி. ௪ ௰௪. ௮ ௧. ௯ ௨௪.
[15] எபி. ௩ ௧. ௫ ௬. ௭ ௰௭.
[16] ௧ மோ. ௰௪ ௰௮.

இராசா என்பதற்குச் சமாதானமுள்ள இராசா என்று அருத்தமாம்.

௩ அவன், தகப்பனும் தாயும் வம்ச அட்டவணையும்* இல்லாதவன்; அவனுடைய (உத்தியோக) நாள்களின் ஆரம்பமும் சீவனின் முடிவும் சொல்லப்பட்டிராததினாலே அவன் பராபரனுடைய குமாரனுக்கு ஒப்பாக்கப்பட்டவனாய்த் தன் முழுச் சீவகாலமளவும் ஆசாரியனாய் இருக்கிறான்.

௪ ¶ அவனுடைய மேன்மையைப் பார்ப்பீர்களாக; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமும் கொள்ளையிடப்பட்டவைகளில் பத்தில் ஒரு பாகத்தை [1]அவனுக்குக் கொடுத்தானே.

௫ [2]இலேவியின் புத்திரரில் ஆசாரியபட்டத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் சந்ததியாராகவே இருக்கிற தங்கள் சகோதரராகிய சனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி பத்தில் ஒன்றை வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்.

௬ அது மெய்தான், ஆகிலும், அவர்களுடைய வம்சத்தில்† இராதவனாகிய (மெல்கிசேதேக்கு என்பவன்) பத்தில் ஒன்றை ஆபிரகாமின் கையிலே வாங்கி [3]வாக்குத்தத்தங்களைப் பெற்றவனையே [4]ஆசீர்வதித்தான்.

௭ சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்.

௮ ¶ அதற்குச் சந்தேகமில்லையே; அன்றியும், இவ்விடத்திலே மரிக்கத்தக்க மனிதர் பத்தில் ஒன்றை வாங்குவார்கள்; [5]அவ்விடத்திலே பிழைத்திருக்கிறார் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்.

௯ அன்றியும், மெல்கிசேதேக்கு என்பவன் ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபொழுது, இலேவியானவன் தன் தகப்பனுடைய அறையில் இருந்தபடியால்,

௰ பத்தில் ஒன்றை வாங்குகிற இலேவியும் ஆபிரகாமினாலே பத்தில் ஒன்றைக் கொடுத்தான் என்று சொல்லலாம்.

௰௧ ¶ அல்லாமலும் (இஸ்ரவேல்) [6]சனங்கள் இலேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குள்ளாய் அல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்? அந்த இலேவிகோத்திர ஆசாரிய முறைமையினாலே நிறைவுள்ள ஆசீர்வாதம் மெய்யாய் வந்தால் ஆரோனுடைய முறைமையின்படி அல்ல, மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படியே அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியன் எழும்பவேண்டுவதென்ன?

௰௨ ஆகையால் ஆசாரியமுறைமை மாற்றப்பட்டிருக்க, நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாயிருந்தது.

௰௩ இவைகளால் சொல்லப்பட்டிருக்கிறவர் எவரோ, அவர் வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்தவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவனாயினும் பலிபீடத்திலே ஆராதனைசெய்யவும் இல்லையே.

௰௪ நம்முடைய கர்த்தரானவர் [7]யூதாவின் கோத்திரத்தில் பிறந்தார் என்பதும் நிச்சயமாயிருக்கிறதே, அந்தக் கோத்திரத்தாருக்கு மோசே என்பவன் ஆசாரியபட்டத்தைக்குறித்து ஒன்றும் சொல்லவில்லையே.

௰௫ அல்லாமலும் மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்பதினாலே அது மிகவும் அதிக தெளிவாயிருக்கின்றது.

௰௬ அவர் சரீரத்துக்கு ஏற்ற கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி அல்ல,

௰௭ மெல்கிசேதேக்கின் முறைமையாய், [8]நீர் என்றென்றைக்கும் உள்ள ஆசாரியராய் இருப்பீர் என்று சொன்ன சாட்சிக்குத்தக்கதாக நீங்காத சீவனுக்குரிய

ஆ. பி. ௧௪.

* [illegible]

[1] ௧ மோ. ௰௪. ௨௰.

[2] ௪ மோ. ௰௮. ௨௧, ௨௬.

† [illegible] சந்ததியில

[3] உரோ. ௪. ௰௩. கலா. ௩. ௰௬.

[4] ௧ மோ. ௰௪. ௰௯.

[5] எபி. ௫. ௬. ௬. ௨௰.

[6] கலா. ௨. ௨௧. [illegible] எபி. ௮. ௭.

[7] ஏசா. ௰௧. ௧. மத். ௧. ௩. லூக். ௩. ௩௩. உரோ. ௧. ௩. வெளி. ௫. ௫.

[8] சங். ௱௰. ௪. எபி. ௫. ௬. ௬. ௨௰.

வல்லமையின்படியே ஆசாரியரானார்.

௰௮ ¶ ஆகையால் முன் கொடுக்கப்பட்ட கட்டளை [1]பலஈனமாயும் அபிரயோசனமாயும் இருந்தபடியால் அது நீக்கப்பட்டது.

௰௯ [2]நியாயப்பிரமாணம் ஒன்றையும் நிறைவாக்கவில்லை; [3]அதிக நன்மையான நம்பிக்கைக்கு ஏதுவானது (பின்னாலே) உண்டாக்கப்பட்டு நிறைவாக்குகிறது;* அதினாலே [4]நாம் பராபரனிடத்தில் சேருகிறோம்.

௨௰ ¶ அன்றியும் முந்தினவர்கள் ஆணையில்லாமல்† ஆசாரியரானார்கள்; பிந்தினவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, நீ என்றென்றைக்குமுள்ள ஆசாரியர் என்று துக்கமில்லாமல் [5]ஆணையிட்டுத் தம்முடனே சொன்ன கர்த்தராலே ஆணையோடே அப்படியானார்.

௨௧ ஆனதால் இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டு,

௨௨ (அவர்களுக்கு அதிகமாயிருக்க) [6]அதிக நன்மையான உடம்படிக்கைக்கு ஏற்ற பிணையாளியானார்.

௨௩ ¶ அன்றியும், அந்த ஆசாரியர் எப்பொழுதும் இருக்கக்கூடாதபடிக்கு மரிக்கிறவர்களானபடியால் அநேகராய் இருந்தார்கள்.

௨௪ அவர் என்றென்றைக்கும் இருக்கிறவரானதினாலே நீங்காத‡ ஆசாரியபட்டம் உள்ளவராயிருக்கிறார்.

௨௫ அன்றியும், தம்மாலே [7]பராபரனைச் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவரானதால், அவர்களை முற்றும் § இரட்சிக்க வல்லமையுள்ளவராயும் இருக்கிறார்.

௨௬ ¶ [8]பரிசுத்தராயும், தீமை செய்யாதவராயும், அசுத்தம் இல்லாதவராயும் பாவிகளைவிட்டுப் பிரிந்தவராயும், [9]வானங்களுக்கு மேல் உயர்ந்தவராயும் இருக்கிற இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரே நமக்கு வேண்டும்.

௨௭ அவர் முந்தின ஆசாரியர்களைப்போல முதலாவது [10]தன்னுடைய சொந்தப் பாவங்களுக்காகவும், [11]பின்பு சனங்களுடைய பாவங்களுக்காகவும், நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; [12]அவர்களுக்காக அவர் ஒரேதரம் தம்மைப் பலியிட்டாரே.

௨௮ நியாயப்பிரமாணமானது பலஈனத்தையுடைய மனிதர்களை [13]ஆசாரியராக ஏற்படுத்துகின்றது; நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு ஆணையோடே இருந்த வசனம் [14]என்றென்றைக்கும் பூரணராகிய|| குமாரனையே ஏற்படுத்துகின்றது.

௮. அதிகாரம்.

௧. கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவத்தினால் இலேவியருக்கு அடுத்த ஆரோனின் ஆசாரியத்துவம் ஒழிந்ததென்றும், ௭ பிதாக்களோடே செய்த தற்காலத்துக்குரிய உடம்படிக்கை நித்தியகாலத்துக்கு உரிய சுவிசேஷத்தின் உடம்படிக்கையினாலே நீக்கப்பட்டதென்றும் சொல்லியது

மேற்சொல்லியவைகளில் பிரதானமானது என்னவெனில், பரமண்டலங்களிலுள்ள மகத்துவ ஆசனத்தின் [15]வலதுபாரிசத்திலே உளுக்கார்ந்திருக்கிறவருமாய்,

௨ மனிதர்களாலே அல்ல, கர்த்தராலே வைக்கப்பட்ட [16]மெய்யான கூடாரமாகிய [17]பரிசுத்த இடத்திலே¶ ஆராதனை செய்கிறவருமாய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு உண்டு.

௩ ¶ [18]ஆசாரியர் யாவரும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துதற்கு வைக்கப்பட்டிருக்கிறதால் அவரும் (பரமண்டலத்திலே) [19]சிலவற்றைப் பலியிட வேண்டுவதாயிருந்தது.

௪ பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராய் இருக்கமாட்

கி. பி. ௬௪.

[1] ரோ. ௮. ௩. கலா. ௪. ௯.
[2] அப. ௰௩. ௩௯. ரோ. ௩. ௨௰, ௨௧, ௨௮. அ. ௩. கலா. ௨. ௰௬. எபி. ௯. ௯.
[3] எபி. ௬. ௰௮. அ. ௯.
* அல்லது நிறைவாக்குகிறதாயிருக்கின்றது. கலா. ௩. ௨௪.
[4] ரோ. ௫. ௨. எபே. ௨. ௰௮. ௩. ௰௨. எபி. ௪. ௰௬. ௰. ௰௯.
† அல்லது ஆணையிடாமல
[5] சங். ௱௰. ௪.
[6] எபி. ௮. ௬. ௯. ௰௫. ௰௨. ௨௪.
‡ அல்லது மாறாத
[7] ரோ. ௮. ௩௪. ௧ தீமோ. ௨. ௫. எபி. ௯. ௨௪. ௧ யோ. ௨. ௧.
§ அல்லது அவர்கள் எல்லாரையும்
[8] எபி. ௪. ௰௫.
[9] எபே. ௧. ௨௰. எபி. ௮. ௧.
[10] லேவி. ௯. ௭. ௰௬. ௬, ௰௧. எபி. ௫. ௩.
[11] லேவி. ௰௬. ௰௫.
[12] ரோ. ௬. ௰. எபி. ௯. ௰௨. ௨௮. ௰. ௰௨.
[13] எபி. ௫. ௧, ௨.
[14] எபி. ௨. ௰. ௫. ௯.
|| அல்லது பிரதிஷ்டை பண்ணப்பட்ட
[15] எபே. ௧. ௨௰. கொலோ. ௩. ௧. எபி. ௧. ௩. ௰௨. ௨.
[16] எபி. ௯. ௰௧.
[17] எபி. ௯. ௮. ௰௨. ௨௪.
¶ அல்லது பரிசுத்த காரியங்களில்
[18] எபி. ௫. ௧.
[19] எபே. ௫. ௨. எபி. ௯. ௰௪.

டார்; அங்கே நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிறவர்கள் ஆசாரியர்களாய் இருக்கிறார்களே.*

௫ மோசே அந்தக் கூடாரத்தை உண்டுபண்ணப்போனபொழுது, [1]மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட சாயலின்படியே நீ சகலத்தையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று பராபரன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே, அந்த ஆசாரியர்கள் பரமண்டலத்திற்குரியவைகளுக்கு அடையாளமும் [2]நிழலாட்டமுமானவைகளை உள்ள (இடத்திலே) ஆராதனை செய்கிறார்கள்.

௬ அவர் அதிக மேன்மையான வாக்குத்தத்தங்களின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அதிக மேன்மையான உடம்படிக்கைக்கு † ஏற்ற மத்தியஸ்தராய் இருக்கிறதால், [3]அதிக விசேஷமான ஆராதனைசெய்தலைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

௭ ¶ [4]அந்த முதலாம் உடம்படிக்கை பிழையில்லாததாயிருந்ததானால் இரண்டாவதற்கு இடம் தேடப்படுவதில்லையே.

௮ அவர்களைக் குற்றவாளிகள் என்று சொல்லி, அவர்களுடனே திருவுளம்பற்றினதாவது: கர்த்தர் சொல்லுகிறது என்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தாரோடும் யூதர் குடும்பத்தாரோடும் [5]நான் புதிய உடம்படிக்கையை ஏற்படுத்தும்படிக்கான காலம் வருகின்றது.

௯ அவர்களுடைய முன்னோர்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு, நான் அவர்களுடைய கையைப் பிடித்துக்கொண்ட நாளிலே, அவர்களுடனே பண்ணின உடம்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடம்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களை அரோசித்தேன்.

௰ அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடம்படிக்கை என்னவென்றால், [6]என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைப்பேன்;‡ அவைகளை அவர்களுடைய இருதயங்களின்மேலே§ எழுதி, [7]அவர்களுக்குத் தேவனாய் இருப்பேன்; அவர்கள் எனக்குச் சனங்களாய் இருப்பார்கள்.

௰௧ அப்பொழுது சிறியவன்முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிந்துகொள்வதால், கர்த்தரை அறிந்துகொள் என்று [8]ஒருவன் தனக்கடுத்த பிறனுக்கும், வேறொருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை.

௰௨ நான் அவர்களுடைய அநியாயங்களை (நீக்கி,) [9]அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமல் அவர்களுக்கு இரங்குவதால் அப்படியாகுமென்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறார் என்பதே.

௰௩ [10]புதிதான உடம்படிக்கை என்று அவர் சொல்லுகையில், முதலாவதைப் பழமை ஆக்கினார்; பழமையும் குறைவுமுள்ளதே ஒழிந்துபோகிறதற்குச் சமீபமாயிருக்கின்றது.

௯. அதிகாரம்.

௧ நியாயப்பிரமாணத்தின் நிழலான முறைமைகளையும் இரத்தப்பலிகளையும் விவரித்து, ௰௧ அவைகள் கிறிஸ்துவினுடைய பொருளான இரத்தத்துக்கும், பலிக்குமுரிய மேன்மைக்கும், மகிமைக்கும் நிகரல்ல என்று சொல்லியது.

அன்றியும் முதலாம் உடம்படிக்கை ஆராதனைக்கு ஏற்ற நியாயங்களும்,|| [11]பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உள்ளதாயிருந்தது.

௨ எப்படியெனில், பரிசுத்தஸ்தலம்¶ என்னப்பட்ட [12]முதல் கூடாரம் எத்தனமாக்கப்பட்டிருந்தது, [13]அதிலே [14]விளக்குத்தண்டும், [15]பலகையும், திவ்விய சமுகத்தப்பங்களும் இருந்தன.

கி. பி. ௬௪

* அல்லது செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே

[1] உ. மோ. உ௫. ௪௰. உ௬. ௩௰. அப. ௭. ௪௪.

[2] கொலோ. ௨. ௧௭; எபி. ௰. ௧.

† அல்லது ஏற்பாட்டுக்கு

[3] உ. கொரி. ௩. ௬; எபி. ௭. ௨௨.

[4] எபி. ௭. ௰௧, ௰௮.

[5] எரே. ௩௧. ௩௧, ௩௨, ௩௩, ௩௪.

[6] எபி. ௰. ௧௬.

‡ உணர்த்து, கொடுப்பேன்

§ அல்லது இருதயங்களில்

[7] சகரி. ௮. ௮.

[8] ஏசா. ௫௪. ௰௩. யோவா. ௬. ௪௫. ௧ யோவா. ௨. ௨௭.

[9] உரோ. ௰௧. ௨௭. எபி. ௰. ௧௭.

[10] உ. கொரி. ௫. ௧௭.

|| அல்லது சடங்குகளும்

[11] உ. மோ. உ௫. ௮.

¶ அல்லது பரிசுத்தம்

[12] உ. மோ. உ௬. ௧.

[13] உ. மோ. உ௬. ௩௫. ௪௰. ௪.

[14] உ. மோ. உ௫. ௩௧.

[15] உ. மோ. உ௫. ௨௩, ௩௰. ௩ மோ. ௨௪. ௫, ௬.

௩ அல்லாமலும், [1]இரண்டாம் திரைச்சீலைக்குப் பின்னாலே மிகவும் பரிசுத்த ஸ்தலம் என்னப்பட்ட கூடாரம் இருந்தது.

௪ அதிலே பொன்னால் செய்த கலசமும், முழுவதும் பொன்தகடு பொதியப்பட்ட உடம்படிக்கையின் [2]பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா என்பதை உள்ள [3]பொன்பானையும், தளிர்கொண்ட [4]ஆரோனுடைய கம்பும், [5]உடம்படிக்கையின் பலகைகளும் இருந்தன.

௫ அதற்குமேலே [6]மகிமையுள்ள கேருபீம் வைக்கப்பட்டுக் கிருபாசனத்திற்கு நிழலிட்டிருந்தன; இவைகளைக்குறித்து நான் இப்பொழுது விவரம் சொல்லக்கூடாது.

௬ ¶ அவைகள் இவ்விதமாய் எத்தனமாக்கப்பட்டிருந்த பின்பு, ஆசாரியரானவர்கள் ஆராதனைகளை நிறைவேற்றும்படிக்கு, எக்காலத்திலேயும் [7]முதல் கூடாரத்திலே பிரவேசிப்பார்கள்.

௭ இரண்டாம் கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் [8]வருஷத்தில் ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் சனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் [9]செலுத்துவான்.

௮ அதினாலே முதலாம் கூடாரம் நிற்கையில் [10]பரிசுத்தமான இடங்களுக்குப் போகிற மார்க்கம் வெளியாக்கப்படவில்லை என்று [11]பரிசுத்த ஆவியானவர் குறித்திருக்கிறார்.

௯ அந்தக் கூடாரம் இந்தக்காலம்வரைக்கும் உவமையாயிருந்தது; அதிலே காணிக்கைகளும் பலிகளும் செலுத்தப்பட்டு வருகின்றன.

௰ அவைகள் செம்மையாக்குதலுள்ள காலமளவும் (இஸ்ரவேலருக்குக்) கட்டளையிடப்பட்ட [12]போசனபானங்களாலும், [13]பலஸ்நானங்களாலும், [14]சரீரத்திற்கு ஏற்ற (மற்றச்) சடங்குகளாலும்* மாத்திரம் ஆராதனைசெய்கிறவனுடைய மனதிற்கு [15]நிறைவுண்டாக்கக்கூடாதவைகளாய் இருக்கின்றன.

௰௧ ¶ கிறிஸ்துவானவர் (உலகத்தில்) வந்து இவ்வுலகப் பொருளாய் இராமலும் கையால் செய்யப்படாமலும் [16]அதிக மேன்மையாயும் அதிக நிறைவாயும் இருக்கிற கூடாரத்தின் வழியாய் வருகிறவைகளாகிய [17]நன்மைகளைக் குறித்து [18]ஆசாரியராய்,

௰௨ [19]வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, [20]தமது சொந்த இரத்தத்தினாலே [21]நமக்காக நித்திய மீட்பு உண்டாக்கி, எல்லாக் காலங்களுக்காகவும் [22]ஒரேதரம் பரிசுத்தமான தலங்களில் பிரவேசித்தார்.

௰௩ அது எப்படியெனில் [23]காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் [24]கடாரியின் சாம்பலும் அசுசிப்பட்டவன்மேல் தெளிக்கப்பட்டு, அவனுடைய சரீர அசுசியை நீக்கத்தக்கதாக அவனைச் சுத்தமாக்கிக்கொண்டிருக்க,

௰௪ [25]நித்திய ஆவியினாலே [26]தம்மைப் பிழையில்லாத † பலியாகப் பராபரனுக்கு ஒப்புக்கொடுத்த [27]கிறிஸ்துவினுடைய திரு இரத்தம் மிகவும் அதிகமாய் [28]மரணத்திற்கு ஏதுவான கிரியைகளை [29]நீக்கிச் [30]சீவனையுடைய பராபரனுக்கு நாம் ஊழியம்செய்வதற்கு நம்முடைய மனதைச் சுத்தமாக்கும் அல்லவா?

கி. பி ௬௪.

1 ௨ மோ ௨௬ ௧௧, ௧௧ ௪௰ ௩, ௨௧ எபி ௧ ௰௯
2 ௨ மோ ௨௫ ௰ ௨௧ ௩௬ ௪௰ ௩, ௨௧
3 ௨ மோ ௰௬ ௩௩, ௩௪
4 ௪ மோ ௰௭ ௰
5 ௨ மோ ௨௫ ௰௯, ௨௧ ௩௪ ௨௰ ௫ மோ ௰ ௨,௫ ௧ இரா ௮ ௯, ௨௧ ௨ நாளா ௫ ௰
6 ௨ மோ ௨௫ ௰௮, ௨௨ ௧ மோ ௰௯ ௨ ௧ இரா ௮ ௯,௭
7 ௪ மோ ௨௮ ௧ தானி. ௮ ௰௧
8 ௨ மோ ௩௰ ௰ ௩ மோ ௰௯ ௨, ௰௧, ௰௨, ௰௫, ௩௪ ௨௫ ௰௪
9 எபி ௫ ௩ ௭ ௨௭
10 யோவா ௰௪ ௬
11 எபி ௰ ௰௯, ௨௰
12 ௩ மோ ௰௪ ௨ கொலோ ௨ ௰௬
13 ௪ மோ. ௰௯ ௭ [illegible]
14 எபே ௨ ௰௫ கொலோ ௨ ௨௰ எபி ௭ ௰௬
* அல்லது நியாயங்களினாலும்
15 கலா ௩ ௨௧ எபி ௭ ௰௮, ௰௯ ௰ ௧, ௰௧
16 எபி ௮ ௨
17 எபி ௰ ௧
18 எபி ௩ ௧
19 எபி ௰ ௪
20 அப ௨௰ ௨௮, எபே ௧ ௭ கொலோ. ௧ ௰௪ ௧ பே ௧ ௰௯ வெளி ௧ ௫ ௫, ௯.
21 தானி ௯ ௨௪

---

22 ௨௧,௨௮ வசனங்கள் எபி ௰ ௰ சகரி,௩ ௯ —23 ௩ மோ ௰௬.௰௪,௰௬ —24 ௪ மோ.௰௯.௨,௰௭ —25 உரோ ௧ ௪ ௧ பே ௩ ௰௮ —
26 எபே ௫ ௨, தீத் ௨,௰௪ எபி ௭ ௨௭.—† அல்லது மறுவில்லாத —27 ௧ பே ௧ ௰௯ ௧ யோ ௧ ௭ வெளி ௧ ௫
28 எபி.௬.௧.—29 எபி ௧ ௩ ௰ ௨௨ —30 லூக் ௧ ௭௪ உரோ ௬ ௰௩,௨௨ ௧ பே ௪ ௨.

௰௫ ¶ [1]இதினாலே முதல் உடம்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்வதற்கு ஏதுவாக [2]அவர் மரித்தபின்பு, [3]அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தமான நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்ளும்படிக்கே [4]அவர் புதிய உடம்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார்.

௰௬ அது எப்படியென்றால், [5]ஒரு உடம்படிக்கை (பலிகளுடைய மரணத்தினாலே) உறுதியாக்கப்படுமே.

௰௭ ஏற்படுத்தப்பட்ட (பலி) உயிரோடிருக்குமளவும், உடம்படிக்கை பலனாயிருக்கமாட்டாதே; ஆகையால், ஒரு உடம்படிக்கை செய்யப்படும்பொழுது, ஏற்படுத்தப்பட்ட பலியினுடைய மரணமும் தோற்றப்பட*வேண்டும்.

௰௮ ¶ [6]அந்தப்படி முதலாம் உடம்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டையாக்கப்பட†வில்லை.

௰௯ எப்படியெனில், மோசே என்பவன் வேதப்பிரமாணத்தின்படி சகல சனங்களுக்கும் எல்லாப் பிரமாணங்களையும் சொன்னபின்பு [7]ஆட்டுமாடுகளின் இரத்தத்தைத் [8]தண்ணீரோடும், சிவப்பான‡ பஞ்சியோடும், ஈசோப்பென்னும் செடியோடுங்கூட எடுத்து, வேதபுத்தகத்தின்மேலும் சனங்கள் எல்லார்மேலும் தெளித்து,

௨௰ [9]பராபரன் உங்களுடனே (செய்யக்) கட்டளையிட்ட உடம்படிக்கைக்கு ஏற்ற இரத்தம் இதுவே என்று சொன்னான்.

௨௧ இவ்விதமாய்க் [10]கூடாரத்தின்மேலும் ஆராதனைக்கு ஏற்ற தட்டுமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தான்.

௨௨ நியாயப்பிரமாணத்தின்படி சிலகுறைய மற்றெல்லாப் பதார்த்தங்களும் இரத்தத்தினாலே சுத்தமாக்கப்பட்டு வருகின்றன; [11]இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பும் இல்லை.

௨௩ ¶ ஆனதால் [12]பரமண்டலங்களில் உள்ளவைகளுக்கு உவமையானவைகள் இப்படிப்பட்ட (பலிகளினாலே) சுத்தமாக்கப்படவேண்டியதாய் இருக்கிறபடியால் பரமண்டலங்களில் உள்ளவைகள் தாமே அவைகளிலும் அதிக தகுதியான (பலிகளாலே) சுத்தமாக்கப்படவேண்டுமே.

௨௪ அந்தப்படி கிறிஸ்துவானவர் [13]இப்பொழுது நமக்காகப் பராபரனுடைய சந்நிதானத்திலே தோன்றியிருக்கும்படிக்கு மெய்யானவைகளுக்குத் திருட்டாந்தங்களாகிய [14]கையால் செய்யப்பட்ட பரிசுத்தஸ்தலங்களில் அல்ல, பரமண்டலத்திலேதானே [15]பிரவேசித்திருக்கிறார்.

௨௫ அந்தப் பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தை எடுத்து, [16]வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலங்களிலே பிரவேசித்ததுபோல அவர் தம்மை அடிக்கடி பலியிடும்படிக்கு (அப்படிப் பிரவேசிக்க)வில்லை.

௨௬ அதற்காகவானால் அவர் உலகம் உண்டானது முதற்கொண்டு அடிக்கடி பாடுபடவேண்டியிருக்குமே; அப்படி அல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக (முந்தின) [17]யுகத்தின் முடிவிலே [18]ஒரேதரம் வெளிப்பட்டார்.

௨௭ [19]அன்றியும் மனிதர்கள் ஒரேதரம் மரிக்கிறதும், [20]பின்பு நியாயத்தீர்ப்பு அடைகிறதும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதால்,

௨௮ அதுபோலக் கிறிஸ்துவும், [21]அநேகருடைய பாவங்களைச் சுமந்துகொண்டுபோகும்படிக்கு [22]ஒரேதரம் [23]பலியிடப்பட்டுத் தமக்காகக் [24]காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பைக் கொ

கி. பி. ௬௪.

1 [illegible]
2 [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible]
* அல்லது இருக்க
6 [illegible]
† அல்லது சுத்தமாக்க
7 [illegible]
8 [illegible]
‡ அல்லது மிகவும் சிவப்பான
9 [illegible]
10 [illegible]
11 [illegible]
12 [illegible]
13 [illegible]
14 [illegible]
15 [illegible]
16 [illegible]
17 [illegible]
18 [illegible]
19 [illegible]
20 [illegible]
21 [illegible]
22 [illegible]
23 [illegible]
24 [illegible]

கி. பி. ௬௪.

டுப்பதற்கு இரண்டாந்தரம் பாவப்பலியில்லாமல் தோன்றுவார்.

௰. அதிகாரம்.

௧ நியாயப்பிரமாணப் பலிகளினால் பூரணநிவிர்த்தி இல்லை என்றும், ௰ ஒரேவிசை செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரப்பலி ௰௪ பாவங்களைப் பூரணமாய் நிவாரணம்பண்ணுகிறதென்றும், ௰௯ அவர்மேல் உண்டாகிய விசுவாசத்தை உறுதியாய்ப் பொறுமையோடும் தோத்திரத்தோடும் பற்றிக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லியது.

இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வருகிறவைகளாகிய [1]நன்மைகளின் பொருளுள்ளதாய் இராமல், அவைகளின் [2]நிழலை மாத்திரம் காண்பிக்கிறதாயிருக்கிறதால் வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரேவிதமான [3]பலிகளினாலே அவைகளைச் செலுத்துகிறவர்களுக்கு [4]நிறைவான (ஆசீர்வாதத்தை) ஒருக்காலும் கொடுக்கமாட்டாது.

௨ கொடுத்ததானால், ஆராதனை செய்தவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின், இன்னும் பாவங்கள் உண்டென்று தங்கள் மனதிலே அதிகமாய் நினையாதிருப்பதால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமே அல்லவா?*

௩ அப்படி இராதபடியால் [5]பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூர்தல் உண்டாயிருக்கிறதே.

௪ ¶ [6]அல்லாமலும் ஆடுமாடுகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.

௫ ஆனதால் அவர் உலகத்தில் பிரவேசித்திருக்கிறபொழுது, [7]பலியையும் காணிக்கையையும் நீர் விரும்புகிறதில்லை ஒரு சரீரத்தை எனக்கு எத்தனமாக்கினீர்.†

௬ தகனபலிகளும் பாவப்பலிகளும் உமக்குப் பிரியமல்லாதபொழுது,

௭ நான் சொன்னது: பராபரனே, என்னைக்குறித்து வேதபுத்தகத்திலே எழுதியிருக்கிறபடி உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதற்கு இப்பொழுது வருகிறேன் என்று சொன்னேன் என்றார்.

௮ நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி பலியையும், காணிக்கையையும், தகனபலிகளையும், பாவப்பலிகளையும் விரும்பமாட்டீர்; அவைகள் உமக்குப் பிரியமானவைகள் அல்லவென்று சொன்னபின்பு,

௯ பராபரனே, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதற்கு இப்பொழுது வருகிறேன் என்று சொன்னதால், இரண்டாம் (ஏற்பாட்டை) ஸ்தாபிக்கும்படிக்கு முதலானதை எடுத்துப்போட்டார்.

௰ அந்தச் சித்தத்தின்படி எல்லாக் காலங்களுக்காகவும் [8]ஒரேதரம் இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் பலியிடப்பட்டதினாலே [9]நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.

௰௧ ¶ அன்றியும், எந்த ஆசாரியனும் [10]நாளதோறும் ஆராதனை செய்கிறவனாய்ப் [11]பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யமாட்டாத ஒரேவித பலிகளை அடிக்கடிச் செலுத்திவருவான்.

௰௨ அவர் மாத்திரம் என்றென்றைக்கும் பாவங்களை நீக்கும்படிக்கான [12]ஒரே பலியைச் செலுத்திப் பராபரனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்து,

௰௩ அதுமுதல் [13]தம்முடைய சத்துருக்கள் தம்முடைய பாதங்களின்படியாக்கப்படுமளவும் காத்துக்கொண்டிருக்கிறார்.

௰௪ ஆகையால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களை அவர் ஒரே பலியினாலே [14]என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்கள் ஆக்கினார்.

௰௫ ¶ இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார்.

[1] எபி ௯. ௰௧.
[2] கொலோ ௨. ௰௭. எபி ௮. ௫. ௯. ௨௩.
[3] எபி ௯. ௯.
[4] ௰௪ வச.
* அல்ல நிறுத் தப்படும்.
[5] லேவி ௰௬. ௨௧. எபி ௯. ௭.
[6] மீகா ௬. ௬, ௭. எபி ௯. ௰௩.
[7] சங் ௪௰. ௬. ௫௰. ௰௬. ஏசா ௧. ௰௧.
† அல்லது ஆயத்தமாக்கினீர்.
[8] எபி ௯. ௰௨.
[9] யோவா ௰௭. ௰௯. எபி ௰௩. ௰௨.
[10] எண் ௨௮. ௩. எபி ௭. ௨௭.
[11] ௪ வச.
[12] எபி ௧. ௩. கொலோ ௩. ௧.
[13] சங் ௱௰. ௧. அப் ௨. ௩௫. ௧ கொரி ௰௫. ௨௫. எபி ௧. ௰௩.
[14] ௧ வச.

௰௬ எப்படியெனில், அந்த நாட்களுக்குப்பின் நான் அவர்களுடனே [1]இந்த உடம்படிக்கைபண்ணுவேன் என்று சொன்னபின்பு கர்த்தா திருவுளம்பற்றினது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களிலே கொடுப்பேன்; அவைகளை அவர்களுடைய மனதின்மேலே எழுதுவேன்.

௰௭ அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நான் ஒருகாலத்திலாகிலும் நினைத்துக்கொள்வதில்லை என்றார்.*

௰௮ அந்தப்படி அவைகள் மன்னிக்கப்பட்டபடியால் பாவப்பலி இனிச் செலுத்தப்படவேண்டுவதில்லையே.

௰௯ ¶ ஆகையால் சகோதரரே, பரிசுத்தமான இடங்களுக்குப் போகிற மார்க்கத்தை இயேசுவானவர் தமது [2]சரீரமாகிய திரைச்சீலையின் வழியாய்ப் [3]புதிதும் ஜீவனுமான மார்க்கமாக நமக்கு உண்டுபண்ணி† வைத்ததால்,

௨௰ அந்த [4]மார்க்கத்தில் பிரவேசிக்கிறதற்கு அவருடைய திரு இரத்தத்தினாலே நமக்குத் [5]தயிரியம்‡ உண்டாயிருக்கிறபடியினாலும்,

௨௧ [6]பராபரனுடைய ஆலயத்திலே நமக்குப் [7]பெரிய ஆசாரியர் உண்டாயிருக்கிறபடியினாலும்,

௨௨ [8]நாம் குற்றத்தைச் சாற்றுகிற மனது நீங்கத் தெளிக்கப்பெற்ற இருதயம் உள்ளவர்களாய் உண்மையுள்ள இருதயத்தோடும், [9]விசுவாசத்தினால் ஆகிற நிச்சயத்தோடும் [10]பராபரனைச் சேரக்கடவோம்.

௨௩ அல்லாமலும் [11]சுத்தமான சலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாய், [12]நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; [13]வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே.

௨௪ மேலும் அன்புகூருகிறதற்கும் நற்கிரியைகளைச் செய்கிறதற்கும் எழுப்புதல் உண்டாயிருக்கும்படிக்கு ஒருவரை ஒருவர் நோக்கிப்பார்த்து,

௨௫ [14]சபை கூடிவருதலைச் சிலர் விட்டுப்போகிறதுபோல நாம் அப்படிச்செய்யாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; [15]அந்த நாள் சமீபமாகிறதை நீங்கள் அறிந்திருக்கிறதால், [16]அதிகமாய் அப்படியே செய்யவேண்டும்.

௨௬ ¶ [17]சத்தியத்தை அறிந்துகொண்டபின் [18]நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்தால், வேறொரு பாவப்பலி நமக்கு மீதியாயிருப்பதில்லை.

௨௭ விரோதம்செய்கிறவர்களைப் பட்சிக்கும் அக்கினியுள்ள [19]உக்கிரமும் நியாயத்தீர்ப்பும் வருமென்று பயத்தோடே காத்திருக்குதலே நமக்கு உண்டாயிருக்கும்.

௨௮ [20]மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளினவன் எவனோ, [21]அவன் இரண்டு மூன்று பேர் சாட்சிசொன்னபின்பு இரக்கமில்லாமல் கொலைசெய்யப்பட்டானே.

௨௯ பராபரனுடைய குமாரனைக் காலினால் மிதித்துப்போட்டுத் [22]தன்னைப் பரிசுத்தம் செய்த உடம்படிக்கையின் திரு இரத்தத்தை அசுத்தமென்று எண்ணிக் [23]கிருபையின் ஆவியை அசட்டைபண்ணினவன், [24]எவ்வளவு அதிக ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான்.

௩௰ நீங்களே யோசனைபண்ணுங்கள்; [25]பழிவாங்குதல் எனக்கு உரியது; நானே பதில்செய்வேன்

கி. பி. ௬௩

1 எரே. ௩௧. ௩௩, ௩௪. எபி. ௮. ௰, ௰௨.

* சில பிரதிகளில் நினைத்துக்கொள்வதில்லையென்று பின் சொன்னார்

2 எபி. ௯. ௩.

3 யோவா. ௰. ௯. ௰௪. ௬. எபி. ௯. ௮.

† அல்லது பிரதிஷ்டைபண்ணி

4 எபி. ௯. ௮, ௰௨.

5 ரோ. ௫. ௨. எபே. ௨. ௰௮. ௩. ௰௨.

‡ அல்லது இடம்

6 ௧ தீமோ. ௩. ௰௫.

7 எபி. ௪. ௰௪.

8 எபி. ௯. ௰௪.

9 எபே. ௩. ௰௨. யாக். ௧. ௬. ௧ யோ. ௩. ௨௧.

10 [illegible]

11 எசே. ௩௬. ௨௫. ௨ கொரி. ௭. ௧.

12 எபி. ௪. ௰௪.

13 ௧ கொரி. ௧. ௯. ௰. ௰௩. ௧ தெச. ௫. ௨௪. ௨ தெச. ௩. ௩. எபி. ௰௧. ௰௧.

14 அப். ௨. ௪௨. யூதா ௰௯.

15 பிலி. ௪. ௫. ௨ பே. ௩. ௯, ௰௧, ௰௪.

16 [illegible]

17 ௨ பே. ௨. ௨௰, ௨௧.

18 ௪ மோ. ௰௫. ௩௰. எபி. ௬. ௪.

19 எசே. ௩௬. ௫. செப். ௧. ௰௮. ௩. ௮. ௨ தெச. ௧. ௮. எபி. ௰௨. ௨௯.

20 எபி. ௨. ௨.

21 ௫ மோ. ௰௭. ௨, ௬. ௰௯. ௰௫. மத். ௰௮. ௰௬. யோவா. ௮. ௰௭. ௨ கொரி. ௰௩. ௧.

---

22 ௧ கொரி. ௰௧. ௨௯. எபி. ௰௩. ௨௰ — 23 மத். ௰௨. ௩௧, ௩௨. எபே. ௪. ௩௰ — 24 எபி. ௨. ௩. ௰௨. ௨௫.

25 ௫ மோ. ௩௨. ௩௫. ரோ. ௰௨. ௰௯.

என்று சொன்ன கர்த்தரை அறிந்திருக்கிறோமே; அன்றியும் [1]கர்த்தர் தம்முடைய சனங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பார் என்றும் சொல்லியிருக்கிறதே.

௩௧ [2]ஜீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கிறது.

௩௨ ¶ நீங்கள் [3]முந்தின நாட்களை ஞாபகப்படுத்துங்கள்; அவைகளில் [4]நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்தபொழுது [5]பாடுகளால் மிகுந்த போராட்டத்தைச் சகித்துக்கொண்டீர்களே.

௩௩ நீங்கள் நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் மற்றவர்களுக்கு [6]வேடிக்கைக்கு ஏதுவானவர்களாயும் அப்படியான [7]மற்றவர்களுக்குத் தோழராயும் இருந்தீர்கள்.

௩௪ [8]கட்டப்பட்டிருந்த என்னோடேகூட நீங்கள் பாடுபட்டீர்களே; [9]பரமண்டலங்களில் அதிக மேன்மையும், உறுதியுமான ஆஸ்தி உங்களுக்கு உண்டென்று நீங்கள்* அறிந்து உங்கள் (லவுகீக) ஆஸ்திகளை (மற்றவர்கள்) கொள்ளையிட்டதற்குச் [10]சந்தோஷமாய் இடங்கொடுத்தீர்கள்.

௩௫ ஆகையால் [11]மிகுந்த பலனுக்கு ஏதுவான உங்கள் தயிரியத்தை எறிந்துவிடாதிருப்பீர்களாக.

௩௬ ¶ நீங்கள் பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களாய் [12]வாக்குத்தத்தத்தின் நன்மையைப் பெறும்படிக்குப் [13]பொறுமை உங்களுக்கு வேண்டும்.

௩௭ [14]வருகிறவர் [15]அதிககாலம் தாமதமாய் இராமல் சீக்கிரமாய் வருவார் என்றும்,

௩௮ [16]விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான், அவன் பின்வாங்கிப்போனால் அவன்மேல் என்னுடைய ஆத்துமா பிரியமாயிராதென்றும் (எழுதியிருக்கின்றது).

௩௯ [17]நாம் கெட்டுப்போகிறதற்கு ஏதுவாகப் பின்வாங்குகிறவர்களாய் இராமல் (நமது) [18]ஆத்துமாவைக் காக்கிறதற்கு ஏதுவாக விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறோம்.

௰௧. அதிகாரம்.

௧ விசுவாசம் இன்னதென்றும், ௬ விசுவாசம் இல்லாமல் பராபரனுக்குப் பிரியமாயிருக்கக்கூடாதென்றும், ௭ விசுவாசத்துக்குத் திருஷ்டாந்தம் கொடுத்திருந்த பூர்வீகத்தார்களைக்குறித்தும் சொல்லியது.

௧ விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்† [19]காணப்படாதவைகளை வெளிப்படுத்துகிறதுமாய் இருக்கின்றது.

௨ அதினாலே [20]பூர்வீகத்தார் நற்சாட்சியைப் பெற்றார்கள்.

௩ ¶ [21]உலகம் பராபரனுடைய வார்த்தையால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோற்றப்படாத பொருள்களால் உண்டாயினவென்றும் விசுவாசத்தினாலே அறிந்திருக்கிறோம்.

௪ ¶ விசுவாசத்தினாலே [22]ஆபேல் என்பவன் காயீனுடைய பலியிலும் அதிகமான பலியைப் பராபரனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்துப் பராபரனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் அதினாலே [23]இப்பொழுதும் பேசுகிறான்.‡

௫ ¶ விசுவாசத்தினாலே [24]ஏனோக்கு என்பவன் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; பராபரன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமற்போனான்; அவன் எடுத்துக்கொள்ளப்படுகிறதற்குமுன்னே அவன் பராபரனுக்குப் பிரியமானவன் என்று சாட்சிபெற்றுக்கொண்டிருந்தான்.

கி. பி. ௬௪.

1 [illegible] ௩௨ [illegible]
2 [illegible]
3 [illegible]
4 எபி [illegible]
5 பிலி [illegible] கொலோ [illegible]
6 [illegible]
7 [illegible]
8 [illegible]
9 [illegible]
* அல்லது [illegible]
10 [illegible]
11 [illegible]
12 கொலோ [illegible] எபி [illegible]
13 லூக் [illegible]
14 ஆப [illegible]
15 லூக் [illegible]
16 [illegible]
17 [illegible]
18 [illegible]
† அல்லது [illegible]
19 [illegible]
20 [illegible]
21 [illegible]
22 [illegible]

23 ௧ மோ ௪ ௰ மத் ௨௩ ௩௫ எபி ௰௨ ௨௪ — ‡ அல்லது பேசப்படுகிறான் — 24 ௧ மோ ௫ ௨௨,௨௪

௬ பராபரனைச் சேருகிறவன், அவர் உண்டென்றும் அவர் தம்மைச் சாக்கிரதையாய்த் தேடுகிறவர்களுக்குப் பலனை அளிக்கிறவர் என்றும் விசுவாசிப்பானே, ஆகையால் விசுவாசம் இல்லாதவன் அவருக்குப் பிரியமாயிருக்க மாட்டான்

௭ ¶ [1]நோவா என்பவனும் தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவ எத்தனமாய் எச்சரிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே பயந்து * தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் [2]பேழையை உண்டுபண்ணி, இதினாலே உலகம் ஆக்கினைக்கு உள்ளாயிற்று என்று தீர்ப்புக் காண்பித்து, [3]விசுவாசத்தால் வருகிற நீதிக்குச் சுதந்தரவாளியானான்

௮ ¶ [4]ஆபிரகாமும் பின்பு சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ளும்படிக்கான இடத்திற்குப் புறப்பட்டுப்போக அழைக்கப்பட்டபொழுது விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்து, தான் போகவேண்டிய இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.

௯ தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அந்நியதேசத்திலே அவன் அந்த வாக்குத்தத்தத்திற்கு [5]உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடுங்கூட விசுவாசத்தினாலே சஞ்சரித்துக் [6]கூடாரங்களிலே குடியிருந்தான்

௰ [7]பராபரனாலே உண்டாக்கப்பட்டும் ஆளப்பட்டும் இருக்கிற அஸ்திபாரங்களுள்ள பட்டணத்திற்குப் போகக் [8]காத்துக்கொண்டிருந்தபடியால் அப்படியிருந்தான்.

௰௧ [9]சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் [10]உண்மையுள்ளவரென்று எண்ணி, விசுவாசத்தினாலே கர்ப்பந்தரிக்கும்படி பெலன் அடைந்து, [11]வயது சென்றவளாய் இருந்தும் பிள்ளைபெற்றாள்.

௰௨ ஆனபடியால் இந்தச் சங்கதியில் [12]செத்தவனைப்போன்ற ஒருவனாலே [13]வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும் எண்ணிறந்த கடற்கரை மணலைப்போலவும் மிகுந்த சனங்கள் உண்டானார்கள்.

௰௩ ¶ இவர்கள் எல்லாரும் [14]வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், [15]தூரத்திலே அவைகளைக் கண்டு வாழ்த்துதலோடே விரும்பிய பூமியின்மேலே தாங்கள் [16]அந்நியராயும் வழிப்போக்கராயும் இருந்ததை அறிக்கைபண்ணி, விசுவாசத்தோடே † இறந்துபோனார்கள்.

௰௪ அப்படி அறிக்கைபண்ணுகிறவர்கள் [17]சென்மதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.

௰௫ அவர்கள் தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பும்படி இடமுண்டே

௰௬ அதையல்ல, அதிலும் மேன்மையான பரமண்டலத்தில் உள்ளதையே விரும்பினார்கள்; ஆகையால் பராபரனும் [18]அவர்களுடைய தேவன் என்று அழைக்கப்படுகிறதினாலே வெட்கப்படுகிறதில்லை; [19]அவர்களுக்கு ஒரு பட்டணத்தை எத்தனம்பண்ணினாரே.

௰௭ ¶ மேலும், [20]ஆபிரகாமானவன் தான் சோதிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே [21]ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.

௰௮ [22]ஈசாக்கினாலே உனக்குச் சந்ததி உண்டாகும் என்று அவனோடே ‡ சொல்லப்பட்டிருந்ததே.

௰௯ இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப்பெற்றவன், [23]இவனை மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப்பண்ணப் பராபரன் வல்லவராய் இருக்கிறார் என்று எண்ணித் தனக்கு ஒரேபேறானவனையே பலி

கி. பி. ௬௪.

[1] [illegible]

* [illegible]

[2] [illegible]

[3] [illegible]

[4] [illegible]

[5] [illegible]

[6] [illegible]

[7] [illegible]

[8] [illegible]

[9] [illegible]

[10] [illegible]

[11] [illegible]

[12] [illegible]

[13] [illegible]

[14] [illegible]

[15] [illegible]

[16] [illegible]

† [illegible]

[17] [illegible]

[18] [illegible]

[19] [illegible]

[20] [illegible]

[21] [illegible]

[22] [illegible]

‡ அல்லது அவனைக்குறித்து

[23] [illegible]

யாக ஒப்புக்கொடுத்தான்; ஆனதால் உவமையாகும்படியே அவனைத் திரும்பப் பெற்றுக்கொண்டான்.

௨௰ ¶ ஈசாக்கு என்பவனும் பிற்காலத்திற்கு உரியவைகளின்மேல் உள்ள விசுவாசத்தினாலே இயாக்கோபையும் ஏசாவையும் [1]ஆசீர்வதித்தான்.

௨௧ இயாக்கோபு என்பவனும் மரணகாலத்தில் விசுவாசத்தினாலே இயோசேப்பினுடைய குமாரர் இருவரையும் [2]ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே (சாய்ந்து) [3]தொழுதுகொண்டான்.

௨௨ [4]இயோசேப்பு என்பவனும் இஸ்ரவேல் சந்ததியார் (எகிப்து தேசத்தை) விட்டுப் புறப்படுவார்கள் என்று தன் சீவகாலத்தின் முடிவில் விசுவாசத்தினாலே அறிவித்து* தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்.

௨௩ ¶ [5]மோசே என்பவன் பிறந்தபொழுது அவனுடைய தாய் தகப்பனமாரும் பிள்ளை அழகுள்ளது என்று கண்டு, விசுவாசத்தினாலே [6]இராசாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல், அந்தப் பிள்ளையை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்.

௨௪ [7]மோசே என்பவனும் பெரிய வயதுள்ளவனானபொழுது பார்வோனுடைய குமாரத்தி மகனென்று அழைக்கப்படுகிறதை விசுவாசத்தினாலே வெறுத்து,

௨௫ அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதை அல்ல, பராபரனுடைய சனங்களோடே கூடத் [8]துன்பத்தை அநுபவிப்பதையே அதிகமாய்த் தெரிந்துகொண்டான்.

௨௬ [9]இனிமேல் வரும் பலனை அவன் நோக்கிப்பார்த்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் [10]கிறிஸ்துவின்நிமித்தம் வருகிற† நிந்தையை அதிக ஐசுவரியமென்று எண்ணினான்.

௨௭ [11]காணப்படாதவரைக் கண்டாற்போல உறுதியாய்ப் பற்றிக்கொண்டதால் அவன் விசுவாசத்தினாலே இராசாவினுடைய மூர்க்கத்திற்குப் பயப்படாமல் [12]எகிப்தைவிட்டுப் போனான்.

௨௮ தலைப்பிள்ளைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு அவன் விசுவாசத்தினாலே [13]பஸ்காவையும் இரத்தம் பூசுதலையும் ஏற்படுத்தினான்.

௨௯ ¶ விசுவாசத்தினாலே அவர்கள் [14]சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைப்போலக் கடந்துபோனார்கள்; எகிப்தார் அப்படிச் செய்யத் தேடினபொழுது அமிழ்ந்துபோனார்கள்.

௩௰ ¶ (இஸ்ரவேலருடைய) விசுவாசத்தினாலே [15]இயெரிகோபட்டணத்தின் மதில்கள் (அவர்களால்) ஏழுநாளுக்குள்ளே சூழப்பட்டு விழுந்தன.

௩௧ ¶ [16]வேசியாயிருந்த இராகாப் என்பவள் விசுவாசத்தினாலே [17]வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு அவிசுவாசிகளோடே‡ அழிக்கப்படாதிருந்தாள்.

௩௨ ¶ பின்னும் யாரைக்குறித்துச் சொல்லலாம்; [18]கிதேயோனையும் [19]பாராக்கையும் [20]சமுசோனையும், [21]இயெப்பத்தாவையும், [22]தாவீதையும், [23]சாமுவேலையும் தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரம்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

௩௩ அவர்களும் விசுவாசத்தினாலே இராச்சியங்களைச் செயித்துக்கொண்டு, நீதியை நடப்பித்து, [24]வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைப் பெற்றுக்கொண்டு, [25]சிங்கங்களுடைய வாய்களை அடைத்து, [26]அக்கினியின் பலத்தை அவித்து,

௩௪ [27]கட்கங்களின் கூர்மைக்குத் தப்பிப் [28]பல ஈனத்திலே பலன்கொண்டு, யுத்தகாலத்தில்

கி. பி. ௬௪

1 ௧ மோ ௨௭. ௨௭, ௩௯
2 ௧ மோ ௪௮. ௰௬, ௨௰
3 ௧ மோ ௪௭. ௩௧
4 ௧ மோ ௫௰. ௨௪, ௨௫ ௨ மோ ௰௩. ௰௯
* அல்லது நினைத்து
5 ௨ மோ ௨. ௨ அப் ௭. ௨௰
6 ௨ மோ ௧. ௰௬, ௨௨
7 ௨ மோ ௨. ௰, ௰௧
8 சங் ௮௯. ௫௰
9 எபி ௰. ௩௫
10 எபி ௰௩. ௰௩
† அல்லது கிறிஸ்துவினிமித்தமான
11 ௰௩. ௨௭
12 ௨ மோ ௰. ௨௮, ௨௯ ௰௨. ௩௭ ௰௩. ௰௭
13 ௨ மோ ௰௨. ௨௧
14 ௨ மோ ௰௪. ௨௨, ௨௯
15 யோசு ௬. ௨௰
16 யோசு ௬. ௨௩ யாக் ௨. ௨௫
17 யோசு ௨. ௧
‡ அல்லது கீழ்ப்படியாதவர்களோடே
18 நியா ௬. ௰௧
19 நியா ௪. ௬
20 நியா ௰௩. ௨௪
21 நியா ௰௧. ௧ ௰௨. ௭
22 ௧ சா ௰௬. ௰௩ ௰௭. ௪௫
23 ௧ சாமு ௧. ௨௰ ௰௨. ௨௰
24 ௨ சாமு ௭. ௰௧ ...
25 நியா ௰௪. ௬ ௧ சாமு ௰௭. ௩௪ தானி ௬. ௨௨
26 தானி ௩. ௨௫
27 ௧ சாமு ௨௰. ௧ இரா ௰௯. ௩ ௨ இரா ௬. ௰௬
28 ௨ இரா ௨௰. ௭ யோபு ௪௨. ௰ சங் ௬. ௮

வல்லவர்களாகி, [1]அந்நியருடைய பாளையங்களைக் கவிழ்த்துப்போனார்கள்.

௩௫ (விசுவாசத்தினாலே) [2]ஸ்திரிகளும் செத்துப்போன தங்களுக்கு உரியவர்களை உயிரோடு எழுந்திருக்கப் பெற்றார்கள், (விசுவாசத்தினாலே) வேறுசிலர் அதிக மகிமையாய் உயிரோடே எழும்பும்படிக்கு மீட்பை அங்கிகரியாமல் [3]இழுப்புண்டு வாதிக்கப்பட்டார்கள்.

௩௬ (விசுவாசத்தினாலே) வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும், [4]சங்கிலிகளையும், காவலையும் சகித்துக்கொண்டார்கள்.

௩௭ [5]கல் எறியப்பட்டார்கள்; வாளால் அறுக்கப்பட்டார்கள், சோதிக்கப்பட்டார்கள்; கட்கத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்; [6]செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு, குறைச்சலையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் சகித்துத் [7]திரிந்து,

௩௮ வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் [8]குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறி நடந்தார்கள்; உலகம் அவர்களுக்கு அபாத்திரமாய் இருந்தது.

௩௯ ¶ அவர்கள் எல்லாரும் விசுவாசத்தைக்குறித்து [9]நற்சாட்சி பெற்றிருந்தும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமல் போனார்கள்.

௪௰ [10]பராபரன் நம்மைக்குறித்து அதிக நன்மையானதை ஏற்படுத்தினதால்* அவர்கள் நம்மையன்றி [11]நிறைவுள்ள ஆசீர்வாதத்தை அடையாதபடிக்கு (அப்படியே போனார்கள்).

௰௨. அதிகாரம்.

இடைவிடாத விசுவாசமும் பொறுமையும் தேவபத்தியும் உடையவர்களாயிருக்கப் புத்திசொல்லி, ௨௨ பழைய ஏற்பாட்டைப்பார்க்கிலும் புதிய ஏற்பாடு மேன்மையுள்ளதென்றும் காட்டியது.

ஆகையால் மேகம்போல இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, [12]நாம் பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றிநிற்கிற பாவத்தையும் தள்ளிப்போட்டு, விசுவாசத்தை ஆரம்பமாய் நடத்துகிறவராயும்† முடிக்கிறவராயும் இருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு முன்வைக்கப்பட்ட போராட்டச் சாலையிலே [13]பொறுமையோடே [14]ஓடக்கடவோம்.

௨ [15]அவர் தமக்கு முன்பாக வைத்திருந்த சந்தோஷத்திற்காக அவலட்சணப்படுதலை எண்ணாமல், சிலுவையில் (மரணத்தைச்) சகித்துப் பின்பு [16]பராபரனுடைய ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

௩ ¶ ஆனதால் உங்கள் [17]ஆத்துமாக்கள் இளைப்புள்ளவைகளாய் இருக்கும்பொழுது நீங்கள் தயிரியமற்றவர்களாய்ப் போகாதபடிக்குப் பாவிகளால் இப்படிப்பட்ட விரோதத்தைச் சகித்த [18]அவரையே நன்றாய்த் தியானித்துக்கொள்வீர்களாக.

௪ அந்தப் பாவத்திற்கு விரோதமாய்ப் போராட்டம்செய்கிற நீங்கள் இதுவரைக்கும் [19]இரத்தம் சிந்தப்படத்தக்கதாக எதிர்நிற்கவில்லையே.

௫ அன்றியும், [20]என் மகனே, கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணாமலும் அவரால் கடிந்துகொள்ளப்படுகையில் தயிரியமற்றவனாகாமலும் இருப்பாயாக என்றும்,

௬ [21]கர்த்தராலே அன்புகூரப்பட்டவன் எவனோ அவனை அவர் தண்டித்துத் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையானாலும் அடித்துவருவாரே என்றும், பிள்ளைகளாகிய உங்களுக்குச் சொல்லிய

கி. பி. ௬௪.

1 [illegible]
2 [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible]
6 [illegible]
7 [illegible]
8 [illegible]
9 [illegible]
10 [illegible]
* [illegible]
11 [illegible]
12 [illegible]
† [illegible]
13 [illegible]
14 [illegible]
15 [illegible]
16 [illegible]
17 [illegible]
18 [illegible]
19 [illegible]
20 [illegible]

21 [illegible] யாக் ௧ ௰௨ வெளி. ௩ ௰௯

ருக்கிற ஆறுதலுள்ள வசனத்தை மறந்தீர்கள்.

௭ [1]நீங்கள் (அவருடைய) தண்டிப்புக்கு உட்பட்டிருக்கிறபடியால் பராபரன் உங்களைத் (தம்முடைய) பிள்ளைகள்போல எண்ணி நடப்பிக்கிறாரே; தகப்பனால் தண்டிக்கப்படாத பிள்ளை ஒன்று உண்டா?

௮ [2]எல்லாப் (பிள்ளைகளும்) தண்டிக்கப்பட்டதுபோல நீங்களும் தண்டிக்கப்படாயிட்டால் பிள்ளைகளாயிராமல் வேசிப்பிள்ளைகளாய் இருப்பீர்களே.

௯ ¶ அன்றியும், நம்முடைய சரீரத்திற்குத் தகப்பன்மாரானவர்கள் நம்மைத் தண்டிக்கும்பொழுது நாம் அவர்களுக்கு வந்தனம் செய்திருக்க, [3]ஆவிகளுக்குப் பிதாவானவருக்கு நாம் பிழைக்கும்படி மிகவும் அதிகமாய்க் கீழ்ப்படிய வேண்டுமல்லவா?

௰ அந்தத் தகப்பன்மார்கள் தங்களுக்குத் தோன்றினபடி* கொஞ்சக்காலமாய் நம்மைத் தண்டித்தார்கள்; அவர் தம்மைப்போல நாம் [4]பரிசுத்தராகுதற்கு ஏதுவான பிரயோசனம்வரும்பொருட்டே அப்படிச் செய்கிறார்.

௰௧ தண்டனை உண்டாயிருக்கும்பொழுது அது (நமக்குச்) சந்தோஷமாக அல்ல, துக்கமாகத் தோன்றுகின்றது; பின்பு அதினாலே முயற்சிப்பட்டவர்களுக்கு அது [5]நீதியென்னும் பாக்கியபலனைக் கொடுக்கின்றது.

௰௨ ¶ ஆகையால், [6]தளர்ச்சியாயிருக்கிற (உங்கள்) கைகளையும் இளைப்புள்ள (உங்கள்) கால்களையும் செம்மைப்படுத்துவீர்களாக.

௰௩ முடமுள்ள (அவயவம்) புரண்டுபோகாமல் [7]சொஸ்தமாகும்படிக்கு உங்கள் கால்களுக்காகச் [8]சரியான† பாதைகளைச் செய்வீர்களாக.

௰௪ [9]யாவருடனேயும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தராயிருக்கவும் சாக்கிரதையாய் இருப்பீர்களாக; [10]பரிசுத்தமில்லாதவன் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

௰௫ [11]ஒருவரும் பராபரனுடைய கிருபையை இழந்துபோகாத‡படிக்கும், மற்றநேகரும் அசுசிப்படத்தக்கதாக [12]கசப்புள்ளவேர் உங்களுக்குள்ளே தோன்றிக் கலக்கம் உண்டாக்காதபடிக்கும்,

௰௬ ஒருவரும் [13]வேசிமார்க்கராயும், [14]ஏசா என்பவன்போல லவுகீக நடத்தை உள்ளவர்களாயும் இராதபடிக்கும் [15]எச்சரிக்கையாய் இருப்பீர்களாக; அவன் ஒரே வேளைச் சாப்பாட்டுக்காக முதற்பேறானவனுக்கு உரிய சுதந்தரங்களை விட்டுவிட்டானே.

௰௭ பின்பு உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, [16]அவன் (தன் தகப்பனுடைய) ஆசீர்வாதத்தைப்பெற்றுக்கொள்ள விரும்பியும் தள்ளப்பட்டான்; [17]அதைக் கண்ணீரோடே மிகவும் தேடியும் (தகப்பனிடத்தில்) மாறுதலைக்§ காணாமல் போனானே.

௰௮ ¶ அன்றியும், தொடப்பட்டு அக்கினி பற்றி எரிகிற [18]மலையினிடத்திலும், மந்தாரத்தினிடத்திலும் இருளினிடத்திலும்,

௰௯ பெருங்காற்றினிடத்திலும், எக்காளத்தின் முழக்கத்தினிடத்திலும், வார்த்தைகளின் தொனியினிடத்திலும் நீங்கள் வரவேண்டியவர்கள் அல்லவே; [19]அந்தத் தொனியைக் கேட்டவர்கள் பின்னும் வசனம் தங்களுக்குத் தோன்றாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்.

௨௰ என்னத்தினாலெனில், [20]இந்த மலையை ஒரு மிருகம் தொட்டால், அதின்மேலே கல்லெறிய வேண்டும், அல்லது அதை அம்பினாலே எய்து கொலைசெய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட கட்டளையை அவர்கள் சகிக்கமாட்டாதிருந்தார்கள்.

௨௰௧ அந்தத் தரிசனை [21]இவ்வளவு

கி. பி. ௬௪.

1 ௫ மோ ௮ ௫ ௨ சாமு ௭ ௰௪ வாக் ௰௧ ௨௪ ௰௩ ௰௮ ௨௧ ௰௩
2 சங். ௭௧ ௰௫ ௧ பே ௫ ௯
3 ௪ மோ ௰௬ ௨௨ ௨௭ ௰௬ யோபு ௰௨ ௰ பிர ௰௨ ௭ ஏசா ௪௨ ௫ ௫௭ ௰௬ சகரி ௰௨ ௧

* அல்லது தங்கள் சந்தோஷத்தின்படி

4 ௧ மோ ௰௧ ௪௪ ௰௯ ௨ ௧ பே ௧ ௰௫,௰௬
5 யாக் ௩ ௰௭
6 யோபு ௪ ௩ ஏசா ௩௫ ௩
7 கலா ௬ ௧
8 வாக் ௪ ௨௬ ௨௭

† அல்லது அழுத்தமான

9 சங் ௩௪ ௰௪ ௨ தீமோ ௨ ௨௨ ரோ ௰௪ ௰௯
10 மத் ௫ ௮ ௨ கொரி ௭ ௧ எபே ௫ ௫
11 கலா ௫ ௪

‡ அல்லது விட்டுவிலகாத

12 உபா ௨௯ ௰௮
13 எபே ௫ ௩ கொலோ ௩ ௫ ௧ தெச ௪ ௩
14 ௧ மோ ௨௫ ௩௩
15 ௨ கொரி ௬ ௧
16 ௧ மோ ௨௭ ௩௪, ௩௬, ௩௮
17 எபி ௬ ௬

§ அல்லது மனம் திரும்புதலை.

18 ௨ மோ ௰௯ ௰௨ ௰௮, ௰௬ ௨௰ ௰௮ ௫ மோ ௪ ௰௧ ௫ ௨௨ ௨ மோ ௪ ௰௮ ௨ தீமோ ௧ ௭
19 ௨ மோ ௨௰ ௰௯ ௫ மோ ௫ ௫ ௨௫ ௰௮ ௰௬
20 ௨ மோ ௰௯ ௰௩
21 ௨ மோ ௰௯ ௰௬

பயங்கரமாய் இருந்தது; அதினாலே மோசேயும், நான் மிகவும் அதிகமாய்ப் பயப்பட்டு நடுங்குகிறேன் என்றான்.

உஉ நீங்கள் [1]மலையாகிய சீயோனிடத்திற்கும் [2]சீவனுள்ள தேவனுடைய பட்டணமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், [3]அநேக பதினாயிரமாகிய தூதர்களின் விசேஷமான சங்கத்தினிடத்திற்கும்,

உங [4]பரமண்டலத்திலே பேர் எழுதியிருக்கிற* [5]முதற்பேறானவர்களின் சபையினிடத்திற்கும், [6]யாவருக்கும் தேவனாகிய நியாயாதிபதியினிடத்திற்கும், [7]நிறைந்த பாக்கியமுள்ளவர்களாகிய நீதிமான்களின் ஆவிகளினிடத்திற்கும்,

உச புதிதான உடம்படிக்கைக்கு† ஏற்ற [8]மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் கூப்பிட்டதுபோல அல்ல, [9]அதிக நன்மையானவைகளை அறிவித்துத் தெளிக்கப்படுகிற [10]இரத்தத்தினிடத்திற்கும் சேருகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

உரு ¶ திருவுளம்பற்றுகிறவரை நீங்கள் அசட்டைபண்ணாதபடிக்குப் பாருங்கள்; என்னத்தினாலெனில், [11]பூமியிலே பேசினவரை அசட்டைபண்ணின அவர்கள் (ஆக்கினைக்குத்) தப்பாமல் இருக்க, பரமண்டலத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் (ஆக்கினைக்குத்) தப்பிப்போவோமா?

உசா [12]அவருடைய சத்தம் முற்காலத்திலே பூமியை அசையப்பண்ணிற்று, அன்றியும், இனிமேல் [13]ஒரு காலத்திலே பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

உஎ இனிமேல் ஒரு காலத்திலே என்று சொன்ன வசனம் அசைவில்லாதவைகள் நிலையாய் இருக்கத்தக்கதாக (அற்பமாய்ச்) செய்யப்பட்டவைகளாகிய [14]அசைவுள்ளவைகள்‡ நீக்கப்படும் என்று குறிக்கின்றது.

உஅ ஆனதால், அசைவில்லாத இராச்சியத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்க, [15]நம்முடைய பராபரன் (பொல்லாதவர்களைப்) பட்சிக்கும் அக்கினியாய் இருக்கிறபடியினாலே,

உகூ நாம் வணக்கத்தோடும் மெய்த்தேவபத்தியோடும் பராபரனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யத்தக்க கிருபையுள்ள ஈவைப் பற்றிக்கொள்ளக்§ கடவோம்

இ. பி. கூச.

1 கலா ச உக. வெளி க ௰உ. உக உ, ௰
2 பிலி க உ௰
3 இ மோ கக உ சஉ. கூஅ ௰எ யூதா ௰ச
4 லூக் ௰, உ௰ பிலி ச க வெளி ௰க அ
* அல்லது சேர்க்கப்பட்டிருக்கிற
5 உ மோ ச உஉ யாக் க ௰அ வெளி ௰ச ச
6 க மோ ௰அ உரு சங கூ உ
7 பிலி க ௰உ எபி ௰க ௰எ
† அல்லது ஏற்பாட்டிற்கு
8 எபி அ கூ ௰ரு
9 க மோ ச, ௰ எபி ௰க ச
10 உ மோ உச அ எபி ௰ உ௰ க பே க உ
11 எபி உ உ, ௩ க ௰ள ௰ உ, அ உக
12 உ மோ ௰கூ ௰அ
13 ஆகா உ கூ
14 சங ௰உ உசு மத் உச கூ உ பே கூ ௰ வெளி யக க
‡ அல்லது அசைக்கப்படத்தக்கவைகள்
15 உ மோ உச ௰எ இ மோ ச உச கூ சங கீ ௰ கஎ க ஏசா கக ௰கூ உ தெச க எ எபி ௰உ ௰எ
§ அல்லது பெற
16 உ ரோ ௰உ ௰ க தெச ச கூ க பே க உஉ உ ௰எ க அ ச அ உ பே க எ க யோ க ௰க ஏ ச எ உ௰, உக ஏ

யங. அதிகாரம்.

க தயாளமும், ச கற்பும உடையவர்களாயிருக்கவும், ரு பொருளாசையை நீக்கவும், எ தேவ ஊழியக்காரர்களைப் பரமரிக்கவும், கூ அந்நிய உபதேசங்களுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், ௰ கிறிஸ்துவை அறிக்கையிடவும் ௰சா தருமஞ்செய்யவும், ௰எ அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவும், ௰அ தனக்காகச் செபம்பண்ணவும் சொல்லி, உ௰ நிருபத்தை முடிக்கிறது.

[16]சகோதரசிநேகம் நிலையாய் இருக்கக்கடவது.

உ அந்நியரை உபசாரம் செய்கிற குணத்தினாலே சிலர் (தங்களுக்குத்) தெரியாதபடிக்குத் [17]தேவதூதரை உபசரித்ததால் [18]நீங்கள் அந்நியரை உபசாரம்செய்ய மறவாதிருப்பீர்களாக

ங [19]கட்டப்பட்டிருக்கிறவர்களோடேகூடக் கட்டப்பட்டவர்கள்போல நீங்கள் அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; உங்களையும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து பாடுபடுகிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

ச விவாகம்பண்ணுதல் யாவருக்குள்ளும் கனம்பொருந்தியதாய் இருக்கக்கடவது; சமுசாரமார்க்கத்தாருடைய படுக்கை (விபசாரத்தினாலே) அசுசிப்படாதிருப்பதாக;

---

17 க மோ ௰கூ க ௰கூ உ — 18 மத உரு ௩ரு உ ரோ ௰உ ௰௩ க தீமோ ௩ உ க பே ச கூ 19 மத் உரு ௩சா உ ரோ ௰உ ௰ரு க கொரி ௰உ உசா கொலோ ச ௰அ க பே க அ

[1]வேசிமார்க்கருக்கும் விபசாரக்காரருக்கும் பராபரன் நியாயத்தீர்ப்புக் கொடுப்பாரே.

௫ [2]உங்களுக்கு உண்டானவைகள் போதும் என்கிற மனதுள்ளவர்களாய்ப பணத்தின்மேலுள்ள ஆசையில்லாமல் நடந்துகொள்வீர்களாக; [3]நான் உன்னை ஒருக்காலும் விட்டு விலகுவதும் இல்லை, உன்னை ஒருக்காலும் கைவிடுவதும்இல்லை என்று அவர் அருளிச்செய்தாரே.

௬ அதினாலே நான் தயிரியங்கொண்டு [4]கர்த்தர் எனக்குச் சகாயராய் இருக்கிறார்; மனிதனானவன் எனக்கு என்னசெய்வானோ என்று நான் பயபபடவேண்டுவதில்லை என்று சொல்லலாமே.

௭ ¶ [5]தேவவசனத்தை உஙகளுக்குப போதிதது உங்களை நடத்தினவாகளை* நீஙகள் ஞாபகபபடுத்தி, அவாகளுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ப் பார்தது, (அவர்களுடைய) [6]விசுவாசத்தைப பின்பற்றுங்கள்.

௮ [7]இயேசுக்கிறிஸ்துவானவர் நேற்றும் இன்றைக்கும் என்றென்றைக்கும் ஒரேவிதமாய இருக்கிறவர்.

௯ [8]பலவிதமாயும் அந்நியமாயும் இருக்கிற போதனைகளால் நீங்கள் சிதறஅடிக்கபபடாதிருப்பீர்களாக; போசனபதார்த்தங்களாலே அல்ல, (தேவ) கிருபையினாலே (உங்கள்) மனது உறுதியாகிறதே நன்மையாயிருக்கின்றது; [9]போசனபதார்த்தஙகளைக்குறிதது முயற்சியாய் இருககிறவர்கள் அதினாலே பிரயோசனம் அடையவில்லையே.

௰ [10]நமக்குஉண்டாயிருக்கிறபலிபீடத்தில் உள்ளவைகளைக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்கள் புசிக்கிறதற்கு அதிகாரமில்லை.

௰௧ ¶ அது எப்படித் தெரியுமெனில், பிரதான ஆசாரியன் பாவபபலிக்காக மிருகஙகளின் இரத்தத்தைப பரிசுத்த ஸ்தலங்களில் கொண்டுவருகிறபொழுது, [11]அந்த மிருகங்களுடைய உடல்கள் பாளயத்திற்குப புறமபே கொண்டுபோயச் சுட்டெரிக்கபபடுமே.

௰௨ அந்தபபடி இயேசுவானவரும், தமது திரு இரத்தத்தினாலே சனஙகளைப பரிசுத்தமசெயயுமபடிக்குப [12]பட்டணத்துக்குப புறம்பே பாடுபட்டார.

௰௩ ஆனதால் நாம் அவருடனே கூட [13]நிநதையைச் சகிக்கிறவர்களாய் அவரோடேகூடப பாளயத்திற்குப புறம்பே புறபபடக்கடவோம்; [14]நிலைமையான பட்டணம் இஙகே நமக்கு இல்லையே.

௰௪ மறுலோகத்தில் உள்ளதை மிகவும் தேடுகிறோமே.

௰௫ மேலும் [15]அவருடைய திருநாமத்திற்குத் துதியை அறிக்கையிடுகிற† உதடுகளின் கனியாகிய [16]தோத்திரபபலியை நாம் [17]அவர் மூலமாய் எபபொழுதும் பராபரனுககுச் செலுத்தக்கடவோம்.

௰௬ ¶ அன்றியும் [18]நன்மைசெய்தலையும், (எளியவர்களுக்குக்) கொடுத்தலையும், மறவாதிருபபீர்களாக; [19]அபபடிப்பட்ட பலிகள் மேல் பராபரன் மிகவும் பிரியமாயிருக்கிறாரே

௰௭ [20]உங்களை நடத்துகிறவாகள்‡ (கர்த்தாவுக்குக்) கணககு ஒபபுவிக்கிறவர்களாய் உஙகள் [21]ஆததுமாக்களுக்காக விழிததுக்கொள்ளுகிறார்களே; ஆகையால் அவர்கள் துக்கமாய் அல்ல, சந்தோஷமாய் அபபடிச் செய்யும்படிக்கு நீஙகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடஙகுவீர்களாக; (அவர்கள் துக்கமாய் அபபடிச் செய்தால்) அது உங்களுக்குப் பிரயோசனமாய் இருக்கமாட்டாதே.

கி. பி. ௯௪.

1 ௧ கொரி ௬. ௯. கலா ௫. ௰௯. ௨௧ எபே ௫. ௫. கொலோ ௩. ௫. ௬. வெளி ௨௨. ௰௫
2 மத் ௬. ௨௫. ௩௪ பிலி ௪. ௰௧, ௰௨. ௧ தீமோ ௬. ௬, ௮
3 ௧ மோ ௨௮. ௰௫. மோ ௩௧. ௬, ௮ யோசு ௧. ௫. ௧ நாளா ௨௮. ௨௰ சங் ௩௭. ௨௫
4 சங் ௨௭. ௧ ௫௬. ௪, ௰௧, ௰௨ ௱௰௮. ௬
5 ௰௭ வச
* அல்லது உஙகளுக்குக் கட்டளை கொடுக்கிறவாகளை
6 எபி ௬. ௰௨
7 யோவா ௮. ௫௮. எபி ௧. ௰௨. வெளி ௧. ௪
8 எபே ௪. ௰௪ கொலோ ௨. ௪, ௮ ௧ யோ ௪. ௧
9 உரோ ௰௪. ௰௭ கொலோ ௨. ௰௬ ௧ தீமோ ௪. ௩
10 ௧ கொரி ௯. ௰௩. ௰. ௰௮
11 ௨ மோ ௨௯. ௰௪ ௩ மோ. ௪. ௰௧, ௰௨, ௨௧ ௯. ௰௧ ௰௬. ௨௭ ௪ மோ ௰௯. ௩
12 யோவா ௰௯. ௰௭, ௰௮ அப ௭. ௫௮
13 எபி ௰௧. ௨௬ ௧ பே ௪. ௰௪
14 மீகா ௨. ௰ பிலி ௩. ௨௰ எபி ௰௧. ௰, ௰௬ ௰௨. ௨௨
15 ஓசே ௰௪. ௨
† அல்லது துதிக்கிற

16 ௩ மோ ௭. ௰௨ சங் ௫௰. ௰௪. ௨௩ ௱௭. ௨௨ ௱௰௬. ௰௭ — 17 எபே ௫. ௨௰ ௧ பே ௨. ௫ — 18 உரோ ௰௨. ௰௩
19 ௨ கொரி ௯. ௰௨ பிலி ௪. ௰௮ எபி ௬. ௰ — 20 பிலி ௨. ௨௯ ௧ தெச ௫. ௰௨ ௧ தீமோ ௫. ௰௭ ௭ வச
‡ அல்லது ஆளுகிறவாகளை — 21 எசே ௩. ௰௭ ௩௩. ௨, ௭ அப ௨௰. ௨௬, ௨௮

௰௮ நாங்கள் எவ்விதத்திலும் நன்றாய் நடக்க விரும்பிக்கொண்டு [1]நற்சாட்சிசொல்லுகிற மனது எங்களுக்கு உண்டென்று நாங்கள் நிச்சயமாயிருக்கிறபடியால் [2]எங்களுக்காகச் செபம்பண்ணுவீர்களாக.

௰௯ நான் அதிசீக்கிரமாய் உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும்படிக்கு நீங்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று [3]அதிகமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

௨௰ ¶ அன்றியும் [4]நம்முடைய கர்த்தருமாய் [5]ஆடுகளின் பெரிய மேய்ப்பருமாய் இருக்கிற இயேசுவை நித்திய உடம்படிக்கைக்கு* ஏற்ற [6]இரத்தத்தினாலே மரித்தோரிலிருந்து புறப்படப்பண்ணின [7]சமாதானத்திற்குக் காரணராகிய பராபரன்,

௨௧ தமது சித்தத்தின்படி நீங்கள் செய்கிறதற்கு ஏதுவாக [8]எவ்விதமான நற்கிரியைக்கும் உங்களைத் தகுதியானவர்களாக்கி,† இயேசுக்கிறிஸ்துவின்மூலமாய்த் தமது சன்னிதானத்திலே [9]பிரியமானதை உங்களுக்குள்ளே நடப்பிக்கக்கடவர்; [10]அவருக்கு என்றைக்கும் துதி உண்டாவதாக — ஆமென்.

௨௨ ¶ சகோதரரே, [11]நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திகளை அங்கிகரிக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௩ ¶ [12]சகோதரனாகிய தீமோத்தேயு [13]விடுதலையாக்கப்பட்டான் என்று அறிவீர்களாக; அவன் சீக்கிரமாய் வந்தால் அவனுடனே கூட உங்களைக் காண்பேன்.

௨௪ உங்களை நடத்துகிறவர்களுக்கும் மற்றப் பரிசுத்தவான்கள் யாவருக்கும் (என்னாலே) [14]வாழ்த்துதல்செய்யுங்கள்.

௨௫ இத்தாலி தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறார்கள்; [15]தேவகிருபை உங்கள் அனைவரோடும் இருக்கக்கடவது. ஆமென்.

கி. பி. ௬௪.

1 அப். ௨௩. ௧. ௨௪. ௰௬. ௨ கொரி. ௧. ௰௨.
2 ரோ. ௧௫. ௩௦. எபே. ௬. ௰௯. கொலோ. ௪. ௩. ௧ தெச. ௫. ௨௫. ௨ தெச. ௩. ௧.
3 பிலே. ௨௨.
4 அப். ௨. ௨௪. ரோ. ௪. ௨௪. ௧ கொரி. ௬. ௰௪. ௰௫. ௨ கொரி. ௪. ௰௪. கொலோ. ௨. ௰௨. ௧ தெச. ௧. ௰௰.
5 ஏசா. ௪௦. ௰௧. எசே. ௩௪. ௨௩. யோவா. ௰. ௰௪. ௧ பேது. ௨. ௨௫. ௫. ௪.
* அல்லது ஏற்பாட்டிற்கு

---

6 சகரி. ௯. ௰௧. எபி. ௰. ௨௯. — 7 ரோ. ௰௫. ௩௩. ௧ தெச. ௫. ௨௩. — 8 ௨ தெச. ௨. ௰௭. — † அல்லது நற்கிரியையையும் உங்களில் செய்து — 9 பிலி. ௨. ௰௩. — 10 கலா. ௧. ௫. ௨ தீமோ. ௪. ௰௮. வெளி. ௧. ௬. 11 ௧ பேது. ௫. ௰௨. — 12 ௧ தெச. ௩. ௨. — 13 ௧ தீமோ. ௬. ௰௨. — 14 எ. [illegible] — 15 தீத். ௩. ௰௫.

JAMES.

அப்போஸ்தலனாகிய

யாக்கோபு எழுதின

பொதுவான நிருபம்.

க. அதிகாரம்.

நாம் துன்பத்திலே சந்தோஷப்படவும், ரு பொறுமை அடையப் பராபரனை வேண்டிக்கொள்ளவும், ௰௩ நம்முடைய சோதனைகளினால் உண்டாகும் குறைச்சல்களையும் பாவங்களையும் பராபரன்மேல் சுமத்தாமல், ௰௯ திருவசனத்துக்குச் செவிகொடுத்துச் சிந்தித்து அதினபடியே நடக்கப் பிரயாசப்படவும், உ௬ மாயக்காரராகாமல் தேவபத்தர்களாயிருக்கவும் கற்பிக்கிறது

[1]பராபரனுக்கும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய [2]யாக்கோபு [3]அங்கங்கே சிதறியிருக்கிற [4]பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் எழுதுகிறதாவது:

உ ¶ நீங்கள் வாழ்க என் சகோதரரே, [5]உங்கள் விசுவாசத்தைப் பரிட்சைபார்த்தல் பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்திருக்கிறபடியால்,

ங [6]தூண்டுகிற பல துன்பங்களில் நீங்கள் அகப்படும்பொழுது [7]அதை மிகுந்த சந்தோஷத்திற்கு ஏதுவாக எண்ணிக்கொள்ளுங்கள்.

ச நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல் நிறைவுள்ளவர்களாயும் தேறினவர்களாயும் இருக்கத்தக்கதாக அந்தப் பொறுமை நிறைந்த கிரியையையே செய்யக்கடவது.

ரு ¶ [8]உங்களில் ஒருவன் நற்புத்தியில் குறைவுள்ளவனானால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவருமாய் ஒருவரையும் அதட்டாதவருமாயிருக்கிற [9]பராபரனிடத்தில் அவன் கேட்கக்கடவன், அப்பொழுது [10]அவனுக்குக் கொடுக்கப்படும்.

சு அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் [11]விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிக்கப்பட்டு அசைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருப்பானே.

எ அப்படிப்பட்ட மனிதன் கர்த்தரிடத்திலே எதையாகிலும் பெற்றுக்கொள்வேன் என்று நினையாதிருப்பானாக.

அ [12]இருமனம் உள்ளவன் தன் வழிகள் யாவிலேயும் நிலையற்றவனாய் இருக்கிறான்.

கூ ¶ (அன்றியும்) தாழ்மைப்படுகிற சகோதரன் தான் உயர்த்தப்படுவதைக்குறித்து மேன்மைபாராட்டக்*கடவன்.

ய ஐசுவரியவான் தான் [13]புல்லின் பூவைப்போல ஒழிந்துபோவதால், தாழ்மைப்படுவதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்.

கிரமம்

1 [illegible]
2 அப ௰௨ ௰௭ ௰௫ ௰௩ ௧௫ ௰௩ உ ௬ யூதா ௧
3 ௫ மோ ௩௨. ௨௬ யோவா ௭. ௩௫ அப ௨. ௫ ௮ ௪. ௧ பே ௧ ௧
4 அப ௨௬ ௭
5 உரோ ௫ ௩
6 ௧ பே ௧ ௬
7 மத் ௫ ௰௨ அப ௫ ௪௧ எபி ௰ ௩௪ ௧ பே ௪. ௰௩, ௰௬
8 ௧ இரா ௩ ௯. ௰௧, ௰௨ வாக் ௨ ௩
9 மத் ௭ ௭ ௨௧ ௨௨ மாற் ௰௧ ௨௪ துர் ௰௧ ௯ யோவா ௰௪ ௰௩ ௰௫ ௭ ௰௬ ௨௩
10 எரே ௨௯ ௰௨ ௰௩ யோ ௪ ௰௪, ௰௫
11 மாற் ௰௧ ௨௪ ௧ தீமோ ௨ ௮
12 யாக் ௪ ௮
* அல்லது சந்தோஷப்பட
13 யோபு ௰௪ ௨

சங் ௧௭ உ. ௩௰ இ, ௧ ௩௨. ௰௧ ௩௯ ௰௫ சொ. ௫௰ ௯ ௧ கொரி, ௭ ௩௧ யாக் ௪ ௰௪ ௧ பே ௧ ௨௪ ௧ யோ. ௨ ௰௭.

௰௧ சூரியன் உதயமாகி வெய்யிலைக் கொடுக்கும்பொழுது, புல் உலர்ந்து அதின் பூ உதிர்ந்து அதின் அழகான வடிவு அழிந்துபோமே; அப்படிப்போல ஐசுவரியவானும் தன் மார்க்கங்களிலே அழிந்துபோவான்.

௰௨ ¶ [1]சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியமுள்ளவன்; ஏனென்றால், அவன் உத்தமனாக்கப்பட்ட பின்பு [2]கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின [3]ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

௰௩ தூண்டிவிடப்படுகிற எவனும் பராபரனால் தூண்டிவிடப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; பராபரன் பொல்லாங்குகளால்* தூண்டிவிடப்படவும், பாவத்திற்கு ஏதுவாக ஒருவனையும் தூண்டிவிடவுமாட்டாரே.

௰௪ அவனவன் தன் தன் சுய இச்சையினாலே தூண்டி இழுக்கப்பட்டுச் சோதிக்கப்படுகிறான்.

௰௫ பின்பு [4]இச்சையானது கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் நிறைவேறினபொழுது [5]அது மரணத்தை உண்டாக்கும்.

௰௬ ¶ எனக்குப் பிரியமானசகோதரரே, வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக.

௰௭ [6]எந்த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்த வரமும் உயரத்தினின்று சுடர்களின் பிதாவினாலே வருகின்றன; [7]அவருக்கு எவ்வளவாகிலும் மாறுதலும் வேற்றுமையின் நிழலும் இல்லை.

௰௮ [8]அவர் சித்தமானபடியால் [9]தம்முடைய சிருட்டிகளில் [10]நாம் முதற்பலன்களாகும்படிக்கு நம்மைச் சத்தியத்தின் வசனத்தினாலே செனிப்பித்தார்.

௰௯ ¶ ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, [11]யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், [12]பேசுகிறதற்குத் தாமதமாயும்,

௨௰ பராபரனுக்கு ஏற்ற நீதியை மனிதருடைய கோபம் நடப்பிக்கமாட்டாதபடியினாலே [13]கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.

௨௧ ஆகையால் [14]அழுக்கு யாவையும் மிகுதியான பொல்லாங்குகளையும் நீங்கள் தள்ளிவிட்டு, நடப்பட்டதாயும் [15]உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கத்தக்கதாயும் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

௨௨ ¶ அல்லாமலும் நீங்கள் தப்பான யோசனையினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு வசனத்தைக் கேட்கிறவர்களாய்மாத்திரம் அல்ல, [16]அதின்படி செய்கிறவர்களாயும் இருப்பீர்களாக.

௨௩ என்னத்தினாலெனில், [17]ஒருவன் வசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

௨௪ அவன் தன்னைத்தானே பார்த்தபின்பு புறப்பட்டுப்போனவுடனே தான் இருந்தவிதத்தை மறப்பான்.

௨௫ [18]சுயாதீனத்திற்கு ஏதுவான நிறைவுள்ள பிரமாணத்தை [19]உற்றுப்பார்த்து அதிலே நிலையாயிருக்கிறவனே (அதை) மறந்துபோகத்தக்கதாகக் கேட்கிறவனாயிராமல், அதற்கு ஏற்ற கிரியைசெய்கிறவனாயும் இருந்து, [20]தன் செய்கையில்† பாக்கியவானாயிருப்பான்.

௨௬ ¶ உங்களில் ஒருவன் [21]தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்துத் தன்னைத் தேவபத்தியுள்ளவன் என்று நினைத்தால், அவனுடைய தேவபத்தி வீணானதாயிருக்கும்.

௨௭ [22]திக்கற்ற பிள்ளைகளும் கைம்பெண்களும் படுகிற உபத்

கி. பி. கூ௰.

1 யோபு ௫ ௰௭ யாக் ௫ ௰௧, ௰௨ எபி ௰௨ ௫ வெளி ௩ ௰௯
2 மத் ௰ ௨௨ ௰௯ ௨௮, ௨௯ யாக் ௨ ௫
3 ௧ கொரி ௯ ௨௫ ௨ தீமோ ௪ ௮ யாக் ௨ ௫ ௧ பே ௫ ௪ வெளி ௨ ௰
* அல்லது பொல்லாங்கால்
4 யோபு ௰௫ ௩௫ சங் ௭ ௰௪
5 ரோ ௬ ௨௧ ௨௩
6 யோவா ௩ ௨௭ ௧ கொரி ௪ ௭
7 எண் ௨௩ ௰௯ ௧ சாமு ௰௫ ௨௯ மல் ௩ ௬ ரோ ௰௧ ௨௯
8 யோவா ௧ ௰௩ ௩ ௩ ௧ கொரி ௪ ௰௫ ௧ பே ௧ ௨௩
9 எபே ௧ ௰௨
10 எரே ௨ ௩ வெளி ௰௪ ௪
11 பிர ௰௭ ௨௭
12 பிர ௰ ௰௯ ௰௭ ௨௭ பிர ௰௬ ௨
13 பிர ௰௪ ௰௭ ௰௬ ௩௨ பிர ௭ ௯
14 கொலோ ௩ ௮ ௧ பே ௨ ௧
15 அப் ௰௩ ௨௬ ரோ ௧ ௰௬ ௧ கொரி ௰௫ ௨ எபே ௧ ௰௩ தீத் ௨ ௰௧ எபி ௨ ௩ ௧ பே ௧ ௯
16 மத் ௭ ௨௧ லூக் ௬ ௪௬ ௰௧ ௨௮ ரோ ௨ ௰௩ ௧ யோ ௩ ௭
17 லூக் ௬ ௪௭ யாக் ௨ ௰௪
18 யாக் ௨ ௰௨
19 ௨ கொரி ௩ ௰௮

---

20 யோவா ௰௩ ௰௭ — † அல்லது செயலில் — 21 சங் ௩௪ ௰௩ ௩௯ ௧ ௧ பே ௩ ௰ — 22 ஏசா ௫௮ ௬, ௭ இஅ ௧, ௭. மத் ௨௫ ௩௬

திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், [1]உலகத்தால் அசுசிப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே, பிதாவாகிய பராபரனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பத்தியாய் இருக்கின்றது.

உ. அதிகாரம்.

க ஐசுவரியவான்களைமாத்திரம் கனம்பண்ணி ஏழைகளை இகழ்வது கிறிஸ்துமார்க்கத்துக்கு ஒவவாது என்றும, யக. யாவர்மேலும் அன்பையும் இரக்கததையும் பாராட்டவேண்டும் என்றும், யச கிரியை இல்லாத விசுவாசத்தில பெருமைபாராட்டக்கூடாதென்றும், யஎ அது செத்த விசுவாசமும, யகூ பேயகளுடைய விசுவாசமுமாயிருக்கிறதொழிய, உக ஆபிரகாம், உரு ராகாப் என்பவர்களின் விசுவாசமாய் இருக்கவில்லை எனறும சொல்லியது

என் சகோதரரே, [2]மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசம் உங்களுக்குள்ளே [3]பட்சபாதத்தோடே இராதபடிக்குப பாருங்கள.

உ அது எபபடியெனில், பொன்மோதிரத்தையும் பிரகாசமுள்ள வஸ்திரத்தையும் தரித்திருககிற ஒரு மனிதனும, கநதையான வஸ்திரத்தைத் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள், செப ஆலயததில்* பிரவேசிக்கும்பொழுது,

ங பிரகாசமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவனை வணக்கமாய் நோக்கி, நீர் கனமாய் இவ்விடத்தில்† உளுக்காரும் என்றும், தரித்திரனே, நீ அங்கே நில், அல்லது, இங்கே என் பாதபபடியினிடத்திலே உளுக்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

ச உங்களுக்குள்ளே பேதகம் பண்ணித் துர்ச்சிந்தனைகளோடே, நியாயாதிபதிகளாயீர்கள் அல்லவா?

ரு எனக்குப் பிரியமான சகோதரரே கேளுங்கள், [4]விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் [5]அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின இராச்சியத்தைச்‡ சுதந்தரிக்கிறவர்களாகவும், [6]இவ்வுலகத்தின் தரித்திரரைப பராபரன் தெரிந்துகொள்ளவில்லையா?

சா [7]அப்படியிருந்தும் நீங்கள் தரித்திரனைக் கனஈனம்பண்ணி வருகிறீர்கள்; ஐசுவரியவான்கள் அல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்; [8]அவர்கள் அல்லவோ உங்களை நியாயாசனங்களுக்குமுன்பாக இழுக்கிறார்கள்.

எ அவர்கள் அல்லவோ உங்களுக்குக் கொடுக்கபபட்ட நல்ல நாமத்தைத் தூஷணிக்கிறார்கள்.

அ [9]உன்மேல் அனபாயிருக்கிறதுபோலப் பிறனிடத்திலேயும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற இராசரீகமான பிரமாணத்தை நீஙகள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்; [10]பட்சபாதமாய் இருபபீர்களானால் பாவத்தை நடபபித்து,

கூ அக்கிரமக்காரரென்று நியாயப்பிரமாணத்தால் கண்டிக்கபபடுவீர்களே.

ய ¶ எபபடியெனில், ஒருவன் வேதநூல் முழுவதையும் கைககொண்டாலும், ஒரே பிரமாணத்திற்குத் தபபிநடந்தால், [11]எல்லாப் பிரமாணங்களுக்கும் விரோதமாய்க குற்றவாளியாயிருபபான்.

யக என்னத்தினாலென்றால், [12]விபசாரம்பண்ணாதிருபபாயாக என்று சொன்னவர்§ கொலைசெய்யாதிருபபாயாக என்றும் சொன்னார்; ஆனதால், நீ விபசாரம்பண்ணாமல் இருந்தாலும் கொலைசெய்தாயானால் வேதநூலை மீறி நடந்திருபபாயே.

யஉ ¶ [13]சுயாதீனத்திற்கு ஏதுவான வேதநூலின்படி நியாயத்தீர்ப்பு அடையப்போகிறவர்களாய்ப் பேசியும் செய்தும் இருப்பீர்களாக.

யங என்னத்திற்காக என்றால், இரக்கம்செய்யாதவனுக்கு இரக்கமில்லாமல். [14]நியாயத்தீர்ப்புக் கி

கி. பி. சுய.

[1] உரோ. யஉ. உ. யாக் ச. ச. க யோ. ரு. யஅ

[2] க கொரி உ. அ

[3] க மோ யக. யகூ உமோ க யள யக யக. லூக் உச உக உஅ மத் உஉ. யக கூ. லச யூதா யக

* அல்லது கூட்டத்தில

† அல்லது ஒரு நலல இடத்தில் இஙகே

[4] லூக் யஉ உக க தீமோ கு யஎ வெளி. உ கூ

[5] உ மோ உய சு க சாமு உ கூ லூக் அ மள மத ரு ங லூக கூ உய யஉ கூஉ. க கொரி உ. கூ உதீமோ ச அ யாக் க யஉ

‡ அல்லது அநத இராசசியததை

[6] யோவா எ சஅ க கொரி க உங, உஅ

[7] க கொரி யக. உஉ

[8] அப யரு ருங யள சு யஅ யஉ யாக் ரு சு

[9] ரு மோ யகூ யஅ மத் உஉ. ககூ உரோ யரு அ கூ கலா ரு யச கூ உ

[10] க லச

[11] ரு மோ உள உகூ மத ரு யகூ கலா ங ய

[12] உ மோ உய யரு, யச

§ அல்லது சொல லியிருகத நியாயபபிரமாணம்

[13] யாக் க உரு

[14] யோபு உஉ கூ ஓ. லூக் உக யகூ மத். ககூ யஅ யஅ கஉ உரு சக, சஉ

டைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக [1]இரக்கம் மேன்மைபாராட்டும்.*

௧௪ ¶ என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும் கிரியைகள் இல்லாதவனானால், [2]அவனுக்கு என்ன பிரயோசனம் வரும்? விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

௧௫ [3]சகோதரன் அல்லது சகோதரி வஸ்திரம் இல்லாதவர்களாயும், நாடோறும் வேண்டிய பிழைப்பில்லாதவர்களாயும் இருக்கும்பொழுது,

௧௬ [4]உங்களில் ஒருவன் அவர்களைநோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போய்க் குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லிச் சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால், அதினால் என்ன பிரயோசனம் இருக்கும்?

௧௭ அப்படிப்போல விசுவாசமும் கிரியைகள்இல்லாதிருந்தால்,

௧௮ தனியே இருப்பதினாலே† செத்ததாயிருக்கும்; ஒருவன் வந்து உனக்கு விசுவாசம் உண்டு எனக்குக் கிரியைகள் உண்டு, கிரியைகளில்லாமல்‡ உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி; [5]நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே காண்பிக்கிறேன் என்பான்.

௧௯ பராபரன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய்; அப்படிச் செய்கிறது சரிதான்; [6]பசாசுகளும் அப்படி விசுவாசித்து நடுங்குகின்றன.

௨௰ ஆ வீணான மனிதனே, கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததென்று அறிய விரும்புகிறாயா?

௨௧ [7]நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் ஏற்றிவைத்தபொழுது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்.

௨௨ [8]அவனுடைய விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து அந்தக் கிரியைகளினாலே முடிக்கப்பட்டதையும்,

௨௩ [9]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான்; (அது) அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேற்றப்பட்டதையும், [10]அவன் பராபரனுடைய சிநேகிதன் என்னப்பட்டதையும் பார்த்திருக்கிறாயே.§

௨௪ ஆனதால் ஒரு மனிதன் விசுவாசத்தினாலேமாத்திரம் அல்ல, கிரியைகளினாலேயும் நீதிமான் ஆக்கப்படுகிறானென்று அறிவீர்களாக.

௨௫ அப்படிப்போல [11]வேசியாயிருந்த இராகாப் என்பவள் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபொழுது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்.

௨௬ ஆகையால் ஆவி‖ இல்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோலக் கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாய் இருக்கின்றது.

௩. அதிகாரம்.

௧. நாம் மற்றவர்களைக் கடூரமாயும் அகங்காரமாயும் கடிந்துகொள்ளாமல், ௨. நன்மைக்கும் தீமைக்கும் கருவியாயிருக்கிற நாவை அடக்கவேண்டுமென்றும், ௰௩ மெய்ஞ்ஞானிகள் பகையும் போராட்டமும் இல்லாமல் சாந்தமும் சமாதானமுமாய் இருக்கிறார்களென்றும் சொல்லியது.

என் சகோதரரே, அதிக ஆக்கினையை¶ அடைவோம் என்று [12]நாம் அறிந்திருக்க, (உங்களில்) [13]அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.

௨ [14]நாம் எல்லாரும் அநேகவிதமாய்த் தவறுகிறோம்; [15]சொல்தவறாமல் இருக்கிறவனே [16]தேறினவனும் தன் சரீரம் அனைத்தையும் (ஞானக்) கலினத்தினாலே அடக்கிக்கொள்ளுகிறவனுமாய் இருக்கிறான்.

௩ குதிரைகளைப் பாருங்கள்,

கி. பி. ௯௰.

[1] ௧ யோ. ௪ ௰௭, ௰௮.

* அல்லது சந்தோஷப்படும்.

[2] மத். ௭ ௨௧. யாக். ௧ ௨௨.

[3] யோபு. ௩௧ ௰௯, ௨௰. லூக். ௩ ௰௧.

[4] ௧ யோ. ௩ ௰௮.

† கிரேக்கு, தான் மாத்திரம் இருப்பதினாலே

‡ சில பிரதிகளில் உன் கிரியைகளினால்

[5] யாக். ௩. ௰௩.

[6] மத். ௮ ௨௯. மாற். ௧ ௨௪. ௫ ௭. லூக். ௪ ௩௪. அப். ௰௬ ௰௭.

[7] ௧ மோ. ௨௨ ௯, ௰.

[8] எபி. ௰௧ ௰௭.

[9] ௧ மோ. ௰௫ ௬. ரோ. ௪ ௩. கலா. ௩ ௬.

[10] ௨ நாளா. ௨௰ ௭. ஏசா. ௪௧ ௮.

§ அல்லது பார்த்திருக்கிறாயா

[11] யோசு. ௨ ௧. எபி. ௰௧ ௩௧.

‖ அல்லது சுவாசம்.

¶ அல்லது நீதித்தீர்ப்பை

[12] லூக். ௬ ௩௭.

[13] மத். ௨௩ ௮, ௰௪. ரோ. ௨ ௨௰, ௨௧. ௧ பே. ௫ ௩.

[14] ௧ இரா. ௮ ௪௬. ௨ நாளா. ௬ ௩௬. வாக். ௨௰ ௯. பிரச. ௭ ௨௰. ௧ யோ. ௧ ௮.

[15] சங். ௩௪ ௰௩. யாக். ௧ ௨௬. ௧ பே. ௩ ௰.

[16] மத். ௰௨ ௩௭.

அவைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு [1]வாய்களில் கலினங்களைப் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் நடத்துகிறோம்.

௪ கப்பல்களையும் பாருங்கள்; அவைகள் இவ்வளவு பெரியவைகளாய்க் கடும் காற்றுக்களால் அடிக்கப்பட்டாலும், * அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எவ்விடமோ அவ்விடத்திற்கு மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

௫ அப்படிப்போல [2]நாவானதும் சிறிய அவயவமாய் இருந்தும் [3]பெருமையானவைகளைச் செய்யும்; கொஞ்ச நெருப்பைப் பாருங்கள்; அது எத்தனை பெரிய காட்டைக்* கொளுத்துகின்றது; [4]நாவே நெருப்பு.

௬ அது அநீதியினால் நிறைந்த லோகம்; அந்தப்படி நாவு நம்முடைய அவயவங்களுக்குள் இருந்து, [5]முழுச் சரீரத்தையும் கறைப்படுத்துகிறதாயும், சுபாவமுறைமையைக்† கொளுத்துகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கின்றது.

௭ எல்லாக்‡ காட்டு மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், ஊர்வனவைகளுக்கும் நீரிலுள்ள செந்துக்களுக்கும் உண்டாயிருக்கிற சுபாவம் கீழ்ப்படியப்பண்ணப்படும்; அப்படி மனிதருடைய சுபாவத்தால்§ கீழ்ப்படியப்பண்ணப்பட்டது உண்டு.

௮ நாவைமாத்திரம் ஒரு மனிதனும் கீழ்ப்படுத்தமாட்டான்; அது அடங்காத பொல்லாங்குள்ளதுமாய் [6]சாவுக்கேற்ற விஷத்தால் நிறைந்ததுமாய் இருக்கிறது.

௯ பிதாவாகிய பராபரனை நாம் அதினாலே தோத்திரிக்கிறோம்; [7]பராபரனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதரை அதினாலே சபிக்கிறோம்.

௰ ஆசீர்வதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகின்றன; என் சகோதரரே, இப்படி இருக்கக்கூடாது.

௰௧ நீரூற்றில் ஒரே துவாரத்திலிருந்து|| தித்திப்பும் கசப்புமுள்ள தண்ணீர் சுரக்குமா?

௰௨ என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், அல்லது திராட்சசெடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படிப்போல உவர்ப்பான நீரூற்று தித்திப்பான சலத்தைக் கொடுக்கவும் மாட்டாது.

௰௩ ¶ [8]உங்களில் ஞானியுமாய் அறிவுள்ளவனுமாய் இருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய [9]சாந்தத்தோடே [10]தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

௰௪ உங்கள் இருதயத்திலே [11]கசப்பான வயிராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்துக்கொண்டால், [12]நீங்கள் மேன்மைபாராட்டாமலும் சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்யைச் சொல்லாமலும் இருப்பீர்களாக.

௰௫ [13]அப்படிச்செய்கிறது உயரத்திலிருந்து வருகிற ஞானமல்ல, அது இந்தப் பூமிக்கும் மிருகசீவனுக்கும்¶ பேய்க்கும் உரித்தானது.

௰௬ [14]வயிராக்கியமும் விரோதமும் எங்கேயோ அங்கே கலக்கமும்** சகலவிதமான துர்ச்செய்கைகளும் உண்டே.

௰௭ [15]உயரத்திலிருந்து வருகிற ஞானம் முதலாவது, கற்புள்ளதுமாய், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமும் உள்ளதுமாய், இரக்கத்தாலும் நற்கிரியைகளாலும் நிறைந்ததுமாய், பட்சபாதம்†† இல்லாததுமாய், [16]வஞ்சனை இல்லாததுமாய் இருக்கின்றது.

௰௮ இப்படிச் சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்தோடே [17]நீதியாகிய கனி விதைக்கப்படுகின்றது.

கி. பி. ௯௰

[1] சங ௩௨. ௯
[2] வாக் ௰௨. ௰௮ ௰௫. ௨
[3] சங ௰௨. ௩ ௭௩. ௮, ௯
* அல்லது வலதுலை
[4] வாக் ௰௬. ௨௭
[5] மத் ௰௫. ௰௧, ௰௮ ௰௯, ௨௰ மாற் ௭. ௰௫, ௨௰ ௨௩
† கிரேக்கு. உருளையை
‡ கிரேக்கு, எல்லாச் சுபாவமான
§ அல்லது எல்லா மனிதரால
[6] சங ௱௪௰ ௩
[7] ௧ மோ ௧. ௨௬ ௫. ௧ ௯. ௬
|| அல்லது இடத்தில்
[8] கலா ௬. ௪
[9] யாக் ௧. ௨௧
[10] யாக் ௨. ௰௮
[11] உரோ ௰௩. ௰௩
[12] உரோ ௨. ௰௭, ௨௩
[13] பிலி ௩. ௰௯ யாக் ௧. ௰௭
¶ அல்லது சுபாவத்திற்கும், யூதா ௰௯.
[14] ௧ கொரி. ௩. ௩ கலா ௫. ௨௰
** கிரேக்கு, சந்தடியும்
[15] ௧ கொரி ௨. ௬, ௭
†† அல்லது சண்டைபிடித்தல
[16] உரோ ௰௨. ௯ ௧ பே ௧. ௨௨. ௨. ௧ ௧ யோ ௩. ௰௮.
[17] வாக் ௰௧. ௰௮ ஓசே ௰. ௰௨ மத் ௫. ௯ பிலி ௧. ௰௧ எபி ௰௨. ௰௧.

ச. அதிகாரம்.

க. பொருளாசை, ௨. அகந்தம், ௫ பொருளுறு, ௰௧ மற்றவர்களைச் சூற்றமாய நிருணயிக்கிற குணமுதலியவைகளை நீக்கி, ௰௩. லவுகீக அலுவல்களில் நற்பலன் அடைவதை நம்பாமல், இச்சீவன் அநித்தியமென்று உணர்ந்து நம்மையும் நம்முடைய வேலைகளையும் பரிபாலனுடைய பாமரிபபுக்கு ஒபபுக்கொடுக்கச் சொல்லியது.

உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும்* எதினலே வருகின்றன; உங்கள் அவயவங்களில் [1]போர்செய்கிற செல்வத்திற்கு ஏற்ற இச்சைகளால்† அல்லவோ வருகின்றன?

௨ நீஙகள் இச்சித்தும் உங்களுக்கு அகப்படுகிறதில்லை; நீஙகள் கொலைசெய்தும்‡ துணிவுள்ளவர்களாயிருந்தும் (இஷ்டபபடி) அடையாமற்போகிறீர்கள்; நீஙகள் சண்டையும் யுத்தமும் பணணியும், விண்ணப்பம்பணணுமல் இருக்கிறதால் உஙகளுக்குச் சித்திககிறதில்லை.

௩ உங்கள் இச்சைகளுக்கு§ ஏற்றதாகச் செலவழிக்கும்படிக்குத் [2]துர்க்குணமாய் விண்ணபபம் பண்ணுகிறதால் [3]நீங்கள் விண்ணபபம்பண்ணியும் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்.

ச ¶ ஆ [4]விபசாரரே, விபசாரிகளே, [5]உலகத்தோடே சிநேகமாயிருக்குதல் பராபரனுக்கு விரோதமான பகையாய் இருக்கின்றதென்று நீங்கள் அறியவில்லையா? ஆகையால் [6]உலகத்திற்குச் சிநேகமாயிருக்க விரும்புகிறவன் பராபரனுககுப் பகைஞனயிருக்கிறான்.

௫ அல்லது வேதநூல் வீணய்ச் சொல்லுகிறதென்றும், [7]நம்மிடத்தில் வாசமாயிருக்கிற ஆவியானவர் பொறாமைக்கு ஏதுவாக‖ இச்சிக்கிறார் என்றுமா நினைக்கிறீர்கள்.

௬ அவர் அதிக தயவை அநுக்கிரகம் செய்கிறாரே, ஆனபடியால் [8]அகந்தையுள்ளவர்களுக்குப் பராபரன் விரோதித்து, மனத்தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையை அளிக்கிறாரென்று சொல்லுகிறார்.

எ ஆகையால் பராபரனுக்குக் கீழ்ப்படியுங்கள்; [9]பசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

அ பராபரனைச் [10]சேருங்கள், அபபொழுது அவரும் உங்களைச் சேர்வார்; ஆ பாவிகளே, [11]உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கள்; [12]இருமனமுள்ளவர்களே, [13]உங்கள் இருதயங்களைப் பரிசுத்தம் செய்யுங்கள்.

௯ நீங்கள் உபத்திரவப்பட்டுத் துக்கமடைநது அழுங்கள்; [14]உங்கள் நகைபபு துக்கபபடுதலாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.

௰ கர்த்தருக்குமுன்பாகத் [15]தாழ்மைபபடுங்கள், அப்பொழுது உங்களை உயர்த்துவார்.

௰௧ ¶ சகோதரரே, [16]ஒருவருக்கொருவா *விரோதமாய்ப் பேசாதிருப்பீர்களாக, சகோதரனுக்கு விரோதமாய்ப்பேசித் [17]தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாயப பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயபபிரமாணத்தைக் குற்றப்படுத்தினல் நீ நியாயபபிரமாணத்தின்படி செய்கிறவனய் இராமல் அதற்கு நியாயாதிபதியாய் இருப்பாய்

௰௨ நியாயபபிரமாணத்தைக்கட்டளையிடுகிறவர் ஒருவரே; [18]அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லமையுள்ளவர்; [19]மற்றொருவனைக் குற்றப்படுத்துகிற நீ யாவன்?

௰௩ ¶ மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன இன்ன பட்டணத்திற்குப்போய்,

கி. பி. கூய.

* அலலது கடக்குறாவும்; க வசனம
1 உரோ எ உக கலா. ௫ மஎ க பே உ ௰க
† அலலது இன்பஙகளால், க. வசனம
‡ அல்லது பொறுமைபபடடும
§ அல்லது இன்பஙகளுக்கு
2 சங் ககூ. ௰அ க யோ க உஉ ௫ ௰ச
3 யோபு உஎ கூ கஅ ௰உ சஜ ௰அ சக வாக் க உஅ ஏசா க ௰௫ எரே ௰க ௰க மீகா க ச சகரி எ ௰௩
4 சஙு எக உஎ
5 க யோ உ ௰௫
6 யோவா ௰௫ ௰கூ ௰எ ௰ச கலா க. ௰
7 க மோ கூ ௫ அ உக ச மோ ௰க உகூ வாக் உக ௰
‖ அல்லது பொறாமையாய
8 யோபு உஉ உகூ சஙு எகஅ க வாக் க கச உகூ உக மத் உக ௰உ லூக் க ௫உ ௰ச ௰க ௰அ ௰ச க பே ௫ ௫
9 எபே ச உஎ கூ ௰க க பே ௫ கூ
10 உ நாளா ௰௫ உ
11 ஏசா க. ௰௬
12 யாக் க அ
13 க பே க உஉ க யோ க க
14 மத் ௫ ச,
15 யோபு உஉ உகூ மத் உக. ௰உ லூக் ௰ச ௰ ௰அ ௰ச க பே ௫. கூ.
16 எபே ச கக க பே. உ க

---

* 17 மத்.எ க லூக்.சுகஎ. உரோ உ. க க கொரி ச ௫ —18 மத் ௰ உஅ —19 உரோ ௰ச ச, ௰௩

அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரம்பண்ணி ஆதாயம் பெறுவோம் என்கிறவர்களே [1]கேளுங்கள்.

௰௪ நாளைக்கு நடப்பதை அறியாமல் இருக்கிறீர்களே; உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?* கொஞ்சநேரம் தோன்றிப் பின்பு தோன்றாமல் போகிற [2]புகையைப்போல இருக்கிறதே.

௰௫ மேற்சொல்லியதற்குப் பதிலாக நீங்கள் [3]ஆண்டவருக்குச் சித்தமானால் நாங்களும் உயிரோடிருந்தால் இப்படிச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

௰௬ இப்பொழுது உங்கள் வீம்பான பேச்சுகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; [4]இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

௰௭ ஆனதால் [5]ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அப்படிச் செய்யாவிட்டால் அவனுக்குப் பாவம் உண்டாயிருக்கும்.

௫. அதிகாரம்.

௧ அக்கிரமக்காரராகிய ஐசுவரியவான்கள் பராபரனுடைய கோபாக்கினைக்கு அஞ்சவும், ௭ தீர்க்கதரிசிகளும் யோபும் சகித்தபடியே நாமும் துன்பங்களைப் பொறுமையோடே சகிக்கவும், ௰௨ சத்தியம் பண்ணாமல் இருக்கவும், ௰௩ தரித்திரத்திலே வேண்டிக்கொள்ளவும், செல்வத்தில் பாடவும், ௰௬ குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணவும், ௰௯ சத்தியத்துக்கு விலகிப்போன சகோதரனைச் சீர்ப்படுத்தவும் சொல்லியது.

பின்னும் ஐசுவரியவான்களே, [6]கேளுங்கள்; உங்கள்மேல் வருகிற உபத்திரவங்களின் நிமித்தம் அலறி அழுங்கள்.

௨ உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் [7]வஸ்திரங்கள் பொட்டுப்பூச்சியினால் தின்னப்பட்டுப் போயின.

௩ உங்கள் பொன்னையும் வெள்ளியையும் பாசிபிடித்தது; அவைகளிலுள்ள பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாய் இருந்து, அக்கினியைப்போல உங்கள் சரீரங்களைத் தின்னும்; [8]கடைசி நாள்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.

௪ பாருங்கள், உங்கள் வயல்களை அறுத்த [9]வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய் வைக்கப்பட்டுக் கூப்பிடுகின்றது; அறுத்தவர்களுடைய [10]கூக்குரலும் சேனைகளையுடைய கர்த்தாவின் செவிகளில் பட்டது.

௫ [11]பூமியிலே நீங்கள் செல்வத்தோடும் சம்பிரமத்தோடும் ஜீவனம்பண்ணினீர்கள்; கொழுப்புண்டாக்கும் நாளுக்காகச் செய்கிறதுபோல உங்களைக் கொழுப்பாக்கினீர்கள்.

௬ உங்களுக்கு விரோதமாய் நில்லாத [12]நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்.

௭ ¶ இப்படியிருக்கச் (சகோதரரே,) கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாய்† இருங்கள்; பாருங்கள், பூமியின் விலையேறப்பெற்ற கனியை அடையவேண்டுமென்று இருக்கிற குடியானவன் [13]முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையாய்க் காத்திருக்கிறான்.

௮ நீங்களும் நீடிய பொறுமையாய் இருந்து, [14]கர்த்தர் வருகை சமீபமாயிருக்கிறபடியால் உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவீர்களாக.

௯ ¶ சகோதரரே, நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கு விரோதமாய் [15]ஒருவர் பெருமூச்சு விடாதிருங்கள்;‡ [16]நியாயாதிபதி கதவுக்கு முன் நிற்கிறாரே.

௰ என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகள் துன்பப்பட்டு நீடிய பொறுமையாயிருந்தால், அவர்களை உங்களுக்கு மார்க்கத்தைக் காண்பிக்கிறவர்கள் என்று [17]ஏற்றுக்கொள்ளுங்கள்.

கி. பி. ௬௰.

1 லூக் ௰௨. ௧௮. நீதி ௨௭. ௧.
* அல்லது என்னவென்றால் கொஞ்சம்
2 யோபு ௭. ௭. சங் ௱௨. ௩. யாக் ௧. ௰. ௧ பேது ௧. ௨௪. ௧ யோவா ௨. ௰௭.
3 அப் ௰௮. ௨௧. ௧ கொரி ௪. ௰௯. ௰௬. ௭. எபி ௬. ௩.
4 ௧ கொரி ௫. ௬.
5 லூக் ௰௨. ௪௭. யோவா ௯. ௪௧. ௰௫. ௨௨. ரோம ௧. ௨௦. ௨௧, ௩௨. ௨. ௰௭.
6 லூக் ௬. ௨௪. ௧ தீமோ ௬. ௯.
7 யோபு ௰௩. ௨௮. மத் ௬. ௨௦. யாக் ௨. ௨.
8 ரோம ௨. ௫.
9 லேவி ௰௯. ௰௩. யோபு ௨௪. ௰, ௰௧. எரே ௨௨. ௰௩. மல்கி ௩. ௫.
[illegible] ௫. [illegible]
11 யோபு ௨௧. ௰௩. ஆமோ ௬. ௧, ௪. லூக் ௰௬. ௰௯. ௨௫. ௧ தீமோ ௫. ௬.
12 யாக் ௨. ௬.
† அல்லது வருமளவும் பொறுமையாய்
13 உபா ௰௧. ௰௪. எரே ௫. ௨௪. ஓசே ௬. ௩. யோவே ௨. ௨௩. சகரி ௰. ௧.
14 பிலி ௪. ௫. எபி ௰. ௨௫. ௧ பேது ௪. ௭.
15 யாக் ௪. ௰௧.
‡ அல்லது எரிச்சல் படாதிருங்கள்
16 மத் ௨௪. ௩௩. ௧ கொரி ௪. ௫.
17 மத் ௫. ௰௨. எபி ௰௧. ௩௫.

௰௧ [1]பொறுமையாய் இருக்கிறவர்களை நாம் பாக்கியவான்கள் என்கிறோமே; [2]யோபென்பவன் காண்பித்த* பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; [3]கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறார் என்று [4]கர்த்தர் செய்த முடிவினாலே அறிந்திருக்கிறீர்கள்.

௰௨ ¶. பின்னும் என் சகோதரரே, எல்லாவற்றிலும் எதை நீங்கள் செய்யவேண்டுமெனில், வானத்தின்மேலாகிலும், பூமியின்மேலாகிலும், வேறொரு ஆணையினாலாகிலும் [5]சத்தியம்பண்ணாதிருப்பீர்களாக; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் பேசக்கடவீர்கள்.

௰௩ ¶ உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் செபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் [6]சங்கீதங்களைப் பாடக்கடவன்.

௰௪ உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பரை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனிடத்தில் [7]எண்ணெயைப் பூசி அவனுக்காக விண்ணப்பம்பண்ணக்கடவர்கள்.

௰௫ அப்பொழுது கர்த்தர் பிணியாளியை எழுப்புதற்கு விசுவாசமுள்ள விண்ணப்பம் அவனை இரட்சிக்கும்; [8]அவன் பாவங்களைச் செய்தவனானால் அவை அவனுக்கு மன்னிக்கப்படும்.

௰௬ நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் அக்கிரமங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் விண்ணப்பம்பண்ணுங்கள்; [9]நீதிமான் உண்மையாய்ப் பண்ணுகிற விண்ணப்பம் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

௰௭ எலியா என்பவன் [10]நம்மைப்போலப் பாடுள்ள மனிதனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு [11]உறுதியாய்* விண்ணப்பம்பண்ணினான்; [12]அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழைபெய்யவில்லை.

௰௮ [13]மறுபடியும் விண்ணப்பம் பண்ணினான், அப்பொழுது பூமி தன் பலனைக் கொடுக்கத்தக்கதாக வானம் மழையைத் தந்தது.

௰௯ ¶ சகோதரரே, [14]உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகித் தப்பிப்போகும்பொழுது, மற்றொருவன் அவனைத் திருப்பினால்,

௨௰ பாவியானவன் பிரவேசிக்கும் தப்பான மார்க்கத்தில் நின்று அவனைத் திருப்புகிறவன் [15]ஒரு ஆத்துமாவை மரணத்திற்குத் தப்புவித்து [16]திரளான பாவங்களை மறைப்பானென்று அறியக்கடவன்.

கி. பி. ௯௰.

1 சங் ௯௪ ௰௨ மத் ௫ ௰, ௰௧ ௰ ௨௨
2 யோபு ௧ ௨௧, ௨௨ ௨ ௰
3 ௪ மோ. ௰௪ ௰௮. சங். ௯௯. ௮
4 யோபு ௪௨ ௰ ௩
5 மத் ௫ ௯௪ ௩
6 எபே ௫ ௰௯ கொலோ ௩ ௰௬
7 மாற் ௬ ௰௩ ௰௬ ௰௮
8 எசா ௯௯ ௨௪ மத் ௯ ௨
9 ௧ மோ ௨௰ ௰௭ ௪ மோ ௰௧ ௨ ௫ மோ ௯. ௰௮, ௰௯ ௨௰ யோசு ௰ ௰௨ ௧ சாமு ௰௨ ௰௮ ௧ இரா ௰௩ ௯ ௨ இரா ௪ ௯௯ ௰௯ ௰௫, ௨௰ ௨௰ ௨, ௪ ௩ சங ௰. ௰௭ ௯௪ ௰௫ ௪௫ ௰௮ வாக் ௰௫ ௨௯ ௨, ௮, ௯ யோவா ௯ ௯௯ ௧ யோ ௯ ௨௨
10 அப ௰௪ ௰௫
11 ௧ இரா ௰௭ ௧
* அல்லது தன்னுடைய விண்ணப்பத்தில
12 லூக் ௪ ௨௫
13 ௧ இரா ௰௮ ௪௨, ௪௫
14 மத் ௰௮ ௰௫

15 ரோ ௰௧ ௰௪ ௧ கொரி ௯ ௨௨ ௧ தீமோ ௪ ௰௬ —16 நீதி ௰ ௰௨ ௧ பேது ௪ ௮

I. PETER.

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின

பொதுவான முதலாம் நிருபம்.

௧. அதிகாரம்.

திவ்விய ஆசீர்வாதங்களுக்காகப் பராபரனைத் தோத்திரித்தது, ௰ கிறிஸ்துவினாலே உண்டான இரட்சிப்பு நூதனமான செய்தியாயிராமல் பூர்வத்திலே தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்டதைக் காட்டி, ௰௩ பராபரனுடைய வசனத்தினாலே அவர்கள் மறுபிறப்பு அடைந்திருக்கிறபடியால் அதற்கு ஏற்றபடி பரிசுத்தராய் நடக்கப் புத்திசொல்லியது.

[1] பிதாவாகிய பராபரன் முன் அறிந்தபடியே [2] ஆவியானவர் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும் [3] இயேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுகிறதற்கும் [4] தெரிந்துகொள்ளப்பட்டு,

௨ பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தீனியா தேசங்களிலே [5] சிதறிவந்திருக்கிற அந்நியநாட்டாருக்கு இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறதாவது: [6] கிருபையும் சமாதானமும் உங்களுக்குச் சம்பூரணமாய் உண்டாகக்கடவது.

௩ ¶ இயேசுக்கிறிஸ்து [7] மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறதினாலே அழிவும் அசுத்தமும் [8] குன்றுதலும் இல்லாத சுதந்தரத்திற்கு ஏதுவாக,

௪ [9] உயிருள்ள நம்பிக்கை உண்டாகும்படிக்குத் [10] தமது மிகுந்த* இரக்கத்தினாலே நம்மைப் புதிதாய்ச் ஜெனிப்பித்த நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய பராபரனுக்குத் [11] தோத்திரம் உண்டாவதாக.

௫ கடைசிக்காலத்திலே வெளிப்பட எத்தனமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு [12] பராபரனுடைய பலத்தினாலே காக்கப்படுகிற உங்களுக்கு† அந்தச் சுதந்தரம் [13] பரமண்டலங்களில் வைத்திருக்கின்றது.

௬ இதற்காகத் (துன்பங்கள்) வேண்டியபடியால், [14] இப்பொழுது கொஞ்சக்காலமாய்ப் [15] பலவிதமான துன்பங்களினாலே துக்கப்படுகிற நீங்கள் [16] மிகவும் சந்தோஷப்படக்கடவீர்கள்.

௭ அழிந்துபோகிற பொன் [17] அக்கினியினாலே சோதிக்கப்படுமே; [18] அதிலும் உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு அதிக விலையேறப்பெற்றதாய் இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்பொழுது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும்

கி. பி. ௬௰.

1 உரோ ௮. ௨௯. ௰௧. ௨.
2 ௨ தெச ௨. ௰௩.
3 எபி ௰. ௨௨. ௰௨. ௨௪.
4 எபே ௧. ௪. ௧ பே ௨. ௯.
5 யோவா. ௭. ௩௫. அப் ௨. ௫, ௯. யாக் ௧. ௧.
6 உரோ ௧. ௭. ௨ பே ௧. ௨. யூதா ௨.
7 ௧ கொரி. ௰௫. ௨௰. ௧ தெச ௪. ௰௪. ௧ பே ௩. ௨௧.
8 ௧ பே ௫. ௪.
9 யோவா. ௩. ௩, ௫. யாக் ௧. ௰௮.
10 தீத ௩. ௫.
* அல்லது ஏராளமான
11 ௨ கொரி ௧. ௩. எபே ௧. ௩.
12 யோவா ௰. ௨௮, ௨௯. ௰௭. ௰௧, ௰௨, ௰௫. யூதா ௧.
† அல்லது நமக்கு
13 கொலோ ௧. ௫. ௨ தீமோ. ௪. ௮.

---

14 ௨ கொரி ௪. ௰௭. ௧ பே ௫. ௰. — 15 யாக். ௧. ௨. — 16 மத் ௫. ௰௨. உரோ ௰௨. ௰௨. ௨ கொரி ௬. ௰. ௧ பே ௪. ௰௩. — 17 யோபு. ௨௩. ௰. சங் ௬௬. ௰. நீதி ௰௭. ௩. ஏசா ௪௮. ௰. சகரி ௰௩. ௯. ௧ கொரி ௩. ௰௩. — 18 யாக் ௧. ௩, ௰௨. ௧ பே ௪. ௰௨.

[1]மகிமையும் உண்டாகக் காணப்படும்படிக்கு (அந்தத் துன்பங்களைச் சகிக்கிறீர்கள்).

அ [2]அவரை நீங்கள் காணாமலிருந்தும், [3]அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமல் இருந்தும், அவரிடத்தில் விசுவாசமாயிருந்து, சொல்லமுடியாததுமாய் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தோடே களிகூர்ந்து,

கூ [4]உங்கள் விசுவாசத்திற்கு ஏற்ற பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்.

ய ¶ உங்களுக்கு உண்டான இந்தக் கிருபையைக்குறித்து முன் பேசின [5]தீர்க்கதரிசிகள் தங்களிலுள்ள கிறிஸ்துவின்

யக ஆவியானவர் [6]கிறிஸ்துவின் பாடுகளையும் அவைகளின் பின்வரும் மகிமைகளையும் முன் அறிவித்தபொழுது, எந்தக் (காலத்தை) எப்படிப்பட்ட காலத்தைக் குறித்திருக்கிறார் என்று சோதனைபண்ணி,

யஉ [7]இப்படி இந்த இரட்சிப்பைக்குறித்து மிகவும் ஆராய்ந்து பார்த்தார்கள்; [8]அவைகளை அவர்கள் தங்களைக்குறித்து அல்ல, நம்மைக்குறித்தே தெரிவித்தார்கள் என்று [9]அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; [10]வானத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியைக்கொண்டு உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தவர்களாலே அவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டுவருகின்றன; [11]அவைகளுக்குள்ளே தேவதூதரும் உற்றுப்பார்க்க ஆசையாய் இருக்கிறார்கள்.

யங ¶ ஆகையால், [12]நீங்கள் உங்கள் மனதின் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு, [13]தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, [14]இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்பொழுது உங்களுக்குக் கொண்டுவரப்படும் கிருபையின்மேல் இடைவிடாமல்* நம்பிக்கையை வைத்து,

•யச கீழ்ப்படிகிற பிள்ளைகளைப்போல நீங்கள் [15]முற்காலத்திலே அறியாமையினாலே கொண்ட இச்சைகளின்படி [16]இனி நடவாமல்,

யரு [17]உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் சகலவிதத்திலேயும் பரிசுத்தராய் நடப்பீர்களாக.

யசு நான் பரிசுத்தன், ஆகையால் [18]நீங்களும் பரிசுத்தராயிருங்களென்று எழுதியிருக்கிறதே.

யஎ ¶ அன்றியும் [19]பட்சபாதம் இல்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் பிதாவை நீங்கள் தொழுதுகொண்டிருக்கிறதால் [20]இவ்வுலகத்திலே தங்குமளவும் பயத்துடனே [21]நடந்துகொள்ளுங்கள்.

யஅ [22]அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் அல்ல, [23]குற்றமும் மாசும் இல்லாத ஆட்டுக்குட்டியைப்போன்ற கிறிஸ்துவின் [24]விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே,

யகூ உங்கள் முன்னோர்களால் [25]பாரம்பரையாய்ப்பெற்ற வீணான நடத்தையினின்று மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே.

உய [26]அவர் லோகத்தோற்றத்திற்குமுன்னே குறிக்கப்பட்டவராய் இருந்து, தமது மூலமாய்ப் பராபரன்மேல் விசுவாசமாயிருக்கிற [27]உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.

உக உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் பராபரன்மேலே இருக்

கி. பி. சுய.

1 உ.ரோ உ. எ,ய க கொரி ச. ரு உ தெச க. எ-யஉ
2 யோவா உய. உக உ. கொரி ரு. எ எபி யக. க, உஎ
3 க யோ ச. உய
4 உ.ரோ க. உஉ
5 க பே க. யக உ. பே க. உக.
6 சங் உஉ. க ஏசா ருங. கழ தானி கூ. உச லூக் உச. உசு, உக, சச, சசு. யோவா யஉ. சக அப உக உஉ, உங
7 க மோ சக. ய தானி உ. சச ஆகா உ. எ சகரி க. யஉ. மத் யக. யஎ லூக் ய. உச உ பே க. யகூ, உய, உக
8 எபி யக. யக, கக, சய.
9 தானி கூ. உச. யஉ. கூ, யங
10 அப உ. ச
11 உ மோ உரு உய தானி அ யங. யஉ. ரு, சு எபே ங. ய
12 லூக் யஉ. கரு எபே கூ. யச
13 லூக் உக. கச உ.ரோ யங. யங க தெச ரு. அ, அ க பே ச. எ ரு. அ
14 லூக் யஎ. கய க கொரி. க. எ. உ தெச க. எ
* இரேக்கு, பூரணமாய்
15 அப யஎ. கய க தெச ச. ரு.
16 உ.ரோ. யஉ. உ க பே ச. உ

---

17 லூக் க எச, எரு. உ கொரி. எ. க க தெச. ச. ங, ச, எ. எபி யஉ. யச. உ பே. ங. யங.—18 க மோ. யக சச: யகூ. உ: உய. எ.—19 உ மோ. ய. யஎ. அப். ய கச. உரோ. உ. யக.—20 உ கொரி ரு.க. எபி யக.யக க பே.உ யக.—21 உ கொரி.எ.க. பிலி. உ. யஉ. எபி. யஉ. உஅ.—22 க கொரி சு. உய: எ. உங.—23 உ மோ. யஉ. ரு ஏசா. ருங எ. யோவா க. உகூ, ஙசு. க கொரி ரு எ.—24 அப். உய. உஅ. எபே. க. எ. எபி. கூ. யஉ, யச. வெளி. ரு. கூ.—25 எசே. உய. யஅ. க பே. ச. ங. 26 உ.ரோ. யசஉ.உரு: யசு. உரு, உசு. எபே. ங. கூ, யக. கொலோ. க. உசு. உ தீமோ. க. கூ, ய. தீத். க. உ, ங. வெளி. யங. அ. 27 கலா. ச. ச எபே. க. ய. எபி. க. உ: கூ. உசு.

கும்படிக்கு [1]அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, [2]அவருக்கு மகிமையைக் கொடுத்தார்

௨௨ ¶ (ஆகையால்,) [3]நீங்கள் உண்மையான சகோதரசிநேகத்திற்கு எதுவாக ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, இப்படி உங்கள் [4]ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டிருக்கச் சுத்த இருதயங்களோடே ஊக்கமாய் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருப்பீர்களாக.

௨௩ அழிவுள்ள வித்தினாலே அல்ல [5]என்றென்றைக்கும் நிற்கிற சீவனுள்ள தேவனுடைய வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே [6]மறுபடியும் செனிக்கப்பட்டிருக்கிறீர்களே.

௨௪ அந்தப்படிச் (சொல்லியிருக்கிறதாவது.) [7]மாம்சதேகமெல்லாம்* புல்லைப்போலவும், மனிதருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவும் இருக்கின்றன; புல்லானது உலர்ந்துபோம், அதின் பூவும் உதிர்ந்துபோம்.

௨௫ [8]கர்த்தருடைய வசனமே என்றென்றைக்கும் நிற்குமென்பதே; [9]உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் அதுவே.

௨. அதிகாரம்.

௧ சிநேகத்தைப் பிரிக்கிற குணத்தை அகற்றவும், ௪ அவர்கள் கட்டப்பட்டிருக்கிற அஸ்திவாரம் கிறிஸ்து என்று அறியவும், ௰௧ மாம்ச இச்சைகளுக்கு விலகவும், ௰௩ நியாயாதிபதிகளுக்கு அடங்கவும், ௰௮ ஊழியக்காரர் எசமான்களுக்குக் கீழ்ப்படிந்து, ௨௰௧ கிறிஸ்து காட்டின மாதிரியின்படியே நன்மைசெய்வதினாலே வரும் துன்பத்தைப் பொறுமையோடே சகிக்கவும் சொல்லியது.

இப்படியிருக்கக் [10]கர்த்தர் தயையுள்ளவர் என்று நீங்கள் ருசிபார்த்தபடியால் [11]சகல துர்க்குணத்தையும்,

௨ சகல கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும் சகலவிதமான பொல்லாத பேச்சுக்களையும் தள்ளிப்போட்டு,

௩ நீங்கள் இரட்சிப்புக்கு எதுவாக வளரும்படிக்கு [12]இப்பொழுது பிறந்த குழந்தைகளைப்போலத் (தேவ) வசனமாகிய [13]களங்கம் இல்லாத பாலின்மேலே ஆசையாயிருப்பீர்களாக.

௪ ¶ [14]மனிதராலே தள்ளப்பட்டதாயும், பராபரனிடத்திலே தெரிந்துகொள்ளப்பட்டதாயும், விலையேறப்பெற்றதாயும் இருக்கிற சீவனுள்ள கல்லாகிய,

௫ [15]அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் சீவனுள்ள கற்களைப்போல [16]ஆவிக்கு எற்ற மாளிகையாகவும் [17]இயேசுக்கிறிஸ்து மூலமாய்ப் பராபரனுக்குப் பிரியமான [18]ஆவிக்கு எற்ற பலிகளைச் செலுத்தும்படி பரிசுத்த [19]ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்படுங்கள்.†

௬ அந்தப்படி வேதத்திலே சொல்லியிருக்கிறதாவது: [20]இதோ தெரிந்துகொள்ளப்பட்டதுமாய் விலையேறப்பெற்றதுமாய் இருக்கிற மூலைக்கல்லைச் சீயோனிலே வைக்கிறேன், அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை என்பதே.

௭ ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு இந்தக் கனம்‡ உண்டாயிருக்கிறது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கு வீட்டைக் கட்டுகிறவர்களால் [21]தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய இந்தக் கல்லே [22]இடறுதற்கு எதுவான கல்லாயும், விழுதற்கு எதுவான கல்மலையாயும் இருக்கிறது.

௮ அவர்கள் (தேவ) வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து [23]இடறுகிறார்கள்; [24]அதற்கு நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.

இ. பி. சுய.

1 அப. ௨. ௨௪
2 மத் ௨௮. ௰௮ அப. ௨. ௩௩ ௩. ௰௩ எபே ௧. ௨௰ பிலி ௨. ௯ எபி ௨. ௯ ௧ பே ௩. ௨௨
3 உரோ ௰௨. ௯, ௰ ௧ தெச ௪. ௯ ௧ தீமோ ௧. ௫ எபி ௰௩. ௧ ௧ பே ௨. ௰௭ ௩. ௮ ௪. ௮ ௨ பே ௧. ௭ ௧ யோ ௩. ௰௮ ௪. ௭, ௨௧
4 அப ௰௫. ௯
5 யாக் ௧. ௰௮ ௧ யோ ௩. ௯
6 யோவா ௧. ௰௩ ௩. ௫
7 சங் ௱௩. ௰௫ எசா ௪௰. ௬ ௫௧. ௰௨ யாக் ௧. ௰
* அல்லது எனென்றால் மாம்சதேகமெல்லாம்
8 சங் ௱௨. ௰௨, ௨௬ எசா ௪௰. ௮ லூக் ௰௬. ௰௭
9 யோவா ௧. ௧, ௰௪ ௧ யோ ௧. ௧, ௩
10 சங் ௩௪. ௮ எபி ௬. ௫
11 எபே ௪. ௨௨, ௨௫, ௩௧ கொலோ. ௩. ௮ எபி ௰௨. ௧ யாக் ௧. ௨௧ ௫. ௯ ௧ பே ௪. ௨
12 மத் ௰௮. ௩ மாற் ௰. ௰௫ உரோ ௬. ௪ ௧ கொரி ௰௪. ௨௰ ௧ பே ௩. ௨௩
13 ௧ கொரி. ௩. ௨ எபி ௫. ௰௨, ௰௩
14 சங் ௱௰௮. ௨௨ மத் ௨௧. ௪௨ அப ௪. ௰௧

---

15 எபே ௨. ௨௧, ௨௨. —16 எபி ௩. ௬ —17 பிலி ௪. ௰௮ ௧ பே ௪. ௰௧ —18 ஓசே ௰௪. ௨ மல்கி ௧. ௰௧ உரோ ௰௨. ௧ எபி ௰௩. ௰௫, ௰௬ —19 எசா ௬௰௧. ௬ ௬௬. ௨௧ வெளி —† அல்லது கட்டப்பட்டிருக்கிறீர்கள் —20 எசா ௨௮. ௰௬ உரோ. ௯. ௩௩ ‡ அல்லது அருமை —21 சங் ௱௰௮. ௨௨ மத் ௨௧. ௪௨ அப ௪. ௰௧ —22 எசா. ௮. ௰௪ லூக் ௨. ௩௪ உரோ ௯. ௩௩ 23 ௧ கொரி ௧. ௨௩ —24 ௨ மோ. ௯. ௰௬ உரோ. ௯. ௨௨ ௧ தெச ௫. ௯ யூதா ௪

௯ நீங்கள் [1]உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை* அறிவிக்கும்படிக்குத் [2]தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், [3]இராசரீகமான ஆசாரியக்கூட்டமாயும், [4]பரிசுத்தவான்களாயும், [5]அவருக்குச் சொந்தமான† சனமாயும் இருக்கிறீர்கள்.

௰ [6]முன்னே நீங்கள் பராபரனுடைய சனமாயிருக்கவில்லை; இப்பொழுது அவருடைய சனங்களாய் இருக்கிறீர்கள், (முன்னே) நீங்கள் இரக்கம் பெறாதவர்கள்; இப்பொழுது இரக்கம் பெற்றவர்களாய் இருக்கிறீர்கள்

௰௧ ¶ பிரியமானவர்களே, [7]வழிப்போக்கருமாய் அந்நியநாட்டாருமாய் இருக்கிற உங்களுக்கு நான் புத்திசொல்லுகிறது என்னவெனில், [8]ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற [9]மாம்ச இச்சைகளுக்கு நீங்கள் இடங்கொடாமல்,

௰௨ அஞ்ஞானிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும்பொழுது,‡ உங்கள் [10]நற்கிரியைகளைக் கண்டு [11]கண்காணிப்பின் நாளிலே பராபரனுடைய மகிமை விளங்கப்பண்ணும்படிக்கு [12]நல்ல நடக்கையோடே அவர்களுக்குள்ளே நடக்கக்கடவீர்கள்.

௰௩ ¶ அந்தப்படியே நீங்கள் கர்த்தரின் நிமித்தம் [13]மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கீழ்ப்படிவீர்களாக.

௰௪ பிரதான அதிகாரமுள்ள இராசாவுக்காவது, [14]தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையையும் [15]நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியையும் கொடுக்கும்படி அவனால் அனுப்பப்பட்ட துரைகளுக்காவது (அப்படிச் செய்யுங்கள்).

௰௫ புத்தியீன மனிதருடைய அறியாமையை [16]நீங்கள் நன்மைசெய்கிறதினாலே அடக்கிப்போடவேண்டுமென்று பராபரனுடைய சித்தமாயிருக்கிறதே.

௰௬ [17]சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடியாகச் சேர்த்துக்கொள்ளாமல்§ [18]பராபரனுடைய அடிமைகளாய் நடப்பீர்களாக.

௰௭ [19]எல்லாரையும் கனம்பண்ணுங்கள்;|| [20]சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; [21]பராபரனுக்குப் பயந்திருங்கள், இராசாவைக் கனம்செய்யுங்கள்.

௰௮ ¶ வீட்டு [22]வேலைக்காரரே, மிகுந்த பயத்துடனே எசமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் இணக்கமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, செம்மையில்லாதவர்களுக்கும் (அப்படிச் செய்யவேண்டும்).

௰௯ என்னத்திற்காகவெனில், ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டுப் பராபரனுக்குமுன்பாக உண்மையாயிருக்கிற மனதின்நிமித்தம் துக்கங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் [23]அதுவே மகிமையுள்ளது ¶

௨௰ நீங்கள் குற்றம்செய்து அடிக்கப்படும்பொழுது அதைப் பொறுமையோடே சகித்தால், [24]அது எப்படிப்பட்ட கீர்த்தியாயிருக்கும்? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்பொழுது அதைப் பொறுமையோடே சகித்தால் அதுவே பராபரனுக்குமுன்பாக மகிமையாய்** இருக்கும்.

௨௧ [25]இதற்காக நீங்கள் அழைக்

கி. பி. ௬௰.

1 அப ௨௬ ௰௮ எபே. ௫ ௮ கொலோ ௧ ௰௩ ௧ தெச ௫ ௪, ௫
* அல்லது நற்குணங்களை
2 ௫ மோ ௰ ௰௫. ௧ பே ௧ ௨
3 ௨ மோ ௰௯ ௬ வெளி ௧ ௬ ௫ ௰
4 யோவா ௰௭ ௰௯ ௧ கொரி ௬ ௰௧ ௨ தீமோ ௧ ௯
5 ௫ மோ ௭ ௬ ௰௪ ௨ ௨௬ ௰௮ ௯ அப ௨௰ ௨௮ எபே ௧ ௰௪ தீத் ௨ ௰௪
† அல்லது அவரால் கொள்ளப்பட்ட
6 ஓசே ௧ ௯, ௰ ௨ ௨௩ ௨ரோ ௯ ௨௫
7 ௧ நாளா ௨௯ ௰௫ சங் ௩௯ ௰௨ ௱௰௯ ௰௯ எபி ௰௧ ௰௩ ௧ பே ௧ ௰௭
8 யாக் ௪ ௧
9 ௨ரோ ௰௩ ௰௪ கலா ௫ ௰௬
‡ அல்லது பேசுகிறதில்
10 மத் ௫ ௰௬
11 லூக் ௰௯ ௪௪
12 ௨ரோ ௰௨ ௰௭ ௨ கொரி ௮ ௨௧ பிலி ௨ ௰௫ தீத ௨ ௮ ௧ பே ௩ ௰௬
13 மத் ௨௨ ௨௧ ௨ரோ ௰௩ ௧ தீத் ௩ ௧
14 ௨ரோ ௰௩ ௪
15 ௨ரோ ௰௩ ௩
16 தீத் ௨ ௮ ௰௨
17 கலா ௫ ௰௩
§ கிரேக்கு மூடியாகக்கொள்ளாமல்

---

18 ௧ கொரி ௭ ௨௨ —19 ௨ரோ ௰௨ ௰ பிலி ௨ ௩ —|| அல்லது மதியுங்கள் —20 எபி ௰௩ ௧. ௧ பே ௧ ௨௨.—21 லூக் ௰௮ ௨௪. மத் ௨௨ ௨௧ ௨ரோ ௰௩ ௭ —22 எபே ௬ ௫ கொலோ ௩ ௨௨ ௧ தீமோ ௬ ௧ தீத் ௨ ௯ —23 மத் ௫ ௰ ௨ரோ ௰௨ ௰, ௧ பே ௩ ௰௪.—¶ அல்லது அதுவே நன்றி, லூக் ௬, ௩௨ ௨௰ வசனம் -24 ௧ பே ௪ ௰௪ ௬ ௰௫,௰௯ -** அல்லது அங்கீகரிக்கப்படத்தக்கதாய —25 மத் ௰௬ ௨௪ அப ௰௪ ௨௨ ௧ தெச ௩ ௩ ௨ தீமோ ௩ ௰௨

கப்பட்டும் இருக்கிறீர்கள்; எப்படியெனில் [1]கிறிஸ்துவும் உங்களுக்காகப்* பாடுபட்டு நீங்கள் தம்முடைய காலடிகளைத் தொடர்ந்துவரும்படி [2]உங்களுக்குமார்க்கத்தைக் காட்டிப்போனார்.

௨௨ [3]அவர் பாவம்செய்யவில்லை; அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.

௨௩ [4]அவர் வையப்பட்டபொழுது பதில் வையாமலும், பாடுபட்டபொழுது பயமுறுத்தாமலும், [5]நியாயமாய்த் தீர்ப்புக்கொடுக்கிறவருக்கு அதை† ஒப்புவித்தார்.

௨௪ [6]நாம் பாவங்களுக்கு விலகி நீதியுள்ளவர்களாய்ப் பிழைக்கும்படிக்கு அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைத் தாங்கிக்கொண்டு [7]அவைகளைச் சிலுவைமரத்திலே‡ நிவிர்த்திசெய்தார்.

௨௫ [8]அவர் காயப்பட்டதினாலே குணமானீர்கள்; (முன்னே) [9]நீங்கள் வழுவிப்போன ஆடுகளைப்போல இருந்தீர்கள்; இப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு [10]மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டு இருக்கிறீர்கள்.

௩. அதிகாரம்.

௧. மனைவிகளும் புருஷர்களும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைக் கற்பித்து, ௮ யாவரும் ஒருமையும் சிநேகமும் உள்ளவர்களாயிருக்கவும், ௰௪ துன்பத்தைச் சகிக்கவும் புத்தி சொல்லி, ௰௮ பூர்வீகத்தார்மேல் கிறிஸ்துவின் புண்ணியபலன்கள் இன்னவென்றும் கூறியது

அந்தப்படி [11]ஸ்திரிகளே, (புருஷர்களில்) சிலர் (தேவ) வசனத்திற்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறபொழுது [12]வசனமின்றி,

௨ [13]உங்கள் கற்பும் வணக்கமுமுள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, 'அப்படிப்பட்ட நடக்கையினாலே [14]சம்பாதித்துக்கொள்ளப்படும்படிக்கு உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழடங்குவீர்களாக.

௩ [15]நீங்கள் உங்கள் மயிரைப் பின்னிப் பொன்னாபரணங்களைத் தரித்து, முக்கியமான வஸ்திரங்களை உடுத்தி,

௪ இவ்விதமாய்ப் புறம்பே உங்களை அலங்கரியாமல் உள்ளாக மறைந்திருக்கிற இருதயமானது பராபரனுடைய திருப்பார்வையிலே மிகுந்த விலையேறப்பெற்றிருக்கிற சாந்தமும் அமைதலுமான ஆவியென்னும் அழியாமையுள்ள [16]அலங்காரத்தை அடையும்படி செய்யுங்கள்.

௫ இப்படியே பூர்வீகத்திலே பராபரன்மேல் நம்பிக்கையான பரிசுத்த ஸ்திரிகளும் தங்களை அலங்காரம் செய்து, தங்களுடைய புருஷருக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

௬ அந்தப்படி சாராள் ஆபிரகாமை [17]எசமானென்றழைத்து, அவனுக்குக் கீழ்ப்பட்டாள்; நீங்கள் நன்மைசெய்து, எவ்வளவான துன்பத்திற்கும் பயப்படாதவர்களாய், அவளுக்குப் பிள்ளைக§ளானீர்கள்.

௭ ¶ அன்றியும் [18]புருஷரே, [19]உங்கள் செபங்களுக்குத் தடைவராதபடிக்கு மனைவியானவள் [20]பலஈன பாத்திரமாய் இருக்கிறபடியினாலே, நீங்கள் அறிவின்படி அவளுடனேகூட வாசம்பண்ணவேண்டுவதுமல்லாமல் உங்களுடனேகூட அவளும் நித்திய சீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவளானபடியினாலே அவளுக்குக் கனம்செலுத்துவீர்களாக.

௮ ¶ மேலும் [21]நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டவர்களாயும் பரிதாபமுள்ளவர்களாயும் [22]சகோதர சிநேகம் உள்ளவர்களாயும்||

கி. பி. ௬௰.

1 க பே ௩. ௰அ
* சிலபிரதிகளில நமக்காக
2 யோவா ௰௩ ௰௫ பிலி ௨ ௫. க யோ ௨ ௬
3 ஏசா ௫௩ ௯ லூக் ௨௩ ௪௧ யோவா ௮ ௪௬ ௨ கொரி ௫ ௨௧ எபி ௪ ௰௫
4 ஏசா ௫௩. ௭ மத் ௨௭ ௩௯ யோவா ௮ ௪௮, ௪௯ எபி ௰௨ ௩
5 லூக் ௨௩ ௪௬
† அல்லது தம்மை
6 ரோ. ௬ ௨ ௰௧ ௭ ௬
7 ஏசா ௫௩ ௪, ௫, ௰௧, மத் ௮ ௰௭ எபி. ௯ ௨௮
‡ அல்லது சிலுவைமரத்துக்குத் தாங்கிக்கொண்டு
8 ஏசா. ௫௩. ௫
9 ஏசா ௫௩ ௬ எசே. ௩௪ ௬
10 எசே ௩௪ ௨௩ ௩௭. ௨௪ யோவா ௰ ௰௧, ௰௪, ௰௬ எபி ௰௩ ௨௰ க பே ௫ ௪
11 க கொரி. ௰௪ ௩௪ எபே ௫ ௨௨ கொலோ ௩ ௰௮ தீத் ௨ ௫
12 க கொரி ௭ ௰௬
13 க பே ௨ ௰௨
14 மத் ௫ ௰௬. க கொரி ௯ ௰௯-௨௨
15 க தீமோ. ௨. ௯ தீத் ௨. ௩. ௫
16 சங். ௪௫. ௰௩. ரோ ௨ ௨௯; ௭ ௨௨. ௨ கொரி ௪ ௰௬

---

17 ஆதி ௰௮ ௰௨.—§ அல்லது குமாரத்திகள்.— 18 க கொரி ௭ ௩ எபே ௫ ௨௫ கொலோ ௩, ௰௯ —19 யோபு ௪௨. ௮. மத் ௫ ௨௩, ௨௪ ௰௮ ௰௯.—20 க கொரி, ௰௨ ௨௩ க தெச ௪ ௪ —21 ரோ, ௰௨ ௰௬: ௰௫ ௫ பிலி ௩ ௰௬. 22 ரோ ௰௨ ௰ எபி. ௰௩ ௧. க பே. ௨ ௰௭ —|| அல்லது சகோதரரைச் சிநேகிக்கிறவர்களாயும்.

[1]மன உருக்கமுள்ளவர்களாயும் மனத்தாழ்மையுள்ளவர்களாயும்,

௯ தீமைக்குத் தீமையையும், உதாசினத்துக்கு உதாசினத்தையும் [2]பதில்செய்யாமல் ஆசீர்வாதத்தையே பதில்செய்கிறவர்களாயும் இருப்பீர்களாக; உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி [3]ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நீங்கள் இப்படியே செய்ய அழைக்கப்பட்டீர்கள்.

௰ ஆனபடியினாலே [4]ஜீவனை விரும்பிச் சவுக்கிய நாள்களைக் காணவேண்டுமென்று இருக்கிறவன் தன் [5]நாவினால் பொல்லாங்கையும், தன் உதடுகளால் கபடத்தையும் பேசாமல் இருக்கும்படி அமைந்து,

௰௧ [6]பொல்லாங்கை விட்டு விலகி நன்மை செய்து [7]சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடரக்கடவன்.

௰௨ ஏனென்றால் கர்த்தர் நீதிமான்கள்மேலே கண்ணோட்டமாயிருந்து [8]அவர்களுடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்கிறார்.

௰௩ கர்த்தருடைய முகம்பொல்லாங்கைச் செய்கிறவர்களுக்கு* விரோதமாயிருக்கின்றது; அந்தப்படி நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் [9]உங்களுக்குப் பொல்லாங்கைச் செய்பவன் எவன்?

௰௪ [10]நீதியின்நிமித்தமாக நீங்கள் பாடனுபவித்தால் பாக்கியராயிருப்பீர்கள்; ஆனதால் [11]அவர்களுடைய பயங்கரத்திற்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து,

௰௫ கர்த்தராகிய பராபரனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தமாய் வணங்கி, உங்களில் இருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களை விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும்† [12]உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருந்து,

௰௬ கிறிஸ்துவுக்கு ஏற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷணிக்கிறவர்கள் உங்களைப் பொல்லாங்குசெய்கிறவர்கள் என்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதினாலே [13]வெட்கப்படும்படிக்கு [14]நல்மனச்சாட்சியைக் காத்துக் கொள்வீர்களாக.

௰௭ தீமைசெய்து பாடனுபவிக்கிறதிலும் நன்மைசெய்து பராபரனுடைய சித்தப்படி பாடனுபவிக்கிறது மேன்மையாயிருக்குமே.

௰௮ ¶ ஆகையால் நீதியுள்ளவராகிய கிறிஸ்துவும் நம்மைப் பராபரனிடத்திற்குச் சேர்த்துக்கொள்ளும்படிக்கு அநீதியுள்ளவர்களுடைய பாவங்களுக்காக [15]ஒருதரம் பாடுபட்டார்; [16]சரீரத்திலே [17]அவர் கொலைசெய்யப்பட்டார்; [18]ஆவியிலே அவர் பிழைப்பிக்கப்பட்டார்.

௰௯ அந்த ஆவியாகவே அவர் [19]காவலிலுள்ள ஆவிகளிடத்திற்குப்போய்ப் [20]பிரசங்கம்பண்ணினார்.

௨௰ அந்த ஆவிகள் பூர்வீகத்திலே நோவாவென்பவன் [21]பேழையை எத்தனமாக்கின நாள்களிலே [22]பராபரன் நீடியசாந்தத்தோடே காத்திருந்தபொழுது கீழ்ப்படியாமற்போனவைகள்; [23]அந்தப் பேழையிலே எட்டுப்பேராகிய சிலர் மாத்திரம் பிரவேசித்துச் சலத்தினாலே காக்கப்பட்டார்கள்.

௨௰௧ [24]அது ஞானஸ்நானத்திற்கு முன் அடையாளமாய் இருந்தது; [25]சரீர அழுக்கை நீக்குகிறதற்கு அல்ல; பராபரனுக்குமுன்பாக [26]நல்மனச்சாட்சி பண்ணுகிற உடம்படிக்கையைக் குறிக்கிற ஸ்நானத்திற்கே அப்படி இருந்தது; [27]இயேசுக்கிறிஸ்து உயிரோடே

கி. பி. ௬௰.

1 எபே ச. கஉ. கொலோ. ங. ௰உ.
2 லூக ௬ எ ௨அ. ௨௰ ௨௨. இ. கக உரோ ௰௨ ௰ச, ௰எ க கொரி ச ௰உ. க தெச இ ௰௫.
3 மத் உ௫ ௩ச
4 சங் ௩ச ௰௨.
5 யாக் ௩ உ௬. க பே. உ. உ௨. வெளி ௰ச ௫.
6 சங ௩எ உஎ ஏசா க ௰௬,௰எ க யோ ௰௧
7 உரோ ௰௨ ௰அ ௰ச ௰௯ எபி ௰உ ௰ச
8 யோவா ௯, கக யாக் ௫ ௰௬
* இரேக்கு, செய்கிறவர்கள்மேல்
9 லூக் ௰௬. எ உரோ அ உஅ
10 மத் ௫ ௰௰, ௰௨ க பே உ ௰௯ ச ௰௫ யாக் க ௰௨
11 ஏசா அ ௰௨, ௰௩ எரே க அ யோவா ௰ச உ, உ எ
† அல்லது பயத்தோடும்
12 சங ௩௰ சக அப ச ௯ கொலோ ச ௬ உ தீமோ உ உ௫
13 தீத் உ அ க பே உ ௰௫
14 எபி ௰௩ ௰௮
15 உரோ ௫ ௬ எபி க ௨௬ ௯ உ௮ க பே உ ௨௧ ச க
16 கொலோ க உக, உ௨.
17 உ கொரி ௰௩ ௪
18 உரோ க ச. அ ௰௧
19 ஏசா ச௨ எ சகு கக௧

---

20 ஆதி. ௬ ௩ — 21 எபி ௰௧ ௭ — 22 க கொரி க. ௯. ௰ — 23 [illegible] உ பே உ. ௫
24 எபே. ௫ உ௬ — 25 தீத் ௩ ௫ — 26 உரோ ௰ ௰ — 27 க பே [illegible]

ழுந்திருக்கிறதால் அந்த ஞானஸ்நானம் இப்பொழுது நம்மையும் இரட்சிக்கின்றது.

௨௨ அவர் பரமண்டலத்திற்குப் போய்ப் [1]பராபரனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; [2]தேவதூதர்கள் அல்லாமல் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்கே கீழ்ப்பட்டிருக்கின்றன.

ச. அதிகாரம்.

க. கிறிஸ்துவினுடைய மாதிரியையும் உலகத்தின் முடிவையும் நோக்கிப் பாவத்தைவிட்டு ஓய்ந்திருக்கப் புத்தியையும், யஉ. துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலையும் சொல்லியது

இப்படியிருக்கக் [3]கிறிஸ்து நமக்காகத் (தமது, சரீரத்திலே பாடுபட்டபடியால் நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக அணிந்துகொள்ளக்கடவீர்கள்.

உ [4]சரீரத்தில் பாடுபட்டவன் பாவங்களைவிட்டு ஓய்ந்திருப்பானே; (நீங்கள்) [5]சரீரத்தோடே இருக்கும் காலம்வரைக்கும் மனிதருடைய இச்சைகளின்படி அல்ல, [6]பராபரனுடைய சித்தத்தின்படியே [7]பிழைக்கிறதற்கு ஏதுவாக (அப்படிச் செய்யுங்கள்).

௩ [8]சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் [9]அஞ்ஞானிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதுமே; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்துப் பழஇரசத்தை மிகவும் குடித்துப் பெருந்தீனியைச் சாப்பிட்டு வெறிகொண்டு, அருவருக்கப்படத்தக்க விக்கிரக ஆராதனையைச் செய்து வந்தோம்.

ச (இப்பொழுது) கெட்ட நடக்கையுள்ள அந்தத் துன்மார்க்கத்திலே அவர்களோடேகூட நீங்கள் ஓடாமல் இருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு (உங்களைத்) [10]தூஷணிக்கிறார்கள்.

ரு [11]உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கஎத்தனமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கு ஒப்புவிப்பார்கள்.

சு இதற்காகவும் மரித்தோர் சரீரத்திலே மனிதராலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும் ஆவியிலே பராபரனாலே பிழைக்கும்படியாக [12]அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

எ ¶ அன்றியும் [13]எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால், [14]நீங்கள் விவேகமாயிருந்து விண்ணப்பம்பண்ணுதற்குத் தெளிவுள்ளவர்களாய் இருக்கக்கடவீர்கள்.

அ எல்லாவற்றிற்கும் மேலாக [15]ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புள்ளவர்களாய் இருங்கள்; [16]அன்பானது திரளான பாவங்களை மூடுமே.*

கூ [17]மொறுமொறுப்பில்லாமல் [18]ஒருவரை ஒருவர் சேர்த்துக்கொள்ளுங்கள்.

ய [19]அவனவன் பெற்ற வரத்தின்படியே [20]நீங்கள் பராபரனுடைய பலவித கிருபையுள்ள ஈவுகளையுடைய நல்ல [21]உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் ஊழியம்செய்யுங்கள்.

யக [22]போதிக்கிறவன் பராபரனுடைய வசனங்களின்படியே போதிக்கக்கடவன்; [23]ஊழியம் செய்கிறவன் பராபரன் கொடுக்கிற பெலத்தாலே அப்படிச் செய்யக்கடவன்; [24]சகல விதத்திலேயும் பராபரன் இயேசுகிறிஸ்து மூலமாய்த் துதிக்கப்படும்படியே செய்வீர்களாக; [25]அவருக்குத் துதியும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.—ஆமன்.

கி. பி. கூய.

1 சம கல் க உரோ ஆ கச எபே க உ௰ கொலோ க க எபி க க,
2 உரோ அ.கஅ க கொரி யரு உச எபே க உக
3 க பே க யஅ
4 உரோ க. உ, எ கலா ரு உச கொலோ க க, ௫
5 உரோ யச எ, க பே உ க,
6 யோவா க யக உரோ க. யக உ கொரி ரு யரு யாக் க ய,அ
7 கலா உ உய க பே க யச
8 எசே சச கூ சரு கூ அப யன கய,
9 எபே உ உ ச, யஎ க தெச ச ௫ தீத் க க க பே க யச
10 அப யக ச௫. ய,அ கூ க பே க யக
11 அப ய சஉ யஎ கக உரோ யச ய, யஉ க கொரி யரு ருக, ௯உ உ தீமோ ச க யாக் ரு கூ
12 க பே க யகூ
13 மத் உச யக, யச உரோ யக யஉ. பிலி ச ரு எபி ய உரு யாக் ரு அ உ பே க கூ, யக க யோ உ ய,அ
14 மத உக சக தூக் உக கச கொலோ ச உ க பே க யக ரு அ
15 கொலோ க யச எபி யக க
16 யாக். ய யஉ க கொரி யக எ யாக் ரு உய

---

*அல்லது மூடும் -17 உ கொரி கூ எ பிலி உ.யச பிலே யச -18 உரோ யஉ யக எபி யக உ -19 உரோ யஉ கூ க கொரி ச எ ய
20 க கொரி யஉ ச எபே ச யக -21 மத் உச சஉ லூக் யசு,உக தூக் யஉ சஉ க கொரி,ச க,உ தீத்.க.எ -22 எரே உக உஉ
23 உரோ யஉ க,எ,அ க கொரி ௯.ய —24 எபே ரு உய க பே உ ரு.—25 க தீமோ கூ யக, க பே ரு யக வெளி க கூ ௬.

௰௨ ¶ பிரியமானவர்களே, [1]உங்களுக்குள்ளே இருக்கிற அக்கினி உங்களைச் சோதிக்கத்தக்கதாய் இருப்பதால் புதியது உங்களுக்குச் சம்பவித்ததாக அதைக்குறித்து ஆச்சரியப்படாமல்,

௰௩ [2]கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் ஐக்கமானதால் [3]சந்தோஷப்படுங்கள்; [4]அவருடைய மகிமை வெளிப்படும்பொழுது நீங்களும் களிகூர்ந்து சந்தோஷமாய் இருக்கும்படிக்கு (அப்படிச் செய்வீர்களாக).

௰௪ [5]நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; பராபரனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்களிடத்தில் தங்கியிருக்கிறாரே; [6]அவர்களால் அவர் தூஷணிக்கப்படுகிறார்; உங்களாலே துதிக்கப்படுகிறார்.

௰௫ ஆனதால் [7]உங்களில் ஒருவனும் கொலைபாதகனாய், அல்லது திருடனாய், அல்லது பொல்லாங்குசெய்தவனாய், அல்லது அந்நியகாரியங்களில் [8]தலையிட்டுக்கொண்டவனாய்ப் பாடுபடாதிருப்பானாக.

௰௬ கிறிஸ்தவனாய்ப் பாடுபடுகிறவன் வெட்கமடையாமலிருந்து, பராபரனை [9]அதற்காகவே துதிசெய்யக்கடவன்.

௰௭ [10]நியாயத்தீர்ப்பும் தேவாலயத்திலே ஆரம்பமாகிறதற்குக் காலம் வந்திருக்கிறதே; [11]முதலாவது நம்மிடத்திலே அது ஆரம்பமானால், [12]பராபரனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுடைய முடிவு என்னமாய் இருக்கும்?

௰௮ [13]நீதிமானே இரட்சிக்கப்படுகிறது அரிதானால், துன்மார்க்கனும் பாவியும் எங்கே நிற்பான்?

௰௯ ஆகையால் பராபரனுடைய சித்தத்தின்படி பாடுபடுகிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் [14]ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருட்டிகராகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

௫. அதிகாரம்.

௧. மூப்பர்கள் மந்தையை மேய்க்கவும், ௫. இளைஞர் கீழ்ப்படியவும், ௮ யாவரும் மனத்தெளிவும் விழிப்பும் விசுவாசத்தில் உறுதியுமாயிருக்கவும், ௯. கொடிய சத்துருவாகிய பசாசை எதிர்த்துநிற்கவும் சொல்லியது.

உங்களிலுள்ள மூப்பருக்கு [15]உடன் மூப்பனுமாய், [16]கிறிஸ்துவின்பாடுகளுக்குச் சாட்சிக்காரனுமாய், (இனி) வெளிப்படும் மகிமைக்குப் [17]பங்காளியுமாய் இருக்கிற நான் புத்தி சொல்லுகிறது என்னவென்றால்,

௨ உங்களிடத்திலுள்ள* பராபரனுடைய ஆட்டுக்கூட்டத்தை [18]நீங்கள் மேய்த்துக் [19]கட்டாயமாயல்ல மனப்பூர்வமாயும், [20]அவலட்சணமான ஆதாயத்திற்காகவல்ல உச்சாகமனதோடும்,

௩ [21]சுதந்தரங்களை [22]இறுமாப்பாய் ஆளுகிறவர்களாகவல்ல† [23]ஆட்டுக்கூட்டத்திற்குப் பாதையைக் காட்டுகிறவர்களாகவும் கண்காணிப்புச் செய்வீர்களாக.

௪ (அப்படிச் செய்தால்) [24]பிரதானமேய்ப்பர் வெளிப்படும்பொழுது [25]மகிமையுள்ள [26]வாடாத முடியைப் பெறுவீர்கள்.

௫ ¶ அல்லாமலும் வாலிபரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், [27]நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்வீர்களாக; அகந்தையுள்ளவர்களுக்குப் [28]பராபரன் எதிர்த்து நிற்கிறார்; [29]தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபையை அளிக்கிறார்.

௬ ஆகையால் ஏற்றகாலத்திலே பராபரன் உங்களை உயர்த்தும்ப

கி. பி. ௬௰.

1 ௧ கொரி ௩ ௧௩. ௧ பே ௧ ௭
2 உரோ ௮ ௰௭ உ கொரி. ௧. ௭ ௪ ௰ பிலி ௩ ௰ கொலோ ௧ உ௪ உ தீமோ உ ௰௨ ௧ பே ௫ ௧.௰ வெளி ௧ ௯
3 அப ௫ ௪௧ யாக் ௧ உ
4 ௧ பே ௧ ௫, ௬,
5 மத் ௫ ௰௧ உ கொரி ௰உ ௰ யாக் ௧ ௰உ ௧ பே உ ௰௯, உ௰ ௩ ௰௪
6 ௧ பே உ ௰உ ௩ ௰௬
7 ௧ பே உ உ௰
8 ௧ தெச ௪ ௰௧ ௧ தீமோ ௫ ௰௩
9 அப ௫ ௪௧
10 எரே ௰, ௰உ எசே உ௫ உ௯ ௪௯ ௰உ எசே ௯ ௬ மல் ௩, ௧, ௫
11 லூக் உ௩ ௩௧
12 லூக் ௰. ௰உ, ௰௪
13 லூக் ௰௩ ௩௩ லூக் உ௩ ௩௧
14 சங் ௩௧ ௫ லூக் உ௩ ௪௬ உ தீமோ ௧ ௰உ
15 பிலே ௯
16 லூக் உ௪ ௪௮ அப ௧ ௮ உ உ ௫ ௩உ ௰ ௩௯
17 உரோ ௮ ௰௭ ௰௮ வெளி ௧ ௯
* அல்லது உங்களால் ஆளப்படும்
18 யோவா உ௧ ௰௫, ௰௬, ௰௭
19 ௧ கொரி ௯ ௰௭
20 ௧ தீமோ ௩ ௩, ௮ தீத் ௧ ௭
21 சங் ௩௩ ௰உ ௭௪ உ.
22 எசே ௩௪ ௪

மத் உ௰ உ௫, உ௬ ௧ கொரி ௩ ௯ உ கொரி ௪ உ௪ — † அல்லது ஆண்டுகொள்ளாமல் — 23 பிலி ௩.௰௭. ௨ தெச.௩.௯. ௧ தீமோ ௪ ௰௨ தீத் உ. ௭.— 24 எபி ௰௩ உ௰ — 25 ௧ கொரி ௯ உ௫ உ தீமோ ௪ ௮. யாக் ௧ ௰உ.— 26 ௧ பே.௧.௪.
27 உரோ ௰உ.௰. எபே ௫ உ௧ பிலி உ ௩ — 28 யாக் ௪ ௬ — 29 ஏசா ௫௭.௰௫.௬௬ உ.

டிக்கு [1]அவருடைய பலத்த கைக்குள் அடங்குவீர்களாக.

எ அவரே உங்களை விசாரித்துக்கொள்ளுகிறபடியால் [2]உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

அ ¶ [3]தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள்; விழித்திருங்கள். என்னத்தினாலெனில், [4]உங்கள் எதிராளியாகிய பசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனையும் விழுங்கவேண்டுமென்று வகைதேடித் திரிகிறான்.

கூ [5]உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகளே நிறைவேறிவருகின்றன என்று அறிந்து, விசுவாசத்தில் உறுதியாய் [6]அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

ய ¶ சகலவித கிருபைக்கும் காரணருமாய், [7]கொஞ்சக்காலம் பாடுபடுகிற நம்மைக் கிறிஸ்து இயேசுவினாலே தமது நித்திய மகிமைக்கு [8]அழைத்தவருமாய் இருக்கிற பராபரன் தாமே உங்களை [9]நிறைவுள்ளவர்களாக்கி [10]ஸ்திரப்படுத்தித் திடப்படுத்தி அஸ்திபாரப்படுத்தக்கடவர்.

யக [11]அவருக்கே துதியும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருக்கக்கடவது.—ஆமன்.

யஉ ¶ (உங்களுக்குப்) புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் (அடைந்து) [12]நிற்கிற கிருபை பராபரனுடைய மெய்யான கிருபைதான் என்று சாட்சிகொடுக்கும்படிக்கும் [13]நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, எனக்குத் தோன்றுகிறபடி உண்மையாய் இருக்கிற சகோதரனாகிய [14]சில்வானுவின் கையிலே (இதைக்) கொடுத்து அனுப்பினேன்.

யங உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும் என் குமாரனாகிய [15]மாற்கும் உங்களை வாழ்த்துகிறார்கள்.

யச [16]ஒருவரை ஒருவர் அன்பின் முத்தத்தினால் வாழ்த்துதல் செய்வீர்களாக; கிறிஸ்து இயேசுவைப்பற்றியிருக்கிற உங்கள் அனைவருக்கும் [17]சமாதானம் உண்டாவதாக.—ஆமன்.

கி. பி. கூய.

1 யாக் ச ய.
2 சங். ருரு உஉ: மத் சா உரு. லூக். யஉ யக, உஉ. பிலி ச சா. எபி. யங ரு
3 லூக் உக ஙச, ஙசா. க தெச ரு சா. க பே ச எ
4 யோபு க எ. உ உ, லூக் உஉ ஙக. வெளி யஉ யஉ
5 அப யச உஉ. க தெச ங ங. உ தீமோ ங யஉ. க பே உ உக
6 எபே சா யக, யங. யாக் ச எ
7 உ கொரி. ச. யஎ. க பே க, சா
8 க கொரி க கூ. க தீமோ சா யஉ
9 எபி யங உக. யூதா உச
10 உ தெச உ யஎ
11 க பே ச யக. வெளி க சா
12 அப யரு உஎ. க கொரி யரு க. உ பே க யஉ

---

13 எபி யங உஉ. —14 உ கொரி க யக. —15 அப யஉ யஉ, உரு. —16 உ ரோ யசா யசா. க கொரி யசா உய. உ கொரி யங, யஉ. க தெச ரு, உசா. —17 எபே சா உங

II. PETER..

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின

பொதுவான இரண்டாம் நிருபம்.

௧. அதிகாரம்.

௧ அவர்களைத் தங்கள் புண்ணியநடக்கைகளில் உறுதிப்படுத்தி, ௫ விசுவாசத்தினாலும் நற்கிரியைகளினாலும் தங்கள் அழைப்பை நிச்சயிக்கச்சொல்லி, ௰௨. தன் மரணம் சமீபமானபடியால் இக்காரியங்களைக்குறித்து அவர்களுக்கு நினைப்பூட்டி, ௰௬ அப்போஸ்தலர்கள் கண்ட மகத்துவக்காட்சியினாலும், பிதாவானவரும் தீர்க்கதரிசிகளும் உரைத்த சாட்சியினாலும், பராபரனுடைய மெய்யான சுதனாயிருக்கிற கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் நிலைகொண்டிருக்கவும் சொல்லியது

நம்முடைய பராபரனுமாய் இரட்சகருமாய்* இருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் நீதியில் எங்களைப்போல [1]அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன்† பேதுரு எழுதுகிறதாவது:

௨ பராபரனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் [2]உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் சம்பூரணமாய் உண்டாகக்கடவது.

௩ ¶ மகிமையாலும்‡ புண்ணியத்தாலும் [3]நம்மை அழைத்தவரை [4]அறிகிற அறிவினாலே சீவனுக்கும் மெய்த்தேவபத்திக்கும் ஏற்ற யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமை நமக்குக் கொடுத்தபடியினாலும்,

௪ நீங்கள் (தகாத) இச்சையால் உலகத்திலுள்ள கேட்டுக்குத் [5]தப்பித்துக்கொண்டவர்களாய், திவ்விய குணத்திற்குப் [6]பங்காளிகளாகத்தக்கதாக மிகவும் மேன்மையும் விலையேறப்பெற்றதுமான [7]வாக்குத்தத்தங்கள் அவராலே நமக்கு அளிக்கப்பட்டபடியினாலும்,

௫ நீங்கள் [8]மிகுந்த சாக்கிரதையைக்கொண்டு, உங்கள் விசுவாசத்தோடே தயிரியத்தையும், [9]தயிரியத்தோடே அறிவையும்,

௬ அறிவோடே இச்சை அடக்கத்தையும், இச்சை அடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே மெய்த்தேவபத்தியையும்,

௭ மெய்த்தேவபத்தியோடே சகோதரசிநேகத்தையும், [10]சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டிக்கொள்வீர்களாக.

௮ இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணராக§ அல்லது [11]கனியற்றவர்களாக இருக்கமாட்டீர்களே.

௯ அவைகள் இல்லாதவன் எவனோ, [12]அவன் தன் முந்தின பாவங்கள் நீக்கப்பட்டதை மறந்து, [13]குருடனாய்க் கண்மூடியிருக்கிறான்.

௰ ஆகையால் சகோதரரே, [14]நீங்கள் அழைக்கப்பட்டும் தெரிந்துகொள்ளப்பட்டும், இருக்கிறதை உறுதியாக்கும்படி அதிக சாக்கிர

கி. பி. ௬௪.

* அல்லது பராபரனுமாய நம்முடைய இரட்சகருமாய, தீத் ௨. ௰௩

[1] உரோ. ௧. ௰௨. ௨ கொரி. ௪. ௰௩. எபே. ௪. ௫. தீத். ௧. ௪.

† அல்லது சீமெயோன்; அப். ௰௫. ௰௪

[2] தானி. ௪. ௧. ௬. ௨௫. ௧ பே. ௧. ௨. யூதா ௨.

‡ அல்லது மகிமைக்கும்

[3] ௧ தெச. ௨. ௰௨. ௪. ௭. ௨ தெச. ௨. ௰௪. ௨ தீமோ. ௧. ௯. ௧ பே. ௨. ௯. ௫. ௰.

[4] யோவா. ௰௭. ௩.

[5] ௨ பே. ௨. ௰௮, ௨௰.

[6] ௨ கொரி. ௩. ௰௮. எபே. ௪. ௨௪. எபி. ௰௨. ௰. ௧ யோ. ௩. ௨.

[7] ௨ கொரி. ௭. ௧.

[8] ௨ பே. ௩. ௰௮.

[9] ௧ பே. ௩. ௭.

[10] கலா. ௬. ௰. ௧ தெச. ௩. ௰௨; ௫. ௰௫. ௧ யோ. ௪. ௨௧.

§ அல்லது வெறுமையாக

[11] யோவா. ௰௫. ௨. தீத. ௩. ௰௪.

[12] எபே. ௫. ௨௬. எபி. ௧. ௰௪. ௧ யோ. ௧. ௭. —[13] ௧ யோ. ௨. ௯, ௰௧. —[14] ௧ யோ. ௩. ௰௯.

தையாய் இருப்பீர்களாக; அப்படிச்செய்தால் நீங்கள் [1]ஒருக்காலும் வழுவுவதில்லை.

௰௧ மேலும் இப்படியே நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் நித்திய இராச்சியத்திற்குள் பிரவேசித்தல் பரிபூரணமாய் உங்களுக்கு அளிக்கப்படும்.

௰௨ ¶ ஆனபடியால் நீங்கள் இவைகளை அறிந்து, [2]இப்பொழுது உங்களுக்கு உண்டாயிருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், இவைகளை [3]எப்பொழுதும் நினைக்கும்படி செய்ய நான் அசதியாய் இருக்கமாட்டேன்.

௰௩ அந்தப்படி [4]நம்முடையகர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும் எனக்குத் தெரிவித்தபடி [5]நான் என் கூடாரத்தைச் சீக்கிரமாய் விட்டுப்போகவேண்டும் என்று அறிந்து,

௰௪ இந்தக் கூடாரத்தில் இருக்குமளவும் ஞாபகப்படுத்துதலினாலே [6]உங்களை எழுப்புகிறது [7]நியாயமென்று எண்ணுகிறேன்.

௰௫ ஆகையால் நான் போனதற்குப் பின்பும், நீங்கள் இவைகளை எப்பொழுதும் நினைத்துக்கொள்ள உங்களுக்கு ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ண விரும்புகிறேன்.

௰௬ ¶ என்னவெனில், நம்முடையகர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும், உங்களுக்கு அறிவித்தபொழுது [8]நாங்கள் தந்திரமாய் யோசிக்கப்பட்ட கட்டுக்கதைகளைப் பின்பற்றவில்லை.

௰௭ [9]இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன்; இவரிடத்தில் பிரியமாய் இருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் மகா மேன்மையான மகிமைத்தலத்திலிருந்து வந்ததினாலே பிதாவாகிய பராபரனால் கனத்தையும் மகிமையையும் அவர் பெற்றபொழுது, அவருடைய மகிமையை [10]நாங்கள் கண்ணாரக்கண்டோம்.

௰௮ [11]அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்தில் இருந்தபொழுது வானத்திலிருந்து வந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.

௰௯ ¶ தீர்க்கதரிசன வசனமும் நமக்கு அதிக உறுதியாய் இருக்கின்றது; உங்கள் இருதயங்களில் [12]வெள்ளி உதயமாகிய பொழுது விடியுமளவும் [13]நீங்கள் இருளுள்ள தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்திற்கு எச்சரிக்கையாய் இருந்தால் நன்மைசெய்வீர்கள்.

௨௰ அதைக்குறித்து நீங்கள் பிரதானமாய் அறியவேண்டியது என்னவெனில், [14]வேத எழுத்திலுள்ள எந்தத்தீர்க்கதரிசனமும் சொந்தவிவரிப்பினாலே தோன்றமாட்டாது.

௨௰௧ [15]தீர்க்கதரிசனமானது பூர்வத்திலே* மனிதருடைய சித்தத்தினாலே வரவில்லையே, [16]பராபரனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்களே.

௨. அதிகாரம்.

௧ கள்ளப்போதகர்களுடைய அக்கிரமத்தையும் அதினால் அவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களுக்கும் உண்டாகும் தண்டனையையுங்குறித்து முன் அறிவித்து, அப்படிப்பட்டவர்களில் நின்று, ௭ சோதோமிலிருந்து லோத்து விடுதலையானதுபோல நல்லவர்கள் விடுதலையாவார்களென்றும், ௰ மோசம்போக்குகிற அந்த அக்கிரமக்காரராகிய தூஷணர்களை நன்றாய் அறிந்து அவர்களை விட்டுவிலக அவர்கள் இப்படிப்பட்டவர்களென்றும் சொல்லியது.

[17]கள்ளத்தீர்க்கதரிசிகளும் சனங்களுக்குள்ளே இருந்தார்கள்; அதுபோல [18]உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் தோன்றுவார்கள், அவர்கள் கேட்டுக்கு ஏதுவான பொய் உபதேசங்களைத் தந்திரமாய் நுழைத்துத் [19]தங்களைக் கொண்ட ஆண்டவரை [20]மறுதலித்து, இப்படித் [21]தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்வார்கள்.

கி. பி. ௬௬.

1 ௨ பே ௧. ௰
2 ௧ பே ௫ ௰௨
௨ பே ௩ ௰
3 ௨ ரோ ௰௫
௰௪, ௰௫ பிலி
௧ ௭ ௨ பே ௧
௩ ௧ யோ ௨
௨௪ யூதா ௫
4 யோவா. ௨௧.
௰௮, ௰௯
5 ௫ மோ ௪ ௨௧,
௨௨ ௩௧ ௰௪
௨ தீமோ ௪ ௬
6 ௨ பே ௩ ௧
7 ௨ கொரி ௫
௧ ௪
8 ௧ கொரி ௧
௰ ௨ ௧, ௪
௨ கொரி ௨.
௰ ௪ ௨
9 மத் ௩ ௰
௰௭ ௫ மாற் ௧
௰௧ ௯ ஏ லூக்
௩ ௨௨ ௯, ௩௫
10 மத் ௰௭, ௨
மாற் ௯ ௨
யோவா ௧ ௰௪
௧ யோ ௧ ௧ ௪
௰௪
11 ௨ மோ ௩ ௫
யோசு ௫ ௰௫
மத் ௰ ௧
12 வெளி ௨
௨௮ ௨௨ ௰௬
௨ கொரி ௪ ௪,
௬
13 சங் ௱௰௯ ௱௫
யோவா ௫ ௩௫
14 ௨ ரோ ௰௨ ௬
15 ௨ தீமோ ௩
௰௬ ௧ பே ௧ ௰௧
*அல்லது யாதொரு காலத்திலே
16 ௨ சாமு ௨௩ ௨
லூக் ௧ ௭௰ அப
௧ ௰௬ ௩ ௰௮
17 ௫ மோ ௰௩ ௧
18 மத் ௨௪ ௰௧
அப ௨௰ ௩௰
௧ கொரி ௰௧
௰௯ ௧ தீமோ
௪ ௧ ௨ தீமோ
௩ ௧ ௫ ௧ யோ
௪ ௧ யூதா ௰௮
19 ௧ கொரி ௬
௨௰ கலா ௩
௰௩ எபே ௧ ௭
எபி ௯ ௰௨
௧ பே ௧ ௰௮
வெளி ௫ ௯
20 யூதா ௪.
21 பிலி. ௩. ௰௯.

கி. பி. ௬௬.

௨ அவர்களினிமித்தம் சத்தியமார்க்கம் தூஷணிக்கப்படும்; அவர்களுடைய கெட்ட* மார்க்கங்களை அநேகர் பின்பற்றுவார்கள்.

௩ [1]பொருளாசை உள்ளவர்களாய் அவர்கள் தந்திரமான வார்த்தைகளால் [2]உங்களை வாங்கிக்கொள்ளத் தேடுவார்கள்; அவர்களுக்குப் பூர்வத்தில் (தீர்மானித்திருக்கிற) [3]ஆக்கினை தாமதமாயிராது; அவர்களுக்குத்தக்க அழிவு உறங்காது.

௪ ¶ [4]பாவம்செய்த [5]தூதர்களைப் பராபரன் தப்பவிடாமல் அந்தகாரச சங்கிலிகளினாலே கட்டிப் [6]பாதாளத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புப்பரியந்தம் காக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்திருக்க,

௫ பழைய உலகத்தையும் தப்பவிடாமல், [7]நீதியைப் பிரசங்கித்தவனாகிய [8]நோவாமுதலான எட்டுபேரைமாத்திரம் அவர் காப்பாற்றிப் பத்தியற்றவர்களுள்ள உலகத்தின்மேல் [9]சலப்பிரளயத்தை வரப்பண்ணியிருக்க,

௬ [10]சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, இப்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே [11]அவபத்தியாய் நடப்பவர்களுக்கு அடையாளமாக வைத்திருக்க, (அவர்களை எப்படித் தப்பவிடுவார்?)

௭ அக்கிரமக்காரருடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்ட [12]நீதிமானாகிய லோத் என்பவனைமாத்திரம் இரட்சித்துவிட்டார்.

௮ [13]அந்த நீதிமான் அவர்களுக்குள்ளே குடியிருக்கையில், நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு, நீதியுள்ள தன்னுடைய இருதயத்திலே அவைகளாலே வேதனைப்பட்டான்.

௯ கர்த்தரே [14]தேவபத்தியுள்ளவர்களைத் துன்பத்தினின்று இழுத்து இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை நியாயத்தீர்ப்புநாளிலே ஆக்கினைக்கு உள்ளாகும்படி தாக்கவும் அறிந்திருக்கிறார்.

௰ [15]பிரதானமாக அசுத்தத்தின் இச்சையோடே மாம்சத்திற்கு ஏற்றபடி நடந்து, துரைத்தனத்தை† அசட்டைபண்ணுகிறவர்களையே அப்படிச் செய்வார்; [16]அவர்கள் துணிவுக்காரர், அகங்காரிகள், மகிமையுடையவர்களைத் தூஷணிக்க நடுங்காதவர்கள்.

௰௧ ¶ அதிக [17]பலத்தையும் வல்லமையையும் உடைய தேவதூதரும் கர்த்தருக்குமுன்பாக அவர்களுக்கு‡ விரோதமாய்த் தூஷணிப்பான தீர்ப்பைச்சொல்லமாட்டார்கள்.

௰௨ இவர்கள்மாத்திரம் பிடியுண்டு அழிக்கப்படுவதற்கு உண்டான [18]புத்தியற்ற மிருகசீவன்களைப்போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷணித்துத் தங்கள் கேட்டினாலே முழுவதும் அழிக்கப்பட்டு,

௰௩ [19]அநியாயத்திற்கு ஏற்ற பலனை அடைவார்கள்; [20]அவர்கள் பகற்காலத்திலே சம்பிரமமாயிருத்தலை இன்பமென்று எண்ணுகிறவர்கள்; [21]மாசுகளும் அவலட்சணங்களுமானவர்கள்; [22]விருந்தாக உங்களோடேகூடச் சாப்பிடுகையில் தங்கள் வஞ்சனைகளினாலே சம்பிரமமாய் வாழ்கிறவர்கள்.

௰௪ விபசாரத்தால்§ நிறைந்தவைகளாயும், பாவத்தைவிட்டு ஓயாதவைகளாயும் இருக்கிற கண்களுள்ளவர்கள், ஸ்திரமில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறவர்கள்; பொருளாசைகளில் [23]முயற்சியான இருதயத்தை உடையவர்கள். சபிக்கப்பட்டபிள்ளைகள்.

௰௫ செம்மையான மார்க்கத்தை விட்டுத் தப்பி நடந்து, பேர்சோருடைய குமாரனாகிய [24]பாலாமின் வழியைப் பின்பற்றுகிறவர்கள்; அவன் அநியாயத்தின் கூலியை விரும்பினான்.

---

* சில பிரதிகளில் காமவிகாரமுள்ள

[1] உரோ. ௰௬ ௰௮ ௨ கொரி ௰௨ ௰௭, ௰௮ ௧ தீமோ ௬ ௫ தீத் ௧. ௰௧.
[2] ௨ கொரி. ௨ ௰௭ ௨ பே ௩ ௰௬.
[3] ௫ மோ ௩௨ ௩௫ யூதா ௪ ௰௫
[4] யோவா ௮ ௪௪ ௧ யோ ௩ ௮
[5] யோபு ௪ ௰௮ யூதா ௬
[6] லூக் ௮ ௩௧ வெளி ௨௰, ௨௩
[7] ௧ பே ௩ ௰௯
[8] ௧ மோ ௭ ௧, ௭, ௨௩ எபி ௰௧ ௭ ௧ பே ௩ ௨௰
[9] ௨ பே ௩ ௬
[10] ௧ மோ ௰௯ ௨௪ ௨௫ யூதா ௭
[11] ௪ மோ ௨௬ ௰
[12] ௧ மோ ௰௯ ௰௬
[13] சங். ௱௰௯ ௱௩௬ எசே ௯ ௪
[14] சங் ௩௪ ௰௭ ௧ கொரி ௰ ௰௩
[15] யூதா ௪, ௭ ௮. ௰, ௰௬
† அல்லது ஆளுகையை
[16] யூதா ௮.
[17] யூதா. ௯
‡ சில பிரதிகளில் தங்களுக்கு
[18] எரே ௰௨ ௩ யூதா ௰
[19] பிலி ௩. ௰௯
[20] உரோ ௰௩ ௰௩.
[21] யூதா ௰௨.
[22] ௧ கொரி. ௰௧. ௨௰, ௨௧
§ விரோத்து, விபசாரியால்
[23] யூதா ௰௧
[24] ௪ மோ. ௨௨ ௫, ௭, ௨௧, ௨௩, ௨௮. யூதா ௰௧

௰௬ பின்பு தன்னுடைய அக்கிரமத்திற்காகக் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாத மிருகமே மனிதர் பாஷையைப் பேசி அந்தத் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடைசெய்தது.

௰௭ (மேலும்) [1]அவர்களே தண்ணீரில்லாத கிணறுகள், அவர்களே சுழல்காற்றினால் அடிக்கப்படுகிற மேகங்கள்; என்றென்றைக்கும் உள்ள காரிருளே அவர்களுக்கு வைத்திருக்கின்றது.

௰௮ ¶ [2]வஞ்சகமாய் நடக்கிறவர்களை விட்டுத் தப்பினவர்களுக்கு* [3]அவர்கள் மிகவும் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, சரீர இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்.

௰௯ [4]தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் அவர்களுக்குச் [5]சுயாதீனத்தைவாக்குத்தத்தம்பண்ணுகிறார்கள்; எவனும் எதினாலே செயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அடிமையாக்கப்பட்டிருக்கிறானே.

௨௰ ஆகையால், [6]கர்த்தருமாய், இரட்சகருமாய் இருக்கிற இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே [7]உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் [8]மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு செயிக்கப்பட்டால், அவர்களுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிக கேடுள்ளதாய் இருக்கும்.

௨௧ அப்படிப்பட்டவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனைகளை விட்டுவிலகுகிறதிலும் அதை அறிந்துகொள்ளாமல் இருக்கிறதே [9]அவர்களுக்கு நன்மையாய் இருக்கும்.

௨௨ அப்பொழுது [10]நாய் தான் கக்கினதை மறுபடியும் தின்னுகிறதென்றும், கழுவப்பட்ட பன்றி மறுபடியும் சேற்றிலே புரளுகிறதென்றும் சொல்லுகிற மெய்யான பழமொழியின்படி அவர்களுக்குச் சம்பவித்தது.

இ. பி. ௬௬.

1 யூதா. ௰௨. ௰௩
2 அப். ௨. ௪௰
௨ பே ௧. ௪.
௨௰ வச
* சிலபிரதிகளில் கொஞ்ச நேரம் தப்பினவர்கள்.
3 யூதா ௰௬.
4 யோவா. ௮ ௩௪. ௨ரோ ௬. ௰௬
5 கலா ௫ ௰௩. ௧ பே. ௨. ௰௬
6 ௨ பே ௧ ௨
7 ௨ பே ௧ ௪ ௰௮ வச.
8 மத் ௰௨ ௪௫ லூக் ௰௧ ௨௬ எபி ௬ ௪. ௰ ௨௬ ௨௭
9 லூக் ௰௨ ௪௭, ௪௮. யோவா. ௯ ௪௧. ௰௫ ௨௨.
10 வாக் ௨௬. ௰௧
11 யூதா ௰௭.
12 ௨ பே. ௧ ௰௩
13 ௧ தீமோ ௪ ௧. ௨ தீமோ. ௩ ௧ யூதா ௰௮
14 ௨ பே ௨ ௰
15 ஏசா ௫. ௰௯. எரே ௰௭ ௰௫. எசே ௰௨ ௨௨, ௨௭, மத் ௨௪. ௪௮ லூக் ௰௨. ௪௫
16 ௧ மோ ௧. ௬, ௯, சங். ௩௩ ௬. எபி. ௰௧. ௩.
17 சங் ௨௪. ௨. ௧௩௬. ௬. கொலோ ௧ ௰௭.
† கிரேக்கு, அடங்கியிருந்த.
18 ௧ மோ ௭ ௰௧, ௨௧, ௨௨, ௨௩ ௨ பே ௨. ௫
19 ௭. வச

௩. அதிகாரம்.

௧ கிறிஸ்து வருகையைக்குறித்துப் பரிகாசம்பண்ணுகிறவர்களுக்கு விரோதமாகக் கிறிஸ்து நியாயதீர்ப்புக்கு வருவாரென்று நிச்சயித்து, ௮ பக்தியுள்ளவர்கள் சீக்கிரமாய்க் குணப்படப் பராபரனுடைய பொறுமையை முன்னிட்டு எச்சரித்து, ௰ உலகம் அழிக்கப்படும் விதத்தைக்குறித்து அறிவித்து, ௰௧ அதற்குத் தகுதியான பரிசுத்தவான்களாய் இருக்கவேண்டுமென்றும் புத்திசொல்லி, ௰௫. பவுல் தன் நிருபங்களில் எழுதினபடியே பராபரனுடைய பொறுமை அவர்கள் இரட்சிப்புக்கு ஏற்றதென்று சொல்லியது

பிரியமானவர்களே, இவ்விரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன்; பரிசுத்த தீர்க்கதரிசிகளால்,

௨ முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய [11]எங்களுடைய கற்பனையையும் நீங்கள் நினைக்கும்படியாக, இவைகளால் உங்கள் உண்மையான மனதிற்கு [12]ஞாபகப்படுத்தி எழுப்புகிறேன்.

௩ [13]முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில் கடைசிநாள்களில் பரியாசக்காரர் தோன்றுவார்கள்; [14]அவர்கள் தங்கள் சுய இச்சைகளின்படி நடந்துகொண்டு,

௪ [15]அவர் வருவாரென்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே இருக்கிறது; பிதாக்கள் நித்திரை அடைந்தபின்பு சகலமும் சிருட்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாய் இருக்கிறதே என்று சொல்லுவார்கள்.

௫ ¶ பூர்வகாலத்திலே [16]பராபரனுடைய வார்த்தையினாலே வானங்களும், [17]சலத்தினாலேயும் சலத்திற்குள்ளேயும் நிலைகொண்ட† பூமியும் இருந்தும், அப்பொழுது இருந்த உலகம் [18]அதினாலே வெள்ளங்கொண்டு அழிந்துபோயிற்றே.

௭ அதுபோல [19]இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும்

அந்த வார்த்தையாலே [1]அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுத் தேவபக்தியில்லாத மனிதர்களுக்கு நியாயத்தீர்ப்பும், கேடும் உண்டாகும் நாள்வரைக்கும் காக்கப்படுகின்றன.

௭ இதை அந்தப் பரியாசக்காரர் அறிந்தும் நினையாமல் இருக்கிறார்கள்.

௮ ¶ பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரிடத்தில் [2]ஒருநாள் ஆயிரம்வருஷங்களைப்போலவும், ஆயிரம்வருஷங்கள் ஒருநாளைப்போலவும் இருக்கின்றதென்று இருக்கிற இந்த ஒரேகாரியத்தை மறவாதிருப்பீர்களாக.

௯ தாமதித்திருக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபிரகாரமாய்க் [3]கர்த்தர் (தமது) வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாய் இராமல், [4]ஒருவரும்கெட்டுப்போகாதபடிக்கு [5]எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, [6]நமதுமேல் நீடியசாந்தமுள்ளவராயிருக்கிறார்.

௰ [7]கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; [8]அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம்; பூதங்கள் எரிந்து கரைந்துபோம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெந்துபோம்.

௰௧ ¶ இப்படி இவையெல்லாம் கரைந்துபோகிறதாயிருக்க, [9]நீங்கள் பரிசுத்த நடக்கையிலேயும் தேவபக்தியிலேயும் எப்படிப்பட்டவர்களாய் இருக்கவேண்டும்.

௰௨ வானங்கள் [10]வெந்து கரைந்து, [11]பூதங்கள் எரிந்து உருகிப்போகும்; [12]பராபரனுடைய நாள் வருதற்கு நீங்கள் மிகுந்த ஆசையோடே காத்திருக்கிறீர்களே.*

௰௩ அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே புதிய வானங்களும், [13]புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம்; அவைகளிலே நீதி வாசமாயிருக்கும்.

௰௪ ¶ ஆகையால் பிரியமானவர்களே, அவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் அவரால் மாசும் [14]குற்றமும் இல்லாதவர்களாய்ச் சமாதானத்தோடே காணப்படும்படிக்குச் சாக்கிரதையாய் இருந்து,

௰௫ நம்முடைய [15]கர்த்தாவின் நீடியசாந்தம் இரட்சிப்புக்கு ஏதுவாயிருக்கிறதென்று எண்ணிக்கொள்வீர்களாக; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்குக் கொடுக்கப்பட்ட ஞானத்தினாலே அப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்.

௰௬ எல்லா நிருபங்களிலேயும் [16]இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் எழுதினவைகளில் சில (வாக்கியங்கள்) அறிகிறதற்கு அரிதாயிருக்கின்றன; படியாதவர்களும் ஸ்திரமில்லாதவர்களும் அப்படிப்பட்டவைகளையும் மற்ற வேதவாக்கியங்களையும் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாகப் புரட்டுகிறார்கள்.

௰௭ ¶ ஆதலால் பிரியமானவர்களே, [17]நீங்கள் இவைகளை முன் அறிந்தபடியால் (மற்றவர்களோடே) கூட அந்த அக்கிரமக்காரருடைய வஞ்சகத்தினாலே இழுத்துக்கொள்ளப்படாமலும் ஸ்திரத்தைவிட்டு விடாமலும் இருக்கும்படிக்கு [18]எச்சரிக்கையாயிருந்து,

௰௮ நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையையும், அவரை அறிகிற அறிவையும் [19]அதிகம் அதிகமாய் அடைந்துகொள்வீர்களாக. [20]அவருக்கு இப்பொழுதும் (இனி) என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.—ஆமென்.

கி. பி. ௬௬.

1 மத் உ௫ [illegible] உ தெச க அ
2 சங் [illegible]
3 ஆப உ [illegible]
4 எசே [illegible]
5 உ தீமோ [illegible]
6 ஏசா [illegible]
7 மத் உ௪ [illegible]
8 சங் [illegible]
9 க பே [illegible]
10 சங். [illegible]
11 மீகா [illegible]
12 க கொரி [illegible]
13 ஏசா [illegible]
14 க கொரி [illegible]
15 உ ரோ [illegible]
16 உ ரோ [illegible]
17 மாற் [illegible]
18 எபே [illegible]
19 எபே [illegible]
20 உ தீமோ ௪ ௰அ வெளி

* அல்லது சீக்கிரமா பண்ணுகிறீர்களே

I. JOHN

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின

முதலாம் நிருபம்

௧. அதிகாரம்.

௧ நம்மைப் பராபரனோடே ஐக்கியப்படுத்துகிறதால், நித்திய சீவனுக்கு வழியாயிருக்கிற கிறிஸ்துவின் தன்மையைக்குறித்து விளம்பி, ௫ அந்த ஐக்கியத்தையும் விசுவாச அறிக்கையையுங்குறித்துச் சாட்சியிடவும், கிறிஸ்துவின் மரணத்தினாலே நமக்குப் பாவமன்னிப்பு உண்டானதென்பதற்குச் சாட்சி கொடுக்கவும், நாம் பரிசுத்தமாய் நடக்கவேண்டுமென்று சொல்லியது.

[1] **ஆ**தியில் இருந்ததுமாய், நாங்கள் கேட்டதுமாய், எங்கள் கண்களினாலே கண்டதுமாய், [2]நாங்கள் நோக்கிப்பார்த்ததுமாய், [3]எங்கள் கைகளாலே தொட்டதுமாய் இருக்கிற சீவனையுடைய வார்த்தையைக்குறித்து (உங்களுக்கு அறிவிக்கிறோம்).

௨ [4]அந்தச் சீவன் [5]வெளிப்பட்டது; [6]பிதாவினிடத்தில் இருந்ததுமாய், நமக்கு வெளிப்பட்டதுமாய் இருக்கிற அந்த நித்திய சீவனையே நாங்கள் கண்டு, [7]அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து [8]அதையே உங்களுக்கு அறிவிக்கிறோம்.

௩ நீங்களும் எங்களோடேகூட ஐக்கியமுள்ளவர்களாகும்படிக்கு, நாங்கள் [9]கண்டும் கேட்டும் இருந்ததை உங்களுக்கு அறிவிக்கிறோம்; [10]நாங்களே பிதாவுடனேயும் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவுடனேயும் ஐக்கியமுள்ளவர்களாய் இருக்கிறோம்.

௪ [11]உங்களுக்குச் சந்தோஷம் நிறைந்ததாய் இருக்கும்படிக்கு, இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்.

௫ ¶ மேலும் [12]அவரிடத்தில் நாங்கள் கேட்டதுமாய் உங்களுக்கு அறிவிக்கிறதுமாயிருக்கிற விசேஷம் என்னவெனில், பராபரன் எவ்வளவாகிலும் இருளில்லாமல் [13]ஒளியாயிருக்கிறார்.

௬ நாம் இருளிலே நடந்து அவரோடே ஐக்கியப்பட்டவர்கள் என்று [14]சொல்லிக்கொண்டால், நாம் சத்தியத்தை நடப்பியாமல் பொய் பேசுகிறவர்களாயிருப்போம்.

௭ அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அல்லாமலும், [15]அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

௮ ¶ [16]நமக்குப் பாவமில்லை என்றோமானால் நம்மை நாமே

கி. பி. ௯௰

1 யோவா. ௧. ௧. ௧ யோ. ௨. ௰௩
2 யோவா. ௧. ௰௪ ௨ பே. ௧. ௰௬ ௧ யோ. ௪. ௰௪
3 லூக். ௨௪. ௩௯ யோவா. ௨௰. ௨௭
4 யோவா. ௧. ௪ ௰௧. ௨௫. ௰௪. ௬
5 ௨ ரோ. ௰௬. ௨௬. ௧ தீமோ. ௩. ௰௬. ௧ யோ. ௩. ௫
6 யோவா. ௧. ௧, ௨
7 யோவா. ௨௧. ௨௪ அப. ௨. ௩௨
8 ௧ யோ. ௫. ௨௰
9 அப. ௪. ௨௰
10 யோவா. ௰௭. ௨௧ ௧ கொரி. ௧. ௯. ௧ யோ. ௨. ௨௪
11 யோவா. ௰௫. ௰௧. ௰௬. ௨௪. ௨ யோ. ௰௨
12 ௧ யோ. ௩. ௰௧
13 யோவா. ௧. ௯. அ. ௰௨. ௯. ௰௨. ௩௫, ௩௬
14 ௨ கொரி. ௬. ௰௪ ௧ யோ. ௨. ௪

15 ௧ கொரி. ௬. ௰௧ எபி. ௯. ௰௪ ௧ பே. ௧. ௰௯ ௧ யோ. ௨. ௨ வெளி. ௧. ௫ —16 ௧ இரா. ௮. ௪௬
௨ நாளா. ௬. ௩௬ யோபு ௯. ௨. ௰௫. ௰௪: ௨௫. ௪. வாக். ௨௰. ௯ பிரச. ௭. ௨௰ யாக். ௩. ௨

வஞ்சிக்கிறவர்களாவோம்; [1]சத்தியம் நமக்குள்ளே இராது.

கூ [2]நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயமும் [3]நம்மைவிட்டு நீங்க நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.

ய நாம் பாவம்செய்யவில்லை என்றோமானால், நாம் அவரைப் பொய்யனாக்குகிறதாக இருக்கும்; அவருடைய வார்த்தையும் நமக்குள்ளே இராது.

உ. அதிகாரம்.

க அவர்களுடைய பலவீனத்தினாலே உண்டாகும் பாவங்களைக்குறித்து ஆறுதல்சொல்லி, ங பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, கூ சகோதரனைச் சிநேகித்து, யரு உலகத்தை நேசியாமல் இருப்பதே பராபரனை அறிகிற அறிவென்று காட்டி, யஅ எதிராளிகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், உஅ விசுவாச உறுதியும் பரிசுத்த நடக்கையுமுள்ள உத்தமர்கள் எதிரிகளின் மோசங்களுக்கு விலகியிருப்பார்கள் என்றும் சொல்லியது.

என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவம்செய்தாலும் நீதிஉள்ளவராயிருக்கிற இயேசுக்கிறிஸ்து என்னும் [4]காரியகர்த்தர் நமக்காகப் பிதாவினிடத்தில் இருக்கிறார்.

உ [5]அவர் நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற பலியானவராயிருக்கிறார்; நம்முடைய பாவங்களுக்காகமாத்திரமல்ல, [6]சர்வ லோகத்தினுடைய பாவங்களுக்காகவும் (அப்படியே இருக்கிறார்).

ங ¶ அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்துகொண்டிருக்கிறோம் என்று அதினாலே அறிவோம்.

ச அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் [7]அவரை அறிந்துகொண்டேன் என்று சொல்லுகிறவன் [8]பொய்யனாய் இருக்கிறான்; சத்தியம் அவனுக்குள்ளே இல்லை.

ரு [9]அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்திலே [10]பராபரனுடைய அன்பு மெய்யாக நிறைவேறியிருக்கின்றது; [11]நாம் அவருக்குள் இருக்கிறதை அதினாலே அறிந்திருக்கிறோம்.

சா [12]அவரிடத்தில் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே [13]தானும் நடக்கவேண்டும்.

எ ¶ பிரியமானவர்களே, [14]நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, [15]ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழமையான கற்பனையையே எழுதுகிறேன்; அந்தப் பழமையான கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டுக்கொண்ட வசனமே.

அ அன்றியும் [16]நான் உங்களுக்குப் புதியகற்பனையையும் எழுதுகிறேன்; [17]இருள் நீங்கிப்போக [18]மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறபடியால், இது அவரைக்குறித்தும் உங்களைக்குறித்தும் மெய்யாயிருக்கின்றது.

கூ தன் சகோதரனைப் பகைத்து, [19]அந்த ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லுகிறவன் இதுவரைக்குமே இருளில் இருக்கிறான்.

ய [20]தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; [21]இடறல்* அவனிடத்திலே இல்லை.

யக தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலேயிருந்து [22]இருளிலே நடந்து இருளானது தன் கண்களைக் குருடாக்கினபடியால், தான் நடக்கிற இடம் இன்னதென்று அறியாமல் இருக்கிறான்.

யஉ ¶ பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் [23]பாவங்கள் மன்னிக்கப்படுகிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்.

யங பிதாக்களே, [24]ஆதிமுதலாய் இருக்கிறவரை நீங்கள் அறிந்

கி. பி. கூய.

1 க யோ உ ச
2 சங கஉ ரு
வாக் உஅ யக
3 சங ருக உ
எ வச
4 உரோ அ கச
க தீமோ உ ரு
எபி எ உரு
கூ உச
5 உரோ க உ ரு
உ கொரி ரு
யஅ க யோ க
எ ச ம
6 யோவா க
உகூ ச சஉ
யக ருக, ருஉ
க யோ ச யச.
7 க யோ க, கூ
ச உய
8 க யோ க அ
9 யோவா யச
உக, உக
10 க யோ ச யஉ
11 க யோ ச யக
12 யோவா யரு
ச, ரு
13 மத் யக உகூ
யோவா யக
யரு க பே உ
உக
14 உ யோ ரு
15 க யோ க யக
உ யோ ரு
16 யோவா யக
கச யரு யஉ
17 உரோ யக
யஉ எபே ரு
அ க தெச. ரு
ரு, அ
18 யோவா க கூ
அ யஉ யஉ
கரு
19 க கொரி யக
உ உ பே க
கூ க யோ க
யசரு
20 க யோ க யச
21 உ பே க ய
* அல்லதுஇடறல்பண்ணுதல்
22 யோவா யஉ
கரு
23 லூக உச சஎ
அப ச யஉ
ய.சஅ யக கஅ
க யோ க எ
24 க யோ க க

திருக்கிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்; வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் செயித்ததால் உங்களுக்கு எழுதுகிறேன்; குழந்தைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்.

௰௪ பிதாக்களே, ஆதிமுதலாய் இருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதால், உங்களுக்கு எழுதினேன்; வாலிபரே, தேவவசனம் உங்களிடத்தில் தரித்திருக்க, நீங்கள் [1]பெலனுள்ளவர்களாய்ப் பொல்லாங்கனைச் செயித்ததால் உங்களுக்கு எழுதினேன்.

௰௫ ¶ [2]உலகத்திலேயும், உலகத்தில் உள்ளவைகளிலேயும் அன்பு கூராதிருப்பீர்களாக; [3]உலகத்தில் அன்புகூருகிறவன் பிதாவின்மேல் அன்பில்லாதவனாய் இருக்கிறான்.

௰௬ எப்படியெனில், மாம்சத்தின் இச்சையும் [4]கண்களுடைய இச்சையும் சீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள இவையெல்லாம் பிதாவினால் உண்டாயிராமல், உலகத்தினால் உண்டாயிருக்கின்றன.

௰௭ [5]உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும், பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைநிற்பான்.

௰௮ ¶ [6]குழந்தைகளே, (இது) [7]கடைசி நேரமாய் இருக்கின்றது; [8]கிறிஸ்துவின் எதிராளி வருகிறான் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறபடி, [9]இப்பொழுதே கிறிஸ்துவின் எதிராளிகள் அநேகர் உண்டாயிருக்கிறார்கள்; [10]அதினாலே இது கடைசிநேரமாயிருக்கிறது என்று அறிகிறோம்.

௰௯ அவர்கள் [11]நம்மிடத்திலிருந்து புறப்பட்டார்கள்; ஆகிலும் அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களல்ல, [12]நம்மைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்களானால் நம்முடனே தரித்திருப்பார்களே; [13]எல்லாரும் நம்மைச் சேர்ந்தவர்களல்ல என்று வெளியாகும்படிக்கே (புறப்பட்டார்கள்).

௨௰ [14]நீங்கள் பரிசுத்தராலே [15]அபிஷேகத்தைப் பெற்று, [16]சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

௨௧ சத்தியத்தை நீங்கள் அறியாததாகவல்ல, நீங்கள் அதையும், சத்தியத்தால் ஒரு பொய்யும் உண்டாயிராதென்பதையும் அறிந்திருக்கிறபடியால், உங்களுக்கு எழுதினேன்.

௨௨ இயேசு என்பவர் கிறிஸ்துவல்ல என்று மறுதலிக்கிறவனேயன்றி [17]வேறு யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே கிறிஸ்துவுக்கு எதிராளியானவன்.

௨௩ [18]குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை உடையவன் அல்ல, [19]குமாரனை அறிக்கைபண்ணிக்கொள்ளுகிறவன் பிதாவையும் உடையவனாய் இருக்கிறான்

௨௪ ¶ ஆகையால், [20]ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், [21]நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

௨௫ அவர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணின பொருள் [22]நித்திய சீவனே; [23]உங்களை வஞ்சிக்கத் தேடுகிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதினேன்

௨௬ அப்படியிருந்தும், நீங்கள் அவராலே பெற்ற [24]அபிஷேகம் உங்களில் நிலைகொண்டு இருக்கிறதால் [25]ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை.

௨௭ அந்த [26]அபிஷேகம் சகல காரியங்களையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறதே பொய்யில்லாமல் சத்தியமாயிருக்கின்றது; ஆகையால் அது உங்களுக்குப்

கி. பி. ௯௰.

1 எபே ௬ ௰
2 உரோ ௰௨. ௨
3 மத் ௬ ௨௪ கலா ௧ ௰ யாக் ௪ ௪.
4 பிர ௫ ௰௧
5 ௧ கொரி ௭ ௩௧ யாக் ௧ ௰ ௪ ௰௪ ௧ பே ௧ ௨௪
6 யோவா ௨௧ ௫
7 எபி ௧. ௨
8 ௨ தெச. ௨ ௩ ௨ பே ௨ ௧ ௧ யோ ௪ ௩
9 மத் ௨௪ ௫, ௨௪ ௨ யோ ௭
10 ௧ தீமோ ௪ ௧ ௨ தீமோ ௩ ௧
11 ௫ மோ ௰௩ ௰௩, சங் ௪௧ ௯ அப ௨௰ ௩௰
12 மத் ௨௪ ௨௪ யோவா ௬ ௩௭ ௰ ௨௮ ௰௯ ௨ தீமோ ௨ ௰௯
13 ௧ கொரி ௰௧ ௰௯
14 மாற் ௧ ௨௪ அப ௩ ௰௪
15 ௨ கொரி ௧ ௨௧ எபி ௧ ௯ ௨௭ வச
16 யோவா ௰௪, ௫ ௰௪ ௨௬ ௰௬ ௰௩ ௨௭ வச
17 ௧ யோ ௪ ௩ ௨ யோ ௭
18 யோவா ௰௫ ௨௩ ௨ யோ ௯
19 யோவா ௰௪ ௭, ௯, ௰ ௧ யோ ௪ ௰௫
20 ௨ யோ ௯
21 யோவா ௰௪ ௨௪ ௧ யோ ௧ ௩
22 யோவா ௰௭ ௩ ௧ யோ ௫ ௰௧
23 ௧ யோ ௩ ௭ ௨ யோ ௭
24 ௨௰ வச
25 எரே ௩௧ ௩௩, ௩௪ எபி. ௮ ௰ ௰௧
26 யோவா ௰௪ ௨௬ ௰௬ ௰௩ ௨௰ வச

போதித்தபடியே அவரில்* நிலைத்திருப்பீர்களாக.

௨௮ ¶ இப்படியிருக்கப் பிள்ளைகளே, [1]அவர் வெளிப்பட்டுப் பிரசன்னமாய் வரும்பொழுது, நாம் அவரால் [2]வெட்கப்படுத்தப்படாமல் தயிரியமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்

௨௯ [3]அவர் நீதியுள்ளவராய் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க, [4]நீதியைச் செய்கிறவன் எவனோ அவன் அவரில் பிறந்தான் என்று அறிந்திருக்கிறீர்கள்.†

௩. அதிகாரம்.

௧ நாம் தேவனுக்குப் பிள்ளைகளாகும்படி பராபரன் நம்மிடத்தில் வைத்த அன்பு இன்னதென்றும், ௩ அதிலே நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவும், ௰௧ ஒருவரில் ஒருவர் அன்புகூர வேண்டுமென்றும் சொல்லியது

[5]நாம் பராபரனுடைய பிள்ளைகள் என்று [6]அழைக்கப்படும்படி (செய்ததினாலே) பிதாவானவர் நமக்குக் காண்பித்த மிகுந்த அன்பை நோக்கிப்பாருங்கள்; [7]உலகத்தார் அவரை அறியாதபடியினாலே நம்மை அறியாமல் இருக்கிறார்கள்.

௨ பிரியமானவர்க[illegible], [8]இப்பொழுது பராபரனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்; (இனிமேல்) இன்ன இன்னவிதமாய் இருப்போம் என்று [9]இன்னம் வெளியரங்கமாகவில்லை; (ஆகிலும்) அவர் வெளிப்படும்பொழுது, அவர் இருக்கிறதன்மையாய் நாம் (அவரைத் தரிசிப்பதால்,) [10]அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்.

௩ ¶ மேலும் இப்படி [11]அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிறவன் எவனோ அவன் அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோலத் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

௪ பாவம்செய்கிறவன் எவனோ அவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதம்செய்கிறான்; [12]பாவமானது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாயே இருக்கின்றது.

௫ அன்றியும் நீங்கள் அறிந்துகொண்டபடி [13]அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு [14]வெளிப்பட்டார்; [15]அவரிடத்திலே பாவம் இல்லை.

௬ அவரிடத்தில் நிலைத்திருக்கிறவன் எவனோ அவன் பாவம் செய்கிறதில்லை; [16]பாவம்செய்கிறவன் எவனோ அவன் அவரைக் காணவும் இல்லை, அவரை அறியவும் இல்லை.

௭ ¶ பிள்ளைகளே, [17]நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக; [18]நீதியைச் செய்கிறவன் அவர் நீதி உள்ளவராயிருக்கிறதுபோல நீதி உள்ளவனாயிருக்கிறான்.

௮ பசாசானவன் ஆதிமுதல் பாவம்செய்கிறான்; ஆகையால் [19]பாவம்செய்கிறவன் பசாசினால் உண்டாயிருக்கிறான், அந்தப் [20]பசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்குப் பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

௯ [21]பராபரனில் பிறந்தவன் எவனோ அவனுக்குள்ளே [22]அவருடைய வித்து தரித்திருக்கிறதால் அவன் பாவம்செய்யான்; அவன் பராபரனிடத்திலே பிறந்தபடியால் பாவம்செய்யமாட்டான்.

௰ ¶ இதினாலே பராபரனுடைய பிள்ளைகளும் பசாசின் பிள்ளைகளும் வெளியரங்கமாகிறார்கள்; [23]நீதியைச் செய்யாமலும் [24]தன் சகோதரனிடத்தில் அன்புகூராமலும் இருக்கிறவன் எவனோ அவன் பராபரனால் உண்டான

கி. பி. ௯௰.

* அல்லது அறி ல்
1 ௧ யோ ௩ ௨
2 ௧ யோ ௪ ௰௭
3 அப ௨௨ ௰௪
4 ௧ யோ ௩ ௭,௰
† அல்லது அறி யுங்கள்
5 யோவா ௧ ௰௨
6 யோவா ௰௬ ௰௭, ௰௬ ௰௬ ௩ ௰ ௨௫
7 எசா ௬௪ ௬ ௨.கொ ௩ ௰௬ கலா ௩ ௨௬ ௪ ௬ ௧ பே ௫ ௧
8 உ.கொ ௩ ௰௮ உ கொரி ௪ ௰
9 போபு ௰௬ ௨௬ சங ௰௬ ௰௧ மத ௫ ௮ ௧ கொரி ௰௩ ௰௨ ௨ கொரி ௫ ௮
10 உ.பே ௰ ௨ ௩ ௧ கொரி ௰௫ ௪௯ பிலி ௩ ௨௧ கொ லோ ௩ ௪ ௨ பே ௧ ௪
11 ௧ பே ௪ ௰
12 உ.கொ ௪ ௰௫ ௧ யோ ௫ ௰
13 ஏசா ௫௩ ௫, ௬ ௰௧ ௧௨ ௧யயி எபி ௧ ௩ ௯ ௨௬ ௧ பே ௨ ௨௪
14 ௧ யோ ௧ ௨
15 உ கொரி ௫ ௨௧ எபி ௪ ௰௫ ௯ ௨௮ ௧ பே ௨ ௨௨
16 ௧ யோ ௨ ௪ ௪ ௮ ௩ யோ ௰௧
17 ௧ யோ ௨ ௨௬
18 எசே ௰௮ ௯—௬ ௨ரோ ௨ ௰௩ ௧ யோ ௨ ௨௯
19 மத் ௰௩ ௩௮ யோவா அ ௪௪.

---

20 ௧ மோ ௩,௰௫ லூக் ௰௮ போவா ௰௬ ௰௧ எபி ௨ ௰௪ — 21 ௧ யோ ௫ ௰௮ — 22 ௧ பே ௧,௨௩.
23 ௧ யோ ௨ ௨௯ — 24 ௧ யோ ௪,௮

வன் அல்ல; என்னத்தினுலென்ருல்,

௰௧ [1]நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூரவேண்டும் என்பது நீங்கள் ஆதிமுதல் [2]அறிவிக்ககேட்ட விசேஷமாய்* இருக்கின்றது.

௰௨ பொல்லாங்கனுல் உண்டாயிருந்து, தன் தசோதரனைக் கொலைசெய்த [3]காயீனைப்போல இருக்கக்கூடாது; அவன் எதின்நிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளுமாய்த் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாய் இருந்ததின்நிமித்தமே அப்படிச் செய்தான்.

௰௩ என் சகோதரரே, [4]உலகத்தார் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருப்பீர்களாக.

௰௪ நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால் [5]மரணத்தைவிட்டு நீங்கிச் சீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்; [6]சகோதரனிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.

௰௫ [7]தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனித கொலைபாதகனாய் இருக்கிறான்; [8]மனித கொலைபாதகன் எவனே அவனுக்குள்ளே நித்திய சீவன் நிலைத்திராது என்று அறிந்திருக்கிறீர்கள்.

௰௬ ¶ அவர் தம்முடைய சீவனை நமக்காக விட்டுவிட்டதினுலே [9]அன்பு இன்னதென்று அறிந்தோம்; நாமும் சகோதரருக்காக நமது சீவனை விட்டுவிடக் கடனாளிகளாய் இருக்கிறோம்.

௰௭ ஒருவன் [10]இவ்வுலக சீவனம் உடையவனுயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் [11]அவனுக்குள்ளே பராபரனுடைய அன்பு எப்படி நிலையாயிருக்கும்?

௰௮ என் பிள்ளைகளே, [12]வசனத்தினுலும் நாவினுலும் அல்ல, கிரியைகளினுலும் உண்மையினுலும் அன்புகூரக்கடவோம்.

௰௯ ¶ அதினுலே [13]நாம் சத்தியமுள்ளவர்கள் என்று அறிந்து, நமது இருதயத்தை அவருக்குமுன்பாக நிச்சயப்படுத்தலாம்.†

௨௰ [14]நமது இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானுல், நம்முடைய இருயத்திலும் பராபரன் பெரியவராய் இருக்கிறார் என்றும், சகலத்தையும் அறிந்திருக்கிறார். என்றும் (நினைபபோமாக).

௨௧ [15]பிரியமானவர்களே, [16]நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகள் என்று தீர்ப்புச்சொல்லாதிருந்தால், நாம் பராபரனிடத்தில் தயிரியம்கொள்வோம்.

௨௨ மேலும் அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, [17]அவருக்குமுன்பாக பிரியமானவைகளைச்செய்கிறபடியினுலே, [18]நாம் வேண்டிக்கொள்வது ஏதோ, அதை அவராலே பெற்றுக்கொள்வோம்.

௨௩ நாம் [illegible]அவருடைய குமாரனுகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, [20]அவர் நமக்குக் கட்டளையிட்டபடி [21]ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டுமென்ற இதுவே பராபரனுடைய கட்டளையாய் இருக்கின்றது.

௨௪ [22]அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் [23]அவரிடத்தில் நிலைத்திருக்கிறான்; அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார்; [24]அவர் நம்மிடத்தில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத்

கி. பி. ௯௰.

1 யோவா ௰௩ ௩௪ ௰௫ ௰௨ ௨௧. வசனம ௧ யோ ௪ ௭, ௨௧ ௨ யோ ௫

2 ௧ யோ ௧ ௫ ௨ ௭

* அல்லது கட்டளையாய

3 ௧ மோ ௪ ௪, ௮ எபி ௰௧ ௪ யூதா ௰௧

4 யோவா ௰௫ ௰௮, ௰௯ ௰௭ ௰௪ ௨ தீமோ ௩ ௰௨

5 ௧ யோ ௨. ௰

6 ௧ யோ ௨ ௯, ௰௧.

7 மத். ௫. ௨௧, ௨௨ ௧ யோ ௪ ௨௰

8 கலா ௫ ௨௧ வெளி ௨௧ ௮

9 யோவா. ௩ ௰௬ ௰௫ ௰௩ ௨ரோ. ௫ ௮ எபே ௫ ௨, ௨௫ ௧ யோ ௪ ௯, ௰௧

10 ௫ மோ ௰௫ ௭ லூக் ௩ ௰௧

11 ௧ யோ. ௪ ௨௰

12 எசே ௩௩ ௩௧ ௨ரோ ௰௨ ௯ எபே ௪ ௰௫ யாக் ௨ ௰௫, ௰௬ ௧ பே ௧ ௨௨

13 யோவா ௰௮ ௩௭ ௧ யோ ௧ ௮

† கிரேக்கு, சமாதிக்கப பணணலாம

14 ௧ கொரி ௪ ௪

15 யோபு ௨௨. ௨௬

16 எபி ௰ ௨௨ ௧ யோ ௨ ௨௮, ௪. ௰௭.

17 யோவா ௮ ௨௯ ௯ ௩௧

18 சங் ௩௪, ௰௫ ௱௪௫ ௰௮, ௰௯ வாக் ௰௫. ௨௯ எரே. ௨௯. ௰௨ மத் ௭. ௮: ௨௧ ௨௨ மாற் ௰௧ ௨௪. யோவா ௰௪ ௰௩: ௰௫ ௭ ௰௬ ௨௩, ௨௪ யாக். ௫ ௰௬ ௧ யோ ௫ ௰௪ —19 யோவா. ௬. ௨௯ ௰௭ ௩ —20 ௧ யோ ௨, ௮, ௰ —21 மத். ௨௨ ௩௯. யோவா ௰௩ ௩௪ ௰௫ ௰௨ எபே ௫ ௨ ௧ தெச ௪ ௯ ௧ பே ௪ ௮ ௰௧ வச ௧ யோ ௪ ௨௧.—22 யோவா ௰௪ ௨௩ ௰௫ ௰ ௧ யோ ௪ ௰௨ 23 யோவா ௰௭ ௨௧ ௨௩ — 24 ரோ ௮ ௯ ௧ யோ ௪ ௰௩

தந்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.

௪. அதிகாரம்.

௧. ஆவியை உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற எல்லாப் போதகர்களையும் நம்பாமல், அவர்களைச் சாதாரண சத்திய விசுவாசத்தின் ஒழுங்குக்குக் காத்திருக்கிறார்களா என்று சோதித்துப்பார்க்க எச்சரித்தது. ௭ சகோதரசிநேகத்தைக் கைக்கொள்ளப் புத்திகள் சொல்லியது

[1]பிரியமானவர்களே, உலகத்திலே அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றினபடியால், [2]நீங்கள் எந்த ஆவியையும் நம்பாமல் அந்த ஆவிகள் பராபரனால் உண்டானவைகளோ என்று [3]சோதித்து அறியுங்கள்.

௨ பராபரனால் உண்டான ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால், [4]இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தார் என்று அறிக்கைபண்ணுகிற ஆவி எதுவோ, அது பராபரனால் உண்டாயிருக்கின்றது

௩ [5]இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தார் என்று அறிக்கைபண்ணாத ஆவி எதுவோ, அது பராபரனால் உண்டாயிருக்கிறதல்ல; அதுவே கிறிஸ்துவுக்கு எதிராளியானவனுடைய ஆவி; அது வருகிறதென்று நீங்கள் கேள்விப்பட்டீர்கள்; [6]அது இப்பொழுதே உலகத்தில் இருக்கின்றது.

௪ ¶ பிள்ளைகளே, [7]நீங்கள் பராபரனால் உண்டாயிருந்து, [8]உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவரானதால் அவர்களைச் செயித்தீர்கள்.

௫ அவர்கள் [9]உலகத்தாரின் தன்மையை உடையவர்கள்; ஆனபடியால் உலகத்தாரின் தன்மையாய்ப் பேசுகிறார்கள்; [10]உலகத்தாரும் அவர்களுக்குச் செவிகொடுக்கிறார்கள்.

௬ நாங்கள் பராபரனுடைய தன்மையை உடையவர்கள்; [11]பராபரனை அறிந்துகொண்டவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான், பராபரனுடைய தன்மை இல்லாதவன் மாத்திரம எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே [12]சத்திய ஆவியையும் வஞ்சக ஆவியையும் அறிந்திருக்கிறோம்.

௭ ¶ [13]பிரியமானவர்களே, அன்பு பராபரனால் உண்டாயிருக்கிறபடியால் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கக்கடவோம்; அன்புள்ள யாவரும் பராபரனில் பிறந்து அவரை அறிந்திருக்கிறார்கள்.

௮ [14]பராபரன் அன்பாகவே இருக்கிறபடியால், [15]அன்பில்லாதவன் பராபரனை அறியான்.

௯ பராபரனுடைய ஒரேபேறான குமாரனாலே [16]நாம் பிழைக்கும்படிக்கு அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே, [17]பராபரன் நமதுமேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

௰ [18]நாம் பராபரனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நீக்கும் இருபை உண்டாகும்படி, [19]தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கின்றது.

௰௧ பிரியமானவர்களே, [20]பராபரன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக்கடனாளிகளாய் இருக்கிறோம்; [21]பராபரனை ஒருவரும் ஒருக்காலும் காணவில்லை.

௰௨ நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் பராபரன் நமக்குள்ளே நிலைத்திருப்பார்; [22]அவருடைய அன்பு நம்மிடத்தில் நிறைவுள்ளதாயும் இருக்கும்.

௰௩ அவர் தம்முடைய ஆவியில் நமக்குக் கொடுத்ததினாலே நாம் அவரிலும் [23]அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

கி. பி. கூய.

1 மத் உச இ உச அப. உம கம க திமோ சக உபே உ க க யோ உ மஅ உயோ எ
2 எரே உகூ அ மத உச ச
3 க கொரி மச உகூ க தெச ரு உக வெளி உ உ
4 க கொரி மஉ ங கயோ ருக
5 க யோ உ உஉ உ யோ எ
6 உ தெச உ எ. கயோ உ மஅ, உஉ
7 க யோ ரு ச
8 யோவா மஉ கக மச கம மகூ மக க கொரி உ மஉ எபே உ உ கூ மஉ
9 யோவா ங கக
10 யோவா மரு மக மஎ மச
11 யோவா அ சஎ ம உஎ க கொரி மச கஎ உ கொரி ம எ
12 எசா அ உம யோவா மச மஎ
13 க யோ ங ம, மக, உங,
14 மகூ வச
15 கயோ உ ச ங கூ
16 கயோ. ரு மக
17 யோவா ங மக உரோ ரு அ அ ஙஉ க யோ ங மகூ
18 யோவா மரு மக உரோ ரு அ. ம தீத் ங ச.
19 க யோ உ உ
20 மத் மஅ ககூ யோவா மரு. மஉ, மங க யோ ங மகூ
21 யோவாங மஅ க திமோ ககூ மக உம வச
22 கயோ உ ரு மஅ வச
23 யோவா மச உம கயோ க உச

௰௪ ¶ [1]பிதாவானவர், குமாரனை உலக இரட்சகராக அனுப்பினதை [2]நாங்கள் பார்த்திருந்து சாட்சியிடுகிறோம்.

௰௫ இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்று [3]அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனிடத்தில் பராபரன் நிலைத்திருக்கிறார்; பராபரனிடத்திலே அவனும் நிலைத்திருக்கிறான்.

௰௬ பராபரன் நமதுமேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்; [4]பராபரன் அன்பாகவே இருக்கிறார், [5]அன்பிலே நிலைத்திருக்கிறவன் பராபரனிடத்தில் நிலைத்திருக்கிறான்; பராபரனும் அவனிடத்திலே நிலைத்திருக்கிறார்.

௰௭ நியாயத்தீர்ப்பின் நாளிலே [6]நமக்குத் தயிரியம் உண்டாயிருக்கத்தக்கதாக, அன்பு நமமிடத்தில்* நிறைவுள்ளதாயிற்று, ஆனதால் [7]அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இந்த உலகத்தில் இருக்கிறோமே.

௰௮ அன்பிலே பயமில்லை; நிறைந்த அன்பு பயத்தைப் புறம்பே தள்ளுகின்றது, பயமானது வேதனையுள்ளதே.

௰௯ [8]பயப்படுகிறவன் நிறைந்த அன்புள்ளவன் அல்ல, அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

௨௰ ஒருவன் தன் சகோதரனைப் பகைத்து நான் [9]பராபரனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொன்னால், அவன் பொய்க்காரனாய் இருப்பான்; எப்படியெனில், அவன் தான் கண்டிருக்கிற சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்க, [10]தான் காணாதிருக்கிற பராபரனிடத்திலே எப்படி அன்பாயிருப்பான்?

௨௰௧ அன்றியும் பராபரனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்ற [11]இந்தக் கட்டளையை அவராலே பெற்றிருக்கிறோம்.

௫. அதிகாரம்.

௧ பராபரனைச் சிநேகிக்கிறவன் பராபரனுடைய பிள்ளைகளையும் சிநேகித்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அந்தக் கட்டளைகள் விசுவாசிகளுக்குப் பாரமாயிராமல் இலேசாயிருக்கிறதென்று உணர்ந்திருப்பானென்றும், ௬ தேவசுதனாகிய இயேசுவானவர் நம்மை இரட்சிக்கவும் ௰௪ ௰௫ நமக்கும் மற்றவர்களுக்கும் செய்யும் வேண்டுதல்களைக் கேட்கவும் வல்லவரென்றும் சொல்லியது.

[12]இயேசு என்பவரே கிறிஸ்து என்று [13]விசுவாசிக்கிறவன் எவனோ, [14]அவன் பராபரனில் பிறந்திருக்கிறான்; [15]அன்றியும் பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற யாவரும் அவரில் பிறந்தவனிடத்திலும் அன்புகூருகிறார்கள்.

௨ நாம் பராபரனிடத்திலே அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டுவருகிறதினாலே நம்மைப் பராபரனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறவர்களென்று அறிந்துகொள்ளுகிறோம்.

௩ நாம் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே [16]அவரிடத்தில் அன்புகூருகிறதாம்; இப்படி [17]அவருடைய கற்பனைகள் பாரமானவைகளும் அல்ல.

௪ எப்படியெனில், [18]பராபரனில் பிறந்தவன் எவனோ, அவன் உலகத்தைச் செயிக்கிறான்; நம்முடைய விசுவாசமே உலகத்தைச்செயிக்கிற செயம்.

௫ [19]இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனே அன்றி, வேறு யாவன் உலகத்தைச் செயிக்கிறவன்?

௬ ¶ இயேசுக்கிறிஸ்துவாகிய அவரே [20]சலத்தினாலும் இரத்தத்தினாலும் தோன்றிவந்தவர்; சலத்தினாலேமாத்திரமல்ல, சலத்தினாலும் இரத்தத்தினாலுமே (வந்தார்); ஆவியானவர் சத்தியமாகையால் [21]ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்.

கி. பி. ௯௰.

1 யோவா ௧ ௰௭
2 யோவா ௧ ௰௪ ; ௧ யோ ௧ ௧, ௨
3 ௨ யோ ௰ ௯ ; ௧ யோ ௫ ௧, ௫
4 அ ௰௪
5 ௧ யோ ௩ ௨௪ ; ௰ ௰௪
6 யாக ௨ ௰௩ ; ௧ யோ ௨ ௨௮ ; ௩ ௰௯, ௨௧
* அல்லது நம்முடனே
7 ௧ யோ ௩ ௩
8 ௰௨ ௰௪
9 ௧ யோ ௨ ௪ ; ௩ ௰௭
10 ௰௨ ௰௪
11 மத் ௨௨ ௩௭ ; ௩௯ யோவா ௰௩ ௩௪ ; ௰௫ ௰௨ ; ௧ யோ ௩ ௨௩
12 ௧ யோ ௨ ௨௨, ௨௩ ; ௪ ௨, ௰௫
13 யோவா ௧ ௰௨
14 யோவா ௧ ௰௩
15 யோவா ௰௫ ௨௩
16 யோவா ௰௪ ௰௫, ௨௩ ; ௰௫ ௰ ; ௨ யோ ௬
17 மீக் ௬ ௮ ; மத் ௰௧ ௩௰
18 யோவா ௰௬ ௩௩ ; ௧ யோ ௩ ௯ ; ௪ ௪
19 ௧ கொரி ௰௫ ௫௭ ; ௧ யோ ௪ ௰௫
20 யோவா ௰௯ ௩௪
21 யோவா ௰௪ ௰௭ ; ௰௫ ௨௬ ; ௰௬ ௰௩ ; ௧ தீமோ ௩ ௰௬

௭ ஆனதால் பரமண்டலத்திலே பிதா, [1]வார்த்தை, பரிசுத்த ஆவி என்று இம்மூவரும் சாட்சியிடுகிறார்கள்; [2]அம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்.

௮ பூமியிலேயும் ஆவி, சலம், இரத்தமென்று இம்மூன்றும் சாட்சியிடுகின்றன; அம்மூன்றும் ஒன்றாகப் பொருந்துகின்றன.

௯ ¶ [3]நாம் ஏற்றுக்கொள்ளுகிற மனிதருடைய சாட்சியிலும், பராபரனுடைய சாட்சி அதிகமாய் இருக்கின்றது; [4]பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி அதுவே.

௰ பராபரனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் [5]அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; பராபரனை விசுவாசியாதவன் [6]அவரைப் பொய்யன் என்கிறவனாய் இருக்கிறான்; பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசிக்கவில்லையே.

௰௧ அந்தச் சாட்சி என்னவெனில், [7]பராபரன் நமக்கு நித்திய சீவனைக் கொடுத்திருக்கிறார்; [8]அந்தச் சீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே.

௰௨ [9]குமாரனை உடையவன் அந்தச் சீவனை உடையவனாய் இருக்கிறான்; பராபரனுடைய குமாரனில்லாதவன் அந்தச் சீவன் இல்லாதவனாய் இருக்கிறான்.

௰௩ ¶ [10]பராபரனுடைய குமாரனின் நாமத்தில் விசுவாசமாயிருக்கிற நீங்கள், நித்திய சீவனை உடையவர்களென்று அறிந்து, பராபரனுடைய குமாரனின் நாமத்தின் மேலே விசுவாசமாயிருக்கும்படிக்கு [11]இவைகளை உங்களுக்கு எழுதினேன்.

௰௪ [12]நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படியே கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுப்பார் என்பதே அவரால்* நமக்கு உண்டாயிருக்கிற தயிரியம்.

௰௫ அன்றியும் நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுப்பார் என்று நாம் அறிந்திருக்க, அவரிடத்தில் நாம் பண்ணின விண்ணப்பங்களைப் பெற்றோமென்றும் அறிந்திருக்கிறோம்.

௰௬ ¶ ஒருவன் மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்யக்கண்டால் (கர்த்தாவை நோக்கிச்) செபம்பண்ணக்கடவன்; அப்பொழுது அவர் அவனுக்கு மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கு ஏற்ற [13]உயிரைக் கொடுப்பார்; [14]மரணத்திற்கு ஏதுவான பாவம் உண்டு; [15]அதைக்குறித்துச் செபம் பண்ணச் சொல்லமாட்டேன்.

௰௭ [16]அநியாயம் யாவும் பாவம் தான்; மரணத்திற்கு ஏதுவல்லாத பாவமும் உண்டு.

௰௮ ¶ நாம் அறிந்துகொண்டபடி, [17]பராபரனில் பிறந்தவனெவனோ அவன் பாவம்செய்யமாட்டான்; பராபரனில் பிறந்தவன் [18]தன்னைக் காக்கிறான்; ஆகையால் பொல்லாங்கன் அவனைத் தொடான்.

௰௯ மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நாம் பராபரனால் உண்டாயிருக்கிறோம்; [19]உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள்ளே கிடக்கின்றது.

௨௰ மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நாம் மெய்யானவரை [20]அறிந்துகொள்வதற்குப் பராபரனுடைய குமாரன் வந்து, [21]நமக்குப் புத்தியைக் கொடுத்தார்; அந்தப்படி நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவிலுள்ள மெய்யானவரைப் பற்றியிருக்கிறோம்; [22]அவரே மெய்யான தேவனுமாய் [23]நித்திய சீவனுமாய் இருக்கிறார்.

௨௧ ¶ பிள்ளைகளே, [24]நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. — ஆமென்.

கி. பி. ௯௰.

[1] யோவா. ௧. ௧ வெளி ௰௯. ௰௩
[2] யோவா. ௰ ௩௰.
[3] யோவா ௮ ௰௭, ௰௮
[4] மத் ௩ ௰௬, ௰௭ ௰௭ ௫.
[5] உரோ ௮ ௰௬ கலா ௪. ௬
[6] யோவா. ௩ ௩௩ ௫ ௩௮.
[7] ௧ யோ ௨ ௨௫.
[8] யோவா ௧ ௪ ௧ யோ ௪. ௯
[9] யோவா ௩ ௩௬ ௫ ௨௪
[10] ௧ யோ ௧ ௧, ௨
[11] யோவா ௨௰ ௩௧
[12] ௧ யோ ௩ ௨௨
* அல்லது அவரைக்குறித்து
[13] யோபு ௪௨. ௮ யாக் ௫ ௰௪, ௰௫
[14] மத் ௰௨. ௩௧ ௩௨ மாற் ௩ ௨௯ லூக் ௰௨ ௰ எபி ௬ ௪, ௬ ௰ ௨௬
[15] எரே ௭ ௰௬ ௰௪ ௰௧ யோவா ௰௭ ௯
[16] ௧ யோ ௩ ௪
[17] ௧ பே ௧ ௨௩ ௧ யோ ௩ ௯
[18] யாக் ௧. ௨௭
[19] கலா ௧ ௪
[20] யோவா ௰௭ ௩
[21] லூக் ௨௪ ௪௫
[22] ஏசா ௯ ௬ ௪௪ ௬ ௫௪ ௫ யோவா ௨௰ ௨௮ அப ௨௰ ௨௮ உரோ ௯ ௫ ௧ தீமோ ௩ ௰௬ தீத் ௨ ௰௩ எபி ௧ ௮
[23] ௰௧, ௰௨, ௰௩ ௨௪.
[24] ௧ கொரி. ௰ ௰௪

II. JOHN.

அப்போஸ்தலனாகிய
யோவான் எழுதின
இரண்டாம் நிருபம்.

க. கனம்பொருந்திய ஒரு அம்மாளும், அவளுடைய பிள்ளைகளும் கிறிஸ்து மார்க்கத்துக்கடுத்த அன்பிலும், விசுவாசத்திலும் நிலைநின்று, அ தங்கள் பலனை இழந்துபோகாதிருக்கவும், ம கிறிஸ்து இயேசுவின் சத்திய உபதேசத்தைக்கொண்டு வாராத கள்ளப்போதகர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கவும் அவர்களுக்குப் புத்திசொல்லியது

நம்மிடத்திலே நிலைநிற்கிறதுமாய், என்றென்றைக்கும் நம்மோடு இருப்பதுமாய் இருக்கிற சத்தியத்தின்நிமித்தம் நானமாத்திரமல்ல, [1]சத்தியத்தை அறிந்திருக்கிற மற்ற யாவரும் [2]உண்மையாய்ச் சிநேகித்திருக்கிற,

உ தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது:

ங பிதாவாகிய பராபரனாலும் பிதாவின் குமாரனாகிய கர்த்தாவாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினாலும் [3]கிருபையும், இரக்கமும், சமாதானமும், [4]சத்தியத்தோடும் அன்போடும்கூட உங்களுக்கு உண்டாயிருக்கக்கடவது.*

ச உம்முடைய பிள்ளைகளில் சிலர் பிதாவினால் நாம் கற்பனை அடைந்தபடி [5]சத்தியத்திலே நடக்கிறவர்கள் என்று நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.

ரு இப்பொழுது அம்மாளே, [6]நான் உமக்குப் புதிய கற்பனையாகவல்ல, ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி வேண்டிக்கொள்ளுகிறது என்னவெனில், [7]நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரவேண்டும்.

சு [8]நாம் அவருடைய கற்பனைகளின்படி நடக்கிறதே அன்புகூருகிறதாம்; [9]நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி, அதிலே நடந்துகொள்ளவேண்டும் என்பதே அந்தக் கற்பனையாய் இருக்கின்றது.

எ ¶ [10]அநேக வஞ்சனைக்காரர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; [11]இயேசுக்கிறிஸ்துவானவர் மாம்சமானார் என்று அறிக்கைபண்ணாமல் இருக்கிறார்கள்; [12]இப்படிப்பட்டவனே வஞ்சனைக்காரனுமாய் கிறிஸ்துவுக்கு எதிராளியுமாய் இருக்கிறான்.

அ [13]நாம் நம்முடைய வேலைகளை† இழந்துபோகாமல் நிறைந்த பலனைப் பெறும்படிக்கு [14]எச்சரிக்கையாயிருங்கள்.

கூ கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைநில்லாமல் [15]மீறிநடக்கிற எவனும் பராபரனை அடையாதவ

கி பி. கூய.

1 யோவா. அ கஉ, கலா உ ரு, மச க க ரு எ கொலோ. க ரு உ தெச உ மக க தீமோ உ ச, எபி ம உக
2 க யோ கய அ கூ யோ க க வச.
3 க தீமோ க உ
4 க வச
* இரேக்கு, இருக்கும
5 க யோ கூ
6 க யோ உ எ, அ கூ மக
7 யோவா மக கச மரு மஉ, எபே ரு உ க பே ச அ க யோ க உக.
8 யோவா மச மஙி, உக மஙி ம க யோ உ ஙி ஙி க
9 க யோ உ உச
10 க யோ ச க
11 க யோ ச உ, க
12 க யோ உ, உஉ க
13 மாற் மக கூ
† சில பிரதிகளில் நீங்கள் பெற்றுக் கொண்ட பலனை
14 கலா க ச எபி ம. கஉ, கரு — 15 க யோ உ உக.

னாய் இருக்கிறான்; கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைநிற்கிறவனே பிதாவையும் குமாரனையும் அடைந்திருக்கிறான்.

௰ ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால், அவனை நீங்கள் உங்கள் வீட்டிலே சேர்த்துக்கொள்ளவும், [1]அவனுக்கு வாழ்த்துதல்சொல்லவும் கூடாது.

௰௧ அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்காளனாகிறானே.

௰௨ ¶ [2]நான் பின்னும் அநேக காரியங்களை உங்களுக்கு அறிவிக்கவேண்டும்; காகிதத்தினாலும் மையினாலும் அப்படிச் செய்ய மனதில்லை; [3]நமக்குச்* சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, முகமுகமாய்ப்† பேசலாமென்று நம்பியிருக்கிறேன்.

௰௩ [4]தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்.—ஆமென்.

கி. பி. ௯௰.

---

[1] உரோ ௰௬ ௰௭ ௧ கொரி. ௫ ௰௧ ௰௬. ௨௨. கலா ௧ ௮, ௯ ௨ தீமோ ௩ ௫ தீத். ௩ ௰.
[2] ௩ யோ ௰௩
[3] யோவா. ௰௭ ௰௩. ௧ யோ ௧ ௪.
* அல்லது உங்களுக்கு
† கிரேக்கு, பேச்சுக்குப் பேச்சு
[4] ௧ பே ௫ ௰௩

III. JOHN.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின

மூன்றாம் நிருபம்.

௧ காயுவைத் தன் தேவபக்திக்கும், ௫ உத்தம போதகர்களுக்குச் செய்யும் உபசாரத்துக்கும் புகழ்ந்து, ௯ பெருமையுள்ள தியோத்திரேப்பே என்றவனுடைய கெட்ட நடக்கையைக்குறித்து விசனப்பட்டு, ௰௧ அந்த நடக்கையை ஒருவரும் பின்பற்றாமல் இருக்கச்சொல்லி, ௰௨ தேமேத்திரி என்றவனுக்கு நற்சாட்சி பகர்ந்தது.

மூப்பனாகிய நான் [1]உண்மையாய்* அன்புகூருகிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது: பிரியமானவனே,

௨ உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ சகலவிதத்திலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுகிறேன்.†

௩ சகோதரர் வந்து [2]நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறபடி உன்னுடைய உண்மையைக்குறித்துச் சாட்சிகொடுத்தபொழுது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

௪ [3]என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேள்விப்படுகிறதினால் (வருகிற சந்தோஷத்திற்கு) மேலான சந்தோஷம் எனக்கு இல்லை.

௫ பிரியமானவனே, நீ சகோதரருக்கும் பரதேசிகளுக்கும் செய்கிற கிரியைகள் யாவையும் உண்மையாய்ச் செய்கிறாய்.

௬ அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சிசொன்னார்கள், அவர்களை நீ பராபரனுக்குமுன்பாகப் பாத்திரமானபடி‡ வழிவிட்டு அனுப்பினால் நன்மைசெய்வாய்.

௭ அவருடைய நாமத்தினிமித்தம் அவர்கள் [4]அஞ்ஞானிகளிடத்தில் ஒன்றும் வாங்காமல் புறப்பட்டார்களே.

௮ ஆகையால் நாம் சத்தியத்திற்கு உதவிசெய்கிறவர்களாய் இருக்கும்படிக்கு, இப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்; நான் சபைக்கு எழுதினேன்.

௯ அப்படியிருந்தும், அவர்களுக்கு முதலாளியாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

௰ ஆனபடியினாலே நான் வரும்பொழுது, அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளைப் பேசிச் செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன்; அவைகளும் அவனுக்குப் போதாது; அவன்தானே சகோதரரை ஏற்றுக்கொள்ளாதிருக்கிறதுமல்லாமல், ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து சபைக்குப்புறம்பே தள்ளுகிறான்.

கி. பி. ௯௰

[1] ௨ யோ ௧

* அல்லது உண்மையிலே

† அல்லது விரும்புகிறேன்.

[2] ௨ யோ ௪

[3] ௧ கொரி ௪ ௰௫ பிலே ௰

‡ அல்லது ஏற்றவிதமாக

[4] ௧ கொரி ௯ ௰௨, ௰௫

௰௧ பிரியமானவனே, [1]நீ பொல்லாங்கானதை அல்ல நலமானதைப பின்பற்றுவாயாக, [2]நன்மைசெய்கிறவன் பராபரனால் உண்டாயிருக்கிறான்; பொல்லாங்கைச்செய்கிறவன் பராபரனைக் கண்டறியவில்லை

௰௨ [3]தேமேத்திரி என்பவனுக்கு எல்லாராலும் சத்தியத்தாலும்தானே நற்சாட்சி உண்டாயிருக்கிறது; நாங்களும் சாட்சிகொடுக்கிறோம்; [4]எங்கள் சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறீர்கள்.

௰௩ [5]நான் அநேகம் காரியங்களை உனக்கு எழுதவேண்டும்; அவைகளை மையினாலும் இறகினாலும் எழுத மனதில்லை.

௰௪ நான் சீக்கிரமாய் உன்னைப் பார்க்கலாமென்று நம்பியிருக்கிறேன்; அபபொழுது முகமுகமாய்ப * பேசுவோம்; உனக்குச் சமாதானம் உண்டாயிருக்கக்கடவது.

௰௫ (எங்களிடத்திலுள்ள) சிநேகிதர் உன்னை வாழ்த்துதல்செய்கிறார்கள்; உன்னிடத்திலுள்ள சிநேகிதர்களைப் பேர்பேராக (என்னாலே) வாழ்த்துதல்செய்வாயாக.

கி. பி. ௯௰.

[1] சங் ௩௭. ௨௭. ஏசா ௧ ௰௬, ௰௭ ௧ பே ௩ ௰௧

[2] ௧ யோ ௨ ௨௯. ௩ ௬, ௯

[3] ௧ தீமோ ௩. ௭.

[4] யோவா ௨௧ ௨௪

[5] ௨ யோ ௰௨.

* இரேக்கு, பேச்சுக்குப பேச்சு

JUDE.

அப்போஸ்தலனாகிய

யூதா எழுதின

நிருபம்.

௧ விசுவாசத்தை உறுதியாயக் கைக்கொளளப புத்திசொல்லி, ௪ அவர்களைக் கெடுக்கும்படி பிரவேசித்திருககிற கள்ளபபோதகாகளுடைய சாபத்தைத்தரும உபதேசத்துக்கும் நடக்கைக்கும உக்கிரமான ஆக்கினை கிடைக்குமெனறும, ௨௰ உத்தமாகளோ பரிசுத்தஆவியின ஏவுதலினாலும பராபரனை நோக்கி வேணடிக்கொளளுகிறதினாலும ஊக்கமடைந்து கிருபையிலே வளாந்து தஙகளைக் காத்துக்கொளவதுமனறி, எத்தாகள வைத்த கணணிகளில அகபபட்டவாகளைக் காபபாாகளெனறும சொலலியது

௧ இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனுமாய், [1]யாக்கோபினுடைய சகோதரனுமாய் இருக்கிற யூதா என்பவன், பிதாவாகிய பராபரனாலே பரிசுத்தமாக்கப்பட்டும் [2]இயேசுக்கிறிஸ்துவினால் காக்கப்பட்டும் [3]அழைக்கப்பட்டும் இருக்கிறவர்களுக்கு எழுதுகிறதாவது:

௨ இரக்கமும், [4]சமாதானமும், அன்பும் உங்களுக்குச் சம்பூரணமாய் உண்டாகக்கடவது.

௩ பிரியமானவர்களே, [5]பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுமென்று நான் மிகுந்த கருத்துள்ளவனாய் இருக்கையில், முன்னே பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்காக நீங்கள் [6]கெட்டியாய்ப் போராட்டம்பண்ணும்படிக்கு, உங்களுக்குப் புத்தியை எழுதுகிறது எனக்கு அவசியமாய்த் தோன்றிற்று.

௪ என்னத்தினாலெனில், [7]நம்முடைய பராபரனின் கிருபையைக் காமவிகாரத்திற்கு ஏதுவாகப் [8]புரட்டி, ஒன்றான சுயாதிபதியான பராபரனுமாய், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை [9]மறுதலிக்கிற [10]துன்மார்க்கரான சில மனிதர்கள் பக்கவழியாய் [11]நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் அடையும் ஆக்கினையைக் குறித்துப் பூர்வீகத்திலே முன் எழுதியிருக்கின்றது.

௫ அந்தப்படி நீங்கள் முன்னே அறிந்திருந்தும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறது என்னவெனில், [12]கர்த்தர் எகிப்துதேசத்திலிருந்து சனத்தை இரட்சித்துப் பின்பு [13]விசுவாசியாதவர்களை அழித்தார்.

௬ அன்றியும் [14]தங்களுடைய ஆதி நிலைமையைக்* காவாமல், தங்களுக்கு ஏற்ற இருப்பிடத்தை விட்டுவிலகின தூதர்கள் [15]பெரிய நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும் நித்திய சங்கிலிகளினாலே (கட்டப்பட்டு) [16]அந்தகாரத்தில் இருக்கும்படி நியமித்தார்.

௭ அப்படிப்போலச் [17]சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும் இவர்களுடைய வி

கி. பி. ௬௬.

[1] லூக் ௬ ௰௬ அப ௧ ௰௩

[2] யோவா ௰௭ ௰௧, ௰௨, ௰௫ ௧ பே ௧ ௫

[3] ௨ரோ ௧ ௭

[4] ௧ பே ௧ ௨ ௨ பே ௧ ௨.

[5] தீத ௧ ௪

[6] பிலி ௧ ௨௭ ௧ தீமோ ௧ ௰௮ ௬ ௰௨ ௨ தீமோ ௧ ௰௩ ௪ ௭

[7] தீத் ௨ ௰௧ எபி ௰௨ ௰௫

[8] ௨ பே ௨ ௰

[9] தீத். ௧ ௰௬. ௨ பே ௨ ௧ ௧ யோ ௨ ௨௨

[10] ௨ரோ ௬ ௨௧ ௨௨ ௧ பே ௨ ௮

[11] கலா ௨ ௪ ௨ பே ௨ ௧

[12] ௧ கொரி ௰௬

[13] ௪ மோ ௰௪ ௨௯, ௩௭ ௨௬ ௬௪ ௬௫ ௨௬, எபி ௩ ௰௭, ௰௯

[14] யோவா ௮ ௪௪

* அல்லது ஆதி மேன்மையை

[15] வெளி ௨௰ ௰

[16] ௨ பே ௨. ௪

[17] ௧ மோ ௰௯ ௨௪ ௫ மோ ௨௯. ௨௩ ௨ பே ௨. ௬

தமாய் வேசித்தனத்தில் அமிழ்ந்து, அந்நிய* மாம்சத்தைச் சேர்ந்து போனதினாலே நித்திய அக்கினியை ஆக்கினையாக அடைந்து திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

௮ ¶ அப்படிப்போல [1]இந்தச் சொப்பனக்காரர் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, [2]மகத்துவங்களைத் தூஷணிக்கிறார்கள்.

௯ பிரதான தூதனாகிய [3]மிகாவேலும் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசானவனுடனே தருக்கித்துப் பேசினபொழுது, [4]தூஷணமுள்ள தீர்ப்பை அவனுக்குச் சொல்லத் துணியாமல், [5]கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று (மாத்திரம்) சொன்னான்.

௰ [6]இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷணிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப்போலச் சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுக்கிறார்கள்.

௰௧ ஐயோ, அவர்களுக்கு வேதனை உண்டாகும், அவர்கள் [7]காயீனுடைய வழியில் நடந்து, [8]பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்து ஓடி, [9]கோரா விரோதம் பேசினதினாலே கெட்டுப்போனார்கள்.

௰௨ ¶ இவர்கள் உங்கள் [10]அன்பு விருந்துகளில் [11]மாசுகளாயிருந்து, பயமில்லாமல் விருந்துண்டு, தங்களை மேய்க்கிறார்கள்; [12]அவர்கள் காற்றுகளால் அடிக்கப்பட்டு அலைகிற [13]நீரில்லாத மேகங்களும், [14]உலர்ந்து கனியற்று இரண்டுதரம் செத்து வேரற்றுப்போன மரங்களும்,

௰௩ [15]தங்கள் சுய இலச்சைகளை நுரைபோலக் கக்குகிற [16]உக்கிரத்தையுடைய கடலின் அலைகளும், மார்க்கம் தப்பி நடக்கிற நட்சத்திரங்களுமாய் இருக்கிறார்கள்; [17]என்றென்றைக்கும் உள்ள காரிருளே அவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது.

௰௪ ¶ ஆதாம்முதற்கொண்டு ஏழாம்தலைமுறையில் உண்டாயிருந்த [18]ஏனோக்கு என்பவன் இவர்களைக்குறித்தும் முன் அறிவித்ததாவது: இதோ [19]கர்த்தர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படிக்கும், அவர்களில் தேவபத்தியில்லாத யாவரும் துன்மார்க்கமாய்ச் செய்த சகல துன்மார்க்கக் கிரியைகளின் நிமித்தமும் தமக்கு விரோதமாய்,

௰௫ தேவபத்தியில்லாத பாவிகள் [20]பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றின் நிமித்தமும், அவர்களைக் கண்டிக்கும்படிக்கும் திரளான சேனைகளாகிய தம்முடைய பரிசுத்தவான்களோடுங்கூட வருகிறார் என்று அறிவித்தான்

௰௬ இவர்கள் முறுமுறுக்கிறவர்களுமாய், முறையிட்டுத் திரிகிறவர்களுமாய், தங்கள் இச்சையின்படி நடக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள்; [21]இவர்கள் வாயினாலே மிகவும் இறுமாப்பானவைகளைப் பேசி, [22]பொழிவுக்காகப் பெரியோர்களைப் புகழுகிறார்கள்

௰௭ ¶ பிரியமானவர்களே, [23]நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலரால், முன் சொல்லப்பட்டவார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்.

௰௮ கடைசிக் காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற [24]பரியாசக்காரர் தோன்றுவார்களென்று உங்களுக்குச் சொன்னார்களே.

௰௯ இவர்களே [25]பிரிந்துபோகிறவர்களும் [26]ஜென்மசுபாவத்தாரும் (தேவ) ஆவி இல்லாதவர்களுமானவர்கள்.

௨௰ ¶ பிரியமானவர்களே, [27]நீங்கள் உங்களுக்கு உண்டாயிருக்கிற மிகவும் பரிசுத்தமான விசுவாசத்

கி. பி. ௬௬.

* இரேக்கு, வேறு

1 உ பே உ ௰
2 உ மோ. ௨௨ ௨௮
3 தானி ௰ ௰௩ ௰௨ ௧ வெளி. ௰௨ ௭
4 உ பே உ ௰௧
5 சகரி ௩. ௨
6 உ பே உ ௰௨
7 ௧ மோ ௪ ௫ ௧ யோ ௩ ௰௨
8 ௪ மோ ௨௨ ௭, ௨௧ உ பே. உ ௰௫
9 ௪ மோ ௰௬ ௧ ழ
10 ௧ கொரி ௰௧ ௨௧
11 உ பே உ ௰௩
12 எபே ௪ ௰௪
13 வாக் ௨௫ ௰௪ உ பே உ ௰௭
14 மத ௰௫ ௰௩
15 பிலி ௩ ௰௯
16 ஏசா ௫௭ ௨௰
17 உ பே உ ௰௭
18 ௧ மோ ௫ ௰௮
19 ௫ மோ ௩௩ உ தானி ௭ ௰ சகரி ௰௪ ௫ மத ௨௫ ௩௧ உ தெச ௧ ௭ வெளி ௧ ௭
20 ௧ சாமு ௨. ௩ சங் ௩௧ ௰௮ ௯௪ ௪ மல ௩ ௰௩
21 உ பே உ ௰௮
22 வாக் ௨ ௮ ௨௧ யாக் ௨ ௧, ௯.
23 உ பே ௩ ௨
24 ௧ தீமோ ௪ ௧ உ தீமோ ௩ ௧ ௪ ௩ உ பே ௨ ௧ ௩ ௩
25 வாக் ௰௮ ௧ ஏசே ௰௪ ௭ ஓசே ௪ ௰௪ ௯ ௰ எபி ௰ ௨௫
26 ௧ கொரி ௨ ௰௪ யாக் ௩ ௰௫
27 கொலோ ௨ ௭ ௧ தீமோ ௧ ௪

தின்மேலே உங்களைப் பொருந்தக் கட்டிக்கொண்டு,

௨௧ [1]பரிசுத்த ஆவியைக்கொண்டு செபம்பண்ணி, பராபரனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, [2]நித்திய சீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கம் வரப்பார்த்திருங்கள்.

௨௨ அல்லாமலும், வகையறுக்கிறவர்களாய் நீங்கள் சிலருக்கு இரங்கி, [3]சிலரை அக்கினியிலிருந்து இழுத்துக்கொண்டு, [4]பயத்தோடே இரட்சித்து, [5]மாம்ச இச்சைகளால் அசுசிபபட்டிருக்கிற அங்கியையும் வெறுத்துப்போடுங்கள்.

௨௩ ¶ நீங்கள் வழுவாதபடிக்கு [6]உங்களைக் காத்துக்கொள்ளுகிறதற்கும், மாசில்லாமல் மகிழ்ச்சியோடே உங்களைத் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே நிறுத்துகிறதற்கும் வல்லமையுள்ளவருமாய்,

௨௪ [7]நம்முடைய இரட்சகரான ஞானமுள்ள ஒருவராகிய தேவனுமாய் இருக்கிறவருக்கு இப்பொழுதும் இனிமேல் இருக்கும் எல்லாக் காலங்களிலேயும் [8]புகழ்ச்சியும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் உண்டாயிருக்கக்கடவது —ஆமன்.

கி. பி. ௬௬.

[1] உரோ ௮ ௨௬ எபே ௬ ௰௮
[2] தீத் ௨. ௰௩ ௨ பே ௩ ௰௨
[3] ஆமோ ௪ ௰௧ சகரி ௩ ௨ ௧ கொரி ௩ ௰௫.
[4] உரோ ௰௧ ௰௪ ௧ தீமோ ௪ ௰௬
[5] சகரி ௩. ௪, ௫ வெளி ௩ ௪
[6] உரோ. ௰௬ ௨௫. எபே. ௩ ௨௰.
[7] உரோ ௰௬ ௨௭ ௧ தீமோ ௧ ௰௭ ௨ ௩
[8] கொலோ ௧ ௨௨

REVELATION.

தெய்வவசன போதகராகிய

யோவானுக்கு

வெளிப்படுத்தின விசேஷம்

க. அதிகாரம்.

க ஏழு பொன்விளக்குத் தண்டுகளுக்கு ஒப்பனையாக்கப்பட்ட ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு யோவான் அறிவிப்பை எழுதி, எ கிறிஸ்துவின் வருகையைக்குறித்தும், யச அவருடைய மகிமையுள்ள வல்லமையையும், மகத்துவத்தையும் குறித்தும் சொல்லியது

[1]சீக்கிரமாய் நடக்கவேண்டியவைகளைப் பராபரன் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்படிக்கு [2]இயேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும் இவர் வெளிப்படுத்தினதுமான விசேஷம், [3]அவர் தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானிடத்திற்குத் தம்முடைய தூதனை அனுப்பி, அவனால் அவைகளைக் குறிப்பாகக் காட்டினார்.

உ [4]அவன் பராபரனுடைய வசனமும் இயேசுக்கிறிஸ்து சாட்சியிட்ட விசேஷமுமாகிய [5]தான் கண்ட யாவற்றையும் அறிவித்திருக்கிறான்.

ங [6]காலம் சமீபமாயிருக்கிறது; ஆகையால் இந்தத் தீர்க்கதரிசனமான வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் [7]இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

ச ¶ யோவான் ஆசியாவிலுள்ள சபைகள் எழுக்கும் எழுதுகிறதாவது: [8]இருக்கிறவரும் [9]இருந்தவரும் வருகிறவருமானவராலும், [10]அவருடைய ஆசனத்திற்குமுன்பாக இருக்கிற எழு ஆவிகளாலும்,

ரு [11]உண்மையுள்ள சாட்சியும் [12]மரித்தோரிலிருந்து முதல் பிறந்தவரும் [13]பூமியின் இராசாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானசவுக்கியமும் உண்டாகக்கடவது; [14]நம்மிடத்தில் அன்புகூர்ந்து, [15]தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கள் அற நம்மைக் கழுவி,

சா தம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு (முன்பாக) நம்மைத் தமது [16]இராச்சியத்தாராகவும் ஆசாரியராகவும் செய்திருக்கிற [17]அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருக்கக்கடவது — ஆமென்.

எ ¶ [18]அதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் [19]அவ

கி. பி கூசா

1 வெளி ச க கூ வச
2 யோவா கூ கூஉ அ உகூ யஉ சகூ
3 வெளி உஉ மகூ
4 க கொரி க கூ வெளி கூ கூ மஉ மஎ கூவச
5 க யோ க க
6 உரோ மகூ மக யாக ரு அ க பே ச எ வெளி உஉ, ம
7 லூக் மக உஅ வெளி உஉ எ
8 உ மோ. கூ மச அ வச
9 யோவா க க
10 சகரி கூ கூ ச ம வெளி கூ க ச ரு ரு கூ
11 யோவா அ மச க தீமோ கூ மகூ வெளி கூ மச
12 க கொரி. மரு உம கொலோ க மஅ
13 எபே க உம வெளி மஎ மச மகூ மகூ
14 யோவா மகூ கூச மரு கூ

கலா உ உம — 15 எபி கூ மச கயோ க எ — 16 க பே உ ரு,கூ வெளி ரு ம உம கூ — 17 க தீமோ கூ மகூ எபி மரு உக க பே ச மக ரு மக — 18 தானி எ மகூ மத் உச கூம உ கூ கச அப க மக — 19 சகரி மஉ ம யோவா மகூ கஎ

ணைக் குத்தினவர்களும் (அவனைக் காண்பார்கள்); பூமியின் கோத்திரத்தார்கள் எல்லாரும் அவனைக்குறித்துத் துக்கத்தோடே புலம்புவார்கள்; மெய்யாய் அப்படி இருக்கும்.—ஆமென்.

௮ [1]இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் [2]நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

௯ ¶ உங்கள் சகோதரனுமாய், இயேசுக்கிறிஸ்துவின்நிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும், [3]அவருடைய இராச்சியத்திற்கும், பொறுமைக்கும் உங்களுடனே பங்காளனுமாய் இருக்கிற [4]யோவானாகிய நான், [5]பராபரனுடைய வசனத்தின்நிமித்தமும் இயேசுக்கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சிசொன்னதின்நிமித்தமும் பத்மு என்னப்பட்ட தீவிலே இருந்தேன்.

௰ (அங்கே) [6]கர்த்தருடைய நாளில் [7]ஆவிக்குள்ளானேன்.

௰௧ அப்பொழுது நீ காண்கிறதை ஒரு புத்தகத்திலே எழுதி ஆசியாவில் இருக்கிற எபேசு, சிமிருணு, பெருகமு, தியத்தைரா, சருதை, பிலதெல்பியா, இலவோதிக்கையா இவைகளில் உள்ள சபைகள் எழுக்கும் அனுப்பு என்று எனக்குப் பின்னாலே [8]எக்காளசத்தம்போன்ற மிகுந்த சத்தத்தைக் கேட்டேன்.

௰௨ ¶ அப்பொழுது என்னுடனே சத்தமிட்டுப் பேசினவரைப் பார்க்கத் திரும்பினேன்.

௰௩ திரும்பினபொழுது [9]ஏழு பொன் விளக்குத்தண்டுகளையும் ஏழு விளக்குத்தண்டுகளின் மத்தியிலே [10]நிலை அங்கியைத் தரித்து [11]மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த [12]மனிதகுமாரனுக்கு ஒப்பானவரையும் கண்டேன்.

௰௪ அவருடைய சிரசும் [13]மயிரும் வெண்மையான பஞ்சையும் உறைந்த மழையையும்போல வெண்மையாய் இருந்தன; [14]அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்போல இருந்தன.

௰௫ [15]அவருடைய கால்கள் உலைக்களத்தில் காய்கிற பிரகாசமுள்ள செம்பைப்போல இருந்தன; [16]அவருடைய சத்தம் பெருவெள்ள இரைச்சலைப்போல இருந்தது.

௰௬ அல்லாமலும் [17]அவர் வலதுகையிலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; [18]அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள கட்கம் புறப்பட்டது; [19]அவருடைய முகம் உச்சிக்காலத்திலே வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போல இருந்தது.

௰௭ [20]இப்படி அவரைக் கண்டபொழுது செத்தவனைப்போல அவருடைய பாதங்களிடத்தில் விழுந்தேன். அப்பொழுது [21]அவர் தமது வலதுகரத்தை என்மேல் வைத்து (என்னுடனே) சொன்னதாவது: நீ பயப்படவேண்டுவதில்லை; [22]நான் முந்தினவனும் பிந்தினவனும் [23]உயிருள்ளவனுமானவன்.

௰௮ நான் மரித்தும், இதோ [24]என்றென்றைக்கும் உயிரோடிருந்து, [25]மரணத்திற்கும் மரித்தோர் ஸ்தலத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவனாய் இருக்கிறேன்.

௰௯ ஆகையால் [26]நீ கண்டவைகளையும், [27]இருக்கிறவைகளையும், [28]இவைகளுக்குப் பின் நடப்பவைகளையும் எழுது.

௨௰ என்னுடைய வலதுகரத்தில் நீ கண்ட [29]நட்சத்திரங்கள் ஏழின்

கி. பி. ௯௬.

1 ௪ வச வெளி. ௪ ௮ ௰௧ ௰௭ ௰௬ ௫
2 ஏசா ௪௧ ௪ ௪௪ ௬ ௪௮ ௰௨ ௰௧, ௰௭ வச வெளி ௨ ௮ ௨௧ ௬ ௨௨ ௰௩
3 உரோ ௮ ௰௭ ௨ தீமோ ௨. ௰௨.
4 பிலி ௧ ௭ ௪ ௰௪ ௨ தீமோ ௧ ௮
5 வெளி ௬ ௯ ௨ வச
6 யோவா. ௨௰ ௨௬ அப ௨௰ ௭ ௧ கொரி ௰௬ ௨
7 அப ௰ ௰ ௨ கொரி ௰௨ ௨, வெளி ௪ ௨. ௰௭ ௩ ௨௧ ௰
8 வெளி ௪ ௧ ௰ ௮
9 வெளி ௨ ௧
10 தானி ௰ ௫
11 வெளி ௰௫ ௬
12 எசே ௧ ௨௬ தானி ௭ ௰௩ ௰ ௰௬ வெளி ௰௪ ௰௪
13 தானி ௭ ௯
14 தானி ௰ ௬ வெளி ௨ ௰௮ ௰௯ ௰௨
15 எசே ௧ ௭ தானி ௰ ௬ வெளி ௨ ௰௮
16 எசே ௪௩. ௨ தானி ௰ ௬ வெளி ௰௪ ௨ ௰௯ ௬
17 ௨௰ வச வெளி ௨ ௧ ௩ ௧
18 ஏசா ௪௯ ௨ எபே ௬ ௰௭ எபி ௪ ௰௨ வெளி ௨ ௰௨ ௰௬ ௰௯ ௰௫, ௨௧
19 அப ௨௬ ௰௩ வெளி ௰ ௧

---

20 எசே ௧ ௨௮.—21 தானி ௮ ௰௮ ௰ ௰—22 ஏசா ௪௧ ௪. ௪௪ ௬ ௪௮ ௰௨ வெளி ௨ ௮ ௨௨ ௰௩ ௰௧ வ.
23 உரோ ௬ ௯—24 வெளி ௪ ௯ ௫ ௰௪—25 சங ௬௮ ௨௰ வெளி ௨௰ ௧—26 ௰௨ வச.ழு.
27 வெளி ௨ ௧ ழு—28 வெளி ௪ ௧ ழு—29 ௰௬ வச

இரகசியத்தையும் [1]பொன்விளக்குத்தண்டுகள் ஏழின் குறிப்பையுமே எழுது; இந்த நட்சத்திரங்கள் ஏழும் சபைகள் ஏழினுடைய [2]தூதர்களாய் இருக்கின்றன; [3]நீ கண்ட விளக்குத்தண்டுகள் ஏழும் ஏழு சபைகளாய் இருக்கின்றன.

உ. அதிகாரம்.

க எபேசு, அ சிமிருணு, யஉ பெர்கமு, யஅ தியத்தைரா என்ற சபைகளின் ஊழியக்காரர்களாகிய தூதர்களில் புகழப்படத்தக்கதும், இகழப்படத்தக்கதும், இன்னவைகளென்று எழுதி அனுப்பும்படி உண்டான கட்டளையைச் சொல்லியது.

எபேசுபட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு எழுதவேண்டியதென்னவெனில், [4]ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, [5]ஏழு பொன்விளக்குத்தண்டுகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது:

உ [6]உன் கிரியைகளையும் உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களுக்கு இடங்கொடாமல் இருக்கிறதையும், அப்போஸ்தலர் அல்லாதவர்கள் [7]தங்களை அப்போஸ்தலர் என்று சொல்லுகிறதை [8]நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்,

௩ நீ பொறுமையைக் காத்துக்கொண்டுவருகிறதையும், என் நாமத்தினிமித்தம் [9]இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.

ச ஆனாலும் நீ ஆதியில் காட்டின அன்பை விட்டபடியால், உன்மேல் விசனமாய் இருக்கிறேன்.

ரு ஆகையால், நீ இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து விழுந்ததை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; [10]நீ மனந்திரும்பாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, உன் விளக்குத்தண்டை அதனிடத்தில்நின்று நீக்குவேன்.

சா [11]நிக்கோலாயின் மார்க்கத்தாரின் கிரியைகளைப் பகைக்கிறாய்; இது உன்னிடத்தில் உண்டு; அவைகளை நானும் பகைக்கிறேன்.

எ ¶ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [12]காதுள்ளவன் கேட்கக்கடவன்; செயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்குப் பராபரனுடைய பரதீசின் மத்தியில் இருக்கிற [13]சீவவிருட்சத்தின் கனியைப் [14]புசிக்கக்கொடுப்பேன் என்கிறார் என்று எழுது.

அ ¶ சிமிருணு பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், மரித்து உயிரோடிருக்கிற [15]முந்தினவரும் பிந்தினவருமானவர் சொல்லுகிறதாவது:

கூ [16]உன் கிரியைகளையும், உபத்திரவத்தையும் [17]ஐசுவரியமுள்ள உனக்கிருக்கிற தரித்திரத்தையும், [18]தங்களை யூதரென்று சொல்லியும் யூதராய் இராமல், [19]சாத்தானுடைய ஆலயமாய் இருக்கிறவர்கள் செய்கிற தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.

ய [20]உனக்கு வரும் துன்பங்களைக்குறித்து எவ்வளவாகிலும் பயப்படாதிருப்பாயாக; கேள், நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்; [21]ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது [22]சீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.

யக ¶ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [23]காதுள்ளவன் கேட்கக்கடவன்; செயங்கொள்ளுகிறவன் [24]இரண்டாம் மரணத்தால் சேதப்படுவதில்லை என்கிறார் என்று எழுது.

யஉ ¶ பெருகமு பட்டணத்தி

கி. பி. கூசு.

1 யஉ வச
2 மல்கி உ எ வெளி உ க ழ
3 சகரி ச உ மத். ரு யரு பிலி உ யரு
4 வெளி க யசு, உய
5 வெளி க யக
6 சங க கூ கூ, யரு, யசு வச வெளி ரு க, அ, யரு
7 உ கொரி யக யக உபே உக
8 க யோ ச க
9 கலா கூ கூ எபி யஉ, ரு, ரு
10 மத உக சக, சரு
11 யரு வச
12 மத் யக யரு யசு ரு, சரு யக யஎ, உகூ வச வெளி ரு கூ, யரு, உ௦ யரு கூ
13 க மோ உ கூ
14 வெளி உஉ உ யச
15 வெளி க அ, யஎ, யஅ
16 உ வச
17 லூக யஉ உக க தீமோ கூ யஅ யாக் உ ரு
18 உ கோ உ யஎ உஅ, உகூ கூ கூ
19 வெளி ரு கூ
20 மத் ய உஉ
21 மத் உச யரு
22 யாக் க யஉ வெளி ரு யக
23 எ வச வெளி யரு கூ
24 வெளி உய யச, உக அ

லுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [1]இருபுறமும் கருக்குள்ள கட்கத்தையுடையவர் சொல்லுகிறதாவது:

௰௩ [2]உன் கிரியைகளையும், [3]சாத்தானுடைய ஆசனம் இருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், சாத்தான் குடியிருக்கிற உங்களிடத்திலே எனக்கு உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலேயும் என்னைப்பற்றும் விசுவாசத்தை மறுதலியாமல், என்னுடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

௰௪ ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்மேல் விசனமாய் இருக்கிறேன்; [4]விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் [5]வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான கேடுகளை இஸ்ரவேல் புத்திரர்முன்பாகப் போடும்படிக்கு, [6]பாலாகென்பவனுக்குப் போதனைசெய்த பாலாமுடைய போதகத்தைப் பிடித்திருக்கிறவர்கள் உன்னிடத்தில் இருக்கிறார்கள்.

௰௫ அல்லாமலும் [7]நிக்கோலாவின் மார்க்கத்தாருடைய போதகத்தைப் பற்றிக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்தில் உண்டு.

௰௬ ஆகையால் நீ மனந்திரும்புவாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, [8]என் வாயின் கட்கத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.

௰௭ ¶ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [9]காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான கல்லையும், அந்தக் கல்லின்மேலே எழுதப்பட்டதுமாய், பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியாததுமாய் இருக்கிற [10]புதிய நாமத்தையும் கட்டளையிடுவேன் என்கிறார் என்று எழுது.

௰௮ ¶ தியத்தைரா பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [11]அக்கினிச் சுவாலையைப்போன்ற கண்களும் உருக்கிய செம்பைப்போன்ற கால்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது:

௰௯ [12]உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ பின்பு செய்த கிரியைகள் முந்தின கிரியைகளிலும் அதிகமாய் இருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

௨௰ ஆகிலும் (ஒன்றைக்குறித்து) உன்மேல் விசனமாய் இருக்கிறேன்; என்னவெனில், [13]வேசித்தனம்பண்ணும்படிக்கும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கும்படிக்கும், தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொள்ளுகிற [14]யேசபேலென்னும் ஸ்திரீ என்னுடைய ஊழியக்காரருக்குப் போதித்து வஞ்சிக்கிறாள்; அவளுக்கு நீ இடம் கொடுக்கிறாய்.

௨௧ [15]அவள் மனந்திரும்பும்படியாய்க் காலத்தை அவளுக்குக் கொடுத்தேன்; அவள் தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனந்திரும்ப விருப்பமில்லை.

௨௨ (ஆகையால்) கேள், அவளும் அவளுடனேகூட விபசாரம் செய்தவர்களும் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால், நான் அவளை ஒரு கட்டிலின்மேலும், இவர்களை மிகுந்த உபத்திரவத்திலேயும் போட்டு, அவளுடைய பிள்ளைகளைக் கொலை செய்வேன்.

௨௩ அப்பொழுது [16]நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் என்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்வார்கள்; அல்லாமலும், [17]உங்களில்

கி. பி. ௯௬.

1 வெளி ௧. ௰௬.
2 ௨ வச.
3 ௯ வச.
4 ௨௰ வச. அப. ௰௫. ௨௯. ௧ கொரி. ௮. ௯, ௰. ௰௯, ௨௰.
5 ௧ கொரி. ௬. ௰௩.
6 ௪ மோ. ௨௫. ௧. ௩௧. ௰௬. ௨ பே. ௨. ௰௫. யூதா ௰௧.
7 ௬ வச.
8 ஏசா. ௰௧. ௪. ௨ தெச. ௨. ௮. வெளி ௧. ௰௬. ௰௯. ௰௫, ௨௧.
9 ௭. ௰௧ வச.
10 வெளி ௩. ௰௨. ௰௯. ௰௨.
11 வெளி ௧. ௰௪, ௰௫.
12 ௨ வசனம்.
13 ௨ மோ. ௩௪. ௰௫. அப. ௰௫. ௨௰, ௨௯. ௧ கொரி. ௰. ௰௯, ௨௰. ௰௪ வச.
14 ௧ இரா. ௰௬. ௩௧. ௨௧. ௨௫. ௨ இரா. ௯. ௭.
15 ரோ. ௨. ௪. வெளி ௯. ௨௰.
16 ௧ சாமு. ௰௬. ௭. ௧ நாளா. ௨௮. ௯. ௨ நாளா. ௬. ௩௰. சங். ௭. ௯. எரே. ௰௧. ௨௰. ௰௭. ௰. ௨௰. ௰௨. யோவா. ௨. ௨௪, ௨௫. அப். ௧. ௨௪. ரோ. ௮. ௨௭.
17 சங். ௬௨. ௰௨. மத். ௰௬. ௨௭. ரோ. ௨. ௬. ௰௪. ௰௨. ௨ கொரி. ௫. ௰. கலா. ௬. ௭. வெளி ௨௰. ௧௨.

அவனவனுடைய கிரியைகளின்படியே யாவருக்கும் பதில்கொடுப்பேன்.

௨௪ இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், அவர்கள் சொல்லுகிறபடி சாத்தானுடைய ஆழங்களை அறிந்துகொள்ளாமலும் இருக்கிற தியத்தைராவிலுள்ள மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: [1]உங்கள்மேலே வேறொரு பாரத்தையும் போடமாட்டேன்.

௨௫ [2]உங்களுக்கு உண்டானதை நான் வருமளவும் பத்திரமாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்.

௨௬ செயங்கொண்டு [3]முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவனோ, [4]அவனுக்கு என்னுடைய பிதாவினிடத்தில் நான் பெற்றதுபோல, சனக்கூட்டங்கள்மேல் அதிகாரத்தைக் கொடுப்பேன்.

௨௭ [5]அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான்; அவர்கள் மண்கலங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

௨௮ அல்லாமலும் [6]விடிவெள்ளி நட்சத்திரத்தை அவனுக்குக் கொடுப்பேன்.

௨௯ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [7]காதுள்ளவனே கேட்கக்கடவனென்று எழுது.

௩. அதிகாரம்.

௧ சருதை சபையின் தூதன் கடிந்துகொள்ளப்பட்டு, ௨ குணப்படும்படி புத்திசொல்லப்பட்டு, குணப்படாமைக்குப் பயமுறுத்தப்பட்டது ௮. பிலதெல்பியா சபையின் தூதன், ௰ தன் சுறுசுறுப்புக்காகவும் பொறுமைக்காகவும் மெச்சிக்கொள்ளப்பட்டது ௰௪. இலவோதிக்கையா சபையின் தூதன் அனலும் குளிரும் இல்லாதிருந்ததினால் கடிந்துகொள்ளப்பட்டு, ௰௯ சுறுசுறுப்படையும்படி ஏவப்பட்டது ௨௰ கிறிஸ்து வாசலண்டையில் நின்று தட்டுகிறார் என்பது

௧ சருதை ஊரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், பராபரனுடைய [8]ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது: [9]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ உயிருள்ளவன் என்றுபேர்கொண்டிருந்தும், [10]செத்தவனாய் இருக்கிறாய்.

௨ உன் கிரியைகள் பராபரனுக்கு முன்பாக நிறைந்தவைகள் அல்லவென்று கண்டிருக்கிறேன்; ஆகையால் நீ விழித்துக்கொண்டு சாகிறதற்கு ஏதுவான மற்றவைகளை ஸ்திரப்படுத்துவாயாக.

௩ மேலும் [11]நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைத்துக் கைக்கொண்டு [12]மனந்திரும்புவாயாக; [13]நீ விழித்துக்கொள்ளாவிட்டால் திருடனைப்போல உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் நேரத்தை அறியாதிருப்பாய்.

௪ [14]தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத [15]சிலபேர் சருதை ஊரிலே உன்னோடே உண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் என்னுடனேகூட [16]வெண்மையான உடைகளைத் தரித்து நடப்பார்கள்.

௫ ¶ செயங்கொள்ளுகிறவன் [17]வெண்மையான வஸ்திரங்களால் உடுத்தப்படுவான்; நான் [18]சீவ புத்தகத்தில் [19]அவனுடைய நாமத்தைக் கிறுக்கிப்போடாமல், அதை என் பிதா முன்பாகவும் [20]அவருடைய தூதர் முன்பாகவும் அறிக்கைபண்ணுவேன்.

௬ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [21]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது.

௭ ¶ பிலதெல்பியா ஊரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [22]தாவீதின் திறவுகோலை உடையவருமாய், [23]ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவருமாய், [24]ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாய் இருக்கிற [25]பரி

இ. பி. ௯௬.

1 அப ௰௫ ௨௮
2 வெளி ௩ ௰௧
3 யோவா ௯ ௨௯ ௧ யோ ௩ ௨௩
4 மத ௰௯ ௨௮ லூக் ௨௨ ௨௯ ௩௰ ௧ கொரி ௬ ௩ வெளி ௩ ௨௧ ௨௰ ௪
5 சங் ௨ ௮, ௯ சங் ௰௪ தானி ௭. ௨௨ வெளி ௰௨ ௫ ௰௯ ௰௫
6 ௨ பே ௧ ௰௯ வெளி ௨௨ ௰௬
7 எ ௰௪
8 வெளி ௧ ௪ ௰௬ ௪ ௫ ௬
9 வெளி ௨ ௨
10 எபே ௨ ௧, ௫ ௧ தீமோ ௫ ௬
11 ௧ தீமோ. ௬ ௨௰ ௨ தீமோ ௧ ௰௩ ௰௧ ௰௪
12 ௰௯ ௰௪
13 மத ௨௪ ௪௨. ௪௩ ௨௫ ௰௩ மாற் ௰௩ ௩௩ லூக் ௰௨ ௩௯ ௪௰ ௧ தெச ௫ ௨, ௬ ௨ பே ௩ ௰ வெளி ௰௬ ௰௫
14 யூதா ௨௩
15 அப ௧ ௰௫
16 வெளி ௪ ௪ ௬ ௰௧ ௭ ௯, ௰௩
17 வெளி ௰௯ ௮
18 பிலி ௪ ௩ வெளி ௰௩ ௮ ௰௭ ௮ ௨௰ ௰௨ ௨௧ ௨௭
19 ௨ மோ ௩௨ ௩௨ சங் ௬௯ ௨௮
20 மத் ௰ ௩௨ லூக் ௰௨ ௮
21 வெளி ௨ ௭
22 ஏசா ௨௨ ௨௨ யோபு ௰௨ ௰௪ வெளி ௧ ௰௮
23 மத ௰௬ ௰௯
24 யோபு ௰௨ ௰௪ — 25 அப ௧. ௰௪

சுத்தமும் [1]சத்தியமும். உள்ளவர் சொல்லுகிறதாவது:

௮ [2]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், கொஞ்சபபெலன (மாத்திரம்) உனக்கு இருந்தும் நீ என்னுடைய நாமத்தை மறுதலியாமல் எனது வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, உனக்குமுன்பாகத் [3]திறநதிருக்கிற வாசலைக் கொடுத்தேன; அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

௯ கேள், யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய [4]சாத்தானுடைய ஆலயத்தாரில் (சிலரை) உனக்குத் தருகிறேன், கேள், அவாகள் உன் பாதஙகளுககுமுன்பாக வநது பணிநது, நான் உன்மேல அன்பாய் இருக்கிறதை அறிந்துகொள்ளும்படி [5]செய்வேன்.

௰ என்னுடைய பொறுமையைக குறித்துச் சொலலுகிற வசனத்தை நீ கைக்கொண்டபடியினாலே நானும் [6]பூமியின்மேல் குடியிருககிறவர்களைச் சோதிக்கும்படிக்கு, [7]பூச்சக்கரத்தின்மேல் எங்கும் வரும் சோதனைககாலத்திற்குத தபபும்படி [8]உன்னைக் காபபாற்றுவேன்.

௰௧ [9]சீக்கிரமாய் வருகிறேன், [10]ஒருவனும் உன் கிரீடததை எடுத்துக்கொள்ளாதபடிககு உனக்கு உள்ளதைப் [11]பததிரமாய்ப பற்றிக கொள்வாயாக.

௰௨ ¶ செயம்கொள்ளுகிறவனை நான் என் தேவனுடைய [12]ஆலயததிலே ஸ்தம்பமாக்குவேன், அதில்நின்று அவன் ஒருக்காலும் நீங்கான்; மேலும் என் தேவனுடையநாமத்தையும்என் தேவனால் வானத்திலிருந்து இறங்குகிற [13]புதிய எருசலேமாகிய என் தேவனுடைய பட்டணத்தின் நாமத்தையும், [14]எனது புதிய நாமத்தையும் [15]அவன்மேலே எழுதுவேன்.

௰௩ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [16]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது.

௰௪ ¶ இலவோதிக்கையா ஊரிலுள்ள* சபையின தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில, [17]உண்மையும் சததியமுமான சாட்சியுமாய், [18]பராபரனுடைய சிருட்டிகளுக்கு ஆதியுமாய் இருக்கிற [19]ஆமன் என்பவர் சொல்லுகிறதாவது:

௰௫ [20]உன் கிரியைகளை அறிநதிருககிறேன்; நீ குளிர்ச்சியுளளவனுமல்ல, அனலுளளவனுமல்ல, நீ குளிர்சசியையாவது அனலையாவது உள்ளவனானால் நலமாயிருக்கும.

௰௬ இபபடி நீ குளிர்சசியும் அனலும் இல்லாமல் வெதுவெதுபபுள்ளவனானபடியினாலே உன்னை என் வாயில்நின்றும வாந்திபண்ணுவேன்.

௰௭ நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரதபிககபபடத்தக்கவனும, எளியவனும குருடனும நிருவாணியாயும இருக்கிறதை அறியாமல, [21]நான் ஐசுவரியமுள்ளவன் என்றும், அதிக திரவியததைச் சம்பாதிததவன் என்றும், எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை என்றும் சொல்லுகிறாய்.

௰௮ ஆதலால் நான் உனக்கு ஆலோசனையாய்ச் சொல்லுகிறதாவது: நீ ஐசுவரியவானாகும்படிககு நெருபபிலே புடமிடபபட்ட பொன்னையும், உன் நிருவாணமாகிய அவலட்சணம் தோன்றாமல் இருக்கததக்கதாக நீ உடுத்திக்கொள்ளும்படிக்கு [22]வெண்மையான வஸதிரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வை அடையும்படிக்கு உன் கண்களுக்கு மாத்திரையைப் போடவும் [23]வேண்டுமென்று சொல்லுகிறேன்.

௰௯ [24]என்னால் சிநேகிக்கபபடுகிறவர்கள் எவர்களோ, அவர்களைக் கடிந்துகொண்டு தண்டிக்கி

கி. பி. ௯௬

1 ௧ யோ ௫ ௨௰ ௰௪ ௮௪ வெளி ௧ ௫ ௯ ௰ ௰௯, ௰௧
2 ௧, ௮௪
3 ௪ கொரி ௰௬ ௯ ௨ கொரி ௨ ௰௨
4 வெளி ௨ ௯
5 ஏசா ௪௯ ௨௩ ௬௰ ௰௪
6 ஏசா ௨௪ ௰௭
7 லூக் ௨ ௧
8 ௨ பே ௨ ௯
9 பிலி ௪ ௫ வெளி ௧ ௩ ௨௨ ௭, ௰௨, ௨௰
10 வெளி ௨ ௰
11 ௩ வச வெளி ௨ ௨௫
12 ௧ இரா ௭ ௨௧ கலா ௨ ௯
13 கலா ௪ ௨௬ எபி ௰௨ ௨௨ வெளி ௨௧ ௨, ௰
14 வெளி ௨௨ ௪
15 வெளி ௨ ௰௭ ௰௪ ௧ ௨௨ ௪
16 வெளி ௨ ௭
* அல்லது இலவோதிக்கேயாகாரரின
17 வெளி ௧ ௫ ௰௯ ௰௧ ௨௨ ௯ ௭ வச
18 கொலோ ௧ ௰௫
19 ஏசா ௬௫ ௰௬
20 ௧ வச.
21 ஓசே ௰௨ ௮ ௧ கொரி ௪ ௮
22 ௨ கொரி ௫ ௩ வெளி ௭ ௰௩ ௰௪ ௰௬ ௰௯ ௮
23 ஏசா ௫௫ ௧ மத் ௰௩ ௪௪
24 யோபு ௫ ௰௭ நீதி ௩ ௰௧ ௰௨ எபி ௰௨ ௫,௬ யாக் ௧ ௰௨

றேன்; ஆகையால் நீ சாக்கிரதையாயிருந்து மனம் திரும்பக்கடவாய்.

௨௰ இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; [1]ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக் கதவைத் திறந்தால், [2]அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே இராப்போசனம்பண்ணுவேன்; அவனும் என்னோடே இராப்போசனம்பண்ணுவான்.

௨௧ ¶ நான் செயம்கொண்டு என் பிதாவினுடைய ஆசனத்திலே அவரோடேகூட உளுக்கார்ந்ததுபோல செயம்கொள்ளுகிறவன் என்னுடைய ஆசனத்திலே என்னோடேகூட [3]உளுக்காரும்படி அருள்செய்வேன்.

௨௨ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [4]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது என்றார்.

௪. அதிகாரம்.

௧ யோவான் கண்ட பரமண்டலத்திலுள்ள பராபரனுடைய ஆசனத்தையும், ௪ இருபத்துநாலு மூப்பர்களையும், ௬. சர்வாங்கமும் கண்கள் நிறைந்த நாலு சீவன்களையும், ௰ மூப்பர்கள் தங்கள் கிரீடங்களைக் கழற்றி ஆசனத்தின்மேல் உளுக்கார்ந்திருக்கிறவரை வணங்கினதையுங்குறித்துச் சொல்லியது.

இவற்றிற்குப் பின்பு, அதோ வானத்திலே ஒரு வாசல் திறந்திருக்கக் கண்டேன்; அல்லாமலும் முன்னே நான் கேட்கும்படி எக்காளம்போல என்னுடனே [5]பேசின சத்தம் என்னுடனே சொன்னது: [6]இங்கே ஏறிவா, [7]இதற்குப் பின்பு சம்பவிக்கத்தக்கவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்றார்.

௨ ¶ உடனே [8]ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது வானத்தில் [9]ஒரு ஆசனம் வைக்கப்பட்டிருக்கவும், அந்த ஆசனத்தின்மேல் ஒருவர் உளுக்கார்ந்திருக்கவும் கண்டேன்.

௩ (அதில்) உளுக்கார்ந்திருந்தவர் பார்வைக்கு ரவாக்கல்லும் சிவப்புக்கல்லும்போலத் தோன்றினார்; அந்த [10]ஆசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதம்போலத் தோன்றிற்று.

௪ மேலும் [11]அந்த ஆசனத்தைச் சூழ இருபத்துநான்கு ஆசனங்களும் இருந்தன; அந்த ஆசனங்களின்மேலே [12]வெண்மையான வஸ்திரங்கள் தரிப்பிக்கப்பட்ட இருபத்துநான்கு மூப்பர்கள் உளுக்கார்ந்திருந்தார்கள்; [13]அவர்கள் தங்கள் சிரசுகளின்மேலே பொன்கிரீடங்களை உடையவர்களாய் இருந்தார்கள்.

௫ அன்றியும் அந்த ஆசனத்திலிருந்து [14]மின்னும், இடிமுழக்கங்களும், (மற்றச) சத்தங்களும் புறப்பட்டன; மேலும் [15]பராபரனுடைய ஏழு ஆவிகளாகிய [16]ஏழு தீவட்டிகள் ஆசனத்திற்குமுன்பாக எரிகிறவைகளாய் இருந்தன.

௬ மேலும் அந்த ஆசனத்திற்கு முன்பாகப் [17]பளிங்குக் கண்ணாடியைப்போன்ற கடல் இருந்தது; அதுவுமல்லாமல் [18]அந்த ஆசனத்தின் மத்தியிலும் ஆசனத்தின் சுற்றிலும் நான்கு சீவன்கள் இருந்தன; அவைகள் முன்புறமும் [19]பின்புறமும் கண்களால் நிறைந்தவைகளாய் இருந்தன.

௭ [20]முதலாம் சீவன் சிங்கத்திற்கு ஒப்பாகவும், இரண்டாம் சீவன் கன்றுக்குட்டிக்கு ஒப்பாகவும், மூன்றாம் சீவன் மனிதனைப்போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் சீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தன.

௮ அந்த நான்கு சீவன்களிலும் ஒவ்வொன்று [21]அவ்வாறு சிறகுகள் உள்ளவைகளுமாய், சுற்றிலும் [22]உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாய், [23]இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய [24]சர்வவல்லமையுள்ள தேவனாயிருக்கிற பராபரன் [25]பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று

கி. பி. ௯௬.

1 லூக் ௧௨ ௩௭
2 யோவா ௧௪ ௨௩
3 மத் ௧௯ ௨௮ லூக் ௨௨ ௩௰ ௧ கொரி ௬ ௨ ௨ தீமோ ௨ ௧௨ வெளி ௨ ௨௬, ௨௭
4 வெளி ௨ ௭
5 வெளி ௧ ௰
6 வெளி ௧௧ ௧௨
7 வெளி ௧ ௧௯ ௨௨ ௬
8 வெளி ௧ ௰ ௧௭ ௩ ௨௧ ௰
9 ஏசா ௬ ௧ எரே ௧௭ ௧௨ எசே ௧ ௨௬ ௰ ௧ தானி ௭ ௯
10 எசே ௧ ௨௮
11 வெளி ௧௧ ௧௬
12 வெளி ௩ ௪, ௫ ௬ ௧௧ ௭ ௯, ௧௩, ௧௪ ௧௯ ௧௪
13 ௰ ௪
14 வெளி ௮ ௫ ௧௧ ௧௯ ௧௬ ௧௮
15 வெளி ௧ ௪ ௩ ௧ ௫ ௬
16 ௨ மோ ௩௭ ௨௩ ௨ நாளா ௪ ௨௰ எசே ௧ ௧௩ சகரி. ௪ ௨
17 ௨ மோ ௩௮ ௮ வெளி ௧௫ ௨
18 எசே ௧ ௫
19 ௯ வச
20 எசே ௧ ௰ ௰ ௧௪
21 ஏசா ௬ ௨
22 ௮ வச
23 வெளி ௧ ௪
24 வெளி ௧ ௮
25 ஏசா ௬ ௩

இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொள்ளுகிறவைகளுமாய் இருந்தன.*

௯ ¶ மேலும் ஆசனத்தின்மேல் உளுக்கார்ந்திருந்து [1]என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவருக்கு அந்தச் சீவன்கள் துதியையும் கனத்தையும் தோத்திரத்தையும் செலுத்தும்பொழுது,

௰ [2]இருபத்துநான்கு மூப்பர்களும், ஆசனத்தின்மேல் உளுக்காந்தவருக்குமுன்பாக வணக்கமாய் [3]விழுந்து, என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, [4]தங்கள் கிரீடங்களை ஆசனத்தின்முன்பாக வைத்து,

௰௧ ஆண்டவரே, தேவரீர் [5]சகலத்தையும் சிருட்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருட்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கின்றன; ஆகையால், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் [6]பாத்திரமாயிருக்கிறீர் என்று புகழுகிறார்கள்.

௫. அதிகாரம்.

௧. ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட புத்தகத்தைத் திறக்க அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்மாத்திரமே பாத்திரரென்றும், ௰௨ அதினால் மூப்பர்கள் அவரைப் புகழ்ந்தது, ௯ இரத்தத்தினால் தங்களை மீட்டாரென்றும் அறிக்கைபண்ணினதைச் சொல்லியது

அன்றியும் அந்த ஆசனத்திலே உளுக்காந்தவருடைய வலதுகையிலே, உள்ளும்புறம்பும் எழுதப்பட்டும், [7]ஏழு முத்திரைகளாலே பத்திரப்படுத்தப்பட்டும் இருந்த [8]ஒரு புத்தகத்தைக் கண்டேன்.

௨ பலமுள்ள ஒரு தூதனையும் கண்டேன்; அவன் இந்தப் புத்தகத்தைத் திறக்கிறதற்கும் இதின் முத்திரைகளை உடைக்கிறதற்கும் பாத்திரர் யாரென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௩ வானத்திலாவது, பூமியின்மேலாவது, பூமியின்கீழாவது [9]ஒருவனும் அந்தப் புத்தகத்தைத் திறக்கவும் அதிலே நோக்கிப்பார்க்கவும் கூடாதிருந்தது.

௪ ஒருவனும் அந்தப் புத்தகத்தைத் திறந்து, அதில் நோக்கிப் பார்க்கிறதற்குப் பாத்திரனாகக் காணப்படாததினாலே நான் மிகவும் அழுதேன்.

௫ அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி, நீ அழவேண்டுவதில்லை; இந்தப் புத்தகத்தைத் திறந்து, [10]இதின் ஏழுமுத்திரைகளையும் உடைக்கும்படிக்குத் [11]தாவீதின் வேராகிய [12]யூதா கோத்திரத்தில் தோன்றிய சிங்கம் இதோ செயங்கொண்டிருக்கிறது என்றான்.

௬ ¶ அப்பொழுது நான் பார்த்து, ஆசனத்திற்கும் நான்கு சீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்கக்கண்டேன்; [13]அது அடிக்கப்பட்ட வண்ணமாகவும், ஏழு கொம்புகளையும் பூமி எங்கும் அனுப்பப்பட்ட பராபரனுடைய [14]ஏழாவிகளாகிய [15]ஏழு கண்களையும் உடையதாகவும் இருந்தது.

௭ மேலும் அது வந்து ஆசனத்தின்மேல் உளுக்காந்தவருடைய [16]வலதுகரத்தில் இருந்த புத்தகத்தை வாங்கிற்று.

௮ ¶ அந்தப் புத்தகத்தை அது வாங்கினபொழுது, [17]அந்த நான்கு சீவன்களும் இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் [18]சுரமண்டலங்களையும், [19]பரிசுத்தவான்களுடைய செபங்களாகிய தூபவருக்கங்களால் †நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டிக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து,

௯ தேவரீர் [20]அடிக்கப்பட்டு உம்முடைய இரத்தத்தினாலே [21]சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் தேசத்தாரிலும் (ம

கி. பி. ௯௬.

* கிரேக்கு, இரவும்பகலும சொல்லிக்கொண்டு ஓயாமலிருந்தன

[1] வெளி ௧. ௰௮ ௫ ௰௪ ௰௫ ௭

[2] வெளி ௫ ௮, ௰௪.

[3] ௯ வச

[4] ௪ வச

[5] ௧ மோ ௧ ௧ அப ௰௭ ௨௪ எபே. ௩ ௯ கொலோ ௧ ௰௬. வெளி ௰ ௬.

[6] வெளி ௫ ௰௨

[7] ஏசா. ௨௯. ௰௧. தானி ௰௨. ௪.

[8] எசே ௨ ௯,௰.

[9] ௰௩ வச

[10] ௧ வச வெளி. ௬ ௧

[11] ஏசா ௰௧ ௧,௰ உரோ. ௰௫. ௰௨ வெளி ௨௨ ௰௬

[12] ௧மோ ௪௯ ௯, ௰ எபி ௭ ௰௪

[13] ஏசா ௫௩. ௭ யோவா ௧ ௨௯, ௩௬ ௧ பே ௧ ௰௯ வெளி ௰௩ ௮. ௯, ௰௨ வச

[14] வெளி ௪ ௫

[15] சகரி ௩ ௯. ௪ ௰

[16] வெளி ௪ ௨

[17] வெளி ௪ ௮,௰

[18] வெளி ௰௪ ௨ ௰௫ ௨

[19] சங் ௱௪௧ ௨ வெளி ௮ ௩,௪

† அல்லது நறுநாற்றங்களால்.

[20] ௯ வச.

[21] தானி ௪ ௧ ௫ ௨௯ வெளி. ௭ ௯ ௰௪ ௬. ௯

றச்) சனக்கூட்டங்களிலும் [1]எங்களைப பராபரனுக்காக வாங்கிக் கொண்டு,

௰ [2]எ[illegible]ள், பராபரனுக்குமுன்பாக எங்களை இராசாக்களும் ஆசாரியரும் ஆக்கினீர்; நாஙகள் பூமியிலே ஆளுகைசெய்வோம்; ஆகையால் நீர் இந்தப் புத்தகத்தை வாஙகி இதின் முத்திரைகளை உடைககிறதற்குப் [3]பாத்திரராயிருக்கிறீர் என்று [4]புதிய பாட்டைப் பாடினார்கள்.

௰௧ பின்னும் நான் பார்த்தபொழுது, அந்த ஆசனத்தையும் சீவன்களையும் மூப்பர்களையும் [5]சூழ்ந்திருந்த அநேகம் தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; [6]அவர்களுடைய இலககம் பதினாயிரத்திற்குப பதினாயிரமும், ஆயிரத்திற்கு ஆயிரமுமாய் இருந்தது.

௰௨ அவர்களும், அடிககப்பட்ட ஆட்டுககுட்டியானவர் வல்லமையையும ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும, கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுககொள்ளுகிறதற்குப [7]பாததிரராயிருககிறார் என்று மிகுநத சத்தத்தோடே சொன்னார்கள்.

௰௩ அல்லாமலும்* [8]வானத்திலும் பூமியிலும பூமியின்கீழும இருக்கிற சிருட்டிகள் யாவும் சமுத்திரததின்மேல் உள்ளவைகளும் இவற்றினுள் அடங்கிய வஸதுக்கள் யாவும் [9]ஆசனத்தின்மேல் உளுக்காநதிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் [10]தோத்திரமும், கனமும, மகிமையும், வல்லமையும், என்றென்றைக்கும உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்.

௰௪ [11]அதற்கு நான்கு சீவன்களும், ஆமன் என்று சொல்லிற்று; மறுபடியும் அந்த இருபத்துநான்கு மூப்பர்களும் (வணக்கமாய்) விழுந்து [12]என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள்.

௬. அதிகாரம்.

௧ முத்திரைகள் ஒவவொன்றாய்த் திறக்கப்பட்ட போது, உலக முடிவுமட்டும் சம்பவிக்கப்போகிற காரியங்கள் தீர்க்கதரிசனமாய்க் குறிக்கப்பட்டது.

[13]பின்பு ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றைப் பேர்க்கக் கண்டேன்; அல்லாமலும் [14]நான்கு சீவன்களில் ஒன்று (என்னைநோக்கி,) நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போலச் சொல்லக் கேட்டேன்.

௨ அப்பொழுது நான் பார்க்கையில், [15]வெண்மையான குதிரையைக் கண்டேன்; [16]அதின்மேல் இருநதவன் வில்லைப பிடித்திருந்தான்; [17]அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் செயமுள்ளவனாய்ச் செயிக்கும்படிக்குப புறப்பட்டான்.

௩ ¶ பின்பு அவர் இரண்டாம் முத்திரையைப பேர்த்தபொழுது, [18]இரண்டாம் சீவனானது, நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

௪ [19]உடனே அக்கினி நிறமுள்ள வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் இருந்தவன் பூமியில உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப பூமியிலிருந்து எடுத்துப்போடுகிறதற்கு அதிகாரமும், ஒரு பெரிய கட்கமும அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

௫ ¶ பின்பு அவர் மூன்றாம் முத்திரையைப பேர்த்தபொழுது, [20]மூன்றாம் சீவனானது, நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன், உடனே நான் பார்க்கையில் [21]ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்; அதின்மேல் இருந்தவன் ஒரு தராசைத் தன் கையில் பிடித்திருந்தான்.

௬ அப்போது, உழக்குக் கோதுமைக்கு* ஒரு தேநாரிப்பணம், மூவுழக்கு வாற்கோதுமைக்கு ஒரு

கி. பி. ௯௬.

1 அப. ௨௰. ௨௮. ரோ. ௩. ௨௪. ௧ கொரி. ௬. ௨௰. ௭. ௨௩. எபே. ௧. ௭. கொலோ. ௧. ௰௪. எபி. ௯. ௰௨. ௧ பே. ௧. ௰௮, ௰௯. ௨ பே. ௨. ௧. ௧ யோ. ௧. ௭. வெளி. ௰௪. ௪.
2 ௨ மோ. ௰௯. ௬. ௧ பே. ௨. ௯. வெளி. ௧. ௬. ௨௰. ௬. ௨௨. ௫.
3 வெளி. ௪. ௰௧.
4 சங். ௪௰. ௩. வெளி. ௰௪. ௩.
5 வெளி. ௪. ௪, ௬.
6 சங். ௬௮. ௰௭. தானி. ௭. ௰. எபி. ௰௨. ௨௨.
7 வெளி. ௪. ௰௧.
8 பிலி. ௨. ௰, ௰௧.
9 வெளி. ௬. ௰௬. ௭. ௰.
10 ௧ நாளா. ௨௯. ௰௧. ரோ. ௯. ௫. ௰௬. ௨௭. ௧ தீமோ. ௬. ௰௬. ௧ பே. ௪. ௰௧. ௫. ௰௧. வெளி. ௧. ௬.
11 வெளி. ௰௯. ௪.
12 வெளி. ௪. ௯, ௰.
13 வெளி. ௫. ௫, ௬, ௭.
14 வெளி. ௪. ௭.
15 சகரி. ௬. ௩. வெளி. ௰௯. ௰௧.
16 சங். ௪௫. ௪, ௫.
17 சகரி. ௬. ௰௧. வெளி. ௰௪. ௰௪.
18 வெளி. ௪. ௭.
19 சகரி. ௬. ௨.
20 வெளி. ௪. ௭.
21 சகரி. ௬. ௨.

---

* அது ஒரு ஒயின குவாட்டையும அதில பனனிரணடில ஒனறையும குறிக்கும அளவு

தேநாரிப்பணமென்றும், [1]எண்ணெயையும் பழஇரசத்தையும் சேதப்படுத்தாதிருப்பாயாக என்றும் நான்கு சீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

௭ ¶ பின்பு அவர் நான்காம் முத்திரையைப் பேர்த்தபொழுது, [2]நான்காம் சீவனானது, நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.

௮ [3]உடனே நான் பார்க்கையில் மங்கின நிறமுள்ள குதிரையைக் கண்டேன்; அதின்மேல் இருந்தவனுக்கு மரணமென்றுபேர்; மரித்தோர் ஸ்தலம் அவனுடனேகூடச் சென்றது; [4]கட்கத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், [5]பூமியின் துஷ்டமிருகங்களினாலும் பூமியின் கால்பங்கில் உள்ளவர்களைக் கொலைசெய்யும்படிக்கு அதிகாரம் அவனுக்குக்* கொடுக்கப்பட்டது.

௯ ¶ பின்பு அவர் ஐந்தாம் முத்திரையைப் பேர்த்தபொழுது, [6]பராபரனுடைய வசனத்தினிமித்தமும் [7]தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய [8]ஆத்துமாக்களை [9]பலிபீடத்தின்கீழே கண்டேன்

௰ அவர்கள், [10]பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, [11]எதுவரைக்கும் [12]தேவரீர் நியாயத்தீர்ப்புக்கொடாமலும், பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்துப் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

௰௧ அப்பொழுது [13]அவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டதுமல்லாமல், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படுபவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்களுடைய சகோதரரும் வந்து நிறையுமளவும், பின்னும் [14]கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

௰௨ ¶ பின்பு அவர் ஆறாம் முத்திரையைப் பேர்க்கக்[illegible]டேன்; [15]உடனே பூமி மிகவும் அதிர்ந்தது; [16]சூரியனும் கம்பளியைப்போலக் கறுப்பாயிற்று; சந்திரன் முழுவதும் இரத்தம்போல ஆயிற்று.

௰௩ [17]வானத்தின் நட்சத்திரங்களும், பெருங்காற்றினால் அசைக்கப்பட்ட அத்திமரம் பருவமில்லாத† தன் காய்களை உதிர்க்கிறதுபோலப் பூமியிலே விழுந்தன.

௰௪ [18]வானமும் சுருட்டப்பட்ட புத்தகம்போலாகி விலகிப்போயிற்று; [19]மலைகள், தீவுகள், யாவும் தங்கள் இடங்களைவிட்டு விலக்கப்பட்டுப்போயின.

௰௫ மேலும் பூமியின் இராசாக்களும், பெரியோர்களும், சேனைத்தலைவர்களும், ஐசுவரியவான்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் [20]கல்மலைகளுக்குள்ளும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கல்மலைகளையும் நோக்கி,

௰௬ [21]அவருடைய கோபாக்கினை தோன்றுகிற பெரியநாள் வந்திருக்கின்றதே; [22]நிலைநிற்கத் திராணியுள்ளவன் யாவன்?

௰௭ ஆகையால் [23]நீங்கள் எங்கள்மேல் விழுந்து, ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியின் கோபத்திற்கும் எங்களை மறைத்து அடக்குங்கள் என்று கூப்பிட்டார்கள்.

௭. அதிகாரம்.

௧ ஒரு தூதன் பராபரனுடைய அடியார்களின் நெற்றிகளில் முத்திரைபோட்டதையும், ௪ இஸ்ரவேல் கோத்திரங்களில் முத்திரைபோடப்பட்டவர்களின் இலக்கத்தையும், ௯ மற்றச் சாதிகளில் எண்ணிலலாத திரளான கூட்டம் ஆசனத்துக்கு முன்பாக வெண்மையான வஸ்திரம் தரித்துத் தங்கள் கைகளில் குருத்தோலைகள் பிடித்து நின்றதையும், ௰௪ அவர்கள் வஸ்திரங்கள் ஆட்டுக்

இ பி. ௯௬.

1 வெளி ௯ ௪.
2 வெளி ௪ ௭
3 சகரி ௬ ௩
4 எசே ௰௪ ௨௧
5 ௩ மோ. ௨௬. ௨௨.
* அல்லது அவர்களுக்கு
6 வெளி ௮ ௩
7 ௨ தீமோ ௧ ௮ வெளி ௰௨ ௰௭ ௰௯ ௰
8 வெளி ௨௰ ௪
9 வெளி ௮ ௩ ௯ ௰௩ ௰௪ ௰௮
10 வெளி ௩ ௭
11 சகரி ௧ ௰௨
12 வெளி ௰௧ ௰௮ ௰௯ ௨
13 வெளி ௩ ௪, ௫ ௭ ௯, ௰௪
14 எபி. ௰௧ ௪௰ வெளி ௰௪ ௰௩
15 வெளி ௰௬ ௰௮
16 யோவே ௨ ௰, ௩௧ ௩ ௰௫ மத் ௨௪ ௨௯ அப ௨ ௨௰
17 வெளி ௮ ௰ ௯ ௧
† அல்லது பிஞ்சான
18 சங் ௱௨. ௨௬ ஏசா ௩௪ ௪ எபி ௧, ௰௨, ௰௩
19 எரே ௩ ௨௩ ௪ ௨௪ வெளி. ௰௬ ௨௰
20 ஏசா ௨ ௰௯
21 ஏசா ௰௩ ௯ செப ௧ ௰௪ மீ வெளி ௰௬ ௰௪.
22 சங் ௭௬ ௭
23 ஓசே. ௰ ௮ லூக் ௨௩ ௩௰ வெளி ௯ ௬.

குட்டியின் இரத்தத்தில தோயக்கபபட்டதென்றதையும் சொல்லியது.

அவற்றிற்குப் பின்பு பூமியின் நான்கு திசைகளிடத்திலும் நான்கு தூதர்கள் நின்று, [1]ஒரு காற்றுகிலும் பூமியின்மேலாவது சமுத்திரத்தின்மேலாவது ஒரு மரத்தின் மேலாவது அடியாதபடிக்கு, [2]பூமியின் நான்கு காற்றுக்களையும் பிடித்திருக்கக்கண்டேன்.

௨ ¶ மேலும் சீவனுள்ள பராபரனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதனைச் சூரியன் உதிக்குந் திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன் பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி,

௩ [3]நாம் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் [4]முத்திரைபோட்டுத் தீருமளவும், [5]பூமியையும் சமுத்திரத்தையும் மரஙகளையும் சேதபபடுத்தாதிருங்கள் என்று மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

௪ ¶ [6]மேலும் முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைக் கேட்டேன்; இஸ்ரவேல் சந்ததியாராகிய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் [7]௱௪௰௪௲-பேர்.

௫ அதற்கு வகை, யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; ரூபேன் கோத்திரத்தில் முத்திரைபோடபபட்டவர்கள் ௰௨௲-பேர்; காத்கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்.

௬ ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; நவுதலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்.

கி. பி. ௯௬.

1 வெளி ௯. ௪
2 தானி ௭. ௨.
3 வெளி ௨௨. ௪
4 எசே ௯. ௪. வெளி ௰௪ ௧
5 வெளி ௬, ௬ ௯ ௪
6 வெளி ௯ ௰௬
7 வெளி ௰௪ ௧
8 வெளி ௫ ௯
9 உரோ ௰௧ ௨௫
10 வெளி. ௩ ௫, ௰௮ ௪ ௪ ௬. ௰௧ ௰௪ வசனம்
11 சங ௬. ௮, ஏசா ௬௬. ௰௧ எரே ௬ ௨௬. ஓசே ௰௬. ௪ வெளி ௰௯ ௧
12 வெளி ௫ ௰௩.
13 வெளி ௪. ௬
14 வெளி ௫ ௰௩, ௰௪

௭ சிமெயோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; ஈசஷார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்.

௮ செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; யோசேப்புக் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்; பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் ௰௨௲-பேர்.

௯ ¶ இவற்றிற்குப்பின்பு நான் பார்த்து, [8]சகல தேசத்தாரிலும் கோத்திரங்களிலும் (மற்றச்) சனக்கூட்டங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததுமாய், [9]ஒருவனும் எண்ணக்கூடாததுமாய் இருந்த திரளான கூட்டமாகிய [10]சனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்தவர்களாய் ஆசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

௰ மேலும் அவர்கள் [11]இரட்சிப்பின் (சனம்) [12]ஆசனத்தின்மேல் உளுக்காருகிற எங்கள் பராபரனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் செலுத்தப்படக்கடவதென்று மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

௰௧ அல்லாமலும் [13]தூதர்கள் யாவரும் ஆசனத்தையும் மூப்பரையும் நான்கு சீவன்களையும் சூழநின்று; ஆசனத்திற்குமுன்பாகச் சாஷ்டாங்கமாய் விழுந்து பராபரனைத் தொழுதுகொண்டு,

௰௨ [14]ஆமன், எங்கள் பராபரனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் என்றென்றைக்கும் உண்டாகக்கடவது, ஆமன் என்றார்கள்.

௰௩ ¶ அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னைநோக்கி, [1]வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான்?

௰௪ அதற்கு நான் என் ஆண்[illegible]வனே, அது உமக்குத் தெரியும் என்றேன்; அப்பொழுது அவன் சொன்னதாவது: [2]இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; [3]இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

௰௫ ஆனபடியால் இவர்கள் பராபரனுடைய ஆசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும்பகலும் அவருடைய ஆலயத்திலே அவருக்குப் பணிவிடைசெய்வார்கள்; [4]ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

௰௬ [5]இனி இவர்கள் பசியடைவதுமில்லை; தாகம் அடைவதுமில்லை; [6]வெயிலாவது மற்றெந்த உட்டணமாவது அவர்கள்மேல் படுவதுமில்லை.

௰௭ ஆசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே [7]அவர்களை மேய்த்து, அவர்களைச் சீவதண்ணீருள்ள ஊற்றுகளினிடத்திற்கு நடத்துவார்; இவர்களுடைய கண்ணீர் யாவையும் [8]பராபரன் துடைப்பார் என்றான்.

௮. அதிகாரம்.

௧ ஏழாம முத்திரை திறக்கபபட்டபோது, ௨ ஒவவொரு எக்காளத்தைப பிடித்த ஏழு தூதாகள தோன்றி, ௬ அவர்களில் நாலுபோ எக்காளஙகளை ஊதினபோது பெரிய வாதைகள உண்டானதையும, ௩ மற்றொரு தூதன பொற்பீடத்தின்மேலுளள பரிசுத்தவானகளின ஜெபஙகளோடே சுகந்தவர்க்கங்கள் இட்டதையும் சொலலியது.

[9]பின்பு அவர் ஏழாம் முத்திரையைப் பேர்த்தபொழுது பரமண்டலத்திலே ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

௨ ¶ மேலும், [10]பராபரனுக்கு முன்பாக நின்ற ஏழு தூதர்களையும் கண்டேன்; [11]அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்[illegible]பட்டன.

௩ வேறொரு தூதனும் தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துவந்து பலிபீடப்படியிலே நின்றான்; அல்லாமலும், [12]ஆசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேலே [13]பரிசுத்தவான்கள் எல்லாருடைய செபங்களுடனேயும் கூடக் கொடுக்கும்படிக்கு, * அநேக சுகந்தவருக்கங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

௪ அப்படியே பரிசுத்தவான்களுடைய செபங்களுடனேகூடச் [14]சுகந்தவருக்கங்களின் புகை தூதனுடைய கையிலிருந்து பராபரனுக்குமுன்பாக எழும்பிற்று.

௫ பின்பு அந்தத் தூதன் தூபக்கலசத்தை எடுத்துக்கொண்டு அதைப் பலிபீடத்திலுள்ள நெருப்பினால் நிரப்பி, பூமியில்† கொட்டினான்; உடனே [15]சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், [16]பூமி அதிர்தலும் உண்டாயின.

௬ ¶ பின்பு ஏழு எக்காளங்களை உடைய ஏழு தூதர்கள் எக்காளத்தை ஊதுகிறதற்கு எத்தனம் பண்ணினார்கள்.

௭ ¶ முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; [17]அப்பொழுது இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகித் [18]தரையிலே கொட்டப்பட்டன; அதினாலே [19]மரங்களில் மூன்றில் ஒருபங்கு வெந்துபோயிற்று; பசும்புல் எல்லாம் எரிந்துபோயிற்று.

௮ ¶ இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் வேகிற [20]ஒரு பெரிய பருவதம்போலானது சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினாலே

கி. பி. ௯௬.

1 ௯ ௰௪
2 வெளி ௬ ௯ ௰௭ ௬
3 ஏசா க ௰௮ எபி ௯ ௰௪ க யோ க ௭ வெளி க ௫. சகரி ௩ ௩, ௪, ௫
4 ஏசா ௪ ௫, ௬ வெளி உக ௩
5 ஏசா ௪௯ ௰
6 சங ௱உக ௬ வெளி உக ௪
7 சங உ௩ க ௩௯ அ யோ வா ௰ ௰க, ௰௪
8 ஏசா உ௫ ௮ வெளி உக ௪
9 வெளி ௬ க
10 மத ௰௮ ௰ லூக் க ௰௯
11 உ நாளா உ௯ உ௫–உ௮
12 உ மோ ௩௰, க வெளி ௯ ௯
13 வெளி ௫ ௮
* அல்லது சேர்க்கும்படிக்கு.
14 சங ௱௪க உ லூக க ௰
† அல்லது பூமியின்மேல்
15 வெளி ௰௯ ௰௮
16 உ சாமு உஉ ௮ க இரா ௰௯ ௰க. அப ௪ ௩க.
17 எசே ௩௮ உஉ
18 வெளி ௰௯ உ.
19 ஏசா உ ௰௩ வெளி ௯ ௪
20 எரே ௫க உ௫ ஆமோ ௭ ௪

[1]சமுத்திரத்தின் மூன்றில் ஒருபங்கு [2]இரத்தமாயிற்று.

௯ [3]சமுத்திரத்தில் இருந்த சீவனுள்ள சிருட்டிகளில் மூன்றில் ஒருபங்கு செத்துபபோயிற்று; கபபல்களில்மூன்றத்தொருபங்கு அழிந்தது.

௰ ¶ மூன்றும் தூதன் எக்காளம் ஊதினன்; [4]அபபொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து விழுந்தது; [5]அது ஆறுகளில் மூன்றத்தொருபங்கின்மேலும் நீரூற்றுகள்மேலும் விழுந்தது.

௰௧ [6]அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று போ; [7]இதினலே தண்ணீரில் மூன்றததொருபஙகு எட்டியைபபோலக் கசபபாயிற்று; இபபடிக கசபபான தண்ணீரினலே மனிதரில் அநேகா செத்தாாகள்.

௰௨ ¶ [8]நான்காம் தூதன் எக்காளம் ஊதினன்; அபபொழுது சூரியனில் மூன்றத்தொருபங்கும் சந்திரனில் மூன்றத்தொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றததொருபங்கும் சேதப்படுத்தபபட்டன; அதினலே அவற்றவற்றின் மூன்றில் ஒருபங்கு இருள் அடைந்தது; பகலிலும் மூன்றில் ஒருபங்கு பிரகாசமில்லாமல் இருந்தது; இரவிலும் அபபடியே ஆயிற்று.

௰௩ ¶ பின்பு [9]ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்; அவன் இனிமேல் எக்காளம் ஊதவேண்டிய மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு [10]ஐயோ, ஐயோ, ஐயோ, வேதனைவரும் என்று மிகுநத சத்தமிட்டுக் கூப்பிடக்கேட்டேன்.

௯. அதிகாரம்.

ஐநதாம தூதன் எக்காளத்தை ஊதினபோது, வானத்திலிருநது விழுநத நட்சத்திரமென்னும் சாத்தானுக்குப் பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டதையும், ௨. அவன் பாதாளத்தைத் திறந்தவுடனே தேளகளைபபோல வெட்டுக்கிளிகள் புறபபட்டதையும, ௰௨. ஒருஐயோ முதலாவது வாதை கடந்துபோனதையும், ௰௩. ஆறும் எக்காளம ஊதபபட்டதையும, ௰௪ கட்டபபட்டிருநத நாலு தூதாகள் விடுவிடபபட்டதையும் சொல்லியது

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினன்; அப்பொழுது [11]வானத்திலிருநது பூமியின்மேல் விழுந்த நட்சதிரததைக் கண்டேன்; அதற்குப் [12]பாதாளமாகிய குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

௨ அது பாதாளக்குழியைத திறந்தது; [13]உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல, அநதக் குழியிலிருநது புகை எழுமபிற்று; அந்தக குழியின் புகையினலே சூரியனும் ஆகாயமும் அநதகாரபபட்டன.

௩ அல்லாமலும் அந்தப புகையிலிருநது [14]வெட்டுககிளிகள் புறபபட்டுப் பூமியின்மேல் வந்தன; [15]அவைகளுக்குப் பூமியின் தேள்களுககு உணடாயிருக்கிற அதிகாரத்திற்கு ஒபபான அதிகாரம் கொடுக்கபபட்டது.

௪ மேலும் அவைகள் [16]பராபரனுடைய முத்திரையை நெற்றிகளில் தரியாத மனிதரைமாத்திரமே அன்றி, [17]பூமியின் புல்லையும் பசுமையான எந்தப பூண்டையும் எந்த மரத்தையும் [18]சேதப்படுத்தாதபடிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுககபபட்டது.

௫ மேலும் அவர்களைக் கொலை செய்யும்படிக்கு அல்ல, [19]ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப் படுத்துமபடிக்கே அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனிதரைக் கொட்டும் பொழுது உண்டாகும் வேதனையைப்போல இருக்கிறது.

௬ அந்நாள்களில் [20]மனிதர்கள் மரணத்தைத் தேடி அதைக் காணதிருப்பார்கள்; மரிக்க ஆசைப்படு

கி. பி. ௯௬..

1 வெளி ௰௬ ௩.
2 எசே ௪௭ ௯.
3 வெளி ௰௬ ௩
4 ஏசா ௰௪ ௰௨
வெளி ௯ ௧
5 வெளி ௰௬ ௪
6 ரூத ௧ ௨௰
7 ௨ மோ ௰௫
௨௩ எரே ௯
௰௫ ௨௩. ௰௫
8 ஏசா. ௰௩ ௰
ஆமோ அ ௯
9 வெளி ௰௪ ௯
௰௯ ௰எ
10 வெளி ௯ ௰௨
௰௧ ௰௪
11 லூக் ௰ ௰௮
வெளி ௮ ௰
12 லூக் ௮ ௩௧
வெளி ௰௭ ௮
௨௰ ௧ ௨, ௰௧
௰௪
13 யோவே ௨
௨, ௰
14 ௨ மோ.௰, ௪
நியா எ, ௰௨
15 ௰ ௰௪
16 வெளி ௭ ௩
௨ மோ ௰௨
௨௩ எசே ௯
௪
17 வெளி ௮ ௭
18 வெளி ௯ ௯
௭ ௩
19 வெளி, ௰௧ ௭
௰ ௰௪
20 யோபு ௩ ௨௧
ஏசா ௨ ௰௯
எரே. ௮ ௩.
வெளி ௬ ௰௬

வார்கள்; மரணம் அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.

௭ மேலும் ¹அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு எத்தனமாக்கப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; ²அவைகளின் தலைகள்மேல் பொற்கிரீடங்களைப் போன்றவைகள் இருந்தன; ³அவைகளின் முகங்கள் மனிதருடைய முகங்களைப்போல இருந்தன. அவைகளின் மயிர் ஸ்திரிகளுடைய மயிர்போல இருந்தது.

௮ ⁴அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்களைப்போல இருந்தன.

௯ அல்லாமலும் மார்பில் இருப்புக கவசங்களைப்போல, கவசங்கள் அவைகளுக்கு இருந்தன; அவைகள் சிறகுகளினால் செய்த இரைச்சல் யுத்தத்திற்குச் செல்லுகிற ⁵அநேகம் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலைபபோல இருந்தது.

௰ மேலும் அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாய் இருந்தன; இப்படி அவைகள் ஐந்துமாதமளவும் ⁶மனிதரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரததை உடையவைகளாய் இருந்தன.

௰௧ அன்றியும் ⁷பாதாளத்தின் தூதன் ⁸அவைகளுக்கு இராசனாயிருக்கிறான்; அவனுக்கு எபிரேயு பாஷையிலே அப்தோன் என்றும், கிரேக்கை பாஷையிலே அப்பொல்லியோன்* என்றும் பேருண்டாயிருக்கின்றன.

௰௨ ¶ ⁹முதல்வேதனை போயிற்று; இதற்குப்பின்பு வேறிரண்டு வேதனைகள் அதோ வருகின்றன.

௰௩ ¶ ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது, பராபரனுக்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒருவன் எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி,

௰௪ ¹⁰நீ ஐபிராத்தென்னும் பெரிய ஆற்றினிடத்திலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதரை அவிழ்த்துவிடு என்று சத்தமிட்டுச் சொல்லக்கேட்டேன்.

௰௫ உடனே அந்த நாலு தூதர்களும் அவிழ்த்துவிடபபட்டார்கள்; அவர்கள் மனிதர்களில் மூன்றத்தொருபங்கைக் கொலைசெய்யும்படிக்கு ஒருமணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும்† எத்தனமாக்கபபட்டு இருந்தவர்கள்.

௰௬ ¹¹குதிரைச் சேனைகளான ¹²இராணுவங்களின் தொகை இருபது கோடியாய் இருந்தது; ¹³அவைகளின் தொகையைக் கேட்டேன்.

௰௭ தரிசனையிலே குதிரைகளையும் அவைகளின்மேல் இருந்தவர்களையும் எப்படிக் கண்டேன் என்றால், அவர்கள் அக்கினி நிறமும் பதுமராக நிறமும் கந்தக நிறமுமான மார்பின் கவசங்களை உடையவர்கள்; ¹⁴குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களுடைய தலைகளைப்போல இருந்தன; ¹⁵அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன.

௰௮ அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் என்ற இம்மூன்றினாலும் மனிதரில் மூன்றத்தொரு பங்கு கொலைசெய்யப்பட்டார்கள்.

௰௯ அந்தக் குதிரைகளுடைய வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கின்றது; எப்படியெனில், அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகள்

கி. பி. ௯௬.

1 யோவே ௨ ௪.
2 நாகூ. ௩. ௰௭
3 தானி ௭ ௮
4 யோவே ௧ ௬
5 யோவே ௨ ௪ ௫, ௭.
6 ௫ வச
7 ௧ வச
8 எபே ௨ ௨
* அதாவது சங்காரன,
9 வெளி ௮ ௰௩
10 வெளி ௰௬ ௰௨
† அல்லது மூன்றத்தொரு பங்கை ஒரு மணிநேரத்திலும் கொலைசெய்யும்படிக்கு
11 எசே ௩௮ ௪
12 சங ௬௮ ௰௭ தானி ௭ ௰
13 வெளி ௭ ௪
14 ௧ நாளா ௰௨ ௮ ஏசா ௫ ௨௮, ௨௯.
15 ஏசா ௯ ௰௩

உள்ளவைகளாயும் இருக்கின்றன, அவைகளாலே சேதம் செய்கின்றன.

உ௰ அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொலையுண்ணாத மற்ற மனிதர்கள் [1]தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டுக் குணப்படவில்லை, அவர்கள் பின்னும் [2]பேய்களையும், [3]பொன், வெள்ளி, செம்பு, கல், மரத்தால் செய்யப்பட்டவைகளாயும், காணவும் கேட்கவும் நடக்கவும்மாட்டாதவைகளாயும் இருக்கிற விக்கிரகங்களையும் தொழுதுகொண்டுவந்தார்கள்.

உக அல்லாமலும் அவர்கள் தங்கள் கொலைபாதகங்களையும், [4]தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டுக் குணப்படவில்லை.

௰. அதிகாரம்.

க வல்லமையுள்ள ஒரு தூதன் தன் கையிலே திறக்கப்பட்ட புத்தகத்தோடே காணப்பட்டு, சு. இனிக்காலம் இராதென்று என்றென்றைக்கும் ஜீவிக்கிறவர்மேல் ஆணையிட்டதையும், கூ யோவான் அந்தப் புத்தகத்தை எடுத்துச் சாப்பிடும்படி கட்டளைபெற்றதையும் சொல்லியது

பின்பு பலமுள்ள வேறொரு தூதன் இறங்கக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது; [5]அவனுடைய சிரசின்மேல் வானவில் இருந்தது; [6]அவனுடைய முகம் சூரியனைப்போலவும், [7]அவனுடைய கால்கள் அக்கினித் தூண்களைப்போலவும் இருந்தன.

உ மேலும் விரிக்கப்பட்ட ஒரு சிறிய புத்தகத்தை அவன் தன் கையில் பிடித்துக்கொண்டு, [8]தன்னுடைய வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும் இடதுபாதத்தைத் தரையின்மேலும் வைத்து,

௩ சிங்கம் முழங்குகிறதுபோல மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டான்; அவன் கூப்பிட்டபொழுது, [9]ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழக்கின.

ச அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழக்கினபொழுது, நான் (அதை) எழுதவேண்டுமென்று இருந்தேன்; அப்பொழுது [10]ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைப்படுத்து என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்.

ரு அன்றியும் நான் சமுத்திரத்தின்மேலும் தரையின்மேலும் நிற்கக்கண்ட தூதன் [11]தன்னுடைய கையை வானத்திற்கு நேராக உயர்த்தி, இன்னம் காலம் வர (இல்லை).

சு பூராபரன தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி ஏழாம் தூதன் எக்காளத்தை ஊதும் சத்தத்தின் [12]நாட்களிலே [13]அவருடைய இரகசியம் நிறைவேறும் என்று,

எ [14]வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும், அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருட்டித்தவராயும் என்றென்றைக்கும் பிழைக்கிறவராயும் இருக்கிறவர் மேலே ஆணையிட்டுக் (கூப்பிட்டான்)

அ ¶ பின்பு நான் [15]கேட்கும்படி, வானத்திலிருந்து சத்தமிட்டவன் மறுபடியும் என்னுடனே சொன்னது: சமுத்திரத்தின்மேலும் தரையின்மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கிற விரிக்கப்பட்ட சிறிய புத்தகத்தை நீபோய் வாங்கிக்கொள் என்றான்.

கூ அந்தப்படி நான் தூதனிடத்தில் போய், இந்தச் சிறிய புத்தகத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் என்றேன்; அப்பொழுது அவன் என்னை நோக்கி, [16]நீ இதை எடுத்து விழுங்கு; உன் வயிற்றிற்கு இது கசக்கப்பண்ணும்; ஆகிலும் உன் வாய்க்கு

கி. பி. கூசு.

[1] இ மோ கக உக.

[2] க மோ ௰ எ இ மோ கஉ ௰ சஎ நக கஎ க கொரி ௰ உ௰.

[3] சங் ௱௰இ ச ாகஇ ௰இ தானி இ உக

[4] வெளி. உஉ ௰இ

[5] எசே க. உஅ

[6] மத் ௰எ உ வெளி. க ௰சு

[7] வெளி க ௰இ

[8] மத உஅ ௰அ

[9] வெளி அ இ

[10] தானி அ உசு. ௰உ. ச, கூ.

[11] உமோ கூ அ தானி ௰உ எ

[12] வெளி. ௰க ௰இ

[13] தானி ௰உ எ வெளி. ௰கூ ௰எ

[14] நெகே கூ சு வெளி ச ௰க ௰ச எ

[15] ச வச

[16] எரே ௰இ ௰சு எசே உ அ ௩, க, உ, ௩

இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்.

௰ அப்படி நான் அந்தச் சிறிய புத்தகத்தைத் தூதனுடைய கையில் வாங்கி அதை விழுங்கினேன்; [1]என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாய் இருந்தது; நான் அதை விழுங்கினபின்பு [2]என் வயிறு மிகுந்த நோய்பட்டது.

௰௧ அப்பொழுது அவன் என்னுடனே சொன்னது: நீ மறுபடியும் அநேக சனக்கூட்டங்களையும், தேசத்தாரையும், பாஷைக்காரரையும், இராசாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்றான்

௰௧. அதிகாரம்.

௩ இரண்டு சாட்சிகள் தீர்க்கதரிசனம் சொன்னதையும், ௬. அவர்கள் மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அதிகாரம் உள்ளவர்களாயிருந்ததையும், ௭ மிருகம் அவர்களோடே எதிர்த்து, அவர்களைக் கொன்றதையும், ௮ அவர்கள் உடல்கள் அடக்கம்பண்ணப்படாமல் கிடந்து, ௰௧ மூன்றரைநாளுக்குப் பின்பு எழுந்திருந்ததையும், ௰௪ இரண்டாம் வாதை நடந்துபோனதையும், ௰௫ ஏழாம் எக்காளம் ஊதப்பட்டதையும் சொல்லியது

பின்பு [3]ஒரு தடிக்கு ஒப்பான அளவுகோலை (ஒருவன்) எனக்குக் கொடுத்துச் சொன்னதாவது: [4]நீ எழுந்து, பராபரனுடைய ஆலயத்தையும் பலிபீடத்தையும், அதிலே தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்து பார்த்துக்கொள்.

௨ [5]ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிரகாரம் [6]புறத்தேசத்தாருக்குக் கொடுக்கப்பட்டபடியால், அதை அளவாமல் தள்ளுவாயாக;* [7]பரிசுத்தபட்டணத்தை அவர்கள் [8]நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.

௩ ஆகிலும் என்னுடைய [9]இரண்டு சாட்சிகளும் இரட்டுச்சேலை உடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய் [10]ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் [11]தீர்க்கதரிசனம் சொல்லும்படிக்கு, அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பேன்.†

௪ அவர்களே பூமியின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற [12]இரண்டு ஒலிவமரங்களும், இரண்டு விளக்குத்தண்டுகளும் ஆனவர்கள்.

௫ ஒருவன் அவர்களைச் சேதபடுத்த விரும்பினால், [13]அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப பட்சிக்கும்; [14]அவர்களைச் சேதப்படுத்தவிரும்புகிறவன் எவனோ அவன் அப்படியே சாக வேண்டும்.

௬ அவாகள் தீர்க்கதரிசனம் சொல்லிவருகிற நாட்களிலே [15]மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்கிறதற்கு அதிகாரம் உடையவர்கள்; மேலும் [16]அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றுகிறதற்கும், எக்காலத்திலேயும் தங்கள் இஷ்டப்படி பூமியைச் சகலவித வாதைகளாலும் அடிக்கிறதற்கும் அதிகாரம் உடையவர்கள்.

௭ ¶ மேலும் [17]அவர்கள் தங்கள் சாட்சியை முடிக்கும்பொழுது, [18]பாதாளத்திலிருந்து எறுகிற [19]மிருகம் [20]அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களைச் செயித்து, அவர்களைக் கொலைசெய்யும்.

௮ அவர்களுடைய உடல்கள் [21]பெரிய பட்டணத்தின் பெரிய வீதியிலே கிடக்கும்; அந்தப் பட்டணம் சோதோமென்றும் எகிப்தென்றும் ஞான அருத்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே [22]அவர்களுடைய கர்த்தாவும் சிலுவையிலே அறையப்பட்டார்.

௯ ¶ [23]சனக்கூட்டங்களிலும், கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், புறத்தேசத்தார்களிலும் (அநேகர்) அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள்வரைக்கும் பார்த்துக்கொண்டு வந்ததுமல்லாமல், [24]அவைகளைக் கல்லறைகளில் வைக்கிறதற்கு இடம்கொடுக்கவும் இல்லை.

கி. பி. ௯௬.

1 எசே ௩ ௩.
2 எசே ௨ ௰
3 எசே ௪௰ ௩
ஞ சகரி ௨ ௧.
வெளி ௨௧ ௰௫
4 ௪ மோ ௨௬.
௰௮
5 எசே ௪௰ ௰௭
௨௰
6 சங் ௭௯. ௧
லூக் ௨௧ ௨௪
* அல்லது விடுவாயாக
7 தானி ௮ ௰
8 வெளி ௰௩ ௫
9 வெளி ௨௰ ௪
10 வெளி ௰௨ ௬
11 வெளி ௰௯ ௰
† அல்லது நாளவும் அதிகாரத்தைக் கொடுப்பேன்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்
12 சங் ௫௨ ௮.
எரே ௰௧ ௰௬.
சகரி ௪ ௩, ௰௧,
௰௪
13 ௨ இரா ௧ ௰,
௰௨ எரே ௫
௰௪ ௫ ௰௪
எசே ௪௰ ௯
ஓசே ௬. ௫
14 ௪ மோ. ௰௬
௨௯
15 ௧ இரா ௰௭ ௧
யாக் ௫ ௰௭,௰௮
16 ௨ மோ ௭
௰௯
17 லூக் ௰௩. ௩௨
18 வெளி ௯. ௨.
19 வெளி ௰௩ ௧,
௰௧ ௰௭ ௮
20 தானி ௭ ௨௧;
சகரி ௰௪ ௨
21 வெளி ௰௪
௮ ௰௭ ௧, ௰௮
௰௮ ௰.
22 எபி. ௰௩ ௰௨
வெளி ௰௮
௨௪
23 வெளி ௰௭
௰௫
*24 சங் ௭௯. ௨,௩

௰ [1]அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளுக்கு வேதனை செய்தபடியினாலே அவர்கள் (போனதற்காகப) [2]பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, [3]ஒருவருக்கு ஒருவர் காணிக்கைகளை அனுப்புவார்கள்.

௰௧ ¶ [4]மூன்றரை நாளுக்குப் பின்பு பராபரனிடத்திலிருந்து [5]ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது; அவர்கள் தங்கள் கால்களை ஊன்றி நின்றார்கள்; அப்பொழுது அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று.

௰௨ பின்பு இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, [6]ஒரு மேகத்தில் ஏறி [7]வானத்திற்குப் போனார்கள்; [8]அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை நோக்கிப் பார்த்தார்கள்.

௰௩ [9]அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது; [10]உடனே அந்தப் பட்டணத்தில் பத்தில் ஒரு பங்கு விழுந்துபோயிற்று; மனிதர் ஏழாயிரம்பேரும்* பூமி அதிர்தலால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரமண்டலத்தின் [11]பராபரனுக்குத் துதியைச் செலுத்தினார்கள்.

௰௪ ¶ [12]இரண்டாம் வேதனை போயிற்று; இதோ மூன்றாம் வேதனை சீக்கிரமாய் வருகின்றது.

௰௫ ¶ அப்பொழுது [13]ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; [14]உடனே உலகத்தின் இராச்சியங்கள் நம்முடைய கர்த்தனையும் அவருடைய கிறிஸ்துவையும் சேர்ந்தன என்றும், [15]அவர் என்றென்றைக்கும் இராசரீகம்பண்ணுவார் என்றும், [16]மிகுந்த சத்தங்கள் பரமண்டலத்தில் உண்டாயின.

௰௬ ¶ அப்பொழுது பராபரனுக்கு முன்பாகத் தங்கள் ஆசனங்கள்மேல் உளுக்கார்ந்த [17]அவ்விருபத்துநான்கு மூப்பர்களும் சாஷ்டாங்கமாய் விழுந்து,

௰௭ [18]இருக்கிறவரும் இருந்தவருமாகிய சர்வவல்லமையுடைய தேவனாகிய பராபரனே, தேவரீர் உமது பலத்த வல்லமையை எடுத்துக்கொண்டு [19]இராசரீகம்பண்ணுகிறீர்.

௰௮ [20]புறத்தேசத்தார் கோபமாய் இருந்தார்கள் அப்பொழுது உமது கோபம் தோன்றிற்று; [21]மரித்தோர் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபத்தியாய் இருந்த சிறியோருக்கும் [22]பெரியோருக்கும் பலன் அளிக்கிறதற்கும், [23]பூமியைக் கெடுத்தவர்களைக்† கெடுக்கிறதற்குக் காலமும் வந்தது; ஆகையால் உம்மைத் தோத்திரம் செய்கிறோம் என்று பராபரனைத் தொழுதுகொண்டார்கள்.

௰௯ ¶ பின்பு பரமண்டலத்திலே [24]பராபரனுடைய ஆலயம் திறக்கப்பட்டது; அவருடைய ஆலயத்திலே அவருடைய உடம்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; மேலும் [25]மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்தலும், [26]பெருங்கல்மழையும் உண்டாயின.

௰௨. அதிகாரம்.

௧ சூரியனை அணிந்த ஒரு ஸ்திரீ கெர்ப்பவேதனை அடைந்ததையும், ௩ சிவப்பான ஒரு பெரிய வலுசர்ப்பம் அவள் பிள்ளையைப் பட்சிக்க அவள் முன்பாக நின்றதையும், ௬ அவள் பிரசவித்தவுடனே வனாந்தரத்திற்கு ஓடிப்போனதையும், ௭ மிகாவேலும் அவனுடைய தூதர்களும் வல்ல சர்ப்பத்தோடே யுத்தம்பண்ணி அதை வென்றதையும், ௰௩ வல்லசர்ப்பம் பூமியின்மேல் தள்ளப்பட்டபோது ஸ்திரீயைத் துன்பப்படுத்தினதையும் சொல்லியது.

அன்றியும் ஒரு பெரிய அடையாளம்‡ வானத்திலே காணப்பட்

கி. பி. ௯௬.

1 வெளி ௰௧. ௰
2 வெளி ௰௨. ௰௨. ௰௧ ௮
3 எஸ்த. ௯ ௰௯, ௨௨
4 ௯. வச
5 எசே ௩௭. ௫, ௯, ௰, ௰௪
6 ஏசா ௬௰ ௮ அப ௧ ௯
7 ஏசா ௰௪ ௰௩ வெளி ௰௨ ௫
8 ௨ இரா ௨ ௩, ௫, ௭
6 வெளி ௬ ௰௨
10 வெளி ௰௬ ௰௯
* அலலது மனிதரும, வெளி. ௩ ௪
11 யோசு ௭ ௰௯ வெளி ௰௪ ௭ ௰௫ ௪
12 வெளி ௮ ௰௩ ௯ ௰௨ ௰௫ ௧
13 வெளி ௰ ௭.
14 வெளி ௰௨ ௰
15 தானி ௨. ௪௪ ௭ ௰௪, ௰௮, ௨௭
16 ஏசா ௨௭, ௰௩ வெளி ௰௯ ௰௭ ௰௯ ௬
17 வெளி ௪ ௪ ௫ ௮ ௰௯ ௪.
18 வெளி ௧ ௪, ௮ ௪ ௮ ௰௬ ௫
19 வெளி ௰௯ ௬
20 ௨, ௯ வச
21 தானி ௭ ௯, ௰ வெளி ௯ ௰
22 வெளி ௰௯ ௫
23 வெளி. ௰௩ ௰ ௰௮ ௯
† அல்லது அழிக்கிறவர்களை.
24 வெளி ௰௫ ௫, ௮
25 வெளி ௮ ௫ ௰௬ ௰௮.
26 வெளி ௰௬ ௨௧
‡ அல்லது அதிசயம்.

டது; (என்னவெனில்,) ஒரு ஸ்திரீ சூரியனை அணியப்பட்டு, தன்னுடைய பாதங்களின்கீழே சந்திரனையும் தன்னுடைய சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடத்தையும் உடையவளாய்,

௨ [1]கருப்பத்திலே வருத்தமடைந்து பிள்ளைபெறும்படி வேதனைப்பட்டு அலறிக்கொண்டிருந்தாள்.

௩ ¶ அன்றியும் வேறொரு அடையாளம்* வானத்திலே காணப்பட்டது, (என்னவென்றால்,) [2]ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், [3]தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய [4]சிவப்பான பெரிய வல்லசர்ப்பம் இருந்தது

௪ [5]அதின் வால் [6]வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றதொரு பங்கை இழுத்து, [7]அவைகளைப் பூமியின்மேல் தள்ளிற்று; அல்லாமலும், பிள்ளைபெறுகிறவளாகிய [8]அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு, [9]அந்த வல்லசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது

௫ அவள் [10]சனக்கூட்டங்கள் எல்லாவற்றையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும்படிக்கான ஆண்பிள்ளையைப் பெற்றாள்; உடனே அவளுடைய பிள்ளை பராபரனிடத்திற்கும் அவருடைய ஆசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது

௬ [11]ஸ்திரீயானவளும் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே [12]ஆயிரத்திருநூற்றறுபதுநாள் அளவும் அவளைப் போஷிப்பதற்காகப் பராபரனால் எத்தனமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருக்கிறது.

௭ ¶ அன்றியும் பரமண்டலத்திலே யுத்தம் உண்டாயிற்று; [13]மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதரும் [14]அந்த வல்லசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வல்லசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் செயம் அடையவில்லை.

௮ பின்னே பரமண்டலத்திலே அவர்களுக்கு ஓரிடம் அகப்படவும் இல்லை.

௯ [15]உலகம் யாவையும் வஞ்சித்துவருகிற பசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட [16]பழைய பாம்பாகிய பெரிய வல்லசர்ப்பம் [17]தள்ளப்பட்டது, [18]அது பூமியிலே தள்ளப்பட்டது; அதினோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்

௰ அப்பொழுது [19]நம்முடைய சகோதரர்மேல் குற்றம்சாற்றுகிறவன் தாழத் தள்ளப்பட்டிருக்கிறதால், [20]இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் ஆளுகையும் நம்முடைய பராபரனுக்கும், அதிகாரம் அவருடைய கிறிஸ்துவுக்கும் உண்டாயிருக்கின்றன, இரவும்பகலும் அவன் பராபரனுக்கு முன்பாக அவர்கள்மேல் குற்றம்சாற்றினான்

௰௧ [21]அவர்கள் மரணபரியந்தமும் தங்கள் சீவனைச் சிநேகியாமல், [22]ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனைச் செயித்தார்கள்.

௰௨ ஆகையால் பரமண்டலங்களே, அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே, [23]களிகூருங்கள், பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே, உங்களிடத்திலே [24]பசாசு இறங்கி, தனக்குக் கொஞ்சக்காலம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டிருக்கிறபடியால், [25]ஐயோ, உங்களுக்கு வேதனை உண்டாயிருக்குமென்று பரமண்டலத்திலே பெரும் சத்தத்தைக் கேட்டேன்.

௰௩ ¶ அந்தப்படி வல்லசர்ப்பமானவன் தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, [26]அந்த

---

[1] ஏசா ௬௬ ௭ கலா ௪ ௰௯
* அல்லது அதிசயம்
[2] வெளி ௰௭ ௯ ௰
[3] வெளி ௰௩ ௧
[4] வெளி ௰௭ ௩
[5] வெளி ௯ ௰, ௰௯
[6] வெளி ௰௭ ௰௮
[7] தானி ௮ ௰
[8] ௨ வச
[9] [illegible]
[10] [illegible] வெளி ௨ ௨௭ ௰௯ ௰௫
[11] ௪ வச
[12] வெளி ௰௧ ௩
[13] தானி ௰ ௰௩, ௨௧ ௰௨ ௧
[14] [illegible]
[15] வெளி ௨௰ ௩
[16] ௧ மோ ௩ ௧, ௪ வெளி ௨௰ ௨
[17] லூக் ௰ ௰௮ யோவா ௰௨ ௩௧
[18] வெளி ௯ ௧
[19] யோபு ௧ ௯ ௨ ௫ சகரி ௩ ௧
[20] வெளி ௰௧ ௰௫
[21] லூக் ௰௪ ௨௬
[22] [illegible]
[23] [illegible]
[24] வெளி ௰ ௬
[25] வெளி ௮ ௰௩
[26] [illegible]

ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீக்குப் பின்தொடர்ந்தான்.

௰௪ [1]அந்த ஸ்திரீ அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, [2]ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்க [3]வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் [4]பறந்துபோகும்படியாய்ப் பெருங் கழுகின் இரண்டு சிறகுகளும் அவளுக்குக் கொடுக்கப்பட்டன.

௰௫ அப்பொழுது சர்ப்பமானவன் ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்கு, [5]தன் வாயிலிருந்து ஒரு நதியத்தனை சலத்தை அவளுக்குப் பின்னாகக் கொப்பளித்தான்.

௰௬ பூமி ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வல்ல சர்ப்பம் தன் வாயிலிருந்து கொப்பளித்த நதியை விழுங்கிற்று.

௰௭ அப்பொழுது வல்ல சர்ப்பமானவன் ஸ்திரீயின்மேல் கோபமாயிருந்து, [6]பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் [7]இயேசுக்கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே [8]யுத்தம் பண்ணப்போனான்.

௰௩. அதிகாரம்.

௧ கடலிலிருந்து எழும்பின ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் உள்ள ஒரு மிருகத்துக்கு வல்ல சர்ப்பம் தன் அதிகாரத்தைக் கொடுத்ததையும், ௰௧ மற்றொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி, ௰௪ முற்சொல்லிய மிருகத்தின் சொரூபத்தைச் செய்வித்து, ௰௫ மனிதர்கள் அதை வணங்கி, ௰௬ அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளச் செய்ததையும் சொல்லியது.

பின்பு நான் கடலோரத்தின் மணலின்மேல் நிறுத்தப்பட்டேன்; அப்பொழுது சமுத்திரத்திலிருந்து, [9]ஒரு துஷ்டமிருகம் எழும்பிவரக்கண்டேன்; [10]அதற்குப் பத்துக் கொம்புகளும் ஏழு தலைகளும் இருந்தன; அதின் கொம்புகள்மேலே பத்து முடிகளும் அதின் தலைகளின்மேலே தூஷணமான நாமங்களும்* இருந்தன.

௨ மேலும் [11]நான் கண்ட மிருகம் புலியைப்போல இருந்தது; [12]அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், [13]அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; மேலும் வல்ல சர்ப்பமானவன் [14]தன் வல்லமையையும், [15]தன் ஆசனத்தையும் [16]மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தான்.

௩ பின்பு அதின் தலைகளில் ஒன்று சாவுக்கு ஏதுவாய் [17]காயப்படுத்தப்பட்டதாகக்† கண்டேன்; பின்பு சாவுக்கு ஏதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது; [18]மேலும் பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்தத் துஷ்ட மிருகத்தைப் பின்பற்றி,

௪ அம்மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தபடியினாலே வல்ல சர்ப்பத்தைத் தொழுதுகொண்டார்கள்; அல்லாமலும் [19]மிருகத்திற்கு ஒப்பானவன் யாவன்? அதினுடனே யுத்தம்பண்ணத்தக்கவன் யாவன் என்று மிருகத்தையும் தொழுதுகொண்டார்கள்.

௫ மேலும் [20]பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுகிறதற்கான வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும் [21]நாற்பத்திரண்டுமாதம் நடந்துகொள்ளுகிறதற்கு‡ அதிகாரம் அதற்கு அளிக்கப்பட்டது.

௬ அந்தப்படி அது பராபரனுடைய நாமத்தையும், [22]அவருடைய கூடாரத்தையும், பரமண்டலத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷணிக்கிறதற்குத் தன் வாயைத் தூஷணமாகத் திறந்தது.

௭ மேலும் [23]பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களைச் செயிக்கும்படிக்கு, அதற்கு (இடம்) கொடுக்கப்பட்டது; எந்தக் கோத்திரத்தின்மேலும் சனக்கூட்டத்தின்மேலும் பாஷைக்கா

கி. பி. ௯௬.

[1] கூ வச.
[2] தானி. ௭. ௨௫; ௰௨. ௭.
[3] வெளி. ௰௭. ௧௫.
[4] ௨ மோ. ௰௯. ௪.
[5] ஏசா. ௫௯. ௰௯.
[6] வெளி. ௰௪. ௰௨.
[7] ௧ கொரி. ௧. ௬; ௧ யோ. ௫. ௰; வெளி. ௧. ௨, ௯; ௬. ௯; ௰௯. ௰.
[8] ௧ மோ. ௩. ௰௫; வெளி. ௰௧. ௭; ௰௩. ௭.
[9] தானி. ௭. ௨, ௭.
[10] வெளி. ௰௨. ௩; ௰௭. ௩, ௯, ௰௨.
* அல்லது நாமம், வெளி. ௰௭. ௩.
[11] தானி. ௭. ௬.
[12] தானி. ௭. ௫.
[13] தானி. ௭. ௪.
[14] வெளி. ௰௨. ௯.
[15] வெளி. ௰௬. ௰.
[16] வெளி. ௰௨. ௯.
[17] ௰௨, ௰௪ வச.
† கிரேக்கு, கொலைபட்டதாக.
[18] வெளி. ௰௭. ௮.
[19] வெளி. ௰௮. ௰௮.
[20] தானி. ௭. ௮, ௰௧, ௨௫; ௰௧. ௩௬.
[21] வெளி. ௰௧. ௨; ௰௨. ௬.
‡ அல்லது போர்செய்வதற்கு.
[22] யோவா. ௧. ௰௪; கொலோ. ௨. ௯.
[23] தானி. ௭. ௨௧; வெளி. ௰௧. ௭; ௰௨. ௰௭.

ரர்மேலும் தேசத்தார்மேலும் அதற்கு [1]அதிகாரம் கொடுக்கப்பட்டது.

௮ ஆதலால் [2]உலகமுண்டானதுமுதல் (பலியாக) அடிக்கப்படும்படி (நியமிக்கப்பட்ட) ஆட்டுக்குட்டியினுடைய சீவபுத்தகத்திலே [3]பேரெழுதப்படாத பூமியின் குடிகள் யாவரும் அதை நமஸ்காரம்பண்ணுவார்கள்.

௯ [4]யாவனொருவன் காதுள்ளவனாய் இருந்தால் கேட்கக்கடவன்.

௰ [5]சிறையாகப் பிடித்துக்கொண்டுபோகிறவன் சிறையாகக் கொண்டுபோகப்படுவான்; [6]கட்கத்தினாலே கொலைசெய்கிறவன் கட்கத்தினாலே கொலைசெய்யப்படவேண்டும்; [7]இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் விளங்கும்.

௰௧ ¶ அன்றியும் வேறொரு மிருகத்தைத் [8]தரையிலிருந்து எழும்பக்கண்டேன்: அது ஓர் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாய் இரண்டுகொம்புகளை உடையதாய் வல்ல சர்ப்பத்தைப்போல வசனித்தது.

௰௨ அல்லாமலும் அது முந்தின மிருகத்தின் அதிகாரம் யாவையும் அதின்முன்பாக நடப்பித்து, [9]சாவுக்கு ஏதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் நமஸ்காரம்பண்ணும்படி செய்ததுமன்றி,

௰௩ மனிதருக்குமுன்பாக [10]வானத்திலிருந்து அக்கினியையும் பூமியின்மேல் இறங்கப்பண்ணத்தக்கதாகப் [11]பெரிய அடையாளங்களைச் செய்து,

௰௪ மிருகத்தின்முன்பாகச் செய்யும்படி தனக்கு அளிக்கப்பட்ட [12]அடையாளங்களினாலே [13]பூமியின் குடிகளை வஞ்சித்துக் கட்கத்தினாலே காயப்பட்டு, [14]பின்பு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம்பண்ணவேண்டும் என்று பூமியின் குடிகளுக்குச் சொல்லுகின்றது.

௰௫ மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், அம்மிருகத்தின் சொரூபத்தை நமஸ்காரம்பண்ணாத [15]யாவரையும் கொலைசெய்யப்பண்ணத்தக்கதாகவும் அம்மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக்* கொடுக்கும்படி அதற்குத் திராணி அளிக்கப்பட்டது.

௰௬ அந்தப்படி அது சிறியோர் பெரியோர், ஐசுவரியவான்கள் தரித்திரர், சுயாதீனர் அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலே, அல்லது [16]தங்கள் நெற்றிகளிலே ஒரு அடையாளத்தைப் பெறும்படிக்கும்,†

௰௭ அம்மிருகத்தின் அடையாளமாகிய அந்த [17]நாமத்தையாவது [18]அதினுடைய நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவனைத்தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்கின்றது.

௰௮ [19]இங்கே ஞானம் விளங்கும்; [20]மிருகத்தின் இலக்கம் ஒரு மனிதனுடைய இலக்கமாய் இருக்கிறபடியால், புத்தி உடையவன் [21]அந்த இலக்கத்தைக் கணக்குப்பார்க்கக்கடவன்; அதினுடைய இலக்கம் ௬௱௬௰௬.

௰௪. அதிகாரம்.

௧ ஆட்டுக்குட்டியானவரும், அவருடையவர்களும் சீயோன்மலையின்மேல் நின்றதையும், ௬ ஒரு தூதன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததையும், ௮ பாபிலோன் விழுந்ததையும், ௰௪ உலகத்தின் அறுப்புக்காலத்தையும், அறுப்பில் அரிவாள் இடப்பட்டதையும், ௨௰ பராபரனுடைய கோபமாகிய திராட்சப்பழத்தின் ஆலையையும் குறித்துச் சொல்லியது.

பின்பு நான் பார்க்கையில் [22]சீயோன் பர்வதத்தின்மேலே ஆட்டுக்குட்டியையும், [23]அதினோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த [24]நூற்றுநாற்பத்துநா

கி. பி. ௯௬.

1 வெளி. ௰௧. ௰௮ ௰௭ ௰௯
2 வெளி. ௰௭ ௮
3 ௨ தீமோ ௩௨ ௩௨ தானி ௰௨ ௧ பிலி ௪ ௩ வெளி ௩ ௫ ௨௰ ௰௨, ௰௫ ௨௧ ௨௭
4 வெளி ௨ ௭
5 ஏசா ௩௩ ௧
6 ௧ மோ ௯ ௬ மத் ௨௬ ௫௨.
7 வெளி ௰௪ ௰௨
8 வெளி ௰௧ ௭
9 ௩ ௰௪
10 ௧ இரா ௰௮ ௩௮ ௨ இரா ௧ ௰, ௰௨
11 ௫ மோ ௰௩ ௧, ௨, ௩ மத். ௨௪ ௨௪ ௨ தெச ௨ ௯ வெளி ௰௯ ௰௪
12 ௨ தெச ௨ ௯, ௰
13 வெளி ௰௨ ௯ – ௰௯ ௨௰
14 ௨ இரா ௨௰ ௭
15 வெளி ௰௪ ௨ ௰௯ ௨௰ ௨௰ ௪

* கிரேக்கு, சுவாசத்தை.

16 வெளி ௰௪ ௯ ௰௯ ௨௰ ௨௰ ௪

† கிரேக்கு, இவர்களையாவருக்கும் அவர்கள் வலதுகைகளிலே அல்லது அவர்கள் நெற்றிகளிலே ஒரு அடையாளத்தைப் போடும்படிக்கும்.

17 வெளி ௰௪ ௰௧
18 வெளி ௰௫ ௨
19 வெளி ௰௭ ௯
20 வெளி ௰௫ ௨
21 வெளி ௨௧. ௰௭
22 வெளி ௫ ௬
23 வெளி ௭ ௩ ௰௯ ௰௬
24 வெளி ௭ ௪

லாயிரம்பேரையும் நிற்கக் கண்டேன்.

௨ அல்லாமலும், [1]பெருவெள்ள இரைச்சலைப்போலவும் பெரிய இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தம் பரமண்டலத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்; மேலும் [2]நான் கேட்ட சத்தம் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற சுரமண்டலக்காரருடைய ஓசையைப்போல இருந்தது.

௩ அவர்கள் அந்த ஆசனத்திற்கு முன்பாகவும், நான்கு சீவன்களுக்கும் மூப்பருக்கும் முன்பாகவும் [3]புதிய பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டைப் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட [4]அந்த நூற்றுநாற்பத்துநாலாயிரம் பேரே அல்லாமல், வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாததாய் இருந்தது.

௪ [5]அவர்களே கற்புடையவர்களாய் ஸ்திரிகளால் தங்களை அசுசிப்படுத்தாதவர்கள்; அவர்களே [6]ஆட்டுக்குட்டி எங்கேபோனாலும் அதைப் பின்பற்றுகிறவர்கள்; அவர்களே மனிதரிலிருந்து பராபரனுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் [7]முதல் விளைவாக [8]மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.*

௫ [9]அவர்கள் மாசில்லாதவர்களானபடியால், [10]அவர்களுடைய வாயிலே கபடம் அகப்படவில்லை.

௬ ¶ அன்றியும் வேறொரு தூதன் பூமியின் குடிகளுக்கும் [11]சகல தேசத்தாருக்கும் கோத்திரத்தாருக்கும் பாஷைக்காரருக்கும் சனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக [12]நித்திய சுவிசேஷத்தை உடையவனாய், [13]வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்.

௭ அவன் மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டதாவது: பராபரன் நியாயத்தீர்ப்பைக் கொடுக்கும் நேரம் வந்தபடியால், [14]அவருக்குப் பயந்து அவருடைய மகிமையைப் பாராட்டுங்கள், [15]வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரைத் தொழுதுகொள்ளுங்கள் என்று கூப்பிட்டான்.

௮ ¶ வேறொரு தூதன் பின்சென்று [16]பெரிய பட்டணமாகிய பாபிலோன் விழுந்துபோயிற்று, விழுந்துபோயிற்று; [17]அவள் தன் வேசித்தனமாகிய உக்கிர இரசத்தைச் சகல தேசத்தாரும் குடிக்கப்பண்ணினாளே என்றான்.

௯ ¶ அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து மிகுந்த சத்தத்தோடே சொன்னதாவது: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் [18]நமஸ்காரம்பண்ணி, தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவன் எவனோ,

௰ அவன் [19]பராபரனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே [20]கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிர [21]இரசத்தைக் குடித்துப் பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் [22]அக்கினியாலும் கந்தகத்தாலும் [23]வாதிக்கப்படுவான்.

௰௧ [24]அவர்கள் படும் வாதையின் புகை என்றென்றைக்கும் எழும்பும்; இப்படி மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் நமஸ்காரம்பண்ணுகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவனுக்கும் இரவும்பகலும் இளைப்பாறுதல் இராது.

௰௨ ¶ இங்கே பராபரனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் [25]காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய [16]பொறுமை விளங்கும்.

௰௩ பின்னும் [27]இதுமுதல் கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் [28]பாக்கியவான்களென்று எழுது என்று பரமண்டலத்திலிருந்து சத்

கி. பி. ௯௬

1 வெளி ௧ ௰௫. ௰௯ ௬
2 வெளி ௫ ௮
3 வெளி ௫ ௯. ௰௫ ௩
4 ௧ வ௪
5 ௨ கொரி ௰௧ ௨
6 வெளி ௩ ௪. ௭ ௰௭. ௰௭ ௰௪
7 யாக் ௧ ௰௮
8 வெளி ௫ ௯
* கிரேக்கு, விலைக்குக் கொள்ளப்பட்டவர்கள்
9 எபே ௫ ௨௭. யூதா ௨௪
10 சங் ௩௨ ௨. செப் ௩ ௰௩
11 வெளி ௰௩ ௭
12 எபே ௩ ௯, ௰. தீத் ௧ ௨
13 வெளி ௮ ௰௩
14 வெளி ௰௫ ௪. ௰௯ ௫
15 நெகே ௯ ௬. சங் ௩௩ ௬. ௱௪௬ ௫, ௬. அப் ௰௪ ௰௫. ௰௭ ௨௪
16 ஏசா ௨௧ ௯. எரே ௫௧ ௮. வெளி ௰௮ ௨
17 எரே ௫௧ ௭. வெளி ௰௧ ௮. ௰௩ ௰௫. ௰௭ ௨, ௫. ௰௮ ௩, ௰௮, ௨௪. ௰௯ ௨
18 வெளி ௰௩ ௰௪, ௰௬, ௰௭
19 வெளி. ௰௬ ௰௯
20 வெளி ௰௮ ௬
21 சங் ௭௫ ௮. ஏசா ௫௧ ௰௭. எரே. ௨௫ ௰௫
22 வெளி ௰௯ ௨௰
23 வெளி ௨௰ ௰
24 ஏசா ௩௪ ௰. வெளி ௰௯ ௩
25 வெளி ௰௨ ௰௭
26 வெளி ௰௩ ௰
27 ௧ கொரி ௰௫ ௰௮. ௧ தெச ௪ ௰௬
28 பிர ௪ ௩, ௨. வெளி ௨௰ ௬

தம் உண்டாகக் கேட்டேன்; மெய்யாய் அவர்கள் [1]தங்கள் பிரயாசங்களைவிட்டு ஒழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களுடனேகூடப் போகின்றன என்று, *ஆவியானவரும் திருவுளம்பற்றுகிறார்.

௰௪ ¶ பின்பு நான் பார்த்து வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேலே [2]மனிதகுமாரனுக்கு ஒப்பானவனாய்த் [3]தன்னுடைய சிரசின்மேல் பொற்கிரீடத்தையும், தனது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவன் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.

௰௫ அப்பொழுது வேறொரு தூதன் [4]தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவனை நோக்கி, [5]பூமியின் பயிர் பருவமான† படியால் அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால், [6]உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துப்போடும் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௰௬ உடனே மேகத்தின்மேல் உட்கார்ந்தவன் தன்னுடைய அரிவாளைப் பூமியின்மேல் போட்டான், பூமி அறுக்கப்பட்டது.

௰௭ ¶ பின்பு வேறொரு தூதன் தானும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்து, பரமண்டலத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

௰௮ [7]பின்பு அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி, பூமியின் திராட்சங்கள் பழுத்திருக்கிறபடியால் [8]கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி அதின் குலைகளை அறுத்துப்போடும் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௰௯ அந்தப்படி அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியிலே போட்டு, பூமியின் திராட்சங்களை அறுத்து, [9]பராபரனுடைய கோபத்தின் பெரிய திராட்சத்தொட்டியிலே போட்டான்.

௨௰ [10]பட்டணத்திற்குப் புறம்பே உள்ள [11]அந்தத் திராட்சத்தொட்டியிலே மிதிக்கப்பட்டது, அந்தத் திராட்சத்தொட்டியிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதித்தூரத்திற்கு [12]இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் வந்தது.

௰௫ அதிகாரம்.

௧ கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்களையும், ௨ மிருகத்தைச் செயித்தவர்கள் பாடின பாட்டையும், ௭ பராபரனுடைய கோபத்தால் நிறைந்த ஏழு பொற்கலசங்களையுங்குறித்துச் சொல்லியது.

பின்பு வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான [13]வேறொரு அடையாளமாகிய [14]ஏழு கடைசி வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், [15]அவைகளால் பராபரனுடைய கோபம் முடிகிறபடியால், (அவைகளே கடைசி வாதைகள்)

௨ ¶ அன்றியும், [16]அக்கினி கலந்த [17]பளிங்கான கடலுக்கு ஒப்பானதையும், மிருகத்திற்கும் [18]அதின் சொரூபத்திற்கும் அதின் அடையாளத்திற்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் செயங்கொண்டவர்கள் [19]தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு பளிங்கான கடற்கரையிலே நிற்கிறதையும் கண்டேன்.

௩ அவர்கள் பராபரனுடைய ஊழியக்காரனாகிய [20]மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடுகிறார்கள், எப்படியெனில், சருவவல்லமையுள்ள தேவனாகிய பராபரனே, [21]தேவரீருடைய கிரியைகள் பெருமையும் ஆச்சரியமுமானவைகள்; *உலகத்தாரின்‡ இராசாவே, [22]தேவ

கி. பி ௯௬.

[1] உ தெச ௪ ௭ எபி ௪ ௯, ௰ வெளி ௬ ௰௧

* அல்லது பின்னையும் காத்திருக்கு டபடிப் போகிறதென்னவென்று இது முதல

[2] [illegible] தானி ௭ ௰௩ வெளி ௧ ௰௩

[3] வெளி ௬ ௨

[4] வெளி ௰௧ ௰௯

[5] எரே ௫௧ ௩௩ வெளி ௰௩ ௰௫

† அல்லது உலர்ந்துபோன

[6] யோவே ௩ ௰௩ மத் ௰௩ ௩௯

[7] வெளி ௰௬ ௮

[8] யோவே ௩ ௰௩

[9] வெளி ௰௯ ௰௫

[10] எபி ௰௩ ௰௨

[11] ஏசா ௬௩ ௩ புல ௧ ௰௫

[12] வெளி ௰௯ ௰௪

[13] வெளி ௰௨ ௧, ௩

[14] வெளி ௰௬ ௧ ௨௧ ௯

[15] வெளி ௰௪ ௰

[16] மத் ௩ ௰௧

[17] வெளி ௪ ௬

[18] வெளி ௰௩ ௰௪, ௰௫, ௰௬

[19] வெளி ௫ ௮

[20] உபா ௩௧ ௩௦ யாத் ௰௫ ௧ [illegible] வெளி ௰௪ ௩

[21] சங் ௧௧௧ ௨ [illegible]

‡ அல்லது பரிசுத்தவான்களின்

[22] [illegible] ௰௫ [illegible]

நீருடைய வழிகள் நீதியும், சத்தியமுமானவைகள்.

௪ கர்த்தாவே, ¹யார் உமக்குப் பயப்படாமலும் உமது நாமத்தைத் துதியாமலும் இருக்கலாம், என்னத்தினாலென்னில், நீர் ஒருவரே பரிசுத்தமுள்ளவர், ²உலகத்தார் எல்லாரும் வந்து உமக்கு முன்பாக நமஸ்காரம்செய்வார்கள்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் வெளியரங்கமாயின என்றார்கள்.

௫ ¶ இவைகளுக்குப் பின்பு நான் கண்டதாவது ³பரமண்டலத்திலே சாட்சியையுடைய கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது.

௬ அந்த ஆலயத்திலிருந்து ⁴ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்கள் சுத்தமும் ⁵பிரகாசமுமான புடவையைத் தரித்து, மார்புகளின் அருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

௭ அல்லாமலும் அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று ⁶என்றென்றைக்கும் பிழைக்கிற பராபரனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலயங்கள் ஏழையும் ⁷அவ்வேழு தூதர்களுக்கும் கொடுத்தது.

௮ அப்பொழுது தேவாலயமானது ⁸பராபரனுடைய மகிமையாலும் அவருடைய வல்லமையாலும் ⁹பிறந்த புகையினாலே நிரப்பப்பட்டது; (ஆதலால்,) ஏழு தூதர்களும் செய்யும் ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாததாய் இருந்தது.

௧௬. அதிகாரம்.

௧ தூதர்கள் கோபக்கலயங்களை ஊற்றினபோது, ௬ உண்டான வாதைகளையும், ௰௫ கிறிஸ்து திருடனைப்போல வருவார் ஆகையால் விழித்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்பதையும் சொல்லியது.

௧ அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான பெரிய சத்தம் ¹⁰அந்த ஏழு தூதருடனே, நீங்கள் போய், ¹¹பராபரனுடைய கோபாக்கினையுள்ள கலயங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன்.

௨ ¶ அந்தப்படி முதலாம் (தூதன்) போய், தன் கலயத்திலுள்ளதைத் ¹²தரையின்மேல் ஊற்றினான்; உடனே ¹³மிருகத்தின் அடையாளத்தை உடையவர்களும் ¹⁴அதின் சொரூபத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களுமாகிய மனிதர்களில் ¹⁵பொல்லாத கொடிய பரு உண்டாயிற்று.

௩ ¶ பின்பு இரண்டாம் தூதன் தன் கலயத்திலுள்ளதைச் ¹⁶சமுத்திரத்திலே ஊற்றினான், உடனே ¹⁷அது செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று; ¹⁸சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் செத்துப்போயின.

௪ ¶ பின்பு மூன்றாம் தூதன் தன் கலயத்திலுள்ளதை ¹⁹ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் ஊற்றினான்; ²⁰உடனே அவைகள் இரத்தமாயின.

௫ அப்பொழுது சலங்களின் தூதனானவன், ²¹இருக்கிறவரும் இருந்தவருமாகிய பரிசுத்தரே, தேவரீர் இப்படி நியாயந்தீர்த்ததினால் ²²நீதியுள்ளவராய் இருக்கிறீர்.

௬ அவர்கள் ²³பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் ²⁴சிந்தினபடியினாலே, ²⁵இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர், (அதற்குப்) பாத்திரராய் இருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்.

௭ வேறொருவனும், ²⁶சர்வவல்லமையுள்ள தேவனாகிய பராபரனே, ²⁷மெய்யாய் உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று பலிபீடத்திலிருந்து சொல்லக்கேட்டேன்.

௮ ¶ பின்பு நான்காம் தூதன் தன் கலயத்திலுள்ளதைச் ²⁸சூரி

கி. பி. ௯௬.

1 உபா. [illegible]
2 ஏசா. [illegible]
3 வெளி. [illegible]
4 [illegible]
5 [illegible]
6 [illegible]
7 வெளி. [illegible]
8 [illegible]
9 [illegible]
10 வெளி. [illegible]
11 வெளி. [illegible]
12 வெளி. [illegible]
13 வெளி. [illegible]
14 வெளி. [illegible]
15 [illegible]
16 வெளி. [illegible]
17 [illegible]
18 வெளி. [illegible]
19 வெளி. [illegible]
20 [illegible]
21 வெளி. [illegible]
22 வெளி. [illegible]
23 வெளி. [illegible]
24 [illegible]
25 [illegible]
26 வெளி. [illegible]
27 வெளி. [illegible]
28 வெளி. [illegible]

யன்மேலே ஊற்றினான்; தீயினால் மனிதரைச் சுடும்படியாய் [1]அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

௯ அந்தப்படியே மனிதர்கள் மிகுந்த உட்டணத்தினாலே சுடப்பட்டார்கள்;* (அப்படி இருந்தும்) [2]பராபரனுடைய மகிமையைப் பாராட்ட, அவர்கள் [3]மனந்திரும்பாமல் அந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள அவருடைய நாமத்தைத் [4]தூஷணித்தார்கள்

௰ ¶ பின்பு ஐந்தாம் தூதன் தன் கலயத்திலுள்ளதை [5]மிருகத்தினுடைய ஆசனத்தின்மேல் ஊற்றினான்; உடனே [6]அதின் இராச்சியம் இருள் அடைந்தது, [7]அப்படியிருந்தும், அவர்கள் தங்கள் கிரியைகளைவிட்டு மனந்திரும்பாமல் வருத்தத்தினாலே [8]தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு,

௰௧ [9]தங்கள் வருத்தங்களாலும் தங்கள் பருக்களாலும் பரமண்டலத்தின் பராபரனைத் [10]தூஷணித்தார்கள்.

௰௨ ¶ பின்பு ஆறாம் தூதன் தன் கலயத்திலுள்ளதை [11]ஐபிராத்தென்னும் பெரிய ஆற்றின்மேல் ஊற்றினான்; உடனே [12]சூரிய உதயத் திக்கிலிருந்துவரும் இராசாக்களுக்கு வழி எத்தனமாகும்படிக்கு, [13]அந்த ஆற்றின் தண்ணீர் வற்றிப்போயிற்று

௰௩ அல்லாமலும் [14]வல்ல சர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், [15]கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான [16]மூன்று அசுத்த ஆவிகள் புறப்படக்கண்டேன்.

௰௪ அவைகள் [11]அடையாளங்களைச் செய்கிற [18]பசாசுகளின் ஆவிகளாய் இருக்கின்றன; [19]பூமியில் எங்குமுள்ள இராசாக்களைச் சர்வவல்லமையுள்ள பராபரனுடைய பெரிதான நாளிலிருக்கும் [20]யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கு, அவர்களிடத்திற்குப் புறப்பட்டுப்போகின்றன

௰௫ [21]கேளுங்கள், நான் திருடனைப்போல வருகிறேன், விழித்துக்கொண்டு தன் அவலட்சணத்தை அவர்கள் காணத்தக்காக [22]நிருவாணமாய் நடவாதபடிக்கு, தன் வஸ்திரங்களைக் காக்கிறவன் பாக்கியவான்.

௰௬ எபிரேயுபாஷையிலே அருமகெத்தோன் என்னப்பட்ட இடத்திலே [23]அவர்களைக் கூட்டிக்கொண்டுபோனான்.

௰௭ ¶ எழாம் தூதன் கலயத்திலுள்ளதை ஆகாசத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது பரமண்டலத்துத் தேவாலயத்திலுள்ள ஆசனத்திலிருந்து, [24]ஆயிற்று என்று சொன்ன பெரியசத்தம் புறப்பட்டது.

௰௮ அல்லாமலும் [25]சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; [26]பூமி மிகவும் அதிர்ந்தது; [27]பூமியின்மேல் மனிதர்கள் உண்டான நாள்முதற்கொண்டு தோன்றாத பெரிய அதிர்தல் உண்டாயிருந்தது.

௰௯ அப்பொழுது [28]மகா பட்டணம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது; உலகத்தாருடைய பட்டணங்கள் விழுந்தன; பெரிய பாபிலோனுக்குப் பராபரனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய இரசமுள்ள [29]பாத்திரத்தைக் கொடுக்கும்படிக்கு, [30]அது அவருக்குமுன்பாக நினைக்கப்பட்டது.

௨௰ [31]தீவு யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின.

௨௰௧ [32]தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனிதர்மேல் இறங்கிற்று; அப்படியிருந்தும் [33]அந்தக் கல்மழையினால் உண்டான வாதை மிகவும் கொடிதானபடியால், [34]மனிதர்கள

கி. பி. ௯௬

1 வெளி ௯. ௰௭, ௰௮. ௰௪. ௰௭
* அல்லது எரிந்துபோனார்கள்
2 வெளி ௰௧. ௰௩. ௰௪. ௭
3 தானி ௫. ௨௨, ௨௩. வெளி ௯. ௨௰
4 ௰௧, ௨௧ வச
5 வெளி ௰௩. ௨
6 வெளி ௯. ௨
7 ௯ வச
8 வெளி ௰௧. ௰
9 ௨ வச
10 ௯, ௨௧ வச
11 வெளி ௯. ௰௪
12 எசா ௪௧. ௨, ௨௫
13 எசே ௩௰௭. ௯
14 வெளி ௰௨. ௯, ௯
15 வெளி ௰௯. ௨௰
16 ௧ யோ ௪. ௧. ௨, ௩
17 ௨ தெச ௨. ௯. வெளி ௰௩. ௰௩, ௰௪ ௰௯. ௨௰
18 ௧ தீமோ ௪. ௧. யாக ௩. ௰௫
19 லூக் ௨. ௧
20 வெளி ௰௭. ௰௪ ௰௯. ௰௯ ௨௰. ௮
21 மத் ௨௪. ௪௩. ௧ தெச ௫. ௨. ௨ பே ௩. ௰. வெளி ௩. ௩
22 ௨ கொரி ௫. ௩. வெளி ௩. ௪, ௰௮
23 வெளி ௰௯. ௰௯
24 வெளி ௨௧. ௬
25 வெளி ௪. ௫. ௮. ௫. ௰௧. ௰௯
26 வெளி ௰௧. ௰௩
27 தானி ௰௨. ௧
28 வெளி ௰௪. ௮. ௰௭. ௰௮
29 எசா ௫௧. ௰௭. ௨௨. எரே ௨௫. ௰௫. ௰௬. வெளி. ௰௪. ௰
30 வெளி ௰௮. ௫
31 வெளி ௬. ௰௪
32 வெளி ௰௧. ௰௯
33 ௨ மோ ௯. ௨௩, ௨௪, ௨௫.
34 ௯, ௰௧ வச

அந்த வசனத்தையின் நிமித்தம் பராபரனைத் தூஷணித்தார்கள்.

யஎ. அதிகாரம்

க, ச இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்த ஒரு ஸ்திரீ தன் கையில் பொற்பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு, ரு எல்லா அருவருப்புகளுக்கும் தாயாகிய மகா பாபிலோன் என்ற மிருகத்தின்மேல் உளுக்கார்ந்ததையும், கூ ஏழு தலைகளுக்கும், யஉ பத்துக் கொம்புகளுக்கும் வியாக்கியானம் என்னவென்பதையும், அ வேசிக்கு வரும் தண்டனையையும், யச ஆட்டுக்குட்டியின் செயத்தையும் சொல்லியது

பின்பு ஏழு கலயங்களையுடைய [1]அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னை நோக்கி, நீ வா, [2]திரளான தண்ணீர்கள்மேல் உளுக்கார்ந்தவளோடே, [3]பூமியின் இராசாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, [4]அவளுடைய வேசித்தனமாகிய இரசத்தால் பூமியின் குடிகளும் வெறியடைந்தார்களே.

உ [5]அந்த மகா வேசிக்கு வருகிற ஆக்கினையை [6]உனக்குக் காண்பிக்கிறேன் என்றுசொல்லி,

ங [7]ஆவியில் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான்; அப்பொ[illegible] [8][illegible] தூஷணமான நாமங்களா[illegible]த [9]ஏழு தலைகளையும் [10]ப[illegible]ாம்புகளையுமுடைய [11]சி[illegible]முள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறி இருக்கக் கண்டேன்.

ச [12]அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையும் தரித்து, [13]பொன்னினாலும் இரத்தினத்தாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டு,* தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் [14]நிறைந்த [15]பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்.

ரு மேலும் [16]இரகசியம் என்றும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் வேசிகளுக்கும்† [17]தாயாகிய [18]மகா பாபிலோன் என்றும், அவளுடைய நெற்றியிலே நாமம் எழுதியிருந்தது.

சா மேலும் அந்த ஸ்திரீ [19]பரிசுத்தவான்களின் இரத்தத்தாலும் [20]இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தாலும் [21]வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளை நான் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

எ ¶ அப்பொழுது தூதனானவன் என்னை நோக்கி, என்னத்தினாலே ஆச்சரியப்படுகிறாய்; இந்த ஸ்திரீயின் இரகசியத்தையும் இவளைச் சுமக்கிற ஏழு தலைகளையும் பத்துக்கொம்புகளையுமுடைய மிருகத்தின் இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்.

அ ¶ நீ கண்ட மிருகம் (முன்னே) இருந்தது; (இப்பொழுது) அது இல்லை; (இனிமேல்) [22]அது பாதாளத்திலிருந்து திரும்ப ஏறிவந்து [23]அழிவுக்குப்போம்; அன்றியும் லோகத்தோற்றமுதல் [24]சீவபுத்தகத்திலே பேர் எழுதப்படாத பூமியின் குடிகள், முன்னிருந்ததுமாய் (இப்பொழுது) இராததுமாய் (இனி) இருப்பதுமாயிருக்கிற [25]மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்டுவார்கள், [26]ஞானமுள்ள புத்தி இங்கே விளங்கும்.

கூ ¶ [27]அந்த ஏழு தலைகளும் ஏழு மலைகளே; அவைகளின்மேல் ஸ்திரீ உளுக்காந்திருக்கிறாள்.

ய அவைகள் ஏழு இராசாக்களாயும் இருக்கின்றன; (இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள்.) ஒருவன் இருக்கிறான்; மற்றவன் இதுவரைக்கும் வரவில்லை; வரும்பொழுது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும்.

யக இருந்ததும், (இப்பொழுது) இராததுமாகிய மிருகமே எட்டாவதுமாய், அவ்வேழில் ஒன்றுமாய் இருந்து, [28]அழிவுக்குப்போகின்றது.

யஉ ¶ [29]அன்றியும், நீ கண்ட பத்துக்கொம்புகளும் பத்து இராசாக்களே; அவர்கள் இதுவரையிலும் இராசரீகம் பெறவில்லை,

இ. பி. கூஅ.

1 வெளி உக கூ
2 எரே ருக யங
யரு வச
3 வெளி யஅ ங
4 எரே ருக. எ.
வெளி. யச அ
யஅ ங
5 நாகூ ங ச
வெளி யகூ உ
6 வெளி யசா
யகூ யஅ யசா,
யஎ, யகூ
7 வெளி யஉ ங,
யச
8 வெளி யங க
9 கூ வச
10 யஉ வச
11 வெளி யஉ ங
12 வெளி யஅ
யஉ, யசா
13 தானி யக ங,அ
* இரேக்கு, பொற்பூச்சுப் பூசப்பட்டு
14 வெளி யச
அ
15 எரே ருக எ
வெளி யஅ சா
16 உ தெச உ,எ
† அல்லது வேசித்தனத்துக்கும
17 வெளி யஅ கூ
யகூ உ
18 வெளி யக அ
யச அ யகூ
யகூ யஅ உ, ய,
உக
19 வெளி யங யசா
யகூ கூ
20 வெளி கூ கூ,ய
யஉ யக
21 வெளி யஅ
உச
22 வெளி யக எ
யங
23 வெளி யங ய
யக வச
24 வெளி யங அ
25 வெளி யங ங
26 வெளி யங
யஅ
27 வெளி யங க
28 அ. [illegible]
29 தானி எ உம
சகரி க யஅ,யகூ,
உக வெளி யங
க.

அவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணிநேரமளவும் இராசாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

௰௩ ¶ அவர்கள் ஏக யோசனையையுடையவர்கள்; மேலும் அவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுக்கிறார்கள்.

௰௪ [1]அவர்களே ஆட்டுக்குட்டியுடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டி [2]கர்த்தாதி கர்த்தாவுமாய் இராசாதி இராசாவுமாய் இருக்கிறபடியால் அவர்களைச் செயிக்கும்; [3]அதினோடேகூட இருக்கிறவர்களாகிய அழைக்கப்பட்டவர்களுமாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுமாய் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கிறவர்களும் (அவர்களைச் செயிப்பார்கள்) என்றான்.

௰௫ ¶ பின்னும் அவன் என்னுடனே சொன்னதாவது: [4]அந்த வேசி உளுக்காந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; [5]அவைகள் சனங்களையும், கூட்டங்களையும், தேசத்தாரையும், பாஷைக்காரரையும் குறிக்கின்றன.

௰௬ அன்றியும் நீ கண்ட பத்துக் கொம்புகளும் அந்த மிருகமுமானவர்கள், [6]அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் [7]நிருவாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைத் தின்று, [8]அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள்.

௰௭ என்னத்தினாலெனில், பராபரன் [9]தமது யோசனையை அவர்கள் செய்கிறதற்கும், ஏகயோசனையாய்ச் செய்கிறதற்கும் [10]பராபரனுடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும் தங்கள் இராசரீகத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களில் (யோசனையைக்) கொடுத்தார்.

௰௮ ¶ அன்றியும் நீ கண்ட ஸ்திரீயானவள் [11]பூமியின் இராசாக்களின்மேல் இராசரீகத்தைச் செலுத்துகிற [12]மகா பட்டணமேயாம் என்றான்.

௰௮. அதிகாரம்.

௧ பாபிலோன விழுந்ததையும், ௪ அவளைவிட்டுப பிரிநதுபோகப பராபரனுடைய சனஙகளுக்குக் கற்பிக்கபபட்டதையும, ௯ அவர்களுக்காகப பூமியின இராசாக்களும, ௰௧ வியாபாரிகளும, கபபற்காரரும புலமபினதையும், ௨௰ பராபரனால அவளுக்குக் கிடைதத ஆக்கினைக்காகப பரிசுததவானகள சநதோஷபபட்டதையும சொல்லியது

[13]இவைகளுக்குப்பின்பு மிகுந்த அதிகாரமுள்ள வேறொரு தூதனை வானத்திலிருந்து இறங்கக்கண்டேன், அவனுடைய மகிமையினாலே[14] பூமி பிரகாசமாக்கப்பட்டது.

௨ அவன் பலத்த சத்தத்தோடே கூப்பிட்டதாவது: [15]மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது; [16]அது பசாசுகளின் குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவலும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய [17]காவலும் ஆயிற்று.

௩ [18]அதினுடைய வேசித்தனத்தின் உக்கிரமான இரசத்தை எல்லாத் தேசத்தாரும் குடித்தும், பூமியின் இராசாக்கள் அதினோடே வேசித்தனம்பண்ணியும், [19]பூமியின் வியாபாரிகள் அதினுடைய மோகவிகாரத்தின வலுமையினால்* ஐசுவரியவான்களாகியும் இருக்கிறபடியினாலே அப்படி ஆயிற்று என்றான்.

௪ ¶ பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; அதென்னவென்றால், என்னுடைய சனங்களே, [20]அவளுடைய பாவங்கள் வானபரியந்தம் தொடர்ந்தபடியினாலும், [21]அவளுடைய அநியாயங்களைப் பராபரன் நினைத்துக்கொண்டிருக்கிறபடியினாலும்,

௫ நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு ஐக்கமாகாமலும் அவ

கி. பி. ௯௬.

[1] வெளி ௰௯ ௰௯ ௰௯ ௰௯
[2] ரோம ௰ ௰௭ ௧ தீமோ ௯ ௰௫ வெளி ௰௯ ௰௯
[3] எரே ௫௰ ௪௪, ௪௫ வெளி ௰௪ ௪
[4] ஏசா ௮ ௭ ௧ வ௪
[5] வெளி ௰௫ ௭
[6] எரே ௫௰ ௪௧, ௪௨ வெளி ௰௯. ௰௨
[7] எசே ௰௯ ௩௭, ௪௪ வெளி ௰௮ ௰௯
[8] வெளி ௰௮ ௮
[9] ௨ தெச ௨. ௰௧
[10] வெளி ௰ ௭
[11] வெளி ௰௨ ௪
[12] வெளி ௰௯ ௰௯
[13] வெளி ௰௭ ௧
[14] எசே ௪௩ ௨
[15] ஏசா ௰௩ ௰௯ ௨௧ ௯ எரே ௫௧ ௮ வெளி ௰௪ ௮
[16] ஏசா ௰௩ ௨௧ ௨௧ ௩௪ ௰௪ எரே ௫௰ ௩௯ ௫௧ ௩௭
[17] ஏசா ௰௪ ௨௩ ௯௪ ௰௧ மாற் ௫ ௨, ௩
[18] வெளி ௰௪ ௮ ௰௭ ௨
[19] ௰௧, ௰௫ வ௪ ஏசா ௪௭ ௰௫
* அலலது மிகுதியினால்
[20] ௧ மோ ௰௮ ௨௰ ௨௧ எரே ௫௧ ௯ யோனா ௧ ௨
[21] வெளி. ௰௬ ௰௯

ளுடைய வாதைகளில் பங்கு பெறாமலும் இருக்கும்படிக்கு, அவளிடத்திலிருந்து [1]புறப்படுங்கள்.

௬ அவள் உங்களுக்குப் பதில் செய்ததுபோல, [2]நீங்களும் அவளுக்குப் பதில் செய்து, அவளுடைய கிரியைகளின்படி அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; [3]அவள் கலந்து கொடுத்த பாத்திரத்திலே [4]இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.

௭ [5]அவள் தன்னை மகிமைப்படுத்தி மோகவிகாரங்கொண்டது எவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்கு இடுங்கள்; [6]தான் இராசஸ்திரியாய் உட்கார்ந்திருக்கிறவள் என்றும் தான் கைம்பெண் அல்லவென்றும் தான் துக்கத்தைக் காண்பதில்லை என்றும் அவள் தன் இருதயத்திலே எண்ணிக்கொள்ளுகிறபடியால்,

௮ [7]ஒரே நாளிலே அவளுக்கு வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் வரும்; [8]அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள், [9]அவளுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் தேவனாகிய பராபரன் பலமுள்ளவராய் இருக்கிறாரே.

௯ ¶ [10]அவளுடனே வேசித்தனம்பண்ணி மோகவிகாரத்தோடே வாழ்ந்த பூமியின் இராசாக்களும், [11]அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்பொழுது,

௰ அவளுக்கு உண்டான வாதையினாலே பயந்து தூரத்திலே நின்று, [12]ஐயையோ, மகா பட்டணமாகிய பாபிலோனே, வல்ல பட்டணமே, [13]ஒரே மணிநேரத்தில் உனக்கு ஆக்கினை வந்ததே என்று அவளைக்குறித்து [14]அழுது புலம்புவார்கள்.

௰௧ ¶ [15]பூமியின் வியாபாரிகளும் தங்கள் [16]வியாபார பதார்த்தங்களாகிய பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும், முத்துக்களையும், மெல்லிதான புடவையையும், இரத்தாம்பரத்தையும், பட்டையும், சிவப்பாடையையும்,

௰௨ சகலவித வாசனைக்[*] கட்டைகளையும், தந்தத்தினால் செய்திருக்கிற சகலவித பதார்த்தங்களையும், விலை உயர்ந்த மரத்தாலும் வெண்கலத்தாலும் இரும்பினாலும் வெண்கற்களாலும் செய்திருக்கிற சகலவித பதார்த்தங்களையும்,

௰௩ இலவங்கப்பட்டையையும், கந்தவிருக்கங்களையும், தைலத்தையும், தூபவருக்கத்தையும், திராட்ச இரசத்தையும், எண்ணெயையும், மெல்லிய மாவையும் கோதுமையையும், சுமை சுமக்கிற மிருகங்களையும், ஆடுகளையும், குதிரைகளையும், இரதங்களையும், [17]மனிதருடைய ஆத்துமாக்களையும், சரீரங்களையும்,[†] இனிக் கொள்வார் இல்லாதபடியால் அவளைக் குறித்து அழுதுகொண்டு புலம்புவார்கள்.

௰௪ உன் ஆத்துமா இச்சித்த மாரிகாலத்தின் பலன்கள் உன்னைவிட்டு நீங்கிப்போயின; சுவைக்கு இனிமையானவைகள், சிறப்பானவைகள், இவையெல்லாம் உன்னைவிட்டுப் போயின; நீ அவைகளை இனிக் காண்பதில்லை.

௰௫ [18]இப்படிப்பட்டவைகளை வியாபாரம்பண்ணி இவளால் ஐசுவரியவான்களானவர்கள் தூரமாய் நின்று, அவளுக்கு வந்த வாதையிலே பயந்து,

௰௬ ஐயையோ, மெல்லிய புடவையும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினத்தினாலும் முத்துக்களினாலும் [19]அலங்கரிக்கப்பட்டிருந்த மகா பட்டணமே, [20]ஒரே மணிநேரத்தில் இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே என்று அழுது துக்கிப்பார்கள்.

கி. பி. கூசு.

[1] ஏசா ௪௮ ௨௰; ௫௨ ௰௧; எரே ௫௰ ௮; ௫௧ ௬, ௪௫; ௨ கொரி ௬ ௰௭.
[2] சங் ௱௩௭ ௮; எரே ௫௰ ௰௫, ௨௯; ௫௧ ௨௪, ௫௬; ௨ தீமோ ௪ ௰௪; வெளி ௰௩ ௰.
[3] வெளி ௰௪ ௰.
[4] வெளி ௰௬ ௰௯.
[5] எசே ௨௮ ௨.
[6] ஏசா ௪௭ ௭, ௮; செப் ௨ ௰௫.
[7] ஏசா ௪௭ ௯; ௰ வச.
[8] வெளி ௰௭ ௰௬.
[9] எரே ௫௰ ௩௪; வெளி ௰௧ ௰௭.
[10] எசே ௨௬ ௰௬, ௰௭; வெளி ௰௭ ௨; ௩ வச.
[11] வெளி ௰௯ ௩; ௰௮ வச.
[12] ஏசா ௨௧ ௯; வெளி ௰௪ ௮.
[13] ௰௭, ௰௯ வச.
[14] எரே ௫௰ ௪௬.
[15] எசே ௨௭ ௨௭, ௩௬; ௩ வச.
[16] வெளி ௰௭ ௪.
[*] அல்லது தயினணனும.
[17] எசே ௨௭ ௰௩.
[†] அல்லது சிறைகளையும.
[18] ௩, ௰௫ வச.
[19] வெளி ௰௭ ௪.
[20] ௰ வச.

௰௭ ¶ [1]மாலுமிகள் யாவரும், கபபல்கள்மேல் ஏறிப்போகிற யாவரும், கபபலோட்டிகளும், சமுததிரத்திலே தொழில்செய்கிற யாவரும் தூரத்திலே நின்று,

௰௮ [2]அவள் வேகிறதினுல் உண்டான புகையைப் பாாத்து, [3]இந்த மகா பட்டணத்திற்கு ஒப்பாயிருந்த பட்டணம் எது என்று சத்தமிட்டு,

௰௯ [4]தங்கள் தலைகள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு, ஐயையோ, மகா பட்டணமே, சமுததிரததிலே கபபல்களையுடைய அனைவரும் இதின் உச்சிதமான சம்பூரணததினுலே ஐசுவரியவான்களானுாகள்; [5]ஒரே மணிநேரததில் இது பாழாய்ப்போயிற்றே என்று அழுது துககிததுக் கூபபிட்டாாகள்.

௨௰ ¶ வானமே, பரிசுத்தவான்களே, அபபோஸதலரே, தீர்க்கதரிசிகளே, [6]உங்களுககாகப் பராபரன் அவளிடத்தில் நியாயாககினையைச்செலுததினபடியினுலே, [7]அவளைககுறித்துக் களிகூருஙகள் என்றுன்.

௨௧ ¶ அப்பொழுது பலமுள்ள தூதன் ஒருவன் பெரிய எநதிரக் கல்லைப்போலொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுததிரததிலே எறிநது சொன்னதாவது: [8]இப்படியே மகா பட்டணமாகிய பாபிலோன் வேகமாய்த் தள்ளுண்டு, [9]இனிக காணபபடாமல் போம்.

௨௨ சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளககாரருமானவாகளுடைய [10]சத்தம் இனி உன்னிடத்திலே கேட்கபபடுவதுமில்லை; எநதத் தொழிலாளியும இனி உன்னிடத்தில் காணபபடுவதுமில்லை. எந்திரத்தின் சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கபபடுவதுமில்லை.

௨௩ [11]விளக்கு வெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; [12]மணவாளனும் மனையாட்டியுமானவர்களுடைய சததம் இனி உன்னிடததிலே கேட்கபபடுவதுமில்லை; [13]உன் வியாபாரிகள் பூமியில பெரியோர்களானபடியினுலும் [14]உன் சூனியத்தால் எல்லாத தேசத்தாரும் வஞ்சிககபபட்டபடியினுலும (அபபடியேஆம்.)

௨௪ [15]தீர்க்கதரிசிகளுடைய இரததமும் பரிசுத்தவானகளுடைய இரததமும் [16]பூமியின்மேல் கொல்லபபட்ட அனைவருடைய இரத்தமும் அதினிடத்திலே காணபபட்டது என்றுன்.

௰௯ அதிகாரம்.

௧ பெரிய வேசி நியாயமதீர்க்கபபட்டதற்காகவும பரிசுததவானகளின இரததம பழிவாஙகபபட்டதற்காகவும வானோா பராபரனைப புகழநதததையும, ௭ ஆட்டுக்குட்டியின கலியாணததையும, ௰ தூதன தேவவணககததைத தன்னைவிட்டு விலககினதையும, ௰௭ பெரிய சஙகாரததுககுப பட்சிகள அழைக்கபபட்டதையும சொலலியது

இவைகளுக்குப பின்பு, பரமண்டலததிலே திரளான கூட்டம் இடுகிற சததம்போன்ற [17]ஒரு சததததைக் கேட்டேன்; எனனவென்றுல்,

௨ தன் வேசித்தனததினுலே பூமியைக கெடுதத பெரிய வேசிககு நம்முடைய பராபரன் நியாயததீாபபுக்கொடுத்து, [18]தம்முடைய ஊழியக்காராின இரத்ததிற்காக அவளிடததில் பழியை வாஙகினதினுலே [19]அவருடைய நியாயததீாபபுகள சததியமும் நீதியுமுள்ளவைகளாகையால், [20]அல்லேலூயா, இரட்சண்ணியமும் மகிமையும் கனமும் வல்லமையும அவருககு உண்டாயிருக்கின்றன எனபதே

௩ மறுபடியும் அல்லேலூயா; [21]அவளுடைய புகை என்றென்றைககும எழும்பும் என்றுர்கள்.

௪ அல்லாமலும் [22]இருபத்துநான்கு மூபபரும் நான்கு சீவன்களும் (வணக்கமாய்) விழுநது, [23]ஆமன் அல்லேலூயா என்று சொல்லி, ஆசனததின்மேல் உளுக்காந்த பரா

[illegible] பி. ௯௬.

1 ஏசா ௨௩ ௰௪ எசே ௨௭ ௨௯
2 எசே ௨௭ ௩௰,௩௧ ௯ ௰௪
6 வெளி ௰௩ ௪
4 யோசு ௭ ௬ ௧ சாமு ௪ ௰௨ யோபு ௨ ௰௨ எசே ௨௭ ௩௰
5 அ ௰௪
6 லூக் ௰௧ ௪௯ வெளி ௰௯ ௨
7 ஏசா ௪௪ ௨௩ ௪௯ ௰௩ எரே ௫௧ ௪௮
8 எரே ௫௧ ௬௪
9 வெளி ௰௨ ,௮ ௰௬ ௨௰
10 ஏசா ௨௪ ,௮ எரே ௭ ௩௪ ௰௬ ௯ ௨௫ ௰ எசே ௨௬ ௰௩
11 எரே ௨௫ ௰
12 எரே ௭ ௩௪ ௰௬ ௯ ௨௫ ௰ ௩௩ ௰௧
13 ஏசா ௨௩ ௮
14 ௨ இரா ௯ ௨௨ நாகூ ௩ ௪ வெளி ௰௭ ௨, ௫
15 வெளி ௰௭ ௬
16 எரே ௫௧ ௪௯
17 வெளி ௰௪ ௰௫
18 ௫ மோ ௩௨ ௪௩ வெளி ௬ ௰ ௰௮ ௨௰
19 வெளி ௰௫ ௩ ௰௬ ௭
20 வெளி ௪ ௰௪ ௭௰, ௰௨ ௰௨ ௰
21 ஏசா ௩௪ ௰ வெளி ௰௪ ௰௧ ௰௮ ௯, ௰௮
22 வெளி. ௪ ௪, ௬, ௰ ௫ ௰௪
23 ௧ நாளா ௰௬ ௩௬ நெகே ௫ ௰௩ ௮, ௯ வெளி ௫. ௰௪.

பரனைத் தொழுதுகொண்டார்கள்.

௫ மேலும் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற [1]சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் [2]அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் ஆசனத்திலிருந்து புறப்பட்டது.

௬ ¶ [3]அப்பொழுது திரளான சனங்களுடைய சத்தம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தம் உண்டாகக்கேட்டேன்; என்னவென்றால், [4]சர்வவல்லமையுள்ள தேவனாகிய பராபரன் இராசரீகம்பண்ணுகிறார்; ஆகையால் அல்லேலூயா.

௭ [5]ஆட்டுக்குட்டியினுடைய கலியாணம் வந்தது; அவருடைய மனைவி தன்னை எத்தனம்பண்ணினாள், சுத்தமும் பிரகாசமுமான* மெல்லிய புடவையைத் தரித்துக்கொள்ளும்படி [6]அவளுக்கு அளிக்கப்பட்டது, ஆகையால், நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, அவருக்குத் துதியைச் செலுத்தக்கடவோம் என்பதே.

௮ மெல்லிய புடவை [7]பரிசுத்தவான்களுடைய நீதிகளே

௯ பின்னும் அவன் என்னுடனே சொன்னது: [8]ஆட்டுக்குட்டியின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று எழுதென்றான்; பின்னும் [9]இவைகள் பராபரனுடைய சத்தியமான வார்த்தைகளாய் இருக்கின்றன என்று என்னுடனே சொன்னான்.

௰ அப்பொழுது [10]அவனைத் தொழுதுகொள்ளும்படி அவனுடைய பாதங்கள் முன்பாக விழுந்தேன்; அவன் என்னுடனே சொன்னது: [11]இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; நான் உன்னோடும் இயேசுவின் [12]சாட்சியையுடைய உன் சகோதரரோடுங்கூட ஊழியக்காரனாய் இருக்கிறேன்; பராபரனைத் தொழுதுகொள், இயேசுவின் சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் இருக்கிறதே என்றான்.

௰௧ ¶ [13]பின்பு நான் வானம் திறந்திருக்கக் கண்டேன்; உடனே, இதோ, [14]ஒரு வெண்குதிரை தோன்றிற்று; அதின்மேல் இருந்தவர் [15]உண்மையும் சத்தியமுமுள்ளவர் என்னப்பட்டிருக்கிறார்; [16]அவர் நீதியாய்த் தீர்ப்புக்கொடுத்து யுத்தம்பண்ணுகிறார்.

௰௨ [17]அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்போல இருந்தன, [18]அவருடைய சிரசின்மேல் அநேக முடிகளும் இருந்தன; [19]அவருக்கேயன்றி வேறொருவனுக்கும் தெரியாத ஒரு நாமம் எழுதியிருந்தது.

௰௩ [20]இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை உடுத்தியிருந்தார், [21]அவருடைய நாமமே பராபரனுடைய வார்த்தை என்னப்பட்டது

௰௪ [22]பரமண்டலத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான [23]மெல்லிய புடவையைத் தரித்துக்கொண்டவர்களாய் வெண்குதிரைகள்மேலிருந்து அவருக்குப் பின்சென்றார்கள்.

௰௫ உலகத்தாரை வெட்டும்படிக்கு, [24]அவருடைய வாயிலிருந்து கூர்மையான கட்கம் புறப்படுகின்றது, [25]இருப்புக்கோலால் அவர்களை ஆளுகைசெய்வார்; அவர் சர்வவல்லமையுள்ள பராபரனுடைய உக்கிரகோபமாகிய [26]இரசமுள்ள திராட்சத்தொட்டியில் மிதிக்கிறார்

௰௬ [27]இராசாதி இராசாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவர் என்னும் நாமம் [28]அவருடைய வஸ்திரத்தின்மேலும் தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது

௰௭ ¶ பின்பு சூரியனிடத்தில்

கி. பி. ௯௬.

1 வெளி ௰௧ ௰௮ [illegible]
2 [illegible]
3 [illegible] வெளி. [illegible]
4 வெளி ௰௧ ௰௫ [illegible]
5 [illegible] வெளி [illegible]
* அல்லது வெண்மையுமான
6 [illegible]
7 [illegible]
8 [illegible]
9 வெளி [illegible]
10 வெளி [illegible]
11 அப [illegible]
12 [illegible]
13 வெளி [illegible]
14 வெளி [illegible]
15 வெளி [illegible]
16 [illegible]
17 [illegible]
18 வெளி [illegible]
19 வெளி [illegible]
20 [illegible]
21 [illegible]
22 வெளி [illegible]
23 [illegible] வெளி [illegible]
24 [illegible] வெளி [illegible]
25 [illegible] வெளி [illegible]
26 [illegible] வெளி [illegible]
27 [illegible] வெளி [illegible]
28 [illegible]

ஒரு தூதன் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற [1]சகல பறவைகளையும் நோக்கி,

௰௮ [2]நீங்கள் இராசாக்களுடைய மாம்சத்தையும், சேனைத்தலைவருடைய மாம்சத்தையும், பலவான்களுடைய மாமசத்தையும், குதிரைகளுடைய மாம்சத்தையும், அவைகளின்மேல் இருக்கிறவர்களுடைய மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள் சிறியோர் பெரியோர் இவர்கள் எல்லாருடைய மாம்சத்தையும் தின்னும்படிக்கு மகா பராபரனுடைய விருந்திற்குக் [3]கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௰௯ ¶ பின்பு [4]அம்மிருகமும் பூமியின் இராசாக்களும், அவர்களுடைய சேனைகளும், அந்தக் குதிரையின்மேல் இருக்கிறவரோடும் அவருடையசேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிக்கொண்டிருக்கக்கண்டேன்.

௨௰ அப்பொழுது [5]அம்மிருகமும், அதின்முன்பாகச் செய்த அடையாளங்களால் மிருகத்தின அடையாளத்தைத் தரித்தவர்களையும், [6]அதின் சொரூபத்தைத் தொழுதுகொண்டவர்களையும் வஞ்சித்த கள்ளத்தீர்க்கதரிசியும் கூடப் பிடிக்கப்பட்டு, இருவரும் உயிரோடே [7]கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே [8]தள்ளப்பட்டார்கள்.

௨௧ [9]மற்றவர்களும் குதிரையின்மேல் இருக்கிறவருடைய வாயிலிருந்து புறப்படுகிற கட்கத்தால் கொலைசெய்யப்பட்டார்கள்; [10]பறவைகள் யாவும் [11]அவர்களுடைய மாம்சத்தினாலே திருத்தி அடைந்தன.

௨௰. அதிகாரம்.

௧ சாத்தான் ஆயிரம் வருஷம கட்டப்பட்டதையும, ௪ முதலாம் உயிரத்தெழுதலையும், அதில் பங்கு பெறுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதையும், ௭. சாத்தான மறுபடியும் விடுதலையானதையும், ௮ கோகு, மாகோகின காரியத்தையும ௰ அக்கினியும கந்தகமுமுள்ள கடலிலே பசாசு தள்ளப்பட்டதையும், ௰௨ பொதுவான கடைசி உயிரத்தெழுதலையுங்குறித்துச் சொல்லியது.

அன்றியும் ஒரு தூதன் [12]பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்து இறங்கக்கண்டேன்.

௨ அவன் [13]பசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வல்ல சருபத்தைப் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டி, பாதாளத்திலே தள்ளி அடைத்து, [14]அதின்மேல் முத்திரைபோட்டான.

௩ அந்த [15]ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது உலகத்தாரை வஞ்சனைசெய்யாதபடிக்கே (அப்படிச் செய்தான்); அவற்றிற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்.

௪ ¶ அன்றியும் [16]நான் ஆசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உளுக்காந்தார்கள்; நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படி [17]அவர்களுக்கு அளிக்கப்பட்டது; இயேசுவினுடைய சாட்சியின்நிமித்தமும், பராபரனுடைய வசனத்தின்நிமித்தமும சிரசசேதம் பண்ணப்பட்டவர்களுடைய [18]ஆத்துமாக்களையும் [19]மிருகத்தையாவது [20]அதின் சொரூபத்தையாவது தொழுதுகொள்ளாமலும், தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதின் அடையாளத்தைத் தரித்துக்கொள்ளாமலும இருந்தவர்களையும் (கண்டேன்), அவர்கள் உயிரடைந்து கிறிஸ்துவுடனேகூட [21]ஆயிரம் வருஷம் இராசரீகம்பண்ணினார்கள்.

௫ மரித்த மற்றவர்கள் ஆயிரம் வருஷம் நிறைவேறுமளவும் உயிரடையவில்லை; இது முதலாவது உயிரோடெழுந்திருக்குதல்.

௬ முதலாவது உயிரோடெழுந்திருக்குதலுக்குப் பங்குள்ளவன்

கி. பி. ௯௬.

1 ௨௧ வச

2 எசே. ௩௯. ௰௮, ௨௰

3 எசே ௩௯ ௰௭

4 வெளி ௰௩ ௧. ௰௭ ௰௩, ௰௪.

5 வெளி ௰௬ ௰௩, ௰௪

6 வெளி ௰௩ ௰௨, ௰௫

7 வெளி ௰௪ ௰ ௨௧ அ

8 வெளி ௨௰ ௰ தானி எ ௰௧

9 ௰௫. வச

10 ௰௭, ௰௮ வச

11 வெளி ௰௭ ௰௬

12 வெளி ௧ ௰௮ ௯ ௧

13 வெளி ௰௨ ௯ ௨ பே ௨ ௪ யூதா ௬

14 தானி ௬ ௰௭

15 வெளி ௰௯ ௪, ௰௯ அ வச

16 தானி. எ ௯, ௨௨, ௨௭ மத ௰௯ ௨௮. லூக் ௨௨ ௩௰

17 ௧ கொரி ௬ ௨, ௩

18 வெளி ௬ ௯

19 வெளி ௰௩ ௰௨.

20 வெளி ௰௩ ௰௫, ௰௬

21 ஊரோ அ ௰௭ ௨ தீமோ ௨ ௰௨ வெளி ௫ ௰

பாக்கியவானுமாய்ப் பரிசுத்தனுமாய் இருக்கிறான்; அவர்கள்மேல் [1]இரண்டாம் மரணம் அதிகாரத்தை உடையதல்ல; அவர்கள் பராபரனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக [2]ஆசாரியராயிருந்து, அவரோடேகூட [3]ஆயிரம் வருஷம் இராசரீகம்பண்ணுவார்கள்.

எ ¶ அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்பொழுது [4]சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி,

அ பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள தேசத்தாராகிய [5]கோகையும் மாகோகையும் [6]வஞ்சிக்கும்படியாகவும், [7]அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படியாகவும் புறப்படுவான்; அவர்களுடைய இலக்கம் கடற்கரை மணல் அவ்வளவாய் இருக்கும்.

கூ [8]அவர்கள் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஏறிவந்து, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும் பிரியமான பட்டணத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது பராபரனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, அவர்களைப் பட்சித்துவிட்டது.

ய மேலும் [9]அவர்களை வஞ்சித்த பசாசானவன் [10]மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிற அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்; (அங்கே) அவர்கள் என்றென்றைக்கும் இரவும் பகலும் [11]வாதிக்கப்படுவார்கள்.

யக ¶ பின்பு நான் பெரிய வெள்ளை ஆசனத்தையும் அதின்மேல் உளுக்காந்தவரையும் கண்டேன்; அவருடைய சமுகப்பார்வையால் [12]பூமியும் வானமும் விலகி ஓடிப்போயின; [13]அவைகளுக்கு இடம் காணப்படவில்லை.

யஉ அன்றியும் மரித்தோராகிய [14]சிறியோரையும் பெரியோரையும் ஆசனத்திற்கு முன்பாக நிற்கக்கண்டேன்; [15]அப்பொழுது புத்தகங்கள் விரிக்கப்பட்டன, [16]சீவனுக்கு ஏதுவான வேறொரு புத்தகமும் விரிக்கப்பட்டது; அப்பொழுது மரித்தோர்கள் [17]தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்க விதமாகப் புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள்.

யங சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரைத் தந்தது, [18]மரணமும் மரித்தோர் ஸ்தலமும்* தங்களிலுள்ள மரித்தோரைத் தந்தன; [19]யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள்.

யச [20]பின்பு மரணமும் மரித்தோர் ஸ்தலமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன; [21]அதுவே இரண்டாம் மரணமாம்.

யரு சீவனுக்கு ஏதுவான புத்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் [22]அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்.

உக அதிகாரம்.

க புதியவானத்தையும், புதியபூமியையும், ய பரம எருசலேமையும், அதின் மகிமைப்பிரஸ்தாபத்தையும், உரு அதற்குச் சூரிய ஒளி வேண்டியிராமல் பராபரனுடைய மகிமையே அதின் ஒளியாயிருக்கிறதையும், உச பூமியின் இராசாக்கள் தங்கள் ஐசுவரியங்களை அதற்குக் கொண்டுவந்து செலுத்தினதையுங்குறித்துச் சொல்லியது.

அன்றியும், [23]முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயிற்றே; சமுத்திரமும் இல்லாமல் போயிற்றே; பின்பு நான் [24]புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்.

உ அல்லாமலும் [25]புதிய எருசலேமாகிய பரிசுத்தபட்டணத்தைப் பராபரனாலே பரமண்டலத்திலிருந்து இறங்கக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்காரமாக்கப்பட்ட [26]மணவாட்டியைப்போல எத்தனமாக்கப்பட்டிருந்தது.

ங மேலும் பரமண்டலத்திலிருந்து உண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன்; அது என்ன

கி. பி. கூகூ.

1 வெளி உ யக உக அ
2 ஏசா சுக, சு க பேது உ கூ வெளி க சு ரு ய
3 ச வச
4 உ வச
5 எசே கூஅ உ கூகூ க
6 ரு ய வச
7 வெளி யசு யச
8 ஏசா அ அ எசே கூஅ கூ, யசு
9 அ வச
10 வெளி யகூ உய
11 வெளி யச ய, யக
12 உ பேது ரு எ, ய, யக வெளி உக க
13 தானி உ ருகு
14 வெளி யகூ கு
15 தானி எ ய
16 சங் கூகூ, உஅ தானி யஉ க பிலி ச ரு வெளி ருகு யரு அ உக உஎ
17 எரே யஎ ய கூஉ யகூ மத யகூ உஎ ரோ உ கூ வெளி, உ உக உஉ யஉ யரு வச
18 வெளி கூ அ
* அல்லது பாதாளமும
19 யஉ வச
20 க கொரி யரு உசு, ருச, ருரு
21 வெளி உக அ கூ வச
22 வெளி யகூ உய,
23 வெளி உய யக
24 ஏசா சுரு யஎ சுசு உஉ உ பேது ரு யரு
25 ஏசா ருஉ க கலா ச உசு எபி யஉ ய யஉ உஉ யரு யச வெளி, ரு யஉ ய வச
26 ஏசா ருச ரு சுக ய உ கொரி யக உ

வென்ருல், பாருங்கள், [1]மனிதாகளிடத்திலே பராபரனுடைய கூடாரம் இருக்கிறது. அவாகளிடத்திலே அவர் வாசமாய் இருப்பார்; அவர்களும் அவருடைய சனங்களாய் இருப்பாாகள்; பராபரன் தாமே அவாகளோடேகூட இருநது அவாகளுக்குத் தேவனுயிருப்பாா.

ச [2]அவர்களுடைய கண்ணீா யாவையும் பராபரன் துடைப்பாா; முநதினவைகள் போனபடியினுலே [3]இனி மரணமுமில்லை; [4]துக்கமுமில்லை; அலறுதலுமில்லை, வருததமுமில்லை என்பதே

ரு ¶ அன்றியும் [5]ஆசனத்தின்மேல் உட்காநதவா சொன்னது: பாருங்கள், [6]நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்ருா; பின்னும் அவா என்னுடனே சொன்னது: [7]இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள். ஆகையால், (அவைகளை) எழுது என்ருர்.

சா பின்னும் அவர் என்னுடனே சொன்னதாவது [8]ஆயிற்று, [9]நான் அல்பாவும் ஓமேகாவுமாகிய ஆதியும் அநதமுமாய இருக்கிறேன்; தாகமாயிருக்கிறவனுக்கு நான் சீவநீரூற்றில (தண்ணீரைக்) [10]கைமாறில்லாமல் கொடுப்பேன்.

எ ஜெயங்கொள்ளுகிறவன் இவைகளைச்* சுதந்தரித்துக்கொள்வான், [11]நான் அவனுக்குத் தேவனுயிருப்பேன்.

அ அவன் எனக்குக் குமாரனுயிருப்பான்; [12]பயப்படுகிறவாகளும் அவிசுவாசிகளும், அருவருக்கப்படத்தக்கவர்களும், கொலைபாதகரும், வேசிமார்க்கரும், சூனியக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும், சகலவிதமான பொய்யருமானவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே [13]பங்கை அடைவார்கள் என்ருர்.

கி. பி கூசா.

1 ங மோ உகூ யக, யஉ எசே சஎ எ உ கொரி சு யசா வெளி எ யரு
2 எசா உரு அ வெளி எ யஎ
ப க கொரி யரு உகூ ருசா வெளி உய யச
4 எசா கூரு ய அக கூ சாரு யகூ
5 வெளி ச உ, கூ ரு க உய யக
6 எசா சஎ யகூ உ கொரி ரு யஎ
7 வெளி யகூ கூ
8 வெளி யஎ யஎ
9 வெளி க அ உஉ யஎ
10 எசா யஉ எ ருயு க யோவா ச ய, யச எ எஎ வெளி உஉ யஎ
* அல்லது எல்லாவற்றையும
11 சகரி அ அ எபி அ ய
12 க கொரி சு கூ, ய கலா ரு யகூ, உய, உக எபே ருரு க தீமோ க கூ எபி யஉ யச வெளி உஉ யரு
13 வெளி உய, யச, யரு
14 வெளி யரு க, கூ, எ
15 வெளி யகூ எ உ வச
16 வெளி க ய யஎ கூ
17 வெளி உஉ ரு உஎ வச
18 எசே சஅ உ வச
19 எசே சஅ கூக — கூச
20 எசே சஅ கூக — கூச
21 மத் யக யஅ கலா உ கூ எபே உ உய
22 எசே சய கூ சகரி உ க வெளி யக க

கூ ¶ பின்பு ஏழு கடைசிவாதைகளால் நிறைநத ஏழு கலயங்களையுடைய அநத [14]ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில வநது, ஆட்டுக்குட்டியினுடைய [15]மனையாட்டியாகிய ஸதிரியை உனக்குக் காணபிக்கிறேன வாவென்று என்னுடனே சொல்லி,

ய [16]பெரிதும உயரமுமான ஒரு பாவததின்மேல் என்னை ஆவிக்குள் கொண்டுபோய்ப் பராபரனுல் பரமண்டலத்திலிருநது இறங்கினதும, பராபரனுடைய [17]மகிமையை அடைநதிருக்கிறதுமான [18]எருசலேம் என்னும பரிசுதத பட்டணத்தை எனக்குக் காணபித்தான்

யக அதின் ஒளி அருமையான இரத்தினக்கல்லைப்போலவும பளிங்கொளியுள்ள ரவாக்கல்லைப்போலவும் இருநதது.

யஉ அது பெரிதும், உயரமுமான மதிலையும, [19]பன்னிரண்டு வாசல்களையும், அந்த வாசல்களமேலே பன்னிரண்டு தூதரையும உடையதாய் இருநதது, (அவைகளின்மேலே) இஸரவேல் சநததியாராகிய பன்னிரண்டு கோததிரத்தாருடைய நாமங்கள் எழுதப்பட்டிருந்தன.

யங கிழக்கே மூன்று [20]வாசல்களும், வடக்கே மூன்று வாசல்களும, தெற்கே மூனறு வாசல்களும், மேற்கே மூன்று வாசல்களும் உண்டாயிருந்தன.

யச அன்றியும் பட்டணத்தின் மதில் பன்னிரண்டு அஸ்திபாரங்களும உடையதாய் இருந்தது; அவைகளில் [21]ஆட்டுக்குட்டியின் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய பன்னிரண்டு நாமங்களும் இருநதன.

யரு அல்லாமலும், என்னுடனே பேசினவன் பட்டணத்தையும் அதின் வாசல்களையும், அதின் மதிலையும், அளக்கிறதற்குப [22]பொனகோலைப் பிடித்திருநதான்.

௧௬ மேலும் அந்தப்பட்டணம் சதுரமாய் இருக்கின்றது, அதின் அகலம் எவ்வளவோ அவ்வளவாய் நீளமும் இருக்கிறது; அவன் அந்தக் கோலினாலே பட்டணத்தை அளந்தான், பன்னீராயிரம் ஸ்தாதியாய் இருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருக்கின்றன.

௧௭ தூதனுக்கு இருந்த மனித அளவின்படியே அவன் அதின் மதிலை அளந்தபொழுது, நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது.

௧௮ மேலும் அதின் மதில் ரவாக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; பட்டணம் சுத்தப்பளிங்குக்கு ஒப்பாகிய சுத்தப்பொன்னாயிருந்தது.

௧௯ அன்றியும் [1]பட்டணமதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன, (அவையாவன:) முதலாம் அஸ்திபாரக் கல் ரவாக்கல், இரண்டாவது நீலக்கல், மூன்றாவது வயிரம், நான்காவது மரகதம்,

௨௰ ஐந்தாவது கோமேதகம், ஆறாவது சிவப்பு, ஏழாவது அக்கிக்கல், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புட்பராகம், பத்தாவது வயிடூரியம், பதினோராவது பதுமராகம், பன்னிரண்டாவது சுகந்திக்கல் இவைகளே.

௨௧ மேலும் பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன, வாசல்களில் ஒவ்வொன்று ஒவ்வொரு முத்தாயிருந்தது. மேலும் பட்டணத்தின் [2]வீதி தெளிவுள்ள கண்ணாடியைப்போலச் சுத்தப்பொன்னாயிருந்தது.

௨௨ [3]தேவாலயத்தை நான் அதிலே காணவில்லை; சர்வ வல்லமையுள்ள தேவனாகிய பராபரனும் ஆட்டுக்குட்டியானவரே அதின் ஆலயம்.

௨௩ [4]பட்டணத்தைப் பிரகாசிப்பிக்கும்படிக்குச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை, பராபரனுடைய மகிமையே அதை வெளிச்சமாக்கிற்று; ஆட்டுக்குட்டியே அதின் விளக்கு.

௨௪ [5]உலோத்தார்கள் அதின் ஒளியிலே நடப்பார்கள், பூமியின் இராசாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

௨௫ அங்கே [6]இராக்காலம் இல்லாதபடியால், [7]அதின் வாசல்கள் ஒருக்காலும் பூட்டப்படாதிருக்கும்.

௨௬ [8]உலகத்தார்களுடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

௨௭ [9]அசுசிப்படுத்துகிறதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசியாது; ஆட்டுக்குட்டியின் [10]ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள்மாத்திரம் (அதில் பிரவேசிப்பார்கள்.)

௨௨. அதிகாரம்.

ஜீவதண்ணீருடைய நதியையும் ௨ ஜீவவிருட்சத்தையும், ௫ பராபரனுடைய பட்டணத்திற்கு வெளிச்சம் பராபரன்தாமே என்பதையும், ௯ தேவதூதன் தேவவணக்கத்தைத் தன்பால் விலக்கினதையும், ௧௮ பராபரனுடைய வசனத்தில் எதையாகிலும் சேர்க்கவும், கழிக்கவும் கூடாதென்றதையும் சொல்லியது.

அன்றியும், பராபரனும் ஆட்டுக்குட்டியும் இருக்கிற ஆசனத்திலிருந்து புறப்பட்டுவந்து, [11]பளிங்கைப்போலத் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள நதியை எனக்குக் காண்பித்தான்.

௨ [12]பட்டணத்தின் நடுவீதியிலும் நதியின் இருகரையிலும் பன்னிரண்டுவிதமான கனிகளைச் சுமந்து மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கிற [13]ஜீவவிருட்சம் இருந்தது, அந்த விருட்சத்தின் இலைகள் [14]உலகத்தார்கள் ஆரோக்

கி. பி. ௯௬.

[1] ஏசா ௫௪ ௧௧
[2] வெளி ௨௧ ௨
[3] யோவா [illegible] ௨௧
[4] ஏசா ௨௪ ௨௩. ௬௰ ௧௯, ௨௰. வெளி ௨௨ ௫ [illegible]
[5] ஏசா ௬௰ ௩, ௧௧. [illegible]
[6] ஏசா ௬௰ ௨௰. சகரி ௧௪ ௭. வெளி ௨௨ ௫
[7] ஏசா ௬௰ ௧௧.
[8] ஏசா [illegible]
[9] ஏசா ௩௫ ௮. [illegible] ௨௨ ௧௪, ௧௫
[10] பிலி ௪ ௩. வெளி ௩ ௫. ௧௩ ௮. ௨௰ ௧௨
[11] எசே ௪௭ ௧. சகரி ௧௪ ௮
[12] எசே ௪௭ ௧௨. வெளி ௨௧ ௨௧
[13] ஆதி ௨ ௯. வெளி ௨ ௭
[14] வெளி ௨௧ ௨௪

கியம் அடைகிறதற்கு ஏதுவானவைகள், [1]இனிமேல் சாபமில்லை.

௩ [2]பராபரனும் ஆட்டுக்குட்டியும் இருக்கிற ஆசனமே அதில் இருக்கும்.

௪ அவருடைய ஊழியக்காரர் அவருக்கு ஆராதனைசெய்து [3]அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள், [4]அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்

௫ [5]அங்கே இரவில்லை, ஒரு விளக்கும் சூரியனுடைய ஒளியும், அவர்களுக்கு வேண்டுவதில்லை [6]தேவனாகிய பராபரனே அவர்களுக்கு ஒளியைக் கொடுப்பார், [7]அவர்கள் என்றென்றைக்கும் இராசரீகம்பண்ணுவார்கள்

௬ ¶ பின்பு அவர் என்னுடனே சொன்னதாவது [8]இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள், [9]சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிப்பதற்குத் தீர்க்கதரிசிகளின் ஆவிகளுடைய தேவனாகிய பராபரன் தம்முடைய தூதனை அனுப்பினார்

௭ [10]கேளுங்கள், சீக்கிரமாய் வருகிறேன்; [11]இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவார்த்தைகளைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்

௮ ¶ யோவானாகிய நானே இவைகளைக் கண்டு கேட்டேன், நான் கேட்டுக் கண்டபொழுது, இவைகளை எனக்குக் காண்பித்த [12]தூதனுடைய பாதங்களின் முன்பாகத் தொழுதுகொள்ள விழுந்தேன்

௯ அவன் என்னை நோக்கி, [13]நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார், உன்னோடும், உன் சகோதரராகிய தீர்க்கதரிசிகளோடும் இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஊழியக்காரனாய் இருக்கிறேன்; பராபரனைத் தொழுதுகொள் என்றான்.

௰ ¶ [14]மேலும் அவர் என்னுடனே சொன்னதாவது: [15]காலம் சமீபமானபடியினாலே இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை முத்திரைபோடாதிருப்பாயாக

௰௧ [16]அக்கிரமக்காரன் பின்னும் அக்கிரமம் செய்யட்டும், அழுக்காயிருக்கிறவன் பின்னும் அழுக்காயிருக்கட்டும், நீதியுள்ளவனும் பின்னும் நீதிசெய்யட்டும், பரிசுத்தமுள்ளவனும் பின்னும் பரிசுத்தமாகட்டும்

௰௨ [17]கேளுங்கள், சீக்கிரமாய் வருகிறேன், [18]அவனவனுடைய கிரியைக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பதில் அளிக்கும்படிக்கு [19]என் பலன் என்னோடேகூட வருகிறது

௰௩ [20]நான் அல்பாவும் ஓமேகாவுமாகிய ஆதியும் அந்தமுமாய் முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறேன்

௰௪ [21]சீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாகும்படிக்கும், [22]வாசல்களால் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும்படிக்கும் [23]அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்

௰௫ [24]நாய்களும், சூனியக்காரரும், வேசிமார்க்கரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி நடப்பிக்கிற யாவரும் [25]புறம்பே இருப்பார்கள்

௰௬ சபைகளுக்காக இவைகளை உங்களுக்கு அறிவிக்கும்படிக்கு, [26]இயேசுவாகிய நான் என்னுடைய தூதனை அனுப்பினேன், [27]நான் தாவீதின் வேருமாய்ச் சந்ததியுமாய் [28]பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாய் இருக்கிறேன் என்றார்

௰௭ ஆவியும் [29]மணவாட்டியும

பி ௬௬

1 சகரி ௰௪ ௰௧
2 எசே ௪௮ ௩௫
3 மத ௫ ௮
௧ கொரி ௰௩ ௰௨
௧ யோ ௩ ௨
4 வெளி ௩ ௰௨
௰௪ ௧
5 வெளி ௨௧ ௨௩
௨௫, ௨௬
6 சங் ௩௬ ௯
௮௪ ௰௧
7 தானி ௭ ௨௭
உரோ ௫ ௰௭
௨ தீமோ ௨ ௰௨
௰௨ வெளி ௩ ௨௧
8 வெளி ௰௯ ௯
௨௧ ௫
9 வெளி ௧ ௧
10 வெளி ௩ ௰௧
11 வெளி ௧ ௩
12 வெளி ௰௯ ௰
13 வெளி ௰௯ ௰
14 தானி ௮ ௨௬
௰௨ ௪, ௯ வெளி ௰ ௪
15 வெளி ௧ ௩
16 எசே ௩ ௨௭
தானி ௰௨ ௰
௨ தீமோ ௩ ௰௩
17 எ ௰௨
18 உரோ ௨ ௬
௰௪ ௰௨ வெளி ௨௦ ௰௨
19 ஏசா ௪௦ ௰
௬௨ ௰௧
20 ஏசா ௪௧ ௪
௪௪ ௬ ௪௮ ௰௨
௰௨ வெளி ௧ ௮
௰௭ ௨௧ ௬
21 ௨ ௨௪
22 வெளி ௨௧ ௨௭
௨௭
23 தானி ௰௨ ௰௨
௧ யோ ௩ ௨௪
24 பிலி ௩ ௨
25 ௧ கொரி ௬ ௯
௰, கலா ௫
௰௯, ௨௦, ௨௧
கொலோ ௩ ௬
வெளி ௯ ௨௦
௨௧ ௨௭
26 வெளி ௧ ௧
27 வெளி ௫ ௫
28 ௪ மோ ௨௪
௰௭ சகரி ௬ ௰௨
௰௨ ௨ பேது ௧
௰௯ வெளி ௨
௨௮
29 வெளி ௨௧
௨, ௯

வா என்கிறார்கள்; (இவைகளைக்) கேட்கிறவனும் வா என்பானாக; [1]தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் சீவதண்ணீரைக் கைமாறில்லாமல் வாங்கக்கடவன்.

௰௮ மேலும், இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்கிற யாவருக்கும் நான் அறிவிக்கிறதாவது. [2]ஒருவன் இவைகளோடே (எதையாகிலும்) கூட்டினால் [3]இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைப் பராபரன் அவன்மேலே கூட்டுவார்.

௰௯ ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வார்த்தைகளிலே (எதையாகிலும்) எடுத்துப்போட்டால், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளாகிய சீவவிருட்சத்திலும்* [4]பரிசுத்தப்பட்டணத்திலுமுள்ள பங்கைப் பராபரன் அவனிடத்திலிருந்து எடுத்துப்போடுவார்.

௨௰ ¶ இவைகளை அறிவிக்கிறவர் [5]மெய்யாய் நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.—ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும்.

௨௧ [6]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.—ஆமென்

முற்றிற்று.

4952

1895

கி. பி. ௯௬.

[1] எசா ௫௫ ௧. யோவா ௭ ௩௭. வெளி ௨௧ ௬.

[2] ௫ மோச ௪ ௨. ௰௨ ௩௨. வாக் ௩௰ ௬.

[3] ௨ மோ ௩௨ ௩௩. சங் ௬௯ ௨௮. வெளி ௩ ௫. ௰௩ ௮.

* அல்லது சீவ புஸ்தகத்திலும்

[4] வெளி ௨௧ ௨. ௰௨ ௨௭.

[6] யோவா ௨௧ ௨௫. ௨ தீமோ ௪ ௮. ௨ ரோ. ௰௬ ௨௰, ௨௪. ௨ தெச ௩ ௰௮.

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY